ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்.

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையாரால் பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்—திருக்குறள்.

சம்புடம் I.] அக்டோபர் 1913. [சஞ்சிகை 1.

## நமது பத்திரிகை.

எந்தைகுரு தெய்வமுமாய்
எவ்வுலகு மீன்றவனாய்
எல்லாந் தானாய்
அந்தமில்பல் பொருளையெலாம்
அளித்தருளிச் சகம்புரக்கும்
அண்ண லான
சுந்தரவிச் சுவகர்மன்
சுருதிமுடி தனிலுறைவான்
சுயம்பு வானோன்
கந்தமலர்த் தாளிணைகள்
கருத்திருத்தித் தொழுதேத்திக்
கவலை தீர்வாம்.

விராட் விஸ்வகர்மன் திருவருளை முன்னிட்டு இப்பத்திரிகையைப் பிரசுரிக்க முன்வந்திருக்கிறோம். இது பௌருஷேயர்களுடைய கர்ம, லௌகிக, வைதிக காரியாநுசாரணையான விஷயங்களை பெரிதுங் கொண்டு விளங்கும். அயகாரன், தாருகாரன், தாம்பிரகாரன், சிலாகாரன், சுவர்ணகாரனாகிய மனு, மய, த்வஷ்டா, சிற்பி, விஸ்வக்ஞனென்னும் ஐவகைப்பாகுபாட்டிற்குட் பட்டிருக்கும் பௌருஷேயர்களுடைய தற்காலஸ்திதியை யுயர்த்துவதே இப்பத்திரிகையின் கருத்தாகும். பாரதநாட்டைப் ப[illegible]நாட்டாருங் கண்டு வியக்கும்படிப் பல அற்பு[illegible]ருத்தியங்களைச்செய்து அதற்கு அ[illegible]கலனாய் விளங்கிய இந்த ஜாதியார், இடையில் பலகாரண விசேஷத்தால் கல்வியை யலக்ஷியஞ்செய்து, தமது சிறப்பிற்கும் தமது நாட்டுப் பெருமைக்கும் ஆஸ்பதமாயிருந்த கைத்தொழில்களைக் கைசோர விட்டுவிட்டார்கள். இதனால், இவர்கள் நிலைமை மாறிவிட நேர்ந்தது.

இம்மாறுதலை இவ்வளவோடாகிலும் நிறுத்தி இவர்கள் லௌகிகவிஷயமாகவும் வைதிகசம்பந்தமாகவும், கைத்தொழில்களைக்குறித்தும் அறிந்துகொள்ள வேண்டியனவாயிருக்கும் விசேஷங்களை எடுத்து விளக்கி உபதேசஞ்செய்யுமுக

169621
600 008



ததால், இவர்களுக்குக் கல்வியில் ஆசை பெருக்கி கைத்தொழில்களில் யோகம் விளைத்துக் கொடுக்கின்றனவென்றுங் கருத்துப்பற்றி இப்பத்திரிகை சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையாரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதனபிவிருத்தியைக் கொண்டுதான் குலாபிவிருத்தி கணிக்கப்படுமாதலால், குலச்சீர்திருத்தத்திலும் குல மேம்பாட்டிலுங் கருத்து வைத்திருக்குங் கனவான்கள் இதை யாதரித்து குலத்தார்க்குள் பரவச்செய்து குணங்காட்டுவார்களாக.

இப்பத்திரிகையில் வேதசாஸ்திர புராணேதிகாச உண்மைகளுடன், சிற்பசாஸ்திர விஷயமும், மேல் நாட்டுக் கைத்தொழில் நுட்பங்களும் வியாபாரமுறைகளும் பற்றிய வியாசங்களும் வெளிவரும். விஷயதானஞ் செ[illegible] ஆங்கிலங் கற்றோரும், சம[illegible] கி[illegible]த [illegible] பண்டிதர்களுமாகிய அநேக வித்தியா[illegible]திகள் அன்போடு இசைந்திருக்கின்றனர். கூடியவரையிலும் குல சம்பந்தமான விஷயங்களே இப்பத்திரிகையி லெழுதப்பட்டுவரும். பெண்களுக்குஞ் சிறுவர்க்கும் இன்பமளிப்பதற்காகச் சிறுகதைகளு மச்சிடப்படும். ஆதலால், இப்பத்திரிகையைப் பெற்று வாசிப்பவர்களுக்கு அரிய பெரிய விஷயங்கள் வெகு சுலபமாய்த் தெரியவருதல் நிச்சயம். பௌருஷேயகுல ஜனங்களுடைய ஆதரவு அதிகப்படும் அளவிற்குத் தகுந்தபடி பத்திரிகையின் அளவும் விஷயங்களின் அருமையும் அதிகரிக்குமென்பதை நாமுரைக்கவும் வேண்டுமோ?

பத்திரிகைகளின் பலன்கள் பட்டணவாசிகளுக்கு மட்டுமேயல்லாமல் கிராமவாசிகளுக்கும் ஸ்பஷ்டமாய் இக்காலத்தில் தெரிந்திருக்கின்றபடியால் அவற்றைப்பற்றி நாம் இங்கு எழுதுவது அனாவசியம். ஆந்திரதேசத்திலுள்ள நமது சகோதரர்களுக்கென்று "பிரபோதினி" யென்னும் ஆந்திர பாதப்பத்திரிகை குண்டூர் ஜில்லாவிலுள்ள துக்கிராலா என்னுமூரில் நடைபெற்று வருகிறது. இது சுமார் ஒன்பது வருஷகாலமாயுழைத்து வருவதின் பலனாக அங்குள்ள பௌருஷேயர்கள் பலவித சீர்திருத்தங்களடைந்து நன்மை பெற்றிருக்கிறார்கள். இப்பத்திரிகையின் போதனைகாரணமாகவேதான் கிருஷ்ணா குண்டூர் மண்டல விஸ்வப்பிராமண மகாஜன கான்பரன்ஸ், சென்ற ஆறு வருஷங்களுக் கதிகமாக நிர்விக்கினமாய் நடந்தேறி வருகின்றது. இப்பத்திரிகை பௌருஷேய குலமணியும், ஆந்திரகவி சிரேஷ்டருமாகிய ஸ்ரீவட்டேபாடி—நிரஞ்சன சாஸ்திரியா ரவர்களால் ஷை கான்பரன்ஸ் கமிட்டியார் சார்பில் நடத்தப்படுகிறது.

தமிழ்ப் பாஷையில் இக்குலத்தினருடைய உபயோகத்திற் கென்று ஓர் பத்திரிகை யிருக்கவேண்டுமென்னு மபிப்பிராயம் சென்ற முப்பது வருஷங்களாக சிற்சிலருக்குத் தோன்றிவருகிறதென்றும், அப்படிப் பத்திரிகையை யாரம்பித்து நடத்த முயற்சிகள் செய்யப்பட்டன வென்று மறிவிக்கும் ஆதாரங்க ளிருக்கின்றன. ஆயினும், இக்குலத்தாருடைய புண்ணியக்



குறைவினாலோ அன்றிப் பெருமையினாலோ இது வரையிலும் தமிழ்ப்பத்திரிகை ஒன்றேனும் ஏற்படாமலேயிருந்தது. குலஜனசங்கியையைக்கொண்டு அளவிடுவோமானால் ஒன்றிற்கு அதிகமான பத்திரிகைகள் நடைபெறவுமிட மிருக்கிறது. இக்குலத்தில் வாசிக்கத்தெரிந்தவர்கள் மிகச்சிலரே யிருக்கின்றார்களென்பதை மறந்தெழுதுகின்றோமில்லை. வாசிக்கத் தெரிந்தவர்களில் ஒரு சிறு பாகத்தார் பத்திரிகையில் பிரியங்காட்டினாற் போதும். இதற்காக, பிராக்ஞர்களாயிருப்போர், பத்திரிகைப் பலன்களை மற்றவர்க் கெடுத்துரைத்து, அவர்கள் இதைவாங்கி வாசிக்கச் செய்ய வேண்டும்.

இப்படிச்செய்வதினால் அவர்களுக்குப் பெரும்புண்ணியஞ் சித்தித்தல் சத்தியம். எப்படியென்றால், அவர்கள் குலோத்தாரணஞ்செய்த குணவான்களாகின்றனர். குலோத்தாரண காரியங்களி லெல்லாம் பத்திரிகா பிரசுரமே பிரதானமானது. ஏனெனில், இக்குலத்தாரிற் பெரும்பாலார் தற்காலத்தில் தாங்கள் தள்ளவேண்டியது இதுவென்றுங் கொள்ளவேண்டியது இதுவென்றும் அறியாதிருக்கின்றார்கள். குல மேம்பாட்டிற்குச் சாதகமானது இதுவென்றும் பாதகமானது இதுவென்று மறிந்தவர்கள் மிகச்சிலரேயா யிருக்கின்றனர். அநேகர் தாங்கள் குலத்தார்க்குச் செய்ய வேண்டிய கடமைகளிவையென்னும் ஞானமேயில்லாமல் நசித்துப் போகின்றனர். இவர்களுக்கு ஷை ஞானத்தை யூட்டினால் குலோன்னதத்திற்கு அநுகூலமுண்டாகு

மென்பதெ சொருதலை. இனி, குலோத்தாரணமென்ப தென்னவென்றும், அதை ஏன் செய்யவேண்டு மென்றும், எப்படிச் செய்வதென்றும், எத்தனைபேர் இச்சாதியி லறிந்திருக்கிறார்க ளென்பதை இறைவனே அறிவான்.

மேற்சொல்லியவற்றைப்பற்றிய அறிவு பரவுமட்டும் இக்குல மீடேறு மார்க்கமேற்படப்போகிறதில்லையாதலால், பத்திரிகா பிரசுரமே பல நன்மைகளுக் காதாரபூதமாயிருக்கும் அதிசிலாக்யமான காரியமாகும். இக்காரியம் குலஜனங்களுடைய ஆதரவை யெதிர்பார்த்து சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையாரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற படியால், பௌருஷேய சந்ததியார் ஒவ்வொருவரும் இதற்குத் துணைசெய்யும்படி விஸ்வகர்மக் கடவுள் முன்னின் றருள் [illegible]ராக.

## தர்ப்பணோபாக்யானம்.

தர்ப்பணோபாக்யானம் (தர்ப்பணம் = கண்ணாடி) என்பது மூலஸ்தம்பத்தின் ஒரு பாகமாகும். இது, நமது சபாமண்டபத்தில் சென்ற 1913-வருஷம் செப்டம்பர்மீ 14உயன்று, சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் தெலுங்கு பண்டிதர் பிரம்மஸ்ரீ அகூிந்தல-வெங்கட நரசிம்ஹம் பந்துலு அவர்களால் உபந்நியசிக்கப்பட்டது. ஆருஷேயராகிய ஷை பண்டிதர் பௌருஷேய சகோதர வாத்ஸல்ய மிகுந்தவராய், இவர்களுடைய அபிவிருத்திக் கேதுவான வழிகளில் பிரவர்த்தித்து உழைப்பதில் அதிமோசமுடைய

வராயிருக்கின்றனர். இந்த அபிமானம் இவர்களுடைய பரம்பரையிற் பொருந்தி வருகின்றதென்று கேட்க எவருக்குத்தான் இன்பமுண்டாகாது? இம் மகாபுருஷர் மூலஸ்தம்பாதி பௌருஷேய சம்பந்தமான பல நூல்களையும் நன்றாய் ஆராய்ந்திருக்கின்றனர். இவ்வாராய்ச்சி காரணமாகத்தான் இவருக்கு இக்குலத்தி லிவ்வளவு பற்றுண்டாயிற்றுபோலும். மூலஸ்தம்ப முழுவதையுஞ் சாங்கோபாங்கமாய் இவரால் உபந்நியசிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இன்னும், அந்த அபூர்வகிரந்தத்தை அச்சுவாகன மேற்றிப் பலருக்கும் உபயோகப்படும்படி யமைத்தற்கேற்ற பிரயத்தினங்களுஞ் செய்யப்பட்டுவருகின்றன. மூலஸ்தம்பப் பிரதிகளையுடைய கனவான்கள் அவற்றை சென்னை விஸ்வகர்மகுலோத்தாரண சபைக் காரியதரிசி அவர்களுக்கு அனுப்பினால், பல பிரதிகளையு மொத்திட்டுப் பார்த்து சுத்த பாடமாய் அச்சிடக்கூடும். பிரதிகளை யனுப்புவோருடைய திருநாமங்கள் வந்தனத்துடன் வெளியிடப்படும்.

ஷை உபந்நியாசத்தின் சுருக்கம் வருமாறு:— சர்வலோக காரணனாகியவர் விராட் விஸ்வகர்மாவாகிய மகாபுருஷரே. சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானியம் என்னும் இவருடைய ஐந்து முகங்களிலிருந்து பிரமன், விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவனென்பவர்கள் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐம்பெருந் தொழில்களைச் செய்யும் பொருட்டு உற்பவிக்கப்பட்டார்கள். மற்றும், மநு, மய, த்வஷ்ட, சிற்பி, விஸ்வக்ஞ என்னும் ஐந்து ரிஷிகள் தோற்றுவிக்கப்பட்டு அயம், தாரு, தாம்பிரம், சிலை, சுவர்ண மிவைசார்ந்த ஐந்தொழில்களைச் செய்ய அமர்த்தப்பட்டார்கள். இவ்வைந்து ரிஷி சந்ததியாரே விஸ்வகர்ம ஜாதியார்கள். இவர்கள் பரப்பிரம்ம சம்பந்திகளாகையால் பிராம்மணர்களே. விராட்புருஷன் வழித்தோன்றியவர்களாகையால் பௌருஷேயர்களெனப்படுவர். இந்த ஜாதியாரெல்லோரும் பிராமணரேயன்றி, இவர்களுக்குள் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் பாகுபாடு கிடையாது. அந்தப்பாகுபாடு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்ட ரிஷிகள் வழித்தோன்றியவர்களுக்குத்தான் உண்டு. அவர்களில் முதற்சாதியாரெனப்படும் பிராமணர்களை மேற்சொல்லிய பிராம்மணர்களினின்றும் வேறுபிரித்துக் காட்டுவதற்காக அவர்கள் ஆருஷேயரெனப்படுவர்.

பௌருஷேயர்கள் தொன்றுதொட்டு மிகச் சிறப்பாகிய நிலையிலிருந்து வந்தார்கள். ஆனால், தற்காலம் இவர்கள் காணப்படும் ஸ்திதியை நோக்கி, அப்படிக் கூறுதல் ஆச்சரியமாகச் சிற்சிலருக்குத் தோன்றலாம். இவர்களுடைய பாக்கிய நிலைமாறித் தௌர்ப்பாக்கிய முண்டானதற்குக் காரணமிருக்கிறது. அதைப் பிரஸ்தாபிக்குஞ் சரித்திரத்திற்கே "தர்ப்பணோபாக்கியானம்" என்று பெயர்.



இது மூலஸ்தம்பத்தில் காணப்படுகிறது. மூலஸ்தம்பமோ பௌருஷேய சிறப்புகளைப் பலபடியா யெடுத்துக் கூறும் பரமோத்கிருஷ்ட கிரந்தமாகும். அதில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் அனந்தம். தர்ப்பணோபாக்கியானத்தினால் பௌருஷேயர்களுக்கு தரித்திர முண்டானவிதம் இதுவென்று ஏற்படுகிறது. அஃதெப்படி யென்றால்:—

கயிலாயத்தின் கண்ணே, ஒருநாள் பரமசிவன் பார்வதி சமேதமாய்த் தேவர்கள் கணங்கள் முதலியோர் புடைசூழ வீற்றிருக்கும்போது, பரமசிவனுக்கும் பார்வதிக்கும் இருவரில் யார் அழகானவர் என்பதைப் பற்றிய விவாதமுண்டாயிற்று. ஒவ்வொருவரும் மற்றவரைப் பழித்துத் தாமே சுந்தரமிகுந்தவரென்று சொல்லிக்கொண்டார்கள். இதனால் ஒரு முடிவு மேற்படாததினால், தேவர்களுடைய அபிப்பிராயத்தை இருவரும் தனித்தனி கேட்கலாயினர். ஒருவர் பக்ஷமுரைத்தால் மற்றவருக்கு மனஸ்தாபம் விளையுமென்ற அச்சத்தினால் அவர்கள் எவர் பக்ஷமும் பேசுவதற்கில்லாமல் தியங்கிக்கிடக்க, சர்வலோக சரண்யரும் தேவாதிதேவனுமாகிய சாக்ஷாத் விராட் விஸ்வகர்மாவானவர் அங்கு ஓர் கண்ணாடியுடன் தோன்றினார். இவரைக்கண்டதும் பரமசிவனும் பார்வதியும் எழுந்து சாஷ்டாங்க தெண்டனிட்டு அர்க்கியபாத்தியாதி உபசாரங்கள் செய்தார்கள். கண்ணாடி கண்ணிற்பட்டதும், அதுகொண்டு தமக்கும் பார்வதிக்கு மேற்பட்ட விவாதத்தைத் தீர்த்துக்கொள்ளலாமென்ற சந்தோஷமிகுதியால் தம்மைமறந்து, அதைக் கொண்டு வந்த பரமேஸ்வரனை நோக்கி "சுவாமி! எங்கள் விவாதத்தைத் தீர்க்கும்படி தாங்கள் கண்ணாடி கொண்டுவந்ததற்காகப் பெரிதும் மகிழ்ந்தேன். இந்த உபகாரஞ்செய்த உமக்கு ஏதேனும் பிரதியுபகாரஞ் செய்யவேண்டு மென்னும் எண்ணம் எனக்கு உதித்திருக்கிறது. உமக்கு என்னவேண்டும் கேளுங்கள்" என்று தாம் சொல்வதின்னதென்று அறியாமலே பரமசிவன் பேசினார்.

இவ்வார்த்தைகள் செவிப்பட்டதும், விராட்புருஷர் நகைத்து "ஏ, பரமசிவனே! என்னவார்த்தை சொன்னாய்? உன் யோக்கியதையை அறியாமலே பேசினையே! எனக்கென்ன வேண்டுமென்று கேட்கச் சொல்லுகிறாயே; சர்வமும் நான் படைத்ததாயிருக்க, நீயும் என் சிருஷ்டிக்குட்பட்டவனா யிருந்துகொண்டு எனக்கென்ன கொடுக்கப்போகின்றாய்?" என்று கேட்டார். பரமசிவனுக்கு அப்போது சற்று நினைவு தோன்றிற்று. முன்வைத்த காலைப் பின்வைக்கலாகாதென்று உறுதிகொண்டு "சுவாமீ! ஏழைவீட்டில் பிரபு அன்னங் கொள்வதில்லையா? அப்படிப்போல் நான் அளிப்பதைத் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்றுரைக்க, "சரி அப்படியே கொடு" என்று இவர் கூறவும் "தங்கள் சிருஷ்டிக்குள் இப்போது அனைத்துமிருக்கின்றன. சகல செல்வங்களுமுள. ஆனால், தரித்திரமென்பது காணப்படவில்லை. அதை உமக்

குத் தருகின்றேன். ஆனால், தாங்கள் பரப்பிரம்மாவாதலால் அது உம்மைத்தாக்காது; உமது நேர்சந்ததியாராகிய பௌருஷேயரைப் பாதிக்கட்டும்'' என்று பரமசிவன் சொல்லி முடித்தனர்.

விராட்புருஷர் சினந்து பரமசிவனை நோக்கி ''நீ இவ்விதங் கூறியபடியால் கயிலாய மலையையும், ஆடையாபரணங்களையுமிழந்து மயானத்திலிருந்து கரித்தோல் போர்த்து எலும்புகளும் பாம்புகளுந் தரித்துத் திரியக்கடவாய்'' என்று சபித்தார். உடனே பரமசிவனுடைய சொரூபம் மாறிவிட்டது. அவர் பயந்து நடுநடுங்கி அடியற்ற மரம்போல் கீழே விழ்ந்து ''தெய்வமே! நான் அறியாது செய்த குற்றம் பொறுக்கவேண்டும். தாங்களே இப்படிச் சபித்தால் நான் எப்படி தரிப்பேன். கருணாநிதி! திருவுளமிரங்கவேண்டும்'' என்று பலவிதமாய் வேண்டிக் கொள்ள பரமேஸ்வரர் ''நல்லது, நான் கூறிய வசனங்கள் மாறா. ஆனால், இப்போது உனக்கு நேரிட்ட மாறுதல் காரணமாக யாதொரு இழிவும் ஏற்படமாட்டாது. நீயே இறைவனென்று மதிக்கப்பட்டிருப்பாய்'' என்று சாந்தப்படுத்தினார். பார்வதி தானே இவ்வளவுக்கும் காரணமாயிருந்ததை நினைந்து, தான் விஸ்வகர்ம வம்சத்தார்க்கு காளிகாம்பாள் என்ற சொரூபத்துடன் குலதெய்வமாயிருந்து, அவர்களைக் காப்பதாக பிரதிக்கினை செய்துகொண்டாள். அப்போது முதலே, பௌருஷேயர் காளிகாதேவி பூசையில் கவனமதிகம் வைக்கலாயினர்.

## இந்தியக் கைத்தொழிலாளி.

கைத்தொழிற்கார ஜாதியாராய் பாரதநாட்டில் பண்டைக்கால முதல் வாழ்ந்துவருகின்ற நாம், நம்மைப்பற்றிப் பிறர் என்ன சொல்லிக்கொள்ளுகின்றார்களென்பதைக் கவனமாய்க் கேட்டறிந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். ஏனென்றால், இப்படிக் கேட்பதினாலே தான் நம்முடையநிலைமை யின்னவிதமாயிருக்கிறதென்று நாம் சந்தேக விபரீதமறத் தெரிந்துகொள்ள முடியும். இதையறிந்து கொண்டாலல்லாமல் நம்மில் அவஸ்யமாயிருக்குந் திருத்தங்களைச் செய்துகொள்வது சாத்தியமாகாது. சாத்தியப்படாதபோது, நாம் தொழில்களிலும், வருமானத்திலும், அந்தஸ்திலும் விருத்திபெறுதல் கூடாமையாகிறது. இது கூடாமையாயிற்றென்றால், நாம் நாளுக்குநாள் இன்னுமின்னுஞ் க்ஷீணமடைதல் திண்ணம். உலகமுழுவதும் விருத்திமுகமே நோக்கியிருக்கவும், சர்வ ஜனங்களும் தமது குறைகளை யாராய்ந்தாராய்ந்து பார்த்து, அவற்றை நீக்கிக்கொள்வதற்காக அல்லும் பகலுமாயுழைத்து, தமது நிலைமையையும் ஜீவனாதாரங்களையும் எவ்விதம் பெருக்கிக் கொள்ளலாமென்ற எண்ணங்கொண்டவர்களாய் வற்ற முயற்சிகள் செய்து ஈடேற்ற மடைந்து கொண்டிருக்கவும், நாம்மட்டும் உள்ளநிலைமையையுற்றுநோக்காமலும் உயர்வுக்கான முயற்சி தேடாமலும் உறங்கிக் கிடப்போமானால், நம்மை மரமென்று தான் உலகம் மதிக்கும்!



பம்பாய் இராஜதானியைச் சேர்ந்த இஞ்சினீர் மிஸ்டர் ஜான்வாலேஸ் என்பவர் கல்கத்தாவிலுள்ள இஞ்சினீர்கள் சங்கத்தில் வாசித்ததொரு வியாசத்தில் இந்தியக் கைத்தொழிலாளிகளைப் பற்றிச் சொல்லி யிருக்கும் வார்த்தைகள் நமது கவனத்திற்குரியன வாயிருக்கின்றன. ஆங்கிலேயர்கள் வேறு நாட்டினர்களாதலினால், அவர்கள் இந்நாட்டாரில் எவரைப் பற்றியாகிலும் பாரபட்சமாய்ப் பேசுவதற்கிடமில்லை. அவர்கள் தமது அநுபவத்தில் எதைக் காண்கிறார்களோ அதை வெளிப்படுத்துகிறார்கள். அன்றியும், பலதேசத் தொழிலாளிகளை அவர்கள் பார்த்திருக்கிறார்களாகையினால் ஒருவருக் கொருவர்க் கேற்பட்டிருக்குந் தாரதம்மியத்தைப் பகுத்தறிந்து பார்க்குந் திறமை அவர்களிடங் காணப்படுகிறது.

''இஞ்சினீர்கள் ஒருவரோ டொருவர் சம்பாஷிக்கும்போது, வேறு விசேஷங்களெல்லாம் பேசி முடிக்கப்பட்டாலும் இந்தியக் கைத்தொழிலாளிகளின் குறைபாடுகள்—அதாவது, இவர்களுடைய அஜாக்கிரதை, ஒழுங்கீனம், யோசனைக் குறைவில் பொழுதையும் கஷ்டத்தையும் வீணாக்குதல்—முதலிய வற்றைப்பற்றி எவ்வளவானாலும் பேச இடமிருக்கிறது. சிற்சில பேர்கள் ஓரோவிடத்தில் இவ்விதக்குறைபாடுகளில்லாதவர்களாய்க் காணப்படுவோர்புகழ்ச்சியே யடைந்துவருகிறார்கள். ஆனால், இவர்கள் புகழப்படுவது மற்றவர்களைப் பலமாய்ப் பழிப்பதன் பொருட்டே யென்று தோன்றுகிறது. இந்தியக் கைத்தொழிலாளிகளையறிந்தார் எவரேனும் அவர்களுடைய புத்தி கூர்மையை மெச்சாதிருக்க மாட்டார்கள். ஆனால், இந்த புத்தி கூர்மை, தமது பழுதான வேலைகளை மறைப்பதற்கோ அன்றி அவை சரியானவையே யென்று யுக்தி யுக்தியாய்ப் பேசி வாதாடுவதற்கோ முக்கியமாய் உபயோகிக்கப்படுகின்றது. இந்த புத்திகூர்மை சரியானபடி உபயோகிக்கப்படுமாகில் இக்கைத்தொழிலாளிகள் பல குறைகள் நீங்கியிருப்பார்களென்பதைப் பலரு மொப்புக் கொள்வார்கள்.

''இந்தியத் தொழிலாளிகளின் கல்வியோ கணக்கில் வைக்கப்படக் கூடியதல்ல. இதனால் இவர்கள் பெரும்பாலும் கல்விசூன்யர்களாய் கல்வியில் வெறுப்புற்றிருக்கிறார்கள். இவர்களுடைய 'கல்வியெனப்படத்தக்கது எதுவென்றால், பணங்கொடுத்தல் வாங்கலிலும் பண்டமாற்றுதலிலும் ஒவ்வொரு தடவையிலும் பேச்சுச் சோர்த்து வாதாடுவதிலும் பழகிக்கொண்டதெதுவோ அதுவேயென வேண்டும். வேலைக்காரர்கள் ஒருவருக்கொருவர் தொழில் நுட்பங்களை விளக்கமாயெடுத்துக் காட்டுவதில்லை. அவனவன் தான் செய்யும் வேலைகளினாலறிந்துகொள்ள வேண்டியவனாயிருக்கிறான். தானொரு வேலைக்காரனென்று அவன் வெளிப்படும்போது, அவன் ஆயுதங்களையும் அவையிருக்கும் ஸ்திதியையுங் கண்டுதான் அவனுக்கு வேலையிட விரும்புகிறவன் அவனுடைய திறமையை யளவிட்டுக்கொள்ள

வேண்டும்.''—என்று ஷெ இஞ்சினீர் துரை எழுதுகிறார்.

இப்படி அநேகர் அநேகவிதமாயெழுதுகிறார்கள், உபந்நியசிக்கிறார்கள், போதிக்கிறார்கள். இவர்களுடைய வாக்கியங்கள் பல பத்திரிகைகளிலும் வெளியாகின்றன. இங்கிலீஷ் தெரிந்தவர்கள் மாத்திரமேயல்லாமல், தமிழ் தெலுங்கு கன்னடம் முதலிய சுதேசபாஷைகளை யறிந்தவர்களும் இவற்றை வாசிக்கின்றார்கள். தமது நாட்டுக் கைத்தொழிலாளிகளைப் பற்றி நமது சகோதரர்கள் அநுபவத்தால் அடைந்திருக்கும் ஞானத்திற்கு ஷெ விதத்தால் கிடைக்கும் ஞானம் துணை நிற்கிறது. நிற்கவே, நமது நாட்டினர் கைத்தொழிலாளிகள் மேல் நாளுக்கு நாள் வெறுப்புக் கொள்ளலாயினர். பரம்பரையாய்க் கைத்தொழில்களிற் பிரவேசமாயிருக்கும் நம்மினத்தின் மீது மற்ற இனத்தார்க்கேற்பட்ட துவேஷமூலங்களில் இது முக்கியமானதென்போம். இத்துவேஷம் பல காரணங்களால் பலமடைந்தது; இன்னுமடைந்து வருகிறதென்றுஞ் சொல்லலாம்.

இவ்வித பொதுஜன அபிப்பிராயத்தை நாம் கணித்து நடப்பது நமது இன்றியமையாக் கடமையாயிருக்கிறது. பொதுஜனாபிப் பிராயமானது எவ்விஷயத்தைச்சார்ந்த தாயினும் கவனத்திற்குரிய தென்னுங் கொள்கையுடையோராய் நம்மவர் நடக்கப் பழகுமட்டும் நமக்கு உய்வில்லையென்றே உறுதியாய்ச் சொல்லலாம். நம்முடைய புத்திகூர்மை நாலு தேசத்தாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதொன்றே நமக்குத் தைரியங் கொடுத்து ஊக்குவதற்குப் போதுமான ஆதாரமாயிருக்கிறது. மிஸ்டர் வாலேஸ் சொன்னபடி, அந்த புத்தியை நாம் வீண்வாதங்களில் விரயப்படுத்தி விடாமல், விசேஷ திறமையடைந்து, ஆங்கிலேயருடையவும் மற்றவருடையவும் மதிப்பைப் பெற்று எத்தேசத்தாரும் இவர்களுக்கு நிகரில்லையென்று சொல்லும்படி உள்ளபடியே உபயோகப்படுத்தி வருதல் வேண்டும். வாதாட்டங்களால் வெற்றிபெறலாமென்னுங்கொள்கை நம்மவர்களுக்குள் அதிகமாய்ப் பரவிவேரூன்றி வருதல் விசனத்திற்கிடமாயிருக்கிறது. இவ்வாதாட்டமே நமதுஜாதியாருடைய நன்மையைக் குலைத்து வருகிறதென்னு முண்மையை நம்மவர்கள் நன்குணரவேண்டும். வாதாட்டங்களினால் எக்குறைவையும் மறைத்து விடலாமென்று நம்மவர்கள் நம்பியிருக்கிறார்கள். இது மிகப் பிழையான கருத்து. இந்நம்பிக்கை நாசமடையும் நாளே நமக்கு நற்காலம் பிறக்கும் நன்னாள். அந்நாள் வருமளவும் அல்லலே நமக்குக் கதியென்று சொன்னார் பலரும்.

புத்திப் பிரயோகத்தால் புதுமைகள் காட்டிக்கொண்டு, ஒழுங்கீனங்களையுதறியொழித்து, காலந்தவறாது கண்ணியமாகக் கைப்பட்ட வேலைகளை மெய்ப்படச் செய்து தந்து, கல்வியும் பொருந்திக் கௌரவமாய் வாழ்ந்து வருவோமானால் நம்மை யார்தான் கொண்டாட மாட்டார்கள்? அவ்விதங் கொண்டாடப்படுதற்குரியவிதமாய் நாம் நடந்துகொள்ள வேண்டுமல்லவா? அதில் நாட்டம் வையாமலே அந்நியர்மேல் சலிப்புற்றிருப்பதினால் என்னடையப் போகிறோம்? பின்னமேயன்றிப் பிறிதடையமாட்டோம். இதை நமது குலத்தலைவர்களாயுள்ள நாட்டாண்மைக்காரர்களும், காரியஸ்தர்களும், மற்றவர்களும் கவனித்துத் தங்கள் தங்களாற் கூடியவரையிலும் மேற்காட்டிய உண்மைகளை சுஜாதியார்கள் ஒவ்வொருவருக்கும் போதித்து, அவர்கள் இவற்றை மனத்திற்பதித்து மாண்புறவாழ்ந்து, குலத்திற்கும் தமக்கும் கோதிலாப்புகழ் கூடிநிலைக்கும்படி கண்ணுங் கருத்துமாயிருந்துழைப்பார்களாக. கௌரவமாய் ஜீவனஞ்செய்யுங் கைத்தொழிலாளிகள் எத்தனையோபேர் இன்றும் நம்முள் குலமணிகளாய் விளங்கிக் கொண்டிருக்கின்றனர். என்றாலும், பொதுப்பட பழிப்பு என்பது தனியாயிருந்துவருகிறது. அதை வேரறுப்பதில் ஒவ்வொருவருக்கும் கவனமிருக்கவேண்டும்.

---



## சிற்பசாஸ்திர விஷயம்.

சமஸ்த பிராணிகளிலும், மனுஷ்ய ஜன்மம் சிலாக்கியம். அதிலும் அங்கபங்கமில்லாமல் அரோக சரீரமாயிருப்பது சிரேஷ்டம். அதிலும் மோக்ஷத்தை பிராபிக்கவேண்டியதே ஜன்மம் எடுத்ததின் முக்கிய பிரயோஜனம். அதற்கு மார்க்கமிருவகைப்படும். அதாவது நிவிர்த்தியென்கிற ஞானத்தினாலும், விக்ஞானமென்கிற பிரவிர்த்தியோடு கூடின கர்மங்களினாலும் மோக்ஷத்தை யடையவேண்டுமே தவிர வேறே மார்க்கமில்லை. இப்பிரகாரமே சுருதி கர்மயோகமென்றும், ஞானயோகமென்றும், இரண்டாக பிரவர்த்தித்திருக்கிறது.

ஞானமானது விக்ஞானமாகிற கர்மத்தின் அந்தர்ப்பூதமாயிருக்கின்றமையால் அந்த கர்மமே ஸகுணரூபமான பிரபஞ்சசொரூபமாயிருக்கின்றது. கர்மபரித்தியாகமும், கர்மானுஷ்டானமுமான இருவகை மார்க்கங்கள் மோக்ஷசாதனமாயினும், கர்மத்தினாலடையப்படும் மோக்ஷமே விசேஷமென்றும், கர்மானுஷ்டானமே சிறந்ததென்றும், பூர்வத்தில் மோக்ஷாபேக்ஷையுடைய சனகாதி முமுக்ஷுக்களும், கர்மானுஷ்டானங்களைச் செய்திருக்கிறார்களென்றும், கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வசனம்.

பகவத்கீதை அந்தியாயம்-ரு.

சன்னியாஸ: கர்மயோகஞ்ச
நிஸ்ரேயஸகராவுபௌ
தயோஸ்து கர்மஸன்யாஸாத்
கர்மயோகோவிஸிஷ்யதே || (உ)

கீதை-அந்தியாயம்-ச.

ஏவம்க்ஞாத்வாக்ருதம்
கர்மபூர்வைரபிமுமுக்ஷுபி:
குருகர்மைவதஸ்மாதம் பூர்வை:
பூர்வதரம்க்ருதம் || (யரு)

சாஸ்திரவிதியை யனுசரியாமல் எவன் தன்னிஷ்டப்படி நடக்கிறானோ அவன் இந்த லோகத்தில் சுகமும், பிற்பாடு உத்தமமான மோக்ஷமும், அடைகிறதில்லை. ஆனபடியால் சாஸ்திரங்களைப் பிரமாண

மென்று நப்பி சாஸ்திர சம்மதமான கர்மங்களைத் தெரிந்து அதின்படியாகவே கர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டு மென்றும் சொல்லப்படுகிறது.

கீதை அத்தியாயம்-௰௬.

யஶ்ஶாஸ்திரவிதிமுத்ஸ்ருஜ்ய
வர்த்ததே காமகாரத:
நஸஸித்திமவாப்நோதி
நஸுகம்நபராங்கதிம் || (௰௩)
தஸ்மாத்சாஸ்திரம்ப்ரமாணந்தே
கார்யாகார்யவ்யவஸ்திதௌ
ஞாத்வாசாஸ்திரவிதானோக்தம்
கர்மகர்த்துமிஹார்ஹஸி || (௰௪)

எந்த தேவனால் சமஸ்த ஜகத்தும் பிறந்து வியாபிக்கப்பட்டுள்ளதோ அந்த ஈசுவரனை மனுஷ்யர்கள் தங்கள் தங்கள் ஸ்வகீய கர்மானுஷ்டானத்தால் பூஜித்து சித்தியடைகிறார்கள்.

கீதை அத்தியாயம்-௰௮.

யத:ப்ரவிர்த்திர்பூதாநாம்
யேநஸர்வமிதம்ததம்
ஸ்வகர்மணாதமப்யர்ச்சிய
சித்திம்விந்ததிமாநவ: || (௪௬)

பிரவிர்த்தியன்னியில் மோக்ஷவிஷயமான புத்திக்கு ஞானமென்றும், பிரவிர்த்தியாகிற கர்மானுஷ்டானங்களோடு கூடின மோக்ஷவிஷயமான புத்திக்கு விக்ஞானமென்றும் இந்த விக்ஞானமே சிற்பசாஸ்திரமென்றும் சொல்லப்படுகிறது.

அமரகோசம் பிரதமகாண்டம்.

மோக்ஷேதீக்ஞானமந்யத்ர
விக்ஞானஞ்சில்பசாஸ்திரயோ: ||

விக்ஞானமாகிற சிற்பசாஸ்திரம் பிரம கர்மஸ்வபாவங்களி லொன்றாகவு மிருக்கிறது.

கீதை அத்தியாயம்-௰௮.

ஶமோதமஸ்தபஶ்ஶௌசம்
க்ஷாந்திரார்ஜவமேவச
ஞாநம்விக்ஞாநமாஸ்திக்யம்
பிரம்மகர்மஸ்வபாவஜம் || (௪௨)

ஞானேந்திரிய நிக்கிரகம், கர்மேந்திரிய நிக்கிரகம், தபசு, ஆசாரம், க்ஷமை, நிஷ்கபடம், ஞானம், விக்ஞானம், நம்பிக்கை என்பவைகளே பிராம்மண கர்மஸ்வபாவம். இவற்றுள் ஞானமென்பது மோக்ஷத்தை யடைகிறது. விக்ஞானமென்பது பிரவிர்த்தியாகிற தேவாராதன முதலிய கர்மானுஷ்டான வழியாய் மோக்ஷத்தை யடைகிறது.

விக்ஞானமாகிற சகுணரூப மன்னியில் ஞானத்திற்கு மார்க்கமில்லை. இந்த விக்ஞானமே சிற்பசாஸ்திரம். இந்த சிற்பசாஸ்திரமே பிராம்மண கர்மங்களுக்கு அடிஸ்தானமாயும், மோக்ஷத்திற்கு ஹேதுபூதமாயு மிருக்கிறது.

சிற்பசாஸ்திரம் பிரபஞ்சத்தை யாளுகிறதற்கு ஓர் சக்கிரவர்த்தி போன்றதும், சகுணரூபமானதும், சாத்வீக குணத்தையுடையதும், சரியை - கிரியை - யோகம் - ஞானமென்றவைகளைக் கொடுக்கும் வல்லதுவாயும், பிரபஞ்சாபிவிர்த்தியான பெருக்கத்திற்கு மாதாவாயும், சிருஷ்டியில் கர்த்தாவாயும், பிரவிர்த்திக்கு சாதனமாயுமிருக்கிறது.

மேலும், சிற்பமானது இகத்திற்கும், பரத்திற்கும் ஆதாரமாயும், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகமென்ற பஞ்சகிருத்தியங்களுக்கு பந்தாவாயும், ஆதிபூதமாயும், வேதசாஸ்திர ஸ்வரூபமாயும், லோகோபகார மானதாயும், சைவம்-வைஷ்ணவம் - சாக்தேயம்-சௌரம்-காணாபத்தியம் - கௌமார முதலான வைதீகமதங்களையும், பௌத்தம்-ஜைனம்-பைரவம் - காளாமுகம்-லோகாயிதம்-சூனியவாத முதலான புறச்சமயங்களையும் விதித்து, யாவர்களுக்கும் தர்மம்-அர்த்தம்-காமம் - பக்தி-ஞானம் - முதலியவைகளைக் கொடுத்து சாயுஜ்யமடையச் செய்வதற்கு சாதனமாயும், லோகத்தில் மனுஷ்யாள் முதலான ஜீவராசிகள் உஜ்ஜீவிக்கும்படியாகவும் அதப்படுத்தும்படியாகவுமிருக்கிற கருவியாயும், சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடிய தாதாவாயும், விதிவிலக்கைக் காண்பிக்கிற விதாயகமாயும், சிருஷ்டி கிருத்திய முடையதாயும், ஞானத்தைக் கொடுக்கும் பாத்திரமாயும், வேதாங்க - உபாங்க-கலைஞானங்களுக்கு வித்தாயும், ஸ்தாபத்திய வேதமாயும், அதர்வோப வேதமாயும், அர்த்தசாஸ்திரமென்று சொல்லப்பட்டதாயும், விஸ்வகர்ம சாஸ்திரமாயும், கணிதங்களுக்கு மாதாவாயும், ஸகுண பிரம்மத்தினுடைய வதனத்திலிருந் துற்பவித்ததாயும், அளவில்லாத கிரந்த சங்கைகளோடு கூடினதாயு மிருக்கிறது.

சிருஷ்டி பிரவர்த்தகத்திற்காக பிரமமானது ஸகுணரூபமாக சூரிய-இந்திர-பிரம்ம-விஷ்ணு-ருத்ர-மகேச சதாசிவ மென்ற மூர்த்திபேதங்களாகி இந்த மூர்த்திகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொருகாலங்களில் சிருஷ்டிசெய்த ஹேதுவினால் இவர்களுக்கு சிற்பியென்றும், ஸ்தபதியென்றும், துவஷ்டாவென்றும், தக்ஷகனென்றும், விஸ்வகர்மாவென்றும், நாமங்களேற்பட்டிருக்கின்றன. தத்வம்சத்தவர்களாகவும், லோகாபிவிருத்தி யடையும்பொருட்டு சமஸ்த சிருஷ்டி கர்மங்களுடையவர்களாகவுமிருக்கிற விஸ்வகர்மர்களை சிற்பியென்றும், ஸ்தபதியென்றும், வர்த்தகியென்றும், துவஷ்டாவென்றும், தக்ஷாவென்றும், மனுவென்றும், மயனென்றும், விஸ்வகர்மாவென்றும், பலநாமங்களாக சப்த கல்பத்ருமம், சப்தஸ்தோமமஹாநிதி முதலான அனேக நிகண்டுகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

சிற்பசாஸ்திர பிரவர்த்தகத்தால் வர்ணாசிரம பேதங்களும், நித்திய நைமித்திக கர்மங்களும், யாகாதி கர்மங்கள் முதலான (௪௰) சம்ஸ்காரங்களும், இந்த நாற்பது சம்ஸ்காரங்களினால் சரீரசுத்தியு முண்டாகின்றது. இதனால் பக்தி யோகத்திற்கும், மோக்ஷத்திற்கும் காரணமாகின்றது.

இவ்வளவு மகத்துவம் பொருந்திய சிற்பசாஸ்திரமானது பிரஜாபதியின் உத்தரமுகத்தி லிருந்துும், உண்டாயிருக்கின்றது.

பாகவதம் அத்தியாயம்-௰௨.

ஆயுர்வேதம்தநுர்வேதம்
காந்தர்வம்வேதமாத்மபூ:
ஸ்தாபத்யஞ்சாசிருஜத்வேதம்
க்ரமாத்பூர்வாதிபிர்முகை: || (௩௮)

பிர்மாவின் கிழக்குவதனத்தில் ஆயுர்வேதமும், தெற்குவதனத்தில் தநுர்வேதமும், மேற்குவதனத்தில் காந்தர்வவேதமும், உத்தரவதனத்தில் ஸ்தாபத்தியமென்றும் ஸ்தபதிவேதமென்றும் சொல்லப்பட்ட சிற்பசாஸ்திரமானது உண்டானதென்றும், வியாக்யானத்தில் ஸ்தபதியென்பதற்கு விஸ்வகர்மாவென்றும், ஸ்தாபத்தியமென்றதனால் விஸ்வகர்ம வம்சத்திற்சிந்தசாஸ்திரம் அதிகாரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த சாஸ்திரத்திற்கு அதிபதிகள் ஸ்தபதிகளென்ற விஸ்வகர்மர்களென்றும் அவர்களே பிரபஞ்ச சிருஷ்டிக்கு கர்த்தர்களென்றும், யக்ஞ கர்த்தர்களென்றும், சுருதி, ஸ்மிருதி, இராமாயண, பாரத, பாகவத, சிற்ப, விஷ்ணுபுராண முதலிய சமஸ்த கிரந்தங்களிலும் சொல்லப்படுகிறது.

விஸ்வகர்மப்ரஜாபதியின் முகத்தினுற்பவித்ததும், உத்தமமானதுமான சிற்பசாஸ்திரம் உபசிற்பங்களோடு சேர்ந்து அபரிமிதமாக விருந்தாலும் ஒருவாறு சங்கியை (ஙயஉ) என்பதாக கற்பித்து அதின் சுலோக சங்கிபைகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன.

சிற்பம் மயமதம் அத்தியாயம்-யரு.

பாரார்த்தம்விஸ்வகர்மீயம்
விஸ்வெவஸம்அற்புதம்பவேத் || (க)
விஸ்வபோதம்விஸ்வதர்மம்
கல்பாக்யம்விருத்தமேவச
மயம்பாநுவிசாலாக்ஷம்
சிருஷ்டம்ப்ராயுதம்பவேத் || (உ)
வாஸ்துபோதஞ்சமஹாதந்திரம்
ஆதிஸாரந்த்ரிசங்ககம்
பாராசர்யம்த்ரிகோடிஞ்ச
மானஸாரந்ததாபவேத் || (ங)
ஸௌரம்இந்திரம்சைத்திகஞ்ச
வஜ்ரம்கோடிஸமந்விதம்
மானபோதஞ்சகர்வம்ஸ்யாத்
அநுமான்நளமாயுதம் || (ச)
வாஸ்துவித்யாபதிச்சைவ
தாவட்டந்துநிகர்வகம்
பஹுசுருதம்சாத்விகஞ்ச
சுருடிகந்துபத்மகம் || (ரு)
விஸ்தாரம்நாமசங்கித்யம்
காபில்யஞ்சத்ரிகோடிகம்
ஏதேதேவருஷய:ப்ரோக்தம்
தத்வாத்ரிம்சதிசங்க்யயா || (சா)
த்வாத்ரிம்சருஷிதந்தராக்ஞம்
சில்பசாஸ்திரமிதம்ஜகத்
தத்தத்கோத்ரவசாஜ்ஜாதா
சில்பிஸர்வத்ரயோக்யகம் || (எ)
வாஸ்துக்ருத்யம்விநாசில்பி
தத்தந்கர்த்தாகுலக்ஷயம்
தஸ்மாத்ஸர்வப்ரயத்நேந
சில்பிநாஸர்வகர்மக்ருத் || (அ)
ஏவம்முநிவரை:ப்ரோக்தம்
கிரகிராமாதிவஸ்துநாம் ||

விஸ்வகர்மீயம்-அத்தியாயம்-யஉ.

தேவாநாம்மானுஷம்ப்ரோக்தம்
ஸர்வப்ராண்யாபரிக்ரஹெத்
ஸ்தாபிதம்விஸ்வகர்மஞ்ச
நிர்மிதாயாத்பரிச்சிதெள ||



சர்வசாஸ்திரேணஸாரந்து
கல்பயேத்விஸ்வகர்மண: ||

விஸ்வகர்மீயம் கிரந்த சுலோக சங்கியை * பாரார்த்தமென்றும், விஸ்வெவஸம்-அற்புத சங்கியையென்றும், காசியபம்-விஸ்வஸாரம் இவ்விரண்டும் தனித்தனி சலதி சங்கியையென்றும், விஸ்வபோதம்-விஸ்வதர்மம் - கல்ப்பாக்கியம் - விருத்தம்-மயம்-பானு - விசாலாக்ஷம் - சிருஷ்டம்-இவைகளொவ்வொன்றும் பிரயுத சங்கியையென்றும், வாஸ்துபோதம் - மஹாதந்திரம்-ஆதிசாரம்- இவைகளொவ்வொன்றும் மூன்றுசங்க சங்கியையென்றும், பாராசரியம்-மானசாரம் இவைகளொவ்வொன்றும் மூன்றுகோடி சங்கிகையென்றும், சௌரம்-இந்திரம் - சைத்திகம்-வஜ்ரம் - இவைகள் தனித்தனியே கோடிசங்கியையென்றும், மானபோதம் - கர்வசங்கியையென்றும், ஹநுமான்-நளம் இவைகளொவ்வொன்றும் அயுத சங்கியையென்றும், வாஸ்து வித்யாபதி-தாவட்டம் - ஒவ்வொன்றும் நிகர்வ சங்கியையென்றும், பஹுசுருதம்-சாத்வீகம் - அரிடிகம் இவைகள் ஒவ்வொன்றும் பத்மசங்கியை யென்றும், விஸ்தாரம் - நாமசங்கீதை - காபில்லியம்-இவைகளொவ்வொன்றும் மூன்றுகோடி சங்கியையென்றும், இவைகள் தேவர்களினாலும், மஹாரிஷிகளினாலும் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், முப்பத்திரண்டு சிற்பகிரந்தமென்றும், இந்த (ஙயஉ) சிற்பசாஸ்திரங்களும் ஜகத்துக்கு ஹிதத்தைக்கொடுக்கின்றதற்கும் பிராணிகளைப் பரிபாலிக்கின்றதற்குமாக சகல சாஸ்திரங்களுடைய ஸாரமாக நிச்சயப்படுத்தி ஸ்தாபிக்கும்படியாக விஸ்வகர்மாவினால் கற்பிக்கப்பட்டதாயுமிருக்கின்றன. இந்த விஸ்வகர்மாவின் வம்சத்தவராயும், யோக்கியராகவுமிருக்கிற சிற்பியைக்கொண்டு கிரககிராமாதிகளை வாஸ்து சாஸ்திரோக்தமாக செய்யவேண்டும். வாஸ்து சாஸ்திரத்திற்கு அதிகாரிக ளல்லாதவர்களைக் கொண்டு செய்தால் அந்தகர்த்தா முதலானவர்களின் குலங்கள் நாசத்தையடையுமென்றும் மஹாரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் வரும்.

ஜோஸ்யர். முத்து ஆசாரியார்.

---

## இருக்குவேதத்திற் புகழ்ந்துபேசிய ஈகையாளர்கள்.

"சுவநயன்"--இவனுடைய ஈகையைப் பற்றி-ருக்வேதம் முதற்காண்டம் 18-வது அத்தியாயம் 6-வது சூக்தத்தில் கக்ஷீவதனன் என்னும் ஓர் இருடியினால் புகழ்ந்துபேசி யிருக்கிறது.

"அசங்கன்"-பிளயோகன் என்பவனுக்கும் அவனுக்குப் பின் அரசாண்டவனுக்கும் புத்திரன். அவன் பெண்ணுக உருமாற்றஞ் செய்யப்பட்டு தன்னுடைய தோ

* ஏக-1. தச-10. சத-100. சகஸ்ர-1000. அயுத-10000. நியுத-100000. பிரயுத-1000000. கோடி-10000000. அற்புத-100000000. பிருந்த-1000000000. கர்வ-10000000000. நிகர்வ-100000000000. மகாபத்ம-1000000000000. சங்க-10000000000000. சலதி-100000000000000. அந்திய-1000000000000000. மத்ய-10000000000000000. பரார்த்த-100000000000000000.

த்திரங்களால் மறுபடியும் ஆண்வடிவை யடைந்து தனக்கு மகா உதாரத்துவத்தோடு வெகுமதிகள் தந்ததைப் பற்றி— ருக்வேதம் 8-வது காண்டத்தின் ஆரம்பத்திலுள்ள கீதத்தில் மேதைபதிதியினால் புகழ்ந்துபேசி யிருக்கிறது.

“விபிந்து இராஜன், கூரயாணன் என்பவனுடைய புத்திரனாகிய பகஸ்தமனன் என்னும் இராஜன், குருங்கன் என்னும் இராஜன், சேதிபுத்திரனாகிய கஷு என்னும் இராஜன் பரஷுபுத்திரனாகிய திருந்திரன் என்னும் இராஜன்” ஆகிய இவ் விராஜாக்களுடைய தியாகத்தைப்பற்றி ஷை கீதத்துக்கடுத்த சூக்தங்களில் ஈகையை யடைந்த இருடிகளாற் புகழ்ந்து பேசியிருக்கிறது.

“திரசதாசயன்”—மாந்தாத்திரி யென்பவன் பௌத்திரன். இவனுடைய தயாளத்தைக்குறித்து ருக்வேதம் 8-வது காண்டம் 3-வது அத்தியாயம் 7-வது சூக்தத்தில் புகழ்ந்துபேசி யிருக்கிறது.

“சித்திரன்”—இவனுடைய நன்கொடையைக் குறித்து ஷை காண்டம் 4-வது அத்தியாயம் 1-வது ஸ்தோத்திரத்தில் புகழ்ந்துபேசி யிருக்கிறது.

“வரு”—சூஷாமனன் புத்திரன். இவனைப்பற்றி ஷை அத்தியாயம் நான்காவது சூக்தத்திற் புகழ்ந்துபேசி யிருக்கிறது.

***

## இருக்குவேத கீதங்களின் கிரந்தகர்த்தர்கள்.

2-வது காண்டங்களி லிருக்கிற கீதங்களுக்கு “கிரதசமதன்”
3-வது ... .... “விஸ்வாமித்திரர்”
4-வது .... .... “வாமதேவர்”
5-வது .... .... “புதனும், அத்திரியினுடைய சந்ததியார்களும்”
6-வது .... ... “பாரத்துவாசர்”
7-வது ... .... “வசிஷ்டர்”

மற்ற காண்டங்களிலுள்ள கீதங்களைச் செய்தவர்கள் அகஸ்தியர், மரீசி புத்திரனாகிய கசியபர், அங்கிரசர், பிருகு புத்திரனாகிய ஜமதக்கினி, வியாசருடைய தந்தையாகிய பாரசர், கௌதமர், அவருடைய புத்திரராகிய நோதசர், பிரகஸ்பதி, நாரதர், மற்றுமுண்டான பெருமைபெற்ற ரிஷிகள், கண்ணுவர், அவருடைய சந்ததிகளாகிய மேதாதிதி முதலிய பேர்கள், பிரகஸ்பதி சந்ததிகளில் மதசந்தன் முதலாகிய பேர்கள், அஜீகர்த்தன் புத்திரனான சுனச்சேபன், அங்கிரசன் சந்ததிகளாகிய குத்சன், இரண்ணியஸ்தூயன், சவ்வியன், இவர்களுமல்லாமல் மேல்விவரித்த பெரியவர்களுடைய சந்ததியில் அனேக இதர இருடிகளும், அனேக இராஜவம்சத்தினரும் வேதகிரந்தகர்த்தர்களாயிருக்கிறார்களென்று, வேதத்தோடு வழங்கி வரப்பட்டுக் கொண்டிருக்கின்ற அனுக்கிரமணிகையில், அல்லது பொழிப்புவிவர அட்டவணையிற் காப்பாற்றப் பட்டுவருகிறதாக வெளிவந்திருக்கிற வேதவசனங்கள் முறையிடுகின்றன.

***

## விஸ்வ சமயாசாரிய சுவாமிகள்.

1-சிங்கேரி. ஸ்ரீமன்-ஆதிதுவஷ்ட சங்கராச்சாரிய சுவாமிகள்.



2-சாலிவாடிபுராதீனம். ஸ்ரீமத்-பாசமய கோளரிநாத சுவாமிகள்.

3-திந்தினீபுரம். ஸ்ரீமன்-மௌனகுரு ருத்திர மூர்த்தியோகீந்திர சுவாமிகள்.

உட்பிரிவு. பெங்களூர்தண்டு ஸ்ரீமன் ரிஷபேந்திர மௌனகுருயோகிஸ்வர சுவாமிகள்.

விலிஞ்சிபுரம். ஸ்ரீமன்-மௌனகுரு யோகீந்திர சுவாமிகள்.

4-போதூர். ஸ்ரீமன்-வீரப்ரம்மம் காரு என்கின்ற வீரப்ரம்மேந்திரகுரு சுவாமிகள்.

உட்பிரிவு-நந்திமலே ஸ்ரீமத்-சிவசங்கர யோகீஸ்வர சுவாமிகள்.

5-வீப்பூர்-ஸ்ரீமன் வேங்கடாச்சாரிய குருசுவாமிகள்.

உட்பிரிவு-வேதகிரி-சாஸ்திரகிரி, புராணகிரி, என மூன்று மடாதிபதிகளுண்டெனப்பிரஸ்தாபம்.

அந்தியூர். ஸ்ரீமன் வேங்கடாச்சாரிய குரு சுவாமிகள். மேற்கண்ட மடாதிபதிகளின் ஒருவர் பெண்மக்கள்வாசில் உற்பத்தியான தௌஹித்திர ரெனக்கேள்வி.

6-சீனந்தல். ஸ்ரீமத் சிவலிங்ககுரு சுவாமிகள்.

7-சிதம்பரம். ஸ்ரீமத் கமலமூர்த்தி மௌனகுரு சுவாமிகள்.

உட்பிரிவு. ஷை சுவாமிகளின் சிரேஷ்டதமயனார் அவர்களும் மடாதிபதியாக தேசசஞ்சாரம் செய்துகொண்டு வருகிறார்.

8-ஒசூர். ஸ்ரீமன் சுக்ஞானமூர்த்தி சுவாமிகள்.

9-கன்னபுரம். ஸ்ரீமன் ஞானமூர்த்தி சுவாமிகள்.

10-நெல்லூர். ஸ்ரீமன் எஜுர்வேத இராமாச்சாரிய சுவாமிகள்.

V. மௌனகுரு—ருத்திரமூர்த்தி
ஆச்சாரியார்,
திருச்சிவிஸ்வப்ரம்ஹமஹாஜன
சென்ட்ரல்சபை
வைஸ்பிரசிடென்ட் அன்ட்
=. முனிசிபல் கௌன்சிலர்
பழனிஸ்தலம்.

---

## நமது நிலைமை.

கல்விமறந்தோம் கைத்தொழிலிலோம்
கதிகெட்டோம்
செல்வமிழந்தோம் சீருமழிந்தோம்
சிறியோமாய்ப்
பல்லவரோடும் பாகமடைந்தே
பாழ்போனோம்
அல்லலொழிக்கு மருநெறிசேர்தற்
கணையோமோ. (1)
குற்றமலிந்தோம் குணமுளவிட்டோம்
கொண்டாடும்
பெற்றிதவிர்த்தோம் பேசறமார்க்கம்
பேணாதே
இற்றையநாளில் இழிவுறலானோம்
என்னே நாம்
மற்றினியேனும் மையலறுக்க
மாட்டோமோ. (2)
விப்பிரவாதம் வீணிற்கொண்டே
மெலிவுற்றோம்
திப்பியர்சங்கந் தேடிக்கூடித்
திரிந்தெய்த்தோம்

ஒப்புரவில்லோம் உண்மைவெறுப்போம்
உயர்வெய்தல்
எப்படியென்னும் ஏக்கமுண்டோசொல்
இசைப்பீரே. (3)
பேச்சுக்கற்றேம் மற்றவர்மாற்றம்
பிரித்தாயோம்
ஏச்சுக்காரர வாவனசற்றும்
எறியோமால்
சீச்சீயென்றுல கோதுவதெல்லாஞ்
சிறப்பாக
மாச்சரியத்தா லாயவையென்றே
மகிழ்வோமே. (4)
யாரையிகழ்வோம் யாதினிசெய்வோம்
யாராலே
பாரினிலின்பப் பண்புறு மென்னப்
பலகாலும்
தேரிடில்நாமே தீமைவிளைத்த
திறமெல்லாம்
நேர்படலாகும் நீசமொழிக்க
நினைவோமே. (5)

---

## குலாபிவிருத்திக்கு நாம் செய்ய வேண்டியதென்ன?

நம்மவர்களில் பெரும்பான்மையோர் 'நான் குலத்திற்கு பாடுபடுகிறேன், நான் குலத்திற்கு பாடுபடுகிறேன்' என்று சொல்லுகிறார்களே தவிர, குலாபிவிருத்திக்காக தற்போது அனுட்டிக்கவேண்டிய சீர்திருத்தங்களை நம்மவருக்கு உபதேசிக்கவுமில்லை, தாமும் அனுட்டித்துக் காண்பிக்கவுமில்லை. தற்சமயம் குலத்திற்கு உழைப்பவர் என்போர் வைதிகவேடத்தாலும், சாதுர்யப்பேச்சினாலும், அங்குமிங்கும தெரிந்த சிற்சில ஸ்லோகங்களாலும் நம்மவர்களை ஏமாற்றி இதே தொழிலாக ஜீவனம் செய்துவருகிறார்கள். ஆனால், அவ்விதம் ஜீவனத்திற்கு உழைப்பவர் உண்மைபேசி ஏதாவது உபகாரார்த்தமாய் பெற்றுக்கொள்வது பிசகாகமாட்டாது. அவ்வாறில்லாமல் சிலர் தாம் பணத்தில் வெறுப்புடையராகவும் குலத்தை சீர்திருத்துவதே தமது விரதமாகவும் பேசி மோசம் செய்து வருகிறார்கள். அப்படி செய்து வருவதினால் உண்மையாய் உழைப்பவர்களிடத்தும் சந்தேகம் ஏற்படுகிறது.

ஆனால், அனேகரில் ஒருவர்தான் யதார்த்தமாய் பொது விஷயங்களிலும் குல அபிவிருத்தியிலும் பாடுபடுவார்கள். அவ்விதம் பாடுபடுகிறவர்களிடத்தும் நம்மவர்கள் குற்றம் சாட்டக் கண்ணும் கருத்துமாய் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ சிலர் தன்னயம் பாராட்டாமல் பரோபகாரார்த்தமாய் புத்தியைசெலுத்தி குலோத்தாரணம் செய்ய சில விதிநிஷேதங்களை உபதேசிக்க முயன்றாலும் அன்னோர்களையும் தலையெடுக்க வொட்டாமல் அழுத்துவதும், தம்மிடத்தி லிருக்கும் தீயகுணங்களை அவர்களிடத்திலும் பிரதிபலிப்பதாகக் கருதி அவர்களையும் தாமிருக்கும் தாழ்ந்தநிலைமைக்கு கொண்டுவருவதுஞ் சகஜமாயிருக்கிறது.

சிற்சிலர் எங்ஙனமாவது சபைகளைக் கூட்டி ஏதோ தெரிந்தமட்டும் பிறருக்கு பயன்படச் சொல்வோமென்றாலும், அதிலும் ஒருவருக்கொருவர் உண்டாகும் பேதபுத்தியால் சபை சீர்குலைய ஏற்படுகிறது. ஆனால் பெரிய ஆலோசனைச் சபையார்களிடத்தும், லௌகிக விவகாரங்களை விட்ட துறவிகளிடத்தும் எள்ளளவேனும் குற்றம் காணமுடியாமற் போகவில்லை. விவகாரமுள்ள இருகக்ஷிக்காரர்களுள் ஒரு நியாயாதிபதி ஒருவர்பக்கம் தீர்ப்புசெய்யும்போது ஒருவர் துவேஷமும், மற்றொருவர் சந்துஷ்டியும் அடைகிறார்களல்லவா? அதாவது, ஒருவன் ஒரு காரியம்செய்வதில் அக்காரியத்தால் அநுகூலப்பட்டவர்கள் அவனை நல்லவனென்றும் பிரதிகூலப்பட்டவர்கள் அயோக்யன் என்றும் சொல்வது இயல்பு. கடவுள் ஒருவர்தான் எல்லாவற்றிலும் சம்பூர்ணமானவர். துலாக்கோல்போல் உள்ளவர். அத்தகைய சாக்ஷாத் ஈஸ்வரனையும் எத்தனையோ அனந்தம்பேர் நிந்திக்கிறார்கள்.

ஆகையால் எந்தக் காரியமும் எந்தக் காலத்திலும் எல்லோருக்கும் திருப்தியாயிருக்கும்படி நடந்துகொள்வது சுலப சாத்யமன்று. ஆனால், அறிஞர்களில் பெரும்பாலோர் உசிதமெனக் கொண்டாடப்படுவதே சிரேஷ்டமாகக் கொள்ளல் நீதி.

நிற்க, வேறுசிலர் தாம் பெருமையடையவேண்டுமென்றும அதிகாரம் கிடைக்கவேண்டு மென்றும் உழைக்கிறார்கள். அஃதும் கூடாதென நிந்திக்க இயலாது. ஏனெனில், ஆரம்பகாலத்தில் நாம் செய்யப்புகும் எந்த நன்மையும் பிரதிபயனை உத்தேசித்துதான் செய்யமுடியும். பாவனைக்காக உழைப்பவர் சிலரும் நாளடைவில் உண்மையாகவே உழைப்பவர்களாவார்.

எவ்வாறெனில், ஒரு இராஜகுமாரத்தியை விவாகம் செய்துகொள்ள விரும்பிய அவளது அரண்மனை வேலைக்காரியின் குமாரன், அதன் தாய்மூலமாய் அவ்விராஜ குமாரத்தியால் கற்பிக்கப்பட்ட தந்திரத்தின்படி சந்நியாசிப் போலிவேடம் தரிக்க, மகுடமுடிதரித்த மன்னாதிமன்னர்களும் இவன் பாதத்தை வணங்க கண்ணுற்றபோது, ஆஹா! இப்போலி வேடத்திற்கு இத்தகைய மாட்சிமையிருக்குமாகில் சுயமான துறவுக்கு எவ்வளவு மகிமை உண்டாகமாட்டாது என்று அக்கணமே உலகுநீத்து புறப்பட்டு சத்கதி யடைந்தான் என்னும் கதைபோல் கேவலம் பாவனைக்கும் விருத்திக்கும் உழைக்கிறவர்களும் நாளடைவில் உண்மையாய் உழைப்பார்களென ஊகிக்கவேண்டி வருகிறது.

ஆகையால் ஒவ்வொருவரும் எவ்விதத்திலாவது மனோவாக்கு காயம் இவைகளில் ஒன்றினாலாவது கிஞ்சித்து சிரத்தையுடன் அபிவிருத்திக்காக பிரயாசைப்படவேண்டியது அவசியமே. ஆனால், நம்மவர்களில் சிலர் "எங்களைக் காட்டிலும் உயர்வானஜாதி உலகினில் வேறில்லை" யென்று பிறரை எந்த இடத்தில் சந்தித்தபோதும் இதே பேச்சைப் பேசினால்மட்டும் குலம் விருத்திக்கு வருமா? இவ்விதம் பேசிவருவதால் பிறர் நம்மிடத்தில் வைத்திருக்கும் மதிப்பையும் இழந்து ஜீவனோபாயத்திற்கு கஷ்டப்படுவதும் நாணயத்திற்கு பங்கம் உண்டாகி கஷ்டநிலைமைக்கு பாத்திரர்களாகிறோம். ஜாதிப்பயித்தியம்

பிடித்த நம்மவர்களிடத்தில் பிறஜாதியார் அணுக அஞ்சுகிறார்கள்.

ஒருவனைப் பிரபுவாகச் செய்தது எது? அவனது நடையா, அல்லது உடுக்கும் உடையா, அல்லது பேசும் வார்த்தையா? அவனுக்கு ஏராளமான ஸ்திதி இருந்தால்மட்டும் பிரபுவென அழைக்கப்படுவான். அதுபோல் உயர்குலத்தோருக்குரிய குணமிருந்தால்மட்டும் நாம் உயர்குலத்தோரென அழைக்கப் படுவோம். ஆகையால், அக்குணத்தையடைய நாம்பிரதானமாய் அனுஷ்டானத்தில் செய்யவேண்டியதென்ன என்பதைக்கவனிப்போம்.

(1) நாம் நமது பிராஹ்மண தர்மத்திற்குரிய ஆன்ஹிக விதிப்படி காலையிலெழுந்து தேகசுத்தி முதலான நித்ய கர்மானுஷ்டானங்களை அனுஷ்டிப்பதோடு நமது குலச் சிறுவர்களுக்கும் அவ்வித நடைகளைப் பழக்கிவைக்கவேண்டும். எந்தப்பிரவிருத்தியைச் செய்தாலும் அவரவர்கள் தகுந்தபடி பிராதக்கால ஸ்நானம் செய்து மடிதரித்தபின்பு, ''எங்கள் குலம் விருத்திக்கு வரவேண்டும். நாங்கள் உலகத்திற்கு பரோபகாரம் செய்ய வேண்டும்'' என்று அவரவர் கோத்ர ரிஷிகளை வேண்டித் தியானம் செய்யவேண்டியது.

(2) நமது தொழில் விஷயமாக கூடியவரையில் பொய் திருட்டு நீக்கி வேலையை நாணயமாகச்செய்து கூலியையாவது அதிகமாக வாங்கவேண்டும். தாக்ஷண்யத்தை உத்தேசித்தாவது லாபத்தை உத்தேசித்தாவது பேராசையால் வேலைகளை அதிகமாக வாங்கிப்போட்டு வீண்சாக்குப்போக்குகள் சொல்லுவது கூடாது. கிராக்கி வேலைகளை கூடியவரை குறிப்பிட்டகாலத்திற்குள் கொடுக்கப் பிரயத்தனம் செய்யவேண்டும். இது நம்மிடத்தில் பெருங்குறை.

(3) நாம் எல்லோரும் ஒருவித ஆசாரமுள்ளவர்களாகி ஒரேபந்தியில் சாப்பிடமனமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அப்போதுதான் ஒருவர் உயர்வென்றும் தாழ்வென்றும் பேச இடமிராது. நமக்குள் இருக்கும் பேதபுத்தியும் அகலும். பேதபுத்தி அகல குல ஒற்றுமை உண்டாகும்.

(4) நம்மவரில் ஆங்கிலம் படித்தவர்கள் தொழில் செய்பவர்களைப் பரிகாசம் செய்வதும், தொழில் செய்பவர்கள் படித்தவர்களை நிந்திப்பதும் கூடாது.

(5) ஐசுவரியம், கல்வி, வித்தை, அதிகாரம், நாகரீகம், அதிகமாய்ப் பெற்றிருந்தாலும் அஃதில்லாத நம்மவரை இகழக் கூடாது. அவர்களுக்கு எவ்விதத்திலாவது போதித்து நம்மைப்போல் நல்ல ஸ்திதியில் கொண்டுவரவேண்டியது.

(6) வயதில் முதிர்ந்தோர் இளையவர்களைத் தூஷிப்பதும், இளையவர்கள்முதிர்ந்தோரைத் தூஷிப்பதும் கூடாது. வயதில் இளையவர்களாயிருந்தாலும் பூர்வஜென்ம கர்மபயனாய் மிக்க அறிவுள்ளவர்களாயிருப்பார்கள். ஆதலின் அவர்கள் பேச்சுக்கும்முதிர்ந்தோர் கட்டுப்படுதல்தவறன்று. நாம் நமக்கு ஹிதமென்று தோன்றுவதை பிறருக்குச் சொல்லவேண்டும். கேட்காவிடில் அவர்கள் மனம்போல் விட்டுவிடவேண்டியதே யொழிய வீண்வருத்தம் சம்பாதித்துக் கொள்ளக்கூடாது.



(7) தங்கள் தங்கள் குழந்தைகள் கல்விபயிலச் செய்யவேண்டும். குழந்தைகளுக்கு 12-வயது வரையிலாவது (அதாவது சுயபுத்தி ஏற்படுகிறவரையில்) கட்டாயம் பாடசாலைக்கு அனுப்பி, பிறகு அவரவர்கள் புத்திக்கும் சக்திக்கும் தக்க தொழிலில் பிரவேசிக்கச் செய்வது பெற்றோர்களின் முக்கிய கடமை. குழந்தையிலார் தமக்கு பாத்யமுள்ள குழந்தைகள் அவ்வித பிரயோஜனத்தை அடையும்படி செய்யவேண்டும், அல்லது இனத்துக்குழந்தைகளுக்காவது உதவவேண்டும்.

(8) ஒவ்வோர் ஊரிலும் பல கிளைச் சபைகளை ஸ்தாபித்து அவற்றின்மூலமாய் ஒரு பெரிய சபைக்குப் பொருளுதவிசெய்து பலப்படுத்தவேண்டும். நம்மவர் ஒவ்வொருவரும் தம்மால் கூடியமட்டும் அவர்கள் சம்பாத்யத்தில் ரூபாய்க்கு இவ்வளவென்று பிரத்யேகமாக எடுத்து நமது குலச் சிறுவர்களுக்கு கல்விகற்பிக்க மூலதனம் ஏற்படுத்தவேண்டும். அவ்விதம் ஏற்படுத்துவதும் ஒருசபை மூலமாய் செய்வதே உசிதம். இது விஷயத்தில் விஸ்வக்ஞ ஆச்சார்யர்களின் பட்டறைக்குப்பை வரும்படியைமட்டும் செய்தாலே எத்தனையோபேர் விருத்திக்கு வரலாம்.

(9) ஒவ்வொரு நாட்டாண்மைக்காரர்கள் நம்மவர் கிருகங்களில் நடக்கும் விசேஷதினங்களில் குலோத்தாரணம் செய்யும்பொருட்டு ஓர் பலதானமோ தட்சணையோபெற்று மாணாக்கர்களின் கல்வி அபிவிருத்தியில் பயன்படச் செய்யவேண்டும். இப்படிச்செய்வதில் நாட்டாண்மைக்காரர்கள் சிரத்தையுடன் ஓர் கணக்கு புஸ்தகம் தயார்செய்துகொண்டால் பிறர் நிந்தை ஏற்படாது.

(10) தனக்குத் தான் நாட்டாண்மை வேண்டுமென்றும் சபைகளில் ஒரு உத்யோகம் கிடைக்க வேண்டுமென்றும் அந்தஸ்து அடையவேண்டுமென்றும் ஆவல் கொண்டு மன நொய்மையை விளைவித்துக்கொள்ளாமலிருக்கவேண்டும். நாம் பிறர் நன்மையைக் கருதிச் செய்வோமாயின் நமது பெயர் தானே விளங்கும். இகத்திலில்லாவிட்டாலும் பரத்தில் உண்டென்பது சர்வநிச்சயம். நாம் அதிகாரஸ்தர்களாயிருந்தால்மட்டும் பிறருக்கு நன்மைசெய்யலாமென்பது தவறு. ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தகுந்த உதவியைச் செய்வதே கடமை.

(11) கடைசியாக, மேற் சொல்லிய விதிகளைக் கூடியவரையில் அனுட்டிப்பதோடும் காலையிலெழுந் திருக்கும்போதும், படுக்கைக்குப் போகும்போதும், சந்திவேளைகளிலும் ''எங்கள் குலத்தார் நல்லொழுக்கமுடையவர்களாகி விருத்தியடைந்து உலகிற்கு நன்மை செய்யவேண்டும்'' என்று தியானிக்கப் பலதுளி பெருவெள்ளம் என்பதுபோல் நமது மனோசக்தி அதிகப்பட்டு நாம்சீக்கிரத்தில் விருத்தியடைவோமென்பதிற் சந்தேகமில்லை என்பது என் மனத்துணிவு. சாஸ்திர சம்மதமும் இதுவே.

கு. ப. வே. ஆச்சார்ய, திருச்சி.

## மின்சாரசக்தி.

எலக்ட்ரிஸிடி யென்னும் மின்சாரசக்தியின் விநோதங்களைச் சிறிது சிறிதாக நாம் இப்போது அறிந்து வருகிறோம். ட்ராம் வண்டிகளோடுவது மின்சார சக்தியினாலேயே. மின்சாரத்தால் வெளிச்சமுண்டாவதால் விளக்குகள் வைக்கப்படுகின்றன. விசிறிக ளாட்டப்படுகின்றன. அக்னி யுண்டாக்கப்பட்டு சமையற் காரியங்கள் நடைபெறுகின்றன. பலதொழில்களுக்கு மின்சார முபயோகிக்கப்பட்டு வருகிறது. பாரசக்தியுடைய தாதவினால் இது பல்லாயிரம் பேர்களைக்கொண்டு பலநாள் செய்துமுடிக்கவேண்டியனவாகிய பிரம்மாண்ட வேலைகளை நொடிப்போதில் முடித்துத் தருகின்றது. நாளுக்குநாள் இதனுடைய உபயோகம் அதிகப்பட்டுக்கொண்டே வருகின்றது. நவநவமான வேலைகளில் மின்சாரப் பிரயோகஞ் செய்வதற்காக, விஞ்ஞான சாஸ்திரிகள் இதைப் பரீக்ஷித்து வருகிறார்கள்.

இவர்களிலொருவர் மின்சாரசக்தியைக் கொண்டு தூக்கமுண்டுபண்ணும் விதத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். நாய்கள் முயல்கள் முதலிய ஜெந்துக்களுக்கு உபயோகப்படுத்திப் பார்த்தவிடத்து யாதொரு தீங்கிற்கும் இடமுண்டாகாமலே மின்சாரத்தினால் பிராணிகளைத் தூங்கச்செய்யலாமென்பது ஏற்பட்டுவிட்டது. இனி, தூக்கம் பிடிக்காது துயரப்படுவோர்களுக்கு மின்சாரம் நன்மருந்தாகும். தூக்கமின்மை யென்னும் நோயே தொலைந்துவிடுமென்று இச் சாஸ்திர விற்பன்னர் சாற்றுகின்றார். மின்சாரத்தை ஒருநாதனமாய் மண்டையில் மூளைக்குக் கீழே செலுத்துவதினால் தூக்கம் பிராப்தமாகிறதாம். எரியும் விளக்கை யவிப்பதற்கு சாவியிருப்பதுபோல் இதற்குஞ் சாவியுண்டு. எனவே, வேண்டும்போது நிறுத்தித் தூக்கந் தெளியச் செய்யலாம். இப்பிரயோகத்தினாற் கொஞ்சமேனும கஷ்டம் நேரிடாமற் பாதுகாப்புத்தேடி யமைப்பதற்காக இன்னுமின்னும் பலவித பரீக்ஷைகள் நடத்தப்பட்டு வருகின்றன. முற்றிலுங் கைகூடியபிற்பாடு இவ்வித்தை வெளிவரும்.

இங்ஙனம், மேல் நாட்டார்களாகிய ஐரோப்பியர்களும் அமெரிக்கர் முதலானவர்களும் புதுச்சக்திகளைக் கண்டுபிடிப்பதில் புத்தியைச் செலுத்தி யிருக்கிறார்கள். மின்சார சக்தியையும் அதையுபயோகிக்கும் விதத்தையும்பற்றி பிரம்மாண்ட புராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறதாக நம்மூரார் சொல்லிக் கொள்ளுகிறார்கள். நம்மவர்களோ வென்றால், இதைப் பற்றி சிற்பசாஸ்திரங்களிற் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாகப் பெருமை பேசுகிறார்கள். அந்த சிற்பசாஸ்திரங்க ளெங்கே? அவற்றிற் சொல்லப்பட்டிருக்கிற தென்பது உண்மைதானா? இஃதுண்மையாயிருந்து சிற்பசாஸ்திரங்களுங் கிடைப்பதானாலும், அவற்றை யெடுத்து விளக்கக்கூடியவர்க ளிருக்கிறார்களா? நாம் அவற்றினுபயோகத்தால் மின்சாரசக்திப் பலன்களைப் பிறருக்கு நிரூபணஞ் செய்து, பலவாறாக அதை யுபயோகப்படுத்தி மேல் நாட்டார்போல் சிருஞ் சிறப்பு மடையக் கூடுமா?

எமக்கு நம்பிக்கையில்லை. ஆலயம், கிருகம், தடாகம், ரதம், விக்கிரகபாதியவைதவிர மற்றவற்றைப்பற்றி சிற்பசாஸ்திரங்களைத் தேடியடைந்து ஆராய்ந்தறிந்து, பல தொழில்களிலும், மின்சார சக்தி முதலியவற்றின் பிரயோகங்களிலும் நாம் தேர்ச்சியடையலா மென்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. இஃது எட்டாப்பழத்திற்குக் கொட்டாவி விட்டகதையும், கனவை நினைந்து நினைவிலுருகிய கதையுமாகும். இதற்குச் சுலபவழி இங்கிலீஷ் படிப்பேயாகும். இதுவே கண்கண்ட வழியாயிருக்கிறது. இங்கிலீஷ் வாசிப்படைந்த நமது நாட்டார் பலர் அவ்வாசிப்பு பலத்தாலும், வெளிசஞ்சாரத்தாலும், ஆராய்ச்சி முதலியவைகளாலும் தொழில்நுட்பங்கள் பலவற்றையறிந்து உபயோகப்படுத்தி வருகிறார்கள். கைத்தொழில்களுக்குச் சுதந்திர பாத்தியதை கொண்டாடிக் கர்மகாரர்களென்று சொல்லிக் கொள்ளப்படும் நாம் அறியாதவுஞ் செய்யக்கூடாதவுமான மர்மங்களையும் அற்புதத் தொழில்களையும் பாரதமக்களாகிய மற்றையோர் அறிந்தும் செய்தும்வரக் கண்கூடாக் கண்டுவருகிறோம்.

இந்தஸ்திதியில், கொக்கைப் பிடிக்க விரும்பினானொருவன் அதின் தலையில் வெண்ணெயை வைத்து அஃதுருகிக் கண்ணைமூடுந்தருவாயில் கைப்பற்ற எண்ணியவாறே போன்றுள்ளது நாம் சிற்பசாஸ்திரங்கள் தேடிச் சிறப்படையலாமென்று கருதுவது. இதனாற் கண்டபலன் காலஹரணமேயன்றி மற்றொன்றுமில்லை. ஆதலால், நாம் நமது சிறுவர்களுக்கு இங்கிலீஷ் கற்றுக்கொடுத்து, அவர்களைத்தொழிற்றுறைகளில் திருப்பி, அவற்றைத்திருத்தி விருத்திசெய்யப் பண்ணவேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்விதத்தில் ஆங்கிலக்கல்வி நமது குலச்சிறுவர்களுக்கு அத்தியாவஸ்யமாயிருக்கிற தென்பதைக் குலாபிமானிகள் நன்கு குறித்துக் கொள்வார்களாக. ஆங்கிலக்கல்வி யடையப்பெறாத பாக்கியஹீனர்கள் சிலர் நமக்கு ஆங்கிலக்கல்வி அனாவஸ்யமென்று அறியாமையாற் கூறிவருவதாகத் தெரிகிறது. இது, மூக்கரையன் கதையை ஞாபகமூட்டுகிறதல்லால் மற்றில்லை. வேறொரு முறை அவ்வறிவீனத்தை யலக்கழிப்போம்.

---

## காயத்ரி மகாமந்திரம்.

வேதசம்பந்தமான நித்தியகர்மங்களாகத் துவிஜர்களுக்கு ஏற்பட்டிருப்பனவற்றுள் காலை மாலை சந்தியா வந்தனம் முக்கியமான கர்மமாம். சந்தியா வந்தனம் என்னப்படுவது ஈஸ்வர ஆராதனையேயல்லாமல் மற்றொன்றுமல்ல. பிற கர்மங்களைப் போலவே, சந்தியா வந்தனத்திலும்- அங்கி அங்கம்; முக்கியம் கௌணம்; உயிர்ப்பாகம் உடற்பாகம்-என்பனஉண்டு. அர்க்கியம், அபித் தியாநம், ஜபம், உபஸ்தாநம் எனபவை முக்கியமானவை யென்றும், ஆசமநம், சங்கல்பம், மார்ஜநம், தர்ப்பண மாதியவை கௌணமானவை யென்றுஞ் சொல்லப்படுகின்றன. கௌ

ணம் என்பது உடயோகமற்றது என்று பொருள்படுவதாகக் கொள்வது பிசகு. மற்றதை நோக்கி இது அமுக்யமென்று கொள்வதே சரியாகும்.

காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் என்னும் அரிஷட்வர்க்கங்களாகிய மந்தேஹர்கள் என்னும் அசுரர்கள், ஆன்மாவாகிய ஞானசூரியனை யோட்டி யப்புறப்படுத்துவதற்காக காயத்ரீமந்திரத்தைத் தியானித்து உச்சரித்து அம்பு எய்வதின் அறிகுறியாக ஜலத்தைக்கையி லேந்தி எறிவது அர்க்கிய பிரதானமாகும். இது மார்ஜநம், ஆசமநம், பிராணாயாமம் முதலிய கிரியைகளினால் பிராணன், வாக்கு, காயங்களைப் பரிசுத்தப்படுத்தி, பிறகு காயத்ரீ மந்திரத்தால் மனத்தூய்மை பெய்தச்செய்து கொள்வதாம்.

மனத்தூய்மைபெய்தி, மன அலைகள் ஓய்ந்தபின் (சித்தவிர்த்திகள் ஒடுங்கிய பிற்பாடு), ஆதித்தன் முதலான வெளிப்பிரபஞ்சத்தில் அந்தர் யாமியாயுள்ள பரமாத்மாவும், சந்தியா உபாசகருடைய அன்னமய, பிராணமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்களுக்குள் ளிருக்கும் ஆன்மாவும் ஒன்றே, இரண்டல்ல வென்னும் உள்ளுணர்வடைதல் அபித்தியாநமாம்.

ஜெபமாவது—மேலே தெரிவித்தபடி ஒன்றான உள்ளுணர்ச்சியுண்டாக, அவ்வுணர்வின் பொருளாகிய ஈசுவரனைத் தியானிப்பது. இதுவே காயத்ரீஜெபம். இம்மகாமந்திரத்தின் கருத்து-சர்வஜீவர்களுக்கும் தேஜஸ் அளிப்பவரும், பிரபஞ்சமெல்லாஞ் சிருஷ்டிக்கின்றவரும், எவராலும் பூசனைசெய்யப்படுபவரும், எமது புத்தியைப்பிரேரணை செய்கிறவரும், நன்னெறியில் நடத்துகின்றவரும் ஞானப்பிரகாசருமாகிய அந்த ஈசுவரனைத் தியானம் செய்கிறோம்—என்பதே. பிரபஞ்சத்திலுள்ள சர்வவித்தைகளும் வேதங்களில் அடக்கமாயிருக்கின்றன. வேதங்களோ காயத்ரி மந்திரத்துளடக்கம். காயத்ரியோ பிரணவத்துளடக்கம். இதுவே உபநிஷத்துக்களின் துணிபாகும்.

காயத்ரீமந்திர உண்மையுணர்ந்த குருவானவர் உபநயன சம்ஸ்காரகாலத்தில் சிஷ்யனுக்கு உபதேசிப்பார். இதற்குபிரம்ஹவித்யை யென்றுபெயர். பூர்வகாலத்தில் இஃதுபதேசிக்கப்பட்ட ரகசியமுறையைக்காட்டும் வண்ணம், தற்காலத்திலும், உபதேசிக்குஞ்சமயத்தில் பட்டையேனும் அல்லது வேறு சுத்த வஸ்திரத்தையேனும் ஆசாரியனும் சிஷ்யனும் போர்த்துக்கொண்டு, ஆசாரியன் சிஷ்யனுடைய காதில் உபதேசிப்பதுண்டு. இப்பட்டுப்போர்வையானது, பிரம்ஹவித்யையை உபதேசிக்கப் பெறுபவன் துவிஜனாகின்றவாற்றால், அந்த கர்ப்பப்பையைச் சூசிப்பிக்கிறதென்றுங் கொள்ளலாம்.

காயத்ரி மந்திரமானது மந்திரங்களுக்குள் மிகச் சிரேஷ்டமானது. இதைக்கிரமப்படி உச்சரித்திடுவோர் தாம் நலம்பெறுவதோடு உலகமுழுவதும் நலம்பெறச் செய்கின்றவராவர்.

''எங்களுடைய புத்தியைப்பிரேரணை செய்து நடத்துகின்ற பிரகாசமான அந்த ஞான சூரியனுடைய திவ்வியஜோதியைத் தியானிக்கின்றோம்''—என்பதே காயத்ரீ மந்திரத்தின் சுருக்கமான அர்த்தம். இதைத்தியானிப்பவன் சர்வஜீவராசிகளுடைய நன்மையும் பிரார்த்திக்கின்றானென்பது பன்மைகளினால் வெளிப்படும்.



இம்மந்திரத்தை உச்சரிப்பதற்குமுன் மூன்று அல்லது ஏழு வியாகிருதிகளை உச்சரிக்கவேண்டும். இவை மந்திர உண்மைகளைக் காட்டுந்திறவுகோல்களாகும். பூ: புவ: ஸுவ—என்பனவே மூன்று வியாகிருதிகளாகும். இவை மனிதனுடைய ஸ்தூல, சூக்கும, காரணமாகிய வியஷ்டி சரீரங்களையும்; வைஸ்வாநரன், ஹிரண்யகர்ப்பன், ஈஸ்வரன் என்ற சமஷ்டிசரீரங்களையும்; ஜாக்ரத, ஸ்வப்ன, ஸுஷுப்தியாகிய மூன்றவஸ்தைகளையும் பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்னும் மூன்று லோகங்களையுங்குறிக்கின்றன. பூ: புவ: ஸுவ: மஹ: ஜந: தப: ஸத்யம்—என்பவையே ஸப்தவியாகிருதிகளாகும். இவை. மனிதனுடைய ஸப்த அம்சங்களையும், பிரகிருதியின் ஸப்தநிலைமைகளையும், ஸப்தலோகங்களையுங் குறிக்கின்றன.

ஜபஞ்செய்யுங்காலத்தில் உபாசகனானவன் விராட்புருஷனிடம்ஒருமைப்பட்டு மூன்று அல்லது ஏழு லோகங்களுடன் தன் மூன்று சரீரங்களை அல்லது ஏழு அம்சங்களை முறையே சாந்தமாகவும் நேர்மையாகவும் பொருந்தும்படி செய்துகொண்டு, தன் இருதயத்துள்ள ஆன்மாவாகிய ஞானசூரியனிடத்திலிருந்து சர்வலோகங்களிலுமிருக்கும் ஜீவராசிகளுக்கு ஸந்துஷ்டி, ஞானம், சாந்தமிவையுண்டாகவேண்டுமென்று ஒரே மனோநிலையில் நின்று சிதறாது தியானஞ்செய்யவேண்டும். இங்ஙனம் பக்தியுடன் உண்மையுணர்ந்து சூரியனை யுபாஸிக்கின்றவனே பிராமமணனுவான்.

பிருஹதாரண்ணியக, சாந்தோக்ய, ஸுர்யோபநிஷத்துகளில் காயத்ரீ உபாசனமுறை நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. காயத்ரீசப்தம் ஸ்திரீலிங்கமாவதால் ஈஸ்வரப்பிரதிபாதகமான மந்திரமாயிருந்தாலும், தேவியாக உபாஸிக்கப்படுகிறது. இம்மந்திரத்தியானம்—காலையில் சிவப்பு வஸ்திர மணிந்த காயத்ரீ தேவதையாக, மூலாதாரத்தின் கண் லக்ஷியம்வைத்தும்; மத்தியானத்தில் வெள்ளை வஸ்திரமணிந்த சாவித்ரி தேவதையாக புருவமத்தியிலும்; சாயங்காலத்தில் நீலவஸ்திரமணிந்த சரஸ்வதிதேவியாக இருதயத்திலும்—நிகழவேண்டும். (மாத்தியாந்நிகம் வேதத்தில் விதிக்கப்பட்டதல்ல, ஸ்மிருதிப்புரோக்தமாம்.)

சாதாரணமா யுபதேசிக்கப்படும் காயத்ரிக்கு மூன்று பாதங்களுள. இதை த்ரிபாதகாயத்ரி என்பதுண்டு: இது சகுணம் மூன்றும் முறையே பூலோக, புவர்லோக ஸுவர்லோக மென்று உபலக்ஷமாகக் கூறப் பட்டதிரிபுடி சம்பந்தமுடையன. இந்த காயத்ரியுபாசனை செய்வோன் கர்மயோகி: என்றால், சகலகர்மங்களையும் தனக்கெனச் செய்யாமல் பிறருடைய நலத்தைக்கோரி ஈஸ்வரார்ப்பணமாகச் செய்கி

ன்றவன். பிரம்மச்சாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன் என்னும் முதல் மூன்று ஆஸ்ரமிகளும் இந்த காயத்ரி உபாசனைக்கு அதிகாரிகளாவர். நான்காவது ஆஸ்ரமத்தனாகிய சந்நியாசி திரிபுடியையும் திரிலோகங்களைந் தாண்டினவனாதலால் த்ரிபாத காயத்ரியுபாஸனை அவனுக்கு முக்கியமல்ல. அவன் சதுஷ்டிபாதகாயத்ரிக்கு அதிகாரியாவான்.

காயத்ரியை ஸ்திரீரூபமாக உபாஸிப்பதில் ஈஸ்வரனுடைய அபின்னபராசக்தியாயுபாசிக்க வேண்டும். கேனோபநிஷத்தில் உமாதேவியே காயத்ரியெனப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

திருமந்திரம்—

காயத்திரியே கருது சாவித்திரி
யாய்தற் குவப்பர் மந்திரமாங்குன்னி
நேயத்தே நேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துட் டோயா மறையோர்கடாமே

என்று கூறுகிறது. ஸ்வேதாஸ்வதரோபநிஷத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தேவாத்மசக்தியும், கீதையில் ஏழாவது அத்தியாயம் ஐந்தாவது ஸ்லோகத்திற் கூறப்பட்டுள்ள பரப்பிரகிருதியும் காத்ரியேயாம்.

## அதிமதுரம்.

கல்போது என்னும் ஊரில் பெரிய தம்பி ஆச்சாரியார் என்னும் ஒருவித்வசிரோமணியிருந்தார். இவரை அவ்வூர் இரட்டியாரொருவர் "என்ன ஆச்சாரியாரே! தட்டான் பயிர் காய்த்திருக்கின்றதா?" என்றுகேட்க, அதற்கு விஶ்வகுல ஆச்சாரியாராகிய ஷை பண்டிதேர்த்தமர் "ஆமாம், உழவிரட்டியானதினால் காய்க்கத் தடையேது? என்றனராம்.

லோபகுணத்திற் சிறந்த செட்டியாரொருவரிடம் ஒருபுலவர் சென்று நான்குபாடல்களைச் சொல்லி "என்கலிதீரக் காசுகொடுக்க வேண்டும்" என்று கெஞ்சினர். செட்டியார் புலவரைப்பார்த்து "சும்மா சொந்திரவுப்படுத்தாதேயுங்கள்; காசா லேசா" என்னப் புலவர் மிகவும் மனம் நொந்தவராய் மிகுந்த சோபத்துடன் "அப்படியா? காசா லேசா" என்று செட்டியாரைநோக்கிச் சபித்துவிட்டுப் போயினராம்.

***

விஶ்வகர்ம குலோற்பவராகிய மாம்பழக்கவிச் சிங்கநாவலரென்னும் அந்தகப்புலவரிடம் இராமாநுஜகவிராயர் ஒருநாள் சென்றார். நாவலர், வந்தவரின்னாரென்று தெரிந்துகொள்ளும் பொருட்டு, "யார் அது?" என்று கேட்கக், கவிராயர் "நான்தான், இராமாநுஜன்" என்று பதில் கூறினார். இதைக்கேட்டதும் நாவலர் "ராமாநுஜன் வரவுக் கிடமிருக்கலாம்; 'இ' என் வந்தது?" என்றனர். உடனே இராமாநுஜகவிராயர் "மாம்பழத்தின் சுவையறிய வந்தது" என்று விடையளித்தனர்.

***

ஷை மாம்பழக் கவிச்சிங்கநாவலர் ஒரு சமயம் இராமநாதபுரத் தரசர் சமுகத்திற்கு ஓர் பையனைத் துணைக்கொண்டு சென்று, அரண்மனைவாயிலைக் கிட்டியதும் அப்பையனை விடுத்துத்தனியே கையிற் கொண்டிருந்த கோலையூன்றிக்கொண்டு, அங்கிருந்த மரப்படி மீதேறிப் போகையில் அரசர்கண்டு "தட்டாமல்வருக" என்றனராம். (நாவலர் பொன்வினை செய்யும் சுபர்னஸகோத்திரஸ்தர். இதைக்குறிப்பிக்க வேண்டியே அரசர் அவ்வாறு கூறினர்.) அரசர் சொன்னது தமது செவியில் விழுந்த மாத்திரத்தில் நாவலர் ஷை அரசர் மரபைச்சுட்டும் வண்ணம், "மரப்படிதானே" என்று சொல்லிக்கொண்டே சமுகத்தை யடைந்தனராம்.

உ

ஸ்ரீமத்விராட்விஶ்வகர்மணே நம:

# விஶ்வகர்மன்

சென்னை விஶ்வகர்ம குலோத்தாரண சபையாரால்
பிரசுரிக்கப்படும் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்—திருக்குறள்.

சம்புடம் I.] நவம்பர் 1913. [சஞ்சிகை 2.

OFFICE OF THE REGISTRAR ...

## ஆச்சார்யபட்டப் பிரயோகம்.

விஶ்வகர்ம குலத்தார்களுக் கேற்பட்டுள்ள பட்டங்கள் பலவற்றுள் "ஆச்சார்ய" வென்பதே முக்கியமானது. இது தான் மற்றைப் பட்டங்களைவிட அதிகமாய் நம்மவர்களால் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நமது ஜாதியாரொருவரைப்பற்றி மரியாதையாய்ப் பேசவிரும்பும் மற்றவர்கள் சாதாரணமாக "ஆச்சாரியார் வந்தார்", "ஆச்சாரியாரை அழை" என்பதுபோன்ற பிரயோகங்கள் செய்வது சகசமாயிருக்கின்றது. இந்தப் பட்டந்தான் நமது குலப்பெருமைக்கு ஓர் போத்தாக்ஷியாயிருந்துவருகிறது நமது ஜாதியினுடைய ஸ்தானத்தை மற்றவர்களுக்கெல்லாம் சந்தேகமற ஸ்தாபிக்கும் போதரவு இதுவேயாகும். இப்பட்டம் நம்மோடு இரண்டறக் கலந்திருக்கிறது. வேதகாலமுதல் இப்பட்டம் நமக்கே யுரியதாயிருந்து வருகிறதென்று நன்கு விளங்குகிறது. விஶ்வகர்ம சந்ததியார் தேவஜாதியோர்களுக்கு ஆச்சாரியரா யிருந்து வந்தார்கள். அந்த ஆச்சாரியத் தன்மை காரணமாகவும், அவ்வாச்சாரிய பதவியை வகித்து நம்மவர்கள் வாழ்ந்து வந்ததினாலேயே அப்பட்டம் நமக்கு சுதந்திரமாயிற்று. இதைக் காரணச்சிறப்புப் பட்டமென்றே சொல்லவேண்டும். தக்க காரணங்களின்மேலே தான் அப்பட்டத்திற்கு நாம் பாத்தியஸ்தர்களானோம். அப்பாத்தியதையைப் பாரதமக்கள் அங்கீகரித்துப் பழைமையாய் நம்மை "ஆச்சாரியர்"கள் என்றே கொண்டாடி வந்தார்கள்.

இடையிலே, நமது ஜாதியாரின்மீது பிறருக்கு உண்டான அசூயை காரணமாக, நமக்குப் பலவிதத்திலும் இடுக்கண்கள் உண்டுபண்ணத் தலைப்பட்டார்கள். அவரவர்கள் தாங்கள் அதிகாரிகளிடத்தில் கொண்டிருந்த செல்வாக்குத் தக்கபடி நமது நன்மைகளைக் கெடுத்துத் தீமை

யுண்டுபண்ணி வந்தார்கள். "ஆச்சார்ய" மகாபட்டங் கொண்டுள்ளவர்களாகிய நாம் தாழ்ந்த குலத்தினரென்று பிறர் மலைக்கப் புரட்டுகள் செய்தனர். உயர்குலத்தார்க்குரிய சுதந்திரங்கள் சிலவற்றை ஓரோவிடங்களில் மாற்றப் பிரயத்தினப்பட்டார்கள். நமது குலமேன்மையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உண்மையாய்க் காட்டுவனவாகிய வேதசாஸ்திராதார வாக்கியங்களை அவற்றின் ஸ்தானங்களினின்றும் அகற்றினார்கள். இன்னோரன்ன பல தீங்குகள் செய்தார்கள். இம்மட்டோ? இவை போதாபோல், நமது பட்டத்திலேயே நாட்டம் வைத்தார்கள். எஃதெப்படியாயினும், இப்பட்டமொன்றே நமது குலோன்னதத்திற்கு நிலைக்களமாக நின்று நிலவுவதுகண்டு மனம்பொறாமல், அதையும் மாற்றவேண்டுமென்று ஆரம்பித்தார்கள். இவ்வாரம்பம் சுமார் முப்பது வருஷங்களுக்குமுன் செய்யப்பட்டதென வேண்டும். அப்போது முதல் "ஆச்சார்ய" என்னாமல், நமது பட்டத்தை "ஆஸாரி" யென்று வழங்கக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தலைப்பட்டார்கள். இந்த விகாரம் நாளுக்குநாள் வலிவுபெற்று வந்து, கடைசியில் கவர்ன்மெண்ட் ஆர்டர் ரூபமாய் வெளிவந்துவிட்டது. (G. O. No. 659 Public, dated 26-6-13).

இந்த கவர்ன்மெண்ட் ஆர்டரில் தென்னாட்டில் வசிக்கும் பல ஜாதியார்களுடைய பட்டப்பெயர்கள் என்னவிதமாயெழுதப்படவேண்டுமென்பது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அதில், "ஆச்சாரி" யென்ற பட்டம் வைஷ்ணவப் பார்ப்பார்களுடையதென்றும், நம்முடைய பட்டம் "ஆஸாரி" யென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதற்குமேல் நமது குலத்திற்கு வேறென்ன ஆபத்து வரக்கூடும்? அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு ஜாதிப் பட்டத்தையும் தைத்தன ரிகார்டுகளில் ஷை ஆர்டரில் கண்டவிதமாகவே பதிவுசெய்ய வேண்டுமென்றும், அதிற் கண்ட பிரயோகங்களை உடனே அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அந்த ஆர்டரில் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

இதற்கிணங்க, ஷை ஆர்டர் வெளிப்பட்டநாள் முதல் வைணவப் பார்ப்பார்களுடைய பெயர்கள் முன்போல் "சாரி" யென்னும் பட்டத்தோடல்லாமல் இப்போது "ஆச்சாரி" யென்னும் பட்டத்துடன் அரசாங்கப் பத்திரிகையாகிய கெஜட்முதல் எல்லா ரிகார்டுகளிலும் எழுதப்பட்டுவருகிறது. நம்முடைய பட்டமோ, முன் பெரும்பான்மை "ஆச்சாரி" யாகவும் சிறுபான்மை "ஆஸாரி" யாகவும் எழுதப்பட்டு வந்ததற்கு மாறாக, ஒரேபடியாய் "ஆஸாரி" "ஆஸாரி" யென்றே எழுதப்பட்டு வருகிறது.

இந்தஉண்மை நம்மவர்களில் எத்தனை பேர்களுக் கெட்டியிருக்கிற தென்பதை நாமறியோம். அறியு மொவ்வொருவரும் ஆத்திரப்படுவார்களென்பதில் அணுவளவேனுஞ் சந்தேகங் கிடையாது. ஏனென்றால், ஒருவர்க்குத் தமது குலப்பட்டஞ் சிதைவுறுதலினும் தௌர்ப்பாக்கியம் வே



றுண்டோ? இவ்வாறாய நமது உள்ளத்துளர்ச்சியை விளக்கி ஆராகிருதமா யேற்பட்டதாகிய இப்பெருங் குறையைத் தீர்த்தருளவேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்வோமானால், காருண்ய கவர்ன்மெண்டார்கள் ஷை ஆர்டரை மாற்றி நமது பட்டப்பெயரை என்றுமுள்ளபடி "ஆச்சாரி" யென்றுகொள்ள உத்திரவு செய்வார்கள். ஆனால், நமக்கு உள்ளபடியே ஓர் பேராபத்து நேரிட்டுவிட்டதென்று அரசாங்கத்தார் நன்றாய்க் காணும்படியாக நாம் அவர்களுக்கு முறையிட்டுக் கொள்ளவேண்டும். அழுதபிள்ளை தானே பால்குடிக்கும். தாய்க்குப் பிள்ளையின்மீது அன்பிருத்தல் நிச்சயமேயானாலும், பிள்ளை மந்தமாயிருந்தால் தாய் தன் வேலைகளிலிருப்பளே யல்லாமல் தானாக அடிக்கடி அப்பிள்ளைக்குப் பாலூட்டமாட்டாள். பாலுண்ண வேண்டுமானால், அக்குழவியழுதீர வேண்டுமாபோல், நாமும் நமது குறைதீர அழுது புலம்பவேண்டியவர்களாயிருக்கிறோம். எவ்வளவு அதிகமாகவும் எவ்வளவு சத்தமாகவு மழுகிறோமோ அவ்வளவு சீக்கிரமாக நமது தாய்போன்ற தயாநிதிகளாகிய அரசாங்கத்தாருடைய கவனத்திற்குப் பாத்திரராகி நமது குறை தீரப் பெறுவோம். அப்படியல்லாமல், மந்தமாயிருந்து விடுவோமானால் நமது குறை தீரவேமாட்டாது. அப்புறம் நமது கதி அதோகதிதான்.

இதற்காக, நம்மவர்கள் தனித்தனியாகவும், கூட்டமாகவும் கவர்ன்மெண்டாருக்கு மகஜர்களனுப்பவேண்டும். பெருஞ் சபைகளைச் சேர்த்து, இவ்விஷயமாய் ரிஸலூஷன்கள் பாஸ் செய்தனுப்பவேண்டும். முக்கிய பட்டணங்களிலெல்லாம் இதைப்பற்றிய கூட்டங்கள் சீக்கிரத்தில் நடைபெறுதல் நன்று. குலாபிமானிகள் இவ்விஷயத்தில் ஊக்கங்காட்டுதல் அத்தியாவஸ்யமாயிருக்கிறது. திருச்சிராப்பள்ளி விஸ்வப்பிரம்ம மகாஜன ஸெண்ட்ரல் சபையார் இக்காரிய சம்பந்தமாக அதிகக் கஷ்டப்படுத் துழைப்பதை யறிந்து மிகவுஞ் சந்தோஷிக்கிறோம். இவர்கள் நமது குலத்தாரெல்லோருடைய வந்தனங்களுக்கும் பாத்திரராயிருக்கிறார்கள். பலவிடங்களிலுள்ளவர்களுடைய கையெழுத்துகள் பெற்று, ஷை சபையார் ஏற்கனவே நமது மாகாண கனம் கவர்னர் துரை அவர்களுடைய சீப்செகிரிடரி யென்னும் முக்கியக் காரியதரிசியவர்களுக்கு மகஜர்களனுப்பியிருக்கிறதாகத் தெரிகிறது. எந்தெந்த ஊரார்களின்னுமனுப்பாம லிருக்கிறார்களோ அவர்கள் உடனே கையெழுத்துகள் வாங்கியனுப்பவேண்டும். மகஜர் பாரங்கள் ஷை சபைக் காரியதரிசியும் பெருங்குலாபிமானியுமாகிய பிரம்மஸ்ரீ **T. A.** முத்துகிருஷ்ண ஆச்சாரியாரவர்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஓரிலக்ஷத்திற்குக் குறையாமல் கையெழுத்துகள் வாங்கவேண்டியாதலால், இதன் சிரமத்தையும் அவசரத்தையுங் கணித்துக் குலோத்தமர்கள் இவ்விஷயத்தைப் பலருக்கும் பிரஸ்தாபித்து பலர் சகாயமும் பெற்றுழைக்க உடனே முன்வருவார்களென்று வேண்டுகிறோம்.

ஸ்வதேஸ பாஷைகளைப் பொறுத்த மட்டிலும் "ஆச்சார்ய" ஸப்தத்தைச் சரியாய் எழுதுவதிலும் உச்சரிப்பதிலும் யாதொரு சங்கடமுங் கிடையாது. தமிழிலிருக்கும் "ச" என்னும் உயிர் மெய்யெழுத்து வல்லினம். இதை இங்கிலீஷிலெழுதுவதாயிருந்தால் "cha" உபயோகிக்க வேண்டுமே யொழிய "sa" உபயோகிக்கக்கூடாது. சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளைப் பற்றிச் சொல்லவேண்டியதே யில்லை. "ஆச்சார்ய" என்னும் பதமே சமஸ்கிருதத்திலிருந்துண்டாயது. இதற்கு குரவன், குரு தலைவன் என்று பொருள் சொல்லப்படும். ஆசாரமுடையவன "ஆசாரி" யென்று பொருள் கொள்வதுமுண்டு. இந்தப் பதங்கள் கிரமமாய் "ஆசார்ய", "ஆசாரி" என்றே எழுதப்படவேண்டும். ஏனென்றால், அம்மாத்திரத்தானே அவை சரியான சப்தத்தைத் தரக்கூடியவையாயிருக்கின்றன. ஆனால், மற்றைய ஜாதியார்கள் சப்தக்குறைவாக "ஸ" வென்றுச்சரிப்புடன் நமது பட்டத்தை வழங்கத்தலைப்பட்ட பிற்பாடு, நம்மவர்கள் தாங்களும் தம்மை "ஆஸாரி"கள் என்று சொல்லிக்கொள்ளலாயினர். இந்த ஸப்தம் திருநெல்வேலி ஜில்லாமுழுவதும் வழக்கத்திலிருந்து வருகிறது. சிறிது சிறிதாக மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயமுத்தூர் முதலிய தமிழ் ஜில்லாக்களிலும் பரவிவருகிறது. இஃதென்ன கொடுமை யெனலாம்! இவ்விதம் தமது ஸ்வதந்திரத்தையும், பெருமையையும் நம்மவர்கள் தாமறியாமலே தாழ்த்திக்கொள்ளுகின்றார்களென்றால், பிறர் நம்மைக் கெடுப்பதற்குக் கேட்கவேண்டுமோ? இது, யானை தன்தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக் கொள்வதுபோன்றிருக்கின்றதேயொழிய வேறில்லை. கல்வியும் நாகரிகமும் மிகுந்துவரு மிக்காலத்தில் இவ்விதமாக நடந்துகொள்ளும் ஜாதியார்களுமிருக்கின்றார்களே, ஐயோ!

இனிமேலும், நம்மவர்கள் தம்மைத் தாமே 'ஆஸாரி'களென்று சொல்லிக்கொள்வதை உடனே நிறுத்திக்கொண்டு சரியாய் "ஆச்சாரி" யென்று சொல்லப் பழகுவார்களாக. மற்றவர்கள் நம்மை "ஆஸாரி"களென்பதைப் பார்க்கிலும், நம்மை நாமே "ஆஸாரி"களென்றுரைப்பதே அதிக அவமானகரமாயிருக்கிறது. இனி, ஒவ்வொருவரும் இப்பட்ட உச்சரிப்பு விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். "ஸ" ஸப்தம் கேட்கப்படும் போதெல்லாம் அதைக் கண்டிக்கவேண்டும். எவரேயாயினும், அவ்விதமுபயோகிக்க விடலாகாது; விட்டால், பெருங்கஷ்டம் நேரிடும்; சொன்னோம், சொன்னோம், சொன்னோம்!

டாக்டர் பின்ஸ்லோதுரை 1862-வது வருஷத்தில் வெளிப்படுத்திய "தமிழ் இங்கிலீஷ் அகராதி"யிலும், டாக்டர் மக்ளீன் துரை 1893-வது வருஷத்தில் வெளியிட்ட "சென்னை இராஜதானியின் அரசாக்ஷி முறைமை" யென்னும் புத்தகத்திலும், "ஆச்சாரி" யென்பது திராவிடபதமாகக் கொள்ளப்பட்டு, யாதொரு தொ



ழிற்றதிகாரி யென்ற பொருள் விரிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு இங்கிலீஷ் புத்தகங்களிலும் "ஆஸாரி" யென்னும் பதப்பிரயோகமே கிடையாது. என்றால், அவ்விதப் பதமொன்று இருந்ததேயில்லையென்றும், இருந்துளதாகில் இவற்றுள் ஆளப்பட்டிருக்குமென்றும் கரதலாமலகம்போல் காணக்கிடக்கிறது. எனவே, "ஆஸாரி" யென்னும் பதம் நவீன சிருஷ்டியென்ப தேற்படுகிறது. "ஆச்சார்ய" பட்டம் நம்மவர்களுக்குபயோகிக்கப்பட்டு வந்ததற்கு அநேக சிலாசாஸனாதாரங்களிருக்கின்றன. இந்த சாஸனங்களோ அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டவையே. அவர்கள் மூலமாகத்தான் நாம் அவற்றைக் காணப் பெற்றிருக்கின்றோம். "ஆஸாரி" யென்னும் பதத்தை எந்த சாஸனத்திலேனுங் காட்ட முடியாது. இன்னும், இந்தியருடைய நடவடிக்கைகளையும் அநுஷ்டானங்கள் முதலியவற்றையும், பிறர் மூலமாயல்லாமல், தாமே நேராகக் கவனித்தறிந்த மிஸ்டர் **J. W.** டைக்ஸ் துரையவர்கள் தாம் 1853-வது வருஷத்தில் பிரசுரித்த "சேலம், ஓர் இந்திய கலெக்டரேட்" என்னும் புத்தகத்தில் நம்மவர்களைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவந்தவிடத்து, கம்மாளர், கர்மகாரர் முதலிய பதப் பிரயோகங்கள் செய்யாமல் "ஆச்சாரிகள்" என்று எழுதியிருக்கின்றார்கள். இந்நூலாசிரியர், தாம் தமது புத்தகத்திலாண்டிருக்கின்ற பதம் ஒவ்வொன்றும் உலகவழக்கத்திற்கும் ஜனசம்மதத்திற்கும் ஒத்தவாறே எழுதப்பட்டிருக்கின்றதென்று, ஷை புத்தக முகவுரையில் தெளிவாக விளக்கியிருக்கின்றார். இதனால், நமது "ஆச்சார்ய"ப் பட்டம் உலக வழக்கத்திற்கும் ஜனசம்மதத்திற்கும் ஒத்திருக்கிறதென்பது எவருக்கும் நிதரிசனமாகின்றதல்லவா?

சென்னை சர்வகலாசாலை யென்னும் மதராஸ் யூனிவர்ஸிடியார், நம்மவர்களில் இதுவரையிலும் பி. ஏ. முதலிய பட்டப் பரீக்ஷைகளில் தேறியிருக்கும் **L. S.** முருகேச ஆச்சாரி, **C.** சுப்ரமண்ய ஆச்சாரி, **T.** வடிவேலு ஆச்சாரி, **K.** மல்லிகார்ச்சுன ஆச்சாரி, **S.** ஆண்டிசுந்தர ஆச்சாரி யாதியவர்களுடைய பெயர்களைச் சரியாய் "ச" வென்றே எழுதியிருக்கிறார்கள். ஆனால், இதுவும் தகராறில்லாமல் சித்தித்ததில்லை. காலஞ்சென்ற ராவ்பகதூர் **S.** சுப்பராய ஆச்சாரியார் அவர்களே முதல் முதல், அதாவது 1863-வது வருஷத்தில் சர்வகலாசாலைப் பட்டத்திற் குரியவரானவர். அவர் பெற்றது பி. ஸி. இ. என்னும் இஞ்சினீர் பட்டம். அக்காலத்தில் சர்வகலாசாலை ரிஜிஸ்ட்ராரா யிருந்தவர் பிரபல தமிழ்ப்பண்டிதரும் இங்கிலீஷ் தமிழகராதி யெழுதியவருமாகிய ரெவரண்ட் **P.** பெர்ஸிவல் துரையவர்கள். பாஷை முறையும், இலக்கண வமைதியுமறிந்த சாஸ்திரக்ஞராதலால், அவர் 'ஆச்சாரியார்" என்று சரியாய்ப் பதிப்பித்தனர். 1875 - 76 - வது வருஷமட்டும் ஷை பெயர் யூனிவர்ஸிடி காலண்டர்களில் கிரமமாக பதிப்பிக்கப்பட்டு வந்தது. அவ்வருஷத்தில் நம்மவர் ஒருவர்

பி. ஏ. பரீக்ஷையில் தேறினர். அவர் பெயர் "ஆஸாரி"யென் றெழுதப்பட்டதோடு, அதற்கிணங்கி யிருக்கும்படி ஷை இஞ்சினீயர்கள் பெயரும் இதே சப்தமாக மாற்றப் பட்டது. இவ்வுண்மை ஷையாருக்கு 1819 - வது வருஷத்தில் தெரியவர, அவர் வாதிட்டுப் பழையபடியே "ஆச்சாரி" யெனப்பட்டார். இந்த வாதத்தில் கனம் ஸர். டி. முத்துசாமி ஐயர் முதலானவர்களு மீடுபட்டுக் கடைசியாய் "ஸ" பிரயோகம் பிழையானதென்றும், "ச" பிரயோகமே சரியானதென்றுந் தீர்மானித்திருக்க, இதைவிட நமக்குத் துணை வேறொன்று வேண்டுமோ?

ஆனால், "ஸ"பிரயோகத்திற்குக் காரணமென்னவென்று விசாரிக்கப் புகும்போது, வைணவப் பிராமணர்களுக்கும், விஸ்வப் பிராமணர்களுக்கும் பட்டமாத்திரத்திலேயே வித்தியாசம் விளங்கும்படிச் செய்ததிலே யாகுமென்று சொல்லப்படுகிறது. அதாவது, தற்காலமுள்ள ஸ்திதியில் இருவேறு வகுப்பினர்களும் ஒரே பட்டங் கொண்டிருக்கிறபடியால், அப்பட்டத்தோடு காணப்படும் பெயரொன்று வைணவப் பிராமணரைக் குறிக்கின்றதா அல்லது விஸ்வப்பிராமணரைக் குறிக்கின்றதாவென்று தெளிவாய் விளங்கவில்லையென்றும், இரண்டு வகுப்பினர்களுக்கும் வெவ்வேறான பட்டமிருந்தால் இவ்விதச் சந்தேகத்திற் கிடமுண்டாகாதென்றும், அதனால் "ஆச்சாரி"ப்பட்டத்தை வைணவப்பிராமணருக்கு வழங்கி, "ஆஸாரி" யென்பதொரு பட்டத்தை நம்மவர்களுக்கு வைத்திட்டால் ஷை சந்தேகம் நிவர்த்தியாய்விடுமென்றும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இந்த நியாயம் ஒருசிறிதும் பொருந்தாது. பல ஜாதியாரும் வழங்கிக்கொள்வனவாகிய பட்டங்கள் பல இருக்கின்றன. ஐயர், ஐயங்கார், பாகவதர் என்னும் பட்டங்களை சௌராஷ்டிரர்கள் கொண்டிருக்கிறார்கள். பண்டாரமையர், சாத்தானி அப்பா, மராட்டிராவ் இவர்களைப் பிராமண ஐயர் ஐயா ராவ்களினின்றும் வேறுபடுத்திக் காட்டக்கூடியதொன்றுங் காண்கிலோம். பிள்ளைப் பட்டம் வேளாளர், வன்னியர், இடையர், சான்றார், சண்டாளர் முதலியவர்களாற் கொள்ளப் பட்டிருக்கிறது. செட்டிப்பட்டம் பேரிச்செட்டிகள், வாணியர், செம்படவர், கைக்கோளர், கோமுட்டிகள் முதலானவர்களுக்கு வழங்கி வருகிறது. முதலியார் என்று சொல்லிக்கொள்வோர் வேளாளர், கைக்கோளர் முதலிய பல வகுப்பினரா யிருக்கின்றனர். இன்னுமநேக திருஷ்டாந்தங்களுமிருக்கின்றன. இவையெல்லாம் என்றும்போ லிப்போதுமப்படியே விடப்பட்டிருக்க, "ஆச்சாரி"ப் பட்டப் பிரயோகமட்டிலும் விசாரமேற்பட்டது விபரீதமாகவே காணப்படுகிறது.

மலையாளநாட்டுத் தச்சர்கள் "ஆஸாரி"களென்று சொல்லப்பட்டு வருதலுண்மை. இவர்களுக்கும் நமக்கும் ஜாதி விஷயத்தில் யாதொரு சம்பந்தமுங் கிடையாது. அவர்கள் பிரத்தியேகமானதொரு கூட்டத்தார். அவர்கள் பட்டத்தை நமக்கேற்படுத்துதல் அதிகேவலமாகும்.



## சிற்பசாஸ்திர விஷயம்.

(13-வது பக்கத் தொடர்ச்சி.)

சிற்பம் பிரதானமென்றும், வேதாமிசமானதென்றும், வேதசொரூபமென்றும், விஸ்வகர்மாவினிட மிருந்துண்டா யிருக்கிறதென்றும், சுருதியில் சொல்லப்படுகிறது.

ருக்வேதம் ஐதிரேய பிராம்மணம்
சண்டம்-௨௭-அத்தியாயம்-௫.
சில்ப்பாநிஸம்ஸந்தி தேவ
சில்ப்பாந்யேஷாம்வை
சில்ப்பாநாமநுகிருதிஹ
சில்ப்பமதிகம்யதே ||

காசியப ப்ரஜாபதி சிற்பியரென்றும், அவரிடமிருந்து அநேக சிற்பசாஸ்திரமுண்டா யிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

பிரஹதாரண்ணியகோபநிஷத்
சஸ்யப:சில்பாத்கஸ்யபாச்சில்ப:

இப்பிரகாரம் சிற்பசாஸ்திரம் தேவாதிதேவராகிய ஸ்ரீவிஸ்வகர்மாவின் வாக்கினின்றும், அவருடைய முகோத்பவர்களாகிய மனுவாதி ரிஷீசுவரர்களின் வாக்கினின்று முண்டானவாக்கியம். இந்த வாக்கியமானது லோகாபிவிருத்திக்கும், பரிபாலனாதி சகலவித போஷணைகளுக்கும், மோக்ஷா பேக்ஷையையும் சர்வாபீஷ்டங்களையும் அடையவேண்டியதற்காக ஈசுவரனைத் தெரியப் படுத்துகிறதற்கும், சகல மதங்களை ஸ்தாபிக்கும் பொருட்டும் பிரவிர்த்தித்ததாகவு மிருக்கிறது.

சிற்பசாஸ்திரமானது வைதிகமதத்திற்கும், புறச்சமயத்திற்கும், விதிவிலக்கைக் காண்பிக்கிற பொதுநூலாகவும், ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொருபுராணமேற்பட் டிருப்பதுபோல வல்லாமல் பலபல மார்க்கவிஷயங்களைக் கூறினதாகவுமிருக்கிறது.

அஷ்டாதசபுராணம் முழுவதும் சேர்ந்து கிரந்தசங்கியை பார்த்தால் உத்தேசம் நான்கு லக்ஷமென்று சொல்லலாம். இச்சிற்பமோ ஒவ்வொன்றும் பரார்த்தமென்றும், அற்புதமென்றும், அநேகம் கோடாகோடி சங்கியைகளாகவும் முழுவதும் சேர்ந்தால் அளவிடக்கூடாததாகவு மிருக்கிறது. மேலும் உபசிற்பங்களும் சங்கியையில்லாமல் அநேக மஹரிஷிகளால் சொல்லப் பட்டதாகவு மிருக்கின்றன. இவைகளில் விஸ்வகர்மீயம், மனுசூத்திரம், மயமதம், துவாஷ்ட்ரு தந்திரம், ஐந்திரமதம், சௌரம், பிரஜாபத்தியம், காசியபம், மனுசாரம், மானசாரம், விஸ்வம், விஸ்வதர்மம் முதலான சிற்பகிரந்தங்களில் சிற்ப கிரந்தாதிகாரிகளையும், அவர்களுடைய உற்பவங்களையும், அவர்களின் நித்திய நைமித்திகமான பிர்ம்ம கர்மங்களையும், கோத்திர சூத்திர சாகை பிரவரையும் முதலானவைகளையும் ஒவ்வொரு சிற்பங்களிலும் கூறியிருக்கிறது.

மேலும், சிற்பத்தில் யந்திர தந்திர சூத்திரங்களின் விஷயங்களும், வர்ணாசிரமக் கிரமங்களும், அவரவர்கள் வசிக்கிறதற்கு யோக்கியமான பட்டணங்களும், கிராமங்களும், தேவாலயம், கோபுரம், விம்பம், ரதம், வாஹநம், துவஜஸ்தம்ப முதலியவைகளை நிர்மாணஞ் செய்யும் விதியும்,

நதி, கூபம், தடாகம், ஆராமமுதலானதை கற்பிக்கும் மார்க்கமும், அரசர்களுக்குக் கோட்டை, கொத்தளம், மாளிகை, சபை முதலியவைகளும், சத்துருக்கள் புகாமல் அகழும், சூத்திர பிரதிமைகளும் இவைகள் செய்யவேண்டிய விதிகளும், சிம்மாஸனம், செங்கோல், கிரீடம், வாள்முதலியவைகளின் பிரமாணங்களும், அதினதின் பலங்களும், ராஜதர்மங்களும், ஜயாபஜயங்களுக்கு காரணங்களும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலன நீதிகளும், கிருஷிகருக்கும், வர்த்தகருக்கும், கைத்தொழிலாளருக்கும் வேண்டிய சாதனங்களை சிருஷ்டிக்கவேண்டிய பிரமாணங்களும், வர்ணாசிரமங்களுக்குத் தகுந்தபடி செய்யவேண்டும் மாங்கலியாதி ஆபரணங்களின் பேதங்களும், அக்னிஷ்டோமாதி யாகங்கள் செய்யவேண்டியதற்கான பூமிலக்ஷணம், யாகசாலை, யாககுண்டம், யூபஸ்தம்பம், வேதிகை, சிருக்சிருவாதி பாத்திரங்கள் முதலியவைகளைக் கற்பிக்கும் விதாயகமும், கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் செய்யவேண்டும் கர்மங்களும், மந்திரங்களும், பிராயச்சித்தம், சம்புரோக்ஷணம், ஜீர்ணோத்தாரண முதலியவைகளின் விதிகளும், உத்ஸவாதி முறைகளும், ஒவ்வொருகர்மங்களிலும் சிற்பியரை பூஜிக்கவேண்டும் கிரமங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையினால் வேத பிரதிபாத்தியமானதே சிற்பமாம். தவிரவும் வேதாதிகாரம், யக்ஞாதிகாரம், உபநயனாதிகார முதலான சம்ஸ்கார முடையவர்களை * சிற்பியரென்றும், விதிக்கப்பட்டிருக்கிறது.

விஸ்வகர்மா, காசியபர், அத்திரி, ஆங்கிரசுமுதலான ரிஷிகளும் சிற்பசாஸ்திர பிரவர்த்தகர்களாகவே யிருக்கிறார்கள்.

சப்தகல்பத்ருமே

விஸ்வகர்மாவஸிஷ்டச்ச
ப்ருகுராத்ரியமஸ்ததா
நாரதோநக்னஜிச்சைவ
விசாலாக்ஷ: புரந்தர:
பிர்மாகுமாரோநந்தீஸ:
சௌனகோகர்க்கஏவச
வாசுதேவோநிருத்தச்ச
ததாசுக்ரபிரகஸ்பதி:
அஷ்டாதசைவதேவிக்யாதா
வாஸ்துசாஸ்திரோபதேசகா: ||

விஸ்வகர்மா, வசிட்டர், பிருகு, அத்திரி, யமன், நாரதர், நக்னஜித், இந்திரன், பிர்மா, சுப்பிரமணியர், நந்தி, சிவன், சௌனகர், கர்க்கர், விஷ்ணு, அனிருத்தர், சுக்கிரன், பிரகஸ்பதி முதலான கஅ பெயர்களும் வாஸ்து சாஸ்திரமாகிற சிற்ப சாஸ்திர பிரவர்த்தகர்களாகவே யிருக்கிறார்கள்.

இந்தப்பிரகாரம் சிற்ப பிரவர்த்தகாள் சாதுர்வர்ணங்களிலும்பிரவர்த்தித்திருக்கிறார்களோவென்றால் அப்படியன்று. பிராம்மண வர்க்கத்தவர்களே சிற்பியராயிருந்திருக்கிறார்கள். அல்லாமலும், விஸ்வகர்ம வம்சத்தவர்களான பிராம்மணர்கள் சிற்ப சாஸ்திரத்தில் பிரவர்த்திக்க வேண்டுமே தவிர, மற்ற வம்சத்தவர்கள் பிரவர்த்திக்கக் கூடாதென்றும் கண்டோக்தியாக சுருதி ஸ்மிருதி சிற்ப இதிஹாஸ புராணங்களிலும் கூறியிருக்கிறது.

* சிற்பியரென்பது விஸ்வகர்ம வம்சத்தவரான பிராமணர்களின் பொதுப்பெயராம்.



சிற்பம் மயமதம் அத்தியாயம்-௩.

தேஷாமேவஸ்தபத்யாக்யே
விஸ்வகர்மேதி ஸம்ஸ்க்ருத:
வயிர்விகாதிர்வேஷ்டம்
கர்மகர்த்துங்கசக்யதே
தஸ்மாதேதேதகதாஜ்ஞய
ஸ்தபத்யாதிசமந்தகா: ||
யேபிஸ்தபத்யாதிபிரத்ரலோகே
விகாகிருதிஸ்வைஹிருதகசப்தே
நதேரவஸ்யாக்தகுரவச்ச
தஸ்மாத்பவத்திதேமாசுகம்
பவதாத்துமர்த்யா: ||

சகலாதிகாரம் அத்தியாயம் க.

கர்த்தவ்யேயாவாஸ்துசாஸ்திரோக்தம்
ராஜராஷ்டிரசுகம்பவேத்
காலப்ரஷ்டேபயோத்பாவோ
தனதான்யசுபாவஹம் ||
காவர்சஸஞுகாதித்யம்
ஜநேநாரோகம்விவர்ஜயேத்
வாஸ்துசாஸ்திரக்கியாஹீனம்
கர்த்ருநாசம்குலக்ஷயம் ||
தத்சர்வம்வாஸ்துநபாணம்
சில்பிஜீவிதமுச்யதே
அன்னியஜாத்யுத்ருகல்பேனைத்
கர்த்தாபர்த்தாவிபத்யதி ||

ஸ்தபதியைத் தான் பாஞ்சாலரான விஸ்வகர்மாவென்று சொல்லப்படுகிறது. இவர்களைத்தவிர மற்றவர்களும் எவ்வித சிற்பகர்மங்களையும் செய்வதற்கு விதிக்கப்படவில்லை. ஆனாலும், விஸ்வகர்மாக்களாகிற ஸ்தபதிகளையும் சுகாபூஜிக்கவேண்டும். இந்த ஸ்தபதிகளைத் தவிர சுகித்தங்களையடைய மார்க்கமில்லை. ஆனதினால் மனுஷ்யர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கிறதில் குருவாகவு மிருக்கிறார்கள். வாஸ்து சாஸ்திரமாகிற சிற்பசாஸ்திரோக்தமாக நிர்மாணம்செய்தால் ராஜாவுக்கும், ராஜ்ஜியத்திற்கும், க்ஷேமமும், காலபய மில்லாமையும், தனதானிய லாபமும், பசுக்கள் பால்விருத்தியும், ரோகமில்லாமையும் உண்டாகும். சிற்பசாஸ்திரோக்தமான கர்மங்களை விதிப்படி செய்யவில்லையானால் கர்த்தாவுக்கு நாசமும், குலக்ஷயமும் உண்டாகும். ஆனதினால் சகல கர்மங்களும் வாஸ்துரூபமா யிருக்கிறதானால், அதாவது சிற்பசாஸ்திர பிரமாணத்தோடு னடைந்திருக்கிறதானால், சிற்பியானவர் கர்த்தாவுக்கு பிராணனாகிற ஆயுளைக் கொடுக்கிறார். இவர்களைத்தவிர மோஹத்தினால் அன்னிய ஜாதியைக்கொண்டு சிற்பகர்மங்களைச் செய்தால் கர்த்தாவுக்கும ராஜாவுக்கும் தேசத்துக்கும் நாசமுண்டாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

(இன்னும் வரும்)

ஜோஸ்யர். முத்து ஆசாரியார்,
மீனாக்ஷிபுரம், நாகர்கோவில்.

விஸ்வேஸ்வரபகவான்பேரில்

# அமுதசஞ்சீவி மருந்துக்கண்ணி.

கடவுள் வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பெருமைவளர்சகலவிதபுவனமெலாம்படைத்தளித்திப்
பிரபஞ்சத்தைப்
பருவமுடன்சிருஷ்டிசெயப்பஞ்சகர்த்தர்பஞ்சசக்தி
பதின்மர்தம்மைக்
கருணையுடன்பயின்றளித்ததிவ்யபரிபூரணவ
கண்டாகாரத்
திருவளர்சுயம்புவிராட்விஸ்வகர்மஜகத்குருவைச்
சிந்திப்போமே.

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் - ஆதி

பல்லவி.

அமுதசஞ்சீவிமாமருந்திருக்குது
அருந்துமஹான்களுண்டானால்
அணிமாதியஷ்டமாசித்தியுடன்முத்தி
அருளும்விஸ்வேஸ்வரமருந்து.

அநுபல்லவிக் கண்ணிகள்.

(1) சமரசமாயண்ட சராசரமனைத்துந்
தனிமுதலாய்நிறைந்தமருந்து
நமன்விடுபாசவலை தனைப்பொடித்தன்பர்க்கு
நற்பதமருள்திருமருந்து (அமுத)

(2) மாயாப்ரபஞ்சத்தின் வலைதவிர்த்தெனையாள
வந்தசின்மயகுருமருந்து
சாயாரூபலக்ஷணந் தன்னிலவரவர்க்குச்
சர்வபலனுந்தருமருந்து (அமுத)



(3) பதிதபாவனஞான பண்டிதமெய்ஞ்ஞானப்
பரம்பொருளாகியமருந்து
சதிசெய்பவருகால பாசந்தவிர்த்தன்பரைத்
தற்காக்குங்காருண்யமருந்து (அமுத)

(4) பொன்னிலமாதர்கள் தன்மயக்ககற்றிநற்
போதத்தைத்தருகின்றமருந்து
சன்னதமிலகிய சின்மயகுருபர
சாஸ்வதமணிமந்த்ரமருந்து (அமுத)

(5) திருவளர்ஜனகாதி முனிவர்ஜோதிவடிவாய்
தெரிசிக்கவரம்பெற்றமருந்து
சருவபரிபூரண ஆத்மக்யானத்தைத்
தந்தன்பரைக்காக்குமருந்து (அமுத)

(6) மனுவாதிபஞ்சப்ரம்ஹ வம்சபுத்திரிகளால்
மனுமாந்தரைப்படைத்தமருந்து
தனுகரணபுவன போகசாதனந்தந்து
தமியேனையாட்கொளுமருந்து (அமுத)

(7) சகலான்மகோடிகட்கு முயிர்க்கொளியாய்விளங்குஞ்
சச்சிதானந்தகுருமருந்து
இகபரமிரண்டினுக் கெட்டாதவஸ்துவா
யெங்கும்நிறைந்தஜோதிமருந்து. (அமுத)

(8) வேதமுபநிடதம் விஸ்வகர்மாவென்று
வினவும்சாக்ஷாத்காரமருந்து
சேதனசேதன வகிலப்ரபஞ்சமுந்
தெருளுறவிளங்கியமருந்து (அமுத)

(9) ஆதிலக்தியின்சத்வா திகுணமகிமையால்
அனைத்தையும்படைத்திட்டமருந்து
ஜோதிசொரூபமாக சகலப்ரபஞ்சமுந்
தோற்றியசைதன்யமருந்து (அமுத)

(10) சத்வாதிதிரிகுணத் மகனைவிராட்டினைத்
தனதன்பிறைப்படைத்தமருந்து
தத்வாதீதபராத் பரசிவவிஸ்வப்ரம்ஹ
தற்பரம்பொருளானமருந்து (அமுத)

(11) பிரம்மாவிஷ்ணுருத்ரன் இந்திராதிதேவதைகள்
 பெருமையுடன்வணங்குமருந்து
 சாதவகன்டபரி பூரணமெய்ஞ்ஞான
 தாரகச்சுயம்ஜோதிமருந்து (அமுத)

(12) பஞ்சபூதஸ்தூல சொருபவண்டமனைத்தும்
 படைத்துக்காத்தளித்திட்டமருந்து
 சஞ்சலமுற்றையுந் தவிர்த்துக்கோரியபடி
 சகலமேன்மையுந்தருமருந்து (அமுத)

(13) ஓங்காரபிரணவ குண்டலியில்நடஞ்செய்
 ஓம்நமசிவயமாமருந்து
 ரீங்காரபராசக்தி தன்னுற்ப்ரபஞ்சமுற்றும்
 நிலைநிற்கச்செய்திட்டமருந்து (அமுத)

(14) பிரபஞ்சசில்பாசாரி விஸ்வகர்மாவெனப்
 பெரும்புகழ்படைத்திட்டமருந்து
 பிரபஞ்சகிருத்திய தேவப்ராம்மணர்களைச்
 சிர்ஷ்டித்தகமகிழ்ந்தமருந்து (அமுத)

(15). சென்னைவிஸ்வகர்மகுலோத்தாரணசபையால்
 சீர்திருத்தஞ்செயுமருந்து
 அன்னைபிதாகுரு தெய்வமென்றுலகெலாம்
 அன்புடன்துதிசெயுமருந்து (அமுத)

(16) செந்தமிழ்மௌனகுரு ருத்ரமூர்த்திக்கன்புடன்
 தெரிசனந்தருகின்றமருந்து
 மந்திரபிரணவ சொருபசாக்ஷாத்கார
 வஸ்துவாகிய திருமருந்து (அமுத)

V. மௌனகுரு-ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிஸிபல் கௌன்ஸிலர்,
பழனிஸ்தலம்.



## தென்னிந்திய சிலாசாஸனங்கள்.

காருண்யமிக்க கவர்ன்மென்டாரவர்கள் குடிகளுடைய நன்மையின்பொருட்டு பல காரியங்கள் செய்துகொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு காரியத்தை யுத்தேசித்து ஒவ்வொரு இலாகாவும், அதற்குத் தக்க உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவ்விதம் பல்வேறுபட்ட இலாகாக்களிலொன்றில் சிலாசாஸன ஆராய்ச்சி நடைபெறுகின்றது. இவ்விலாகாத் தலைவர் வருஷாந்திரம் தமதாராய்ச்சிகளைப் பற்றிய விபரங்களை வெளிப்படுத்துவதுண்டு. இங்ஙனம் வெளியேறும் ரிபோர்ட்களில் 1903-வது வருஷத்திய ரிபோர்டிற்கண்ட விஷயங்கள் சிலவற்றைக் கீழே தெரிவிக்கின்றோம்.

வடஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த சந்திரகிரிக் கோட்டை சுமார் 900 வருஷங்களுக்கு முன் இம்முடி நரசிம்மன் என்னும் யாதவமன்னனால் கட்டப்பட்டது. 1547-ம் வருஷத்தில் அதில் 74 - கோயில்கள் இருந்ததாக வெளியாகின்றது. அக்கோயில்கள் பிற்காலத்தில் மகம்மதியர்களால் அழிவு பெற்றனபோற் றோன்றுகிறது. தற்காலத்தில் அங்கு மண்டபங்கள்போற் காணப்படுங் கட்டிடங்கள் இரண்டும் சமணக் கோயில்களா யிருந்தனபோலும்.

திருப்பதிக் கோயில்களைப் பற்றி கவனிக்கவேண்டிய முக்யாம்ஸங்கள் சில இருக்கின்றன. இவ்வூர்க் கோயில் முதற் பிராகாரத்து அறையொன்றி லிருந்த இரண்டுவண்டி பாரங்கொண்ட செப்புத்தகடுகள், அரசர்களுடைய ஆக்ஞாமொழிகளைக் கொண்டிருந்தன வென்று முன்கொள்ளப்பட்டிருந்த கருத்து தவறு. அவை யெலாம் தல்லபாகமென்னும் வம்ஸத்தைச் சேர்ந்தவ னொருவனால் எழுதப்பட்ட செய்யுள்களாம். முதற்கோபுரத்தின் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் பிரதிமைகளில் நடுவேயுள்ளது விஜயநகரத்தரசனாகிய கிருஷ்ணதேவராஜன் உருவம். அவனுடைய இடப்பக்கத்தில் சின்னதேவியும் வலப்பக்கத்தில் திருமலை தேவியுமாகிய இருபத்தினிகளிருக்கின்றார்கள். இவ்விரண்டு இராணிகளும் பலதர்மங்கள் செய்தவர்களென்று அநேக சாஸனங்களினால் தெரிகின்றது. திருப்பதி ஸ்தலத்தின் கீழ்ப்பாகமாகிய திருச்சானூருக்கு இளங்கோயிலென்னும் பெயர் சோழர்காலத்தில் வழங்கி வந்ததாகவும், இதற்குப் பொருள் சுப்ரமண்யர் கோயிலென்பதாகவுந் தெரிகிறது. திருப்பதி ஒருகாலத்தில் சிவக்ஷேத்திரமா யிருந்ததென்று சொல்பவர்களுடைய கொள்கைக்கு இஃதோர் ஆதாரமென்பதில் தடையில்லை.

சென்னை திருவல்லிக்கேணியி லிருக்கும் ஸ்ரீபார்த்தசாரதி சுவாமிகோயில் கர்ப்பக்கிருகவாயிலில் பூமியில் பதிக்கப்பட்டுள்ள கல்லொன்றில் ஓர் பல்லவசாஸனம் வெட்டப்பட்டிருக்கிறது. தந்திவர்மனென்னும் அரசனுடைய ஆட்சியின் 12 - ம் ஆண்டில் ஷெ சாஸனம் அங்கு பதிக்கப்பட்டதாய்த் தெரிகிறது. அக்கோயிலவயலொன்றை தர்மகர்த்தர்கள் அடமானம் வைத்து விட்டதாகவும், அதுகாரண

மாக சுவாமிக்கு நைவேத்தியத்திற்கும் மோசம் நேரிட்டதாகவும், இஃதறிந்து வருந்திய தர்மப்பிரபு ஒருவர் ஷை நிலத்தைத் தமது சொந்தப் பணங்கொடுத்து மீட்டு கோயிலுக்குக் கொடுத்ததாகவுந் தெரிகிறது. இந்தச் சிலையினாலேயே ஸ்ரீ பார்த்தசாரதி கோவில் ஒருகாலத்தில் மயிலாப்பூர் எல்லையோடு சேர்ந்திருந்ததாகவும், பல்லவர்காலமுதலேற்பட்டிருந்ததென்று மறியப்படுகின்றது. வட ஆற்காடு நெல்லூர் ஜில்லாக்களில் கிடைத்திருக்குஞ் சிலாசாஸனங்கள் பழந்தமிழெழுத்துக்களிலேயே காணப்படுவதால் ஷை ஜில்லாக்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்திருந்தன வென்பதும், விஜயநகரத் தரசர்கள் காலத்திலேதான் தெலுங்குபாஷை அங்கு பரவியிருக்க வேண்டுமென்பதும் பெறப்படுகின்றது.

---

## இரக்ஷண்யசேனை-ஓர் படிப்பினை.

இப்பெயர்க் கொண்ட கிறிஸ்துவக்கூட்டத்தாருடைய முயற்சிகளைப்பற்றிநமது நண்பர்கள் அறிந்திருப்பார்கள். கிறிஸ்து மதபோதனையை இந்த சேனையார் உபந்நியாசங்களினாலும், பாடல்களினாலும், பத்திரிகைகள் முதலியவற்றினாலும் பரப்பி, மற்ற மதஸ்தர்களைத் தமது மதத்தினராக்க முக்கியமாய்ப் பிரயத்தினப்பட்டு வருகின்றார்கள். இன்னும், இவர்கள் கைத்தொழில் களிலும் வியாபாரங்களிலும் பிரவர்த்தித் திருக்கிறார்கள். இந்தியத் தொழில்கள், அவற்றிற் குரியவரான நம்மினத்தவரால் கைவிடப்பட்டு நாளுக்கு நாள் நலிவுற்று நாசமடைந்து வருதல் கண்டு, எவர்தான் இதிற் பிரவேசியாமலிருப்பார்கள்! மற்ற ஜாதியார் பலரும் பிரவேசித்து விட்டபடி இந்த சேனையாரும் பிரவேசித்திருப்பது ஆச்சரியமல்ல.

இவர்களுடைய தொழில்களில் பட்டுத் தொழிலொன்று. பட்டு நூற்குஞ் சாலைகளை இவர்கள் பல விடங்களில் ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்தத் தொழிலி லிவர்கள் ஆரம்பத்தில் சில கஷ்டநஷ்டங்கள் பட்டார்களாயினு மிப்போது அவை தீர்ந்துவிட்டன. பட்டுத்தொழிலி னிரகசியங்களும், தந்திரங்களு மிப்போதிவர்களுக்கு நன்றாய் விளங்கிவிட்டன. பட்டுத்தொழில் விற்பன்னர்களாகிய பல கற்றோ ரிவர்களுடைய தொழிற்சாலைகளில் உத்தியோகம் பெற்றிருப்பதினால் அவர்கள் அச்சாலைகளை நன்குநடத்தி நல்லவருமானங்காட்டி வருகிறார்கள். இரக்ஷண்ய சேனையாரால் இந்தியாவிலும் இலங்கையிலும் பட்டுத்தொழில் சீக்கிரம் பரவி பலப்படுமென்று தெரிகிறது.

மேல்நாடுகளிலுள்ள மிஷனரி சங்கத்தாருடைய ஆதரவுபற்றி இந்தியாதேசத்தில் கிறிஸ்துமத ஸ்தாபனஞ் செய்வந்திருக்குங் கூட்டத்தார்கள் இந்தியத்தொழில்களிற் பிரவேசித்து தமது காரியத்திற்கு அநுகூலமாக இந்தியாவிலேயே வருவாய்க்கு ஹேது தேடிக்கொள்ளும் விதம் முக்கியமாய்க் கவனிக்கப்படத் தக்கதாயிருக்கிறது. இதனால், இவர்களுடைய மதபோதக முயற்சிகள் பலமடைந்து, மேன்மேலும் அதிகரித்து நிலைபெறுதல் சாத்தியமாகிறதுடன், சிற்சில கைத்தொழில்களும் செம்மையுறுகின்றன. இதினின்றும் நம்மவர்கள் ஓர்படிப்பினை யேற்றுக் கொள்வார்களா? தொழிற் குரியவர்களாயுள்ள நாம் நமது பல தொழில்களும் பங்கமுறாமல் பாதுகாக்க வேண்டியதே முதற் கடமையாய்க் கொண்டிருக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். இந்தக் கடமையைக் கவனித்தவரும், வகித்தவரும், நிர்வகிப்பவரும் யாண்டுளர்? இல்லாமையினாலேதான் நாம் இக்கதிப் பட்டிருக்கின்றோம். நமது தொழில்களும் நாசமடைந்திருக்கின்றன. எஞ்சிநின்றவும் ஏதிலார் கைப்பட்டன. ஏக்கமே பிராப்தி எம்பவருக்கு!

இனியாகிலும், நாம் கண்மூடித்தனத்தால் கைசோரவிட்ட கைத்தொழில்களைக்கவனித்து, அவற்றையேன்றுகொண்டு, சீர்திருத்தி, விருத்திசெய்ய வேண்டாமா? மற்றவர்களுடைய மாதிரியைக் கைப்பற்றியேனும் தொழிற்சாலைகளை யேற்படுத்தி ஒவ்வொரு தொழிலையும் ஒண்மையாயும் உண்மையாயும் நடத்தி உயர்வடைதலாகாதா? இன்னுமா கவலையற்றுக் கிடந்து கதியற்றுப் போகவேண்டும்? வேண்டாம், வேண்டாம். காலதாமதஞ் செய்தால் கஷ்டங்கள் அதிகரிக்கும். உடனே சிற்றளவிலேனுந் தொழிற்சாலைகளைஸ்தாபிப்போமாக. தனித்துழைத்துப் பெரும் பலன்களை யடைதல் இக்காலத்திலில்லை. கூடிவாழ்வோரே குறையாவலியினராவர்.

ஆதலால், அந்தந்த தொழிலில் பரிச்சயமதிக முடையவர்களெல்லாம் அப்படியே ஒன்றுசேர்ந்து தங்கள் தொழிலுக்கு எப்படி ஆக்கமுண்டுபண்ணலா மென்றெண்ணியெண்ணிப்பார்த்துத் தக்க முடிவுகள் செய்துகொண்டு தங்கள் தொழிலை விருத்திசெய்யும் வினை மேற்கொள்வார்களாக. இப்படிப் பலர்கூடுவதால் பலனதிகமடைவதுடன், கைத்தொழில்களைக் கைதூக்கிவிட்ட பெருமையும், குலத்தார்க்குள் கூட்டுறவை அதிகரிப்பித்த புண்ணியமுங் கைகூடும். இரக்ஷணிய சேனையார் போல் ஸ்வயகாரிய சாதகமும், அக்காரிய ஆதரவுமொருங்கே சித்திக்கும்.

---

## பரோடாவிற் கல்வி.

கனம் காயக்வார் மகாராஜா அவர்கள் தமது பரோடா ராஜ்யத்தில் கல்வியபிவிருத்திக்காக ஏற்படுத்திவரும் சௌகரியங்கள் மிகச் சிறப்பானவையா யிருக்கின்றன. அந்த ராஜ்யத்தில் பொதுஜனக் கல்வி இலவசமும் நிர்ப்பந்தமுமாக்கப்பட்டிருப்பதோடு, நடைப் புத்தகாலயங்களும் பொம்மைக் காட்சிகளும் உண்டாயிருக்கின்றன. அதாவது; புத்தகாலயங்களென்னும் லைப்ரெரிகளையும் பல அற்புதக் காட்சிகளைப்பற்றிய படங்களையும் இடத்திற்கிடங்கொண்டுபோய் ஆங்காங்குள்ள ஜனங்களுக் குபயோகப் படுத்துவதே யாம். இந்த நடைப் புத்தகாலயங்கள் இப்போது வெகுஜனப் பிரியமானவையாய், தொகையில் 84 ஆயுள்ளன. இவற்றுள் 15 பெண்களுக்கென்றும், 26 தீண்டாவகுப்பினர்களுக்கென்றும் பிரத்தியேகஞ் செய்யப்பட்டிருக்கின்றன. புத்தகங்களின் மொத்

தம் 4500 ஆயிற்று. ஊராரும் இப்புத்தகாலயங்களுக்கு தமக்குத் தோன்றிய கிரந்தங்களைத் தானஞ்செய்து வருகிறார்கள்.

ஒவ்வொரு புஸ்தகாலயமும் ஒருபெட்டியில் வைக்கப்பட்டு ஓரூரிலிருந்து மற்றோரூருக்குக் கொண்டுபோகப்படுகிறது. அங்கு சிலகாலந்தங்கி, அவ்வூர் ஜனங்களுக்கெல்லாம் புத்தகங்கள் கொடுத்து அவரவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொண்டு பிறகு வேறூருக்குக் கொண்டுபோகப்படும். ஒவ்வொரு பெட்டியிலும் மகாபாரதமும் இராமாயணமுமிருக்கவேண்டுமெனப் படுகிறது. தாழ்ந்த வகுப்பான் உயர்ந்தவகுப்பான் ஏழை தனவான், ஆண்பெண், இளையோன் முதியவன் என்னும் எல்லா வகுப்பார்களாலும் இந்த புத்தகங்கள் உபயோகிக்கப் படுகின்றன. குழந்தைகளுக்கு அறிவூட்டுவதற்காகப் படங்கள்கொண்ட புஸ்தகங்கள் சேர்க்கப்படும். அநேகதேச ஜாதிமத வழக்கங்கள் சரித்திரங்கள் முதலியவற்றை நிஜரூபமாய் ஜனங்கள் கண்டறிவதற்காக விளக்கொளிப்படக் காட்சிகள் நடந்துவருகின்றன. இதற்கென்று சமீபத்தில் ரூ. 10,000 மகாராஜா அவர்களால் கொடுக்கப்பட்டது.

இவ்விதங்களினால் பரோடா குடிகளுக்குக் கல்வியில் அபிலாஷை யதிகரித்து வருகின்றது. ஒவ்வொருவருக்கும் கல்வியில் ஆசைபிடிப்பதினால் அவரவர்கள் ஆவலோடு புத்தகங்களை வாங்கிப் படித்து பல விஷயங்களையு மறிந்து சீர்திருந்தி சுகமுஞ் செல்வமும் பெருகி வருகிறார்கள்.

'தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும், மடங்கொன்று அறிவகற்றும் கல்வி' யென்பதுபோல் கல்வி, ஆரம்பத்தில் கஷ்டமாய்த் தோன்றியபோதிலும் செல்லச்செல்ல சுகத்தைக் கொடுக்குமென்பது நிச்சயம். சுஜாதியார்களும் தமது சகோதரர்களுக்கு வித்தையில் விருப்பம் வரச் செய்யவேண்டும். இதற்குச் சாதகமாயிருக்கும்படி ஒவ்வோரூரிலும் நம்மவர்கள் புத்தகாலயங்களும் வாசகசாலைகளுமேற்படுத்தி நமது குலத்தார்க்கு ருசியுண்டுபண்ணக் கூடிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வரவழைத்து அவற்றை வாசிக்கச் செய்தால் நமது குலத்திற்கு நன்மை தனி சீக்கிரமுண்டாகும்.

---

## ஆந்திரவிஸ்வப்பிராம்மண காண்பரன்ஸ்.

கிருஷ்ணா குண்டூர் என்னும் இரண்டு ஜில்லாக்களில் வாசமாயிருக்கும் நமது விஸ்வப்பிராம்மண சகோதரர்கள் சென்ற ஆறுவருஷங்களாக வருஷாவருஷம் டிஸெம்பர் மாதக் கடைசியில் மகாஜனக்கூட்டங்களை நடத்து வருகிறார்கள் என்னும் விசேஷம் தமிழ் நாடுமுழுவதும் சென்ற வருஷமே நன்றாய் விளம்பரமாயிற்று. ஏழாவது காண்பரன்ஸ் நாளது 1913-வது ௵ டிஸெம்பர் மாதத்தில் குண்டூர்ஜில்லாவில் நடைபெறப்போகின்றது. இன்னும் இடமிதுவென்று நிச்சயிக்கப்படவில்லை. இதைப்பற்றிய விபரந்தெரிந்தவுடன் நமது நண்பர்களுக்கெல்லாம் அறிவிப்போம். சென்ற இரண்டு வருஷங்களாகத் தமிழ்



நாட்டிலிருந்து சிலர் ஷை காண்பரன்ஸ்களுக்குச் சென்று வருகிறார்கள். இதனால் மகாஜனசபைகளை நடத்தும் ஒழுங்குகளும், அவற்றின் சிறப்பும், பயன்கள் முதலியவும் பற்றித் தமிழ்நாட்டார் கொஞ்சங்கொஞ்சமா யறிந்துவர ஹேதுவுண்டாகிறது. என்றாலும், பலர் சென்று பார்த்து வருதல் நன்று. இம்முறை, தென்னாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமவாசிகளும் ஒவ்வொரு பிரதிநிதியைத் தெரிந்தெடுத்தனுப்புவார்களென்று விரும்புகிறோம். ஏனென்றால், இவ்விதம் ஒவ்வொரு ஜில்லா வாசிகளிலும் பலபேர் அங்குசென்று நமது ஆந்திரசகோதரர்களுடன் கலந்து அவர்களுடைய மாதிரிகளைக்கவனித்து மகாஜனக்கூட்ட வைபவத்தைக் கண்ணாரக் கண்டுவந்தால் தான், தென்னாட்டில் அவ்விதக் காண்பரன்ஸ்கள் நடத்தவேண்டுமென்னும் உற்சாகம் பிறத்தலும், அவற்றைக் கட்டுப்பாடாய் நடத்திமுடிப்பதற்கேற்ற சாதனங்களை அறிதலும் அமைத்தலும் சாத்தியமாகும். எவ்வளவு அதிகமாக நம்மவர்கள் ஷை காண்பரன்ஸ்களைக் கண்டுவருகிறார்களோ அவ்வளவு சீக்கிரமாகத் தென்னாட்டில் காண்பரன்ஸ்கள் நடக்க மார்க்கமுண்டாகும். எவ்வளவு சீக்கிரமாக நாம் காண்பரன்ஸ்கள் கூட்டுகின்றோமோ அவ்வளவு சீக்கிரமாக நமக்குள் சீர்திருத்தங்களுண்டாகி மேம்படக்கூடும். ஆதலினால் இவ்விஷயத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதை காட்ட வேண்டியவர்களா யிருக்கிறோம். இப்போது முதல் நமது நண்பர்கள் நாளது ஏழாவது காண்பரன்சுக்குச் செல்வதாகத்தீர்மானித்துக்கொண்டு மற்றவர்களுக்கு இவ்விஷயத்தைப்பற்றி யறிவித்து அவர்களும் உடன் வரும்படி ஏற்பாடு செய்துகொள்ளுவது நன்று. நமது பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கெல்லாம் வரவழைப்புப்பத்திரிகை அனுப்பப்படும்.

மற்று, இக்காண்பரன்ஸ் சம்பந்தமாய்த் தொழிலாளிகள் செய்யவேண்டிய தொன்றுளது. ஒவ்வொரு காண்பரன்ஸ் சமயத்திலும் அதை யநுசரித்து ஓர் சிற்பப்பொருட்காட்சி (Exhibition) நடத்தப்படுகிறது. அதில் நமது குலத்தினரால் செய்யப்பட்ட வஸ்துக்கள் பலர்காட்சிக்குக் கொண்டுவரப்படுகின்றன. இக்காட்சியை ஜமீன்தார்கள், பிரபுக்கள் முதலானவர்கள் வந்து காண்கிறார்கள். இதில் வைக்கப்படும் பொருள்கள் விற்பனையாதல் சகசமாயிருக்கிறது. வேலைப்பாடான வஸ்துக்களையனுப்புவோர்க்கு மெடல்கள் சர்டிபிகேட்கள் முதலிய பரிசுகள் கொடுக்கப்படுகின்றன. இது சுஜாதிப்பொருட்காட்சியாயிருப்பதினால் நம்முள் கைத்தொழில் வல்லவர்களாயுள்ளவர்கள் ஒவ்வொருவரும் தவறாமல் தமது சக்திக்கேற்றபடி ஏதோ வொருவஸ்துவேனுஞ் செய்தனுப்புதல் அவர்களைப்பொறுத்த கடமையாயிருக்கிறது. ஏனென்றால், இந்தியாமுழுவதிலும், நாமறிந்தமட்டில், நமது குலவேலைகளைமட்டு மெடுத்துக்காட்டும் பொருட்காட்சி இக்காலத்திலிது வொன்றேயா யிருக்கிறது. இதில் பிரசன்னமாகும் வஸ்துக்களின் யோக்யதையை யநுசரித்து இக்குலத்தின் கைத்தொழில்திறமை

ஒருவாறு நிச்சயிக்கப்படுதல் சாத்தியமல்லவா? நல்லவஸ்துக்கள் வைக்கப்பட்டால் நமது குலத்திற்கே நல்ல பெயர் சிந்திக்கும். இல்லையானால் இல்லை. சென்றவருஷத்தில், பொருட்காக்ஷிசாலை நெருக்கத்தில் நாம் இவ்விபரங்களை வெளிப்படுத்த நேரிட்டதால் காலக்குறைவால் தாம் வஸ்துஞ்செய்தனுப்புதற் கில்லாது போயிற்றென்று பலபேர் வருந்தினார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் முன் ஜாக்கிரதை சொல்லும் பொருட்டாகவே நாம் இவ்வளவு சீக்கிரமாக இந்தப் பிரஸ்தாபஞ் செய்யலானோம்.

---

## அங்கீரசன்.

அங்கீரசன் பிரம்ம மானசபுத்திரருளொருவன். இவனுக்கு பிரகஸ்பதி உதத்தியன் என இருவர் புத்திரரும், யோகசித்தியென் றொருபுத்திரியும் பிறந்தார்கள். யோகசித்தி அஷ்டவசுக்களில் ஒருவரான பிரபாவசுவை மணந்துகொள்ள, இவர்களுக்கு பிறந்தபிள்ளைக்கு விஸ்வகர்மனெனப்பெயரிட்டனர்முன்னொருகாலம் தேவர்கள் தாம்கொடுத்த அவிகளை அக்கினிதேவன் வகிக்காது கோபித்தேக, அவர்களுக்குப்பிரதியாக அங்கிரசனைவைத்து தமது கருமத்தை முற்றுவித்தார்கள். அஃதுணர்ந்து அக்கினி திரும்பிவர, அங்கீரசன் அவரை பிரதாக்கினியாகவைத்து தான் சாரூபம்பெற்று அவருக்கு பிரதம புத்திரனானான். இவ்வாறாகிய ஆங்கீரசன் சிவையை மணந்து பிரகசோதி, பிரககீர்த்தி பிரகமுகன், பிரகமதி, பிரகபானன், பிரகஸ்பதி, பிரகபிரமா என எழுவர் புத்திரரையும், சினி, வாலி குரு, அர்ச்சிஷ்மதி, மகாமதி என ஐவர் புத்திரிகளையும் பெற்றான். இவரெல்லோரும் அக்கினிரூப முடையவர்கள். அக்கினி பிரமாவினது புத்திரரென்பார் ஒரு சாரார். மற்றொருசாரார் கசியபனது புத்திரரென்பார். இவனுக்கு கால்மூன்று; நாவேழு; முகம்இரண்டு: இவன் வாகனம் ஆட்டுக்கிடா; பாரி சுவாகாதேவி; புத்திரர் பாவகன் பவமானன் சுகி என மூவர்; இவனுக்கு இராஜதானி தேஜோவதி; அர்ச்சுனனுக்கு காண்டீபம் கொடுத்தவன் இவ்வக்கினிதேவனே.

அக்கினி திரேதாக்கினி பஞ்சாக்கினி என இருவகைப்படும். திரேதாக்கினி ஆகவனீயம் தக்ஷிணாக்கினியம் காருகபத்தியம் என மூன்றுமாம். அவை முறையே கிழக்கு தெற்கு மேற்கு திசைகளிலே வேதியில் வளர்க்கப்படுகின்றன. பஞ்சாக்கினி முன்னைய மூன்றோடு சவ்வியம் அபசவ்வியம் என ஐந்துமாம். இவை இரண்டும் வேதியில் ஈசான்திக்கில் வளர்க்கப்படும். அக்கினியானது பூதங்களுள்ளே நடுநிலையுடையது. மகாவிருடிகள் இந்த அக்கினி தனது அனந்த சக்தியினைக்கொண்டு விண்ணுலகத்திலே, சூரியசந்திராதியரிடத்திலே சோதியாகவும் மேகத்தினிடையிலே மின்னலாகவும் பூமியிலே தீயாகவும் சமுத்திர மத்தியிலே வடவையாகவும் சீவகோடிகளுடைய உதரத்திலே ஜடராக்கினியாகவுமிருந்து சகலலோகங்களையுமொரு சிறு கணப்போதிலே தரிசித்து மீளுகின்றது என்று வேதத்திலே துதித்திருக்கிறார்கள். இவ்வக்கினி மண்டலத்திலேயுள்ளார் அக்கினி தேவரெனப்படுவார்கள். அவர்கள் அகலன் என்னும் பெயரையுடையராய் நாற்பத்தொன்பதின்மராவர். அவருட்டலைமைபெற்றவன் அபிமானக்கினி எனப்படுவர். அவன் மைந்தரே பாவகன் பவமானன் சுகி என்னும் மூவரும். அம்மூவர்களுக்கும் நாற்பத்தைந்து புத்திரர் பிறந்தார்கள்.

அத்திரி பிரம்ம மானசபுத்திரர்களிலொருவர், மனைவி அனுசூயை. இவர் தனது தபோபலத்தால் சோமதுர்வாசதத்தாத்திரேயர்களைப் பெற்றவர். இவ்வத்திரி அங்கீரசன்போல் பிரம்ம மானசபுத்திரருளொருவர். சந்திரன் இவ்வத்திரியின் கண்களினின்றும் தோன்றினான் என்று இரகுவம்சம் முதலிய நூல்கள் கூறுகின்றன. ஸ்ரீராமரைத் தண்டகாரண்ணியத்திலே இவ்விருஷி கண்டபோது அவரைத் தமது ஆச்ரமத்திற் கழைத்துச்சென்று உபசரித்தார் என்றும், இவருடைய பாரியாகிய அனசூயை பெண்களுக்குரிய ஒழுக்கங்களை எல்லாம் சீதைக்கு உபதேசித்து உனக்கு சுமங்கல்யலோபமில்லாதிருக்கக்கடவது என்று ஆசீர்வதித்து அநேக வஸ்திரங்களும் ஆபரணங்களும் கொடுத்துபசரித்தாளென்றும் இராமாயணம் கூறுகின்றது.

கா. திருவேங்கட ஆச்சாரி.

---



## விசேஷ வர்த்தமானம்.

மகம்மதிய சமர்த்தசூடாமணி:—வைதிகப்பிராம்மணரொருவர் பல சிஷ்யரை வைத்துக்கொண்டு அவர்களுக்கெல்லாம் வேதசாஸ்திர புராணேதிகாசங்களைக் கற்றுக்கொடுத்து வந்தார். அவர்களிலொருவர் மகம்மதியர். இம்மகம்மதிய சிஷ்யர் சமஸ்கிருத வல்லபராய் அனைத்தும் வாசித்து சிறந்திருந்தது கண்டு சந்தோஷித்த பிராம்மண குரு, அவருக்கு "சமர்த்த சூடாமணி"யென்ற பட்டங்கொடுத்தாராம். இப்படிச்செய்தது பிசகென்று "இந்து பேட்ரியட்" என்னும் பத்திரிகை பேசுகின்றது. சில பத்திரிகைகள் இக்காரியத்தைச் சிலாக்யமாய்க் கூறுகின்றன. கல்வியென்பது எல்லார்க்கும் பொதுவாதலால், அதைப் பயிற்றுவிப்பதில் ஜாதிமத வேறுபாடுகளைப் பாராட்டுதல் சிறப்பாகாதென்னுங் கொள்கை வரவர அதிகமாய்ப் பரவிவருதல் மிகவுங் கொண்டாடற் பாலதே. இம்மகம்மதிய சமர்த்தசூடாமணி இப்போது உலகப்பிரசித்தி யடைந்திருக்கிறார். அக்ரகுலத்தவர்களாகிய நம்முள் எத்தனை சமஸ்கிருத பண்டிதர்களிருக்கிறார்கள்? ஒவ்வொரு ஜாதியினுடைய பெருமையும் சிறுமையும் அந்த ஜாதியிலுற்பவித்த கல்விச் சிரேஷ்டர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்திருக்கிறதல்லவா? வி[illegible] பிரகுல[illegible] மதிப்பை யடைந்திருக்கிறதற்குக் காரணம் அக்குலத்தாரில் பெரும்பாலார் வித்தியாவந்தர்களா யிருத்தலேயாகும். எழுத்துவாசனை பிடித்தறியாதவர்கள் அக்கு

லத்தி லிருக்கிறார்களோ வென்பதுஞ் சந்தேகம். நம்மவர்களிலோ எழுத்து வாசனை பிடித்தறியாதவர்களே அதிகமாயிருக்கின்றனர். இப்படியிருக்குமட்டும் நமது குலம் சிறப்படைவதற்கு ஹேதுவே கிடையாது. இதைக் குலாபிமானிகள் சதாகாலம் ஞாபகத்தில் வைத்து நடந்துகொள்வார்களாக.

---

பால்ய மரணங்கள்: — "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பது எல்லோருமறிந்த முதுமொழி. இந்தக் கண்களில்லாதவர்கள் குருடரே யாவர். இவர்களுக்கு லௌகிக வாழ்க்கையிலும் வைதிக நிலையிலும் பார்வை கிடையாது. எனவே, பல சங்கடங்களை யநுபவித்தல் திண்ணம். இந்திய நாடானது கல்வியில் மற்ற தேசங்கள் பலவற்றிற்கும் பின்னிடைந்து கிடக்கிறது. இக்கல்வி ஹீனத்தால் இத்தேசத்திற் குண்டாகுங் கஷ்ட நஷ்டங்களோ அனந்தம். உதாரணமாக, 1911-வது வருஷத்தில் இந்தியநாட்டில் 2-வயதுமுதல் 5-வயதிற் குட்பட்ட குழந்தைகளில் 100-க்கு 46-குழந்தைகள் இறந்துபோயின. இவ்வளவு அதிகமான மரணங்கள் கல்வியதிகரித்த நாடுகளிலுண்டாவதில்லை. பால்யத்தில் குழந்தைகளை சம்ரக்ஷிப்பவர்கள் தாய்மார்களேயல்லவா? அவர்கள் வாசிப்புடையவர்களாயிருந்தால் சுகாதாரநிலை, தேகசம்ரக்ஷண விதிகள், வியாதி மூலங்கள் முதலியவற்றைக் கற்றறிந்து தமது மக்களுக்குக் கெடுதி நேராது பாதுகாக்க வல்லவர்களாயிருக்கின்றனர். நிரக்ஷர குக்ஷிகளாயிருந்தால் விதிவிலக்குகளை யறியாது தமக்குத் தோன்றியவாறு நடந்து சங்கடங்களுண்டுபண்ணிவிடுகிறார்கள். இந்தியாவில் பெண் கல்வி மிகவுஞ் சொற்பமாயிருக்கிறபடியினாலேதான் பால்யமரணங்கள் அதிகமாயிருக்கின்றன வென்று பல பெரியோர் அபிப்பிராயப் படுகின்றனர். பெண் கல்விக் குறைவால் நேரிடும் விபத்து இது வொன்றேயோ! பாரதநாடு படுந்துயரங்களுக்கெல்லாம் காரணமிதுவே யென்றுரைக்கலாம். நாட்டுச்சிறப்பே யிவ்வளவிலிருக்க, நமது சிறப்பைப்பற்றி நவில்வதென்னே!

---

சாகபக்ஷணம்:—"கொல்லா விரதங் கொண்டவரே நல்லவர்மற் றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே" யென்று கூறியுள்ளார் ஆய்ந்த அறிவினராகிய தாயுமானசுவாமிகள். புலாலுண்ணலே முக்கியமாய்க் கொலைக்குக் காரணமாயிருக்கிறது. மாமிச போஜனத்தின் மகா இழிவான குணங்கள் வரவர ஜனங்களுக்குப் புலப்பட்டு வருகின்றன. அதனால், மேல்நாட்டார்களாகிய ஆங்கிலேயரும் அதைவிட்டொழித்து வருகிறார்கள். புலாலையன்றி மற்றொன்றை யுண்டறியாத அவர்களே அதின் கேவலத்தைக்கண்டு வெறுத்து விட்டுவிடுகின்றன ரென்றால், சாகபக்ஷணமே தொன்று தொட்டு கொண்டதாகிய பாரதநாட்டிற் பிறந்து வாழ்ந்து வருவோர் புலாலை யிச்சிப்ப தென்றால் அதைவிடக் கேவலமான தொன்றுண்டோ? "ஆச்சார்யர்"களாயுள்ள நாம் எல்லா ஜாதியார்களுக்கும் புலான் மறுத்தலைப்போதிப்பதொரு பெருங் கடமையாய்க் கொண்டு நடக்கவேண்டும். அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய மேல்நாடுகளிலெல்லாம் மாமிசபோஜனங் கைவிடப்பட்டும், சாகபக்ஷணம் கைக்கொள்ளப் பட்டும் வருகின்றது. ஆஸ்பத்திரிகளிலும் இவ்வுணவே சிலவிடங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. பத்து வருஷங்களுக்கு முன் டாக்டர் ஓல்ட்பீல்ட் என்னும் வைத்திய சாஸ்திரியால் லேடிமார்கரெட் ஆஸ்பிடலென்பதொன்று லண்டன்மா நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகள் உத்தியோகஸ்தர் சிப்பந்திகளுள்பட்டவர்கள் யாவரும் சாகபக்ஷணமே செய்கிறார்கள். இவர்கள் புலாலென்பதைக் கனவிலும் நினைப்பதுமில்லை. இந்த ஆஸ்பத்திரிக்குப் போஷகர்களாய்ப் பல சீமாட்டிகளேற் பட்டிருக்கின்றனர். மற்றை ஆஸ்பத்திரிகளைவிட இது அதிகப்பிரசித்தி யடைந்திருக்கிறது. ஏனெனில், இங்கு நோய்கள் வெகு சீக்கிரம் நிவர்த்தியாகின்றனவாதலினாலேயே! இதினின்றும், புலாலுண்ணும் பாரதமக்கள் ஒரு பாடங்கற்றுக்கொள்ளுதல் அவஸ்யமேயல்லவா?

---

நவராத்தி பூஜா வைபவங்கள்:—சென்ற புரட்டாசிமீ 15உ (30-9-13) முதல் 24உ (9-10-13) வரையிலுங்கூடிய பத்து தினங்களில், நவராத்திரி பூஜா சம்பந்தமாக நமது சபாமண்டபத்தில் கலஸஸ்தாபனஞ் செய்வித்து தினமும் தேவதாராதனை, கச்சேரிகள், காலக்ஷேபங்கள் முதலியவைபவங்கள் நடைபெற்றன. இவற்றிற் கதிகாரிகளாய் நின்றருளிய புண்ணியபுருஷர்களுடைய திருநாமங்களைக் கீழே குறிப்பிட்டிருக்கிறோம்.

1. ஸ்ரீ ம, ஆறுமுக ஆச்சாரியார் சங்கீதக் கச்சேரி.
2. ஸ்ரீசெருகூர்-கிருஷ்ணமாச்சாரியார் ஸ்ரீநிவாசகல்யாணம்.
3. ஸ்ரீநாகலாவரம்-நாகப்ப ஆச்சாரியா மீனாக்ஷி திருமணம்.
4. ஸ்ரீப-ரா-காளாஸ்திரி ஆச்சாரியார் வேதாந்த கீர்த்தனபஜனை.
5. ஸ்ரீபாங்கிமலை-சிவராம ஆச்சாரியார் தேவாரபடன கச்சேரி.
6. ஸ்ரீ அக்ஷிந்தல வே-நரசிம்ஹம் பந்துலு-சுந்தோபசுந்தோபாக்கியானம்
7. ஸ்ரீ N. R-நடேச ஆச்சாரியார்-புள்ளாங்குழல் கச்சேரி
8. ஸ்ரீ-மை. மாணிக்க ஆச்சாரியார் வீணைக்கச்சேரி
9. ஸ்ரீவிராட்வீரப்ரப்ஹ பக்தஜனசபையார்-வீரப்ரம்ஹ கீர்த்தனக்கச்சேரி
10. ஸ்ரீ அக்ஷிந்தல வே-நரசிம்ஹம் பந்துலு-பிரம்மகர்வபங்கம்.

ஷை புருஷோத்தமர்கள் தம்முடைய சிரமத்தைப்பாராட்டாமல் பரோபகாரார்த்தமாகக் கச்சேரிகளும், காலக்ஷேபங்களுஞ் செய்ததேயல்லாமல், தங்கள் தங்களுக்கேற்பட்ட வாத்தியக்காரர்களுடைய செலவையும் தாமே ஏற்றுக்கொண்டன ரென்றால், இவர்களுடைய பெருங்குண

விசேஷத்தைப்பற்றிப் பேசுவதென்னே! ஷை பத்து தினங்களில் பெருந்திரளாய் விஜயஞ்செய்த சுஜாதியார்க்கும் மற்றையோர்க்குங் கந்தபுஷ்ப தாம்பூலாதி மரியாதைகளும், பக்ஷண விநியோகங்களும் நமது சபைத்தலைவரும் சென்னை அபிஷியல் அஸைனி (Official Assignee) ஆபீஸ் மானேஜருமாகிய ஸ்ரீ சோமங்கலம் கந்தசாமி ஆச்சாரியார், ஸ்ரீ கயப்பாக்கம் தங்கவேலு ஆச்சாரியார், ஸ்ரீ சிங்காரத்தோட்டம் - சிங்காராச்சாரியார், ஸ்ரீ கன்னையசெட்டியார், நமதுசபைப் பொக்கிஷதாரரும் இப்பத்திரிகையின் மானேஜருமாகிய ஸ்ரீ காயிரம்பேடு திருவேங்கட ஆச்சாரியார் முதலியவர்களுடைய திரவிய சகாயத்தினால் வெகு விமரிசையாய் நடைபெற்றன. மேற் கூறப்பட்ட கனவான்களெல்லோருக்கும் சபையார் தமது அன்பார்ந்த வந்தனங்களளிப்பதுடன், ஷை பத்து தின வைபவங்களுஞ் செவ்வனே நடைபெறுதற்பொருட்டு பலவிதத்திலுஞ் சகாயஞ்செய்தருளிய மதுரகவி புதுவை ஸ்ரீநடராஜ ஆச்சாரியாரவர்களுக்கும் வந்தனஞ்செலுத்துகிறார்கள்.

---

**கற்பூரம்**:—பூசைக்கின்றியமையாததாகிய கற்பூரம் ஓர் மரத்தினின்றும் உண்டாவது. கற்பூரமரம் அநேக வருஷகாலம் நீடித்திருக்குஞ் சுபாவமுடையது. இம்மரம் ஜப்பான் தேசத்தில் ஏராளமாய்ப் பயிரிடப்பட்டு வருகின்றது. அந்த தேசத்தில் கற்பூரமரத்தோப்புகளுங் காடுகளும் அநேகாயிரமிருக்கின்றன! வழக்கமாய்க் கற்பூரமரங்களுக்கு 50 வருஷமான பிறகு அவற்றை அடியோடு வெட்டிச் சாய்த்து இலைகளை நீக்கிக் கிளைகளை மாத்திரம் கற்பூர ரஸமிறக்குவதற்காக உபயோகப்படுத்தி வந்துகொண்டிருந்தார்கள். 200 வருஷங்கள் மட்டும் வளரக் கூடிய கற்பூரமரங்கள் இவ்விதம் 50 வருஷங்களிலேயே சேதிக்கப்பட்டு வந்ததினால், நாளுக்குநாள் பயிர்குறைவுபட கற்பூரம் விலையேறிக்கொண்டு வந்தது.

இந்த வழக்கத்தை மாற்றவேண்டுமென்று ஐரோப்பிய விஞ்ஞானசாஸ்திரிகளும் வியாபாரிகளும் பலவருஷங்களாய்ப் பாடுபட்டு பலவித பரிசோதனைகளை நடத்தி வந்தார்கள். ஒவ்வொரு தொழிலையும் எங்ஙனம் விருத்திசெய்யலாம், எப்படிச் செலவையுங் கஷ்டத்தைக் குறைத்து அதிக வருமானமடையலாமென்பதிலேயே அவர்கள் சதாகாலம் கண்ணுங் கருத்துமா யிருப்பவர்களல்லவா? ஆதலால், அம்மரத்தின் தழைகளைக்கொண்டும் கற்பூரம் செய்தல் கூடுமென்றும், அவ்விதஞ் செய்வதினால், மரத்தை சேதித்துச் செய்கின்றதினாற் கிடைக்கும் கற்பூரத்தைப் பார்க்கிலும் அதிக கற்பூரங் கிடைக்கிறதென்றும், மரம் சேதமடையாமல் நெடுங்காலம் பலன் தரச்செய்யலாமென்றும் நூதனமாகக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

மலேயாதீவுகளிலும், கீழ் ஆபிரிக்காவிலும், ஜமைகாவிலும், அமெரிக்கா முதலிய இடங்களிலும் கற்பூரம் விசேஷமாய்ச்செய்யப்பட்டு இந்தியா தேசத்திற்கு



வருகிறது. ஜப்பான் தேசத்திலிருந்து இறக்குமதியாகும் கற்பூரம் மற்ற நாட்டுக் கற்பூரத்திலும் விலை சரசமாயிருப்பதாய்ச் சொல்லிக்கொள்ளப்படுகிறது. தேவதா பூசையுங் கற்பூரமணமுங் கமழ்ந்து விளங்கும் இப்பரதநாடு பண்டைக் காலத்தில் கற்பூரம் எங்கிருந்து பெற்றதோ? அப்போது இந்நாட்டிற்கு வேண்டிய கற்பூரமெல்லாம் அளித்தவர்கள் இப்போது எங்கிருக்கின்றனரோ, என் செய்கின்றனரோ!

---

இருபுண்ணிய புருஷர்கள்:--சென்னை ஸ்ரீகாளிகாம்பாள் கமடேஸ்வர தேவஸ்தான தர்மகைங்கரிய சபைக் காரியதரிசி ஸ்ரீகாயிரம்பேடு - திருவேங்கட ஆச்சாரியார் பின்வருமாறெழுதுகிறார்:—

5-10-13உ காலையில் ஷை தேவஸ்தான மண்டபத்தில் கூடிய நிர்வாகசபையார் முன்னிலையில் இரண்டு தர்மஸ்தாபனங்கள் நடந்தன. சென்னை முத்தியாலுபேட்டை தம்புசெட்டிவீதி 163வது நெ. கிருகத்தில் வசிக்கும் திருச்சிராப்பள்ளி. சிவந்தைய பத்தர் குமாரர் ஸ்ரீ. நல்லய்ய பத்தர் அவர்கள், நவரத்தின மிழைத்த பொன்பொட்டுகள் பதினொரு உருப்படி அடங்கிய சுமார் ரூபா 250-0-0 மதிப்பு பெறும்படியான மாலையை தமது சொந்தச் செலவில் செய்து முடித்து ஸ்ரீ காளிகாம்பாளுக்கு சமர்ப்பித்தனர். அதேதினத்தில் மற்றொரு புண்ணியபுருஷர் சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை ரகுநாயகுலு தெருவு 21 - வது நெ. கிருகத்தில் இருக்கும் கல்பாக்கம். ஆண்டியப்பாச்சாரியார் குமாரர் ஸ்ரீ. க. முத்தாச்சாரியார் அவர்கள் ஷை தேவஸ்தானத்தில் சுமார் 20-வருஷங்களுக்கு முன்னால் திருவாபரண சபையாரால் தயாரித்த நல்பச்சை, கெம்பு, தருப்பு இவைகள் ஒட்டி சம்பாடம் செய்துவைத்திருந்த திருபஸ்தூரா (அல்லது கலிக்கத்துரா) தர்மார்த்தமாக தமது சொந்தச் செலவு ரூபா 200-ல் குந்தனத்தங்க மிழைத்து பூர்த்திசெய்து ஷை அம்பாளுக்கு சமர்ப்பித்தனர். இதன் மொத்த மதிப்பு ரூபா 355. இந்த இரண்டு நகைகளின் மொத்த மதிப்பு ரூபா 605. இந்த நகைகள் ஷை தேவஸ்தான தர்மகர்த்தர் ஸ்ரீ செஞ்சி. சந்திரய்ய பத்தர் அவர்கள் வசமிருக்கும் திருவாபரண கணக்கில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. இம்மாதிரியான தர்மங்களை மற்றவர்கள் நடத்த முன்வருவார்கள் என்றும், இன்னும் பாக்கியாக ஒம்மிச்சு செய்துவைத்துள்ள கர்ணபத்திரம், அஸ்தம், பாதம் முதலிய திருவாபரணங்களைப் புதுப்பிக்கவேண்டியிருப்பதால் புண்ணிய மூர்த்திகள் முன்வந்து பூர்த்திசெய்வார்கள் என்றும் எதிர்பார்க்கின்றேன். இந்த அரிய தர்மஸ்தாபனம் செய்த புண்ணியவான்களுடைய உதாரத்துவமும் பெருந்தன்மையும் பக்தி சிரத்தை வைராக்கியம் முதலியவைகளும் எந்நாளும் கொண்டாடற்பாலவாம்.

---

## அதிமதுரம்

சிவகங்கை மன்னர் தமது சமஸ்தான வித்வான் வேலுக்கவிராயர் முதலிய புலவர்களுடன் உல்லாசமாயிருக்கும்போது, வெண்பாப்புலிக்கவிராயர் அரண்மனைக்கு வாயிலில் நின்றுகொண்டு "புலிவருகின்றது" என்று அரசருக்குத் தெரிவிக்கும்படிவாயில் காவலரிடஞ்சொல்லியனுப்பினர். அதுகேட்ட அரசர், "புலிவந்தால் பயமொன்றுமில்லை. இங்கு வேலிருக்கின்றது புலிக்குத்தைரிய மிருந்தால் உள்ளே வரட்டும்" என்று கூறியனுப்பினாராம்.

***

மூழிப்பட்டி ஜமீன்தாரிடம் திருமலைக்கொழுந்து கவிராயர் போனபோது ஜமீந்தார் "இது சமயமல்ல, அந்த மரத்தின் நிழல் இந்தச் சுவர்ப்பக்கம் வரும்போது நீரிங்குவாரும்" என, கவிராயர் "இதுபடியாதவன் கணக்கோ" என்றுரைத்துக்கொண்டே திரும்பினாராம். ஜமீந்தார் வெட்கிக்கோபங் கொண்டு "என்ன சொன்னீர்?" என்றுகேட்கப் புலவர் "மற்றொன்றுமில்லை. இது பூமியின்மேல் சூரியன் நிழலைக் கொண்டு செய்யுங் கணக்கோ வென்றேன்" என்று கூறிப்போயினராம் (படி-பூமி; ஆதவன் சூரியன்.)

***

வேதாந்தசாஸ்திர விற்பன்னராகிய ஒரு குரு தம்மையண்டினோர்க் கெல்லாம் வேதாந்தோபதேசஞ் செய்துகொண்டுவந்தார். இதனால் இவருக்குப் பல சிஷ்யர் ஏற்பட்டனர். இந்த சிஷ்யர்கள் சமயவுணர்ச்சியடைந்தார்களே யொழிய உபசாந்தியடையாமல் அகங்காரங்கொண்டிருந்தார்கள். இவ்வுண்மையைக் கண்டு கொண்ட குருவானவர், தமது சிஷ்யர்களுடைய அகங்காரத்தைக் கண்டித்து அவர்களுக்குச் சற்போதனை செய்யவேண்டி, அவர்களையெல்லாம் ஒருங்கே அழைத்து உட்காரவைத்துக்கொண்டு "உங்களில் யாவர் மோக்ஷம் அடையக் கூடியவர்" என்றுகேட்க ஒவ்வொருவரும் தாமே அதையடைதற் குரியவரென்று தமதுபெருமைகளை விரித்தும்மற்றவர்களைக் கண்டித்துப்பேசலாயினர். இங்ஙனம்பிறரை யிகழ்ந்துதம்மைத்தாமே புகழ்ந்து பேசுதல் கேட்டுப் புன் சிரிப்புக்கொண்டவராய், குருவானவர் தமது மடத்தைப் பெருக்கும் கிழவியை யழைத்து "எகிழ! மோக்ஷத்திற்கு யார் செல்லக்கூடும்?" என்று கேட்டார். அவள் சிரித்தவண்ணமாக, "நான் போனாலன்றி எவரும் போகமுடியாது. இத்தனை வருஷங்களாகத் தங்களுக்கு ஊழியஞ்செய்தும் இது தெரிந்து கொள்ளாமலா இருப்பேன்!" என்றனளாம். இவள் மொழியைக் கேட்டு சிஷ்யர்களெல்லாம் வெட்கமடைய, குருமனங்களித்தாராம். ('நான்' என்னும் அகங்காரம் ஒழிந்தாலல்லாமல் மோக்ஷமடைதல் கூடாது.)

***

ஒற்றைக்கண் குருடரான சர்வமிக்க புலவரொருவர் ஒரு தமிழ்க்கலாசாலைக்குச் சென்றார். அவ்விடத்துத் தமிழ்ப்பண்டிதர் இவரை வரவேற்று உபசரித்ததின் மேல், புலவர் "பிள்ளைகள் என்ன வாசிக்கிறார்கள்?" என்று கேட்க, பாடசாலைப் பண்டிதர் "நன்னூற் காண்டிகை படித்து விருத்தி படிக்கின்றார்கள்" என்றனர். "நான் ஏதாவது சிலகேள்விகள் கேட்கலாமா?" வென்று புலவர்கேட்க "தடையொன்றுங் கிடையாது; மனம்போற் கேட்கலாம்" என்றுஉபாத்தியாயர் உத்தரவளித்தனர். உடனே குருட்டுக்கண் புலவர் அவ்வகுப்புப் பிள்ளை யொருவனை நோக்கி "நெடிலோடுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுட், டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே-என்னுஞ் சூத்திரத்திற்கு ஓர் உதாரணங்கூறுக" வென்று வெகு அட்டகாசயாய்க் கேட்டார். அவன் சரேலென்றெழுந்து புன்சிரிப்புடன் "குருடு + கண் = குருட்டுக் கண்" என்றான். புலவர் மிகவும் வெட்கிப்போயினர்.

ஸ்ரீமத்விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

சென்னை விஸ்வகர்மகுலோத்தாரணசபையின் மாதாந்தப்பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
DEC 1913
MADRAS.

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தேவன்—திருக்குறள்.

சம்புடம் I.] டிசம்பர் 1913. [சஞ்சிகை 3.

## வாழ்த்து.

பதினறடியாசிரிய விருத்தம்.

ஸ்ரீமத்பராத்பரவிராட்டுவிஸ்வப்ரம்ஹ தேசிகன்றிருமுகத்திற்
செனமித்தசானகசனாதனவபூவனச திவ்யப்ரத்னசசுபர்ண
தேசிகப்ரம்ஹரிஷிகோத்ரமனுமயத்வஷ்ட சில்பிவிஸ்வக்ஞருத்ர
தேவப்பிராம்ஹணரெனும்விஸ்வகர்மகுல செல்வரெண்டிசையும்வாழ்க
பூமருவுகாமாக்ஷிதேவாலயங்களிப் புவியின்மிசையோங்கிவாழ்க
புனிதருக்கெஜுர்சாமமதர்வணம்பிரணவம் பொலிவுற்றிலங்கிவாழ்க
புண்யஷட்சாஸ்திரபுராணேதிகாசகலை பூர்வீகநிலையில்வாழ்க
புங்கவிச்சுவதருமமுதலனையசிற்பநூற் பூதலந்தன்னில்வாழ்க
தர்மஜனகாதியர்நவப்பிரமர்தக்ஷப்ர ஜாபதிகள்நீடும்வாழ்க
சத்தியசுவாயம்புமனுகுலோத்தமரான சக்ரவர்த்தியர்கள்வாழ்க
தரணிமிசைசூர்யசந்திரகுலந்தன்னிலுள சத்திரியரினிதுவாழ்க
தருமநெறிதவறுமலரசாட்சிபுரிகின்ற ஜார்ஜுராஜேந்த்ரன்வாழ்க
மாமறைசொல்மந்த்ரகாயத்ரிசாவித்ரியொடு வல்லசரஸ்வதியும்வாழ்க
மங்களமிகுந்தவிஸ்வப்ரம்ஹசபைகளிவ் வையமிசைதிகழவாழ்க
வளருமிப்பத்திராதிபர்நிருபநேயர்சுப வாழ்வுபுகழ்பெற்றுவாழ்க
மதுரகவி வே. மௌனகுருருத்ரமூர்த்திமன மகிழ்வுடன்றினம்வாழ்கவே.

V. மௌனகுரு-ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிசிபல் கௌன்சிலர், பழனிஸ்தலம்.

## சிற்பசாஸ்திர விஷயம்.

சிற்பபிரவர்த்தகம் இன்னின்ன சாதனங்களினாலென்றும் சொல்லப்படுகிறது.

சிற்பம் ஐந்திரமதம் அத்தியாயம்-௧.

தாருயிஷ்டிசிலாலொஹா
ஸுதாமிருத்கடுசர்க்கரா
தந்தயந்திரக்ரியாபாஸா
சில்பீநாம்தசகர்மணாம் ||

மரம், செங்கல், கல், லோஹம், சுதை, மண், கடுசர்க்கரை, தந்தம், யந்திரம், பட முதலியவைகளினாற் செய்யப்படும் பத்துவித கர்மங்களும், சிற்பியர்களுக்கு ஸ்வதர்மங்களாக விருக்கின்றன. மேலும் சாஸ்திரங்களில் சகலவிதமான கர்மங்களிலும் பிரவர்த்தகமுண்டென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சாதனங்களிலும் பிரவர்த்தகம் ஆரம்பிக்கும் போதும், தேவ விம்பங்களில் ஒவ்வொரு உறுப்புக்களை ஆரம்பிக்கும் போதும், ருக், யஜு, சாமம், அதர்வண முதலான வேதங்களினின்றும் இன்னின்ன சூக்தம், அநுவாகம், பனைசை, ப்ரஸ்ந முதலியவைகளை அத்தியயனம் பண்ணிக்கொண்டே பிரவர்த்தகம் நடத்திக் கொண்டிருக்கவேண்டுமென்றும் கற்பித்திருக்கின்றன.

இந்தப்பிரகாரம் பிரவர்த்திக்க வேண்டியவர்கள் ஆதியாக பிரவர்த்தித்த விஸ்வகர்ம வமிசத்தவர்களே வேண்டுமென்றும், அதற்காகவே சிற்பசாஸ்திரங்களில் அங்கங்கே விஸ்வகர்மா செய்யவேண்டுமென்றும், துவஷ்டா செய்யவேண்டுமென்றும், சிற்பிசெய்ய வேண்டுமென்றும், வர்த்தகி செய்யவேண்டுமென்றும், தக்ஷா செய்ய வேண்டுமென்றும், விஸ்வகர்ம வம்சஜாள் செய்யவேண்டுமென்றும், வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் ஸ்ரீவிஷ்ணுபகவான் சிற்பசாஸ்திரோக்தமாக என்னுடைய பக்தர்களான விஸ்வகர்ம வம்சத்தவர்களைக்கொண்டுவந்து ஆலய முதலியவைகளைச் செய்யவேண்டுமென்றும் சொல்கிறார்.

கபிஞ்சலசம்ஹிதா ஸ்ரீபாஞ்சராத்திரம்
ஜீர்ணோத்தாரம் அத்தியாயம்-௯.

வாஸ்துசாஸ்திரேதுஸம்புரோக்தம்
வாஸ்துவித்யாவிசாரதை:
தக்ஷகேணவகர்த்தவ்யோகி
ராமாதீநிஹஸர்வஶ: ||

அத்தியாயம்-௪௧.

மத்பக்தைஸ்தக்ஷகைரேவ
கெஹம்பேரஞ்சகாரயேத் |
ப்ராகாரம்மண்டபஞ்சைவ
மஹாபீடமஹாநஸம் ||
கோபுராஜ்ஜநசாலாதீந்
தக்ஷகைரேவ்காரயேத் |
அன்னியஜாத்புத்ருதந்மோஹாத்
லோபாச்சேந்மத்கிரகாதிகம் ||
கர்த்தாகாரயிதாசைவ
ராஜராஷ்ட்ரஞ்சநஸ்யதி |
தஸ்மாத்ப்ரயத்நதோபிர்மந்
தக்ஷகேர்மத்கிரகாதிகம் ||
காரயித்வாவிசேஷெணதஸ்மிந்
ஸம்ஸ்தாப்யமாம்யஜெத் ||

சிற்பசாஸ்திரப் பிரகாரம் சிற்பத்தில் சமர்த்தரான சிற்பிகளினாலேதான் கிராமம் ஆலயமுதலான சமஸ்த நிர்மாணமும் செய்யவேண்டும். அல்லாமலும் ஸ்ரீவிஷ்



ணுபகவான் சொல்கிறார்: என்னுடைய பக்தாளாகிற தக்ஷகாளாலே ஆலயம், விம்பம், மண்டபம், ப்ராகாரம், மஹாபீடம், பலிபீடம், கோபுரம், அஞ்சனசாலை முதலானவைகளை நிர்மாணம் செய்யவேண்டும். மோகத்தினாலாவது திரவிய லோபத்தினாலாவது அன்னிய ஜாதிகளைக்கொண்டு செய்தால் கர்த்தாவுக்கும் ராஜாவுக்கும் ராஜ்ஜியத்திற்கும் நாசமுண்டாகும். அதினால் எவ்வளவு சிரமப்பட்டாவது ஹேபிர்மாவே! தக்ஷகாளாலே தான் என்னுடைய கிருகமுதலானவைகளைச்செய்து பிரதிஷ்டித்து பூஜை செய்யவேண்டுமென்றும் சொல்கிறார்.

இதனால் அன்னிய ஜாதிகளைக்கொண்டு நிர்மாணம் செய்யக்கூடாதென்றும், சிற்பசாஸ்திரத்திற்கு கர்த்தர்களாகவும் அதில் பிரவர்த்தக முடையவர்களாகவுமிருக்கிற விஸ்வகர்ம வமிசத்தவர்களைக்கொண்டுதான் நிர்மாணம் செய்யவேண்டுமென்றும், ஸ்ரீவிஷ்ணுபகவானாலும் சொல்லப்பட்டிருக்கிறது.

சுருதி ஸ்மிருதி மீமாம்ஸ ஹிதிகாஸ புராணங்களில் எவ்வளவு விஷயங்களைச் சொல்லி யிருந்தபோதிலும் பக்தியையும், ஞானத்தையும், மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடியதாய் பூஜிக்கப்படுகிற லிங்கபேராதிகளை யுண்டுபண்ணவும் க்ஷேத்திரம் கோபுரம், ரதம், வாஹன முதலியவைகளை நிர்மாணம்பண்ணப் பிரமாணங்களைச்சொல்வதும் பிரதிஷ்டாவிதி, பூஜாவிதி, மந்திரவிதி முதலியவைகளைச் சொல்வதும் சிற்பசாஸ்திரமே.

ஸ்வர்க்காதி போகங்களோடு மோக்ஷமடையும்படியாக செய்யப்பட்ட யாகாதிகிருதுகளுக்கு வேண்டிய சாதனங்களைக் கற்பிப்பது சிற்பசாஸ்திரமே.

அரசர்களுக்கு ஜயமுண்டாவதற்காக கருவிகரணாதிகளையும், சிம்மாஸனம், கிரீடம், செங்கோல், வாள் முதலியவைகளையும் பிரமாண பூர்வமாகச் செய்விக்கச் சொல்வது சிற்பசாஸ்திரமே.

மனுஷ்யருக்கு சுகமாக வசிக்கிறதற்கும், சுகிக்கிறதற்கும், புஜிக்கிறதற்கும், அலங்காரத்திற்கும், சகலவிதமான போகத்திற்கும், பட்டணங்களையும், கிராமங்களையும், கிருகங்களையும், கட்டில், மெத்தை, பாத்திரம், யானம், முதலியவைகளையும், நதிகூபதடாகங்களையும், ஆபரணாதிகளையும், வீணை, பேரிகை முதலானவைகளையும், உண்டுபண்ண விதிசொல்வதும் அதனாலவர்களுக்குச் சகல சம்பத்தைக் கொடுக்கக் கூடியதாயுமிருக்கிறது சிற்பசாத்திரமே.

ஜாதிகளை பிரத்தியேகம் பிரத்தியேகம் அறிகிறதற்கு மாங்கல்ய முதலான ஆபரணாதியாலும், கிருகங்களினாலும், வசிக்கிற பக்கங்களினாலும், பேதாதிகளைக் கற்பித்திருக்கிறது சிற்பசாத்திரமே.

கிருஷிகருக்கும், கைத்தொழிலாளருக்கும், வியாபாரிக்கும், உத்தியோகஸ்தருக்கும், வேண்டிய ஐசுவரியத்தைக் கொடுக்கவேண்டியதற்காக கலப்பை மண்வெட்டி முதலானவையும், வாள் வேல்முதலான கருவியாதிகளையும், யந்திரமுதலானவைகளையும் திராசு எழுத்தாணி மு-

வியவைகளையும் பிரமாண பூர்வம் செய்விக்கச்சொல்வது சிற்பசாத்திரமே.

யாத்திரை செய்வதற்கான வசதிகளைச் செய்வதற்கு வண்டி புகைவண்டி கப்பல் ஆகாயவிமானம் முதலியவைகளைச் செய்ய லக்ஷணங்களைச் சொல்வது சிற்பசாத்திரமே.

மனுஷ்யாள் முதலான ஜீவஜெந்துக்களின் அவயவ முதலானதின் லக்ஷணங்களையும், அவைகளின் ஆயுர்த்தாய முதலான சுபாசுபங்களையும் சொல்வது சிற்பசாத்திரமே.

பூதப்பிரேத பிசாசுகள் அணுகாமலிருக்கவேண்டியதற்காக யந்திர மந்திராதிகளை விதிப்பது சிற்பசாததிரமே.

பூமிபேதங்களையும் அதின் ரசங்களையும், சல்லியங்களையும், அறியச்செய்வது சிற்பசாத்திரமே.

காலமானங்களையும், அளவுப்பிரமாணங்களையும், நிறைஉரைபிரமாணங்களையும், தெரியப்படுத்துவது சிற்பசாத்திரமே.

பாஞ்சபௌதிகங்களை யறிந்து கூட்டிக்குறைத்து அதின் பிரயோஜனங்களை யடையச்செய்வது சிற்பசாத்திரமே.

நவரத்னங்களையும், லோஹமுதலானவைகளையும் கண்டுபிடிப்பதற்கான பூமி முதலான வழிகளையும், அதின் சுபாசுப பலன்களையும், லக்ஷணங்களையும், கூறுவது சிற்பசாத்திரமே.

கல், மரம் முதலானவைகளின் லக்ஷணங்களையும், அதில் ஆண் பெண் அலி முதலான பேதங்களையும், அறிவிக்கச்செய்வது சிற்பசாத்திரமே.

நித்திய நைமித்திக முதலான கர்மங்களை நடத்துகிறதற்கு வேண்டிய கிரமங்களையும், விதாயகங்களையும் விதிப்பது சிற்பசாத்திரமே.

இந்தப்பிரகாரம் விஸ்வகர்ம ப்ரஜாபதியின் வதனத்தி லுற்பவித்ததாகவும், சகல மதத்துக்கும் பொதுநூலாகவும், சிருஷ்டியாகவும், பிரபஞ்சம் உஜ்ஜீவிக்கும்படியாகவும், மோக்ஷத்தைக் கொடுக்கும்படியாகவுமிருக்கிறது சிற்பசாத்திரம்.

இந்த சிற்பசாத்திரமன்றி பிரபஞ்சமில்லையென்றால் மற்றெந்தசாத்திரத்தை யிதற்கிணையாகச் சொல்லலாம. மிகச்சிறப்புற்றோங்கிய இச்சிற்ப சாத்திரமானது மனுஷ்யருக்கு மாதா பிதா குரு தெய்வம் போன்றதாகவு மிருக்கிறது. சிற்பசாத்திர மகாத்மியத்தை ஆதிசேஷனாலும் சொல்வதற் கரிதாகுமென்றால் யாவர்களால் சொல்லமுடியும்.

சிற்பபிரவர்த்தகத்தை நன்குணர்ந்ததினால் சிற்பசாத்திரத்தை தேவதாசொரூபமென்றும், வேதமென்றும், நம்ஆங்கிலேய துரைத்தனத்தார் மதித்திருக்கின்றார்கள்.

இவ்விஷயம் தெரிய வேண்டுமென்று பலர்களும் விருட்புற்றமையால் சுருக்கமாக இப்போது வரையலானேன். இதில் தெரிந்தமட்டிலுமுள்ள சிற்பம் உபசிற்பங்களின் பெயர்களும், சிற்பம் விஸ்வகர்மீயம் மனுசார கிரந்தமிரண்டும் பூர்ணமாக காணவில்லையானாலும் காணப்படுகிறவிஷயசூசிகையும் மறுமுறைவெளியிடப்படும்.

ஜோஸ்யர். முத்து ஆசாரியார்,
மீனாக்ஷிபுரம், நாகர்கோவில்.



## மயன்.

மயன், கசியப்பிரஜாபதிக்குத் திதிவயிற்றில் பிறந்த புத்திரன், தானவர்க்குத் தச்சன், சிற்பசாஸ்திரம் செய்தவன். இவன் மாளிகைகளும் அரண்களும் சமைப்பதில் மிக்கவல்லவன். அவ்வாற்றல் மாத்திரமன்று, நினைத்தமாத்திரத்தில் நிர்மிக்குமாற்றலுடையவன். இவனுக்கு மாயாவி துந்துபி புத்திரர்கள், மண்டோதரி புத்திரி, இராவணன் மருமகன். இவனுக்குப் பின்வந்தோரும் இப்பெயரினாலேயே விளங்கினர் என்பது பாரதத்தினால் விளங்குகின்றது. பாண்டவர்களில் வில்லாளியாகிய இந்திரகுமாரனான அர்ச்சுனன் அக்கினி தேவனுக்கு காண்டாவனத்தை யிரையாக்கியபோது, அவ்வனத்திலிருந்த மயனுயிரைக் காத்தமையால் மயன் சந்தோஷமடைந்து கைம்மாறு செய்யக்கருதி, இந்திரப்பிரஸ்தமென்னும் ஓர் அலங்காரமண்டபம் நிருமித்து, கண்டோர் பிரமிக்கும்படி சுவர்கள் நிலைக்கண்ணாடிகள் முதலியன இல்லாவிடத்து உள்ளவாறாகவும் உள்ளவிடத்து இல்லாததுபோலவும், மேடுள்ளவிடத்து பள்ளமாகவும், பள்ளமுள்ளவிடத்து மேடாகவும், ஜலமுள்ளவிடத்து ஜலமில்லாதது போலவும், வாவியுள்ளவிடத்து வாவியில்லாதது போன்றும், வழியுள்ளவிடத்து வழியில்லாமையாகவும் கண்டோர் பிரமிக்கும்படியாகவும், சென்றோர் திக்பிரமைகொண்டு நிற்கும்படியாகவும் நிர்மாணித்துக் கொடுத்தான். அன்றியும், காண்டீபம் என்னும் ஓர் வில்லையும் ஓர் இரதத்தையும், வீமசேனனுக்கு ஓர் கதாயுதத்தையும் நிர்மாணித்துக் கொடுத்தான். இவ்விபரங்கள் பாரதத்தாற் பெறப்படுகின்றன. மயன் வமிசத்தோர் தெய்வகம்மியராகிய துவஷ்ட்டாவெனப்படும் விஸ்வகர்மாவினது வமிசத்தார்க்கு அஞ்சி ரோமாபுரியை யடைந்து அசுரர்களுக்கு கம்மியராகி அவர்களுக்குப் படைக்கலங்களும் ரதங்களும் மாடமாளிகை கூடகோபுரங்களும் ஏனைய பலவகைகளும் நிர்மிக்கும் விதங்களைப் பயிற்றி விளங்குவாராயினர். ரோமாபுரியைக் கடல்கொண்டழிந்தபோது அவ்வமிசத்தோர் பலர் அப்பிரளயத்திற்குத் தப்பி மீண்டும் ஆரிய நாட்டை யடைந்தனர். அங்ஙனம் அடைந்தோர்பெருக மற்ற துவட்டாவினது வகுப்பினர் அருகினார் போலும். ஆகையால்தான் 'ஆலய சிற்பமானங்கள் ஆகமத்திலொன்றும் மயன் விதியில் ஒன்றுமாக இந்நாளிலும் முரண்படுகின்றன என்று கூறப்படுகிறது. மயன் சந்ததியார்கள் தானவர்கள் எனவும் துவஷ்டாவினது சந்ததியார்கள் தேவர்கள் எனவும் தெரிகிறது. தற்காலமுள்ள கம்மியர்கள் எவருடைய சந்ததியார்கள்? இவ்விரு சந்ததியார்களும் இப்போதிருக்கிறார்களா, எங்குளர்? தற்காலமுள்ள வமிசத்தோர்கள் ஆரியர்களா திராவிடர்களா? ஆரியநாட்டிலிருந்து இந்நாட்டிற் குடியேறிய காலவரை எப்பொழுது? வேதகாலத்திற்கு முன்னாபின்னா? வேதகாலத்தில் இவர்கள் செய்துகொண்டிருந்த கிருத்தியம் யாது? இவைகளை ஆரியமுணர்ந்த பண்டிதோத்தமர்கள் இப்பத்திரிகை வாயி

லாக விளக்கிக்காட்டி அடியேனுக்கு உதித்த சந்தேகங்களை நீக்குவார்களெனப் பிரார்த்திக்கின்றனன்.

கா. திருவேங்கட ஆச்சாரி.

---

## இந்து மஹா சத்தியவேத விருத்தாந்தம்.

வேதம் என்பதற்குத் தமிழ் அகராதிகளில் சொல்லப்பட்டிருக்கிற பல பெயருள் "அறிவு" என்பது பிரதானமான பெயராம். அந்த அறிவே பிரம்மமாகக் கண்டவர், வருணன் புத்திரரான "பிருகு" என்று வருண உபநிடதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. எப்படியெனில், தன்பிதாவான வருணன் உபதேசித்தவண்ணம் கனயோக நிஷ்டையிலிருந்து தியானித்தபோது எல்லா ஜீவர்களும் உண்மையாகவே அறிவிலிருந்து உண்டாகி இருக்கிறார்கள் என்றும், பிறந்தபோதும் அறிவினாலே ஜீவித்திருக்கிறார்கள் என்றும், அறிவைப் பராமரிக்கிறார்கள் என்றும், அறிவிலே செல்லுகிறார்களென்றும், அவர் அறிந்துக்கொண்டிருப்பதுடன் "யஜுர்வேதம்" விரயத்து ஆரண்ணியகத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரமாணப்படி பிரம்மக் கியானோபதேசஞ் செய்ய வந்த கார்க்கேயருக்கும் காசிதேசத்தரசனாகிய "அஜாதசத்துரு"வுக்கும் நடந்த சம்பாஷணையில் வேதாந்தசாஸ்திரங்களை நன்றாய் உணர்ந்திருக்கின்ற அரசன், பிரம்மக்கியானத்துக்கு ஞானம் போதாதவராயிருந்த ஆசாரியரின் அபிப்பிராயங்களைக் கிரமக் கிரமமாகப் பேசித் தோற்கடித்து, அவருக்குத் தான் உபதேசஞ்செய்வேனென்று சொல்லிக்காட்டிய சோதனையில், நித்திரைசெய்துகொண்டிருந்த ஒருவனை எழுப்பி ஆசாரியரைப் பார்த்து, அந்த மனுஷன் நித்திரைசெய்துகொண்டிருக்கும்போது, அறிவுரூபமாக இருக்கிற அவனுடைய ஆத்துமா, எங்கேயிருந்தது என்றும், அவன் விழித்துக்கொண்டபோது அவனுடைய ஆத்துமா எங்கேயிருந்து வந்தது என்றும், கேட்டிருக்கின்ற கேள்வியுமே, அறிவைப் பிரம்மமென்று நிரூபித்திருக்கின்றது. ஆனதால் வேதமே ப்ரம்மசொருபமாகும்.

### வேதத்தின் வரன்முறை.

யஜுர்வேதம் 31-வது அத்தியாயம்
ஏழாவது மந்திரம்.

"தஸ்மாத்யக்ஞாத் ஸர்வஹுத:ரிச: ஸாமாநிஜஞ்ஞிரே, சந்தாகும் ஸிஜ்ஞ்ஞிரெ தஸ்மாத் யஜுஸ்தஸ்மா த ஜாயத" சத்தென்பது அழிவின்மை, சித்தென்பது சிறிது மறியாமையற்ற நிறைந்த அறிவின்மயம். ஆனந்தம் என்பது சிறிதும் துக்கமற்ற சுகஸ்ரூபம்; ஆக யாவர்களுக்கும் சுகத்தைத் தாராநின்ற சச்சிதானந்த ஸ்வரூபனாய் வந்தனை வழிபாடுகளுக்குரிய இஷ்டதேவனாய் உலகெல்லாவற்றுள்ளும் நிறைந்த வியாபகனாய் எல்லாம்வல்ல முற்றறிவினனாயுள்ள பரமாத்மனாகிய பரப்ரம்ஹத்தினாலேயே இருக்கு யஜுர் சாம அதர்வண பிரணவவேதங்கள் உண்டாயிருக்கின்றன.

ஆகையால், இவ்வுலகத்திலுள்ள எல்லாபதார்த்தங்களும் ஆத்மகோடிகளுக்காகவே எப்படி சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனவோ அதுபோலவே இவ்வேதங்களும் யாவர்களுக்கும் உரிமைபூண்டு கைக்கொள்வதற்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றன.



வேதங்களுக்கு "நிகமம்" என்றுபெயர். நிகமம் என்பது பரமாத்மனையல்லாது வேறொன்றிடத்தினின்றும் வாராதது என்பதேயாம். ஆகையால், எப்படி உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் ஆத்மகோடிகளுக்கு உபயோகமாகின்றனவோ, அத்தன்மையாகவே இவ்வேதங்களும் யாவர்க்கும் உரிமைப்பட்டவைகளேயாம்.

"மீமாஞ்சை" சாஸ்திரத்தை அனுஷ்டிக்கப் பட்டவர்கள் இவ்வேதங்கள் சிருஷ்டிக் குட்பட்டன வல்லவென்றும், அநாதி என்றும், சிலகாலங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றும் சில காலங்களில் மறைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், "நியாயசாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம் இன்னும் மற்ற சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த மஹான்கள்" கடவுளே சிருஷ்டித்தாரென்றும் சொல்லுகிறார்கள். ஆயினும் அந்த வேதங்களினுடைய பொருள் நித்தியத்தினின்று உண்டாயிருப்பதுடன், வேதாந்த சாஸ்திரத்தில் தவறுதல் இல்லாதவராயும், யாதொன்றிலும் கவனஞ் செலுத்தவேண்டியவரல்லாதவராயும், குணாகுணங்கட் குட்படாதவராயும், கள்ளமாயங்களினின்று நீங்கினவராயுமிருக்கின்ற கடவுளுடைய திருவாக்கிலிருந்து புறப்பட்ட தற்பூரணமொழியே வேதங்களென்னச் சொல்லப்பட்டிருக்கின்றது.

அந்த வேதங்களின் முதற்காண்டம். "கர்மகாண்டம்" எனவும், இரண்டாவது காண்டம் "உபாசனாகாண்டம்" எனவும், மூன்றாவது காண்டம் "ஞானகாண்டம்" எனவும் விளங்குகிறது. ஷை கர்மகாண்டத்தில் கர்மானுஷ்டானங்கள் செய்கிறவிதங்களின் முறையையும், அஸ்வமேத முதலிய கிரியைகள் செய்வதினால் பரத்திலுண்டாகும் இன்பங்களையும், உபாசனாகாண்டத்தில் கடவுளின் ஆராதனைசெய்ய வேண்டிய பக்தி முதலிய விஷயங்களும் ஞானகாண்டத்தில் கடவுள் முதலாவது - சருவக்ஞத்துவம், சருவேச்சுரத்வம், என்கின்ற குணங்களையுடையவராகவும், இரண்டாவது-நித்தியானந்தமாயும குணாரஹிதமாயும் இருக்கிறார் என்கின்ற பிரம்மஞானத்தை விளக்குகிற வேதாந்தங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

அந்த வேதங்கள் சமஸ்கிருதத்தில் பாடல்களாகவும், மந்திரங்கள் என்னப்பட்ட ஜெபங்கள் துதிகள் அடங்கிய பங்குகளாகவும் பகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக் கனுசரணையாக வாசகநடையிலெழுதப்பட்ட பிராம்மணங்களும், அவைகளுக் குதவியாக மறைபொருளான உபநிஷதங்களு மிருக்கின்றன.

### யாவர்களுக்குவேதம் அவசியகமென்பது

யஜுர்வேதம் 26-வது அத்தியாயம்
இரண்டாவது மந்திரம்.

"யதெமாம்வாசம் கல்யாணீ மாவதானிஜநேப்ய:, ப்ரம்ஹராஜந்யாப்யாகும் ஶூத்

ராய சார்யாய சஸ்வாய சாரணாய - ப்ரியோதேவாநாம் தக்ஷிணாயை தாதுரிஹ பூயாஸமயம் மேகாம: ஸம்ருத்யதா முபமா தோநமது''. இதன்கருத்து - ப்ரம்ஹராஜந்யாப்யாம் - பிராம்ஹணர் க்ஷத்திரியர், ஆர்யாய - வைசியராகிய சிரேஷ்டர்கள், ஸூத்ராய - சூத்திரர், ச-மேலும், ஸ்வாய இவர்களுடைய மனைவியர் ஏவலாளர் முதலானவர்கள், ஆரணாய - நன்னிலை விரும்பும் தாழ்ந்தவர்களும், ச - இன்னும், ஜநேப்ய: - மற்ற யாவர்களுக்கும், இஹ - இந்த ஸம்ஸாரத்தில், கல்யாணீம் - சுகத்தைக் கொடுக்கக்கூடியதாக, இமாம் - வெளிப்படுத்தப்பட் டிருப்பவைகளாகிய, வாசம் - நான்கு அல்லது விஸ்வகர்ம வம்ஸத்தார்கள் காட்டுகிற சுருதியின்படி ஐந்துவேத ருபமான இம்மொழிகளை, ஆவதாநி - உபதேசிக்கின்றேன். யதா - நான் எப்படிப் போதிக்கின்றேனே, தாது - அப்படிக்குள்ள இந்தக் கொடையே, தேவாநாம் - வித்துவஜனங்களுக்கு, தக்ஷிணாயை-தக்ஷிணை, ப்ரிய: வேண்டும் மகிழ்ச்சி, பூயாஸம் ஆகட்டும். மே - என்னுடைய, அயம்-இந்த, காம: அபேக்ஷை, ஸம்ருத்யதாம்-நன்றாய்ப் பெருகட்டும். ததா-இவ்வண்ணமே, மா - என்னுடைய, அத:-பாகதியை, உபநமது - அடையுங்கள், அடைவியுங்கள் என்பதுவேயாம்.

ஸ்திரீகளுக்கும் வேதம்
அவசியகமென்பது
அதர்வணவேத ஸம்ஹிதை
11-வது காண்டம்
24-வது பிரபாடகம் 3-வது அனுவாகம்
பதினெட்டாவது மந்திரம்.

பரம்ஹசர்யேணகந்யாகும்
யுவாநாம்விந்ததெபதிம் ||

என்பது எந்தவிதமாகப் பாலன் சம்பூர்ண பிரம்ஹ சரியத்திலிருந்து பூரண வேதவித்தையைக் கற்று, நல்ல சிக்ஷையை அடைந்து, பூரண யௌவனத்தனாய் தனக்கு சமத்துவமாயிராநின்ற யுவதிவிதூஷியாய், தனக்கு அனுகூலமாயுள்ள பிரியத்திற்கிசைந்த ஸ்திரீயை விவாகஞ்செய்கின்றானோ அவ்விதமே, கந்யாம்-கன்னிகையானவள், ப்ரம்ஹ சர்யேண-அகண்டிதப் பிரம்மசரியத்திலிருந்து வேதாதி சாத்திரங்களைக் கற்று சம்பூர்ணவித்தையையும் உத்தம சிக்ஷையையும் அடைந்து யுவதியாய் சம்பூர்ண யௌவனத்தில் தனக்கு சமத்துவமாகிய வித்துவானாகிய யுவாநாம்-பூரண யுவாவத்தையோடு இராநின்ற, பதி - நாயகனை, விந்ததெ - அடையட்டும் என்று சொல்லியிருக்கிறது.

ஆகையால் ஸ்திரீகளும் உபநயனாதி சமஸ்காரத்தோடு பிரம்ஹ சரியத்திலிருந்து வேத வித்தையைக் கிரகிக்கவேண்டியது ஆவசியகமாயிருக்கின்றது.

வேதக்கட்டளைமீறினால் அரசனது
தண்டனைக்கு உள்ளாவார்களென்பது
சுருதி

''ஶ்ருதிஸ்ம்ருதி மமைவாக்ஞா யஸ்தா முல்லங்க்ய வர்ததெ, ஆக்ஞாச்சேதி மமத்வெஷ்யஸ்ஸ மெவத்யஸ்ச ஜாயதே''. அதாவது, சுருதியும் ஸ்மிருதியும் எனது கட்டளை எவனொருவன் அவற்றை மீறுகின்றானோ அப்படிப்பட்டவன் எனக்குச் சத்துருயான் அவனைக் கொல்லுவேனென்று சொல்லுகிறபடியால் இப்படிப்பட்ட கட்டளையைமீறி நடப்பவர்கள் அரசனது தண்டனைக் குள்ளாவார்கள் என்று சொல்லியிருக்கிறது.

ஸ்மிருதி சுலோகங்கள்.

''ஜாதொவ் யாஸஸ்து கைவர்த்யா:, ஶ்வபாக்யாஸ்து பராஶர:, ஶூக்யாஶ்ஶூகஸ்ததோஜாத்யா: கணாதாக்யஶ் ஶூதொபவத், ருஶ்யஶ்ருங்க ஸ்த்வபூர்ம் ருக்யா: வஸிஷ்டோ கணிகாத்மஜ: மந்தமாலொ முநிஶ்ரேஷ்டொ லாவிகபத்ய முச்யதே: மாண்டூக்யொ முநிராஜஸ்து மண்டூகீகர்ப ஸம்பவ:'' என்றும்,

''ருஶ்யஶ்ருங் கொம்ருகொஜாத: கௌஶிகொ காதிநந்தந:, ஜம்புகொ ஜம்புகோத்பத்தி: கௌதமொ கௌதஸம்பவ:, வால்மீகொ பரோத்பத்தி அகஸ்த்ய: கும்பஸம்பவ:, வ்யாஸொவா லுப்தஸம்பூதொ வஸிஷ்டொ வூர்வஶிஸுத:, நாரதொரஸகீபுத்ரொகௌண்டந்யொ முண்டகீஸுத:, மதங்கஶ்யமதங்கஸ்யாத் மாண்டவ்யொ மண்டுகீஸுத:,சாங்க்யாஸ்வ பசஸம்பூதொகார்க்கேயொ கார்த்தபஸ்ஸுத:, சுநகிகர்பஸம்பூதொ சௌநகாதிமஹாரிஷ:,'' என்றும்,

வஜ்ரசூச்யோபநிஷத்வாக்யம்.

''தத்ரஜாத்யந்த ரெஷ்வநெகஜாதி ஸம்பவாத், மஹர்ஷயொ பகவஸ்ஸந்தி, ருஶ்யஶ்ருங் கொம்ருக்ய:, கௌஶிக:குஶாத், ஜாம்பூகொ ஜம்பூகாத், வால்மீகிர்வல்காத், வ்யாஸ: கைவர்த கந்யகாயாம், ஶஶப்ருஷ்டாத் கௌதம:, வஸிஷ்ட: உர்வஶ்யா, அகஸ்த்ய: கலஶெஜாதஇதி ஶ்ருதத்வாத், ஏதெஷாம் ஜாத்யா விநாப்ய க்ரெக்ஞாந ப்ரதிபாதிதாருஷயொப ஹவஸ்ஸந்தி, தஸ்மாந்ந ஜாதிர் ப்ராம்ஹண இதி'' என்றும், சொல்லப்பட்டிருக்கின்ற பிரமாணங்களின்படி, வலைச்சி வயிற்றில் வியாசரும், சண்டாள ஸ்திரீயினிடத்தில் பராசரும், பெண் கிளி வயிற்றில் சுகரும், கோட்டானிடத்தில் கணாதரும், மான்வயிற்றில் ருஷிய சிருங்கரும், ஊர்வசிவயிற்றில் வசிஷ்டரும், கோமான் வாலிகை என்ற பக்ஷிவயிற்றில் மந்தபாலரும், தவளையின் வயிற்றில் மாண்டூக்யரும், காதிமஹாராஜா விடமிருந்து கௌசிகரும், நரியின் வயிற்றிலிருந்து ஜம்புகரும், பசுவின் வயிற்றிலிருந்து கௌதமரும், வேடச்சி வயிற்றிலிருந்து வால்மீகரும், கும்பத்திலிருந்து அகஸ்தியரும், வண்ணாத்திவயிற்றிலிருந்து நாரதரும், முண்டச்சி வயிற்றிலிருந்து கௌண்டன்யரும், சக்கிலிச்சி வயிற்றிலிருந்து மதங்கரும், பறச்சி வயிற்றில் சாங்க்யரும், கழுதை வயிற்றில் கார்க்கேயரும், நாயின் வயிற்றில் சௌனகரும், குசத்தில் கௌசிகரும், புத்திலிருந்து வால்மீகியும், முயல்வயிற்றில் கௌதமரும் பிறந்து இவர்கள் எல்லோரும் மேற்கண்ட சுருதிகளின்படி சம்பூர்ண பிரம்ஹ சரியத்திலிருந்து பூரண வேதவித்தையைக்கற்று சதா சாரமுடையவர்களாய் ஜாதியபேக்ஷை யில்லாமலே பிரம்மக் கியானத்தினால் பிரசித்தர்களா யேற்பட்டதுடன் ''ப்ரம்ஹக்ஞாநந்து ப்ராம்ஹண:'' என்ற சுலோகப்படிக்கும்,

''ஶூத்ரயொ நௌப்ரஜாதஸ்ய ஸத்குணாநுபதிஷ்டத:, வைஶ்யத்வம் லபதெ

ப்ராம்ஹந் க்ஷத்ரியத்வம் ததைவச, ஆஜர்வெவர்த மாநஸ்ய ப்ராம்ஹன்ய முபஜாயதே"—சூத்திரயோனியிற் பிறந்து நற்குணங்களை அனுஷ்டிப்பவனுக்கு வைசியத்தன்மை கிடைக்கும் என்றும், அவ்விதமே க்ஷத்திரியத் தன்மையும் பெறலாம் என்றும், பிறகு வணக்கத்துடனிருந்தால் பிராம்மண்ணியமும் உண்டாகும் என்றும் சொல்லியிருக்கிற ஸ்மிருதியின் படிக்கும் பிராம்மணர்களெனப் பெயர்பெற்றிருக்கிறார்களென்பது லோகப்பிரசித்தம்.

அப்படிக்கிருக்க "ப்ரபந்த: கல்பநாகத:" என்ற சுலோகப்படி கற்பனையாகச் சொல்லப்பட்டிருக்கிற கட்டு வாக்கியங்களில் "ஸ்திரீ ஸூத்ரௌ நாதியதாம்" என்றது ஸ்திரீகளும், சூத்திரர்களும் வேதத்தை அறியக்கூடாதென்றும்:—
விக்ஞேஸ்வரீயம் வியவகார காண்டத்தின் சுலோகம்.

"கேரள:—ஆதாங்யவேத மபஸ்ருத்ய தஸ்த் பூரிதம், ஸ்ரோத்ருப்யாம் ஸ்மிருதி பூரணம், உதஹாரணே பிஹ்பபேத:, தாரணெஸரீரபேத:" அதாவது சூத்திரன் வேதத்தைக் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி விடவேண்டியது என்றும், வாயாற் சொன்னால் நாக்கையறுக்கவேண்டியது என்றும், அதைத் தொட்டால் தேகத்தை வெட்டவேண்டியது என்றும், இப்படி இன்னும் மிதைப்போன்ற பலவித வேதவிருத்த வசனங்களை எடுத்துக்காட்டி சிலர் சாம்பிரதாயிகமாய் வாதிப்பது யாவரும் அங்கீகரிக்கத் தக்கதன்று. ஏனெனில் முக்கியமான வேதத்துக்குள்ளாகவே யாவர்களும் வேதம் ஓதல்வேண்டுமென்றும், வேதார்த்தத்தையறிந்தே சதாசாரமுடையவர்களாய்ப் பரகதி அடையவேண்டும் என்றம், அதைமீறி நடப்பவர்கள் ராசனது தண்டனைக்குள்ளாவார்கள் என்றும், ஆவசியகப்படுத்தப் பட்டிருக்கின்ற பிரமாணங்களே போதுமான அத்தாக்ஷியாக இருக்கின்றன. (தொடரும்)

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிசிபல் கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

---

## பௌருஷேய குலதிலகர்கள்

---

### ஸ்ரீமத்-வயித்தியலிங்காசாரிய சுவாமிகள்.

"சோழவளநாடு சோறுடைத்து" எனப் பூலோக சரஸ்வதியாகிய ஔவைப் பிராட்டியாரால் கொண்டாடப் பெற்ற சோழமண்டலத்தில் புண்ணிய காவேரியாற் சூழுற்ற திரிசிரபுரத்தினையடுத்த உறையூரென்னுந் திவ்விய தலத்தில், விஸ்வபிரம்மகுல விவேக பானுவாய், இலக்கியவிலக்கணப் பன்னூற்கரைகண்ட மகாவித்துவரத்தின சிரோமணியாய், தொல்காப்பியம் இலக்கண விளக்க முதலிய அரிய பெரிய நூல்கட்குச் சோபானமாகக் காலத்திற்குத் தக்கபடி விரிக்க வேண்டிய விடத்துவிரித்தும் சுருக்கவேண்டிய விடத்துச் சுருக்கியும் அரும்புலவர்களும் ஆராமைகொள்ள ஐந்திலக்கணமுமமைந்த "முத்துவீரியம்" என்னுமொருநூல் தனது பெயரால் வெளிப்படுத்தி, அனேகமான மாணவர்கட்கு அருங்கல்விபோதித்து, ஒரு



நூற்றாண்டு உலகத்திலுலவி, உறையூர் மகாவித்துவான் எனப்பெயர்வகித்திருந்த முத்துவீர வுபாத்தியாயர் தவத்தின் பயனாய் பத்தி புண்மை பாரிற்பரவுதற்கேதுவாய், அவருக்கு ஒரு புத்திர சிகாமணியுதித்தனர். அவர் கருவினைப்பாசமகலக்கதிமருந்தினைக் கீர்த்தன ரூபமாகவும், பிரசங்கவாயிலாகவும் பலவகையிற்காட்ட ஒரு அவதார புருடராய் இனிவிளங்குபவராகலின் அதற்கியைய அருமைத் தந்தையால் வயித்தியலிங்கம் என்னும் பிள்ளைத் திருநாமம்பெற்று, நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாய் அறிவு அடக்கம் ஆசாரம் பத்தியுடன் வளர்ந்து, ஐந்தாமாண்டில் தந்தைபால் கல்விகற்க வாரம்பித்து, பூர்வபுண்ணிய விசேடத்தால் இளமை வயதிலேயே இன்றியமையாத இலக்கிய இலக்கண நூல்களும், சிற்பசாஸ்திர சங்கீத சாஸ்திரங்களும் ஆகிய கலைகளிற்றேர்ந்து, தங்கள் குலத்திற்குரியபடி கண்டார் கண்களைக் கவர்ச்சிகொள்ளச் சாஸ்திர யுக்தமாக விசித்திர தெய்வப்படங்களும், கற்சிலையில் அருமைத் திருவுருக்களும், பலவகை உலோகங்களில் முத்திரைகளும், பல வர்ணாலங்கார நிழல் பிரதிபலிக்கும் தங்கரேக்கமைந்த படங்களும், சித்திர ரூபலாவண்ய மமையப்பெற்ற தக்கை விமானங்களும் ஆகிய பற்பல கைத்தொழில்களிற் பழகி, ஆங்கிலேய மொழியினுஞ் சிறந்து சிவபத்தி சிவனடியார் பத்தி சிவசாதனங்களாகிய விபூதி ருத்திராக்ஷ பஞ்சாட்சரங்களில் விசுவாசம் உடையவராய் வாழ்ந்து வருகையில், கற்பினிற் சிறந்து விளங்கி, பொறுமையினையே பொக்கிஷமாகக்கொண்ட குள்ளம்மாள் என்னும் மாதுசிரோமணியை மணந்து, உறையூரிலேயே இருபத்தைந்துவருடம் தங்கியிருந்து, பின்னர் சென்னைமா நகரினையடைந்து, சேப்பாக்கத்திலுள்ள அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீசில் என்கிரேவர் உத்யோகத்திலிருந்து கொண்டே, புரசையம்பதியில் தன் தந்தையின் ஆன்மார்த்த சிநேகராகிய மகாவித்துவான் அஷ்டாவதானம் சபாபதி முதலியார் முதலியவர்கள் முன்னிலையில் ஆதிவாரந்தோறும் அறுபான்மும்மை நாயன்மார் சரித்திரங்களைக் கீர்த்தன ரூபமாக வியற்றி இசைக்கருவிகளுடன் பிரசங்கித்து வந்தனர். இவருக்குப் பலபெண்களும் ஒரு புத்திரனும் பிறந்தனர். குப்புசாமி யென்னும் அவரது புதல்வர் தமிழும் ஆங்கிலேயமும் நன்குணர்ந்து ரயிட்டர் உத்தியோகத்திலமர்ந்து, தானும் தனது அருமைத் தந்தையார் போன்று சுயமாகப்பாடும் சக்திவாய்ந்து சங்கீதவுணர்ச்சியுமுற்றுச் சிவபத்தியிற் சிறந்து விளங்கி, விவாகமுடித்து வாழ்ந்து வந்தனர். இவர் தந்தையார் கோமளீஸ்வரன் பேட்டையில் தாபித்திருந்த ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் பக்தஜனசபையினர் வேண்டுகோளின்படி எறிபத்தநாயனார் சரித்திரத்தினைக் கீர்த்தனையாகப்பாடி யச்சிடுவித்து ஷெ அவதானியார் முதலிய வித்துவரத்தினங்களின் முன்னே கோமளீஸ்வரன் கோயிலில், தனது புத்திரன் குப்புசாமி ஆசாரியார் இசைக்கருவிகளுடன் பாடத் தானரங்கேற்றி ஆ

நூலின் வருவாயை சபைக்கே யுதவிபுரிந்தனர்.

பின்னர் இவரருமைப் புதல்வர் முப்பதாவது வயதில் சிவபதவி யடையவே, அதற்கு மனந்தளராது எல்லாஞ் சிவன் செயலென வுன்னியிருந்தனர். அப்பால் சிந்தாதிரிப் பேட்டையில் புதுவை-ஆறுமுகாசாரியார் வேண்டுகோளின்படி, நடராஜர் திருவுருவப்படம் தங்கரேக்கினால் தமது திருக்கரத்தாலேயே எழுதி, நடராஜ சித்விலாச பக்தஜனசபை ஈஸ்வர௵ தாபித்து அப்படத்தைச் சபையிலெழுந்தருளுவித்து, தமது மாணவர்கள் புடைசூழப் பிரசங்கஞ்செய்தனர். அதன்பின் தான் பப்ளிக்ஸ்டோர்ஸ் ஆபீசிலுத்தியோகமமர்ந்து சென்னை மல்லீஸ்வரன் ஆலயத்திற் கெதிர்மனையில் வசித்திருந்து பிரதி ஆதிவாரமும் சிவனடியார்கள் மத்தியில் தானியற்றிய நாயன்மார் சரித்திரக்கீர்த்தனைகளை இசைக்கருவிகளுடன் பிரசங்கித்துவர, கேட்டுவந்தோர் பலர் நாளுக்குநாள் சிவபத்தியிற் சிறந்து சிவயோக நிஷ்டாபரர்களாகி, விளங்கின ரென்பது உலகறிந்த உண்மையேயாம். ஒவ்வொரு ஆதிவாரமும் ஒவ்வொருகீர்த்தனை நூதனமாகப் பெருமானைப்பாடி யச்சிட்டு யாவருக்கும் விநியோகிப்பர் சில அன்பர்கள் வேண்டுகோளின்படி அமர்நீதி நாயனார் கீர்த்தனையியற்றியச்சிடுவித்துச் சிந்தாதிரிப்பேட்டை ஆதிபுரீசுரர் ஆலயத்தில் அரங்கேற்றினர். காரைக்காலம்மையார், குங்கிலியக்கலய நாயனார் கீர்த்தனைகளும் பல தனிக்கீர்த்தனைகளும் பாடி அச்சிடுவித்தனர். பற்பலர் விருப்பத்தின்படி பலவிடங்களிலுஞ் சென்று பிரசங்கஞ்செய்து வந்தனர். திருவல்லிக்கேணியில் நடராஜ பக்தஜனசபையும், திருமயிலையில் நடராஜ சிற்சுகோதய விலாசபக்தஜன சபையும் தாபித்தனர். இன்னும் பற்பல சபைகள் பற்பலவூர்களில் தாபித்தனர்.

தனது அருமைத் தந்தையார் தேக அசௌக்கியத்தினைக் கேள்வியுற்று உறையூரடைந்திருந்து, அவர் தனது நூறுவது வயதில் தேகவியோகமானபின் அவருக்குச் செய்யவேண்டிய கடன்களைத்து முடித்துச் சென்னைக்குத் திரும்பியபின், திருவண்ணாமலைக்கு எழுந்தருளும் ஞானதீபக்குடை மகோற்சவ காலத்தில், தன்னாலும் தனது மாணவர்களாலும் தாபிக்கப்பட்டுள்ள பலபஜனைகளையும் அழைப்பித்து, பஜனைசெய்வித்து ஆசீர்வதித்து அனுப்புவர். திருமுல்லைவாயல் மாசிலாமணியீசர் மீது கீர்த்தனைகள் பாடி அத்தலத்திலேயே சைவ மாதவகாலட்சேப சங்கீதசாகித்ய வித்துவான் தஞ்சை பிரம்ஹஸ்ரீ சாமிநாதாச்சாரியரைக் கொண்டு அரங்கேற்றுவித்தனர். பின்பு உத்தியோகத்தினின்று நீங்கிப் பென்ஷன் பெற்று உறையூரடைந்து தனது தந்தையார் இருந்த இடத்திலேயே "பரமனையேபாடுவார் மடாலயம்" தாபித்துத் தான் எப்பொழுதும் தனது மாணவர்கட்கு அடியார் சரித்திரங்களையும் வேதாந்தவுண்மையினையும் போதித்து வந்து, சோமவாரந்தோறும் பஜனை செய்யும்படி கட்டளையிட்டனர். அப்போது சென்னையிலிருக்கும் க-வெங்கடாசலமுதலியார், கோ - கோவிந்தராஜமுதலியாரிவர்கள் தாங்கள் தாபித்துள்ள சபைக்குக் கீர்த்தனைகளும் ஒரு பெயரும் வேண்டுமெனக்கருதி என்னை உறையூருக்கு அனுப்ப அங்ஙனமே பலகீர்த்தனைகள் பாடித்தந்து "அரியரசபை" எனப்பெயரிட்டதுடன் என்னைக்கொண்டு தாமியற்றிய அமர்நீதி நாயனார் சரித்திரக் கீர்த்தனையைத் தமது மடாலயத்திலேயும், யான் இயற்றிய விருத்தகுமார பாலரான சரித்திரக் கீர்த்தனையை ஸ்ரீமான் - பெருமாள் செட்டியார் பங்களாவிலும் பிரசங்கம் செய்வித்து, பலசன்மானமும் கொடுப்பித்து ஆசீர்வதித்து அனுப்பினர். அன்றியும் வருடந்தோறும் சமயாசாரியர் நால்வர்களை தாமே செய்தமைத்த அதிவிசித்திரமான தக்கைவிமானத்தி லெழுந்தருளச் செய்து, திருநட்சத்திர மகோற்சவங்கள் நடத்திவருகையில் சாதாரண௵ ஆடி௴ சுவாதிநட்சத்திரத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிக்கு மகோற்சவம் செய்ய உத்தேசித்திருக்கையில், ஒரு வாரத்திற்குமுந்தித் தனது ஆப்தசிநேகராகிய வித்துவான், தொ-மு-நல்லசாமிபிள்ளையவர்களை யழைப்பித்துத் தாம் சிவசாம்பிராச்சியமடையவேண்டிய குறிப்பை யுணர்த்தி அவரை வெளியில் எங்கணும் போகவொட்டாது ஊரிலேயே யிருந்துகொண்டிருக்கும்படி தெரிவித்து, ஒருநாள் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கென அமைத்துள்ள விமானத்தை எதிரிலேவைத்து ஷை சுவாமிகளை எழுந்தருளச்செய்து, தாம் எதிரிலிருந்துகொண்டு தமது மனைவியையும் பௌத்திரியையும் மாணவர்களையும் அழைப்பித்து விமானத்திற்கு முன் தீபாராதனை செய்வித்துத் தான் சுகாசனத்திலிருந்து சிவோகம் பாவனை கூடிச் சிவானுபூதியினை சுவானுபவமாகக் கொண்டிருந்து தமது ஆப்தர் ஷை நல்லசாமி பிள்ளையவர்கள் முதலியோர் அருகிருக்க யாருமதிசயிக்க அடியார்கள் அரகரவெனக் குதுகலிக்க சாதாரண௵ ஆடி௴ 16௳ தசமிதிதி கிருத்திகை நட்சத்திரம் ஆதிவாரம் பகல் 12-மணிக்கு தமது சுமார் எண்பதாவது வயதில் சிவசாம்பிராஜ்ய கைவல்யமடைந்து ஆனந்த நடராஜ குஞ்சிதபாத நிழலிற் கலந்தருளினர்.

ஷை சுவாமிகள் சென்னை முதலியவிடங்களில் வசித்திருந்தபோது அவ்வவ்வமயங்களில் தம்மாணவர்களும் மற்றையன்பர்களும் வேண்டிக்கொள்ள அவர்கள் விருப்பத்திற் கிசைந்து தெள்ளிய செந்தமிழ் நடையில் சங்கீத சாஹித்தியங்கட் கேற்ப பக்திரசமதாய்ப்பாடியருளிய கீர்த்தனைகள் எண்ணில கையேட்டுப்பிரதிகளாகத் தனித்தனியே வழங்கிக்கொண்டு வருகின்றன. யாவருக்கும் எளிதிலுபயோகமாகும் பொருட்டு அவை யனைத்தையும் ஒருங்குசேர்த்து பற்பலர் விருப்பத்தின்படி அவர் திருவுருவப்படத்துடன் அச்சிட உத்தேசித்திருக்கின்றனன். அவரால் நேமிக்கப்பட்டு நடந்துவரும் பஜனைகளிற் சேர்ந்த அன்பர்களும் அவர்பால் மிக்க நட்புபாராட்டி வந்த மற்றையரும் சங்கீதத்தில் பிரியம் வாய்ந்தபக்தசிகாமணிகளும் தங்களாலியன்றவுதவிசெய்து இந்நூல் அச்சிட்டு வெளி

வருமாறு பெருமுயற்சியினை எடுத்துக்கொள்வார்களென விரும்புகின்றனன். கையொப்பஞ்செய்யப் பிரியமுள்ளவர்கள் கீழ்க்குறித்த விலாசத்திற்கெழுதிக் கொள்ளலாம்.

மதுரகவி. புதுவை-நடராஜாச்சாரியர்,
462, தங்கசாலைவீதி, சென்னை.

---

## நமது கடமைகள்.

விஸ்வகர்மன் என்னும் பத்திரிகையின் மூலமாய், குலாபிவிருத்திக் குரித்தான விஷயங்களைத் தெரிவிப்பது சென்னைச் சபையாரின் கடமை என்பதற் கிணங்க, அவர்கள் அதியுபயோகமான விஷயங்களை வெளியிட்டு வருகின்றனர். அதைக் கண்ணுறும் நாம் செய்யவேண்டியது எதுவெனச் சிந்திக்கவேண்டியது நமது கடமை.

உலகத்தில் எந்தவஸ்து அதி உன்னத பதவியை அடைகின்றதோ அதே தாழ்ந்த நிலையை அடைவதும், தாழ்ந்திருப்பது உன்னத பதவியை அடைவதும் சகஜம். முன் உன்னத பதவியிலிருந்தோம் தற்போது தாழ்ந்திருக்கின்றோம், இனி உன்னதபதவியை அடைவோம். அதற்கு இவ்வுணர்ச்சியே முதற்காரணம். ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருக்கவேண்டியது நமது கடமை. பல தோழிகளுடன் நீர்கொண்டு செல்லும் ஓர் ஸ்திரீ தன்னை மறந்து நடப்பது போல் தன் கரங்களை வீசிப் பலவார்த்தைகளாடிக்கொண்டு சென்றாலும், அவளுக்குத் தன் தலைமேலுள்ள குடத்தின்மேல் தான் ஞாபகம் உண்டு. நாம் நமது வாழ்நாட்களைக் குதூகலவாதையின் பொருட்டு செலவிட்டாலும், குலவிர்த்திக்காக பாடுபடவேண்டியது நமது கடமை. குடம் கீழேவிழுந்தால் சேடியர் நகைப்பர் என்ற எண்ணம் (வெட்கம்) அந்த ஸ்திரீக்கு இருப்பதுபோல், நாம் நமது குலாசாரத்தில் வழுவினால் பிறர் நகைப்பார் என்ற வெட்கம் நமக்கு இருக்கவேண்டியது நமது கடமை.

தாழ்ந்த வருணத்துதித்தவருந்
  தக்கோர் ஆவர் ஒழுக்கத்தால்
வீழ்ந்த ஒழுக்கத் தாரிழிவர்
  மேலாம் வருணத் துதித்திடினும்
சூழ்ந்து துணையாஞ் சிறப்பின்பஞ்
  சுரக்கு மதனா லுயிர்தனினும்
வாழ்ந்த வொழுக்க மோம்பிடுக
  வழுக்கினிடும்பை யேதருமே.

என்று ஒழுக்கத்தைக் காத்துக்கொள்ளும்படி ஒவ்வொரு சாஸ்திரமும் உரைக்கின்றது. மேலும், நாடகங்களில் ஒரு மனிதன் துலுக்கனைப்போலவும் செட்டியைப்போலவும் வேடம்பூண்டு வந்தால், அவன் நடை, உடைகளினால் மகமதியனைப்போலும், செட்டியைப்போலும் காணப்படுகின்றான். ஆகையால் நடை உடை பாவனை ஆசாரம் முக்கியம். "நான் தான் மேலான ஜாதியன்" என்று வாய்ப்பறை சாற்றுவதால் பிரயோசனமில்லை.

2. மனுநீதி சோழமகாராஜன் அரசு புரியுங்காலத்தில் அன்னவன் அரசு என்னும் கடமையை வழுவாது நடாத்திவந்தான். தனது புத்திரன் வீதிவிடங்கன் ரதம் செலுத்திப்போகையில் ஓர் பசுங்கன்று சக்கரத்தின் வாய்ப்பட்டு இறக்க



யும், அதன் தாய்ப் பசு அரண்மனையைக் கிட்டி ஆராய்ச்சி மணியை அடித்ததாயும் வாசித்திருக்கின்றோம். ஆராய்ச்சி மணி ஓசைகேட்டு அரசன்வந்து சங்கதிதெரிந்து, பசுக்கன்றைத் தனது மைந்தன் கொன்றவாறு தனது மைந்தனைத் தேர்க்காலிற் கிடத்திக்கொல்லும்படி மந்திரிக்கு உத்திரவளித்ததாயும், வீதிவிடங்கனைத் தேர்க்காலிற் கிடத்த அஞ்சி மந்திரி தன் ஆவியை விட்டதாயும், அரசன் தானே அவ்விதஞ்செய்து பின்னர் தானும் உயிர் துறக்கக் கருதியதால் இறைவன் தோன்றி பசுக்கன்று மந்திரி வீதிவிடங்கன் மூவரையும் உயிர்ப்பித்ததாயும் நாம் வாசித்திருக்கின்றோம். மநுநீதி சோழன் தன் புத்திரன் என்று பாராமல் அரசு என்னும் கடமையைச் செலுத்தினதுபோல், நம் குலத்தினர் குலாபிவிருத்திக் கிடையூறான எந்த வழிகளைச்செய்தாலும், நாட்டாண்மைக்காரரும், காரியஸ்தர்களும், பந்துக்களென்றும் சிநேகிதரென்றும் கருதாது நீதி செலுத்தவேண்டியதும், குலத்திற்குத்தக்க புகழைத்தேடுவதும் அன்னவர்களின் முக்கிய கடமை.

3. அரிச்சந்திர மகாராஜன் வீரபாகு என்னும் தோட்டிக்கு விலைப்பட்டு சந்திரமதி என்னும் தன்பாரியை வெட்டுந்தருவாயில், அன்னவனும் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு வெட்டத் துணிந்ததுமன்றி, சந்திரமதியும் தன் கணவன் சத்தியத்தினின்றும் விலகாதிருக்கத் தன்னை வெட்டும்படிக் கேட்டுக்கொண்டாள் என்பது யாவருமறிந்த உண்மை.

நம்குலத்தினர் குலவிஷயத்தில் சிறிது நாட்டம் வைத்தால் நம்முடைய வேலைக்கு எங்கே பின்னம் வந்துவிடுகின்றதோ, பிறர் எங்கே வேலை இல்லையெனக் கூறிவிடுவார்களோ என்று பின்வாங்கி நிற்பார்களாகில், பெண்ஜாதி என்ற வாஞ்சையினால் சத்தியத்தினின்று தன் புருஷன் விலகாதவண்ணம் தன்னை வெட்டும்படி அரிச்சந்திரமகாராஜனை எவ்விதம் சந்திரமதி உற்சாகப்படுத்தினளோ அவ்விதமே குலோத்தாரணஞ்செய்வதில் ஆடவர்கள் பின்வாங்காதிருக்கும்படி நம்குல ஸ்திரீகள் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது அவர்கள் கடமை.

4. பஞ்சபாண்டவர்களையும் நளமகாராஜனையும் வனவாசத்தில் விடுத்தது சூது என்றே நாம் நன்குணர்ந்திருக்கின்றோம். சூதினால் கெட்டவர்கள் அனந்தம்பேர்.

காதல்கவறாடல்கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய்—போதில்
சினையாமைவைகுந் திருநாடா செம்மை
நினையாமைபூண்டார் நெறி—யென்றிருக்க

சிலர் அமாவாசையன்று சூதாடுவது கடமை என்று காலையி லுட்கார்ந்தவர்கள் மறுநாட் காலைவரையில், பல்லும் தேய்க்காமல், ஆகாரமும் உட்கொள்ளாமல், இருக்கின்றார்கள். சகோதரர்களே! சூதாட்டத்தை நமக்குள் வைத்துக்கொள்ளவேண்டும். நம்மைச் சூதாட்டத்திற்குள் வைத்துக்கொள்ளலாகாது. அவ்விதம் வைத்துக்கொண்டால், நம் புத்திக்கெட்டாத ஓர் இடத்தில் அது நம்மைக்கொண்டுவைத்துவிடுகின்றது. ஆகவேசூதாட்டத்தை ஒழி

த்து அன்றுகுலவிஷயமான சங்கதிகளைப் பேசி அந்நாளைப் பொன்னுளாகப் போக்க வேண்டியது நமது கடமை.

5. ஆங்கிலேயர் தமது குழந்தைகளைத் தூரதேசங்களுக்கு அனுப்பி, கல்வி முதலியவைகளில் தேர்ச்சியடையும்படி செய்விக்கிறார்கள்; அவ்விதம் செய்வதினுல் தான் பிதா எந்தஸ்திதியிலிருக்கின்றானோ அதேஸ்திதியில் புத்திரனும்வந்துவிடுகின்றான். நம்மவர்களோ, குழந்தைக்கு 4. 5. வயது ஆனதும் (நம்குலத்தினருக்கு பேச்சுக்கு தரித்திரமில்லை) சிறிது பேசத்தொடங்கிவிட்டால்,"என்மகன் செல்லக்குட்டி என்னென்ன பேசுகின்றான் சுத்தியும் கையுமாயிருக்கின்றான்'' என்று, தமது குழந்தைகளை வேலையில் விடுபவர் சிலர்; ''என் தகப்பன் விண்ணுலகடையும்போது தச்சு வேலையில் என் மகனைவிடும்படி ஏவினர்'' என்று தொழிலில்விடுபவர் சிலர்; ''இவ்வூர்க் காணியாட்சி எங்களுக்குண்டு, பாட்டன் காலத்திலிருந்து கோவில் வேலை முதலானது பார்த்துவருகிறோம்'' என்று தொழிலை அபிவிர்த்தி செய்யாமல் ஊரைச்சுற்றிவருபவர் சிலர். தமது குழந்தைகளை அவ்விதமாவது கைத்தொழிலில் தேர்ச்சியடையும்படி விடுகின்றார்களா அதுவுமில்லை. இரும்புவேலையிற் பயிலும் ஒருவன் சுத்தியல் பிடிக்கத் தெரிந்ததும் வேறுபட்டரை வைத்துக்கொள்ளப் பார்க்கின்றான். மரவேலை கற்றுக்கொள்பவனுக்கு உளி பிடிக்கத் தெரிந்ததும், வேலை பூரவும் கற்றுக்கொண்டதாய் மலைத்துத் கொள்கிறான். பொன்வேலை பயில்வோன் மிஞ்சி மோதிரம் அடிக்கத் தெரிந்ததும் வேறு பட்டரை வைத்துக்கொள்ளுகின்றான். நம்மவர்களும் தொழிலை மனதோடு கற்றுக்கொடுப்பதில்லை. ''வேலையில் இன்னும் விடுவதுதானே'' என்றால், 'இனி அவன் புத்தியினால் வரவரக் கற்றுக்கொள்வான். மீன்குஞ்சுக்கு நீந்தவா கற்றுத் தரவேண்டும்' என்று வார்த்தைகளைக் கொட்டுகின்றார்கள். ஆகையினால் தான் நாம் துஞ்சிக்கிடக்கின்றோம். மற்றவர் வரவர அதியுன்னத பதவியை அடைகின்றார்கள்.

நாம் கவனிக்கவேண்டிய கடமை ஒன்றுண்டு. நம்குலச் சிறுவர்களைப் பாடசாலைகளுக் கனுப்பி கல்வி கற்றுக்கொடுக்கவேண்டும். கல்வியில் தொடர்ந்து செல்லப் பொருளில்லாத வர்களின் குழந்தைகள் கைத்தொழிலிற் பயிலுவதற்குப் பெரிய கைத்தொழிற் சாலைகளை ஏற்படுத்தி அவற்றில் நம குலத்தினரை அயம், தாரு, தாம்பிரம் முதலான உலோகங்களில், கைத்தொழில் செய்ய ஏற்படுத்தலாம். இவ்விதம் ஏற்படுத்தினால் ஏற்படுத்தினவர்களும் சுலபத்தில் ஏராளமான பொருள் சம்பாதிக்கலாம். குலச்சிறுவர்களும் கைத்தொழிலில்தேர்ச்சியடையலாம். அன்னியர் இவ்விதம் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி பொருள் தேடுவதை நாம் காணவில்லையா. அவைகளில் வேலைசெய்பவர் நம்மினத்தவரே என்பதும் நமக்குப் புலப்படவில்லையா?

5. கர்ணமகாராஜன், கொடையில் (தருமத்தில்) சிறந்தவனென்பது யாவரும்அறிந்த உண்மையே. கர்ணமகாராஜன் போர்க்களத்திலிருக்கையில் கிருஷ்ணபகவான் பிராமணவேடங்கொண்டு தியாகம் கேட்டார். போர்க்களத்தில், வேறொன்றுமில்லை என்று, தருமத்தையே கிருஷ்ணபகவானுக்குத் தத்தஞ் செய்ததாய் யாவரும் பாரதத்தில் வாசித்திருக்கின்றோம். தருமத்தினால் ஓர்பலனை அடையவேண்டுமென்ற கருத்துடன் தருமத்தை செய்துவந்தவன் தருமஞ்செய்ய வேண்டியது நமது கடமை என்று அதையே தத்தஞ் செய்தான்.

ஆகையால், குலாபிவிருத்திக் குழைப்பவர்கள் தமக்கு ஓர் கியாதி கிடைக்கவேண்டும், அதனால் பிறர் நம்மை வணங்கவேண்டும் என்ற ஓர் பயனைக்கருதி பாடுபடலாகாது. நமது கடமை பாடுபடவேண்டியது என்பதைக் கவனிக்க வேண்டியது. நாம் நமது குலத்தை விருத்திக்குக் கொண்டு வருவதில் எவ்வளவு உழைந்தாலும் அதனால் நமக்குத்தக்க புகழுண்டாகாமல் போகாது.

ஆகையினால் கனவான்களே! விஸ்வகர்மன் பத்திரிகையில் வருவதை சப்தப் பிரயோகம் செய்துவிட்டு நமது காலத்தை நமது தொழிலிற் செலுத்தினால் யாது பயனை அடைவோம்? விஸ்வகர்ம உபதேச வீரகண்டாமணியிலும் ''ஏட்டுச் சுரைக்காய் தான் என்குணத்த தானாலும் கூட்டுக் கறிசமைக்கக் கூடாதே'' என்று கூறியுள்ளது.

சர்க்கரையைப்பற்றி எழுதிய நூலை வாசித்த மாத்திரத்தில் சர்க்கரையின் சுவையை உணர்ந்தவர்களாவோமா இல்லை. அதில் கூறியவண்ணம் செய்தால் தான் சர்க்கரை உண்டாகும். அப்படிக் கிடைக்கும் சர்க்கரையை உண்டாலே சுவை அறியலாம். அதுபோல் பத்திரிகையில் கூறியவண்ணம நடக்கவேண்டியது நமது கடமை. ஸ்ரீ கு. ப. சிவ ஆச்சாரியார் அவர்கள், 6-வது பக்கத்தில் கூறியுள்ளதை நண்பர்கள கவனிப்பார்களாகவும்.

இதில் ஏதேனும் சொற்குற்றம் பொருள்குற்றமுளதாயின் அதை ஓர் புறம் அகற்றி குணத்தைக்கைக்கொண்டு குலத்தை விர்த்திசெய்யக் கேட்டுக்கொள்வது எனது கடமை.

உத்தமர்க்கு ஊழியன்

T. தங்கவேல்.





## புதிய தமிழ் அகராதி.

சென்னை யூனிவர்ஸிடியார் என்னும் சர்வகலாசங்கத்தார் தமிழ்ப் பாஷையில் புதிதாய் அகராதி யொன்று நூறாயிர ரூபாய்ச் செலவில் தயாரித்து வெளியிடத்தீர்மானித் திருக்கிறார்கள். இந்த அகராதியை உருப்படுத்திமுடிக்க அரசாங்கத்தாரால் ஓர் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப்பாண்டித்தியத்திற் சிறந்தவராகக் கொள்ளப்பட்டுள்ள பல கனவான்கள் இக்கமிட்டியில் ஸ்தானம் பெற்றுளர். இதற்குச் சேர்மன் மதுரைகாலேஜைச் சேர்ந்த ரெவரெண்ட் J. S. சான்ட்லர் என்பவர். இவ்வகராதி சம்பந்தமாய் டை துரையவர்கள் சில காலத்திற்குமுன் வெளியிட்ட விளம்பரமொன்று கீழே பிர

சுரிக்கப்பட்டிருக்கிறது. அதை வாசிக்குமிடத்து இதைப்பற்றிய விவரமெல்லாம் விளங்குதல் நிச்சயம்.

சர்வ கலாசங்கத்தின் ஆதரவும், அரசாங்கத்தின் அங்கீகாரமும் பெற்றுள்ள இவ்வகராதி பிற்காலத்தில் தமிழ்ப்பாஷைக்கு ஓர் பேராதார நூலாக ஏற்படுதல் நிச்சயம். நமது குலசம்பந்தமாய் இதில் யாதொரு பிறழ்வும் நேரிடாதபடி பாதுகாப்பதுடன், அதை யநுசரித்த விஷயங்களை யெல்லாம் திரட்டி நாம் ஷை கமிட்டியாருக்கனுப்பி அவை ஷை அகராதியிலிடம் பெறச் செய்விக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். தமிழ்ப் பண்டிதர்களாயுள்ள நமது குலக் கனவான்கள் இவ்விஷயத்தில் கவனங் காட்டவேண்டும். ஏற்கனவே, யாழ்ப்பாணத்து நியாய துரந்தரராகிய நமது நண்பர் ஸ்ரீ நடசிவமயம்-சிவக்கொழுந்தாச்சாரியாரவர்கள் இக்காரியத்திலூக்கங்காட்டி வருவதறிந்து மிகவுஞ் சந்தோஷிக்கிறோம். இவருடைய மாதிரியை மற்ற வித்வான்களும் பின்பற்றுதல் அவஸ்யமாயிருக்கிறது.

## விளம்பரம்.

இந்த அகராதியில், தமிழ்ப்பாஷையில் வழங்கும் எல்லாச் சொற்களும், அவற்றின் எழுத்துச் சேர்க்கை, உற்பத்தி, வெவ்வேறான பொருள்களுடனும், ஆராய்ச்சி செய்யப்படும்.

விஷயங்களுக்கு விரிந்த விவரங்கள் காட்டிச் சொல்வது, "என்ஸைக்லோபீடியா" போன்ற நூல்முறைக்கே உரியதாம். ஆதலால், பதப்பொருள்களையே பெரும் பான்மை விளக்குதற்குரிய, அகராதி முறைக்கு அவ்விவரங்கள் ஏற்றன ஆகா.

இவ்வகராதி சித்தப்படுத்துவதில் எங்கள் நோக்கங்கள் அடியில் வருமாறு:—

(a) தற்காலத்தில் கிடைக்கக்கூடிய நூல்கள் முதலியசாதனங்களை நன்குஆராய்ச்சி செய்து அவற்றை உபயோகித்தல்.

(b) இதுவரை கிடைக்கப் பெறாத கையெழுத்துப் பிரதிகளிற்கண்ட அருஞ்சொற்களைச் சேர்த்தல்.

(c) இதுகாறும் கவனிக்கப்படாதிருந்த பழைய உயர்தரக் காவியங்களினின்றும் பொருள்களை விளக்கிக் காட்டுதல்.

(d) தவறாகக்கண்ட பொருளமைதிகளைத் திருத்தஞ்செய்தல்.

(e) தமிழ் நாட்டாரது தற்காலப் பேச்சு வழக்கில் உள்ள புதிய பதங்களைச் சேர்த்துக்கொள்ளுதல்—என்பவைகளாம்.

மேற்கூறியவற்றைச் செய்து முடிப்பதில் தமிழ்ப் பண்டிதர் அனைவரும், தமிழ்ப்பாஷையின் அபிவிர்த்தி கருதி ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களும் ஒத்துழைத்து, இவ்வரிய பெரிய காரியத்தை நிறைவேற்றிவைக்க விரும்புகிறோம்.

இவ்வாறு உதவி வேண்டி, மதுரை, தஞ்சை, சிதம்பரம், சென்னை, யாழ்ப்பாணம்,—இந்நகரங்களிலுள்ள தமிழ்ச் சங்கங்களையும், பாளையங்கோட்டைச் சைவ சபையையும்,—தத்தம் பக்கங்களில் வழங்கும் கிழக்குறித்த விஷயங்கள் பற்றிய பதங்களை, அவற்றின் சரியான பொருள் விவரங்களுடன், சேகரித்து எங்கட்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அவ்விஷயங்களாவன:—

(1) ஜாதிகளும் அவற்றின் வெவ்வேறு உட்பிரிவுகளும்வழங்கும்விசேடபதங்கள்.

(2) குலாசாரங்கள், அவ்வவ் விடங்கட்குச் சிறப்பாகவுள்ள வழக்கங்கள்.

(3) தொழில்கள், ஆயுதவகைகள், பாத்திரங்கள் முதலியன.

(4) மருந்துவ முறைகள், மூலிகைகள் முதலியன.

(5) சங்கீத சம்பந்தமாகவும், ஏனைய சாஸ்திர சம்பந்தமாகவும் உள்ள விசேஷ பதங்கள்.

(6) மதங்களின் பல்வகை விரதாநுஷ்டானங்கள், மதக்கொள்கைகள்.

(7) கையெழுத்துப் பிரதிகளிலும் மற்ற வகைகளிலும் கண்ட அகராதியமைப்பிற்கு வேண்டிய ஏனைய சாதனங்கள்—என்பவைகளாம்.

இவற்றோடு, தமிழ் பாண்டியத்திற் சிறந்த வித்வான்கள் சிலரை, இக்கமிட்டியின் "கௌரவ—வித்வத் அங்கத்தவர்" ஆகத் தேர்ந்தெடுத்து, உரிய காலங்களில் அவர்களுடைய ஆலோசனையைக்கேட்டுக்கொள்ளவும்தீர்மானமாயிருக்கிறது.

இவ்வண்ணமாக, வின்ஸ்லோ, ராட்லர், போப், கதிரைவேற்பிள்ளை முதலிய பண்டிதர்களால் முன்னமே செய்யப்பட்டுள்ள பெரிய காரியங்களை மேலுந்தொடர்ந்து நடத்திச் சிறப்பிப்பதில், தமிழ் நாட்டார் எல்லாரும் தங்களுக்குப் பாத்தியமுள்ளதாகவே எண்ணி வேண்டிய உதவி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

J. S. CHANDLER.



## ஒளிவளர் விளக்கு.

நமது சபா மண்டபத்திஸ் விஸ்வப்பிரம்ம வித்தியாசாலை யென்பதொன்று உபாத்தியாயர் மதுரகவி. புதுவை. நடராஜ ஆச்சாரியாரவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வித்தியா சாலையில் தமிழ் இலக்கண இலக்கிய நூற்களும், பன்னிரு திருமுறைகளும், கீர்த்தன முதலியவைகளும் போதிக்கப்படுகின்றன. ஷை வித்தியாசாலையிற் கல்விபயின்று வருகின்ற நமது குலச்சிறுவர்களிற் சிலர் புராணப் பிரசங்கஞ் செய்யவும், உபந்நியாசங்கள் செய்யவுஞ் சக்தியுள்ளவர்களா யிருத்தல் நமது குலத்தாரெல்லாம் குதூகலிக்கச் செய்யத்தக்க விசேஷமேயாகும்.

* *
*

நமது வாசகசாலை நாளுக்கு நாள் அதிகமாய்க் குல ஜனாதரவைப் பெற்று வளர்தலறிய நண்பர்கள் சந்தோஷமுறுவார்களென்பதிற் சந்தேகமில்லை. இப்போது, சுதேசமித்திரன், திராவிடாபிமானி, விஸ்வப்பிரம்ம விருத்தா, விவேக போதினி, தெய்வக்ஞ மாலிகா, ஹிதகாரிணி, கலைமகள், விவேகபாநு, பிரஜாநுகூலன், பிரபோதினி முதலிய பத்திரிகைகள் வந்துகொண்டிருக்கின்றன. பல பத்திரிகைகளை வாசிக்குமுகத்தால் நம்மவர்களுக்குப் படிப்பிற் பிரியமுண்டாதலும், உலகப்போக் குணர்ச்சி யுண்டாதலும், நாகரிக முறைகள் தெரிதலுஞ் சாத்தியமாதலால், வாசக சாலையால் குலாபிவிருத்திக்குச் சாதகமுண்டாவது சத்தியம். பல பேர் குலாபிமானிகள் ஓரிடத்தில் இனை

முன்னேறுவதற்கும் இதநுகூலமாயிருக்கிறது. ஆதலால், இத்தகைய வாசகசாலைகளைப் பெரும்பட்டணங்க ளொவ்வொன்றிலும் நம்மினத்தவருடைய உபயோகத்திற்காக ஸ்தாபித்தல் நன்றென்பது கண்டு குலாபிமானிகள் இவ்வழியில் முயற்சிக்க வேண்டுகிறோம்.

* *
*

நமது புத்தக சாலையில் இப்போது சுமார் நூற்றிருபத்தைந்து புத்தகங்களிருக்கின்றன. இவற்றிற் பெரும்பான்மையானவை குலோபகாரிகளால் கொடுத்தருளப்பட்டவை. புனாநகரத்து காளிகா பிரசாத அச்சுக்கூடத் தலைவரும், விஸ்வப்பிரம்ம விருத்தாவென்னும் மாதாந்த மகாராஷ்டிர பத்திரிகையி னாசிரியரும், மகா பண்டிதருமாகிய ஸ்ரீ பாலசாஸ்திரி ராவாஜி சாஸ்திரியவர்களால் 24 மகாராஷ்டிர புத்தகங்கள் கொடுக்கப்பட்டன. ஸ்ரீ கொளத்தூர் கன்னியப்ப ஆச்சாரியாரவர்களும் ஸ்ரீ காயிரம்பேடு திருவேங்கட ஆச்சாரியாரவர்களுஞ் சில புத்தகங்கள் கொடுத்திருக்கிறார்கள். இவையெல்லாவற்றின் ஜாபிதா கூடிய சீக்கிரத்தில் வெளியிடப்படும். அதற்குள் மற்ற கனவான்களும் தங்கள் தங்களா லியன்றமட்டும் இந்த சகாயஞ் செய்வார்களென்று வேண்டிக் கொள்ளப்படுகிறது.

* *
*

வாரந்தவறாது சென்ற நாலைந்து மாதங்களாக நமது சபாமண்டபத்தில் குலசம்பந்தமான விஷயங்களைப் பற்றியாவது, குல பண்டிதர்களாலாவது உபந்நியாசங்களும் பிரசங்கங்களும் நடைபெற்று வருதல் எல்லோரு மறிந்தவிஷயமே. வாரத்திற்கு வாரம் குலஜனக்கூட்டம் அதிகரித்து வருதல் உற்சாகத்திற் கிடமாயிருக்கின்றது. குலாபிமான வளர்ச்சிக்கு இஃதோர் குறியென்பதை யாவரே ஒப்புக்கொள்ள மாட்டார்கள்? நமது சபாமண்டபம் சென்னையின் மத்தியஸ்தானத்திலிருப்பது ஓர் விசேஷலாபமெனவேண்டும். மூலஸ்தம்ப உபந்நியாசங்கள் இதுவரையி லிரண்டு நடந்திருக்கின்றன. இனி, இவை தொடர்ச்சியாய் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சென்னை வாசிகளே யல்லாமல், வெளியூர்களி லிருந்து சென்னைக்கு விஜயஞ்செய்யுங் குலமணிகளும் இவற்றின் பலன்களை யடைந்துவருதல் கண்கூடாக் கண்ட உண்மையாகும். மேல், முக்கியோபந்நியாசங்களெல்லாம் நமது பத்திரிகையிற் பிரசுரிக்கப்படுவதால் பத்திரிகாவாசகர்களி லொவ்வொருவரும் அவற்றின் பயன்பெறுத லொருதலையன்றோ?

* *
*

நமது சபைக்கெனத் தங்கசாலை வீதியிலோர் தனிமண்டப மேற்பட்டிருக்கும் விசேஷத்தால் நாம் வெளியூரன்பர்கள் பலரை அடிக்கடி காணும்பாக்கியம் பெற்றுள்ளோம். இதனால், உள்ளூரார்க்கும் வெளியூர் வாசிகளுக்கும் பரஸ்பர அந்நியோன்யம் வளர்தற்கு ஹேதுவுண்டாயிருக்கிறது. தமிழ்நாட்டு வாசிகளேயல்லாமல், ஆந்திரநாடு மகாராஷ்டிரநாடு முதலியவற்றி னின்றுங்கூட குலாபிமானிகள் நமது சபைக்கு விஜயஞ்செய்கிறார்கள். சென்ற மாதத்தில் மத்திய மாகாணத்து (Central Provinces) அமராவதி யென்னுமூரிலிருந்து ஸ்ரீ **A. B.** சதன் என்னுமொரு விஸ்வப்பிராம்மண கனவான் வந்திருந்தார். தம்மூர் விசேஷங்கள் பலவற்றைப் பற்றிக் கூறியபிறகு அவர் "நான் தங்களூர் விஸ்வப்பிராம்மண சகோதரர்களுக்கு முக்கியமாய்த் தெரிவிக்க வேண்டியதொன்றிருக்கிறது. அதாவது, ஜாதியுயர்வு தாழ்வுக் கொள்கைகளைப் பாராட்டி, அவற்றிலேயே மனஞ்செலுத்திக் கிடப்பது கூடாதென்பதே! நம்மவர்கள் கல்வியிலுங் கைத்தொழில்களிலுஞ் சிறப்படைவார்களானால், மற்ற ஜாதியாருடைய மதிப்பிற்குப் பாத்திரராவார்களென்பதில் ஒரு சிறிதுஞ் சந்தேகங் கிடையாது. கைத்தொழிலோ கல்வித்துணையில்லாமல் விருத்தியாகாது, பிரகாசமடையாது. ஆதலால், கர்மகாரர்களொவ்வொருவருக்கும் கல்விபல மிருக்கவேண்டும். அந்த பலமில்லாததினால்தான் நமது கைத்தொழில்கள் கனக்குறைவடைந்துவிட்டன. நம்மையும் மற்றோர் அலட்சியஞ் செய்யலானார்கள். ஆதலால், நம்மினத்தவர்கள் தமது கவனத்தை முதலிற் கல்வியிற் செலுத்துவார்களாக. உலகத்தாருடைய மதிப்பை இவர்கள் அவ்வழியா யடையலாமே யொழிய மற்றொரு மார்க்கத்தா லடையமுடியாது. குல ஏற்றத்தாழ்வு வாதம் குலக்கேட்டிற்கே காரணமாகுமல்லாமல், யாதொரு நன்மையையு முண்டாக்கவே மாட்டாதென்பதை நன்றாயறிந்து, அதிலிருக்கும் நாட்டத்தைப் பெயர்த்துக் கல்வியில் வைப்பார்களாகில் வெகு சீக்கிரமே விருத்தியடைவார்கள். இது சத்தியம், சத்தியம், முக்காலுஞ் சத்தியம். இந்த சத்தியத்தைக் குல ஜனங்கள் ஒவ்வொருவரும் அறியும்படி அறிக்கை செய்யுங்கள்" என்று சொன்னார். இவ்வாக்கியங்களின் உண்மையை மறுக்கக் கூடியவர்கள் யாவரே! இதே உண்மையை நாமும் பலதரம் போதித்திருக்கின்றோம். என்றாலும், இதை அடிக்கடி நம்மவர்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவருதல் நனிவேண்டப் பட்டிருக்கிறது.

* *
*

நமது பத்திரிகையைப் பற்றிய நல்லபிப்பிராயங்கள் பல கனவான்களிட மிருந்து வந்துகொண்டேயிருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் தனித்தனி யெழுதி எமது வந்தனங்களைத் தெரிவிக்கக் கூடாமைக்காகப் பெரிதும் வருந்தி, இதன்மூலமாய் அவர்கள் எமது வந்தனங்களை யேற்றுக் கொள்வார்களென்று வேண்டுகிறோம். பத்திரிகை முன்னிலு மிப்போது அதிக பக்கங்கள் கொண்டு விளங்குதல் வாசகர்களுடைய கவனத்திற் படாமற் போகாது. விஷயங்களும் பல பாகுபாடுடையனவாய் படிக்கப் படிக்கப் பரவச முண்டுபண்ணிப் பலன்கள் பெரிதுமளிக்கக் கூடியனவாயமைக்கப்பட்டுள. இனி, வித்வசிரோமணிகளுடைய வியாசங்களோடு, சிலாசாஸனங்கள், பௌருஷேய குலதிலகர்கள், ஆசாராநுஷ்டானங்கள், ஆரோக்ய போதம், விவசாய விளக்கம், தொழிற்றுறைகள்,

பத்திரிகா வர்த்தமானம், மற்றவர் மாட்சி, விசேஷக் குறிப்புகள், கதாமஞ்சரி, அதிமதுரம் முதலிய பல்வேறு தலைப்புகளின் கீழ் அருமையான பலவிஷயங்களெழுதப்பட்டு வருமென்பதையறிய நமது வாசகர்கள் நனிமகிழ்வார்களென்றே நம்புகிறோம்.

* * *

சென்ற மூன்று வருஷங்களாகச் சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார் தீபாவளி காலத்தில் ஓர் பொதுத் தண்டல் நடத்தி வருவதை அன்பர்களறிவார்கள். முதலிரண்டு வருஷங்களில் வசூலான தொகை ரூபா 203-7-5. இந்தப்பணம் மதராஸ் ஸிடி கொவாபரேடிவ் பாங்கியில் வைக்கப்பட்டு விருத்தியாய்க் கொண்டுவருகிறது. இத்தண்டல் தமிழ்நாடு முழுவதிலும் நடத்தப்படுவதால் தமிழ்நாட்டு வாசிகளாயுள்ள பௌருஷேயர்களெல்லோருக்கும் உபயோகப் படும்படியான மாதிரியானதோர் காரியத்தில் இந்த வசூலை உபயோகிக்க வேண்டுமென்பது சபையார் கருத்து. சமஸ்கிருத வித்யா சகாயம், ஆங்கிலக் கல்விக்குதவி, கான்பரன்ஸ் கூட்டுதல், சுற்றுப்பிரயாண உபந்நியாசகர்கள் நியமனம், பொதுஜன மண்டப நிர்மாண முதலியவாய்க் கவனத்திற்குரிய காரியங்கள் பல விருக்கின்றன. கிடைத்துள்ள பணமோ எதற்கும் போதாததாயிருக்கிறது. அதைச் சீக்கிரம் விர்த்திசெய்து உபயோகத்திற்குக் கொண்டுவந்து குலாநுகூலஞ் செய்யவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாயிருக்கிறது. பொருளிலார்க் கிவ்வுலக மில்லையென்பது எல்லோருமறிந்திருக்கும் உண்மை. பொருள் எவ்வளவதிகமாய்க் கிடைக்கிறதோ அவ்வளவு சீக்கிரமாகப் பொதுக்காரியங்கள் ஈடேறுமென்பதை யுணர்ந்து நம்மவர்களுதவிபுரியக் கோருகிறோம். இவ்வருஷத் தண்டல் வெளியூர்களிற் பல விடங்களிலிருந்து இன்னுங் கைக்கு வரவில்லை. அரக்கோணம், திருச்சிராப்பள்ளி, மாயவரம் இவ்விடங்களிலிருந்துதான் தண்டல்கள் கிடைத்திருக்கின்றன. மற்றையூரார்கள் தம்மூர்த் தண்டல்களைத் தாமதமின்றி அனுப்பியருள்வார்களென்று பிரார்த்திக்கிறோம். வசூல்தொகைகளும், உதவிபுரிந்த உத்தமர் திருநாமங்களும், ரூபா ஒன்றுமதிகமு மளித்தவர் ஜாபிதாவும் பிறகு வெளியிடப்படும்.

---

## பாபட்லா கான்பரன்ஸ்.

கிருஷ்ணா குண்டூர் மண்டல விஸ்வப்பிராம்மண ஏழாவது மகாஜனக்கூட்டம் இவ்வருஷம் டிசம்பர்மீ கடைசியில் கிரிஸ்ட்மஸ் விடுமுறையில் பாபட்லா என்னுமிடத்திற் கூடுவதாக ஏற்பாடாய்விட்டது. பாபட்லா என்னுமூர் மதராஸ் சதான்மாராட்டா இருப்புப்பாதையின் வடகீழ்க் கிளையில் சென்னைக்கு வடக்கே 222-வது மைலில் நெல்லூர், பிட்ரகுண்டா, ஒங்கோல் என்னுமூர்களுக்கு அப்பாலும், பெஜவாடாவுக்கு 46 மைலுக்கு இப்பாலுமிருக்கிறது. இதற்குச் சென்னையிலிருந்து மூன்றுவதுவகுப்பு சார்ஜ் ரூபா 2-14-3, இன்டர்மிடியேட் என்னும் மத்தியவகுப்புக்கு ரூபா 5-3-0. சென்னையிலிருந்து பாபட்லா சுமார் 9-மணிநேரப் பிரயாணமுடையது. இதுவரையில் ஷை கான்பரன்ஸ் நடைபெற்ற இடங்களிற் பலவற்றிற்கு இது சமீபமாயிருப்பதினால், தென்னாட்டிலிருந்து ஷை மகாநாட்டிற்கு நமது குலச்சகோதரர்கள் செல்வதற்குத் தூண்டுதல் அதிகமாயிருக்குமென்றே நம்புகிறோம். ஆதலால், சென்ற இரண்டு கான்பரன்ஸ்களிற் காணப்பட்ட தமிழர்களினும் அதிகமானபேர் பாபட்லா கான்பரன்ஸிற் காணப்படுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அங்கு செல்வோர் யாதொருவித அசௌகரியமுந் தோன்றப்பெறாதபடி சகலவிதமான சௌகரியங்களும் ஒவ்வொருவருக்கும் ஷை கான்பரன்ஸ் கமிட்டியாரால் அமைக்கப்படுகின்றன. வாலன்டியர்களென்னும் உபசாரகர்த்தாக்கள் ரயில்வே ஸ்டேஷனிலேயே ஒவ்வொருவரையும் வரவேற்று அவரவர்களுடைய மூட்டையாதிகளைத் தாமேயிறக்கிச் சுமந்தோ, கான்பரன்ஸ் கமிட்டியாராலமைக்கப்பட்டிருக்கும் வண்டிகளிலேற்றியோ அவ்வவற்றிற்குரிய இடங்களிற் சேர்ப்பார்கள். ஒவ்வொருவருக்கும் தக்கவிடுதிகளமைப்பார்கள். போஜனத்திற்கு வேண்டிய சாமக்கிரியங்களையும் பாத்திரங்களையுமளிப்பார்கள். பிரத்தியேகசமையல் விரும்பாதவர்களுக்குப் பக்ஷணங்கள், போஜன முதலியவற்றை வேளைதவறாதளித்துப் போஷிப்பார்கள். வேளைக்கெட்டுதரம் விசாரிப்பார்கள். எவருக்கேனும் எள்ளள வசௌகரியமேனும் ஏற்படாமலேந்தித்திரிவார்கள். ஆதலால், யாதொரு கவலையுங் கொள்ளாமல் நமது குலச்சகோதரர்கள் தென்னாட்டிலிருந்து பெருந்திரளாகச் சென்று ஷை கான்பரன்ஸ் பிரதாபத்தையும், நமது ஆந்திரசகோதரர்களின் அன்னியோன்ய வாத்ஸல்ய குணாதிசயங்களையும், அவர்கள் கல்வியறிவொழுக்கங்களாதியவற்றையுங் கண்ணாரக் கண்டுவருவார்களென்று பெரிதும் விரும்புகிறோம். இவர்கள் தமது கைத்தொழில் வஸ்துக்களையு முடன்கொண்டு சென்று அங்கு நடக்குங்காக்ஷியிற் பிரதர்சனஞ் செய்வித்துப் பரிசுபெறுவார்களென்றும் கோருகிறோம்.

ஷை மகாநாட்டிற் செய்யப்படுந் தீர்மானங்களை யொட்டிப் பேசவாவது, வியாசங்கள் தயாரித்து வாசிக்கவாவது விரும்புவோர்க்குச் சில குறிப்புகள் தெரிவிக்கவேண்டியது அவஸ்யமா யிருக்கிறது. கான்பரன்ஸ் நடவடிக்கைகள் முழுவதும் ஆந்திர பாஷையிலேயே யமைந்திருப்பதால் உபந்நியசிக்கவும் வியாசங்கள் வாசிக்கவும் விரும்புவோர் அவற்றை ஆந்திர பாஷையிலமைத்தலே சிலாக்யம். நேரே செல்ல ஏலாதவர்கள் தமது வியாசத்தைத் தபாலிலனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு வியாசமும் ஒவ்வொரு தனி விஷயத்தைப் பற்றியதா யிருக்கவேண்டியது அத்தியாவஸ்யமா யிருக்கிறது. பல விஷயங்களைப்பற்றி ஓரே வியாசமாயெழுதினால் அஃது உபயோகப்படவே மாட்டாது. ஏனென்றால், தனித்தனியாக ஒவ்வொரு தீர்மானம் அம்மகாநாட்டிற் செய்யப்படு

கிறது. அந்தந்த தீர்மான சம்பந்தமாய் அதிலடங்கிய விஷயத்தை யநுசரித்துச் சொல்வது முறையாகும். அதற்குப் புறம்பான விஷயத்தைப் பற்றிக் கூறுவது அநுசிதமே யென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆனால், ஒருவரே பலவிஷயங்களைப்பற்றி வியாசங்க ளெழுதுவதற்கு ஆக்ஷேப மொன்றுமில்லை; அவ்வியாசங்கள் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியுந் தனித்தனியா யெழுதப் பட்டிருக்க வேண்டும்.

ஷை கான்பரன்சில் பேசப்படும் விஷயங்கள் சில சுஜாதிச் சிறுவர்களில் ஒவ்வொருவருக்கும் 12-வயது வரையிலுமாவது கட்டாயமாய்க் கல்வி கற்பிக்கவேண்டும்; கல்வியில் தேர்ச்சி யடைவோரை உயர்தரப் பயிற்சிகளில் உய்க்கவேண்டும்; இங்கிலீஷ் படிப்பு அத்தியாவஸ்யமா யிருக்கிறதினால் அதில் நம்மவர்கள் விருத்தி பெறச் செய்யவேண்டும்; பாலிகைகளுக்கு ஆரோக்கிய சாஸ்திரம், குடும்ப நிர்வாகபோத முதலியவற்றைக் கற்பிக்கவேண்டும்; 10-வயதுக் குட்பட்ட பாலிகைகளுக்கும், 18-வயதுக் குட்பட்ட பாலர்களுக்கும் விவாகஞ் செய்விக்கலாகாது; கன்யாசுல்கம் வரசுல்கம் வாங்கக்கூடாது; அனுவஸ்ய விபரீத செலவுகளை விவாககாலங்களில் விலக்கவேண்டும்; சுஜாதிப் பௌரோகிதர்களிடமின்றி ஆருஷேயர்களிட மொருபோதுஞ் சுபாசுப காரியங்களைச் செய்து கொள்ளலாகாது—முதலிய.

---

## மதிப்புரை.

சாட்சிநூல்:—இலங்கை சுப்பிரீங்கோர்ட்டு நியாயதுரந்தரரும், தமிழ்ப்பாஷா வல்லவரும்; பெருங் குலாபிமானியுமாகிய யாழ்ப்பாணத்து வண்ணை நகர் ஸ்ரீ நமசிவாயம் — சிவக்கொழுந்து ஆச்சாரியாரவர்களால் இயற்றப்பட்ட அத்தாட்சிப் பிரமாணசூத்திரம் என்னும் சாட்சி நூல் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. தமிழறிந்தவர்களுக் கெல்லாம் சாட்சி சட்டவிதிகளை நன்கு விளக்குவதில் இந்நூல் மிகவுமுபயோகப்படு மென்பதிற் சந்தேகமில்லை. இங்கிலீஷ்ப் பாஷையிலுள்ள அத்தாட்சிப் பிரமாணங்களை யெல்லாம் தமிழ்ச் சூத்திரரூபமாயாக்கிச் சொல்லமைதி பொருளமைதி யாதியவற்றுடன் இச்சாட்சிநூல் செய்தமைத்த இவ்வாசிரியருடைய சட்டநூலாராய்ச்சியும் தமிழ்ச் செய்யுள் செவ் வன்மையும் ஆச்சரியகர மானவையா யிருக்கின்றன. இந்நூலில், ருஜு, ருஜுப்படுத்தவேண்டாதவிஷயம், வாய்மொழிச்சாட்சி, சாஸனச்சாட்சி, ருஜுச்சுமை, மறுக்கவொட்டாமை, சாட்சியாராய்ச்சிமுதலிய பலவிஷயங்கள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. அரும்பத விளக்கமுஞ் சேர்க்கப்பட்டிருக்கிறபடியால், இந்நூல் அனைவருக்கும் உபயோகமாதல் நிச்சயம். சூத்திரரூபமாயிருப்பதினால் ஞாபகத்திலமைதல் வெகுசுலபம். இதுபற்றியே யன்றோ பூர்வ சோதிடநூல்களாதியவை செய்யுட்களாகவே எழுதப்பட்டன?

---



OFFICE OF THE REGISTRAR ... 1913 MADRAS

## ஆரோக்கிய போதம்.

**தித்திப்பின் தீங்கு:**—தித்திப்புள்ள போஜனமாவது பலகாரங்களாவது அதிகமாய்ப் புசிப்பதினால் மதுமூத்திர ரோக முண்டாவதோடு பற்களுக்கும் பலவீனஞ் சம்பவிக்கிறது. ஒரு பாத்திரத்தில் நீருற்றிச் சர்க்கரையிட்டு, அதில் மனிதர் பற்களைப்போட்டு ஒருமாதங் கழித்து எடுத்தால் அவை வெகுலேசாக நசுங்குண்டு போகும். இப்போது மதுமூத்திரப் பிராது எங்கெங்குங்கேட்கப்பட்டு வருவதினால், ஒவ்வொருவரும் கூடியவரையில் தித்திப்பை நீக்க முயலுதல் நன்று. பாலப்பருவ முதற்கொண்டே இதனவசிய மில்லாது உணவுகொண்டு பழக்கி வந்தால் தித்திப்பை வேண்டாமலே காலங்கழித்தல் வெகு சுலபமாயிருக்கும்.

**போதுமான போஜனம்:**-ஒவ்வொருவரும் சரியளவு ஆகாரம் சத்துள்ளதாய்க் கொள்ளவேண்டும். இந்தியர்கள் தொன்றுதொட்டே ஆகாரத்தில் அதிக லக்ஷியம் வையாதவர்களாயிருந்து வருகின்றனர். சத்தான உணவைச் சரியளவு கொண்டுவரும் தேசத்தார் புத்தி நுட்பமும் தைரிய சௌரியமாதிகளுங் கொண்டு பிரகாசிக்கிறார்கள். இவர்களில் முக்கியமாய்ப் பிரிட்டிஷார், ஜர்மானியர், அமெரிக்கர், பிரான்சுக்காரர், ஜப்பானியர்களைச் சொல்லலாம். மேல்நாட்டில் சிறப்பு குன்றி மற்ற தேசத்தாருடைய கவனத்தை யெட்டாதிருக்கும் ஸ்பானியர், இத்தாலியர் முதலியவர்கள் மேற்கூறிய தேசத்தார்களைவிட குறைவான ஆகாரங் கொள்கின்றவர்களாம். இந்தியாவுக் குள்ளேயே பாஞ்சாலம், வங்காளம் முதலான வடநாட்டு வாசிகள், சென்னை மாகாண வாசிகளைவிட வீரதீர வித்தியா ஞானாதிகளில் விசேஷப்பட்டு விளங்குவதற்குக் காரணம், அவர்கள் கொள்ளும் கோதுமைமுதலிய சத்துள்ள ஆகாரமேயென வேண்டும். ஏதோவொன்றிட்டு வயிற்றை நிரப்பிப் பளுவாக்குவதில் பயனில்லை. சத்துள்ள வஸ்துக்களாகிய கோதுமை, பால், பயறு வகைகள், கிழங்குகள் முத[illegible]மான அளவுகொள்வதில் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

**களிம்பினால் வந்த கஷ்டம்:**-இராங்கூனிலுள்ள பீரேசர்வீதி, 75-நெம்பர் வீட்டில் ஜகநாத் என்பவன் வைத்துள்ள பலகாரக் கடையில் கௌட்டான் போலீசைச் சேர்ந்த ஒரு கான்ஸ்டேபில் பலகாரம் வாங்கிப்போய் மற்றக் கான்ஸ்டேபில்களுக்கும் அவர்களுடைய மனைவியர்கட்கும் கொடுத்தான். அப்பலகாரத்தை 11-பேர் தின்றனர். தின்றவுடன் அவர்களுக்கு வாந்தியும்பேதியு முண்டாயின; அவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் பட்டுக் குணமடைந்தனர். அக்கடையில் பலகாரம் வைத்திருந்த தட்டுக்களைப் பரிசோதித்தபோது அவை களிம்புமயமா யிருந்தன. இதனாலேதான் இவ்வளவு தீங்கும் நேரிட்டது. ஆதலால், ஒவ்வொரு குடும்பத்தாரும் தாங்கள் கையாளும் பாத்திரங்களில் களிம்பு சேராமற் காக்கவேண்டும். பலர் அவற்றை வெளியிலே மட்டும் துலக்கி விட்டுவிடுகிறார்கள். இது கூடாது. உள்ளுறக்கழுவுவதில் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இந்த போதனையை ஸ்திரீகளுக்கு முக்கியமாய்ச் செய்யவேண்டியது அத்தியாவஸ்யமாயிருக்கிறது.

---

## மற்றவர் மாட்சி.

**சௌராஷ்டிரர்கள்:**-இச்சாதியினர் வியாபார வல்லவர்களாய்ச் செல்வத்தில் நாளும் விருத்திபெற்றுவருதல் எல்லோருமறிந்த விஷயமேயாகும். இவர்கள் வரவாக் கல்வியிலும் அதிகமதிகமாய்க் கவனஞ் செலுத்தி வருகிறார்கள். சுதேச பாஷைகளிற் பாண்டித்திய முடையவர்களேயல்லாமல் இங்கிலீஷில், பி. ஏ முதலிய பரீக்ஷைகளில் தேரியவர்களும் இவர்களில் இப்போது பலரிருக்கிறார்க ளென்பது சந்தோஷத்திற் கிடமாயிருக்கிறது. கல்வியில் கீர்த்திபெற வேண்டும், அதனால் தமது சாதியார் சிறப்ப

டைய வேண்டுமென்னுங் கொள்கை பற்றி, இவர்கள் மேல்நாடுகளுக்கும் தமது சிறுவரையனுப்புவா ராயினர். இப்படிச் சென்றவர்களில் மூவர் இப்போது இங்கிலாந்தி லிருக்கிறார்கள். ஒருவர், N. கிருஷ்ணமூர்த்தி யென்பவர், சேலத்திலிருந்து மூன்று வருஷங்களுக்கு முன் இஞ்சினீரிங் என்னும் யாந்திரிக வித்தையைக் கற்றுவரச் சென்றார். இவர் இவ்வருஷத்திலேயே திரும்பிவருவா ரெனப்படுகிறது. மற்ற இருவர்களில், சீதாராமய்ய ரென்றொருவர் கவர்ன்மெண்ட் ஸ்காலர்ஷிப் என்னும் உபகாரச் சம்பளம்பெற்று நெசவுத்தொழில் கற்றுவருகிறார். மூன்றாமவராகிய K. L. வெங்கடாமணன் என்பவர் ஐ. ஸி. எஸ் என்னும் கலெக்டர் பரீக்ஷைக்காகப் போயிருக்கிறார். இவர்களால் சௌராஷ்டிர குலச்சிறப்பு அதிகப்படுமென்பதை யாவரே அங்கீகரிக்கமாட்டார்?

இச்சந்தர்ப்பத்தில், நாம் எவ்வளவி லிருக்கிறோமென்பதை ஞாபகப்படுத்திப் பார்ப்பது நன்று. ஆங்கிலக்கல்வி அவஸியமா அல்லவா என்னும் விசாரணையிலேயே சிலர் ஆவிதுறந்து வருகின்றனர். அதினால் அகம்பாவ முண்டாகிறதேயொழிய அநுகூல மொன்றுமில்லை யெனக்கூறி, ஆங்கிலக்கல்வி அனாவசியமே யொழிய அவஸ்யமல்லவென்று வாதித்து வருகின்றனர் வாய்மையறியாத் தீமையாளர்கள். நாமெல்லாம் எழுத்து வாசனையே யின்னதென் றறியாமல் வளர்ந்து நரைத்து அநுபவசாலிகளென்று அட்டகாசங்காட்டி, ஊமைக்கு உளறுவாயன் உற்பாதபிண்ட மென்பதுபோல் உயிர்வாழ்ந்து வருகிறோமே, நமது சிறுவர்களைப் படிக்கவைத்தால் அவர்கள் அந்தகாரம் நீங்கி அறிவுவிளக்கமுற்று நமது பேய்மயக்கங்களை யெல்லாம் நாசப்படுத்தித் தலைகவிழச் செய்துவிடுவார்களே, சீச்சீ, ‘மகன் செத்தாலுஞ் சாகட்டும் மாட்டுப்பெண் [மருமகள்] கொட்டமடங்கினாற் போது’மென்றாற்போல், நமது சந்ததியார் கல்வியில்லாமல் கடைப்பட்டழிந்தாலுமழியட்டும் எங்கள்மூடத்தனத்திற்கு மோசம் வாரதிருந்தாற் போதுமென்னும் நீசபுத்தியுடையாராய் நாசமுண்டுபண்ணுகின்றனர். கல்விச் சிறப்பையும், அதினருமை பெருமைகளையு மறிந்தவர்கள் தமது சிறுவர்களுக்கு அதையூட்டுதற் கில்லாது தௌர்ப்பாக்கியத்தால் தவித்தலைகின்றனர். இவர்களுக்குதவிசெய்வோ ரெவரையுங் காண்கிலோம். என் உதவவேண்டுமென் றெழும்பிக் கேட்போர் எத்தனையோ பேரிருக்கிறார்கள். இந்த ஸ்திதியிலிருக்கும் நாம் எப்படி யீடேறப்போகிறோம்!

---

**பேரிச்செட்டிமார்:**—சென்ற மகா விஜயதசமியன்று வைசியகுல பேரிச்செட்டிமார் சங்கத்தாரால் வைசியகுலச் சிறுவர்களுக்கென்று வைசியகுல பேரிச்செட்டிமார் பாடசாலையென்பதொன்று சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூலில் ஸ்தாபிக்கப் பட்டதென்றும், ௸ சங்கத்தாரால் அதினுட்பிரிவாக ஸ்ரீகச்சபேஸ்வரர் அக்கிராரம் ஸ்ரீதர்மசிவாசாரியார் மடத்தில் உபந்நியாச வகுப்பு ஒன்று எற்பட்டதாகவு மறிந்து மிகவுஞ் சந்தோஷிக்கிறோம். பேரிச்செட்டிமார்கள் சம்பத்தில் மிக்கவர்கள். அவர்களிற் கல்வியாளர்களு மநேகரிருக்கின்றார்கள். என்றாலும், கல்வியபிவிருத்திக்காக அவர்கள் உழைத்துவருகிறார்களென்று தெரிகிறது. நமக்குள்ள குறைகளோ அனந்தம். ஆனதுபற்றி, நாம் மற்றவர்க ளெல்லோரிலும் அதிகமாய்ப் பலதுறைகளிலும் உழைக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். அப்படி இடைவிடா துழைத்தாலும் அவர்களை எட்டிப்பிடித்தல் கட்ட சாத்தியமாகும். உழைப்பென்னத் தக்கதொன்றுங் கைக்கொள்ளாமல், உறக்கம் பிடித்துக்கொண்டும், உளறி வழிந்துகொண்டும், ஊறுசெய்துகொண்டுமிருப்போமானால்உயர்வடைதல்கூடுமோ?

**காயஸ்தர் கல்வி:**—அலகாபாத் வாசியாகிய மகாதேவ பிரஸாத் என்பவருடைய இளைய சகோதரியார் சென்ற ஆகஸ்ட்டுமீ இறந்துபோனார். இந்த அம்மாள் தமது ஐந்துலக்ஷ



ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் முழுவதையும் தருமத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். எவ்வித தருமம்? காயஸ்த வகுப்பைச்சேர்ந்த ஏழைப்பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதாகிய தருமத்தில் ௸ சொத்து உபயோகிக்கப்பட வேண்டுமென்று உயில் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு சிறுபாகம் தமதூர்ச் சிவன்கோயிலுக் களிக்கப்படவேண்டுமென்று குறிப்பிடப்பட் டிருக்கின்றது. காயஸ்த வகுப்பார் வட இந்தியாவில் மிகவுஞ் சிறப்புற்றிருக்கிறவர்கள். இவர்களில் ஸ்திரீகளும் கல்வியின் விசேஷத்தைச் செவ்வையா யறிந்திருக்கிறார்க ளென்பதற்கு ௸ நன்கொடையே நல்ல சாக்ஷியாகும். இந்தப் புண்ணியவதியைப்போல் அக்குலத்தாருடைய வித்தியாபி விருத்திக்குத் துணைசெய்தோரும், செய்வோரும் அநேகருண்டு. ஆதலினால், காயஸ்தர்கள் கடலுலக முழுவதும் கனம்பெற்று வாழும் நிலைமையிலிருக்கிறார்கள். நம்மவர்களுடைய கல்விக்கு யார் உதவப்போகிறார்கள்? லக்ஷக்கணக்காகக் கொடுக்கக்கூடியவர்கள் நமது ஜாதியிலில்லை யென்றாலும், நூற்றுக் கணக்காகவும், ஆயிரக் கணக்காகவுங் கொடுக்கக் கூடியவர்களுமா இல்லாது போயினர்? இருந்துமென்ன? காயஸ்த ஸ்திரீபெற்ற விளக்கம் நமது ஜாதிச் செல்வப்புருஷர்கள் பெறவேண்டுமே! அந்த விளக்கம் பெற்றபிறகல்லவா இந்த தானத்தில் மனஞ்செல்லும்! வாய் வாழைப்பழமாகவும் கை கருணைக்கிழங்காகவுமுள்ளார் சிலர் கல்வி யபிவிருத்தியைப் பற்றிக் கசிந்து கசிந்து பேசுகிறார்கள். பணம் பெட்டியில் பத்திரமாயிருக்குமளவும், வாய்ப்பேச்சால் வருவதொன்றுண்டோ?

**மலையாளி ஐ. ஸி. எஸ்:**—இப்போது இங்கிலாந்தில் நடந்த ஐ. ஸி. எஸ். (இந்தியன் ஸிவில் சர்விஸ்) பரீக்ஷையில் R. V. பத்மநாப பிள்ளை, எம். ஏ. அவர்கள் தேறியிருக்கின்றார். இந்தப் பரீக்ஷையில் தேறிய முதல் மலையாளி இவரே. மற்றெல்லாப் பரீக்ஷைகளிலுந் தேறியவர்களும், அரசாங்கத்தில் ஹைகோர்ட் ஜட்ஜ் முதலாகிய உயர்பதவிகளை வகித்திருப்பவரும் மலையாளிகளில் அநேகரிருக்கின்றனர். கல்விப் பயிற்சியில் துரிதங் காட்டுகிறவர்களாகவும் புத்தி தீக்ஷண்ய முடையவர்களாகவுங் கொண்டாடப்பட்டிருப்போரில் மலையாளிகளுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அரசாங்க இலாகாக்கள் ஒவ்வொன்றிலும் வருஷத்திற்கு வருஷம் மிகுந்து வருகின்றபடியால், “மலையாளிகள்” என்னுஞ் சப்தத்திற்கு பெருமை மேலிட்டு வந்துகொண்டிருக்கிறது. இவர்களினின்றும் நமது ஜாதியார் ஓர் படிப்பினை கொள்ளலாகாதா?

---

## தொழிற் முறைகள்.

**தேங்காயுரிக்கும் யந்திரம்:**—ஜெர்மனி தேசத்து நிபுணரொருவர், மணியொன்றில் 100 தேங்காய்க் கதிகமாய் உரிக்கக்கூடிய யந்திரமொன்றை நூதனமாய்ச் செய்திருக்கிறா ரென்றும், இதன்விலை ரூபா இருநூறுக்கு அதிகப்படாதென்றுந் தெரிகிறது. உலகத்தில் நாளுமொரு புதுமை வெளிப்பட்டுக் கொண்டுதா னிருக்கிறது. நாம்தான் பழமையிலேயே பதுங்கிப் பாழ்போகிறோம்.

**உருவப்பதிவு யந்திரம்:**—புகைப்படமெடுப்பது போன்றதொரு யந்திரம் ஒரு இத்தாலிய இஞ்சினீயரால் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றது. இதனை வீடுகளின் வாயிற் கெதிரே கட்டிவைத்தால் இதில் வாயிற்கதவைத் திறப்பவர்களது உருவம் பதியுமாம். எத்தனைபேர் வீட்டில் பிரவேசித்தாலும் அவர்களது உருவங்களைப்பதிவு செய்துகொள்ளும் சூட்சி இதில் வைக்கப்பட் டிருக்கின்றதாம். இந்த யந்திரம் திருடர்களைக் கண்டுபிடிக்கப் பேருதவியாகும். இதன்பெயர் கிளெப்டோகிராப்.

**மகா வேலைக்காரராகிய மகாராஷ்டிர சிற்பி:**—பம்பாய் ஹைகோர்டில் ஜட்ஜியாயிருந்தவரும் உயர்ந்த தேசாபிமானியெனக் கியாதி

பெற்றவருமாகிய ஜஸ்டிஸ் ரானடே யவர்களு
டைய உருவச் சிலையொன்று சிலமாதங்களுக்கு
முன் பம்பாய் நகரத்தில் வைக்கப்பட்டது. இந்
தச்சிலை, மற்றவை பெரும்பாலும் செய்யப்படு
வதுபோல், இங்கிலாந்தில் முடிக்கப்படவில்லை.
உள்ளூர்ச் சிற்பாசாரிய ரொருவரைக் கொண்
டே செய்யப்பட்டது. இம்மகா வேலைக்காரர்
ஷை ஜட்ஜியின் படமொன்றைக் கொண்டு தத்
ரூபமாய்ச் சிலையை யமைத்த திறமையைக்க
ண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டு இவர் வல்ல
மையை வாயார வாழ்த்தினார்கள். இதன் கிரயம்
ரூபா 17,000 ஆயிற்று. கைத்தொழிற் றிறமை
கண்ணியம் பெறுமற்போகாது. கர்மகாரர்கள்
மட்டும் கைத்தொழில்களிற் கவனஞ் செலுத்தி
க்கௌரவமாய்க் காலங்கழிப்பதில் கண்ணுங்கரு
த்துமா யிருக்கவேண்டும்.

**பேசுங் கடியாரம்:**—ஐரோப்பா கண்ட
த்து ஜெர்மனிநாட்டு பெர்லின் நகரத்தில் ஒரு
வர் பேசுங்கடியாரத்தைச் செய்திருக்கின்றனர்.
இது பதினைந்து நிமிஷங்களுக் கொருமுறை
காலத்தைப் பேச்சால் தெரிவிக்கின்றதோடு
தன்னைச் செய்தவருடைய திறமையையுந் தெரி
விக்கின்றது. இப்படியே, திறமுடையா ரொவ்
வொருவரும் அதை யாதொரு ரூபமாகத் தெரி
வித்தால், அவர்கள் திறமை உலகத்தாரால் அங்
கீகரிக்கப் படுவதுடன், பொருள் புகழாதியவை
களுஞ் சித்திக்கும். நம்மவர்களில் பலர், ஒவ்
வொருவிதத்தில் உன்னதமானவை யென்றுரை
க்கப்படத்தக்க வேலைகளைச்செய்ய வல்லவர்க
ளாயிருக்கிறார்கள். இவர்கள் தமது கைப்பட
முடிந்த வேலைகளின் முழுப்பயனை யடைவதி
ல்லை. தமது வறுமைக்கேற்ப ஏதோ கூலி
பெற்றுத் திருப்தியடைந்து விடுகிறார்கள். அவ
ற்றைப் பெறும் மற்றவரோ மனங்கொண்ட
விலைகளைப் பெற்று லாபமடைவதோடு, அவ்
வஸ்துக்களில் விளங்கும் வேலைத்திறமையின்
பிரதாபத்தையும் தாமே அடைகிறார்கள். இந்த
உண்மைக்குச் சாக்ஷியாய் ஒவ்வொரு பொருட்
காக்ஷியிலும் (Exhibition) அநேக வஸ்துக்
களையெடுத்துக் காட்டலாம். கூலிக்கே யென்
றுங்கை கூப்பியிருந்து, மேலுக்குவரு நோக்கங்
கொள்ளாமலும், மார்க்கமறியாமலும் நம்மவர்
கள் மடிந்து கிடப்பதற்குக் காரணம் கல்வியில்
லாமையே யல்லாமல் வேறொன்று முண்டோ?
ஆங்கிலக்கல்வி சகாயமில்லாமல் எந்த வஸ்துவும்
எக்ஸிபிஷன் சேருதல் கஷ்டம். அஃதில்லா
மையினாலே யல்லவா நம்மவர்களுடைய கைத்
தொழில்கள் பிரகாசமடையாமல் நாளுக்குநாள்
நசித்துப்போய்க் கொண்டிருக்கின்றன? நம்மவர்
கள் கைவேலைகளைக் கொண்டு மற்றவர்கள்
மாண்புறவும் இவர்கள் ஏங்கிநிற்கவும் செய்வன,
அவர்களுக்குக் கல்வி பலமிருத்தலும் இவர்களு
க்கு அஃதில்லாமையுமேயன்றி மற்றில்லையென்
பதை மறுக்கவல்லார்யார்? உயிர் வாழ்க்கைக்கே
உறுதி பயப்பதாயிருக்கும் உத்தமக் கல்வியினி
ன்றும் ஒதுங்கியொதுங்கி யிருப்பதால் உள்ளு
க்கே சென்று ஊனமேயடைகிறோ மென்பதை
உணர்ந் தொழுகுவோரைக் காண்பதற் கில்
லையே!

**இந்தியாவில் ஜப்பான் பட்டு:**—ஜப்பானி
யர் எல்லாத் தொழில்களிலும் சிறந்திருப்பது
போலவே பட்டு செய்வதிலும், நெய்வதிலும்,
வியாபாரத்திலும் பிரபல முற்றிருக்கிறார்கள்.
ஜப்பான் பட்டுவியாபாரிகள் சங்கக்கூட்டமொ
ன்றில் சில மாதங்களுக்குமுன் வியாபார நிபுண
ராகிய மிஸ்டர் நோமா என்பவர் இந்தியாவில்
ஜப்பான் பட்டுவியாபார ஸ்திதியைப் பற்றிப்
பேசினார். அவர் சொன்னதாவது—இந்தியா
வில், பர்மா பம்பாய் கல்கத்தா இந்த இடங்க
ளில் முக்கியமாக சுத்தபட்டும், பஞ்சுகலந்த பட்
டும், சணல்கலந்த பட்டும் செய்யப்படுகின்றன.
ஆனால், பெரிய தொழிற்சாலைகளில் ஐந்தேயி
ருக்கின்றன. மற்றவையெல்லாம் கைத்தறிகள்
கொண்ட சிறிய சாலைகளேயாம். செய்யப்படு
கிறவரையிலும் இந்திய[illegible] மிகநேர்த்தியாக
வேயிருக்கிறது. என்[illegible], வியாபாரம் மங்
கலாயிருக்கிறது. இதற்குக் காரணம் வெளி
யூர்ச்சரக்குகள், விசேஷமாய் ஜப்பான் சரக்கு
கள், இறக்குமதியாதலே. உள்நாட்டுத்தொழில்
பங்கமுறுவதற்கு முக்கிய காரணங்க ளென்ன
வெனில்—(1) விலைச்சரசத்தில் ஜப்பான் சரக்
கோடு இந்தியச் சரக்கு போட்டிசெய்ய முடி
யாது—(2) போதுமான வரையிலும் இந்தியா
வில் பட்டு நூற்பதற்கு வேண்டிய வஸ்துக்கள்
கிடைப்பதில்லை.—(3) பட்டினின்றும் பேதங்
காட்டாத மாதிரியான பஞ்சுத்துணி தினுசுகள்
சீமையிலிருந்து இறக்குமதியாகின்றன.

இந்தியாவிலிறக்குமதி செய்யப்படும் பட்டு
களில் சுமார் அரைப்பாகம் ஜப்பானிலிரு
ந்தே வருகின்றது. அதில் நாலிலொரு பாகம்
சீனாவிலிருந்து வருகின்றது. மிச்சம் இங்கிலா
ந்து முதலிய ஐரோப்பிய தேசங்களிலிருந்து
வருகின்றது. இந்தியாவி லிறக்குமதி செய்யப்
படும் பலவித சாமான்களில் மூன்றிலொருபா
கம் ஜப்பானைச் சேர்ந்தது; ஜப்பானிலிருந்து
வருஞ் சரக்குகளில் மூன்றிலொருபாகம் பட்
டேயாகும். சுமார் நாற்பது வருஷங்களுக்கு
முன் இருந்தவிடந் தெரியாது கிடந்த ஜப்பானி
யர் எவ்வளவு சீக்கிரத்தில் எவ்வளவு மேம்பா
டடைந்து விட்டார்கள் பார்த்தீர்களா? இவ்வள
வும் அவர்களுடைய கல்வியினாலும் தேசாபி
மானத்தாலு முண்டாயிற்றே யல்லாமல் வேறி
ல்லை. அத்தேசக்கல்வி ஒற்றுமையைப் பெரு
க்கி உறுதிப்படுத்துவதா யிருக்கிறது. நம்மவ
ருக்கோ கல்வியென்பதே கிடையாது; கல்வி
யில் துவேஷமும் அருவெறுப்பு முண்டாயிருக்
கிறது; கல்விகற்றோரை இவர்கள் அலக்ஷியஞ்
செய்கிறார்கள்; கற்போரைத் தடுக்கின்றனர்.
இந்நிலைமையில் இவர்கள் தெளிவுறுவதெங்கே,
ஒற்றுமைப் படுவதெங்கே, உயர்வடைவதெ
ங்கே!

---

## விசேஷ வர்த்தமானம்.

**சீனர் கோயில்கள்:** — சைனாக்காரர்கள்
தமது தேவாலயங்களில் மராமத்துசெய்ய நேரி
டும்போது, அங்குள்ள விக்கிரகங்களுடைய
கண்களை நன்றாய்க் கட்டிவிடுவார்கள். ரிபே
ரால் நேரிடும் அலங்கோலங்களை அவை பார்க்க
லாகாதென்பதே கருத்தாம்.

**நாயின் விசுவாசம்:**—பிரான்சு தேசத்து
ள்ள பாரிஸ்நகரத்தில் ஒருநாய் தன்னை வளர்த்த
வர் இறந்தமைக்குச் சகியாது அவரைப் புதைத்
துள்ள விடத்தில் ஒருவாரம் உணவுகொள்ளா
திருந்து இறந்துபோயிற்று. நன்றியறியா மக்
சள் நாயினுங் கடையரென்பது பிசகோ?

**பைத்தியப் பெருக்கம்:**—50 - வருஷங்க
ளுக்குமுன் 557-பேர்களில் ஒருவர்க்குப் பைத்
தியம் பிடித்திருந்ததாம். இப்போதோ 236 -
பேர்களில் ஒருவர் பைத்தியக்காரரா யிருக்கின்
றனராம். 50-வருஷங்களில் பைத்தியக்காரர்
தொகை இருமடங்கிற் கதிகமாய்விட்டது.

**விளையாட்டாலாய வினை:**—சென்ற ஆவ
ணிமாதத்தில் கும்பகோணத்தில் நடந்ததோர்
விவாகத்தில் ஒரு சிறுபெண் மசால்பொடி கரை
த்த நீரை மாப்பிள்ளையின்மீது ஊற்ற, அது
அவன் கண்ணிற்பட்டு கண்ணொளி கெட்டுப்
போயிற்று. விளையாட்டிற்கும் விதி விலக்கு
கள் உண்டல்லவா?

**பாம்புக்கடி:** — இதற்கொருமருந்து வெலஸ்
டன்துரை கூறுகிறார், அதாவது, வாழைமரத்
தைக் குத்தி அதில்வடியும் சாற்றை பாம்புகடித்
திருப்பவருக்கு விடாது கொடுத்து வரவேண்டு
மாம். அப்படிச் செய்யும்பக்ஷத்தில், விஷம்
கொஞ்சங் கொஞ்சமாயிறங்கி மூன்றுநாட்களில்
பற்றற்றுப் போகுமென்னப்படுகிறது.

**கருடனை யெதிர்த்த கட்செவி:**—அலோர்
பொங்ஸா என்னுமிடத்தில் சில வாரங்களுக்கு
முன் ஒரு ஞாயிற்றுக்கிழமை யன்று நாலடிநீள
முள்ளதோர் பாம்பு ஒரு கருடனை யெதிர்த்து

சண்டைசெய்வது கண்டு ஜனங்கள் பிரமித்துப் போயினராம். கடைசியாய்க் கருடனே தோற்றோடியது. இதுவுங் கலிதர்மமே போலும்!

**சிலோனில் வெள்ளம்:**—சிலோனில் பெய்த பெருமழையால் சுமார் 250 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கிப்போயின; அங்கு வெள்ளக்கஷ்ட நிவாரண நிதியொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது; அநேகமாயிர ஜனங்கள் வெள்ளத்தால் உண்ணவுணவின்றியும் இருக்கவிடமின்றியும் வருந்துகின்றனர்.

**பிணமாக்கிப் பிழைப்பித்தார்:** — அமெரிக்காவில் ஒரு டாக்டர் ஓர் பெண்ணின் காதுவழியாய் வாயுசஞ்சாரத்தை நிறுத்தி அவளுயிரைப் போக்கி, பிரேதத்தைப் பெட்டியிலடக்கஞ்செய்து மூன்று ளாழமுள்ளதோர் பள்ளத்தில் வைத்துமூடி, மூன்று தினங்களுக் கப்பாலெடுத்து, பெண்ணின் காதில் காற்றைப் புகுத்தி உயிர்பெறச் செய்தாராம்.

**மோசக்கார சாவிக்காரன்:**—கும்பகோணம் மகாமகக் குளத்தின் மேற்குக்கரையில் வசிக்கும் ஒரு ஸ்திரீ தனது பெட்டிக்குச் சாவி போட ஒரு சாவிக்காரனை யழைத்து வந்தனள். அவன் சாவி சரிப்படாமை போன்று பாசாங்குசெய்து எண்ணெய் கொண்டுவரும்படி சொன்னான். அந்த ஸ்திரீ எண்ணெய் கொண்டுவரப் போனபோது அவன் பெட்டியைத் திறந்து அதிலிருந்த 90 ரூபாயையும் 10 ரூபாய் நோட்டையு மெடுத்துக்கொண்டு அந்த ஸ்திரீ வந்தவுடன் சிலநேரம் சாவிபோடுவது போலப் பாசாங்குசெய்து வேறுசாவி கொண்டுவருகிறேன் என்று போய்விட்டான்; போனவன் திரும்பி வருவானோ?

**புருஷவேஷம்விரும்பும் பூவை:**—அமெரிக்க ஸ்திரீகள் புருஷ ஸ்வதந்திரங்களை தமது வல்லப விசேஷத்தால், ஒவ்வொன்றாகப் பெற்றுவருகின்றனர். இவர்களி லொருத்தி தான் புருஷரைப்போல் உடுத்திக்கொள்ள உத்திரவு தரவேண்டுமென்று தம்மூர்த் தலைவரைக் கேட்டிருக்கின்றனள். இதற்குக் காரணமென்னவென்றால், தான்புருஷ உடையோடு வாரமொன்றுக்கு 3 பவுண் சம்பாதிக்கக் கூடுமென்பதேயாம்.

**சிற்பிகள் செய்கை:**—தஞ்சாவூர் ஜில்லா பட்டுக்கோட்டை தாலுகா இனும் கருப்பூர் கிராமத்தில் புன்செய் நிலமொன்றில் சுவர்கட்ட மண்வெட்டியபோது நடராஜா முதலிய எட்டு விக்கிரகங்கள் அகப்பட்டன. இவற்றின் வரலாற்றை நிச்சயிக்கக் கூடவில்லை. ஏதோவொரு தேவாலயத்திற்காக இவை செய்யப்பட்டதாகவும், இவை முடிந்தபின் சிற்பிகளுக்குச் செலுத்தவேண்டிய கட்டணங்களிலும், செய்யவேண்டிய மரியாதைகளிலும் தகரார் நேரிட்டபடியால், இவற்றைச் செய்த சிற்பிகள் கொடுக்க மறுத்து புதைத்து விட்டார்களென்றுஞ் சிலர் கூறுகிறார்கள்.

**100 - வயதுடையவர்:**—பல்கேரியாவில் 3883, ருமேனியாவில் 1074, ஸெர்வியாவில் 573, ஸ்பெய்னில் 410, பிரான்ஸில் 213, இத்தாலியாவில் 146, இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் 92, ருஷ்யாவில் 89, ஜர்மனியில் 76, நார்வேயில் 23, ஸ்வீடனில் 10, பெல்ஜியத்தில் 5, டென்மார்க்கில் 2-பேர் நூறுவயதுடையவராக விருக்கின்றனரென்று ஜர்மன் தேசத்தில் வெளியிட்ட ஜனகணிதத்தால் தெரிகின்றது. வயது மிகுதியானது அந்தந்த தேசத்து சீதோஷ்ணாதி இயற்கை யமைப்புகளால் மட்டுமல்லாமல், அவரவர்களுடைய உண்டி, இல்லற வாழ்க்கை, அநுஷ்டான முதலியவற்றாலும் நிச்சயிக்கப்படுகிறது.

**கனவுக்கும் நினைவுக்குமுள்ள சம்பந்தம்:**—மிஸ்டர் ராபர்ட்ஸன் என்னும் பிரபு, ஓர் இங்கிலீஷ் நாட்டிய மகோற்சவம் நடத்த உத்தேசித்து தமது நண்பர்களுக்கெல்லாந் தெரிவித்தார். அதற்கென்று குறிப்பிடப்பட்ட நாளுக்குச் சில தினங்களுக்குமுன் ஷை பிரபுவின் தந்தை தன்சகோதரி மரித்ததாகக் கனவுகண்டு குமாரனுக்குக்கூறி உற்சவநாளைத் தள்ளிவைக்



கும்படி கேட்டார். குமாரன் பரிகசித்து பழையபடியே சகல ஏற்பாடுகளுஞ் செய்தான். உற்சவநாள் காலையில் கடிதமொன்று வந்ததில், லாஹோரில் தமது தங்கை வாஸ்தவமா யிறந்துவிட்டதாகத் தெரிந்தது. கனவிற்கும் நினைவிற்கும் சம்பந்தமுண்டென்று இந்தியர்கள் சொல்வது சரியென்று ஷை பிரபுக்களும் மற்றையோருந் தெளிந்தனர்.

**பால்ய விதவைகள்:**—ஜனகணித அறிவிப்பின்படி இச்சென்னை ராஜதானியில் மாத்திரம் 6078 ஐந்துவயதுக் குட்பட்ட விதவைகளிருக்கின்றனர்; இவர்களுள் 31-பேர் ஒருவயதுகூட ஆகாத குழந்தைகளொன்றும், 4072 - பேர் 5-வயதுமுதல் 10 - வயதுள்ளவர்கள் என்றும், 1822-பேர் 10-வயதுமுதல் 15-வயதுள்ளவர்கள் என்றும், மொத்தத்தில் 15 வயதுக்குட்பட்ட விதவைகளின் தொகை 23068 என்றுந் தெரிகிறது. பாலவிவாகங் குறையுமாயின், விதவைகளின் தொகை பெரும்பான்மையுங் குறையும். பாலவிவாகத்தில் வரவர அதிகப் பிரியங்காட்டுவதே பிராமணத் தன்மையென்று பேதுற்றொழுகும்பித்தர்கள் இவ்வுண்மையைக்கண்டு தமது செய்கையை மாற்றுதல் நன்று.

**காதல் மறவாத கிழவி:** — இங்கிலாந்து தேசத்துள்ள கென்ட் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு சிற்றூரில் வசித்துவந்த 81 வயதுடைய மேரி யென்பவள் இப்போது அமெரிக்காவிலுள்ள கனடாவிற்குச் சென்றிருக்கின்றாள். இவள் தன் வாலிபபருவத்தில் தன்னிலும் 10 வயது குறைந்த ராபர்ட் ஹார்டிஞ் என்பவனை மணஞ்செய்துகொள்ள அவனிடத்து மிகுபிரியமாக விருந்தாள்; அவன் பிழைப்பின் பொருட்டுக் கனடாவிற்குப் போய்விடவே, பிரௌன் என்பவனை மணஞ்செய்துக்கொண்டு 10 வருஷத்திற்கு முன் விதவையாகி விட்டாள். இப்போதவள் தனது பிரியனாகிய ராபர்ட் ஹார்டிஞ்சி னிருப்பிடத்தை அவனெழுதிய கடிதத்தாற் றெரிந்துக்கொண்டு, அவனை மணஞ்செய்துகொள்ளக் கனடாவிற்குச் சென்றாள்.

**கல்விக் குதவி:**—பெங்களூர் கண்டோன்மெண்டிலிருக்கும் ஸ்ரீ. பூ. சுப்பைய செட்டியார் மனைவி ஸ்ரீமதி தாயம்மாள் கல்வி யபிவிர்த்தியின் பொருட்டு ரூபாய் இருபதினாயிரம் தானஞ்செய்தாரென்றும், அதை மைசூர் அரசாட்சியாரிடம் கொடுத்து அதனால் கிடைக்கும் வட்டிப்பணத் தொகையால் 4 பிராமணச் சிறுவர்களையும் 6 வைசியச் சிறுவர்களையும் கல்வியில் தேர்ச்சியடையச் செய்யவேண்டு மென்றும், இக்காரியத்தைப் பரிபாலிக்க மேற்படி மாதின் சகோதராகிய ம-ள-ள-ஸ்ரீ வீரராகவ செட்டியாரை மானேஜராக நியமித்திருக்கின்றாரென்றும் தெரிகின்றது. பொருளுடையோர் கல்விக் குதவிபுரிதலினும் வேறு விசேஷ பிரயோசனங் காண்பது முண்டோ?

**விவாகவெறுப்பு:**—இந்தியநாட்டில் விவாகச்சடங்கு ஒவ்வொருவருக்கும், ஆணாயினும் பெண்ணாயினும் அத்தியாவஸ்யமென்று கொள்ளப்பட் டிருக்கின்றதல்லவா? ஏழைகளாயினும் தனிகர்களாயினும் இந்துக் குடும்பங்களில் ஸ்திரீபுருஷர்களுக்கு 12, 18 வயதுகளாய்விட்டால் எப்போ திவர்களுக்குக் கல்யாணஞ் செய்துவைப்பதென்னுங் கவலையே பெரிதாய்விடுகிறது. சாமளவுந் தீர்க்கமுடியாத கடன் பட்டாகிலும், நிலம் மனை முதலியவற்றை விற்றாகிலும் விவாகஞ் செய்துவிடுகின்றார்கள். சம்பாதிக்கும் திறமை, குடும்ப சம்ரக்ஷணைக்கேற்ற யோக்கியதை முதலிய குணங்கள் விவாகங்கொள்ளும் புருடனிட மிருக்கிறதாவென்று எண்ணிப் பார்ப்பவர் இங்கில்லை. இவ்விவாகங்களால் எத்தனையோ குடும்பங்கள் நாசமடைந்துவிட்டன. எத்தனையோ குடும்பங்களில் என்றும் மாறா அல்லலும் அழுகையும் அமர்ந்திருக்கின்றன.

இந்தியாதேசத்து நிலைமை யிவ்வாறிருக்க மற்றநாட்டு நிலைமை வேறுவிதமா யிருக்கிறது.

வேறெந்தேசத்திலும் விவாகநிர்ப்பந்தம் நமது நாட்டிலுள்ளதுபோற் காணப்படவில்லை. நாகரீக நாடுகளைப் பற்றியே நாம் பேசுகிறோம். அமெரிக்காவின் நிலைமை அதிவிநோதமா யிருக்கிறது. அங்கு 80,00,000 புருடரும், 90,00 000 ஸ்திரீகளும் விவாகமில்லாமலே யிருக்கின்றார்கள். விவாகமென்பதே அத்தேசத்தில் ஜனப்பிரியமானதா யில்லையாம். ஆண்பாலாரும் பெண்பாலாரும் வரவர விவாக பருவத்தைத் தள்ளிவைத்து வருகின்றார்கள். செட்டுத்தனம், குடும்பவாழ்க்கை யச்சம், தேகநலி முதலிய காரணங்கள்பற்றி விவாகம் விலக்கப்பட்டு வருவதாய்த் தெரிகிறது. ஸ்திரீகள் விவாகத்தை விரும்பாமைக்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒரு புருடன் தன்னைச் சதாகாலம் அணுகிநிற்குந் தொந்திரவுக்குப் பயந்து பெண்ணானவள் கல்யாணம் வேண்டாமென்றிருக்கிறாள் என்று அவ்வூரார் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். சோம்பேறிப் பெண்கள் தான் ஒரு நாயகனைத் தேடிக்கொள்ள வேண்டுமே யொழிய மற்றவர்களுக்குப் புருடனவசியமில்லை யென்னுங் கொள்கை, அங்கு மிகப் பரவியிருக்கிறது. பிள்ளைகளைப் பெறவேண்டுமென்னுங் கருத்துடையவர்களாய் அமெரிக்க ஸ்திரீகளில் ஒரு சாரார் விவாகஞ் செய்துகொள்வதாய்ச் சொல்லிக் கொள்ளப்படுகிறது. காதலென்பது ஐந்துவருடங்களுக் கதிகம் நீடித்திருப்ப தில்லையென்றும், அதற்கப்பால் பிள்ளைகளை நோக்கிப் புருட உபத்திரவந் தாங்கப்படுகின்றதென்றும், மணங்கொண்ட மடந்தையர் சிலர் மதித்திருக்கின்றார்கள். கல்யாணமாகாதிருக்கும் ஸ்திரீகளில் 100-ல் 30-பேர் தமது கைப்படச்செய்யுந் தொழிலினால் வருவாயடைந்து வாழுகிறார்கள், 20-பேர் தமக்கொரு லக்ஷாதிகாரி புருடனாக வாய்ப்பான் என்ற நம்பிக்கையிலேயே காலங்கழித்துக் கிழவிகளாகிறார்கள்.

**பலன்மிகுந்த தென்னைகள்:**—அமெரிக்க தேசத்து பிரேஸில் நாட்டில் சுமார் 10-கோடி தென்னைமரங்க ளிருக்கின்றன. இவை மூன்று வருஷங்களிலேயே பலன் தருகின்றனவென்றும், ஒவ்வொரு மரத்திலும் வருஷமொன்றுக்கு குறைந்த பக்ஷம் 300-காய்கள் காய்க்கின்றனவென்றுந் தெரிகிறது. இவ்வித பலன் நாட்டுவளப்பத்தினால்மட்டுமே சித்திக்கவில்லை. அந்நாட்டார் அப்போதைக் கப்போது செய்து வரும் வியவசாய விருத்தி பெரிதுந் துணைபுரிந்துவருகிறது. நவநவமாய் முறைகளைப் பரீக்ஷித்துப் பார்த்து அவர்கள் கைக்கொண்டு வருகிறார்கள். இது விருத்திக்குறி; நமது நாட்டிலோ பாட்டன் பூட்டன் காலத்து வழக்கங்களையே குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பார்களே யொழிய நூதன ஆராய்ச்சிகளால் சாதக பலன்களைப் பெறுவோமென்ற சதாநுஷ்டானமே கிடையாதல்லவா?

**நிர்வாண ஆஸ்ரமம்:**—வட இந்தியாவிலுள்ள ஆஸாம் மாகாணத்தைச் சேர்ந்த ஜகத்ஸி யென்ற ஊரில் குணிதாஸ் சௌதரியென்னு மொருவரால் தயானந்தஸ்வாமி யென்னும் பெயருடன் அருணாசல ஆஸ்ரம மென்பதொன்று 1912-வது வருடத்தி லேற்பட்டது. மதோபதேசஞ் செய்வதற்காகவும், தர்மத்தைப் பரவச் செய்வதற்காகவும் இந்த ஆஸ்ரமம் ஸ்தாபிக்கப்பட்டதெனப் பட்டாலும், இதில் ஆண்பெண் என்னு மிருபாலாரும் சொற்ப ஆடைகளோடு பஜனை செய்வதையும், ஆவேஸம் அதிகப்படுங் காலங்களில் அவற்றையும் அவிழ்த்தெறிந்து நிர்வாணிகளாய்க் கூத்தாடுவதையும், பல சிறுவர்களும் சிறுமியர்களும் தமது குடும்பங்களைத் துறந்து இதில் சேர்ந்துவருதலையும், வயது வந்து விவாகமாகாமலிருக்கும் கன்னிகைகளை தலைவரே நேரில் அலங்கரித்து காளிதேவியென்று வணங்குத லாதியவற்றையும் போலீஸார் அறிந்து, ஷை தயானந்த ஸ்வாமியையும் மற்றவர்களையுஞ் சிறைப்படுத்தி விசாரணை செய்ததில் ஷை தலைவருள்ளிட்ட சிலர் தண்டனைபெற்றார்கள்.

**சிசு சம்ரக்ஷணை:**—அநாதைச் சிசுக்களைச் சம்ரக்ஷிப்பதற்கென்று சென்னையில் ஒருசங்கம் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. இதற்கு கவர்ன்மெண்டார் 1000-ரூபாய் நன்கொடை யளித்திருக்கின்றார்கள். சென்னைக் கலெக்டர், முதல் டிஸ்ட்ரிக்ட் ஸர்ஜன், 4-வது சர்கில் ஸ்கூல் இன்ஸ்பெக்டராகிய மூவர் இதன் கமிட்டியிலிருக்கவேண்டுமென்று அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர். சங்கத்தின் அங்கத்தினர் செலுத்தவேண்டிய வருஷசந்தா ரூபா பத்து. இதற்கு நமது மாகாணக் கவர்னர் துரையவர்களே பிரஸிடெண்ட். சந்தா பணத்தினாலும், நன்கொடை வசூல்களினாலும் பல ஜாதிச் சிசுக்கள், பால்யர், பாலிகைகள் இச்சங்கத்தாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள். இப்படிப்போஷணை யுறுவோரில் சென்ற வருடத்தில் நமது ஜாதியார் இருவரிருந்தனராம். ஷை சங்கத்தின் வசப்பட்ட இவ்விரண்டு அநாதைகளே தவிர, நம்மவர்களுக்குள் ஆணிலும் பெண்ணிலும் பல வயதுகளில் எத்தனையோ அநாதைகளிருக்கிறார்கள். இவர்களிற் பெரும்பாலார் தாம் அநாதைகளென் றொப்புக் கொள்ளாமல் அகம்பாவங் கொண்டு பேசுவார்களாயினும், மற்றவர்களை யாவது சம்ரக்ஷிப்பது குலக்கடமையா யிருக்கிறது. இஃதொன்றா நமது கடமை? இன்னு மெத்தனையோ விருக்கின்றன. அவற்றையெல்லாம் நிர்வகிப்போரும், அன்னோர்க்குத் துணை செய்வோருங் காண்கிலமே!

**சிதம்பரந்தாலுகா வெள்ளவிபத்துகள்:** விருத்தசைலத்தின் மேற்குத் திசையின்பெய்த மழைமிகுதியால் ஏரிக ளனைத்தும் உடைத்துக் கொண்டு வீராணத்தேரியினும் பெருமாளேரியினும் வந்துவீழ்ந்து ஜலம் நிறைந்து உடைப்பெடுத்து இரண்டின் வெள்ளமிகுதியால் ரயில்





பாதையை, ஆலப்பாக்கம் ஸ்டேஷனிலிருந்து வடக்கே ஒருமயிலளவு தொடங்கி, சத்திரம் ஸ்டேஷனுக்குத்தெற்கு இரண்டுமயிலளவும், கிள்ளை ஸ்டேஷனுக்குத் தெற்கு, கொள்ளிடம் ஸ்டேஷன் அளவும், அப்படியே உடைத்து விட்டது. விருத்த சைலம் முதல் சமுத்திர பரியந்தம் எல்லா வூரிலும் வீடுகளில் ஜலம் நிரம்பி வீடுகளிலிருந்த தானியங்களெல்லா மழிந்துவிட்டன. அவ்வவ் வூரிலும் மண்சுவர், கூரைவீடுக ளெல்லாம் வீழ்ந்து விட்டன; பறைச்சேரிக ளெல்லாம் அழிந்து விட்டன. வீராணத்தேரியின் மேற்கே இராத்திரியில் வெள்ளம் வந்தமையின், ஆங்குள்ள சில கிராமங்களில் ஆடுமாடுகளும், கூரைவீடுகளும், அடித்துக்கொண்டு போகப்பட்டன; ஜனங்கள் இறந்து வெள்ளத்தின்மீது கட்டில்களோடும். பாய்களோடும், மிதந்துபோயினர்; வீராணத்தேரியின் கிழக்குத் திசையில், பகலில் வெள்ளம் வந்தமையின் பள்ளத்தாக்காயுள்ள கிராமங்களிலுள்ள ஜனங்களிலும், கால்நடைகளிலும் உயிர்ச்சேதம் அதிகமாம். மேட்டிலுள்ள ஜனங்களெல்லாம் உயர்ந்த வீடுகளிலும் பெரிய விருக்ஷங்களினும் ஏறித் தங்களுயிரை ஒன்றரைநாள் உபவாசமாயிருந்து காத்தனர். வெள்ளமும் மூன்றுநாள் வடிந்துவிட்டது. சிதம்பரத்தில் தேரோடும்வீதியும் மேட்டுத்தெருவும் நீங்கலாக மற்றைய வீதிகளெல்லாம் இரண்டுநாளும் அநேக ஆறுகளாய் விளங்கின; நாற்புறமும் பள்ளத்துள்ள வீதிகளெல்லாம் ஜலம் நிரம்பினதால் வீடுகளெல்லாம் இடிந்துவிழுந்தன. கால்நடைகளும், சில ஜனங்களும் சேதமாயினர். அவ்விரண்டு தினமும் ஏழைகளை தீக்ஷிதாள் அன்னமிட்டு ஆதரித்தார்கள்.

---

அன்னத்திற்கும் ரோமத்திற்கும் எவ்வளவோ வித்தியாசமிருந்தும், இந்தப்பிரகாரம் நேருவதற்கு ஒற்றுமைதான் காரணம் என்பது நமது வாசகர்களுக்கு விளங்காத்தன்று.

IV. ஒரு குருடனும் முடவனும் எங்கும் போக முடியாமல் பசியால் வருந்துகையில், ஒருவன் நீங்கள் ஒத்துவாழவேண்டுமென்றதால், குருடன் முடவனைத் தூக்கிச்சென்றான்; முடவன் கண் குருடனுக்கு வழி காட்டிற்று. இவ்விதமாய் இவர்கள் நடந்து சென்று யாசகஞ்செய்து இனிதாய் வாழ்ந்திருந்தார்கள். கூடி வாழ்தலானது கண் காலில்லாத குருடன் முடவனுக்குமே அதிக உபயோகமா யிருக்கையில் கண் காலிருக்கின்றவர்களுக்கு உபயோகப்படக் கேட்பானேன்?

V. பஞ்சபாண்டவர்கள் பலதுயரங்களைப் பட்டு மீண்டார்கள். எதனால்? ஒற்றுமையை விரதமாய்ப் பூண்டதால்! அவர்களைப்போல் நாமும் ஒற்றுமையாயிருந்து, துரியோதனாதிகள் போல் காலத்தைத் தீய வழியிற் செலுத்தாமல் நல்வழியில் செலுத்தினால், அன்னவர்கட்கு எவ்விதம் ஸ்ரீ கிருஷ்ணபகவான் உதவி புரிந்தாரோ அதேவிதமாய் சாக்ஷாத் விஸ்வேசுரரும் நமக்கு உதவிபுரிவார். பலாப்பழத்தில் ஈமொய்ப்பது போல் இன்பம் இருந்தால்தான் ஒற்றுமை யுண்டாகும். ஆகையால் இன்பத்தைப்பற்றி சற்றுகூறுவாம்.

இன்பத்திற்குக் காரணமாயுள்ளது அறிவு. கல்வியாகிய கருந்தனத்தைக் கைக்கொள்ள வேண்டுமென எண்ணமுண்டாவதற்கு, அவ்வருமையான கல்வியறிவு பெற்று அதைமுற்றுமுழுவதும் தனதாக்கிக்கொண்டால் விளையும் இன்பத்தைவிட வலிவான தூண்டுகோல் வேறுளதோ சற்று கவனித்துப் பாருங்கள்! மலரிலுண்டாகும் மதுவையுண்டு களிப்படையும் வண்டுகளைப் போல், கல்வி யறிவினாலாகும் இன்பத்தைப் கற்பவரேயன்றி மற்றோர் உணர்ந்து களிப்படையவல்லரோ?

அறிவினால் வரும் ஆனந்தமே ஆனந்தம் ஆ! ஆ! சிலர் அறியாமையை ஆனந்தமென்கிறார்களே, அதென்ன பேதமைப் பிதற்றே, அது மிருகஜென்மத்துக்குரிய ஆனந்தமேயன்றி மானிடஜன்மத்திற் குரியதன்று. மேன்மேலும் ஞானம் சம்பாதிப்பதிலேயே புத்தியைச் செலுத்தியிருப்பவர்கட்கு அனுபவிக்கப் பேரின்பம் களஞ்சியமாய்க்கிடக்கின்றது. ஒரே தேசத்தாருடைய கல்விச்செல்வமாத்திரமல்ல, இப்பூலோகத்துச் சகல தேசத்தாருடைய கல்விச்செல்வமும் பேரானந்தமுண்டாக்கும் பொருட்டு அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாகின்றது. தற்காலத்துக் கல்வி கேள்விகளைப்போலவே முற்காலத்து கல்வி கேள்விகளும் கிடைக்கத்தக்கவையாம். நமது "விஸ்வகர்மன்" பத்திரிகைமூலமாய் நாம் பல விஷயங்களை யறிந்துவருகிறோம் அவற்றுள் "மற்றவர்மாக்ஷி" முக்கியமானதொன்று.

ஓர் ஊரில் இரண்டு வீட்டுக்காரர்கள் ஒரேயிடத்தில் (கம்பெனி அல்லது ஒர்க்ஷாப்) ஒரே சம்பளத்தில் வேலைசெய்வதாய் வைத்துக்கொள்ளுவோம். அவ்விருவரில் ஒருவன் தான் சம்பாதிக்கும் திரவியத்தில் கொஞ்சம் எவ்வழியாலோ சேர்த்து ஓர் வீடும், வயலும், விலைக்கு வாங்குகின்றான். அவன்தான் விலைக்கு வாங்கின வீட்டில் குடிபுகுந்து தனது வயலில் அறுவடையான நெல்லைக் கொண்டுவருவதை எதிர்வீட்டுக்காரன் கண்ணுற்றபிறகுதான் இவனும் செலவைக் குறைத்து ஓர்சீட்டில் சேர்ந்து வயலும் வீடும் வாங்க உத்தேசிக்கின்றான். எவ்விதம், எதிர்வீட்டுக்காரன் வீடும் வயலும் வாங்கினதைப் பார்த்தபிறகு பணம் சேர்க்கவழியும் வயல்வீடுவாங்க எண்ணமும் கொண்டானோ, அதைப்போல் "மற்றவர் மாக்ஷி" என்ற தலைப்பின்கீழ் வருபவைகளை வாசித்து பிறஜாதியா வர வர உன்னதபதவியை அடைகின்றதுகண்டு நாமும் உன்னதபதவியடைவதற்கான குலோத்தாரணம், கூடிவாழ்தல், கல்வி விர்த்தி முதலான விஷயங்களில் ஈடுபட்டுழைக்க மனம்நாடுவோம். எதிர்வீட்டுக்காரன் வீடும் வயலும் வாங்கி இனிதாய் வாழ்ந்ததுபோல் "விஸ்வகர்மன்" பத்திரிகையைப்பெற்று வாசித்து நமது குறைகளைத் தெரிந்து அவற்றை அகற்றி, இன்புற்று வாழவேண்டி மிக்க புத்தியைத் தக்க விதமாய்ப் புகட்டும் "விஸ்வகர்மன்" பத்திரிகைக்குப் புதுசந்தாதாரர்களைச் சேர்ப்போமாகவும்.

---

கற்பன ஊழற்றார் கல்விக் கழகத்தி
லொற்கமின் றாத்தைவா யங்காத்தல்—மற்றுத்தம்
வல்லுரு அஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு அஞ்சுவ போல்.



## சிற்பிகள்கை அற்புதங்கள்

### 3. புராரி விஷ்ணு பாதம்

டெல்லி நகருக்குச் சமீபத்தில், புராரி என்ற ஒரு கிராமம் யமுனா நதிக்கரையி லிருக்கிறது. அக்கிராமத்திற்குத் தெற்கிலுள்ள ஒரு குன்றின்மேல் 32 அங்குலம் நீளமும் 10 அங்குலம் அகலமுமான கல் விஷ்ணு பாதமொன்று மஹா மஹோபாத்யாய பண்டித் பங்கிராய் நவால்கோஸ்வாமி என்பவரால் பூமியின் கீழ் தற்செயலாய் கண்டெடுக்கப்பட்டது. அந்த விஷ்ணு பாதம் கயாவிலுள்ள விஷ்ணு பாதத்தைப் போலிருக்கிறது. அந்த விஷ்ணு பாதத்தின்மேல் ஒரு உயர்ந்த இரும்புஸ்தம்பம் நாட்டப்பட்டிருந்தது. அந்த இரும்புஸ்தம்பம் பிறகு டெல்லிக்கருகில் குடுப் என்ற இடத்தில் கொண்டுவந்து நாட்டப்பட்டது. அந்த இரும்புஸ்தம்பம் கிறிஸ்து பிறந்த நாலாவது நூற்றாண்டில் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அந்த இரும்புஸ்தம்பம் இப்பொழுதுகயாவிலிருக்கும் விஷ்ணுபாதத்தின்பேரில் நாட்டப்பட்டிருந்ததென்று சிலரும், மதுராபட்டணத்திற் கருகிலுள்ள கோவர்த்தனகிரியின் மீது இருந்ததென்றும், அங்கிருந்து இப்பொழுது அது நிற்கும் இடத்திற்குக் கொண்டு வந்து நாட்டப்பட்டதாக வேறு சிலரும், இது எந்த மலையின் மீது முதலில் நாட்டப்பட்டிருந்ததோ அந்தமலையே விஷ்ணுபாதமென்று வேறு சிலரும் சொல்லுகிறார்கள். பிரஸ்தாப விஷ்ணுபாதம், புராரி என்ற கிராமத்திற்கருகிலே ஒரு குன்றின்மீதுள்ள பூமிக்குக்கீழ் அகப்பட்டது. அந்த புராரி என்ற கிராமத்திற்கு பார் முராரி என்ற பெயருமுண்டு. பார் முராரி என்பதற்கு "மாப்பிள்ளை முராரி" என்பது பொருள். முராரி என்று ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பெயர். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய விவாக காலத்தைக் குறிக்கும் அறிகுறியாக அந்த விஷ்ணு பாதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும், அல்லது மகா பாரதயுத்தத்திற்கு முந்தி நடத்தப்பட்ட ராஜசூய யாகத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதத்திற்குச் செய்யப்பட்ட அக்கிர பூஜையின் அறிகுறியாக அந்த விஷ்ணு பாதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் மகாமகோபாத்தியாயர் சொல்லுகிறார் என்று 'பம்பாய் க்ரானிக்கல்' பத்திரிகை கூறுகிறது.

---

## வரதக்ஷிணை

## அல்லது வியாபார விவாகம்

(மாதர் மநோரஞ்சனி.)

பெங்காலில் ஸ்நேகலதாதேவி என்ற பெண்மணியை மணம்புரிய விரும்பினவன் அதிக தொகை கேட்டமையால் அவள் தகப்பன் தன் வீட்டைக் குதுவை வைத்து அதற்கு வேண்டிய பணத்தைக் கடன் வாங்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தாராம். அப்பொழுது இப்பெண்மணி தனக்காகத் தனதுதகப்பனார் பணத்துக்குப்படும் கஷ்டத்தைக்கண்டு மனம் சகியாமல் தற்கொலைசெய்துகொண்ட சங்கதி அநேகருக்குத் தெரியும். இத்தீர் வழக்கம் பெங்காலில் மாத்திரமில்லை, இந்தியா முழுவது மிருக்கிறதென்னலாம். முன்காலத்தில்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கு சொற்ப தொகை கொடுத்து வந்தார்கள். சிலர் அதுகூடப் பெறாமல் கன்னிகாதானம் செய்து வந்தார்கள். இக்காலத்திலோ பெண் வீட்டார் பிள்ளை வீட்டாருக்கு கன்னிக்கு கலியாணம் முதல் பிள்ளைபிறக்கும் வரையில் அவர்கள் கேட்பதை எல்லாம் கொடுக்கவேண்டி யிருக்கிறது.

பெண்களோ அதிகரிக்கிறார்கள். பிள்ளைகளோ சொற்பமா யிருக்கிறார்கள். பெண்கள் ருதுவாகுமுன் விவாகம் செய்ய வேண்டுமென்ற மூடக்கொள்கை அநேகர் மனதில் குடிகொண்டே யிருக்கிறது. மேலும், பிள்ளை தன் ஜாதி உட்பிரிவைச் சேர்ந்தவனாயிருக்க வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். எல்லாவயதிலும் பெண்களின் தொகை ஆண்களின் தொகையை விடக் குறைந்ததாகவே யிருக்கிறது. 10-அல்லது 12-வயதுக்குக்கீழ் பெண்களின் தொகை ஆண்களின் தொகையைவிட அதிகரித்திருக்கிறது. இதனால் பால்ய விவாகம் நடந்து வருகிறதென்னலாம். 10-வயதுக்குட்பட்ட விவாகமான ஆண்களின்தொகை பெண்களைவிட அதிக சொற்பமாயிருக்கிறது.

பிள்ளைகள் உயர்தரக்கல்வி படிப்பதால் விவாகம் செய்துகொள்ள அவசரப்படுகிறதில்லை. ஒருவேளை ஒருவன் தன் பெண்ணை விவாகம் செய்துவைப்பதாக அப்பிள்ளையின் பெற்றோரைக்கேட்டால் இதுதான் சமயம் என்று எண்ணி அதிக தொகை கேட்கிறார்கள். பிள்ளைகளின் விவாக வயது உயருகிறது. இவ்விதம்

வயது உயருவதால் பிள்ளை கிடைப்பதும் அருமையாயிருக்கிறது. அவ்விதம் கிடைத்தாலும் பணம் அதிகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பெண்களின் விவாக வயதை உயர்த்தி வைப்பதும், ருதுவாகுமுன் அவர்களுக்கு விவாகமாக வேண்டுமென்ற விதியை நீக்கிவிடுவதுமே இக்கொடிய வழக்கத்தை நீக்க முதல்தரமான கைகண்ட ஔஷதம்.

மேலும், சாதாரணமாகப் பெண்ணும் பிள்ளையும் ஒரு ஜாதியின் ஒரே உட்பிரிவைச் சேர்ந்திருக்கவேண்டும்; ஆனால் கோத்திரம் மாத்திரம் வேறாயிருக்க வேண்டுமென்ற விதியுமிருக்கிறது. இவ்வித உட்பிரிவுகளில் சில உட்பிரிவுகளின் தொகை வெகு சொற்பம்; உட்பிரிவுகளை நீக்கி வடமப்பிராமணன் ப்ரஹசரணப்பெண்ணை விவாகம் செய்துகொள்ள முன் வந்தால் இவ்விதத் துர்வழக்கமும் நீங்கும். பி. ஏ. பரிக்ஷை தேறினவன், அல்லது பீ. ஏ. க்குப் படிக்கிறவன் புத்திசாலியாயிருந்தால் இவர்கள்பாடு கொண்டாட்டம்தான். இவர்கள் கேட்பதையெல்லாம் பெண்ணின் தகப்பன் கொடுக்க வேண்டியதே. தாழ்ந்த கல்வியறிவுடையவர்களுக்கு ரூபா 500 முதல் ரூபா 1000 வரைக்கும் கிடைக்கும் என்பதற்கும் மோசமில்லை.

ஒரு சிறுவன் தான் சம்பாதித்து ஜீவனம் செய்யும் வரையில் பிரம்மசாரியாக அதாவது விவாகம் செய்துகொள்ளாமலிருந்தால், பின்னிட்டு பணத்தை அபேக்ஷித்து விவாகம் செய்துகொள்ளமாட்டான். ஆனால் இவன் சம்பாதிக்காமல் தாய் தந்தையின் ஆதரவிலிருக்கும் பொழுது விவாகம் செய்துகொண்டால் பணம் கட்டாயம் கேட்பான். இன்னொரு முக்கியமான விஷயமுண்டு. அதாவது, பெண் வயதாகியாவது சிறுபெண்ணாகவாவது மனைவியாக மாத்திரம் இருந்து கல்லாமலிருந்தால் போதாது. அப்பொழுதும் வியாபாரவிவாகம் இருந்துகொண்டேயிருக்கும். சிறு பெண்களை விவாகம் செய்துவைக்கவும் கூடாது. பெண்கள் பிள்ளைகளைப்போல் உயர்தரக் கல்வி கற்றுணர வேண்டும். பி. ஏ. வரையில் ஆண்களைப்போல் படித்துவரவேண்டும். அப்பொழுதுதான் விவாகம் உண்மையானதாகும். "வியாபார கலியாணத்தை ஒழித்துவிடும்" என்பது பம்பாயிலுள்ள "இந்தியன் சோஷல் ரிபார்மர்" என்ற பத்திரிகையின் அருமையான அபிப்பிராயம்.

## முத்து

முத்து, பார்த்திபர் மதிக்கும் நவரத்னங்களில் ஒன்றாகும். இது கடல்படு பொருளேயாம். இது சலசம் தலசம் என இருவகைப்படும். முத்து "தந்தி; வராக மருப்பு, இப்பி, பூகம், தழைகதலி நண்டு, சலஞ், சலம், மீன்தலை, கொக்கு, களினம், மின்னார் கந்தரம், சாலி, கழை, கன்னல், ஆவின்பல், கட்செவி, கார், இந்து, உடும்பு, கரா" என்னும் இருபது இடங்களினின்றும், சனீசுவரர் தோள், சிங்கத்தின் புஜம், தென்னை ஆகிய இம்மூன்றும் சேர்ந்து இருபத்திமூன்றிடங்களினின்றும் பிறக்கும்.

முத்துச் சிப்பி ஓர் ஜலசரம். அதன் இடைக்கு மத்தியில் ஓடுகளால் மூடப்பட்ட மெல்லிய தோல்கள் உண்டு. இத்தோல்களினூடே பொடிமணல் புகுந்து அப்பூச்சியை மிகுந்த துன்பத்துக்குள்ளாக்குகிறது. அப்பொழுது எரிச்சல் பொறுக்காமல் முத்துச்சிப்பி அங்கு மிங்கும் புரள, ஓர்விதச் சுண்ணும்புத் தன்மையுள்ள நீர் கீழேவிழுகிறது. இதுவே முத்தாகிறதாம் இதைச் சீனரே முதலில் அறிந்தனர். பார்சிஷூரியோரம் முத்துச்சிப்பி சமுத்திர மட்டத்துக்கு மேல் வந்து வாய்திறக்க அப்பொழுதுவிழும் நீர்த்துளியே அதனிடத்து முத்தாகிறதெனக் கூறுகிறார். மேலும்சுவாதி நக்ஷத்திரம் உச்சியிலிருக்கும் பொழுது விழுந்த நீர்த்துளியாலுண்டான முத்தே மிகச்சிலாக்கியமானதாம்.

முத்துக்கள் நல்லமுத்துகள், கெட்டமுத்துக்கள் என இருவகைப்படும். நன்முத்துக்கள் பளபளப்பாயும் உருண்டை வடிவமுள்ளதாயும் கனமாயும், வெண்மை நிறம் பொருந்தியதாயுமிருக்கும். நன்முத்துக்கள் பல வர்ணங்களிலு மகப்படுகின்றன. மெக்ஸிகோவில் எடுக்கப்படும் முத்து கபிலவர்ணமுடையதாம்.

சாதாரணமாய் முத்துக் குளித்தல் பிப்ரவரிமாதந் தொடங்கி ஏப்ரல் மாதம் வரை நடக்கும். காலை ஏழு மணிக்குக் குளிக்கத் தொடங்கி சூரியனுச்சிக்கு வருதலும் நிறுத்திவிடுவார்கள். அதற்குள் நாற்பது அல்லது ஐம்பது தடவை மூழ்குவார்கள். இறங்குமுன் தெய்வ பக்தியுள்ள மலையாள மந்திரவாதிகளை ஆருடங் கேட்டுக் கொண்டும், உபவாச மிருந்து கொண்டும், உப்பினால் அரிப்பில்லாமலிருக்க உடம்பில் எண்ணெய் தடவிக் கொண்டும் இறங்குவார்கள். கட



## ஆச்சாரி - ஆவாரி

ஆச்சாரிப்பட்டமொன்றே நமக்குரியதெனக் கொண்டு மயங்கி, மற்றொருபட்டமும் நம்மவர்கள் கொள்ளலாகாதென்று சிலர் பேசிவருகிறார்கள். இதுபெரும்பிழை. இப்படியே சிலர் விஸ்வப்பிராம்மணரென்று நம்மைச் சொல்லிக்கொள்ள வேண்டுமேயொழிய மற்றொருவிதமாகச் சொல்லலாகாதென்று வாதாடுகின்றனர். இவர்களும் பிழைகாரர்களே. நமது ஜாதிக்குப் பல பெயர்களிருக்கின்றன. ஒன்றுக்கொன்று பரியாயநாமங்களேயல்லாமல் வேறில்லை. ஒன்றைப்போல் மற்றதும் உரித்தானதேயாகும். அப்படியே பட்டங்களும். விஸ்வப்பிராம்மணர், தேவப்பிராம்மணர், பௌருஷேயப்பிராம்மணர், பவித்திரப்பிராம்மணர், விஸ்வகர்மாக்கள் என்று பற்பல விதமாய் வழங்கப்படுதல் கண்டுவருகிறோம். இவற்றில் ஒன்றையே கொள்ளவேண்டுமென்றும் மற்றவற்றை விலக்கவேண்டுமென்றுங் கூறுதல் மூடத்தனமேயாகும். அவரவர்களுடைய அபிமானம் பற்றி ஒவ்வொருவிதமாய்ச் சொல்லுவார்கள். எதிலும் பிசகு கிடையாது: பட்டங்களில் பத்தர் என்பது தஞ்சைஜில்லாவில் விசேஷமாய் வழங்கப்படுகிறது. இனி, 'சாஸ்திரியார்' முதலிய பட்டங்களும் நம்மவர்களுக்கிருத்தல் கவனித்தற்பாற்று. பிராம்மணர்கள் அய்யர், சாஸ்திரி, சிவா, தீக்ஷிதர், ஐயங்கார், சர்மா முதலிய பல பட்டங்களை அவரவர்கள் குடும்ப வழக்கப்படிக்கொண்டு வாழ்வதைக் காண்கிறோமல்லவா? அப்படியிருக்க, நாம்மட்டும் ஒரே பட்டங்கொண்டு வாழ வேண்டுமென்பது பொருந்துமோ! ஆச்சாரிப்பட்டத்தைச் சரியாய் உச்சரிப்பதில் நம்மவர்கள் கவனமாகயிருக்கவேண்டும்.

ஜோஸ்யர்-மு. வேலாயுத ஆச்சாரி,

---

லினுட்சென்று இரண்டுநிமிஷங்களுக்கெல்லாம் வெளிவருவார்கள். இறங்கும்பொழுது கல்லைக் கட்டிக்கொண்டும், முத்துச்சிப்பிகள் பொறுக்கிவர வேண்டிய பையை ஒரு காலில் மாட்டிக்கொண்டும் இறங்குவார்கள். இறங்கியபிறகு தங்கள் இடது காலினால் சிப்பிகளைப் பொறுக்கி நிரம்பச் செய்துகொண்டு; மேல் வருவதற்கு அறிகுறியாகக் கயிற்றை அசைப்பார்கள். உடனே படகிலுள்ள மாலுமிகள் இவர்களை மேலே தூக்கி இழுத்துவிடுவார்கள். சு. மி.

## குடந்தையில் கான்பரன்ஸ்

### குலப்பிரகாசம்

குலமென்றதின் வகையாவன; ஆகமங்களின் முறைப்படி பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என நான்கு வகை. சர்வ சமயத்திற்கும் பொருந்த சித்தாந்தப்படி மேற்குலம் கீழ்க்குலம் என இரண்டு வகையேயாகும். குலம் நான்கென்பது ஆகம முறையேயாகிலும் அவைகளில் மேற்குலம் கீழ்க்குலம் என்ற இரண்டு சாரமே உத்தாரணமாய் நிற்கும். அந்த இருவகையின் விரிவாவன—எவை மேலான கர்மநிலைகள் என்று கருதப்படுவனவோ அந்த மேலான கர்ம நிலைகளையுடையதே மேற்குலமாகும். அவ்வாறின்றி பாபகர்ம நிலைகளையுடையதே கீழ்க்குலமாகும்.

எத்தனை வகையானாலுஞ்சரி; குலம் ஜென்மத்தினாலாவதா? கன்மத்தினாலாவதா? ஜென்மத்தினால் குலமென்பது சாஸ்திரோக்தமாயினும், கன்மத்தினாலாகுவதென்றும் இடங்கொடாமற் போகவில்லை. அதற்குச் சான்றுகளாவன—கன்மமொன்றை அனுஷ்டித்திருக்க ஜாதி மற்றொன்றாயிருக்குமோ? உதாரணமாக சூத்திரனெனப்பட்டவன் கோவில் பூஜை வேதாத்யயனம் தண்ணீர்ப்பந்தல் சர்வஜாதிகளுக்கும் அன்னபானாதி வசதிகொடுத்தல் முதலான வைதீக காரியங்களுக்கு அர்கமாவதுண்டோ! கிடையாது. அந்தந்த வம்சங்கள் தத்தம்குலநிலையும் குலநாமமும் பிளவுபடாவண்ணம் தமக்கேற்ற கன்மங்களையே புரிபவராகுவர்.

ஒரு கல்லானது ஜென்மத்தால் சிலைஎன்ற நாமகரணம் பெற்றிருக்க, அது ஒரு ரூபமாய் கிருத்தியமாக்கப்பட்டபோது சிலாவிக்கிரகமெனப் பேர்பெறும். தூணாகக் கிருத்தியமாக்கப்பட்டபோது ஸ்தம்பம் என்ற பேர்பெறும். அப்படியே ஜென்மம் ஒருவாறாயிருக்க அந்தந்த சமுதாயத்தாரின் கர்மசங்க்ரகத்தால் ஒவ்வொரு குலநாமங்கள் பிரதிபலிக்கப்படுகின்றன. எக்குலத்தோராயினும் புண்ணியம் பெருமை ஆசாரம் நாகரீகச்சிறப்புகள் பொருந்தப்பெற்றுள்ளாரானால் அதுவே மேற்குலமென்று கருதப்படுவது சகஜம். எவர்களுடைய கர்மசாரங்கள் கொலைகளவு அனாசாரநிலையைப் பொருந்தப்பெற்றதோ அவர்கள் ஈனகுலத்தாரெனப்படுவது புதுமையன்று. ஆனதால்

சர்வப்பிராஜாவிர்த்திகள் எவ்வித கர்மதாரிகளாயினும் இவ்விருவகையில் ஓர் வகையைச் சார்ந்தவர்களாகும்.

பொருள் பலம் கல்வி பலமில்லாது நம் வம்சத்தார் பிரபல சமுதாயத்தார்களில் உத்தாரணமாய்நிற்பதற்கு எவ்வளவு தூரமிருக்கிறதென்பதைக் கவனிப்பீர்களாக.

வாதபித்தாதி தாதுக்களின் நிலை அறியக் கூடாமல் சிகிச்சை செய்யப்புகுந்த பண்டிதரால் சுகானுபவம் அடைவிக்க லாகுமோ? அதுபோல் குடந்தை நகர்க் கான்பரன்ஸ் முதலானவைகளில் பொருள் விரயஞ் செய்து அல்பகாலம் வெறும்கிளர்ச்சியைப் பெற்றிருப்பதைப்பார்க்கிலும் அவைகளில் விரயமாகக்கூடிய ஓராயிரத்திற்குக் குறையாத பொருள்களைப் பண்டாக நிலை நிறுத்தி பாடசாலை முதலான மூலகாரியங்களைச் செய்வதால் பயன் பெறுமென்பதில் சந்தேகமுண்டோவென்பதைக் கவனிப்பீர்களாக.

ஆங்கிலம் சமஸ்கிருதம் திராவிடம் சிற்பம் யந்திர சூஸ்திரங்கள் கற்பித்துத் தரக்கூடிய பாடசாலைகள் நம்மில் ஏற்பட்டு அதற்கான மூலதனங்களும் தனிகர்களால் நியமிக்கப்பட்டு அதனின்றும் நம்குலச்சிறுவர்கள் கற்றுத் தேறிவருவதானால் எவ்வளவு சிறந்த நிலைமையாயிருக்கு மென்பதைக் கவனிப்பீர்களாக. தனபலமின்றி ஒருகாரியமும் நடைபெற இயலாதென்பதைக் கவனிப்பீர்களாக.

குலவிர்த்தியான நாகரீகங்களில் முழு மனதுடைய நாட்டாண்மைக் காரியஸ்தர்கள் எவ்வூரிலும் நியமனமாகப்பெற்று கோர்ட் வியவகாரங்களில் அலக்கழிப்பதைவிட்டு பஞ்சாயத்து மூலமாகவே வியவகாரங்கள் தீர்மானிக்கப் படுவதென்ற திட்டமாகப் பெற்று குலோபகார குணமுடைய நாட்டாண்மைக் காரியஸ்தர்களின் அதிகாரம் உத்தாரணமாக நடக்கலாகியும் இருக்குமானால் குலச்சிறப்புகள் பலிக்கு மென்றதை நம் வம்சாபிமானிகளே! கவனிப்பீர்களாக.

சாலிவாடிபுராதீனம்-தர்மபதி.

## சமபந்திபோஜன சந்தேகன்

குடந்தைக் கான்பரன்சில் சமபந்திபோஜனம் நடைபெறுமாறு ஏற்பாடு செய்திருக்கும் விஷயம் ஒற்றுமைக்கு உற்றவழியாயிருக்கிறதென்பதைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனினும், கடந்த 16-வது பிரசுரம் 229-வது பேஜில் ஸ்ரீ செயூர். K. இராமசாமி ஆச்சாரியாரவர்கள் எழுதியுள்ள "சமபந்திபோஜனத்தடைகள்" என்ற வியாசத்தின் கீழ்க்கண்ட விஷயமாய் சபையாரவர்களும் குடந்தையர்ரும் எவ்விதத் தீர்மானத்தின் பேரில் அமுலுக்கு கொண்டு வருவார்களோ என்னும் சந்தேகமுள்ளவனாயிருப்பதால், இவ்விஷயமாய்த் தெரிந்த குலப்பிரமுகர்கள் மூலமாய் இதற்கு ஒருவிமரிசை ஏற்பட்டுவிட்டால் நம்மவரின் ஆக்ஷேபனையுடன் பிறஜாதியாரின் பரிகாசமும் அறவே ஒழிந்துபோமெனும் ஆவலுடன் இதை எழுதினதே தவிர, குலமேதாவிகளின் புத்திக்குப்படாத சந்தேகமொன்றை நான் சுட்டிக்காட்ட வந்தேனில்லை. நம் குலசகோதரர்களில் பெரும்பாலார்க்கிருக்கும் இச்சந்தேகத்திற்கு ஓர் சமாதானம் கான்பரென்சிற்குள் வெளிப்பட்டால் மிக்க அநுகூல மேற்படுமென்று நம் குலோத்தாரணக் குரிசிலவர்களையும் நான் மன்றாடி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஷை ஸ்ரீ K. இராமசாமி ஆச்சாரியாரவர்களின் வியாசச்சுருக்கம்.

1. சூத்திர ஸ்திரீகளுக்கு உற்பவித்த அனுலோமப் பிரதிலோமர்களும் பந்திபோஜனத்திற்கு வருவார்களென்பது.

2. அவர்களைப் பிறப்பின் மூலம் தெரிந்தோர் தவிர மற்றவர்கள் ஐயப்படாத அவ்வளவு ஆசார அனுஷ்டான கோத்திர சூத்திர நியம அனுஷ்டானமா யிருக்கிறார்களென்பது.

---

இவ்விஷயங்களுக்கு சமாதானம் தெரிவிப்பதுடன் கான்பரென்சிலும் இச்சந்தேகத்திற்கிடந்தராத சில தீர்மானங்கள் செய்யவேண்டுமென்பதே என் முக்கிய பிரார்த்தனை.

இண்டூர்-பேரமாச்சாரி.

---

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம்.



## நமது வாசகர்கள்

(கடிதக்காரர் தங்கள் அபிப்பிராயங்களுக்குத் தாமே ஜவாப்தாரிகளாவர்.)

### குலத்தைக் கெடுக்குங் கோடரிக்காம்பு.

சென்ற ஏப்பிரல்மாதத்திய (ஏழாவது) சஞ்சிகையில் 18-வது பக்கத்தில் M. S. A. மேலேகண்ட ஹெட்டிங்கின்கீழ் சில வினாக்கள் கேட்டிருக்கிறார். அவைகளுக்கு விடைகள் கீழே யெழுதப்பட்டிருக்கின்றன.

நம் ஜாதியில் சிலர் மதுபானஞ்செய்வதாயும், துராசாரமான நடவடிக்கைகளைப்பற்றினவர்களாயும் இருக்கிறார்கள். அதற்கு நாம் என்னசெய்கிறது?—"உலகம் பலவிதம்". உலகில் ஆசாரமாயிருப்பவர்களுமுளர், அனாசாரமா யிருப்பவர்களுமுளர். வீணில் பாவியென்றும், படுபாவியென்றும் தூஷிப்பது அறிவின்மை. அதற்கு என்னசெய்யவேணுமென்றால், நம் குலாபிவிர்த்தியில் ஊக்கங்கொண்டவர்கள், ஆங்காங்கு குலாபிவிர்த்தியைப்பற்றி உபன்னியாசங்கள் செய்வதே!

### வினா—விடை

1. என்றாலும் நம்மவர்கள்தப்பி நடப்பதற்கு அது சமாதானமாகுமா?

ஆகாது.

2. அனாசாரிகளைக் கண்டிக்கவேண்டாமா?

கண்டிக்கவேண்டும்.

3. யார் கண்டிப்பது?

அறிவுடையோர்கள்.

4. யாருக்கு இவர்கள் அடங்குவார்கள்?

அறிவுடையோர்களுக்கும் அவர்கள் செய்யும் உபன்னியாசங்களுக்கும்.

5. எப்படி அடக்குவது?

குலாபிவிர்த்தியைப்பற்றிய உபன்னியாசங்களினாலும் நற்போதனைகளாலும்.

6. அடக்காவிட்டால் குலப்பழி எப்படி நீங்கும்?

அடக்காவிட்டால் நீங்காது.

7. நீங்காவிட்டால் நமது உயர்குலப் பெருமை நிலைப்பதெப்படி?

குலப்பழி நீங்குவதற்கான உபன்னியாசங்களினாலும், சபைகள் அநேக இடங்களில் கூடுவதினாலும், சபைப் பிரசுரங்களினாலும், கல்வியினாலும் இன்னும் அநேகவித நற்செய்கைகளினாலும்தான். K. C. K.

## கிளாக்குளம் குலாபிமான மாணாக்கர்கள்

திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலூக்கா வீரக நல்லூரை சேர்ந்த கிளாக்குளம் என்னும் ஊரில் விஸ்வப்பிராம்மணர் வீதியில் எங்கள் பெரியோர்களால் சுமார் 7 வருஷத்திற்குமுன் ஸ்ரீமத் சுப்ரமண்ய ஸ்வாமி தேவாலயம் ஒன்று நம் வம்ஸஸ்தர்களுக்கு பாத்தியதையாக பிரதிஷ்டைசெய்து அர்த்தமண்டபம் மஹா மண்டபம்வரையில் மூடிந்திருக்கிறது. பிரம்மஸ்ரீ சங்காலிங்கம் ஆச்சாரியார் குமாரர் ஆறுமுகம் ஆச்சாரியார் அவர்களாலும் இன்னும் சில முக்கியஸ்தர்களாலும் ஷை மண்டபத்தில் இராத்திரி பாடசாலை நேமனம் செய்து 6 மாதம் வரையில் மூஷிகவாகனம் சரஸ்வதி தோத்திரம் வரையில் 5 பிள்ளைகள் வாசித்துக்கொண்டிருந்தோம்..

பிறகு ஆறுமாதம் ஆனவுடனே உபாத்தியாயர் தன்னூருக்குப் போய்விட்டார். அந்த சமயம் மஞ்சகுப்பம் ஜில்லா கூடலூர் தாலூக்கா நெல்லிக்குப்பம் சோழவல்லி விஸ்வப்ராம்ம சந்ததியார்களின் பூர்வமாகிய ஸ்ரீ வாசித்தி விநாயகர் சந்நிதானத்தின் தர்ம்மகர்த்தரும், குலாபிமானியுமாகிய பிரம்ம ஸ்ரீ க. ச. வை. பௌத்திரரிஷி மாணிக்கம் ஆச்சாரியார் திருப்பணமருதூருக்குச் சமீபத்திலுள்ள நந்தன்தட்டை கவுல் பாரை என்னும் இடத்தில் நம் குலத்தின் முன்னோர்களால் நந்தராஜனுடைய குமாரனுக்கு விவாகத்திற்காக கற்பந்தல் நிர்மாணம்செய்த இடமென்று உலகம் வழங்குகிறதை முன்னிட்டும் அப்பாறையில் சுமார் 1 கெஜம் விஸ்தீரணம்ஓர் சிலாசாசனமும் ஒரு கெஜ அகலம் இரண்டு கெஜநிகளம் ஓர் சிலா சாஸனமும் இருப்பதாக கேள்வியுற்று தான் நேரில் போய் பார்த்து விட்டு எங்கள் ஊருக்கு வந்தார்.

ஷை, பிரம்மஸ்ரீ. ச. ஆறுமுகம் ஆச்சாரியாரும் இன்னும் சிலரும், எங்களில் சில சிறுவர்களை, சென்னை சிந்தாதிரிபேட்டையில் நம் குலத்திற்காக நேமித்திருக்கும் பாடசாலைக்கு அனுப் பிக்கவேண்டும் என்று ஷை ஸ்ரீ. மாணிக்கம் ஆச்சாரியாரிடம் பிரயத்தனம் செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். ஷை யார் சொன்னதாவது, இப்போது சென்னைப் பாடசாலையில் வெளியூரிலிருந்து போய் வாசிக்கக்கூடிய பிள்ளைகளுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்து ஆதரிப்பதற்கு கூடிய சமயம் இல்லையென்றும், நீங்கள் அப்படிச் சிறுவர்களை வெளியூர்க்கு அனுப்பி வாசிக்கவைப்பதாயிருந்தால்

ளுக்குப் போதுமானபடியே சமைத்து வைத்துத் தண்ணீர்கொண்டுவரப் புழக்கடைக்குப் போயினேன்; அதற்குள் ஏதோ ஒருசொறிநாய் வந்து அதிற் கொஞ்சந் தின்றுபோயிற்று; கைம்பெண் பேதை, யான் என்னசெய்வேன்? பொறுத்துக்கொள்ளுங்களென்று உபசாரவார்த்தை சொல்லினள். இது கேட்ட பார்ப்பானே திடுக்கிட்டு லபோ லபோவென்று வாயிலும் வயிற்றிலுமடித்துக்கொண்டு முதலாவது பறையன் எச்சில், இரண்டாவது சூதகத்தீட்டுக்காரி எச்சில், மூன்றாவது சொறிநாய் எச்சில், இப்படி ஒன்றின்மேல் ஒன்று அசுத்தமே நேரிட்டு வருவதனால் இனி யெங்கும் உணவுகொள்வதுமில்லை; சயனிப்பதுமில்லை என்று மனவுறுதிகொண்டு நேரே கங்கைக்கரைக் கேகிக் கங்கையைத் தரிசித்து மணிகர்ணிகா கட்டம் முதலான துறைகளில் பிராமணர்கள் அநேகர் ஸ்நானம்செய்வதும் பூஜை நடத்துவதும் புராணம் படிப்பதுமா யிருப்பதினால், அவ்விடங்களிற் சென்று தன் பாவங்களுக்குச் சங்கற்பஞ்செய்துகொண்டு ஸ்நானஞ்செய்ய வெட்கப்பட்டுச் சிறிதுதூரத்திலிருந்த ஓர் துறையில் முழுக எத்தனித்தனன். அத்துறை பறையர் தங்கள் இனத்தாருடைய பிரேதங்களின் எலும்புகளை கொணர்ந்து போட்டுவிட்டு முழுகிப்போம் இடமாயிருந்தது. ஐயோ! இப்பேதைப் பார்ப்பானுக்கு அது தெரியாமல் ஆழமான நீரிலிறங்கி அமிழ்ந்து அகமருஷண சூக்தம் சொல்லிக்கொண்டிருக்கையிற் சில புலையர் கடத்தில் எலும்பைக்கொணர்ந்து அதில் எறிந்துவிட்டுத் தாங்களும் முழுகி எழுந்தனர்கள். இதற்குள் இவ்வேதியனும் மந்திரம் முடித்து எழுந்திருக்க இப்பறையர்கள் அவனைக் கட்டிக்கொண்டு, எங்கள் அப்பனே! வீட்டிற்கு வா! போவோமென்று வலிமை செய்தார்கள். ஐயையோ! நான் பிராமணன், உங்களவனல்லேன், என் மார்பிற் பூணூலைப் பாருங்களென்று கூக்குரலிட்டுக் கூவினான். அவர்கள் பிடித்தபிடி விடாமல் "உங்கள் அப்பனிறந்தால் பிராமணருக்குப் பசு தானங்கொடுத்து அவனெலும்புகளைக் கங்கையாற்றி லெறியுங்கள், உடனே அவன் நல்ல ஜனனமெடுத்துக் கரையேறுவா"னென்று எங்கள் பிராமண குருக்கள் சொல்லிப் பசுதானம் பெற்றுக்கொண்டார்கள். அப்படியே நீ பிராமண ஜனனமெடுத்துக் கரையேறினாய்; உன்னை யாங்கள் விடமாட்டோம்; நம்முடைய வீட்டிற்குவந்து சேகரித்து வைத்த நல்ல உணவுகளைச் சாப்பிட்டு திருப்தியடைந்து பின்பு தனித்திருவென்று நிர்ப்பந்தப்படுத்தினார்கள். பார்ப்பான் குய்யோ முறையோவென்று கூவித் தன்தலையில் அடித்துக்கொண்டு அலறி அழுதான். அப்போது கரையிற் போகவர இருந்தவர்களும் அதிகாரிகளும் வந்து நடந்த சங்கதிகளை விசாரித்து அவனை விடுவித்து இப்பறையர்களை நோக்கி அடா! புத்தியீனர்களே! உங்கள் குருக்கள் சொன்னது மறு ஜனனத்திற்காம்; கரையேறுவதென்பது பாவத்தில் நின்றும் நீங்குவதற்காமென்று சொல்லி அனுப்பிவிட்டனர். பறையர்கள் ஐயோ! பசுக்களைப் பறிகொடுத்தோமேயென்று ஓலமிட்டுக்கொண்டே திரும்பினர்கள். பிராமணன் கங்காநதியில் மூழ்கி வீடுபோய்ச் சேர்ந்தான்.

## அதிமதுரம்

காளமேகப்புலவர் அக்கிராரத்தில் ஒருபெண்ணைத் தாகத்திற்கு ஜலம்கேட்க அந்தம்மாள் ஒரு கெண்டியில் ஜலம்கொண்டுவந்து கொடுத்தனள். இவர் அதை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு பாத்திரத்தைக் கீழேவைத்த வுடனே அவள் புளியைத் தெளித்து அப்பாத்திரத்தை விளக்க அதுகண்டு நகைத்து "அம்மணி உன் பெயர் யாது?" என்ன அவள் "ஐயா, என் பெயர் தங்கம்" என்று சொன்னதும்,

கோத்திரத்துப் பாவாய் குலத்திற் பிறந்தவளே
சாத்திரமெல்லா முணர்ந்த தங்கமே-சூத்திரர்தங்

வருஷசந்தா ௨ இரண்டேரூபா.

ஸ்ரீமத்விராட்விஸ்வகர்மணேநம:.

# விஸ்வகர்மன்

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப்பத்திரிகை
462, தங்கசாலை வீதி, சென்னை.

விஸ்வகர்மாமஹாபாகோஜஜ்ஞேசில்பப்ரஜாபதி: கர்த்தாஶில்பஸஹஸ்ராணாம்திரிதஶாநாஞ்சவர்தகி:-
பூஷணாநாம்ச ஸர்வேஷாம் கர்த்தாசில்பவதாம்வர: யோதிவ்யானி விமானானி திரிதஶானாம்சகாரஹ-.
மனுஷ்யாஸ்சோப ஜீவந்தியஸ்யசில்பம் மஹாத்மன: பூஜயந்திசயம்நித்யம் விஸ்வகர்மாணமவ்யயம்-
மஹாபாரதம், ஆதிபர்வம், ஸம்பவபர்வம், 66-வது அத்தியாயம், 29-30-வது ஸ்லோகங்கள்.

சம்புடம் I. ஜனவரி 1914. சஞ்சிகை 4.

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ உபதேசம்.

1. ஒரு ஸ்திரீயும் அவள் புருஷனும் துறவிகளாகித் திவ்யதேசயாத்திரை செய்துவந்தனர். ஓரிடத்தில் புருஷன் முன்னும் ஸ்திரீ பின்னுமாக நடந்துசெல்லும்போது, வழியிலே ஒருவைரக்கல் கிடக்கப்புருஷன்கண்டான். தன்மனைவி அதைக்காண்பாளாகில், அவளுக் கொருகால் அதன்மீது ஆசைபுண்டாகித் துறவுக்குபங்கமுண்டாகுமோவென்று பயந்து, அவன் உடனே அந்தவைரத்தை மண்ணுக்குள் தன்காலால் மறைக்கலாயினன். இப்படிச் செய்துகொண் டிருக்கும்போது ஸ்திரீ நெருங்கி விசாரிக்க, அவனேதோ சாக்கு சொன்னான். அவள் வைரத்தைக்கண்ணுற்று விட்டு தன் புருஷனுடைய நோக்கங்கண்டவளாய்--"மண்ணுக்கும் மணிக்கும் வித்தியாஸமின்னு முமக்குத்தோன்றுகிற தாயின் உலகத்தை ஏன் விட்டீர்?"-என்று கேட்டாள்.

2. பர்ட்வான் சமஸ்தான வித்வான்களுக்குள், ஒருகாலத்தில், சிவன் விஷ்ணுவென்னு மிருதேவர்களில் எவர் மிகுந்தவரென்னும் வாதம் ஏற்பட்டது. சிலர் சிவனே பெரியதெய்வமென்றும், மற்றவர் விஷ்ணுவே பெரியதெய்வமென்றும் வாதாடினார்கள். இந்தவாக்குவாதம் மிக மும்முரப்பட்டபோது, அறிவின் மிகுந்த பண்டிதரொருவர் "நான் சிவனையுங் காணவில்லை, விஷ்ணுவையுங்காணவில்லை, இவர்களில் எவர் பெரியவரென்று நான் எப்படிச்சொல்லக்கூடும்!" என்றார். ஆகையால், ஓமானுஷா! ஒரு தெய்வத்தோடு மற்றொன்றை ஒத்திட்டுப்பார்க்க விரும்பாதே. அவற்றுளொன்றைக் காண்பாயானால், அதுவும் மற்றதும் ஒரே பிரம்மத்தின் ரூபங்களென்பதை யறிவாய்.

# வித்தியாப்பியாசம்.

எக்காலத்திலும் எந்த தேசத்திலும் நாகரீகத்துக்கு முக்கியமான காரணம் வித்தையேயாம். நாகரீகமாவது மனிதன் சுகதுக்கங்களுக்கு வேண்டிய சாதனங்களைத் தேடிக்கொள்ளும் சக்தியைக் கொடுக்கும் நிலைமை. மனிதனது சுகம் காலதேசங்களுக்குத் தக்கபடி வித்தியாசப்படும். துக்கங்களும் அவற்றைக்களையும் முயற்சிகளும் அவ்வாறேயாம். அநாகரீகமான மனிதர்களுக்குள் சுகதுக்க உணர்ச்சிகள் அதிகமில்லை. மிலேச்ச ஜாதிகளுக்கும், காட்டில் வசிப்போருக்கும் தங்கள் தேகம் மறைய வஸ்திரம்வேண்டுமென்று தோற்றுது; நல்ல வீடுகளும், நல்ல உணவு முதலானவைகளும் தேடிக்கொள்ளவேண்டுமென்ற உணர்ச்சி உண்டாவதில்லை. நாகரீகம் பெற்ற தற்கால மனிதஜாதிகளுக்கும், நாகரீகமற்ற பூர்வமனிதர்களுக்கும், இப்போது அன்னிய நாடுகளில் வசிக்கும் மிலேச்சஜாதிகளுக்குமுள்ள முக்கிய வித்தியாசம் இதுதான். புத்தித்தேர்ச்சிக்கும், சரீர சவுக்கியாபிவிர்த்திக்கும் வேண்டிய சாதனங்களை ஒவ்வொருநாட்டிலும் இக்காலத்து மனிதர்கள் ஓயாமல் தேடி அமைத்துக் கொள்ளுகிறார்கள். மனம்போன வழியில், விர்த்தியடைவதே முழுநோக்கமாகக்கொண்டு இடைவிடாமல் உழைப்பது எப்போதும் மனிதரது இயல்பு. நாகரீகத்தேர்ச்சி பெற்ற ஜாதிகளில்பேர்போனவர்கள் ஐரோப்பியர். ஐரோப்பாவில் இங்கிலாந்து, பிரான்சு, ஜர்மனி, இடலி இந்த ராஜ்ஜியங்கள் நாகரீகத்தில் முக்கியமாகப் பேர்போனவை. தற்காலத்தில் அமெரிக்காவும் ஜப்பானும் நாகரீகமுதிர்ந்த தேசங்களென்று இவைகளோடு சேர்த்து மதிக்கப்படுகின்றன. இத்தேசங்களில் ஜனங்கள் சுமார் 50 வருஷங்களுக்குமுன் இருந்த ஸ்திதியில் இப்போது இருக்கவில்லை. மனிதசமூகஸ்திதிக்கு வேண்டிய எல்லா விஷயங்களிலும் இத்தேசத்தோர்கள் வேற்றுமை அடைந்து வருகிறார்கள். துரைத்தனம், கைத்தொழில், வியாபாரம், உணவு, உடை, கல்வி, வித்தை, நாகரீகம் முதலியவைகளில் முன்னிருந்தது போலில்லாமல் மேன்மேலும் விருத்தியடைந்துகொண்டே வருகிறார்கள். ரயில், தந்தி, கைத்தொழில், யந்திரம், நீராவிக்கப்பல், மதம், கொள்கை முதலியவற்றிலும் வேற்றுமையும் விருத்தியுமே உத்தேசமாகக்கொண்டு உழைக்கிறார்கள். ஊக்கத்தாலும், அறிவு நுட்பத்தாலும், புதிது புதிதான காரியங்களையே செய்யவேண்டுமென்ற அவாமேலிட்டு பல அந்நிய தேசத்தாரோடும், தூரதேசத்தாரோடும், அச்சம் அருவெறுப்பில்லாமல் பழகித் தங்கள் நன்மையை விருத்திபண்ணுகிறார்கள். நாகரீகம்பெற்ற ஜாதிகளுக்கு வேறுதேசத்தாரோடு பழகுவதில் அச்சமும் அருவெறுப்புமில்லை. இவ்வாறு அந்நிய சாவகாசபலத்தினாலும் தங்கள் புத்திப்பயிற்சியின் பலத்தினாலும் அவர்கள் நிலை பலவிதத்திலும் மாறுதலடைந்து பேன்மேலும் விருத்தியடைந்து கொண்டேவருகின்றது. இவ்வாறு மாறுதலின் உத்தேசம் தங்கள் நாட்டுக்கும், ஜாதியார்க்கும், ஒவ்வொரு மனிதனுக்கும் சுக சாதனங்கள் விருத்தியாகி, துக்கங்கள் குறைந்து, நாகரீகம் மேம்படவேண்டுமென்பதேயாம். ஏற்கனவே தனிகரானவர் இன்னும் தனம் சேர்ப்பர், ஏழைகள் மிடிமைகுன்றிச்சீர்படுவர். தனவான்கள் ஏழைகளது துக்கத்தை நீக்க முயலுவர்; ஏழைகள் தங்கள் சொந்த முயற்சியினாலே திருந்தும் வழிகளை ஆராய்ந்தறிந்து தமக்குள் மற்றோர்க்கும்போதித்து ஒன்றுகூடித் தம்முயற்சியாலும், தனவான்கள் சகாயத்தாலும் மேன்மைப்படுவர்.

இவ்வாறு ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய பிற நாடுகளில் நடந்துவருவதற்கு வித்தியாபிவிர்த்தியே காரணம். நாகரீகமற்ற தேசங்களில் அறிவுபரவவேண்டுமென்ற பொறுப்பு ஒருவருக்குமுண்டாவதில்லை. நமது தேசமோவெனில் பூர்வீகத்தில் பலநூற்றாண்டுகளுக்கு முன்னம், நாகரீகத்திலும், வித்தையிலும் அதிக தேர்ச்சிபெற்று மேம்பாடடைந்திருந்ததாக நாம் சரித்திரவாயிலாக அறிகிறோமேயொழிய தற்கால ஸ்திதியைக் கவனிக்கும்போது அது முன்னிருந்த நிலைமையும் சீரும் குன்றி, நாகரீகத்திலும், வித்தையிலும், கைத்தொழிலிலும், மேற்சொல்லிய பலதேசங்களோடு ஒப்பிட்டுப்பார்க்க மிகவும் கேவலமான ஸ்திதியிலிருக்கின்றது. இதற்குக் காரணம் யாதெனில் நாகரீகத்துக்கு முக்கிய காரணமாகிய வித்தைகைத்தொழில் இவைகளைப்பரவச்செய்து அறிவு மேன்மேலும் பெருகவேண்டுமென்ற அவாவும் பொறுப்பும் நம்மிந்தியர்களுக்கு அதிகமாய் இல்லாமையேயாம். காருண்யம் நிறைந்த நமது ஆங்கிலேய துரைத்தனத்தார் கல்விச் சாலைகளும் கைத்தொழிற் சாலைகளும், கலாசாலைகளும் ஸ்தாபித்திருப்பதின் பொருட்டன்றோ நமக்கு எள்ளளவாயினும் அறிவுதோன்றி நமது குறைகள் என்னென்னவென்றும் அவைகளைத்தீர்க்கவழிதேடவேண்டுமென்றும், உணர்ச்சி உண்டாவது. துரைத்தனத்தார் பல ஜாதியார்கட்கும் பொதுவான மார்க்கங்கள் தேடி அவர்கள் மேன்மைப்பட சாதனங்கள் அமைப்பார்களேயொழிய, ஒவ்வொரு ஜாதியர்க்கும் தக்கவாறு அமைப்பது அசாத்தியம். ஆகவே, ஒவ்வொருவரும் தம் தம் குலநிலையைச்சிந்தித்து அக்குலத்தோர் சீர்படுவதற்கான வழிகளை ஏற்பாடுசெய்துகொள்ள வேண்டியது அக்குலத்தினர்களுடைய பொறுப்பேயாம். அவ்வாறு ஒவ்வொரு குலத்தினரும் ஏற்படுத்திக் கொள்ளும் வழிகள் பொதுவாகத் தேசநன்மைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் வழிகளுக்கு சார்பானதாயிருக்க வேண்டுமேயொழிய, விரோதமானவைகளாயிருக்கக் கூடாது.

மேற்சொல்லிய பல உண்மைப்பொருள்களைக்கொண்டு நமதுஜாதியாகிய விஸ்வகர்மவம்சத்தை ஆராய்ந்துபார்க்குமளவில் நமது ஸ்திதி எவ்வாறு இருக்கின்றது? தற்கால நாகரீகத்தில் நமது நிலைமையானது மிகவும் தாழ்ந்திருக்கின்[illegible]

கொள்ளவேண்டும். ஏனெனில் நாகரீகத்துக்கு முக்கிய காரணமாகிய வித்தையில் நாம் எவ்வாறிருக்கின்றோம்? அன்னிய ஜாதியார்களில் நூற்றுக்கு, 40, 30, 25 20, 10, வரையில் கல்விபெற்றோர் இருக்கக்காண்கிறோம். நம்மவர்களிலோ கல்வியுடையோர் 100-க்கு ஒன்று, இரண்டுக்கு அதிகமேயில்லை. இதற்குக் காரணம் நாம் பெரும்பான்மையாய்க் கைத்தொழிலையே அப்பியசித்து வருவதால் பொதுக் கல்வியும் உயர்தரக் கல்வியும் அடைய ஏதுவில்லை என்று சிலர் சொல்லக்கூடும். கைத்தொழில்களும் வித்தையினால் மேன்மை அடையவேண்டுமே யொழிய வித்தையின்றிப் பயன்படா. கைத்தொழில் சம்பந்தமான வித்தையைப் புகட்டிப் பெருக்குவதற்கும், அத்தொழில்களை மேன்மைப்படுத்தி கௌரவப் படுத்துவதற்கு மானமுயற்சிகள் நாளதுவரையில்நாம்என்ன செய்திருக்கிறோம்? ஒன்றுமில்லை. அறிவு விருத்தி அடைந்தால் தொழில் விருத்தியடையும். அதுபற்றித் தொழிலைச் சேர்ந்தவித்தையும் பெருகும். ஆகையால், எவ்விதமான வித்தையிலும் மேன்மைப்படவேண்டுமானால் பொதுக்கல்வி சிறிதேனும் வேண்டும். உயர்தரக் கல்வி இல்லாவிடினும், பிரதம, மத்திம கல்விகளிலும் (Primary and Secondary Education) நம்மவர்களில் ஒவ்வொருவரும் தேர்ச்சியடையவேண்டும். ஆண்பிள்ளைகள் கல்வித் தேர்ச்சியடைவது மாத்திரமில்லாமல் பெண்பிள்ளைகட்கும் அவ்வாறே கல்விபுகட்டவேண்டும். இவ்விதம் செய்தால் நமது கைத்தொழிலுக்குச் சிறந்த பலமுண்டாகும். நாம் நாகரீகத்துக்கும், விருத்திக்கும், மேன்மைக்கும் பாத்தியமுடையவர்களாவோம். கண்ணியமும், மதிப்பும், கௌரவமும், நமக்கு உண்டாகும். ஏனைய ஜாதியார் அவ்வாறு அநுபவிப்பதை நாம் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம். அவ்வாறே நமக்கும் நன்மை உண்டாகும் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

இவ்வாறு நமக்குள் கல்வி அபிவிருத்தி தேடிக் கொள்ளுவதற்கு நம்மவர்களுள் தனவான்களும் ஏழைகளும் ஒன்றுகூடி உழைக்கவேண்டும். பொது நன்மையைக்கருதி ஒவ்வொருவரும் தங்களாலியன்றவரையில் உழைக்கவேண்டும். பிரசங்க காலக்ஷேபங்கள் மூலமாய் ஜனங்களுக்கு நல்வழியைப் போதிக்கவேண்டும். புஸ்தகங்களும் பத்திரிகைகளும் இயற்றி ஒவ்வொரு வீட்டிலும் பரவச்செய்து ஆண்களுக்கும், பெண்களுக்கும், அறிவு விருத்தியடையச்செய்யவேண்டும். நல்லுணர்ச்சியும் நல்லறிவும் எல்லோர்க்கும் பெருகவேண்டும்.

M. ஜீவரத்தின ஆச்சாரி, பி.ஏ.,

---

ஏஜெண்டுகளுக்கு நல்ல கமிஷன்.

நமது பத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுக்க ஒவ்வோரூரிலும் தக்க ஏஜண்டுகள் வேண்டும். இவர்களுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும். விருப்பமுடையோர் விபரத்திற் கெழுதுவார்களாக.

மானேஜர்.



# தென்னிந்திய சிலாசாசனங்கள்.

இத்தலைப்புள்ள வியாசத்தை சென்ற நவம்பர்மாதத்து 2-வது நெம்பர் சஞ்சிகையில் கண்ணுற்று மிகவும் ஆனந்தமடைந்தேன். சிலா சாஸனங்களை நம்பத்திரிகை வாயிலாக வெளியிடுவது சர்வஜன மனோபகாரமா யிருந்தாலும், அவற்றில் நம்மவர்களுக்குச் சம்பந்தப்பட்டவற்றை யாராய்ந்து ஒன்றன் பின்னொன்றாய் வெளியிட்டுவருவது உசிதமாய்த் தோன்றுகின்றது. நமது சபையின் கடந்த பிரசுரங்களில் "சிலாசாஸனங்களில் நம்மவர்களை இழிவாகக் கூறியிருக்கிறது" என்று நண்பர்கள் எழுதியிருக்கிறார்கள். அவற்றில் அப்படிக்கூறியிருப்பது நம்ஜாதியைப்பழிக்கவேண்டுமென்கிற எண்ணத்தினாலல்ல. அவை ஏற்பட்ட காலத்தில் இப்பிராந்தியத்திலிருந்த தொழிலாளிகளின் யோக்கியதை அத்தன்மைத்தானதா யிருக்கலாம். பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்னும் நான்கு வருணத்தாருக்கும் தங்கள் குடும்பங்களில் ஊழியஞ்செய்கின்றவர்களுக்கு குடிமக்களென்று பெயர். இக்குடிமக்கள் மேல்கண்ட நான்குவருணத்து ஆண்பெண்கள் தம்மில் முறைமாறிப்புணரத் தோன்றிய மிசிர வருணத்தாராவார்கள். இவர்களில் ஒரு வகையாரே சிலா சாஸனங்களில் இழிவாகக் கூறப்பட்டிருப்பவர்கள். இது ஸ்மிருதி சம்மதம். இவர்களை விஸ்வகர்ம வமிசத்தாரெனக்கொண்டு நம்மைஇப்படி சாஸனங்களில் இழிவாக எழுதியிருக்கிறார்களென்று விஸ்வகர்ம சந்ததியாராகியநாம் நினைக்கலாமா? தமக்கிழிவுண்டாக்குவதானால் ஆலயங்களில் நம்முன்னோர்கள் சாஸனங்களை யெழுதுவார்களா? அல்லது எழுதப் பார்ப்பார்களா? இதை நண்பர்கள் யோசிக்கக் கடவர்கள். அக்காலத்தில் இருந்த இழிகுலத் தொழிலாளிகளின் தன்மை நமக்கு நிதரிசனமாகும்படி அப்படிப்பட்ட சாஸனங்களும் வெளியிடத்தக்கனவே, நம்மவர்களை உயர்த்தி எழுதப்பட்டிருக்கும் சாஸனங்களும் வெளியிடத் தக்கனவே.

தேவாலயங்களில் பூசைசெய்கிற குருக்களுக் கிருப்பதுபோல நம்மவர்களிற் சிற்பாசாரியர்களுக்கும் மூலஸ்தானத்துக்குள் பிரவேசிப்பதற்கும், விக்கிரகங்களைத் தொடுவதற்கும் சுதந்தர முண்டென்று ஆகமங்களிற் கூறியிருப்பதாய் நாம் நம்புகிறபடி, ஆலயங்களில் குருக்களுக்கும் சிற்பிகளுக்கும் உரிமை யுண்டென்பது தோன்ற அடியில் காட்டப்பட்ட சிலா சாஸனத்தின் பாகமானது நிரூபிக்கிறது. "விஜய ராஜேந்திர மண்டலத்துக் குவளாலநாட்டுக் குவளாலத்துப் பிடாரியார் கோயிலிலுள்ளால் திருச்சுற்றுமண்டபத்துக் கோயிற்கருமயாராயா விருந்து இத்தேவர் தேவதானமான ஊர்களால் வந்த மாடைநெல்லாக்கி இத்தேவர்க்கும் பதிவாத மூலப்பட்டுடைய பலபணி நிவந்தக்காரருக்கும் நிவந்தஞ்செய்தபடி யுண்டோவென்று இத்தேவர்க்கு மாடாபத்தியம்

செய்கிற கன்னடபண்டிதரையும் பதிவாதமூலப்பட்டைய பஞ்சாசாரியத் தேவகன்மிகளையுங்கேட்க"-இது பிலவங்கவு கார்த்திகைமீ செந்தமிழ் தொகுதி 6 பகுதி 1, 50 வது பக்கத்தில் காட்டியிருக்கிறது. இச்சாஸனத்தை முழுதும் பார்க்கவேண்டுமானால் S. I. I. Vol. III. p.137 புத்தகத்திற் குறிப்பிட்ட இடத்திற் காணலாம். இதைப்போன்ற சாஸனங்களும் நண்பர் ஆராய்ச்சியிற் புலப்பட்டு வெளிப்படுமென்று எதிர்ப்பார்க்கப் படுகிறது. இது நிற்க, இத்தேசத்தில் தச்சு, கருமாரம், தட்டாரமுதலிய தொழில்செய்து வரும் எல்லா ஜனங்களும் விஸ்வகர்ம சந்ததியாராகிய ஒரேஜாதியாரென்று சொல்லத் துணிவதற் கிடமில்லை. சிலர் பிராம்மணரைப்போலும், சிலர் வைசியரைப்போலும், சிலர் சூத்திரரைப்போலுங் காணப்படுகிறார்கள். அனுபவத்தோற்றம் இப்படியிருக்க இதற்கிணங்கவே சாஸன ஆதாரங்களும் நூலாதாரங்களும் இடந்தருகின்றன. அவற்றில் நம்மைக்குறித்து சிலாகிக்கப்பட்ட இரதகாராதிகரண விசாரம் என்னும் நூலின் முதலாவது பிரஸ்னோத்தரத்தில் நிடாதக் கம்மியரென்னும் ஓரிழிகுலத்தா ருண்டென்றும், அவர்களுக்கு வேதாதிகார வைதிகாசாரங்களில்லை யென்றும், ஷை புத்தகம் 27 வது பிரஸ்னோத்தரத்தில் அகத்தச்சர் கருமார், புறத்தச்சர் கருமார், என இருவகையா ருண்டென்றும், அவர்களில் புறத்தச்சர் கருமாரே சூத்திரர்களாக எண்ணப் பட்டவர்களென்றும் சொல்லி

## கூவத்து நாரணன்.

தொண்டைநாட்டுக் கூவத்தில்வாழ்ந்து பெருங் கொடையாளி யெனப் பெயர்பெற்றவனும், தன்னூர் ஏழைவலைஞனொருவனுடைய தரித்திரந் தீரும்படி அவன் வழக்கமாய்த் தூண்டிலிடும் ஏரியில் பொன்னாற்செய்யப்பட்டதொரு மீனைப்போட்டு அது அவ்வலைஞனுடைய தூண்டிலிற் சிக்கி அவனுக்குக் கிடைக்கும்படி செய்த பரோபகாரியும்,

இடுவோர் சிறிதிங் கிரப்போர் பெரிது
கெடுவாய் நமனே கெடுவாய்—படுபாவி
கூவத்து நாரணனைக் கொன்றாயே கற்பகப்
காவெட்ட வாமோ கறிக்கு. [பூங்

என்றபாடல் பெற்றவருமாகிய ஈகையாளர் நாரணரென்பவர், விஸ்வகர்ம வம்சத்து விஸ்வக்ஞ வகுப்பினரென்று அபிதானகோசம் கூறுகின்றது. இவர் வரலாறறிந்தவர்கள் விபரமெழுதுவார்களாக.

புத்தர்.

---

பணங் கொடாமல் பத்திரிகை பெறலாம்.

சந்தா செலுத்தாமலே பத்திரிகை பெறுவதற்கான வழிதேட விரும்புவோர் தமது பெயர் விலாசங்களை யறிவிப்பார்களாக.

மானேஜர்.

---

யிருக்கிறது. இவ்வித பேதங்களை ஆராயாது சமுதாயத்தில் ஒன்றாய் மதித்து வருவதினால், பற்பல விவகாரங்களுக் கிடந்தருகின்றது. ஆகையால் சிலாசாஸன ஆராய்ச்சியும் நூலாராய்ச்சியும் அவசியம் தேவைதான்.

க. அத்தியாபக-லிங்காச்சாரி, வேலூர்.



# வேதசாஸ்திராதிகள்.

## இந்துமகா சத்தியவேத விருத்தாந்தம்.

(58-வது பக்கத் தொடர்ச்சி.)

ஆதியில் வேதம் வெளிப்படுத்தப்பட்டது.

ஆதியில் வைவஸ்வது அல்லது ஆதித்தனாகிய சூரியனுக்கு முதலில் வேதம் வெளிப்படுத்தப் பட்டதென்றும், அதே பிரகாரம், "யாஞ்ஞவற்கியர்" வெளிப்படுத்திய வேதத்தைப் பெற்றுக்கொண்டவராய் இருக்கிறார் என்றும், அதேபிரகாரம் இருக்குவேதத்துக்கு நியமிக்கப்படாத வாக்கியங்கள் "பிரஜாபதி" அல்லது பிரம்மாவுக்கு வெளிப்படுத்தியனவாகவும், யஜுர்வேதத்திலும், சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மாவானவர் வேதத்தை சூரியனுக்கு வெளிப்படுத்தியபோது ஷை யாஞ்ஞவற்கியர் "தித்திரி" என்கிற பக்ஷி வடிவமாகக் கேட்டுக்கொண்டிருந்து வெளிப்படுத்தியமையால் அவ்வேதத்துக்கு "தைத்திரீயம்" என்று பெயர் விளங்கி வருகிறதென்றும் சிலபுராண காவியங்களிற் சொல்லப்பட் டிருக்கின்றது. இந்த யாஞ்ஞவற்கியர் என்ற மகரிஷியானவர், அநேகம் ரிஷிகளுக்கும் ஜனகனுக்கும் ஆசாரியராயிருந்து வேதாந்த பாடங்களை உபதேசஞ் செய்திருப்பதாகவும், சிலசரித்திரங்களால் வெளியாகின்றது.

வேதங்களின் கிரந்த கர்த்தர்கள்.

கடவுளுடைய திருவாக்கிலிருந்து புறப்பட்ட தற்பூரண மொழியாகிய வேதங்களுள் "இருக்குவேதம்" இரண்டாவது காண்டத்திலடங்கிய கீதங்களுக்கு கிரகசமதனும், மூன்றாவது காண்டத்தி லடங்கியிருக்கிற கீதங்களுக்கெல்லாம் விஸ்வாமித்திரரும், நான்காவது காண்டத்திலடங்கிய கீதங்களுக்கு வாமதேவரும், ஐந்தாவது காண்டத்திலடங்கிய கீதங்களுக்குப் புதனும் அத்திரியினுடைய மற்ற சந்ததியாரும், ஆறாவது காண்டத்தில் வேறுபாடில்லாமல் சேர்மானஞ் செய்யப்பட்டிருக்கிற கீதங்களுக்கு பாரத்துவாஜரும், ஏழாவது காண்டத்திலிருக்கிற கீதங்களுக்கு வசிஷ்டரும், மற்றகாண்டங்களி லிருக்கிற கீதங்களுக்கு அகஸ்தியர், மரீசி புத்திரராகிய கசியபர், அங்கிரஸர், பிருகுபுத்திரராகிய ஜமதக்கினி, வியாசருடைய தந்தையாகிய பராசர், கௌதமர் அவருடைய புத்திரராகிய நோதசர், பிரகற்பதி, நாரதர், கண்ணுவர், அவருடைய சந்ததிகளாகிய மேதாதிதி, முதலியபேர்கள்; பிரகற்பதி சந்ததிகளில் மதசந்தன் முதலாகியபேர்கள்; அஜீகர்த்தன்புத்திரனாகிய சுனஸ்ஸேபன், அங்கிரசன் சந்ததிகளாகிய குத்சன், இரண்ணிய ஸ்துாயன், சவ்வியன் முதலியபேர்கள்; விரகங்கர் என்னும் இராஜாவினுடைய ஐந்து புத்திரர்கள், அரசர்களாயிருந்த திரயருணன், திரசதசயன், என்பவர்கள்; அநேகம் இராஜ வம்ஸஸ்தர்களும், மேற்கண்டபெரியவர்களுடைய சந்ததியில் வந்த அநேகம் இதர இருடியர்களும், கிரந்த கர்த்தர்களா யிருக்கிறார்களென்று ஷை வேதத்

தோடு வழங்கிவரப்பட்டுக் கொண்டிருக்கின்ற அநுக்ரமணிகை அல்லது பொழிப்புவிவர அட்டவணையினால் தெரிகிறது. 'யஜுர்'' வேதத்தில் ஒன்பது முழுக்காண்டங்களும் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரஜாபதியாலும், பலகாண்டங்கள் சந்திரனாகிய சோமனாலும், ஏழுகாண்டங்கள் செஞ்சுடராகிய அக்கினியினாலும், பதினாறு காண்டங்கள் எல்லாத் தேவர்களாலும் கூறப்பட் டிருக்கின்றதாகவும், இவ்வசனங்களைச் செய்த இருடிகளில் நாமனுஷியராகிய கிரந்த கர்த்தர்கள் இல்லை என்றும், யஜுர்வேத மந்திரத் திரட்டின் சிலபாகத்துக்கு பிரகற்பதி, இந்திரன், வருணன், அஸ்விநி தேவதைகளும், சிதறியிருக்கிற சில வாக்கியங்களுக்கு வசிஷ்டர், விஸ்வாமித்திரர், வாமதேவர், மதஸந்தஸு, மேதாதிதர், இவர்களும், இதரமானிடரும் கிரந்தகர்த்தர்களாயிருப்பதாகவும், ஷை வேத அட்டவணையின் இரண்டாவது வகுப்பிற் குறிப்பிக்கப் பட்டிருப்பதாகவும் வேத வசனங்கள் சொல்லுகின்றன.

வேதகாண்டங்களின் கருத்து.

''கருமகாண்டத்தில்'' இந்திரன், ஆகாயம், அக்கினி, ஆதித்தன், சந்திரன், அப்பு, வாயு, அசரீரிகள், பரமாணுக்கள், பிரிதிவி, உருத்திரர், வசுக்கள், அசுவினி தேவர் முதலாகிய தேவர்களையும்; அவர்களை நோக்கிச் செய்யப்படும் பலயாகங்கள், சோமபானம், அருக்கியம், முதலாகிய அநேக சமயாசார சடங்குகளையும் தோத்திரங்களையும், மந்திரங்களையும், இவைகளால் உண்டாகும் பலன்களையும் விளக்கியும்; ''உபாசனாகாண்டத்தில்'' மேலே குறிப்பிடப் பட்டிருக்கின்ற தேவர்களை விஸ்வாசித்து உபாசனத்தை விளக்கியும்; ''ஞானகாண்டத்தில்'' சர்வபரிபூரண சச்சிதாநந்தமாகி அகில புவன சராசரப் பிரபஞ்சத்திற்கு மூலமாயும், காரணமாயும் இருக்கிற பெரியபொருள் ஒன்றே என்னும் உண்மைக்கியானத்தை விளக்கியும் இருக்கின்றது.

இருக்குவேதம்.

முதல் வேதமான இருக்குவேத சங்கிதத்தில் மந்திரங்கள் அல்லது தோத்திரங்கள் அடங்கி இருக்கின்றன. அத்தோத்திரங்கள் பெரும்பான்மையும், இருக்குவேதம் என்னும் சொல்லினது பொருளின்படி துதிகளாகவே இருக்கின்றன. இருக்கு என்பது ரிக் - என்னும் வினைச் சொல்லிலிருந்து உற்பவமானது. ரிக் என்னும் மொழியின் அர்த்தம் துதித்தல்; சரியாகச் சொல்லுமிடத்தில், எதனால் யாதொரு தெய்வம் துதிக்கப்படுகிறதோ அந்தப் பிரார்த்தனை அல்லது சங்கிதப்பாட்டாம். இந்த மந்திரத்திரட்டு அஷ்டகங்களாக, அல்லது, சந்தஸ்ஸுகளும் அநேக அத்தியாயங்களாக உட்பிரிவுசெய்யப் பட்டிருப்பதுடன், வேறொரு பிரிவு, பத்து மண்டலங்களாகவும், அந்த மண்டலங்கள் நூறு அநுவாகங்களுக்கு மேலாகவுமே உட்பிரிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதில் ஆயிரம் சூக்தங்கள் என்னும் கீதங்கள் அல்லது தெய்வஸ்துதிகள் அடங்கி இருக்கின்றன. மேல்



கின்ற உட்பிரிவில், இரண்டாயிரம் வருக்கம் என்னும் பிரிவுகள் அடங்கி இருக்கின்றன. இது இரண்டுவகைகளுக்கும் பொதுவாய் இருக்கின்றது. இவைகள் எல்லாவற்றிலும் பல அளவுகளுடையபதினாயிரங் கவிகள் அடங்கி இருக்கின்றன.

வேதம் ஓதுகிற கிரமத்தில் வித்தியார்த்தி அல்லது ஓதுகிறவன், கிரந்த கர்த்தாவையும், விஷயத்தையும், இசைவிகற்பத்தையும் கவனிக்கவேண்டியதுமல்லாமல், அம்மந்திரம் அல்லது தோத்திரத்தின் கருத்தையும் அறியவேண்டும். வேதாகம ஏற்பாடுகளை உண்டாக்கினவர்கள் அக்கருத்தைக் கவனிக்கும்படி யதார்த்தமாகவே சொல்லி இருக்கிறார்கள். முதலில் எவரால் வேதவாக்கியம் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த ரிஷியினுடைய பெயரும், ஓதப்படவேண்டிய தேவதையும், அவ்விஷயமும், இசைவிகற்பமும், அதின் கருத்தும், ஓதப்பட வேண்டிய கர்மானுஷ்டானங்களின் முறையும், கவனமாய்க் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

வேதம், பலவிதமான சடங்குகளிலே அல்லது கிரியைகளிலே பிரித்துப் பிரித்து மொழி மொழியாய் மாறிமாறி முன்னும்பின்னுமாய் ஒருதரம் அல்லது பலதரம் ஓதப்படும். இருக்குவேதம், யஜுர்வேதம், இவற்றினுடைய பிரதிகள் மற்றவிதமாகிய ஓதலுக்காகவுமே சித்தப்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்பிரதிகள் பதம், கிரமம், ஜடை, கனம், முதலியவைகளென வழங்கப்படுகின்றன.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.



## விஸ்வகர்மப் பிரபாவம்.

விஸ்வகர்மன் என்னுஞ் சப்தம் யாரைக் குறிக்கிறதென்றும், அப்பொருளின் நிலைமையுங் கௌரவமும் எப்படிப்பட்டனவென்றும், விஸ்வகர்ம குலத்தார்களிலேயே பலர் அறியாதிருக்கிறார்கள். இது மிகவும் குறைவான ஸ்திதியென்பதிற் சந்தேகமில்லை. உலக நாயகனாய்த் தேவதேவனாய்ச் சர்வ ஜீவதயாபரனாய் ஜகத் சிருஷ்டிதிதிசங்கார திரோபவாநுக்கிரகாதிபதியாய் விளங்காநின்ற விஸ்வகர்ம மகாதேவனுடைய பிரபாவம் உலகமுழுவதுமே அறிந்து ஆனந்திக்கத் தக்கதாயிருத்தல் சத்தியம். ஜனங்களுடைய புண்ணியக் குறைவாலும், கலிகாலவலிமைப் பெருக்கினாலும் இப்பிரபாவம் தக்க அளவு பிரகாசிக்கவில்லை. அதைப் பிரகாசிப்பிப்பதற்கு இக்குலப் பண்டிதோத்தமர்களுஞ் சாஸ்திரக்ஞர்களும் முயலவில்லை. உதரபோஷணார்த்தமே பெரிதென்றெண்ணியோ, சாமானிய வழிகளில் தமது கல்வி வல்லபத்தைக் காட்டுவதே போதுமெனக் கருதியோ அன்றி மற்றெப்படியோ பலர் கழிந்துபோயினர். கழியாது உயிர்வாழ்ந்திருப்போராவது இனி இப்பத்திரிகை மூலமாயும் புத்தகங்கள் மூலமாகவும் உலகமெல்லா முணர்ந்து போற்றும்படி உலக நாதனாகிய விஸ்வகர்மப் பெருமானுடைய அலகில் பெருமைகளைப் பலபடியாய்ப் பிரகாசப்படுத்துவார்களென் றெதிர்பார்க்கப் படுகிறது. அவர் பெருமை விளங்கும் வழியாலேதான் அவர் வமிசத்தாராகிய நமது பெருமையும் விளங்கவேண்டும்.

ஆதலினால், வேதசாஸ்திர புராணேதிகாசங்கள் விஸ்வகர்மனைப்பற்றி என்னசொல்லியிருக்கின்றன வென்பதை ஒருவாறு கீழே விளக்கத் துணிந்தனன். குற்றங்குறைகள் காணப்படின் ஆராய்ச்சியின் மிக்கவர்கள் அவற்றையெடுத்துக் காட்டி விஸ்வகர்மப் பிரபாவம் விளக்கமாவதிற் சகாயஞ் செய்வார்களாக.

விஸ்வகர்மப் பெருமானைச் சாமானிய தெய்வமென்றாவது, அதனினுங் குறைவாய்த் தேவகம்மியனென்றாவது மனிதனென்றாவது இன்னும் மற்றப்படியாவது கூறுவது பாபத்திற்கிடமாகுமே யன்றி மற்றில்லை. இந்தப் பாவத்திற்கு நம்மவர்கள் ஆளாகாமல் தம்மைக்காத்துக்கொள்வார்களாக. மற்றவர்கள் கதி எப்படியாவதாகட்டும், நம்மட்டில் நாம் ஜாக்கிரதையாயிருப்போமாக. நூல் செயவல்லவர்களும், வியாசகர்த்தர்களுங்கூட சிற்சிலர் விஸ்வகர்ம நாமத்தைச் சாமானியமா யுபயோகிப்பதுகாணச் சங்கடமுண்டாகிறது. இம் மகாபுருஷ (பௌருஷேய) வம்ஸத்தி லுதித்தவர்களி லநேகர் இவர்பெயர் தாங்கியிருந்தார்க ளென்றும், அவர்களைப்பற்றிப் புராணாதிகளிற் சொல்லப்பட்டிருப்பவை இப்பரமனைச் சாராவென்றும், வேதவாக்கியங்கள் உத்கிருஷ்டமானவை யாகுமேயன்றி மற்றவை உத்கிருஷ்டமாகாவென்றும், வேதங்கள் விஸ்வகர்மனுக்குப் பிரதமஸ்தானங் கொடுத்திருக்கின்றனவென்றும் நம்மவர்கள் முதலாவது உணரவேண்டும். பிறகு, இவ்வுண்மைகளை மற்றஜாதியார்களுக்குப் போதிக்கவேண்டும். தாம் பிரதமத்தில் அறிந்து கொள்வதற்குச் சாதகமா யிருக்கும்படி இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகி இதில் வெளியாகும் விஷயங்களைப் பிரதிமாதமுந் தவறாது வாசிக்கவேண்டும். நமது குலத்தாரில் வாசிக்கக்கூடியவர்கள் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையைப் பெறும்படி செய்யவேண்டும். வாசிக்கமாட்டாதவர்களைக் கூட்டமாகச் சேர்த்துவைத்துக்கொண்டு, அவர்களுக்கு இவ்வியாசங்களை வாசித்துக்காட்டி விளக்கவேண்டும். இப்படிச் செய்யும்பக்ஷத்தில் இலேசாகவுஞ் சீக்கிரமாகவும் விஸ்வகர்மப் பிரபாவமும் விஸ்வகர்மஜாதிப் பிரபாவமும் உலகிற் பரவி உன்னதந் தருமென்பது நிச்சயம். இனி, வேதசாஸ்திர வாக்கியங்களை யெடுத்துக் காட்டி ஒருவாறு விளக்கமுயல்வேன்.

ருக்வேதம் X. 81.

வாஜஸனேய சம்ஹிதை 17. 17-23

யஇமா விஸ்வா புவனானிஜுஹ்வாத்

என்று தொடங்கும் வாக்கியம் நம்மவர்களிற் பலரறிந்ததாகவே யிருக்கிறது. இதன்கருத்தைப் பரிசோதித்தல் அவஸ்யம். உலக சிருஷ்டியைப்பற்றி பிரதம வேதமாகிய ருக்வேதம் பிரஸ்தாபிக்கும் பாசபாகுமிது. இந்தப்பாகத்தில் விஸ்வகர்மப்பிரபாவம் நன்கு விளங்குகிறது. அஃதெப்படி யென்பது பின்னர்க்காட்டப்படும்.

(தொடரும்)

வைஸ்வகர்மன்.

---



# விச்வகர்மர்களே ஆச்சார்யஜாதியார்.

விஸ்வகர்ம சந்ததிகளே ஆச்சார்யரென்று பிரபஞ்சமுண்டான காலமுதல் பல ஜாதிகளும்சொல்லிக்கொள்கிறதும், இவர்களை வேதசாஸ்திரங்களிலும் அந்தப்படியே சொல்லியிருக்கிறதும், சகலமானவர்களுக்குந் தெரிந்த விஷயமே.

விஸ்வகர்மசந்ததிகள் ஜாதிப்பெயராயும் பட்டப்பெயராயும், தமிழ் கிரந்தம் தெலுங்கு கன்னடம் மஹாராஷ்டிரம் முதலிய லிபிகளிலெழுதி வருகிறதா யிருக்கிற ஆசார்ய வென்னுமெழுத்தை இப்போது கெவர்ன்மெண்ட் காரியங்களில் இங்கிலீஷிலெழுத வேண்டுமானால் ஆஸாரி என்றெழுதுவதற்கு காரணமென்னவென்றாலோசிக்கும்போது, நம்மவர்களில் உயர்தரக்கல்வியும், குலாபிமானமுமில்லாததோஷமேயெனத் தோன்றுகிறது. நம் முன்னோர்களுக்கிருந்தபட்டத்தையிழந்துதற்காலம் ஆஸாரி-ஆசார்ய - என்பதைபற்றி கெவர்ன்மெண்டாரிடம் வாதிக்கவேண்டியதாய் வந்துவிட்டதே யென்னும் பரிதாபத்தினால் இவ்விஷயத்திற்கு நாமும் நமக்குத் தெரிகிற பிரமாணங்களை யெழுதுவோம். மேலும், நம் குலாபிமானிகளும் வித்வாம்சர்களும் இவ்விஷயத்திலெழுதுவார்கள். இவைகளையெல்லாம் சென்னை - திருச்சிச் சபையார்கள்பார்த்து ஒழுங்குபடுத்திஇங்கிலீஷி லெழுதி அநேகக் கையொப்பங்களுடன் கெவர்ன்மெண்டாருக்கு வக்கீல்முகாந்திரம் கொடுத்து பூர்வகாலமுதல் வழங்கிக்கொண்டு வருகிற ஆசார்யரென்னும் பட்டத்தை நிலை நிறுத்துவார்களென்ற அபிலாஷையுடன் இப்பத்திரிகையிலெழுதலானேன்.

சமஸ்த சீவாத்மாக்களைச் சிருஷ்டித்தவராயும், அவைகளைரக்ஷிக்கிறதற்கு காரணகர்த்தராயுமிருக்கிற உலககர்த்தரெவரோ அவருக்கு விஸ்வகர்மாவென்றும், ஜகத்குருவென்றும், ஆசார்யரென்றும், பெயர். இந்த நாமதேயமானது பிரபஞ்சகர்மமாகிற சிருஷ்டியின் பொருட்டுவந்ததேயாம்.

ஜகத்பதியாயிருக்கிற விஸ்வகர்மபகவானைப்போலவே சமஸ்தபிரபஞ்ச பரிபாலனாதி கிருத்தியங்களுக்கு காரணகர்த்தராயும், பிரவிர்த்திபண்ணி வைக்கிறவர்களாயும், தத்வமிசத்தவராயும், நிர்மாணகர்த்தராயும், தேவாமிசமாயுற்பவித்தவராயும், பிராம்மணராயும், யஜனயாஜனாதி ஷட்கர்மங்களுடையவர்களாயும், சிற்பசாஸ்திராதிகாரிசளாயும், உலக ஜீவனார்த்தத்தின் பொருட்டு சிற்பபிரவர்த்தகமுடையவர்களாகவுமிருக்கிறவர்களுக்கே, விஸ்வகர்மா-துவஷ்டா-சில்பி-மனு-மயன் - ஸ்தபதி-வர்த்தகி-தக்ஷ-ஆசார்ய வமிசத்தவர்-ஆசார்யஜாதியர்-ஆசார்யகுலத்தவரென்று சுருதிஸ்மிருதி சிற்பாகமபுராண இதிகாசங்களிலும், பல நிகண்டுகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

ஜோஸ்யர். முத்து ஆசாரியார்,

மீனாக்ஷிபுரம், நாகர்கோவில்.

# சிற்பசாத்திர விஷயம்.

சிற்பம் உபசிற்பங்களாக காணப்படுகிற கிரந்தங்களின் பெயர்களாவன.

1. மஹாவிஸ்வகர்மீயம்
2. விஸ்வகர்மீயம்
3. விஸ்வம்
4. விஸ்வஸாரம்
5. விஸ்வபோதம்
6. விஸ்வகாசியபம்
7. விஸ்வதர்மம்
8. விஸ்வேசம்
9. விருத்தம்
10. விசாலம்
11. விசாலாக்ஷம்
12. வஜ்ரம்
13. வாஸ்துவித்யாபதி
14. வாஸ்துபோதம்
15. விஸ்தாரம்
16. மனுதந்திரம்
17. மயமதம்
18. துவாஷ்டிருதந்திரம்
19. நளதந்திரம்
20. பிரபோதம்
21. மானவித்மானம்
22. மானஸாரம்
23. மனுஸாரம்
24. ஆதிஸாரம்
25. மஹாஸாரம்
26. மானபோதம்
27. மஹாதந்திரம்
28. காசியபம்
29. பகுசருதம்
30. சிருஷ்டம்
31. கல்பாக்கியம்
32. சாதகஸாரம்
33. ஸாரஸம்ஹிதா
34. நாமசங்கிதா
35. காலயூபம்
36. கற்பாரியம்
37. தாவட்டம்
38. சாத்விகம்
39. ஐந்திரமதம்
40. சித்திரசாமணம்
41. சித்திரபாகுல்லியம்
42. மனோஹில்லியம்
43. பாரத்சித்ரகம்
44. பிரயோகபஞ்சலி
45. சித்திரகண்டம்
46. ஈசானம்
47. அரிடிகம்
48. சயித்திகம்
49. சைத்திரம்
50. காபிலகாலயூபம்
51. பிரபுத்தம்
52. சகளாதிகாரம்
53. தியானபத்ததி
54. சிற்பரத்னகரம்
55. ஸாகம்
56. நாராயணீகம்
57. பிராமம்
58. குமாரகம்
59. இந்திரம்
60. லாவக்ஞம்



61. சௌரம்
62. பானுமதம்
63. அனுமான்
64. ஸளமம்
65. பாராசரீயம்
66. பார்க்கவம்
67. பிரகஸ்பதீயம்
68. யமம்
69. வாசுதேவம்
70. அனிருத்தம்
71. பிர்மீயம்
72. பிரஜாபத்தியம்
73. பிரயோகம்
74. அகஸ்தியம்
75. மார்க்கண்டம்
76. கோபாசம்
77. நாரதீயம்
78. போஜமதம்
79. வால்மீகம்
80. பாணி
81. பாரத்துவாசம்
82. கெர்க்கம்
83. விசுவாமித்திரம்
84. கௌதமம்
85. வாஸ்துபத்ததி
86. வசிஷ்டம்
87. பிருகுமதம்
88. ஆத்திரேயம்
89. சௌநகம்
90. நக்ஞசித்தம்
91. பாத்மீயம்
92. சிந்து
93. பிரபோதகம்
94. சாதகம்
95. வஸ்துவாதிகாரம்
96. யந்திராதிகாரம்
97. பிராயச்சித்தாதிகாரம்

ஜோஸ்யர். முத்து ஆசாரியார்,
மீனாக்ஷிபுரம், நாகர்கோவில்.

## ஒளிவளர் விளக்கு.

ஸ்ரீகிருஷ்ண குண்டூர் மண்டல விஸ்வப் பிராம்மண ஏழாவது கான்பரன்ஸ், நாம் தெரிவித்தபடி, பாபட்லாவில் சென்ற மாதத்தில் நடைபெற வில்லையென் றறிகிறோம். மற்ற விபரங்கள் பின்னால் விஸ்தரிக்கப்படும்.

* * *

நமது சபையின் தற்காலக்காரியாதிகாரிகளுடைய பெயர்களை அவர்கள் நியமனமானவுடன் சென்ற 23-வது பிரசுரத்தில் வெளியிட்டதுமன்றி, நமது பத்திரிகையின் முதல் மூன்று சஞ்சிகைகளிலுந்தெரிவித்துக்கொண்டுவந்தோம். நமது சபை ப்ரஸிடென்டாயிருப்பவர், சென்னை அபிஷியல் அஸைனி ஆபீஸ்மானேஜராகிய ஸ்ரீ சோமங்கலம் கந்தசாமி ஆச்சாரியாரவர்கள். சபைக்கு வைஸ்பிரஸிடென்ட் கிடையாது. இவ்விஷயமாக ஓரிருவர் மயக்கவுணர்ச்சிகொண்டிருப்பதாகத்தெரிகின்றபடியால், உண்மையை இங்கெடுத்து விளக்கலாயிற்று.

* * *

தென்னாட்டு வாசிகளாயுள்ள நம்மவர்களெல்லோரும் ஆச்சார்யபட்டத்திரிபு சம்பந்தமாகத் தாங்கொண்டுள்ள உணர்ச்சி

யையும், ஆஸாரிப்பட்டப் பிரயோக அவமானத்தையும்பற்றி நன்றாய் விஸ்தரித்துப் பேசி, ஆஸாரிப்பட்டப்பிரயோகத்தை ஒருங்கே ரத்துசெய்யும்படி அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்வதற்கு ஒவ்வோரூரிலும் நம்மவர்களுடைய கூட்டங்கள் நடைபெறவேண்டியனவாயிருக்கின்றன. அக்கூட்டங்களில இவ்விஷய சம்பந்தமான தீர்மானங்களைச்செய்து கனம் சென்னைக் கவர்னரவர்களுக்குத் தந்திமூலமாகவும் மனுக்கள் மூலமாகவும் நமது குறையை விண்ணப்பித்துக் கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒவ்வோரூரிலுமுள்ள குலத்தலைவர்கள் இவ்விஷயத்திற்சிரத்தை வைத்துப் பாடுபடுவார்களென்று மிகவும் வேண்டிக்கொள்ளுகிறோம். காலதாமதமில்லாமல் இக்காரியம் நடத்தப்படவேண்டியதாயிருக்கிறது.

⁂

திருவாங்கூர்ச் சமஸ்தான (பென்ஷன் பெற்ற) அஸிஸ்டன்ட் ஸ்டாம்பு சூபரின்டென்டெண்ட் ஸ்ரீ எதுமலை தர்மலிங்க ஆச்சாரியா ரவர்கள், திருச்சிராப்பள்ளி ப்ளீடர் ஸ்ரீ செஞ்சி-முத்துமாணிக்க ஆச்சாரியார் பி. ஏ. அவர்கள், திருச்சிராப்பள்ளி ஸ்ரீ **T. A.** முத்துகிருஷ்ண ஆச்சாரியாரவர்கள், சேலம் ஸ்ரீ சின்னராம ஆச்சாரியாரவர்கள் முதலிய வெளியூர்ப் பிரமுகர்கள் பலர் சென்ற மாதத்தில் சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்தருளினமைக்காக அவர்களுக்கு அநேக வந்தனங்களளிக்கிறோம். மற்றவர்களும் இவ்வாறன்புசெய்வாராக.

## மதிப்புரை.

ஞானோதயாமிர்த கீர்த்தனத்திரட்டு:— ஆண்டானடிமை ஸ்ரீ தி. மு. வைத்தியலிங்காசாரிய ரவர்களாதீன கர்த்தரும் சென்னைச் சிவஞான பாலசுப்பிரமணிய தியான சபையின் உபாத்தியாயருமாகிய மதுரகவி ஸ்ரீ புதுவை-நடராஜ ஆச்சாரியாரவர்களால் வெளியிடப்பட்டனவும், இயற்றப்பட்டனவுமாகிய சில புத்தகங்கள் நமது பார்வைக்கு வந்திருக்கின்றன. இவற்றுள் மேற்கூறப்பட்டது பஞ்சபூதஸ்தலத்தைக்குறித்து மூவர்பாடிய தேவாராதிகளுடன் பல வித்வரத்தினங்களா லியற்றப்பட்ட கீர்த்தனங்களையுஞ் சேர்த்து ஷை மதுரகவியவர்கள் பரிசோதித்து வெளியிட்டபுத்தகமாகும். இதில், ஸ்ரீ தி. மு. வைத்தியலிங்காசாரியார், ஸ்ரீபழநி-மாம்பழக் கவிச்சிங்க நாவலர், ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகள், ஸ்ரீ முத்துராமக் கவிராயர், ஸ்ரீ அஷ்டாவதானம்-புரசை சபாபதி முதலியார், ஸ்ரீசாமிநாத ஆச்சாரியார் முதலியோருடைய கீர்த்தனங்களச்சிடப்பட்டிருக்கின்றன. ஷை மதுரகவியவர்களாலியற்றப்பட்ட ஸ்ரீ கந்தசாமி கீர்த்தனம், விஸ்வப்பிரம்மகுல மகான் ஜடைஸ்வாமிகள் தோத்திரப்பாமாலை கந்தபுராண சாரசங்கிரகத் தியான வெண்பா, ஸ்ரீ சத்தி வேலாயுதக்கடவுள் தோத்திர மஞ்சரி, ஸ்ரீ கந்தநாதர் தோத்திர விருத்தக்கீர்த்தனப்பா முதலியவும் பெற்றோம். இவை சென்னை தங்கசாலைவீதியில் 462-வது எண்ணுள்ள நமது சபாமண்டபத்தில் ஷையாரிடம் கிடைக்கும்.



# பாரதபூமியின் ஜாதிநிர்ணயம்.

குலாபிவிர்த்தியை முன்னிட்டு பாடுபடுபவர்களில் சிலர் தாங்கள் விஸ்வகர்ம குலத்திலே மேலானவர்களென்று உவமிப்பார்களானால் குலாபிவிர்த்தியைச் செய்வதாகுமா? இவ்விததோஷம் ஒவ்வொரிடத்தில் காணப்படுகிறது. தன்னைச் சுத்தப்படுத்தினவர்களே பிறரைச்சுத்தப்படுத்த வல்லவராவார். ஆகையால் குலாபிவிர்த்தியைப்பற்றி முயற்சிப்பவர்கள் மமகாரங்களற்றவர்களாயும், நம் சந்ததிபாரிடத்தில் அன்புடைமை பாவித்து, பொருள் கவற்சியையே பிரதானமாக மனதிலூன்றி வாக்கினால் மாத்திரம் குலாபிமானத்தைத விஸ்தரிப்பதான குணங்களை யகற்றியும் முயன்றுவருவார்களேல் முயற்சி மெய்வருந்தக் கூலிதருமென்றவாக்கியம்நிதர்சனமாகும்.

நம் சமுதாயத்தார்களுடைய நிலைமையைக் கவனித்தாலோ, பெரும்பாலார் விஸ்வப்பிராம்ஹணர் என்ற பேரைச் சொல்லுந்தான் வாய்விளக்கமுண்டோ? ஆச்சாரி என்ற பட்டத்தை ஆஸாரி என்று வர்ணித்துக்கொண்டது நாமே.

சிலர் நம்குலதர்மத்திற் கொவ்வாதவிதமாய் நடந்துகொள்ளுகிறார்கள். இதுவிஷயத்தில் நம் வம்சச் சிறுவர்கள் கவனித்தாலே போதுமானது. ஆங்காங்கு சில சிறுவர்கள் கல்விகற்றுப் பிரபஞ்சதர்மங்களையும் குலதர்மங்களையும் உணர்ந்து ஆசார விஷயத்தில் பற்றுவார்களேல் அவர்களே முதன்மையாய் ஆசார சுகிர்தர்களாயிருந்தும் பின் தங்கள் குடும்பத்தைக் கவனித்தும், அப்பால் தங்கள் சம்பந்தவழிகளைக் கவனித்தும் அதன்பின் ஜனனயிடம் சம்பந்தயிடம் இரண்டுகிளைகளைக் கவனித்தும் ஒழுங்கில் கொண்டுவருவார்கள். இந்த அதிகாரம் சிறுவர்களைப் பொறுக்கட்டும். இதைப்பற்றி சபை அங்கத்தினர்கள் செய்யவேண்டிய காரியம் சிறுவர்களை வித்யாசாலையில கல்விகற்கும்படி செய்யவேண்டியது.

இதற்கு இடையூறாய் நம் மரபினர்கள் சிறுவர்களைப் பத்துவயதிலிருந்தே தொழிலில் போட்டுவிடுகிறார்கள். எவராவது ஊழியமாய்க் கற்றுக்கொடுத்தாலும் அதைப் பிரியமாயுணரும் மாணுக்கரை அவர் பெற்றோர் தொழிலைக் கெடுத்துப் படித்து மண்ணாய் என்று கண்டித்துத் தொழிலில் ஊன்றி விடுகிறார்கள். அப்படித்தான் தொழிலைக்கற்று என்ன முன்வந்ததோ காணோம்.

பத்திரிகையில் வரும் விஷயங்களைக்கண்ணுறும் நம்மரபினர், ஒருமுறை இருமுறை வாசித்துக் கவனத்திலேற்றி அதன் சாரம்ஸங்களை அனுஷ்டானத்தில் கொண்டு வருவார்களென்று நம்பியே குலாபிமானிகள் அநேக அரிய விஷயாம்ஸங்களைப் பத்திரிகையிற் புகட்டிவருகிறார்கள். ஆனதால் நம் சந்ததியார் பிரபஞ்ச தர்மவிஷயங்களைக் கவனிக்க உன்முகமாயிருப்பார்களென்றகருதி பாரதபூமியின்ஜாதிநிர்ணயத்தைப் பற்றித் தொடருகிறோம்.

(தொடரும்) சாலிவாடிபுராதீனம் தர்மபதி.

# பிழைக்கும் வழி.

நம்மவர்களுக்குள் தற்காலத்தில் ஒரு நூதன உணர்ச்சி யுண்டாயிருக்கிறது. அதாவது தாங்களிருக்கும் நிலைமை சரியானதல்லவென்றும் அதைச் சரிப்படுத்த வேண்டுமென்பதுவே. இந்த உணர்ச்சி ஜாதியபிவிருத்திக்கு சாதகமானதே யென்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவ்வுணர்ச்சியின் பயன்களையும் வெளித்தோற்றங்களையுஞ் சரியாய்க்கவனித்து, அதைச் சரியானவழியில் திருப்பவேண்டியது குலாபிமானிகளுடைய கடமையாயிருக்கிறது. சரிதப்பியவழியில் அவ்வுணர்ச்சியை யுபயோகிக்கும் பக்ஷத்தில், ஜாதிக்கு நன்மையுண்டாவதற்குப் பதிலாகத் தீமையுண்டாவது நிச்சயம். ஆதலால், தற்காலத்தில் நம்மவர்கள் தாங்கள் செய்யுங்காரியமொவ்வொன்றையும் நன்றாய்ச் சீர்தூக்கிப்பார்த்து, அக்காரியத்தினால் ஜாதிக்கு எவ்விதத்திலாயினும் அணுவளவேனுங் கெடுதி நேரிடக்கூடுமென்ற சமுசயம் ஏற்பட்டால் அக்காரியத்தை விட்டொழிக்கவேண்டும்.

நாம் பிழைக்கும்வழி யெதுவோ அதைக் கைப்பற்ற வேண்டுமே யன்றி கெடும்வழியைக் கிட்டலாகாது. இதற்காக முதலாவது பிறஜாதி தூஷணையை நீக்கவேண்டும். பிறஜாதிதூஷணையை நாம் கைக்கொண்டிருக்குமட்டும் நாம் மற்றவர்களினின்று பிரிந்திருக்கவே நேரிடும். அதனால் கஷ்ட நஷ்டங்கள் நேரிடுமே யன்றிச் சுகமொன்றுங் கிட்டாது. விப்பிர தூஷணையையும் விப்பிர விரோதத்தையும் கட்டாயமாக விலக்கவேண்டும். ஜாதித்துவேஷத்தைப் பாராட்டவே கூடாது. இந்தத் துவேஷங்கள் மூடபுத்திகாரணமா யுதிக்கின்றனவென்று விவேகிகளெல்லாம் விலக்கிவருங்காலத்தில் நாம் மட்டும் கையாண்டுவந்தால் நாம் மூடஜாதியாராய் மதிக்கப்படுதல் அதிசயமாகுமோ? ஆதலால், நமது ஜாதியாரில் ஒருவரேனும் ஜாதிவேற்றுமை ஏற்றத்தாழ்வு விஷயத்தில் மும்முரங்கொண்டு மூடத்தனங் காட்டாதபடி கட்டாயமாய்க் கண்டிக்கவேண்டும். வேறுஜாதிப் புலவர்கள் நமக்கு விரோதமாக ஏதேனுஞ் சொன்னாலும் எழுதினாலும் நாம் அதை லட்சியஞ்செய்யவே கூடாது. நம்மைவைதவனை நாமும் வைதல் சிறந்தகுணமல்லவேயல்ல. அது கல்வியில்லாக் கசடர்களுக்கு மட்டுமே யுரியகுணமாகும். ஒருவன் செய்தது போல் நாமுஞ் செய்யும்பக்ஷத்தில் நாம் அவனோடு சமானமாகிறோமே யன்றி அவனிலும் மேம்பட்டிருப்பதாகச் சொல்வதற்கிடமில்லை. புன்மையாளர்களைக் கண்டிக்கவேண்டி அவர்களுடைய தாழ் நிலைமைக்கு இறங்குவதைப் பார்க்கிலும் மேல்நிலைமையிலேயே நின்றுகொண்டு சலனமற்றுக் கிடத்தில் மிகவுங்கொண்டாடப்படத்தக்க குணமாகும். எனவே, ஜாதி ஏற்றத்தாழ்வு விசாரத்தை லட்சியப்படுத்தாமல் ஒதுக்கவேண்டும். (தொடரும்)

சங்கரகுமாரன்.

---



# நமது வாசகர்கள்.

(கடிதக்காரர் தத்தம் அபிப்பிராயங்களுக்குத் தாமே ஜவாப்தாரிகளாவர்).

## ஆச்சாரி - ஆஸாரி.

1.

ஆச்சாரிப் பட்டத்தைக் கால்காலமாய் வைத்துக்கொண்டு வாழ்ந்துவந்த நம்மவர்கள் ஆஸாரிகளாக்கப்பட்ட போதே சாரிகளா யிருந்தவர்களெல்லாம் ஆச்சாரிகளாயினர். இப்போது கவர்ன்மெண்ட்கெஜட்டிலும், மற்ற ரிகார்ட்களிலும் வைணவப் பார்ப்பாருடைய பெயர்கள் முன்போல் கிருஷ்ணமாச்சாரி, ரங்காச்சாரி, ராமாநுஜாச்சாரி யென்றெழுதப்படாமல், கிருஷ்ணம ஆச்சாரி, ரங்க ஆச்சாரி, ராமாநுஜ ஆச்சாரி என்று நன்றாய்ப் பிரித்தெழுதப்பட்டுவருகிறது. இஃதொன்றுதான் நம்மவர்களிடமிருந்து ஆருஷேயரால் பிடுங்கிக்கொள்ளப்படாமல் சென்ற ஆறுமாதங்களுக்கு முன்வரையிலும் விடப்பட்டிருந்தது. அதையும் இப்போது அவர்கள் பிடுங்கிக்கொண்டார்கள். நாம் இனி என்ன செய்யப்போகிறோமோ தெரியவில்லை. இதுவரையிலும் பிடுங்கியதற்கெல்லாம் நம்மவர்கள் என்னசெய்தார்கள்? ஒன்றுமேயில்லை. ஆதலால், இப்போதும் அப்படியே யிருந்து விடுவார்களென்றே நினைக்கவேண்டியதா யிருக்கிறது. அப்படியாயின், இப்போதிருக்கிற உணர்ச்சியாலும், சபைகளாலும், பத்திரிகைகளாலும் அடையும் பயன்தானென்னவோ? ஒன்றுமே கிடையாதோ? சென்னைச் சபையார் இரண்டு வருஷங்களாக இவ்விஷயத்தைப் பற்றிப் பலதாமுந் தெரிவித்தார்கள். என்றாலும், இதைப் பற்றி நிதானித்துப் பார்க்கக் கூடியவர்கள் இல்லைபோலத் தோன்றுகிறது. இருக்கும்பக்ஷத்தில் இப்படி யலட்சியமா யிருப்பார்களா? இன்னுமெத்தனையோபேர் தம்மைத்தாமே ஆஸாரிகளென்று சொல்லிக்கொள்ளுகின்றனர். இவ்வாபத்துக் கென்செய்வது, தெய்வமே!

ம. சங்கரநாராயணன்.

2.

ஆஸாரிப்பட்டம் இங்கிலீஷ் பாஷையிலேற்பட்டதற்கும், நம்மவர்களுடைய கவனத்திற்படாமல் தப்பியதற்கும் தக்ககாரணம் இல்லாமற்போகவில்லை. நமது ஜாதியிலோ இங்கிலீஷ் படித்தவர்கள் மிகவுந் துல்லபமா யிருக்கிறார்கள். சற்றேறக்குறைய எல்லோரும் அராசாங்கபாஷை தெரியாதவர்களா யிருக்கிறார்களென்றே சொல்லிவிடலாம். இவர்களுடைய பெயர்களை இங்கிலீஷில் எழுத நேரிட்டபோதெல்லாம், இந்த ஜாதியின்மீது பொறாமை கொண்டிருந்தவர்கள் சென்ற சிலவருஷங்களாக Asari, Asari யென்றெழுதிவந்தார்கள். நம்மவர்கள் தற்குறிப் பேர்வழிகள் தானே! தமிழிலெழுதினாலே பெரும்பாலார்களுக்கு வாசிக்கத் தெரியாது. இங்கிலீஷில் எவ்வித மெழுதப்பட்டதென்பதை இவர்களெங்கே கண்டார்கள்? என்னென்றெழுதப் பட்டிருந்தாலும் தற்குறியோ தமிழ்க்கையெழுத்தோ போட்டுக்கொண்டே வந்தார்கள். இப்படித் திருட்டுத்தனமாயெழுதிவந்தவர்களும் நாளடைவில் பகிரங்கமாயெழுதத் தலைப்பட்டு, ஆஸாரிப் பட்டந்தான் இந்த ஜாதியார்களுக்கு அநேகவருஷங்களாக வழங்கப்பட்டு வருகிறதென்றும், அதை இங்கிலீஷில் Asari என்றெழுதுவதே முறையென்றும் சித்தாந்தப்படுத்தத் துணிந்துவிட்டனர். இதுவே நமக்கு ஆஸாரிப்பட்டம் வந்தவழி. இவ்வளவு அனர்த்தமும் இங்கிலீஷ் படிப்பில்லாக்குறைவால் நேரிட்டிருக்கிறது. இப்போதுங்கூட இங்கிலீஷ்படித்தவர்கள் தானே இவ்விகாரத்தை யெடுத்து மற்றவர்களுக்குக் காட்ட நேரிட்டது? இல்லாவிடில், இன்னுங்கூட ஆச்சாரிப்பட்டம் நழுவுவதை நம்மவர்களறியாமலே காலங்கழிப்பார்களென்பதிற் சந்தேகமுண்டோ? இவ்வொரு திருஷ்டாந்தமே இங்கிலீஷ்

படிப்பு இக்காலத்தில் அத்தியாவஸ்யமென்பதை நிலைநாட்டப் போதுமானதா யிருக்கிறது. இந்த உண்மையை நிரூபணஞ் செய்வதற்குத் தானே கடவுள் இவ்வனர்த்த முண்டாக்கினர்!

அரசாங்கபாஷை விரும்பி.

3.

கல்வியில்லாமையால் வரும் கனக்கேடொன்றோ? நமது ஆச்சாரிப்பட்டம் நழுவுதற்குக் காரணம் நமது ஜாதியாருடைய கல்வி ஹீனமல்லாமல் வேறொன்று முண்டோ? ஆச்சாரி சப்தவாவாறும், அதற்கும் தமக்குமுள்ள சம்பந்த விசேஷமும், அதைக் கைவிடலாகாதென்ற உணர்ச்சியுமிவர்களுக் கிருந்தால், பிறர்தம்மை ஆஸாரிகளென் றழைக்கவும், தம்மைத்தாமே வாய் கூசாமல் ஆஸாரிகளென்று சொல்லிக்கொள்ளவும் நேரிட்டிருக்கமாட்டாது. கல்வியில்லாத தோஷத்தால் ஆச்சாரிக்கும் ஆஸாரிக்குமுள்ள பேதந் தெரியாமல் மௌடீகமாயிருந்து வந்தார்கள், இப்போது மிருக்கிறார்கள். ஜாதிப்பட்டத்திற்கே மோசமுண்டு பண்ணிவைத்த கல்விஹீனம் இன்னுமென்னென்ன அனர்த்தங்கள் பண்ணமாட்டாது? ஐயோ! இப்போதாகிலும் இவர்களுடைய கண்கள் கல்வியினவசியத்தைக் காணாதா? என்னமோ, போகப்போகத்தான் சொல்லமுடியும். இப்போதுங் கூட நிச்சயமாயிருக்க இடமில்லை.

S. A. சுப்ரமண்ய ஆச்சாரி.

4.

இப்போது இச்சென்னை இராஜதானியிலுள்ள நம்மவர்கள் சிலரால் ஒருவாறு 'ஆஸாரி' யென்று அழைக்கப்படுகிறார்கள். ஆஸாரி என்றபதம் எதிலிருந்துவந்ததென்றும் அதனுடைய வாஸ்தவமான கருத்து என்னவென்றும் அழைக்கிறவர்களுக்கும் அழைக்கப்படும் நம்மவர்களுக்கும் தெரியாமற் போயிற்று. ஒவ்வொருபட்டமும் ஏதோகாரணங்களை உத்தேசித்துத் தான் வைத்திருக்கவேண்டும்.

இந்த ஆஸாரி யென்ற வார்த்தையானது, எல்லாப்பாஷைக்கும் தாய்ப் பாஷையும் தெய்வபாஷையுமாகிய, சமஸ்கிருதத்திலுள்ள ஆச்சார்ய (Acharya=a teacher or perceptor in general) என்ற பதத்தின் திரிபு. தென்னாடுகளில் தமிழ்ப்பாஷையைத்தவிர வேறுபாஷைகள் அதிகமாக வழங்காததினாலும், தமிழில் ஒரே எழுத்து 4, 5, சப்தத்தைத் தரக்கூடியதாக அமைக்கப்பட்ட குறையினாலும் இப்பதம் நாளடைவில் மாத்திரையில் குன்றி சப்தபேதமுண்டாயிற்று.

எப்படியென்றால் 'ஆச்சார்ய' என்ற சமஸ்கிருதவார்த்தை தமிழில் ஆசாரி என்றெழுதப்பட்டு கர்ணபரம்பரையாக சரியாக உச்சரிக்கப்பட்டு வந்திருக்கிறது. மேலும் 'ச' என்ற எழுத்து 'ச்ச' (Cha) என்று கடினமாகவே கற்பிக்கப்பட்டிருக்கிறோம்.

ஆனால் இடையில் இவ்வார்த்தையை சாத்திருத்திச் சரியாக உச்சரிக்க முடியாதவர்களும், அக்ஷரத்தின் சப்தம் மாத்திரை தெரிந்துகொள்ளாதவர்களும் 'ஆஸாரி' யென்று சொல்லியிருக்கலாம். இம்மாதிரி சிற்சிலர் உச்சரிக்க, அநேகருக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கும் என ஊகிக்க வேண்டி யிருக்கிறது. (எப்போதும் யாருக்கும் கெட்டபழக்கம்தான் சீக்கிரம் வரும்.)

ஆகையால் குருட்டுத்தனமாய்ப் பொருளைக் கவனிக்காமல் இதே வழக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். பாஷா ஞானமில்லாத காட்டுப்புறத்தார்கள் பேசும் பேச்சைக் கவனிப்போமாகில் இத்தன்மையான பதங்கள் அநேகம் வெளிப்படுமென்பது யாவரும் அறிந்ததே.

சாதாரணமாகப் பழம் என்பது 'பளம்' என்றும், 'ரசம்' என்பது ரஜம், என்றும் 'கல்' என்பது 'கள்' என்றும் கூட உச்சரிக்கப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம்.

இப்பிழைகளெனக்குத்தெரிந்தவரையில்நாப் பழக்கமில்லாததினாலும் பல்வரிசை தவறுதலினாலும் இளமையிலேயே வார்த்தையைச் சரிப்பழகாததனாலும் ஏற்படக்கூடியது. ஆராயுமளவில் நாம் ஒவ்வொருவரும் எவ்வளவோ வார்த்தைகளை நமக்குத் தெரியாமலே உபயோகித்து வருகிறோம்.





யானை தன் தலைமேல் மண்ணைவாரிப்போட்டுக்கொள்வதுபோல் நாமே ஆஸாரி யென்று சொல்லிக்கொள்கிறோமென்பதும் பொருந்தாது. ஏனெனில், நிர்வாணமாயிருப்பவர் மத்தியில் வஸ்திரம் தரித்தவன் பயித்தியக்காரன் என்பதுபோல் ஒரு கிராமத்தில் எல்லோரும் ஆஸாரி யென்றழைக்கத் தான்மாத்திரம் ஆச்சாரியென்று சொல்லிக்கொண்டால் ஏற்குமா? அல்லது அக்கிராமத்தார் தான் சும்மாவிடுகிறார்களா? 'ஆஸாரிக்குத் திமிரல்லவா வந்துவிட்டது' என்று அவர்கள் அவ்வாச்சாரியைப் படுத்தாத பாடெல்லாம் படுத்திவைக்கிறார்கள். வழிப்பறிக்காரர்களிடத்தில் அகப்பட்ட வழிப்போக்கனைப்போல் இவர்கள் விழிக்கிறார்கள்.

அப்போதைக்கப்போது உழைத்து ஜீவனம் செய்யும் இந்த ஆச்சாரி இவ்வித அவமானத்தை கவர்மெண்டாருக்குத் தெரியப்படுத்த அசக்தராயிருக்கிறார். அக்கிராம அதிகாரிகளும் கவர்மெண்டுக்குப் போகும்படி விடுகிறதில்லை. தவறிக் கவர்மெண்டுக்கு எப்படியாவது தெரிவிக்கலாமென்றாலும் ஆச்சார்யர்களைத் தவிர்த்த இதரவுத்தார்கள் உத்தியோகத்தி லிருக்கிறார்களென உணர்ந்து அவர்களுக்கு எவ்வாறு அபிப்பிராயப்படுமோ மதில்மேல் இருக்கும் பூனை எப்பக்கம் தாவுமோ என்று பயப்பட்டுச் சும்மாயிருக்கவேண்டிவருகிறது. அந்தோ கொடிது! கொடிது!! என்ன செய்வார்கள் பாவம்!!!

கல்விப்பெருக்கையும் ஜனங்கள் அபிவிருத்தியும் தேசநாகரீகத்தையும் கவனிக்கக்கூடிய அறிவாளிகளும் கூட பெரும்பான்மையோர் நம்மை ஆஸாரி யென்றழைப்பதால் நமக்கு அதிக வருத்தத்தை உண்டுபண்ணுகிறது. இதேவார்த்தையைக் காட்டுத்தனமான காட்டுப்புறத்தார்களும் கேவலம் விறகுவெட்டிக்காரனும் மற்ற குற்றேவல் செய்யும் கூலியாட்களும் சொன்னாலுங்கூட அது "அவர்களுக்கு சகஜம், அறியாமையால் சொல்லுகிறார்கள்" என்று கவனிக்காது விட்டுவிடலாம்.

மூட்டைப்பூச்சி உபத்திரவத்தைத் தாங்கமுடியாது ஒருவன் வீட்டையே கொளுத்தினது போல் அநேகர் ஆஸாரி யென்று அழைக்கிறார்களென்று பட்டத்தையும் இழந்து விட்டார்கள். என்னவிபரீதம்! குலப்பட்டத்தை இழப்பதைக்காட்டிலும் அவமானம் வேறுளதா? குலப்பட்டச் சீர்குறைவதால் உண்டாகும் ஆபத்தும் இடையூறுகளும் இன்னதென்று சொல்லவும் வேண்டுமா; இதரவம்சத்தினர் ஒவ்வொருவரும் நிஷ்பக்ஷபாதமாக யோஜிக்குமளவில் இதனாலுண்டாகும் அவமானம் விளங்காமற்போகாது.

கு. ப. வே. ஆச்சாரி.

திருச்சி.

* * *

நாம் எப்படி முன்னேறுவது?

நாம் நமது குலமிருக்கும் நிலையைக் கண்டு எக்காலம் நற்காலமாய்ச் சித்திக்குமென்று ஏக்கமுறும் நிலையில் இருக்கிறோம். ஏக்கத்தால்மட்டும் நற்காலம் சித்தித்துவிடுமா, சற்றுவது முயற்சிவேண்டும். அப்படி ஒன்றைச் செய்வதாக முயற்சிக்குமுன் நம்முடைய முயற்சி எது, நம் முயற்சியால் எதிர்பார்க்கப்படும் பலன் யாதென்று நன்றாய் உணர்ந்து, சீர்பெறுவதற்கு வேண்டிய மார்க்கத்தைத் தெளிவுடன் ஆராய்ந்து நமது சித்தத்தை ஒருவிதமாய்ச் சீர்ப்பண்ணிகொள்ள வேண்டியது அவசியமல்லவா? அப்படி உள்ளதை உணர்ந்து சித்தம் நிலைபெற ஒருவித முடிவும் செய்துகொள்ளாவிடில் எக்காரியத்தைச் செய்தபோதிலும் பயனடையாமல் தத்தளித்து நிற்பதில் தடையேதுமில்லை. இதற்கிணங்க நம்மில் அநேகர் குலோத்தாரணம் செய்யும் பொருட்டு முன்வந்து சபைகள் சேர்த்தும்

சபைகளை நடத்தும் முறைதெரியாமல் அரும் பெரும்பாடுகள் பட்டு பயனில்லாமல் பொருளிழந்து தேகமெலிந்து போகிறார்கள். சிலர் வைதீக கர்மங்களை வாயாற்பிதற்றி ஆருஷேஷயருடன் மல்லுக்கு நிற்பதில் அல்லும் பகலும் அவா மிகக்கொண்டு கோர்ட்டில் கக்ஷிகளாடிக்காலம்கழிக்கிறார்கள். இன்னும் சிலர் குலாபிமானங்கொண்டு நடிப்பதில் ஒருவிதத்தில் ஜீவனத்திற்கும் வழியுண்டென்று அந்தரங்கத்தை வெளியிடாதவர்களாய் வரிகொடுப்போரையும் தன்வார்த்தை தள்ளாது தலையசைப்போரையும் புத்திசாலிகளென்றுபோற்றிக்கொண்டாடி அரும்பெரும் காரியங்கள் செய்வதாக விளம்பரங்கள் செய்து பணத்தைப்பறித்து பாழுக்கிறைத்து, யார் நன்றாயிருந்தாலென்ன கெட்டுப்போனாலென்ன நமதுபேர்மட்டும் நாடெங்கும் தெரிந்திருப்பதே நாம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனென்று உள்ளம் களிக்கிறார்கள். வேறு சிலர் நற்காரியம் செய்து சித்திபெறக் கூடியதாகிய எச்சபையானாலும் அச்சபையில் உயர்வாய் மதிக்கப்படும் ஸ்தானம் தனக்குக்கிடைக்கத்தவறிவிட்டால், அச்சபையில் நிகழக்கூடிய அற்பகுற்றங்களையும் மலையாளவாக்கியும், இல்லாததை உண்டென்றும் உண்டென்பதை இல்லையென்றும் புரட்டி சபையை எந்த விதத்திலும் கலைத்துவிடுவதே சாமர்த்தியமென்று விதண்டாவாதங்களை வீம்பில் செலுத்துவோராயிருக்கின்றனர். அனேகர் பொருத்தமற்றவேலைகளைச் செய்து போற்றிப் புகழ்கிறவர்களாகவுமிருந்து நாளடைவில் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோனவர்களாகவும்தோற்றுகிறார்கள். கடைசியாக இவர்களுடைய முயற்சியின் பயனாகப் பிறருக்கு இம்சையைத் தவிர யாதொரு பிரயோசனமும் உண்டாகாமற்போனாலும் குலத்திற்கே அவமதிப்பு பெருகுகின்றது. இப்பெருங்குலாபிமானத் தலைவர்களால் நாம் என்றைக்கு முன்வரப்போகிறோம்? ஒருக்காலுமில்லை. இன்பம்தேடத் துன்பம் வலியவருவது உலக இயல்பு. அப்பேர்ப்பட்ட துன்பத்தை அகற்றுவது அறிவின் வலியாலல்லாது மற்றொன்றால் சாத்தியமன்று. அப்படியிருக்க, அறியாமை மிகுதியால் தன்னிலைமை யறியாது தத்தளித்து நிற்கும் மேதாவிகளால் குலாசார சீர்திருத்தம்செய்து குணமடைவதெங்ஙனம்? உலகில் எந்ததேசமும் எந்நாடும் அது முன்னடையவிரும்பினால் முன்னடைவதற் கின்றியமையாததும் ஜீவாதாரமாயுள்ளதும் அத்தேசத்தில் வசிக்கும் ஜனங்களின் அறிவின் விருத்தியாம்ஸத்தைப்பொருத்து நிற்கிறது. அறிவின் விசாலிப்பை ஜனங்கள் அடைவதற்கு கருவியாகிய உயர்தரக் கல்வியைப்பெறுவதில் அதிக சுருசுருப்பும் பரபரப்பும் காட்டவேண்டும். கல்வியில் என்றைக்கு நாட்டம் வைத்தார்களோ அன்றைக்கே மற்றவர்களுடைய மதிப்பையும் ஆதரிப்பையும் பெறுவதற்கு அருகர்களாகிறார்கள்.

நாம் நமதுகுல முன்னேற்றத்திற்கும் மற்றவர்களால் மதிக்கப்படுவதற்கும் என்னசெய்துவரவேண்டும்? நமது குலஜனங்கள் உயர்தரக் கல்வியும் ஆராய்ச்சியும் அனுபோகமும் அடைவதில் நாட்டம் வைத்து நம்மால் கூடியவரை முயற்சி எடுத்துப் பாடுபட்டு வரவேண்டும். நம்மில் கல்வி பரவுகிறதாவது எவ்வளவுக்கெவ்வளவு குறைவுபடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நாம் இன்னும் பின்னோக்கி நிற்பதில் தடையில்லை. மற்றஜாதிகளெல்லாம் கல்வியையும் பொது அறிவையும் பெறுவதில் முன்னோக்கமாகச் செல்லுகையில் பலஜாதிப் பந்தய ஓட்டமாகிய இக்காலத்தில் நாம்மட்டும் குலாசார தருமத்தைப் பெறுவதில் மட்டும் நோக்கமாக நின்றால் எங்ஙனம் மற்றவர்களுடன் சமமாய்ச் சேரப்போகிறோம்? சீரைத்தேடியல்லவோ பேரைத்தேடவேண்டும்? சீரும் சிறப்பும் இல்லாதவர்களுடைய பேரை உலகத்தார் மதிப்பது கஷ்டம். நாம் சீர்பெறுவதற்கு அனுசரிக்கவேண்



டிய மார்க்கத்தைப்பற்றியும் நாம் விருத்தியாவதற்கவசியமான கல்வியைப்பற்றியும் அதை அல்பமாய் அடைவதற்கேற்ற வழியையும் மறுமுறைபேசுவோம்.

ரெ. ப. கோவிந்தஸாமி ஆசாரி.

* * *

### மன்னார்கோயில் சபாரம்பக்காக்ஷி.

திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலுகா மன்னார்கோயிலில் கடவுள் சம்மதம் சு. வை. பௌத்திரரிஷி மாணிக்காச்சாரியாரும், கு. அண்ணாமலைச்சாமி ஆச்சாரியாரும் புரட்டாசிமீ 10உ இரவு 9-மணிமுதல் 1-மணிவரையில் சுஜாதிப் பௌரோகிதர் ஊரிலேயே இருக்கவேண்டுமென்ற கொள்கையைப் பற்றி பிரசங்கித்தார்கள். நாங்களும் எங்களடுத்த கிராமங்களும் சேர்ந்து அதன்படி நடப்பதாக ஒப்புக்கொண்டோம். சில்பம் சாமிநாத ஆச்சாரியார் குமாரரும் மதுரை டெக்நிகல் இன்ஸிட்டியூட் உபாத்தியாயருமாகிய S. முத்துச்சாமி ஆச்சாரியார் அவர்களும் பிரசங்கித்தார்கள். இவர்கள் மூவரும் பிரசங்கித்தது நங்குலாசார ஒழுங்காகையால் நாங்களும் எங்களூர் வாசிகளும் குலாசாரத்தையொத்த எல்லாவித நன்னடக்கைகளுக்குங் கட்டுப்பட்டிருப்பதாக அறிவீர்களாகவும்.

மறு. அ. சாமியாச்சாரி முதலிய 16-பேர்கள்.

* * *

### ஓர் வேண்டுகோள்.

கும்பகோணம் விசுவகர்ம மகாஜன அன்பின் மிக்க அரிய சகோதரர்காள்? உம்பருந்துதிக்குங் கும்பகோணத்திற்கு விசுவகர்ம வித்தியாசாலை என்று ஓர் வித்தியாசாலையும், நங்கைத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு விசுவகர்ம கைத்தொழிற் பாடசாலை என்று ஓர் கைத்தொழிற்பாடசாலையும், ஞானோதய ஒற்றுமை நலத்தின்பொருட்டு விசுவகர்ம விலாஸ வாசிக புத்தகசாலை என்று ஓர் பொதுஜன வாசிக புத்தகசாலையும், அதினின்றுங் குடந்தை விசுவகர்ம குலாபிமானி என்ற ஓர் மாதாந்த நீதிபோதத் தமிழ்ப்பத்திரிகையும் நிலைபெறச்செய்து அவசியம் நடத்திவரவேண்டியது எம்முயற்சியினும் நன்முயற்சியாகும்.

இதனைநமது குடந்தை விசுவஜனாபிமானகனதனப்பிரபுக்கள் நன்குணர்ந்து (கருணைக்கு எல்லையென விளங்குங்) கருணைக் கொல்லைத்தெருவில் நமது குலப்பெயரால் விசுவகர்ம வித்யாசாலை ஒன்று ஏற்படுத்தி விடாமுயற்சியோடு பரிபாலித்து வருவதாக வதந்தி யுலாவுகிறது. மேற்கூறிய பாடசாலை முதலியவைகளை குடந்தை விசுவகுல மகாஜன சிரேஷ்டர்கள் ஒருங்குசேர்ந்து நகரின் பெரியதெரு கடலங்குடித்தெரு பேட்டைத்தெரு வாணாதுறை முதலிய பட்டணங்களின் நாற்றிசையிலுந் தாபித்து நமது குலச்சிறுவர்கள் கஷ்டமின்றி அவ்வவ்விடங்களில் சுகமாய்ச் சென்று வாசிக்கச்செய்து வருவீர்களானால் நமது குலமானது கலைவளர் மதிபோல் காசினியில் தினே தினே செல்வமாய் விருத்தியாகி செழித்து வளருமென்பதில் யாதொரு சந்தேகமில்லை. ஆதலால் இதனைத் தனது திருவருட் சத்தியோடு கூட நின்று கூட்டி முடித்து வைக்குமாறு ஸ்ரீ விராட் விசுவப்பிர்ம மகாமந்திர மூர்த்தியை மனோவாக்குக் காயங்களால் வந்தித்துச் சிந்திக்கின்றனன்.

குறிப்பு:—இவ்விதஞ் செய்வதானது சென்னை என்கிற அன்னைக்குக் கன்னித்திசையில் வாழுங் கன்னிப் பெண்ணாகிய குழந்தை அன்னையின் அருளைப்பெற்று என்ன நலமுமுற்று நன்னிலைமையோடு வாழ்ந்து வருவதற்கு நிலைபேறெய்து நிமித்தமுமாகும்.

குடந்தை விசுவகர்ம மகாஜனங்களின் ஒற்றுமை நலத்தை முற்றிலுங் கோரி இருக்கும் V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி ஜோதிஷர்.

ஆரியன் சோதிடசாலைத் தலைவர்,
திருவாரூர்.

# தொழிற்றுறைகள்.

**மாமிஸப்பட்டு:**—ஜர்மனிய ரசாயன சாஸ்திரியொருவர் குதிரை மாமிசத்திலிருந்து பட்டுநூல் செய்யுமுறையைக் கண்டுபிடித்திருக்கிறார். இந்தப்பட்டினுற் செய்யப்படும் வஸ்திரங்கள்முதலியன மிகஉறுதியா யிருக்கின்றனவாம்.

**நூதன உருக்கு:**— கந்தகம், நிபாக்கினி, மணல், கரி, இரும்பு முதலிய பலவஸ்துக்களைக் கூட்டி ஒருவித உருக்கு இப்போது நூதனமாய்ச் செய்யப்படுகிறது. இது லேசாக ஒடிந்துவிடாமல் கடினமா யிருக்கிறதென்றும், மற்ற உருக்குகளிலும் மிகச்சிலாக்கியமா யிருக்கிறதென்றுந் தெரிகிறது. சொற்பமாய்க் காய்ச்சி இதைத்தகடாகவும் சுருளாகவுஞ் செய்யலாம். இழுக்கப்படக்கூடிய சக்தி இதிலதிகமுண்டு. வஸ்து குணவிசேஷங்கள் மட்டும் நன்றாய்த் தெரியும்பக்ஷத்தில் எந்தெந்த வேலைக்கு எந்தெந்தமாதிரி வேண்டுமோ அந்தந்தமாதிரியாக அதற்கேற்ற வஸ்துவை யமைத்துக்கொள்ளலாம். குருட்டுத்தனமாகவே ஒவ்வொன்றையுங் கையாண்டுவருவோர் காலகாலமாய் ஒரேவிதமாய் வேலைசெய்ய நேரிடுமேயல்லாமல் அந்த வேலையைச் சுளுவுப்படுத்தவும் விருத்திசெய்யவும் முடியாது. ஆதலால், வஸ்துகுண விசாரணை கைத்தொழிலாளிகளுக்கு அவஸியம்வேண்டும். இந்த விசாரணையுடன் வேலைசெய்தால் விசேஷலாபமுங் கீர்த்தியுமுண்டாதல் நிச்சயம். இதற்கோ கல்விவேண்டும். கைத்தொழிற் கல்வியெனப் பிரத்தியேகமா யொன்றிருக்கிறது. இங்கிலீஷ் படித்துத்தான் அதிற் பிரவேசிக்க முடியும். ஆதலால், நமது சிறுவர்கள் இங்கிலீஷ் வாசித்துக் கைத்தொழிற் கல்வி பயிலுவார்களாகில் நமது தொழில்கள் நன்மைபெற்று விளக்கமுறும். கல்வியில்லாத கைத்தொழில் கனமடையாது தனமடையாது.

**நவீன டெலிபோன்:**— சிலமைல் தூரத்திலிருப்போர் ஒருவரோ டொருவர் வார்த்தையாடுவதற்குச் சாதனமா யேற்படுத்தப் பட்டிருக்கும் யந்திரத்திற்கு டெலிபோன் என்று பெயர். இந்த யந்திரம் பெரும்பட்டணங்களிலெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றது. தந்திமூலமாக நெடுந்தூரமேனும் ஒலிவழியாய்ச் சமாசாரம் அறிவிப்பதுபோல், டெலிபோன் மூலமாக சிறுதூரங்களில் பேச்சினலேயே நேர்நின்று சம்பாஷிப்பதுபோல் சமாசாரப் போக்குவரவுசெய்தல் சகசமாயிருந்து வருகின்றது. தற்காலம், டெலிபோனில் ஒருவரோடு பேசுவதற்கு அவரையழைக்கும்போது, அழைக்கப்பட்டவர் வீட்டிலில்லாத பக்ஷத்தில் தாமதித்துத் திரும்பவும் அழைத்து, அவர் வந்திருந்தாராயின் பேசவேண்டியதா யிருக்கிறது. இப்படித் தாமதிக்கவேண்டிய அவஸியத்தை மாற்றுவதற்காக நவீனமாக பிரஞ்சு அரசாங்கத் தலையிடமாகிய பாரிஸ் பட்டணத்தில் ஒருயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒருகடிதத்தில் விஷயத்தையெழுதி இந்த யந்திரத்தினிடத்தில் வைத்துவிட்டால், கோரிய இடத்தில் அந்த விஷயத்தை அப்படியே இந்த யந்திரம் எழுதிப் பதிவுசெய்து விடுகின்றதாம். அதற்கு உரியவர் வந்தவுடன் வாசித்துத் தெரிந்துகொள்வார். ஒருவருக்காக எதிர்பார்த்துக்கொண்டு நிற்கவேண்டிய கஷ்டம் இதனால் நிவர்த்தியாகிறது. இந்த சக்திமிகுந்த கல்வி யாராய்ச்சிகளாலும், புத்தி கூர்மையாலுமே யன்றோ உண்டாயிருக்கவேண்டும்? கல்வியாராய்ச்சிகளால் காணலாஞ் சிறப்பின் மிக்கதொன்றுண்டோ?

---

காளமேகம் தனக்கு வெள்ளை சரியாகக்கொண்டுவந்து கொடாத வண்ணாத்தியை நோக்கி:—

வெள்ளாவிபத்து வெளுக்க விருபதுநாள்
முள்ளாடிக்கஞ்சிதனில் முப்பதுநாள்—தள்ளாடி
வண்ணாரவஞ்சி வருந்தி எடுத்தவெள்ளை
புண்ணுக்குப் போலிருக்கும் போ.



# மற்றவர் மாட்சி.

**பி. எ. முதலிய பரீக்ஷைகளில் தேறியவர்கள்:**—சென்னைச் சர்வகலா சங்கப்பரீக்ஷைகளில் இவ்வருஷத்தில் தேறியவர்களுக்கு உபசாரக்கூட்டங்களும் விருந்துகளும் நடைபெற்றன. சென்னையிலுள்ள திருநெல்வேலி சங்கத்தார், கோயமுத்தூர் சங்கத்தார், வடஜில்லா சங்கத்தார் முதலிய பலகூட்டத்தார்கள் தங்கள் தங்களெல்லையைச் சார்ந்தவர்களை யுபசரித்தனர். இதனால் பரீக்ஷைகளில் தேறியவர்களுக்குச் சந்தோஷமும், பரீக்ஷைகளுக்கு வாசிப்போர்க்குத் தூண்டுதலு முண்டாகிற தல்லவா? நமதுவம்ஸத்திலோ பாஸ் பண்ணுகிறவர்களுமில்லை உபசரிப்பவர்களுமில்லை. நாகரீகமிகுந்து கல்விபெருகிவரு மிக்காலத்தில் நாமிப்படியிருந்தால் நமது குலத்திற்குப் பெருமையும், கல்விகற்ற ஜாதியாரோடு சமத்துவமும், அவர்கள் நல்லிணக்கமரியாதை யாதிகளும் எப்படிச் சித்திக்கும்?

**வித்தியாதர்ம பரிபாலன சபை:**—மதுரையில் நடைபெற்றுவரும் ஷை சபையின் மூன்றாவது வருஷோற்சவம் சென்றமாதத்தில் நடந்தது. புத்திசாலிகளாகிய ஏழைப்பிள்ளைகளுடைய கல்வியபிவிருத்திக்கு உதவிசெய்வதே இச்சபையின் கருத்தாகும். சென்ற வருஷத்தில் இச்சபையார் ரூ. 753-9-0 கொடுத்து 34 பிள்ளைகளுக் குதவினர். ஷை உற்சவ காலத்தில் சபாநாயகராயிருந்த சென்னை ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் S. ஸ்ரீனிவாஸ ஐயங்கார், ஹைஸ்கூல் பிள்ளைகள் இண்டர்மிடியேட் பிள்ளைகளிவர்களுக்குமட்டுமே சகாயஞ்செய்வது போதாதென்றும், பி. எக்கு வாசிக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு முதவவேண்டுமென்றும், மதுரை இராமநாதபுரமாகிய இரண்டு ஜில்லாக்களுஞ் சேர்ந்து பிரதிவருஷமும் வெளிநாடுகளில் பயில்வதற்கு ஒருமாணவனையேனும் அனுப்பிவரவேண்டுமென்றும் வற்புறுத்தினார். இதற்குப் பதின்மடங்கதிகமாக நாம்செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். பொருளாதரவு தரும் புண்ணியர்களுண்டோ!

**நியோகிகள்:**—நியோகி மகாஜனசங்கத்தின் 11-வது வருஷாந்தக்கூட்டம் குண்டூர் ஜில்லாவிலுள்ள சிராலா வென்னுமூரில் சென்றமாதத்தில் மூன்றுநாள் நடைபெற்றது. ஆரம்பத்தில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஹோமமும், பரமஹம்ஸ ஸ்ரீசிதானந்த சரஸ்வதிஸ்வாமி யாராதனையும் நடந்தன. ஸ்வதர்ம பிரகாஸினி வேதபாடசாலைப்பிள்ளைகள் வேதவாக்கியங்கள் சிலவற்றால் கடவுள் வணக்கஞ் செய்தார்கள். அம்மூன்று நாட்களில் மற்ற கான்பரன்ஸ்களிற்போல் பலவிஷய சம்பந்தமான ஷை ஜாதி யபிவிருத்திக்கநுகுணமான தீர்மானங்கள் செய்யப்பட்டன. ஷை பாடசாலைப் பிள்ளைகளுக்கு வேதபாடங்களிலும், சமஸ்கிருத பாஷையிலும் பரீக்ஷைகள் நடந்ததில், முக்கியபிள்ளைகளுக்குப் பொன்வெள்ளிப் பதக்கங்களும், புத்தகங்கள் முதலிய பரிசுகளும் அளிக்கப்பட்டன. நியோகி வித்யாநிதியென்னும் பெயரால் அச்சாதிவித்தியார்த்திகளுக்குச் சகாயஞ் செய்யும்பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிதிக்குப் பொருள்சேகரிக்கப்பட்டது. இவ்விதமுயற்சிகளில் தென்னிந்தியப்பௌருஷேயர்கள் எப்போது தலையிடுவார்களோ தெரியவில்லை.

**ஆந்திரபாஷாபி விருத்தி:**—திராவிடர்களைப் பார்க்கிலும் ஆந்திரர்கள் மொத்தத்தில் பலமுயற்சிகளுடையவர்களாய் உழைத்து வருகிறார்கள். இவற்றுள் பாஷாபிவிருத்தியும் ஒன்றாயிருக்கிறது. தமிழ்ப்பாஷையோ விருத்திசெய்வாரின்றிவாடிப்போய்க் கொண்டிருக்க, ஆந்திரபாஷை பல அபிமானிகளால் புதுக்கப்பட்டு வருகிறது. சென்ற 1911-வது வருஷத்தில் கிருஷ்ணா ஜில்லாவிலுள்ள நிடதவோல் என்னுமூரில் 'ஆந்திர பிரசாரணி கிரந்தநிலயம்' என்னுமொரு கல்விக்

கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சபையார் உற்சாகத்துடன் ஆந்திரபாஷையை விருத்தி செய்யச் சாதகமாயிருக்கும்படி பிட்டாபுர மகாராஜா அவர்கள் ரூ 4,000 விலைகொண்ட அச்சியந்திர சாலையைப் பரிசளித்திருக்கிறார். ஆந்திரபாஷையில் சுலபநடையுள்ள 23 புத்தகங்களை இவர்கள் இதுவரையிலும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இவ்விதமுயற்சி செய்தால் நாம் நமது குலசம்பந்தமான கிரந்தங்களையும், குலதர்ம பரிபாலன சாதகநூல்களையும் மற்றவற்றையும் வெளிப்படுத்தி விரைவிலேயே விருத்திபெறலாம். நமக்கு அவ்விதசகாயஞ் செய்யத் தக்கவர்கள் யாரிருக்கிறார்கள்?

**ஸ்ரீரங்க சமஸ்கிருதபாடசாலை:**—சிலமாதங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டதாகிய ஷை பாடசாலை, கவலகுடி குப்புசாமி ஐயங்காரால் கீழைச் சித்திரவீதியிற் கட்டப்பட்ட, சுமார் ரூ 10, 000 மதிப்புள்ள புதுமாளிகைக்கு சென்றவிஜயதசமியன்று கொண்டுபோகப்பட்டது. இப்பாடசாலைக்கு ஒன்றரை லக்ஷரூபா மதிப்புள்ள பூஸ்திதி யிருக்கிறது. இதன் வருமானத்திலிருந்து பாடசாலைச்செலவுக்கென்று மாதவாரியில் ரூ. 200 எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதில் அர்ச்சகர்கள் ஸ்ரீரங்கநாத சுவாமி பூஜா காரியங்களைச் செவ்வையாய் நடத்தத் தெரிந்து கொள்ளும்படி அவர்களுக்கு பஞ்சராத்திரமும், தென்கலை ஐயங்கார்களுக்கு வேதங்களும், பிரபந்தமும், சமஸ்கிருத பாஷையுங் கற்பிக்கப்படுகின்றன. ஏழைகளுக்கு சாப்பாட்டுடன் ரூபா ஐந்து மாதந்தோறும் உபகாரச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. வடகலை ஐயங்கார்களுக்கும் இலவசமாய்க் கல்வி கற்பிப்பதற்காக வேண்டிய ஏற்பாடுஞ் செய்யப்பட்டிருக்கிறது. இவையன்றே சமஸ்கிருதபாடசாலையின் லக்ஷணங்கள்! இப்படியமைக்கப்படும் பாடசாலைகளாலன்றி மற்றவற்றால் யாதொரு பயனுஞ் சித்திக்கமாட்டாதென்பது நிச்சயம்.

## ஆரோக்ய போதம்.

உள்நாக்குவளர்ச்சி:—ஒட்டடையுங் கல்சுண்ணாம்பும் எருமைப் பாலில் குழைத்து உள்நாக்கில் வைத்தால் தீரும்.

காதில் சீழ்வடிதல்:—கடல்நுரையையும் வலம்புரிக்காயையும் பொடிபண்ணி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சிக் காதில் துளிவிடவும்.

வெட்டுக்காயம்:-நாட்டுச்சக்கரையில் ஆமணக்கெண்ணெய் விட்டு வெண்ணெய்போல் குழைத்து அக்காயத்தில் வைத்து இறுக்கிக்கட்டவும்.

கெர்ப்பத்திலுள்ள சிசு வெளிப்பட வருத்தப்பட்டால்:—குன்றிமணி பருப்பைத் தண்ணீர் விட்டரைத்து வெற்றிலையில் தடவி பாக்குடன்கொடுக்கலாம்.

பீனிசம்:—ஜாதிலிங்கம் வராகனிடை 8, எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து சன்னத்துணியில் தடவி உலர்த்தித் திரிசெய்து விளக்கில்கொளுத்தி புகைபிடித்தால் 8-வகைப் பீனிசமுந் தீரும்.

குழந்தைகள் ஜன்னி, கணை மாந்தம்:—கல்லுப்பு,மிளகு, வெள்ளை வெங்காயமிவைகளை அரைத்து விளக்கெண்ணெயில் மத்தித்துச் சற்றே அனலில் வைத்து 2-வராகனிடை உள்ளுக்குக் கொடுக்கவும்.

பிள்ளைகள் கணைமாந்தம்:—துளசி, வில்வம், கஞ்சாங்கோரை, தூதுளை, கரிசலாங்கண்ணி இதுகளைப் புட்டிட்டு சாறுபிழிந்து அதில் கோரோசனை மாத்திரை உரைத்துக் கொடுக்கவும்.

---

காளமேகப்புலவர் தஞ்சாவூர் சென்ற காலத்தில் அவ்விடத்தில் இருந்த பிரபுக்கள் இவரை சரியாக மதியாமை கண்டு மனம் வருந்திக் கூறிய கவி.

பிரம்பைக் காம்பற்றிப் பின்னிய கூடை
நிரம்பத்தம்மிழை நிரப்பிச்—சிரம்பற்றிக்
கற்றூர் சூழ்தஞ்சை கடைவீதி சென்றுசென்று
விற்றாலுங் கொள்ளார் விலைக்கு.



## விவசாய விளக்கம்.

**ஆமணக்கு:**—இச்செடியில் இரண்டுவிதங்களிருக்கின்றன- ஒருவிதச்செடி ஓராண்டுதானிருக்கும், மற்றதற்கு வயது அதிகமுண்டு. இரண்டாவதுவகைச் செடியானது முன்னதுபோலச் சிறிதாயிராமல் மிகவோங்கி வளருந்தன்மையுடையதா யிருக்கிறது. இது வேலியாகவும், நிழலுக்காகவும் பயிரிடப்படுவதுண்டு. ஒருவருடச்செடியை, பயறு முதலியவற்றுடன் நெல்வயல்களில் அஃதறுவடையானவுடன் விதைக்கலாம். விதைக்கும்போது ஓரடி இடைவெளியும், நாற்று பிடுங்கி ஒழுங்குப் படுத்தும்போது இரண்டுமூன்றடி இடைவெளியும் வைத்தல் சகசம். பழக்குலைகளை வெட்டிக் காயவைத்துத் தடியாலடிக்க வித்துகளுதிர்ந்துவிடும். ஆமணக்கு இலைகள் ஆடுமாடுகளுக்குத் தீனியாகவும் தட்டுகள் விறகாகவும் உபயோகப்படும்.

**தென்னை:**—பிலிப்பைன் தீவுகளின் சில மாகாணங்களில் தென்னந்தோப்புகளில் கள்ளிறக்குவதற்காக ஒவ்வொரு மரமாய ஏறியிறங்குவதைச் சுலபமாக்கி யிருக்கிறார்கள். தென்னைகள் நெருங்கி யிருக்குமிடங்களில் இரண்டுமரத்திற்கு உறுதியான மூங்கில்களைக் கட்டி ஒன்று கையால் பிடித்துச் செல்லவும் மற்றொன்று காலால் நடந்து போகவுஞ் செய்திருக்கிறார்கள். * * தேங்காய் நாற்றுவிடுவதில் காய் பெரியதா யிருப்பதால் மட்டும் சிலாக்யமில்லை. நார் கொஞ்சமாகவும் மணிபெருத்துஞ் சதையதிகமாகவு மிருக்கவேண்டும். * * தேங்காய்கள் நன்றாய் முற்றியுலர்ந்து ஈரம்வாங்கின பிற்பாடுதான் அவற்றின் எண்ணெய் அதிகப்படும். முக்கால் காய்களும், பால்காய்களும் எண்ணெய்க்கு உதவமாட்டா.

**உடையவன் கண்ணோடாப் பயிரழியாதா:**- பயிர்ப்பாதுகாப்பு சொந்தக்காரன்பக்ஷமா யிருக்கவேண்டும். இல்லாவிடில் நஷ்டத்திற்காளாக்கும். ஒருவன் ஏராளமான நிலங்கள் வாங்கி அவற்றை வாரத்திற்கு விட்டு ஜீவனஞ்செய்து வந்தான். இவனிடத்தில் ஒரு குடித்தனக்காரன் கொஞ்சநிலத்தைக் குத்தகையெடுத்து சாகுபடி செய்தான். இவன் நேரே யுழைத்துவந்ததினால் அதிகலாபங்கிடைத்து தன் செலவுபோக மிச்சப்பணத்தைச் சேர்த்துவந்தான். பிறகு, அக்கம் பக்கத்தாரோடு ரொக்கலேவாதேவியும் இந்தகுடித்தனக்காரனுக்கு ஏற்பட்டது. முதலவனோ வருமானம் செலவுக்குப் போதாமையால் கடன்பட்டுக் கொண்டே வந்தான். ஒருசமயத்தில் பணத்திற்காக மிகவுஞ் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் அவன் குமஸ்தா ஷை குடித்தனக்காரனிடம் கடன் கேட்கலாமென்று யோசனை சொன்னான். அக்குடித்தனக்காரன் பணக்காரனாயிருப்பது கேட்க ஆச்சரியமடைந்த முதல்வன் அவனை யுடனே வரவழைத்து "அப்பா! உன்னிடத்தில் அதிகப்பணமிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்; விஸ்தாரமான நிலங்களையுடைய நான் கடன்பட்டு மெலிய, என்னுடைய குத்தகைக் காரனாகிய உன்னிடத்தில் பணமெப்படி சேர்ந்தது?" என்று கேட்டான். அவன் வணக்கமாய் "ஐயா தங்களுக்கு மெனக்கு மிருக்கும் வித்தியாசம் ஒன்றே" என்றான். "அஃதென்ன?" வென்று அவன்கேட்டதும் 'ஐயா! கிராமவேலைகளிலெல்லாம் தாங்கள் நேரே கவனஞ் செலுத்தாமல் சிப்பந்திகளை போய்ப்பாருங்கள், போய்ப்பாருங்கள் என்றனுப்பி வருகிறீர்கள். நானோ என் சிப்பந்திகளுக்கு அப்படிச் சொல்லாமல் 'வாருங்கள் போவோம்' என்று அழைத்துப்போய் ஒவ்வொரு காரியத்தையும் நேரே பார்த்துவருகிறேன்" என்று குடித்தனக்காரன் பதில் சொன்னான். அப்போது முதல் இவன் தனது பயிர்களின்மீது தானே கண்ணோட்டஞ் செலுத்திக் கடன்களெல்லாந் தீர்ந்து தனிகனான்.

---

# விசேஷ வர்த்தமானம்.

**பால் கரக்கும் மரம்:**—இது ஸிலோன் என்னும் இலங்கைத் தீவிலிருக்கிறது. பசும்பாலைப் போல் இதன்பால் குடிக்க உதவுகிறது. இதை இங்கிலீஷில் Gymnema lactifera என்பர்.

**மாமனாரைக் கொன்றவன்:**—சேலம் ஜில்லா ஓமலூர் தாலுகா ஏலத்தார் முத்துடையான், தன் மனைவியையனுப்ப மறுத்த மாமனாரைக் கத்தியாற்குத்திக் கொலைசெய்து 2 வருஷக் கடுங்காவல் தண்டனைபெற்றான்.

**நாய்களை வளர்க்கும் பூனை.**—பூனைக்கும் நாய்க்கும் இயற்கையில் சத்துருத்வம் உண்டென்று சொல்லிக்கொள்ளப் படுகிறதல்லவா? லண்டனிலுள்ள ஆல் பிரட் ஸ்டான்துரை ஒரு பெண்பூனையால் மூன்று நாய்க்குட்டிகளுக்குப் பால்கொடுப்பித்து வளர்த்து வருகின்றனர்.

**மதுரைத் தமிழ்ச்சங்கம்:** — பாலவனத்தம் ஜமீனதாராகியபாண்டித்துரைசாமித்தேவரவர்களால் ஸ்தாகப்பட்டு அவருடைய தலைமையின் கீழ் நடந்துவந்த ஷை சங்கத்திற்கு ஷை யாருக்குப்பின் தலைவராயிருந்த S. சுப்பிரமணிய அய்யரவர்களும் காலமாய்விட்டபடியால் இப்போது இராமநாதபுர ராஜா அவர்கள் ஷை சங்கத்தலைவராய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

**திருநெல்வேலி வெள்ளம்:** — சென்றமீ 17உ பெய்த பெருமழையால் தாம்பிரபரணியாற்று நீர் 16½ அடி உயரம் மேலிட்டது. தண்ணீரளவுக்கு இது 6½ அடி யதிகம். 18உ யிரவு கலெக்டர் பட்டணமுழுவதும் பறையறைவித்து எல்லோரும் தூங்காமல் விழித்திருக்கும் படிசெய்தார். அநேககிராமங்களிலும் வயல்களிலும் நீர் நிரம்பி வீடுகள்பல விழுந்து போயின.

**உத்தம ரத்தினங்கள்:**—ஜெர்மன் தென்மேற்கு ஆபிரிக்காவில் சமீபத்தில் ஹெலலியோடார் என்னுமொரு ரத்தினக்கல் கிடைத்தது. இது சூரியவெளிச்சத்தில் தங்கநிறமாகவும் விளக்குவெளிச்சத்தில் பச்சைநிறமாகவுங் காணப்படுகிறது. இதை ஜெர்மன் சக்ரவர்த்தியவர்கள் தமது பெருமாட்டிக்குப் பரிசளித்திருக்கிறார். ருஷியாதேசத்து ஸைபேரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஸாரீ என்னும் மற்றொரு ரத்தினமுண்டு. அது பகலிற் பச்சையாகவும் இரவில் சிவப்பாகவுங் காணப்படும்.

**மாட்டுவயது:**—மாடுகளின் பல்லைப்பார்த்து வயதுசொல்வது சகஜமாயிருக்கிறது. இரண்டு வருஷத்தில்பெரியபல் இரண்டிருக்கும். வருஷத்தில் இரண்டுசேரும். 5-வது வருஷத்தில் வாய்கூடும். எட்டுப்பல் சேர்வதற்கு 6-வருஷமாகும். கொம்பின்கட்டுகளைப்பார்த்தும் வயது சொல்வதுண்டு. இரண்டாவது வருஷத்தில் முதல்கட்டும் பிறகு வருஷத்திற்கொன்று மூண்டாகும். இவற்றுள் பொய்க்கட்டுகளு மிருக்கின்றன. அவை நன்றாய்ப் போஷிக்கப்படாதமாடுகளுக்குண்டாகும்.

**மதிகெட்ட மாந்திரீகன்:**—பர்ட்வான் ஜில்லாவிலொருமாந்திரீகன் செத்தவர்களை உயிர்ப்பிக்கத்தக்க மந்திரத்தைத் தன் குருவினிடமாக அறிந்துகொண்டதாக நம்பி, அதைப் பரீக்ஷிக்கும் பொருட்டு தன் மனைவியைக் கொன்று அவள்மேல் உட்கார்ந்துகொண்டு ஜெபஞ்செய்து பார்க்க உயிர்வாராததுகண்டு பயந்தோடிவிட்டானும் இவனைப் போலீஸார் தேடித் திரிகின்றனர். இவன் மந்திர பரீக்ஷையைச் செத்தவர்களிடஞ் செய்யலாகாதா? அதற்காக ஒருயிரை ஏன் கொன்றான் மூடன்!

**எலுமிச்சை:**—எலுமிச்சை நடுவதற்கு ஒன்றரையடி நிகளம் ஒன்றரையடி அகலம், இரண்டுமுழ் ஆழமுள்ள பள்ளத்தைவெட்டி, அதிலே ஆடுமாடுக ளடைக்கப்படு மிடங்களிலிருக்கும் எரு, குப்பை முதலியவற்றையும், வீட்டுக்குப்பை சாம்பலாதிகளையும் போட்டு மேலே மண்ணிட்டு, அதற்குமேல் மண்ணையும் ஆட்டுப்புழுக்கை யெருவையுங் கலந்து பள்ளத்தை நிரப்பவேண்டும். இப்பள்ளத்திற்கு மத்தியில் எலுமிச்சங்கன்றை நட்டு மண்மூடி பாத்திசெய்து நிழலிட்டு, மூளைத்துத் தழைக்குமட்டும் காலைமாலைகளில் நீர் பாய்ச்சவேண்டும். எலுமிச்சை நடுவதற்குத் தக்ககாலம் ஆடி ஆவணி மாதங்கள், நிலம் மேட்டுத்தரையாகும்.



**புருஷனிறக்கத் தானுமிறந்தாள்:**—வாலாஜா நகர் சப்ரிஜிஸ்டிரா ராபீஸ் உத்தியோகஸ்தரான ஒரு தெலுங்கர் சுரங்கண்டு சென்றமாதமிறந்துபோனார். அப்போது வீட்டில் அவர் மனைவியும் அவளுடைய தங்கையாகிய 8 வயதுப் பெண்ணொருத்தியு மிருந்தனர். புருஷன் அபாய ஸ்திதியிலிருக்கும்போதே பெண்சாதி பந்துக்களுக்குத்தந்தியடித்தாள். பிராணன்இரவு 12-மணிக்குப் போய்விடத் தன்னோடிருந்தபெண்ணை அண்டைவீட்டில் விட்டுவந்து அருகிலிருந்த குளத்திலிறங்கி உயிர் மாய்த்துக்கொண்டாள். மறுநாள் ஊரிலிருந்து வந்தவர்கள் இரண்டு பிணங்களையு மொன்றாய்த் தூக்கினார்கள்.

**ஆயுர்வேதபரீட்சை:**—சர்வ இந்திய ஆயுர்வேத கான்பரன்ஸாருடைய பரீக்ஷா சங்கமாகிய ஆயுர்வேத வித்தியாபீடத்தாரால் சென்றமாதத்தில் (1) பிராகிருத வைத்தியபரீக்ஷை, (2) ஆயுர்வேதாசார்ய பரீக்ஷை யென்பவை நடைபெற்றன. இதற்கு முக்கியஸ்தர் அலகாபாத் தாராகஞ்சிலுள்ள ஆயுர்வேத மகாமண்டல காரியதரிசியாகிய ஆயுர்வேத பஞ்சானன பண்டித ஜகந்நாத பண்டித சுக்லர் என்பவர். வட இந்தியாவில் ஆயுர்வேதம் கிரமமாக போதிக்கப்பட்டுங் கையாளப்பட்டும் வருகின்றபடியால், அங்கு இங்கிலீஷ் வைத்திய முறைகள் அதிகமாய்ப் பரவவில்லை. சென்னையிலும் ஆயுர்வேத காலேஜில் சென்ற 12 வருஷங்களாக இம்முறை கற்பிக்கப்பட்டுவருகிறது. பல மாகாணவாசிகளும் வாசித்து வருகின்றனர்.

**அளவைகள் விசாரணைக் கமிட்டி:**—எடுத்தல் முகத்தலாதி அளவைகளைப் பற்றிய விசாரணைநடத்துவதற்கு ஒரு கமிட்டி ஏற்பட்டிருக்கிறது. இக்கமிட்டி யார் தங்கள் விசாரணை சம்பந்தமாகப் பொதுஜனாபிப்பிராயந் தெரிந்துகொள்ள ஊரூராய்த்திரிந்து முக்கியஸ்தர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்பார்கள். அவர்களுக்குக் கமிட்டியார்களுடைய கேள்விகளின் ஜாபிதா அனுப்பப்படும். மற்றவர்கள் ஏதேனும் ஷை கமிட்டியாருக்குத் தெரிவிக்க விரும்பினால் தங்கள் ஜில்லா கலெக்டர் மூலமாக நாலுநாள் நோடீஸ் கொடுக்கவேண்டும். இக்கமிட்டியார் தென்னிந்தியாவில் கீழ்க்குறித்த நாட்களிலிருப்பார்கள்: 1914ஞூ ஜனவரிமீ கள்ளிக்கோட்டை 8-9உ; கொச்சி 10-12உ; கரூர் 14உ; திருச்சிராப்பள்ளி 14-15உ, தூத்துக்குடி 16உ; விருதுப்பட்டி 17உ; மதுரை 18-19உ; நாகப்பட்டணம் 20-21உ; பண்ணுருட்டி 22உ.

**எலி பாஷாணம்:**—எலியுபத்திரவம் பொறுக்கமுடியாது அதைத்தொலைக்க விரும்புவோர், மேல்நாடுகளில் ஒருபாயஞ் செய்கிறார்கள். பைஸிகில் பழையரப்பர் குழாயை ஒருபக்கத்திலறுத்து எலிவளையில் வைத்து, மறுமுனையைப் பெரியதொரு ஜாடியில் வைக்க எலி அக்குழாய் வழியேபோய்ச் சாடியில் விழுந்திறக்கும். அதிலிருந்து ஏறிவரமாட்டாது. (Barium Carbonate) பேரியம் கார்பனேட் என்னு முப்பு சுலபவிலை யுள்ளதா யிருப்பதினால் எலிபாஷாணமாகப்பெரும்பாலுமுபயோகிக்கப்படுகிறது. இந்த பாஷாணம் மற்ற பிராணிகளுக்குத் தீங்கு செய்வதில்லை. இவ்விஷத்தைத் தின்ற எலி தாகங்கொண்டு வேகமாக வீட்டைவிட்டோடிவிடுமென்றும், வீட்டில் சாவதில்லை யென்றுஞ் சொல்லப்படுகிறது. இதைத் தின்பண்டங்களிற் கலந்து வைக்கிறார்கள்.

**பகலவன் மறையாது பரந்த ராஜ்யம்:**—ஒருயாங்கி ஓர்இங்கிலீஷ்காரனோடு சம்பாஷித்

தூக்கொண் டிருந்தபோது, பிரிட்டிஷ்ராஜ்யப் பெருமையைப்பற்றி இங்கிலீஷ்காரன்யாங்கிக்குச் சொல்லிவந்தான். அவன் அதற்குச்செவி கொடாமல், "இங்கிலாந்து மிகச்சிறியதாயிருப்பதால், அதின்வாசிகள் கடலிற் கால் படாமல் தங்கள் படுக்கைவிட் டெழமுடியாது" என்றான். இது கேட்டுக் கோபங்கொண்ட இங்கிலீஷ்காரன் "ஐயா! பிரிட்டிஷ் ராஜ்யத்தினின்று சூரியன் அஸ்தமிக்கிறதே யில்லை. அஃதவ்வளவு விஸ்தீரணமுடைய தென்பது உமக்குத் தெரியாதா?" என்றான். யாங்கி உடனே "போ போ, கடவுள் உங்களை இருட்டில் நம்பி விடமாட்டார். ஆதலினாலேதான் உங்கள் இடத்தை விட்டுச் சூரியன் மறைகிறதில்லை" என்று பதிலுரைத்தானும். பிரிட்டிஷ் ராஜ்யம் பூலோக முழுவதும் பரவியிருப்பதால் ஓரிடத்தில் சூரியன் அஸ்தமனமாயினும் மற்றோரிடத்திற் பிரகாசிக்கிறான். இந்தபாக்கியம் மற்றராஜ்யங்களுக்கு கிடையாது. அவையெலாம் ஒவ்வொரு திசையிலே யொடுங்கி யிருப்பவை யாதலினால்.

**சாஸ்திரோக்த நவீனோக்தங்கள்:** — சாஸ்திரக் கட்டளைகள், மதாநுசாரணைகள் இவற்றின் யுக்தாயுக்தத்தை ஒருவன் எவ்வளவுமட்டும் ஆராயலாம்; தர்மசாஸ்திரங்கள் வயதேறிய விவாகங்களை அங்கீகரிக்கின்றனவா; ஜாதிக்கட்டுப்பாடுகள் நவீன நாகரீகக் கோட்பாடுகளுக்கொத்தவாறு தளர்த்தப்படலாமா வென்பன போன்ற விஷயங்களைப்பற்றி ஆலோசிப்பதற்காக, சாஸ்திரிகளும் ஆசார சீர்திருத்தக்காரருங் கொண்டதொரு சபை வட இந்தியாவில் நடைபெற்றது. இரண்டுகக்ஷிகளிலும் மிகச்சிறந்தவர்களே முன்னின்று வாதாடினார்கள். ஒருவர்க்கொருவர் விரோதமான கக்ஷிக்காரரென்று சொல்லக்கூடுமாயினும், யாதொரு கலகமில்லாமல் ஷை சபைமுடிந்தது. திட்டமாய் யாதொன்றும் முடிவுகட்டப்படவில்லை யென்றாலும், யுக்தாநுசாரமாகவும் காலவர்த்தமானங்களுக் கேற்பவும் சாஸ்திர மதக்கோட்பாடுகளைப் பற்றி வாதிப்பதில் பிசகில்லையென்றும், வயதேறிய விவாகங்களைக் கண்டிக்கலாகாதென்றும், இவ்விஷயமாய் சங்கராசாரியர்களை யெல்லாம் அபிப்பிராயங் கேட்கவேண்டு மென்றும் தீர்மானிக்கப் பட்டது. மதாநுசம்பந்தமாகப் பெண்களுக்கு வித்தியாபோதனை செய்தல் நன்றெனக் கொள்ளப் பட்டது.

**யூனானிவைத்திய பாடசாலை:**—சென்ற டிஸம்பர்மீ 18ட சனிக்கிழமையன்று சென்னை திருவல்லிக்கேணியில், கான்பகதூர் மகம்மது அப்துல் குதுஸ் பாக்ஷாசாயபு அவர்களுடைய நன்கொடையான, யூனானிவைத்திய முறைகளைப் போதிக்கும் பாடசாலையென்று திறக்கப் பட்டது.

**நாட்டுக்கோட்டைச் செட்டிகள்:**—பள்ளத்தூர் K. P. இராமநாதன் செட்டியாரவர்கள், தமது வகுப்பாராகிய நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் தற்காலத்தில் நடத்திவரும் சமஸ்கிருத பாடசாலைகள் நன்மையொன்றும் பயக்கவில்லையென்றும், அவற்றில் ஏழுவருஷகாலம் பாப்பாரப்பிள்ளைகளுக்குப் போஜனமளித்துத் துணிகள் கொடுத்துச் சமஸ்கிருதங் கற்றுக்கொடுத்த போதிலும் அவர்கள் அதற்குப்பிறகு பிழைப்பதில் கஷ்டப்படுகிறார்களென்றும், இங்கிலீஷ் பாஷையுஞ் சேர்த்துப் போதிக்கப்படும் பக்ஷத்தில் அப்பிள்ளைகளுடைய கல்வி செப்பமுறுவதுடன் அவர்கள் ஜீவிப்பதற்கு வழியுண்டாகுமென்றும் 'இந்து' பத்திரிகை மூலமா யுபதேசஞ்செய்கிறார். தாராளமாய் வழியும் ஆயிரக்கணக்குச் செலவில் சமஸ்கிருத போதனை பெறும் ஆருஷேயர் கதியே இவ்வளவிலிருக்க தௌர்ப்பாக்கியத் தவிப்பிலிருக்கும் நம்மவர்களுடைய சமஸ்கிருதப்பயிற்சி சாதனங்களைப்பற்றியும் அதனுபயோகங்களைப்பற்றியு மென்சொல்வோம்!

---

வருஷசந்தா ... டெருபா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
1? FEB 1914
MADRAS.

ஸ்ரீமத்விராட்விஸ்வகர்மணேநம:

# ஓ விஸ்வகர்மன் ஓ

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப்பத்திரிகை
462, தங்கசாலை வீதி, சென்னை.

---

விஸ்வகர்மாமஹாபாகோஜஜ்ஞேசில்பப்ரஜாபதிஃ கர்தாஸில்பஸஹஸ்ராணாம்திரிதஸாணாம்சவர்தகிஃ-
பூஷணாணாம்சஸர்வேஷாம் கர்த்தாசில்பவதாம்வரஃ யோதிவ்யாணிவிமாநாணிதிரிதஸாணாம்சகாரஹ-
மனுஷ்யாஸ்சோப ஜீவந்தியஸ்யசில்பம் மஹாத்மனஃபூஜயந்திசயம்நித்யம் விஸ்வகர்மாணமவ்யயம்-
மஹாபாரதம், ஆதிபர்வம், ஸம்பவபர்வம், 66-வது அத்தியாயம், 29-30-வது ஸ்லோகங்கள்.

---

சம்புடம் I. பிப்ரவரி 1914. சஞ்சிகை 5.

---

## ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச உபதேசம்.

1. சிவனுஞ் சக்தியும் (அதாவது, ஞானமும் பலமும்) ஆகிய இவையிரண்டும் சிருஷ்டிக்கு அவஸ்யமா யிருக்கின்றன; உலர்ந்த மண்கொண்டு ஒருகுயவனும் பாண்டமியற்ற முடியாது; ஜலந்தேவையா யிருக்கிறது. ஆதலால், சக்தி அல்லது பலமில்லாமல் சிவன்மட்டிலேயே சிருஷ்டி செய்ய முடியாது.

2. சங்கராசாரியருடைய சிஷ்யர்களிலொருவன் மூடத்தனத்தால் தமது குருவைப்போலவே எல்லாவிதங்களிலும் நடித்து வந்தனன். சங்கரர் 'சிவோகம்' என்றால் அந்த சிஷ்யனும் 'சிவோகம்' என்பான். இந்த சிஷ்யனுடைய மடமையை மாற்றுவதற்காக ஒருநாள் சங்கரர் ஒரு கொல்லனுலைக்களவழிச் செல்லும்போது அங்கு உருக்கப்பட்டுக் கொண்டிருந்த இரும்பிற் கொஞ்சம் வாயிலூற்றிக்குடித்துவிட்டு, சிஷ்யனை நோக்கி அங்ஙனே செய்யப்பணித்தார். அவனெப்படிச் செய்ய மாட்டுவன்? உடனே வெட்கிப்போய், அன்றுமுதல் தன் நடிப்பை விட்டொழித்தான். நடிப்புமாத்திரத்தினால் நன்மையொன்றுஞ் சித்திக்காது. மகான்களுடைய ஒழுக்கங்கண்டு அவர்களைப்போல் தம தொழுக்கந் திருந்தி நடக்கப் பிரயாசை யெடுப்பதே சிலாக்யமாகும்.

3. ஐயா மதபோதகரே! உம்மிடத்தில் அதிகார முத்திரை யிருக்கிறதா? அரசனுக்கினை தாங்கிய மிகச் சாமானிய சேவகனும் மரியாதையோடும் பயத்தோடும்பார்க்கப்படுகிறான். அவ்வாக்ஞா பலத்தினால் பெருங்கலகத்தையும் அடக்கக் கூடியவனாயிருக்கிறான். ஆதலால், ஓபோதகரே! நீங்களுமப்படியே முதலிற் கடவுளுடைய ஆணையையும் அருளையும் பெறவேண்டும். அவ்வருளைப் பெறாது ஆயுள் முழுவதும் மதபோதனை செய்தலும் வீணேயாம்.

# ஒளிவளர்விளக்கு.

ஆச்சார்பபட்ட சம்பந்தமாய் நாம் பலகா லெழுதிவந்தவற்றின் பலனைக இப்போது பெருமுழக்க முண்டாய் வருவதாகத் தெரிகிறது. பல அபிமானிகள் நமக்கு இவ்விஷயமாய்க் கடிதங்களெழுதி வருகிறார்கள். இவற்றிற் சிலவற்றை சென்ற மாதமுதல் அச்சிட்டு வருகிறோமாயினும், எல்லாக் கடிதங்களுக்கும் இடமில்லாமைக்காக வருந்துகின்றோம்.

⁂

சில காலத்திற்குமுன் ஸ்ரீ கணிதால-லோகநாத ஆச்சாரியார் என்னும் நண்பர் சென்னையிலொரு விஸ்வகர்மமட ஸ்தாபனஞ் செய்வதற்காக ஓர் நிதிசேர்க்கவேண்டுமென்றும், அதற்கு ரூபா நூறுகொண்ட நூறுபங்குகள் அமைத்து மொத்தத்தில் ரூபா பதினாயிரம் சேகரிக்கவேண்டுமென்றும் பிரயத்தினப்பட்டுக் கொண்டிருந்தனர். இவ்வித கட்டடமொன்று சுஜாதியார்க்கென் றேற்பட்டால் பல காரியங்களுக் குதவுதல் நிச்சயம். உள்ளூரார்க்குமட்டு மல்லாமல் வெளியூரார்க்கும் பெரிதும் பயன்படும். ஆதலால், ஷையார் முயற்சிகுன்றா துழைப்பாரென்றும், மற்றவர்கள் அவருக்குச் சகாயிகளாய் நிற்பார்களென்றும் விரும்புகிறோம்.

⁂

கும்பகோணத்தில் ஓர் மகாநாடு கூட்டும் விஷயமாய், அவ்வூர் ஸ்ரீ ரா. சதாசிவ உபாத்தியாயரிட மிருந்து யாம் பெற்ற கடிதமொன்று மற்றோரிடத்திற் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதன்காபி பலருக் கனுப்பப்பட் டிருக்கிறதாகத் தெரிகிறது. உபாத்தியாய ரவர்களுடைய அபிமானப் பெருக்கங்கண்டு மிகவுஞ் சந்தோஷிக்கிறோம். தென்னாட்டில் விஸ்வகர்ம மகாஜனக்கூட்டத்தை நடத்தவேண்டியது அத்யாவஸரமா யிருக்கிறதென்பது தேற்றமே. இவ்விஷயத்திற் குடந்தைவாசிகள் ஊக்கங்காட்டுவது குதூகுலத்திற் கிடமென்னத் தடையில்லை. ஆயினும், கான்பரன்ஸ் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்வதின்முன், அதை நடத்துமுறைகள், ஆராயவேண்டிய விஷயங்கள், உபந்நியாசகர்கள் முதலியவற்றைப் பற்றிய விசாரணைசெய்வது அத்தியாவஸ்யமா யிருக்கிறது. இவைபற்றிய தம்மபிப்பிராயங்களை ஷை கடிதம்பெற்றகனவான்கள் இப்பத்திரிகைவாயிலாக வெளியிடக் கோருகிறோம்.

⁂

எக்ஸிபிஷன் (Exhibition) என்னும் பொருட்காக்ஷி சாலைகளில் நம்மவர்களாற் செய்யப்படும் வஸ்துக்களைப் பிரதர்ஸனஞ் செய்யும் விஷயமாய், மேலே 76-வது பக்கத்தில் நாமெழுதியுள்ள வாக்கியங்களாற் றூண்டப் பட்டவர்களாய்த்,தொழில் விற்பன்னர்கள் சிலர் தமது கைப்பட முடிந்த வஸ்துக்களை அங்கங்கு நடத்தப்படும்காக்ஷிகளுக் கனுப்புவதில் துணை செய்யும்படிக் கோருகிறார்கள். இவர்களுக்கு ஏவல்செய்வதினு மின்பகரமானகாரியம் எமக்கொன்றுமில்லை. நல்ல வேலைப்பாடுள்ள வஸ்துக்களை யுடையார் அவற்றை எமக்கனுப்பினால், தக்கவாறு பிரதர்ஸனஞ் செய்வித்துக் கிடைக்கும் பரிசுகளைப் பெற்றனுப்பச் சித்தமாயிருக்கிறோம். ஒவ்வொரு வஸ்துவுடனும், அதைச்செய்தவருடைய முழுப்பெயரும், முழுவிலாசமும், விலையும்; மற்ற விபரங்களுமெழுதி யனுப்பப்பட வேண்டும். விற்பனைக்குரியன வல்லாத வஸ்துக்களாயின், அவ்விதந் தெரிவிக்கவேண்டும். அடிக்கடி பல விடங்களில் வஸ்துப் பிரதர்ஸனங்கள் நடக்கின்றபடியால், இன்னகாலத்தில்தான் இவற்றையனுப்பலாமென்ற வரையறை யில்லாமல், எக்காலத்தேனும் எமக்கு வஸ்துக்களையனுப்பலாம். கிடைத்தகாலத்தை யடுத்து நடைபெறுங் காக்ஷிக்கு அவையனுப்பப்படும். ஒரேபொருள் பலகாக்ஷிகளிற் பரிசுபெறுதலுஞ் சாத்தியமே. இவ்வித மெம்மிடம் காக்ஷிப்பொருள்களனுப்பப்படுவதினால், அவற்றைச் செய்தவர்களுடைய பெயர் விலாசங்கள் பகிரங்கமாவதுடன், அவர்கள் நேரே வெகுமதி பெறுதலுஞ் சாத்தியமாகிற தென்பதைத் தொழிற்றிறமையாளர்கள் கவனத்திற் கொள்ள வேண்டுகிறோம்.

⁂

தெனாலி தாலூகா பெத்தராவூர் வாசியும் சகலசாஸ்திர பண்டித சிரேஷ்டரும், விஸ்வகர்மகுல பூஷணமுமாகிய ஸ்ரீ எலவர்த்தி ஆஞ்சனேய சாஸ்திரிகள் சென்ற மாதம் 13உ யன்று தேகவியோக மடைந்தாரென்னும் மாதுக்ககரமான சமாசாரங் கேட்டு மனமுடைந்தோம். இவருடைய மரணத்தால் நமது குலத்திற் கேற்பட்ட நஷ்டமிவ்வளவென்று நாட்டுதலு மேலுமோ? ஆருஷேயபூஜிதராய், அவனிமுழுவதுங் கொண்டாடு மருங்கலாவிற்பன்னராய், ஜாதீய நாட்டமென்னும் மாதிவ்ய நோக்கமுற்றவராய்ச் சிறந்து விளங்கிய இச்சீரியர் பெருமையை யென்னென்று செப்புவோம்! அந்தோ! நங்குலத் தௌர்ப்பாக்கிய மிருந்தவாறென்னே, யென்னே!! இவர் நுஜ்விடில் ஒரு வேதபாடசாலை நடத்திவந்ததும்,பல கிரந்தங்களியற்றி யச்சிட்டதும், ஆருஷேயர்களிலும் பௌருஷேயர்களிலும் பலரைச் சிஷ்யர்களாக்கொண்டு பண்டிதராக்கி வந்ததும், ஆந்திர விஸ்வப்பிராம்மண மகாசபையொன்றி லக்ராஸனம் வகித்ததும், அச்சபைகளி லொவ்வொன்றையு மலங்கரித்திருந்து அறிவானந் தோபந்நியாசாமிர்தம் பொழிந்து வந்ததுங் கண்டாருங் கேட்டாரும், இவரகால மரணசம்பவங்கேட்டு, அம்மம்ம, என்படுவரோ! இத்துக்ககரமாணசம்பவம் பற்றிய அநுதாபத்தை வெளியிடுவதற்காக, சென்றமீ 25உ ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு பெருங்கூட்டம் நமது சபாமண்டபத்திற் சேர்ந்தது. அப்போது, கிருஷ்ணா ஜில்லாவைச் சேர்ந்த நந்திகாமா வென்னுமூரில் ஜார்ஜ் காரனேஷன் ஸ்கூல் ஹெட்மாஸ்டரும், கிருஷ்ணா குண்டூர்மண்டல விஸ்வப் பிராம்மண மகாஜனசபையின் முக்கிய ஸ்தாபகர்களிலொருவருமாகிய ஸ்ரீகொண்டிபர்த்தி-வீரபத்திர ஆச்சாரியாரவர்கள் விஜயஞ் செய்திருந்து ஷை சாஸ்திரிகளுடைய ஜீவிய சரித்

திரத்தின் பிரதான அம்ஸங்களையெல்லாம் எடுத்து விளக்கி, அவருடைய அகாலமரணத்தினால், நமதுகுல முழுவதிற்குமே ஏற்பட்டிருக்குங் குறையைவிளக்கிப் பேசினார். மற்றவர்களும் இதே விஷயமாயுபந்நியாசித்தார்கள். அநுதாபச்சமாசாரம் அவர் குடும்பத்தாருக்கும் பத்திரிகைகளுக்கு மனுப்பப்பட்டது.

* * *

கைத்தொழில்களே நமக்கு ஜீவனாதாரமாயிருப்பவை. அவற்றை நாம் தொன்று தொட்டே பழகிவருகிறோம். ஆதலால், நம்மால் முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டிய விஷயம் கைத்தொழில் அபிவிருத்தியேயென்பது நிச்சயம். ஆனாலும், நம்மவர்களில் எவருமே இதைக் கவனிக்கிறது காணோம். கைத்தொழிலைப் பற்றிச் சொன்னாலும், எழுதினாலும் இவர்களுக்கு அருவெறுப்புண்டாகிறதேயொழிய ஆசையுண்டாகவில்லை. பிழைப்புக்கு மூலகாரணமாகிய விஷயத்தை அசட்டைசெய்தால் பின்னமடைதல் நிச்சயமல்லவா? ஜாதிப்பைத்தியமே நம்மவர்கள் தலைகொண்டிருக்கிறது. மற்ற ஜாதியாரைக் கோர்ட்டுக்கழைப்பதும், அந்த செலவுகளுக்காகத்தண்டல் செய்வதுமாகிய இதுபோன்ற நஷ்டகரமான வீண்காரியங்களில் நமது பொழுதும் பொருளும் விரயமாகின்றனவேயொழிய, நம்முடைய பூர்வமகிமைக்கெல்லாம் முதற்காரணமாயிருந்த கைத்தொழில்களை விருத்திசெய்து, அவற்றின்மூலமாக அதிகபொருளையுங்கியாதியும் அடையவேண்டுமென்கிற மகா முக்கியகாரியத்தில் கவனம் கொஞ்சமேனுமிருக்கக்காணோம். குலோத்தாரணஞ் செய்வேமென்று பூர்வத்தில் வெளிவந்த புண்ணியவான்கள் ஜாதியேற்றத் தாழ்வுகளில் ஜம்பங்காட்டி நடந்துவந்து, கைத்தொழிலபிவிருத்தியில் கவனமே காட்டாதிருந்ததினால், இப்போதும் நம்மவர்கள் அதே நோக்கமாயிருந்து வருகிறார்களென்பது வெளிப்படையேயானாலும், நம்மவர்கள் தற்காலமுள்ள வாழ்க்கை நிலையில் இவர்களுக்குக் கைத்தொழில்களில் கவனஞ் செல்லுதல் கஷ்டமென்றே தோன்றுகிறது. குடித்தனச் செட்டென்ப தின்னதென்றே இக்குலத்திற் பெரும்பாலாரறியார். செலவைப்பெருக்குவதில் சிந்தை கொள்கிறார்களேயொழிய, செலவைக் குறைத்து, வரவைப் பெருக்கலாமென்று வாஞ்சை கொண்டிருக்கவில்லை. வருமானத்திற்குள் செலவையடக்குந் திறனற்றிருப்பதினால், ஜீவனகஷ்டங்களில் பாவனப்பட்டுக்கொண்டு, மிடியாலுங் கடனாலும் மேன்மேலும் மிரண்டு மிரண்டு காலங்கழித்து வரலாயினரேயன்றி, கைத்தொழிலபிவிருத்திபோன்ற கண்ணிய காரியங்களிற் கருத்துவைக்கக் காலமும் வசதியுங் காணாராயினர். ஆதலாலிவர்கள் கைத்தொழில்கள் சீர்திருந்திப் பெருகுவதின்முன், இவர்களுடைய குடும்ப வாழ்க்கையும், வழக்கவொழுக்கங்களும், நாட்டவோட்டங்களும் திட்டப்பட வேண்டும். அப்புறந்தான் கைத்தொழிற் பிரசங்கங்களும், வியாசங்களும் பிரயோஜனப்படுமென்றெண்ணுகிறோம்.



# ஆசாராநுட்டானங்கள்.

## பிராம்மணர்.

இப்பெயர் ஆருஷேயருக்கும் பௌருஷேயருக்கும் பொதுவானது. இவ்விருதிறத்தாருடைய ஆசாராநுஷ்டானங்கள் ஏறக்குறைய ஒன்றுபோ லிருக்கின்றன. பௌருஷேயாசாராநுஷ்டானங்கள் நமது வாசகர்களுக்கெல்லாம் தெரிந்துள்ளனவேயாதலினால், ஆருஷேயரைப் பற்றியே இங்கு பேசுவோம்.

ருக், யஜுஸ், சாமம் என்னும் மூன்று வேதங்கள் அல்லது சாகைகளை யநுசரித்து ஆருஷேயர் மூவகுப்பினரா யிருக்கின்றனர். வைதீகக் கருமங்களெல்லாம், அந்தந்த வேதசார்பான கிருஹ்ய சூத்திரப்படி நடத்தப்படுகின்றன. இவற்றிலிப்போது வழக்கத்திலிருப்பவை எட்டு—

ரிக்வேதம்.

1. ஆஸ்வலாயன சூத்திரம்

யஜுர்வேதம்.

2. ஆபஸ்தம்பம்.
3. பாரத்துவாஜம்.
4. போதாயனம்.
5. சத்தியாஷாடம்.
6. வைகானசம்.
7. காத்தியாயனம்.

சாமவேதம்.

8. திராஹ்பாயனம்.

அத்திரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கௌதமர், கஸ்யபர், அங்கீரச ரிவர்களிலொருவருடைய வம்ஸோற் பவர்களாக எல்லா ஆருஷேயரும் கூறுவர். ஷை ரிஷிகள் அகஸ்தியர், அங்கீரசர், அத்திரி, பிருகு, கஸ்யபர், வசிஷ்டர், கௌதமர் எனச் சொல்வாருமுண்டு. இந்த ரிஷிகளின்கீழ், பதினெண் கணங்களும், ஒவ்வொரு கணத்தின்கீழ்ப் பல கோத்திரங்களுமாக மொத்தத்தில் சுமார் 230 கோத்திரங்கள் கூறப்படுகின்றன. கிரமப்படி, ஒவ்வொரு பிராம்மணனும் தனக்கு மூத்தோர்களைக் கண்டபொழுது தன் வம்ஸாவளி யடங்கியதாகிய அபிவாதனஞ் சொல்லி வணங்கவேண்டியவனா யிருக்கிறான். அதாவது 'யஜுஸ் சாகையின் ஆபஸ்தம்ப சூத்திரக்கார பார்க்கவ ச்யாவன ஆப்னுவன ஔர்வ ஜமதக்னிப் பஞ்சரிஷிப் பிரவரையுடைய ஸ்ரீவத்ஸ கோத்திரத்து கிருஷ்ண நாமத்தினனாகிய நான் தங்களை நமஸ்கரிக்கின்றேன்' என்றபடி. தினமும் சந்தியாவந்தன முடிவில் ஒவ்வொரு பிராம்மணனும் இவ்வித அபிவாதனஞ் சொல்லப்படவேண்டும்.

ஆருஷேயரெல்லாம், பொதுப்பட, பஞ்சத்திராவிடாள், பஞ்சகௌடாள் என்னுமிருபெருங் கூறுபட்டிருக்கிறார்கள். பஞ்சகௌடாள், பஞ்ச திராவிடாளைப்போல் புலாலை நீக்கியிருக்கவில்லை. ஒரியா, கொங்காணியென்னு மிருபாஷைகளைப் பேசுவோர் தவிர, தென்னிந்தியாவிலுள்ள மற்ற ஆருஷேயர்களெல்லாம் பஞ்சதிராவிடாளே! இவர்கள், தமிழர் அல்லது திராவிடர், தெலுங்கர் அல்லது ஆந்திரர்கள், கன்னடர் அல்லது கர்னாடகர், மராத்தி

கள் அல்லது தேசஸ்தர்கள், குஜராத்திகள் என்னும் ஐந்து பிரிவினராயிருக்கின்றனர்.

சூத்திரவிதிப்படி, பிராம்மணனொவ்வொருவனும் கீழ்க்கண்ட ஒன்பது சம்ஸ்காரங்களுக்குட்பட வேண்டியவனாயிருக்கிறான். கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸ்ரீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், விவாகம். இந்த சடங்குகள் தாயின் கர்ப்பவாசத்தினால் உடலுக்கும் ஆவிக்கு மேற்படும் அசுத்தத்தையும் தோஷத்தையும் நிவாரணஞ் செய்வனவாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

கர்ப்பாதானமானது, கிரிஹ்ய சூத்திரங்களின் பிரகாரம், விவாகச்சடங்குகளின் நாலாவது நாளிற் செய்யப்பட வேண்டும். இதனால், ரஜஸ்வலையான பிறகு பெண்களுக்கு விவாகஞ்செய்தலே வேதகாலஆசாரமாயிருந்ததாக நன்றாய்ப் புலப்படுகிறது. பால்யவிவாகப் பழக்கம் மகம்மதிய அராசகதி காலத்திலிருந்து ஏற்பட்டிருக்கிறதேயொழியப் பூர்வீகமாயேற்பட்டதல்ல. ஆதலால், பிராம்மணர்கள் தமது பெண்களுக்கு பால்யத்திலேயே விவாகஞ் செய்துவிட வேண்டுமென்று வேதப்பிரமாணங்கிடையவே கிடையாது. ருதுவானபெண்களுக்கு மணஞ்செய்தல் சாஸ்திரீய விவாகமாகுமே யல்லாமல் அசாஸ்திரீயமாகமாட்டாது. புலானுணவைக் கைக்கொண்டதொரு சூத்திரனைப் பழக்கமாத்திரத்தினால் அத்துர்க்குணம் எவ்வளவு பலமாய்ப் பற்றியிருக்கின்றதோ, அப்படியேதான், பால்யவிவாகப் பழக்கமும் பிராம்மணரைப் பற்றிக்கொண்டு இக்காலத்தில் பலவித பாதைகளை யுண்டுபண்ணி வருகிறது. ஆருஷேயரைப்போல் அவ்வளவதிகமாகப் பௌருஷேயர், தென்னாட்டில், இப்பழக்கத்திற்குக் கட்டுப்பட்டிருக்கவில்லையென்று தெரிகிறது. இவ்வகையில் பௌருஷேயர், மற்றவர்களை விடச் சிறந்திருக்கிறார்களென்றே சொல்லவேண்டும். ஆனால், சிற்சிலர் ஷை துர்ப்பழக்கத்தை வருவித்துக்கொள்ளவேண்டுமென்று வாதாடுகிறார்கள். விவேகிகள் இவர்களுக்கு இடங்கொடுக்கக் கூடாது. ஆசார சீர்திருத்தக் கான்பரன்ஸ்களில் வருஷந்தோறும் பால்யவிவாகத்தை யொழிக்கவேண்டுமென்பதாகத் தீர்மானங்கள் செய்யப்படுவது உலகப்பிரசித்தமே யல்லவா? அன்றியும், ஆந்திரநாட்டுப் பௌருஷேயர்கள், தாம் அறியாது மேற்கொண்டிருந்த பால்யவிவாகப் பழக்கத்தை மாற்றப் பாடுபட்டு வருதல் தமிழ் நாட்டினருடைய கவனத்திற்குரிய விசேஷமாகும்.

(தொடரும்)

---

"உன்னைக் கொடுக்கிறேன் பார்" என்று காளமேகப் புலவரைநோக்கி அவருடைய இன்பக்கிழத்தி கூறிக் கையை நீட்டி முகத்திலடிக்கவந்தபோது அவர்,

என்னைக் கொடுத்திட்டால் இன்ப முனக்கேது
வன்னக் குவிமுலைசேர் மாதேகேள்-முன்னமே
காட்டானை போலக் கருதியே யீன்றெடுத்த
கோட்டானை சாகக் கொடு—

என்று கோபத்துடன் கூறினவுடனே கையிலிருந்த ஆண்குழந்தை 'வீர்' என்று அலறிக் கொண்டு கீழே வீழ்ந்து இறந்துவிட்டதாம்.



# விச்வகர்மரே ஆச்சார்யஜாதியார்.

(99-வது பக்கத் தொடர்ச்சி.)

மேலும், ஒவ்வொருவித்யைகளைக் கற்றதினாலிவர்களுக்கு-சாஸ்திரிகள்-தீக்ஷிதர்-ஸ்தபதியார்-பாரதி-கனபாடி-ஜடாபாடி-சிரௌதி-மஹாமஹோபாத்தியாயர்-ஜோதிஷரென்ற பெயர்களும் கிடைத்திருக்கின்றன.

. இந்தப்பிரகாரம் பிரபஞ்சமுண்டானகாலமுதல் தொன்றுதொட்டு ஆச்சாரிய ஜாதியாயும் ஆச்சார்யபட்டத்தோடு மிருக்கின்றவர்களைப்பார்த்து சிலர்பொறாமையினால் இப்பட்டத்தினுடைய அக்ஷரங்களைப்பேதகதிசெய்யவேண்டுமென்று துணிந்து பிரவர்த்திக்கின்றார்கள். அதாவது, இப்பெயரை (ஆச்சார்ய வென்றதை) தங்கள் ஜாதியாருக்கு ஏற்படுத்தவேண்டுமென்ற வெண்ணமேயாம். ஆனால், அவர்களெந்தப்பிரகாரமெண்ணினாலும், உலகப்பிரவிர்த்திக்குக் காரணபூதர் அச்சாதியாரல்லவாயிருக்கிறதினால், ஆசார்யரென்று பட்டப்பெயர்வைத்துக்கொண்டாலும் அவர்கள் ஆச்சார்ய ஜாதியாராகமாட்டார்கள்.

ஓர் ஜாதியார் அவர் ஜாதியிலொருவரையோ அல்ல வேறு ஜாதியிலொருவரையோ குருவென்று வைத்துக்கொண்டால், அவர்க்கவர் குரு-தலைவன் - ஆசார்யராவரேயன்றி உலகத்துக்கு ஆசார்யராகமாட்டார்.

* * *

லோகத்தில் நாயுடுஜாதி, செட்டிஜாதி, கோனார்சாதி, தேவர்சாதி, பள்ளிசாதி, படையான்சாதி, ரெட்டிசாதி, கௌண்டசாதி, நாடார்சாதி. பறைச்சாதி, வாரியர்சாதி, நாயர்சாதி, புஷ்பகன்சாதி முதலிய சாதியெனப் பலவிதமாகக் குடியாய் ஒவ்வொரு சாதிக்கும் ஜாதிப்பெயரானது ஏற்பட்டு அவர்கள் பெயர்களின் முடிவில் நாயுடு, செட்டி, கோனார், தேவர், பள்ளி, படையான், ரெட்டி, கவுண்டன், நாடார், பறையன், வாரியர், நாயர், புஷ்பகன், முதலியென்று ஜாதியைக்கூறியே எழுதி வருகிறார்கள். இந்தப்பிரகாரமே குடியாயும் போகமாயும் ஆசார்ய ஜாதியென்று ஏற்பட்டது விஸ்வகர்ம வமிசத்தவர்களுக்கேயாம்.

லோகத்தில் சகலமான ஜனங்களும் பூர்வகாலமுதல் விஸ்வகர்ம சந்ததிகளை ஆச்சார்யரென்றும், ஆச்சார்ய ஜாதியென்றும் பிரசித்தமாய்ச் சொல்லி வழங்கிக்கொண்டுவருகிறதுந் தவிர கிரந்தம் தெலுங்கு கன்னடம் மஹாராஷ்டிரம் முதலியபாஷைகளிலெழுதுபவர்கள் ஆசார்ய ரென்றே எழுதுகிறார்கள்.

இந்தப்பிரகாரம் ஜாதிப்பெயராக ஆசார்யரென்று சொல்லிக்கொள்பவர்களை இவ்கிலீஷி லெழுதவேண்டுமானால் மாத்திரம் ஆசார்யவென்றதின் நடுவெழுத்தான சாவென்னு மக்ஷரத்தை நீக்கி ஸா வென்னு மக்ஷரத்தைச் சேர்த்து ஆஸாரி யென்றெழுதவேண்டுமென்று சொல்வது எவ்வளவு அதிபாதகமா யிருக்கிறது? இதற்கு ஒருபோதும் நீதிசெவர்யென்டா ரிடங் கொடுக்கமாட்டார்கள்.

ஒருசமயம் பிராம்மணர்களுக்கு ஆசார்யபட்ட மிருக்கிறதோவென்று பார்த்தாலதில், ராயர், துளுவப்ராம்மணர், வைஷ்ணவர், இவர்களில் ஆயிரத்திலொருவர் வேதசாஸ்திரங்களைக் கற்றதினாலவர்களை ஆசார்யரென்று சொல்லுகிறார்களே யல்லாமல், வடமான், முக்காணியர், பிரஹஜ்ஜரணம், சங்கேதி, அஷ்டசகஸ்ரம், சோழியர், கேசியர், தழுவுகாரர், பட்டணத்தார், பாம்பாட்டி, சபையார், தில்லை மூவாயிரத்தார், வாத்திமார், மார்க்கத்து வடமான் நம்பூரி, தெலுங்காள், பிரதமசாகையார், சோழியர், காணியாளர் இன்னுமனேக விதமான பிராம்மணர்களில் எவ்வளவு வேதசாஸ்திரங்களைக் கற்றுக் கர்மானுஷ்டானங்களைச் சரிவர நடத்தி யாகங்களைச் செய்தவர்களா யிருந்தாலும், அவர்களுக்கு ஆசார்யரென்ற பட்டப்பெயரைக் காணவில்லை.

விஸ்வகர்ம வமிசத்தவர்களுக்கோ வென்றால் குழந்தை பிறந்தது முதல்தானே யவர்களைச் சகல ஜாதியார்களும் ஆசார்யரென்றே யழைக்கிறார்கள். ஒருவர் மற்றொருவரிடம் தன்பெயரை இன்ன ஆசாரியாரென்று சொன்னால் அவர்கள் இவரை விஸ்வகர்ம வமிசமென்றே யெண்ணுகிறார்கள். இது உலகப் பிரசித்தமாயிருக்கிறது. இதினால் ஆசார்யரென்ற பட்டப்பெயர் ஆச்சார்ய வமிசமாகிற விசுவகர்மருக்கே யல்லாமல் வேறுசாதிகளுக்குப் பொருந்துமோ வென்பதை நீதிமான்கள் ஆலோசிக்கவேண்டும்.

ஓர் திருஷ்டாந்தம்: — விஸ்வகர்மருக்கு கர்ஷணாதிபிரதிஷ்டாந்தம் கிரியைகளும் ஆலயம் விம்பம் கிரகம் பட்டணமுதலான நிர்மாணங்களும் செய்து ஸ்தாபிக்கிறதினால் ஸ்தபதியரென்றரூடியான பெயரிருக்கிறது. இந்தப்பெயரானது வேறொருவருக்குவரவேண்டுமாகில் ஸகீஷ்டபதீஷ்யர்ஸ்தபதி: என்ற அமரகோச வாக்கியப்பிரகாரம் பிரகஸ்பதி ஸவநமென்ற யாகத்தைப் பண்ணினால் அவர்களுக்கு இந்த தபதியரென்ற பெயருண்டாகிறது.

விஸ்வகர்ம வமிசத்தவர்களைக் குறித்து சுருதிஸ்மிருதி சிற்பாகம புராணேதிகாச சிலாதாம்பிர பத்திர ஸாஸனங்களிலும், கோர்ட்டுத் தீர்ப்பு முதலியவைகளிலும் மேதாவிகளானவர்களா லெழுதின சரித்திரங்களிலும் பல நிகண்டுகளிலும் சொல்லுமிடத்து ஆசார்யரென்று சா-வென்னுமெழுத்தையே உபயோகித்துச் சொல்லப்பட்டிருக்கிறதே யல்லாமல், இப்போது அசூயையினால் மாற்றவேண்டு மென்று சொல்லப்படுகிற ஸா வென்னுமக்ஷரத்தைச் சேர்க்கவில்லை. ஸா வென்னுமக்ஷரத்தை உபயோகிக்கவேண்டுமென்று சொல்பவர்களுக்காக சுருதிஸ்மிருதி யாதாரங்களிலும் சாசனங்களிலும் சரித்திரங்களிலும் நிகண்டுகளிலும் திருத்தி யெழுதவேண்டாமா? இவ்விஷயத்தை நீதிபதிபர்கள் ஆலோசிக்கமாட்டார்களா?

(தொடரும்)

ஜோஸ்யர். முத்து ஆசாரியார்,
மீனாக்ஷிபுரம், நாகர்கோவில்.

---



# வேதசாத்திராதிகள்.

## இந்துமகா சத்ரியவேத விருத்தாந்தம்.

(97-வது பக்கத் தொடர்ச்சி.)

### யஜுர்வேதம்.

இரண்டாவது வேதமான வாஜஸனேயி அல்லது வெள்ளை "யஜுஸ்"ஸானது வேதங்கள் எல்லாவற்றிலும் மிகவும் சூக்குமமுள்ளதாக இருக்கின்றது. அதின் பிரதான பாகங்களில் மந்திரங்கள் அடங்கி இருக்கின்றன. இந்தவேதம் அந்தப்பெயரின் அருத்தத்தின் பிரகாரம் முக்கியமாய் நைவேத்தியம் வேள்விகள் முதலியவைகளைச் சேர்ந்ததாக இருக்கின்றது. இதில் பௌர்ணமையிலும், அமாவாசையிலும் செய்யப்படும் வேள்விகளுக்குரிய பிரார்த்தனைகள், பிதுர்கர்மங்கள், நித்தியாக்கினி நிவேதனம், இரத்தபலியைக்குறித்த நிவேதனம், அக்கினிஸ்தோமச் சடங்குகள், சோமபானத்தைக் குறித்த சடங்குகள், வாஜபேயம், இராஜசூயம் செய்யுங் கிரியைகள், இராஜசூயத்தில் ராஜ பட்டாபிஷேகச் சடங்குகள், ஓமாக்கினி நிவேதனம், சௌத்திராமணி யாகம், சர்வலோக அதிகாரங்களைச் செலுத்தவேண்டுமென்கின்ற ஆசையுடன் ஒரு இராஜாவினால் செய்யப்படும் யாகச்சடங்குகள், புருஷமேதயாகம், நாராயணபலி செலுத்துகை, சருவவெற்றி யடைவதற்காகச் செய்யப்படும் சருவமேதயாகங்களின் முறை, பிதுருமேதம், அபரக்கிரியைகளைக் குறித்த விஷயங்கள் அடங்கியிருப்பதுடன், நான்கு எக்கியம் தவம் முதலிய சமயாசாரக் கிரியைகளைக் குறித்த விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

மேற்கண்ட வெள்ளை யஜுஸ்ஸைவிட "தைத்திரீயம்" அல்லது கறுப்பு யஜுஸ். மந்திரங்கள், அதிக விஸ்தாரமாக இருக்கின்றன. அதன் சன்னிதம், அல்லது மந்திரத்திரட்டு ஏழுகாண்டங்களாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதில் ஐந்து முதல் எட்டுவரையிலுள்ளவை அந்தியயனம், பிரஷணம், அல்லது, பிரபாதங்கள் அடங்கியிருக்கின்றன. அந்தந்த அத்தியாயம் அநுவாகங்களாக உட்பிரிவு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த அநுவாகங்கள் மூன்றுவது ஆறுவது காண்டங்களில் சமமாகப் பகிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மற்றவைகளில் அதிகமாகவும், குறைவாகவும், பாகிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாங்கூடி அறுநூற் றைம்பதுக் கதிகமாகின்றன.

### சாமவேதம்.

மூன்றுவது வேதமான "சாமவேதம்" என்கிற பெயரைக் குறித்த சொல்லிலக்கணப்பிரகாரம் பாபநிவாரணமாகிய பலத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு திவ்வியவிசேஷமகிமையுடன் அதற்குச் சம்மந்தமாக இருக்கிற தோத்திரங்கள், இசைவிகற்பங்களாகப் பாடும்படியான கீதங்களாகச் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளின் பலன் ஓதப்படும் விதத்தில் உண்டாகுமென்று சொல்லியிருக்கின்றன.

இந்த வேதத்தின் பிரதானபாகம் "ஆர்ச்சிகம்" என்று சொல்லப்படுகின்றது. அதில் தோத்திரங்கள் அடங்கியிருக்கின்றன. அந்தந்த தோத்திரங்கள் சிலசாம வேதியர் அல்லது சந்தோக ஆசாரியர் இவர்களுடைய கிரியை முறைகளில் அடிக்கடி ஓதப்பட்டவைகளாக இருக்கின்றன. ஆர்ச்சிகத்தின் இரண்டு பிரதிகளிலும் காணப்படுகிற பிரகாரம், அவைகள் அரை அத்தியாயங்களாகவும், தசதீ என்னும் பிரகரணங்களாகவும், உட்பிரிவு செய்யப்பட்டிருக்கிற ஆறு பிரபாதங்களாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரபாதீகத்திலும், பத்துத்தசதீகளும் ஒவ்வொன்றில் சரியாகப் பத்துவாக்கியங்களும் அடங்கியிருக்கின்றன. பிரார்த்தனைகளின் அதேதிரட்டு அதேவரிசைக்கிரமப்பிரகாரம் கீதமாய்ப் பாடத்தக்கவிதமாய் சித்தப்படுத்தப்பட்டு "கிராமகேயகானம்" என்கிற பெயரினால் பதினேழு அத்தியாயங்களாகப் பாகிக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் இதே தோத்திரத்தை ஓதும்படியாக விதிக்கிறகிரியை முறையாளர் இசைவிகற்பமாக ஓதப்படும் பலவிதங்களுக்கு உபயோகமா யிருக்கிற இதர மொழிகளை ஆர்ச்சிககானம் என்ப.

இவ்வேதத்தின் மற்றொரு பாகம் "ஆரண்ணியகணம்" என்கிற பேருடையதாக இருக்கிறது, ஒன்றுக்கொன்று சரியாக ஒத்திருக்கிற அதன் மூன்று பிரதிகளால் அதேபிரகாரம் மூன்று அத்தியாயங்களாகப் பாகிக்கப் பட்டிருப்பதாகக் காணப்படுகின்றது. அவைகள் மேற்கண்ட ஆர்ச்சிகத்தைப் போல அரை அத்தியாயங்களாகவும் பத்துப்பத்தாகவும், அல்லது பிரகரணங்களாகவும் உட்பிரிவுகள் செய்யப்பட்டிருப்பதுடன் மேலே உதகரித்த உடன்சேர்வுகளில் உயிரெழுத்துக்களுடைய ஒலிகளை அளபெடுப்பதிலும், ஈருயிர்ப் புணர்ச்சிகளை இரண்டு, அல்லது பல அசைகளாக்குவதிலும், இதர சேர்மானமான அசைகளை அநேக இடங்களில் இடையிற் சேர்ப்பதிலும் ஓசையை ஒழுங்கு படுத்துவதற்காக இலக்க அடையாளங்களை ஏற்படுத்துவதிலும் வேண்டிய இலக்கணங்களும் அடங்கியிருக்கின்றன. மேற்கண்ட இரண்டுபாகங்களுக்கும் "ஆர்ஷய பிராம்மணம்" என்கிற பெயரினால் அட்டவணையும் ஏற்பட் டிருக்கின்றது.

### அதர்வணவேதம்.

நான்காவது வேதமான "அதர்வண வேதம்" சத்துருக்களின் நாசத்திற்காக அநேகவித சபித்தலின் மந்திரங்களைக் கொண்டிருக்கிற தென்பது லோகப் பிரசித்தம். ஆனால் இந்தவேதத்தின் முக்கிய விஷயம் அப்படிப்பட்டதே என்று யூகிக்கப்பட வொண்ணாது. ஏனெனில், அது நிர்விக்கினத்திற்காகவும், ஆபத்து நிவர்த்திக்காகவும் ஓதப்படும் வேதமந்திரங்களைக்கொண்டிருக்கின்றது. ஆதலால் மற்ற வேதங்களைப்போலவே கடவுளர்க்கு "யஜ்ஞன்னியம்" என்னும் கிரியைகளிற் றவிர வேதாசார கிரியைகளிலும், அனுஷ்டானங்களிலும் வழங்கப்பட வேண்டிய தோத்திரங்களோடு அநேக சூக்தங்களும் அடங்கியிருக்கின்றன.



இந்த வேதத்தைச் சேர்ந்த சன்னிதம் அல்லது தோத்திரம், பிரார்த்தனை இவைகளின் திரட்டு, இருபது காண்டங்களாக இருக்கின்றது. அது அநுவாகங்கள், சூக்தங்கள், ரிக்குகளாக உட்பிரிவுகள் செய்யப்பட்டதாகவும் இருக்கின்றது. பிரபாதங்களாகப் பிரிக்கப்படும் விதமும் காட்டப்பட்டிருக்கின்றது. வாக்கியங்கள் ஆறாயிரத்துப் பதினைந்தாகவும் நூற்றுக்கு மேற்பட்ட அநுவாகங்களாகவும் எழுநூற்றறுபதுக்கு மேற்பட்ட சூக்தங்களாகவும் இருக்கின்றன. இதின் பத்தொன்பதாவது காண்டத்தின் நாற்பத்துமூன்றாவது சூக்தமுழுவதும் அதர்வண வேதத்தின் பாடையையும்நடையையும், காட்டக்கூடிய ஒரு வாக்கியமென்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

(இன்னும் வரும்)

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.

---

## கஸ்யபன் - சூரியன்.

கஸ்யபன் மரீசிக்கு ஒரு கலையாலுற்பவித்தவன். தக்ஷன் புத்திரிகளாகிய பதின்மூவரையும் வைசுவானர் புத்திரிகளாகிய காலை புலோமை என்னுமிருவர்களையும் ஆகப்பதினைவர்களை விவாகஞ் செய்தவன். தக்ஷன் புத்திரிகள் - திதி, அதிதி, தனு, அனாயு, பாரதை, முனி, சுரசை, இளை, குரோதை, தாமரை, கபிலை, விநதை, கத்துருவை, காலை, புலோமை என்பவர். திதியால் தைத்தியரையும், அதிதியால் ஆதித்தரையும், தனுவால் தானவர்களையும், அனாயுவால் சித்தரையும், பாரதையால் கந்திருவரையும், முனியால் அப்பரசுகளையும், சுரசையால் யக்ஷராக்ஷசர்களையும், இளையால் விருக்ஷாதிகளையும், குரோதையால் சிங்க முதலியவைகளையும், தாமரையால் பக்ஷிகணங்கள், அசுவகணங்கள் முதலியவைகளையும், கபிலையால் பசுக்களையும், விநதையால் அருணன் கருடன் முதலியவைகளையும், கத்துருவையினால் நாகங்களையும், காலையால் காலகேயர்களையும், புலோமையால் பௌலோமரையும் பெற்றான். இப்புத்திரர்களை யன்றி பர்வதன் விபண்டகன் என வேறு புத்திரர்களுமுளர்.

சூரியன் கஸ்யப்பிரஜாபதிக்கு அதிதி வயிற்றில் பிறந்தவன். சூரியன் மனைவி விஸ்வகர்மாவினது மகளாகிய சம்ஹிதை. இவளிடத்தில் பிறந்த புத்திரர்கள் வைவஸ்வதமனு, யமன்; புத்திரி, யமுனை. விஸ்வகர்மாவினுடைய புத்திரியாகிய சம்ஹிதை, தன் பர்த்தா சூரியனுடைய வெப்பத்திற்கு ஆற்றாது தன் வடிவாகிய சாயையை ஓர் பெண்ணாகச் சிருஷ்டித்து தன் புருஷனுக்கு சிஷ்ருஷை செய்யும்படி வைத்துவிட்டு, தன் பிதாவினிடம் சென்றாள். மகள்வந்த வரலாற்றை பிதாவாகிய விஸ்வகர்மன் விசாரித்துணர்ந்து, "நீ கணவனிடத்தில் சொல்லாமலும் கணவனுக்கிணையைக் கடந்தும் வந்தபடியால் பெட்டைக் குதிரையாய்ப் போக" என்று சபித்தனர். சம்ஹிதை பிதாவை வணங்கி, "பிதாவே! இந்த சாபம் விமோசனமாவ தெப்படி?" என்று வேண்டிக்கொண்டனள். அதற்கு விஸ்வகர்மாவானவர் "நீகாட்டில் சென்று

தவஞ்செய்திரு; சூரியன் உன்னைத் தேடி வருவான். அப்போது விமோசனமாகு''மென்று அனுக்கிரஹித்தனர். நிற்க,

சூரியன் தன் மனைவியாகிய சஞ்ஞா தேவி என்றே எண்ணிச் சாயையினிடத்தில் சேர்ந்து சனியையும், மற்றொருமனுவையும், தபதி என்பவளையும் பெறுமுன் இப்படியிருக்கும் நாளில் ஓர்நாள் யமன் சாயாதேவியைந் தன் தாயென்று கோபிக்க இதைக்கண்ட சாயை கோபமுடையவளாய்க் கடுமையாகப் பார்க்க, இதையறிந்த யமன் இவளுக்குக் கருணையில்லாமையைக்கண்டு தன் தாயல்லவென்றுணர்ந்து தன் பிதாவாகிய சூரியனுக்கு அறிவிக்க, அவர் ஞானதிருஷ்டியினா லறிந்து உண்மையையுணர்ந்து தான் ஆண்குதிரைவடிவாகிப் பெட்டைக்குதிரை தவஞ்செய்யும் ஆரண்யத்தை அணுகித் தன் மனைவியாகிய பெண்குதிரையைச் சேர்ந்தான். அப்போது அஸ்வனி தேவதைகள் பிறந்தார்கள். ரேவந்தன் என்னுமொருவனும் பிறந்தான்.

பின்னர், சாபம்நீங்கி இருவருமாக விஸ்வகர்மாவினிடம் சென்று வணங்க அவர் இவர்களுக்கு ஆசிகூறி, சூரியனைச் சாலைத்தீயில் சாணைச்சக்கரத்தில் வைத்துக் கடைந்து எட்டிலொருபங்கு தேஜஸைக் குறைத்துவிட்டார்.

இப்படி விஸ்வகர்மாவினால் குறைத்துத்தள்ளப்பட்ட தேஜோபாகமானது மிகுந்த பிரகாசத்தோடே பூமியில் விழுந்து தஹிக்க அதனை விஷ்ணுவிற்கு சக்கராயுதமாகவும், பிரம்மாவிற்கு தண்டாயுதமாகவும், சிவனுக்கு சூலாயுதமாகவும், சுப்பிரமணியருக்கு வேலாயுதமாகவும், குபேரனுக்கு சிவிகை என்னு மாயுதமாகவும், மற்ற தேவர்களுக்கு சகல உபகரணங்களையும் சிருஷ்டித்துக் கொடுத்து விசேஷப்படுத்தினனென்று விஷ்ணுபுராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதுபற்றியே விஸ்வகர்மனுக்கு பருதி உடல்கடைந்தோன் என்று திருநாமம் வழங்குவது.

விஸ்வகர்மாவின் தாய் யோகசித்தி; மனைவி சாந்தாதேவி, புத்திரி சம்ஹிதை, புத்திரன் விஸ்வரூபன், பௌத்திரர்கள் வைவஸ்வதமனு காளிந்தி - என்று சூரியவிவாஹத்தில் கூறப்பட்டிருக்கிறது. உதயகால சூரியன் பிரம்ம ஸ்வரூபமாகவும், மத்தியானகால சூரியன் சிவஸ்வரூபமாகவும், அஸ்தமானகால சூரியன் விஷ்ணுஸ்வரூபமாகவும், ஜபகாலங்களில் தியானிக்கப்படுவன். சூரியன் உலகத்திற்குமுதல்காரணமானவ ராகையால் ஆதித்தன் என்றும், தினத்தைச் செய்வதினால் தினகரன் என்றும்,பிரபையைச் செய்வதினால் பிரபாகரன் என்றும், பிறவுமாக அனந்த நாமங்களை யுடையவன். இவ்வண்டம்சூரியனை ஆதாரமாக உடையது. சூரியன் துருவனை ஆதாரமா யுடையவன். சூரியனைக்குறித்து விஷ்ணுபுராணத்திற் கூறப்பட்டவற்றைச் சங்கிரஹித்துப் பிறகுகூறுவாம்.

கா. திருவேங்கட ஆச்சாரி.

---

கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.



## ஓர் விண்ணப்பம்.

ஸ்ரீகிருஷ்ண குண்டூர் மண்டல விஸ்வப்பிராம்மணர்களின் 7-வது மகாஜனசபைக் காரியதரிசியா ரவர்கள் சமுகத்துக்கு:—

நார்த்தார்க்காடு டிஸ்டிரிக்ட் வேலூர் 34-மிடா ஆனந்தராவ்வீதி, கணியம்பாடி அத்தியாபக லிங்காச்சாரி சிரசாஷ்டாங்க நமஸ்காரம் செய்து எழுதிக்கொண்ட விண்ணப்பம் என்னவென்றால், அய்யா, இதனடியிற்கண்ட அபிப்பிராயங்களை இப்போது நடக்கும் மகாஜன சபையில் வாசித்துக் காட்டுவீர்களென்று மிகவும் பிரார்த்திக்கிறேன்.

1. வேதங்களில் விஷ்ணுசிவர்களை கடவுளர்களாக வழங்குவதுபோலவே விஸ்வகர்மாவையும் வழங்கிவருகிறது.

2. ஆகமபுராணங்களில் விஷ்ணு சிவர்களுக்கு பரத்துவங்கற்பித்து வழங்குவது போல விஸ்வகர்மாவுக்கும் பரத்துவம் கற்பித்து வழங்கிவருகிறது.

3. அவ்வவ்வாகம புராணங்களை யனுசரித்து நடக்கும் ஜனங்கள் அவ்வம்மதஸ்தர்களா யிருக்கிறார்கள்.

4. பிரதிசமயத்துக்கும் ஆகமபுராணங்கள் இருப்பதேயன்றி வமிசத்துக்கிருப்பதாய்த்தோன்றவில்லை. ஒருவேளை யாதொருபிரசித்தமான வமிசத்துக்கு அவ்வமிச சரித்திரத்தைக் கூறும் நூலுக்கு புராணமென்று உபசாரமான பேர்வழங்கினாலும் அதில் புராணலக்ஷணம் பூராவாயிராது. விஸ்வகர்மபுராணம் அப்படியல்ல; அதில் புராணலக்ஷணம் முழுதும் அமைந்திருக்கிறது.

5. மேல் 1-முதல் 4-வரையில் கூறியவைகளால் சைவ வைணவ சமயங்களைப் போல விஸ்வகர்ம சமயமும் வேதத்திற்குள்ளீடானதாய் விளங்குகிறது.

6. இப்படி கூறப்படும் சிருஷ்டிகர்த்தாவாகிய விஸ்வகர்மா வல்லாமல் தேவர்களுக்கு சிற்பியாக வேறே விஸ்வகர்மா இருப்பதாய் வேதாதி நூல்களால் விளங்குகிறது. இந்தவிஸ்வகர்மாவே இப்போதைய விஸ்வகர்ம குலத்தாருக்கு மூல புருஷனாகும்.

7. மயன் என்னும் பெயரையுடைய ஒரு தானவன் அசுரர்களுக்கு சிற்பியாயிருந்ததாய் இதிகாச புராணங்களால் விளங்குகிறது. இவனுடைய வமிசத்தாரும் பல்கிப் பரவியிருப்பதாய் அபிதானகோச முதலிய நூல்களால் தெரிகிறது.

8. அனுலோமப்பிரதிலோம சம்பந்தத்தினால் ஆஸாரியென்னும் பெயரிய ஓரிழி குலச் சூத்திரசாதியார் தோன்றி தச்சர் கருமார் முதலிய தொழில் செய்துவருவதாய் ஸ்மிருதிகளால் தெரியவருகிறது.

9. நமக்காக ஏற்பட்ட இரதகாராதிகாரணவிசாரம் என்னும் நூலில் ஓரிடத்தில் நிடாதஸ்தபதி யென்னும் ஒருவகை சூத்திரஜாதியாருண்டென்றும், அவர்களுக்கு வேதாதிகாரம் வைதிகாசாரம் இல்லையென்றும், மற்றோரிடத்தில் அகத்தச்சர்கருமார் புறத்தச்சர் கருமார் என இருவகையா ருண்டென்றும், இவர்களில் புறத்தச்சர் கருமார் மேற்கூறிய நிடாதஸ்தபதிகளைப் போன்றவர்களென்றும் கூறியிருக்கிறது.

10. மேல் 6-முதல் 9-வரையில் கூறியவைகளால் இவ்விராச்சியத்திலுள்ள கருமார், தச்சர், கன்னார், சிற்பி, தட்டாரென்னும் தொழில் செய்கின்றவர்களையெல்லாம் விஸ்வப்பிராம்மணர் அல்லது விஸ்வகர்மகுலத்தார் என்று நிர்ணயிப்பதற் கிடமில்லை. விஸ்வகர்ம வமிசத்துக் குரிமை பூண்டவர்கள் மாத்திரம் தேவரிஷி சம்பந்தத்தினால் பிராம்மணர்களும், மயன் வமிசத்தார் மதுமாம்ஸ முட்கொள்ளுங் காரணத்தால் கலியுகத்தில் துவிஜர்கள் அவற்றை வர்ஜிக்கத்தக்கதென்னும் ஸ்மிருதிகளைக்கொண்டு அவர்களும் ஆஸாரியென்னும் இதிகுல சூத்திரர்களும், சூத்திரர்களு மாகிறார்கள். இவ்விதமாய் மொத்தத்தில் இருவகையினரா யிருக்கிறார்கள்.

11. இப்படியிருக்க, இப்பிரிவுகளையனுசரிக்காமல் சென்சஸ்முதலிய விஷயமாய் நம்மில் சில பிரமுகர்கள் கூடி தம்ஜாதியை விஸ்வப் பிராம்மணர்களென்றும், ஆச்சாரியென்றும் உரிமைபாராட்டி துரைத்தனத்தாருக்கு விண்ணப்பங்கள் செய்தும், பிரசுர முதலியவைகளில் வெளியிட்டும் வருவதில் உண்டாகும்பயனை நண்பர்களே அறிவார்கள்.

12. மேற்கூறிய சமுதாயத் தொழிலாளிகள் ஜாதியில் பேதப்பட்டிருந்தாலும் சமயத்தில் பேதப்படவில்லையென்றும் எல்லாரும் விஸ்வகர்ம சமயத்துக் குட்பட்டவர்களாவார்களென்றும் யூகிக்கஇடந்தருகின்றது. சைவவைணவ சமயங்களில் பல ஜாதியாரிருக்கிறார்கள். அப்படியே விஸ்வகர்ம சமயத்திலும் பல ஜாதியா ரிருக்கக்கூடும்.

ஆகையால் சமயாசாரத்தையாராய்ந்து வெளியிட்டு அதைக்கைப்பற்றும்படி முயற்சி செய்யக்கடவோம். அதற்காக தற்போது தங்கள் புஸ்தகபாண்டாகாரத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் சமய நூல்களாகிய விஸ்வகர்மாகமம், விஸ்வகர்ம புராணம், இவற்றை இருந்தபடியும் சுதேசபாஷையில் மொழிபெயர்த்தும் அச்சிட்டு வெளியிடுவது சர்வோத் கிருஷ்டமான காரியமாய்த் தோன்றுகின்றது. இப்போது விப்பிரர்கள் என்று நாம் சொல்லுகிற பிராம்மணர்களும் தாங்கள் விஸ்வகர்ம சமயத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லச் சம்மதிக்கமாட்டார்கள். விஸ்வகர்மசமயத்துக்கும் பிராம்மணர்கள்வேண்டியதுதானென்றும் அவர்கள்நம்மில் வாஸீகமாய் பிராம்மணாசார முடையவர்கள்தாமென்றும் ஒப்புக்கொள்வார்கள். அப்போது நம்மில்பிராமணீகம்நிலைபெறுமல்லவா? இவ்வபிப்பிராயங் கொண்ட ஒருகடிதம் சென்றவருஷத்து கான்பரன்சில் (28-12-12-ல்) தங்கள் சமுகத்துக்கு எழுதியிருக்கிறேன். அதுவும் தங்கள் சித்தத்தில் பிரவேசித்திருக்கக்கூடும்.

அத்தியாபக-லிங்காச்சாரி,
வேலூர்.

(தமிழ் மொழிபெயர்ப்பு சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் காரியதரிசியாருக் கனுப்பப்பட்டது.)

---



# பாரதபூமியின் ஜாதிநிர்ணயம்.

(103-வது பக்கத் தொடர்ச்சி.)

இப்பரத கண்டத்தின் அமைப்போ வடபாரிசத்தில் ஹிமயகிரி என்ற மகத்தான மகுடம்புனைந்ததும், கீழ்பாரிசத்திலும் மேல் பாரிசத்திலும் கீழ்கடல் மேல் கடலென்ற யாதொரு அகிலாண்ட நாயகனை சூரியபகவான் நீராடி உதயமானதனால் பரிசுத்தமான பிரவாகக்கொந்தளிப்பை கீழ்பாரிசத்திலும், யாதொரு பகவான் அஸ்தமனமாகி பள்ளிகொள்வதால் பூமகளை அழைக்க ஏவப்பட்டு ஆனந்தங்கொண்டு வந்த கருணாரசகவளீகரிப்பை மேல்பாரிசத்திலும், ஹிமோத்கிரியினின்றும் கீழ்முகமாக கங்காநதியும் மேல்பாரிசமாய் சிந்துநதியும் ஆன விஸ்வகர்மேஸ்வரனால் சாற்றப்பட்ட இருமாலைகளை அணிந்தும், இதன் பாதமானது கன்னியாகுமரி என்ற முனையினின்று இந்து சமுத்திரத்தில் பிரக்ஷாளனஞ் செய்துக்கொண்டும், பல அங்கங்களில் பல்வளம்பெற்றதாயும் விளங்காநின்றது. இப்பேர்ப்பட்ட பூமி இந்து சமயத்தினருக்கே தாய் நாடாகும்.

இந்து சமயோத்பவ முகூர்த்தமோ வைதீகசம்பந்தம்பெற்றும், நான்கு வர்ணாச்சிரமவிதிகளால் பிரபஞ்ச தர்மங்களை வகித்துக்கொண்டும் விளங்கா நின்றதாகும். இந்த இந்து சமயத்திலே தான் நான்கு வர்ணாச்சிரமப்பிரிவுகளும் அதற்குள்ளே உபஜாதிகளும் நிர்ணயமாயுள்ளன. ஒவ்வொரு ஜாதியும் ஒவ்வொரு கர்மசங்கைகளை வகித்துள்ளது. இவ்வாறு ஜாதிநிர்ணயம் யாவரால் எதற்காக ஏற்பட்டதென்றாலோ? அது யாதொரு தைவீகாம்ஸத்தால் பிரபஞ்சதர்மம் விர்த்தியாய் நடந்துவரும் பொருட்டே யானதால் பிரபஞ்ச வாழ்வில் கட்டுப்பட்டவர்களான எந்தஜன சமூகத்தாரும் தைவீக நிர்ணயத்திற்குத் தவறிநடக்கலாகாது. ஒருக்கால் தவறி நடந்தால் எப்படிப்போலாகுமெனில் சப்த மேகங்களும் பூமியிலும் சமுத்திரத்திலும் பரவிப்பொழிவதைவிட்டு ஓரிடத்தில்ஒருங்குகூடி பொழிந்தால் அவ்விடம் பிரளய நாசமாயும் மற்றவிடம் தீயாகவும் ஆவதுபோலும், சூரியனைச் சுற்றி கிரகங்கள் தத்தம் நிலையில் ஓடுவதை விட்டுக்கடந்துபோகுமேயாகில் அண்டங்கள்மோதி அண்டச்சேதமாவது போலும் காட்டு மிருகங்கள் நாட்டிற்புகுந்ததுபோலும், ஜீவர்களுடைய வாழ்வுக்குச் சிதைவு ஏற்படும்.

அப்படித் தவறாமல் பெரியோர்களின் ஆக்ஞைப்படி வைதீககர்மகுலத்தார் வைதீககர்மதாரியாயும், அரசியற் குலத்தார் அரசு செலுத்தியும், வியாபாரகுலத்தவர் வியாபாரத்தையும், அந்தந்த தொழிலுடையோர் அந்தந்த தொழிலையே செய்திருத்தலும், புத்திராள் தாய் தந்தையருக்கு வழிபட்டிருத்தலும் பெற்றோர் புத்திரர்களுக்கு ஹிதமாயிருத்தலும், ஸ்திரீ புருஷனுக்கு அடியாயிருத்தலும், புருஷாள் ஸ்திரீயிடத்தில் கடமையாயிருத்தலும், சகோதரர்க்குள் அன்யோன்யமாயிருத்தலும், பிறர் சொத்தை அபகரியாமை பொய்

சூது முதலானவையின்றி சிஷ்டர்களாயிருத்தலும், பொய் சூது வஞ்சனை முதலானதுகளால் அநீதர்களாயிருப்போர்கள் தக்கபடி சிக்ஷிக்கப்படுதலும் அந்தந்த குலாசார நியமனப்படி அந்தந்த குலத்தாரனுஷ்டித் திருத்தலுமான இவைகளெல்லாம் சிறந்த வாழ்வுக்குரிய ஆதிக்யமான நிர்ணயமானதால் அந்த நிர்ணயத்தைப் பரிபாலனஞ்செய்வது தர்மமாகும்.

அந்தந்த குலத்தோர்கள் அந்தந்த குலவிதிப்படி யிருக்கவேண்டியது பிரபஞ்ச தர்மமாயிருக்க, தற்காலத்திலோ பிரதமவம் சத்தினர்களான விஸ்வப்பிராம்மணர் செல்வத்திலும் நடையிலும் ஆசாரத்திலும் கிருத்தியத்திலும் வாக்கிலும் நாணயத்திலும் சிறப்பும் சுத்தமுமின்றி சுருங்கித்திருக்கிறார்கள். பிராம்மணரெனப் போற்றப் படுவோர்களான விப்பிரான் வியாபாரம் கம்பெனி உத்யோகம் இவைகளை வகித்தும், ஆங்கிலத்தைத் தாய் பாஷையாக வகித்தும், நடை உடைகள் நூதனங்கிசமாகப்பெற்றுமிருக்கிறார்கள்.

வியாபாரமோ சமஸ்தஜாதியாரும் ரிஜிஸ்டர்ட் லிமிடெட் பேடண்ட் முதலான அதிகாரம் கிடைக்கப்பெற்று நடத்திவருவதாகவு மிருக்கிறது. சூத்திரர்களைத் தொழிலைச் செய்தாலும் செய்யலாம், அல்லது தொழிலையே விட்டு வேறுவிருத்தியைப் பார்க்கவேண்டுமானாலும் பார்க்கலாமென்றிருக்கிறது.

(தொடரும்)

சாலிவாடிபுராதீனம் தர்மபதி.

## மதிப்புரை.

கந்நிமாகுமரிப் பகவதிஅம்மன் பிள்ளைத் தமிழ்:—இது, கோட்டாறு ஸ்ரீநீலகண்ட ஆசாரியார் குமாரரும், ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் மாணாக்கருமாகிய ஸ்ரீ கணபதி ஆசாரியாரவர்களாலியற்றப் பட்டது. நிரம்பிய பாண்டித்திய முடையாரன்றி மற்றையோர் இதுபோன்ற பிரபந்தஞ்செய்தல் கூடாது. சொன்னயம் பொருணயம் பொருந்தி ஒழுகிய வோசையுடன்கூடிச் சந்த வேறுபாடுகள் பலவுங்கொண்டு படிக்கப்படிக்கப் பரவசமுண்டு பண்ணத்தக்கதாயுள்ள இப்பிள்ளைத் தமிழ் மிகச் சிறப்புடையதாயிருக்கிறது. இதனாசிரியர் போன்று கவிசாதுரியம் வாய்ந்தவர்கள் பலர் நம்முளிருப்பதாகத் தோன்றவில்லை. இத்தகையாளர் குலசம்பந்தமான நூல்கள் செய்யத்தலைப்படுவர்களானால் நிரந்தரப் பெருங்கீர்த்தி யடைவார்களென்பது திண்ணம்.

கலைவாணி சதகம்:—வித்வான் ஸ்ரீமத் ஆ. போ. சென்னகேசவுலு நாயுடவர்கள் மாணாக்கருளொருவராகிய செந்தமிழ்க் கவி ஸ்ரீ சி. கி. சுந்தராச்சாரியாரவர்கள் இயற்றிய கலைவாணி சதகமும், சரஸ்வதிபஞ்சரத்நமுங் கூடிய புத்தகமொன்று பெற்று பெருமகிழ் சிறந்தோம். இவை சந்த விருத்தங்களாலமைந்து அருமையுடன் விளங்குகின்றன. இந்நூலாசிரியரே விஸ்வப்பிரம்ம புராணத்தை வசன நடையிற் செய்திருப்பவர். இந்நூலினருமையை விளக்கிப் பலவித்வசிரோன்மணிகள் பல பாடல்கள் கூறியிருக்கின்றனர். இதன் விலை அணா 2. சென்னை சிந்தாதிரிப்பேட்டை வேதகிரி மேஸ்திரி வீதி 5-10 எண்ணுள்ள கிருகத்தில் ஸ்ரீகொ. கன்னியப்ப ஆச்சாரியாரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.



# சிற்பசாத்திரவிஷயம்.

சிற்பம் விசுவகர்மீயத்திலும் மனுசாரத்திலும் காணப்படுகிற விஷயசூசிகா.

| | | |
|---|---|---|
| பிரார்த்தனை | ஏக | தாலலக்ஷணம் |
| சிற்பிலக்ஷணம் | துவி | கர்விநிபங்யாசம் |
| சிற்போற்பத்தி | திரி | வாஸ்துபோதலட்சணம் |
| வாஸ்துலக்ஷணம் | சது | தெவஹாம்யலட்சணம் |
| பூபரீக்ஷா | பஞ்ச | சிலாலட்சணம் |
| மானோபகரணம் | ஷட் | சிலாசங்கிரகணம் |
| சங்குஸ்தாபனம் | சப்த | ஜாதிபேதலிங்கலட்சணம் |
| முளக்கோல்-அளக்கும் | அஷ்ட | திரைராசிகலிங்கலட்சணம் |
| லக்ஷணம் " | நவ | தாராலிங்க ,, |
| நாகராதிநகரலக்ஷணத்தில் | தச | சைலாதித்ய சஹஸ்ரலிங்க ,, |
| நாகரம் | ருத்ர | ஸ்வயம்பூலிங்க ,, |
| புரம் | திரையோதச | பாணலிங்க ,, |
| ஜயாநீயம் | மநு | ஸ்படிகலிங்க ,, |
| கர்வம் | பஞ்சாதச | ரத்நலிங்க ,, |
| கேடகம் | சொடச முதலான பூமி | முஷ்டிலிங்காதி ,, |
| கர்வடம் | பேதங்கள் | லொஹஜலிங்க ,, |
| குப்ஜகம் | களபூலக்ஷணம் | பக்திலிங்க ,, |
| பத்தனம் | சிகரலக்ஷணம் | லிங்கபேதம ,, |
| சிபிரம் | பூமிவிதானம் | பிருதிவ்யாதிலிங்க ,, |
| படீமுகம் | பூமிலம்பனலக்ஷணம் | நாகபாதிலிங்க ,, |
| ஸ்தாநீயம் | ரெக்தபந்தம் | வக்த்ரலிங்கலட்சணம் |
| த்ரோணகம் | பட்டபந்தம் | ஆட்யலிங்க ,, |
| ஸம்வித்தம் | குக்ஷிபந்தம் | அநாட்யலிங்க ,, |
| கோலகம் | சித்திரபந்தம் | சுரேட்யலிங்க ,, |
| ஆத்மகம் | ஆயாதிஷட்விதலக்ஷணம் | ஸர்வசமலிங்க ,, |
| பத்மகம் | சர்வதொபத்ரம் | கபேதய ,, |
| ஸ்வஸ்திகம் | நந்தியாவாத்தகிராமலக்ஷணம் | சாந்திகம் |
| நிகமீம் | மானநிர்ணயம் | பௌஷ்டிகம் |
| ஸ்கந்தம் | மாநஸூத்ரநிர்ணயம் | ஜயதம் |
| பாரம் | வாஸ்துவிந்நியாசம் | அத்புதம் |
| சிதுகம் | பத்மலக்ஷணம் | சார்வகாமிகம் |
| மங்கலம் | ஸ்வத்திகலக்ஷணம் | த்ராவிளம் |
| குடிகம் | கொஷ்டவிசெஷம் | ச்சந்தநீயம் |
| விலயமுதலானபேதங்கள் | கிராமவிந்நியாசம் | ச்சந்தம் |

(இன்னும் வரும்) ஜோசியர்-முத்து ஆசாரியார், நாகர்கோவில்.

## சிற்பிகள் சிறப்பு.

நமது குலச்சிரேஷ்டரும், பண்டிதசிகாமணியுமாகிய ஜோஸ்யர்-முத்து ஆசாரியாரவர்கள் எழுதிய சிற்பசாஸ்திரவிஷயம், சாத்திராதாரங்களுடன் பலஉண்மைகளை வெளிப்படுத்திற்று. இப்போது, விஸ்வப்பிராம்மண குலவித்வான்கள் எங்கெங்குள்ளார்களென்பது வெளிப்படுவதற்கு இப்பத்திரிகை சாதனமாய் நிற்பதுடன், அவரவர்களுடைய கல்வியாராய்ச்சிகளின்பலன்களை குலத்தாரெல்லாம் அடையும்படிச் செய்கின்றது. ஷை வியாசத்தில், 13-வது பக்கத்தில் வந்தவிஷயம் எனக்குச்சென்ற ஐந்துமாதங்களாக ஞாபகத்திலேயே இருந்துவருகிறது. அதாவது — "விஸ்வ கர்மாவின் வம்சத்தவராயும், யோக்கியராகவு மிருக்கிற சிற்பியைக்கொண்டு கிருக கிராமாதிகளை வாஸ்து சாத்திரோக்தமாகச் செய்யவேண்டும். வாஸ்து சாத்திரத்திற்கு அதிகாரிகளல்லாதவர்களைக் கொண்டுசெய்தால், அந்த கர்த்தா முதலானவர்களின் குலங்கள் நாசத்தையடையுமென்றும் மகரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறது." இவ்வாக்கியங்களால் சிற்பிகள் பெருமை நன்றாய்த்தெரிகிறது. இவ்வித சிற்பாசாரியர்களாலேதான் பாரதநாட்டுப் பழம்புகழ் நாட்டப்பட்டது. இத்தகையாளர் இன்றும் பூசிக்கப்பட்டே வருகிறார்கள். ஆனால், இவர்களுடைய தொகையும் மேன்மையும் நாளுக்கு நாள் குறைகிறதுபோல் தோன்றுகிறது. பிரக்யாதிபெற்றிருந்த சிற்பவம்ஸங்கள் பல அற்றேபோயின. சிற்பிகள் சந்ததியார்களிற் பலர் அந்தத்தொழிலைக் கைவிட்டு மற்றநான்கு தொழில்களிற் பிரவேசித்திருக்க லாயினர். அதே தொழிலை விடாதுகைப்பற்றி யிருப்பவர்களிலு மநேகர் தமது மூதாதைகளைப்போல் மகத்தாகிய சிற்பகாரியங்கள் செய்யக்கூடியவர்களா யில்லை. இதற்குக்காரணம், முக்கியமாக சிற்பசாத்திரப் பயிற்சியில்லாமையே யென்று நினைக்கிறேன். இக்காலத்திய சிற்பிகளிற் பெரும்பாலார் சாத்திரமறிந்து தொழில்செய்து வருகிறார்களென்று சொல்வதற்கிடமில்லை; பழக்கத்தினாலும் பரம்பரைவாசனையினாலுஞ் சிற்பத்தொழில்செய்து வருவதாகத் தோற்றுகிறது. உளியைக்கொண்டு கல்லைவெட்டுதல் சிற்பத்தொழிலாகச் சொல்லத்தக்கதல்ல. இவ்வளவுமட்டுமே தெரிந்துகொண்டிருப்பவன் சிற்பாசாரியென்னும் யோக்கியதைக்கு உரியவனாகவேமாட்டான். சிற்பமென்பது இஞ்சினீரிங் (Engineering) என்று தற்காலத்திற் சொல்லப்படும் யாந்திரிகத்திற்கும் மேலானது. அதை விளக்குவதினாலேதான் சிற்ப சாத்திரங்களுக்கு மற்றெல்லாச் சாத்திரங்களினும் மிக்க சிறப்புண்டாயிற்று. அந்த மகாசாத்திரப்பிரகாரந் தொழில்செய்து வந்ததினாலேதான் சிற்பாசாரியர்களும் சிறப்படைந்திருந்தார்கள். அந்தவிதத்தினாலேதான் இப்போதுமிவர்கள் சிறப்படையக்கூடும். தற்காலத்தில், விஸ்வப்பிராம்மண வம்ஸப் பஞ்சவகுப்புகளில் சிற்பிவகுப்பே மற்றநான்கினுஞ் சிறந்திருக்கிறதாயெண்ணவேண்டியதாயிருக்கிறது. இவர்களிற் பெரும்பாலார் ஆசாரத்தைக் கைவிடாமல் மற்றவர்கள்மதிப்பை யடைந்திருக்கிறார்கள். இந்த மதிப்பு நழுவிப்போகாம லிருக்கவேண்டுமானால், இவர்கள் சிற்பசாத்திரங்களை வாசித்து, அந்த சாத்திரோக்தமாய்த் தொழில்செய்து வரவேண்டும். சிற்பசாத்திரங்களோ பல்வேறுபட்டவிஷயங்களைப் பற்றிப்பிரஸ்தாபிப்பதாக, ஜோசியரவர்களுடைய அரியவியாசத்தால் தெரிகிறது. அவ்வரிய விஷயங்களையெல்லாம் அறிந்து அவற்றைச் செய்துகாட்டக் கூடியவர்கள் எத்தனைபேரிருக்கிறார்களோ நான் அறியேன். அப்படிப்பட்டவர்களால் நமதுசிற்பப்பெருமை நிலைநிற்கக்கூடுமே யொழிய, 'சிற்பிகள்' என்னுஞ்சப்தமாத்திரத்தினாலும், சிற்பசாத்திரங்களில் இன்னின்ன விஷயங்களிருக்கின்றன' வென்பதினாலும், 'சிற்பசாத்திரங்களுக்கு நாமே அதிகாரிகள்' என்பதினாலும் சிற்பிகள் பெருமை நிலைநிற்கமாட்டாது. ஆதலால், நம்மவர்கள் இப்போது செய்யவேண்டிய தொன்றிருக்கிறது. சிற்பசாத்திரங்களைச் சேகரிக்கவேண்டும். அவற்றை நன்கறிந்த சிற்பாசாரிய ரொருவரைக் கொண்டு சிற்பவகுப்புச் சிறுவர்களுக்குப் போதிக்கவேண்டும். இதற்கொரு பாடசாலைவேண்டும். அதற்குப்பணம் வேண்டும், சகாயிகள் வேண்டும், தக்க உபாத்தியாயர் வேண்டும். ஆனால், சிற்பசாத்திரப் பயிற்சிக்கோ சமஸ்கிருதபாஷாபயிற்சிவேண்டும். சமஸ்கிருதம்படிக்காமல் எவனும் சிற்பங்களை வாசிக்கமுடியாது. ஆதலால், சிற்பப்பயிற்சி சாலைக்குச் சமஸ்கிருத போதனை இன்றியமையாததாயிருக்கிறது. சமஸ்கிருதபாஷையைப் பழகிவராமல் கைவிட்டதினாலே யல்லவா சிற்பசாத்திர ஞானமுங் கைநழுவிப்போயிற்று? சமஸ்கிருதம்படித்தால் சிற்பசாத்திரம் ஒன்றாவரும்? மற்ற சாத்திரங்களும் வரும், அவற்றோடு சீர்திருத்தம் வரும் சிறப்பும்வரும், செல்வமும் வரும். எனவே, சிற்பாசாரியர்களுக்கு சமஸ்கிருத பாஷா ஞானம் அத்தியாவசிய மானதென்பது பெறப்பட்டது. இவ்வளவு அத்தியாவசியமா யிருப்பது நம்மவர்களுடைய கவனத்திற்கு உரியதல்லவா? இந்தக்காரியத்தில் தலையிட்டால், நமது ஜாதிக்கு நல்ல கியாதியுண்டாகும். இதில் செலவிடும் பொருள் விரயமாகாது, பெயரைச்சொல்லும், பெருமையைத்தரும். சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளைகளைப்போல, மந்திரங்களையோ சுலோகங்களையோ பழக்குவிப்பதிலும், அதிற்பணஞ்செலவிடுவதிலும் பயனொன்றுண்டெனத் தோன்றவில்லை. என்னபிப்பிராயந் தப்பெனக் காட்டுவாருண்டானால் ஒப்புக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். நம்மவர்களிடமிருந்து பணங்கிடைப்பதோ வெகு சிரமமானகாரியம். கிடைக்கும் பணத்தை உபயோககரமான உத்தமகாரியங்களிற் செலவிடுவதே சிலாக்யம்.

சிற்பப்பிரியன்.



## ஆரோக்யபோதம்.

**இராஜப்பிளவை.** — கந்தகத்திராவகத்தைச் சலத்தில் கலந்து 20, 30-துளிகள் 4-மணிநேரத்திற்கொருமுறை 15-நாட்கள் உட்கொண்டால் இராஜப்பிளவைக் கட்டிகள் முதலியன நிவாரணமாகின்றனவென்று டாக்டர் ரெய்னால்ட்ஸ் என்பவர் தெரிவிக்கிறார். ராஜபிளவையில் 12-18-மணிநேரத்தில் கட்டியைச் சுற்றிலும் வரம்புண்டாகி அது பரவாது தடைப்பட்டு, மிருதுவாகிச் சீழ்வெளிப்படுகிறது. கட்டியை அறுக்கவேண்டியதில்லை. கர்பாலிக் வாசனைத் தைலத்தைத் தடவுவது நன்று.

**காலையுண்டி.**—(Breakfast) ப்ரெக்பாஸ்ட் என்னுங் காலையுண்டி கொள்ளுவது பிரிட்டிஷ் ஆசாரமாகும். இதை 'லான்லெட்' என்னும் பத்திரிகைகண்டிக்கிறது. இராத்தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தவுடன் தேகமும் புத்தியும் வெகு உரப்பாயிருக்குமாதலால், அப்போது யாதொரு ஆகாரமும் வேண்டாமலே வேலைசெய்யலா மென்னப்படுகிறது. நூலாசிரியர் பலருடைய சரித்திரங்களை ஆராயுமிடத்து அவர்கள் ஒருநாளில் மற்றெந்தக் காலத்திலுங் காலைவேளைகளில்தான் மிகுந்த வேலைசெய்வதாகத் தெரிகிறது. அவர்களுக்கு காலையுண்டி யிருந்தாலு மில்லாவிட்டாலும் ஒன்றேதான். என்றாலும் இங்கிலீஷ்காரர்கொள்ளுங் காலைப் போஜனம் அதிகமென்றே சொல்லப்படுகிறது. கைவேலை செய்கிறவர்களுக்குக் காலையுண்டி சற்றவசியமெனச் சொல்லலாமேனும், மூளைப் பிரயோகஞ் செய்கிறவர்களுக்கு அது சிலாக்யமாயிருக்கவில்லையென்றும், இவர்கள் பொழுது செல்லச்செல்ல ஆகாரமதிகமாய்க் கொள்வதே உசிதமென்றும் வாதிக்கப்படுகிறது. பாரதநாட்டுப் பண்டையாசாரமேன்மை இதனால் நன்கு புலப்படுகின்றதல்லவா?

---

# நமது வாசகர்கள்.

## ஆச்சாரி - ஆஸாரி.

நமதுபட்ட விஷயத்தில் விஸ்வப்பிரம்மவம்ஸோற்பவர்கள் ஒவ்வொருவருக்கும் பாதையேற்பட்டிருக்கிறதென்றாலும், நமது ஜாதிப்பௌரோகிதர்களுக்கு இதில் அதிக கவனமிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். இவர்கள் ஒவ்வோரூரிலு மிருக்கப்பட்ட நமது குலத்தாரையெல்லாம் அறிந்தவர்களா யிருக்கிறார்கள். அவர்களையடிக்கடி பார்க்கக்கூடியவர்களாகவு மிருக்கிறார்கள். ஆதலால், பட்டபேதத்தைப்பற்றி அவர்களுக்கு எச்சரிக்கைசெய்து, வேண்டிய மாதிரியாக நடந்துகொள்ளும்படி போதிப்பது இப்பௌரோகிதர்களுக்கு சாத்தியமாயிருக்கிறது. இதுவன்றி, குலசம்பந்தமான பிரதி காரியத்திலும் இவர்கள் ஈடுபட்டிருப்பது நன்று.

பட்டணம்-தாளத்தி ஆசாரி.

2

காருண்யமிகுந்த கவர்ன்மெண்டார்கள் குடிகளுடைய குறைகளைத்தீர்க்கச் சித்தமாயிருக்கிறார்கள். அவர்களுடைய நியாயபலம் லோகப்பிரசித்தமாயிருக்கிறது. ஆதலால், ஆஸாரிப்பட்டத்தினால் நேரிட்டிருக்கிற நம்மவர்களுடைய குறையையும் மனஸ்தாபனத்தையுந் தீர்ப்பார்களென்பதில் சந்தேகமேவேண்டாம். ஆனால், நம்முடைய கடமையொன்றிருக்கிறது. அதாவது, நம்முடைய குறையை முறையிடுவதே. இந்த முறையீட்டை யநுசரித்துத்தான் நமது குறைதீரும். எவ்வளவு ஆத்திரமாகவும் அநுதாபத்தோடும் அவசரத்துடனும் முறையிடுகிறோமோ அவ்வளவு சீக்கிரமாகத்தீரும். குறைதீருவதிலும் தாமதம் நேரிடலாம். ஏனெனில், நமக்கேற்பட்டகுறை அவர்களுக்கெப்படித் தெரியப்போகிறது? குழந்தைபசி அழுகையினால் தானே தெரியவேண்டும்? அழாதிருக்குமட்டும் குழந்தைக்குப் பசியில்லையென்று தாய் நினைத்துக்கொண்டிருப்பாள். மெதுவாயழுதால் மெதுவாய் வந்தெடுப்பாள். பலமாய்க் கத்தினால் பரந்தோடிவருவாள். குழந்தையுந் தாயுமாகிய நிலையிலே யன்றோ நாமும் அரசாங்கத்தாரும் இருக்கிறோம்? ஆதலால், முறையிடுவதில் முந்துவோமாக.

மதுரை-சாமிநாதபத்தர்.

3

பட்டகாலிலேபடும், கெட்டகுடியேகெடும்-என்னும் பழமொழி நமது ஜாதியளவிலே நிஜமாயிருக்கிறது. நமக்கு நேரிட்ட துன்பங்களுக்கோ கணக்கில்லை. நம்முடைய் சுதந்திரங்களெல்லாம் ஒவ்வொன்றாய்க் கை நழுவிப்போய்விட்டன, நம்மவர்கள் கல்வியைக் கைவிட்டுக் கௌரவமிழந்தார்கள், கைத்தொழில்களில் நாணயமின்றி கதியொழிந்தார்கள். இளைத்தவன் பெண்டாட்டி எல்லார்க்கும் மச்சினி——யென்பதுபோல், நாம் கல்விசெல்வங்களில் இளைத்திருக்குந் தன்மையைக் கண்டு, எல்லாஜாதியார்களும் நம்மை ஏளனஞ்செய்யத் தலைப்பட்டார்கள். நமது இளைப்பு இன்னுந்தீராமலே யிருப்பதினால் பிறஜாதி ஏளனமுந்தீராமலே வளர்ந்து வருகின்றது. நம்மவர்கள் பேசிப்பேசிப் பொழுதுபோக்குவார்களேயொழிய, செய்யவேண்டிய காரியத்தில் சிரத்தைகாட்டி நடக்கமாட்டார்கள். இதனால், ஏற்கனவே கெட்டுப்போன நமது குடி இன்னு மின்னுங் கெட்டுவருகிறது. போனதெல்லாம் போனாலும், ஆச்சாரிப்பட்டமாவது தக்கியிருக்கலாகாதா? அதற்கும் பழுதுவந்துவிட்டது. சென்ற மாதத்தில் சில நிருபர்களெழுதியவாறு, நமக்குப் புத்தி புகட்டுவதற்குத்தானோ கடவுள் இவ்விதக்கஷ்டங்களுண்டுபண்ணுகிறார்? அப்படி யிருக்கலாமென்று தான் எனக்குந்தோன்றுகிறது. இல்லாவிட்டால் அடுக்கடுக்காய் ஆபத்துகள்வரமாட்டாது. விவேகிகள் நன்றாய் ஆலோசித்துப்பார்க்கட்டும்.

S. M. A



4

பாக்யத்தாலும் பூர்வ புண்ணியவசத்தினாலும் நல்ல சகவாசங்கிடைக்கப்பெற்று பத்திரிகைகளின் பலன்களையறிந்து பலதமிழ்ப் பத்திரிகைகளைக்கிரமமாகச் சென்ற பத்துவருஷங்களாக வாசித்து வந்தேனாயினும், எனக்குக் குலசம்பந்தமான உணர்ச்சியுண்டாகாமலே யிருந்தது. இதற்குக்காரணம், குலசம்பந்தமாய்ப் போதிப்பவர்களும் குலசம்பந்த விஷயங்களைப்பற்றி யெழுதும் பத்திரிகைகளுமில்லாமையே யன்றி, சுஜாதிவிஷயத்தில் எனக்கு யாதொரு துவேஷமுங் கிடையாது. பொதுப்பட பலவிஷயங்களைப் பற்றி யெழுதும் பத்திரிகைகளை வாசிப்பதினால் விஸ்வப்பிராம்மணர்களுக்குத் தமது குலசம்பந்தமாய் யாதொரு தெளிவு முண்டாக மாட்டாதென்பது நிச்சயம். நமது பத்திரிகையிலோவென்றால் சுஜாதியார்க்கே யுரியவையான விஷயங்கள் காணப்படுகின்றன. பிறஜாதியார்கள் எப்படி மேன்மையடைந்து வருகிறார்களென்பது 'மற்றவர் மாட்சி' யென்னுந்தலைப்பின் கீழ் வரும் விஷயங்களால் நன்றாய் விசதமாகிறது. இதனால் நாம் கைக்கொள்ளவேண்டிய மார்க்கங்கள் தெரிகின்றன. வர்த்தமானங்களினின்றும் புகட்டப்படும் நீதிகளோ எவ்வளவு மந்தபுத்திக்காரனும் சிந்தித்துணரத் தூண்டுவதாயிருக்கிறது. தனிவர்த்தமானங்கள் சோம்பற்படிப்பேயாகும். ஒவ்வொன்றினின்றும் ஒவ்வொருபாடங் கண்டு கைப்பற்றுதல் எவ்வளவு சிலாக்கியம்!

சிலாசாஸனங்கள், சிற்பசாஸ்திர விஷயம், வேதசாத்திராதிகள் முதலியவற்றின் கீழ்வரும் விஷயங்களைப்பற்றி நானென்ன சொல்லப்போகிறேன். ஆயினும், ஆச்சார்யபட்ட விஷயம், புதிய தமிழ் அகராதி, ஆந்திர விஸ்வப்பிராம்மணகான்பரன்சு என்பவை மிகவும் உள்ளக்கிளர்ச்சியை விளைவித்தன. இவ்விஷயங்களைப் பற்றி வேறுயார் எழுதப்போகிறார்கள்? ஒருவருங்கிடையாது. நமது குலவிஷயங்களைப்பற்றியெழுத நம்மவர்களே அறியாமலும் அசூயைப்பட்டுக்கொண்டுமிருக்க மற்றவர்களெப்படியெழுதுவார்கள்? ஆந்திரவிஸ்வப் பிராம்மணர்கள் கான்பரன்சுகள் நடத்துவதைப் பற்றியும், அந்த கான்பரன்சுகளின் ஒழுங்குகளைப் பற்றியும் நமது பத்திரிகை மூலமாயன்றி மற்றெப்படி நம்மவர்களுக்குத் தெரியப்போகிறது? புதிதாயொரு தமிழகராதி தயாரிக்கப்பட்டு வருகிறதென்றும், அது நம்மால் கவனிக்கப்படத்தக்கதென்றும் யாரெடுத்துக்காட்டப்போகிறார்கள்? ஆச்சார்யபட்ட சம்பந்தமாய் நடந்திருக்கும் அநியாயம் ஊரூர்களிலுமிருக்கும் விஸ்வப்பிராம்மண மகாஜனங்களுக்கெல்லாம் எட்டும்படியாக எந்தப்பத்திரிகை உதவிசெய்யப்போகிறது? இன்னும்: இப்பட்டச்சிறப்பை யெல்லாம் வெளியிட்டு, இதைப்பற்றிப் பலர் அபிப்பிராயங்களையுந்திரட்டி நமது வம்ஸத்தார் ஒவ்வொருவரும் ஆஸாரிப்பட்ட சங்கதியை யறிந்துகொண்டு அதை மாற்றுவதற்கான பிரயத்தினங்கள் செய்யும்படிப் பலவிதமாய்த் துண்டக்கூடிய சாதனம் வேறொன்று முண்டோ? இவ்விதப்பத்திரிகையொன்று பலவருஷங்களுக்கு முன்னமேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தால், நமது ஜாதியார்களுடைய கவனத்திற்கு இதுபோன்ற பல விஷயங்கள் கொண்டுவரப்பட்டிருக்கு மென்பதும், அநேகவித சீர்திருத்தங்களுண்டாயிருக்குமென்பதும் நிஜமேயல்லவா? இப்பொழுதுமுதற்கொண்டாவது சுஜாதிப்பத்திரிகைப் பலன்களையடையும்படி நமக்கருள்புரிந்த ஸ்ரீவிஸ்வேஸ்வரன் இதன் மூலமாய்ப் பலநன்மைகளளிப்பாரென்று பிரார்த்திக்கின்றேன்.

P. S. ஆச்சாரி.

---

நற்றாமரைக்கயத்தில்நல்லன்னஞ்சேர்ந்தாப்போ
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பில்லா [ல்
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்.

## ஓர் விக்ஞாபனம்.

உலகில் கல்விப்பயிற்சியினா லுயர்ந்து மனிதர் புகழடைவதையும், கல்வியிலா மனிதர் மழுங்கி அன்னியராலிகழப்பட்டு அடிமைத்தொழில் புரிந்து வருதலையும் சீர்தூக்கிப்பாருங்கள். கல்வியில்லாமலும் தத்தம் குலாசார தர்மங்களை சற்றுங்கவனியாமலும், பிறருக்குபயந்தே மறைந்துறங்கி விட்டா லெவ்வாறு நமது குலம் முன்னுக்கு வரும்?

“விஸ்வகர்மன்” என்னும் பெயர்பூண்ட இவ்வருமையான பத்திரிகை என்றும் நிலைபெற்றுவளர்பிறையைப்போலத் துலங்குதற்குகுலாபிமானிகளே முற்றுங்காரணமா யிருக்கின்றனர். இக்குலத்திற் பிறந்த ஒவ்வொருவரும் இப்பத்திரிகையைக் கட்டாயமாக வாங்கி, இதனுளெழுதியுள்ள விஷயங்களைக் கவனிக்கக் கையொப்பக்காரர்களாகி விருத்திக்குக்கொண்டுவருவீர்களெனப் பிரார்த்திக்கின்றனன்.

இவ்வாறு பூர்வத்து மேம்பாடுடைய நமது விஸ்வப்பிரம்மகுலமானது இப்போது செல்வத்திலும், கல்வியிலும், ஆசாரத்திலும், ஒற்றுமையிலும், இன்னும் பலவிதத்திலுங் குறைவுபட்டிருக்கின்ற காரணமென்னவெனில் யாகாதிகிருத்தியங்களையும், சிற்பசாஸ்த்திரங்களையும், கீர்வாண திராவிடபாராயணங்களையும் விஸ்வேஸ்வரக் கடவுள் பிரார்த்தனைகளையும், ஸ்ரீ காளிகாம்பாள் திருவடிப்பத்தி முதலாய முக்கியமானவைகளெல்லாம் விட்டுவிட்டிருப்பதினா லிவ்வளவு கஷ்டம் நேரிட்டது. இனியாவது நங்குலாபிமானிக ளொன்றுகூடி, ஒவ்வொருக்ஷேத்திரங்களில் யாகங்களும், வித்தியாசாலைகளும், மடம் முதலியன ஏற்படுத்தி நடாத்துவார்களானால் இம்மையிற் செல்வமும் சுகமும சீர்ததியும் பெருமையும் பெற்று, மறுமையில் மோட்சசாம்பிராச்சியமாகி யெனறு மழியாநிலைபெற்று சாயுச்சிய பதவியையடைந்து சாக்ஷாத் விஸ்வப்பிரமத்தினது திருவருணோக்கத்தால் வாழ்வர்.

அண்டபகிரண்டமுதல்யாவையும்படைத்துபுக்
விண்டரியஞானதிரு விஸ்வேசா-மண்டலத்தில்
நங்குலத்தோ ரொற்றுமையாய் நாடோங்கிவாழ
இங்குவந்தருட்செய்கவின்று. [தற்கு

ம. பு. நடராஜாச்சாரியன்.

---

## இதோபதேச நீதிமொழிகள்.

எவ்வருடமும் தனுர்மாசத்தில்வரும் ஏகாதசி விரதத்தை மிக்க அன்போடு உற்றுநோக்கிக் கவனிக்கும்போது அதனுடைய உண்மைப் பொருளானது நன்மை கடைப்பிடி என்ற நற்பொருளாக நாட்டில் விளங்குகிறது.

இதற்கு நிதர்சனமாக, நமது ஆன்றோர்களின் அமுதமென்னும் அருமைவாக்கானது:—

யதாராஜா—ததாபிரஜா; கருத்து - இராஜனுடைய குணப்படியே குடிகளுமிருக்கும். யதாகுரு:—ததாசிஷ்ய: (குருவினுடைய குணப்படியே சிஷயனுமிருப்பன்) யதாபிது:—ததாபுத்ர:- (பிதாவினுடைய குணப்படியே புத்ரனுமிருப்பன்) யதாசாஸ்திரஸ்த்—ததாபுத்தி: | (சாஸ்திரமெவ்வளவு அப்யாசமோ அதற்குத் தகுந்த அறிவு விருத்தி இருக்குமென்பதேயாம்.)

ஆகையால் நமது சென்னைமாநகரத்தில் சென்ற 3 வருடகாலமாக சென்னை விஸ்வகர்ம குலோத்தாரணசபையார் நமது குலமானது ஆசாரசீர்திருத்தத்தோடு என்றும் நன்மையுடன் இவ்வுலகில் தழைத்து வாழ்ந்துவர வேண்டுமென்று நன்மையுடன் கண்ணுங் கருத்துமாய் நின்று உழைத்து வருகிறார்கள் என்பது இவ்வுலகில் குன்றின்மேலிட்டவிளக்குபோல் என்றுந்தெரிந்த விஷயமே. இந்நன்முயற்சியானது நம்து குலோத்தமர்கட்குள் என்று மறவாத ஓர் உன்னத உயர்நடை என்னும் ஒழுக்கமாகும்.

குலாபிமானிகளே! சற்றுகவனியுங்கள் உருக்மாங்கதன் என்னும் இராஜன் தான் அநுட்டித்த ஏகாதசி விரதத்தைத் தன் நகரிலுள்ள யாவர்களும் அனுட்டித்து நன்மையடையவேண்டுமென்று மிக்க ஊக்கத்துடன் நகரெங்கும் பறையறைவித்து நியமப்படியே ஒரணுவேனும்விரதபங்கமில்லாமல். நடந்துவரும்படி செய்து கண்டிப்பான உத்தரவுடன் காத்து வந்தனன். அப்படி அவன் நன்முயற்சியோடு காத்துவந்த நற்பலனானது அவனுக்கும் அவனைச்சேர்ந்த குடிஜன இனத்தவர்களுக்கும் இறைவனருளையும் என்றுமழியாப்பெரும்புகழையும் இந்திரவியுள்ளளவும் இமையோர்களும் வாழ்த்தி எத்திநிற்கும்படி இன்னமும் நடந்து இன்புற்று வருகிறது.



இதானது நம்து இந்துஜன நன்மணிகளுக்கு தனுர்மாசத்தில் (மார்கழி மாசத்தில்) விளக்கிக் காட்டும் தக்கபுத்தி என்னும் மிக்கபுத்தியாயும் நாம் உலகில் ஒற்றுமையோடு வாழ்வதற்கு இஃதோர் அறிகுறியான உபதேச நன்மொழிக்குறிப்பாகவுமிருக்கிறது.

இதுபற்றியன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாராகிய ஆன்றோரும் “தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்”—என்றும், தாயுமானவர்—

எல்லாரும் இன்புற்று இருக்கநினைப்பதுவே
அல்லாது வேறொன்றறியேன் பராபரமே.

என்றும்

காக்கையினத்தை அழைத்துக்கலந்துண்ணும்
ஆக்கமுள்நல்லோரதுபோல்—என்றும் ஔவையாரவர்கள் “ஒப்புற ஒழுகு” என்றும் நற்போதங் கூறியிருக்கின்றார்கள்.

அந்தோ! இழிகுலக்காக்கைக்கும் தன்னினங்காத்தல் என்னும் தயவாகிய இன்ப அறிவு இயற்கையாய் இருக்கிறதென்றால், இப்புவியில் எய்தொணாப்பிறவியாகிய இம்மானிடதேகத்தையடைந்த நல்லறிவுதங்கிய நமக்கு தன்னினங்காத்தல் என்னும் வன்மை வாதிருப்பது ஆச்சர்யத்திலும் விசேட ஆச்சர்யமன்றோ! ஆகையால் நம்குலாபிமான சிரேஷ்டர்கள் சோபபித்திரியேல்—என்னும் சுருதிசார மொழியைச் சொற்பனத்திலும்மறவாது தமக்குத்துணையெனக்கொண்டு தன்குலத்தவர்களையும் தன்னை நம்பின இனத்தவர்களையும் தன்குடும்பத்துள்ள சுவஸ்திரீ சகோதர புத்ரர்களையும் நாளுக்கு நாள் நன்னீதியுரைத்து ஆசாரசீர்திருத்த நல்வழியிற் பழக்கி நல்லொழுக்கத்துடன் உருக்மாங்கதனைப்போல் நன்னீதியோடு நாட்டில் வாழ்ந்து நற்புகழோடு இல்லறம் நடத்தி நம் நாதனும் ஸ்ரீவிராட்விஸ்வப்பிர்மமூர்த்தியின் நல்லருளைப் பெறுவார்களென்று நம்புகிறேன்.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி, ஜோதிஷர்,
ஆரியன் சோதிடசாலைத் தலைவர்,
திருவாரூர்.

## குடந்தையில் கான்பரன்ஸ்.

இப்பவும் தங்களைப்போலொத்த மஹான்களெல்லாம் முன்னுக்குவராமல் நமது சுயஜாதி சகோதரர்களுடைய அக்ஞானத்தை போக்கடிப்பதற்கு வரப்போகும். உத்திராயண தைமீ'த்தில் குடந்தையில் அவசியம் தங்களுடைய திரேகசிரமத்தை பாராட்டாமல் வந்து சுமார் ஒருவாரமோ இரண்டுவாரமோதங்கி இவ்விடத்திலேயே வசூல்செய்து ஓர் மஹாநாட்டைகூட்டி காண்பித்தால், பிறகு மறுவருஷமுதற்கொண்டு இதுதான் கான்பரன்ஸ் யென்றும் இன்னவிதமாய் கூட்டுகிறதென்றும் நடத்துகிறவிதமும் தெரியவரும். அப்படிக்கில்லாமல் நாம் சஞ்சிகைவாயிலாகவும் இருந்த இடத்திலேயே யிருந்துகொண்டும் சொல்வதினால் பிரயோஜனப் படாதென்பது தெரிந்தவிஷயமே. அப்படி சஞ்சிகையிலேயெழுதினபோதிலும் பார்ப்பதும் வரவழைப்பதும் எப்பொழுதும் எங்கும் பிறஊர்காரர்களுக்கு மதிப்புண்டு. ஆந்திரதேசத்தில் மாத்திரம் கான்பிரன்ஸ் நடப்பானேன், நம் தமிழ்நாட்டில் நடத்த ஏன் உத்தேசம்கூட கிடையாதென்றால் வழிகாட்டுவாரில்லை. உலகத்திலுள்ள மற்ற எல்லாவருணத்தாருக்கும் மஹாநாடு என்றும் சத்திரம் என்றும் ஸ்கூல் என்றும் பண்டுகள் என்

றும் இருப்பானேன் இவர்களுக்கு மாத்திரம் இல்லாதிருப்பானேன்? அரியபெரிய கக்ஷிகாரியங்களுக்கு மாத்திரம் தூலதூரத்திலிருந்து தங்கள் சொந்தசிலவு செய்துகொண்டு திரேகசௌகரியத்தை பாராட்டாமல் வருவானேன்? என்தெற்கு முந்தக்கூடாது? நமது பெரியவாளாகிய பிரம்மஸ்ரீ மார்க்க சகாய உபாத்தியாயர் அவர்கள் மற்றுமுள்ளவர்களெல்லாம் ஜாதிவிஷயத்திற்காக கங்கணங்கட்டிகொண்டு பாடுபட்டதினாலல்லவா பெரியவிஷயங்களில் தலையிட்டு ஜாதீயதீர்ப்புகள் வாங்கியிருக்கிறார்கள்? அதைபோலவே தங்கள்காலத்தில் காலதேசவர்த்தமானத்தை அனுசரித்து எங்களைப்போலொத்தவர்களை துணைக்கருவியாக வைத்துக்கொண்டு எவ்விதமா யாவது முதலில் கொஞ்சம் சிரமம்நேரிட்டாலும் பாராட்டாமல் நடத்திக்காண்பித்தால் தான் விமோஜனமுண்டாய் தேசம் க்ஷேமமடையும். குடந்தையில் தான் ஏராளமான ஜனங்களிருப்பதால் அதைத்திருத்தினால் பிறகு மற்றவூர்களில் எளிதில் நடைபெறும். அடியில் கனவான்களுக்கும் தெரிவித்திருக்கிறது. இந்த லெட்டரின் மூலமாய் ஏதோ நற்காலம் கிட்டினால் உண்டு. இல்லாவிட்டால் தோஷநிவாரணம் சொல்வதில் பிரயோஜனமில்லை.

ரா. சதாசிவ உபாத்தியாயர்.

1. ஜோவியர் முத்து ஆசாரியார் மீனாக்ஷிபுரம்
2. மௌனகுரு ருத்ரமூர்த்தி ஆசாரியார் பழணி
3. டி. சுந்தரமாசாரியார் மார்க்கயங்கோட்டை
4. டி. எ. முத்துகிஷ்ண ஆசாரியார் திருச்சி
5. கோ. கன்னியப்ப ஆசாரியார் சென்னை
6. ஈ. எஸ். அர்த்தநாரி ஆசாரியார் ஈரோடு
7. S. ஆண்டிசுந்தர ஆசாரியார் சென்னை
8. T. கேசவாசாரியார் சென்னை
9. எம். ஜீவரெத்தின ஆசாரியார் சென்னை
10. டி. எம். மூக்கண்ணாசாரியார் சென்னை
11. C. R. சுப்பராய ஆசாரியார் கோயம்புத்தூர்.

## ஸ்ரீ C. பங்காருப் பத்தர்.

1913ஹு டிசம்பர்மீ 26உ பிற்பகல் 5-மணிக்கு வேலூரில் நிகழ்ந்த சைவசித்தாந்த மகாசமாஜத்தில் நமது குலமணியான ஷை நண்பரவர்கள் உபந்நியசித்தவிடயம் குருபக்தி. பண்டிதர் மலிந்த ஷை மகா சமாஜத்தில் இவர் பிரசங்கமாரி பொழிந்து எல்லோர் மனதையுங் களிக்கச்செய்தனர். இதனால் நம்மவர்கட்கும் ஒருவிதமேன்மை வாய்ந்ததெனக் கருதுவதுகடமையாம்.

குருபக்தி என்பதை இவருக்கு நேமித்தகாரணத்தை யோசிக்கையில், உடம்பினில் உத்தமனைக்காண் எனப்போந்த மகாவாக்கியங்களால் நாம் அறிந்து கொள்ளவேண்டிய விஷயத்திற்கு முதலில் பக்தி அவசியமாதலாலும் தனுகரண புவனபோகங்களைத் தந்தருளும் இறைவனைக் குரவனில்லாமல் காண்பதரிதாதலானும், இவ்வுண்மையைக் குறிப்பிக்க இவர் தோற்றினாரென் பதிற்றட்டில்லை. இதைப் போல நமது குலமணிகளில் இவர்போல் முன்வந்துகளிப்பெய்தச் செய்தாரில்லை. கல்விமான்கள் அநேகர் மூலையில் முடங்கிக் கிடக்கின்றார்களே யொழிய முன் வருவதற்கு அஞ்சுகின்றார்கள். நண்பர் ஸ்ரீ. பங்காருபத்தரவர்கள் புதுச்சேரியில் வசிப்பவராக இருந்தும், நமக்கு எதிர் நேரிடாதிருந்தது நமது புண்ணியக்குறைவென்றேற்படுகின்றது. ஆனால், அவரை வேண்டிக்கொள்வதொன்றுண்டு. இப்பாதகண்டமே யல்லாமல் இதாகண்டங்களிலும் உலாவிவரும் நமது விஸ்வகர்மன் பத்திரிகைக்கு விஷயதானகர்த்தராக வேணுமென்றும், ஆங்காங்கு சென்று நம் குலஜனங்களுக்குரியன வெல்லாம் போதித்து நம்குலத்திற்கு ஓர் சுடர் விளக்காய்நின்று அவ்வப்போது நிகழும் விஷயமுதலானதுகளை நம் பத்திரிகையில் வருவித்து மகிழ்ச்சி செய்யவும் கவனப்படுத்தினேன். சுபம்.

தி. குருசாமி ஆச்சாரி,
அரக்கோணவாசி.

OFFICE OF THE REG[illegible] 1? AUG 1914 MADRAS

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் I] 1914ஹு மார்ச்சுமீ [சஞ்சிகை 6

## ஒளிவளர் விளக்கு

சென்ற பிப்ரவரிமீ 18உ யோடு முடிந்த தொருமாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களுடைய மொத்த எண்ணிக்கை 535. இத்தனைபேர்கள் நமது வாசகசாலையின் பயனையும் மற்ற பிரயோசனங்களையும் பெற்றது எவ்வளவு சிலாக்யம்!

* * *

" முன், தேவ சிற்பியர்களாலும் மானுஷ சிற்பியர்களாலும் அநேகமான அற்புத விசித்திர சூக்ஷ்ம யந்திர தந்திர கருவி காணுதிகளமைந்த கோட்டை கொத்தளம் விமானம் ரதமுதலிய வாகனங்கள் பட்டணங்கள் நிர்மாணஞ் செய்ததானது சிற்ப சாஸ்திரப் பிரகாரமே செய்திருக்கிறதென்று நிரூபிப்பதற்காக, இராமாயணம், பாரதம், ஸ்காந்தம், பாகவத முதலிய அநேக சாஸ்திரங்களி லிருந்து வசனங்களைக் கோர்வைசெய்து சிற்ப சாஸ்திரோக்த பூர்வீக யந்திர தந்திர சூழ்ச்சிகள்" என்ற பெயருடன் சிற்ப சாஸ்திரப் பிரவீணரும், சமஸ்கிருத பாஷா வல்லவரும், ஜோஸ்ய மகா பண்டிதருமாகிய [illegible] கோவில் ஸ்ரீ A. முத்து ஆச்சாரியாரவர்கள் தாம் ஒருநூல் செய்துவருவதாகத் தெரிவிப்பதுடன், அதை நாம் பிரசுரிக்கவேண்டுமென்று ஆக்ஞாபிக்கிறார்கள். "விஸ்வகர்மரே ஆச்சார்ய ஜாதியார்" என்னும் மகுடத்துடன் ஷை பண்டிதரவர்கள் எழுதிவந்த விஷயத்தை இன்னும் பெருக்கி, சிலாதாம்பிர சாஸனாதாரங்களையும் சங்கராசார்ய சுவாமிகளாதியோருடைய வசனாதாரங்கள் முதலியவற்றையுஞ் சேர்த்து புத்தகரூபமாக்கித்தந்து, அதையும் நாமே பிரசுரிக்கச்செய்து அதனால் கிடைக்கும் பொருளை நமது சபையாரே யநுபவிக்கச் செய்வதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். கைம்மாறு கருதாத இப்புண்ணியருடைய குலாபிமானப் பெருமையை என்னென்றேத்துவோம்!

* * *

ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் வழக்கமாய் நமது சபாமண்டபத்தில் காலக்ஷேபங்கள் நடந்து கொண்டிருக்க, கடந்த பிப்ரவரிமீ 8உ யன்று, புராதீனமாய் நமக்கேற்பட்டுள்ளதாகிய ஆச்சாரிப் பட்டத்தை நம்மினின்றும் பெயர்த்து, 'ஆஸாரி' யென்னுமொரு விகாரத்தை நம்மீது சுமத்துவதைக் கண்டித்து முறையிடும்பொருட்டாக, சென்னைவாசிகளாயுள்ள விஸ்வகர்மகுலத்தார்களுடைய மகாஜனக்கூட்டமொன்று நடை பெற்றது. இதற்குச் சென்னை

யின் பலபேட்டைவாசிகளும் பெருந்திரளாய் வந்ததோடு, அரக்கோணத்தி லிருந்து ஸ்ரீ தி. குருசாமி ஆச்சாரியார் முதலிய சிலபேர்களும், செங்கற்பட்டிலிருந்து ஸ்ரீ க. அருணசலாச்சாரியா ராதியாய சிலரும், சைதாப்பேட்டையிலிருந்து ஸ்ரீ K. C. கன்னியப்ப ஆச்சாரியாரும், மற்றும் வெளியூர்களிலிருந்து சிலபேர்களுங்கூட விஜயமாயிருந்தார்கள். கவர்னர்துரையவர்களுக் கனுப்பப்படவேண்டியதென்று அச்சமயத்துச் செய்யப்பட்ட தீர்மானத்தை மற்ருரிடத்துப் பிரசுரித்திருக்கிறோம். அதைப் பிரேரேபித்தவர் சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் பிரதம ஆந்திர பண்டிதரும், பலகிரந்த கர்த்தரும், ஆருஷேய சிகாமணியுமாகிய ஸ்ரீ அகுிந்தல வேங்கட நரசிம்ஹம் பந்துலு அவர்கள்; ஆமோதித்தவர் ஸ்ரீ எதுமலை. கே. அரங்கநாத ஆச்சாரியாரவர்கள்; ஆதரித்தவர் ஸ்ரீ காயிரம்பேடு திருவேங்கட ஆச்சாரியாரவர்கள். சபையாரெல்லோரும் ஏகமனதாய் அங்கீகரித்தார்கள்.

*
* *

திருச்சிராப்பள்ளி ஸ்ரீ T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியார், ஸ்ரீ K. பழனிவேலு ஆச்சாரியார், ஸ்ரீ R. P. கோவிந்தசாமி ஆச்சாரியார் இவர்களும், திருநெல்வேலி ஸ்ரீ T. [illegible] ஆச்சாரியாரும், [illegible] யாழ்ப்பாணம் ஸ்ரீ வ. சிதம்பரநா[illegible]ரும், அரக்கோணம் ஸ்ரீ தி. குருசாமி ஆச்[சா]ரியாரும், நமது பத்திரிகையைக் குல ஜனங்களெல்லாம் பெற்றுப் பயனடையச் செய்வதில் மிக வூக்கங்காட்டி நடந்தருள்வதற்காக இவர்கள்பால் நாம் மிகவும் நன்றியடைத லுடையவர்களாயிருக்கிறோம். நமது பத்திரிகையில் வெளிவரும் விஷயங்களிற் பெரும்பான்மையானவை குலோத்தாரணத்திற் கநுகுணமானவையாயிருப்பதினுல், இவற்றைச் சுஜாதியார் ஒவ்வொருவரும் வாசித்தால்தான், இப்பத்திரிகையின் பயன் சித்திக்கும். எவரெவர் இதை வாசித்து வருகிறார்களோ அவர்கள் குலசம்பந்தமான விஷயங்களை நன்கறிந்தவராய் நாகரிகக்கொள்கைகளைக் கைப்பற்றி சீர்திருந்திச் செம்மையடைதல் சித்தாந்தம். அவ்விதம் வாசிப்போருடைய தொகை எவ்வளவு அதிகப்படுகிறதோ அவ்வளவுக் கேற்றபடியே சுஜாதிப் பிரயத்தினங்கள் கைகூடுமென்பதுந் திண்ணம். நமது பத்திரிகையின் அபிவிருத்திக்குத் துணைசெய்பவரெல்லாம்குலாபிவிருத்திக்குத் துணைசெய்பவரே யாவர். எப்படியென்றால், குலாபிவிருத்தி சாதனங்களின்னவை யென்றும், அவற்றைக் கைப்பற்றவேண்டிய திவ்விதமென்றுங் காட்டுவதே இப்பத்திரிகையின் நோக்கமாயிருப்பதினுல், இதை வாசிப்போ ரொவ்வொருவரும் குலாபிவிருத்தியில் சிந்தைகொண்டுழைக்கத் தலைப்படுவாரென்பதற்குத் தடையேயில்லை. இவ்வுண்மையைக் குலாபிமானிகள் கண்டுகொண்டு, நமதுபத்திரிகையால் நம்மவர்களெல்லாம் நலம் பெறுவதில் நாட்டம் வைத்தருள்வரென்று நம்புகிறோம்.

*
* *

"சிற்பிகள் சிறப்பு" என்னும் மகுடத்தின் கீழ் சென்றமாதச் சஞ்சிகையில் வெளிவந்த விஷயத்தை யநுசரித்து ஒரு ஸ்தபதி இவ்வாறெழுதுகிறார்:—"நமது ஜாதியார்க்கு இப்போது ஒரு சிற்ப கலாசாலை அவசியமாய் வேண்டப்பட்டிருக்கிறது. இது தென்னுட்டில் ஸ்தாபிக்கப்பட்டால் மிகவும் பயன் தரும். சமஸ்கிருத பாண்டித்தியமும் சிற்ப சாஸ்திரப் பிரவீணமும் காசாதன வல்லமையுங் கொண்டுள்ள உத்தமரை இக்கலாசாலைக்கு உபாத்தியாயர்களாக்கிச் சமஸ்கிருதமும் சிற்ப சாஸ்திரமும் காசாதனங்களுங் கற்பிக்கச் செய்யவேண்டும். நாட்டுக்கோட்டைச் செட்டிகளால் புதுக்கப்பட்டு வரும் பெரிய கோயில்களி[illegible]ன்றைச் சார்ந்து இக்கலாசாலை ஸ்தாபிக்கப்படலாம். [illegible] மாலைகளில் பாடங் கற்பிக்கப்பட்டால் மத்தியான[illegible] மாணவர்கள் வேலை செய்யலாம். இவ்வித முயற்சிக்கு நாட்டுக்கோட்டைச் செட்டிகள் சகாயஞ் செய்வார்களென்பதில் சந்தேகமேயில்லை, ஏனென்றால், அவர்கள் சதா சிற்பிகளுடைய சகாயங் கோரியிருக்க வேண்டியவர்களாயுளர். இப்போதோ தக்க திறமையாளர்களைக் காண்பது கஷ்டமாயிருப்பதினுல், சிற்பிகளின் குறைவு நாட்டுக்கோட்டையாருக்குத் தான் நன்ருய்ப் புலப்பட்டிருக்கிறது. அக்குறைவை நிறைவாக்குவதினுல் அவர்களுடைய ஆலயத்திருப்பணி கைங்கரியத்திற்கு மிக்க சாதனமுண்டாகுமாதலினுல், கட்டாயமாகச் சிற்பகலாசாலை ஸ்தாபன காரியத்திற்கு அவர்கள் துணைசெய்வார்கள்."—இவ்வபிப்பிராயம் வெளியிட்ட ஸ்தபதியவர்களுக்கு நாம் மிக வந்தனமுடையவர்களா யிருக்கிறோம்.



மற்ற ஸ்தபதிகள் குலாபிமானிகள் முதலானவர்கள் சிற்ப கலாசாலையின் அமைப்பையும், அதிலாசிரியராயிருக்கத் தக்கவரையும், அதை நடத்தும் வகையாதியவற்றையும் பற்றிய தத்தமபிப்பிராயங்களை வெளியிட வேண்டுகிறோம்.

*
* *

ஜாதீயக் கொண்டாட்டங்கள் இதுவரையிலும் நம்மவர்களுக்கேற்படாதிருப்பது பெருங்குறையேயாம். ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் இவை இருக்கவேண்டியது அத்தியாவசியம். அப்போதுதான் ஒற்றுமை யுணர்ச்சிகள் பலப்பட்டு, அக்கூட்டத்தார் உயர்வடைதற்கான சாதனங்களேற்படும். மதவாதிகள் தங்கள் தங்கள் மதோத்தாரணர்களைக் கொண்டாடுவதும் இக்கருத்துபற்றியே. சைவ வைணவர்கள் தங்கள் நாயன்மார்கள் ஆழ்வாராதிகளுடைய திருநக்ஷத்திரங்களைக் கொண்டாடும் ஆசாரணை இங்ஙனமேற்பட்டதேயாகும். நாமும் அவ்வித ஆசாரணைகொண்டு வாழ்தல் நல்லது. ஸ்ரீ மார்க்கசகாய ஆச்சாரியாருடைய திருநாமம் நமது வம்ஸத்துக் குடும்பங்கள்தோறும் சொல்லிக்கொள்ளப்பட்டு வருதல் எல்லோருக்குந் தெரியும். இவருடைய ஞாபகம் நம்மைவிட் டகலாதென்பது நிச்சயமே யானுலும், தனியாக வருஷத்திலொருநாள் இவரைப்பற்றிக் கொண்டாடிவரத் தலைப்படுவோமானுல் நம்மவர்களுக்குள் ஜாதீய உணர்ச்சி மிகுதியாயுண்டாதலும், குலாபிமானம் பெருகுதலும், பொதுநலங் கைகூடுதலுஞ் சத்தியம். மற்று, ஆச்சாரிப் பட்டத்திற் காபத்துண்டாக்கிய அரசாங்க ஆர்டர் பிறந்த ஜூன்மீ 26உயும் நமது ஜாதி முயக்கத்திற் கானதொரு திருநாளாகும். அந்நாளை வருஷந்தோறுங் கொண்டாடத் தலைப்பட்டால், அரசாங்க பாஷை யறியாக் கொடுமையால் நமக்குநேருந் துன்பங்களும், நமது பலக்குறைவும், பிறர் நம்பாற் காட்டுந் தன்மையும், கல்வியற்று செல்வமற்று துணையற்றுநிற்கும் நமது தௌர்ப்பாக்கிய நிலைமையுங் கண்ணுரக் கண்டு, அறிவு வாப்பெற்று ஒன்றுகூடி யுழைக்கத் தூண்டுதலுற்றுப், பிறர்கொடுமைகளைத் தவிர்த்துச் சீர் திருந்தி வாழ்ந்துயர்தல் இசையும். ஜாதீயவுணர்ச்சி சாதகமான இவ்விதக் கொண்டாட்டங்கள் பலவற்றை நாம் சீக்கிரமே கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறோம்.

*
* *

நாளது ஜூலை மாதத்தில் வித்தியார்த்திகளுக்குப் புதுவருஷம் ஆரம்பமாகிறது. அப்போது மேல் வகுப்புகளுக்குச் செல்லவேண்டியவர்களிற் சிலர் தரித்திரக்கொடுமையால் தமது வாசிப்பைக் கைவிடவேண்டியவர்களாவர். நல்ல புத்திகூர்மையும், வாசிப்பில் அவாவுமுடையவர்கள் பலர் பணமில்லாக் கொடுமையால் படிப்பையொழித்ததை நாமறிவோம். இத்தகையோர்க்குச் சகாயஞ் செய்தால் நாளடைவில் படித்துத்தேறிப் பெரும்பதவிகள் வகித்துக் குலமணிகளாய் விளங்கி, ஜாதியாரின் நிலைமையை உயர்த்துவார்களென்பது நிச்சயம். அவ்வித சகாயமேற்படாத குறையினுல், நன்மணம் வீசி நாட்டினருடைய நாட்டத்தை ஈர்த்துத் தங் குலப்பெருமையை நாட்டிவைக்கக்கூடிய பூங்கொடிகள் பல, ஓங்கிவளர்ந்து மலர்வதற்கில்லாது வாடி வதங்கிவரண்டுபோகலாயின. இந்நிலைமைக்கு உத்திரவாதிகள் நமது குலத்தலைவர்களே யாவர். இப்பழி அவர்களையே சாரும். ஆருஷேயர்கள் வாசித்து விருத்திபெறுவதற்குக் காரணம் அவர்களுக்கேற்பட்டிருக்குஞ் சகாயபலமேயாகும். நம்மவர்கள் கல்வியில்லாது கடைப்பட்டிருப்பதற்குக் காரணம் அவ்வித சகாய மேற்படாமையேயன்றோ? உத்தியோகபதவிகளி லிருக்கும் ஒவ்வொரு 'பிராம்மணரும்' தமக்கு நேர்பட்ட சுஜாதிமாணவர்களுடைய வித்தியாபிவிருத்திக்கு வேண்டிய சகாயஞ் செய்கின்றனர். இதற்கென்று அங்கங்கு நிதிகளேற்பட்டிருக்கின்றன. சென்னை மயிலாப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஏழைப்பிள்ளைகள் நிதி (Poor Boys' Fund) யினின்று இவர்கள் விசேஷமாய்ச் சகாயம் பெறுகிறார்கள். இப்படியே மற்ற ஜாதிகளுக்கு மேற்பட்டிருக்கிறது. வன்னிவம்ஸச் சிறுவர்களுடைய பாடசாலைச் சம்பளத்திற்கென்று பி. டி. வி. செங்கல்வராய நாயகருடைய தருமச் சொத்தினின்றும் மாதவாரி ரூபா 100 கொடுக்கப்படுகிறது. ஆற்காட்டு முதலியார்களும் ஐதாபாத் முதலியார்களும் இவ்விதநிதிக ளேற்படுத்தியிருக்கிறார்கள். கோமுட்டிகள் முதலானோர்க்கும் வித்யாநிதிகளுள. நமக்கோ அங்ஙனமொன்றுங் கிடையாது. நமது சபைக்குக் குலஜனுதாவு அதிகமா யேற்பட்டால் வித்தியார்த்திகளுக்குச் சகாயஞ் செய்தல் இயலும். சென்ற வருஷத்தில் சகாயங்கோரிய ஆரும் வகுப்பு (6th form) மாணவர்க ளிருவரி லொருவனுக்குச் சபையி

னின்றும் மற்றவனுக்குப் பிரத்தியேகமாகவுந் துணை செயலாயிற்று. மேல் வருஷத்திற் சகாயங் கோரியவர்களாய்ச் சிலரிருக்கின்றார்கள். இவர்களை யாதரித்தல் குலக்கடமையா யிருக்கிறது. ஆதலால், இக்காரிய மொன்றிலேயே விநியோகிக்கப் படக்கூடியதாய் விஸ்வகர்மச் சிறுவர் வித்தியாநிதி யொன்று வெகு சீக்கிரத்திலேயே ஆரம்பிக்கப்பட வேண்டியது அத்தியாவஸ்யமாயிருக்கிறது.

---

## குடந்தையில் கான்பரன்ஸ்

கும்பகோணவாசியும் குலாபிமான மிக்கவருமாகிய ஸ்ரீ ரா. சதாசிவ உபாத்தியாயரவர்கள், ஷை யூரில் நம்மவர்களுடைய ஜாதிக் கான்பரன்ஸ் (மகாஜனக் கூட்டம்) நடத்தவேண்டுமென்று வைராக்கியங் கொண்டிருப்பது நமது ஜாதியின் முன்னேற்றத்திற்கோர் பெருஞ்சாதனமே யெனவேண்டும். உபாத்தியாயரவர்கள் நேற்றின்றாகக் குலாபிமானங் கொண்டிருப்பவரல்ல. வீணாகத் தமது பெயரை முந்தச்செய்பவருமல்ல. இப்படிப்பட்டவர் கான்பரன்ஸ் விஷயமாய்ப் பலருக்கு மெழுதியிருப்பது மிக விசேஷ காரியமே யாகும். இவர் பெருமை யிப்படியிருக்க, இவர் மனங்கொண்டகாரியமோ வெகு சிலாக்யமானது. இக்காரியத்தினால் நம்மவர்களுக்குள் குலாபிமானம் பெருகுதலும், நமது குறைகள்பல தீருதலும், நமக்குள் ஒற்றுமையேற்படுதலும், பிறஜாதியாருடைய மதிப்பு சித்தித்தலுமாகிய பலவித பிரயோசனங்களுண்டாகும். ஆதலால், இஃது அவசியம் கவனிக்கப்படவே வேண்டும். அன்றேல், உபாத்தியாயரவர்கள் இதில் தமது நாட்டத்தைச் செலுத்தியிருக்கவே மாட்டார்கள். குடந்தை நகர்க் குணவான்களும் இவரைத் தூண்டியிருக்க மாட்டார்கள். எனவே, இவர்களுடைய கருத்தை ஈடேற்றுவிப்பதே குலாபிமானிகள் கடமையா யிருக்கிறது. இதற்குத் துணைசெய்வார் ஒவ்வொருவரும் ஜாதியீடேற்றத்திற்குத் துணைசெய்யுங் குலோபகாரிகளாவர். அன்றியும், தற்சமயத்தில் நம்மவர்களெல்லாம் ஒன்று திரண்டு பேசவேண்டிய அவஸ்யம் நேரிட்டிருக்கிறது. ஆச்சாரிப் பட்டத்திற்கு நேர்ந்த ஆபத்தே ஷை அவஸ்யமாகும். இப்போது குடந்தையார்கள் கான்பரன்ஸ் கூட்ட முன்வந்துளராயின், அவரைத் தழுவிச் சந்தோஷமுடன் சகாயம்புரிந்து கான்பரன்ஸ் நடப்பித்துக் கண்குளிர்ந்து கண்யம் பெறுவதன்றோ குலோபகாரமாகும்?

நம்மவர்களுடைய நிலைமையைப்பற்றி எத்தனையோ குறைகள் சொல்லலாம். அவற்றையே பாராட்டிப் பேசிக் காலங்கழிப்பது சிலாக்யமாகாது. எந்த ஜனசமூகத்திலு மிவ்வித குறைகளிருக்கின்றன. ஒவ்வொரு ஜாதியாரும், மதத்தினரும், தேசத்தினரும் கான்பரன்ஸ்கள் கூட்டுவதின்முன் நாமிருக்கும் நிலையிலேதானிருந்தார்கள். இன்னும் பல அசௌகரியங்களோடிருந்தார்களென்றுஞ் சொல்லலாம். அவர்களெல்லாம் பிரயாசையெடுத்துக் கான்பரன்ஸ்கள் நடத்த ஆரம்பிக்கவில்லையா? அக்கான்பரன்ஸ்கள் ஜெயப்பிரதமாய் நடைபெற்று அவரவர்களுக்குப் பெருமை யுண்டாக்கவில்லையா? இவற்றையெல்லாம் நாம் கண்கூடாக் கண்டிருந்தும் என் அதைரியப்படவேண்டும்? கான்பரன்ஸ் நடத்தியே தீருவோமென்று சரியாகப் பிரயத்தினப்பட்டுழைப்போமாகில் ஈஸ்வரானுக்கிரகத்தால் நமக்கு வெற்றியுண்டாகு மென்பதில் சற்றேனுஞ் சந்தேகமேயில்லை. குலமுழுவதிற்குஞ் சம்பந்தப்பட்ட இக்காரியத்தில் சிறு கக்ஷி பேதங்களைப் பாராட்டாது கலந்துழைப்பதே கௌரவ குணமாகும். இக்குணத்தோடு குடந்தைவாசிகள் நடப்பார்களென்று நம்பியிருக்கலாம். இவ்வளவு பெருந்தகைமை காட்டி இவர்கள் நடந்துகொள்வார்களேயானால் உலகமுள்ளளவும் இவர்கள் பெருமை நிலைபெறும். ஸ்ரீ மார்க்க சகாய ஆச்சாரியார் திருநாம நிலைபேறே இதற்குச் சாக்ஷி! முதன் முதல் தென்னாட்டில் நம்மவர்களுக்குள் கான்பரன்ஸ் கூட்டி வைத்த கனக்கியாதியும் புண்ணியமும் இவர்களுடையதாகும். இவர்களே மற்றவர்களுக்கும் இம்முயற்சியில் வழிகாட்டிகளாவர்.

இனி, குடந்தையில் கான்பரன்ஸ் நடத்துவதென்றால், அதைக் குடந்தைநகருடையதுமட்டுமே யாக்கலாகாது. குடந்தை நகரைக் கொண்டுள்ளதாகிய தஞ்சை ஜில்லாவினுடையதாக்கவேண்டும். அப்போதுதான் கான்பரன்ஸ் பலமுற்றுச் சுகமாய் நடைபெறும். பலபேர் அதில் சிரத்தை வைத்துப் பாடுபடுவார்கள். குறைவின்றி நிறைவுபெறும். தஞ்சை ஜில்லாவோ வென்றால் தமிழ் ஜில்லாக்களிலெல்லாம் அதிக ஜனத்தொகையுடையது. இதற்குப் பிறகே தென்னாற்காடு, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, வடஆற்காடு, மதுரை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், செங்கற்பட்டு, சித்தூர் என்னுஞ் ஜில்லாக்கள் வருகின்றன. ஆதலால், நம்மவர்களில் முதன் முதற் கான்பரன்ஸ் கூட்டுவதற்குத் தஞ்சை ஜில்லா முன்வருவது நியாயமே யாகும். இந்த ஜில்லா, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், பட்டுக்கோட்டை, நாகப்பட்டணம், நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, பாபநாசம், சீர்காழி, அறந்தாங்கி யென்னும் பதினொரு தாலுக்காக்களைக் கொண்டுள்ளது. ஷை வரிசை ஜனசங்கையின் தொகையை யநுசரித்து, அதிகமுள்ளதை முதலிலும் கொஞ்சமுள்ளதைக் கடைசியிலும் வைத்தெழுதப்பட்டது. இத்தனைத் தாலூக்காக்களில் வாசஞ் செய்வோரும் தாமெல்லாம் ஓரே ஜில்லாக்காரரென்னும் ஒற்றுணர்ச்சி பாராட்டுவதற்கேற்ற சமயம் இப்போதுதான் வாய்த்திருக்கிறது.

கான்பரன்ஸ் நடத்துவதற்கு முதலாவது ஒரு கமிட்டி யேற்படவேண்டும். இந்தக் கமிட்டியில் ஒவ்வொரு தாலுக்காவுக்கும் பிரதிநிதியாயிருக்கும்படி ஒரிருவரைச் சேர்க்கவேண்டும். குடந்தையில் அது நடைபெற வேண்டியதாயிருப்பதால், அவ்வூர்ப் பிரதிநிதிகள் அதிகமிருக்கவேண்டும். மற்ற விஷயங்களில் பேதப்பட்ட கக்ஷிகளிருக்குமாயின் ஒவ்வொரு கக்ஷிக்கும் பிரதிநிதிகளிருக்கவேண்டும். அப்போதுதான் சர்வஜனப்பிரியமாய் கான்பரஸ் காரியம் நடைபெறும். கமிட்டியில்லாது தனித்து நடத்துவதாயின் எக்காரியமேயாயினும் ஜனநம்பிக்கைக்குப் பாத்திரமாயிராது, ஜனாதரவைப்பெறுதலுங் கஷ்டமே! இவ்வாறு கமிட்டி யேற்படுத்துதல் குடந்தையாரின் பொறுப்பேயாகும். உபாத்தியாயரவர்களோ அன்றி மற்றெவரோ முன்னின்று பலரபிப்பிராயத்திற்கிணங்க ஷை கமிட்டியை யமைக்க வேண்டும். பிறகு, கான்பரன்ஸிற்கான ஏற்பாடுகளைத் தொடங்க வேண்டும். கான்பரன்ஸ் நடத்து முத்தேசத்தைத் தஞ்சை ஜில்லா வாசிகளாயிருக்கும் விஸ்வகர்மகுல மக்களுக்கெல்லாம் தெரியச்செய்து, அவர்களினின்றும் உபசரணைக் கமிட்டியார்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். இவ்வுபசரணைக் கமிட்டியார்களே கான்பரன்ஸிற்குச் சொந்தக்காரர்களும் அதைக்குறைவற நடத்துவிக்கவேண்டியவர்களுமாவர். இக்கமிட்டியில் எத்தனையோனாலுஞ் சேரலாம். இதன் பலம் எவ்வளவதிகரிக்கிறதோ அவ்வளவுங் கான்பரன்ஸ் பலமதிகரிக்கிற தென்னலாம். ஏனெனில், கான்பரன்ஸ் செலவுகளெல்லாம் இவர்களுடையனவேயாகும்.

உபசரணைக் கமிட்டியிற் சேருவோர்க்குக் குறைந்தபக்ஷம் ரூபா ஐந்து கட்டணம் விதிக்கலாம். இருநூறுபேர் சேர்ந்தாலும் ஆயிரரூபாய் வசூலாய்விடும். இச்சிறுதொகையைக் கொடுத்து, உபசரணைக் கமிட்டியார் என்னுங் கௌரவத்தைப் பெறுதற்கு ஆயிரம் பேரானாலும் இப்பெரிய ஜில்லாவிற் கிடைப்பது கஷ்டமல்லவென்றாலும் மிகக் குறைந்ததொகையே இங்கெடுத்துக் கொள்ளப்பட்டது. ஆதலால், ஓராயிர ரூபாய் வசூலாதல் ஒரு பெருங்காரியமல்ல. ஆனால், வசூல் முறை கிரமமானதாயிருக்கவேண்டும். அவ்வத் தாலுக்காப் பிரதிநிதிகள் தத்தந் தாலுக்காவில் உபசரணைக் கமிட்டியார்களைத் தேடுவதிலும், அவர்கள் கட்டணங்களைப் பெற்றுக் கான்பரன்ஸ் தலைவர்களுக் கனுப்புவதிலும் ஊக்கங்காட்டவேண்டும். வருமான வழிகள் வேறு மிருக்கின்றன. அங்கங்குள்ள சுஜாதிச் சபைகளின் பிரதிநிதிகளாய் வருவோர்க்கு ஒரு ரூபாயோ அல்லது அதிகமோ கட்டணமாக விதிக்கலாம். கான்பரன்சுக்கு விஜயஞ் செய்வோர்கள் ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணஞ் செலுத்தச்செய்தல் இப்போதடாது. கிருஷ்ண குண்டூர் மண்டல விஸ்வப்பிராம்மண மகாஜன சபையாரும் முதல் நாலைந்து வருஷங்களில் பிரவேசக்கட்டணம் விதிக்காமல் பிறகு தான் விதிக்கத் தலைப்பட்டார்கள். எப்படியும், உபசரணைக் கமிட்டி வசூலே முக்கியப் பொருளாதாரவாகும். தாலுக்கா வொன்றிற்குப் பதினைந்து மெம்பர்களாகச் சராசரியிற் கொண்டால் 165 மெம்பர்களாகின்றனர். கும்பகோணவாசிகள் குறைந்தபக்ஷம் 50 பேர்களாவதிருப்பார்களல்லவா? ஆதலால், மொத்தத்தில் இவர்கள் தொகை 200-க்குக் குறைவுபடாது; வசூலும் ஓராயிர ரூபாய்க்குக் குறையாது.

இவ்வளவுஞ் செலவுக்கு வேண்டியிருக்குமென்று தோன்றவில்லை. என்றாலும், கையிருப்பிலிருப்பது நன்று. கான்பரன்ஸ் எங்குஞ் சகசமாய் மூன்று நாட்கள் நடந்தபோதிலும் குடந்தைக்கான்பரன்ஸை முதலில் இரண்டு நாட்களே வைத்துக்கொள்ளலாம். இதனாற் செலவு குறைவதே யல்லாமல் வேறு நன்மை

களுமேற்படும். விஜயஞ் செய்வோர்க்கெல்லாம் இருதினங்களும் அன்னமளிக்க வேண்டும். உபந்நியாசஞ்செய்வதற்காகச் சிலருக்கு ரயில் சார்ஜ் கொடுத்து வரவழைக்கவும் நேரிடலாம். சாப்பாடளிப்பதோடு அவர்களுக்கு விடுதிகள் அமைக்க வேண்டும். குடந்தை பெருநகராயிருப்பதாலும், அங்கு பல சத்திரங்களிருப்பதுடன் நம்மவர்கள் வீடுகளும் ஏராளமாயிருப்பதினாலும் இடசௌகரியஞ் செய்வதில் சங்கடமொன்றுமேற்படமாட்டாது. இனி, பந்தல் செலவு, காகிதச் செலவு, அச்சுச் செலவு, தபாற் செலவு முதலியவையுமேற்படும். ஓரிருவர் இது சம்பந்தமாய் ஜில்லா முழுவதுஞ் சுற்றுப் பிரயாணஞ் செய்யவேண்டி வருமாதலால் ரயில் செலவு மேற்படலாம். மேற்குறிப்பிட்ட தொகை இச்செலவுகளுக்கெல்லாங் கட்டிவருமென்றே தோன்றுகிறது. மற்ற ஜில்லாக்களிலிருந்து ஜனங்கள் விசேஷமாய் வருவார்களென்றெண்ணுவதற்கிடமில்லை. போஜனாதி வசதிகள் 500, 600 பேர்களுக்கதிகமாய்ச் செய்யப்படவேண்டியதிராதென்றே தோன்றுகிறது.

மற்று, கான்பரன்ஸில் தீர்மானித்தற்குரிய விஷயங்கள் யாவையென்பதையும், தீர்மானங்கள் இன்னவிதமமைக்கப்படவேண்டுமென்பதையும்பற்றி நிர்ணயிக்க வேண்டியவர்கள், கான்பரன்ஸின் (சப்ஜெக்ட்ஸ் கமிட்டி) விஷபாலோசனைச் சங்கத்தாரேயாவர். இச்சங்கம் பெரும்பாலும் கான்பரன்ஸிற்கு விஜயஞ் செய்யும் சுஜாதிச்சபைப் பிரதிநிதிகளைக் கொண்டதாயிருக்கும். என்றாலும், முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டிய விஷயங்களை மட்டுமேனும் இங்கு குறிப்பிடலாம். கவர்ன்மெண்டுக்கு முறையிடவேண்டியவற்றுள் ஆச்சாரிப்பட்ட மாறுதல் முதன்மையானது. நம்மவர்களுடைய கல்வி கைத்தொழிலிவற்றி னபிவிருத்திக்கு அரசாங்கத்தார் பிரத்தியேக அநுகூலங்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். பிறஜாதி தூஷணையைக் கொஞ்சமேனுங் கைக்கொள்ளலாகாதென்றும், ஜாதியேற்றத் தாழ்வுகளில் சிந்தனை புகுத்தி மற்றவர்களுடன் சண்டைபிடிக்கலாகாதென்றும் நம்மவர்கள் நன்றாயுணர்ந்தொழுகும்படி ஒரு தீர்மானஞ்செய்தல் அத்தியாவஸ்யமாயிருக்கிறது; சுஜாதியார்கள் தம்மக்களொவ்வொருவருக்கும் ஆண்பாலாயினும் பெண்பாலாயினும் கட்டாயமாய்க் கல்வி கற்பிக்க வேண்டியது பெற்றோர் கடனாக்கொண்டு வாழவேண்டும்; உயர்தரக்கல்விக்குதவி செய்யும்பொருட்டு ஒரு நிதி சேர்க்கப்படவேண்டும்; கைத்தொழில்களில் விசேஷதிறமை பெற்றுவருமாறு தக்க மாணவர்களை பம்பாய், அலகாபாத் முதலிய விடங்களுக்கும், ஜப்பான், ஜெர்மனி அமெரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு மனுப்பப் பிரயத்தினப்படவேண்டும்; சுபாசுபகாலங்களில் அளவுக்குமிஞ்சி அதிகச்செலவுசெய்து கடன்பட்டுத் துன்பமுறாவண்ணஞ் செலவுகளைக் குறைக்கவேண்டும்; சுஜாதிப் பௌரோகிதர்களிடமன்றி மற்றவர்களிடத்தில் நம்மவர்கள் சுபாசுப காரியங்களை நடத்திக்கொள்ளாது எங்கெங்குஞ் சுஜாதிப் பௌரோகிதர்களை நிரப்புமாறு தக்கதோரிடத்தில் பௌரோகித பாடசாலை ஸ்தாபித்து, அதில் பல ஊரார்களும் வந்து வாசித்துத் தேர்ச்சி பெற்றுப் பௌரோகிதர்களாய் ஊரூர்கள்தோறும் குடியேறச் செய்யவேண்டும்; நாட்டாண்மைக்காரர், காரியஸ்தர் முதலானவர்கள் இனிப் பரம்பரை பாத்தியதை கொண்டாடாமல் எலக்ஷன் மூலமாய்த் தெரிந்தெடுக்கப்படவேண்டும்—என்பதாதி விஷயங்கள் நம்மவர்கள் கவனத்திலழுத்தமாயூன்றும்படித் தீர்மானங்கள் செய்யப்படவேண்டும்.

உபந்நியாசகர்களைத் தேடுவதில் யாதொரு கஷ்டமேற்படாதென்றே சொல்லலாம். எழுதத்தெரியாதவர்கள் எழுதுவோர் கிடைப்பதருமையென்றும், படிக்கத்தெரியாதவர்கள் படித்தவர்களே உலகிலில்லையென்றும், பேசத்தெரியாதவர்கள் பேசக்கூடியவர்கள் கிடையாதென்றுஞ்சொல்வது சகசமேயானாலும், அவ்வறியார் மொழிகளால் அதைரியப்பட்டிருக்கவேண்டிய அவஸ்யமொன்றுமில்லை. 15, 20 பேர்களுக்கதிகமாக உபந்நியாசகர்கள் வேண்டியிரார். இத்தனைபேர்களுமா நம்முள் இல்லாமற் போயினர்? இல்லையெனச் சொல்லுதல் நங்குலத்தை யிழிவுபடுத்தலாகுமேயன்றி மற்றில்லை. எவ்வளவு குறைந்தாலும் 30 பேர்களையேனும் நம்மவர்களிற் றெரிந்தெடுக்கலாம். அன்றியும், மற்ற ஜாதியார்களையும் உபந்நியாசகர்களாய்க் கொள்ளலாம். இங்ஙனங் கொள்ளுதல் கான்பரன்ஸின் சிறப்பிலக்கணமாவதுடன், மற்ற ஜாதியார்களோடு நமக்குப் பரஸ்பர அந்நியோந்ய முண்டாதலும், அவர்கள் சகாய பலம் நமக்கேற்படுதலும், நாம் வழிவிலகிப் போகாது நிற்றலுமாகிய பல நன்மைகளுண்டாதல் சாத்தியமாகிறது. எனவே, உபந்நியாசகர்கள் விஷயம் ஒரு நிமிஷக் கவலைக்குமிடங்கொடுக்கவில்லை.

எல்லா மிசைந்திருக்கிறதென்றே குடந்தையார் கொண்டுழைப்பார்களாக. உபாத்தியாயருடைய ஊக்கம் எவர்க்கும் உள்ளக்கிளர்ச்சியை யுண்டாக்கும். ஸ்ரீ சாமி ஆச்சாரியார், ஸ்ரீ சுந்தராச்சாரியார் முதலியோருடைய அபிமான பலமும், கருணைக்கொல்லைச்* சபையார் முயக்கமுமிருக்கக் கான்பரன்ஸ் காரியம் இனிது நிறைவேறுதல் கஷ்டமேயோ? தஞ்சை ஜில்லா முழுவதிலுமெத்தனையோ அபிமானிகளிருக்கிறார்கள். குடந்தையார்கள் உடனே ஒரு மீட்டிங் சேர்த்துக் கான்பரன்ஸிற்குக் காரியதரிசிகளை நியமித்து அவர்களிடங் கொஞ்சம் பொருளளித்து வேண்டிய முயற்சிகள் செய்யத் தூண்டி விட்டால் கோடைகால விடுமுறையில் கட்டாயமாய்க் கான்பரன்ஸ் நடத்திக் காணலாம், களிமகிழ் சிறக்கலாம், கவலைகள் தொலைக்கலாம். உபாத்தியாயரே! உறுதி கொள்ளுங்கள்!! குடந்தை தூயரே! கூடியுழையுங்கள்!! தஞ்சை நேயரே! தழுவி நடவுங்கள்!!

---



## பொருளியல்நூல் உண்மைவிளக்கு

### 1. ஆர்க்கிமதேயர் கண்ட உண்மை.

சித்தூர் ஸ்ரீசுப்ரமணிய ஆச்சாரியார், பி.ஏ.,எல்.டி.,
வைஸ் பிரின்ஸிபால், வார்ட்லா காலேஜ்,
பெல்லாரி.

சிசிலி என்னும் தீவில் சிராக்யூஸ் என்னும் நகரில் அயெரோ என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் ஒரு பொன் மகுடம் விரும்பி ஒரு விசுவகர்ம வம்சத்தனிடம் 19-ராத்தல் பசும்பொன் அளித்தான். நம்மவனோ தற்காலத்திற் பெரும்பான்மையரைப் போலச் சிறுபோதே வேலையில் விடப்பட்டவன். வயிற்றைக்கீறி எடுத்தாலும் வாரேடும் காண்பதரிதாகும். 'பறி' (பொன்) பறிப்பதில் பரபரப்புள்ளவன். பசும்பொன்னை மூன்று பங்கிட்டு ஒரு பங்கிற்குப் பதில் வெள்ளிவைத்து மூன்று தகடுகள் செய்து வெள்ளித்தகண்ட நடுவிற் பொருத்தி மூன்றையும் ஒரு தகடாகச் சமைத்தான். பிறகு அவ்வகைத் தகடால் பொன்மகுடமும் புனைந்து அரசற்குக் கொடுத்தான்.

அரசன் பழய வாசனையாலோ வேறு யாது காரணத்தாலோ மனதிற் சந்தேகம் குடிகொண்டவனாய்த் துலாக்கோலாலும் உரைகல்லாலும் நைட்ரிகாசிட் திராவகத்தாலும் பரிக்ஷித்துப் பார்த்தான். அப்படியும் ஐயம் தீராதவனாய்த் தன் சமஸ்தான பண்டிதர்களுள் பொருளியல்நூல் வல்லுநராகிய ஆர்க்கிமதேயரென்பவரிடம் கொடுத்து மகுடத்தைச் சேதிக்காமல் அதிற் கலப்புண்டோ என்பதைக் கண்டறிய வேண்டினான்.

பண்டிதர் வேறு பசும்பொன் துண்டொன்றையெடுத்துத் துலாக்கோலால் அது 19 வராகனெடையுள்ளதைக் கண்டார். பின்னர் அதை நூலாற் கட்டி நிர்மல நீரில் இட்டு எடை போட அது இப்போது 18-வராகன் எடையே கொண்டமை நோக்கினார். நீர்க்குடம் நீர்மட்டத்திற்கடியில் இலேசாகத் தோன்றுவது நீர்திரட்டும் தெரிவையரும் அறிவாரன்றே! நோக்கின பண்டிதர் நொடியினிற் சென்று 19-வராகனெடை வெள்ளித் துண்டொன்றைக் கொணர்ந்து முன்போலவே நீரிடை எடைபோட சற்றேறக்குறைய $17\frac{1}{4}$ வராகன் எடையே கொண்டமை கண்ணுற்றார். உடனே பண்டிதர் 19 ராத்தல் எடையுள்ள மகுடத்தை நீரினிடை எடைபோட அது சற்றேறக் குறைய $17\frac{3}{4}$ ராத்தல் எடையே கொண்டமை நோக்கி, பொன்னுக்கும் வெள்ளிக்கும் நீரில் முன்னெடைக் குறைவு முக்காற்குப் பின்னெடைக் குறைவாகிய கால் மூன்றிலொரு பங்காதலின், மகுடத்தில் மூன்றிலொரு பங்கு வெள்ளியாதல் வேண்டுமென்பதை நிர்ணயித்தார்.

அச்சமயம் நீராடிக்கொண்டிருந்த பண்டிதர் ஈதறிந்ததும் களிப்பின் மிகுதியால் ஆடையுடுக்கவும் அறவே மறந்து நிர்வாணியாய்க் 'கண்டேன்' 'கண்டேன்' எனக் கூவிக்கொண்டே அரசன் அவைக்களம் அரைக்கணத்தணுகினர் என்பர். அரசன் முழுவதும் உணர்ந்தபின், பண்டிதர் வெகுமானமும் நம்மவன் அவமானமும் அடைந்தாரென்பது அறையவும் வேண்டுமோ?

ஆதலின், நம்மவர் தொழில் எவ்வளவு உயர்ந்ததெனினும் கல்வியும் ஆராய்ச்சியும்

'இன்றெனி னென்னும்? அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து.'

# பிழைக்கும் வழி

(104-வது பக்கத் தொடர்ச்சி)

**சங்கரதமாரன்.**

நமது ஜாதியார் பிழைக்கும் வழிகளில் முதலாவது பிறஜாதி தூஷண நிக்ரகமென்று மேலே சொல்லியிருக்கிறேன். பிறஜாதி தூஷணையினால் வரும் லாபம் ஒன்றுமேயில்லை. ஆனாலும், துன்பங்களும் நஷ்டங்களும் அனந்தமா யிருக்கின்றன. ஈஸ்வராக்கினைப்படி மனிதப் பிராணிகளெல்லாம் சகோதரர்களேயன்றி மற்றில்லை. ஆகவே, எல்லாத் தேசத்தாரும் எல்லா மதத்தாரும் எல்லா ஜாதியாரும் ஒருவரையொருவர் நேசித்து சகோதரபாவனையாய் வாழ்ந்து வரவேண்டுமென்பது கடவுள் சம்மதமானதொரு கொள்கையாகும். அதைவிட்டு, ஒருவரோடொருவர் பிரிவுபட்டு, ஒருவரையொருவர் தூஷித்துக்கொண்டு காலங் கழிப்பதினால் ஈஸ்வராபராதிகளாகிறார்கள். இன்னும், இவ்வேறுபாடுகளால் பரஸ்பர நஷ்டங்களும் துன்பங்களும் அனேகமுண்டாகின்றன. உலக முழுவதும் ஒரு பெரிய குடும்பம் போன்றது. ஒரு குடும்பத்தினைச் சேர்ந்த ஸ்திரீ புருஷர்கள் ஒன்றுபட்டு அளவளாவி வாழ்ந்து வரும்பக்ஷத்தில், அக்குடும்பத்தில் சந்தோஷமும் சௌகரியங்களும் நிறைந்திருக்கின்றன. அப்படியின்றி, குடும்பத்தார்க்குள் விரோதமும் தூஷணையும் அலக்ஷியமும் ஏற்பட்டால், அங்கு மாளாத்துக்கம் பெற்றிருப்பது சத்தியமேயல்லவா? அக்குடும்பம் மேன்மேலும் ஓங்கிச் செழிப்பதற்குப் பதிலாகக் குன்றிக் குறைவுபடும். அதேபோன்றிருக்கிறது ஒரு நாட்டுப் பல ஜாதியார் நிலைமையும்.

நாமோ மிகவும் பலவீனர்களாயிருக்கிறோம். கல்வி பலமாவது, செல்வ பலமர்வது, ஒற்றுமைப்பலமாவது, பிறஜர்திப் பலமாவது, இன்னும் மற்ற பலமாவது நமக்கில்லை. "வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியுந் துணைவலியுந் தூக்கிச்செயல்" என்று திருவள்ளுவநாயனார் சொல்லியிருக்கிறார். பிராகிருத பலத்தையும், ஸ்வயபலத்தையும், எதிரி பலத்தையும், சகாய பலத்தையும் ஆராய்ந் தளவிட்டுப் பார்த்துக்கொண்டு ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யவேண்டியவனாயிருக்கிறான். பிராகிருத பலமோ நமக்குக் கொஞ்சமேனுங் கிடையாதென்பதற்கு நமது தற்கால நிலைமையே போதுமான சாக்ஷியாகும். பிராகிருத பலமிருக்கும் பக்ஷத்தில் நாம் இப்போது பலராலிகழப்பட்டு சுதந்திரங்களை யெல்லாமிழந்து கூக்குரலிட்டுக்கொண்டிருக்க மாட்டோம். பபிராகிருத பலமில்லாக் குறையோடு பிராகிருத சாமென்னுங் கொடுமையொன்று மிருப்பதாகப் பெரியோர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். தன்வலியோ நமக்கு முதலே கிடையாது. இது கல்வியினாலும் செல்வத்தினாலும் அந்தஸ்தினாலும் சுஜாதி யொற்றுமையினாலும் ஏற்படவேண்டியது. இவை கொஞ்சமேனு மில்லாததினால் தன்வலியென்னுஞ் சுயபலம் நமக்கில்லவேயில்லை. மாற்றான் வலி பிரம்மாண்டமானதாயிருக்கிறது. நமக்கு மாற்றார் என்று சொல்லப்படக்கூடியவர்கள் நாமொழிந்த பாரதவாசிகள் எல்லோருமே யென்று சொல்லவேண்டும். இவ்விஷயத்தை நமது ஜாதித்தலைவர்களும் விவேகிகளும் நன்றாய் ஆலோசித்துப் பார்ப்பது அத்தியாவஸ்யமாயிருக்கிறது. இதனினும் முக்கியமானதொரு விஷயம் வேறிருப்பதாக எனக்குத் தோன்றவேயில்லை. இவ்விஷயத்தை யாலோசிக்குமிடத்து மற்றவைகளையும் ஆலோசிப்பவர்களாவோம். இதைப்பற்றிச் செய்யுந் தீர்மானத்தில் மற்றவற்றைப்பற்றிய தீர்மானமும் அடங்கும். அவ்வளவு மகத்தானதாக்கும் மாற்றான் விஷயம்.

எந்தநாள் ஆருஷேயருடைய ஆதிக்யத்தைத் துறந்து ஸ்வயாதிக்யங் கொண்டோமோ அந்த நாளே அவர்கள் மாற்றாராயினர். அவர்களுடைய ஆதிக்யத்திற்கு உட்பட்டிருக்கிறவர்களையும் மாற்றாராக்கினர். நாமொழிந்த மற்ற ஜாதியாரெல்லோரும் ஆருஷேயாதிக்யத்திற்கு உட்பட்டே யல்லவா இருக்கின்றனர்? ஆதலால், சகல ஜாதியார்களுடைய அருவெறுப்பிற்கும் நாம் பாத்திரவான்களாயினோம். ஆருஷேயாதிக்யத்தை மறுத்ததோடு நில்லாமல் அவர்களுக்குச் சமானமாகிய பிராம்மணத்துவம் பாராட்டுவதினால் அவர்களுடைய துவேஷம் வேரூன்றிப் பலப்படலாயிற்று. மற்ற ஜாதியார்களோ வென்னில், 'இவர்கள் நம்மினு முயர்ந்தவராய் நமது தலைமீதேறுவதா?' வென்னும் மாச்சரியத்தால் வேற்றுமை பாராட்டலாயினர். இதனால், சர்வ பிராணிகளும் நமது மாற்றார்களானார்கள். கல்வி நாகரிகம் ஒற்றுமையாதியவற்றில் மிகக் குறைந்தொடுங்கி நிற்கும் நம்மேழை ஜாதி மீது எல்லா பலங்களும் நிரம்பக் கொண்டுள்ள மற்றெல்லாஜாதியாரும் ஒன்றுதிரண்டு வேற்றுமை பாராட்டினால் நாமெப்படித் தாங்கமுடியும்? அம்மாற்றார் வலி முன் நமது வலி எம்மாத்திரம்? துணையாவாரோ எவருமிலராயினதால் துணைவலியென்பதே யில்லாது போயிற்று. இந்த ஸ்திதியிலிருக்கும் நாம் எந்தக் காரியத்தைக் கைப்பிடித்து எப்படிச் சாதித்து முடிக்கவல்லோம்? குலாபிமானிகளே, யோசியுங்கள்!

இவ்வளவோடு இன்னுமொரு பேராபத்து சேர்ந்துகொண்டது. நமது நிலைமை நாட்டிலிவ்வளவிலிருக்கிறதென்று கண்டுகொள்ளாமலே நாம் பலவிஷயங்களைப் பேசிக்கொண்டும், பல பிரயத்தினங்களில் முயன்றுகொண்டும் வரலாயினோம். இப்பேச்சுகளும் பிரயத்தினங்களும் நமக்குத் தீமை யுண்டுபண்ணி வருகின்றனவேயொழிய நன்மை யுண்டுபண்ணுவதாக நினைக்க இடமில்லை. இவற்றின் விபரங்களை இங்கெடுத்துப் பிரஸ்தாபித்தால் சிலருக்கு மனஸ்தாபமுண்டாகலாமென்று விடப்பட்டது. இப்படி அவரவர்களுடைய மனஸ்தாபத்திற்குப் பயந்துப் பயந்து உண்மைகளை வெளிப்படுத்தக் கூசியிருப்பதினால், ஜாதியேடேற்றம் தடைப்பட்டு வருகிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? என்றாலும், நமது ஜாதியினுடைய தற்கால ஸ்திதியை யநுசரித்துப் பார்க்குமிடத்து வேறுவிதமாக நடக்கக்கூடவில்லை. நமதுகுலத் தௌர்ப்பாக்கியங்களில் இதுவுமொன்றாகும்.

ஆதலால், பிறஜாதி தூஷணையை அறவே அகற்றி, அவர்களிடம் பகைமை பாராட்டுவதையும் அவர்களினின்றும் பிரிந்திருப்பதையும் நீக்கி, எல்லா ஜாதியாரோடும் நெருங்கிக் கலந்து பழகி சகோதரபாவனை காட்டி உபசாரமாய் நடந்து வரவேண்டும். இவ்விதத்தினால் பிறஜாதியாருடைய அன்பைச் சம்பாதிக்கவேண்டும். அந்த அன்பு கிடைக்காத மட்டும் நம்முடைய முயற்சிகளெல்லாம் வீணாகித் தொந்திரவுகளையே கொண்டுவந்துவிடும். ஐந்துதொழில்களைச் செய்து ஜீவித்துக்கொண்டு வருவதில் நாம் மற்ற ஜாதியார்களோடேயே விவகரிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். கல்விகற்பதிலும் உத்தியோகஞ் செய்வதிலும் தொழில் செய்வதிலுமாகிய எல்லா விஷயங்களிலும் பிறஜாதியாருடைய சகாயம் நமக்கு அத்தியாவஸ்யமாயிருக்கிறதல்லவா? இப்போது நாம் அவர்களோடு கலந்தவர்களாயில்லாமல் வேறுபட்டவர்களா யிருப்பதினால், நம்மை சமயாசமயங்களில் துன்பப்படுத்த வழிதேடுகிறவர்களாயிருக்கிறார்கள். இந்தப் பிரிவினைக்கு இடம் ஏற்படாமல் அவர்கள் நம்மை அன்போடு நடத்தும்படியான விதமாக நம்முடைய வார்த்தைகளையுஞ் செய்கைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டியவர்களா யிருக்கிறோம். இப்படிச் செய்துகொள்வதினால் நாம் கௌரவஹீனமாகிய காரியஞ் செய்வதாக எவரும் நினைக்கலாகாது. இது நீதிநியமங்களுக்குட்பட்ட காரியமேயொழிய, அவற்றினின்றும் வேறுபட்டதல்லவேயல்ல. இவ்வித நடக்கையால் நாம் மற்ற ஜாதியார்களுக்கு நற்போதனை செய்தவர்களாகி, அவர்களுடைய அன்பைப் பெற்று, அவர்களால் நடந்துவரும் இடையூறுகளை மாற்றி, அவர்கள் சகாயமடைந்து, நமது முயற்சிகளில் வெற்றியும் நமதுலக வாழ்க்கையில் சௌகரியங்களுஞ் சந்தோஷமும் வாய்த்துத் துன்பமில்லாமல் சுகமாக வாழ்வோமென்பது நிச்சயம்.

ஆச்சாரிப்பட்ட ஸ்தாபக முயற்சிகளை யநுசரித்து, பிறஜாதியாருக்கும் நமக்குமுள்ள அன்னியோன்னியக் குறைவு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஒவ்வொருவருக்கும் நன்றாய் விளங்காமற் போகாது. ஆச்சாரிப்பட்டத்தை நம்மினின்றும் பெயர்க்கக் காரணராகவோ பெயர்ச்சி யறிந்து சந்தோஷப்படுகிறவர்களாகவோ அசட்டையாயிருக்கிறவர்களாகவோ மற்ற ஜாதியார்கள் காணப்படுகிறார்களே யொழிய, நம்மிடத்துப் பரிதாபங் காட்டுகிறவர்களாகவாவது, நமக்குத்துணை செய்யக்கூடியவர்களாகவாவது எந்த ஜாதியாரேனுமிருக்கிறார்களா? 'இந்த ஐயர் எனக்கு மிகவும் வேண்டியவர், அவர் என் பெயரை (ஆச்சாரி) Achary யென்றே யெழுதுகிறார். அவருக்கு நமது விஷயத்தில் அதிகப் பற்று என்றும்', 'ஆச்சாரிப்பட்டத்திற்கு நாமே உரியவர்களென்று நேற்று அண்டைவீட்டு முதலியார் எத்தனையோ ஆதாரங்கள் சொன்னார்' என்றும், அங்கங்கு ஒவ்வொருவர் மயங்கி நிற்கப் பார்க்கிறோம். எல்லோருந் தேனொழுகப்பேசித் தெருவழியே யனுப்புகிறவர்களாகத்தானிருக்கிறார்கள். உள்ளபடியே அன்புடையவர்களாக அங்கங்கு ஓரிருவரிருக்கலாமென்பதை நான் மறுக்கவில்லை. பெரும்பாலர் வேறுவிதமாயிருக்குமட்டும் சிலரால் நாமென்ன பயன் பெறப்போகிறோம்? ஒன்றுமில்லை. இதை நன்றாய் யோசித்துப்பாருங்கள், நண்பர்களே! (தொடரும்)

## நமது சபையினிடத்து சிரத்தை.

ஸ்ரீ த. ப. வே. ஆச்சாரியார், திருச்சி.

சிரத்தை என்றால் நம்பிக்கை என்பது பொருள். அதாவது, இன்ன சாதனத்தால் இன்ன பலன் கிடைக்கும் என்ற நிச்சய பக்தி. "பாம்பு கடிக்கும்" "நெருப்பு சுடும்" என்று அனுபவத்தால் தெரியாவிட்டாலும், பெரியோர்கள் சொல்லக்கேட்டு, பிறகு பாம்பிருக்கும் இடத்திற்காவது, நெருப்பிருக்கும் இடத்திற்காவது அணுகத் துணிகிறதில்லை. ஏனெனில், 'கடிக்கும்' 'சுடும்' என்ற விஷயங்களில் திடமான நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. இனி எவரேனும் 'பாம்பு கடிக்காது' என்று சொன்னாலும் நமது நம்பிக்கையை மாற்ற முடியாது. இதுபோல், நமது சபைக்காரியங்களில் சிரத்தை ஏற்படவேண்டும். அவ்வாறில்லாவிடில் ஓர் பயனும் அடைய முடியாதென்பதே.

ஆனால், சிரத்தை என்பது எந்த ஜீவனிடத்திலும் இல்லாதிருக்கவில்லை. "சிரத்தயா மயோ அயம் புருஷ" என்ற பகவான் வாக்கியப்படி, எப்படி ஒரு வீடானது செங்கற்களால் கட்டப்பட்டு "வீடு செங்கல் மயம்" என்று விளங்குவதுபோல், இப்போது நாமடைந்திருக்கும் மானுஷ்ய ஜென்மமும் சிரத்தை மயமே. இயற்கையிலேயே நம்மோடு சிரத்தையென்பது பிறந்திருக்கிறது. பாஷாண ஸ்திதியிலிருந்து மனித ஸ்திதி வரையிலும் சிரத்தையாலேயே வந்திருக்கிறோம். இனி யடையவேண்டிய பகவானுடைய சாமீபமும் சிரத்தையாலேதான்.

இச்சிரத்தை அவரவர்கள் உத்தேசிக்கும் பலத்தால் பேதப்படுகின்றது. பலமோ அவரவர்களடைந்த பரிபக்குவத்திற்குத் தக்கவாறு இருக்கிறது. சிலர் காம்ய பலன்களில் சிரத்தை வைத்திருக்கிறார்கள். சிலர் லோகத்தாரால் விசேஷ மதிப்பை யடையக்கூடிய இடம் பொருள் ஏவல் இவைகளில் சிரத்தையை நாட்டுவார்கள். சிலர் பரோபகாரம் தயை சீலம் முதலிய குணங்களில் விசேஷ சிரத்தை வைத்திருக்கிறார்கள். இன்னுஞ் சிலர் நித்யமானதும் எங்கும் நிறைந்ததுமான பரம சிரேயஸைக் கொடுக்கக்கூடிய பகவானிடத்தில் வைக்கிறார்கள்.

சிரத்தையானது நம்மோடு ஸ்வபாவமாகவே பிறந்திருக்கிறதென்றாலும் நாம் அதை விருத்தி பண்ணக்கூடும். நமது ஸ்தூல சரீரமானது குழந்தைப் பருவத்திலிருந்ததுபோலில்லாமல் பருமனில் விருத்தியடைவதுபோல் நமது சிரத்தையும் விருத்தியாகிப் பலமடையச் செய்யவேண்டும். மந்திரம், புண்யதீர்த்தம், ஜோதிஷம், வைத்தியம், குரு, சற்சங்கம் இவைகளிடத்தில் நம்பிக்கை ஏற்படாவிட்டால் நாம் எப்படிக் கடைத்தேற முடியும்? ஒரு பண்டிதன் ஒரு வியாதிக்கு ஒரு மண்டலம் உட்கொள்ள ஔடதம் கொடுக்க, அதைச் சாப்பிட்ட 4, 5 நாளிலேயே வியாதி அனுகூலமாவதைச் சில சமயங்களில் அறிகிறோம். அதன் பேரில் அந்த மருந்தினிடத்திலும் பண்டிதரிடத்திலும் நம்பிக்கை யுண்டாகி எல்லா மருந்தையும் உட்கொண்டு வியாதியினின்றும் விடுபடுகிறோம். சில வியாதிகளுக்கு சில சமயங்களில் பலன் உடனே தெரிகிறதில்லை. ஆனாலும், அதைக் கடைசிவரையில், நம்பிக்கையுடன் சாப்பிட வியாதி சொஸ்தமாக்கப்படுகிறது. எவ்வளவோ காலமாகச் சம்பாதித்துக்கொண்ட வியாதி மருந்துகொண்ட க்ஷணமே போதல் சாத்தியமா? அதுபோல், நாம் வெகுநாளாகக் கையாடிவரும் தீயகுணங்களைத் தூய குணமாக்கக் காலம் வேண்டாமா?

"நமது சபையார்கள் என்ன செய்துவிட்டார்கள்? ஒன்றும் காணோமே" என்று சிலர் எண்ணங்கொள்ளுகிறார்கள்; அது சுத்த பிசகு. அப்படி யெண்ணுவதால் சபைக்குப் பலக்குறைவு ஏற்படுகிறது. ஆகையால், நாம் இப்போது ஏற்படுத்தி யிருக்கும் சபை என்ன உத்தேசத்தைக் கொண்டு ஏற்பட்டிருக்கிறது. ஊர் கொள்ளை செய்யவோ, இராஜ்ஜியத்தைப் பிடிக்கவோ, பொய்ச்சாக்ஷி சொல்லப் போதிக்கவோ, அன்னிய மத தூஷணைக்கோ, பிறஜாதியை நிந்திக்கவோ, என்று புத்தி பூர்வமாய் ஆலோசிக்கவேண்டும். (தொடரும்)

---

கல்லாத மூர்க்கருக் கெத்தனைதான் புத்தி
　　போதிக்கினும்
நல்லார்க்குண்டான குணம் வருமோ
　　நடுராத்திரியிற்
சல்லாப்புடவை குளிர் தாங்குமோ
　　நடுச்சந்தையினிற்
செல்லாப்பணஞ் செல்லுமோ
　　தில்லைவாழுஞ் சிதம்பரனே.

—படிக்காசுப்புலவர்



## பெண் கல்வி

ஸ்ரீ T. தங்கவேலு ஆச்சாரியார், திருநெல்வேலி.

குலத்தின் விர்த்தி பல ஜில்லாக்களில் வசிக்கும் நம்மினத்தவரின் கல்வி ஆசாரம் முதலான விஷயத்தைச் சார்ந்தது. பல ஜில்லாக்களின் விர்த்தி சிறு பட்டணங்களிலுள்ளவர்களின் கல்வி ஆசாரம் முதலானவற்றைப் பொருத்தது. பட்டணங்களின் குல விர்த்தி சிறுவட்டகைகளில் வாசஞ்செய்யும் பௌருஷேயரின் கல்வி ஆசாரத்தைச் சார்ந்தது. வட்டகையின் குலவிர்த்தி அங்குள்ள ஒவ்வொரு குடும்பத்தின் கல்வி ஆசாரம் முதலானதைச் சார்ந்தது. அக்குடும்பத்தின் விர்த்தி, அவ்வீட்டின் இல்லாளாகிய மாதுசிரோன்மணியைப் பொருத்தது. அம்மாது சிரோன்மணி எப்பேர்ப்பட்டவளா யிருக்கவேண்டுமெனின், அடக்கம், அருள், அறிவு, அன்பு, ஊக்கம், ஒழுக்கம், குடும்ப சவரக்ஷணையில் தேர்ச்சி முதலிய நற்குணங்கள் பொருந்தினவளா யிருக்கவேண்டும். கல்விதான் இக்குணங்களை உண்டாக்கும். ஆகையால் கல்வியை அசட்டை செய்யலாகாது. கல்வியழகுதா னழகு. ஸ்திரீபுருஷர் இருவர்கட்கும் இந்த அழகுதான் வேண்டும். அஃதில்லையாயின், அநேக குறைவுகள் ஏற்படுகின்றன. அவையாவன.—

I. 1. குழந்தைகளை வளர்ப்பதில் போதுமான அறிவில்லாமை—குழந்தைகளின் அபிவிர்த்திக்குக் (நற்குணம், தேகவலிவு) காரணம் அவர்கள் தாயே "தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை" என்ற பழமொழியுமுண்டு.

2. குழந்தைகளைக் கண்டிக்கும் வித மறியாமல், கணவன் வேலையினின்று வந்ததும் அவர்கள் குற்றங்களைக்கூறி அவன் மனதைப் புண்படுத்துவதுமன்றித் தானும் சஞ்சலமடைவது.

3. குழந்தைகளின் குற்றங்களைக் கணவனுக்குத் தெரியாமல் மறைப்பது. அதற்காக அவர்களுக்குப் பொய்ம்மொழிகளைக் கூறும்படி கற்பித்தல், அல்லது அதை மாற்ற வேறோர் காரியத்தைச் செய்யச் சொல்வது; இவ்விதமாய்க் குழந்தைகளை மடையர்களாக்குவது.

4. இந்த குழந்தைகளின் விஷயமாய், மிஸ்டர் மூல்லிக் என்பவர் இந்த குழந்தைகளின் தலையில் பால்யத்தில் சுமத்துகிற கெட்ட குணங்கள் நீங்க அநேக ஆண்டுகள் ஆகின்றதென்றும்,

5. பால்யத்தில் ஏற்பட்ட பலவீனம், அச்சம், ஒஞ்சிப்பு, எக்கம், கோழைத்தனம், சோம்பல் முதலியயாவும் வேரோடழிவதில்லை யென்றும், அக்குழந்தைகளின் அந்தக்கரணம் மங்கிக்கிடக்கின்றதென்றும் கூறுகிறார்.

அநேகமாய் இந்தக் குணங்கள் நம் குலச் சிறுவர்களிடத்தில் காணப்படுகின்றன. இவையாவும் ஸ்திரீகளைப் பொருத்தவை. மக்களைப் பெற்று வளர்ப்பவர்களும் அன்னவர்களுக்கு உலகப் பழக்கத்தை உண்டுபண்ணுகிறவர்களும் ஸ்திரீகளேயல்லவா? தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற பழமொழிப்படி, அப்போது கெட்டபழக்கம் படிந்தால் அது கட்டை நீங்கும் வரை இன்னலை விளைவிக்கும். நல்ல பழக்கம் கற்பிக்கப்பட்டால், நரை தோன்றி யழியுமட்டும் நன்மையை உண்டாக்கும். இப்பழக்கங்களை ஆரம்பஞ் செய்வோர்கள், அக்குழந்தைகளின் தாய்மார்களே! தாய்மார்கள் கல்வி யறிவுடையவர்களாயிருந்தால் நல்லறிவைப் போதிப்பார்கள். மூடர்களாயிருந்தால், மூடத்தனமானவைகளைக் கற்பிப்பார்கள். ஸ்திரீகள் கல்வி யறிவு விளக்க முடையவர்களா யிருந்தால் தங்கள் தங்கள் குடும்பத்தில் அநேக சீர்திருத்தங்களைச்செய்வது மன்றி நமது ஜாதியிலும் சீர்த்திருத்தங்கள் பல செய்து விடுவார்கள். சாவித்திரி சந்திரமதி முதலான ஸ்திரீகள் கல்வி யறிவுடையவர்களா யிருந்ததினால், அன்னவர்களின் புருஷர் சற்போதனை செய்யப்பட்டு சன்மார்க்கத்தில் நடத்தப்பட்டு சகல லோகமும் கொண்டாடும்படியான ஸ்திதிக்குள்ளானார்கள். நமது குலமோ வரவர உன்னத பதவியை யடைவதற்குப் பதிலாக க்ஷீணதிசையை யடைகின்றது. இதற்குக் காரணம் நம் குல ஸ்திரீகள் மூடசிகாமணிகளாய் விளங்குவதே யன்றி வேறொன்றில்லை.

II. 1. நகைப்பயித்தியம்—வீட்டில் எவ்வளவு மட்பாத்திரங்களிருப்பினும் கடைத்தெருவில் மண்ணினால் செய்ததோர் மட்பாத்திரத்தைக் கண்ட மாத்திரத்தில் அதை வாங்காமல் நகரமாட்டார்கள். கேவலம் மண்ணின்மேல் அவ்வளவு பயித்தியம் ஏற்பட்டால் தங்கத்தில் எவ்வளவு பயித்தியம் ஏற்படும்!

2. ரொமேனியா நாட்டு ஸ்திரீ யொருத்தியைப் பார்த்து ஓர் பிரபு ‘உன் நகைகளைக் காண்பி’ என்று வினவியவிடத்து, தன்னிரு குமாரர்களையுங் காண்பித்து, மூத்தான் 5-வது வகுப்பிலும் இளையான் 2-வது வகுப்பிலும் வாசிப்பதாய் விடையளித்தனளாம். இந்திய நாட்டுப் பெண்ணொருத்தியை வினவிய காலத்து, தனக்குப் போதுமான நகைகளும் உடைகளும் இல்லை என்று கூற, அப்பிரபு, அம்மாதை நோக்கி ‘உன் தந்தை உன்னைப் பள்ளியில் வைக்கவில்லையா?’ என்று வினவவும், அம்மாது தன்னைப் பள்ளியில் வைக்கவில்லை என்றனளாம். ஆதலால், இந்தியர்களில் அநேகர் புத்தி நுட்பமில்லாதவரா யிருப்பதின் காரணம் இந்திய நாட்டு ஸ்திரீகளுக்குக் கல்வியில்லாமையே யென்று அப்பிரபு கழன்றதாய் ஓர் பத்திரிகை கூறுகிறது.

III. நம் குல சிகாமணிகளிடம் அஞ்ஞானமும், விக்கினமும், தப்பெண்ணமும் அதிகமாயிருப்பதால் நம்மவர்கள் தமது குடும்பங்களில் சீர்திருத்தமேற்படாமல் பாட்டன் பூட்டன் வழிகளைப் பின்பற்றி இன்னும் மேல் நோக்கத்திற்கு வழியின்றித் துஞ்சிக் கிடக்கின்றனர். இவ்விஷயத்தில் கிழவிகளை வெல்ல முடியாது. இவர்களுடைய அஞ்ஞானமும் விக்கினங்களும் தப்பெண்ணங்களுமே நமது குடும்பங்களை நாசமாக்கி வருகின்றன. அக்கிழவிகளுடைய அஞ்ஞானுதிகள் தொலைந்தால் குலம் சீர்ப்படும். அவை பல வருஷங்களாகவே வேரூன்றி யிருப்பதால் தொலைவது கஷ்டம். சிறு பெண்களுக்குக் கல்வி கற்பித்து அவர்களுக்குச் சீர்திருத்தக் கருத்துகள் புகட்டிவிட்டால் கிழவிகள் அஞ்ஞானத்தை யடக்கிக் குடும்பங்களை நல்வழிப்படுத்திக் குல சீர்திருத்தத்தைக் கூட்டி வைப்பார்கள்.

IV. கல்விகற்காத தாய்கள் பேய், பிசாசு, காட்டேரி, எசக்கி முதலான சிறு தேவதைகள் பயமுறுத்துகிறதென்றும் அலட்டுகிறதென்றும் இன்னும் அநேகக் கெடுதல்களைச் செய்கிறதென்றும் தங்கள் பெண்மக்கட்குப் போதித்துவிடுவதால், அவர்களும் கர்ண பரம்பரையாய் அதிற் கவனஞ் செலுத்தி வந்த நிமித்தம் சிறுவர்கட்கு ஏதேனும் பிணி காணின், காட்டேரி குற்றமென்றும் எசக்கி குற்றமென்றும் “முனியன்” என்ற

(இன்னும் வரும்)

## ஆச்சாரி-ஆஸாரி

ஆச்சாரிப்பட்டத் திரிபு சம்பந்தமாக கனம் சென்னைக் கவர்னரவர்கள் திருச்சமுகத்திற் கனுப்பப்பட்ட தந்திகள் வருமாறு.

### Visva Brahma Mahajana Central Sabha, Trichinopoly.

26th January 1914.

Visva Brahma Mahajana Central Sabha. Trichinopoly meeting assembled respectfully submits that recent decision Government Order 1562 Public 16th December disentitles Visvabrahman Community to use their caste title Achari in use by them as birthright from time immemorial, fears Government thereby interferes with their sacred social religious heritage giving room to lower them in public estimation and prays Government orders depriving them their legitimate title be reconsidered, correct form Achari be continued to be used.

### விஶ்வப்பிரம்ம மகாஜன ஸென்ட்ரல் சபை

திருச்சிராப்பள்ளி, 1914௵ ஜனவரி௴ 26௳

டிஸம்பர்௴ 16௳ய பப்ளிக் 1562-வது கவர்ன்மெண்ட் ஆர்டரில் கண்ட சமீப தீர்மானமானது, விஶ்வப்பிராம்மணர்கள் புராதீனமாய்த் தங்கள் ஜன்ம பாத்தியதையாய்க்கொண்டு வழங்கி வந்த அவர்களுடைய ஆச்சாரிப்பட்ட பாத்தியதையை அவர்களினின்று வேறுபடுத்துவதா யிருக்கிறதென்றும், இதனால் தங்களுடைய வைதிக ஜாதீய மதஉரிமைகளில் அரசாங்கத்தார் தலையிட்டு பொது ஜன மதிப்பில் தங்களைத் தாழ்வு படுத்துகிறார்களென்றும் முறையிட்டு, தங்களுடைய சுதந்திரப் பட்டத்தை மாற்றும் கவர்ன்மெண்ட் ஆர்டரைப் புனராலோசனைக்குக் கொண்டு வந்து, சரியான பதமாகிய ஆச்சாரியைப் பழையபடி வழங்குமாறு திருச்சிராப்பள்ளி மகா ஜன சென்ட்ரல் சபையார் கூட்டங்கூடி மரியாதையுடன் விண்ணப்பித்துக் கொள்ளுகிறார்கள்.



### Visvakarma Kulodharana Sabha MADRAS.

9th February 1914.

Madras Visvakarma Community enters respectful protest against recent Government decision depriving them of their ancient legitimate and shastraic title *Achari* which is their time-honoured birth-right and sacred heritage, submits that altered form adopted by Government is a meaningless unetymological innovation adversely affecting community's social prestige and prays that early orders be issued restoring the use of correct form *Achari*.

### விஸ்வகர்ம குலோத்தாரண சபை, சென்னை.

1914௵ பிப்ரவரி௴ 9௳

சென்னை விஶ்வகர்ம குலத்தினர், தொன்றுதொட்டு தங்களுக்கு ஜென்மசுதந்திரமாகவும் பரம ஆட்சியாகவு மேற்பட்டிருப்பதும், புராதீனமானதும், உரிமையானதும், சாஸ்திரோக்தமானதுமாகிய தங்கள் ஆச்சாரிப் பட்டத்தைப் பெயர்ப்பதாகிய நவீன கவர்ன்மெண்ட் தீர்மானத்தை வணக்கமாய் மறுத்துரைத்து, கவர்ன்மெண்டார் கைக்கொண்ட பட்டத்திரிபு அர்த்தமற்றதும் இலக்கணப் பொருத்த மில்லாததுமா யிருக்கிறதென்றும் இச்சாதிப் பெருமையைக் கெடுப்பதாயிருக்கிறதென்றுந் தெரிவித்து, சரியாக ஆச்சாரியென்னும் பதப்பிரயோகமே பழையபடி கைக்கொள்ளும்படி சீக்கிரமே உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள்.

### Arkonam Visvabrahmana Sabha.

12th February 1914.

Referring to current Government resolution regarding introduction of title Asary for Achary, the Visva Brahmana Community of Arkonam respectfully protests against depriving them of their primitive birthright and shastraic appellation and prays for early orders of using their hiriditary form Achary as the Community feels personally affected by the amended unetymological and meaningless word Asary.

### அரக்கோணம் விஸ்வப் பிராம்மண சபை.

1914௵ பிப்ரவரி௴ 12௳

“ஆச்சாரி”க்குப் பதிலாக “ஆஸாரி” யென்னும் பட்டத்தை நுழைத்த கவர்ன்மெண்ட் தீர்மான சம்பந்தமாய், அரக்கோண விஸ்வப்பிராம்மண ஜாதியார் தங்கள் தத்ஸ்வதந்திரப் பிறவிப் பாத்தியதையாகிய சாஸ்திரோக்த ஜாதிப்பட்டத்தை நீக்கியது கூடாதென்று வணக்கமாய் முறையிட்டு, வியாகரணங் கெட்டதும் அர்த்தமற்றதுமாகிய “ஆஸாரி”ப் பதத்தால் குலத்திற்கே குறைவு ஏற்படுவதால் தங்கள் பரம்பரைப்பட்டமாகிய “ஆச்சாரி”ப் பதமே வழங்குமாறு சீக்கிரம் ஆர்டர் செய்யப் பிரார்த்திக்கிறார்கள்.

---

### விஸ்வகர்மரே ஆச்சார்ய ஜாதியார்.

(124-வது பக்கத்தொடர்ச்சி)

**ஜோஸியர் ஸ்ரீ முத்து ஆச்சாரியார், நாகர்கோவில்**

ஆசார்ய என்னும் பதத்தின் மத்தியிலிருக்கிற சா வென்னு மெழுத்தை மாற்றி மற்றவிதமான ஆறு சகார அக்ஷரங்களைச் சேர்க்கிறதற்கு வியாகரணசாஸ்திரம் இடங்கொடுக்கவில்லை. மேலும், ஒவ்வொரு சகாரத்தைச் சேர்க்கிறதினால் ஒவ்வொருவிதமான அர்த்தமும் சில அக்ஷரங்களுக்கு அர்த்தமில்லாமலு மிருக்கிறது.

ஆஸாரியென்று இங்கிலீஷில் எழுதவேண்டுமென்று சொல்கிறவர்கள், ஆஸாரியென்றால் விஶ்வகர்ம சந்ததிகளைச் சுட்டிக் காண்பிக்கிறதென்றும், ஆசாரி யென்றால் மற்றொருவரைச் சுட்டிக் காண்பிக்கிறதென்றும், சுருதி ஸ்மிருதி புராண சிற்பாகம இதிஹாச சிலா தாம்பிர ஸாஸன வசனங்களினாலா அல்லது வேறு எவ்விதத்தினால் சொல்லி ஸ்தாபிக்கிறார்களென்பது நமக்கு ஒருவிதத்திலும் தெரியவில்லை. அக்ஷரத்தினால் சாதிபேதம் காண்பிக்க வேண்டுமென்ற எண்ணமிருக்கும்பக்ஷத்தில் பூர்வகாலமுதல் ஆசார்ய ஜாதியாயும் ஆச்சார்யஜாதிப் பட்டத்தோடு மிருக்கிற விஶ்வகர்மர்களுக்கு ஆசார்யரென்றும் மற்றவர்களுக்கு ஆஸார்யரென்றும் பெயர்வைத்துக்கொள்ளலாமே!

விஶ்வகர்ம சந்ததிகளின் மூலபுருஷர் விஶ்வகர்மர் பிரபஞ்ச சிருஷ்டிகர் தேவசிரேஷ்டரென்பதையும், அவருக்கு விஶ்வகர்மா ஜகத்குரு ஆச்சாரியரென்று பெயருண்டாவதற்குக் காரணங்களையும், தத்வமிச

முண்டான விபாமும், தத்வமிசர்களும் பிரபஞ்ச நிர்மாண கர்த்தர் குலசிரேஷ்டர் அத்தியாபகர் பௌரோஹித்தாயமுடையவர் ஆச்சாரியர் பிராம்மணர் யக்ஞாதிகாரர் சிற்பாதிகாரர் சிற்பப் பிரவர்த்தகமுடையவர் ஆச்சார்ய ஜாதியார் என்பதையும், வியாச மஹா ரிஷியினால் விஸ்வகர்ம சந்ததிகளை பிராம்மணரென்றும், ஆங்கீரச கோத்திரத்தவரென்றும், உபநயனம், பிக்ஷான்னம், குருகுலவாச முடையவர்களென்றும், இருக மூதலிய யாவையும் நிர்மாணம் செய்துகொடுத்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிற வசனங்களை யும், 500,1000 வருஷங்களுக்கு முன்னுள்ள அரசர் காலங்களில் ஆசார்யரென்று பதிப்பித்த சிலா தாம்பிர சாஸன வசனங்களையும், அரசர்களால் வெகுமதியாக அனேகம் பெயர்களுடன் ஆசார்யரென்ற ஜாதிப் பட்டங் கொடுத்த பத்திர சாஸன வசனங்களையும், இங்கிலீஷ் மேதாவிகளான துரைமார்களா லெழுதிய புஸ்தகங்களில் ஜகத்குருவென்றும் ஆச்சார்யரென்றும் பிராம்மணரென்றும் எழுதியவற்றையும், விஸ்வகர்ம குருஸ்வாமிகளுக்கு கிருதயுகமுதல் ஆசார்யபட்டமிருக்கிறதையும் தனிக்கிரந்த வாயிலாய் விளக்கலாகும்.

சங்கராசார்ய சுவாமிகள் விசுவகர்ம சந்ததிகளைப் பிராமணர்களென்றும் ஆச்சார்யரென்றும் அனேக சம்மதி சாஸனங்கள் கொடுத்திருக்கிறார்கள். தவிரவும், தெலுங்கு கர்னாடக மஹாராஷ்டிர தேசகெவர்ன்மென்டில் அனேகமாக வாதிப் பிரதிவாதி யுத்தாங்களிலும் தீர்ப்புகளிலும், சென்னை ஹைகோர்டு ஜட்ஜி முத்துசுவாமி அய்யரவர்களாலும் ஆச்சார்யரென்றே எழுதப்பட்டிருக்கிறது. இந்தப்பிரகாரம் சாவென்னு மெழுத்தையே உபயோகித்தும் ஆசார்ய ஜாதியாயும் ஆசார்ய ஜாதிப் பட்டத்தோடு மிருக்கிறவர்களைப் பங்கப்படுத்த வேண்டுமென்று கருதி இவ்விதம் பிரவிர்த்தித்தவர்களின் கருத்தானது, சார்வபௌமரும் மநுநீதி துரந்தருமான ஜார்ஜ் மஹா சக்கிரவர்த்தியவர்கள் ராஜ்ஜிய பார காலத்தில் செல்லவே மாட்டாது.

ஆகையினால், இவ்விஷயங்களை நன்குயறிந்தவர்கள் விஸ்வகர்ம வமிசத்தவர்களுக்கு ஆசார்யரென்று ஜாதிப் பெயராய் பல்லாண்டு பல்லாண்டு காலமா யேற்பட்டிருக்கிறதில், சாவென்னும் அக்ஷரத்தை ஸா வென்று மாற்றுமல் வேதசாஸ்திர சாசன சரித்திரங்களிலும் லோகத்தில் வழங்கிக்கொண்டிருக்கிறது போலவுமே இங்கிலீஷிலு மெழுதுவார்களென்பது நிச்சயம். விஸ்வகர்மருக்குடைய பலவிதமான பட்டங்களிலும் அதி உன்னத ஸ்தானமான ஆச்சார்யரென்னும் ஜாதிப் பெயரை இங்கிலீஷி லெழுதுவதற்குத் தற்காலம் ஹானி யுண்டாயிருக்கிற தென்பதை நாம் சகலருமுணர்ந்து அதைத் திருத்துவது நம்மில் ஒவ்வொருவர் பேரிலுண்டாகும் பாரமென்பதாகக் கருதித் தகுந்த முயற்சி செய்யவேண்டும்.

---

## திருச்சிராப்பள்ளி விஸ்வப்ரம்ஹ மஹாஜன ஸென்ட்ரல் சபை.

**25-1-14உ க்கூட்ட நடவடிக்கைகளின் சுருக்கம்.**

**ஸ்ரீ T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியார், ஷை சபைக் காரியதரிசி.**

மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தி சக்கரவர்த்தினியாரவர்களின் மகுடாபிஷேக தின இரண்டாம் வருஷ உற்சவ வைபவங்களை இச்சபையார் கொண்டாடிக் கனம் வைஸ்ராய், சென்னை பம்பாய்க் கவர்னர்களிவர்கள் சமுகங்களுக்கு 12-12-13ல் அனுப்புவித்த வாழ்த்துத் தந்திகளுக்குக் கிடைத்த பதில் கடிதங்கள் வாசிக்கப்பட்டு ரிகார்டு செய்யப்பட்டன.

2. இந்திய இராஜப்பிரதிநிதி கனம் லார்டு ஹார்டிஞ்சுப்பிரபு அவர்கள் சென்ற 22-12-12ல் டில்லிமா நகரில் நேர்ந்த அபாயத்தினின்று தப்பி அம்பிகை யநுக்கிரகத்தினால் திருச்சிமா நகரின்கண் 23-11-13-உ யன்று விஜயமான விஷயத்தைப்பற்றி 13-12-13 உயில் கொண்டாடி ஷை கனம் வைஸ்ராய் அவர்களுக்கு வாழ்த்துதல் மிமோரியல் அனுப்பியும், ஷை மிமோரியல் காபிகளைக் கனம் சென்னை பம்பாய்க் கவர்னர்கள் சமுகங்களுக்கு அனுப்பியதற்குக் கிடைத்த(த்யாங்ஸ்)வந்தன லெடர்கள் ரிகார்டு செய்யப்பட்டன.

3. நமது ஜாதியார்களை "(Asari) ஆஸாரி" யென்று வழங்கும் அபத்த மொழியை விலக்கி வேதசம்மதமாய்த் தொன்று தொட்டு வந்த நமக்குரிய "(Achari) ஆச்சாரி" யெனும் பட்டப்பெயரை சகல கெவர்ன்மெண்டு ரிகார்டுகளிலும் பதித்து வரவேண்டுமென இந்த ஸபையார் வேண்டிய முயற்சியெடுத்து சென்னை இராஜதானியைச் சேர்ந்த யாவத் ஜில்லாக்களிலும் இன்னும் அநேக தேசங்களிலுமிருந்து நம் வம்ஸத்தினர்களின் கையொப்பங்களை ஆயிரக் கணக்காகத் தருவித்து, அவைகளுடன் வேண்டிய ஆதாரங்களடங்கிய மிமோராண்டமும் மிமோரியல் பிடீஷன்களும் சேர்த்து சென்னைக் கெவர்ன்மெண்டாரவர்கள் சமுகத்திற்கு அனுப்பிவைத்ததில், ஷை கெவர்ன்மெண்டாரவர்களால் கிடைத்திருக்கின்ற 16-12-13 தேதியுள்ள G. O. No. 1562 Public ஆர்டர் சபையார்களுக்கு வியக்தமாக வாசித்துக் காட்டப்பட்டது. பிடீஷனர்கள் தெரிவித்திருக்கிற பிரகாரம் செய்வதற்கு கெவர்ன்மெண்டார் சக்தியற்றவர்களா யிருக்கிறார்களென்று தெரிவித்த ஆர்டரின் விஷயத்தைக் கவனித்த ஸபையோர்களுக்கு மிக மனக்கவலையும் வருத்தமும் உண்டாவதால், அந்த G. O. வுக்குத் தக்கபடி ஒரு மிமோரியல் தயார் செய்ய வேண்டுமென்றும், அம்மிமோரியல் அனுப்புவதற்கு முன், சென்னைக் கெவர்ன்மெண்ட் முக்கிய காரியதரிசி அவர்கள் சமுகத்திற்கு, ஷை G. O. வில் கண்டபடி கெவர்ன்மெண்டார் தீர்மானஞ்செய்ய அவர்களுக்குத் தாக்கல் செய்யப்பட்ட கடிதங்கள் காப்பியும், அந்த G. O. வில் வாசிக்கப்பட்ட G. O. No. 659 Public of 26-5-13 கமிட்டியார்களின் ரிப்போர்ட் காபியும், இன்னும் இந்த விஷயமாகக் கெவர்ன்மெண்ட் ஆலோசனைக்குக் கிடைத்த ஆதாரங்களின் காபிகளும், அன்புகூர்ந்து அனுப்பும்படி விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

4. ஷை விண்ணப்பம் கனம் சீப் சிகிரிடேரி அவர்களுக்கு அனுப்புவதும் தவிர, நமது காருண்ய சென்னைக் கவர்னர் அவர்கள் சமுகத்திற்கு நேராக பின்வருகிறமாதிரி தந்தி * கொடுக்கவேண்டு மென்றுந் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மீட்டிங்கில் தீர்மானித்த விஷயங்களில் கனம் சென்னைக் கவர்னர் அவர்கள் சமுகத்திற்கும், கனம் சீப் சிகிரிடேரி அவர்கள் சமுகத்திற்கும் அனுப்பும் தந்திகளும் பிடிஷன்களும் சபையின் பிரதம காரியதரிசி யவர்களால் அனுப்பப்பட வேண்டுமென்று தீர்மானிப்பதுடன், தற்காலம் கெவர்ன்மெண்டாரவர்களால் கிடைத்திருக்கிற ஆர்டர் காபியும் சபையார் கொடுக்கும் தந்தியின் காபியும் சென்னை இராஜதானியைச் சார்ந்த யாவத்து ஜில்லாக்களிலுமுள்ள விஸ்வ பிராம்மண மஹா ஜன சபையார்களுக்கு அனுப்புவதுடன், தந்தியின் காபியை மெட்ருஸ் மெயில், இந்து, டயிம்ஸ், ஸ்டாண்டர்ட் முதலான பேபர்களுக்கு அனுப்பவேண்டுமென்றுந் தீர்மானிக்கலாயிற்று.

5. சபையின் பிரதம காரியதரிசியாகிய பிர்மஹ ஸ்ரீ T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியார் அவர்களும், ஸபையின் முக்கியஸ்தர்களும் சென்ற டிஸம்பர் மாதக் கடைசியில் சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண ஸபைக்கு விஜயமான காலத்தில் ஷை ஸபையார்கள் அவர்களுக்குச் செய்த வந்தனோபசாரங்களைக் கேட்டு மிக ஆனந்தங் கொண்டதாகவும், ஒருவர்க்கொருவர் ஒற்றுமை உழைப்பு விர்த்தியாகும்பொருட்டு விசேஷ நட்பு விளங்கவேண்டுமென்றும், இச்சபையார்களால் நடத்தப்படும் காரியங்களுக்கு சென்னைச் சபையோர்களும் உதவிபுரிய வேண்டுமென்றும், சென்னைச் சபையாரவர்களால் செய்யும் காரியங்களுக்கு இந்தச் சபையார் உதவிபுரிய வேண்டுமென்றும், மற்ற எங்குமுள்ள நமது சபையார்கள் யாவரும் ஒற்றுமையாயிருந்து குலாசார விஷயத்தில் சீர்திருத்தம் செய்வது தான் நமது மஹா ஜனங்களின் கடமையாகுமென்றுந் தீர்மானிப்பதுடன், சென்னைச் சபைக்கு இச்சபையின் கனம் பிரெஸிடென்ட் அவர்கள் மூலியமாக வந்தனமும் வாழ்த்தும் அனுப்பப்பட வேண்டுமென்றுந் தீர்மானிக்கலாயிற்று.

* இந்தத் தந்தி மேலே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ப. ர்.

---

## வேறு பட்டங்கள்.

### வேகம்பூர்-குமாரசிவன்

ஆச்சாரிப்பட்டம் ஒன்றேயல்லாமல், பத்தர், சாஸ்திரி, ஸ்தபதி, பாரதி, உபாத்யாயர் முதலிய பட்டங்களும் நம்மவர்களாற் கொள்ளப்பட்டிருப்புது எல்லோர்க்குந் தெரிந்த விஷயமே. பத்தர்பட்டம் சென்னையிலும், தென்னாற்காடு, வட ஆற்காடு, தஞ்சாவூர் ஜில்லாக்களிலுமே அதிகமாய் வழங்கப்படுகிறது. சாஸ்திரிப்பட்டம் வேத புராணேதிகாசங்களில் தேர்ந்தவர்களாகிய ஸ்ரீ ஆஞ்சநேய சாஸ்திரிகள், ஸ்ரீநிரஞ்சன சாஸ்திரிகள், ஸ்ரீசுப்ரமண்ய சாஸ்திரிகள் முதலிய

பண்டிதர்களாற் கொள்ளப்பட்டிருக்கிறது. ஸ்தபதிப் பட்டம் சிற்பிகளுடையது. இவர்களுடைய தொகை குறைந்து வருகிறபடியால் இப்பட்டங்கொண்டு விளங்குவோர் எண்ணிக்கையுங் குறைவுபட்டு வரலாயிற்று. பாரதிப்பட்டமோ திராவிட பண்டிதர்களுடையது. ஸ்ரீ முத்துச்சாமி பாரதியார் போன்றவர்களாலன்றி மற்றவர்களாற் கொள்ளத்தக்கதல்ல. நமது ஜாதியாரில் தமிழ்வித்வான்கள் பலரிருக்கிறதாகத் தெரிகின்றதாயினும் இவர்களில் எவரும் பாரதிபட்டங்கொண்டு விளங்கத் துணியாதது அப்பட்டத்திற் குரிய பாண்டித்திய மில்லாக் குறையே போலும்! உபாத்தியாயர் என்னும் பட்டம் பௌரோகித ஜீவனங்கொண்டிருப்போர்க்கெல்லாம் வழங்கிவருகிறது. என்றாலும் ஷை பட்டங்களில் ஒன்றேனும் ஆச்சாரிப் பட்டத்தைப் போல் அவ்வளவதிகமாய் நம்மவர்களால் ஆளப்பட்டிருக்கவில்லை. 100 பேர்களில் ஷை பட்டங் கொண்டவர்கள் 20 பேர் காணப்படுவதுங் கஷ்டம். ஆச்சாரிப்பட்டமே சுமார் 100-க்கு 80 பேர்களால் கொள்ளப்பட்டிருக்கிறது.

'இப்போது இந்தப் பட்டத்திலேற்பட்ட விகாரம் இவ்வளவு பேரையும் முக்கியமாய்ப் பாதிப்பதாயிருக்கிறது. மற்றவர்களையும் விட்டபாடில்லை. ஏனென்றால், ஜாதியபிமானம் சந்நியாசியையும் விடாதாதலினாலும், ஆச்சாரிப்பட்டம் பொதுப்பட ஜாதிப்பட்ட மாதலினாலும் இதற்கேற்பட்ட விக்கினம் இந்த ஜாதியில் ஒவ்வொருவரையும் பாதிக்குமே யல்லாமல் பாதிக்காமல் விடமாட்டாது. ஆஸாரியென்று அழைக்கப்படும் அவமானத்தைச் சகியாமல் சிலர் பட்டத்தையே நீக்கிக்கொள்வது பிசகாகத் தோன்றவில்லை. அந்தவிகாரம் பெற்று பதங்குலைவதைப்பார்க்கிலும் அஃதில்லாமலே யிருப்பது சிறப்பே யல்லவா? பட்டமிருந்தால் சரியாயிருக்கவேண்டும், அது பெருமையைக் குறிக்கவேண்டும். அப்படி யேற்பட்டால் அதைக்கொண்டு விளங்கலாம். சரிதப்பியதும் அவமானந் தருவதுமாகிய அசப்ய பட்டங் கொண்டு அவமானப்படவே வேண்டுமென்று பிடிவாதஞ் செய்தல் மூடத்தனமாகுமே யொழிய வேறல்ல. இந்த அசந்தர்ப்பத்தால் பட்டத்தை நீக்கியிருப்போரைப்பற்றிக் குறைகூற என் மனம் இடங்கொடுக்கவில்லை. ஆச்சாரிப்பட்டங் கொண்டிருந்தோர் அதற்கேற்பட்ட திரிபு காரணமாக அப்பட்டத்தைக் கைவிட்டு பத்தாதிப் பட்டங்களைக் கைக்கொள்ளலா மென்று சொல்வதற்கும் இடமில்லை. ஏனென்றால், பாரம்பரையாய்த் தமது குடும்பங்களில் வழங்கிவந்த பட்டத்தை மாற்றுவது கஷ்டம். அதிலும் பத்தாதிப் பட்டங் கொண்டு வந்தவர்களும் சமீப காலத்தில் ஆச்சாரிப் பட்டத்தை விரும்பிக்கொள்ளலானார்கள். ஆதலால், பட்டமாற் றேற்படுவது கூடாமையே. நம்மவர்கள் தமது மக்களுக்குச் சிறுதெய்வங்களின் பெயர்களையிடும் பழக்கத்தை மாற்றுவதே கூடாதவர்களாயிருக்கின்றார்கள். மாரி, கன்னி, மாடசாமி, மூக்கன் முதலிய பேர்கள் பிராமண ஜாதியார்க்கு அடுத்தனவாகுமா? ஆகுமென்று எந்தக் கண்மூடிதான் சொல்லுவான்? குலத்திற்கே அவமானந் தருவனவாகிய ஷை பெயர்களைத் தம்மக்களுக் கிடாம லொழிக்கும் புத்தியுந் தன்மையு மில்லாதவர்களா ஒரு பட்டத்தை விட்டு மற்றொரு பட்டத்தைக் கைக்கொள்ளப் போகின்றார்கள்? இல்லையில்லை, ஆதலால், உள்ள பட்டத்திற்கு ஊனம் நிற்காமல் போக்குவதே நமக்கேற்ற கடமையாயிருக்கிறது.

வந்த கஷ்டத்தை நிவர்த்தித்துக்கொள்வதற்காக ஒவ்வொருவரும் முயற்சியெடுத்தால் பழயபடி ஆச்சாரிப்பட்டத்தை யடையலாம். இதற்காக, முதலாவது ஆஸாரிப்பட்டம் காதில் விழாமலும் கண்ணிற்படாமலுங் காக்கவேண்டும். தஸ்தாவேஜுகள் முதலியவற்றில் ஆஸாரிப்பட்ட மெழுதப்பட்டால், உடனே தடுக்கவேண்டும். இவ்வித அவமானத்திற்குட்படுத்தப்படும் ஒவ்வொருவருந், தனித்தனி முறையிட வேண்டும். ஆஸாரிப்பட்டத்தைக் கொஞ்சமேனும் அங்கீகரிக்காமல் தடுக்கவேண்டும். நாம் இதைப் புறக்கணிக்கிறோமென்றும், இதனால் நமது ஜாதி முழுவதிற்குமே குறைவும் அவமானமும் ஏற்படுகிறதென்றும் அதிகாரிகள் கண்டுதெளியச் செய்யவேண்டும். நமது கருத்தை நாமே வைத்துக்கொண்டிருந்தாற் பயனில்லை. வெளிப்படுத்த வேண்டும்.

---

கல்லாதமூடரைக் காணவுமாகாது
கல்லாதமூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாதமூடர்க்குக் கல்லாதார் நல்லாராங்
கல்லாதமூடர் கருத்தறியாரே.

—திருமந்திரம்.



## பத்திரிகையும் அதன் பயனும்.

ஸ்ரீ. R. P. கோவிந்தசாமி ஆச்சாரியார், திருச்சி.

பத்திரிகை யென்பது உலகமுழுவது முள்ள சகல விஷயங்களையும் உள்ளபடி உணர்ந்து சர்வஜனங்களுக்குந் தெரிவிப்பதுந் தவிர கவர்ன்மெண்டுக்கும் குடிகளுக்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்கள், கவர்ன்மெண்டார் குடிகளை ஆளுகை செய்யும் முறைகள், குடிகள் கவர்ன்மெண்டிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய திட்டங்கள், கவர்ன்மெண்டு அதிகாரிகள் ஜனங்களிடத்தில் காட்டவேண்டிய பொறுப்பு, ஒவ்வொரு ஊரிலுமுள்ள முனிஸிபாலிடி, டிஸ்ட்ரிக்ட் போர்டு, லோகல்பண்டு, ரெயில்வே முதலியவைகளிலுள்ள நிர்வாகத்திறமை, இவைகள் ஜனசமூக சவுக்கியத்தில் கொள்ளவேண்டிய பொறுப்பு, கவர்ன்மெண்டிற்குக் குடிகள் செய்துகொள்ளும் மநுக்கள், ஆங்காங்கு ஏற்பட்டு நடைபெற்றுவரும் சபைகளின் விருத்தாந்தங்கள், தேவஸ்தானத்தார்கள் செய்யும் அநீதங்கள், ஆசார சீர்திருத்தத்திற்கு ஜனங்கள் செய்துகொள்ளும் நவீன முறை, வியாபார விருத்தி, கைத்தொழிற் பெருக்கு முதலியவைகளுக்கு வேண்டிய வழிதுறைகள், ஒவ்வொரு ஜாதியார்களும் தங்கள் தங்கள் முன்னேற்றத்திற்குச் செய்துகொள்ளுஞ் சீர்திருத்தங்கள் இவை போன்ற எண்ணிறந்த லோகோபகார விஷயங்கள் பலவற்றையும் தெரிவிப்பதாம்.

இத்தகைய சமாசாரங்களை எழுதி வெளியிடுபவர் சாதாரண அறிவைக்கொண்டிருத்தல் சாத்திய மல்ல. இவர் ஒவ்வொரு தேசத்தினுடையவும், ஒவ்வொரு ஜாதியாரினுடையவும் இயல்பு தோற்றம் நிர்மாணம் முதலியவைகளையும், தேச சரித்திரங்கள், தேசாசார மதாசார கிரந்தங்கள் முதலியவற்றையும் நுட்பமாய் ஆராய்ந்தறியும் சக்தியை உடையவராய், சுயநல மறுப்பு ஜீவகாருண்யம் பொறுமை தயை சாந்தம் ஜனோபகாரம் லோகாபிருத்தியில் சிந்தை போதிக்கும் திறமை முதலிய சற்குணம் நிறைந்தவராய், அழுக்காறு அவா வெகுளிபொறாமை கடுஞ்சொற்கூறல் புறங்கூறல் என்னும் தீயகுணங்களைக் களைந்து, சத்தியமென்னும் உன்னத ஸ்தானத்தி லமர்ந்து, சர்வஜனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பல விஷயங்களையும் எழுதி முடிப்பதற்குரிய சக்தியை உடையவராவர். இவர் சகலருக்கும்



சவுக்கியத்தையே கோரி தீமையையகற்றும் பரோபகாரச்செய்கையில் சதாவும் ஊக்கம்கொண்டிருத்தலால் ஜனசமூகத்திற்கு ஓர் இரக்ஷகராவரென்பதில் சிறிதும் தடையேயில்லை. இப்பேரறிவு, ஆராய்ச்சி, அநுபோகம், திடசித்தம் கொண்டுள்ள பத்திராதிபரால் எழுதப்படும் பத்திரிகைகளின்மேல் கவர்ன்மெண்டாரும் ஜனத்தலைவர்களுங் கண்ணும்கருத்துமாயிருந்து அவைகளில் தோன்றும் முத்துப்போன்ற கருத்துகளைத் தங்கள் சொந்தத்தில் கையாளுவதுடன், அப்பத்திரிகையைத் தங்கள் பஞ்ச அறிவிற்குரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியாகப் பாவிக்கவும் காண்கிறோம்.

இச்சிறப்பு வாய்ந்த விஷயங்கள் அடங்கிய பத்திரிகைகளை வாங்கி வாசிக்கு மொருவர்க்குத் தன்னை அறியாத மனோதிடமும் மனோல்லாசமும் அகவிழிப்பும் பெருமையும் புகழுந் தானாகவே உண்டாகப் பார்க்கிறோம். இவ்வாறு பத்திரிகைகளைச் சிலநாள் ஊக்கமாக வாசிக்கின் அவ்வூரில் நடக்கும் அக்கிரமங்களைப் பகிரங்கமாய்ப் பத்திரிகையில் பிரசுரிக்க முன்வருவாரென்பதில் தடையில்லை. இவ்வாறு பத்திரிகையில் பிரசுரிக்கப்பிரசுரிக்க, அவ்வூர் சில நாளையில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கக் காணலாம். இத்தன்மையான பத்திரிகையாலன்றோ இங்கிலாண்டு ஜர்மெனீ பிராஞ்சு முதலிய ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்கா ஜப்பான் முதலிய தேசங்களும் நற்கீர்த்தி அடைந்து மகா உன்னத பதவி பெற்று விளங்குகின்றன? அத்தேசங்களில் வசிக்கும் அற்ப சீவனம் செய்பவர்களுங்கூட, அதாவது நாவிதன் ரிக்ஷாவண்டியிழுப்போன் மூட்டை சுமப்போன் முதலிய தாழ்ந்த வகுப்பினர்களும் தேச நிலையையும் ஜனத் தலைவர்களது கருத்தையும் ஊக்கத்தையும் அறியும்பொருட்டு பத்திரிகை வாசிப்பைத் தங்கள் வேலைகளிலெல்லாம் முக்கிய வேலையாக வைத்துக்கொள்வார்களாம். ஆகாரமில்லாமல் சிலதினமிருக்கக்கூடுமாயினும் பத்திரிகை வாசிப்பில்லாமல் ஒருநாளும் இருக்கமாட்டார்களாம். இவர்களுக்குப் பத்திரிகையிலுள்ள அபிமானம் என்னவென்று சொல்லலாம்! இவர்களே இவ்வாறிருக்க மற்ற தனவந்தர்களுக்கும், வியாபாரிகளுக்கும், இன்னும் உயர்தர அந்தஸ்து வகித்துள்ளார்க்கும் கேட்பானேன்? இவ்வுண்மை யறிந்த இந்தியாவும் நவீனத் தோற்றத்திற் புகுந்து பல விஷயங்களிலும் சீரடைந்து வருவதற்குக் காரணம் பத்திரிகை விருத்தியின்பயனே,

ஆகையால், சகோதரர்களே! அறிவைப் பெருக்கி, தன்னடக்கம் பெறச் செய்விப்பதில் அரசனைப்போலும், நற்போதனை புரிவதில் குருவிற்கொப்பாகவும், சமயத்திற்குத் தக்கவாறு யோசனை கூறுவதில் மந்திரியைப்போலுமிருந்து உதவிபுரிந்து நம் வாழ்நாளைச் செழிப்புறச் செய்விக்கும் ஓர் துணைக்கருவியாயிருத்தலால், நம் குலத்தவருள் ஆங்காங்குள்ள சபைகளிலும், சபைகள் சேர்த்துக்கொண்டும், நற்போதனையைத் தரக்கூடியபத்திரிகைகளைத் தருவித்து வாசித்தும் வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாசித்துக்காட்டியும் வரவேண்டும். இது ஆங்காங்குள்ள வாசிக்கத்தெரிந்தவர்களின் கடமையேயாகும். பத்திரிகை வாசிப்பு நம் குல ஜனங்களுக்குள் பெருகப்பெருக, விஸ்வகர்மகுலப் பிரபாவத்தை உலகெங்கும் நாட்டுதற்குரிய உபாயங்களும், குலாசார சீர்திருத்தத்திற்குரிய சபைகளை நடத்தும் திறமையும், ஜீவன விருத்தியில் வியாபாரம் கைத்தொழில் முதலிய பல விஷயங்களுக்கு வேண்டிய விபரங்களுந் தெரிந்து உலகில் நற்கீர்த்தியுடன் ஜீவிக்கலாம் உலகில் எத்தேசமும் எந்த நாடும் எந்த ஜாதியாரும் நாகரீகத்தேர்ச்சி யடைவதற்குப் பத்திரிகை வாசிப்பு இன்றியமையாததா யிருத்தலால் நாம் இதில் கவனம் வைத்து அதிக ஊக்கத்துடன் உழைக்கக்கடவோம்.

---

## நமது வாசகர்கள்.

(கடிதக்காரர் தங்கள் அபிப்பிராயங்களுக்குத் தாமே உத்திரவாதிகளாவர்)

### விஸ்வகர்மகுல உபகாரி

மதறாஸ் தென் மஹாராஷ்டிர ரெயில்வே அரக்கோணத்தில் ஆக்டிங் எலெக்டிரிகல் இஞ்சினீயராயிருந்த ஆர். வி. வி. எட்ஸ் துரை என்பவர் நமது குலத்திற்கோருபகாரி. இவர் திருத்தணிகை மார்க்கமாய்க் குதிரைசவாரி சென்று திரும்பும்போது, பாதையில் வெட்டுண்டு பூமியோடு மூடப்பட்டிருந்த ஓர் அடிபனைமரத்தில் குதிரையின்கால் தவறி அகப்பட்டுக்கொள்ள, தலைகீழாய் விழுந்து மூளை அதிர்ச்சியினால் தட்சணமே ஸ்மரணை தப்பிப் போனார். உடனே ஸ்பெஷல் வண்டி மூலமாய் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து கூடுமானவரை சிகிச்சை செய்யப்பட்டும் அன்றிரவு மரணமடைந்துவிட்டனர். ஏழைகளுக்குக் காருண்யமுற்றிருந்த இவரது மரணம் நமக்கும் கஷ்டமேயாகும்.

**அரக்கோணவாசி**

### ஆரிஷேய பௌருஷேய விசாரம்.

நம்மவர்கள் தமக்குள் தங்களைப் "பௌருஷேயர்" என்றும், விப்பிரர்கள் என்றும், பிராம்மணர்களை "ஆரிஷேயர்" என்றும், புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் எழுதி வருகிறார்கள். இவ்வித பதப்பிரயோகம் இவ்விருதிறத்தாருக்குள்ளும் தங்களுக்குண்டான ஜாதிவித்தியாசத்தைக் குறிப்பதற்காகத் தொன்றுதொட்டு வழங்கிவந்ததாய்த் தோன்றவில்லை. இப்போதாவது உபயத்திராளும் ஒத்துக்கொள்ளக்கூடிய அர்த்தத்தைத் தரத்தக்கதாயுமில்லை. இப்பதப்பிரயோகங்கள் வழங்குவது நமது திராவிட சகோதரர்களுக்குமட்டுந்தானென்றாலோ அல்ல. ஆந்திர சகோதரர்களுக்குள்ளும் உண்டு. அவர்களுக்குள்ளேதான் முதலில் வழங்கி அதையே இவர்களும் பின்பற்றியிருக்கலாம். இப்பதங்களின் அர்த்தத்தையும் பிரயோகத்தின் காரணத்தையும் விசாரிக்குமிடத்து, "ஆரிஷேயர்" என்றால் ரிஷிமூலமாய்ப் பிறந்தவர் என்றும்., விப்பிரர்கள் ரிஷிகளின் மூலமாய்ப் பிறந்தவர்களாதலால் அவர்களுக்கு அப்பெயர் வந்ததென்றும், "பௌருஷேயர்" என்றால் புருஷன் பெயரையுடைய பிரம்மாவினால் உண்டானவர்களென்றும் நம்மவர்கள் ஷை புருஷன் மூலமாய்ப் பிறந்தவர்களாதலால் பௌருஷேயர்களெனப்படுவார்களென்றும் தோன்றுகிறது. நம்மவர்களில் குலாபிமான காரியங்களில் ஈடுபட்டுழைக்கும் நம் ஆந்திரசகோதரர்களான சாஸ்திரிகளும் இப்படியே சொல்லுகிறார்கள். பதங்களின் அர்த்தத்தில் சம்மதிக்கத்தக்கதாயிருந்தாலும் பிரயோகத்தின் காரணத்தில் சந்தேகிக்கத்தக்கதாயிருக்கிறது. "ஆரிஷேயர்" விப்பிரர்களானால் நம்மவர்கள் சாநகரிஷி, சநாதநரிஷி, அபுவநசரிஷி, பிரத்னசரிஷி, சுபர்ணசரிஷி என்னும் ரிஷிகோத்திரஸ்தர்களென்றும், பஞ்சாரிஷேயம், திரியாரிஷேயம் என்னும் ஆரிஷேய பிரவரமுடையவரென்றும் சொல்வதற்கிடமில்லை. ஆகவே, தொன்றுதொட்டு நம்மவர்களுக்குள் வழங்கிவந்த ஆரிஷேய கோத்திரமும் ஆரிஷேய பிரவரமும் நம்மவர்களை விட்டு நீங்கும். அவை நீங்கில் பிராம்மணீக உரிமையில்லை. அஃதின்றேல் அதைக் குறித்து நாமெல்லாம் படும் பிரயாசை வீணும். பௌருஷேயர் நம்மவர்களானால் விப்பிரர்கள் பிரம்ம சிருஷ்டிக்குத் தப்பினவர்களாகிறார்கள். அப்படித் தப்பினவர்களானால் அவர்கள் பிரம்மாவுக்குச் சமானர்களும், பிரம்ம சிருஷ்டிக்குட்பட்ட நம்மவர்களுக்கு மேம்பட்டவர்களுமாகிறார்கள். இக்காரணங்களால் ஆரிஷேயர் என்னும் சொல்லுரிமை விப்பிரர்களுக்கு மாத்திர மில்லாமல் நம்மவர்களுக்கும், பௌருஷேயர் என்னும் சொல்லுரிமை நம்மவர்களுக்கு மாத்திரமில்லாமல் விப்பிரர்களுக்கும் உண்டாகாமல் போகாது. இவ்விருதிறத்தாருக்கும் இவ்விருவித பதப்பிரயோகமும் பொருந்தும். இல்லாவிட்டால் அவ்வியாத்தியும் அதிவியாத்தியுமுண்டாகும். இதைக்குறித்து சாஸ்திரிகளான நம் ஆந்திர சகோதரர்களை விசாரித்தபோது அவர்கள் ஆரம்பத்தில் "ஆரிஷேயர்" விப்பிரர்களென்றும் "பௌருஷேயர்" நம்மவர்களென்றும் சொல்லி, முடிவில் ஷை பதப்பிரயோகங்கள் பொருந்தாதன வென்றுரைத்து நம்மவர்களுக்குரிய அபிதானத்தில் மயங்கி வாளா போயினர். "பௌருஷேயர்" என்பவர்கள் பிரம்மபுத்திரர்களான பிரஜாபதிகளின் வழியில் வந்தவர்கள் என்றால் விப்பிரர்களுக்குள்ளும் பலர் அந்த பிரஜாபதிகளின் கோத்திரஸ்தர்கள் இருக்கிறார்கள். இதனாலும் பொருந்தவில்லை. ஆகையால் இதைக் கண்ணுறும் நண்பர்கள் ஷை பதப்பிரயோகமே பொருத்தமானதென்று தீர்மானிக்கத்தக்க முகாந்தரங்களிருந்தால் அவற்றையாயினும் மேல்கண்டவற்றை அனுசரித்துத் தத்தம் அபிப்பிராயத்தையாயினும் இப்பத்திரிகை வாயிலாய் வெளியிட்டு சந்தேகத்தை நிவர்த்தி செய்வார்களென்று மிகவும் பிரார்த்திக்கிறேன்.

**அத்தியாபக - லிங்காச்சாரி.**

---

### ஆனந்தா வருஷ வாக்கிய பஞ்சாங்கம்.

மதுரை விஸ்வப்ராம்ஹண சபையோர்கள் தீர்மானித்த பிரகாரம் பஞ்சப்ரமாக்களே பஞ்சாங்க ரூபமானபடியால் நமது வம்சத்தினர்களாற் கெணிக்கவேணுமென்ற கருத்திற்கிணங்க நாங்கள் வருஷந்தோறும் பஞ்சாங்கங்கள் பிரசுரிப்பதாகக் கருதி இப்போது ஆனந்த வருஷத்திற்கென்றே கெணித்த பஞ்சாங்கம் 11-பாரத்தில் அரிய பெரிய சங்கதிகள் பலவும் இதில் விசேஷமாக விளக்கப் பெற்றுத் தயாராயிருக்கிறபடியால், விஸ்வப்ராம்ஹண குலத்தில் அவதார புருஷர்களான அபிமானிகளுடைய குடும்பங்களொவ்வொன்றிலும் இப்பஞ்சாங்க மொவ்வொன்றிருக்க வேண்டியது அத்யாவசியமென்றே வேண்டுகிறோம். ஒரு பஞ்சாங்கம் வேண்டியவர்கள் இரண்டணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டியது. *

**சார்ஜ்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பஞ்சாங்கம் | 1 | ... | ... | ரூ. | 0 | 2 | 0 |
| ஷை டஜன் | 1 | ... | ... | ரூ. | 1 | 0 | 0 |
| ஷை | 100 | ... | ... | ரூ. | 8 | 0 | 0 |
| ஷை | 1000 | ... | ... | ரூ. | 75 | 0 | 0 |

வி. பி. சார்ச் பிரத்தியேகம்

**உபாத்தியாயர் S. நாகலிங்காச்சாரி,**

விஸ்வப்ராம்ஹண மேட்டுத்தெரு, மதுரை

---

### சுஜாதி அசட்டையைத் தீர்க்கும் வழி.

நமது வம்சத்தில் தமிழும் அதிகமாக வாசிப்பில்லை. சபைப்பத்திரிகை அனைத்தையும் வரவழைத்து மூன்று வருஷகாலமாய் வம்சத்தவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம். அதை நம்மவர்கள் கவனிக்கிறதில்லை. சிலரைச் சேர்த்துப் பேசுங்கால், சிலர் அதை நிந்தித்துக் கலகம் விளைப்பதும், சிலர் நாங்கள் உயர்ந்த ஜாதியென்று சொல்வதும், சிலர் இதனால் பட்டிக்காட்டில் கஷ்டம் வந்து ஊரைவிட்டு ஓடும்படி நேரிடுகிறது, அதனால் பழயபடி இருந்தால் சிலாக்கியமென்றும் சொல்லுகிறார்கள். பந்துக்களில் கக்ஷிகள் உண்டாகின்றன. ஆனதால், இதற்கு ஐங்குல நாட்டாண்மை வைத்துக்கொண்டாவது, அல்லது முன்னிருந்த ஐங்குல நாட்டாண்மைக்காரரையும் அவர்களுடன் சாஸ்திரிகளிரண்டுபேரும் ஒரு சேவகனும் கிராமந்தோறுந் தெரியப்படுத்தி ஓ ரூரில் முகாம் செய்து அந்தந்த ஊரில் ஒரு நாட்டாண்மையை யேற்படுத்தி அவராலே ஆசார சீர்திருத்தம் வரும்படி ஒப்புவித்துவிட்டால் ஒற்றுமை யேற்படும். இரண்டு வருஷத்துக்குள் சீர்திருத்தஞ் செய்யலாம். அல்லது, சுவாமியார்கள் குருகாணிக்கை வாங்கிக்கொண்டு வருகிறார்களே, அவர்களையே திருத்தஞ் செய்துகொண்டு வரச் சொன்னால் நமக்கு ஒரு ஆடங்கம் இல்லை. ஒவ்வொரு நாட்டையும் அவர்களே திருத்த முடியும். அப்படிச் செய்யாவிட்டால் ஒன்றும் முடியாது.

**பு. தி. பௌ. சுப்பராய ஆச்சாரி.**

---

* 'விஸ்வகர்மன்' ஆபீசிலுங் கிடைக்கும்.

## உடை யணிகள்.

நமது ஜாதியாருடைய நடையுடைகளை மிகவுஞ் சீர்திருத்தப்பட வேண்டியனவாயிருக்கின்றன. நாகரிக வாழ்க்கைக்கு ஒத்தனவாக இவை காணப்படவில்லை. நமது ஜாதியாரே நாகரீகத்தை யுண்டுபண்ணுகிறவர்களாகச் சொல்லப்படுகிறது. ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் வேண்டிய அலங்கார வஸ்துக்களை யெல்லாஞ் செய்கின்றவர்கள் இவர்களேயா யிருக்கிறார்கள். மற்றவர்களை யெல்லாம் அலங்காரஞ் செய்து அழகுப்படுத்தும் இவர்கள் தாம் அகோரமாகவும் அசங்கியமாகவுமிருப்பதென்றால், இது எவ்வளவு குறைவான நிலையாகும்? நமது ஜாதியாருடைய பெருமை முக்கியமாய்ப் பெண்களாலே குறைவுபடுகிறதென்று சொல்லலாம். புருஷர்கள் பார்வைக்கு ஒருவாறிருக்கிறார்கள். ஆனால், இவர்களிலும் மீசைக்கு எண்ணெயிட்டு வளர்த்து வருவோரும், கீழ் வேட்டியைச் சுற்றிச் சுற்றிக் கட்டி யிருப்போரும், தலையிரைச் சிலிப்பிக்கொண்டிருப்போரும், உடம்பில் துணிபோட்டு மறையாமல் திறந்துகொண்டு திரிவோரும் அநேகரிருக்கிறார்கள். என்றாலும், ஸ்திரீகளின் நிலைமை இதனிலுங் கேவலமாயிருக்கின்றது. பெரும்பாலார் மடிகட்டுவதே யில்லை. மடிகட்டிக்கொள்வோருடைய உடுபாவனையும் பார்ப்பதற்கு அசங்கியமாயிருக்கிறதே யொழிய லக்ஷணமாயிருக்கவில்லை. நமது பெண்களோ இயற்கையிலேயே லக்ஷணங் குறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். இந்தக் குறையை நிறைவுப்படுத்தக்கூடிய மாதிரியாக உடையணிந்து ஆபரணம் பூண்டாலல்லவா மற்றவர்கள் பரிகாசம் பண்ணாதிருப்பார்கள்? உடையணியும் அவலக்ஷணத்தோடு ஆபரணங்களிலும் பல அவலக்ஷணங்களை யுண்டுபண்ணிக்கொள்ளுகிறார்கள். இந்த அவலக்ஷணங்களெல்லாம் நம்மவர்களுடைய கண்களுக்குப் புலப்படுவதில்லையோ? அண்டை யயல்பெண்களைப் பார்த்தாகிலும் புத்திவரவேண்டுமே! அதுவுங் காணோம். நூறு பெண்களுக்கிடையே நமதுகுலப் பெண்ணொருத்தியிருப்பாளானால், அவளை ஒரு நொடியிலேயே பிறர் கண்ணுக்குக் காட்டிக்கொடுக்கும்படியான (அவ) லக்ஷணம் அவளிடத்தில் தனித்திருக்கிறது. மற்ற ஜாதியாரெல்லாம் வெறுத்துத் தள்ளிவிட்ட நகைகளையெல்லாம் இவர்கள் விரும்பி அணிந்துகொள்ளுகிறார்கள். மற்றவர்களோ மாதத்திற்கு மாதம் மாறி மாறி நாகரிகத்திற்குத் தக்கபடி நடந்துகொண்டுவர, இவர்கள் எழுநூறு வருஷங்களுக்குமுன் எந்தவிதமா யிருந்தார்களோ அந்த நிலையிலேயே இன்று மிருக்கிறார்கள். இது ஒரு பெருங் குறையல்லவா? இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு முதலாளிகள் கவலைகொள்ளவேண்டாமா?

தேனி-விஸ்வபத்ர ஆச்சாரி.

---

## தீபாவளித் தண்டல்.

**மாயவரம்.**—இவ்வூரில் இத்தண்டலுக்கு இது தான் முதல் வருஷம். இது விஷயமாக உதவிசெய்ய அநேகருக்கு முன்னமே தெரிவித்திருந்தும் யாது காரணத்தினாலேயோ சிரத்தையெடுக்க அஞ்சினார்கள். ஆனால், என் குடும்ப காரியமாக இவ்வூருக்குப் போக நேர்ந்தது அந்த சமயம் தீபாவளி நோட்டீசுகள் கைக்கெட்டியிருந்தன. இவ்வூர் பெரியதனக்காரர்களை நேரில் கண்டு பேசினபோது, இத்தண்டல் செய்வது அச்சமயம் கூடாமையென்று அறிவித்தார்கள். அதன் மேல் நானே தயாரித்துக்கொண்டுபோயிருந்த ஒரு சிறு உண்டியில் தண்டினேன். கொரநாடு நாட்டாண்மை ஸ்ரீ பாவாடை பத்தர், ஸ்ரீ அனந்தபத்தர், ஸ்ரீ கோவிந்தபத்தர், ஸ்ரீ பாலகுருஸ்வாமி ஆச்சாரி, மரத்துறை ஸ்ரீ சாமிபத்தர், கடாரங்கொண்டாள் ஸ்ரீ சுப்பிரமணியபத்தர், மாயவரம் நாட்டாண்மை ஸ்ரீ சபாபதி பத்தர், ஸ்ரீ அண்ணாமலைபத்தர், உபாத்தியாயர் வள்ளலகரம் ஸ்ரீ வெங்கடசாமிபத்தர் முதலான அநேகர் உதவிபுரிந்தனர்.

இவர்களுள் கொரநாடு ஸ்ரீ கா. பாவாடைபத்தர் ரூபாய் இரண்டும், ஸ்ரீ அனந்தபத்தர் ரூபாய் ஒன்றும் அளித்தார்கள். இவர்களிருவரும் இவ்வூரில் தகுந்த அந்தஸ்தும் உதாரகுணமுமுள்ள சிலர்கள். மாயவரம் நாட்டாண்மை ஸ்ரீ சபாபதிபத்தர் அவர்களையும் இவ்விதமே சொல்லவேண்டும். இம்மூவர்கள் உதவியினால் நமது சபையும் குலமும் விருத்திக்கு வருமென்று நம்பலாம்.

**திருச்சி.**—சென்றவருஷம் இவ்வூரில் வசூலித்த தொகை ரூ. 9 0 0; இவ்வருஷம் ரூ. 17 1 6 வசூலாயிற்று. இதனாலேயே சென்ற வருஷத்தைக் காட்டிலும் இவ்வூரார் குலாபிமானத்தில் மிக ஊக்க



மாய் உழைக்கிறார்களென்று தெற்றென விளங்குகிறது. இக்கைங்கர்யத்தில் தேகப்பிரயாசை யெடுத்துக்கொள்ள அநேக உத்தமர்களும் உடன்பட்டிருக்கிறார்கள்.

வசூலான தொகையின் விபரம்.—

| | | | |
|---|---|---|---|
| திருச்சிகோட்டை | 8 | 11 | 9 |
| ஸ்ரீரங்கம் | 2 | 15 | 6 |
| இடத் தெரு | 2 | 9 | 9 |
| உறையூர் | 1 | 11 | 0 |
| திருவானைக்காவல் | 0 | 13 | 6 |
| பீமநாயகன்பாளையம் | 0 | 4 | 0 |
| ஆக | 17 | 1 | 6 |

இது விஷயமாக தேக உதவி புரிந்த அறுப்புக்கோட்டை ஸ்ரீ ந. மு. முனியய்யாச்சாரியார், உறையூர் ஸ்ரீ A. சுப்பிரமணிய ஆச்சாரியார், இடத்தெரு ஸ்ரீ துரைசாமி ஆச்சாரியார், ஸ்ரீ சின்னசாமி ஆச்சாரியார், திருவானைக்காவல் ஸ்ரீ ஜம்புலிங்காச்சாரியார் அவர்கட்கும், நமது குலத்தில் அபிமானமுள்ள இரத்தின வியாபாரம் ஸ்ரீ இரத்தினம் பிள்ளையவர்கட்கும் நானும் குலாபிமானிகளும் வந்தனஞ் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ரூபா ஒன்று கொடுத்த உத்தமர் திருநாமங்களாவன:—

ஸ்ரீ M. துரைசாமி ஆச்சாரியார், ஸ்ரீ T. S. கணபதி ஆச்சாரியார், ஸ்ரீ முருகனாச்சாரியார்.

தி. ப. வே. ஆச்சார்ய.

---

## சில குறிப்புகள்.

நமக்கும் வித்தைக்கும் சத்துரு ஏற்பட்டதேனென்றால், ஸ்திரீகளுக்குக் கல்வி யிருக்கும்பக்ஷத்தில் தன் வயிற்றில் பிறந்த மைந்தர்களை அவசியம் படிக்க வைக்கவேண்டுமென்ற அவா மேலிடும். உதாரணம்—பிராம்மணர்கள் வித்தையில் முதல் தரமா யிருப்பதற்குக் காரணம் ஆடவர்களில்லாத காலத்தில் ஸ்திரீகள் தமது குழந்தைகளை வாசிக்கச் செய்கிறார்கள். கனம் ஜஸ்டிஸ் லேட் முத்துசாமி அய்யரவர்கள், லேட் திவான் சேஷய்ய சாஸ்திரியாரவர்கள், மற்றும் பெரியோர்களுடைய சரித்திரங்களை ஆராயுங்கால் தங்களுடைய மாதாக்களாலேயே வாசிப்பிக்கப் பட்டதாகத் தெரிகிறது. வாசிப்பிற்குப் பெண்பாலாகிய ஸரஸ்வதியே ஸாந்நித்தியமா யிருக்க, நம்மினத்தவர்களில் பெண்களுக்கு வாசிப்புக் கூடாது என்றும், ஆண் பிள்ளைகளை வாசிக்க வைக்கவேணுமென்ற அவா ஆடவர்களுக்கு ஏற்பட்டாலும், பிள்ளையைக் கெடுக்கவா பார்க்கிறீர்கள், வேலை செய்தாலும் சம்பாதிப்பான் என்றும் வாதாடுகிறார்கள்.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்குள் தங்களினத்தவர்களில் ஏழைகளுக்குக் குழந்தைகள் ஜனித்தவுடன் தனவந்தாள் மேற்படி கிருஹத்திற் போய் விசாரிக்குங்கால் ஐந்தோ பத்தோ ரூபாய்களைத் தலைவீதங்களாகக் கொடுத்து வருகிறார்கள். முதல் நாளே குறைந்தது ரூ 500 ஆவது சேர்ந்து விடுகிறது. அதை அப்படியே வட்டிக்கு விடும்பக்ஷத்தில் 16-வது ஆண்டில் தொகை ஜாஸ்தியாய் விடுகிறது. அதில் தகப்பன் கொஞ்சம் தொகையைக் கொடுத்து முதல் முதலில் வியாபாரம் செய்யச் சொல்லுகிறான். சரியாய் நடத்துவாராகில், பிறகு லக்ஷக்கணக்காய்ப் பணத்தைப் போட்டு வியாபாரம் நடைபெறச் செய்யவேண்டிய வழியைக் காட்டிவிடுகிறார்கள்.

ஸ்கூல் இலவசப் படிப்பு விஷயமாய் கவர்ண்மெண்டுக்கு மிமோராண்டம் தயார் செய்து அனுப்புவோமென்றாலும் பாடசாலைக்கு மாணாக்கர்களை அனுப்புவார்களோ என்ற சந்தேகம்மேலிடுகிறது. இதுகளெல்லாம் பேபரில் விஸ்தரித்து எழுதுவதற்கு இடம் கொடாதென்று நினைத்து சுருக்கலாயிற்று.

இக்காலத்தில் யாவத் ஜாதிகளும் கலந்து ஒத்துழைக்க வேணுமென்று போராடிக்கொண்டிருக்க, நம் இனத்தவர்களுக்குள்ளேயே ஜாதியைவிட்டுத் தள்ளிவிட்டோமென்று பிதற்றுகிறார்கள். இப்படிச் சொல்வதால் ஒற்றுமைச் சிதைவு ஏற்படும். ஏனென்றால், ஸ்நானம் பண்ணாத ஒருவனையோ அல்லது ஆசார வழிகளில் சரியில்லாத ஒருவனையோ நாம் கூடவைத்துக்கொண்டு போஜனம்செய்தால்மாத்திரம் அவனுக்கே மனஸுக்கு ஒருவிதமான திகிலடைந்து மறுநாள் முதற்கொண்டு கொஞ்சம் கைகால்களைச் சுத்திசெய்ய ஆரம்பிக்கிறான். இப்படிக் கொஞ்ச தினத்திற்குள் ஆசாரமுடையவனாகிறான். நாம் அடியோடு விலக்கும் பக்ஷத்தில் பூணூலையும் எடுத்துவிட்டு இதர மதத்திலிறங்கி அடியோடு ஜாதிப்பிரஷ்டனாய்விடுகிறான். இது நமக்கேஹானியை விளைவிக்கிறது.

**சதானந்தன்.**

## ஆரோக்ய போதம்.

**விஷச்சுரத்திற்கு மருந்து.**—டாக்டர் மாசிலாமணி முதலியார் "லோகோபகாரி" யில் இவ்வாறெழுதுகிறார்:—

கொய்னா வென்பது சுரப்பட்டையைத் தவிர வேறன்று. இங்கிலீஷில் இது சின்கோனா பார்க்கென்னப் படுகின்றது. கொய்னா வென்பது நமது முன்னோர் கையாண்டுவந்த சுரப்பட்டையேயாம். இவர்கள் அதன் சத்தை எடுத்து உபயோகிக்கிறார்கள். இஃதொழிய மருந்து வித்தியாசமின்று. இங்கிலீஷ் வைத்தியர்கள் சுரப்பட்டை ஒன்றை மாத்திரம் எடுத்துக்கொண்டார்களேயொழிய மற்ற மருந்துகளைப் பார்த்தவர்களுமன்று, கேட்டவர்களுமன்று. ஆதலால் தான் சுரத்திற்குக் கொய்னாவைத் தவிர வேறு மருந்து கிடையாது என்று சொல்லத் துணிந்தனர். சுரப்பட்டையைக் காட்டிலும் அதிசீக்கிரத்தில் வியாதியைச் சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களுள் சிறந்தவை காப்வெப் என்னும் ஒட்டடை, தும்பைவேர், படிகாரம், அவுரியின் வேர், வேம்பு என்பனவாம். இவைகளின் முன் கொய்னா பயனற்றதாம்; ஏனென்றால், விஷசுரமுண்டானவர்களுக்குக் கொய்னா கொடுப்பதைவிட அடியில் வரும் கஷாயத்தைக் கொடுத்தால் ஒரே தடவையில் சுரம் நின்றுவிடும்.

வராகனெடை.

| | | | |
|---|---|---|---|
| லவங்கப்பட்டை | 2 | விரைத்திராட்சி | 3 |
| சுரப்பட்டை | 2 | காசினிவிரை | 3 |
| நிலவேம்பு | 1 | தும்பைவேர் | 1 |
| வெள்ளரிவிரை | 3 | | |

இவைகளை ஒன்றிரண்டாய் இடித்து $1\frac{1}{2}$-ஆழாக்குச் சலம் விட்டு $\frac{3}{4}$ ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சி வடித்து நாள் ஒன்றுக்கு 3 வேளை வேளைக்கு ஒரு அவுன்சு விகிதம் சாப்பிடவேண்டும். இப்படி இரண்டு மூன்று நாள் சாப்பிட்டால், முதல் நாளிலேயே சுரம் நின்றுவிடும். ஆனால் கஷாயம் ஒவ்வொருநாளும் முன் சொல்லியிருக்கும் அளவுப்படி புதிதாயிருக்கவேண்டும்.

## தொழிற் றுறைகள்.

**டாடா பட்டுச்சாலை, பெங்களூர்.**—ஜம்செட்ஜி டாடா அவர்களுடைய உதாரகுணப்பயனாகச் சென்ற 10 வருஷங்களாய் நடைபெற்று வரும் ஷை பட்டுச்சாலையானது இந்தியநாடு முழுவதிலும் தன்னைப் பற்றி விளங்குகிறது. இதன் உத்தியோகஸ்தர்கள் சமீபத்தில் 20-லிருந்து 84 பேராக்கப்பட்டனர். சென்ற வருஷத்தில் 4 ஐரோப்பியர்களும் 41 இந்தியரும் இதில் பட்டுத்தொழில் கற்றுக்கொண்டார்கள். கனம் மைசூர் மகாராஜா அவர்களும் அவர் சகோதரராகிய கனம் யுவராஜா அவர்களும் இப்பட்டுச்சாலையபிவிருத்தியில் மிகுந்த சிரத்தைகாட்டி வருகிறார்கள்.

**சூரியகிரணப்பயன்.** — நீராவியை வசப்படுத்தி ரயில்வேக்கள் முதலியவற்றிற்கு உபயோகிப்பது போல் சூரிய கிரணங்களைக் கட்டுப்படுத்தி நீர்ப்பாய்ச்சல் முதலியவற்றிற்குபயோகிக்குஞ் சாதனத்தைக் கீழ் ஆப்ரிக்காவிலுள்ள ஓர் விஞ்ஞான சாஸ்திரி கண்டுபிடித்திருக்கின்றனர். உஷ்ணப்பிரதேசங்களில் எரிக்கும் வெயில் வீண்போகாதபடி இன்னுஞ் சில வருஷங்களில் பல காரியங்களுக்கு விநியோகிக்கப்படுமென்று சொல்லப்படுகிறது. விஞ்ஞான சாஸ்திராராய்ச்சிப் பெருமைகளைக் கண்டீர்களா? இச்சாஸ்திரத்தின் முன்னும், இச்சாஸ்திரபண்டிதர்கள் முன்னும் நமது சிற்பங்களும் அவையறிந்தாரும் என்செய வல்லாரோ அறியோம். இவை, எட்டுச்சுரைக்காய்களேயாய்க் கூட்டுக்குதவா திருக்கின்றனவென்பதை மறுத்துரைக்கவல்லார் யாரே! நாமோ சிற்பங்களைத்தேடி வாசிக்கவு மாட்டோம், ஆங்கிலங்கற்று விஞ்ஞான பண்டிதர்களாகவு மாட்டோம். சிற்பங்கள் வாசிக்க சமஸ்கிருத ஞானமில்லை; விஞ்ஞான சாஸ்திரங்கள் வாசிக்க ஆங்கிலக்கல்வியில்லை. இந்த ஸ்திதியிலேயே நமக்கு இறுமாப்பு அதிக மிருக்குமாயின் ஈடேறுவதெப்படியோ?

---

இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்—எல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடையாளன்
பொறுக்கும் பொறையே பொறை. —நாலடி



## மற்றவர் மாட்சி.

**கோஜா ஜாதியார்க்குதவி.**—மிஸ்டர் கர்மாலி ஹஸ்ஸான் என்னும் புண்ணியர் கோஜா ஜாதீய தர்மங்களுக்கென்று ரூ 55,000 மும், திக்கற்ற கோஜா குடும்ப சம்ரக்ஷண நிதிக்காக ரூ 22,000 மும் கொடுத்திருக்கிறார். லட்சுமி கடாக்ஷம் பெற்றவர்கள் தங்கள்குலாபிமானத்தை இவ்விதமாகவன்றோ காட்டவேண்டும்?

**அத்வைத கான்பரன்ஸ், காராஸ்திரி.**—ஸ்ரீலஸ்ரீ சொரூபாநந்தேந்திர சரஸ்வதி சுவாமிகளுடைய அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்ற ஷை மகாஜனக் கூட்டத்தில், சூத்திர பாஷியம், உபநிஷத் பாஷியம், அத்வைத சித்தி, கௌடப் பிரம்மானந்த முதலிய நூற்களில் பரீக்ஷைகள் நடந்தன. தேறியவர்களுக்கு நல்ல வெகுமதிகள் கொடுக்கப்பட்டன. அத்வைத மதக் கிரந்தங்களை வித்தியார்த்திகள் வாசிப்பதற்கு இஃதோர் தூண்டுதலாயிருக்கிறது.

**பவஸார க்ஷத்திரிய சங்கம்.**—மைசூரில் நடந்த இச்சங்கத்தாருடைய கடந்த மகாஜனக்கூட்டத்தில் வெளியிடப்பட்ட கீழ்க்கண்ட அபிப்பிராயம் மிகச் சிலாக்கியமானதா யிருக்கிறது: "இச்சாதியார் மற்றெவர்க்கேனும் உயர்ந்தவர்களென்று வாதாடுவது இக்கூட்டத்தின் கருத்தல்ல. ஜாதியுயர்வு தாழ்வுகளைப் பற்றிய விசாரமே எமக்குக் கிடையாது. காலதேசவர்த்தமானங்களுக்கேற்றபடி நாகரிக வுணர்ச்சி யடைந்து, ஆசாரங்களில் சீர்திருத்தம் பெற்று, கல்வியபிவிருத்தி கொண்டு கைத்தொழில்களில் சிறப்படையும்படி இந்த ஜாதியாருக்கு வழி காட்டுவதே இம்மகாஜனக் கூட்டத்தின் கொள்கையாகும்."—இவ்வபிப்பிராயத்தோடு இவர்கள் உழைப்பதினாலேதான் எல்லா ஜாதியார்களும் இவர்களுக் குதவியாயிருந்து வருகிறார்கள்.

**பாடியா ஜாதியார்.**—இங்கிலாந்திற்குச் சென்று திரும்பிய ஷை ஜாதியார்கள் மூவரை ஜாதிப்பிரஷ்டர்களாக்குவதா அன்றி ஜாதிக்குள் சேர்த்துக்கொள்வதா வென்பதைப்பற்றி அந்த ஜாதியார்களுக்குள் பெருங் குழப்பமுண்டாயிற்று. பழைய கக்ஷியார்கள் சேர்க்கலாகாதென்றும், புதுக்கக்ஷியார் சேர்க்கலாமென்றும் வாதாடுவதில் ஷை ஜாதி இரு பிரிவுபட்டு நிற்கிறது. கற்றறிந்தவர்களெல்லாம் புதுக்கக்ஷியிலும் மற்றவர்களெல்லாம் பழயகக்ஷியிலுஞ் சேர்ந்திருக்கின்றனர். தமது ஜாதியார் கைத்தொழில்களிற் சிறப்படையச் செய்வதற்காகப் புதுக்கக்ஷியார் நூதனமாய் ஒரு நிதி சேர்த்துவருகிறார்கள். இந்நிதிக்கு இதுவரையிலும் ரூ. 85,000 சேர்ந்திருக்கிறது. இச்சாதியார் கட்டாயமாக விர்த்தியடைவார்களென்பதிற் சந்தேகமுண்டோ?

**ஸ்ரீ வெங்கடேச பாடசாலை, ஈரோடு.**—இப்பெயருடன் ஒரு மத்வசித்தாந்த பாடசாலை சமீபத்திலேற்பட்டது. பிரகரண மாணவர்களாக ஐவர் சேர்ந்தால், தலைமைப்பண்டிதருடையசம்பளத்தைத் தாமேற்றுக்கொள்வதாக ஸ்ரீ உத்தராதிமடச் சுவாமியார் வாக்களித்திருக்கிறார்கள். ஸ்ரீ ராகவேந்திர சுவாமி மடத்துச் சாமியார் தற்காலம் ரூபா 25 மாதந்தோறுங் கொடுத்துவருகிறார். இத்தொகையை இன்னு மதிகப்படுத்துவதாக ஷையார் வாக்களித்திருக்கிறார். வேறு கனவான்களும் இப்பாடசாலைக்கு உதவிசெய்து வருகின்றனர். வேதாத்தியயனத்திற் கென்றும் பௌரோகிதத்திற் கென்றும் தனிவகுப்புகளுண்டு. மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளங் கொடுக்கப்படுகிறது. இங்கிலீஷ் பாஷையுங் கற்றுக்கொடுக்கப்படுகிறது. கூடிய விரைவில், மாணவர்களுக்குத் தங்குமிடமும் போஜன வசதிகளும் அமைக்கப்படுமென்று தெரிகிறது. ஷை ஏற்பாடுகளெல்லாம் பாடசாலை கெடாமல் ஒழுங்காய் நடைபெறுதற்கு இன்றியமையாத சாதனங்களேயல்லவா?

**தொழிற்கல்வி சகாயம்.**—சென்னைச் சுதேசிய நிதிக் கைத்தொழிற் சங்கத்தார் 1914-வது வருஷத்தில் கீழ்க்கண்டவர்களுக்கு உதவிபுரிந்திருக்கிறார்கள். ஸ்ரீ J. M. நடராஜபிள்ளை, ஸ்ரீ T R. கிருஷ்ணராவ், ஸ்ரீ M. V. ஜெகந்நாதம்-இவர்கள் பம்பாய் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டில் எலக்ட்டிரிகல் இஞ்சினீரிங்கும் மெகானிகல் இஞ்சினீரிங்கும் படித்து முடிக்கத் தனித்தனி ரூபா 180; ஸ்ரீ. E. வெங்கடராவ் நாயுடுக்கு கிளாஸ்கோவில் இஞ்சினீரிங் கற்றுக்கொள்ள ரூ. 720; பூஸாவில் கண்ணாடி வேலை கற்றுக்கொண்ட ஸ்ரீ M. V. சுந்தரேசஐயர் ஷை தொழிலைச் சம்பூரணமாய்த் தெரிந்துகொள்ள ஜப்பான் செல்வதற்குப் பிரயாணச்செலவு ரூ. 100; நமது தேசத்தாரைத் தொழின்முறைகளிற் பழக்குவிப்பதற்கான கல்வி கற்பிக்கும் மசூலிப்பட்டணத்து ஆந்திரஜாதீய கலாசாலைக்கு ரூ. 360. ஷை சங்கத்தார் எல்லா ஜாதியார்க்கும் உதவிசெய்யச் சித்தமாயிருக்கிறார்கள். நம்மவர்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்னும் நாட்டம் இவர்களுக்குப் பெரிது முண்டு. இச்சங்கத்தாருடைய சகாயம் கோரும் சுஜாதியார் நமதுசபைக் கறிவிப்பார்களாக.

## விசேஷ வர்த்தமானம்.

**புகைமரம்.**—ஜப்பான் நாட்டு ஓமேரூவென்னுமிடத்தில் புகை மாமொன்றிருக்கிறது. சூரியன் அஸ்தமித்ததும் அது புகைக்க ஆரம்பித்து விடுகிறது.

*
* *

**யுக்தப்பிராயம்.**—ஒவ்வொரு ரஷியனும் 26 வயதாகுமட்டும் யுக்தபிராயமுடையவனாகக் கொள்ளப்படுவதில்லை அதுவரையிலும் அவன் வருமானத்தில் ஐந்தில் நான்குபாகம் அவன் பெற்றோரைச்சேரும். நமது நாட்டில் 18ல் யுக்தப்பிராயம் வந்து விடுகிறது. நமது ஜாதியிலோ 5 வயதிலேயே வருகிறது. அப்போது முதல் பிள்ளைகள் சம்பாதிக்கத் தலைப்பட்டு, பெற்றோரை அசட்டை செய்யப் பழகி வருகிறார்கள்.

*
* *

**மேல்நாட்டார் சஞ்சாரம்.** — இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குச் சென்ற **துனிஸியன்** என்னுங் கப்பற் பிரயாணிகளில் 100-க்கு 75 பேர் ஸ்திரீகளும் அவர்கள் கைக்குழந்தைகளுமாயிருந்தனர். இவர்களிற் சிலர் தமது கணவரைச்சேரப் போகிறவர்களாகவும், சிலர் புதிதாய் மணம்புரியச் செல்பவருமா யிருந்தனர். இவ்விசேஷம் மேல்நாட்டாருடைய சஞ்சார மிகுதியைக் குறிக்கின்றதல்லவா?

*
* *

**திருடர்கடை.** — திருடர்கடை யென்பதொன்று அமெரிக்க நாட்டு மெக்ஸிகோவிலிருக்கிறது. அதில் சகல வஸ்துக்களும் பகிரங்கமாய் விற்கப்படுகின்றன. இவையெல்லாம் திருட்டுச் சொத்துக்களே யன்றி மற்றில்லை. திருடியவர்கள் நேரே விற்பது கிடையாது. அங்ஙனஞ் செய்தல் மோசமெனுங் கொள்கை கொண்டவராகிய மெக்ஸிகர்கள் மற்றவர்கள் மூலமாக விற்பது வழக்கம்.

*
* *

**மிருகவயது.**—மிருகங்களுக்குள் அதிக ஆயுளுடையது யானை. முப்பது வயதாகுமட்டும் யானை கன்றென்றே சொல்லப்படும். இது 120 முதல் 150 வயதளவும் ஜீவித்திருக்குமாயினும், சராசரி வயது 80. ஒட்டகங்கள் 30 முதல் 40 வருஷங்கள் மட்டுமிருக்கின்றன. கூட்டிலடைபட்டுள்ள சிங்கங்கள் 60, 70 வயதளவு மிருக்கின்றன; சுயேச்சையாய்த் திரிபவையோ 15, 25 வயதிற் சாகின்றன.

**தர்மவசூல்.** — இங்கிலாந்திலுள்ள சர்ரியென்னும் ஊரில் கட்டப்படும் கிறிஸ்துவக் கோவிலொன்றுக்கு ஓர் நூதன விதமாய்ப் பணஞ் சேர்க்கப்படுகிறது. இக்கோவிலார் 40,000 பென்ஸில்கள் வாங்கி ஒவ்வொன்றையும் ஒரு பென்ஸ் (ஓரணா) க்கு விற்று லாபத்தை ஷை தருமத்திற்கு உபயோகிக்கிறார்கள். மதப்பற்றும் தர்ம சிந்தனையு முள்ளவர்கள் எவ்விதத்தும் உபகரித்திடுவர். அவையிலாரை எங்ஙனம் வசப்படுத்துவதோ!

*
* *

**விவாகவினோதம்.**—சயாம் தேசத்தில் பெண்களுக்கு விவாகமாகாமலே 35 வயதாய்விட்டால் அவர்கள் ராஜாவின் பாதுகாப்பில் வைக்கப்படுகின்றனர். அவர்களுக்குப் புருஷனைத் தேடும்பொறுப்பு அரசனுடையதாகிறது. அரசனே இதற்காக அதிகப் பிரயாசை யெடுப்பதில்லை. இப்பெண்களில் எவளையாகிலும் விவாகஞ் செய்துகொள்வதாக சயாம்தேசத்து ஜெயில் கைதிகளில் எவனாயினும் முன் வருவானாகில், அவனை ராஜா உடனே சிறை விடுவித்து மணஞ் செய்து வைக்கிறார். அவன் விவாகமானவனாயிருந்தாலும் ஆகாதவனாயிருந்தாலும் அவசியமில்லை

*
* *

**தென்னாப்பிரிக்காவில் இந்தியர்.**—தென்னாப்பிரிக்காவில் குடியேறியுள்ள இந்தியர்களின் மொத்தம் 1,50,000. இவர்களில் 1,33,000 பேர் நெடாலிலிருக்கிறார்கள். நெடாலிலிருப்பவர்களில், கரும்பு, தேயிலை முதலிய தோட்டங்களில் வேலை செய்வோர் 73,000 பேர்; சுரங்கங்களில் வேலை செய்வோர் சுமார் 5,000 பேர்; வீட்டு வேலைகளிலமர்ந்தவர்கள் 9,000 பேர்; தொழில்களிலிறங்கியவர்கள் 7,000 பேர். இந்தியர்கள் கரும்புப் பயிர் செய்வதற்காகவே தென்னாப்பிரிக்காவுக்கு முதன்முதல் கொண்டுபோகப்பட்டனர். இவர்களுக்கிப்போது தலைவரி வருஷமொன்றுக்கு மூன்று பவுன் (ரூபா 45) வீதம் விதிக்கப்பட்டதல்லாமல் வேறு துன்பங்களும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும், அவர்கள் தங்கள் கௌரவத்தை யிழக்காதவிதமாக நடந்துகொண்டு தமது ஜென்மதேசத்திற்குப் புகழ்தந்து ருகிறார்கள்.

உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் I] 1914ஞு ஏப்ரல்மீ [சஞ்சிகை 7

## ஒளிவளர் விளக்கு

சென்ற பிப்ரவரிமாதச் சஞ்சிகையில் நாம் தெரிவித்த சென்னை விஸ்வகர்ம மடத்தின் ஸ்தாபன முயற்சி பலப்பட்டு வருவதறிய நண்பர்கள் மகிழ்ச்சி யடைவார்களென்பதிற் சந்தேகமில்லை. இதற்காக, 30. 3.14 வரையிலுங் கையொப்பஞ் செய்யப்பட்ட ரூ 1,735. வசூலான தொகை ரூபா 770. விபரம் வருமாறு:—

| | | கையோப்பம் | வதூல் |
|---|---|---|---|
| 1. | கணிதால-லோகநாதஆச்சாரியார் | 500 | 500 |
| 2. | மோசூர்-பார்த்தசாரதி ,, | 100 | 100 |
| 3. | நூதனபாடி-எல்லய்ய ,, | 100 | 25 |
| 4. | விஜயநகரம்-சின்னசாமி ,, | 100 | 5 |
| 5. | பாணால-ராமசாமி ,, | 100 | 10 |
| 6. | வேமல-தக்ஷணாமூர்த்தி ,, | 100 | ,, |
| 7. | மானும்பதி-முனுசாமி ,, | 10 | ,, |
| 8. | திருவண்ணாமலை-ரங்கசாமி | 35 | ,, |
| 9. | கண்டவரம-வீரய்ய ,, | 50 | ,, |
| 10. | சோமங்கலம்-கந்தசாமி ,, | 100 | ,, |
| 11. | கல்லோஜி-கோபாலகிருஷ்ண,, | 100 | 100 |
| 12. | தர்மவரம-செங்கல்வாராய ,, | 100 | 25 |
| 13. | கன்னுவரம்-கோவிந்த ,, | 15 | ,, |
| 14. | பாலகோடு-வீரபத்திர ,, | 255 | ,, |
| 15. | சந்தவேலூர்-கோவிந்த ,, | 25 | ,, |
| 16. | நாகலாபுரம் ஜங்கமய்ய ,, | 25 | ,, |
| 17. | சேப்பாக்கம் ஜகந்நாத ,, | 25 | ,, |
| 18. | அகோபலம்-கிருஷ்ணஆச்சாரியார் | 100 | ,, |
| 19. | பொந்தவாக்கம்-குப்புசாமி ,, | 10 | ,, |
| 20. | போகரவேலை-செல்வபதி ,, | 15 | ,, |
| 21. | ஆகூவிவாக்கம்-கேசவாச்சாரியார் | 100 | ,, |

வசூலான தொகை சென்னை இந்தியன் பாங்கியிற் கட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பொருட்சேகர விஷயத்தில் ஸ்ரீ கணிதால-லோகநாத ஆச்சாரியாரவர்கள் மிக்க ஊக்கங்காட்டி நடந்து வருகிறார்கள். உள்ளூர் வெளியூர்களிலுள்ள சுஜாதியாரெல்லோருடைய உபயோகத்திற்காக பொதுஸ்தான மொன்று சென்னையில் ஏற்படவேண்டியது அவஸ்யமாயிருப்பதால் எல்லோரும் இவ்விஷயத்தில் சிரத்தைவைத்து உதவி புரிவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

*
* *

திருநெல்வேலிஜில்லா நாங்குனேரியில் "விஸ்வப்பிராம்மண வித்தியாசாலை" க்கான பிரயத்தினங்கள் செய்யப்படுவதறிந்து சந்தோஷிக்கின்றோம். நாங்குனேரி கஸ்பா திருவிதாங்கூர் போகிற 5-வது நெம்பர் ரோட்டின் வடபுறமிருக்கிற ஸ்ரீ K. கிருஷ்ணாச்சாரியாரவர்களுடைய சொந்த பஜனைமடாலயம் ஷை வித்தியாசாலைக்குத் தானஞ்செய்யப்பட்டிருக்கிறதென்றும், ஷை கட்டடத்தின் கீழ்ப்பாகத்திலிருக்கு மொரு கட்டடம் ரூபா 100-க்கு கிரயமாக வாங்கப்பட்டிருக்கிறதென்றும், நாங்குனேரி கஸ்பா விஸ்வக்ஞர்க

ளுடைய கூடங்களில் சேரும் மைக்காட்டை ரூபா 500-க்கு ஒரு ராவுத்தருக்கு விட்டு ரூ. 100 அட்வான்ஸ் பெறப்பட்டிருக்கிறதென்றும், மிச்ச ரூபா 400 மூலதனமாக வைக்கப்படுமென்றும் அறிகிறோம். குலாபிமானிகளிடமிருந்து பொருட்சகாயம் வேண்டப்படுகிறது. ஸ்ரீ ச. வை. மாணிக்க ஆச்சாரியார் முதலியோர் இதினுழைத்து வருகிறார்கள். இவர்கள் கோரிக்கை சீக்கிரம் ஈடேறும்படி இறைவர் அருள்புரிவாராக.

*
* *

தனவந்தர்களாயுள்ள சென்னை வாசிகளாகிய நமது குலத்தினர்களுக்குள் இப்போது குலாபிமான சிந்தை வெளிப்பட்டு வருகிறது. சத்திரதானம், கட்டடதான மிவை செய்ய முற்பட்டுள்ளாரைப்பற்றி வேறிடங்களில் விளம்பியிருக்கிறோம். சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வர தேவஸ்தான தர்மகர்த்தாகிய ஸ்ரீ வேமல தக்ஷிணாமூர்த்தி ஆச்சாரியாரவர்களுக்கும் இவ்வித தானசிந்தனை யுதித்திருப்பதாகத் தெரிகிறது. லக்ஷ்மி கடாக்ஷம் பெற்றுள்ளவர்கள் குலானுகூலப் பெருங்காரியங்கள் செய்வதினும் மேலாகத் தமது திரவியத்தை விநியோகிக்க முடியாதென்பதை அன்னோர்க்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

*
* *

ஆனந்தப் புதுவருஷம் பிறந்துவிட்டது. வருஷப்பிறப்பு நாளன்று நமது சபா மண்டபத்தில் புதுப்பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டதோடு, உபந்நியாசங்கள் முதலியனவும் நடைபெற்றன. இவ்வருஷம், தன் பெயர்க்கேற்றபடி, நமக்கு நிரந்தர ஆனந்தத்தை விளைவிக்குமென் றெதிர்பார்க்கப் படுகிறது. இவ்வருஷத்தில் ஆச்சார்யபட்ட சம்பந்தமா யேற்பட்டுள்ளகுறை தீரவும், சுஜாதிக் கான்பரன்ஸ் ஒன்று தென்னிந்தியாவில் நடத்துவிக்கவும், விஸ்வகர்மச் சிறுவர்களுக்கு வித்தியாதானஞ் செய்யப் பலர் முன்வரவும், வித்தியார்த்திகள் நன்குவாசித்துச் சிறப்புறவும், இன்னோரன்ன பல நன்மைகள் விளையவும் விஸ்வகர்மப் பரமேஸ்வரர் அருள்புரிவாரென்று அநுதினமும் பிரார்த்தித்து வருகின்றனம்.

*
* *

உள்ளூர் வெளியூர்ச் சபாமெம்பர்களுக்கெல்லாம் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டபடி, இம்மாதம் 5௳ ஞாயிற்றுக்கிழமையன்று நமது சபையின் வருஷாந்த ஜெனரல் மீடிங் நடத்தப்பட்டது. அப்போது 1913௵ டிஸம்பர்௴ 31௳ வரையிலுங்கூடிய காலத்திய ரிபோர்ட் வாசிக்கப்பட்டு அங்கீகாரமடைந்தது. சபா சட்டநிரூபணஞ் செய்யப்பட்டது. உத்தியோகஸ்தர்களும் நிர்வாக சங்கத்தாருந் தெரிந்தெடுக்கப்பட்டனர். சபை ரிபோர்ட் வரவு செலவு கணக்கு, ஆடிட் ரிபோர்ட்டு முதலியன அச்சிடப்பட்டு சபாமெம்பர்கள் ஒவ்வொருவருக்கும் அனுப்பப்படும். சட்டங்களின் பிரதி வேண்டும் மெம்பர்களுக்கு அனுப்பப்படும்.

சபைத்தலைவர்

ஸ்ரீ சோமங்கலம்-கர்தசாமி ஆச்சாரியார்

காரியதரிசி

ஸ்ரீ பிக்கபாடி-கல்யாணசுந்தர ஆச்சாரியார்

தனாதிகாரி

ஸ்ரீ காயிரம்பேடு-திருவேங்கட ஆச்சாரியார்

அத்தியக்ஷர்கள்

ஸ்ரீ செஞ்சி-ஆண்டிசுந்தரஆச்சாரியார்பி.ஏ.பி.எல்.
,, T. பாக்ஷா ஆச்சாரியார்
,, எதுமலை-அரங்கநாத ஆச்சாரியார்
,, தி. சு. பாலசுந்தர ஆச்சாரியார்

*
* *

குடந்தையில் கான்பரன்ஸ் நடத்தும் விஷயமாய் யாமெழுதிய வியாசத்தைத் தழுவிக் குலாபிமானிகள் பலர் தமது கருத்துகளை வெளிப்படுத்திவருவது காணக் களிப்புண்டாகிறது. இவர்களெழுதிய கடிதங்களிற் சில இம்முறை வெளியிடப்பட்டிருக்கின்றன, மற்றவற்றை மறுமுறை யச்சிடலாகும். இவற்றை வாசிக்குமிடத்து குடந்தையார்க்குந் தஞ்சையார்க்கும் உற்சாக மதிகமுண்டாகி, அவர்கள் கான்பரன்ஸ் காரியத்தைக் கடிதின் முடிப்பார்களென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

*
* *

சென்றமீ 4௳ 'விஸ்வப்பிரம்ம மகாஜன சென்ட்ரல் சபையின் பாடசாலை' யென்பதொன்று திருச்சியில் ஷை சபையாரால் ஸ்தாபிக்கப்பட்டது. சித்தூர் ஜில்லா திருப்பத்தூரிலிருந்து திருச்சிக்கு விஜயமாயிருக்கும் ஸ்ரீ அ. சென்னக்கிருஷ்ண ஆச்சாரியாரவர்கள் உபாத்தியாயராக நியமனம் பெற்றிருக்கிறார். இப்பாடசாலைக்குக் கும்பகோணத்து ஸ்ரீ த. கு. சுந்தராச்சாரியாரவர்கள் ரூபா 5 நன்கொடையளித்திருக்கிறார்கள். இது விருத்திபெற்று நன்மை யதிகம் பயக்குமென்று விரும்புகிறோம்.



*
* *

பேரம்பாக்கம் ஸ்ரீ ஆறுமுகஆச்சாரியார் என்னுமொரு சென்னைவாசி விஸ்வகர்மகுலச் சிறுவர்களுடைய வித்தியாசாலையா யுதவக்கூடியதொரு கட்டடத்தைப் பெத்து நாய்க்கன் பேட்டையில் ரூ. 5000 க்கு வாங்கிக் குலத்தார்க் களிக்கவேண்டுமென்னும் பெருங்குணங்கொண்டிருப்பதாயறிந்து மகிழ்கின்றோம். இவர் ஸ்ரீ கணிதால லோகநாத ஆச்சாரியாருடன் கலந்துழைப்பது நன்றெனத் தோன்றுகிறது.

*
* *

திருச்சி விஸ்வப்பிரம்ம மகாஜன சென்ட்ரல் சபையின் பிரஸிடென்டாகிய ஸ்ரீ R. சாமி ஆச்சாரியாரவர்கள் நமது சபையின் சிறப்பிலக்கணங்களிற் சிலவற்றை யமைத்து ஓர் ஆசிரியப்பா பாடியனுப்பியதற்காக, ஷை சனவானுக்குச் சபையார் வந்தனஞ் செலுத்துகிறார்கள். இடக்குறைவுபற்றியுங் ஸ்தோத்திர வெறுப்புபற்றியும் அவ்வாசிரியப்பாவை வெளியிடாது நிறுத்தலாயிற்று.

*
* *

கோதாவரி ஜில்லா பிட்டாபுரத்தில் டிப்டி தாசில்தாராயிருந்த ஸ்ரீ கந்துகூரி - மல்லிகார்ச்சுன ஆச்சாரியார் பி. ஏ. அவர்கள் லாண்ட் ரிகார்ட்ஸ் தாஸில்தாராக (Land Records Tahsildar) இராஜமகேந்திரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார். இவர் கிருஷ்ணா குண்டூர் மண்டல விஸ்வப்பிராம்மண மகாஜனசபையின் முதற் கூட்டத்தில் அக்கிராஸனம் வகித்தவர்.

*
* *

பாளயங்கோட்டை ஜார்ஜ் V. லைப்ரெரி, விஸ்வகர்ம வேதகோஷ்ட சபை யிவைகளின் பிரஸிடென்டாகிய ஸ்ரீ. A. பெரியசாமி ஆச்சாரியாரவர்கள் நமது சபையின் அபிவிருத்தியில் அக்கரை காட்டிவருவதற்காக அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

*
* *

மதுரை ஸ்ரீ ச. அங்கண்ண ஆச்சாரியார் அவர்களும், அவர் தமயனார் ஸ்ரீ செ. குப்பாபத்தர் அவர்களும் சென்ற மாதம் நமது சபைக்கு விஜயஞ்செய்து பல நற்கருத்துகளை வெளியிட்டு சபைக்கு வேண்டிய உதவிபுரிவதாக வாக்களித்ததற்காக இவர்களுக்கு மிகவும் வந்தனமுடையவர்களாயிருக்கிறோம்.

*
* *

நமது புத்தகாலயத்திற்குக் கீழ்க்குறித்த 9 புத்தகங்கள் ஸ்ரீ M. ஜீவரத்தின ஆச்சாரியார் பி. ஏ. அவர்களால் அன்போடளிக்கப்பட்டன.

(1) The Origin of Life.
(2) Church and Modern Thought.
(3) Shall We Slay to Eat ?
(4) Report of the 22nd Indian National Social Conference.
(5) The Mind of the Century.
(6) The Problem of Self Education.
(7) Secular Education.
(8) ஆஸ்திகமத சித்தாந்தம்
(9) Cosmic Consciousness.

இவையன்றி, மற்றொருவரால் ருக் வேதம் (இங்கிலீஷ் - சமஸ்கிருதம்) கொடுக்கப்பட்டது. இவர்களைப்போல் மற்றும் பல கனவான்கள் புத்தகதானஞ் செய்யப் பிரார்த்திக்கிறோம்.

*
* *

1914௵ பிப்ரவரி௴ 19௳ முதல் மார்ச்௴ 31௳ வரையில் சபாமண்டபத்திற்கு விஜயஞ் செய்த கனவான்களுடைய மொத்த எண்ணிக்கை 607.

---

பன்னகவேணிப் பாமர் தண்டலையார்
நாட்டிலுள பலருங்கேளீர்,
தன்னறிவு தன்னினைவு தன்மகிமைக்
கேற்றநடை தகுமே யல்லால்,
சின்னவரும் பெரியவர்போலே நடந்தால்
உள்ளதுபோஞ் சிறியகாகம்
அன்னநடை நடக்கப்போய்த் தன்னடையுங்
கெட்டவகை யாகுந்தானே.

—தண்டலையார் சதகம்.

## சிறுதெய்வ வழிபாடு

“என்றும் நாம் யாவர்க்கும் இடைவோமல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாருமில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோம் அன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப்போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்துளோமே”

என்று அப்பர் சுவாமிகள் ஆனந்தத்துடன் சொல்லி யிருக்கிறார். சிவபெருமானை வழிபடும் புண்ணியம் வாய்க்கப்பெற்ற சைவர்களெல்லோரும் அவன்திருவடித்தியானமன்றி, சிறுதெய்வ ஆராதனை செய்வது மகா பாபமாகும். இந்த உண்மையைச் சைவர்களெல்லாம் அறிந்திருக்கிறார்களென்றேசொல்லலாம். என்றாலும், இவர்களில் சிறுபான்மையரும் சிறுதெய்வவழிபாடு செய்யா தொழிந்திலரென்றால், இவர்களுடைய சைவமதப் பற்றினைக்குறித்தும் சிவபத்தி நிலையைப் பற்றியு மென் சொல்லலாம்! இது பரிகாசத்திற் கிடமேயல்லாமல் வேறில்லை. சிறுதெய்வ வழிபாடு சைவர்களுக்குள்மட்டுமே யன்றி வைஷ்ணவர்களுக்குள்ளும் நாளுக்குநாள் அதிகரித்து வருவதைக்காண அடங்காத் துக்க முண்டாகிறது. சண்டாள ஜாதியாரென்று சொல்லப் படுவோரே முதலில் இந்த அனுஷ்டானமுடையவர்களா யிருந்தார்களானாலும், நாளடைவில் இத்துர்ப்பழக்கம் பிராம்மணரென்பார்க்கும் பரவிவிட்டது. பிராம்மணருள்ளும் பல குடும்பத்தார் இப்போது முனி காட்டேரி முதலிய சிறுதெய்வவழிபாடு கொண்டிருக்கக் காண்கிறோம். என்ன கொடுமை யென்றிதைச் சொல்லலாம்!

சாஸ்திர புராணாதிகளில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கும் சிவபெருமானைவிட்டு, வீரன் இருளன் காட்டேரி சின்னான் பனைமரத்தான் மாடசாமி முனியன் முதலியவற்றை வழிபடுவோர்க்கு எத்தனை தெய்வ நாமங்களிருந்தாலும் போதாபோலும்! இன்று இதை வழிபடுவதும் நாளை இதைவிட்டு மற்றொன்றைப் போற்றுவதும் மறுநாள் அதையும் விடுத்து வேறொன்றை விரும்புவதுமாயிருப்போரை எம்மதத்தினரென்று சம்மதித்துரைக்கலாகும்? இவர்கள் எம்மதத்தினருமே யாகாமல் எதற்கும் புறம்பானவரே யாவார்கள். இவர்களுக்குச் சரியான மதப்பற்றுண்டாதலும், பக்தி வைராக்கியங்கள் கைகூடுதலும், அவற்றின் பலன்கள் சித்தித்தலுமில்லை யில்லை. இவர்கள் கதி அதோகதி யென்றே சொல்லவேண்டும். பாவம், பாவம்! இம்மதவுண்மையை எத்தனை புருஷர்கள் தெரிந்துகொண் டிருக்கிறார்களோ அறியோம். ஆயினும், புருஷஜென்ம மெடுத்துள்ளவர்கள் ஒவ்வொருவரும் இதைப்பற்றி நன்றாய்க் கவனித்துப்பார்த்தல் அவஸ்யமாயிருக்கிறது.

“கற்புறு சிந்தைமாதர் கணவனையன்றி வேறோர்
இற்புறத்தவரை நாடார் யாங்களும் இன்பவாழ்வும்
தற்பொறியாக நல்கும் தலைவனின்னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோம்கண்டாய் பூரணானந்த வாழ்வே”

யென்று ஒயாப்புகழ்கொண்ட தாயுமானஸ்வாமிகள் தெரிவித்த கருத்தொருபுறமிருக்கச் சிறுதெய்வ வழிபாட்டின் கெடுதிகள் பலவிருக்கின்றன. இது மனோநிலையைக்கெடுத்து மதப்பற்றைச் சிதைத்து பத்திவைராக்கியங்களைக்குலைத்து துஷ்டாசாரங்களைத் துவக்கிவிட்டுக் கஷ்டாதிக்யத்திற்குள்ளாக்கிக் கண்டார் நகைத்திகழும்படிச் செய்துவிடுகின்றது. ஆதலால், சீரியர் சிறுதெய்வவழிபாட்டைத் தாம் விலக்குவதுடன் மற்றவர்களையும் அதினின்றுமாற்றப் பிரயாஸைப்படவேண்டும்.

சிறுதெய்வ வழிபாடு பெரும்பாலும் ஸ்திரீகளாலேயே பல குடும்பங்களில் நுழைக்கப் படுவதாகத்தெரிகிறது. பெண்களே இதில் அதிகப் பற்றுடையவர்களாய்க் காணப்படுகிறார்கள். சிறுதெய்வ மதப்பிரசாரகர்கள் பெண்டிரே யென்று கண்டிதமாய்ச் சொல்லிவிடலாம். இவர்கள் இம்மதப்பிரசாரணஞ் செய்யாத பக்ஷத்தில் இது நிலைத்துப் பரவவே மாட்டாது. ஆதலால், சிறுதெய்வவழி பாட்டைத் தொலைக்க வேண்டுமானால் ஸ்திரீகளைத் திருத்த வேண்டும். அவர்களைத் திருத்தாதிருக்கு மட்டும், அவர்கள் தங்களுடைய கருத்துகளைப் புருஷர்கள் கொள்ளச் செய்து அனர்த்தங்கள் விளைவித்துக் கொண்டே வருவார்கள். குழந்தை பிறப்பதற்கு முன்னேமேயே குண்டு சாமியைக் கோரிக்கொள்வார்கள். ‘புழக்கடைச் சாமி’ யைப் பூஜிக்க வேண்டு மென்பார்கள். இல்லாவிட்டால், எந்தசங்கடம் நேரிட்ட போதிலும், அந்தக்குறையினால்தான் வந்ததென்று ஆரவாரஞ்செய்வார்கள். அந்தக் குறையைத்தீர்க்குமட்டும் ஆண்பிள்ளையை அலக்கழித்து விடுவார்கள். அவர்களை யதட்டி யடக்குந் தேகசக்தியும் மனோசக்தியும் பல ஆடவர்களிடமில்லை. ஆதலால், இவர்கள் பெண்கள் பேச்சுப்படி நடந்து எச்சுக்குப் பாத்திர வான்களாகிறார்கள். பிறக்குங் குழந்தைகளுக்கோ கன்னி, மூக்கன், முனியன், மாடசாமி முதலிய சிறுதெய்வப் பெயர்களையன்றி உத்கிருஷ்டமாகிய உமாமகேஸ்வரன், மார்க்கசகாயன், திருநீலகண்டன் முதலிய திருநாமங்களிடுதற்கு ஒப்பமாட்டார்கள்.

ஒரு குடும்பத்து ஸ்திரீ புருஷர்களுடையபெயர்களைக் கொண்டு அவர்களுடைய தெய்வவழிபாடு இத்தகைத்தென்று எளிதிற் சொல்லிவிடலாம். திவ்ய நாமங்களையுடையவர்கள் சிறப்போடு பாவிக்கப்பட, அவலக்ஷணப் பெயருடையவர்கள் அருவெறுக்கப்பட்டழுந்தல் சகசமாயிருக்கிறது. இம்மட்டேயோ? சிறு தெய்வ வழிபாட்டினால், பல குடும்பத்தாருடைய போஜன வகைகளும் வேறுபடுகின்றன. சுத்த போசனங்கொண்டிருந்தவர்கள் சிறுதெய்வ வழிபாடு காரணமாக அசுத்த ஆபாச உண்டிப்பழக்கத்திற் காளாகின்றார்கள். இன்னும், மதுபானங்கொள்ளும் மாக்கொடிய பழக்கமும் சிறு தெய்வ வழிபாட்டினால் சித்தித்துவிடுகிறது. நாளடைவில் செல்வக்குடும்பங்களெல்லாம் சீரழிந்து போகின்றன. வருவாயுடையவர்களும் வரவுச்குள் செலவை யடக்கக் கூடாதவர்களாய்த் தரித்திரக் கொடுமைப்பட்டுத் தவித்தலைகின்றனர். அந்தோ! இவ்வளவு கெடுதிகளுஞ் சிறு தெய்வவழிபாடு காரணமாகச் சேருகின்றனவென்றால், விவேகிகள் அதை வெறுத்த லதிசயமோ! கடவுளே இவ்வித இக்கட்டுகளை யெல்லாங் கொண்டுவந்து விடுகிறாரென்று சொல்ல வேண்டும். அன்றி, ஒன்றான கடவுளை யுல்லங்கனஞ் செய்தோர்க்கு உபத்திரவங்கள் பலவற்றை அக்கடவுளாணையினாலே இச்சிறுதெய்வங்களுண்டாக்குகின்றனவென்று முரைக்கலாம். இக்கருத்து பற்றியேயன்றோ ஒரு புலவர்

“பாம்புசேர் தோளிணையாள் பாளயத்து மாமாரி
சாம்பசிவன் தன்னடிகள் சாராரை-வேம்பின்
இலையைபுடுத்தி அவர் ஈனமானம் போக்கித்
தலையில் விளக்கேற்றி வைப்பாள்தான்”

என்று சாற்றியிருக்கின்றார்!

## பொருளியல்நூல் உண்மைவிளக்கம்

### 2. தாரிசெல்லியர் கண்ட உண்மை

**சித்தூர் ஸ்ரீ சுப்பிரமணியாச்சாரியார் பி ஏ. எல்.டி.**

இக் கோடை காலத்தில் குளிர் நீர் குடிக்க அவாக்கொள்கிறோமல்லவா? சிலர் புதுப்பானைகளில் நீரிட்டிருப்பர். நீர் பானையின் புழைவழி வெளிவந்து ஆவியாய் மாற அதற்கு வேண்டிய வெம்மையை மற்றைய நீரினின்றும் ஈர்த்தலால் அந்நீர் குளிர் எய்தும். வேறு சிலர் எப்பாத்திரத்தேனும் சலத்தை நிறைத்து வஸ்திரத்தால் வாய்கட்டித் தலைகீழாய்த் தொங்கவிடுவர். முன்போலவே நீர் குளிர அதனை அருந்தி மனமும் குளிர்வர்.

பின்னர்க்குறித்த பாத்திரத்தில் வாயு சிறிதும் இல்லாதபடி மாத்திரம் சலத்தை நிறைத்தீரானால் கனத்த காகிதம் அல்லது அட்டையால் வாயை மூடிப் பாத்திரத்தைக் கவிழ்க்கவும் நீர் சிறிதும் கீழ் விழாமையைக் காண்பீர்கள். அவ்வளவு நீரையும் கீழ்விழாமல் தாக்குவதெது? காகித வட்டையோ தாக்கவல்லது? அன்று; புறத்துள்ள வாயுவே அவ்வலி பெற்றுள்ளது. அப்பாத்திரத்தை எப்புறம் திருப்பினும் நீர் விழவொட்டாமல் இவ்வாயு தாங்கிக்கொள்ளும். அதன் வாய்ப்புறத்தை நீர் நிறைந்த மற்றொரு பெரிய கிண்ணத்தினுள் அமிழ்த்தினும் முற்பாத்திரத்தின் நீர் கீழ் விழாமல் நிற்கும். ஆனால் சிறிது வாயுவையேனும் உள்ளே புகவிடின் அவ்வாயு உடனே நீரைப்புறத்தே தள்ளும். கட்புலனுமாகாத வாயுவின் வலிமிகுதியும் எடைமிகக்கொண்டநீரின் வலிக்குறைவும் நமக்கு ஒரு பெரிய படிப்பினை போதிக்கின்றதல்லவா?

‘சிற்றுளியால்
கல்லுந் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்.’

இத்தகைய வாயுவின் வலியளவை நிர்மாணம்செய்தவர் தாரிசெல்லியர். இவர் கடைசியிற் குறித்த முற்பாத்திரத்திற்குப்பதிலாக ஒருகஜநீளமுள்ளகண்ணாடிக் குழாவையும் இதனிலும் பிற்குறித்த கிண்ணத்திலும் நீர்க்குப்பதிலாகப் பாதரசத்தையும் கொண்டு, பாதரசம் நிறைந்த குழாவின் வாயை விரலால் மூடிக் கவிழ்த்து நேர்நிறுத்தி வாய்ப்புறத்தை கிண்ணத்துள்ள பாதரசத்தினுள்ளிட்டு விரலை எடுத்துவிட்டனர். உடனே

புறத்துள்ள வாயு கஜமுயாமுள்ள பாதரசத்தையும் தாங்கமுடியாமல் சுமார் அரை அடி உயாமுள்ள பாதரசத்தைக் கீழே வெளிவரவிடுவதையும் மிகுதி சுமார் 2½ அடி அல்லது 30 அங்குலம் உயாமுள்ள பாதரசத்தையே தாங்குவதையும் கண்டார். இக்குழாவின் குறுக்களவு ஒரு சதுரங்குலமாகக் கொள்ளின் அதில் நிற்கும் 30 அங்குல முயாமுள்ள பாதரசம் 15 ராத்தல் எடை கொள்ளும். இதனுல் ஒரு சதுரங்குலத்தின்மீது தாக்கும் வாயு 15 ராத்தல் வலியுள்ளதென நிர்ணயித்தார். வாயு வலியினை நிர்ணயிக்கும் இவ்வித கருவிக்கு 'வாயுமானி' என்று பெயர்.

இவ்வாயுமானியின்கண் பாதரச உயரம் கடல்நீர் மட்டத்திற்கு 1000 அடி தூரம் மலைமீதேனும் வாயு கப்பலிலேனும் மேலேறிச் செல்லச்செல்ல ஒவ்வோர் அங்குலம் குறைந்துவரும்; 1000 அடி தூரம் சுரங்கங்களில் கீழ்ச் செல்லச்செல்ல ஒவ்வோர் அங்குலம் மிகுந்துவரும். அன்றியும் ஒரே இடத்தில் மழை வருங்காலத்தில் குறைந்தும் நீராவி நீங்கி ஆகாயம் நிர்மலமாயிருக்குங் காலத்தில் மிகுந்தும் வரும். மழை வருங்காலம் முதலியவை உணர இவ்வாயுமானி மிகப் பயன்படுகின்றது. இதை நிர்மித்த தாரிசெல்லியர் போன்றவர் மாட்சி நம்மவருட் சிற்பியர் எய்துவது என்ஞான்றே? நம்மவரிற் பெரும்பாலார் சிறிது கற்றுவிட்டால் கர்வமயக்கம் தலையேறிவிடுகின்றதே. அன்னார் தம்மினும்

கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று.

---

## சபையாரின் பாரம்

### ஜோஸ்யர் ஸ்ரீ A. முத்து ஆச்சாரியார், நாகர்கோவில்

லோகத்தில் ஜாதி உயர்வுச்கும் கீர்த்திக்கும் கல்வியைப்போல சிரேஷ்டமுள்ளது ஒன்றில்லை. அது இருமைக்கும் பயன்கொடுக்கக்கூடியது. எக்காலத்திலும் எத்தேசத்தாரும் கல்வியைப் புகழ்ந்து கற்றுத்தெளிந்து உபயோகப்படுத்தி மேன்மை யடைந்துவந்திருக்கிறார்கள். எவர்கள் கல்வித்தேர்ச்சியுடையவர்களா யிருந்தார்களோ அவர்கள்தான் எல்லாருடைய மதிப்புக்கும் அதிகாரிகளாய் கீர்த்திப்பட்டிருக்கிறார்கள். தனிமையிலும் சமுதாயத்திலும் உண்டாயிருக்கிற உயர்வுகள் யாவும் வித்தை மயமேயாம். அறிவு விர்த்தியே அதிகாரத்தையும் ஆளுகையும் வலிமையையும் சம்பத்தையும் சந்தோஷத்தையும் அளிக்கிறது. இத்தனை மேன்மைவாய்ந்ததாயிருக்கும் வித்தையைப் பயிலும் நோக்கம் மேன்மைபொருந்திய சபையின் நோக்கமாயிருத்தல் வேண்டுமென்று என்தான் சொல்லவேண்டும்!

இந்த பூதலத்தில் முடிதரித்து சிங்காசனத்தில் வீற்றிராநின்ற நரபதி நிலைமைமுதல் பிணஞ்சுடு தடியுடைய வெட்டியான் வரையுமுள்ள ஜனங்களுக்கு கல்வி இன்றியமையாதது என்பதைச் சாமானிய ஜனங்கள் அறியார்கள். துரைத்தன உத்தியோகம் பெற்று மேன்மையுடன் சஞ்சரிப்பதே வித்தியாப்பியாசம் செய்வதின் முக்கிய பிரயோஜனமென்று அநேக மாணுக்கர்கள் கல்விக்கழகத்திலமர்ந்து அத்துவானப் படுகிறார்கள். இந்த எண்ணம் ஆன்றோர் மொழிகளாலே வெகுவாய் எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

"வித்யாநாமநரஸ்யரூபமதிகம்ப்றச்சந்நகுப்தம்தநம்
வித்யாபோககரீயஸஸ்ஸுககரீ யித்யாகுருணும்குரு:
வித்யாபந்துவிதேசகமநேவித்யாபராதேவதா
வித்யாராஜஸுபூஜிதாநஹிதநமவித்யாவிஹீநஃ பசு:"

மனுஷ்யாளுக்கு வித்தையானது மனுஷரூபத்தில் நிரூபமாகவும், ஆபத்காலத்தில் தனமாகவும் போக போக்கியங்களைக் கொடுக்கிற வஸ்துவாகவும் யஜஸைக் கொடுக்கக்கூடியதாகவும், குருவுக்கும் குருவாகவும் அன்னியதேச யாத்திரைகளில் பந்துவாகவும், பாராளுக்குத் தெய்வம்போன்றும், அரசர்களால் பூஜிக்கப்பட்டதாகவுமிருக்கிறது. இந்த வித்தை யில்லாதவன் பசுவுக்குச் சமானன். மேலும்,

கிம்குலேநவிசாலேநகுணஹீநஸ்துயோநர:
அகுலீநோபிசாஸ்திரக்ஞோதைவதைரபிபூஜ்யதே
ரூபயௌவநசம்பந்நவிசாலகுலஸம்பவா:
வித்யாஹீநாநசோபந்தேநிர்ககந்தாகுவகிம்சுகா:

குணஹீனனுடைய குலமானது விசாலமாயிருந்ததினுல் என்ன பிரயோஜனம்? குலத்தில் தாழ்ந்தவனுயிருந்தாலும் கல்வியுடையவனைத் தேவர்களும் பூஜிக்கிறார்கள். ரூபத்திலும் சம்பத்திலும் குலத்திலும் பெரியவனுயிருந்தாலும் வித்தையில்லாதவன் முருக்கம்பூவுக்குச் சமானன்.

ப்ரதமேநார்ஜிதாவித்யாத்விதீயெநார்ஜிதம்தநம்
திருதீயெநார்ஜிதம்பணணியம்சதுர்த்தேகிம்கரிஷ்[யதி



முதலாவது வித்யையைச் சம்பாதிக்கவேண்டும்; இரண்டாவது தனத்தை சேர்க்கவேண்டும்; மூன்றாவது புண்ணியத்தைச் சம்பாதிக்கவேண்டும்; இதைத்தவிர நாலாவது காரியமொன்றுமில்லை. இந்தப்பிரகாரம் மனுஷ்யஜன்ம மெடுத்தால் வித்யையைத்தான் முக்கியமாகச் சம்பாதிக்கவேண்டியது. குலத்தில் எவ்வளவு சிரேஷ்டமாயிருந்தாலும் இக்காலத்தில் மதிக்கமாட்டார்கள். அதிலும் இக்காலத்தில் உத்தமமான ஆங்கிலேயத்துவஜ நீழலில் வித்யாவிஷயமாயும் மற்றும் நம்மவர்களடையும் நலங்களுக்குக் கைம்மாறில்லை. கல்வி சம்பந்தமாய் நம் இந்தியா தற்காலம் அடைந்திருக்கிறதும் அடைந்துவருகிறதுமான தேர்ச்சி முன்னொரு காலமும் கண்டிருப்பதில்லை யெனில், இக்காலத்திலல்லவா நல்ல நோக்கத்தோடே நாம் வித்யாப்பியாசம் செய்து சத்பிரயோஜனத்தை அடைந்துகொள்வது? அதல்லவா உத்தமரின் கடமை!

இந்தப்பிரகாரம் மனுஷ்யருக் காதாரமாயிருக்கிறது கல்வி. இந்தக் கல்வியிலும் ஆங்கிலக்கல்வியே இக்காலத்தில் மேன்மையையும் புகழையும் தனத்தையும் குலமேம்பாட்டையும் கொடுக்கின்றதா யிருக்கிறது. ஆனதினுல் நம்தொழிலைப் பிரதானமென்றெண்ணுமல் ராஜபாஷையை சபையிலிருந்தும் புத்திவந்தராயிருக்கிற நம் குழந்தைகளைப் படிப்பிக்கச் செய்து பரிக்ஷை கொடுத்து சகல டிபார்டுமென்ட்களிலும் பரவச்செய்து வைப்பதே நம்மவர்களின் முக்கிய பாரமாம். தொழிலையே சீவனர்த்தமாக உபயோகப்படுத்திக்கொண்டு வந்த அனேகம் ஜாதியார்கள்கூட இக்காலத்தில் தொழிலினுல் மேன்மை கிடையாதென மதித்து ராஜபாஷையைக் கற்கும்பொருட்டு பண்டுகள் சேர்த்து அதிலிருந்தும் தங்கள் தங்கள் ஜாதிக் குழந்தைகளுக்கு கல்வியை பயிற்றி பரிக்ஷை கொடுக்கும்படியாகச் செய்து அவர்கள் உயர்தர உத்தியோகங்களி லமர்ந்திருக்கின்றதையும் அதனுல் அக்குலங்கள் மேற்குலமெனச் சொல்லப்படுவதையும் நாம் பார்க்கவில்லையா?

நம்தொழிலினுல் இக்காலத்தில் நம்குலம் மேன்மை யடைந்தாவது தனம்மிக்காவது சகலராலும் பூஜிக்கப்பட்டாவது எங்கிருக்கிறது? இதையாவது நாம் உணர வேண்டாமா? நம் தொழிலைப் பல ஜாதியார்களும் செய்கிறதினுல் நமக்கு என்ன மேம்பாடுண்டாகும். தொழிலினுல் மேன்மையடையலா மென்றவர்கள் இங்கிலாண்டு சைனு அமெரிக்கா முதலியவைகளில்போய் அபூர்வமான தொழிலைக் கற்றுக்கொண்டு வந்தாலொழிய மற்ற தொழிலினுல் மேன்மைகிடையாது.

ஆனதினுல், இப்போது ஆங்காங்கு ஸ்தாபித்திருக்கும் சபைகளில் சமஸ்கிருதம் வேதாத்தியயன முதலியவைகள் சொல்லிவைப்பதோடுகூட பத்தியில்மிகுந்த குழந்தைகளைத் தெரிந்தெடுத்து ஆங்கிலேயம் கற்பித்து பரிக்ஷைகொடுக்கும்படிச் செய்யவேண்டியதே சபையாரின் பாரமாம். சில டிபார்டுமென்டுகளில் நம் ஜாதியாரில்லாமலிருக்கிறதினுலும் அனேகருக்கு ராஜபாஷை தெரியாமலிருக்கிறதினுலும் நம் குலத்துக்குப் பலவிதமான குறைவுகள் நேரிடுகின்றன வென்பதைப் பிரத்தியக்ஷத்தில் பார்த்திருக்கின்றோமே! மேலாவது கல்விதான் சகலத்தையும் கொடுக்குமென்பதாக முன் கூறப்பட்டிருக்கும் விதிகளை யனுசரித்து இச்சபையின் மூலமாய் இந்தக்ஷணமே இதற்குவேண்டும் பண்டுகளைச் சேர்த்து நம் குழந்தைகளுக்கு ஆங்கிலம் பயிற்றுவிப்பீர்களென முழுமனதோடும் சபையோரைப் பிரார்த்திக்கிறேன்.

---

## சிற்பிகள்கை அற்புதங்கள்

### 2- சமணபளகோள ஸ்தம்பம்

### ஸ்ரீகாயிரம்பேடு. திருவேங்கட ஆச்சாரியார்

மைசூர் சமஸ்தானம் ஸ்ரீ கிருஷ்ணராஜேந்திர உடையார்காலத்தில் சிற்பசாஸ்திர பண்டிதோத்தமராகிய ஓர் ஸ்தபதியார் இராஜ சமுகத்திற்கு விஜயஞ்செய்து "ஓ ராஜனே! தங்களுடைய சமஸ்தானத்தில் என்னுடைய சிற்பசாஸ்திர வல்லமையை யமைத்து ஓர் அற்புத மண்டப ஸ்தம்ப மியற்ற விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் கருணைகூர்ந்து ஆக்ஞையிட வேண்டு"மென்று தெரிவித்தனர். அரசர் அவர்மேல் அன்புமேலிட்டவராய் சிற்பாசாரியாரை வணங்கி "தங்கள் கருத்துக்கிசைய என்னுற் செய்யவேண்டிய காரியங்களைக் கட்டளையிடுவீர்களேயாகில் அதுபோல் செய்து முடிப்பேன்" என்று கூற, "பிரபோ! நான் வேலை செய்வதற்குரிய ஆயுதவகைகளும், நித்திய நைமித்தியாதி கர்மானுஷ்டானங்களைச் செய்வதற்குரிய தடாகம் நந்தவனம அக்னிஹோத்திராதி ஹோம குண்டங்கள் சாமக்கிரயங்கள்போஜனசாலைகள் பதார்த்த

வகைக்குரிய செடி கொடி மரங்கள் இவைகளுள்ளதோர் உன்னதமான ஸ்தலத்தில் நாற்புறமும் மதில்கள் அமைந்து ஓர் பெரிய கொட்டகையிட்டு அதில் யான் ஒருவனே உள்ளிருந்து வேலை செய்யவும், மற்றவர் பிரவேசிக்கவும் பார்க்கவு மிடமின்றி அமைத்துத் தர வேண்டும். வேலைநடக்கும்போது எவரும் பார்க்கவே கூடாது" என்று சில்பியானவர் கட்டளையிட்டனர். அதுபோலவே மகாராஜா செய்துகொடுத்தனர்.

இப்படியாகச் செய்யப்பட்ட இடத்தில் சில்பாசாரியார் வேலைசெய்ய ஆரம்பித்து, ஓர் பிரமாண்டமான சிலையில் மண்டபம் கர்ண கூடம் சாலை பஞ்சரம் குதிரைகள் யானைகள் யாளிகள் முதலிய உருவு வேலைகள் செய்துகொண்டுவந்தனர். ஸ்தம்பத்தின் பிரமாணமோ 6 அடி சதுரம் 40 அடி நீளம். இரவும் பகலும் வேலை செய்யும் அடிவோசையானது அநேகர் வேலைசெய்வது போல் தோற்ற, 'நாம் அமைத்த சில்பி ஒருவரேயன்றி மற்றவர் பிரவேசிக்கவில்லையே; இவ்விதம் பல ஓசைகள் கேட்கவேண்டிய காரணமென்ன' வென்று அரசர் யோசித்து ஒன்றும் தோன்றாதவராய் இதனைக் கண்டறியவேண்டுமென்ற எண்ணம் உதிக்கப்பெற்று தன் மாடியின்மேலிருந்து சிற்பாசாரியரின் கொட்டகையைச் சற்று நீக்கிப்பார்க்கலாயினர். அப்போது 64 பூதகணங்களுடன் சில்பாச்சாரி ஒருவர் ஆக 65 பேர் வேலைசெய்யக் கண்டனர். ஸ்தம்பமோ வேலைக்கு ஒத்தவாறு புரண்டு புரண்டுவந்துகொண்டிருந்தது. இதனைக் கண்ணுற்ற அரசர் திப்பிரமை கொண்டு ஆச்சரியத்தோடே பார்த்த வண்ணமாயிருக்கையில், ஸ்தபதியானவர் அரசனைப் பார்த்துவிட்டனர். இருவர் பார்வையும் நேராகப் பட்டமாத்திரத்தில் தம் சாரியார் தேவ நிர்மாணத்திற்கு ராஜ திருஷ்டி நேர்ந்தும் கெட்டதென்று சிற்பாசாரியார் உடனே வேலைநிறுத்திவிட்டுக் கோபாக்கிராந்தராய் 'இனி இந்த வேலை நிறைவேற மாட்டா'தென வெளியேசெல்ல, ஸ்தம்பமானது இவர் பின் செல்ல ஆரம்பித்து ஓர் பக்கத்து மதிலைத் தகர்த்துக்கொண்டு புறப்பட்டது ஸ்தம்பம் பின் தொடர்வதைச் சிற்பாசாரியார் கவனிக்கவேயில்லை. சமண பளகுளம் என்னும் ஓர் சமணாலய க்ஷேத்திரத்தருகாமையில் செல்லும்போது அவர் திரும்பிப் பார்த்தாராம். ஸ்தம்பமானது புரண்டுவந்துகொண்டிருக்கக்கண்டு அதனை நோக்கி "நில், நில்" என்று கடுந்துரைத்தமாத்திரத்தில் அஃதங்கேயே நின்றுவிட்டது. இது நாளதும் அங்கு புதைந்துகிடைக்கக் காணலாம்.

ஆதிகாலத்திலிருந்த சில்பிகளுடைய சாஸ்திரவன்மையும் மந்திரசக்தியும் இதனால் நன்கு விளங்குகின்றது. இதுபோன்ற சிற்ப அற்புதங்களை அநேகர் கர்ண பரம்பரையாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவை அச்சுக்கு வாராததினால் பிரபலப்படாமல் மறைந்துபோகின்றன. இவையறிந்த ஸ்தபதிகள் காலம் தேசம் செய்தவர்களுடைய பெயர்கள் இவைகளைப் பத்திரிகைவாயிலாகத் தெரிவிக்க வேண்டுகிறேன். மைலாப்பூர் கும்பலிங்க ஸ்தபதியார் குமாரர் திவ்யலிங்க ஸ்தபதியார் அவர்கள் ஷை சமஸ்தானத்திற்குச் சென்றிருந்தபோது நேரில் கண்டதும் கேட்டதுமான உண்மைகளை என்னிடத்தில் சொல்ல அதனைப் பலரும் அறியும் வண்ணம் சங்கிரகமாக எழுதினேன்.

---

## நமது நாட்டாண்மைக்காரர்கள்

வேலூர். ஸ்ரீ. முத்துசாமி ஆச்சாரியார்

இவர்கள் சம்பந்தமாய் ஒரு தீர்மானத்தைக் கும்பகோண மகாநாட்டில் செய்யவேண்டுமென்ற குறிப்பு நமது ஜாதியாருடைய கவனத்திற் குரித்தானவிஷயமேயாகும். கான்பரன்ஸ் நடந்தாலும் நடவாது போனாலும் அங்கு இதைப்பற்றித் தீர்மானஞ் செய்தாலுஞ் செய்யாது விட்டாலும், நமது நாட்டாண்மைநிலைமை முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டிய விஷயமாயிருக்கிறது. நாட்டாண்மைக்காரர்களுங் காரியஸ்தர்களும் இல்லாத ஊரே கிடையாது. பந்துக் கட்டுகளுமில்லையென்றே தோன்றுகிறது. நமக்குள் இவ்வித அதிகாரிகளிருக்கிறார்களென்பதை மற்ற ஜாதியார்களும் அறிவார்கள். சுபாசுப காலங்களில் சிநேகிதர்களாயுள்ள பல ஜாதியார்களுந் திரண்டு உட்கார்ந்துகொண்டிருக்கும்போது நாட்டாண்மை யதிகார பாத்திடதை யாதியாயவற்றைக் கண்டுவரும் மற்ற ஜாதிச் சகோதரர்களுக்கு நமது நாட்டாண்மை விஷயந் தெரியாமலா இருக்கும்? தெரிந்தே யிருக்கிறது. இருக்க, இந்த நாட்டாண்மைக்காரர்கள் என்ன விதமா யிருக்கிறார்களென்றும், இந்த நாட்டாண்மைக்கு உள் பட்டிருக்க வேண்டிய பந்துக்கள் இவர்களிடத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறார்களென்றும், மற்ற ஜாதியார்களெல்லாம் நமது நாட்டாண்மைக்காரர்களைப்பற்றி என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்களென்றும் ஆராய்ச்சி செய்ய வேண்டியது நமது கடமையா யிருக்கிறது.



மொத்தமா யெண்ணிப் பார்க்கு மிடத்துப் பல நாட்டாண்மைகளுங் காரியஸ்தானங்களுந் திருப்திகரமாயில்லையென்றே சொல்ல வேண்டியதா யிருக்கிறது. நாட்டாண்மைக்காரர்களும் காரியஸ்தர்களும் பெரும்பாலும் கல்வியறிவில்லாதவர்களாகவும் நாகரிக ஞானமற்றவர்களாகவுமே காணப்படுகிறார்கள். அன்றியும் இவர்கள் பிடிவாத மிகுந்தவர்களாகவும் பெருந்தன்மையோடு விவகரிக்கக் கூடியவர்களாகவுந் தோன்றவில்லை. நாட்டாண்மை ஸ்தானமானது கௌரவத்திற்குப் பாத்திரமா யிருக்கும்படி ஆதியில் ஸ்தாபிக்கப்பட்டதாகும். இது ஜாதியாரை நல்வழிப்படுத்தி ஜாக்கிரதையுடன் கட்டியாள வேண்டிய ராஜரிக ஸ்தானமென்று சொல்லப்படத்தக்கது. இந்தஸ்தானத்தை வகித்திருப்பவர்கள் ராஜ்யபரிபாலன யோக்கியதையும் திறமையும் நிதானமும் கல்வி யறிவாராய்ச்சிகளும் கௌரவமும் உடையவர்களா யிருக்க வேண்டும். அப்படி யிருந்தால் மட்டுமே இவர்கள் ஜாதியார்களுடைய மரியாதைக்குப் பாத்திரவான்களாயிருந்து அவர்களை யடக்கி யாண்டு சிறப்பாய் வாழ முடியும். இல்லாதபக்ஷத்தில் அவமரியாதை யடைந்து, சுஜாதியாராலும் விஜாதியாராலும் இகழப்பட்டு, தமது அதிகாரஞ் செல்லப்பெறாமல் தடைப்பட்டுக் கலகத்திற்கும் மனஸ்தாபத்திற்கும் இழிவுக்கு மிடமுண்டாக்கி வைப்பார்கள். இந்தஸ்திதியிலே நமது நாட்டாண்மைகளுங் காரியஸ்தானங்களு மிருக்கின்றனவென்றே நாம் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்த உண்மை புலப்பட்டவுடனே இதற்குக் காரணமென்னவென்று கண்டுபிடித்து, இந்த நிலைமையைமாற்றித் தக்கநிலைமையடைவதற்கான மார்க்க மெதுவென்றுதேடவேண்டியது அவஸ்யமாயிருக்கிறது. முதலாவது, நமது நாட்டாண்மைகள்பல கௌரவ ஹீனமாய், ஜாதியாரை யடக்கி யாளுந் திறமையற்றிருப்பதற்குக் காரணம், இவர்கள் பரம்பரைப் பாத்தியதையை யநுசரித்து அந்தப் பதவியை யடைந்து வருதலேயன்றி மற்றொன்றுமில்லை. ஒரு வகுப்பிலோ, ஊரிலோ ஒரு குடும்பத்தாரே நாட்டாண்மைக்காரரா யிருப்பதென்றும், மற்றொரு குடும்பத்தாரோ அல்லது சில குடும்பத்தார்களோ காரியஸ்தர்களா யிருப்பதென்றும் வழக்க மேற்பட்டிருக்கிறது. இந்த வழக்கத்தின் பிரகாரம் தந்தைக்குப்பின் மகனும் அவன்பின் அவன் மகனுமாக நாட்டாண்மைக்காரனாகவோ காரியஸ்தனாகவோ பட்டம் கட்டப்படுகிறார்கள். இப்படிப் பட்டம்கட்டப் படுகிறவர்கள் அந்தந்த ஸ்தானத்திற்கு லாயக்குள்ளவர்களா அல்லவா வென்பதை ஆலோசித்துப்பார்க்க இடமே யில்லை. மாமூல்படியே நடந்துவிடுகிறது. புதிதாய்ப்பட்டங்கட்டப்பட்ட நாட்டாண்மைக்காரர் தக்கவயது வந்தவராகவும் விவகாரஞான முடையவராகவும் நல்லொழுக்கத்தினராகவு மிருந்தால் அவருடைய நாட்டாண்மை செவ்வையாக நடைபெறுகிறது. அந்த நாட்டாண்மைக்குட்பட்ட பந்துக்கட்டார்களும் கலகங்களும் சண்டை சச்சரவுகளு மில்லாதவர்களாய்க் கௌரவங்கெடாமல் வாழுகிறார்கள். இல்லாவிட்டால், பல தொந்திரவுகளுண்டாகின்றன. இதுவே எங்குஞ் சகசமா யிருந்து வருகிறது.

பரம்பரைப் பாத்தியதையானது காலதேச வேறுபாடுகளுக்குத் தக்க மாதிரியான நாட்டாண்மைக்காரர்களைத் தருகின்றதில்லை. தாதபடியினால், நாட்டாண்மைக்காரர் ஜாதியார்களால் ஒருவாறு மதிக்கப்படுவதில்லை. இவர்களை லட்சியஞ் செய்யாமலே அவரவர்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றியவாறாக நடந்துவரலானார்கள். எனவே, நாட்டாண்மைக் கட்டு குலைந்து போயிற்று. அதனால் என்ன நன்மைகள் சித்திக்க வேண்டுமென்று பூர்வகாலத்தினர் அதையுண்டாக்கினார்களோ அந்த நன்மைகள் உண்டாகாமற் போகலாயின. கிராமப் பஞ்சாயத்துகள் வேண்டும் வேண்டுமென்று அரசாங்கத்தார்களும் குடிஜனங்களும் கூக்குரலிட்டுக்கொண்டு பஞ்சாயத்துகளைச் சேர்த்து நடத்திவரப் பிரயத்தனப்படுமிக்காலத்தில் நாம் நம்முடைய பஞ்சாயத்துகளெல்லாம் பாழ்போனவர்களாய்ப் பரிகாசத்திற்கும் பழிப்புக்குமே இடமானவர்களாயிருந்து வருகிறோம். இஃதென்ன வேடிக்கை? எவ்வளவு தாழ்வு!

பரம்பரை நாட்டாண்மைக்காரர்களை யொழித்துவிடுவோமானால், நாம் சீர்ப்படுவது நிச்சயம். அதுவரையிலும் நமக்கு நல்லகதி வரமாட்டாது. கல்வியினாலும் அறிவினாலும் ஆராய்ச்சியினாலும் வயதினாலும் யோக்

நியதையினாலும் நியாயவன்மையினாலும் அபிமானத்தினாலும் சிறந்தவராயிருக்கக் கூடியவரைக் காலத்திற்குக் காலம் நாட்டாண்மைக்காரராகவுங் காரியஸ்தராகவும் ஓட் (vote) என்னும் அபிப்பிராயச் சீட்டு மூலமாகத் தெரிந்தெடுத்து (election செய்து) அமைப்போமானால் ஜாதியார்க்குச் சுகமுண்டாகும். இந்த ஏற்பாட்டையநுசரித்தால்தான் நாட்டாண்மைக்காரர்கள் அச்சத்தோடு நடந்து தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய விதமாக நடந்துகொள்ளுவார்கள். பரம்பரைப் பாத்தியஸ்தர்களுக்கோ அவ்வித பயமொன்று மிருப்பதற்கில்லை. அவர்கள் என்ன துர்க்குணங்களுடையவர்களா யிருந்தாலும் சாகுமட்டும் தமது பதவிக்கு மோசமில்லையென்று தைரியங்கொண்டு தமக்குத் தோன்றியவாறெல்லாம் நடந்து வருகிறார்கள். இவர்களைக் கண்டிப்பதற்கான வழியொன்றும் தக்கதாக இதுவரையிலு மேற்படவில்லை. எலக்ஷன்முறை கையாளப்பட்டால் யாதொரு தொந்திரவு மிருக்கவேமாட்டாது.

இந்தப் புதுமுறையைக் கூடியசீக்கிரத்தில் நமது ஜாதியார் கையாளவேண்டும். யாரியார் சீக்கிரங்கையாளுகிறார்களோ அவர்கள் சீக்கிரத்தில் சீர்திருத்த மடைவார்கள். நாட்டாண்மைக்காரர்கள் சம்மதிப்பட்டால் புது முறையை உடனே அமுலுக்குக் கொண்டுவந்து விடலாம். ஆனால், அவர்கள் இலேசாய்ச் சம்மதப்படமாட்டார்கள். அவர்களை நிக்ரகித்து வலிய எலக்ஷன் நடத்துவதென்றால், ஒருக்கால் சிவில் வியாஜ்யங்களுக்கு இடமுண்டாகலாம். கூடியவரையில் கக்ஷிகளையுங் கலகங்களையுந் தவிர்ப்பதில் நம்மவர்கள் நோக்கமா யிருக்க வேண்டுமாதலால், வியாஜ்யங்களுக்கு இடங்கொடுக்கக் கூடாது. எனவே, தற்கால நாட்டாண்மைக்காரர்களுக்குப் பிற்காலத்தில் புதுமுறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரலாம். எங்கெங்கு புதிதாய்ப் பஞ்சாயத்தார்களைக் கண்டுபிடிக்கவேண்டி வருகிறதோ அங்கெல்லாம் எலக்ஷன் முறையைக் கையாளுவதில் ஜாதியார்கள் கவனமாயிருக்க வேண்டும். ஒரு சமயத்தையேனும் கைவிடக்கூடாது.

இப்படி எலக்ஷன் நடத்துவதில், பரம்பரைப் பாத்திய முள்ளவர்கள் ஜாதியார்களால் தெரிந்தெடுக்கப்படுவதில் ஆக்ஷேப மொன்றுமேயில்லை. ஆனால், அவர்களினும் மேலானவர்கள் கிடைப்பதாயிருந்தால், அப்படிக் கிடைக்கக் கூடியவர்களுடைய பலனைச் சாதியார் இழக்காதிருக்க நேரிடுகிறது. எப்படியும், ஜனங்களுடைய மனோபாவத்தையும் அபிப்பிராயபலத்தையும் எலக்ஷன் முறை வெளிக்குக் கொண்டுவந்து விடும். இவ்வித எலக்ஷன்கள் சுமார் ஐந்து வருஷங்களுக்கொருமுறை நடத்தப் டடலாம். அன்றி, இதற்கு மத்தியிலேயே ஜாதியார்க்கு மனக்குறை யேற்படும் பக்ஷத்தில், பொது ஜனாபிப் பிராயத்தைத் தழுவி ஓர் பஞ்சாயத்தாரை விலக்குஞ் சுதந்திரமும் ஏற்படவேண்டும். அப்போதுதான் பஞ்சாயத்தார்கள் பயந்து நடந்து கொள்வார்கள்.

இந்த ஏற்பாடுகள் கைகூடிவிடுமானால், ஜாதிக்குறைகளெல்லாம் வெகுசீக்கிரத்தில் தீர்ந்துவிடும். இப்போது அங்கங்கு ஏற்படும் ஜாதிச்சபைகளுக்கவசியமேயிராது. அவற்றின்கடமைகளை யெல்லாம் பஞ்சாயத்தார்களே யேற்றுச் செய்யச் சௌகரியங்களுண்டாகும். சபைகளுடைய செல்வாக்கினும் பஞ்சாயத்துகளின் செல்வாக்கு அதிகமல்லவா? பஞ்சாயத்துகள் ஜாதியார்களை ஒருவழிக்குக்கட்டுப்படுத்தி நிர்ப்பந்தமாய்க் கட்டணங்கள் விதித்து வசூல்செய்து தக்ககாரியங்களுக்குபயோகிக்குஞ் சக்தியுடையன. சபைகளோ நிர்ப்பந்தமான காரியமொன்றுஞ் செய்ய வலியற்றனவாய் ஜாதியாருடைய அபிமானத்தின்மேல் நிற்கவேண்டியனவாயிருக்கின்றன. ஆகலால், என்னென்ன நன்மைகள் செய்யவேண்டுமென்னுங் கருத்தோடு ஜாதிச்சபைகள் ஏற்படுகின்றனவோ அதே கருத்துகளை நிறைவேற்றுதலைத் தமது கடமையாக நமது ஜாதிப் பஞ்சாயத்துகள் ஏற்றுக்கொள்வதாகவும், அப்பஞ்சாயத்துகள் பரம்பரைப் பாத்தியதையைப் பாராட்டாது எலக்ஷன் மூலமாய் ஏற்படுவதாகவும் வாய்க்குமானால் வெகு தீவிரமாகப் பலநன்மைகளை யுண்டாக்கிக் கொள்ளலாமென்பது திண்ணம். இதை நண்பர்கள் நன்காலோசித்துப் பார்த்துக் கூடியவிரைவில் ஷை ஏற்பாடுகள் நமது ஜாதியில் அங்கங்கு நுழைப்பதற்கான விதமாய் நடந்து கொள்வார்களெனப் பிரார்த்திக்கின்றேன்.

---

வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர்
சாலுமவைப்படிற் கல்லாதான் பாடிலன்
கற்றானொருவனும் பாடிலன் கல்லாதார்
பேதையார் முன்னர்ப்படின்.

—நான்மணிக்கடிகை.



## பெண் கல்வி

ஸ்ரீ T. தங்கவேலு ஆச்சாரியார், திருநெல்வேலி.

(12-வது பக்கத் தொடர்ச்சி)

பெயரை வைத்தழைக்காததால் வந்த பிணி யென்றுங் கூறிப் பணத்தைப் பல வழிகளில் பாழாக்குகிறார்களே யன்றி, குழந்தைகளுக்கு நேரிட்டது என்ன பிணியென்று சோதிக்கவும், எவ்விதமாக மருந்து யாரைக் கொண்டு கொடுப்பிக்க வேண்டுமென்று யோசிக்கவும், தக்க பத்திய முறைகளை அனுசரிக்கவும் புத்தியற்றவர்களாயிருக்கிறார்கள்.

V. 1. 'பெண்கள் படித்தாவதென்ன? அவர்கள் படித்து உத்தியோகம் செய்யப்போகிறார்களா?' என்று சிலர் சிந்திக்கின்றனர். படிப்பின் பிரயோசனம் உத்தியோகம் பண்ணுவதென்றே யல்ல. லௌகிக வாழ்க்கைக்குக் கல்வி அத்தியாவஸ்யமா யிருக்கிறது. ஸ்திரீகள் கல்விகற்றிருந்தாலன்றித் தங்கள் குடும்பங்களைச் சரியாய் நடத்தவும் தங்கள் குழந்தைகளைச் சரியான வழிகளில் செலுத்தவும் புத்தி ஏற்படாது.

2. படித்த பெண்கள் வீட்டுக்காரியங்களில் கவனம் வைக்கமாட்டார்களென்று சிலர் கருதுகிறார்கள். வாசிப்பினாலாய புத்தி கூர்மை யேற்பட்டால், குடும்பக் கடமைக ளின்னவை யென்பதை யறிந்தவர்களாய்க் குடும்பத்தில் சீர்திருத்தமும், சுத்தமும் நிறைந்திருக்கும்படி செய்துகொள்வார்கள். கல்வியில்லாப் பெண்கள் தமது கடமைகளை யறிவதும் அவற்றைச் சரியாய் நிர்வகிப்பதும் கஷ்டம். தம்மைத் திருத்திக்கொள்வதுங் கூடாமையா யிருக்கிறது. நம் ஸ்திரீகளுக்கு நன்கு சமையல் செய்வதற்குத் தெரிவதில்லை. குடித்தனத்திலோ சீர்திருத்தமும் ஆசாரமுங் கிடையாது. வரவிற்குத்தக்க செலவு செய்யவேண்டுமென்ற சிந்தை சிறிதேனு மில்லை. "சம்மாளக்குடித்தனம் செய்யாதே கதிகெட்ட வெள்ளாட்டி" என்ற பழமொழியே நமது ஜாதிப் பெண்களின் குடித்தனக் கேட்டிற்குப் போதுமான சாக்ஷி. இவை யெல்லாவற்றிற்கும் காரணம் கல்வியில்லாக்குறையேயன்றி மற்றுண்டோ?

3. வாசிப்பில் பயன்பெற வேண்டிய நேரத்தை, தற்சமயம் அஃதறியாக் குறையால் பேன்பார்ப்பதுபோல் வீட்டுக்கு வீடு போய்ப் பெரியசண்டை யிழுத்துச் சங்கடப்படுவதில் செலுத்துகிறார்கள்.

4. ஸ்திரீகள் வாசித்தால் அவர்கள் குணம் கெட்டுவிடுமென்று சிலர் கூறுகிறார்கள். கெட்ட சிந்தனை கல்வியால் வருவதல்ல, அவரவர்களுடைய குடும்பநிலை சகவாசங்கள் முதலிய காரணங்களா லுண்டாவது. கல்விகல்லாதவர்களிலும் கெட்ட சிந்தனையுடையவர்கள் அநேகரிருக்க வில்லையா? அவர்களுக்கு அது எதனால் வந்ததோ! (இன்னும் வரும்)

---

## கம்பியில்லாத் தந்தி

### மின்சாரத் தந்திகள்

மின்சாரத் தந்தி இப்போது இரண்டு விதமா யிருக்கிறது. (1) சாதாரண கம்பித் தந்தி, அதாவது பூமியில் ஸ்தம்பங்கள் நட்டு, கம்பி மாட்டி தந்தி அனுப்புவது. ஜலத்துக்கு அடியிலும் கம்பி மாட்டித் தந்தி அனுப்பப்படுகிறது. (2) கம்பி இல்லாமல் மின்சாரத் தந்தி அனுப்புவது. இது ஜலத்தின் மூலமாயும் தரை மூலமாயும் கம்பியில்லாமலே சமிக்ஞை செய்வதாகும்.

சாஸ்திர ரீதியாய்ப் பார்த்தால், கம்பித் தந்தியும் கம்பியில்லாத தந்தியும் வேலை செய்யும் முறைப்பாடு ஒன்றுதான். தந்திக்கம்பியானது மின்சார சக்தியை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் செலுத்துவதற்காக விருக்கிறது. அதே மாதிரியாக மின்சார சக்தியைச் செலுத்துவதற்கு சமுத்திர ஜலத்துக்கும் போதுமான சக்தியிருக்கிறது. தரைக்கும் அந்த சக்தி சற்று குறைவாயிருக்கிறது. மின்சார சக்தி ஜலத்தில் கம்பியில்லாமல் எப்படிச் செல்கிறது? காற்று அடிக்கும்போது எதிரே பற்பல தடைகளிருந்தாலும் அவைகளுக் கேற்றபடி அது இசைந்து தாவிச் சென்றுகொண்டேயிருப்பதுபோல, மின்சார விசையும் சமுத்திர ஜலத்தின் மேல்மட்டத்துக் கேற்றபடி இசைந்து ஜலத்தால் இழுக்கப்பட்டு செல்கிறது. மின்சாரவிசை சிற்சில விடங்களில் சற்றே சிதறிப் போனாலும், காற்றைப்போல விசையின் பெரும்பாகமும் சென்றுகொண்டுதானிருக்கும். காற்றானது போக்கிடங்களையே நாடி நுழைந்து செல்வதுபோல, மின்சார விசையானது தன்னை இழுக்கும் சக்தியுடைய ஜலம் தரை இவைகளையே நாடிச்செல்லும். ஆகையால் மின்சார விசையானது கம்பியில் செல்வதுபோல ஜலத்திலும் செல்லும். தவிர தந்தி அனுப்பும் முறையும் ஒன்றுதான்.

## தந்தி அனுப்புவ தெப்படி?

கம்பியினாலாவது, கம்பியில்லாமலாவது மின்சாரத் தந்தி அனுப்ப வேண்டுமானால், ஓரிடத்திலிருந்து. மற்றோரிடத்துக்கு மின்சாரம் செல்வதற்கு வழி ஏற்படவேண்டும். மின்சாரம் அனுப்புவதற்கு வழி, கம்பி, ஜலம், தரை இவைகளா யிருக்கலாம். அந்த வழியே, ஒரு யந்திரத்தைக்கொண்டு மின்சார சக்தியை ஒரு பக்கத்திலிருந்து அனுப்பிவர, மற்றொரு பக்கத்தில் அதன் செயல்கள் சமிக்ஞைக் கருவியைக் கொண்டு அறியப்படுகின்றன. இதுதான் மின்சாரத் தந்தி என்பது.

மின்சார சக்தி நிறுத்தி நிறுத்தி அனுப்பப் படுகிறது. கம்பித் தந்தியில், அந்த மின்சார சக்தி கம்பி மூலமாய்ச்சென்று சமிக்ஞைக் கருவிக்கு வருகிறது. அவ்வாறு மின்சாரம் இடை யிடையே நின்றபின் செல்கிற காலத்தை அந்த சமிக்ஞைக் கருவி குறிப்பிடுகிறது. சமிக்ஞைக் கருவியில் எழுத்தாணி போன்ற ஒருமுள் இருக்கிறது. மின்சாரவிசை தந்திக் கம்பி மூலமாய் சமிக்ஞைக் கருவிக்கு வந்தவுடன், எழுத்தாணியின் ஒருமுனையை கீழே இழுக்கிறது. அதனால் மற்றொரு முனை காகிதத்தில் ஒரு குறிபோடுகிறது. மின்சார விசை நின்றுவிடும் வரையிலும் அந்தக் கீறலைப் போட்டுக்கொண்டிருக்கும். மின்சாரம் இடைவிட்டு ஓடும் கால அளவைச் சிறியதென்றும் பெரியதென்றும் இரண்டு விதமாகப் பிரித்து, சிறிய குறியைப் "புள்ளி" என்றும் பெரியதைக் "கீறல்" என்றும் சொல்லப்படும். அம்மாதிரி 1-குறிப்பு முதல் 4குறிப்புகள் வரை பலவிதமாய்ச் சேர்த்து, ஒவ்வொரு எழுத்தாகத் தெரிவிக்கப் படுகின்றது. இன்ன குறிப்புகள் இன்ன எழுத்தாகுமென்று அடையாளங் காணப்படுகிறது. சமிக்ஞைக் கருவிகள் எழுத்தாணி யில்லாமல் வேறு விதமாயும் அமைக்கப்பட் டிருக்கின்றன. ஆயினும், மின்சார சக்தி இடைவிட்டு அனுப்பப்படும் காலத்தைக் குறிப்பிடுவதற்குத் தான் அக்கருவிகளெல்லாம் உபயோகிக்கப் படுகின்றன.

## முக்கியமான வேறுபாடு

தந்திக் கம்பியில் செலுத்தப்படும் மின்சாரம் கம்பியில் மாத்திரம் செல்வதால் அவ்வளவாக வீண் போகாது. மின்சாரத்தை ஜலத்தின் வழியாய் அனுப்பினால் ஜலமிருக்கு மிடத்திலெல்லாம் பரவிச் செல்லுமாகையால் மின்சாரத்தின் விசை வரவரக் குறைந்து போகும். அதனால் மின்சார விசை ஜலத்தில் சற்று தூரம் சென்று பலஹீனப்பட்டு சமிக்ஞைகளை யுண்டு பண்ணப் பயன்படாது. ஆகையால், சாஸ்திரநிபுணர்கள் இரண்டு முக்கியமான வழிகளில் ஆராய்ச்சி செய்தார்கள். 1. மின்சார சக்தி ஜல முழுவதும் பரவி பலஹீனப்படுவதால் அதற்குப் பரிகாரமாக மின்சாரத்தை ஏராளமான விசையுடன் உண்டுபண்ண வேண்டும். 2. அப்படிச்செய்தும் அந்த மின்சாரம் வெகுதூரம் சென்று பலஹீனமடைந்தாலும் அந்நிலைமையில் அதைக் கிரகித்துக் குறிப்பிடக் கூடிய அவ்வளவு நுட்பமானகருவி உண்டுபண்ணவேண்டும். முன்பு சொல்லியபடி, தந்தி அனுப்புவ தென்றால், ஓரிடத்திலிருந்து மின்சார சக்தியைச் செலுத்தி, மற்றோரிடத்தில் அதன் செயல்களை ஒரு சமிக்ஞைக் கருவியைக்கொண்டு அறியவேண்டும். அதாவது, மின்சார சக்தியை அனுப்பும் ஸ்தலம் ஒன்றும், அதைப் பெற்றுக்கொள்ளும் ஸ்தலம் ஒன்றும் இருக்கவேண்டும். ஆகையால், அனுப்பும் ஸ்தலத்தில் மின்சாரத்தை மிகுந்த விசையுடன் அனுப்பவும், பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில் மிகுந்த நுட்பமான கருவியைக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கிற மின்சாரத்தைக் கிரகித்துச் சமிக்ஞை செய்யவும் வேண்டும்

## "மின்சார அலைகள்"

சாஸ்திர நிபுணர்கள் ஆரம்பத்தில் செய்த பரிக்ஷைகளில் மின்சார சக்தியைப் பலவிதமாய் உண்டுபண்ணிப் பார்த்தும், கம்பியின் உதவியில்லாமல் வெகு தூரம் செல்லக்கூடவில்லை என்று அறிந்தார்கள். ஆனால் 1887-ம் வருஷத்தில் ஜெர்மன் ப்ரொபஸர் ஹெர்ட்ஸ் என்பவர் செய்த ஆராய்ச்சியானது, தற்போது வேலை செய்துவருகிற கம்பியில்லாத் தந்திக்கு முக்கிய ஆதாரமாயிருந்து வருகிறது. மின்சார சக்தியைக் கொண்டு நெருப்புப்பொறி கிளம்பச் செய்தால், அந்தப்பொறியானது மின்சாரத்தை அலைகளாகச் சுற்றிலும் வீசுகிறதென்று கண்டுபிடித்தார். ஒரு வீட்டில் மின்சாரப் பொறியொன்று ஒரு அங்குல நீளத்துக்கு உண்டு பண்ணப்பட்டபோது, இரண்டு மெத்தைகளுக்கு மேல் 30 அடி உயரத்திலிருந்த ஊசிக்கு காந்த சக்தி உண்டாயிற்று என்று தெரிய வந்தது. பிறகு அந்த ஊசிக்குப் பதிலாக ஒருகுழாயில் உலோகத்துண்டுகள் போட்டு பரிக்ஷைசெய்ததில் 500 கஜத்துக்கப்பால் உண்டாக்கிய மின்சாரப்பொறி அந்தக் குழாயைப் பாதித்தது என்று தெரியவந்தது. இதனால் இரண்டு முக்கியமானவிஷயங்கள் அறியப்பட்டன. முதலாவது, மின்சாரப் பொறி மின்சாரத்தை அலைகளாகச் செய்து விசேஷ விசையுடன் செலுத்துகிறது. இரண்டாவது, உலோகத் துண்டுகளையுடைய ஒரு குழாய் மின்சார அலைகளை எளிதில் கிரகிக்கக்கூடிய நுட்பத்தை உடையதாயிருக்கிறது. ஆகையால் தந்தி அனுப்பும் ஸ்தலத்தில், மின்சாரப் பொறியைக் கொண்டு மின்சாரத்தை அலைகள் போலச் செலுத்தினால் அதிக விசையுடன் அனுப்பலாமென்று ஏற்படுகிறது; மேலும் தந்தியைப் பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில் மின்சாரத்தைக் கிரகிப்பதற்காக அந்த நுட்பமான குழாயை உபயோகிக்கலாமென்றும் ஏற்படுகிறது. இந்த உண்மைகளைத் தான் ஆதாரமாகக் கொண்டு இப்போதுள்ள கம்பியில்லாத் தந்தி வேலை செய்து வருகிறது. சாதாரண தந்தியை மின்சாரக் கம்பித்தந்தி என்று சொல்வது போல, கம்பியில்லாத் தந்தியை மின்சார அலைத்தந்தி என்றுசொல்லலாம்.

## "ஆகாயக் கம்பி"

தந்தி அனுப்பும் ஸ்தலத்தில், மின்சாரப்பொறியை உண்டாக்கி மின்சாரத்தை அலைகள்போலச் செலுத்தினால் அதிகவிசையுடன் அனுப்பலாமென்று மேலே சொல்லப்பட்டது. தந்தியைப் பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில், மின்சார அலைகளைக் கிரகிப்பதற்காக அதி நுட்பமான குழாயை உபயோகிக்கலாமென்றும் மேலே சொல்லப்பட்டது. ஆனால் அந்தக் குழாயானது எவ்வளவு நுட்பமான சக்தி பெற்றிருந்தாலும் அதிக தூரத்தில் கொண்டுபோகப்பட்டால் மின்சார அலைகளை அவ்வளவு தெளிவாகக் குறிப்பிடவில்லை. ஏனென்றால் அந்தச் சிறிய குழாயின் மேற்புறம் அவ்வளவு விஸ்தாரமா யில்லாதபடியால் மின்சார அலைகளை ஜாஸ்தியாய்க் கிரகிப்பதற்கில்லை. இந்தக் குறையை நீக்கும் பொருட்டு ப்ரொபஸர் மார்க்கோனி 1896-ம் வருஷத்தில் ஓர் உபாயஞ் செய்தார். உயரமான கம்பியை அந்தக் குழாயுடன் சேர்த்தால் அந்தக் கம்பியானது மின்சார அலைகளை மிகுதியாய்க் கிரகித்து அந்தக் குழாயில் செலுத்துகிறதென்று தெரிய வந்தது. அந்தக் கம்பியானது அந்தக் குழாய்க்கு உதவியா யிருக்கிறது; ஆகையால் நீளமான கம்பி ஒன்றை நடுவதற்கு ஏற்பாடு செய்தார். உயரமான ஸ்தம்பத்தை பூமியில் நாட்டி, அதன் மேல்முனையில் வெகு நீளமான கம்பியை நட்டார். இதற்கு "ஆகாயக்கம்பி" என்று பெயர்.

தந்தி அனுப்பும் ஸ்தலத்தில், ஆகாயக் கம்பி உயரமான ஸ்தம்பத்தின் மேல் நடப்பட்டிருக்கும். அதற்கருகில் மின்சார சக்தியைக் கொண்டு பொறிகிளம்பச் செய்வதற்கு ஒரு யந்திரம் வைக்கப்பட்டிருக்கும். அந்த யந்திரம் ஆகாயக்கம்பியுடன் சேர்க்கப் பட்டிருக்கும். பூமியுடனும் சம்மந்தப் படுத்தி யிருக்கும். அந்த யந்திரத்தில் மின்சாரப் பொறி யுண்டு பண்ண வேண்டும் மின்சாரப்பொறி, மின் சாரத்தை அலைகள் போல வீசும் தன்மையுடையதென்று மேலே சொல்லி யிருக்கிறோம். அவ்வாறு உண்டாகும் அலைகள் ஆகாயக்கம்பியால் நாலாபக்கங்களிலும் செலுத்தப் படுகின்றன. ஏனெனில், மின் சாரப் பொறியுண்டாகும் யந்திரத்துடன் ஆகாயக் கம்பி சேர்க்கப் பட்டிருக்கிறது. மின்சார அலைகளை விசாலமாக்கிச் செலுத்துவதில் ஆகாயக் கம்பி மிகுந்த சக்தியுடையது. அந்தக் கம்பியால் செலுத்தப்படும் அலையின் நீளம் கம்பியின் உயரத்தைப்பற்றியது; அலையின் நீளம் கம்பியின் உயரத்துக்கு நான்கு மடங்கா யிருக்குமென்று மதிக்கப் படுகிறது.

தந்தி பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்திலும், உயரமான ஸ்தம்பத்தின் உச்சியில் நீளமான கம்பி நடப்பட்டிருக்கும். உலோகத்துண்டுகளையுடைய சிறிய குழாய் ஒன்று அந்த ஆகாயக் கம்பியுடன் சேர்க்கப் பட்டிருக்கும். அந்தக் குழாய் பூமியுடனும் சேர்க்கப் பட்டிருக்கும். அந்தக் குழாயுடன் சற்றுதூரத்தில் சமிக்ஞைசெய்யும் கருவி யொன்று சேர்க்கப் பட்டிருக்கும். தந்தி ஆபீஸ்களில் சாதாரணமாய் உபயோகிக்கப்படும் சமிக்ஞைக் கருவி தான் இங்கும் உபயோகப் படுகிறது. தந்தி அனுப்பும் ஸ்தலத் திலிருந்து நாலா பக்கங்களிலும் சென்று கொண்டிருக்கிற மின்சார அலைகளை இந்த "பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தி" லுள்ள ஆகாயக்கம்பி கிரகித்துக் கொள்கிறது. ஆகாயக் கம்பியால் கிரகிக்கப் பட்ட அலை அந்த நுட்பமான குழாயைத் தாக்குகின்றது. இந்தக்குழாய் மின்சார அலையால் தாக்கப்பட்டவுடன், மின்சார சக்தியைப் பெறுவதால் அதற்குச் சற்று தூரத்திலுள்ள சமிக்ஞைக் கருவியை வேலை செய்யத் தூண்டுகிறது. மின்சார அலை யொன்று

ஆகாயக் கம்பியால் கிரகிக்கப்பட்டு குழாயில் செலுத்தப் படுகிறது. அந்த குழாய் மின்சார சக்தியை அடைந்தவுடன் சமிக்ஞைக் கருவியிலுள்ள எழுத்தாணியின் ஒரு முனையைக் கீழே பிழுக்கிறது; எழுத்தாணியின் மற்றொரு முனை ஒரு குறி போடுகிறது. மின்சார அலை நின்றவுடன் அந்தக் குழாய் மின்சார சக்தியை இழந்துவிடுகிறது. எழுத்தாணியும் குறிபோடுவதை நிறுத்திவிடுகிறது. மற்றொரு மின்சார அலை வந்தவுடன் மற்றொரு குறிபோடப்படுகிறது. இவ்வாறு மூன்று தரம் நிறுத்தி அலைகள் அனுப்பப்படுகின்றன என்று வைத்துக்கொள்வோம். சமிக்ஞைக் கருவியில் மூன்று குறிகள் காணப்படும். இந்த மூன்று குறிகள் கொண்டது ஒரு எழுத்தென்று பாவித்துக் கொண்டு தந்தி சமிக்ஞைகளால் வார்த்தைகள் அறியப் படுகின்றன.

### உபயோகங்கள்

கம்பியில்லாத் தந்தியின் உபயோகம் தந்திக் கம்பிகள் போட முடியாத இடங்களுக்கும் போட்டிராத இடங்களுக்கும் சமாசாரம் அறிவிப்பதாகும். உண்மையில், நினைத்த விடத்துக்கு சமாசாரம் அனுப்பக் கூடு மென்றே சொல்லலாம். தந்திக்கம்பி போடுவதென்றால், முக்கியமாய் சமுத்திரம், மலை, ஆறு இவைகளுக்குக் குறுக்கே கம்பி போடுவதென்றால் எளிதில் ஆகக்கூடியதல்ல. மார்க்கோனி கண்டுபிடித்த முறைப் படிதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலும் எல்லா கப்பல்களிலும் உபயோகிக்கப்படுகிறது. கப்பல் விபத்துகளில், உயிர்ச்சேதமும் பொருட் சேதமும் தவிர்க்கப் பட்டும் குறைக்கப்பட்டு மிருக்கின்றன. யுத்தங்களில் மிகவும் உபயோக முள்ளதென்றும் தெரிய வந்திருக்கிறது.

சுரேந்தமித்திரன்.

---

முத்த மிடுவதினால் வியாதிக்குக் காரணமான கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றவரிடஞ் சென்று துன்ப முண்டாக்குகின்றன வென்று வைத்திய சாஸ்திரிகள் சிலர் சொலவதுண்டு. ஆனால், இது பிழையென்று பிரெஸ்லா நகரத்து டாக்டர் பாஷ்கோ என்பவர் தெரிவிக்கிறார் முத்த மிடுவதினால் நரம்புகள் ஹித முற்று தேகத்திற்கு ஆரோக்கிய முண்டுபண்ணுகின்றனவென்பது இவர் கொள்கை. முத்தமிடுவதால் அஜீரண வியாதி தொலைகின்றதென்றும், உண்டபின் தோன்று மொருவித அருசியான உணர்ச்சிக்கு முத்தமிடுதலே ஒளஷதமாகுமென்றும் மற்றொரு டாக்டர் கூறுகிறார்.

## ஆச்சாரி-ஆஸாரி

### ஆச்சாரிப்பட்டத் திரிபுசம்பந்தமாக கனம் சென்னைக் கவர்னரவர்கள் திருச்சமுகத்திற் கனுப்பப்பட்ட தந்திகள் வருமாறு:—

**4. Chingleput Visvakarma Community.** Chingleput Visvakarma Community respectfully submit that Government Orders against their using *Achari* title ignore their legitimate birthright for it sanctioned by long usage and recognised by Shastras. Pray Your Excellency to interfere, preserve their social rights and save them from meaningless incorrect form.

---

### 4. செங்கற்பட்டு விஸ்வகர்மகுலத்தார்

விஸ்வகர்ம குலத்தார்களுடைய ஆச்சாரிப்பட்டப் பிரயோகத்தை ஆக்ஷேபிக்கும் கவர்ன்மெண்ட் ஆர்டரானது, ஷை பட்டம் இக்குலத்தாருடைய நியாயவழியான ஜென்ம சுதந்திர மென்பதையும், சாஸ்திர சம்மதமானதென்பதையும் அசட்டைசெய்கிறதென்பதைச் செங்கற்பட்டு விஸ்வகர்மகுலத்தார்கள் மரியாதையுடன் விண்ணப்பஞ் செய்துகொண்டு, கனம்பொருந்திய தாங்கள் இதிற் பிரவேசித்து, ஷை குலத்தாருடைய ஜாதீய சுதந்திரங்களைப் பாதுகாத்து, அர்த்தஹீனமான பிழைப்பட்டத்தினின்றும் இவர்களைக் காப்பாற்றுவீர்களென்று பிரார்த்திக்கின்றோம்.

---

**5. Visvabrahmin Community of Udipi, South Canara.**

*14th March* 1914.

We, the Visvabrahmin Community of these parts as a whole, feel highly aggrieved by the recent order issued by Your Excellency's Government in the Public Department depriving us of our caste title of Achari which is our sacred birthright and heritage and substituting an inapplicable and unheard of word "Asari" instead and which change is also being now published in local news papers. Pray that Your Excellency's Government be pleased to restore our time-honoured title of "Achari."

### 5. தென்கன்னடம்ஜில்லா உடுப்பி விஸ்வப்பிராம்மணர்

1914ஞு மார்ச்மீ 14உ

இந்தப்பக்கங்களிலிருக்கப்பட்ட விஸ்வப் பிராம்மண வம்ஸத்தார் எல்லோரும், எங்களுடைய புண்ணிய ஜென்ம உரிமையாகவும் பாமபாத்தியதையாகவுமுள்ள ஆச்சாரியென்னும் ஜாதிப்பட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாய்ப் பொருந்தாததும் காதிற்படாததுமாகிய "ஆஸாரி" யென்னும் பதத்தை நியமித்து கனந் தங்கிய தங்களுடைய கவர்ன்மெண்ட் பப்ளிக் டிபார்ட்மெண்ட்டில் வெளியிட்ட சமீப ஆர்டரினாலும் இதே திரிபு இந்நாட்டுப் பத்திரிகைகளிற் பிரசுரிக்கப்பட்டு வருவதினாலும் மிகுந்த மனவருத்தமுடையவர்களாயிருக்கிறோம். புராதீனமாகிய எங்கள் "ஆச்சாரி"ப் பட்டத்தை கனமிகுந்த தங்கள் கவர்ன்மெண்ட் திரும்பத் தந்தருளப் பிரார்த்திக்கின்றோம்.

---

### அக்கரைக்குறைவால் ஆபத்து

வடஆற்காடு ஜில்லா ரீஸெடில்மெண்டைப்பற்றி ஆனரபில் ஸ்ரீபட்டு-கேசவப்பிள்ளையவர்கள் சென்னைச் சட்ட சபையில் கேள்வி கேட்டபோது கவர்ன்மெண்டார் தெரிவித்தபதிலில், ஷை ஜில்லாக்காரர் இவ்விஷயமாய் அக்கரையதிகங் காட்டாமையால் கவர்ன்மெண்டார் தமது உத்திரவை வற்புறுத்த நேரிட்டதென்று சொல்லப்பட்டது. இதினின்றும் நாம் முக்கியமானதொரு பாடம் படிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆச்சாரிப்பட்ட மாறுதலையொட்டி நமக்கொரு மனக்குறை யேற்பட்டிருப்பது நிச்சயம். இக்குறையைத் தீர்த்துக்கொள்வதில் நாம் அக்கரைகாட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆஸாரிப்பட்டத்தை விலக்கிப் பழபடி ஆச்சாரிப்பட்டமே வழங்கும்படி உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று பல ஜில்லாவாசிகளும் தனித்தனி கவர்ன்மெண்டாருக்கு முறையிட்டுக்கொள்ளாத பக்ஷத்தில், நாளை நம்மை நோக்கிக் கவர்ன்மெண்டார் "பலருக்கும் இதனால் மனஸ்தாபமேற்பட்டதென்பது எங்களுக்குத் தெரியாது போயிற்று, தெரிந்திருந்தால் உடனே நிவர்த்தி செய்திருப்போம்" என்று சொல்ல நாம் இடங்கொடுக்கக்கூடாது.

தேகமம்-சுந்தராச்சாரி.

### நமக்கு நல்லகாலம்

நல்லகாலம் நமக்கு வந்துவிட்டது விஸ்வேஸ்வரர் அநுக்கிரகம் சித்தித்திருக்கிறது. நமது குலசாபம் தொலையப்போகிறது. நமக்குள் ஒற்றுமை கைகூடப் போகிறது. நமக்கு பத்திவரப்போகிறது. நமது பிள்ளைகளை இனி படிக்கச்செய்வோம் நம்மைப்போல் மூடர்களாயிருக்க விடமாட்டோம். புத்தி, பத்தி, புத்தி! கல்விகற்காமல் சேவலப்பட்டது போதும், போதும், போதும். எல்லோரும் நம்மைப்பரிகசிக்கிறார்கள். வாடா வென்கிறார்கள், போடாவென்கிறார்கள். இவ்வளவோடாவது விட்டாற்போதுமே! நம்மை மெள்ள மெள்ளக் கீழேயிறக்கி வருகிறார்கள் நமக்கோ இன்னது நடக்கிறதென்று தெரியவில்லை. கண்களிருந்தால்தானே பார்க்கப் போகிறோம்? எண்ணுமெழுத்துமே கண்ணெனத் தகுவன. அவை வட்டில் பத்திரமாயிருக்கின்றன. ஆதலால், உலகத்தில் இன்னின்ன காரியங்கள் இப்படி யிப்படி நடக்கின்றன வென்று காணக் கல்விக் கண்ணில்லாதவர்களாய்ப் போனோம். இதை நம்மைச் சுற்றிலுமிருக்கிற ஜாதியார்களெல்லோரும் நன்றாய்க் கண்டுகொண்டார்கள். குருடர்களை என்னமாகத்தான் ஆட்டக்கூடாது? ஆட்டியாட்டி அலக்கழிக்கிறார்கள் நம்முடைய சொத்துக்களை யெல்லாம் பிடுங்கிவருகிறார்கள். நமக்கோ தெரியவில்லை. தெரிந்தால்தானே என் பிடுங்கிக்கொள்கிறீர்களென்று கேட்கமுடியும்? கேட்டாலுங்கூடக் "குருடர்தானே இவர்கள், நம்மை என்ன செய்ய இவர்களாலாகும்?" என்றிருப்பது சகசமாகும். ஆனாலோ, கேட்பதுமில்லாமலிருக்கிறோம். ஏன்? நமது சொத்துக்கள் இவையென்றே நமக்குத் தெரியாது. அவர்களை மற்றவர்கள் பிடுங்கிக்கொண்டு வருவதையும் அறியோம். இந்த ஸ்திதியில் நாம் சாஸ்த்ரோக்தமா யேற்பட்ட புராதன சுதந்திரங்களையும், நிலைமையையும் இழந்து நாளுக்குநாள் கீழுக்குக் கீழே நழுவி வந்துகொண்டிருப்பது ஆச்சரியமா? இல்லையில்லை! இதுயார் குற்றம்? நமது குற்றம். யாரை நோகலாம்? நம்மையே நோக வேண்டும். பிறரை ஒருபோதும் நோகவேகூடாது. கண்ணைத் திறந்து பார்க்கவேண்டியது ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையாய் ஏற்பட்டகுணம். அப்படியே எல்லா ஜாதியாரும் கண்திறந்து நடந்து வருகிறார்கள். நாமோ கண்திறவாமலே யிருந்து வருகிறோம். எவரே

னும் திறக்கக்கொண்ணும்பிடிவாதமாய் மூடிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய மூடத்தனத்தைக் கண்டு அதற்குத்தக்கபடியே நம்மைச் சுற்றிலுமிருக்கிற பல ஜாதியாரும் நம்மை நடத்திவருகிறார்கள். நாமும் அவர்களைப்போல் கண்திறந்து பார்ப்போமானல் நம்மையணுகுவதற்கு அவர்கள் பயப்படுவார்கள் குருடன் நல்ல பலசாலியாயிருந்தாலும் ஒரு சிறுகுழந்தைகூடக் கல்லெறிந்தோ திட்டியோ அவனைத்துன்பப்படுத்த முடியுமல்லவா? அந்தக் கதியில்தான் நாம் இப்போதிருக்கிறோம். இவர்கள் கல்லெறிவதையும், வைவதையும், நமது சுதந்திரங்களைப் பிடுங்குவதையுந்தடுத்து இவர்களுக்குத் தக்க பரிகாரஞ் செய்யுஞ் சக்தி நம்மிடத்திலிருப்பதாக இவர்களுக்குத் தெரியும் பக்ஷத்தில் நம்மை நெருங்க மாட்டார்கள். நமக்குத் தீங்கு செய்யப் பயப்படுவார்கள். நம்மோடு ஹிதமாய்ப் பேசி நல்லபடி நடந்து கொள்ளுவார்கள். அந்த சக்தியை நாமிப்போது வெளிப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். வெளிப்படுத்து மட்டும் நமதுஹிம்ஸை தீரமாட்டாது, நம்மை யலட்டுவதைவிட மாட்டார்கள். ஆகலால், எத்தனையோ கல்வியினால் கண்திறந்து கொண்டிருக்குஞ் சிற்சிலரேனும் நமது ஜாதி ஸ்திதியை நன்றாக ஆராய்ச்சிசெய்து பிறருடைய பழிப்புக்கும் நொடிக்கும் நம்மவர்கள் பாத்திரமாகாமல் தடுக்க வேண்டும். கண்மூடிக் கிடக்கும் பெரும்பாலார்க்குக் கல்விகற்பித்து அவர்கள் கண்களைத் திறப்பிக்க வேண்டும். இது இனி சுலபமாய் முடியும். நம்மவர்கள் இனிமேல் முரட்டுத்தனங் காட்டமாட்டார்கள். ஆஸாரிப்பட்டப் பிரயோகம் அவர்களுக்கு அவமானத்தை யுண்டாக்கிப் புத்திபுகட்டி யிருக்கிறது. ஆகலால், கட்டாயமாக இப்போது ரோஷம் பிறக்கும். இந்த அவமானத்தின் தன்மையை உள்ளபடியறிந்து இதை மாற்றிவிடப் பிரயத்தினப்படுவார்கள். அதற்காக ஒருவரோடொருவர் ஒற்றுமை கொள்வார்கள். தமக்கு எந்தெந்தக்குறைகள் எப்படி யெப்படி ஏற்பட்டிருக்கின்றன வென்பதை இதன் மூலமாகத் தெரிந்து கொள்வார்கள். அக்குறைகளை நீக்கிக்கொள்ளப் பிரயாசை யெடுப்பார்கள். இதனால் சாபம் சாபமென்னுஞ் சங்கடந் தீரும், சந்தோஷம் வரும், சம்பத்துண்டாகும், சந்தேகமேயில்லை.

பு. அருணசலம்.

# குடந்தையில் கான்பரன்ஸ்

## 1. வாலண்டியர்கள்.

ஒவ்வொரு காங்கிரசிலும் கான்பரன்ஸ்களிலும் வாலண்டியர்களென்னும் உபகாரவிசாரணைகர்த்தர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். நமது ஜாதியார் வடக்கே நடத்தும் கான்பரன்ஸிலும் இவ்விதவாலண்டியர்களிருக்கிறார்களென்று நமது பத்திரிகையின் 3-வது சஞ்சிகையாலறிந்தேன். அதுபோல், கும்பகோணக் கான்பரன்ஸிலும் வாலண்டியர்கள் வேண்டும். வருவோரை யெல்லாம் விசாரிக்க வேண்டியவர்கள் இவர்களே யாதலால் சுமார் 50 பேர்களாவது தேவையிருக்கும். சிறுவர்களை முக்கியமாய்க் கொள்ளலாம். மற்ற ஜாதிப் பிள்ளைகளையுங் கொள்வதில் தடையிருக்க மாட்டாது. குடந்தையார் இதையுங் கவனித்து நடத்துவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மா. சி. வைத்தியலிங்கபத்தர்.

## ஒற்றுமைக்கு உற்றவழி

சென்றமாதப் பத்திரிகையில் கான்பரன்ஸ் பற்றி எழுதியிருந்த விஷயங்கள் வெகு ஜனசம்மதமானவையா யிருக்கின்றனவென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். நமது ஜாதிக்கு வெகு சீக்கிரத்தில் ஒரு கான்பரன்ஸ் வேண்டும். மற்ற ஜாதியார்களெல்லாம் பல வருஷங்களாகக் கான்பரன்ஸ்கள் நடத்தி ஒற்றுமைபெற்றிருக்கிறார்கள். நமக்குள்ளும் ஒற்றுமையுண்டாக வேண்டுமானல் இதுதான் சரியான வழி. குடந்தையில் கான்பரன்ஸ் நடத்துவதால் மற்ற இடங்களிலுஞ் சுலபமாய் முடியுமென்றே தோன்றுகிறது. தஞ்சைஜில்லா வாசிகளாகிய விஶ்வப்பிராம்மணர்களெல்லாம் இப்போது இடுப்புக்கட்டிப் பாடுபட்டால், நமது குலத்தாரெல்லோருடைய மாறாத நன்றிக்குப் பாத்திரராவார்களென்பதில் தடையேயில்லை.

மு. நாகலிங்காச்சாரி.

## சிற்பப்பொருட்காக்ஷி

கும்பகோணத்தில் நடத்தப் போகும் கான்பரன்ஸ் மகாசபையோடு ஓர் சிற்பப் பொருட் காக்ஷியும் நடத்துவது அவசியமெனத் தோன்றுகிறது. நாம் தொழிலாளிகளாதலால், முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது தொழிலேயாகும். ஒரு ஜில்லாக் காரரைப்போல் மற்றொரு ஜில்லாக்காரர் வேலை செய்வதில்லை. வடநாட்டு



வேலைக்கும் தென்னாட்டு வேலைக்கும் வித்தியாசமிருக்கிறது. எல்லாநாட்டாருந் திரண்டுவரக்கூடிய கும்பகோணக்கான்பரன்ஸில் எல்லா நாட்டு வேலைப்பாடுகளும் பிரதர்ஸனஞ் செய்விக்கப்பட்டால் பார்க்கவரும் நமது ஜனங்கள் தமக்குப் புதுமையான வேலைப் பாடுகளைக் கற்றுக்கொள்வதற்குச் சமயமேற்படும். ஆதலால் நமது ஜாதிமகாசபைகள் ஒவ்வொன்றினோடும் ஒரு எக்ஸிபிஷன் கட்டாயமாக நடத்தவேண்டியவர்களாயிருக்கிறோம். இதைக் கும்பகோணத்தார் மறவாதிருப்பார்களாக.

காரமடை. சாம்பசிவாச்சாரி.

## பிறஜாதி விரோதங்கூடாது.

சென்றமாதப் பத்திரிகையி லெழுதப்பட்ட கான்பரன்ஸ் விஷயத்தில் தீர்மானங்கள் முக்கியமானவையாகும். நமது ஜாதிக் கான்பரன்ஸ் தென்னாட்டில் இதுவரையிலும் நடைபெறவில்லை யாதலால், நாம் நமது மகா ஜனக்கூட்டத்தின் ஆலோசனைக்குக் கொண்டுவரவேண்டிய விஷயங்கள் யாவை யென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் ஆராய்ந்து அறிவிப்பது அத்தியாவஶ்யமா யிருக்கிறது. குடந்தைக் கான்பரன்ஸ் கமிட்டியார் உடனே இதைப்பற்றி எல்லோருக்கும் ஒரு சர்குலர் அனுப்பி, தீர்மானத்திற்குரிய விஷயங்களைப்பற்றிப் பலருடைய அபிப்பிராயங்களையும் சீக்கிரமே பெறுவார்களென்று வேண்டுகிறேன். ஆலோசிக்கப்படவேண்டிய விஷய மொவ்வொன்றும் சுஜாதியை முன்னுக்குக் கொண்டுவந்து பிறஜாதியாருடைய அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமாக்குவிக்கக் கூடியதாயிருக்கவேண்டும். ஆதலால், அபிப்பிராயஞ் சொல்லுகிறவர்களெல்லாம் தூரதிருஷ்டி யுள்ளவர்களாய், நாம் தனியே ஓரிடத்திலமர்ந்திருக்கிறோமென்றெண்ணிக் கொள்ளாமல் பல ஜாதியார்களிடையே நாமிருக்கிறோ மென்பதையும் அவர்களோடிருந்து உலகவாழ்க்கையை நடத்த வேண்டியவர்களா யிருக்கிறோ மென்பதையும் கவனத்தில் வைத்து, நமது தீர்மானங்கள் பலருக்குஞ் சம்மதமானவையா யிருக்கும்படி அமைக்க வேண்டியது அவஶ்யமாயிருக்கிறது. பிறஜாதியாருக்கு விரோத மூட்டக்கூடிய தீர்மானங்களெவையேனுஞ் செய்வோமானல், நமக்கொரு பிரயோஜனமு முண்டாகப் போகிறதில்லை. மற்றவர்கள் துவேஷம் மாத்திரம் கட்டாயமாயேற்படும். அப்போது, கான்பரன்ஸ் நடத்தித் தீமையுண்டுபண்ணிக் கொண்டவர்களே யாவோம். அது கூடாது. நமது ஜாதிச் சீர் திருத்த வழிகளெவையோ அவற்றைக் கவனித்தாலே போதும். அவைதவிர மற்றவற்றைப் பற்றிய கவலை நமக்கு வேண்டாம்.

மா. வேதாசல உபாத்தியாயர்

## சமபந்தி போஜனம்

சமபந்தி போஜனத்தைப்பற்றிச் சில மாதங்களுக்கு முன் நமது பத்திரிகையில் எழுதப்பட்டு வந்ததாயினும், சமீபத்தில் யாதொரு கடிதமும் இவ்விஷயமாய்த் தோன்றவில்லை. ஜாதியீடேற்றத்திற்குரிய விஷயங்களை அசட்டையுடன் கவனியாமல் விட்டிருப்பது நன்றல்ல. அவற்றை அடிக்கடி நம்மவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அவ்வளவோடு நில்லாமல், ஒவ்வொரு குறையாகத் தீரும்படியான மார்க்கமுந் தேடவேண்டும். இப்படிச் செய்தால்தான் சுஜாதியாருடைய நிலைமை நாளுக்குநாள் விருத்தியாகும். அப்படி விருத்தி செய்யாவிட்டால் ஜாதித்தலைவர்கள் என்னதான் செய்வதற் கிருக்கிறார்கள்? வெறும்பேச்சுகளால் குணமொன்று முண்டாகமாட்டாது. அவரவர்கள் தமது பெருமையை விளக்கிப் பேசுவதினாலும், அதற்கேற்ற நடவடிக்கை செய்வதினாலும் ஜாதியார்க்குண்டாகப்போகிற நன்மை யொன்றுமே கிடையாது. சமபந்தி போஜனம்போன்ற திருத்தங்கள் கைகூடி நிலைக்கப் பாடுபடவேண்டும். இதற்குச் சரியானதருணம் குடந்தைக் கான்பரன்ஸேயாகும். இம்மகாஜனக் கூட்டத்தினால் வேறுபல நன்மைகளுண்டாவது நிச்சயமேயானாலும், சமபந்திபோஜனமே மற்றெல்லாவற்றிலும் அதிக விசேஷமானதென்று எனக்குத் தோன்றுகிறது. இதனால் பலவித பேதங்கள் மறைபட்டுப் போம். அப்போது ஐக்கியமுண்டாகும். ஐக்கியமுண்டாகுமாத்திரத்தினால் அடையலாம் பிரயோசனங்கள் கொஞ்சமா! இவ்வளவு நன்மையின் புண்ணியமும் கும்பகோணத்தாரையும் தஞ்சாவூராரையுஞ் சேரப்போகிறதென்றால், அவர்கள் பாக்கியத்தைப் பற்றி என்ன சொல்லலாம்! அவர்கள் புண்ணியமே புண்ணியம்!! இத்தனை ஜில்லாக்காரர்களிருந்தும் எவர்களுக்கேனும் கான்பரன்ஸில் கவனஞ்சென்றதா? வேறு ஜில்லாக்காரரும் இக்கடமையையேற்று முடிக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர்களேயானாலும், தஞ்சை ஜில்லாக்

காரர்களுக்குத்தான் முதன் முதல் கான்பரன்ஸ் யோசனை யுதித்திருக்கிறது. என்றாலும், மற்ற ஜில்லா வாசிகளும் சும்மாவிராமல் தாங்களும் அங்கங்கு கான்பரன்ஸ்கள் நடத்த முன்வருவது உத்தமம். ஒருவர் முதலில் நடத்திக் காட்டிவிட்டால் மற்றவர்கள் பின் பற்றுவது சுலபமாய்முடியும். இந்த சமபந்திபோஜன விஷயத்தில் குடந்தைக் கான்பரன்ஸ்காரர் செய்யுஞ் சகாயம் நிரந்தரமானதாயிருக்க வேண்டும். சுஜாதியார்களையே சமையலுக் கமைப்பார்களென்றும், அவர்கள் சர்வோத்கிருஷ்டமானவர்களா யிருப்பார்களென்றும், போதுமானபேர்களை இப்போதே தேடி யமைத்துக்கொள்வார்களென்றும் விரும்புகிறேன். பாகஞ் செய்வோரும் பரிமாறுவோரும் தக்கவர்களா யேற்பட்டுவிட்டால் எவரும் ஆக்ஷேபமில்லாமல் போஜனங் கொள்வார்களென்பது நிச்சயமே யல்லவா?

காரணி-குருநாத பத்தர்.

---

## நமது வாசகர்கள்

(கடிதக்காரர் தங்கள் அபிப்பிராயங்களுக்குத் தாமே ஜவாப்தாரிகளாவர்.)

### குலத்தைக் கெடுக்குங் கோடரிக்காம்பு.

கோடரிக்குள் நுழைந்திருக்குங் காம்பானது தன்குலமாகிய மரங்களை யெல்லாம் வெட்டிமுறிப்பதுபோல், நமதுஜாதியிற் பிறந்த பலர் நமதுகுலத்திற்கேநாசமுண்டுபண்ணிவருகிறார்கள். குலத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று விவேகிகள் பலவழிகளில் முயற்சி செய்துகொண்டிருக்க, இக்கோடரிக் காம்புகள் அதின்பெருமையைக் கெடுக்கக்கூடிய காரியங்களில் தலைப்படுகிறார்கள். இன்னதுநமக்குத்தக்கது இன்னதுதகாது என்றுணராமல் ஏதேதோபுசித்துக் கொண்டும் என்னென்னமோ பானஞ்செய்துகொண்டும் ஒழுங்கீனமான ஆசாரம் பற்றினவர்களாய்ச் சிலரிருப்பதினால் இவர்களுடைய நடவடிக்கைகள் இந்த ஜாதியினராகிய மற்றவர்களையும் பாதிக்கிறது.

இந்தப் படுபாவி அனாசாரிகளால் குலமுழுவதிற்கும் கேவலமான வார்த்தை யுண்டாகிறதே! இதற்கென்ன செய்யலாம்? பிராம்மணனுள்பட்ட ஒவ்வொரு ஜாதியிலும் கெட்ட நடவடிக்கை யுள்ளவர்களிருப்பதாகச் சொல்லக் கூடும். என்றாலும், நம்மவர்கள் தப்பி நடப்பதற்கு அது சமாதான மாகுமா? அனாசாரிகளைக் கண்டிக்க வேண்டாமா? யார் கண்டிப்பது? யாருக்கு இவர்கள் அடங்குவார்கள்? எப்படி அடக்குவது? அடக்காவிட்டால் குலப்பழி எப்படிநீங்கும்? நீங்காவிட்டால் நமது உயர்குலப் பெருமை நிலைநிற்பதெப்படி? இக்கேள்விகளுக்கு தக்கவர்கள் பதில் தருவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

M. S. A.

---

### ஒண்டவந்தபிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டிற்று

சென்ற பங்குனி அமாவாசையன்று சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் தேவஸ்தானத்து நடந்ததொரு விசேஷத்தை இங்கு குறிப்பிடுகின்றேன். அன்று அம்மனுக்கு அபிஷேகஞ் செய்யப்பட்டபோது சென்னை சிந்தாதிரிப்பேட்டை விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலைச் சிறுவர்கள் வெளிமண்டபத்தில் புருஷசூக்தம் சொன்னார்கள். கோவில் அர்ச்சகர் அதைத் தடுத்தார். காரணம் "சன்னிதானத்தில் பிராமணரல்லாதவர்கள் வேதபாராயணஞ் செய்யலாகாது"— என்னப்பட்டது. இந்த ஆக்ஷேபத்தைப்பற்றி நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். கோவிலோ நம்முடையது, அர்ச்சகரோ நம்முடைய சம்பளஆள், அத்தியயனஞ் செய்த சிறுவர்களோ நம்மினத்தவர்கள்! அர்ச்சகருடைய ஆக்ஷேபத்தை நிராகரித்து நமது சிறுவர்களை அத்தியயனஞ் செய்யச் சொல்லி யிருந்தால் அவர் பூஜையை நிறுத்தி யிருப்பார். பூஜை நிற்காதிருப்பதற்காக அத்தியயனம் அப்புறப்படுத்தப்பட்டது. பாடசாலை உபாத்தியாயராகிய தீக்ஷிதப் பிராம்மணர்மட்டும் அத்தியயனஞ் சொல்லப் பூஜை நடந்தது. அர்ச்சகர் கொள்கைப்படி, நாம் அத்தியயனஞ் செய்யக் கூடாதென்று ஏற்பட்டுவிட்டதல்லவா? இதற்கு என்ன சொல்வதென்று பிரமுகர்கள் யோசிப்பார்களாக.

கோவிலைத்தழுவி ஓர் வேதாத்தியயன பாடசாலையேற்படவேண்டுமென்று முன்னொரு பிரசுரத்திலெழுதப்பட்டதும், தேவஸ்தானத்தாரே ஒரு பாடசாலையேற்படுத்துவதாகத் தீர்மானித்திருப்பதும் என்னவது? அர்ச்சகருக்குப்பயந்து பாடசாலை ஏற்படுத்தாதிருப்பதா, அன்றி அத்தியயனத்திற்காக அர்ச்சகரை ஓட்டுவதா? ஷை பாடசாலை யுபாத்தியாயராகிய தீக்ஷிதர் நம்மவர்களுக்கு என்ன பாத்தியதை யிருக்கிறதென்று அத்தியயனஞ் சொல்லிவைக்கிறார்? தாம் செய்வது சரியான காரியமென்று அவர் உறுதிகொண்டிருக்கும் பக்ஷத்தில் ஏன் கோவிலர்ச்சகருக்கு நியாய மெடுத்துக் காட்டி அவரைச் சரிப்படுத்த லாகாது? அர்ச்சகரை விடத் தீக்ஷிதர் அதிக வாசிப்புடையவரா யிருப்பாரென்பதிற் சந்தேகமில்லை. பிள்ளைகளை விலக்கித் தாம் மட்டுஞ் சொன்னபோது அவர் கொண்ட அபிப்பிராயம் யாதோ? இது வெளிப்படுதல் அவஸ்மாயிருக்கிறது. அர்ச்சகர் சொன்னது சரியென்று தீக்ஷிதர் அபிப்பிராயப்பட்டாரானால் அதைத் தெரிவிக்கலாமே! இவ்விருவருமாகச் செய்த தீர்மானம் நமக்கு ஒப்போ தப்போவென்பதைப் பிறகு ஆலோசிப்போம்.

"பவித்திரப் பிராம்மணன்"



### நமது ஒழுக்கம்

நாம் சாஸ்திரங்களை நன்றாய் ஆராய்ந்து பார்த்து அதன்படி நடந்து சீர்ப்படுவது தற்சமயத்தில் அசாத்தியமென்றே ஏற்படுகிறது. ஆனால், சாஸ்திரங்களைப் பார்க்கக்கூடாது என்று சொல்ல வரவில்லை. 1913௵ அக்டோபர்௴ த்திய நமது விஸ்வகர்மன் பத்திரிகையின் 1-வது சஞ்சிகையில் 16-வது பக்கத்தில் "குலாபிவிர்த்திக்கு நாம் செய்யவேண்டிய தென்ன?" என்கிற தலைப்பின் கீழ் 19-வது பக்கம் வரையில் எழுதியுள்ள வியாசத்தை மறுபடியும் நமது நண்பர்கள் நன்றாய்வாசித்து அவ்வொழுக்கங்களை ஒன்று தவறாமல் கைப்பற்றி நடப்போமானால் பிறர் தூஷணையும் பிறர் நகைப்புமில்லாமல் நாம் உன்னத பதவியை அடையலாம். கிராமம் பட்டணங்களில் வசிக்கும் சுஜாதி அதிகாரிகள் இக்காரியத்தில் தலையிடுவார்களானால் இக்காரியம் சுலபமாய் முடியும். சுஜாதி அதிகாரிகள் இல்லாத கிராமங்களில் 16-வது பக்கம் முதல் 19-வது பக்கம் வரையில் எழுதியுள்ள வியாசத்தின்படி நடக்கவேண்டுமானால் அவ்வூரிலுள்ள நமது சுஜாதியாருள் அந்தஸ்து உயர்ந்த விவேஹஸ்தர் இக்காரியத்தில் சிரத்தை வைத்து அதிகாரிகள் நடத்துகிற வேலையில் அரைப்பாகமாவது எடுத்துக்கொண்டார்களானால் அவ்வூரிலும் சுலபமாய் நடைபெறலாம். சுஜாதி அதிகாரிகள் சொல்லுவதை நமது நண்பர்கள் அங்கீகரித்து அதன்படி நடக்க நம் விஸ்வேஸ்வரி அருள்புரிவாக: மேற்படி வியாசம் எழுதிய ஸ்ரீ கு. ப. வே. ஆச்சாரியார் அவர்களுக்கு நான் மனப்பூர்வமாக வந்தனமளிக்கிறேன்.

இண்டூர். பிரமாச்சாரி.

## விவசாய விளக்கம்

### நெல் வயலுக்கு எரு

தொன்று தொட்டு நெற்பயிர் சாகுபடி செய்யும் சகதி நிலங்களுக்கு தழை யெருவிட்டு மாசூலடைகிறோம். தற்காலத்தில் சில இடங்களில் பெட்லுப்பு, பிண்ணாக்கு, கக்கூஸ் எரு முதலியன உபயோகப்பட்டு வருகின்றன. சகதி நிலத்தின் இயற்கை புஞ்சை நிலத்தைவிட வேறுபட்டிருக்கிறபடியால் அதில் உபயோகமாகும் எருவின் பயனும் வேறுபட்டிருக்க வேண்டும்.

செடிகளுக்கு முக்கிய ஆகாரமாக உதவுவது சிகணவாயு. இது வெவ்வேறு ஸ்திதியில் விதம்விதமான உப்புகளில் இருக்கிறது. பெட்லுப்பில், நைட்ரேட் (nitrate) என்னும் ஸ்திதியிலும் நவசாரத்தில் அம்மோனிய (ammonia) என்னும் ஸ்திதியிலும் இருக்கிறது. நைட்ரேட் ஸ்திதியில் சிகணவாயு அதிகமாக பிராணவாயுவுடன் சம்மந்தப்பட்டும், அம்மோனிய ஸ்திதியில் பிராணவாயு குறைந்து சம்மந்தப்பட்டும் இருக்கிறது.

சாதாரணமாய்ப் புஞ்சையில் செடிகளுக்கு வேண்டிய சிகண எரு நைட்ரேட் ஸ்திதியில் உதவுகிறது. எருவாக உபயோகமாகும் தழை பிண்ணாக்கு முதலியன பிராணவாயுவால் மண்ணில் தகிக்கப்பட்டு அவைகளிலுள்ள சிகண எரு நைட்ரேட் ஸ்திதி யடைகிறது. அப்போதுதான் சிகண எரு செடிகளின் அங்கத்துக்குள் பாய்வதற்குப் பக்குவப்படுகிறது.

நஞ்சை வயல்களில் ஜலம் எப்போதும் இடைவிடாமல் நட்டதுமுதல் அறுக்கும் வரையில் இருப்பதால் பிராணவாயு மண்ணில் அப்போதைக்கப்போது சம்மந்தப்படுவதற்கு மார்க்கமில்லாமல் போகிறது.

அவ்வாறு இருக்கும் ஸ்திதியில் சிகண சம்மந்தமான எருக்களுக்கு வேண்டிய பிராணவாயு கிடைக்காததால் அவை நைட்ரேட் ஸ்திதி யடைவதில்லை. ஆனால் அவை அம்மோனிய ஸ்திதி யடைகின்றன. இவ்வாறு உண்டாவதற்கு ஆங்கிலேய பாஷையில் டிநைட்ரிபிகேஷன் (Denitrification) என்றுபெயர். இவ்விரண்டுவிதமான வேலை நடப்பதற்கு இரண்டுவிதமான வெவ்வேறு கருக்கள் மண்ணில் உண்டு.

நஞ்சை நிலத்தில் பிராணவாயு இல்லாதிருப்பதுடன் தழை முதலியவைகளால் இந்திரியவஸ்து அதிகப்

பட்டு இருக்கிறது. இவ்வாறு இருப்பது நைட்ரிபிகேஷன் டிநைட்ரிபிகேஷன் ஆகிய இருவித வேலைக்கு உதவும் எருக்களுக்கு தகுந்ததல்ல.

நவசார ஸ்திதியிலுள்ள சிகண எரு மணலில் 100 பாகம் எருவாக கிரகிக்கப்பட்டால், நைட்ரேட் ஸ்திதியிலுள்ள சிக்ண எரு 47 பாகம் ஆகாரமாக உதவுகிறதென்று ஜப்பானில் செய்த பரீக்ஷையில் தெரிகிறது. ஆக பெட்லுப்பு முதலியவைகளை எருவாக உபயோகிப்பதால் எருவின் முழுப்பயன் பயிருக்கு உதவுவதில்லை.

நஞ்சை நிலத்தில் உபயோகப்படும் நைட்ரேட் ஸ்திதியடைந்த சிகண எருவாகிய பெட்லுப்பு முதலியன சில கருக்களால் நைட்ரைட் (nitrite, ஸ்திதியடைகின்றன. இது தாமதப்பட்டு மறுபடியும் அம்மோனியா ஸ்திதியடைகிறது. வேறு சில கருக்களால் நைட்ரேட் ஸ்திதியிலிருப்பது மத்திய ஸ்திதியடையாமல் அம்மோனியா ஸ்திதியடைகிறது. ஆனால் மத்தியஸ்திதியாகிய நைட்ரைட் என்னும் ஸ்திதியில் அது செடிக்கு விஷம்போல் இருக்கிறது.

இந்திரிய சம்மந்த மண்ணில் அதிகமாகவும் களிமண்ணில் மிக நிதானமாயும், மணலில் மத்தியஸ்திதியிலும் நைட்ரைட் ஸ்திதி உண்டாகிறது.

மாட்டெரு, பிண்ணாக்கு இலைகள் மட்கி இருந்தால் 10 வாரத்தில் டிநைட்ரிபிகேஷன் ஆகிறது. அவைமட்காத ஸ்திதியில் உபயோகப்பட 2 வாரத்தில் நஷ்டமடைகின்றன. ஆகையால் மட்கிய எரு தழை, பிண்ணாக்கு முதலியவை நஞ்சைக்குச் சிரேஷ்டமான எரு.

மாவு, பிண்ணாக்கு, வைக்கோல் ஆகிய இவைகள் மட்காத ஸ்திதியில் எருவுடன் சேர்க்கப்பட்டால் டிநைட்ரிபிகேஷன் அதிகப்படுகிறது. இவை மட்கி இருந்து எருவானால் சிரேஷ்டமாக உதவுகின்றன.

நவச்சார எரு நஞ்சைக்கு மிகச் சிரேஷ்டமாக உதவுகிறது. பெட்லுப்பு முதலியன உபயோகப்பட்டால், அது முதலில்நைட்ரைட் ஸ்திதியடைந்து பிறகு நவச்சார ஸ்திதியடைகிறது இவ்வாறு மாறுதல் அடையும்போது சிகணவாயு தனித்தும் சம்பந்தப்பட்டும் நஷ்டமடைகிறது. வைக்கோல் மாவு மட்காத பிண்ணாக்கு முதலியவையுடன் பெட்லுப்பு சேர்க்கப்பட்டால் இவ்வாறு நஷ்டம் அதிகப்படுகிறது. ஆகையால் நஞ்சை வயலுக்கு நைட்ரேட் ஸ்திதியிலிருக்கும் பெட்லுப்பு முதலிய எரு பலவிதத்திலும் நாசமாகிறது. பின்னும் இது முதலாவது பாய்ச்சும் ஜலத்தில்கரைந்து நஷ்டமாகும். இரண்டாவது டிநைட்ரிபிகேஷன் ஆகும் சமயத்தில் நைட்ரைட்ஸ்திதியடைந்த எரு பாஷாணம் போல் செடிக்கு பழுப்பேற்றுகிறது. எருவிட்ட உடனே இலைபழுத்து மறுபடியும் பயிர் பச்சைகொள்வது இதனாலேயே. அவ்வாறு பழுப்படையாமலிருப்பது பயிருக்குச் சிரேஷ்டம்.

ஆகையால் தழை பிண்ணாக்கு முதலியவைகளை முதலில் மட்கச்செய்து எருவாக உபயோகிப்பது சிரேஷ்டமாக ஜப்பானிய பரீக்ஷையில் தெரிகிறபடியாலும் காரணம் ஒப்பத்தகுந்ததாயும் இருக்கிறபடியாலும் நாமும் அவ்வாறே அனுசரிப்பது மேன்மை. உண்மை எங்கிருந்தாலும் உண்மையே. ஆகையால் பூலோகத்திலுள்ளோர் எவரேனும் உண்மையைக் கண்டுபிடித்தார்களானால் அதை மற்றவர்கள் அங்கீகரித்து பரீக்ஷித்து நடவடிக்கை முறைமைகளில் சேர்த்துக்கொள்ளுவது விருத்தியாவதற்கு அழகு. அந்தவூர் அந்த மண் அந்த ஜனங்கள் வேறுபட்டிருக்கிறார்கள் என்றும் நமக்கும் அவைகளுக்கும் அடுத்ததல்லவென்றும் எல்லா விஷயத்துக்கும் ஒரே பாட்டு பாடுவது ஒப்பத்தகுந்ததல்ல.

தென்னிந்திய விவசாயம்.

---

## பாக சாஸ்திரம்.

### எண்ணெய்க்கத்தரிக்காய்.

இருபது கத்திரிக்காய்களை நாலுபிளவாக அறுத்து நெய்யிலாவது எண்ணெயிலாவது வறுத்தெடுத்துக் கொண்டு பத்து வறுத்தமிளகாயும் ஒருகைப்பிடி கொத்துமல்லி விதையும் நெகிழ அறைத்துத் தகுந்த புளியும் உப்புங்கரைத்து, மேலே அரைத்து வைத்திருக்கிற மிளகாயை இக்குழம்பில் கரைத்து ஐந்துபலம் உரித்த வெங்காயம், ஒன்றரைபலம் வெள்ளைப்பூண்டு, இரண்டரைபலம் முந்திரிப்பருப்பு, அடுப்பேற்றிய ஒரு பாத்திரத்தில் நெய்விட்டு முந்திரிப்பருப்பை வறுத்தெடுத்து அதையும் வெங்காயத்தையும் வெள்ளைப்பூண்டையும் வறுத்தெடுத்து இவைகளையும் மேற்படி கரைத்து வைத்திருக்கிற குழம்புடனே வறுத்த கத்திரிக்காயிற் கொட்டிச் சுண்டிவரும்போது கொஞ்சம் தேங்காய்ப் பால் விட்டு இறக்கிவிடவும்.



### கீராளன்கறி

உழக்கு வறுத்த பச்சைப்பருப்பு சலம்விட்டு நெகிழ அரைத்து உண்டையாக்கி ௫-பலம் உரித்த வெங்காயம் ௫-பச்சைமிளகாயும் பொடியாயரிந்து, போதுமான உப்புப்பொடியும்மேற்படி உண்டையிற் சேர்த்துப்பிசைந்து பில்லையாக்கி ஒரு பாத்திரத்தில் அரைபடி சலம் விட்டு வஸ்திரத்தால் வாய்கட்டியடுப்பேற்றி வஸ்திரத்தின்மீதுவைத்துக் கெட்டியாகிற வரைக்கும் வேகவைத்திறக்கி ஆறவைத்து ஒரு அங்குலப் பிரமாணம் துண்டுதுண்டுகளாக அரிந்து அடுப்பேற்றிய வேறொரு பாத்திரத்தில் நெய்விட்டுச் சிவக்க வறுத்தெடுத்துக் கொண்டு புசிக்க மிக ருசியாயிருக்கும்.

### தேங்காய்த்துவையல்

நல்ல தேங்காயை உடைத்து ஓட்டைப் போக்கிவிட்டு அதனை நெகிழ அரைத்து ௨- பலம் உளுத்தம் பருப்பும், ஒரு ரூபா யெடை மிளகாயும், நெய்யில் வறுத்து இவ்விரண்டையும் தேங்காயுடன் போதுமான உப்புஞ்சேர்த்து மறுபடியும் ஒன்றாக அரைத்து ஒரு நல்ல பாத்திரத்திற் பத்திரப்படுத்திப் புதிய போசனத்திற் குபயோகப்படுத்திக்கொள்ளவேண்டியது.

---

## ஆரோக்யபோதம்

### தாகரோகச் சிக்ச்சை

தாகமானது பெரும்பான்மையும் உஷ்ணம் அதிகப்படுவதினாலேயே யுண்டாகிறது. வேறு வியாதிகளிலும் தாகம் அதிகப்படுவதுண்டு. அந்தச் சமயங்களில் தாகத்திற்குக் காரணமாயிருக்கிற வியாதிக்கு சிகிச்சை செய்து அந்த ரோகத்தைச் சாந்தப்படுத்தினால், தாகம் தானே போய்விடும். ஆயினும் தாகரோகங்களில் உபயோகப்படும் கைவல்யமான சில முறைகளையும் இங்கெழுதுவாம்.

### சிகிச்சை

பருப்புக்கீரை விதை விராகனெடை-௫,இதனை அம்மியில் வைத்து ஜலத்தை வார்த்து வெண்ணெய்போலரைத்து அரை ஆழாக்கு ஜலத்திற் கரைத்து வடிகட்டி, ௨-மணிக்கொருதடவை பானஞ் செய்துவர, அதிதாக ரோகந் தீரும்.

### காடி ஷர்பத்து.

சீமை திராக்ஷக்காடி பலம்-௧௫, சீனிசர்க்கரை பலம்-௧௫, இரண்டையுஞ் சேர்த்து அடுப்பேற்றி இரண்டொருகொதி வந்தபின்பு வடிகட்டித் தெளியவைத்து மறுபடியும் அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கிச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை ௫-௧௦.

சமனளவு ஜலத்திற்சேர்த்துக் கலக்கிப் பானஞ்செய்யவும். இவ்விதஞ் சமயத்திற்குத் தகுந்தபடி, தினம் ௨-௩ தடவைகள் செய்து வந்தால் அதிதாகரோகம், பித்தமடக்கம், பித்தபேதி; பித்தவாந்தி, உஷ்ணரோகம் ஆகியவைகள் தீரும்.

### தாமரை ஷர்பத்து

தாமரைப்பூ விதழ் பலம்-௧௬, (உலர்ந்ததாயிருந்தால் பலம்-௮ ) இது வெண்தாமரையாயினும் சரியே அல்லது செந்தாமரையாயினுஞ் சரியே. இதில் ஒருபடி ஜலத்தை வார்த்து நாலிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டி அதில்-௧௦-பலம் சீனிசர்க்கரையைச் சேர்த்துக் காய்ச்சி இரண்டொரு கொதிவந்தவுடன் மறுபடியும் வடிகட்டி; தெளியவைத்து மறுபடியுங் காய்ச்சி பாகுபதத்திலிறக்கிச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை ௫-௧௦, சமனளவு தண்ணீருடன் கலந்து பானஞ் செய்யவும்.

உபயோகம்:—அதிதாக ரோகம், வெட்டைச் சூடு, கணச்சூடு, பித்தச்சூடு முதலிய ரோகங்கள் தீரும்.

### பழ ஷர்பத்து

எலுமிச்சம் பழச்சாறு பலம்-௧௦. சீனிசர்க்கரை பலம்-௧௦. இரண்டையுங் கலந்து காய்ச்சி இரண்டொரு கொதி வந்தபின்பு வடிகட்டித் தெளியவைத்து மறுபடியும் அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கிச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை ௩-௭. சமனளவு ஜலத்திற் கலந்து பானஞ் செய்யவேண்டும்.

உபயோகம்:—அதிதாகரோகம், பித்த சம்பந்த ரோகம், பித்தச்சூடு, வாந்தி முதலியவைகள் தீரும்.

சுகாதாரபோதினி.

## மற்றவர்மாட்சி

**டில்லிக் கட்டடச்செலவு.**—டில்லியில் கட்டப்படுகிற - இந்தியக் கவர்ன்மெண்ட் கட்டடச் செலவு 2,800000 டவுன் அல்லது சுமார் ரூ. 42000,000 ஆகுமென்று தெரிகிறது. இதில் பலலட்ச ரூபாய்களைச் சிற்பாசாரியர்கள் அடைவரென்பது திண்ணம். அப்படியடைவோரெல்லாம் மேல்நாட்டினரேயல்லாமல் இந்நாட்டினரல்லவென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இந்நாட்டாரிலும் பலஜாதி இஞ்சினியர்களும் தொழிற்காரர்களுஞ் சம்பாத்தியமடைவார்களேயன்றி நம்மவர்களடைவார்களென்றெண்ணுவதற்கில்லை. சிற்பஜாதியார் நிலைமை யென்னே யென்னே!

**இராமகிருஷ்ண மாணவர் கிருகம்.**—வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வாசிக்கவரும் புத்திசாலி ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாய்ச் சாப்பாடுபோட்டு இடங்கொடுப்பதற்காக, 1905-வது வருஷாரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாகும் இது. விவாகமான மாணவர்களை இதிற் சேர்ப்பதில்லை. 1913-வது வருஷ முடிவில் இதில் 23 மாணவர்களிருந்தார்கள். அவ்வருஷ மொத்த வருமானம் ரூ. 2,611-14-0 என்றும், செலவு போக இருப்பு ரூ. 1,310-5-11 என்றுந் தெரிகிறது. அபிமானிகளுடைய நன்கொடையுஞ் சந்தாவுமே இதன் முக்கிய வருமானம். இந்த கிருகத்தினால் வருஷாவருஷம் பல மாணவர்களுடைய வித்தியாபிவிருத்திக்குச் சௌகரியமேற்பட்டிருக்கிறது. இவ்வித சௌகரியம் விஸ்வகர்மகுல வித்தியார்த்திகளுக்கு ஏற்படுத்தப்படவேண்டாமா?

**அனாதைப்பிள்ளைகள் சம்ரக்ஷண சங்கம்.**—சென்னையிலுள்ள ஷை சங்கத்தார் தம்மிடமிருக்கும் பிள்ளைகளுக்குச் தச்சத்தொழிற்பாடசாலை யொன்று ஸ்தாபிக்க ரூ. 500 பிரத்தியேகப்படுத்திவைத்திருக்கிறார்கள். கைத்தொழில்களின் பெருமை நாளுக்குநாள அதிகமாய் விளங்கி வருவதற்கேற்ப, எல்லா ஜாதியாரும் கொல்லத்தொழில், தச்சத்தொழில், கன்னாரத்தொழில், சிற்பத்தொழில், தட்டாரத்தொழில் இவைகளில் விசேஷ விருப்பங்கொண்டு அவற்றை மேற்கொண்டு வருகின்றனர். அவற்றிற்குரியவர்களாகிய நாமோ நம்மிடத்து மற்றவர்கள் அசூயைகொள்ளும்படி நடந்துகொண்டு,ஷை தொழில்களை மெள்ளமெள்ளக் கைவிட்டு வருகிறோம். நமது வேலைகளிலேயே பிறர் முந்தியிருக்க நாம் பிந்தி யிருக்கிறோம்.

**கம்மவார் கான்பரன்ஸ்.**—சென்றமாதத்தில் கோதாவரி ஜில்லா கபிலேஸ்வரபுரத்தில், திருநெல்வேலி ஜில்லா குருவிக்குளத்து ஜமீன்தார் ஸ்ரீ பெருமாசாமி கொண்டல்ராயசாமி நாயுடு அவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்ற நாலாவது கம்மஜாதிக் கான்பரன்ஸில் செய்யப்பட்ட தீர்மானங்களில், ஜாதிப் பஞ்சாயத்துகளை வலிவுபடுத்தி அவற்றினாலேயே சுஜாதி விவாதங்கள் தீர்மானிக்கப்படச்செய்து கோர்ட் விவகாரங்களைக் குறைக்கவேண்டியது மிக முக்கியமாயிருக்கிறது என்பதும் ஒன்று. பஞ்சாயத்துக் கட்டுப்பாட்டை ஒருகாலத்தில் மிகுதியாகக்கொண்டிருந்த நாம் இப்போது நாளுக்கு நாள் அது கெட்டுவருவதினால் பலவித சங்கடங்களுக்கும் விரயங்களுக்கும் உட்பட நேரிட்டு வருகிறதென்பதைக் கண்டு தக்க சீர்திருத்தங்கள் செய்துகொண்டு சுகப்படவேண்டாமா?

**மாட்டா வித்தியாநிதி.**—சென்னை (E) இராமாநுஜ ஐயர் வீதி 8-வது எண் கிருகத்துள்ள ஷை நிதியின் காரியதரிசியார் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருக்கிறார். சென்னைச் சர்வகலாசாலையைச் சேர்ந்த எந்தக் காலேஜிலாயினும் வாசிக்கும் மாட்டியர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுமென்று ஷை விளம்பரத்திற் காணப்பட்டிருக்கிறது. மநுதாரர்கள் தமது கலாசாலைத் தலைவரால் சிபார்ஸ் செய்யப்படவேண்டும்; அன்றியும், இவர்களுடைய திறமைக்கும் ஏழ்மைக்கும் அத்தாக்ஷிப்பத்திரங்கள் தக்க கனவான்களிருவரிடமிருந்து பெற்று ஷை காரியதரிசியார்க்கு 1914வரு மேமீ 31உக்குள் அனுப்பப்படவேண்டும். மநுபாரத்தில் வயது, பிராம்மணன் பிராம்மணனல்லாதது, தந்தையின் பெயர் ஜீவனங்கள், வாசிக்குங் கலாசாலை, விவாகமானது ஆகாதது, முழுவிலாசம், இனி வாசிக்கவிரும்புங் கலாசாலை ஆகிய இவ்விபரங்கள் தெரிவிக்கவேண்டும். இப்போது மூவருக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டுவருகிறது. இவர்களிலொருவர் பி. ஏ. வகுப்பிலும் இருவர் இன்டர்மிடியட் வகுப்பிலும் வாசிக்கிறார்கள். இனி மநுசெய்து கொள்வோர்க்குப் பொக்கிஷ அளவுப்படி புதிதாய் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படும். இந்நிதியால் மாட்டியர்கள் சகாயம்பெற்று வருவதுபோல் விஸ்வகர்மவித்தியார்த்திகளுக்கொரு வித்தியாநிதி வேண்டுமென்று நாம் பலகால் தெரிவித்திருந்தும், அங்ஙனமொன்றை ஸ்தாபிப்பதில் உற்சாகந்தருவோருந் துணையளிப்போருமில்லாது தவிக்கலானோம்.



## வியவகாரப் போக்கு

### கூட்டு வியாபாரத்தில் தகப்பன்பட்ட கடனுக்கு மகன் ஜவாப்தாரியா?

நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களாகிய பிரதிவாதியின் தகப்பனாரும் வேறு சிலரும் சிங்கப்பூரில் கூட்டு வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டு வியாபாரத்துக்கு வாதி கடன்கொடுத்தார். பிரதிவாதியின் தகப்பனார் இறந்துபோனபிறகு, கூட்டுவியாபாரத்துக்காகப் பிரதிவாதி வாதியிடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்துவந்தார். பிரதிவாதியின் தகப்பனார் இறந்துபோனதற்கு முன்னும் பின்னும் தான்கொடுத்திருக்கும் தொகைகள் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று வாதி தாவாசெய்தார்.

பிரதிவாதி எல்லாத்தொகைகளையும் கொடுக்க வேண்டியதுதானென்று மதுரை ஸப் ஜட்ஜ் மிஸ்டர் ராமஸ்வாமி அய்யங்கார் தீர்ப்புச் செய்தார்.

பிரதிவாதி அப்பீல்செய்தார். பிரதிவாதியின் தகப்பனார்காலத்தில் வாங்கப்பட்ட கடன் தொகைகளுக்குப் பிரதிவாதியைக் கட்டுப்படுத்தக் கூடாதென்றும், அவருடைய தகப்பனார் இறந்த பிறகு வாங்கப்பட்ட கடன் தொகை சிறிதே என்றும் அவர் பக்கத்தில் வாதிக்கப்பட்டது. ஒரு கூட்டு வியாபாரத்தில் உள்ளே வந்து புகும் கூட்டாளி தனக்கு முந்தின கூட்டாளி பட்ட கடனுக்குக் கட்டுப்பட்டவன் என்றும், தகப்பன் துன்மார்க்கத்துக்காக வாங்கின கடன்களையும் சட்டப்படி செல்லக்கூடாத கடன்களையும் தவிர, தகப்பன் பட்ட மற்றெல்லாக் கடன்களையும் தீர்ப்பது ஹிந்துவாகிய ஒரு மகனுடைய கடமையாகையால், தகப்பன் பட்ட கடன்களைத் தீர்க்க இந்தப் பிரதிவாதி நன்றாகக் கடமைப்பட்டிருக்கிறாரென்றும் வாதி தரப்பில் வாதிக்கப்பட்டது.

பிரதிவாதி சொந்தத்தில் கடனைத் தீர்க்கக் கட்டுப்பட்டவரே என்று ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் வாலிஸ் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர் ஆகிய இவ்விரு ஜட்ஜ்கள் முடிவு செய்தார்கள். ஹிந்துலாவின்படி தகப்பன் பட்ட கடன்களை குடும்பச்சொத்திலிருந்து மகன் தீர்க்க வேண்டியவனாயிருப்பதுடன், கூட்டு வியாபாரம் சம்மந்தப்பட்ட சொத்தையும் பிரதிவாதி கொடுக்கல் வாங்கல் செய்து வருவதால், கூட்டு வியாபாரத்தில் தகப்பன் பட்ட கடனைப் பிரதிவாதி தீர்க்கவேண்டியதே என்று ஜட்ஜ்கள் தீர்ப்பளித்து கீழ்க் கோர்ட் தீர்ப்பை உறுதி செய்தார்கள்.

## விசேஷ வர்த்தமானம்

**பெங்களூர்.**—இது முதலில் பெகுகுளிர்ஊர் என்று வழங்கப்பட்டு வந்ததாம்.

*
* *

**சென்னை ட்ராம்வே வரும்படி.**—1913-ம் வருஷம் டிசம்பர் 31-ந்தேதியோடு முடிவான வருஷத்தில் சென்னை எலெக்ட்ரிக் ட்ராம்வே கம்பெனியாருக்கு மூன்று லட்சத்துப் பதினாறு ஆயிரம் ரூபாய் மொத்த வரும்படி வந்திருக்கிறதென்று சொல்லப் படுகிறது. இதன் பிரகாரம் தினப்படி வருமானம் ரூ. 870-க்கு அதிகமாகிறது.

*
* *

**பிளேக் பாஸ் போர்ட்.**—பிளேக் பாஸ் போர்ட் முறையைக் கூடியசீக்கிரத்தில் எடுத்துவிட வேண்டுமென்பதையம், அதற்குப்பதிலாக பிளேக் நடமாடுமிடங்களிலிருந்து வரும் ஜனங்கள் தங்களுடைய வருகையை ஸ்தல அதிகாரிகளுக்கு அறிவித்துவிட்டால் போதும் என்ற விஷயத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்பதையும் கவர்ன்மெண்டார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

*
* *

**மழைஜோஸியம்.**—G. சுப்பிரமணிய ஜோஸ்யுலு 1914-ம் வருஷத்தில் மழை பெய்வதைப்பற்றி மதராஸ் டயம்ஸ் பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதுகிறார்.—மே மாதம் 10-18ந் தேதிகளுக்கிடையில் வடகிழக்குப் பிராந்தியங்களிலாவது அல்லது தென்கிழக்குப் பிராந்தியங்களிலாவது, பலத்த மழையுடன் பிரசண்டமாருதம் வீசும். போனவருஷத்தைவிட இந்த வருஷம் மழைசீக்கிரத்தில் பெய்ய ஆரம்பிக்கும். கிராமாந்தரங்களில் அக்கினி பாதைகள் நேரிடாமல் காக்க, கிராமாதிகாரிகள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஏப்ரல் மாதம் 28-ந்தேதி முதல் மே மாதம் 3-ந்தேதி வரையிலும், மே மாதம் 16-ந்தேதி முதல் 20-ந்தேதி வரையிலும், மே மாதம் 28-ந்தேதி முதல் ஜூன் மாதம் முதல் தேதி வரையிலும் மழைபெய்யும். அக்காலங்களில்சென்னைக்குச் சுற்றுப்பக்கங்களில் மிதமாக மழை பெய்யும். ஜூன்மாதம் 3-ந்தேதி முதல் 8-ந்தேதி வரையிலும், 11-ந்தேதி முதல் 16-ந்தேதிவரையிலும், 24-ந் தேதிமுதல் 28-ந்தேதி வரையிலும், வடமேற்குப் பிராந்தியங்களிலும், மேற்குப் பிராந்தியங்களிலும்,

கல் மழை பெய்யலாம். அதன் பிறகு நதிகளில் பிரவாகம் போகும். அச்சமயமும், சென்னையிலும், அதன் சுற்றுப்பக்கங்களிலும் மழை பெய்யும்.

*
* *

**ஹைதிராபாத் நிஜாம் அரசர்.**—இவர் ஒருநாள் அரண்மனைக்கு வெளியே உலாவச் சென்றபொழுது மிகுந்த விலைபெற்ற ஆடையாபரணங்களைத் தரித்த ஒரு சிறுபெண் தோட்டத்தில் மிகவும் உல்லாசமாய் நடப்பதைக் கண்டார். உடனே அப்பெண் யாரென்று விசாரிக்க, அவள் அரண்மனைத் தோட்டத்தில் கூலி வேலை செய்பவளென்றும், சமஸ்தானத்திலுள்ள ஒரு பெரிய அதிகாரி தன் மனைவி மக்களையும் கவனியாது இப்பெண்ணிடம் நேசங்கொண்டிருப்பதாகவும் தெரிய வந்தது. உடனே அரசர் தம்மாளிகை சென்று அந்த அதிகாரியையும் அவர் மனைவியையும் வரவழைத்தார். அவர்களிருவரையும் வெவ்வேறு இடத்தில் இருக்கும்படி உத்தரவு செய்து, பிரஸ்தாப அதிகாரியை அழைத்துத் தாம் தோட்டத்தில் கேட்டறிந்த சங்கதி உண்மைதானா என்று கேட்டார். முதலில் நிஜத்தைச் சொல்லவில்லையாயினும் பிறகு அதிகாரி உண்மையை ஒப்புக்கொண்டான். பிறகு அதிகாரியின் மனைவியை விசாரிக்க, அவள் தன் புருஷன் மீது அரசன் முன்னிலையில் குறைகூற இஷ்டப்படவில்லையாயினும் முடிவில் "குழந்தை குட்டிகளும் தானும் பசியால் வாடுவதைக் கவனியாது வாங்கும் சம்பளம் 150 ரூபாயையும் தன் கணவன் தோட்ட வேலைக்காரியின்மீது நேசங்கொண்டு அவளுக்கே கொடுத்து வருகிறார்" என்று தெரிவித்தாள். உடனே அரசன் அதிகாரியினுடைய சம்பளம் முழுவதும் அவர் மனைவி மக்களுக்குக் கொடுபட வேண்டுமென்றும், அதிகாரி தோட்டவேலைக்காரியின்மீது நேசங்கொண்டதால் அவர் தோட்டத்தில் கூலி வேலை செய்யவேண்டுமென்றும், உத்தரவு செய்து விட்டாராம்.

*
* *

**இடியாலாய கொடுமைகள்.**—பண்ணுருட்டியில் இம்மாதம் 2-ந்தேதி சாயங்காலம் 3-மணிக்கு காற்றும் மழையும் இடியும் பலமாக விருந்தன. குசப்பாளையத்திலிருந்து பண்ணுருட்டிக்கு வந்த வண்டிக்காரன் ஒருவன் ஒரு ஜவுளிக்கடையில் அந்த மழைக்காக ஒதுங்கியிருந்தான். அவன் இடி விழுந்ததைப்பார்த்து உடனே இறந்துவிட்டான். அந்த ஜவுளிக்கடையில் இருந்தவர்களுள் ஒருவனுக்கு அந்த இடியைப் பார்த்ததும் ஒரு கண் போய்விட்டது. மற்றொருவனுக்கு ஒரு கை விழுந்துவிட்டது. அந்த ஜவுளிக் கடைக்காரனது தேகத்தில் எரிச்சல் கண்டது. அதே மழையில் பண்ணுருட்டிக்கடுத்த தட்டான் சாவடியில் ஒருவன் வண்டியில் ஒதுங்கி யிருந்தான். காற்று மிகுதியால் ஒரு மரம் விழுந்ததனால் அவன் மூளை சிதறிவிட்டது; அவன் உடனே இறந்துவிட்டான். அதே மழையில் விரிஞ்சிப்பாக்கம் ஸ்டேஷனுக்கு அடுத்த அரை மைல் தூரத்தில் கட்டமுத்துப்பாளையத்தில் 3 பேர் ஏற்றம் இறைத்துக்கொண்டிருந்தார்கள். இந்த மழையில் 3 பேரும் ஒரு பக்கத்திலொதுங்கியிருந்தார்கள். அவர்கள் பேரில் இடி விழுந்ததனால் அம்மூவரும் இறந்து விட்டார்கள்.

*
* *

**உயிருடன் புதையுண்ட சிசு.**—ஐக்கிய மாகாண அஜாம்காரில் சிலர் ஒரு சிசுவை உயிருடன் புதைத்து விட்டதாகத் தெரிந்து போலீஸ் அதிகாரியொருவர் மயானத்திற்கு விரைந்துசென்றார். நாலுமனிதர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தில் பூமிக்குள்ளிருந்து "மா, மா" என்ற சத்தம் காதில் பட்டதும் பூமியைத் தோண்டிப்பார்க்க அதற்குள் சுமார் ஒருமாத வயதுள்ள பெண் சிசுவொன்று உயிருடன் காணப்பட்டது. அச்சிசுவுக்கு வேண்டிய சிகிச்சை செய்தும் அது இறந்து போயிற்று. விசாரணை நடத்தியதிலிருந்து பின்வரும் சங்கதிகள் வெளியாயின. அந்தச் சிசு பிறக்கும் பொழுதே ஒரு பல்லுடன் பிறந்ததாம். இம்மாதிரி ஒரு பல்லுடன் குழந்தை பிறந்ததனால் ஏதோ அநர்த்தம் நேருமென்று பெற்றோர்களுக்குக் கவலை உண்டாயிற்று. குழந்தை பிறந்த மூன்றாம் நாளில் அக்கிராமத்திலுள்ள ஆறு பன்றிக்குட்டிகள் செத்துப் போயின. இந்தச் சிசு பல்லுடன் தோன்றியதனால்தான் பன்றிக்குட்டிகள் இறந்துபோயினவென்று கிராமத்தார் நினைத்தார்கள். அதற்கடுத்தநாள் ஒரு பசுங்கன்று இறந்தது. மறுநாள் ஒரு வீடு தீப்பற்றிக்கொண்டது. அதனால் கிராம வாசிகள் ஒரு மாந்திரீகப்பிராமணனை வரவழைத்துச் சொன்னார்கள். மந்திரவாதியும் "இந்தச்சிசு ராட்சஸ அம்சத்துடன் தோன்றியதனால்தான் பல கேடுகள் உண்டாகின்றன" என்று சொல்லி மாந்திரீகம் செய்து வந்தான். அதே இரவு சிசுவின் தகப்பனும் ஜுரத்தில் விழுந்தான். ஆகையால் குழந்தையை வெட்டிக் கொல்வதைவிடப் புதைத்து விடுதல் அவ்வளவு பாவமாகாதென்று நினைத்து சிசுவை உயிருடன் புதைத்துவிட நேர்ந்ததாம்.

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் I] 1914ஞு மேமீ [சஞ்சிகை 8

## ஒளிவளர் விளக்கு

1914ஞு ஏப்ரல்மீத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்தவர்கள் 569 பேர்.

*
* *

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வர தேவஸ்தான பிரம்மோற்சவம் நாளது மேமீ 29உ யன்று ஆரம்பமாகிறது. திந்திரிணிபுர மென்னும் திண்டிவனத்து ஆதி காமகோடி பீடா மகேஸ்வரியாகிய ஸ்ரீ காமாக்ஷி யம்மனுக்கு வைகாசிமீ 15உ யன்று உற்சவாரம்பமாகும்.

*
* *

1913ஞு டிசம்பர்மீ 31உ வரையிலுங் கூடிய காலத்திய நமது சபையின் ரிபோர்ட் இப்போது மெம்பர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றது. மெம்பர்கள் எத்தனை காபிகள் கோரிக்கேட்டாலுங் கட்டாயமாயனுப்பலாகும். இந்த ரிபோர்டை விஸ்வகர்ம வம்ஸத்தினர்களெல்லோரும் நன்கு வாசிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

*
* *

விஸ்வகர்மகுல வித்தியார்த்திகள், நமது சபை மூலமாகத் தங்கள் வித்தியாபிவிருத்தி சாதனங்களும் போதனைகளும் பெறலாமென்பதறிந்து நடந்துவரத் தலைப்பட்டிருப்பதுகண்டு சந்தோஷிக்கிறோம். தமது வித்தியா சம்பந்தமாய்ச் சபையாருடைய ஆலோசனை கேட்கும் வித்தியார்த்திகளுக்கெல்லாம் தக்க போதனை செய்யப்பட்டு வருகிறது. இவர்கள் கலாசாலைகளைச் சேர்ந்து வாசித்தலாதியவற்றிற்கேற்ற சாதனங்களும் சபையாரால் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இதற்காக திருச்சிராப்பள்ளி, கும்பகோணம், பெஜவாடா என்னுமிடங்களி லிருந்துஞ் சிலர் சென்னைக்கு வரலாயினர்.

*
* *

சென்னை அபிஷியல் அஸைனி (Official Assignee) ஆபீஸ் மானேஜரும், நமது சபைத் தலைவருமாகிய ஸ்ரீ சோமங்கலம்-கந்தசாமி ஆச்சாரியாரவர்கள் கோடைகால விடுமுறை யநுகூலம்பற்றித் தென்னாட்டு முக்கியஸ்தல தரிசனார்த்தம் வெளியேறியிருக்கிறார். இவர் இராமேச்சுரம், மதுரை, பழநி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவையாறு, கும்பகோணம், திருவிடைமருதூர்முதலிய விடங்களில்தங்கிச் சுஜாதிப்பிரமுகர்களுடன் சம்பாஷணை கொள்வார். அப்போது சபை சம்பந்தமான விவரங்கள் அறியவிரும்புவோர் அவரிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

சென்னை கோமளேஸ்வரன்பேட்டை ஸ்ரீ மீனாக்ஷியம்மையார் தேவஸ்தானத்திற்கு மூன்று நிலைக் கோபுரவாயில் கட்டவும், அஷ்டபந்தனாதிக் கும்பாபிஷேகஞ் செய்யவும் அவசியம் நேரிட்டிருப்பதாகவும், இதற்குக் குறைந்த பக்ஷம் ரூ. 1000 தேவையாயிருக்கிறதென்றும், இத்தொகையைக் குலஜனங்கள் உதவிபுரிய வேண்டுமென்றுங் குறிப்பிட்டு, ஷை தேவஸ்தான தர்மகர்த்தர் காரியதரிசி முதலாயினோர் வெளியிட்டுள்ள விளம்பரமொன்று, தர்மகர்த்தா ஸ்ரீ கெ. ப. ஆனந்த ஆச்சாரியாரவர்களிடமிருந்து நமக்குக் கிடைத்தது. சென்னை சித்திரவேலை வித்தியாசாலை அஸிஸ்டென்ட் சூபரின்டென்டென்டாகிய ஸ்ரீ M. வேலாயுத ஆச்சாரியாரவர்கள் ஷை தர்மத்திற்காக ரூ 200 (இருநூறு) உதவி புரிந்திருக்கின்றனர். மற்ற கனவான்களுந் துணை புரிவார்களாக.

*
* *

திருக்காட்டுப்பள்ளி சத்சங்க காரியதரிசியாகிய பண்டித ஸ்ரீ R. லோகநாத ஆச்சாரியாரவர்களால், "கல்வி" யென்னும் விஷயமானதொரு மகோபந்நியாசம் சென்ற ஏப்ரல்மீ 19உ யன்று நமது சபாமண்டபத்திற் செய்யப்பட்டது. அப்போது பண்டிதரவர்கள் கல்விப் பெருமையை நன்கு விளக்கிப்பேசி, உலகத்து மற்ற ஜாதி மதஸ்தர்களெல்லாம் அதைக் கைப்பிடித்து மேம்பட்டுவரும் இக்காலத்தில் நமதுஜாதியார் மட்டும் அஃதவசியமா இல்லையா வென்னும் யோசனையிலேயே காலங்கழித்து வருதல் மிகவும் விசனகரமானதொரு காக்ஷியாயிருக்கிறதென்று வற்புறுத்திக் கூறினர். இவருடைய நீதிவாக்கியங்கள் பலருக்கு நன்மை விளைக்குமென்பதிற் சந்தேகமில்லை. சபையார் வேண்டுகோட்கிசைந்து உபந்நியசித்தருளிய இவருக்கு அநேக வந்தனங்கள் அளிக்கிறோம்.

ஆச்சாரிப் பட்டத்திரியை மாற்றச் செய்வதற்கு நம்மவர்கள் இன்னும் தக்கபடி முயற்சிக்கவில்லையென் றஞ்சுகிறோம். இதுவரையிலுங் கவர்ன்மெண்டாருக் கனுப்பப்பட்ட மகஜர்களுக்குத் தந்திகளுக்குந் திருப்திகரமான உத்திரவு கிடைக்கவில்லை. ஆதலால், நமது குறையை நன்றாக முறையிடவேண்டியவர்களாயிருக்கிறோம். இதை ஒவ்வொரூர்வாசிகளும் அங்கங்குள்ள சுஜாதிப்பிரமுகர்களும் நன்றாய் உணர்ந்து நடந்துகொள்வார்களென்று விரும்புகிறோம். இவ்விஷய சம்பந்தமாக கவர்ன்மெண்ட் ஆர்டர்பிறந்து நாளது ஜூன்மீ 26உ யோடு ஒருவருஷமாகிறதாயினும் நம்மவர்கள் இப்படி உணர்ச்சியின்றியிருந்தல் எவ்வளவு பழிகாரணமென்பதை நாமெடுத்துக் காட்டவும் வேண்டுமோ? ஷை ஜூன்மீ 26ந்தேதியைக் குலக்கௌரவ நாசத் துக்காளாகப் பாவித்து, அன்று ஒவ்வோரூரிலும் நம்மவர்கள் கூட்டங்கூடி நமது பட்டசம்பந்தமாக நேரிட்டுள்ள போபத்தை நீக்குவதற்கான ஆலோசனைகள் செய்து, கவர்ன்மெண்டுக்கு விண்ணப்பங்கள் மகஜர் மூலமாகவோ தந்திவழியாகவோ அனுப்புதல் அத்தியாவஸ்யமாயிருக்கிறது. அப்படியே, ஓர் பெருமகாநாடுசேர்ந்து இவ்விஷயமாக முறையிடுதலும் கட்டாயஞ் செய்யப்படவேண்டிய காரியமாயிருக்கிறது. இதற்குத் தஞ்சை ஜில்லாக்காரர்களும், குடந்தைநகர் வாசிகளுமாயுள்ள ஆச்சாரிமார்கள் துணைசெய்வார்களென்று நம்பியிருக்கிறோம்.

---

“உன் குதிரை ஏன் இவ்வளவு மெதுவாய்ப் போகிறது?” என்று திண்டுக்கல்லிலிருந்து பழநிக்குச் செல்லுமொரு பிரயாணி தன் வண்டிக்காரனைக் கேட்டான். “சுற்றிலுமுள்ள அழகான காக்ஷிபற்றி மெதுவாய்ப் போகிறது சுவாமி! புதுக் குதிரை, இந்த வழியை முன்னைப்போதுங் கண்டதில்லை; அதிலும் புத்திகூர்மையுள்ள மிருகமிது; நல்லவர்கள் துணையை மிகவும் விரும்புவது வழக்கம். கூடுமானவரையிலும் தங்களோடேயே யிருக்கவேண்டுமென்பது அதின் ஆசை” என்று வண்டிக்காரன் பதிலளித்தான்.



## ஜாதீயக் கொண்டாட்டங்கள்

ஸ்ரீ. பி. சங்கரலிங்க ஆச்சாரியார்

இவ்விஷயமாகச் சென்ற 6-வது சஞ்சிகையி லெழுதப்பட்டிருக்கும் “ஒளிவளர்விளக்கு”க் குறிப்புகள் வெகுமனோகரமாயிருக்கின்றன. ஜாதீயக் கொண்டாட்டங்களை நம்மவர்கள் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரத் தலைப்படுவார்களானால், நமக்குள் ஒரு புதுவுணர்ச்சி யுண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை. இவ்விதப் புதுவுணர்ச்சி யுண்டாகவேண்டியது அத்தியாவஸ்யமாயிருக்கிறது. புது வுணர்ச்சிகளுண்டானால்தான் குலநாசகாரணமாயுள்ள அநாகரிகப் பழைய வுணர்ச்சிகள் பறக்கடிக்கப்படும். ஆதலினால், ஜாதியுயர்ச்சியில் அக்கரை கொண்டுழைக்கும் ஒவ்வொரு அபிமானியும் ஜாதீயக் கொண்டாட்டங்களை வழக்கத்திற்குக் கொண்டுவருவதில் மிகுந்த ஊக்கங் காட்ட வேண்டும்.

ஆச்சாரிப்பட்ட ஆபத்து நாளாகிய ஜூன்மீ 26உ யை விஶ்வகர்மகுலத்தார்கள் எல்லோரும் துக்கதினமாகத் தங்கள் தங்கள் வீடுகளிலும் ஊர்களிலுங் கொண்டாடவேண்டும். அன்று நம்மவர்கள் வேலை நிறுத்தஞ் செய்தலும் நன்றேயாகும். அப்படிச் செய்யும்படி நாட்டாண்மைக்காரர் முதலிய அதிகாரிகள் தங்கள் வட்டாரங்களிலுள்ள நம்மினத்தவர்களுக்குத் தாக்கீது அனுப்பினால், இதுவரையிலும் இந்த ஆபத்தைப்பற்றியறியாதிருக்கக் கூடியவர்களும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுவார்கள். தெரியத்தெரிய அவர்களுக்கு உணர்ச்சியுண்டாகும். உணர்ச்சி யுண்டாக வுண்டாக அவர்கள் தங்கள் நிலைமையைக் கண்திறந்து பார்க்கத் தொடங்குவார்கள். தொடங்கத் தொடங்கக் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சீர்திருத்தம் பெறுவார்கள்.

இப்படியே பண்டிதமார்க்கசகாய ஆச்சாரியார், டாக்டர் பழநியாண்டி, இஞ்சினீயர் சுப்பராய ஆச்சாரியார், மாணும்பதி அப்பா கண்ணுச்சாரியார் போன்ற மகான்களைப்பற்றியஞாபகம் நம்மைவிட் டகலாதிருக்கச்செய்வதற்காகத் தக்க அநுஷ்டானங்களைக் கைப்பற்றுதல் அவஸ்யமா யிருக்கிறது. இவர்களில் ஒவ்வொருவருடைய ஞாபகமும் ஒவ்வொரு விஷயத்தில் பயன்படுமென்று சொல்லலாம். பண்டித மார்க்க சகாயஆச்சாரியாரால் நமது வைதிக பாத்தியதைகளும் அவற்றைக் கைசோரவிடாது காப்பாற்றுவதில் நாம் காட்டவேண்டிய கவனமும் இவ்வளவென்பது விளங்கும். டாக்டர் பழநியாண்டியவர்கள் மேல்நாடு சென்று வாசித்துப் பெரும் பதவிபெற்றுப் பல ஜாதிமதஸ்தர்களும் பல தேசத்தினரும் சிறப்பாய்க் கொண்டாடவாழ்ந்து செல்வாக்குற்றிருந்ததும், மதவேறு பாடடைந்தும் குலப்பற்றைக் கொஞ்சமேனும் விடாமல் அந்தியகாலம் வரையிலும் தமது ஜாதியாருடைய நன்மையில் நாட்டமதிகங் கொண்டிருந்ததுமாகிய பெருங் குணங்கள் ஒவ்வொருநாளும் நமது ஞாபகத்திற்கு வரவேண்டிய பெருமைவாய்ந்தனவாகும்.

இஞ்சினீயர் செஞ்சி-சுப்பராய ஆச்சாரியாரவர்கள் சிற்பக்கல்வியில் உயர்தரப்பட்டங்கள் பெற்று நிர்மிதகனகாரியங்கள் பல வெவ்வேறிடங்களிற் செய்து அரசாங்கத்தாருடைய நன்மதிப்பும் பலஜாதியாருடைய பக்ஷமும் பெற்றுப் பிரகாசித்து இக்குலத்திற்குப் பெருமை யுண்டாக்கியவர். நமது வம்ஸத்திற்கு மிக்குரியதாகிய இவ்வழியில் நம்மக்களைப் புகுத்தாதிருத்தல் எத்துணைப்பெரிய குலப்பாதகம்!

மாணும்பதி - அப்பாகண்ணுச்சாரியார் சமஸ்கிருத பாஷாபாண்டித்திய விசேஷத்தினாலும், கவிசாதுரியத்தினாலும் வித்தியா வந்தர்கள் பலருடைய வியப்பிற்குப் பாத்திரமாயிருந்த விவேகி.

இந்நால்வரும் நம்மவர்களால் மட்டும் நன்கு மதிக்கப்பட்டிருந்தவர்களல்ல. சகல சுஜாதியார்களுடைய காதுகளையும் முட்டிய புகழை யுடையவர், சாமானியரல்லர். நூல் நெறியும் உலக நெறியு மறிந்த உத்தமர்கள். இவர்களை நாம் மறப்பதென்றால், கல்வியின் பயன்களையும் அதனால் வருஞ் சிறப்புகளையும் மறந்தவர்களாவோம். ஒவ்வொரு கூட்டத்தாருடைய பொதுக் கொண்டாட்டங்களினாலேதான் அக்கூட்ட லக்ஷணம் இவ்விதமானதென்று பிறரால் துணியப்படும். நமது தற்கால வழக்கங்களால் நாம் பிறர் மதிப்பில் பின்னமடைந்திருக்கிறோமென்பதை ஒருவரெடுத்து நமக்குக் காட்டவேண்டியதில்லை. இந்த பின்னத்தை யொழித்துப் பிரகாசந் தரக்கூடிய கொண்டாட்டங்களை ஜாதிக்குள் கொண்டுவந்து விடுவோமாக.

## நமது சபையினிடத்து சிரத்தை

(6-வது சஞ்சிகை 10-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸ்ரீ த. ப. வே. ஆச்சாரியார், திருச்சி.

மேற்சொல்லிய காரியங்களை உத்தேசித்து அல்லவென்று தீர்மானம் வரின் வேறு எந்த நல்ல காரியத்தைச் செய்ய ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்று நாமே சில கேள்விகளைக்கொண்டு ஆராய்வோம். குலோத்தாரணம் செய்வது சபையின் கருத்தென விளங்குகிறது.

**1. குலோத்தாரணமாவது யாது?**—ஒரு கூட்டத்தார் தம்முடைய சீலம், ஒழுக்கம், நடை, உடை, பாவனை, நாகரீகம், கல்வி, இவைகளில் மேம்பாடடையும் பொருட்டு செய்யவேண்டிய பிரயத்தனம்.

**2. இதினால் என்ன பிரயோஜனம்?**—இப்படியே ஒவ்வொரு கூட்டத்தாரும் ஒருவழிப்பட்டு தம்தம் குணங்களைச் சீர்திருத்திக்கொள்வதால் அவர்களை ஆளுகின்ற ராஜனுக்கும், ராஜாதி ராஜனாகிய மூல புருஷனாகிய பகவானுக்கும் வேலை குறைகிறது.

**3. அவர்களுக்கு வேலை குறைந்தால் நமக்கென்ன?**—ஒரு தகப்பன் அல்லது எஜமான் செய்யும் வேலையை அவன் பிள்ளை அல்லது சேவகன் பாகித்துக் கூடியவரை செய்யும்பட்சத்தில், இப்படி வேலைசெய்கிறவர்களிடத்தில் அன்னவனுக்கும் பிரியம் ஏற்படுகிறது. இப்படிப் பிரியம் ஏற்பட உயர்ந்த பதவியை அடைகிறார்கள்.

இதேவிதமாக சந்தேக விபரீதமில்லாமல் நம் சபைமாட்டு சிரத்தைவைத்து உழைப்போமாயின் இகத்தில் உன்னத பதவி யடைவதுமல்லாமல் கடைசியில் பகவானது சற்கதியையும் அடைவோம்.

இவ்வித சங்கங்கள் பூர்வகாலத்தில் ஏற்பட்டிராத பக்ஷத்தில் நாம் இப்போது நேரில் அனுபவிக்கும் மதம், ஜாதி, பாஷை இவைகள் எப்படி உண்டாயிருக்கமுடியும்? தனிமரம் தோப்பாகுமா? பலருடைய சேர்க்கையின் பயனால் நாம் எவ்வளவோ காரியத்தைச் செய்து முடிக்க வல்லவர்களாகிறோம் என்றதை சுருதி யுக்தி அனுபவம் என்ற மூன்றுவிதத்தாலும் பரீக்ஷித்து 'நமது சபை' யென்பது அவசியம்தான். அங்கீகரிக்கத்தக்கது தான், உண்மையானதுதான் என்றுணர்ந்த நிச்சய புத்திதான், 'நமது சபையினிடத்து சிரத்தை' எனப்படும்.

இவ்வாறு நிச்சயபுத்தி உண்டானபிற்பாடு அதை எவ்விதத்தாலும் அசைக்கமுடியாமலிருக்கவேண்டும். யாராவது ஒருவர் வந்து "சபையால் என்ன காரியம்சாதிக்கப்போகிறீர்கள்? எனக்குத் தெரிந்தவரையில் எத்தனையோ சபைகளைப் பார்த்துவிட்டேன். அவைகளும் இருந்தவிடம் தெரியாமற்போயின. எத்தனையோ சபைகள் கோர்ட்டு வழக்குகளில் இழுக்கப்பட்டு திண்டாடுகின்றன. இப்படிச் சபை சபையென்று ஊர்ச்சொத்துகளைவாங்கிச் சாப்பிட்டுவிட்டார்கள்" என்று பலவிதமாய் நம்மைப் பரிகாசஞ்செய்து மனதைக் கலைத்தாலும் "நமது சபையால் எவ்வளவோ மேலான காரியங்களைச் செய்து காட்டலாம்" என்று கலங்காத திடநம்பிக்கையோடு இருக்கவேண்டும். (சபைகள் இருந்தவிடம் தெரியாமற் போயிற்றென்றால் எதுதான் சாஸ்வதமாய் இருக்கக்கூடியது?)

இவ்வித திடமான நம்பிக்கை உண்டானால் மட்டும் போதுமா? 'சாப்பிட்டால் தேகம் வலுக்கும்' என்று பிறர் சொல்லக்கேட்டு அதில் திடமான நம்பிக்கையிருந்தால்மட்டும் தேகம் பலப்படுமா? அதை அனுஷ்டித்தல்லவா பார்க்கவேண்டும்? இவ்வாறு பலநாள் சாப்பிடத் தேகம் வலிமையடைகிறது. சாப்பாடே வலிமைக்கு ஆதாரம், வலிமை மயம் என்று உணர்கிறோம்.

அதுபோல் நமது சபை விஷயத்தில் சிரத்தை ஏற்பட்டு அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும். அதாவது, நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், பேசும் ஒவ்வொரு பேச்சும் செய்யும் ஒவ்வொரு காரியமும் சபையைப் பற்றியதாகவே ஆகவேண்டும்.

அப்போதுதான் நாம் கோரிய காரியம் முடிக்க வல்லவர்களாவோம். நாம் கோரிய காரியம் யாது? குலாபிவிர்த்தியென்றால் நமது குல ஜனங்களின் ஜனத்தொகையை அதிகப்படுத்துவதா? அல்ல. நம் குலத்தவர் தீத்தொழிலொழித்து நற்றொழில் புரிந்து உலகத்தாரால் விசேஷ நன்குமதிப்பை யடைவதே. உலகத்தாரால் விசேஷ நன்குமதிப்பைப் பெற்ற காலத்தே பகவத் கிருபைக்கு பாத்திரராவோம் என்பது கருத்து.

ஆனது பற்றியே, நாம் ஒவ்வொருவரும் அடைய வேண்டிய சாத்யமாகிய பகவத் கிருபைக்கு நமது சபையே சாதனமாகுமென்பது இதனால் விளங்குகிறது. இதுதான் நமது சபையினிடத்து சரியான சிரத்தை.



நமது சபையென்றால் கட்டடமன்று. அல்லது ஜனத்திரளை வாய் பேசாத பொம்மைபோல் நிறுத்திவைத்த படமன்று. சபையார் செய்துவரும் உபதேசம் அதாவது பிரசங்கம் என்றே கொள்ளவேண்டும். சென்னையிலும், நெல்லையிலும் பற்பல இடங்களிலுமுள்ள கல்விவிற்பன்னர்களைத் தேடிச்சென்று அவர்கள் பிரசங்கம் கேட்பதற்குப் பொருள் நஷ்டமாகுமென்று கிஞ்சித்தும் அஞ்சவேண்டுவதில்லை. குலச்சிரேஷ்டர்கள் உபதேசிக்கும் ஹிதோப தேசங்களை நமது சபையார் ஒருங்கு சேர்த்து யாவரும் எளிதில் அடையும்படி விஸ்வகர்மன் என்னும் பிரசுரவாயிலாக வெளியிடுகிறார்கள். இதற்கு நாள் ஒன்றுக்கு ஒரே பைசா தான் செலவு. ஒவ்வொரு பைசாவை நம்மவர்கள் குலாபிவிர்த்திக்குச் செலவழிக்காவிட்டால் நாம் எங்ஙனம் கடைத்தேறுவது?

நம் வம்சத்திய இளைஞர்கள் வெற்றிலை பாக்கு, பொடி சுருட்டிற்குச் செலவழிப்பதில் ஒரு பைசா செட்டு பிடிக்கலாகாதா? அவைகளால் அடையும் கௌரவமும் அந்தஸ்தும் இப்பத்திரிகையால் அடையமாட்டார்களா? நம்மவர்களுக்குக் குலாபிமானம் இருக்கிறதென்பதற்கும் சபையினிடத்தில் சிரத்தை யிருக்கிறதென்பதற்கும் இதுவல்லவோ முதல் பரீக்ஷை? இதற்குங்கூடப் பின் வாங்கினால் நாம் என்ன செய்யக்கூடும்? ஐயோ! ஏன் நாம் இவ்வாறு சீர்குலைந்தோம்?

சகோதரர்களே! நான் நமது குலாபப் பத்தகங்களைக் கையில் எடுத்துக்கொண்டு வீடுவீடாய்ப்போய் "வாங்கி வாசியுங்கள்" என்றும், "விஸ்வகர்மன். விஸ்வகர்ம குலோபகாரி என்னும் வம்சத்திய பத்திரிகைகளை வரவழையுங்கள்" என்றும் நம்மவரிடம் சொல்லும்போதும், தீபாவளி சமயத்தில் அவர்களிடத்தில் சிறுதாம்பம் கேட்கும் காலத்திலும் "உங்களுக்குச் சபையாரால் சம்பளம் என்ன? கமிஷன் என்ன? வீணுக்கக் கஷ்டப்படுவீர்களா?" என்று பலவிதமான கேள்விகளை அனேகர் கேட்கிறார்கள்.

அச்சமயத்தில் "கைப்பணம் செலவழித்தும், கடின கால் நடை புரிந்தும் இக்கேவல வார்த்தைக்கு ஆளானேமே" யென்று வருந்தி நமது சிரத்தைக்குப் பின் வாங்க வேண்டிவருகிறது. (என் கஷ்டத்தைச் சொல்ல வேண்டுமென்பதல்ல. இனியாவது அவ்விதம் கேட்கமாட்டார்களென்றே) என் அற்ப கஷ்டத்திற்கே இங்ஙனம் வருத்தமுற வேண்டியிருந்தால் குலத்தைச் சீர்திருத்துவதையே லக்ஷ்யமாய்க் கொண்டு தூக்கமற்ற குல சிகாமணிகளுக்கு என்ன மன வருத்தம் ஏற்படாது? ஒருவனும் வீணுக் கஷ்டப்படமாட்டான் என்பது உண்மையே. 'புண்ணியம்' என்றாவது உழைப்பான். புண்ணியமென்பது சுவர்க்க லோகத்தில் அடையும் பலன்.

எந்தக்காரியமும் ஆரம்ப ஸ்திதியில் மிக்க கடினமாகத்தான் இருக்கும். முன்னால் சிலர் கஷ்டப்பட்டால் தான் பின்னால் பலரும் சுகமடைவார்கள். புகைவண்டி, புகைக்கப்பல் முதலிய கண்டுபிடித்தகாலத்து எவ்வளவோபேர் கஷ்டப்பட்டிருப்பார்கள்! திசைமாறிக் கரைதப்பி யிருப்பார்கள்! இப்போது நாமெல்லோரும் எவ்வளவு எளிதில் அவற்றினுடைய பிரயோஜனத்தை அடைகிறோம்!

ஆகையால் நமது குலத்திற்கென்று உண்மையாய்ப் பாடுபடும் குலசீலர்கள் எவ்வித இடையூறுவந்தாலும் தாங்கள்கொண்ட சிரத்தைக்கு பங்கம்வராமல் உழைப்பார்களென்பது திண்ணம்.

> மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
> எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்புங்கொள்ளார்
> கருமமே கண்ணாயி னார்.

---

"இந்த வீடு வாடகைக்கு விடப்படும். விவாகஞ் செய்துகொள்ளப் போகிற தம்பதிகளுக்குமட்டுமே" என்ற விளம்பரம் ஆங்கில நாட்டு வீடொன்றின் முகப்பில் தொங்கவிடப்பட்டிருந்தது. அண்டைவீட்டுக்காரி அவ் வீட்டுக் கிழவியை நோக்கி "பாட்டீ! நீ வாடகை அதிகஞ் சொல்லுகிறாய்போலிருக்கிறது. இல்லாவிடில், உன் வீட்டிற்கு எவரேனும் இதுவரையிலும் குடிவந்திருப்பார்கள்" என்றாள். கிழவியோ, "நான் எவருக்கும் விடப்போகிறதில்லை" யென்ன, மற்றவள் ஆச்சரியத்துடன் "அப்படியாயின் இவ்விளம்பர மேதுக்கு?" என்று அவசரமாய்க் கேட்டாள். "மகளே! இதுதான் என் ஜீவனோபாயம். வீடுகேட்போர் பெயர் விலாசங்களை யெழுதி, வீடமைக்கும் வியாபாரியொருவனுக்கு அனுப்பிவருகிறேன்" என்று கிழவி மறுமொழி சொன்னாள். இங்கிலாந்தில் ஸ்திரீ புருஷர்கள் விவாகமானதுந் தனிக்குடித்தனம் பண்ணுவது வழக்கம்.

## இந்துமஹா சத்தியவேத விருத்தாந்தம்

ஸ்ரீ V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், பழநி.

(முன் தொடர்ச்சி.)

### பிரணவ வேதம்

ஐந்தாவது வேதமான "பிரணவ வேதம்" என்பது ஓங்காரமென்று சொல்லப்பட்ட பிரணவ மந்திர சொரூபத்தையுடைய பரப்ரம்ஹத்தின் தன்மையை இப்படிப்பட்டதென விளக்கிக்காட்டக் கூடியதென்றும், அந்த ஓங்காரமானது அகார, உகார, மகார மென்று சொல்லப்பட்ட மூன்று பீஜாக்ஷரங்களையும் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கக்கூடிய மஹா மந்திர பீஜாக்ஷர மென்றும், அந்த ஓம் என்கின்ற அசையானது மேலான இடத்தில் வசிக்கிற பரமேஷ்டிக்கும் அகண்ட ரூபியாயிராநின்ற பிரம்மத்திற்கும் தேவனுக்கும் அத்யாத்மாவுக்கும் உரித்தானதென்றும் வேத வசனங்கள் முறையிடுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப்பட்ட நான்கு பாதங்களில் ஏகைக தத்துவமான "சாயுச்ய பதவி"யை அடைவதற்கேதுவாயும் பிரணவமாகிய ஓங்காரத்தையே முதன்மையாகக் கொண்டிருப்பதாயும், வேதாந்த ஸாரம்ஸமாய் பிரம்ம ஞானத்தையும், எல்லாத்தத்துவங்களையும் போதிக்குந் தன்மையுடையதாயும், வேதோப்ரம்ஹணமாயும் இருக்கின்ற ஈஶாவாஸ்யோப நிஷத் முதல்முக்திபோ நிஷத் வரையிலு முள்ள அஷ்டோத்தரசத உபநிஷதங்கள் அடங்கிய திரட்டையே பிரணவ வேதமாமெனச் சிலர் சொல்வதும் நினைப்பதுமான சந்தேக ஸ்திதியிலிருந்து வந்தது. ஆனால் தியஸாபிகல் ஸொஸைடி என்னும் "பிரம்ம ஞான சபை"யைச் சார்ந்த மஹா பண்டிதரான ஸ்ரீ பகவான்தாஸ் M. A. அவர்களால் ஓர் அந்தக முனிவரிடம் கேட்டுத் தொகுத்து இங்கிலீஷ்பாஷையில் மொழிபெயர்த் தச்சிடப்பட்டிருக்கின்ற பிரணவ வேதம் 1-2-பாகங்கள் வெளிவந்த பின்னர் பிரணவ வேதமானது சந்தேகமற உறுதிப்படுத்தினபோதிலும் அதிலும் உபநிஷத வாக்கியங்களடங்கியிருப்பதாகவே காணப்படுகிறது.

உபநிஷதங்களானது சிலது வாசகமாகவும், சிலது எண்ணிடப்பட்ட வாக்கியங்களாகவும், சிலது வல்லிகளாகவும், பிரபாகங்களாகவும், முண்டங்களாகவும், பிரகரணங்களாகவும், ஆரண்யகங்களாகவும், பிரபாடகங்களாகவும், அத்தியயனங்களாகவும், பிராம்மணங்களாகவும் பூர்வ உத்தர காண்டங்களாகவும், மண்டலங்களாகவும், உபதேசங்களாகவும் பூர்வ உத்தர பாகங்களாகவும் பகுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் உட்பிரிவுகள் கந்திகங்கள், சூக்தங்கள், கண்டங்கள், அநுவாகங்கள், பிராம்மணங்கள் வாக்கியங்களாகவும் செய்யப்பட்டிருக்கின்றன.

உபநிடதம் என்பதற்குப் பொருள் அகராதிகள் இந்தமொழி இரகசியம் என்பதற்குச் சமான பதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது இரகசியமென்கிற அருத்தத்தில், வாஸ்தவமாக மனுவாலும் பூர்வகிரந்தகர்த்தர்களாலும், அடிக்கடி உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. உபநிஷத்துகளின் வியாக்கியானிகளும், அம்மொழிகளுக்கு அதே அருத்தஞ் செய்திருக்கிறார்கள். ஆனாலந்தமொழிகளின் சொல்லிலக்கணத்திலாவது அங்கீகாரத்திலாவது இரகசியம் மறைப்பு அல்லது அந்தரங்கம்என்னும் கருத்துக்கு நேரான யாதொரு சம்பந்தமும் உண்டா யிருக்கவில்லை. ஸ்ரீசங்கரர், சாயனர், மற்றும் எல்லா வியாக்கியானிகளுடைய அபிப்பிராயப் பிரகாரம், அதன் சரியான அருத்தம் "ஞானசாஸ்திரம்" அல்லது பிரம்மக்கியானம் என்பது. மேற்சொல்லிய கிரந்தகர்த்தர்களின் அப்பிராயப் பிரகாரம் வேதாந்தத் துச்கும் இந்த அருத்தத்தைப் போதிக்கிற ஒரு புத்தகத்துக்கும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. அதினுடைய உற்பவம் சமீபமென்று அருத்தந்தருகிற(உப) என்கிற முன்னிடைச் சொல்லினாலும், இடைவிடாமலென்கிற அருத்தந்தருகிற (நி) அல்லது, நிச்சயமென்றருத்தம் தருகிற (நிஸ்) என்னும் முன்னிடைச் சொல்லினாலும், முன் வைக்கப்பட்டிருக்கிற அழிகிறது அல்லது அசைகிறது அல்லது தளர்தலாகிறது என்றருத்தந்தருகிற சத் அல்லது (ஷத்லிரீ) என்னும் வினையிலிருந்து உற்பவமாயிருக்கிறது. வியாக்கியானிகளாற் சொல்லப்பட்டிருக்கின்ற பலவிதமான விபரங்களின் பிரகாரம் இந்த சொல்லிலக்கணத்திலிருந்து தகுதியாகக் கண்டுபிடித்திருக்கிற அருத்தம் திவ்விய பரிபூரண ஞானத்தையும், அந்த ஞானத்தினாலே ஆசாபாசங்களினின்றும் நிவர்த்தியாகி முக்தி யடைகிறதையும் நிச்சயமாகக்காட்டுகிற தென்பதென்று அதர்வண வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

(இன்னும்வரும்)



## பெண்கல்வி

ஸ்ரீ T. தங்கவேலு ஆச்சாரியார், திருநெல்வேலி

(7-வது பிரசுரம் 14-வது பக்கத் தொடர்ச்சி)

5. அக்காலத்து சத்தியவதி, சாவித்திரி, முதலான ஸ்திரீகள் கல்விகற்றவர்கள். அவர்கள் அன்னை பிதா மாமன் மாமி முதலானவர்கட்குப் பணிவிடைகளைப் பண்பாய் நடத்தியிருக்கிறார்கள். குடும்பத்திற்குப் புகழையு முண்டாக்கி யிருக்கின்றார்கள்.

இக்காலத்தில் குடும்பத்தில் எடுத்ததற்கெல்லாம் போரும், எந்நாளும் எச்சண்டையும், மாளாச்சலிப்பும், நீங்காத நிஷ்டூரமும், மங்காத மனோவிசாரமும் ஏற்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் கல்வியில்லாமையே.

மேலும், படித்த குடும்பத்தினர் துக்க சுகங்களைச் சமரசமாய்ப் பாவிப்பார்கள். இல்லாத வருத்தங்களை இழுத்துக் கொள்ளார்கள். சண்டை சச்சரவுகளுக்கு இடங்கொடார்கள். மனோசஞ்சலமின்றி வாழ்நாட்களைக் கழிப்பார்கள். கிடைத்தமட்டில் திருப்தி கொள்வார்கள்.

VI 1. ஸ்திரீகளின் கல்வியிலும் சீர்திருத்தத்திலும் கவலைவைக்கவேண்டியது புருஷரின் கடமை. அதை யலட்சியஞ்செய்தால் அதனாலாகிய துன்பங்களுக்கு ஆளாகவேண்டியது. கல்விகற்காததாய் மனைவி மக்கள் சகோதரிகள் முதலானவர்களால் எவ்வளவு இடைஞ்சல் ஏற்படுகின்றதென்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

> "கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
> அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
> வாழைக்குத் தானீன்ற காய் கூற்றங் கூற்றமே
> இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்."

இதையும் கனவான்கள் கவனத்தில் கொண்டிருத்தல் நலம்.

2. பிள்ளைகளைப் பெற்ற கனவான்கள் அவர்கள் தங்கள் வாழ்நாட்களை இனிதாய்ப் போக்கவேண்டித் "தனம்" சேர்த்துவைக்க வேண்டியது கடமை. அந்தத் "தனம" என்று மழியாததா யிருந்து அவர்களுக்குச் சதா உதவிக்கொண்டே வரவேண்டும். அப்பேர்க்கொத்த "தனம்" யாதெனின் கல்விதான்.

> "வெள்ளத்தா லழியாது
> வெந்தணலால் வேகாது வேந்தராலும்
> கொள்ளத்தான் முடியாது
> கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது
> கள்ளர்க்கோ பயமில்லை
> காவலுக்கு மிகவெளிது கல்வியென்னும்
> உள்ளபொரு ளுள்ளிருக்கப்
> புறம்பாகப் பொருள்தேடி யுழல்கின்றீரே"

என்று கூறியுள்ளதை யனுசரித்துச் சிவகாசியில் நாடார்கள் புகையிலைக்கட்டு ஒன்றுக்கு ஒருபை வீதம் வரி யேறபடுத்தி ஒருவரிடத்தில் 60,000 ரூபாய் சேகரித்து வாசகசாலையும், பள்ளிப்பிள்ளைகள் தங்குவதற்கு இடமும் போஜனசாலையும் ஏற்படுத்தி அதில் ஆண் பெண் இருவகுப்பாரும் வாசித்து வருவதாய்க் கேட்க ஆனந்த முண்டாகின்றது.

நம் குலத்தினரோ கல்வியை வசநாவியாகக்கொண்டு மேல் நோக்கத்திற்கு வழியின்றித் துஞ்சிக்கிடக்கின்றனர்.

3. நீலகிரி ஜில்லாவில் 30, 35 வருடங்கட்கு முன் சிறிதும் நாகரீகமின்றி உழுது பயிரிட்டு வாசஞ்செய்துவந்த சில ஜாதியர் தற்போது கல்வியில் கவலைவைத்துக் கற்று நாகரீகத்தில் நாட்டம்வைத்து நாளுக்குநாள் மேன்மையை யடைந்து கவர்ன்மெண்டு கண்ட்ராக்டர்களாகவும், டிஸ்ட்ரிக்ட்போர்ட் மெம்பர்களாகவும் இன்னும் ராசாங்கத்தில் அநேக உத்தியோகங்களைப் பெற்றும் உயர்தரப்பதவியை அடைகின்றார்கள்.

அவர்கள் வசிக்குமிடங்களில் அநேக வாசகசாலைகளுமேற்பட்டிருக்கின்றன. நம்மவர்களுக்கென்று வாசக சாலைகள் பல ஏற்பட்டிருப்பதாய் எண்ணுவதற்கிடமில்லை.

> "தந்தை மகற்காற்று முதவி அவயத்து,
> முந்தியிருப்பச் செயல்" என்ற குறளின்படி

மக்களைப்பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வி விஷயத்தில் நாட்டம்வைத்து அதை விர்த்திசெய்தால்தான், செல்வமுண்டாகும், சிறப்புண்டாகும், ஒழுக்கமுண்டாகும், நாகரீகமுண்டாகும்.

ஆகையால் எல்லோரும், இவ்விஷயத்தில் நாட்டம் வைத்துக் கல்வியை நம் ஜாதியில் விர்த்திசெய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## சோழன் கரிகாலன்

55 கி. பி.—95 கி. பி.

(செந்தமிழ்)

இவ்வரசனை, சோழன் கரிகாலனென்றும், சோழன் கரிகால் வளவனென்றும், சோழன்கரிகாற் பெருவளத்தானென்றும், பழைய நூல்கள் கூறுகின்றன. ஆயினும், சோழவம்ச பாம்பரையிற் கரிகாலன் காலத்திற்குப் பின்னர், அவன் பெயரையே தரித்த அரசர் பலரிருந்தனரென்று தெரியவருகிறதினால், இவனை முதற் கரிகாலன் என்றே வழங்கல் சாலப்பொருந்தும். உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியின் அருமைப்புத்திரனாகிய இம்மன்னர் பெருமான் ஆட்சிபுரிந்த காலம் கி. பி. 55 முதல் கி. பி. 95 வரையிலுமென்று '1800 ஆண்டுகட்கு முந்திய தமிழர்' என்னும் நூலுடையார் (காலம்சென்ற மிஸ்டர் V. கனகசபை) கூறுகின்றனர். இதனை, மற்றைய பழஞ்சரித்திர வாராய்ச்சி வல்லாரும் அங்கீகரித்திருக்கின்றனர்.

இவ்வரசன் சிறுவனாயிருக்கும்போது காலில் நெருப்புப் பற்றிக் கால் வெந்துபோயிற்று. இக்காரணம் பற்றியே இவன் கரிகாலனென்று வழங்கப்படுகிறான் போலும். இவன் காலில் நெருப்புப்பற்றிய விஷயம்,

"முச்சக்கரமுமளப்பதற்குநீட்டியபாகா
விச்சக்கரமேயளந்ததாற்—செய்ச்செ
யரிகான்மேற்றேன்றொடுக்குமாப்புனனீர்நாடன்
கரிகாலன்காநெருப்புற்று."

என்ற பழைய செய்யுளால் அறியப்படுகிறது.

இவன் பால்யத்திலேயே சிங்காதனம் ஏறும்படி நேர்ந்தது. இவன் பட்டத்திற்கு வந்தவுடனே ஓர் ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்தது. அதாவது, தமக்குள் சண்டையிட்டுக்கொண்டு நியாய ஸ்தலத்திற்குத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு வந்த இருமுதியோர்கள் தாம் நெடுந்தூரத்தில் வரும்போதே நியாய சபையில் ஓர் இளைஞனிருப்பதாக அறிந்து அவ்விளைஞனால் தம் வழக்கை நியாயமாய்த் தீர்க்க முடியாதென்று சந்தேகித்தார்கள். அவர்கள் சந்தேகித்த விஷயத்தை ஒற்றர்கள் மூலமாகவோ அல்லது வேறு எவ்விதமாகவோ அறிந்துகொண்ட கரிகாலன், அரண்மனைக்குள் விரைந்துசென்று, கிழவனைப்போல் மாறுவேடம் பூண்டுகொண்டு சிங்காதனத் தமர்ந்திருந்தனன். பின்னர், நியாய சபையை நோக்கிவந்தவிருவரும்சிங்காதனத்தில் வயது முதிர்ந்த வரசனே இருக்கிறானென்றுணர்ந்து தங்கள் வழக்கைத் தெரிவித்துக்கொண்டார்கள். இளைஞனாயினுங் கூரிய புத்திபுள்ள கரிகாலன், அன்னவர் வழக்கை நன்றாய் விசாரித்து நியாயமளித்தனன். இச்செய்கை, இம்மன்னனது நுண்ணறிவையும், நீதி பரிபாலன மாண்பையும் நன்குவிளக்குவதோடு, குடிகள் மனம் எவ்வாறோ அவ்வாறே தான் நடந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமும் அவனிடத்திருந்ததென்பதையும் புலப்படுத்துகிறது. இவ்வாச்சரியமான விஷயத்தை,

"இளமைநாணி முதுமையெய்தி
யுரைமுடிவுகாட்டியவுரவோன்"

என்ற மணிமேகலையானும்,

"உரைமுடிவுகாணானிளமையோனென்ற
நரைமுதுமக்களுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான்முறைசெய்தான்சோழன்குலவிச்சை
கல்லாமற் பாகம்படும்."

என்ற பழமொழிச் செய்யுளாலும் நன்குணரலாம். இவன்றன் ஆட்சிக் காலத்தில் காடுகளை யழித்து நாடு உண்டு பண்ணி பழைய ஊர்களைப் புதிப்பித்து, புதிதாக அநேகம் பட்டினங்களை ஸ்தாபித்து, அநேக குளங்களுங் கால்வாய்களும் வெட்டி, அதனால் ஜலாதாரம் உண்டுபண்ணி விவசாயிகளின் க்ஷேமத்தைப் பெருக்கி, கோயிலமைத்து தன்னிராஜதானியைச் சுற்றி மதிலெழுப்பித் தேசத்தைச் சரியாகப் பாதுகாத்தானென்பது,

"காடுகொன்றுநாடாக்கிக்
குளந்தொட்டுவளம்பெருக்கிப்
பிறங்குநிலைமாடத் துறந்தைபோக்கிக்
கோயிலொடுகுடிநிறீஇ
வாயிலொடுபுழையமைத்து
ஞாயிற்றொறும்புதைநிறீஇ"

என்ற பட்டினப்பாலைச் செய்யுளடிகளால் அறியப்படுகிறது.

அன்றியும், முதற்கயவாகுவின் தகப்பன் காலத்தில் இவன் இலங்கையின்மீது படையெடுத்துச்சென்று, 1200 சிங்களவர்களைச் சிறைபிடித்துச் சோழதேசத்திற்குக் கொண்டு வந்து, காவிரியினிரு மருங்குங் கரையெடுப்பித்தான். இதனை "தொழுது மன்னரேகரை செய்பொன்னியில்" என்ற கலிங்கத்துப்பாணிச்செய்யுளாலுணர்க. இதனால், இவன்பகைவரைவெல்லு மாண்மையிற்சிறந்தவனென்பதும், ஜலாதாரம் உண்டுபண்ணி விவசாயிகளின் க்ஷேமத்தை விருத்திபண்ணியவனென்பதுந் தெரியக்கிடக்கின்றன.

விவசாயிகள் சிறப்புடன் விளங்கினமையால் வியாபாரம் மிகச் செழித்தது. இம்மன்னன் இராஜதானி நகரமாக விளங்கியது பூம்புகாரெனுங் காவிரிப்பூம் பட்டினமே. இஃது ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாக அக்காலத் திருந்தது. கப்பல் திசைமாறியும் நிலைமாறியுஞ் செல்லாமல் துறைமுகத்திற்கு வந்து சேரும் பொருட்டு இப்பட்டினத்தில் அநேக தீபஸ்தம்பங்கள் இருந்தனவாம். இதனை "இலங்குநீர்வரைப்பிற் கலங்கரை விளக்கமும்" என்ற சிலப்பதிகாரத்தானுணர்க.

இத்துறைமுகத்தில், குதிரை, கற்பூரம், சந்தனம், அகில் முதலியவை இறக்குமதி செய்யப்பெற்றன; முத்து, பவளம், மிளகு, வாசனைச்சாமான் முதலியவை ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்விதமாக வியாபாரம் நடந்தமையான் அரசனுக்கு ஏற்றுமதி இறக்குமதி மூலமாய் வரக்கூடிய இறைவரியி லிருந்து வருமானமும் அதிகரித்தது. கடலோரங்களிற் கட்டப்பட்டுள்ள பெரிய பண்டசாலைகளில் இரவும் பகலும் வந்திறங்கிய பண்டப் பொதியின்மீது, அரசனுடைய உத்தியோகஸ்தர்கள் சோழன் கொடியின் அடையாளமாகப் புலிப்பொறியைப் பொறித்து விடுவார்கள். அவ்வாறு பொறித்த பிறகு வரியைக் கொடுத்து ரசீதைப் பெற்றுக்கொண்டுதான் வியாபாரிகள் தமது பண்டங்களை வெளியே எடுத்துப்போவார்கள்.

இவற்றை,

"அளந்தறியாப்பலபண்டம்
வரம்பறியாமைவந்தீண்டி
யருங்கடிப்பெருங்காப்பின்
வலியுடைவல்லணங்கினோன்
புலிபொறித்துப்புறம்போக்கி"

என்ற செய்யுளடிகளாலறிக. வியாபாரத்திற்காக வெளியூர்களிலிருந்து வந்துள்ள வர்த்தகர்கள் உள்ளூரிலிருந்த வர்த்தகர்களோடு இனிமையாகக் கலந்து வாழ்ந்தார்கள். இவர்கள் "பதிபழகிக்கலந்தினிதுறையும்" வர்த்தகர்கள் என்று சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள்.





இம்மன்னர் பெருமான் போர்செய்ய விரும்பி வடதிசைக்குச்சென்று வடபுலத்தரசர்களைவென்று, ஆங்கு எதிரே குறுக்கிட்ட இமயமலையைச் செண்டினால் அடித்து அதன் பிடரிடத்தே தன புலியைப் பொறித்து வந்தானென்பது,

"இருநிலமருங்கிற்பொருநரைப்பெறாஅச்
செருவெங்காதற்றிருமாவளவன்
.......................................
..........................சிமயப்பிடர்த்தலைக்
கொடுவரியேற்றிக்கொள்கையிற்பெயர்வோற்கு"

என்னும் சிலப்பதிகாரத்தானும்,

"செண்டு கொண்டு கரிகாலனொருகாலிளிமயச்
சிமயமால்வரைதிரித்தருளிமீளவதனைப்
பண்டுநின்றபடிநிற்கவிதுவென்றுமுதுகிற்
பாய்புலிக்குறிபொறித்ததுமறித்தபொழுதே"

என்னுங் கலிங்கத்துப்பாணியானும்,

"கச்சிவளைக்கச்சிகாமக்கோட்டங்காவன்
மெச்சியினிதிருக்குமெய்ச்சாத்தன்-கைச்செண்டு
கம்பக்களிற்றுக்கரிகாற்பெருவளத்தான்
செம்பொற்கிரிதிரித்தசெண்டு"

என்னும் பழைய செய்யுளானும்,

"........இலங்குவேற்கரிகாற்பெருவளத்தோன்
வன்றிறற்புலியிமயமால்வரைமேல்வைக்கவேகு
வோன்"

என்னும் பெரிய புராணத்தானும் அரியக் கிடக்கின்றது.

இதனால் இவன் போர்வீரமும் ஆண்மையும் நன்கு விளங்குகின்றன. இவன் தேசத்தில் 60,000 குடிகள் இருந்தார்களென்றும் அக்குடிகளும் நெடுநிலமுழுதாளும் கரிகாலனை முதற்குடியாக வைத்து எண்ணுதலையுடைய அவ்வளவு மிக்கோங்கிய செல்வமுள்ள ஒப்பற்ற குடிகளாயிருந்தார்களென்றும் சிலப்பதிகாரம் கூறும்.

இம்மன்னர் பெருமான் மீது கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் ஒரு தமிழ்ப்புலவர் பட்டினப்பாலை என்னும் பிரபந்தம்பாடி 16 லக்ஷம் பொன் பரிசு பெற்றனரென்பது—

"தழுவுசெந்தமிழ்ப்பரிசுவாணர்பொன்
பத்தொடாறு நூறாயிரம் பெறப்
பண்டுபட்டினப்பாலைகொண்டதும்"

என்ற கலிங்கத்துப்பரணிச் செய்யுளால் அறியப்படுகிறது. மேற்கூறிய பிரபந்தமும், இவன் மீது முடத்தாமக்கண்ணியார் என்னும் தமிழ்ப்புலவர் பாடிய பொருநராற்றுப்படை என்னும் பிரபந்தமும் பத்துப்பாட்டிற் காணப்படுகின்றன. அன்றியும், சங்கத்துச் சான்றோர் இவன்மீதியற்றியுள்ள தனிச் செய்யுட்களும் புறநானூற்றிற் காணப்படுகின்றன. ஆதலால் இவன் தமிழபிமான மேலிட்டுப் புலவர்களை ஆதரித்து வந்தவனெனத் தெரிகிறது.

இவ்வரசனின் வாழ்க்கைத் துணைவியா யமைந்தவள் நாங்கூர் வேள்குமாரத்தி; இவர்களுக்கு இரண்டு புதல்வரும் ஒரு புதல்வியுமுண்டு. துறவு பூண்டு சிலப்பதிகாரமியற்றி யருளிய இளங்கோவடிகளும் இம்மன்னன் புதல்வியின் புதல்வனே.

இவன் காலத்திய **அரசர்கள்**:—பாண்டிநாட்டில் (1) வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதி (2) நெடுஞ்செழியன் 1; சோநாட்டில் (முடிச்) சேரலாதனன் (2) சேரன்செங்குட்டுவன்; இலங்கையில் (1) முதற்கயவாகுவின் தகப்பன் (2) முதற்கயவாகு

T. V. சதாசிவ பண்டாரத்தார்,
திருப்புறம்பயம்.

---

## பழனி தளி ஜமீன்களும் அதிகாரிகளும் வித்துவான்களும்

பழனி ஜமீன்தார் கனம். "விஜயகிரிச்சின்னோப நாயக்கர்" அவர்கள் அரண்மனையில், பழனியில் மிகுந்த செல்வாக்குடையவராயிருந்த பெரியவீட்டு "சின்னத்தம்பி ஆச்சாரியார்" மந்திரியாகவும், அவரது தாயாதிக்காரர்களில் ஒருவரான "முத்தணாச்சாரியார்" தளகர்த்தராகவும், இவர்களுக்கு பந்துவான "வெற்றிவேற்கவிராயர்" சமுகவித்துவானாகவு மிருந்தனர். உடுமலைப்பேட்டைத் தாலூகா தளி ஜமீன்தார் கனம் "வெங்கடபதி எத்துலப்ப நாயக்கர்" அவர்கள் அரண்மனையில், தளியில் மிகுந்த செல்வாக்குடையவராக விருந்த "சாமியாச்சாரியார்" மந்திரியாகவும் "இராமசாமிப் புலவர்" பொன்னேரி "சங்கரமூர்த்திப் புலவர் முதலியவர்கள் சமுகவித்துவானாகவும் இருந்து மிகுந்த பிரசித்தியுடன் வாழ்ந்துவந்ததாக இந்நாட்டில் பிரஸ்தாப மெப்போது மிருந்துகொண் டிருக்கின்றது.

ஷை சின்னதம்பி ஆச்சாரியார் வீட்டுக்கு "பெரிய வீடு" என்கிற பட்டப் பெயரும், ஷை முத்தணாச்சாரியார் வீட்டுக்குத் "தலைவாசற்காரன்வீடு" என்கிற பட்டப்பெயரும், ஷை சாமியாச்சாரியார் வீட்டுக்கு "ஆசாரிவீடு" என்கிற பட்டப்பெயரும், சல்லி பட்டிக்கும் ஒனுக்கல் பாளயத்துக்கும் இடையிலுள்ள குளத்துக்கு "சாமியாச்சாரி குளம்" என்கிற பட்டப் பெயரும் அசையாப்புகழுடன் விளங்கிக்கொண்டிருக்கின்றன.

மேற்கண்ட அதிகாரிகளும், வித்துவான்களும், சாலிவாடிபுராதீனம், ஸ்ரீமத் "பரசமய கோளரிநாத ஸ்வாமிகள்" வம்சத்தைச்சார்ந்த தென்னாட்டு விஸ்வப்ராம்மணஜாதியி லுற்பவித்த ஓரே குலத்தைச் சார்ந்தவர்கள். ஷை வெற்றிவேற் கவிராயர் சந்ததி பழனியிலும், சங்கரமூர்த்திப் புலவர் சந்ததி ஒனுக்கல் பாளயத்திலு மிருக்கிறார்கள். ஷை இராமசுவாமிப் புலவர் அரண்மனையை நாடிவரும் வித்துவான்களை மடக்குவதிலும், சங்கரமூர்த்திப் புலவர் அருட்கவி பாடுவதிலும் பிரசித்திபெற்றவர்கள். ஷை வெற்றிவேற் கவிராயரோ சிறந்த வித்துவான்.

அக்காலத்தில், இராமசுவாமிப் புலவர் தளி ஜமீன்தார் அவர்களிடம் பரிசுபெற்றுக்கொள்ள வந்திருந்த ஓர் வித்துவான் பாடி அரங்கேற்றஞ் செய்துகொண்டிருந்த கவிதைகளைக் கேட்டவுடன் மனனஞ் செய்துகொண்டு, அவை முற்றும் "பழங்கவிதை" என ஸ்தாபிக்க முயன்றபோது, அவ்வித்துவானுக்குக் கோபம் பிறந்து உடனே பாடிய வெண்பாவாவது:—

எத்திசையுங் கீர்த்திபெற்ற எத்துலப்பன் வாசலிலே
சத்துருவாய்த் தோன்றினன் சண்டாளன்-புத்திகெட்ட
கம்மாள ராமன் கண்மறைந்து போமளவுஞ்
சும்மா விருப்பதே சுகம்.

இக்கவியைக் கேட்டவுடன் ஆத்திரங்கொண்ட ராமசுவாமிப் புலவர் பாடிய வெண்பாவாவது:—

தங்கையர்க்குத் தூதுசென்று தான்பணயம் வாங்குகின்ற பங்கமிலாக் கைகோளப் பையாகேள்-எங்குலந்
தான் ஜெகத்குரு வென்றிந்தத் தேசமறி யாதோ
பகலிரவு மாராய்ந்து பார்.



இப்படி 2 வித்துவான்களும் சண்டைபோட்டுக் கொள்ள ஆரம்பித்தபோது ஜமீன்தார் அவர்கள் சமாதானஞ்செய்து வந்திருந்த வித்துவானுக்குப் பரிசு கொடுத்தனுப்பிவைத்ததாக இவ்வெண்பாக்களைப் பாடும் ஒவ்வொருவராலும் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது.

ஷை சின்னத்தம்பி ஆச்சாரியார் பாரம்பரையில் "ஞானமுத்தாச்சாரியார்" க்குப் பெண் வார்சுகளும் ஷை முத்தணாச்சாரியார் பாரம்பரையில் "வேலாச்சாரியார்" க்கு புத்திரர், புத்திரிகள், பௌத்திரர், பௌத்திரிகள், தௌஹித்திரர், தௌஹித்திரிகளும், அவர்களின் சந்ததிகளும் பழனியிலிருக்கிறார்கள். ஷை வேலாச்சாரியார்க்கு சிரேஷ்ட புத்திரரான மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியாரும், அவரது ஜனக சகோதரரும் "சந்தனமாச்சாரியார்" க்கு சுவீகார புத்திரருமான காலஞ்சென்ற வெ. முத்தணாச்சாரியாரும், குலாபிமானப் பத்திரிகைகளுக்கும், மற்றுமுண்டான தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் வியாசதான மளித்து வருவதில் பிரசித்திபெற்றவர்கள்.

ஷையார் தாயைப்பெற்ற பாட்டனாகிய முத்துக் கருப்பாச்சாரியார் வகையராப்பேர்கள், விக்கிரகவேலை செய்வதிலும், சிற்பசாஸ்திரோக்தப்படி, "உருபத்திரம் முகபத்திரம்" என்னும் உருக்கட்டை ரதங்கள் செய்வதிலும் பிரசித்திபெற்றவர்களாயிருந்து, சிவகாசி, திருப்பரங்குன்றம், திண்டுக்கல், பழனி, சோமவார் பட்டி, சூலக்கல், செஞ்சேரி, மலைப்பாளையம், கிணற்றுக்கடவு முதலிய இடங்களில், உருக்கட்டை ரதங்கள் செய்து, வெள்ளோட்டம், காரோட்டம் முதலியவை நடத்தி வேண்டிய விருதுகள் பெற்றிருப்பதாக முன்னிருந்த ஓர் புலவராற்பாடிய அடியிற்கண்ட கவிதையினால் விளங்குகின்றது. அக்கவியாவது.—

### மானூர் கருப்பண்ணப் புலவரியற்றியது

### இரட்டையாசிரிய விருத்தம்

சிவகாசி தென்பரங் குன்றமொடு திண்டிநகர்
 தென் பழனி யனவாதமும்
சேமமொடு வளர்சோம வார்பட்டி சூலக்கல்
 செஞ்சேரி மலை வைராக்ய
தவசியர்க ணிறை கிணற்றுக்கடவு முதலான
 தலமிசை மகிழ்ந்து சிற்ப
சாஸ்த்ரசம் பிரதாய மாகவுரு பத்ரமொடு
 தாம முக பத்ரமாகக்
கவனமொடு திவ்விய விசித்திர ரதங்களைக்
 கற்பித்து வெள் ளோட்டமுங்
காரோட்டமுஞ் செய்து வைத்து வேண்டியவிருது
 களிவினொடு பெற்ற நிபுண
பவரஹித புனித விஸ்வப்ரம்ஹ குலதிலக
 பாண்டிய கர்ணவ தாரா
பழனிமுத்துக் கருப்பாச்சாரி யென்னும் விற்
 பன்ன கெம்பீர முகிலே.

தளிச் "சாமியாச்சாரியார்" தௌஹித்திரரான, தமிழ் வித்துவான் பழனி முத்தாச்சாரியார்க்கு பெரிய மாம்பழமாச்சாரியாரும், கனம்பொருந்திய சேதுபதி அவர்கள் சமுகமெச்சிய தமிழ்ச் சக்கரவர்த்தியாகிய, சனம் மாம்பழக்கவிச்சிங்க நாவலரும் புத்திரர்கள். ஷை நாவலருக்குப் பெரியதகப்பனரான சித்திரவேலை "சிவனாச்சாரியார்" குமாரர் சுந்தரமாச்சாரியென்ற "சிவசுந்தரமூர்த்தி ஆச்சாரியார்" என்பவர். கவிபாடுவதிலும், பெருங்கூட்டங்களில் சமயோசிதமறிந்து உபந்நியாசஞ் செய்வதிலும் சூக்ஷ்ம புத்தியுடையவரா யிருந்ததுடன், தன் தகப்பனரைப்போலவே நெல்லுக்குள் அடங்கும் படியாகத் தந்தத்தில் தண்டபாணி கணேசன் விக்கிரகங்கள் செய்யக்கற்றவர். இவர் பஞ்சப்ராம்ஹ யாகஞ் செய்த தும்மலபாடி கிருஷ்ணமாச்சார்யார், நல்லூர் பூரணாச்சாரியார், காவாந்தண்டலம் தாண்டவாச்சாரியார், முதலனேய குலாபிமானச் செல்வர்களாலும் தமிழ் வித்துவானாகிய தியாகராஜ செட்டியார் முதலியவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டவர். இவ்வித்வான் கீழ்க் குறித்த வெண்பாவைப்பாடி அவரைச் சிறப்பித்தனர்

வெற்படக்கும் வேலடக்கு மென்கைப் பிரானுமவன்
முற்பிறந்த யானை முகத்தவரும்-நற்பழனி
வாழ்சுந்த ரத்தின்கை மன்னுவரென்று லவர்க்குத்
தாழ்வுண்டோ வெஞ்ஞான்றுந் தான்.

ஷை சிவசுந்தரமூர்த்தி ஆச்சாரியாரின் தாய் மாமனான "மாதவாச்சாரியார்" தமிழில் பிரசங்க வித்துவானா யிருந்ததுடன் ஆயக்குடி ஜமீன்தார் கனம் "ஜானகிராம குமார சுப்ரமண்ய பொம்மய கெம்பீர் நாயக்கன் ஐயாவர்கள்" அரண்மனையிலிருந்த காரியஸ்தர்களி லொருவர். ஷை நாவலருக்கு மார்க்கயன் கோட்டை வித்துவான் P. பழனிச்சாமி ஆச்சர்ரியாரும் சொந்த பந்து.

தேர்ந்துரைப்போன்.

## ஆச்சாரி-ஆஸாரி

*ஆச்சாரிப்பட்டத்திரிபு சம்பந்தமாக கனம் சென்னைக் கவர்னரவர்கள் திருச்சமூகத்திற் கனுப்பப்பட்ட தந்திகள் வருமாறு:—*

### 6. KING GEORGE V LIBRARY & VISVAKARMA VEDAGOSHTI SABHA, PALAMCOTTAH

King George V Library & Visvakarma Vedagoshti Sabha respectfully submit Government's recent alteration of their ancient title Achari injuriously affects their social position and pray early issue of orders restoring original form Achari.

### ஐந்தாவது ஜார்ஜ் அரசர் லைப்ரேரி விஸ்வகர்ம வேதகோஷ்டி சபை, பாளயங்கோட்டை

*ஐந்தாவது ஜார்ஜ் அரசர் லைப்ரெரி விஸ்வகர்ம வேதகோஷ்டி சபையார், தங்களுக்குப் பூர்வீகமாயுள்ள பட்டத்தைக் கவர்ன்மெண்டார் சமீபத்தில் மாற்றியதினால் தங்கள் லௌகிகப் பதவிக்குப் பழுது நேரிட்டிருக்கிறதென்பதை விண்ணப்பஞ் செய்துகொண்டு பழமையான ஆச்சாரிப்பட்டத்தை மீள உபயோகிக்கும்படி சீக்கிரத்தில் உத்திரவுசெய்யவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள்.*

1. ஆச்சார்யபட்டத்திற்கு அநேக ஆதாரங்களிருக்கின்றன. யஜுர்வேதத்தில், "விஸ்வ ரூபோ வைத்வஷ்டபுரோஹிதா" என்ற பிரமாணப்படி, இந்திராதி தேவர்களுக்கு துவஷ்டாச்சார்ய புத்திரராகிய திரிசிரங்களையுடைய விஸ்வரூபாச்சார்யர் தேவ பௌரோஹிதராக இருந்தனர். இக்காரணத்தால் அவ்வழிவந்த விஸ்வகர்ம சந்ததியார்களுக்கு ஆச்சார்ய பட்டப்பெயர் ஏற்பட்டது, இன்னும் நாகரகாண்டம் 5-வது அத்தியாயம் "ஸ்தபதி ஸ்தாபகஸ் சைவ ஆசார்யோ விஸ்வகர்மண. ஆசார்யோ விஸ்வகர்ம ஆதிபிரம்ம குலோத்பவ" என்ற பிரமாணத்தினால், விஸ்வகர்ம ஜாதியார்கள் ஆச்சாரியார் என்றும், ஸ்தபதியார்கள் என்றும், ஸ்தாபகர்கள் என்றும், ஆதிபிரம்மகுலத்தில் உற்பவித்தவர்கள் என்றும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றது.

2. இன்னும், ஆச்சாரியார் என்ற பதத்திற்கு ஆசாரமுடையவன், வேத மூணர்ந்தவன், குற்றமற்றவன் என்றும் அமரகோசம் பிரம்ம வர்க்கத்தில் [illegible]॥ என்ற பிரமாணத்தினால் வேதங்களையுணர்ந்து பிறருக்கு உபதேசிப்பவர் ஆச்சார்யார் என்றும் குருவென்றும் பேர் விளங்குகின்றது. இதுவுமல்லாமல் பஞ்சகிருத்தியங்கள் செய்யும் தொழில் வல்லவருக்கும் ஆச்சாரியார்கள் என்றும் பண்டிதர்கள் எனவும் நைகண்டிகையில் தகுமுறைதெரிந்த சிற்பவாச்சாரியர் என்றும் பொன் செய்யும் புலவர் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

3. இராஜாங்க உத்தியோகஸ்தர்களும் மஹா கல்விமான்களுமாகிய ஆங்கிலேய பண்டிதர்களாகிய மேதாவிகள் நமக்குரிய பட்டம் ஆச்சார்யரென்றே பிரயோகித்திருக்கின்றனர். வில்ஸன் துரை எழுதிய அகராதியிலும், மக்ளீன் துரை எழுதிய ராஜ்யபரிபாலனகிரந்தங்களிலும் மற்ற துரைமார்கள் எழுதிய பிரபல நூல்களிலும் ஆச்சாரியபட்டமே நம் ஜாதிக்குரிய பட்டமென சந்தேக விபரீதமறக் காட்டப்பட்டிருக்கின்றது. பூர்வகால சாஸனங்களும் இந்த உண்மைகளையே ஸ்தாபிக்கின்றன.

4. இத்தியாதி பிரமாணங்களினாலும் உண்மைகளினாலும் நமக்குரியது ஆச்சார்ய பட்டமெனப் பசுமரத்தாணிபோல் விளங்குகின்றது. இந்த பட்டப்பெயரை நம்மவர்கள் சரியாக உச்சரிக்காமலும் சரியாக எழுதாமலும் இருத்தலே தற்காலம் நேர்ந்துள்ள சங்கடத்திற்குக் காரணம். இந்த பட்டத்தைப்பற்றி இப்போது விஸ்தாரமாகச் சொல்லவேண்டிய அவசரமேற்பட்டதின் காரணமென்னவென்றால், பலஜாதிப் பட்டப்பெயர்கள் எழுதப்படவேண்டிய விதம் இதுவென்று யோசித்து ரிபோர்ட் செய்வதற்கு அரசாங்கத்தார் ஒரு கமிட்டியாரை நியமித்திருந்தார்கள். இவர்கள் தங்கள் ரிபோர்டைக் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பினார்கள். அதைச் சென்ற வருஷம் ஜூன் மாதத்தில் அரசாங்கத்தார் ஒரு ஆர்டராக வெளியிட்டு, ஒவ்வொரு ஜாதிப் பட்டமும் பெயர்களும் எழுதப்படவேண்டிய மாதிரிக்கு ஒரு ஜாபிதா அச்சிட்டு, அதில் குறிக்கப்பட்டுள்ள மாதிரியே பெயர்களும் பட்டங்களும் கவர்ன்மெண்ட் ரிகார்ட்களில் பதிவு செய்யப்படவேண்டுமென்று உத்திரவு பிறப்பித்தார்கள். அந்த ஜாபிதாவில் நமது ஜாதிப்பட்டம் (Asari) ஆஸாரியென்றெழுதப்பட்டிருக்கிறது. இதுதான் நாம் இப்போது இதைக் கவனிக்க நேரிட்ட காரணம்.



5. ஆச்சாரிப்பட்டம் வைஷ்ணவப் பிராம்மணப் பெயர்களோடு காணப்படுகிறது. இந்த பட்டமானது அவர்களுக்கு எந்தகாலத்தில் ஏற்பட்டது என்று நாம் விசாரிக்கப்புகின் இராமானுஜாச்சாரியார் காலத்தில் வந்திருக்கிறதாக ஊகிக்கபடுகின்றது. இதுகால பரியந்தம் அவர்கள் பெயரை யெழுதும்போது சந்தியோடு ராகவாச்சாரி என்று எழுதப்பட்டதுபோய் இப்போது ராகவ ஆச்சாரி என்று எழுதப்பட்டுவருகிறது. நம்மவர்கள் பட்டம் ஆஸாரிஎன்றெழுதப்பட்டு வருகிறது.

6. ஆச்சாரி என்ற பதமானது இலக்கண இலக்கியப் பொருத்தமில்லாததும், அருத்தமொன்றும் குறிக்காததும், குலத்தினர்களுடைய மேன்மைக்கும் பாரம்பரியமான வழக்கத்திற்கும் கௌரவத்திற்கும் விரோதமானதாயுமிருக்கிறது இந்த பதமானது நவீனசிருஷ்டி. நம்மவர்கள் ஆச்சாரிப்பட்டத்தைச் சரியாக உச்சரிக்காமலும் சரியாக எழுதாமலும் இருத்தலே இச்சங்கடத்திற்காளாக்கியதென்று சொல்லலாம். தப்பிச் சொல்லோருக்கு எடுத்துக் காட்டியபோதிலும் அவர்கள் கவனிக்கிறார்களில்லை. ஆங்கிலம் கற்றவர்கள் மாத்திரம் இதைப்பற்றி அனுதாப மடைகின்றார்கள். ஏனெனில் இராஜாங்க பாஷையாகிய இங்கிலீஷில் அரசாங்கத்தார்கள் தமது ரிகார்ட்களி லெல்லாம் ஆஸாரி என்று எழுதிவருகின்றார்கள். அதைக் கண்ணுறுந்தோறும் அதிக ஆறுமையும் அருவருப்பும் ஆத்திரமும் உண்டாகின்றது.

இந்த பட்டத்தைப்பற்றிய உச்சரிப்பு விஷயத்தில் நம்மவர்கள் கவனிக்கவேண்டியது ஒன்றுளது. நம்மவர்கள் யாரேனும் தவறி ஆஸாரி என்று எழுதியும் உச்சரித்தும் வருவார்களேயானால் அவர்களைக் கண்டிக்கவேண்டியது நமது கடமை. எல்லாவற்றிலும் பழக்கவாசனையே கொடிது. "பழக்கங் கொடியது பார் பாறையினும் கோழிகிளரும்." என்று ஆன்றோர் வாக்கியமிருப்பதால் கட்டையில் கிடைத்துமட்டும் பழக்கம் மாறவே மாறமாட்டாது. நம்மவர்கள் கல்வி நலம் பெறாமலும் உலகத்தில் இன்னது நடக்கின்றது என்று பார்க்கக் கண்ணில்லாமலும் கேட்கக் காதில்லாமலும் குருடர்களுஞ் செவிடர்களுமா யிருக்கிறார்கள். மற்றவர்கள் இராஜாங்கபாஷையும் தாய்ப்பாஷையும் கற்றும் அரசாங்க உத்தியோகங்களும் அதிகார ஸ்தானங்களும் வகித்தும் மேம்பட்டிருப்பதால் மகத்தாகிய உன்னத பதவியையும் கௌரவத்தையும் அடைந்திருக்கின்றார்கள்.

12. ஆகையால்! விஸ்வ பிராமணோத்தமர்களே, ஆச்சாரியர்களே! இத்தியாதி உண்மை விளக்கங்களையும் ஆதாரங்களையும் சாஸ்திர பூர்வமாக கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக்காட்டி, நம் ஜாதிப்பட்டம் அரசாங்கத்தவர்களால் பழையபடி ஆச்சாரி என்று எழுதப்படவேண்டுமென்றும், இப்போது செய்திருக்கும் ஆர்டரை ரத்து செய்துவிட வேண்டுமென்றும் நமது மாட்சிமை தங்கிய காருண்ய கவர்ன்மெண்டாரவர்களுக்கு தந்தி மூலமாகவும் மகஜர் மூலமாகவும் விண்ணப்ப மூலமாகவும் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் தெரிவிக்க வேண்டியது. இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் ஆறுமையும் அனுதாபமும் காட்டி உழைப்போமேயானால் கூடிய சீக்கிரமே ஆர்டர் ரத்துசெய்து நமக்கு அனுகூலமாகு மென்பது திண்ணம். அழுதபிள்ளைகளுக்குத்தான் தாயானவள் பால் கொடுப்பாள். நாம் எவ்வளவுக்கெவ்வளவு கூக்குரல் போடுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையைப் பெறலாம். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" "முயற்சி திருவினையாக்கும்" என்ற வாக்கியங்களை என்றும் ஞாபகத்தில் வைக்கவேண்டியது. பட்டமிழந்தோம் பதியிழந்தோம் பாழ்போனோம், எல்லாப் பெருமைகளையும் இழக்கு நாள் வந்துவிட்டதே என்று ஒவ்வொருவரும் கண்ணீர் விட்டாலொழிய நாம் எடுத்துக்கொண்டவிஷயம் பலப்பிராப்தி அடையாது. இவ்விஷயமாக இவ்வளவு எடுத்துக்காட்டவேண்டிய தென்னவென்றால், நம் காலத்திலேயே இத்தகைய சம்பவங்கள் நேர்ந்துவிடுமானால், நமக்குப்பின் சந்ததியார்கள் நம்மைத் தூஷித்தும் இகழ்வார்களல்லவா?

காயிரம்பேடு திருவேங்கடஆச்சாரி.

### "ஆச்சாரியபட்ட உரிமை"

இப்பட்டமானது பொதுவாய்க் குருவுக்கும் சிற்பிகளுக்குமே உரியதானதாகும். காலக்கிரமத்தில் இப்பட்டமானது குருவின் சந்ததியாருக்கும் சிற்பிகளின் சந்ததியாருக்கும் நிலைத்துவிட்டது. இத்தே

சத்தில் குருபட்டம் பெற்றவர்கள் மற்றவகுப்பாரிலும் இருந்தாலும் பிராம்மணர்களுக்குள் சிலரே இருக்கிறார்கள். அவர்களிலும் பெரும்பான்மையாய் வமிச பரம்பரையாய்ச் சந்ததியா ரல்லாமல் யோக்கியதையடைந்தவரே அப்பட்டம் பெறுவதுண்டு. அப்படிப் பட்ட குரு சந்ததியாருக்கு ஆச்சாரிய பட்டம் கிடையாது. சிறுபான்மையாய்க் குரு சந்ததியார் குருபட்டம் பெறுவதுண்டு. அவர்களே ஆச்சாரியப்பட்டமும் பெறுவதுண்டு. இவர்களில் குருபட்டம் பெற்றவர் போக அது பொருந்த குருசந்ததிகளும் ஆச்சாரியபட்டம் வைத்துக்கொள்வதுண்டு. இவ்வித வழக்கமுள்ள குருவும் குருசந்ததியும் தவிர பிராம்மணர்களில் எல்லாருமாவது அவர்களில் ஒருமதத்தார் எல்லாருமாவது ஆச்சாரியப்பட்டம் வைத்துக்கொள்வதில்லை.

சிற்பிகளின் சந்ததியாருக்குள் ஸ்தபதியென்னும் மற்றொரு பட்டமும், அவர்கள் எல்லாருக்கும் ஆச்சாரிப் பட்டமும் வழங்கிவருவதுண்டு. இவ்விராஜதானியைச் சார்ந்த தமிழ் ஜில்லாக்களில் தென்பாரிசமா யிருப்பவற்றிலுள்ள ஜனங்கள் வடமொழியிலுள்ள, ஜ, ப, ஷ, ஸ, ஹ, இவ்வெழுத்துக்களைக் கிரமமா யுச்சரிப்பதில்லை. அவர்களுக்கு சுபாவமாகவே பேதிக்கும். இது அந்நாட்டின் சமஸ்கிருதம் பயிலாத எல்லா வகுப்பாரிடத்து முண்டு. அப்பிராந்தியத்திலுள்ள விஸ்வப் பிராம்மணர்கள் உட்பட எல்லாவகுப்பாரும் ஆச்சாரியென்னும் பதத்தை ஆஸாரியென்றே உச்சரிக்கிறார்கள். அதனால் சிற்பி குலத்தாருக்குரிய ஆச்சாரி பட்டத்தை ஆஸாரியென்று மாற்றிவிடலாமா!

பிராம்மணர்களுக்குரிய மற்றொரு அய்யர் என்னும் பட்டம் வீர சைவர்களாகிய பசுபதி பண்டார ஜாதியாருக்கில்லையா? இக்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவப் பிராம்மணர்களில் இப்போதும் குருத்தனம் செய்துவருகிற சுயமாசாரிய புருஷர்களும் அவர் புத்திரர்களுமல்லாமல் மற்ற ஸ்ரீவைஷ்ணவப் பிராம்மணர்களெல்லாரும் அய்யங்கார் என்னும் பட்டத்துக் குரியவர்களாவார்கள். அப்படியிருக்க? அவர்கள் அப்பட்டத்தைமாற்றி ஆச்சாரி யென்னும் பட்டத்தை வைத்துக் கொள்ளலாமா? தகப்பன் ஓர் பட்டத்தையுடையவனாகவும் தான் வேறுபட்டத்தை யுடையவனுமாக இருக்கலாமா? இப்பட்டத்திரிபு வித்யா யோக்கியதையின் மேல் உண்டாயிருப்பது நலம். தங்களுக்கு எப்படிப்பட்ட மேலான பட்டத்தைத் தரும்படிக்கும் அதை ஹாஜிதம் செய்யும்படிக்கும் கோரி, யாதொரு வகுப்பார் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பங்கள் செய்துகொள்ளலாம். கவர்ன்மெண்டார் அவ்விண்ணப்பதாரர்களுடைய மனோபீஷ்டங்களைப் பூர்த்திசெய்யவும் மறுக்கவும் கூடும். அதைவிட்டு யாதொரு வகுப்பார் மற்றொரு வகுப்பாருடைய பட்டத்தை மாற்றும்படிகோரி கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாமா. இப்பட்டத்திரிபின் விஷயத்தில் கவர்ன்மெண்டார் பிரவேசித்து ஒருவித தீர்ப்பு செய்தால் அது ஒருவகையாருக்கு அனுகூலமும் மற்றொரு வகையாருக்கு பிரதிகூலமுமாக முடியுமல்லவா. இவை யெல்லாம் நம்மவர்களுக்கு விரோதமாகும்படி இப்படித் திரிபைக்கோரி முதலில் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டவர்கள் இன்னாரென்பதையும் விண்ணப்பத்தின் தன்மையையும் அதன்மேல் கவர்ன்மெண்டார் செய்த தீர்மானத்தையும் தெரிந்து இப்பத்திரிகை வாயிலாய் வெளியிடும்படி பத்திராதிபரை வேண்டிக் கொள்ளுகிறேன். இப்பட்டத்திரிபைக் குறித்து நம்மவர்களில் குருமடாதிபதிகள் தனித்தனியாகவும், எஜமானர்களும் சபையார்களும் ஒன்று கூடி ஏகோபித்தும் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பங்கள் எழுதிக்கொண்டால் தக்கநியாயம் கிடைக்குமென்று தோன்றுகிறபடியால் அக்கருத்தை இதனால் எல்லாருக்கும் வெளியிடலானேன். ஆசாரியென்னும் பதத்தில், சா, என்னும் எழுத்தானது ச்சாவென்று ஒற்று இரட்டிக்கவேண்டிய நிமித்தியமல்லை. அது இயல்பாகவே வல்லினமாயும் முழு அர்த்தத்தைத் தரத்தக்கதாயுமிருக்கிறது. அது ஒற்று இரட்டித்தாலும் உச்சரிப்பும் அர்த்தமும் கெடும் ஸவும் அப்படியே. இதனால் நம்மவர்கள் தங்களுக்குரிய பத்தர் என்னும் பட்டத்தை ஆசாரியென்று மாற்றிக் கொள்ளவேண்டுமென்றும் அபிப்பிராயமில்லை. எந்த குடும்பத்தில் எந்தப் பட்டம் பழமையாய் வழங்கி வந்ததோ அந்த குடும்பத்தில் அந்தப் பட்டமே யிருக்கலாம்.

அத்தியாப கணியம்பாடி கலிங்காசாரி.

---



## குடந்தையில் கான்பரன்ஸ்

விஸ்வகர்மன் 5-ம் சஞ்சிகை (பிப்ரவரி)யில் மேற்காட்டிய மகுடங் கொண்டதும் மகாகுலாபிமானியாகிய பிரம்மஸ்ரீ ரா. சதாசிவ உபாத்தியாயர் அவர்களால் அவரது கையொப்பத்துடன் பிரம்மஸ்ரீ ஜோஸியர் முத்து ஆச்சாரியார் ஆகிய 11 கனவான்களுக்கு எழுதியனுப்பப்பட்ட நிருபத்தின் காப்பியையும், விஸ்வகர்ம குலோபகாரி 5-ம் சஞ்சிகை (பிப்ரவரி)யில் விசேஷ அனுபந்தமாக நமது அத்தியந்த நண்பரும் மகாகுலாபிமானியுமாகிய பிரம்மஸ்ரீ கெ. கன்னியப்பாச்சாரியார் அவர்களால் வெளியிடப்பட்ட ஷை கான்பரன்ஸ் கூடுவதைப்பற்றிய அபிப்பிராயங்களையும், மேலும் விஸ்வகர்மன் 6-ம் சஞ்சிகை (மார்ச்சு)யில் ஷை கான்பரன்ஸ் விஷயமாகப் பத்திராதிபர் எழுதிப் பிரசுரித்திருக்கும் மகா வாசால மதுரபாடன அபிப்பிராயங்களையும் படித்துப்பார்த்ததின் பின் அடியேனது அபிப்பிராயத்தையும் வெளியிட விஸ்வேஸ்வரனது காருண்ய மனவெழுச்சி யுண்டாயிற்று.

குடந்தையில் விஸ்வகர்ம கான்பரன்ஸ் என்னும் விஷயம் பத்திரிகை வாயிலாக வரத்தொடங்கவே நமது குலத்தார் விலக்கவேண்டிய குணம் ஒன்று பிரபலிக்கமாகத் தோற்றியது. அதாவது எதற்கும் ஓர் குறை சொல்வது.

> குற்றமே தெரிவார் குறுமாமுனி
> சொற்ற பாவினு மோர் குறை சொல்லுவார்.

என்று கச்சியப்பர் சொல்லியபடி ஒரு ஏற்பாடாவது நம்மவர் குறை சொல்லாமற் தப்பல் அரிது. இந்த மஹா பெரிய முயற்சியைச் சொன்னவராகிய பிரம்மஸ்ரீ. சதாசிவ உபாத்தியாயருக்கு சகல விஸ்வகர்ம ஜாதியாரும் பெருங்கடமைப் பட்டவரானார்களன்றோ? அவர்க்குத் துதிகூறுவதைவிட்டு அதில் பச்சைத் தண்ணீரை ஊற்றுதல் அழகன்று.

### ஏன் கூடவேண்டும்.

விஸ்வகர்ம குலத்தாரின் மானத்தைக்
காப்பாற்றுவதற்காக.

> மயிர்நீப்பின்வாழாக் கவரிமாவன்னார்
> உயிர்நீப்பர் மானம்வரின்.

ஆச்சாரி ஆஸாரியானதால் மானங்கெட வேதுவானது போலும். இது நம்மவர்க்கு வந்த கஷ்டங்களில் அதி கொடூரமானது. இலங்கையிற் சிங்கள ஜாதியார்க்குளும் விஸ்வகர்மர்களுக்கு ஆச்சாரியே என்ற பட்டம் பிரபல்லியமாயுள்ளது. பிராமணருக்கு இல்லை. ஐயர் என்று உண்டு. ஈஸ்வரனுடைய இரகசியங்களை யாரறிவார்? குலநன்மைக்காக வேண்டிய வேறுமுயற்சிகளைப் பிறப்பிக்கவும் ஒற்றுமையை யுண்டாக்கவுமே கவர்ன்மெண்டாரால் இந்த ஆர்டர் பிறந்திருக்கிறது—இராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய வாக்கின் மொழிபெயர்ப்புக் குறள்—

> கரும்பொன்னைச் சுட்டடிக்கக் கட்நமாம் மேன்மேல்
> வருந்துன்பால் மேன்மை வரும்.

அநேக தொல்லைகள் நமது ஜாதியாருக்கு அடுக்கியடுக்கி வந்து இப்போது ஆச்சாரி ஆஸாரியாய்வந்ததால் விஸ்வகர்மகான்பரன்ஸ் வரப்போகிறது. அதிலிருந்து அநேக நன்மைகள் நங்குலத்துக்கு வரப்போகின்றன. இதிற் சந்தேகமில்லை.

> ஒற்றுமை பொற்றுமையென் றோயாதே கண்ணாளர்
> ஒற்றுமையே வேண்டி யுரைக்கின்றார்—ஒற்றுமையும்
> ஓரிடத்திற் கூடி யுடன்கலந்து பேசினன்றி
> யாரிடத்தில் உண்டாகும் அஃது?

> ஊனமே யான ஊனிடை யிருக்கும்
> உயிரினைத் துறக்கும் ஒண்பூணை
> மானமே புரத்தல் அவனிமே லெவர்க்கும்
> வரிசையுந் தோற்றமும் மரபும்

என்று அருச்சுனன் கூறியதை மனத்திற்கொள்ளுங்கள்.

### விஸ்வகர்ம குலத்தாரின்
### பெருமையைக் காட்டுவதற்காக

> ஒருமை மகளிரேபோலப் பெருமையுந்
> தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு - குறள்

உத்தரேத் ஆத்மனாத்மானம் ஆத்மானம் அவசாதயேத்—கீதை.

தன்னைத்தானே உயர்த்தவேண்டும். தன்னைத்தானே தாழ்த்தல் தகாது. தானே தனக்கு நண்பனும் தானே தனக்குச் சத்துருவுமாம்.

### எப்போது கூடவேண்டும்?

> காலதாமதமின்றிக் கூடவேண்டும்
> மடிமை குடிமைக்குட் டங்கிற் றன்னொன்னார்க்
> கடிமை புகுத்திவிடும்.
> தூங்குக தூங்கிச்செயற்பால தூங்கற்க
> தூங்காது செய்யும் வினை.

### கூடுவதாற் பயன் யாது ?

குலாபிமானிகளை நிச்சயமாய் அறியலாம்
புறஜாதிக் குலநண்பர்களை அறியலாம்
கேட்டினுமுண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

எமது பழைய அரசர் இராக்காலத்தில் நகரசோதனை செய்தல் முதலியவற்றால் அவரவர் குறைகளையறிந்து தாமே நீக்குவதுபோலல்லாது,

தனித்துக் கேட்கிற் றாரா தெதையுங்
கூடிக் கேட்கிற் குறைவறக் கொடுக்கும்

தற்கால ஆங்கிலேய அரைச்சனசமூக ஆளுகையில் மஹாஜனங்கூடிக் கூக்குரலிட்டாலன்றிக் கவண்மெந்து கவனிக்காது. ஆகையால் இப்பேர்ப்பட்ட கான்பரன்ஸ்களால் வரும் நன்மைகள் சொல்லாமலே விளங்கக் கிடக்கின்றன.

கைத்தொழில் விருத்தி, கல்வி விருத்தி, உத்தியோக விருத்தி, புறஜாதி நெருக்க நீக்கம் முதலிய நன்மைகள் உண்டாகும் என்பதற்குச் சந்தேகமில்லை.

ஒற்றுமை யுதிக்கு நல்லுதவி யெய்திடும்
கற்றறி விருப்பு கைத்தொழில் வளர்ந்திடும்
மற்றையர் இடுக்கண்கோய் வறுமை தீர்ந்திடும்
பற்றுடன் குடந்தையுட் பலரு மீண்டினே.
ஆங்கிலர் மதிப்பர் அன்னியர் மதிப்பரங்
கோங்கனுகூல மாச்சாரிக் குற்றிடும்
ஆங்கவர் உத்தியோ கத்த ராவராம்
பூம்பொழிற் குடந்தையுட் போந்து கூடினே.

யாழ்ப்பாணம்-N. சிவக்கொழுந்து.

II

1913-வருஷம் ஜனவரிமீ நமது சபையினின்று வெளியிடலான 19/20 வது பிரசுரம் 305 வது பக்கத்தில், பிரமஸ்ரீ கோயமுத்தூர் C. R. சுப்பராய ஆச்சாரியாரவர்கள் விஸ்வபிராம்மண பண்டித மகாஜன கான்பரன்ஸ் கூடவேண்டுமென்று வரைந்துள்ள ஓர் நீண்ட வியாஸத்தை வாசித்தோமே யல்லாது, அதை நமது குலப்பிரமுகர்கள் மேற்கொண்டு நடாத்திக் காண்பிக்க முன்வந்தார்களில்லையே; நமது குலத்தில் வித்துவாத்தினசிரோன்மணிகள் பலருளராயினும் அவர்களும் அதை வாசித்து விட்டுவிட்டனர்களே ; பாஷா சம்மதமாய்ப் போய்விட்டதே; கான்பரன்ஸ் கூடவில்லையே என்று சென்ற ஒருவருடமாய் ஏங்கிக்கொண்டிருந்த என்போன்றவர்கள், 1914 வருஷம் பிப்ரவரிமீ வெளிவந்த "விஸ்வகர்மன்" பத்திரிகையில் "குடந்தையில் கான்பரன்ஸ்" என்ற தலைப்புகொண்டதோர் வியாஸத்தை வாசிக்க எவ்வளவு ஆனந்த பரவசமடைந்திருப்பார்கள் என்பது நான் சொல்லாமலே விளங்கும்.

இவ்விஷயமாய் சென்ற 3 சஞ்சிகைகளிலும் அடுத்தடுத்து வரும் வியாஸங்கள : எவருக்குத் தான் ஆனந்தமுண்டாகாது ? இதுவிஷயமாய்க் கவலை எடுத்துக்கொண்ட குலாபிமான மிகுந்த செல்வராகிய குடந்தை பிரமஸ்ரீ. சதாசிவ உபாத்தியாயரவர்கட்கும், அன்னவர் வேண்டுகோளுக்கிசைந்து ஆலோசனைக்காகக் குடந்தைக்குச் சென்ற பண்டித கனவான்களுக்கும் நமஸ்காரஞ் செய்யக் கடமைப்பட்டுள்ளேன். அன்னவர் கொண்ட திருக்கருத்து இனிது நிறைவேறும்பொருட்டு ஸ்ரீமத் விஸ்வேசுரனை ஸ்மரிக்கின்றேன்.

குடந்தையில் இதுவிஷயமாய் ஆலோசனை செய்யப்பட்டுள்ள விஷயங்கள் நாளதுவரை செய்யப்பட்டுள்ள பிரயத்தனங்கள் முதலான விவரங்கள் நமது மறுசஞ்சிகையில் வெளிவருமென்று மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. "விஸ்வகர்மன்" பத்திரிகையினால் ஏற்பட்ட புண்ணியம் சென்னை வாசிகளைச் சாருவதுபோலும், "விஸ்வப் பிராம்மண"பட்ட விஷயமாயும் "ஆச்சாரி"ப்பட்ட விஷயமாயும் ஏற்பட்ட புண்ணியம் திருச்சிவாசிகளுக் குண்டாவதுபோலும், இம்மகா நாடு நடாத்தினால் அதனாலாகிய புண்ணியத்தையும் கண்ணியத்தையும் தஞ்சை குடந்தைவாசிகளே யடைவார்கள்.

தற்சமயம் நம்மவர்களெல்லாம் ஒன்றுகூடிப் பேசவேண்டியவிஷயம், "ஆச்சாரி"ப்பட்டத்திற்கு வந்துள்ள ஆபத்தே அவசியமாகும். இதைக் கான்பரன்சில் பேசி முடிவுசெய்து காருண்ய கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டால் "இதற்கென்றே விஸ்வப்பிராமண குலத்தினர் கான்பரன்ஸ்கூடிப் பேசியிருக்கின்றனர்" என்று கருதி, அவர்கள் செய்துள்ள ஆர்டரைமாற்றி ஜென்மசுதந்திரமாயும், சாஸ்திரோக்தமாயுமுள்ள "ஆச்சாரி" என்னும் பதப்பிரயோகத்தைப் பழையபடி கைக்கொள்ளும்படி உத்தரவளிப்பார்கள்.

கிருஷ்ண குண்டூர் மண்டல விஸ்வப்பிராமண கான்பரன்ஸுகளில் ஆந்திர நாட்டார் கைக்கொண்டுள்ள விஷயங்களில் எது பொதுஜன அபிப்பிராயத்திற்கும்



குல ஈடேற்றத்திற்கும் பொருந்தவில்லையோ அதை நீக்கும் பொருட்டு வேண்டிய நியாயங்களைப்பேசி அவைகளை நீக்கிவருவதுபோல், நமது குலத்தினர் கைக்கொண்டுள்ள பலவிஷயங்கள் உள. அவைகளை நீக்கவேண்டிய முயற்சியைத் தேடுவராகளாகவும். குடந்தைக் கான்பரன்சில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் குலத்தின் ஆசார சீர்திருத்தமே.

1. திருமாங்கல்யம் எவ்விதமாய்ச் சிருஷ்டிக்க வேண்டும்? (எங்கும் ஒரேமாதிரியா யிருக்கவேண்டியது. உபாத்தியாயரும் நாட்டாண்மைக்காரரும் கவலை இதில் கொள்ளவேண்டும்.)

2. அதை உட்கழுத்தோடு ஒட்டக்கட்டிக் கொள்ளாமல் தொங்கவிட்டுக் கட்டிக்கொள்வதே உசிதம்.

3. நமது குலஸ்திரீகள் (விதவையானாலும் சரியே) மடிவைத்துக் கட்டிக்கொள்ளவேண்டும்.

4. பிரதி செவ்வாய் வெள்ளி வாரங்களில் நமது ஸ்திரீகள் காமாட்சி அம்மன் கோவிலுக்குப் போக வேண்டும்.

5. விதவைகள் தலைமொட்டை அடிக்கலாமா அடிக்கக்கூடாதா ?

6. விதவைகள் வெண்புடவை உடுத்துவதா, பல வர்ணமுள்ள சேலையை உடுத்துவதா ?

7. 7வது வயதில் நமது குலச்சிறுவர்கட்கு எவ்விதத்திலும் உபநயனஞ் செய்யப்படவேண்டும்.

8. ஆசார சீர்திருத்தக் கமிட்டிகள் ஒவ்வொரு ஊர்களிலும் ஏற்படுத்தவேண்டும். அந்த மெம்பர்களை அவ்வவ்வூரார்களே தெரிந்தெடுத்தல் வேண்டும். இவர்கள் கூறும் வண்ணம் நடக்க ஊரார்களுக்கு நாட்டாண்மைக்காரர் எச்சரிக்கை செய்யவேண்டும்.

9. விஸ்வர்மா என்று கூறுவதுசரியா, விஸ்வ பிரம்மா என்று கூறுவதுசரியா ? இவ்விரண்டு பதங்களும் சரியானால் இதில் எது முக்கியமாய் வழங்க வேண்டும்.

10. குலச் சிறுவர்கட்கு கல்வி கற்பிக்கப் பண்டு ஏற்படுத்தவேண்டும்.

உத்தமர்க்கு ஊழியன்
தன்னூர் T. தங்கவேல்,
திருநெல்வேலிபாலம்.

## நமது வாசகர்கள்.

(கடிதக்காரர் தங்கள் அபிப்பிராயங்களுக்குத் தாமே ஜவாப்தாரிகளாவர்.)

### பழனி. வே முத்தனாச்சாரியாரின் தேகவியோகத்தின் அநுதாபம்.

என்மீதன்புவாய்ந்த விஸ்வ ப்ராம்ஹணச் சகோதரர்களே! எனது ஜனக சகோதரரும், எனது ஜனகபிதா வேலாச்சாரியார் அவர்களுடன் கூடப்பிறந்த சிறிய தகப்பனாரான சந்தனமாச்சாரியாரவர்கள் சுவீகார புத்திரரும், சற்ஜன சபா வுஜித சங்கீத வித்தியா ப்ரசங்க [S. S S. V.] கம்பனியின் ஸ்டேஜ் மானேஜரும், சில தமிழ்ப் பத்திரிகைகளுக்கு வியாச தானமளித்து வந்தவரும், "பங்கஜவல்லி சரித்திரம், கெடுவான் கேடு நினைப்பான் அல்லது வத்ஸலாபஹரணம், அதிரூப சுந்தரி, பரிமளாங்கி" முதலிய தமிழ் நாவல்களையும், பழனியாண்டவர்பேரில் "விறலிவிடுதூது" முதலிய அநேக பிரபந்தங்களையும், சத்தியவாக் கரிச்சந்திர நாடகம், முதலிய டிராமாவுக்கு வேண்டிய அநேக சரித்திரங்களையும் இயற்றினவரும், திராவிடவித்துவானுமாகவிருந்த "வே. முத்தனாச்சாரியார்" நாளது மாசிமீ 13உ யன்று "விஸ்வேஸ்வர பகவான்" திருவடிசார்ந்த தேகவியோகத்தின் பெருந்துயரத்தை இதன் மூலமாக உங்களுக்குத் தெரிவிக்கலானேன்.

V. மௌனகுரு-ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.

---

### மகான் ஜடைசுவாமிகள்

ஆதிவிராட் விஸ்வப்பிரமகுல திலகபானுவா யவதரித்து தவம் ஞானங் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து சிவத்தைப்பேணல் தவத்திற் கழகெனத்துணிந்து சதா சிதாகாசப்பொருளை நினைந்து சிவானுபவச் செல்வராய்ச் சித்தியெலாஞ்செய்ய வல்லவராய் தொண்டைமண்டலத்திற் சிறப்புற்றோங்கிய சென்னையம்பதியில் ஜடை சுவாமிக ளென்கிற திவ்யதிருநாமம் பெற்றவரொருவர் இருந்தனர். இவர் சென்னை செம்படப்பிள்ளையார் கோயில் சிற்றுண்டிக் கடைகளிலும் இன்னும் சிற்சில இடங்களிலும் பல அற்புதங்கணிகழ்த்தி வந்தனர் இம்மகான் பெருமை மகிமை எலாங்

கேள்வியுற்ற சின்னகாவணம் ம-ா-ா-ஸ்ரீ, கிருஷ்ண சாமி முதலியார் தாம் வசிக்கும் திருவல்லிக்கேணி வீரராகவ முதலி வீதியிலிருக்கும் தமது கிருகத்திற் கழைத்துக் கொண்டுபோய் அவருக்கு வேண்டிய உபசாரணை செய்து பத்திபூண்டிருந்தனர். இப்பெரியார் அம்முதலியாருக்கு மாந்திரிக வைத்திய வாகட முதலானவையுங் கற்றுக்கொடுத்து உத்தியோக விருத்தி செய்து கொண்டுவந்தனர். 'பின்பு ஷை சுவாமிகள் தமது நிலையைத் தாமுணர்ந்து மகா மேன்மை பொருந்திய திருவொற்றியூரின் வடபுறம் சென்று நிஷ்டைகூடியிருந்தனர். அப்போது ஷை முதலியார் ஷை சுவாமியைக் காணுது திகைப்புற்று ஒற்றியூருக்கு வந்தனர். அன்று சுக்கிரவாரம் சுவாமிகள் முதலியார் வந்திருப்பதையுணர்ந்து அருகழைத்து நான் இன்று மூன்றுந்தினம் பரிபூரண திசையை யடையப்போகின்றேன். அப்பர் சுவாமிகள் மடத்திற்கு வடவண்டை சமாதியிலிருக்கச்செய்யுமென வுரைத்தனர். உடனே முதலியார் ஆனந்த பரவசராய் அப்படியே மூன்றுந்தினம் வந்து அருகே யிருக்க பார்த்திப வரு தையூ பரணிநக்ஷத்திரம் அமரபக்ஷம் கூடிய சுபதினத்தில் பரிபூரண திசை யடைந்தனர்.

உடனே செய்யவேண்டிய திருப்பணி யெல்லாம் திருத்தமாகச் செய்து அரிய பெரிய மடாலயமாகக் கட்டிமுடித்து முதலியாரும் சிவசாயுஜ்ஜிய பதவியடைந்தனர். இம்மகான் சரிதையை புன்றப்பாக்கம் ம-ா-ா-ஸ்ரீ ஆண்டியப்ப முதலியார் தெரிவித்தவண்ணம் என் சிற்றறிவிற் கெட்டியபடி சுருக்கமாக எழுதலாயினன். குற்றமிருக்கின் கற்ரோர் பொறுத்திடுக.

**மதுரகவி பு. நடராஜ ஆச்சாரி**

## பழய அமரம்

பழய காலத்து அமரத்தில் நம்மவர்களைச் சிலாகித்து எழுதியிருக்கிறதென்று கேட்டிருக்கிரோம். அதன்படி என்னிடம் ஓலைச்சுவடி 1 வது ஏடுமுதல் 31-வது ஏடு வரையில் ஒரு கிராமத்தில் இருந்து வந்திருக்கிறது. அதில் கீழ்க்கண்ட ஸ்லோகங்கள் காணப்படுகின்றன:—

விஸ்வகர்தா ஸதாநந்தோ
பஞ்சாஸ்யோ மேருநிர்மிதா
பஞ்சபிரமாதி தேவஸ்யாத்
குலிஸாம் பாவாஹன:
மித்ரா வருண ஜித்வேஷாம்
த்துருவபாலோ ஜறைத்குருஹா
ஸம்புரோக்ஷி பஞ்சவேதா
ததாதஸ்யாம் முகோத்பவான்
மனுர் மயாச த்வஷ்டேஸாம்
சில்பி விஸ்வஞ்ஞ மூர்த்தியூ:
கம்ஸாரொ ஸ்ரீஹரே தஸ்மான்
பிராம்மணோ ஹரிகேதநா:
பிரம்மாத்ம பூஸுராஜ் யேஷ்டா
பரமேஷ்டி பிதாமஹ:
ஹிரண்ய கர்போ லோகேஸ:
ஸ்வயம்பூ விஸ்வ கர்மணஹ:
தாதாப் ஜயோநிர்து ரிஹிணோ
விரிஞ்சி: கமலாசன:
துவஷ்டாப் பிரஜாபதிர் வேதா
விதாத விஸ்வஸ் சுருட்விதி:

நமது சபை நண்பர்களிடத்தில் திரிகாண்டமும் சேர்ந்த பழய அமரம் இருந்தால் நமது சபைக்கனுப்பினல் அதின் உண்மை நாம் எல்லோரும் அறிந்துகொள்ளலாம். என்னிடம் இருக்கும் பழய அமரத்தை வாசிக்க சக்தனல்ல. நான் எழுதியிருக்கும் சுலோகமட்டும் அறைகுறையாகத் தெரிந்து கொண்டேன். ஆனல் தெரிந்துள்ளவர்கள் நன்ருய் ஆராய்ந்து எழுதுவது உசிதம். இது வேண்டுமானல் அனுப்ப அவாவுடையவனு யிருக்கிறேன்.

இன்டு. பொமாச்சாரி.

---

'முன்பின் செத்திருந்தாலன்ரோ சுடுகாட்டுப் போகும் வழிதெரியும் என்னும் வாக்கியத்தைப்பற்றி ஒரு நிருபர் "கலைமகள்" பத்திரிகையில் பின்வருமாறெழுதியிருக்கிரூர்: "முன் என்பது அகந்தை; பின் என்பது மமதை, எங்ஙனமெனில், அகங்கார மமகாரமென்னு மிரண்டனுள், நாம் என்னும் அகங்காரம் முளைத்தபிறகே, எனது என்னும் மமகாரம் தோன்றுமாகலின் என்க. சாதல் என்பது நாசத்தை அறிவிக்கும். சுடுகாடு என்பது ஸ்மசானமாம். இது உலகப் பொருள்களிலொன்ருய் நாம் காணும் சுடுகாடன்று. பின்னெதுவெனில், "மாயா மமதகங்கார தகனம் ஸ்மசானம்" என்ற சுருதிப்படி மாயையும் அதன் காரியங்களான அகந்தை மமதைகளும் தகனமான நிலையே ஸ்மசானமாம்; அதுவே சிவபதம். இப்படிப்பட்ட சிவபதத்தில் விளங்காநின்ற ஆனந்தரூபியைத்தான் 'சுடலைபாடி' யெனச் சுருதிகூறும். இந்தச் சுடுகாட்டிற்குப் போகும்வழி என்பது சிவஞானமாகும். இச்சிவஞானமானது அகங்கார மமகாரங்கள் எதுகாறும் நாசமாதவில்லையோ அதுகாறும் உதியாது இதனை,



## தொழிற்றுறைகள்

இந்தியாவிலுள்ள தொழிற்சாலைகள். சென்ற ஜன கணிதத்தின்படி இந்தியாவில் 7, 113 தொழிற்சாலைகளிருக்கின்றன; அவற்றில் 20 லட்சம் பேர் வேலை செய்கின்றனரென்றும், அவருள் சிறுபான்மையோரே நமது ஜாதியாரென்றுந் தெரிகிறது. இந்த ஸ்திதியில், தொழில்களுக் கெல்லாம் உரியவர்கள் நாங்களே யென்று விஸ்வகர்ம ஜாதியார் வாய்ப்பறையறைவது பரிகாசத்திற்கிடமே யல்லவா?

கொம்பு நாற்காலி. அமெரிக்காவைக் சேர்ந்த தென் காலிபோர்னியாவிலுள்ள லாங்பீச் என்னும் ஊரில் கொம்புகளாற் செய்யப்பட்ட ஒரு நாற்காலி யிருக்கிறது. அது 8 முதல் 16 அங்குலம் வரையிலுள்ள 38 அழகான கொம்புகளால் செய்யப்பட்டிருக்கிறது. கண்ணுடிபோன்று உருவங்கள் தெரியுமாறு மிகச் செம்மையாக அக்கொம்புகள் இழைக்கப்பட் டிருக்கின்றன. இழைப்பு வேலைக்குமட்டும் 275 ருபாய் பிடித்ததாம். அதற்காக ஏற்பட்ட மொத்தச் செலவு சுமார் 400 ரூபாயாம். நல்லவேலைக்காரர்கள் நம்முள்ளும் இருக்கின்றனராயினும், அவர்கள் ஒழுங்குபட வேலைசெய்யாததினுலும், கண்ணியமாய் வாழாததினுலும், ஆதரிப்பாரின்மையாலும் பிரகாசிக்காமலிருக்கிரூர்கள். அன்றியும் தமது வேலையின் கீர்த்தியையும் பிறரடையவிட் டிருக்கிரூர்கள்.

ஒரு சுதேசிக் கப்பல். இந்தியா ஜெனரல் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார் வங்காளத்திலுள்ள நதிகளில் ஓடும்பொருட்டு ஒரு பெரிய கப்பலைக்கட்டியிருக்கிரூர்கள். அஃது இதுவரை இந்தியாவில் கட்டப்பட்ட கப்பல்களு ளெல்லாம் மிகப்பெரிய கப்பலென்று சொல்லப்படுகிறது. அதன் எஞ்சினைத் தவிர மற்றவைகளெல்லாம் கல்கத்தாவில் செய்யப்பட்டனவாம். அதில் சுமாம 2000 பிரயாணிகள் இருக்கக்கூடும். மலெட்டா என்ற அந்தக் கப்பலில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் சுதேசிகளென்று சொல்லப்படுகின்றது. நம்மவர்கள் ஒருபிடிக்கீழ்த்தர வேலைகளுக்கன்றி உயர்ந்த ஸ்தானங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்குக்காரணம் இஞ்சினியரிங் வித்தியா ஞானமில்லாமையேயாகும். படிப்பிருந்தாலன்ரோ அதுசித்திக்கும்!

பட்டுத்தொழில்.—மைசூர் பட்டு வியாபாரிகளாகிய ஸ்ரீ ப. அப்துல்குதூஸ் ஸ்ரீ கண்டய்யா இவர்களுடைய முயற்சியினுல் இம்மாத முதலில் ஓர் பட்டுத்தொழிற் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது பிரபல உத்தியோகஸ்தர்களும் வியாபாரிகளும் பலர் விஜயஞ்செய்திருந்தார்கள். பட்டுத்தொழில் சம்பந்தமாய் இதாலி தேச நிபுணர் விக்னர்மாரியென்பவர் வெகு விஸ்தாரமாய்ப் பேசினுர். பட்டுப்பண்ணை யொன்று மைசூர் சென்னபட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதில் 2 இன்ஸ்பெக்டர்களும் அநேக தொழிலாளிகளும் வேலை செய்துவருகின்றனர். மாதமொன்றுக்கு ரூ 12 உபகாரச்சம்பளங்கொடுத்து 5 மாணவர்களுக்குப் பட்டுத்தொழில் கற்பிக்கப்படுகிறது. இவ்வித சங்கமுந் தொழிற்சாலையும் ஏற்பட்டாலன்ரோ விஸ்வகர்மப் பஞ்சகிருத்தியங்கள் சீர்ப்பற்று செழிக்கும்?

இந்தியத் தொழிலாளிகள்.—ரயில்வே இலாகாவில் தொழிலாளிகளுக்கு அநேகவித வேலைகளுண்டல்லவா? ஆயினும், இவற்றில் முக்கியமானவைகளிலெல்லாம் பூட்சும் டொப்பியும் போட்டவர்களே மிகுதியாய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அவ்விதப் பதவிகளை இந்தியத் தொழிலாளிகளடைவதற்கு இடையூறுயிருக்குங் காரணங்களில் முக்கியமானதொன்று கல்விப் பயிற்சியில்லாமை மிக்க சாதுரிய வேலைக்காரனுக ஓரிந்தியனிருந்தபோதிலும், அவன் இங்கிலீஷ் படிப்பற்றவனுயிருந்தால், உயர்ந்த வுத்தியோகங்கள்பெற்று பெருஞ்சம்பளம் வாங்கக்கூடாதவனுயிருக்கிருன். சில வுத்தியோகங்கள் இந்தியருக்குக் கொடுக்கப்படாமலே வைக்கப்பட்டிருக்கின்றன. மைசூர் கவர்ன்மெண்டார் தமது ராஜாங்க ரயில்வேக்களில் இந்தியருக்கு எல்லா உத்தியோகங்களுந் தரவேண்டு மென்னும் உத்தேசத்துடன் இவர்களை பல தொழில்களிற் சரியாய்ப் படிக்குவிப்பதற்காக ஓர் தொழிற்சாலை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்து வருகிரூர்கள். இதில் எல்லாஜாதியார்களும் தொழிற்றுறைகள் பலவற்றிலும் தேர்ச்சியடைதல் சாத்தியமாகிறது. இந்த தொழிற்சாலையின் பயனை நமது ஜாதியார் லெத்தனைபேர் அடைவார்களென்று சொல்ல முடியாது, எவரேனும் அடைவார்களோ வென்பதுஞ் சந்தேகம். நமக்கென்ரூரு தொழிற்சாலை யேற்படுத்தி, அதிற் பழகித் சேரும்படி வலிய வலிய அழைத்தாலும் வருவார்களோ வென்பதுஞ் சந்தேகமாகவே யிருக்கின்றது. என்ருலும், அவ்விதஞ் செய்ய நாம் முயற்சிகொள்ளவேண்டாமா?

## மற்றவர்மாட்சி

**பட்டாம்பி சமஸ்கிருதகாலேஜ்.**— இது 1889வருஷம்முதல் நடைபெற்று வருகிறது. இதில் சமஸ்கிருதம், இங்கிலீஷ், மலையாளமென்னும் மூன்று பாஷைகள் கற்பிக்கப்படுகின்றன. இந்துக்கள், மகம்மதியர், கிறிஸ்துவர்களாகிய யாவரும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். வருஷவாரி செலவு ரூ. 4,000. 136-மாணவர்கள் வாசிக்கிறார்கள். 9 வகுப்புகளும், 10 போதகாசிரியர்களுமிருக்கின்றனர். இது பலருக்குபயோகப்படுவதால் நாளுக்குநாள் விருத்திபெற்று வருகின்றது.

**முஸ்லிம் வித்தியாபி விருத்தி.**— செகந்திரா பாத்திலிருக்கும் மதராஸ்-இ-இஸ்லாம் ஸ்கூல்கட்டடத்தைப் புதுக்குவதற்கு ரூ. 30, 000 சேகரிக்கப் புறப்பட்ட மேதாவிகளிருவர் இரண்டு மணிநேரத்திற்குள் ரூ. 12, 000 கிடைக்கப்பெற்றனரெனக்கேட்க மிகவுஞ் சந்தோஷ முண்டாகிறது. மகம்மதியருக்கு வித்தியாபி விருத்தியின் பயன் தெரிந்திருக்கிற தென்பதையும் அதனால் வித்தியாபி விருத்திக்குத் துணை செய்ய அவர்கள் சித்தமாயிருக்கிறார்களென்பதையும் இச்சம்பவம் குறிப்பிடுகின்றது. எதற்கேயாயினும் மன முண்டானால் இடமுண்டு, இல்லையானால் இல்லை. அந்த மனதைத்தான் நம்மவர்களிடங் காணப் பெற்றிலோம். பயனறிந்த பின்னன்றோ மனமுண்டாகப் போகிறது.

**சௌராஷ்டிர ஹைஸ்கூல் மதுரை.**-மதுரை ஜனத்தொகையில் 100-க்கு 42-பேர் சௌராஷ்டிரர்கள். இச்சாதியாரால் ஸ்தாபித்து நடத்தப்படும் ஹைபாடசாலையில் இப்போது 980-பிள்ளைகள் வாசித்துவருகிறார்கள். இதற்குப்போதுமானதொரு தக்க இடம் வேண்டுமென்று ஹை ஜாதிப் பிரமுகர்களிலொருவரான ஸ்ரீ L. K. துளசிராம் அவர்கள் மூனிஸிபாலிடியோடுவாதாடி நல்லதோரிடத்தைப் பெற்றிருக்கிறார். இனி இப்பாடசாலை இன்னுமதிக விருத்திபெற்று விளங்குமென்பதில் தடையில்லை.

**ராஜா தர்ம பாடசாலை.**—இப்பெயரோடு கும்பகோணத்தில் நடைபெற்றுவரும் சமஸ்கிருத பாடசாலைக்கு, ஹைகோர்ட் ஜட்ஜ் ஆனரபல் ஸ்ரீ T. V. சேஷகிரி அய்யரவர்களுடைய சகோதரராகிய வக்கீல் ஸ்ரீ T. V. வெங்கடராம அய்யரவர்கள் சென்ற மாதஞ் சென்றபோது, வித்தியார்த்திகளை மூன்று வேதங்களிலுங் காவியாதிகளிலும் பரீக்ஷித்துப் பார்த்து திருப்தியடைந்தாரென்று தெரிகிறது. பரீக்ஷகரில்லாத பாடம் பாழேயல்லவா? மேன்மேலும் படித்துச் செல்வோர்க்குப் பரீக்ஷகர் வேண்டியிருப்பது நிசந்தான். பாடமேயில்லாவிடத்தும் பாடமொன்றிருந்தும் மேலே செல்லுதலில்லாவிடத்தும் பரீக்ஷகரேதுக்கு?

**ஒரு கீர்த்திபெற்ற இந்தியன்.**—பெங்களூரில் பாரிஸ்டராக இருக்கும் மிஸ்டர் B. நாகப்பாவின் குமாரரான மிஸ்டர் B. N. விஜயதேவா எடின்பரோ யூனிவர்ஸிடியில் படித்து M. A. பரீட்சையில் தேர்ந்திருக்கிறார். அவர் அடுத்த மே மாதத்தில் நடக்கும் பாரிஸ்டர் பரீட்சைக்கும் போகிறார் என்று சமாசாரம் எட்டியிருக்கிறது. இவ்விதக் கீர்த்தி நம்மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றெண்ணி நடந்துகொள்ளுவார் நம்முள் இல்லையே!

**இந்து அக்கவுண்டண்டு ஜெனரல்கள்.**—மிஸ்டர் டி. எஸ். சங்கரய்யர் ஐக்கிய மாகாணத்திற்கு அஸிஸ்டண்ட் அக்கவுண்டண்டு ஜெனரலாகவும், மிஸ்டர் டி. வி. ஆர். சர்மா டர்மா அஸிஸ்டண்ட் அக்கவுண்டண்டு ஜெனரலாகவும் மாற்றப்பட்டிருக்கிறார்கள் இவர்களிருவரும் சென்னை மாகாணவாசிகள். கல்வியாற் கிடைக்குங் கண்ணியம் இவ்வளவென்று கண்டுகொண்டு அதையடையப் பாடுபடுவோர் கட்டாயமாகப் பெரும்பதவிகள் அடைவார்கள். கல்வி விரும்பாத நம்மவர்களுக்கு இவ்விதப் பதவிகள் எப்படிக் கிடைக்கும்?

**அமெரிக்காவில் சிற்பங்கற்பவர்.**—வங்காளத்தைச் சேர்ந்த ஹௌராஜில்லா வாசியும் போஸ் வம்சத்தைச் சேர்ந்தவருமான சிரிஷ் சந்திர போஸ் என்பவர் அமெரிக்காவிலுள்ள பாஸ்டன் நகரத்தில் சிற்பசாஸ்திரம் கற்றுவருகிறார். இவர் எம். ஏ. பரீட்சைசெய்தவர். சிற்பசாஸ்திரங் கற்பதற்கு இங்கிலீஷ் கல்வி இக்காலத்தில் அத்தியாவஸ்யம் என்பதைத் தெரிந்து நடந்துகொண்டதினால் இவர் உலகப் பிரசித்தியான சிற்பியாவாரென்று சொல்லிக் கொள்ளப்படுகிறது. சிற்ப வம்ஸத்தினரே கவனியுங்கள்!

**ஒரு ஸ்காலர்ஷிப்.**—K. ராகவ குருப்பு என்பவரை ஜெர்மனியில் கற்றுவருவதற்காகக் கொச்சிக் கவர்ன்மெண்டார் அவருக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்திருக்கிறார்கள்; அதனுடன் இன்னும் 15 பவுண்சேர்த்து மூன்றுமாதகாலம் கொடுக்குமாறு இட்போது உத்திரவு



செய்திருக்கிறார்கள். நமக்குக் கொடுக்கும் உதாரிகளும் நம்முள் பெறும்யோக்கியதை யுடையவர்களுங் காணக் கிடையாராயினர்.

**பண்டித பரிஷத்.**—வருஷந்தோறும் நடக்கும் இதனை அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் கும்பகோணத்தில் நடத்தும்படி மைசூர் மகாராஜாவும், மிஸ்டர் வி. பி. மாதவராவும் வற்புறுத்தியதனால், இஃது இவ்வருஷம் கும்பகோணத்தில் நடைபெறுமென்று தெரிகிறது. இதற்காக மைசூர் மகாராஜா 1000-ரூபாய் கொடுக்க வாக்களித்திருக்கின்றாரென்று தெரிகிறது. நாமும் ஒரு பண்டித பரிஷத் நடத்த வேண்டுமென்ற அபிப்பிராயம் சிலருக்கிருக்கின்றது. ஆனால், பண்டிதர்கள் கிடைப்பதும், பரிஷத் செலவுக்குப் பணங்கிடைப்பதும், நடத்துவதற்கு அதிகாரிகள் கிடைப்பதும் அரிதாயிருக்கிறது.

**ஒரு வைத்தியஸ்காலர்ஷிப்.**—டிஸ்ட்ரிக்டரிஜிஸ்ட்ரராக இருந்து பென்ஷன் பெற்று வரும் மிஸ்டர் T. சந்திரன் என்பவருடைய குமாரத்தி டெல்லியி லிருக்கும் ஸ்திரீகளின் மெடிகல் காலேஜில் போய்ச்சேர்ந்து கற்றுவருவதற்காக, அவருக்கு மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் வீதம் ஸ்காலர்ஷிப்பு கொடுப்பதாகச் சென்னைக் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். மிஸ் சந்திரன், மலையாளக் கரையிலுள்ள இந்தியக் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்தவர். மற்றஜாதிகளிற் பெண்களும் படித்துப் பாஸ்செய்து சிறப்புற்றிருக்கிறார்கள். நமது ஜாதியிலோ ஆண்பிள்ளைகளும் படிப்புவாசனை யறியாமல் பழிப்புக்கிடமா யிருக்கிறார்கள். மற்றவரோடு நம்மை ஒத்திட்டுப் பார்ப்பதெங்கே?

**ஒரு புஸ்தகசாலை நன்கொடை.**—பென்ஷன் பெற்ற டிஸ்டிரிக்டு முனிஸீப்பான மிஸ்டர் ஆர். அண்ணாஸாமி அய்யர் விலை பெற்ற அநேக புஸ்தகங்களடங்கிய தமது புஸ்தகசாலை முழுவதையும் திருச்சிராப்பள்ளி நாஷனல் ஐஸ்கூலுக்கு இனாமாகக் கொடுத்துவிட்டிறந்து போனார். இம்மாதம் 15-ந் தேதி ஹை ஸ்கூலின் மானேஜிங் கமிட்டியார் ஒரு கூட்டங் கூடி, அவருடைய உருவப் படத்தை ஸ்கூல் லைப்ரேரியில் வைக்கவேண்டுமென்று தீர்மானித்தனர். புத்தகசாலையின் பயன் இத்தகையதென்று அறிந்த பிரபுவானபடியாலன்றோ இவர் இவ்வாறு செய்தார்?

**உத்தராதி மடத்து ஸ்வாமிகள்.**— இவர் சென்ற மாதம் சென்னைக்கு விஜயஞ்செய்தபோது அநேகர் இவருக்குப் பிக்ஷை செய்வித்தும் காணிக்கை யளித்தும் மற்றவிதமாகவும் உபசரித்தார்கள். அந்த வைபவத்தின் விசேஷம் மிகச்சிறப்பாயிருந்தது. இவர் சிஷ்யர்களில் பலர் உயர்ந்த உத்தியோகபதவிகள் வாய்ந்தவர்களாயிருந்ததினாலும், ஒவ்வொருவரும் ஒருமாத வருமானத்தைக் காணிக்கை செலுத்தவேண்டுமென்ற ஏற்பாட்டினாலும் பெரும் பொருள் குவிந்தது. சிஷ்யர்கள் மனங்கோணாது காணிக்கை செலுத்தினார்களென்றே சொல்லிக்கொள்ளப்படுகிறது. இந்த ஸ்திதியோடு நமது மடத்துஸ்வாமிகள் நிலைமையை ஒருநிமிஷம் ஒத்திட்டுப் பார்த்தாலும் பரிதாபமுண்டாகாமற் போகாதல்லவா?

**மூலகநாடு சபை.**—1911 - வருஷம் ஏற்படுத்தப்பட்ட இச்சபைக்கு செக்ரிடரி சென்னை பச்சையப்பன் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் மிஸ்டர் V. வெங்கிட சுப்பய்யர். ரெவினியூ போர்ட்டைச்சேர்ந்த மிஸ்டர் M. ராமசந்திரய்யா பிரஸிடெண்ட். 1913-14ம் வருஷத்தில் சபைக்கு வரவு ரூபா 456-2-1. செலவு ரூபா 368-0-7 போக பாக்கி கையிருப்பு ரூபா 88-1-6. மூலகநாட்டுப் பிராம்மண சமூகத்தின் அபிவிர்த்தியை நோக்குவதும் ஏழைகளான மாணாக்கர்களுக்கு உதவிசெய்வதுமே இச்சபையின் நோக்கமாகும். கலாசாலைகளில் படிக்கச் சக்தியில்லாத ஏழைப்பிள்ளைகளுக்கு வித்தியாசகாயத்திற்காக வெகுமதிகள் அளித்து உயர்தரப்படிப்பிற்கு உதவிசெய்தலே இந்த நோக்கத்தைப் பூர்த்திசெய்யும் மார்க்கமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**இந்திரகுலாதிபர் சங்கம்.**—இப் பெயரின் கீழ் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள கள்ளமரபினரால் ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. தஞ்சை ஜில்லாவிலுள்ள ஜமீன்தார்களிலும் பெரிய மிராசுதார்களில் பெரும்பான்மையோர் இம்மரபைச் சேர்ந்தவர்கள். இத்தகைய பெருமை வாய்ந்ததாயினும் இக்குலத்தவர்களில் அநேகர் கல்விக்குறைவால் பின்னடைந்திருக்கின்றார்கள். ஆகையால் கல்விசாலைகளை வேண்டிய அளவு ஸ்தாபித்து இக்குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு இனாமாகக் கல்வி விருத்தி செய்வதே இச்சங்கத்தின் கருத்தாகும். இக்கருத்தை முடிவுபெறச் செய்வதற்கு 5 லக்ஷ ரூபாய் செல்லுமென்றும் இது பெருந்தொகையாயிருப்பினும் வசூலிக்கக்கூடியதென்றுஞ் சொல்லப்படுகிறது.

ஒரு சிறந்த நன்கொடை.—அலஹபாத் பிரமுகர்களுள் ஒருவரான ஸௌத்ரி மஹாதேவ பிரஸாத் என்பவர் தமது சொத்துக்களை யெல்லாம் அந்நகரிலுள்ள காயர்ஸ்த பாடசாலைக்கு எழுதி வைத்திருக்கிறார். அந்தச் சொத்தில் வருஷம் ஒன்றுக்கு நாற்பதினாயிரம் ரூபாய் கிடைக்குமென்று தெரிகின்றது. காயஸ்த ஜாதியார் கல்வியிற் சிறப்படைவதற்காக, அச்சாதியார் அடிக்கடி இவ்வித நன்கொடைகள் அளிக்கிறார்கள். நமது ஜாதியில் இத்தகையர் உண்டோ?

---

## ஆரோக்யபோதம்

**மதுவிலக்கு.**—மதுபானஞ் செய்பவன் நாடோறும் ஆறு சீமை இலந்தைப் பழத்தைச் சாப்பிட்டு வந்தால் குடிப்பழக்கம் நின்று விடுமாம்.

**ஜீரணகாலம்.**—ஆகாரம் வயிற்றில் தங்காமல் வாந்தியெடுப்பவர்களுக்கு வறுத்த அவலைக் கொடுக்கலாம். இதை நன்றாய் மென்று தின்றால் அரைமணி நேரத்தில் ஜீரணமாகிறது. முளைகட்டிய நெல்லை அவலாக்கி வறுத்துத் தின்றால் இன்னுஞ் சீக்கிரமாக ஜீரணமாகிறது. சீக்கிரம் ஜீரணமாகும் வஸ்துக்களில் அரிசிசாதம் முக்கியமானது. இது ஒரேமணி நேரத்தில் ஜீரணமாகும். ஆப்பில்பழம் 1½-மணி நேரத்திலும், பார்லியும் காய்ச்சின பாலும் 2-மணிநேரத்திலும், பச்சைப்பால் 2¼-மணி நேரத்திலும், கோதுமை ரொட்டியும் அவித்த உருளைக்கிழங்கும் 3½-மணி நேரத்திலும் ஜீரணமாகின்றன.

**வேறு தாகரோகச்சிகிச்சை.**—இசுபகோல் விதை விராகனெடை ௨. இதனை அரை ஆழாக்கு ஜலத்திற் போட்டு ௫-மணிநேரம் ஊறவைத்து அதன் கோழையையெடுத்து அதில் தாமரைப்பூ ஷர்பத்தை பிரமாணப்படி கலந்து பானஞ் செய்யவேண்டும். இவ்விதம் சமயத்திற்குத் தகுந்தபடி தினம்-௧-க்கு-௨-அல்லது, ௩-அல்லது ௪-தடவைகள் செய்துவந்தால் கஷ்டமான அதிதாக ரோகம், உஷ்ண சம்பந்தமான ரோகம், பித்தச்சூடு, இரத்தச்சூடு முதலியவைகள் தீரும்.

**வேறு.**—அரசம் பட்டையை எரித்தெடுத்த சாம்பல் பலம்-௨௦. இதனை ஒருபடி ஜலத்திற்போட்டு-௧௦-நிமிஷம் வரையில் கலக்கிக் கொண்டிருந்து ஒரு புதிய மண்பாத்திரத்தில் விட்டு அசையாமல் வைத்தால் சாம்பலெல்லாங் கீழே படிந்து தண்ணீர் தெளிந்துபோயிருக்கும். அந்தத் தெளிவை யிறுத்து தாகமெடுக்கும்போதெல்லாம் பானஞ் செய்துவர, அதிதாக ரோகம், வாந்தி முதலிய ரோகங்கள் தீரும்.

சுகாதாரபோதினி.

## விசேஷ வர்த்தமானம்

**கட்டடப் பழுது**—பல லக்ஷம் பணச்செலவிற் கட்டப்பட்டதாகிய பம்பாயிலுள்ள டாடா இரும்புவேலைச் சாலைக் கட்டடத்தின் ஓர்பாகம் திடீரெனக் கீழே வீழ்ந்து இருவருயிரைச் சாப்பிட்டு அறுவரைக் காயப்படுத்திற்று. இஞ்சினீர்களாற் கட்டப்பட்ட புது மாளிகைகளின் கதியிது. சிற்பிகளாற் கட்டப்பட்ட கோபுரங்கள் கோயில்கள் முதலியன அநேகாயிர வருஷங்களாகக் காற்றுக்கும் மழையிடிகளுக்கு மஞ்சாது நேற்று கட்டினாற்போல் விளங்குகின்றனவே! அவர்கள் திறமையை யென்னென்பது?

*
* *

**கோலார் பொன் வயல்கள்.**—இவை மைசூர் ராஜ்யத்திற்சூட்பட்டவை. இவற்றில் வருஷவாரி கிடைக்கும் பொன் மதிப்பு மூன்றுகோடி ரூபாய். இதனால் மைசூர் கவர்ன்மெண்டாருக்கு வருமானம் 13 லக்ஷ ரூபாய்.

*
* *

**இங்கிலாந்திற் கற்குமிந்தியர்.**—சென்ற வருஷத்தில் இங்கிலாந்தில் கல்வி கற்ற இந்தியமாணவர்களின் தொகை வருமாறு: விஞ்ஞான சாஸ்திரங்களுங் கைத்தொழிலும் மான்செஸ்டரில் கற்றோர் 40 பேர்; வைத்தியம் எடின்பரோவில் கற்றோர் 227 பேர்; இஞ்சினீரிங் கிளாஸ்கோவில் கற்றோர் 57 பேர்; பாரிஸ்டராக லண்டனில் வாசித்தோர் 720 பேர். இவர்களல்லாமல் அரசாங்கத்தாருடைய உபகாரச் சம்பளம் பெற்று வாசித்தோருஞ் சிலருண்டு. கல்விப்பயிற்சியில் கவனமேயிலார்க்கு இவ்வர்த்தமானம் என்ன வுணர்ச்சியுண்டாக்கப்போகிறது!

*
* *

**படிக்கத்தெரிந்த நாய்.**—ஜர்மனி தேசத்தில் படிக்கவும் எழுதவும் எழுத்துக் கூட்டவுந் தெரிந்த நாயொன்றிருக்கிறதாம். நாய்களும் இக்காலத்துப் படிக்கத் தலைப்பட்டிருக்கின்றனவாயின், படிக்கத் தெரியாத மனிதப்பிராணிகளைப்பற்றி யென்ன சொல்லலாம்?

*
* *

**அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாம்.**—சுரவியாதிகொண்ட பதினாறுவயதுப் பெண்ணொருத்தி



30 கிரெய்ன் கொய்னைவை 15 நிமிஷத்தில் தின்றதால், 2 மணி நேரத்தில் அவளுக்குத் தலைபிடியும் காதிரைச்சலும் பிரமாதமா யுண்டாயின. மறுநாள் பொழுது விடிவதற்குள் காதுகளிரண்டுஞ் செவிடாயின. பிரபல வைத்தியர்களெல்லாம் இந்தச் செவிடை மாற்றமுடியாது கைவிட்டனர். எதற்கும் ஓரளவிருக்கிறது; அந்த அளவுப்படி உபயோகிக்கத் தெரிந்தவர்களெவரோ அவரன்றி மற்றெவரும் அந்தந்த வஸ்துவைக் கையாளக்கூடாது.

* *

**வேலையில்லாரை விரும்பாருளரோ?**—வேலைதெரியாத வீணனை எவரும் விரும்பமாட்டார்கள். வேலைக்காரனுக்கோ வெகு சிறப்பு செய்யப்படும். வேலையில் விற்பத்தியுள்ளவர்கள் எவரேயானாலும் என்றுகொள்ளப்படுவார்களென்பதற்கு இன்னுமொரு திருஷ்டாந்த மேற்பட்டிருக்கிறது. ஆசியா கண்டத்தார்க்கு மற்ற கண்டங்களில் மதிப்பும் பதவியுங் கிடைப்பது மகா துல்லபமெனத் தெரிந்திருக்கிறதல்லவா? இப்போது, அமெரிக்காதேசத்துக் கப்பற் கம்பனியாரொருவர், தமது கப்பல்களிரண்டில் வேலைசெய்யச் சீனர்களையே நியமித்திருக்கிறார்கள். இதனால், கம்பனிச்செலவு குறைவதுடன் வேலையுந் திறமாய் நடப்பதாகத் தெரிகிறது. இந்த பதவி சீனர்களுக்குக் கிடைக்கச்செய்தது அவர்களுடைய வேலை சாதுரியமேயன்றி வேறில்லை. ஆதலால், வாசாமாத்திரத்தாலன்றி வாஸ்தவமாகவே நல்ல திறமையுள்ள வேலையாளிகள் சிறப்புஞ் செல்வமுமடைதல் சித்தாந்தமே!

*
* *

**வாரச் சந்தைகள் நிறுத்தம்.**—தாலுக்காக்களிலும் கிராமங்களிலும் வாரச்சந்தைகள் கூடுவதை நிறுத்தச் சென்னைக் கவர்ன்மெண்டார் டிஸ்டிரிக்ட் போர்ட்களுக்கு அதிகாரங் கொடுத்திருக்கின்றனர்.

**இரண்டு கன்றீன்ற பசு.**—நடுக்காவல் கிராமம் போதமலை தாண்டாவில் ஒரு லம்பாடியின் பசு ஒரே தடவையில் இரண்டு கன்றுகளை யீன்றது. ஒரு கன்று இறந்து போய்விட்டது; மற்றொரு கன்றும் பசுவும் சௌக்கியமாயிருக்கின்றன.

*
* *

**கடன் கொடுப்போருக்குச் சட்டம்.**—கல்கத்தாவிலுள்ள சமூக நிலையாராய்ச்சி சங்கத்தில் வாண்டி மார்க்கல் என்ற பாதிரியார் இந்தியாவில் கடன்கொடுப்போரைக்குறித்து ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று யோசனைசொல்லுகிறார். அளவுக்குமிஞ்சி வட்டிவாங்கும் பணக்காரர்களால் உண்டாகும் தீமைகள் இதனால் ஒருவாறு நீங்கும்.

*
* *

**கொசுக்கள்.**—கொசுக்களில் நானூறு பிரிவுகளுண்டு. பெண் கொசுக்களே மனிதரைக் கடிப்பனவாம்; ஆண் கொசுக்கள் சாகபட்சணிகளாய் புல் பூண்டுகளிலுள்ள ரஸத்தைச் சாப்பிடுவதாலே அவை திருப்தியடையுமாம். பெண் கொசுக்கள் இரத்தத்தை உறிஞ்சிய பின்னரே முட்டையிடுமாம்.

*
* *

**ஒரு புலிப் பிள்ளை.**—திருச்சினப்பள்ளியைச் சேர்ந்த உறையூரில் புலியின் வடிவத்துடன் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. அதற்கு 32 பற்களும் கை கால்களில் புலியினுடைய நகங்களும் இருக்கின்றனவாம். உடம்பெங்கும் புலியுடம்புபோன்று வரி வரியாயிருக்கிறதாம். ஆனால் குழந்தை அமைதியுள்ளதாக இருக்கின்றதென்று சொல்லப்படுகிறது.

*
* *

**மதுபான விலக்கு.**—அமெரிக்கா ஐக்கிய நாடுகளுள் ஒன்றாகிய கன்ஸாஸ் தேசத்தில் மதுபானம் பெரிதும் விலக்கப்பட்டிருக்கிறது அந்தத் தேசத்தில் குடியிருக்கும் ஜனங்கள் மிகவதிகம்; ஆயினும் மரணம் மிகக்குறைவு; சிறைச்சாலைகள் (குற்றவாளிகளே யில்லாமையின்) காலியாகக்கிடக்கின்றன. யாசகர்களின் தொகை மிகக்குறைவு. எல்லாரும் முயற்சியுள்ளவர்களாம். இவ்வளவு சுகமும் குடியில்லாமையினாலேயே நேரிட்டிருக்கிறது.

*
* *

**முப்பத்திரண்டு ஸகோதரர்கள்.**—இங்கிலாந்தில் சிலாகாலத்திற்கு முன் காலஞ்சென்ற மிஸிஸ் ஜான் ஸ்மித் என்னும் 84 வயதுள்ள ஸ்திரீக்கு 32 ஸகோதரர்களுண்டாம். இவளுடைய பிதா லெப்டனண்டு ஜேம்ஸ் ரோப்பர் என்பவர்; அவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். முதல் மனைவிக்கு 16 பிள்ளைகளும், இரண்டாவது மனைவிக்கு 16 பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தனராம். அந்தப் பெண்தான் மிஸிஸ் ஜான் ஸ்மித் என்பவளாம்.

## கதாமஞ்சரி

### 2. தமேதவதர்மம்

ஒரு ஊரில் ஒரு குடித்தனக்காரன் சர்க்கார் உத்தியோகஸ்தன் ஒருவனிடம் வியவகாரார்த்தமாக சென்றான். உத்தியோகஸ்தன் அநீதியாய் அவனது உரிமையையும் உடைமையையும் அபகரித்துக்கொண்டு அவனைச் சந்தியில் விட்டுவிட்டான். ஏழைக்குடியானவன் என்ன செய்வான்! அவனுக்குக் கோர்ட்டுக்கும் கச்சேரிக்குமாக அலைந்துகொண்டிருக்க அவகாசமில்லை. அவனுழைத்தால்தான் பூமி விளையும். அவனுழைக்காமல் கோர்ட்டும் கச்சேரியுமாக நின்று, அநியாயம் செய்த உத்தியோகஸ்தன் அக்கிரமத்தை யடக்கவேண்டுமென்று முயற்சித்துக்கொண்டிருந்தால், தானும் தன் குடித்தனமும் அழிவதோடு பூமியும் விளைவு குன்றிப்போம். ஆகையால் அந்தக் குடியானவன் தர்மநீதியறிந்த மந்திரியிடம் போய் முறையிட்டான். அந்த மந்திரி நடந்ததை விசாரித்து ஏழைக் குடியென்று உத்தியோகஸ்தன் அவனை ஏமாற்றிவிட்டதாக அறிந்துகொண்டு, அதை யவனிடம் சொன்னால் அவன் மனங்குன்றி சோர்ந்து போவானென்றெண்ணி, சட்டப்படி அவனைக் கண்டனை தண்டனை செய்வதற்கு வேண்டியவாயக்கு அவனிடமில்லை யென்பதை யுணர்ந்து, அவனுக்கு மனந்தேற ஒரு சிறிய உபாக்கியானம் செய்தார். குடியானவன் குறைபிரந்து "சாமி! இது தர்மமா? அடுக்குமா?" என்று கேட்டு நிற்க, பின் வருமாறு அவனுக்குப் பதில் சொன்னார்.—

"அப்பா நீ தர்ம விசாரம் செய்கிறவனாயிருக்கிறாயே, எனக்கு நேர்ந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன் கேள். நான் இன்று காலையில் உலாவச் சென்றேன். காலை வேளையில் எல்லாம் கண்ணுக்கு ரமணீயமாயிருந்தது. வசந்தகாலமாதலால் மரஞ்செடிகளும் புஷ்பித்து பிரசந்நமாய் விளங்கின. எல்லாவற்றையுங் கண்டு மனங்களித்துச் சந்தோஷப் பட்டுக்கொண் டிருக்கையில், தலைக்குமேல் ஆகாசத்தில் திடீரென்று "கீச்சு" "கீச்சு" என்று ஒரு சத்தம் கேட்டது. அதைக்கேட்டு உடனே தலை நிமிர்ந்து பார்த்தேன். ஒரு காக்காய் தன் மூக்கில் ஒரு சிறிய அணிற்குஞ்சைக் கௌவிக்கொண்டு போனதைக் கண்டேன். எனக்கானால் மனம் பொறுக்கவில்லை. வயிறு குபீரென்று பத்திக்கொண்டது. நான் என்ன செய்கிறதென்று யோசிக்குமுன் காக்காய் கண்ணுக்குத்தெரியாமல் பறந்தோடிவிட்டது. இது தர்மமா? என்று சிந்தித்தேன். சிந்தையிலே சிந்திக்கச் சிந்தையோய்ந்து உட்கார்ந்தேன். 'துஷ்டருக்குச் சிஷ்டரை வதைப்பதுதான் தர்மம்' என்று அசரீரி வாக்கொன்று பிறந்தது. துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்வது எங்கே? யென்று அந்த அசரீரியைக் கேட்டேன்.—'தர்மம் நசித்து அதர்மம் தலையெடுக்கும் பொழுதெல்லாம் நான் அவதாரமாகி தர்மத்தை நிலைநிறுத்துகிறேன்' என்று பகவான் கொடுத்த அபய வாக்கு வீண்போமா?' என்று மறுபடியும் அசரீரிவாக்குப்பிறந்தது. பகவான் எங்கே? யென்றேன். "எங்கே!" யென்னும் சத்தம் பிறந்தவிடத்திலேயே இருக்கிறார்-என்று மறுபடியும் அசரீரிவாக்குப் பிறந்தது. கண்விழித்துப் பார்த்தேன். வழியோடு போன ஒரு பரதேசி "எளியாரை வலியாரடித்தால், வலியாரைத் தெய்வமடிக்கும்" என்று சொல்லிக்கொண்டே போனார். 'ஆ! அப்படியா!' வென்று அதிசயப் பட்டுக்கொண்டு போனேன். அரைமைல் தூரம் போகுமுன் ஒரு தோப்பில் காக்காய் பிடிக்கிற குறவன் அநேக காக்கைகளைப் பிடித்துக் கொன்று அவைகளை யெல்லாம் தின்னும்படி தன் குடும்பையில் போட்டுத் தூக்கிக்கொண்டு போனான். ஆகாசத்தில் ஆயிரம் காக்கைகள் கத்திக் கதறிக்கொண்டு பரிதாபமாய்ப் பறந்தன.

"எளியாரை வலியாரடித்தால் வலியாரைத் தெய்வமடிக்கு" மென்பது ஸத்தியந்தான் என்று நம்பி வீடு வந்து சேர்ந்தேன். "கெடுவான் கேடு நினைப்பான்" என்றிருப்பதாலே "தமேதவ தர்மம்" என்று மந்திரி குடியானவனுக்குச் சொன்னார்.

குடியானவனும் அவர் சொன்னதைக்கேட்டு கர்மத்தை வெல்ல யாரால் முடியும்! விதை விதைத்தவன் விளைந்தபின் அறுக்கிறான். நாம் செய்த பாபம் நம்மை இந்த அக்கிரமஸ்தன் கையில் அகப்பட்டுக்கொள்ளச் செய்தது! என்று சொல்லிவிட்டு, சந்தோஷ முகத்தோடு தன் பயிர்த்தொழில் வேலை செய்யப்போனான். குடியானவன் கழனியில் உழைத்த உழைப்பில் தன் கஷ்ட நஷ்டங்களை மறந்து ஆநந்த நித்திரை யனுபவித்தான். அக்கிரமம் செய்த உத்தியோகஸ்தனோ 'எங்கே நம் குட்டு வெளியாய் விடுமோ!' என்று ஏங்கி, பொய்மேல் பொய்யாகப் பொய்க்கோட்டை கட்டிக்கொண்டு தூக்கமின்றிப் புரண்டுருண்டுகொண்டு கிடந்து, விடியற்காலையில் மூளை அயர்ந்துபோய் மலைப்பாம்புபோல் பிரஜ்ஞையற்றுக்கிடந்தான்.

தூக்கத்தின் சுகத்தை யவனறிந்தவனல்ல. "தமேதவ தர்மம்" என்பது உண்மையல்லவா?

**விவேகசிந்தாமணி.**

உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

[library stamp] MADRAS


# விஸ்வகர்மன்

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் I] 1914ஞு ஜூன்மீ [சஞ்சிகை 9


## ஒளிவளர் விளக்கு

1914ஞு மேமாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களின் எண்ணிக்கை 438.

*
* *

உபாகர்மகாலத்தில் உபநயனஞ் செய்வது தவறென்று காட்டி, உபநயன காலவிதிகளை விளக்கி, ஜோஸ்யர் ஸ்ரீ A. முத்து ஆச்சாரியாரவர்களெழுதியனுப்பிய அரியவியாச மொன்று இச்சஞ்சிகையிற் பிரசுரிக்கப்பட் டிருக்கிறது.

*
* *

"நமது நாட்டாண்மைக் காரர்கள்" என்னும் மகுடத்துடன் வேலூர் ஸ்ரீ முத்துசாமி ஆச்சாரியாரவர்களா லெழுதப்பட்ட வியாசத்திற் கண்டிருக்குங் கருத்துகளைப் பற்றிய குலாபிமானிகளுடைய அபிப்பிராயங்கள் வேண்டப்படுகின்றன. நமக்கு விஷயதானஞ்செய்துவரும் புண்ணியர்களும் மற்ற வாசகர்களும் அன்போடு முன் வரப் பிரார்த்திக்கின்றோம்.

*
* *

இராமேஸ்வரத்தில் பழுதுபட்டு நிற்கும் நம்மவர்கள் மடாலயத்தை ஜீர்ணோத்தாரணஞ் செய்யவேண்டிய அவஸியங்காட்டி, நண்பர் ஸ்ரீ V. வைத்தியநாதசுவாமி ஜோதிஷ ரெழுதியுள்ள கடிதம் நம்மவர்களுடைய கவனத்திற்குரியதாயிருக்கிறதென்பதை யெடுத்துக்காட்ட விரும்புகிறோம். இக்கடிதம் "நமது வாசகர்கள்" என்னுந் தலைப்பின்கீழ்ப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

*
* *

குடந்தையில் கான்பரன்ஸ் நடத்தும் விஷயமாகப் பலர் விசாரித்து வருகின்றார்கள். தஞ்சை ஜில்லாக்காரர், குடந்தைவாசிகளிவர்களுடைய பிரயத்தினங்களைப்பற்றி இப்போது திட்டமாயொன்றுஞ் சொல்லக்கூடவில்லை. விபரங்கள் கிடைத்தவுடனே வெளியிடப்படும். ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியார் அவர்கள், கான்பரன்ஸ் நடத்துவிப்பதில் ஊக்கங்காட்டி யுழைத்துவருவதறிந்து மிகவுஞ் சந்தோஷமுறுகிறோம்.

*
* *

குலாபிமானச் செல்வராகிய ஸ்ரீ T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியாரவர்களுடைய முயற்சிகாரணமாக, கரூருக்கடுத்த கோயம்பள்ளி வாசிகளாகிய விஸ்வகர்மர்களிடமிருந்து ஆச்சாரிப்பட்ட சம்பந்தமான தொரு தந்தி யனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தியசக்கரவர்த்தியார், இந்திய வைஸிராய் இவர்களுடைய ஜனன நாட்

கொண்டாட்டத்தை யநுசரித்து வாழ்த்துந் தந்திகள் நமது சபையாரால் அனுப்பப்பட்டன. இவை யெல்லாம் மறுமுறை பிரசுரிக்கப்படும்.

*
* *

நமது சபைத்தலைவரும், அங்கத்தினரு ளொருவரான அரக்கோணம் ஸ்ரீ தி. குருசாமி ஆச்சாரியாரவர்களும, தங்கள் தென்னிந்திய யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பிவந்துவிட்டனர். இவர்கள் சுயநலங்கருதாது சொந்தப் பொருள் விரயஞ்செய்து குலநன்மைக்காகவும், சபையபி னபிவிருத்திக்காகவும், விஸ்வகர்மன் பத்திரிகையின் வளர்ச்சிக்காகவும் செய்த அநுகூலங்களுக்காக இவர்களுக்கு வந்தனஞ்செலுத்த வேண்டியவர்களா யிருக்கிறோம். சுயநலங்கருதியும், பிறர்பொருள் கொண்டும் வாழுவோர் எவ்வளவு பாடுபடுவதுஞ் சகசம். இவர்களைப் போல் சுயநல மறுத்துழைப்பவர்களைக் காண்பதரிதல்லவா? இவர்களுடைய யாத்திராவிபர முழுவதும் பின்னர் வெளியிட உத்தேசித்திருக்கிறோம்.

* *

"விஸ்வகர்மச்சிறுவர் வித்யாநிதி" (Visvakarma Boys Education fund) என்பதொன்றின் அவஸ்யத்தைப்பற்றிப் பலகால் இப்பக்கங்களிலெழுதியிருக்கிறோமல்லவா? இத்தகைய நிதியொன்றை ஸ்தாபிப்பதின் அவசரம் நாளுக்கு நாள் அதிகமாய்க்கொண்டு வருகின்றது. வித்தியார்த்திகள் பலர் பொருட்சகாயம் வேண்டிச் சபையாரை யணுகலாயினர். இவர்களுக்கு சபையார் இயன்றவாறு துணை செய்துவருகின்றனர். ஆயினும், பொருட்குறைவு மிகவும் பாதித்து நிற்கிறது. எனவே, தனித்தொரு வித்தியாநிதி சீக்கிரமே ஸ்தாபிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. குலஜன வித்தியாபிவிருத்தியில் கருத்து வைத்திருப்போரெல்லாம் இதற்குச் சகாயஞ் செய்வார்களென்று வேண்டிக் கொள்ளுகிறோம். இந்நிதியின் விபரங்கள் பிறகறிவிக்கப்படும்.

*
* *

நாளது 1914-ஹு டிசம்பர்மீ கடைசியில் நாஷனல் இந்தியன் காங்கிரஸ் சென்னையில் கூடும்போது அதைத்தழுவி ஓர் மகத்தாகிய பொருட்காக்ஷி வழக்கப்படி நடத்தப்படும். அப்பொருட்காக்ஷியில் விஸ்வகர்மகுலஜனத்தொழில்களைத் தனியாய்ப் பிரதர்ஸனஞ் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. நமது ஐந்து தொழில்களின் திறமையும் அங்கு நன்கு காட்டப்படவேண்டும். அதற்காக, நம்முள் தேர்ச்சிபெற்ற வேலைக்காரர் களெல்லோரிடமிருந்தும் காக்ஷிக்குரியனவாகிய வஸ்துக்களைச் சேகரித்து வருகின்றோம். இந்தியாவில் நடத்தப்படும் பொருட்காக்ஷிகளி லெல்லாம் இதுவே சிறந்ததாதலாலும், இது சென்னையில் நடத்தப்படுவது பலவருஷங்களுக்கொருமுறை வாய்க்குஞ் சம்பவமாதலாலும், தொழில்விற்பன்னர்கள் இதனாலடையக்கூடிய கீர்த்தியையும் பரிசுகளையும் கைவிடக்கூடாது. எனவே, அத்தகையோர் இப்போது முதலே தக்க சாமான்களைச் செய்யத் தலைப்படுவார்களென்று எதிர்பார்க்கிறோம். தென்னிந்தியாவிலுள்ள விஸ்வகர்மர்களாற் செய்யப்படுவனவெல்லாம் நமது சபையாரால் சேகரிக்கப்பட்டு ஷை காக்ஷியில் பிரத்தியேகமானதோரிடத்தில் வைக்கப்படும். கிடைக்கும் பரிசுகள் அந்தந்த வஸ்துக்களைச் செய்தவர்களுக்கே கொடுக்கப்படும். வஸ்துப் பிரதர்ஸனஞ் செய்வதிலுண்டாகுங் கஷ்டமுழுவதும் சபையாரேலேயே ஏற்றுக்கொள்ளப்படும். வேறு விபரங்கள் அறிய விரும்புவோர் நமது சபைக் காரியதரிசியார்க் கெழுதித் தெரிந்து கொள்ளலாம். கஜாதிப் பிரமுகர்களாயிருப்பவர்கள் ஒவ்வோரூரிலும் தாமறிந்துள்ள தொழில் விற்பன்னர்களுக்கு இவ்விசேஷத்தை யறிவித்து, விஸ்வகர்மத் தொழில்களானவை ஷை காக்ஷியில் நன்கு பிரகாசிக்கச் செய்வதில் வேண்டிய உதவி புரிவார்களென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

*
* *

தெய்வகாரியம், குருகாரியம், குலகாரியம் முதலிய தர்மகாரியங்களைக் கிரமப்படி நடைபெறுவித்தலில் சிரத்தைகொண்டு, ஸ்ரீமது வீமூர் வேங்கடாசார்ய குரு சுவாமிகள் தமது சிஷர்களுடைய சபை யொன்றை பவானியிற் சேர்த்து, குல அதிகார ஸ்தானங்களைப் புதிதாய்ச் சிலருக்களித்து, பல சீர்திருத்தங்கள்செய்து வருவதறிந்து சந்தோஷிக்கிறோம். இவ்வித முயற்சிகளை மற்ற மடாதிபதிகளும் மேற்கொள்ளுதல் நன்று.

*
* *

நமது சபையின் ஒருதவி காரியதரிசியாகச் சிலகாலமிருந்தகன்ற கொளத்தூர் ஸ்ரீகன்னியப்ப ஆச்சாரியாரவர்கள் தமது சுயகாரிய சாதகார்த்தமாக நமது சபைப் பெயரை யுபயோகித்து வருவதறிந்து மிகவும் விசனிக்கிறோம். நமது விஸ்வகர்ம குலோத்தாரண சபைப் பெயரைக் கையாளும் பாத்தியதையை இவரிழந்து விட்டதை ஷை யார் ஒரு வருஷத்திற்குமுன் வெளியிட்ட விளம்பரங்களே நிரூபிக்கின்றன. தாமே முன் தெரிவித்துள்ளதற்கு முரண்பட இப்போது விளம்பரமிட்டுவருவது சமுசயத்திற் கிடந்தருமென்பதை இவர் காணாததென்னே? பொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதைதன் சொல்லாலே தன்னை யிடர்ப்படுக்கு மென்பதை யறியாது.

---

தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நரகத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.



## வைதிகக் கல்வி.

கல்வியபிவிருத்தி விஷயமாக நமது குலத்தினர் தற்போது காட்டிவரும் ஊக்கம் மிக்க உற்சாகத்தை விளைவிப்பதாயிருக்கிறது. 'சபையாரின் பாரம்' என்ற மகுடமிட்டு, சென்ற எப்ரல்மீ பத்திரிகைக்கு, ஜோஸ்யர்-ஸ்ரீமுத்தாச்சாரியாரவர்களெழுதிய வியாசத்தை நமது வாசகர்கள் நன்கு கவனித்திருப்பார்களென்றே நம்பியிருக்கிறோம். வித்தியாவஸ்ய சம்பந்தமாக ஜோஸ்யரவர்கள் தெரிவித்திருக்கும் அபிப்பிராயங்கள் பல மிகசிலாகிக்கத்தக்கனவா யிருக்கின்றனவென்பதை வற்புறுத்த விரும்புகிறோம்.

கல்வி யென்பது மானிடரெல்லோர்க்கும் இன்றியமையாததென்பது பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னமேயே துணியப்பட்ட விஷயமாகும். ஆதலால், நம்மவர்கள் கல்வியபிவிருத்தி யடையவேண்டு மென்பதை அறிவாளி யெவனும் தடுத்துப் பேசமாட்டான். ஆண்பாலராயினும் பெண்பாலராயினும் இளமைமுதற் கற்றுவரவேண்டும். எழுதவும், படிக்கவும், கணக்குப்போடவும் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கவேண்டு மாதலால், அதற்கான அளவாகிலும் கட்டாயமாக ஸ்திரீ புருஷர்கள் படிக்கவேண்டும். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும். கண்ணுடையரென்போர் கற்றறிந்தோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர் அல்லவா?

அனைவருக்கும் வேண்டியது ஆரம்பக்கல்வி யென்பது தேற்றமாயிற்று. இதை இளமைப் பருவத்திலேயே அடையும் பாக்கியம் பெறாதவரெல்லாம், தமக்கு வயதேறிவிட்டதே யென்ற பயங்கொள்ளாமல் இனி மேலாகிலுங் காலதாமதஞ் செய்யாது, எழுதவும் படிக்கவும் கணக்குப்போடவும் கற்றுக்கொள்ளவேண்டும். இது கஷ்டமான காரியமல்ல. சிரத்தைவைத்துழைத்தால் சீக்கிரமே முடியக்கூடியது. எழுதத்தெரியாதவனமுறுதலும், படிக்கத்தெரியாது பாழாகிநிற்றலும், கணக்குதெரியாது கண்ணியங்கெடுதலும், அம்மம்ம, எவ்வளவு வெட்கம்! எத்துணைத்துக்கம்!! கையெழுத்திட அறியானிலும் கண்மூடி அதிகமெனலாம்.

இவ் வின்றியமையாக்கல்வி வாய்ந்த பிறகு அதற்கு மேலாகிய கல்வியில் ஆவல் கொள்ளவேண்டும். இஃதெக்கல்வி யென்னுங்கேள்வி இப்போது பிறக்கிறது

வைதிகக்கல்வியா-லௌகிகக்கல்வியா ? இரண்டிலெது நமது கவனத்திற் குரியதாகிறதென்பதை யாலோசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இக்கேள்விக்குப்பதில், பண்டித சிரேஷ்டரும், காலதேசவர்த்தமானப் போக்கை நன்கறிந்தவரும், முற்றிய குலாபிமானியுமாகிய நமது நண்பர் ஸ்ரீ A. முத்து ஆச்சாரியாரவர்களால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் வியாசத்தில் அதைக்காணலாம்.

வைதிகக் கல்வி யென்பது மேற்கூறப்பட்ட ஆரம்பக் கல்வியேபோல் பிராம்மணகுலத்தினராகிய நமக்கு அத்யாவஸ்யமாயிருக்கிறதென்பதை நமது நண்பர்கள் கவனித்துப்பார்க்க விரும்புகிறோம். ஆனால், நமக்கு குடும்பாநுசரணையாகவே இது படிந்துவிடுகிறது. நித்ய கர்மாநுஷ்டான விதியாதியவை இல்லத்தே சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. உபநயனமானதும் சந்தியாவந்தனாதி மந்திரங்களுங் கிரியைகளும் தெரிந்துகொள்ளப்படுகின்றன. மேல், பிரமச்சரிய கிருகஸ்தாதி நிலைகளைப் பொருத்தவை யாவும் குடும்பஒழுங்கிலேயே அறியப்பட்டு அநுஷ்டானத்திற்கு வந்துவிடுகின்றன. ஆதலினால், அத்தியாவஸ்யமான வைதிகக்கல்வி குடும்ப வாழ்க்கையிலேயே கற்றுக்கொள்ளப்படுகின்றது. அதற்காகப் பாடசாலைகள் வேண்டியதில்லை.

வைதிகநெறி தப்பியும், வேதப் பிரதிபாதகமான கர்மங்களைக் காலக்கிரமத்தில் அநுஷ்டிக்காமல் அசட்டை செய்துமிருக்குங் குடும்பங்களில் ஷை வைதீகக்கல்வி படிவதற் கிடமில்லாதிருத்தல் சகசமே. அவ்வித குடும்பத்தார் தமது குடும்பவாழ்க்கையைத் திருத்தி, வைதிக நியமங்களைத் தழுவி நடத்தலினால் அவர்களுக்கு வைதிகக்கல்வி படியுமேயொழிய, அதற்காகப் பாடசாலைகளை யேற்படுத்திக் கற்பதினால் யாதொரு நன்மையுமுண்டாகவேமாட்டாது. ஏனென்றால், குடும்பக் கடன்களை யொட்டி யேற்பட்டதாகும் வைதீகக்கல்வி. அதற்குக் கல்விச்சாலை குடும்பநிலயமேயாகும்; பாடம் நித்யானுஷ்டானமேயன்றி மற்றில்லை; உபாத்தியாயர்கள் குடும்பாதிகாரிகளேயாவர். அவ்வதிகாரிகள் உபாத்திமைத் தொழிலை யேற்றுக் குடும்பச்சிறுவரை நடத்தாவிட்டால், அச்சிறுவர்க்கு வேறு உபாத்தியாயர்களால் ஒரு பயனும் விளையாது. அவர்கள் அவைதிகரேயாய் விளங்கியொழிவர்.

மேற்குறித்ததற்கு வைதிகக் கல்வி அதிகமாகிய எவ்வளவுதூரம் நம்மவர்களுக்குத் தேவையிருக்குமென்பதைப் பரியாலோசிப்போம். "பிராம்மண" ருள் வைதிகவிருத்தி யென்பதொன்றிருக்கிறதென்பதை யாவருமறிவோம். 'வைதிக விருத்தி' யென்னும் தொழிலைக் கைக்கொண்டு வாழுவோர் வேதமோதல், ஓதுவித்தல், யாகாதிகர்மங்களை நடத்துதல், பிக்ஷைவாங்கலாதியவற்றைக் கைப்பற்றியிருத்தல் கண்டுவருகிறோம். இவ்விதத் தொழிலைக் கொண்டுவாழும் ஆருஷேயருடைய தொகை நிமிஷத்திற்கு நிமிஷம் சுருங்கிக்கொண்டே வருகிறதென்பது கரதலாமலகம்போற் காணக் கிடக்கிறது.

இஃதிப்படியிருக்க, நம்முள் எத்தனை பேரை இவ் வைதிக விருத்தியிற் புகுத்தலாம்? மிகச் சிலரைத் தான் புகுத்த முடியும். அப்படிப்பட்டவர்கள் பௌரோகிதங்கற்று ஜீவிக்கக் கூடியவரும், வேதாதிசாஸ்திர பாடஞ் சொல்லி வயிறுவளர்க்கக் கூடியவர்களும், வைதிககர்மங்களியற்றிப் பிழைக்கக் கூடியவருமான இனையரேயாவர். இவர்களுக்காக பாடசாலை யமைக்க வேண்டியதும் அவஸ்யமே யானாலும், அது நமது ராஜதானி முழுவதிற்கும் ஒன்றிருந்தாலும் போதுமென்று தோன்றுகிறது. நம்முள் வைதிகவிருத்தி கொள்ளக் கூடியவரினும் பன்மடங் கதிகமானபேர்கள் ஆருஷேயருளிருந்து வருகின்றார்களேனும், அவர்களுக்காக நமதிராஜதானி முழுவதிலு மேற்பட்டிருக்கும் பாடசாலைகள் மிகச்சிலவேயா யிருக்கின்றன. ஆதலால், விஸ்வகர்ம ஜனசமூகத்தின் தற்காலஸ்திதியில் ஒரே வைதிக பாடசாலை போதுமானதென்று நிச்சயிக்கவேண்டியதாயிருக்கிறது. இஃதாரம்பமாய் நடைபெறுதற்கும் போதிய அவஸ்யம் இன்னும் ஏற்படவில்லையென்பதே பலவிவேகிகளுடைய அபிப்பிராய மென்பதை நன்கறிந்திருக்கிறோம்.

இனி, "வேதாத்தியயன பாடசாலை" யென்னும் பெயர்தாங்கிய பாடசாலைகள் சில சமீபகாலத்தில் தோன்றலாயின. இவற்றால் ஜாதி யீடேற்றத்திற்கு என்ன அநுகூலம் விளைகிறதென்பது எமக்கு விளங்கவேயில்லை. இவையெல்லாம் 'பெரும்பாலும்' சந்தியாவந்தனாதிக்கிரியைகளையும் மந்திரங்களையுங் கற்றுக்கொடுத்தற் கெழுந்தவையென்றே தோன்றக் கிடக்கின்றன. அக்கிரியைகளின் போதனா முறையைப்



பற்றி மேலே தெளிவாய் விஸ்தரித்திருக்கிறோம். தன் மகனுக்கு யுக்தவயது வந்தவுடன் அவனுக்கு உபநயனாதி சடங்குகள் நடத்துவிக்கும் வைதிகநெறித் தந்தையெவனும் தன்மைந்தனை இப்பாடசாலைகளுக் கனுப்பமாட்டான். ஏனென்றால், அம்மகன் கற்றுக்கொள்ளக் கூடியது அங்கொன்றுமில்லை. அங்ஙனமிலாரோ, தம் மக்கள் சந்தியாவந்தனாதிக் கிரியைகளை முறைப்படி செய்துவாழத் தமது குடும்பத்தே சௌகரியங்கள் தாராது, அவர்கள் பாடசாலையிற் கற்றுவருவதை ஏளனமேசெய்து இடுக்கண் விளைவிப்பர். இது யாம் கண்கூடாக்கண்ட உண்மை. ஏனென்றால், அவர்கள் அதினருமையும் அவஸ்யமு மறிந்திருப்பரேல், அச்சத்தோடு சாஸ்திரவிதிப்படி செய்யவேண்டிய கர்மங்களையெல்லாம் தம்மக்கட்குக் காலக்கிரமத்தில் தமது கிருகத்தின் கண்ணே செய்துவருவாரன்றோ? இதனால் என்ன ஏற்படுகிறது?—வைதிகவாழ்க்கையுடைய குடும்பத்தார் மேற்கூறிய 'வேதாத்தியயன பாடசாலை'களுக்குத் தம்மக்களை யனுப்பவேண்டிய அவஸ்யம் ஏற்படாதென்பதும், அவ்வவஸ்யம் ஏற்படுபவராகிய மற்றையோர் தம்மக்களை அங்கனுப்பியும் தம்மில்லறவாழ்க்கைமுறையால் தம்மக்கள் அப்பாடசாலையாற் பயன்பெறவொட்டாது தம்மையறியாமலும் அறிந்தும் அவலமாக்குவரென்பதுமேயன்றி மற்றுண்டோ? மதியுடையீர், மறுமொழியுரைமின் !

இவ் "வேதாத்தியயனபாடசாலை" களில் பெரும்பாலும் பாஷை கற்பிக்கப்படுவதில்லை. இப்பாடசாலை வித்தியார்த்திகளாய்ச் சேருவோர் பலர் அக்ஷரஞானமில்லாதவர்களாகவே யிருக்கின்றனர். இவர்களுக்கு முக்கியமாய் வேண்டியது பாஷா பயிற்சியேயாயினும், அதைப்போதிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதில்லை. பாடசாலையின் பட்டப்பெயரால் குறிக்கப்படுவது வேறொன்றாதலின், பாஷாபோதனைக்கு ஸ்தானம் அஃதல்லவென்று அதிகாரிகள் அசட்டை செய்கின்றனர்போலும்! வித்தியார்த்திகளும் தெரிந்தெடுத்துச் சேர்க்கப்படுவதில்லை. சேர்தற்குரியாருடைய லக்ஷணங்களும் யோக்கியதையும் இன்னதென்ற நிர்ணயமுங்கிடையாது. இங்ஙனம் எத்திறத்தருஞ் சேர்க்கப்பட்டு போதனை பெற்று "வேதாத்தியயனம்" செய்யும் விதமோ வேடிக்கையாகவும், அறிந்தாருடைய ஏளனத்திற்கிடமாகவு மிருக்கிறதே யொழிய வேறில்லை. அக்ஷரஞானமில்லாத அறியார் "அத்தியயனம்" வேறெவ்வித மிருக்கும்? சப்தஹீனமும் ஸ்வரஹீனமுமாகிய "அத்தியயன"த் தினால்வருவது பழியும் பாவமுமேயன்றி மற்றேது? எனவே, இவ் "வேதாத்தியயன பாடசாலை"ப் பிரவர்த்தகர்களெல்லாம் குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்பவரே யாகின்றனர்.

இவ்விதமே யாயினும் இப்பாடசாலைகள் நீடித்து நடைபெறுகின்றனவோ வென்று ஆராய்ந்து பார்த்தால் அதுவுங்காணோம். எத்தனையோ பாடசாலைகள் அங்கங்கு ஸ்தாபிக்கப் பட்டனவேனும் இந்நாள் நிச்சயமாய் நடைபெற்றிருப்பவை ஓரிரண்டேனு முளவோ வென்பதுஞ் சந்தேகமாயிருக்கிறது. குணலக்ஷணயோக்கியதா நிர்ப்பந்த மேதுமின்றி எல்லாச் சிறுவர்களும் ஏற்றுக்கொள்ளப்படுவரென்றாலும், சேர்ந்துவாசிக்க விரும்புவோரைக் காண்பது கஷ்டமாயிருக்கிறது. தந்தையர் தம்மக்களை இப்பாடசாலைக் கனுப்ப விரும்புகிறார்களில்லை. ஆதலால், இப்பாடசாலை மாணவர்களின் சங்கியை மிகக் குறைவாயிருக்கிறது. இக்குறைவான பேர்களாகிலும் பாடசாலைப் போதனையைச் சம்பூரணமாய் ஏற்கின்றார்களாவென்று விசாரித்தால் அதுவுமில்லையென்று தெரிகிறது. முற்றிலுமிருந்துசென்றவர்களும் தாம்ஷை பாடசாலையிற்கற்றவற்றால் பயன்பெற்றுவாழக் காண்கிலோம். ஆதலினால், குலாவேசங்காரணமாக ஆரம்பிக்கப்பட்ட "வேதாத்தியயன" பாடசாலைகள் சிலவாரங்களிலோ, சிலமாதங்களிலோ, சிலவருஷங்களிலோ மாய்ந்தொழிதல் ஆச்சரியமல்ல. அவற்றின் ஆயுளானது அவற்றையாக்கினோருடைய குலாவேசத்தையும் பிடிவாதத்தையும் பொருத்திருக்கிறதேயொழிய, ஜாதியாருடைய அபிமானத்தையொட்டியிருக்கவில்லை. "வேதாத்தியயன பாடசாலை" களின் அனவஸ்யத்தை நிரூபிப்பதற்கு வேறு சாக்ஷியமும் வேண்டுமோ ?

மற்று, இவற்றில் வாசிக்க விழைவோருடைய தொகை குறைவாயிருப்பதுபோல் குலஜனதாவுங் குறைவாகவேயிருக்கிறது. எந்த ஸ்தானத்தில் பாடசாலையமைக்கப்பட்டிருக்கிறதோ அதையடுத்துக் குடியிருப்போர்மட்டுமே இவற்றில் வாசிக்கமுடிகிறது. வித்தியார்த்திகள் சிறுவரேயா யிருக்கிறபடியால் அவர்கள் நெடுந்தூரஞ் செல்லுதல் கஷ்டமல்லவா? ஆதலால், ஒரு பேட்டையில் ஒரு வீதியில் ஒரு "வேதாத்திய

"யன பாடசாலை" ஸ்தாபிக்கப்பட் டிருக்குமானால், அவ்வீதியிலும் அடுத்த இரண்டு மூன்று வீதிகளிலுமுள்ள சிறுவர்களுக்கன்றி, அப்பேட்டையிலுள்ள மற்ற வீதிச்சிறுவர்களுக்கு அப்பாடசாலை அருகமாயிருப்பதில்லை. அப்பேட்டையின் கதியே யிதுவாயின், அடுத்த கிராமங்கள் ஊர்களைப்பற்றியும் தூரதேசங்களைப்பற்றியும் சொல்லவேண்டுமோ? மாணவர் குறைவு இப்படியேற்படுகிறது. இக்காரணத்தினாலேயே பொருளாதாரவு குறைவுபடுகிறது. பாடசாலைக்குச் சமீபத்திலிருப்போர்தவிர மற்றவர்கள் பொருளுதவிசெய்ய முன்வருவதில்லை. ஓரூர்ப் பாடசாலைக்கு வேறூரார் பணங் கொடுக்கமாட்டோமென்கிறார்கள். வேறூர்ப் பாடசாலைகளுக்குக்கொடுக்கும் பணத்தைக்கொண்டு, தங்கள் தங்களூர்களி லிவ்வித பாடசாலைகளை ஸ்தாபித்துத் தமது சிறுவர்க்குபயோகப்படும்படி நடத்திக்கொள்வோமென்றாரம்பிக்கிறார்கள். ஆரம்பித்து நடத்தும்போது அதின் அனாவஸ்யத்தைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டு கைசோர விட்டுவருகிறார்கள். நமது "வேதாத்தியயன பாடசாலை"களின் சரித்திர மிருந்தவாறென்னே! அந்தோ! நமது குலப்பிரமுகஸ்தானம் வகிக்க விரும்புவோர் கல்லைக்குத்திக் கைநோவடையப்பெறுபவராயிருக்கின்றனரே!!

உள்ளூராருக்கு உபயோகப்படவேண்டு மென்னுங் கொள்கையோடு ஸ்தாபிக்கப்படுபவை யாதலால், இவை வெளியூரார்க்கு இசைந்தனவாயில்லை. மாணவர்களோ வேறுவிருத்தியுள்ளவர்களா யிருக்கிறார்கள். அவ்விருத்தி பழுதுறாவண்ணம் அவர்கள் "வேதாத்தியயனம்" செய்யவேண்டியதா யிருக்கிறது. இதற்காக அதிகாலையிலும் பொழுதுபோன பின்னரும் "வேதாத்தியயன பாடசாலை" திறந்து வைக்கப்படுகிறது. இவ்விருவேளைகளிலும் மாணவர்கள் தவறாது பாடங்கற்க நேரிடுகிறதில்லை. அவரவர்களுடைய தொழிலெஜமானர்களுடைய நிர்ப்பந்தங்களுக்கேற்ப இராப்பாடந் தவறுதலும், தேக அசதி குடும்பகாரியங்களாதியவற்றால் காலைப்பாடங்கள் கழிந்து போதலுஞ் சகசமாகவே யிருக்கிறது. இவ்வேளைகள் வெளியூர்மாணவனுக்குப்போதுமா? போதா. உபாத்தியாயரோ மேற்குறித்த வேளைகளில் பாடஞ்சொல்லத்தான் சம்பளம் பேசி யமர்த்தப்பட்டிருக்கிறார். அவ்வேளைகள் தவிர்ந்த மற்றவற்றில் அவருக்கு வேறுஜோலிகளிருக்கின்றன. அந்த ஜோலிகளை மாற்றி நாள்முழுவதுமே பாடசாலையிலிருக்கும்படி உபாத்தியாயரை யமைப்பதாயின், பகலில் "வேதாத்தியயனம்" கற்றுக்கொள்ள எத்தனை பேர் கிடைப்பர்? வைதிக விருத்தியே கைப்பற்ற வேண்டுபவரல்லாமல் மற்றையர் அங்ஙனங் கற்றுக் கொள்ள விரும்பமாட்டார்கள். அன்னோர் தொகையோ மிகக் கொஞ்சமாயிருக்கிறது. அவ்விருப்ப முடையார் தற்காலத்தில் தமக்குச் சமீபமாய் வாழும் சாஸ்திரிகளையாவது பௌரோகிதர்களையாவது அண்டி அவரிடம் பாடம்கேட்டுத் தேர்ச்சியடைவதால், அவர்களுக்கெனப் பாடசாலை இப்போது வேண்டப்படவில்லை. பௌரோகித விருத்தியைக் கைக்கொள்ள விழைவோர் அத்தொழிலாளரைப் பின்பற்றி நிற்றலாலடையுங் கல்வியும் பழக்கமும் இவ் "வேதாத்தியயன பாடசாலை"களில் பெறுவது துல்லபமாயிருக்கிறது.

இத்தனை விவரங்களையும் யாமெடுத்துக்காட்ட நேரிட்டது என்பற்றி யென்றால், நமது சபையார் ஓர் "வேதாத்தியயன பாடசாலை"யை என் நடத்தக் கூடாது என்ற கேள்வி சமீபகாலத்தில் சிலராற் கேட்கப்பட்டு வருவதினாலேயன்றி மற்றில்லை. "வேதாத்தியயன பாடசாலை"களின் சரித்திரத்தை யாம் ஆராய்ச்சி செய்தமட்டில், அவை அனாவஸ்யமானவை யென்றும், அவற்றால் நற்பயனென்றும் விளைவதில்லையென்றும், அவற்றில் விநியோகிக்கப்படும்பொருள் விரயமே யென்றும் அபிப்பிராயப்பட நேர்ந்தபடியால், பல ஊராரிடமிருந்து பெறும் பணத்தைக்கொண்டு ஓரூர் மூலையிலொரு சிலர்க்காக அவ்வித பாடசாலை ஸ்தாபித்து நடத்தல் பிழையாகுமென் றஞ்சி யிருக்கலாயிற்று. நமது ராஜதானியிலுள்ள சுஜாதி முழுவதிற்கும் பயன்தரக் கூடிய பௌரோகித பாடசாலை யொன்றை அவஸ்யங் கண்டு ஆரம்பித்து, குலஜனாதரவை யொட்டி, அதை யொரு சமஸ்கிருதக் காலேஜாக்குவதற்கான யோசனைகள் சபையாரால் செய்யப்பட்டு வருகின்றனவென்பது சபையின் ரிபோர்ட் வாசித்த நண்பர் தெரிந்துகொண்டிருப்பர். இவ்விஷயத்தில் குலப்பிரமுகர்களெல்லோருடைய அபிப்பிராயம் பெற்று நடக்கவேண்டுமென்பது சபையார் கருத்தாயிருக்கிறபடியால், ஒவ்வொருவரும் தம்மபிப்பிராயத்தை வெளியிடுவார்களென்று வேண்டிக்கொள்ளப்படுகிறது.

---



# பொருளியல் நூல் உண்மை விளக்கம்

## 3. லேவோசியர் கண்ட உண்மை

**சித்தூர் ஸ்ரீ சுப்பிரமணியாச்சாரியார் பி.எ., எல் டி.**

'இல்லதுவாராது உள்ளது போகாது' என்னும் உண்மையை எடுத்தலளவையான் நிரூபித்தவர் லெவோசியர் என்னும் புண்ணிய புருடர். ஒரு பாரம் எடைகொண்ட நீரில் ஒரு துலாமெடை கொண்ட உப்பைக்கரைத்தால் அவ்வுப்பு கட்புலனுக்கும் நாப்புலனுக்கும் அறியக்கூடாமல் இருப்பதைக் காணலாம்; எனினும், இவ்வுப்புநீரை எடைபோட ஒருபாரமு மொருதுலாமுமாதலைத் துலாக்கோலால் துணியலாம். பனிக்கட்டி ஓரிராத்தல் வாங்கி அனலிலிட நீராகும்; அந்நீரை எடைபோட அஃதும் ஓரிராத்தலே ஆவதைக் காணலாம். அந்நீரைக்காய்ச்ச நீராவியாகும். அந்நீராவியைத் தகும்விதம் எடைபோட அஃதும் ஓரிராத்தலே உண்மையை நோக்கலாம். பின்னும், ஒரு மெழுக்குவர்த்தி எரிந்தபின் ஒன்றும்மிகாமையைப் பார்க்கிறோம். எனினும், மிகப்பெரிய ஒரு கண்ணாடிப் புட்டியின் உட்புறத்தில் மிகச்சிறிய ஒரு மெழுக்குவர்த்தியை இட்டுப் புட்டியின்வாய்ப்புறத்தை நெட்டியால் மூடி எடைபோட்டுக்கொண்டு, பின்நெட்டியை வாங்கி ஒரு நீளக்கம்பியின் முனையிற்கட்டிய நெருப்புக்குச்சியால் வர்த்தியை ஏற்றி உடனே நெட்டியால் புட்டியை மூடிவிட மெழுக்குவர்த்தி முழுவதும் எரிந்தவியும்; அவிந்தபின் புட்டியை மறுபடி எடைபோட முன்னிடைக்குச் சமானமாவதைக் காண்போம். இவை முதலாகிய காரணங்களால் இல்லதாகிய பதார்த்தம் சிருஷ்டிக்கப்படமாட்டா தென்பதும் உள்ளதாகிய பதார்த்தம் நாசமுறாதென்பதும் பெற்றாம்.

இவ்வுண்மையைச் சிந்தாந்த வேதாந்த நூலாரும் ஆய்ந்தறிந்து குணம் வேறுபாடடைதலே யன்றிக் குணி வேறுபாடடைதலின்றெனத் துணிந்துள்ளார். உறங்கிவிழிப்பினும் உடல் ஒன்றேயாதற்போல பிறப்பிறப்புக்களுக்கும் ஆன்மா ஒன்றே யாவதை ஊகித்துள்ளார். இப்பெற்றிய ஆன்ம உணர்வினையும் பயக்கும் இவ்வுண்மைபோன்ற பிற உண்மைகளையும் அறியக் கருவியாவதெது? கல்வியே. இத்தகைய கல்விச் செல்வத்தால் நம்மவர் சிறப்பெய்துவது என்ஞான்றோ? அதுவரை அச்செல்வமுடைய பிறசாதியார் நம்மவரை விலங்கெனவிலக்கல் ஒருதலையன்றோ? என்னை?

'விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்'

எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் கூறிப் போந்தாராதலின்.

## உபநயன காலவிதி

**ஸ்ரீ ஜோஸ்யர்-அ. முத்து ஆச்சாரியார்**

உபநயன மென்ற கர்மமானது உபாகர்மகாலத்தில் செய்யத்தக்கதல்லவென்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. நம்மவர்களில் சிலர் உபாகர்மகாலத்தில் உபநயனத்தையும் செய்து வைத்தோமெனப் பத்திரிகைகளிலும் வாசாங்ஞானமாகவும் கூறுகின்றனர். இந்தப்படி செய்துவைக்கும் உபநயனமானது விதாயக சாஸ்திரங்களுக்கு முற்றிலும் பிசகாகவே காணப்படுகிறது.

உபநயனமானது பிர்மக்ஷத்திரிய வைசியரென்ற மூன்றுவருணத்தவர்களுக்கு மேற்பட்டிருக்கிறதினால் இவர்கள் சுருதியாலும், ஸ்மிருதியாலும் சொல்லப்படுகின்ற கர்மங்களுக் கதிகாரியாகின்றார்கள். அன்றியும்,

மாதுரக்ரேதிஜநநம் த்விதீயம்மௌஞ்சிபந்தனே
த்ருதீயம்யக்ஞ தீக்ஷாயாம் த்விஜஸ்யவிதிசோதிதம் ॥

என்றுமநுவும்

மாதுர்யதக்ரேஜாயநதே த்விதீயம்மௌஞ்சிபந்தநாத் ॥

என்று யாக்ஞவல்கியரும் கூறியிருக்கின்றார்கள். முதலில் தாய் வயிற்றினின்றும் பிறந்து பிறகு உபநயனத்தினின்றும் பிறக்கின்றானதலால் இரண்டாவது துவிஜரெனப் பெயர்பெறுவரென்றும் மூன்றாவது யக்ஞகர்மங்களைச் செய்வது விதியெனவும் கூறப்பட்டிருக்கின்றது. மேலும் இரண்டாவது பிறப்பான உபநயனத்தில் சாவித்திரியானவள் மாதாவென்றும், காயத்திரி யுபதேசம் செய்வித்த பிதாவே ஆசாரியனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பிராம்மணனுக்கு கர்ப்பமுதல் எட்டாவது வயதிலும், க்ஷத்திரியனுக்கு பதினொன்றாவது வயதிலும், வைசியனுக்கு பன்னிரண்டாவது வயதிலும், உபநயனம் செய்யவேண்டும். அதாவது இவர்களுக்கு காயத்திரியே சந்தஸ் கிரமமாக பாதமாகவும் அக்ஷரமாகவும் ஏற்பட்டு காயத்திரி, திருஷ்டுப், ஜகதியென பிராம்மணனுக்கு எட்டு அக்ஷரங்களையுடைய காயத்திரியினாலும், க்ஷத்திரியனுக்கு பதினொன்று அக்ஷரங்களையுடைய திரு

ஷ்டுபுவினுலும், வைசியனுக்கு பன்னிரண்டு அக்ஷரங் களையுடைய ஜகதியென்கிற சந்தஸ்வினுலும், உபதே சிக்கவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. வயசுக்கிர மங்களும் இதேபிரகாரம் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தப்பிரகாரம் உபநயனம் செய்து அது முதல் பிர்மசரிய விருதத்தை யனுஷ்டிக்க வேண்டியதற்கா கவே உபநயனகாலமானது உத்தராயணத்தில் வேண்டு மென்பதாக சொல்லப்படுகிறது.

### ஸ்மிருதௌ.

மாகாதிபஞ்சமாஸெஷுமௌஞ்சிபந்தம்ஸுபீஸ்யதே॥

மாகமுதலான ஐந்துமாஸங்களில் அதாவது தைஅமா வாசை கழிந்த மறுநாள் முதல் ஐந்துமாதங்களில் உப நயனம் செய்வது நன்று.

### தர்மஸுதாநிதி.

மாகாதி ஸுக்ராந்தக பஞ்சமாஸா ஸ்ஸாதாரணம்॥
வாஸகலம்த்விஜாநாம்:॥

மாகமுதலான ஐந்து மாஸங்கள் துவிஜர்களுக்குப் பொதுவாக உபநயனத்துக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

### விருத்தவஸிஷ்ட:

பிராம்மண க்ஷத்திரியஸ்யாபி
மௌஞ்சிஸ்யாதுத்தராயனே॥

பிராம்மணனுக்கும் க்ஷத்திரியனுக்கும் உத்திராயணத் தில் உபநயனம் செய்யவேண்டும்.

### சந்திரிகாயாம்

வ்ரதஸ்ய பந்தேயதிவாகிலாநாம்
மாகாதய:பஞ்சபவந்திமாஸா:॥

தைமாச அமாவாசை முதல் ஆனிமாஸ அமாவாசை வரையிலுள்ள மாகாதி ஐந்து மாசங்களில் பிராம்மணுதி மூன்று வருணத்தார்களுக்கும் உபநயனம் செய்யலாம்.

### காலப்பிரகாசிகாயாம்

உத்தராயணகேசூர்யேப்ரபீஸ்தம்ஹ்யுபநாயநம்
தக்ஷிணுயநகே சூர்யேவர்ஜயேத் மௌஞ்சிபந்தனம்॥

உபநயன கர்மத்தை உத்திராயணத்தில் சூரியனிருக் கும்பொழுது செய்யவேண்டும். தக்ஷிணுயனத்தில் சூரிய னிருக்கும்பொழுது உபநயன கர்மத்தைச் செய்யக் கூடாது.

### காலாமிருதே

மாஸாமாகமுகாஸ்து பஞ்ச ஸாதாரணு:॥

மாக முதலான ஐந்து மாஸங்களில் உபநயனம் செய் யலாம்.

உபநயன கர்மமானது துவிஜத்வத்தையடையச் செய் விக்கிறதென்றும் இதனுல் சகலமான நித்திய நைமித் திக கர்மங்களுக் கதிகாரியாகின்ருனென்றும் சுருதி ஸ்மிருதி ஜோதிஷ முதலான கிரந்தங்களில் சொன் னதுமல்லாமல் உத்திராயணத்திலேதான் உபநய னத்தை செய்விக்க வேண்டுமென வற்புறுத்திக் கூறப் பட்டுமிருக்கின்றது.

யஜுசாகை ஆபஸ்தம்ப சூத்திரப்பிரகாரம் உத்தரா யணத்தில் உபநயனம் செய்வதற்கு தலைநாளில் நாந்தி யும் உபநயனமான தினமுதல் சமிதாதானமும் நாலாம் நாள் தெண்டிநீர் முதலானதுகளும் கழிந்து மேகலை அஜிநம் தண்டமுதலியவைகளைத் தரித்து விருதம். பிக்ஷை, குரு சிஸ்ருக்ஷை, தீக்ஷை முதலியவைகளை வகித்து மேல்வருகிற உபாகர்மகாலத்தன்று வபனம் பண்ணி ஸ்நானம்செய்து நூதன யக்ஞோபவீத முத லியவைகளைத் தரித்து சமிதாதானம் செய்து அவரவர் குண்டங்களில் முகாந்தம் ஆரம்பித்து அத்தியயனம் ஆரம்பிக்கவேண்டுமென்றும், சிராவண கிருஷ்ணபிர தமையில் காயத்திரிஜபம் செய்யவேண்டுமென்றும் இதுவே இவனுக்கு பிரதமோபாகரணமென்ற பெய ராகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

உபாகர்மம் தக்ஷிணுயனமான சிராவணமாஸத்து சிரவணம், பௌர்ணமை, பஞ்சமி, அஸ்தநக்ஷத்திர முதலானதுகளில் ருக்காதிவேதிகளுக்கு உபாகர்மகால மென்றும், அவைகளில் சாகாதிபனுக்கோ குருசுக்கிரா ளுக்கோ மௌட்டியங்களுண்டாயிருந்தாலும், மலமாச முதலான ஷட்தோஷங்கள், சங்கிரமண முதலிய தோஷங்களுண்டாயிருந்தாலும், அவைகளை நீக்கி ஆடி மாஸம், ஆவணிமாஸம், புரட்டாசிமாஸங்களில் ஸம்வத் ஸர பிராயச்சித்தமாக உபாகர்மம் செய்யவேண்டுமென் றும் விசேஷித்து பிரதமோபாகரணம் செய்யப்பட்ட பிரம்மசாரிகளுக்கு முன்சொன்ன தோஷங்களை முக்கி யமாக கவனிக்கவேண்டியதென்றும் விதித்திருக்கிறது,

இந்தப்பிரகாரம் ஸ்மிருதிகளிலும் ஜோதிஷ சாஸ் திரங்களிலும் உத்தராயணகாலத்தில் உ



## கூடிவாழ்தல்

தன்னூர்-ஸ்ரீ T. தங்கவேல் ஆச்சாரியார்.

நாம் நமது பிராமணீக ஆசார அனுஷ்டானக் குறை வைப்பற்றியும் நாகரீகக் குறைவைப்பற்றியும் செல்வக் குறைவைப்பற்றியும், குல ஈடேற்றதில் கவனமில்லாக் குறைவைப்பற்றியும் பேசப்புகின் "நமக்குள் ஒற்றுமை யில்லை" "நமக்குள் ஒற்றுமையில்லை" என்றே நம்மவர் கள் நாவசைப்பதைக் கண்டிருக்கின்ருேம். நமக்குள் என் ஒற்றுமையில்லை, நமக்கும் ஒற்றுமைக்கும் என் அவ்வளவு தூரம் என்று கவனிக்கவேண்டியதவசியம்.

I. நம்மில் அநேகர் கூடிவாழாதிருப்பதற்குக் கார ணம், நம் குலச்சிறுவர்கள் வேலை கற்றுக்கொண்டு வரும்போதே அவர்களுக்கு எவ்விதத்திலும் ஏழைச் சம்பளம் ஏற்படுத்திவிடுகிருர்கள். இதனுலேயே அவர் கள் தங்கள் தாய்தந்தையர்களை மதிப்பதற்கில்லாமல் போய்விடுகின்றனர். இதுமாத்திரமா? ஒரு கூடத்தில் நாலுபேர் வேலை பார்த்துவருவதைக் கண்ணுற்ற ஒரு வர் 10 தினம் கழித்து அதே கூடத்திற்குச் சென்று நோக்கினுல் அந்த நால்வரில் ஒருவர் வேறு பட்டறை யில் போய் வேலைபார்ப்பதாய்க் கேள்விப் படுகின் றனர். இவ்விதம் நாம் ஒரேகூடத்தில் கூடிவாழ்த லில்லாததினுல் நம்தொழிலில் நாம் தேர்ச்சியடைந்து கண்ணியத்தைப் பெறுவதற்கில்லாமல் போய்விடு கின்றனம்.

---

வேண்டுமென்று கூறியிருக்கும்போது உபாகர்ம கால மான தக்ஷிணுயனத்தில் உபநயனம் செய்விப்பதும் செய்வித்தோமெனச் சொல்வதும் சாஸ்திரவிருத்த மாயும், பிறர் மதிக்கத்தகாததாகவுமிருக்கின்றது.

ஆதலால், நம்குல ஏழையான பாலியர்களுக்குஸ் குரு தானங்களினுலும், சபைகளினுலும், காருண்ணிய முடைய கனதனவான்களாலும் செய்துவைக்கப்படும் உபநயன கர்மத்தை பிதா ஜ்யேஷ்டப்பிராதாமுதலிய வர்களைக் கர்த்தாவாக வைத்துக்கொண்டு உத்தராயண காலத்தில் அவரவர்களுக்குப் பொருந்தினதான ஸு முகூர்த்தத்தில் செய்துவைக்க வேண்டுமென்றும், உபா கர்மத்தின் கூட உபநயனம் செய்துவைத்தோ மென பப்ளிக்படுத்தக் கூடாதென்றும் இதனுல் ஞாபகப் படுத்தி யிருக்கின்றேன்

---



தொழிற்றுறைகளில் தேர்ச்சிபெற விரும்புவோமா யின் நாம் அனைவரும் ஒத்திருத்தல் வேண்டும். ஒரு திருஷ்டாந்தம் பாருங்கள்; 3 கயிறுகளிருக்கின்றன, மூன்றையும் ஒன்று சேர்த்துத் திரித்து அதன் ஓர் நுனியை வாசல் வாரைவட்டையில் கட்டிவிட்டு எவ் வளவு பலத்தோடாயினும் இழுத்துப் பார்த்தால் அது அறுபடாது. "முக்கூட்டு சிக்கருது" என்றபழமொழி இதனுல் உண்மைதானென்று விளங்குகின்றது. அக் கயிறுகளைப்பிரித்துத் தனித்தனி கட்டி ஒருவர் சற்று இழுக்கையிலேயே அது அறுந்துவிடும். இப்படியே நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வரவேண்டும் என்ற நீதி இதனுல் நமக்குப் பூரணமாய் விளங்குகின்றது. "ஒருமைப்பாடு இல்லாக்குடி ஒருமிக்கக்கெடும்" என்ற பழமொழியும் கேட்டீர்களில்லையோ! ஒன்று சேர்ந்து வாழ்வதிலிருக் கின்ற நன்மை மற்றெதிலுமில்லை.

II. இன்னெரு உதாரணம் சொல்லுகின்றேன். அதையும் நண்பர்கள் கவனிக்கவும். சாதாரணமாய் நாம் கடைத்தெருக்களில் மாங்காய் வாங்கச்சென்ருல், கடைக் காரன் 100-க்கு 8 அணு வென்றும், சில்லரையில் வாங் கினுல் அணு ஒன்றுக்கு 10 காய்கள் என்றுஞ் சொல் லுகிருன். மொத்தமாய் 8 அணுவுக்கு வாங்கினுல் 100 காய்கள் கிடைக்கின்றன. ஒவ்வொரு அணுவுக்காக 8 அணுவுக்குவாங்கினுல் 80 காய்கள்தான் கிடைக்கின் றன. சேர்த்து வாங்குவதால் 20 காய்கள் அதிகமாய்க் கிடைக்கின்றன. பலர் ஒன்றுகூடின் பொருள் கூடும், பொருள் கூடின் பலம் கூடும், பலம்கூடின் கூடாத காரியம் கைகூடும். ஒருகாரியஞ் செய்யத் தொடங்குங் காலம்கெட்டதாயினும் நல்லதாயினும், வழிசுகமாயினும் வருத்தமாயினும், சுளுவானவேலை செய்தாலும், பளு வானவேலை செய்யினும் நாம் ஒற்றுமையா யிருக்கவே ண்டும். எக்காரியமும் முதலில் வருத்தமாய்த் தோன் றும். அதைக் கைப்பற்றி அதில் நமக்குப் பிரீதி உண் டாய்விட்டால் நாமதை விர்த்திசெய்ய முயலுவோம்.

III. அன்னத்தில் ஒருரோமம் விழின் அந்த இடதுகாத்தால் எடுத்தெரிந்து பெருக்கித்தள்ளிவிடு கின்றதை நாம் கண்டிருக்கின்ருேம். ரோமங்கள் நிறைந் துள்ள தலையில் (முடியில்) ஒரு அன்னம் (சோறு) விழுந்தால் அன்னத்தைத்தான் எடுத்தெரிகின்ருேம்.

அன்னத்திற்கும் ரோமத்திற்கும் எவ்வளவோ வித்தியாச மிருந்தும், இந்தப்பிரகாரம் நேருவதற்கு ஒற்றுமைதான் காரணம் என்பது நமது வாசகர்களுக்கு விளங்காததன்று.

IV. ஒரு குருடனும் முடவனும் எங்கும் போக முடியாமல் பசியால் வருந்துகையில், ஒருவன் நீங்கள் ஒத்துவாழவேண்டும்என்றதால், குருடன் முடவனைத் தூக்கிச் சென்றான்; முடவன் கண் குருடனுக்கு வழி காட்டிற்று. இவ்விதமாய் இவர்கள் நடந்து சென்று யாசகஞ்செய்து இனிதாய் வாழ்ந்திருந்தார்கள். கூடி வாழ்தலானது கண் காலில்லாத குருடன் முடவனுக்குமே அதிக உபயோகமா யிருக்கையில் கண் காலிருக்கின்றவர்களுக்கு உபயோகப்படக் கேட்பானேன்?

V. பஞ்சபாண்டவர்கள் பலதுயரங்களைப் பட்டு மீண்டார்கள். எதனால்? ஒற்றுமையை விரதமாய்ப் பூண்டதால்! அவர்களைப்போல் நாமும் ஒற்றுமையா யிருந்து, துரியோதனாதிகள் போல் காலத்தைத் தீய வழியிற் செலுத்தாமல் நல்வழியில் செலுத்தினால், அன்னவர்கட்கு எவ்விதம் ஸ்ரீ கிருஷ்ணபகவான் உதவி புரிந்தாரோ அதேவிதமாய் சாக்ஷாத் விஸ்வேசுவரரும் நமக்கு உதவிபுரிவார். பலாப்பழத்தில் ஈமொய்ப்பது போல் இன்பம் இருந்தால்தான் ஒற்றுமை யுண்டாகும். ஆகையால் இன்பத்தைப்பற்றி சற்றுகூறுவாம்.

இன்பத்திற்குக் காரணமாயுள்ளது அறிவு. கல்வியாகிய கருந்தனத்தைக் கைக்கொள்ள வேண்டுமென எண்ணமுண்டாவதற்கு, அவ்வருமையான கல்வியறிவு பெற்று அதைமுற்றுமுழுவதும் தனதாக்கிக்கொண்டால் விளையும் இன்பத்தைவிட வலிவான தூண்டுகோல் வேறுளதோ சற்று கவனித்துப் பாருங்கள்! மலரிலுண்டாகும் மதுவையுண்டு களிப்படையும் வண்டுகளைப் போல், கல்வி யறிவினாலாகும் இன்பத்தைப் கற்பவரே யன்றி மற்றோர் உணர்ந்து களிப்படையவல்லரோ?

அறிவினால் வரும் ஆனந்தமே ஆனந்தம் ஆ! ஆ! சிலர் அறியாமையை ஆனந்தமென்கிறார்களே, அதென்ன பேதமைப் பிதற்றோ, அது மிருகஜென்மத்துக்குரிய ஆனந்தமேயன்றி மானிடஜன்மத்திற் குரியதன்று. மேன்மேலும் ஞானம் சம்பாதிப்பதிலேயே புத்தியைச் செலுத்தியிருப்பவர்கட்கு அனுபவிக்கப் பேரின்பம் களஞ்சியமாய்க்கிடக்கின்றது. ஒரே தேசத்தாருடைய கல்விச்செல்வமாத்திரமல்ல, இப்பூலோகத்துச் சகல தேசத்தாருடைய கல்விச்செல்வமும் பேரானந்தமுண்டாக்கும் பொருட்டு அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாகின்றது. தற்காலத்துக் கல்வி கேள்விகளைப்போலவே முற்காலத்து கல்வி கேள்விகளும் கிடைக்கத்தக்கவையாம். நமது "விஸ்வகர்மன்" பத்திரிகைமூலமாய் நாம் பல விஷயங்களை யறிந்துவருகிறோம். அவற்றுள் "மற்றவர்மாக்ஷி" முக்கியமானதொன்று.

ஓர் ஊரில் இரண்டு வீட்டுக்காரர்கள் ஒரேயிடத்தில் (கம்பெனி அல்லது ஓர்க்ஷாப்) ஒரே சம்பளத்தில் வேலைசெய்வதாய் வைத்துக்கொள்ளுவோம். அவ்விருவரில் ஒருவன் தான் சம்பாதிக்கும் திரவியத்தில் கொஞ்சம் எவ்வழியாலோ சேர்த்து ஓர் வீடும், வயலும், விலைக்கு வாங்குகின்றான். அவன்தான் விலைக்கு வாங்கின வீட்டில் குடிபுகுந்து தனது வயலில் அறுவடையான நெல்லைக் கொண்டுவருவதை எதிர்வீட்டுக்காரன் கண்ணுற்றபிறகுதான் இவனும் செலவைக் குறைத்து ஓர்சீட்டில் சேர்ந்து வயலும் வீடும் வாங்க உத்தேசிக்கின்றான். எவ்விதம், எதிர்வீட்டுக்காரன் வீடும் வயலும் வாங்கினதைப் பார்த்தபிறகு பணம் சேர்க்கவழியும் வயல்வீடுவாங்க எண்ணமும் கொண்டானோ, அதைப் போல் "மற்றவர் மாக்ஷி" என்ற தலைப்பின்கீழ் வருபவைகளை வாசித்து பிறஜாதியார் வரவர உன்னதபதவியை அடைகின்றதுகண்டு நாமும் உன்னதபதவியடைவதற்கான குலோத்தாரணம், கூடிவாழ்தல், கல்வி விர்த்தி முதலான விஷயங்களில் ஈடுபட்டுழைக்க மனம்நாடுவோம். எதிர்வீட்டுக்காரன் வீடும் வயலும் வாங்கி இனிதாய் வாழ்ந்ததுபோல் "விஸ்வகர்மன்" பத்திரிகையைப்பெற்று வாசித்து நமது குறைகளைத் தெரிந்து அவற்றை அகற்றி, இன்புற்று வாழவேண்டி மிக்க புத்தியைத் தக்க விதமாய்ப் புகட்டும் "விஸ்வகர்மன்" பத்திரிகைக்குப் புதுசந்தாதாரர்களைச் சேர்ப்போமாகவும்.

---

கற்பன ஆழற்றார் கல்விக் கழகத்தி
லொற்கமின் றாத்தைவா யங்காத்தல்—மற்றுத்தம்
வல்லுரு அஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு அஞ்சுவ போல்.



## சிற்பிகள்கை அற்புதங்கள்

### 3. புராரி விஷ்ணு பாதம்

டெல்லி நகருக்குச் சமீபத்தில், புராரி என்ற ஒரு கிராமம் யமுனா நதிக்கரையி லிருக்கிறது. அக்கிராமத்திற்குத் தெற்கிலுள்ள ஒரு குன்றின்மேல் 32 அங்குலம் நீளமும் 10 அங்குலம் அகலமுமான கல் விஷ்ணு பாதமொன்று மஹா மஹோபாத்யாய பண்டித் பங்கிராய் நவால்கோஸ்வாமி என்பவரால் பூமியின் கீழ் தற்செயலாய் கண்டெடுக்கப்பட்டது. அந்த விஷ்ணு பாதம் கயாவிலுள்ள விஷ்ணு பாதத்தைப் போலிருக்கிறது. அந்த விஷ்ணு பாதத்தின்மேல் ஒரு உயர்ந்த இரும்புஸ்தம்பம் நாட்டப்பட்டிருந்தது. அந்த இரும்புஸ்தம்பம் பிறகு டெல்லிக்கருகில் குடுப் என்ற இடத்தில் கொண்டுவந்து நாட்டப்பட்டது. அந்த இரும்புஸ்தம்பம் கிறிஸ்து பிறந்த நாலாவது நூற்றாண்டில் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அந்த இரும்புஸ்தம்பம் இப்பொழுதுகயாவிலிருக்கும் விஷ்ணுபாதத்தின்பேரில் நாட்டப்பட்டிருந்ததென்று சிலரும், மதுராபட்டணத்திற் கருகிலுள்ள கோவர்த்தனகிரியின் மீது இருந்ததென்றும், அங்கிருந்து இப்பொழுது அது நிற்கும் இடத்திற்குக் கொண்டு வந்து நாட்டப்பட்டதாக வேறு சிலரும், இது எந்த மலையின் மீது முதலில் நாட்டப்பட்டிருந்ததோ அந்தமலையே விஷ்ணுபாதமென்று வேறு சிலரும் சொல்லுகிறார்கள். பிரஸ்தாப விஷ்ணுபாதம், புராரி என்ற கிராமத்திற்கருகிலே ஒரு குன்றின்மீதுள்ள பூமிக்குக்கீழ் அகப்பட்டது. அந்த புராரி என்ற கிராமத்திற்கு பார் முராரி என்ற பெயருமுண்டு. பார் முராரி என்பதற்கு "மாப்பிள்ளை முராரி" என்பது பொருள். முராரி என்று ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பெயர். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய விவாக காலத்தைக் குறிக்கும் அறிகுறியாக அந்த விஷ்ணு பாதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும், அல்லது மகா பாரதயுத்தத்திற்கு முந்தி நடத்தப்பட்ட ராஜசூய யாகத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதத்திற்குச் செய்யப்பட்ட அக்கிர பூஜையின் அறிகுறியாக அந்த விஷ்ணு பாதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் மகாமகோபாத்தியாயர் சொல்லுகிறார் என்று 'பம்பாய் க்ரானிக்கல்' பத்திரிகை கூறுகிறது.

---

## வரதக்ஷிணை

## அல்லது வியாபார விவாகம்

(மாதர் மநோரஞ்சனி.)

பெங்காலில் ஸ்நேகலதாதேவி என்ற பெண்மணியை மணம்புரிய விரும்பினவன் அதிக தொகை கேட்டமையால் அவள் தகப்பன் தன் வீட்டைக் குதுவை வைத்து அதற்கு வேண்டிய பணத்தைக் கடன் வாங்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தாராம். அப்பொழுது இப்பெண்மணி தனக்காகத் தனது தகப்பனார் பணத்துக்குப்படும் கஷ்டத்தைக்கண்டு மனம் சகியாமல் தற்கொலைசெய்துகொண்ட சங்கதி அநேகருக்குத் தெரியும். இத்துர் வழக்கம் பெங்காலில் மாத்திரமில்லை, இந்தியா முழுவது மிருக்கிறதென்னலாம். முன்காலத்தில்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கு சொற்ப தொகை கொடுத்து வந்தார்கள். சிலர் அதுகூடப் பெறாமல் கன்னிகாதானம் செய்து வந்தார்கள். இக்காலத்திலோ பெண் வீட்டார் பிள்ளை வீட்டாருக்கு கன்னிக்கு கலியாணம் முதல் பிள்ளைபிறக்கும் வரையில் அவர்கள் கேட்பதை எல்லாம் கொடுக்கவேண்டி யிருக்கிறது.

பெண்களோ அதிகரிக்கிறார்கள். பிள்ளைகளோ சொற்பமா யிருக்கிறார்கள். பெண்கள் ருதுவாகுமுன் விவாகம் செய்ய வேண்டுமென்ற மூடக்கொள்கை அநேகர் மனதில் குடிகொண்டே யிருக்கிறது. மேலும்; பிள்ளை தன் ஜாதி உட்பிரிவைச் சேர்ந்தவனாயிருக்க வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். எல்லாவயதிலும் பெண்களின் தொகை ஆண்களின் தொகையை விடக் குறைந்ததாகவே யிருக்கிறது. 10-அல்லது 12-வயதுக்குக்கீழ் பெண்களின் தொகை ஆண்களின் தொகையைவிட அதிகரித்திருக்கிறது. இதனால் பாலிய விவாகம் நடந்து வருகிறதென்னலாம். 10-வயதுக்குட்பட்ட விவாகமான ஆண்களின்தொகை பெண்களை விட அதிக சொற்பமாயிருக்கிறது.

பிள்ளைகள் உயர்தரக்கல்வி படிப்பதால் விவாகம் செய்துகொள்ள அவசரப்படுகிறதில்லை. ஒருவேளை ஒருவன் தன் பெண்ணை விவாகம் செய்துவைப்பதாக அப்பிள்ளையின் பெற்றோரைக்கேட்டால் இதுதான் சமயம் என்று எண்ணி அதிக தொகை கேட்கிறார்கள். பிள்ளைகளின் விவாக வயது உயருகிறது. இவ்விதம்

வயது உயருவதால் பிள்ளை கிடைப்பதும் அருமையாயிருக்கிறது. அவ்விதம் கிடைத்தாலும் பணம் அதிகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பெண்களின் விவாக வயதை உயர்த்தி வைப்பதும், ருதுவாகுமுன் அவர்களுக்கு விவாகமாக வேண்டுமென்ற விதியை நீக்கிவிடுவதுமே இக்கொடிய வழக்கத்தை நீக்க முதல்தரமான கைகண்ட ஔஷதம்.

மேலும், சாதாரணமாகப் பெண்ணும் பிள்ளையும் ஒரு ஜாதியின் ஒரே உட்பிரிவைச் சேர்ந்திருக்கவேண்டும்; ஆனால் கோத்திரம் மாத்திரம் வேருயிருக்க வேண்டுமென்ற விதியுமிருக்கிறது. இவ்வித உட்பிரிவுகளில் சில உட்பிரிவுகளின் தொகை வெகு சொற்பம்; உட்பிரிவுகளை நீக்கி வடமப்பிராமணன் ப்ரஹசரணப் பெண்ணை விவாகம் செய்துகொள்ள முன் வந்தால் இவ்வித துர்வழக்கமும் நீங்கும். பி. எ. பரிக்ஷைதேறினவன், அல்லது பீ. எ. க்குப் படிக்கிறவன் புத்திசாலியா யிருந்தால் இவர்கள்பாடு கொண்டாட்டம்தான். இவர்கள் கேட்பதை யெல்லாம் பெண்ணின் தகப்பன் கொடுக்க வேண்டியதே. தாழ்ந்த கல்வியறிவுடையவர்களுக்கு ரூபா.500 முதல் ரூபா 1000 வரைக்கும் கிடைக்கும் என்பதற்கும் மோசமில்லை.

ஒரு சிறுவன் தான் சம்பாதித்து ஜீவனம் செய்யும் வரையில் பிரம்ம சாரியாக அதாவது விவாகம் செய்து கொள்ளாமலிருந்தால், பின்னிட்டு பணத்தை அபேக்ஷித்து விவாகம் செய்துகொள்ளமாட்டான். ஆனால் இவன் சம்பாதிக்காமல் தாய் தந்தையின் ஆதரவிலிருக்கும் பொழுது விவாகம் செய்துகொண்டால் பணம் கட்டாயம் கேட்பான். இன்னொரு முக்கியமான விஷயமுண்டு. அதாவது, பெண்வயதாகியாவது சிறுபெண்ணாகவாவது மனைவியாக மாத்திரம் இருந்து கல்லாமலிருந்தால் போதாது. அப்பொழுதும் வியாபாரவிவாகம் இருந்துகொண்டே யிருக்கும். சிறு பெண்களை விவாகம் செய்துவைக்கவும் கூடாது. பெண்கள் பிள்ளைகளைப்போல் உயர்தரக் கல்வி கற்றுணர வேண்டும். பி. ஏ. வரையில் ஆண்களைப்போல் படித்துவரவேண்டும். அப்பொழுதுதான் விவாகம் உண்மையானதாகும். "வியாபார கலியாணத்தை ஒழித்துவிடும்" என்பது பம்பாயிலுள்ள "இந்தியன் சோஷல் ரிபார்மர்" என்ற பத்திரிகையின் அருமையான அபிப்பிராயம்.

—

## முத்து

முத்து, பார்த்திபர் மதிக்கும் நவரத்னங்களில் ஒன்றாகும். இது கடல்படு பொருளேயாம். இது சலசம் தலசம் என இருவகைப்படும். முத்து "தந்தி; வராக மருப்பு, இப்பி, பூகம், தழைகதலி நண்டு, சலஞ், சலம், மீன்தலை, கொக்கு, நளினம், மின்னூர் கந்தரம், சாலி, கழை, கன்னல், ஆவின்பல், கட்செவி, கார், இந்து, உடும்பு, கரா" என்னும் இருபது இடங்களினின்றும், சனீசுவரர் தோள், சிங்கத்தின் புஜம், தென்னை ஆகிய இம்மூன்றும் சேர்ந்து இருபத்திமூன்றிடங்களினின்றும் பிறக்கும்.

முத்துச் சிப்பி ஓர் ஜலசரம். அதன் இடைக்குமத்தியில் ஓடுகளால் மூடப்பட்ட மெல்லிய தோல்கள் உண்டு. இத்தோல்களினூடே பொடிமணல் புகுந்து அப்பூச்சியை மிகுந்த துன்பத்துக் குள்ளாக்குகிறது. அப்பொழுது எரிச்சல் பொறுக்காமல் முத்துச்சிப்பி அங்கு மிங்கும் புரள, ஓர்விதச் சுண்ணும்புத் தன்மையுள்ள நீர் கீழேவிழுகிறது. இதுவே முத்தாகிறதாம் இதைச் சீனரே முதலில் அறிந்தனர். பார்த்ருஹரியோரம் முத்துச்சிப்பி சமுத்திர மட்டத்துக்கு மேல் வந்து வாய்திறக்க அப்பொழுதுவிழும் நீர்த்துளியே அதனிடத்து முத்தாகிறதெனக் கூறுகிறார். மேலும்சுவாதி நக்ஷத்திரம் உச்சியிலிருக்கும் பொழுது விழுந்த நீர்த்துளியாலுண்டான முத்தே மிகச்சிலாக்கியமானதாம்.

முத்துக்கள் நல்லமுத்துகள், கெட்டமுத்துக்கள் என இருவகைப்படும். நன்முத்துக்கள் பளபளப்பாயும் உருண்டை வடிவ முள்ளதாயும் கனமாயும், வெண்மை நிறம் பொருந்தியதாயு மிருக்கும். நன்முத்துக்கள் பல வர்ணங்களிலு மகப்படுகின்றன. மெக்ஸிகோவில் எடுக்கப்படும் முத்து கபிலவர்ணமுடையதாம்.

சாதாரணமாய் முத்துக் குளித்தல் பிப்ரவரிமாதந் தொடங்கி ஏப்ரல் மாதம் வரை நடக்கும். காலை ஏழு மணிக்குக் குளிக்கத் தொடங்கி சூரியனுச்சிக்கு வருதலும் நிறுத்திவிடுவார்கள். அதற்குள் நாற்பது அல்லது ஐம்பது தடவை மூழ்குவார்கள். இறங்குமுன் தெய்வ பக்தியுள்ள மலையாள மந்திரவாதிகளை ஆருடங் கேட்டுக் கொண்டும், உபவாச மிருந்து கொண்டும், உப்பினால் அரிப்பில்லாமலிருக்க உடம்பில் எண்ணெய் தடவிக் கொண்டும் இறங்குவார்கள். கட



## ஆச்சாரி - ஆஸாரி

ஆச்சாரிப்பட்டமொன்றே நமக்குரியதெனக் கொண்டு மயங்கி, மற்றொருபட்டமும் நம்மவர்கள் கொள்ளலாகாதென்று சிலர் பேசிவருகிறார்கள். இதுபெரும்பிழை. இப்படியே சிலர் விஸ்வப்பிராம்மணரென்று நம்மைச் சொல்லிக்கொள்ள வேண்டுமேயொழிய மற்றொருவிதமாகச் சொல்லலாகாதென்று வாதாடுகின்றனர். இவர்களும் பிழைகாரர்களே. நமது ஜாதிக்குப் பல பெயர்களிருக்கின்றன. ஒன்றுக்கொன்று பரியாயநாமங்களேயல்லாமல் வேறில்லை. ஒன்றைப்போல் மற்றதும் உரித்தானதேயாகும். அப்படியே பட்டங்களும். விஸ்வப்பிராம்மணர், தேவப்பிராம்மணர், பௌருஷேயப்பிராம்மணர், பவித்திரப்பிராம்மணர், விஸ்வகர்மாக்கள் என்று பற்பல விதமாய் வழங்கப்படுதல் கண்டுவருகிறோம். இவற்றில் ஒன்றையே கொள்ளவேண்டுமென்றும் மற்றவற்றை விலக்கவேண்டுமென்றுங் கூறுதல் மூடத்தனமேயாகும். அவரவர்களுடைய அபிமானம் பற்றி ஒவ்வொருவிதமாய்ச் சொல்லுவார்கள். எதிலும் பிசகு கிடையாது. பட்டங்களில் பத்தர் என்பது தஞ்சைஜில்லாவில் விசேஷமாய் வழங்கப்படுகிறது. இனி, 'சாஸ்திரியார்' முதலிய பட்டங்களும் நம்மவர்களுக்கிருத்தல் கவனித்தற்பாற்று. பிராம்மணர்கள் அய்யர், சாஸ்திரி, சிவா, தீக்ஷிதர், ஐயங்கார், சர்மா முதலிய பல பட்டங்களை அவரவர்கள் குடும்ப வழக்கப்படிக்கொண்டு வாழ்வதைக் காண்கிறோமல்லவா? அப்படியிருக்க, நாம்மட்டும் ஒரே பட்டங்கொண்டு வாழ வேண்டுமென்பது பொருந்துமோ! ஆச்சாரிப்பட்டத்தைச் சரியாய் உச்சரிப்பதில் நம்மவர்கள் கவனமாகயிருக்கவேண்டும்.

ஜோஸ்யர்-மு. வேலாயுத ஆச்சாரி,

---

விளுட்சென்று இரண்டுநிமிஷங்களுக்கெல்லாம் வெளி வருவார்கள். இறங்கும்பொழுது கல்லைக் கட்டிக்கொண்டும், முத்துச்சிப்பிகள் பொறுக்கிவர வேண்டிய பையை ஒரு காலில் மாட்டிக்கொண்டும் இறங்குவார்கள். இறங்கியபிறகு தங்கள் இடது காலினால் சிப்பிகளைப் பொறுக்கி நிரம்பச் செய்துகொண்டு, மேல் வருவதற்கு அறிகுறியாகக் கயிற்றை அசைப்பார்கள். உடனே படகிலுள்ள மாலுமிகள் இவர்களை மேலே தூக்கி இழுத்து விடுவார்கள். சு. மி.

## குடந்தையில் கான்பரன்ஸ்

### குலப்பிரகாசம்

குலமென்றதின் வகையாவன; ஆகமங்களின் முறைப்படி பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என நான்கு வகை. சர்வ சமயத்திற்கும் பொருந்த சித்தாந்தப்படி மேற்குலம் கீழ்க்குலம் என இரண்டு வகையேயாகும். குலம் நான்கென்பது ஆகம முறையேயாகிலும் அவைகளில் மேற்குலம் கீழ்க்குலம் என்ற இரண்டு சாரமே உத்தாரணமாய் நிற்கும். அந்த இருவகையின் விரிவாவன—எவை மேலான கர்மநிலைகள் என்று கருதப்படுவனவோ அந்த மேலான கர்ம நிலைகளையுடையதே மேற்குலமாகும். அவ்வாறின்றி பாபகர்ம நிலைகளையுடையதே கீழ்க்குலமாகும்.

எத்தனை வகையானாலுஞ்சரி; குலம் ஜென்மத்தினாலாவதா? கன்மத்தினாலாவதா? ஜென்மத்தினால் குலமென்பது சாஸ்திரோக்தமாயினும், கன்மத்தினாலாகுவதென்றும் இடங்கொடாமற் போகவில்லை. அதற்குச் சான்றுகளாவன—கன்மமொன்றை அனுஷ்டித்திருக்க ஜாதி மற்றொன்றாயிருக்குமோ? உதாரணமாக சூத்திரனெனப்பட்டவன் கோவில் பூஜை வேதாத்யயனம் தண்ணீர்ப்பந்தல் சர்வஜாதிகளுக்கும் அன்னபானாதி வசதிகொடுத்தல் முதலான வைதீக காரியங்களுக்கு அர்கமாவதுண்டோ! கிடையாது. அந்தந்த வம்சங்கள் தத்தம்குலநிலையும் குலநாமமும் பிளவுபடாவண்ணம் தமக்கேற்ற கன்மங்களையே புரிபவராகுவர்.

ஒரு கல்லானது ஜென்மத்தால் சிலைஎன்ற நாமகரணம் பெற்றிருக்க, அது ஒரு ரூபமாய் கிருத்தியமாக்கப்பட்டபோது சிலாவிக்கிரகமெனப் பேர்பெறும். தூணாகக் கிருத்தியமாக்கப்பட்டபோது ஸ்தம்பம் என்ற பேர்பெறும். அப்படியே ஜென்மம் ஒருவாறாயிருக்க அந்தந்த சமுதாயத்தாரின் கர்மசங்க்ரகத்தால் ஒவ்வொரு குலநாமங்கள் பிரதிபலிக்கப்படுகின்றன. எக்குலத்தோராயினும் புண்ணியம் பெருமை ஆசாரம் நாகரீகச்சிறப்புகள் பொருந்தப்பெற்றுள்ளாரானால் அதுவே மேற்குலமென்று கருதப்படுவது சகஜம். எவர்களுடைய கர்மசாரங்கள் கொலைகளவு அனாசாரதுர்நிலையைப் பொருந்தப்பெற்றதோ அவர்கள் ஈனகுலத்தாரெனப்படுவது புதுமையன்று. ஆனதால்

சர்வப்பிரஜாவிர்த்திகள் எவ்வித கர்மதாரிகளாயினும் இவ்விருவகையில் ஓர் வகையைச் சார்ந்தவர்களாகும்.

பொருள் பலம் கல்வி பலமில்லாது நம் வம்சத்தார் பிரபல சமுதாயத்தார்களில் உத்தாரணமாய்நிற்பதற்கு எவ்வளவு தூரமிருக்கிறதென்பதைக் கவனிப்பீர்களாக.

வாதபித்தாதி தாதுக்களின் நிலை அறியக் கூடாமல் சிகிச்சை செய்யப்புகுந்த பண்டிதரால் சுகானுபவம் அடைவிக்க லாகுமோ? அதுபோல் குடந்தை நகர்க் கான்பரன்ஸ் முதலானவைகளில் பொருள் விரயஞ்செய்து அல்பகாலம் வெறும்கிளர்ச்சியைப் பெற்றிருப்பதைப்பார்க்கிலும் அவைகளில் விரயமாகக்கூடிய ஓராயிரத்திறகுக் குறையாத பொருள்களைப் பண்டாக நிலைநிறுத்தி பாடசாலை முதலான மூலகாரியங்களைச் செய்வதால் பயன் பெறுமென்பதில் சந்தேகமுண்டோ என்பதைக் கவனிப்பீர்களாக.

ஆங்கிலம் சமஸ்கிருதம் திராவிடம் சிற்பம் யந்திர சூஸ்திரங்கள் கற்பித்துத் தரக்கூடிய பாடசாலைகள் நம்மில் ஏற்பட்டு அதற்கான மூலதனங்களும் தனிகர்களால் நியமிக்கப்பட்டு அதனின்றும் நம்குலச்சிறுவர்கள் கற்றுத் தேறிவருவதானல் எவ்வளவு சிறந்த நிலைமையாயிருக்கு மென்பதைக் கவனிப்பீர்களாக. தனபலமின்றி ஒருகாரியமும் நடைபெற இயலாதென்பதைக் கவனிப்பீர்களாக.

குலவிர்த்தியான நாகரீகங்களில் முழு மனதுடைய நாட்டாண்மைக் காரியஸ்தர்கள் எவ்வூரிலும் நியமனமாகப்பெற்று கோர்ட் வியவகாரங்களில் அலக்கழிப்பதைவிட்டு பஞ்சாயத்து மூலமாகவே வியவகாரங்கள் தீர்மானிக்கப் படுவதென்ற திட்டமாகப் பெற்று குலோபகார குணமுடைய நாட்டாண்மைக் காரியஸ்தர்களின் அதிகாரம் உத்தாரணமாக நடக்கலாகியும் இருக்குமானல் குலச்சிறப்புகள் பலிக்கு மென்றதை நம் வம்சாபிமானிகளே! கவனிப்பீர்களாக.

சாலிவாடிபுராதீனம்-தர்மபதி.

## சமபந்திபோஜன சந்தேகன்

குடந்தைக் கான்பரன்சில் சமபந்திபோஜனம் நடைபெறுமாறு ஏற்பாடு செய்திருக்கும் விஷயம் ஒற்றுமைக்கு உற்றவழியாயிருக்கிறதென்பதைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனினும், கடந்த 16-வது பிரசுரம் 229-வது பேஜில் ஸ்ரீ செய்யூர். K. இராமசாமி ஆச்சாரியாரவர்கள் எழுதியுள்ள "சமபந்திபோஜனத்தடைகள்" என்ற வியாசத்தின் கீழ்க்கண்ட விஷயமாய் சபையாரவர்களும் குடந்தையாரும் எவ்விதத் தீர்மானத்தின் பேரில் அமுலுக்கு கொண்டுவருவார்களோ என்னும் சந்தேகமுள்ளவனுயிருப்பதால், இவ்விஷயமாய்த் தெரிந்த குலப்பிரமுகர்கள் மூலமாய் இதற்கு ஒருவிமரிசை ஏற்பட்டுவிட்டால் நம்மவரின் ஆக்ஷேபனையுடன் பிறஜாதியாரின் பரிகாசமும் அறவே ஒழிந்துபோமெனும் ஆவலுடன் இதை எழுதினதே தவிர, குலமேதாவிகளின் புத்திக்குப்படாத சந்தேகமொன்றை நான் சுட்டிக்காட்ட வந்தேனில்லை. நம் குலசகோதரர்களில் பெரும்பாலார்க்கிருக்கும் இச்சந்தேகத்திற்கு ஓர் சமாதானம் கான்பரென்சிற்குள் வெளிப்பட்டால் மிக்க அநுகூல மேற்படுமென்று நம் குலோத்தாரணக் குரிசிலனைவர்களையும் நான் மன்றாடி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஷை ஸ்ரீ K. இராமசாமி ஆச்சாரியாரவர்களின் வியாசச்சுருக்கம்.

1. சூத்திர ஸ்திரீகளுக்கு உற்பவித்த அனுலோமப் பிரதிலோமர்களும் பந்திபோஜனத்திற்கு வருவார்களென்பது.

2. அவர்களைப் பிறப்பின் மூலம் தெரிந்தோர் தவிர மற்றவர்கள் ஐயப்படாத அவ்வளவு ஆசார அனுஷ்டான கோத்திர சூத்திர நியம அனுஷ்டானமாயிருக்கிறார்களென்பது.

இவ்விஷயங்களுக்கு சமாதானம் தெரிவிப்பதுடன் கான்பரென்சிலும் இச்சந்தேகத்திற்கிடந்தராத சில தீர்மானங்கள் செய்யவேண்டுமென்பதே என் முக்கிய பிரார்த்தனை.

இண்டூர்-பேரமாச்சாரி.

---

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீசுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம்.



## நமது வாசகர்கள்

(கடிதக்காரர் தங்கள் அபிப்பிராயங்களுக்குத் தாமே ஜவாப்தாரிகளாவர்.)

## குலத்தைக் கெடுக்குங் கோடரிக்காம்பு.

சென்ற ஏப்பிரல் மாதத்திய (ஏழாவது) சஞ்சிகையில் 18-வது பக்கத்தில் M. S. A. மேலேகண்ட ஹெட்டிங்கின்கீழ் சில வினக்கள் கேட்டிருக்கிறார். அவைகளுக்கு விடைகள் கீழே யெழுதப்பட்டிருக்கின்றன.

நம் ஜாதியில் சிலர் மதுபானஞ்செய்வதாயும், துராசாரமான நடவடிக்கைகளைப்பற்றினவர்களாயும் இருக்கிறார்கள். அதற்கு நாம் என்னசெய்கிறது?—"உலகம் பலவிதம்". உலகில் ஆசாரமாயிருப்பவர்களுமுளர், அனுசாரமா யிருப்பவர்களுமுளர். வீணில் பாவியென்றும், படுபாவியென்றும் தூஷிப்பது அறிவின்மை. அதற்கு என்னசெய்யவேணுமென்றால், நம் குலாபிவிர்த்தியில் ஊக்கங்கொண்டவர்கள், ஆங்காங்கு குலாபிவிர்த்தியைப்பற்றி உபன்னியாசங்கள் செய்வதே!

### வினா—விடை

1. என்றாலும் நம்மவர்கள்தப்பி நடப்பதற்கு அது சமாதானமாகுமா?

ஆகாது.

2. அனுசாரிகளைக் கண்டிக்கவேண்டாமா?

கண்டிக்கவேண்டும்.

3. யார் கண்டிப்பது?

அறிவுடையோர்கள்.

4. யாருக்கு இவர்கள் அடங்குவார்கள்?

அறிவுடையோர்களுக்கும் அவர்கள் செய்யும் உபன்னியாசங்களுக்கும்.

5. எப்படி அடக்குவது?

குலாபிவிர்த்தியைப்பற்றிய உபன்னியாசங்களினுலும் நற்போதனைகளாலும்.

6. அடக்காவிட்டால் குலப்பழி எப்படி நீங்கும்?

அடக்காவிட்டால் நீங்காது.

7. நீங்காவிட்டால் நமது உயர்குலப் பெருமை நிலைப்பதெப்படி?

குலப்பழி நீங்குவதற்கான உபன்னியாசங்களினுலும், சபைகள் அநேக இடங்களில் கூடுவதினுலும், சபைப் பிரசுரங்களினுலும், கல்வியினுலும் இன்னும் அநேகவித நற்செய்கைகளினுலும்தான். K. C. K.

## கிளாக்குளம் குலாபிமான மாணுக்கர்கள்

திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலூக்கா வீரக நல்லூரை சேர்ந்த கிளாக்குளம் என்னும் ஊரில் விஸ்வப்பிராம்மணர் வீதியில் எங்கள் பெரியோர்களால் சுமார் 7 வருஷத்திற்குமுன் ஸ்ரீமத் சுப்ரமண்ய ஸ்வாமி தேவாலயம் ஒன்று நம் வம்ஸஸ்தர்களுக்கு பாத்திதையாக பிரதிஷ்டைசெய்து அர்த்தமண்டபம் மஹா மண்டபம்வரையில் முடிந்திருக்கிறது. பிரம்மஸ்ரீ சங்கரலிங்கம் ஆச்சாரியார் குமாரர் ஆறுமுகம் ஆச்சாரியார் அவர்களாலும் இன்னும் சில முக்கியஸ்தர்களாலும் ஷை மண்டபத்தில் இராத்திரி பாடசாலை நேமனம் செய்து 6 மாதம் வரையில் மூஷிகவாகனம் சரஸ்வதி தோத்திரம் வரையில் 5 பிள்ளைகள் வாசித்துக்கொண்டிருந்தோம்..

பிறகு ஆறுமாதம் ஆனவுடனே உபாத்தியாயர் தன்னூருக்குப் போய்விட்டார். அந்த சமயம் மஞ்சகுப்பம் ஜில்லா கூடலூர் தாலூக்கா நெல்லிக்குப்பம் சோழவல்லி விஸ்வப்ராம்ம சந்ததியார்களின் பூர்வமாகிய ஸ்ரீ வரசித்தி விநாயகர் சந்நிதானத்தின் தர்ம்மகர்த்தரும், குலாபிமானியுமாகிய பிரம்ம ஸ்ரீ க. ச. வை. பௌத்திரரிஷி மாணிக்கம் ஆச்சாரியார் திருப்பணமருதூருக்குச் சமீபத்திலுள்ள நந்தன்தட்டை கவுல் பாரை என்னும் இடத்தில் நம் குலத்தின் முன்னோர்களால் நந்தராஜனுடைய குமாரனுக்கு விவாகத்திற்காக கற்பந்தல் நிர்மாணம்செய்த இடமென்று உலகம் வழங்குகிறதை முன்னிட்டும் அப்பாறையில் சுமார் 1 கெஜம் விஸ்தீரணம்ஓர் சிலாசாசனமும் ஒரு கெஜ அகலம் இரண்டு கெஜநிகளம் ஓர் சிலா சாஸனமும் இருப்பதாக கேள்வியுற்று தான் நேரில் போய் பார்த்து விட்டு எங்கள் ஊருக்கு வந்தார்.

ஷை, பிரம்மஸ்ரீ. ச. ஆறுமுகம் ஆச்சாரியாரும் இன்னும் சிலரும், எங்களில் சில சிறுவர்களை, சென்னை சிந்தாதிரிபேட்டையில் நம் குலத்திற்காக நேமித்திருக்கும் பாடசாலைக்கு அனுப் பிக்கவேண்டும் என்று ஷை ஸ்ரீ. மாணிக்கம் ஆச்சாரியாரிடம் பிரயத்தனம் செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். ஷை யார் சொன்னதாவது, இப்போது சென்னைப் பாடசாலையில் வெளியூரிலிருந்து போய் வாசிக்கக்கூடிய பிள்ளைகளுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்து ஆதரிப்பதற்கு கூடிய சமயம் இல்லையென்றும், நீங்கள் அப்படிச் சிறுவர்களை வெளியூர்க்கு அனுப்பி வாசிக்கவைப்பதாயிருந்தால்

நாங்கூனேரி கஸ்பாவில், நம்குலத்தினர்களின் உதவியால், 12. 12. 12. நம்குலச் சிறுவர்களுக்கென்று ஓர் வித்தியாசாலை நேமனம் செய்து நடைபெற்று வருகிறது. பகலில் பட்டறைகளில் வேலைசெய்யக்கூடிய பிள்ளைகள் இரவில் வாசிக்கிறதற்காக உபாத்தியாயருக்கு சம்பளம் கொடுத்து வாசிப்பதற்கு வேண்டிய முயற்சி செய்திருப்பதாயும் ஷை நாங்கூனேரிக்கு பிரயாணமானார்கள். நாங்களும் அதன்படி நடப்பதாக ஒப்புக்கொண்டோம்.

எங்களிருவர்களையும் நாங்கூனேரிக்கு அழைத்து வந்து பி. முத்தையஆச்சாரியை பிரம்மஸ்ரீ கெ. சுப்ரமண்ய ஆச்சாரியார் பட்டறையிலும், சு. செல்லைய ஆச்சாரியை ஷை சபையின் காரியதரிசியார் அவர்களாகிய பிர்மஸ்ரீ ரு. கதிர்வேலு ஆசசாரியார் அவர்களின் பட்டறையிலும் ஒப்புவித்தார்கள். நாங்களிருவரும் ஷை பட்டறைகளின் எஜமானர்கள் சம்மதப்படிக்கு வேலைபார்க்கிறோம். பிரதிதினமும் மாலை 6-மணிக்கு மேலும் காலை 4-மணிமுதல் 6-மணிவரையில் வாசிக்கிறோம். இப்போது ருத்திரம் புருஷசூக்தம் தீர்ந்து சமகம் ஆரம்பித்திருக்கிறோம். எங்களுக்கு பாடம்சொல்லும் திருநெல்வேலி கஸ்பா உபாத்தியாயர் அவர்களாகிய பிரம்மஸ்ரீ முத்து சாஸ்திரியார் அவர்களின் கிருபாநோக்கம் நாங்களும் எங்களோடு சேர்ந்துவாசிக்கும் நண்பர்களுக்கும் மென்மேலும் கல்வி அபிவிருத்தியாகும்படிக்கு இப்பத்திரிக்கையின் வியாசத்தைப் படித்து முடித்தவுடன் ஆசீர்வதிக்கும்படி நமஸ்கரிக்கின்றோம்.

பி. முத்தைய ஆச்சாரி.
சு. செல்லய்யா ஆச்சாரி.

## அச்சியந்திரசாலைகள்

இவை இப்போது எங்கும் மலிந்திருத்தல் யாவரும் அறிந்த உண்மை. சிறு பட்டணங்களிலுங்கூட பல அச்சாபீசுகள் ஏற்பட்டுவிட்டன. நம்மவர்கள் நாகப்பட்டணத்தில் பல வருஷங்களுக்கு முன்னமேயே அச்சாபீஸ்வைத்திருந்ததாகத் தெரிகிறது. சென்னையில் ஒருவர் சமீபகாலத்தில் வைத்தனர். இங்ஙனம் பலர் செய்தால் வருவாய்க்கு இடமுண்டாகும். இது தொழிற்றுறைகளில் ஒன்றெனச்சொல்லலாம். வாசிப்புடைய நம்மவர்கள் இந்தத் தொழிலைக்கைக்கொண்டால் கௌரவமாகவும் ஜனப்பிரியமாகவுமிருக்கும். நமதுசபைக்கு ஓர் அச்சுக்கூடம் வேண்டுமென்று ரிபோர்டில் கண்டிருப்பது சரிதான். சுஜாதியாராயினும் விஜாதியாராயினும் ஒருவருடைய அச்சுக்கூடத்தில் வேலைசெய்துகொள்வதினால் சங்கடங்கள் நேரிடவேசெய்யும். பொருள் விரயமுமுண்டாகும். ஆகலால், சபைக்கென்று ஒரு அச்சியந்திரசாலை வாங்கியமைப்பதில் சபையின் மெம்பர்களும், குலாபிமானிகளும் சிரத்தைகொண்டு பொருளுதவி செய்தல் அவஸ்யமாயிருக்கிறது. இதுவே சபைக்குவருமானத்தையும் உண்டுபண்ணுமல்லவா?

உபாத்தியாயர் - நா. சுப்பராய ஆச்சாரி.

## இராமேஸ்வர விஸ்வப்ரம்ம மடாலயம்

இராமேஸ்வர க்ஷேத்திரமானது ஓர் முக்ய யாத்திரை ஸ்தலமாக இருப்பதால் எக்காலத்திலும் நித்திய உத்ஸவம்போல் தினந்தினமும் யாத்திரைஜனங்கள் திரள்திரளாகக் கூடிவந்துகொண்டிருக்கிறார்கள். அதில் நமது (விஸ்வப்பிரம்ம) வம்ஸத்தார்களும் எத்தனையோ பேர்கள் பல ஊர்களிலிருந்தும் வருகிறார்கள். அப்படியிருக்க, இந்த இராமேஸ்வர க்ஷேத்திரத்திலிருக்கும் விஸ்வப்பிரம மடாலயமானது, மனையின் அகல நீளம் அகண்டமாக இருந்தும் கட்டிடமோ ஒரு சிறு கொட்டகையாக இருக்கிறது. அதனால் யாத்திரை ஜனங்கள் தங்கியிருப்பதற்கும், சமயல் செய்துகொள்வதற்கும் சயனித்துக்கொள்வதற்கும் மிகுந்த அசௌகரியமாக இருக்கிறது. இம்மடாலயமானது என்றும் நிலைபெறும்படி நமது வம்சத்திலுள்ள கல்விசெல்வம் நிறைந்த குலாபிமான கனவான்கள் இதனை முற்றிலும் கவனித்துப் பொது ஜனோபகாரமான இப்பெரும் புண்யத்திற் சிரத்தை எடுத்து மேற்படி மடாலயத்தைக் கருங்கல் திருப்பணியாகச் செய்து முடிப்பித்து ஸ்ரீ விராட்விஸ்வபிரம மூர்த்தியின் கிருபானுகூலத்தைப் பெற்று வாழ்ந்து வருவீர்களெனப் பன்முறையும் பிரார்த்திக்கின்றனன். சென்ற வைகாசிமீ அமாவாசைக்குத் தமது குடும்பத்தோடு என்னுடன் யாத்திரை செய்த சென்னை விஸ்வகர்மகுலோத்தாரண சபையின் பிரசிடெண்டு ஸ்ரீ சோமங்கலம் - கந்தசாமி ஆச்சாரியார் அவர்கள் இம்மடாலயத்தில் தங்குவதற்குச் சௌகரியமின்றி கஷ்டத்தோடு வசித்து யாத்திரை செய்து வந்ததே இதற்கு ஒரு பெரிய சாக்ஷியமாக இருக்கிறது.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி ஜோதிஷர்,
ஆரியன் சோதிடசாலைத் தலைவர்,
திருவாரூர்.



## ஆரோக்யபோதம்

**பாம்பு விஷத்திற்கு முறிவு.**—பம்பாயிலிருக்கும் பேரல் தொழிற் சாலையில் (Parel Laboratory) மேஜர் க்ளென்லிஸ்டன் I. M. S. என்னும் டாக்டர் பாம்பு கடிக்கு கீழ்க்கண்ட முறிவைக் கண்டு பிடித்திருக்கிறார். பாம்புகளிடமிருக்கும் விஷத்தை அப்படியே எடுத்து, இந்தியாவின் வடமேற்குக் கோடியிலிருக்கும் பஞ்சாப்புக்கு அருகேயுள்ள கஸாலி நகரிலிருக்கும் தொழிற்சாலைக்கு அனுப்புகிறார்கள் இந்தப் பாம்பு விஷத்தைச் சிறிது சிறிதாக அச்சாலையிலுள்ளார் குதிரைகளின் உடம்பில் ஏற்றி கொஞ்சகாலமானதும், அக்குதிரைகளின் உடலிலிருந்து ஓரளவு இரத்தமெடுத்து, அந்த இரத்தத்திலிருக்கும் சதை அமிசத்தைப்போக்கி, ஜல அமிசமான இரத்தத்தை வேறாகப்பிரித்துவிடுகிறார்கள். இந்த ஜல அமிசமான இரத்தத்தைப் பாம்பு கடியுண்டவர்களுக்கு உபயோகித்ததில் அவர்கள் பிழைத்து விடுகிறார்கள். சமீபத்தில் பம்பாயிலுள்ள ஒரு காவற்காரனைப் பாம்புகடித்தது; உடனே அவன் பிரக்ஞையற்றுப் போய்விட இம்மருந்தை உபயோகிக்கவே அவன் குணமடைந்து விட்டான்.

**மலேரியா விஷ ஜுரமும் கொசுவும்.**—மலேரியா என்னும் விஷ ஜுரத்திற்கு ஆதாரம் ஒருவகைக் கொசு என்பது நம் நேயர்களறிந்த விஷயம். அத்தகைய கொசு நீர் நிரம்பியிருக்கும் கரையோரங்களில் முட்டைகளிடுகிறது. அந்த ஜலத்தில் காற்று வீசவே, சிறிய அலைகள் உண்டாகிக் கரையோரங்களில் இடப்பட்டிருக்கும் முட்டைகள் நடு ஜலத்திற்கு அடித்துக்கொண்டு போகப்படுகின்றன. அந்த முட்டைகளையே தின்று ஜீவிக்கும் சில மீன்கள் உண்டு. அவ்வகை மீன்களைக் கண்டு பிடித்து, ஜலம் தேங்கியிருக்கும் இடங்களில் அவைகளை விட்டு வளர்த்து வந்தால், கொசு உற்பத்தி யாவதே நின்று போய்விடும். ஆகையினால் பம்பாயிலிருக்கும் பேரல் தொழிற்சாலையில் ஏராளமான பணஞ் செலவுசெய்து பலவகை மீன்களைத் தருவித்து நீர்நிலைகளில் அவைகளை விட்டு வளர்த்து, விஷ ஜுரத்திற்கு ஆதாரமாயுள்ள கொசுக்கூட்டத்தை அடியோடு தொலைத்துவிடுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. கொசுவைக் கொன்று குவிக்கும் ஒருவகை மீனையும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

## தொழிற்றுறைகள்

**சென்னைக்கு ஜலம் ஸப்ளை:**—இதற்காகப் புதிதாய்க் கட்டப்பட்ட இரும்புத் தொட்டி சக்கரவடிவமானது; சுற்றிலும் கட்டப்பட்ட சுவரும் மத்தியில் 96 இரும்புத் தூண்களும் அதைத் தாங்குகின்றன. தொட்டியின் அடிப்புறம் பூமி மட்டத்திலிருந்து 37 அடி உயரமும், தொட்டியின் மேல்மூடி பூமிமட்டத்திலிருந்து 73 அடி உயரமும் இருக்கின்றன. தொட்டியின் குறுக்களவு 104 அடி; 28அடி ஆழம் ஜலம் தேக்கஞ் செய்யக்கூடியது; 15 லக்ஷம் காலன் ஜலம்பிடிக்கக்கூடியது. தொட்டி முழுவதும் உருக்கு இரும்பில் செய்யப்பட்டது; தொட்டியின் ஜலமட்டத்துக்கு $6\frac{1}{2}$அடி உயரத்தில் இரும்பு மூடி போடப்பட்டிருக்கிறது. தொட்டி ஜலத்தில் காற்று வெளிச்சம் படுவதற்கு மத்தியில் திறந்து விட்டு, பக்ஷிகளினின்றும் காப்பதற்கு இரும்பு வலை போடப்பட்டிருக்கிறது. இத்தொட்டி சென்னையிலேயே செய்யப்பட்டது. உலகத்திலுள்ள பெருந்தொட்டிகளில் இதுவொன்று.

**ரயில் வண்டிகளுக்கு மின்சாரவிசை.**—இந்தியாவிலுள்ள கிரேட் இந்தியன் பெனின்ஸுலர் ரெயில்வே (Great Indian Peninsular Ry), பாம்பே பரோடா ரெயில்வே, ஸெண்ட்ரல் இந்தியா ரெயில்வே, கீழ் வங்காள ஸ்டேட் ரயில்வே, ஆகிய இந்த இருப்புப் பாதைகளின் கிளைப் பாதைகளில் ஓடும் இன்சின்களை நீராவி விசையை யெடுத்துவிட்டு அதற்குப் பதிலாக மின்சார விசையின் உதவியால் நடத்தவேண்டுமென்று யோசனை செய்து வருகிறார்கள். வருஷம் ஒன்றுக்கு 10 லட்சம் பவுன் அல்லது 150 லட்சம் ரூபாய் முதல் வைத்துக்கொண்டு மின்சார விசையினால் ரயில்வண்டிகளை நடத்தினால், வருஷத்திற்கு 85,000 ரூபாய் வீதம் மிச்சமாகும். நீராவி யந்திரத்தினால் ஓட்டப்படும் ரெயில் வண்டிகளின் வேகத்தைவிட மின்சார விசையினால் ஓட்டப்படும் ரெயில் வண்டிகளின் வேகம் அதிகமாகும். இவ்விதமாக மேல்நாட்டுத் தொழிற்காரர்கள் நாளுக்குநாள் புது முறைகளைக் கண்டுபிடித்துச் செலவைக் குறைத்து வரவையதிகரிப்பித்துச் செல்வமுற்று வருகிறார்கள். நாமோ தொழில்களை நாளுக்குநாள் க்ஷீணிக்க விட்டுக்கொண்டிருக்கிறோம். இவ்வளவுக்குங் காரணம் கல்வியில்லாமையே யன்றி வேறுமுண்டோ?

**சென்னை ராஜதானியின் தொழில்கள்.**—ரெவினியூ போர்டார், வியாபார இலாகா டைரெக்டர் ஜெனரலுக்கு அனுப்பிய ரிபோர்ட்டின் சாராம்ஸம் பின்வருமாறு:—ராஜதானியில் பலதொழில்கள் செய்யப்பட்டு வருவதற்கு ஹேது உண்டாயிருப்பினும், அவைகள் அதிகமாய்ச் செய்யப்படுகிறதில்லை. திருவாங்கூரின் தென்பாகத்தைச்சேர்ந்த அனாதைக் குழந்தைகளின் தொழிற்சாலையில் சரிகைத்தொழில்கள் நடந்துவருகின்றன. திருவாங்கூரில், படிப்பில்லாத செம்படவச்சிறுமிகளால் ஒருவித சரிகைத் தொழில் நடத்தப்பட்டு வருகிறது. அவைகள் ஐரோப்பாவுக்குங்கூட அனுப்பப்படுகின்றன. திருவாங்கூரின் தென்பாகத்திலுள்ள அனாதைக் குழந்தைகளின் தொழிற்சாலையில் 1035 சாணார ஸ்திரீகளும் குழந்தைகளும் சரிகைத்தொழில்செய்துவருகிறார்கள். அவர்களில் சிலர் அனாதைகள். மேற்குக்கரையிலுள்ள பிராந்தியங்கள் தொழிலில் முன்னேற்ற மடைந்திருக்கின்றன. பஞ்சை அரைத்து சுத்திசெய்து பேல்களாகக் கட்டும்தொழில் கர்நூலிலும் கோயமுத்தூரிலும் நடந்து வருகிறது. கஞ்சம், கிருஷ்ணை, தஞ்சாவூர் ஆகிய இவ்விடங்களில் அரிசி யந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஓடுகளும்செங்கல்களும் மேற்குக்கரை யோரங்களில் செய்யப்படுகின்றன. கீழ்க்கரை யோரங்களிலுள்ள ஜில்லாக்களில் தோல்பதனிடுதல், புகைச்சுருட்டு ஆகிய இத்தொழில்கள் நடந்துவருகின்றன. மைசூர் திருவாங்கூரில் பட்டுத்தொழில் நடத்தப்பட்டு வருகிறது. திருவாங்கூரில் தீக்குச்சிச்சாலை யொன்று சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஐக்கிய நாணயச் சபைகளின் ஒத்துழைப்பினால் தொழில்கள் இன்னும் பலப்படலாமென்று சொல்லப்படுகிறது.

**தொழில் ஸ்காலர்ஷிப்புகள்.**—இந்தியா கவர்ன்மெண்டார் இந்த வருஷம் கொடுத்த தொழில் ஸ்காலர்ஷிப்புகளைப் பெற்றிருப்பவர்களில் மிஸ்டர் அமலசத்வாலா கஞ்சிபோடு தொழிலையும் நெசவுத்தொழிலையும் கற்றுவர ஸ்காலர்ஷிப்பு பெற்றிருக்கிறார். மிஸ்டர் உத்வாதியா சித்திரத் தொழிலும் கட்டிடங்கட்டுந் தொழிலும்கற்று வருவதற்காகவும், மிஸ்டர் உபேந்திரநாத்பானர்ஜி மெக்கானிகல் இஞ்சினீரிங் கற்று வருவதற்காகவும், மிஸ்டர் டிஸௌஸா எலெக்ட்ரிகல் இஞ்சினீரிங் கற்று வருவதற்காகவும், மிஸ்டர் பாஷிருடின் ஆமது முனிசிபல் இஞ்சினீரிங்கும் சுகாதார இஞ்சினீரிங்கும் கற்று வருவதற்காகவும், மிஸ்டர் அர்ஜன்தாஸ் நெசவுத் தொழில் கற்று வருவதற்காகவும், மிஸ்டர் ஸார்பீ மெக்கானிகல் இஞ்சினீரிங்கும் எலெக்ட்ரிகல் இஞ்சினீரிங்கும் கற்று வருவதற்காகவும், மிஸ்டர் பார்கவா சாயத்தொழில் கற்று வருவதற்காகவும், மிஸ்டர் காசிநாத் ஸெய்கயா காகிதக் கூழ்த் தொழில் கற்று வருவதற்காகவும், மிஸ்டர் அப்துல்கபூர்கான் எலெக்டிரிக் இஞ்சினீரிங் கற்று வருவதற்காகவும் ஸ்காலர்ஷிப்புகள் பெற்றிருக்கிறார்கள். இவர்களில் மிஸ்டர் உத்வாதியா இரண்டு வருஷகாலம் இந்தியாவிலேயே சித்திரத்தொழிலும் வீடுகட்டும் தொழிலும் கற்று விட்டு, மூன்றாவது வருஷம் இங்கிலண்டு சென்று அத்தொழில்களின் படிப்பைப் பூர்த்திசெய்துகொண்டு வருவார். தொழிற்காரர்களேயாகிய நமக்கு கவர்ன்மென்ட் ஸ்காலர்ஷிப்பெறும் யோக்கியதை கிடையாது. இங்கிலீஷ் படித்துப் பரீக்ஷைகளில் தேறினவர்களுக்கல்லவோ அது கிடைக்கும்!

**புதுத் தொழில் இலாகா.**—சென்னைக் கவர்ன்மெண்டார் இப்போது தொழில் இலாகா ஒன்று தனியாய் ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்தப் புதிய இலாகா இனி கல்வி இலாகாவின் கிளையாயிராமல் தனியா யிருந்து கவர்ன்மெண்டோடு நேரே கடிதப் போக்குவரத்து செய்யும். இந்தப் புதிய இலாகாவின் நோக்கங்கள் என்னவெனில்:—பழைய தொழில்களை நிலைநிறுத்தல், புதிய தொழில்களைச்செய்ய ஆலோசனை முதலியவைகள் சொல்லுதல், மாகாணத்தில் நடந்தேறிவரும் தொழிற்படிப்பை மேல் விசாரணை செய்தல், தொழில்விஷயமான சட்டதிட்டங்கள் செய்யவேண்டி வந்தால் கவர்ன்மெண்டுக்கு ஆலோசனை சொல்லுதல். விவசாய இலாகா வேறிருப்பதால் அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லையாகையால் பொதுக் கல்வியை முற்படுத்த கல்வி இலாகாவும், விவசாய அபிவிருத்தியை உண்டு பண்ண விவசாய இலாகாவும், தொழில்களை முன்னுக்குக்கொண்டு வரவேண்டிய முயற்சிகளுக்குச் சாதகம் செய்ய தொழில் இலாகாவும் ஏற்பட்டிருக்கின்றன.

---

வற்றியவோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி—நாலடி



## மற்றவர் மாட்சி

**பிற்பட்ட ஜாதிகளின் படிப்பு**—சென்னை கல்வி இலாகாத் தலைவர் தமது 1912-13 வருஷத்துரிபோர்ட்டில் எல்லாவழிகளிலும் படிப்பு அபிவிருத்தியாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறார். பஞ்சமர்களில்மட்டும் பிரஸ்தாப வருஷத்தில் 7750 பிள்ளைகள் அதிகமாய்ப்படித்தார்களென்றால் அந்த வகுப்பார் கல்வியில் அபிவிருத்தியெய்தி வருவது நன்கு விளங்குகின்றது. மகமதியரும் முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். நமது ஜாதியாரோ கல்வியில் கவனம் வையாமலே கழிவுற்று வருகிறார்கள். இஃதென்ன கொடுமை!

**புரோகிதர்களுக்த ஒருசட்டம்.**—பரோடா சமஸ்தானத்தில் சுபாசுப விசேஷங்களை நடத்திவைக்கும் புரோகிதர்கள் சட்டமொன்று செய்ய ஒரு மசோதா அந்த சமஸ்தான சட்ட சபையில் பிரேரேபிக்கப்படப் போகிறது. புரோகிதர்கள் சுபாசுபங்கள் செய்து வைக்கவேண்டுமானால் அவர்கள் புரோகிதப் பரீட்சையில் தேறியிருக்கவேண்டுமாம். இது நல்லஏற்பாடே! இப்படித் தேர்ச்சிபெற்ற புரோகிதர்கள் நம்முள்ளுமிருப்பார்களானால் பிறஜாதிவசை நாளுக்குநாள் நீங்கி மற்றவர்கள் மதிப்பு கொஞ்சங் கொஞ்சமாய்ச் சித்தித்தலாகும். நம்மவர்கள் குடும்ப வாழ்க்கையுஞ் சீர்திருத்தம் பெறும்.

**வேதபாடசாலை.**—சைவ சமூகத்துப் பிள்ளைகள் வேத சாஸ்திராப்பியாசம் செய்வதற்காக வேத பாடசாலை யொன்று ஸ்தாபிப்பதற்கு 1000-ரூபாயும், சைவ சித்தாந்தத்தின் பழைய நூல்களை அச்சிடுவதற்கு 200-ரூபாயும் வேத பாடசாலையை யொட்டி லைப்ரேரி ஒன்று வைப்பதற்காக 200-ரூபாயும், ஆகமொத்தம் 1400-ரூபாய் ஸ்ரீலட்சுமி பிரசாதர் விஜயநகர சைவ கான்பரன்ஸில் நன்கொடையாகக் கொடுத்தார்.

**தொண்டைமண்டல வேளாளர் கான்பரன்ஸ்.**—சென்னையில் ஒரு ஸ்கூலும், அதை யொட்டி ஹோஸ்டல் ஒன்றும் ஏற்படுத்த வேண்டுமென்பது அவசியமென்ற விஷயம் ஷை கான்பரென்ஸில் பேசப்பட்டது. அவ்விரண்டையும் ஸ்தாபிப்பதற்கு பண்டு இல்லையென்றும் தற்காலம் ஸ்கூலைவிட ஹோஸ்டல் மிகவும் அவசியமாகையால் ஹோஸ்டல் ஒன்று ஸ்தாபிப்பது அத்தியாவசியமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுதே 30000 ரூபாய்க்கு சந்தாப்பட்டியில் கையொப்பஞ் செய்யப்பட்டது. ஹோஸ்டல் ஒன்று ஏற்படுவதற்கும், வேளாளர் வகுப்புப் பிள்ளைகளில் சாமர்த்திய முள்ளவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதற்கும் மேற்கண்ட சந்தாத்தொகை உபயோகப்படுத்தப்படும்.

**திருவல்லிக்கேணி சம்ஸ்கிருத பெண் வித்தியாசாலை.**—திருவல்லிக்கேணி ஸைடோஜி சந்து 17-வது நெம்பர் வீட்டில் 1913-ம் வருஷம் டிசம்பர் மாதம் 13-ந் தேதி முதல் சம்ஸ்கிருத பெண்வித்யாசாலை யொன்று பண்டித தம்பதி தீக்ஷிதகமலா, லக்ஷ்மண சிரௌதிஇவ்விருவரால் ஸ்தாபிக்கப்பட்டு நிரம்ப ஒழுங்காய் நடந்து வருகிறது. ஆரம்பத்தில் 30 பெண்கள் வாசித்து வந்தார்கள். இப்பொழுது 70 பெண்கள் வரையிலும் வாசித்து வருகிறார்கள். அவர்களில் 10வயதுப் பெண்கள்முதல் 28-வயது ஸ்திரீகள் வரையிலும் இருக்கிறார்கள். ஸ்கூலில் தீக்ஷித கமலாம்பாளும், ஸ்ரீ லக்ஷ்மண சிரௌதியும் ஆகிய இருவர் உபாத்தியார்களாக இருக்கிறார்கள். ஸ்கூலுக்கு மாதம் ஒன்றுக்கு 75ரூபாய் வரையிலும் செலவாகிறது. சந்தாப்பணம் வசூல்செய்து செலவு செய்யப்படுகிறது. இந்தஸ்கூலில் ஸம்ஸ்கிருத வாசக புஸ்தகங்கள், ரகுவம்ஸம், குமார சம்பவம், சம்பு ராமாயணம், இன்னும் மற்ற காவியங்கள், ஸ்மிருதி, கீதைமுதலிய ஸாஸ்திரங்கள் கற்பிக்கப் பட்டு வருகின்றன. பெண்களுக்கு இவ்வளவும் நடந்துவரும்போது, நம்முள் ஆண்கள் விஷயமே அம்பலத்திலிருக்கிறது.

**பார்க்கவகுலச்சங்கம்.**—பாக்கவகுலச் சங்கம் தஞ்சை ஜில்லா மன்னார்குடி தாலூக்கா பழையனூரில் 16-5-14, 17-5-14-ல் நடைபெற்றது. மிஸ்டர் S. கோபாலஸ்வாமி உடையார் முதல் நாளிலும், மிஸ்டர் S. குழந்தைவேலு உடையார் மறுநாளிலும் அக்கிராஸனம் வகித்தார்கள்.

**கருணீகர்முயற்சி.**—சேலம், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களிலுள்ள கருணீகஜாதியார் "ஸ்ரீகருணீககுலாபிவிருத்தி சங்கம" என ஓர் சங்கம் ஸ்தாபித்துப் பல கிராமத்தாரும் வந்துகூடச் சௌகரியமான இடங்களில் செண்டர்கள் நியமித்து மாதம் ஒருதடவை மீட்டிங்கூடி தங்கள் வம்சக் குழந்தைகள் தேச பாஷைகளிலும் தற்காலஜீவனோபாய பாஷையாகிய இங்கிலீஷிலும்தேர்ச்சி

பெறத் தக்கவழிகளை ஆலோசித்து சாதாரண எழ்மை நிலையிலுள்ள பிள்ளைகளில் சுறுசுறுப்பும் புத்தி கூர்மையுமுள்ள மாணாக்கர்கட்கு மாதச் சம்பளமும் வஸ்திர ஆகாரச்செலவும் கொடுத்துக் கல்விகற்பிக்க ஒரு தர்ம நிதி சேகரித்து வருகின்றனர். இதை நமக்கொரு பாடமாகக் கொள்ளவேண்டியவர்களா யிருக்கிறோமல்லவா?

**ஆரிய வைசியரின் கல்வி.**—ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி தேவஸ்தான தர்ம ஸ்தாபனங்கள், சிங்கஞ்செட்டி எதிந்தருலு செட்டி தர்ம ஸ்தாபனங்கள், அரங்கநாயகம்மாள் தர்ம ஸ்தாபனங்கள், B. மாதவ செட்டி தர்ம ஸ்தாபனங்கள், பப்பி செட்டி ராகவய்ய செட்டி தர்ம ஸ்தாபனங்கள், இவைகளின் பிரதிநிதிகள் கூடிய கமிட்டி யொன்று எற்பட்டிருக்கிறது. ஸ்காலர்ஷிப்புகள், புஸ்தகங்கள், சாப்பாடு வசதிகள் முதலியவைகள் தேவையாயிருக்கும் எழை வைசிய மாணவர்களுக்கு கொடுக்கப்படும். தொழிற் படிப்பைக் கற்றுக் கொள்ளுவதற்காக அன்னிய தேசங்களுக்குப்போகப் பிரியமுள்ள மாணவர்களுக்கும் சகாயஞ்செய்யப்படுகிறது. ஆரிய வைஸியரென்னும் கோமுட்டி ஜாதியார் மிகுந்த தனவந்தர்களாயிருப்பதினால் அவர்கள் தமது குலமாணவர்களுடைய வித்தியாபிவிருத்திக்காக வருஷந்தோறும் பல்லாயிர ரூபாய்களைச் செலவழித்து வருகிறார்கள். எழையரும் குலாபிமானப்பற்று மிகக் குறைந்தவருமாகிய நம்மவர்கள் கொஞ்சமட்டிலேனும் நமது குலப்பிள்ளைகளுடைய கல்விக்குத் துணைசெய்ய ஆரம்பித்தாற்போலும். இதற்காக நமக்கொரு நிதி யேற்படுத்துவதைப்பற்றி வேறிடத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

**ஸீக்கியரின் கல்வி அபிவிருத்தி.**—இந்தியாவின் வட மேற்கிலிருக்கும் பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஜலந்தர்நகரில் ஸீக்கியர்களுடைய கல்விக் கான்பரென்ஸ் சமீபத்தில் நடந்தது. கல்வி அபிவிருத்தியின் பொருட்டு, சென்ற வருஷத்தில் 60 ஆயிரம் ரூபாய் வசூலாயிருக்க, இவ்வருஷத்தில் வசூலான தொகை லட்சம் ரூபாயாகும். இந்தத்தொகையில் 35,000 ரூபாய் நாஷனல் பண்டுடன் சேர்க்கப்படும். சென்றவருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷத்தில் 1000 பேர்கள் அதிகமாக வந்திருந்தனர். மேற்சொன்ன லட்சம் ரூபாயில் பெரும்பாகம் கனடாவிலும், யுனைடெட்ஸ்டேட் விலுமிருக்கும் ஸீக்கியர்களால் உதவப்பட்டதாகும். லாகூரில் பிரசுரமாகும் "பெய்ஸா ஆக்பர்" என்ற தினசரி தேசபாஷைப் பத்திரிகை பின் வருமாறு எழுதுகிறது:—

"கானடாவிலும் யுனைடெட்ஸ்டேட்விலும் தங்கியிருக்கும் ஸீக்கியர்கள் தங்கள் தேசத்தைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட உபயோகமுள்ளவர்களா யிருப்பார்கள் என்பது நிச்சயம். லாகூர் ஹிமயாதி இஸ்லாம் 8000 ரூபாய் வசூல்செய்ததையும், மேற்கண்ட லட்சம் ரூபாயையும் ஒப்பிட்டுப் பாருங்கள். முஸ்லிம்கள் எழைகளென்பது உண்மைதான். எழையா யிருப்பதுடன் மூடத்தனமாகவு மல்லவா யிருக்கிறோம்! கல்வியைவிட வேறு விஷயங்களை முக்கிய மென்று கொண்டாடுவது நம்மிடமுள்ள மூடத்தனம். கல்வி விஷயத்தில் ஸீக்கியர்களுக்குள்ள உற்சாகத்தை நாம்கொண்டாடுகிறோம்" முஸ்லிம்பத்திரிகை தமது ஜாதியாரைப்பற்றி இவ்வாறெழுதுமானால் நமது ஜாதியாரைப்பற்றி இங்கு என்னெழுதுவதோ!

**கலியாணச் சீர்திருத்தம்.**—சென்ற வைகாசி மாதத்தில் கோபால சமுத்திரம் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் மிஸ்டர் கோபால கிருஷ்ணய்யர் B. A. L. T. யினுடைய குமாரத்தியை சுத்தமல்லியில் தீக்ஷிதருடைய பேரன் முத்துசாமி என்ற பையனுக்கு கலியாணஞ் செய்து கொடுத்தார்கள். மாப்பிள்ளை ஸ்கூல் பைனல் பரீக்ஷைக்குப் போயிருக்கிறான். தூத்துக்குடியில் உத்தியோகம் செய்துவரும் வக்கீல் மிஸ்டர் விசுவநாதய்யருடைய தமயன் பிள்ளை. மேற்படி விசுவநாதய்யர் தான் சென்ற 5, 6 மாதகாலங்களாய் இந்தியா முன்னுக்கு வருவதெப்படி என்ற வியாசம் நன்றாய் எழுதுவோர்க்கு இரண்டு பரிசு அளிப்பதாக ஹிந்துப் பத்திரிகையிலும், சுதேசமித்திரனிலும் பிரசுரஞ்செய்தவர். வைகாசி மாதம் 2-ந்தேதி யன்று நிச்சயஞ்செய்து பெண்வீட்டில் $1\frac{1}{2}$நாள் கல்யாணம் நடந்தது. முகூர்த்தத்துக்கடுத்த மறுநாள் சாயங்காலமே பெண் மாப்பிள்ளை அக்கினிஹோத்திர சகிதமாக கோபாலசமுத்திரத்திற் கப்புறமிருக்கிற சுத்தமல்லியில் கிருகப்பிரவேசஞ் செய்து மற்ற வைதீகங்களை மந்திரலோபமன்னியில் செய்து சம்பந்திகளுக்கும் சிநேகிதர்களுக்கும் விருந்திட்டு மற்றை இரண்டுநாள் வைதீகச்சடங்குகளும் சுத்தமல்லியிலேயே நடந்தன. இவ்விதச் சுலபவிவாகங்கள் நம்மவர் என் செய்யலாகாதோ?



**செங்குந்தர் முதல் கான்பரென்ஸ்.**—செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தாரின் ஆதரணையின்கீழ் மே மாதம் 7-ந்தேதியன்று கோயமுத்தூர் ஜில்லாவைச்சேர்ந்த சென்னிமலையில், மேற்கண்ட கான்பரென்ஸ் கூடிற்று. கோயமுத்தூர், சேலம் மதராஸ் முதலிய விடங்களிலிருந்து சுமார் 300 ஜனங்கள் வரையிலும் வந்திருந்தார்கள். அபிமானிகள் சிலரும் வந்திருந்தார்கள். உபசரணைக் கமிட்டி சேர்மன் டெலிகேட்டுகளை உபசரித்து ஒரு அட்ரெஸ் வாசித்தார். கரூர் மிஸ்டர் N. சச்சிதானந்த முதலியார் எதோ சில அசந்தர்ப்பங்களினால், வரச்சரிப்படாததினால், தொழிற் கல்வியின் எடிட்டரான மிஸ்டர் T. நாகலிங்க முதலியார் அக்கிராசனம் வகித்தார்.

சபா நாயகர் ஆங்கிலேயருடைய ஆட்சியில் இந்தியர்களாகிய நாம் அடைந்துவரும் பல நன்மைகளை யெடுத்துச் சொன்னார். செங்குந்தர் வகுப்பாரின் வரலாறு, அவர்கள் கல்வியில் முன்னேற்றமடைந்தது, அச் சமூகத்தாரின் தற்கால பரிதாபமான நிலைமை, இவைகளைப் பற்றியும் பேசினார். அதன் பிறகு சில டெலிகேட்டுகள் நல்லொழுக்கப் படிப்பின் அவசியம், பிரதமப் படிப்பு, தொழிற் படிப்பு முதலிய விஷயங்களைப்பற்றி வியாசங்கள் வாசித்தார்கள். அச்சமூகத்தாரின் பரம்பரைத் தொழிலான நெசவுத் தொழிலின் அபிவிருத்தியைப் பற்றியும் அச்சமூகத்தாரின் படிப்பு அபிவிருத்தியைப் பற்றியும் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. அச்சங்கத்தாரின் அபிவிருத்தியின்பொருட்டு செய்ய வேண்டிய பல காரியங்களுக்கு வேண்டிய பணத்திற்காக, பண்டு ஒன்று சேர்க்கப்பட்டது. அடுத்த வருஷத்திய கான்பரென்ஸ் கோயமுத்தூருக் கருகிலுள்ள பேரூரில் கூடும்.

**தார்வார்நெசவுக்காரர்.**—பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த தார்வார் பட்டணத்தில் ஒரு நெசவுக்காரரின் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. விவசாயிகளும், நெசவுக்காரர்களும், தோல் தொழில் செய்வோரும், ஐக்கியநாணயச் சங்கங்கள் ஸ்தாபித்துக்கொண் டிருப்பது போல, தார்வாரிலுள்ள நெசவுக்காரர்கள் இந்தச் சங்கத்தை ஸ்தாபித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சங்கம் நெசவுக்காரர்களுக்குச் சகாயஞ் செய்யும் மாதிரியில் விசேஷமானது ஒன்றுமில்லை. அது நூல்களை மொத்தமாய் வாங்கி மெம்பர்களுக்கு ரூபாய்க்கு மூன்றுதம்பிடி லாபம் வைத்துக்கொண்டு சில்லரையாய் விற்கின்றது ஆகையால் இதுவரையில் சௌகார்களிடத்திலிருந்து நூல்கள் பெற்று நஷ்டமடைந்த நெசவுக்காரர்கள் இந்தச் சங்கத்தால் நஷ்டமில்லாமல் நூல்கள் பெறச் சக்தியுள்ளவர்களாகிறார்கள். இந்த நூலை வாங்கித் துணிகள் செய்து அந்தத் துணிகளைச் சங்கத்தில் வைத்து ஒன்றுக்கு முக்கால் விகிதம் கடன் வாங்குகிறார்கள். பொதுவைவைத்த துணிகளை வாரம் ஒருமுறை மார்க்கெட்டுக்குக் கொண்டுபோய் விற்றுப் பார்க்கலாம். அப்படி பலமுறை கொண்டுபோய் துணிகள் விற்றுப்போனால் சங்கத்திற்குக் கொடுத்ததுபோக, பாக்கிப் பணத்தை மெம்பர்கள் எடுத்துக்கொள்வார்கள். இப்பெரு நன்மையைத் தவிர மெம்பர்களின் ஒழுக்கமும் இந்தச் சங்கத்தினால் அபிவிருத்தி ஆகின்றது. இந்தச் சங்கத்து ஆபீசுக்கட்டடத்தில் மெம்பர்கள் சேர்ந்து பேசவும் படிக்கவும் பொழுது போக்கவும் அனுகூலம் பெறுகிறார்கள். இவர்களைச் சேர்ந்த சிறுவர்கள் அங்கு ஸ்தாபிக்கப்பட் டிருக்கும் சர்க்கார் நெசவு ஸ்கூலில் சேர்ந்து படிப்பதுமன்றி, விசைத்தறியில் நெசவு செய்யக் கற்றுக்கொள்கிறார்கள். மெம்பர்களும் புதிதான தறிகளைத் தருவித்தோ, செய்தோ, நெசவுசெய்யக் கற்றுக் கொள்கிறார்கள். இந்தச் சங்கத்தினால் இதைச் சேர்ந்த மெம்பர்கள் தங்களுக்கு வழக்கமான துர்க்குணங்களை அகற்றுகிறார்களென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. சோம்பல், பொய் சொல்லல், கட்குடித்தல், அக்கரை யின்மையாதி துர்க்குணங்கள் வர வர விலகுகின்றன. இவ்வித ஐக்கிய நாணய சங்கமொன்றை நமக்கு மேற்படுத்திக் கொள்ளவேண்டாமா?

---

## எச்சரிக்கை!

தங்கள் சொந்த லாபத்தை யுத்தேசித்து உழைப்பவர்களாகிய சிலர், நமது சபைப்பெயரை யுபயோகித்துக்கொண்டு சில விடங்களில் தண்டல்செய்து வருவதாகக் கேள்விப்படுகிறோம். நமது சபைத்தலைவராகிய ஸ்ரீ சோமங்களம். கந்தசாமி ஆச்சாரியா ரவர்களுடைய கையெழுத்து கொண்ட அதிகார பத்திரம் காட்டுகிறவர்களுக்கன்றி, மற்றெவருக்கும் நமது சபைக்கென்றாவது, விஸ்வகர்மன் பத்திரிகைக்கென்றாவது எவரும் ஒரு காசுங் கொடுக்கலாகாதென்று இதனால் தெரிவிக்கப்படுகின்றது.

## மதிப்புரை

**தென்பழநிமலை முருகேசர் பதிகமும் 64-அடி ஆசிரிய விருத்தமும்**—ஸ்ரீ மௌனகுரு V. ருத்திரமூர்த்தி ஆச்சாரியாரவர்களால் இயற்றப்பட்ட இவைபடங்கிய சிறு புத்தகமொன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. ஷையாருடைய கவிவன்மையையுஞ் சொல்லொழுக்கையும்பற்றி நமது வாசகர்கள் நன்கறிந்திருக்கிறார்களாதலால், இவற்றைச் சிலாகித்து நாம் அதிக மெழுத வேண்டியதில்லை. இத்தகைய கவிவல்லவர்கள் சுஜாதி சம்பந்தமாகப் பாரகாவியங்களியற்ற மனங்கொள்வார்களானல், குலத்திற்குப் பெருநன்மை விளைத்தவர்களாகி என்றும் மாறாக்கீர்த்தி யெய்தியிருப்பரென்பது நிச்சயம். இதை நமது நண்பர் இனியேனுங் கவனிப்பாரென்று எதிர்பார்க்கிறேம்.

**ஸ்ரீராம பராக்கிரமம்.**— இது காஞ்சீபுரம் ஸ்ரீ. தி. அரங்கசாமிநாயுடு அவர்களால் எழுதப்பட்டது. ஸ்ரீராமர் திருவவதாரம், தாடகைசம்ஹாரம், அஹல்யாசாப விமோசனம், சீதாகல்யாணம், பரசுராம சர்வபங்கம், விராதன்வதை, சரபங்கர் ஜென்மசாபல்யம், கரதூஷணவதம் முதலாக இராமாயணத்திற் கூறப்பட்டிருப்பவை இந்நூலில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. ஹநுமப்பிரடாவமுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இடையிடையே கம்பராமாயணச் செய்யுள்கள்சில பொருத்தமா யெடுத்தாளப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தின் விலை அணு 6. சென்னை வேப்பேரி போஸ்ட், சரவணப்பெருமாள் வீதி, 18-வது நெம்பர் வீட்டிலுள்ள R. முருகேசப்பிள்ளை கம்பெனியிற் கிடைக்கும்.

**பாத்தையர் கேண்மைவிலக்கு.**—இதனை யாக்கியவர் கோயமுத்தூர் சாரதா விலாஸ சபையின் காரியதரிசியும் நமது நண்பருமாகிய ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள். வேசியராசையால் விளையுந் துன்பங்களையெல்லாம் இந்நூல் வித்தாரமா யெடுத்து விளக்குகின்றபடியால், இது பலராலும் வாசிக்கப்படவேண்டிய அருமைவாய்ந்தது. திருக்குறளாதியாய 51-கிரந்தங்களிலிருந்து ஷை விஷய சம்பந்தமான பாடல்களை நூற்றுக்கதிகமாய் இதல் மேற்கோளா யெடுத் துபயோகித்து ஆசிரியர் நீதிபோதஞ் செய்யுமுறை மிகச் சிலாகிக்கத் தக்கதாயிருக்கிறது. "இவர்கள் (வேசிகள்) தரிசனமே சகலகேடுகளுக்குங் காரணமாயிருக்கிற தென்பதைக் கடைப்பிடித்து, இவர்களைக் கல்யாணமுதலிய விசேடகாலங்களில் வீட்டுக்கழைத்து ஆடல்பாடல்களைக் கேட்டுற்சாகப்படுவதையும், தேவாலயங்களில் இவர்கள் பார்வைக்குட்படுவதையும், நாம் கட்டோடு நீக்கிவாழ்வது உத்தமதருமமாயிருப்பது மன்றி, நமது பிள்ளைகளுங் கெட்டுப் போகாது வாழவுங் காரணமாயிருக்கும்" என்றும், "விலைமாதர்களி னில்லஞ்சென்று பல்லோரா லனுபவித்துவரும் பாண்டத்தன் சுவையைக் கருதி நவையையடையும் மானிடர்க்கும், வீதியிற் கிடக்கும் பல எச்சிலையில் மிச்சமாயிருக்கும் போசனத்தை யுண்டுகளிக்கும் சுணங்கனுக்கும் பேதமுளதோ" என்றும், "விசேஷ செலவுகள் செய்து வெகு சிறப்பாய் விவாகாதிகளை முடித்தாலும், சதிர்வைக்காதவரை வெகுலோபி யென்றும் கிருபண (தரித்திர) ரென்றும் பல பெரியமனிதர்கள் நிந்திப்பதாய்ச் சிலரஞ்சுகின்றனர். காரிய சுவரூபத்தைக் கவனியாமல் பிறர்புகழ்வதையும் நிந்திப்பதையும் மாத்திரம் யோசிப்பது விவேகத்துக்கடுத்த காரியமாகமாட்டாது. உண்மையாய்ப் பசிதாகங்களால் பீடிக்கப்பட்டு வருந்துவோர் பலவாறாய்ப் பஞ்சிக் கெஞ்சி நம்மை வேண்டிக்கொண்டும் நம்முடைய மனமிரங்காமை கண்டு வயிறெரிந்து பரிதவித்து நம்மை லோபியென்று நிந்திக்கத்தொடங்கினல் நாம் அதற்கஞ்சாமற்போவதுமாத்திரமேயன்றி வெகு ஆக்கிரகமடைகிறேமே, அப்படி நியாயமான நிந்தைக்குத் துணிந்த நாம் அக்கிரமமான நிந்தைக்கு அஞ்சுவது என்னயுக்தியோ தெரியவில்லை" யென்றும் இன்னும் பலவாறாகவும் உத்தமக்கருத்துகள்பல வாசிப்போருள்ளத்து ஊன்றிப் பதியுமாறு அழுத்தமா யெழுதப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தை நம்மவர்கள் முக்கியமாய்ப்பெற்று வாசிக்க விரும்புகிறேம். விலை அணு 4. கோயமுத்தூர் சாமஸ்வீதி 118-வது கிருகத்திலுள்ள இதனசிரியரிடமிருந்து பெறலாம். நமது பார்வைக்கு அன்போடனுப்பப்பட்ட "தமிழ்ப்புலவர் வாலாறு" என்னும் இவ்வாசிரியரா லியற்றப்பட்ட மற்றொரு கிரந்தத்தைப்பற்றி மறுமுறை யெழுதுவோம்.

---

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்—**குறள்**



## வியவகாரப்போக்கு

**பொதுவாகத் தருமத்திற்குச் சொத்தேற்படுத்துவது** டம்பாச்சாரி என்று சென்னையில் விசேஷமாக வழங்கப்பட்டவரான சிந்தாதிரிபேட்டை அருணசலமுதலியாரின் குமாரராகிய காலஞ்சென்ற கோ. ஷண்முகசுந்தரமுதலியார் எழுதிவைத்த உயிலைப்பற்றி ஹைகோர்ட்டில் அந்த ஷண்முகஸுந்தர முதலியாரின் சகோதரியால் தாவா செய்யப்பட்டிருந்தது. ஜஸ்டிஸ் மிஸ்டர் பேக்வெல் முன் அது சம்பந்தமாக விசாரணை நடந்தது. குறிப்பிட்டெழுதாமல் பொதுவாகச் சொத்துக்களை அவர் தர்மத்துக்கென்று எழுதிவிட்டது செல்லாதென்றும், அடுத்தவாரஸாகிய தனக்கு சொத்துக்கள் கிடைக்கவேண்டுமென்றும் அந்த அம்மாளுடைய தாவா. முதல் பிரதிவாதியும் இரண்டாம் பிரதிவாதியும் உயில்படி நடத்தவேண்டியவர்கள். உயில் மூலம் தனக்கு சொத்து கொடுக்கப்பட்டதாக மூன்றும் பிரதிவாதி பாத்தியம் கொண்டாடுகிறவர். இரண்டாம் பிரதிவாதியின் பிள்ளையாகிய நாலாவது பிரதிவாதி இறந்துபோனவருக்குத் தான் ஆண் பந்து என்றும் ஆகையால் பெண்பந்துவாகிய வாதியைவிடத் தன்னுடைய பாத்தியமே சிரேஷ்டமென்றும வாதிக்கிறார். ஐந்தாம் பிரதிவாதி தான் தாயாதி என்றும், ஆகையால் மற்றெல்லாப் பிரதிவாதிகளிலும் தானே சரியான வார்ஸ் என்றும் வாதிக்கிறார். வாதிக்காக மிஸ்டர் V. மாசிலாமணிப்பிள்ளை ஆஜரானர். தருமத்தைப் பற்றின வரையில் உயிலின் நிபந்தனைகள் செல்லக் கூடியன வல்லவாகையால் உயில் ஏற்படாததாக வைத்துக்கொண்டே வார்ஸை நிதானிக்க வேண்டுமென்று அவர் சொன்னர். இரண்டு, நாலு பிரதிவாதிகளுக்காக ஆஜரான மிஸ்டர் C. P. ராமஸ்வாமி அய்யரும், மிஸ்டர் சந்தரசேகர அய்யரும், மிஸ்டர் மாசிலாமணிப் பிள்ளையையே ஆதரித்துப் பேசினர்கள். முதல் பிரதிவாதிக்காக ஆஜரான மிஸ்டர் R சுப்பிரமணிய அய்யர் இறந்துபோனவர் உயிருடனிருந்த காலத்தில் என்ன தருமங்களைச் செய்து வந்தாரோ அந்த தருமங்களையே நடத்தவேண்டுமென்று விரும்பினரென்று உயிலைக்கொண்டு தெரிகிறதென்று வாதித்தார். பொதுவாகத் தர்மத்துக்குச் சொத்தை ஏற்படுத்திவிட்டதாக உயிலில் எழுதியிருந்தது செல்லாது என்று வாதியும், இரண்டாம் பிரதிவாதி, நாலாம்பிரதிவாதிகளும் சொன்னதை ஜட்ஜ் ஒப்புக்கொண்டு அப்படியே தீர்ப்பு செய்தார். இறந்துபோனவருக்கு யார் வார்ஸென்று ஏற்படுகிறதோ அவருக்கு முடிவாகச் சொத்து கிடைக்க வேண்டுமென்று தீர்ப்பு செய்தார். யார் வார்ஸென்ற விஷயம் தனியாய் முடிவு செய்யப்படும்.

---

## ஏஜண்டுகள் தேவை.

நமது பத்திரிகைக்கு ஜில்லா ஏஜண்டுகளும் சுற்றுப் பிரயாணஞ் செய்யும் ஏஜண்டுகளும் வேண்டும். நல்ல சம்பளமும் கமிஷனு முண்டு. விபரம் மானேஜரிடம் அறியலாம்.

## விசேஷ வர்த்தமானம்

**நீரிழிவுநோய்** —சென்னைக் கவர்ன்மெண்டார் இத்தென்னிந்தியாவில் பலபேரைத் தாக்கிவரும் நீரிழிவு நோயைபபற்றி விசாரணை நடத்தப் போகிறார்கள்.

*
* *

**பச்சைக் கற்கள் அகப்பட்டன.**—கன்னம்பாடியில் காவேரி நதிக்கு அணை கட்டுவதற்காக அதற்குச் சமீபத்தில் பூமியைத் தோண்டுகையில், விலையுயர்ந்த சிறந்த பச்சைக் கற்கள் அகப்பட்டனவென்று சொல்லப்படுகிறது.

*
* *

**ஸ்ரீரங்கத்தில் ஒரு ஆயுர்வேத டிஸ்பென்சரி.**—ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் புதிய இலவச ஆயுர்வேத டிஸ்பென்ஸரி ஒன்று ஸ்தாபிப்பதற்கு மிராசுதார் Mr. R.K. பிரஸன்ன வெங்கடேஸ்வரர் 30,000 ரூபாய் நன்கொடை செய்திருக்கிறார். அந்தப்பணம் திருச்சினப்பள்ளி அர்பன்பாங்கியில் போடப்பட்டிருக்கிறது. அதிலிருந்துவரும் வட்டிப்பணத்தைக் கொண்டு அந்த டிஸ்பென்ஸரி கூடிய சீக்கிரத்தில் திறந்து நடத்தப்படும்.

*
* *

**சிங்கத்தைப் புலிகொன்றது.**—நியூயார்க்கிலுள்ள மிருகங்களடைக்கப்பட்டிருக்கும் சிங்காரத் தோட்டத்தில ஹியூஹெர்டா என்ற ஒரு சிங்கம் ஒரு கூண்டிலும் அதற்கடுத்த கூண்டில் **ராஜா** என்ற ஒரு வங்காளப் புலியும் அடைக்கப்பட்டிருந்தன. அச்சிங்கம் திறந்து வைக்கப்பட்டிருந்த கதவின் வழியாகப் புலிக் கூண்டில்சென்றது. இவ்விரண்டு மிருகங்களும் ஒன்றன்மீது ஒன்று பாய்ந்து கோரமாய்ச் சண்டைசெய்தன. அச்சண்டையிலிருந்து விடுவிப்பதற்கு ஜனங்கள் பட்டபாடு வீணயிற்று. ஒரு மணிநேரம் சண்டை நடந்த பிறகு புலி சிங்கத்தின் கழுத்தை முறித்து அதைக் கொன்றுவிட்டது.

* *

**ஓர் எச்சரிக்கை.**—மைசூரில் வசித்துவந்த ஒரு ஹிந்துச்சிறுவன் தன் வீட்டு மேல்மாடிக்குச் சென்று அதனருகே தந்திக்கம்பி யிருப்பதைக் கண்டு அதைத் தொட்டுப்பார்த்தால் எப்படி யிருக்குமென்றறிய ஆவல் பூண்டு அக்கம்பியைத் தொட்டுப் பார்த்தான். உடனே அவன் பிரக்ஞையற்றுக் கீழே விழுந்துவிட்டான். அவன்கை நன்றாய் வெந்துபோய்விட்டது. ஆகையால் அக்கையைவெட்டி யெறிந்துவிடவேண்டுமென ஊகிக்கப்படுகிறது. அப்பையன் தந்திக்கம்பியைத் தொட்ட பொழுது, மின்சாரசக்தி மிகவும் குறைவாயிருந்ததினல் அவன் கைமட்டும் சேதமாயிற்று. மின்சாரசக்தி மிகவும் வேகமாய் இருந்திருக்குமேயானல் காரியம் வேறுவிதமாய் முடிந்திருக்கும்.

**ஜப்பான் பெண்களின் வீரம்.**—அலிப்பூர் நகரின் ஒரு வீட்டில் ஒரு ஜப்பானிய ஸ்திரீ வசித்து வருகிறாள். சில தினங்களுக்குமுன் ஒரு திருடன் அவள் வீட்டில் கன்னமிட்டு உள்ளே நுழைந்து சில சாமான்களைத் திருட யத்தனித்தான். இதனை யறிந்ததும் அந்த ஸ்திரீ கூக்குரலிட்டாள். அக்கூக்குரலைக் கேட்டவுடனே ஆறு ஜப்பானியச் சிறுமிகள் ஓடிவந்து, அத்திருடன்மீது விழுந்து அவனைப்பிடித்து அருகே யிருந்த தூணில் கயிறுகொண்டு கட்டிவிட்டார்கள். பொழுது புலர்ந்ததும், தாங்கள் திருடனைக் கட்டிவைத்திருப்பதாகப் போலீஸாருக்கு அறிவிக்கவே, போலீஸார் அவன்மீது ஒரு கேஸ் நடத்தினார்கள். மாஜிஸ்டிரேட் அவனுக்கு ஒருமாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

*
* *

**ஸ்ரீதனக் கொடுமையால் தற்கொலை.**—டக்கா நகரிலிருக்கும் ஒரு கிராமத்தில் வசித்துவந்த ஸுதபால தேவி என்ற பெண் தன் புருஷன் வீட்டார் செய்த கொடுமையால் தற்கொலை செய்துகொண்டாள். ஒரு வருஷத்திற்கு முன்புதான் அப்பெண்ணுக்கு விவாகம் நடந்தேறியது. அச்சமயம் அவள் தாய் தன் கையிலிருந்த பணத்தை யெல்லாம் ஸுதபாலதேவியின் விவாஹத்தில் செலவு செய்துவிட்டாள். நிற்க, 200 ரூபாய் கொடுத்தால்தான் ருதுசாந்தி செய்துகொள்வதாக அப்பெண்ணின் கணவன் அறிவித்தான். விவாஹமாவதற்கு முன் அப்பெண்ணின் தந்தை காலமாயினர். புருஷனை யிழந்து கையில் பணமில்லாது பரிதவிக்கும் நான் ரூபாய் 200 கொடுக்க முடியாததால், என்னிலைமையை யுத்தேசித்து ஸ்ரீதனம் கேளாதிருக்க வேண்டுமென அப்பெண்ணின் தாய் மிகவும் விண்ணப்பித்துக் கொண்டாள். என்றாலும், பிள்ளை வீட்டார் இவ்வேண்டுகோளைக் கவனியாமல் அப்பெண்ணை மிகவும் கொடுமை செய்து வந்தார்கள். இதனைப் பொறுக்க முடியாத அப்பெண் "ஸ்ரீதனம் கொடுக்காது போனால் என் கணவன், மாமன் முதலியோர் ருதுசாந்திக் கலியாணத்தை நிறைவேற்றத் தயாராயில்லாததோடு, என்னையுந் தள்ளிவைத்து விடுகிறதாகச் சொல்லி வருகிறார்கள். மேலும் அவர்கள் செய்துவரும் கொடுமையைத் தாங்கமுடியவில்லை. ஆகவே என் உயிர் நெடுங்காலம் நீடித்திராது" எனப் பலமுறை தன் தாய்க்குக் கடிதமெழுதிவந்தாள். கையிலொரு காசுமில்லாத அவள் தாய் என் செய்வாள்! "என் பாட்டனாரை யோசிக்கவில் ரூபாய் 200 கொடுபடாது போனால் காரியம் விபரீதமாய் முடியுமென அவரும் சொல்லுகிறபடியால் உடனே பணத்தை யனுப்பவேண்டு" மென்று ஸுதபால தேவியின் கணவனது சகோதரர் அப்பெண்ணின் தாய்க்குக் கடிதமெழுதினர். ஸுதபாலாவின் தாயினால் ஒரு காசுகூடச் சேகரிக்க முடியவில்லை. ஆகவினால், அப்பெண் தன் உடம்பு முழுதும் கெரோஸின் எண்ணெயை ஊற்றித் தீயை மூட்டிக்கொண்டதனால் சிறிது நேரத்திற்கெல்லாம் இறந்துபோனாள். அத்தருணத்தில் அவளிடம் யாதொரு துக்கக்குறியும் காணப்படவில்லை.

*
* *

**மற்றொரு தற்கொலை.**—டக்கா நகருக்கடுத்த ஒரு கிராமத்தில் வசித்துவந்த அமோகினிதேவி என்ற 15 வயதுள்ள பெண் மன்மதநாத் பானர்ஜிக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். சில மாசங்களுக்கு முன் தன் கணவனை யிழந்துவிட அக்கணமே கணவனுடன் தன் உயிரைப் போக்கிக்கொள்ள முயன்றும், சுற்றத்தார் தடுத்துவிட்டனர். பின்பு தான் பிறந்தவகத்தில் இருந்துகொண்டு, உடலைவிட்டு ஜீவன் பிரியும் அதன் கதி யென்னவென்று அப்பெண் தன் அத்தையைக் கேட்பது வழக்கம். அன்றியும், தம்மிடம் மிகவும் பிரியமா யிருந்த கணவன், மனைவி, தாய், தந்தை, குழந்தை, இவர்களின் ஜீவனோடு நமது ஜீவனும்போய்ச் சேர முடியுமா என்றும் அமோகினிதேவி கேட்பதுண்டு. என்ன காரணத்தைக் கொண்டு அப்பெண் இம்மாதிரி ஆராய்ந்து வருகிறாளென்பதை ஒருவரும் அறியாது போயினர். நிற்க, சென்ற மாதம் ஒருநாளிரவு ஒருவருமறியாமல் தன் அறையைவிட்டுக் கிளம்பி, கோணிப்பை, துணிகளையும் உடம்பில் சுற்றிக்கொண்டு, தீவைத்துக்கொண்டாள். அப்பொழுதுதான் படிக்கச் சென்ற அப்பெண்ணின் மாமன், வீட்டின் ஒரு பக்கத்தில் நெருப்பின் ஜுவாலையைக் கண்டு, அவ்விடம் விரைந்து சென்றுபார்க்க, அவள் சிறிதும் வருத்தப்படாமல் ஜலத்தில் சுகமாய் நிற்பதுபோல் நின்றுகொண்டிருந்தாள். உடனே அவர் கூக்குரலிட, வீட்டிலுள்ளாரனைவரும் திரண்டுவந்து நெருப்பையவிக்கத் தலைப்பட்டனர். கணவன், இறந்துபோனதால் என் மனதைத் தகித்துக்கொண்டிருக்கும் தீயைவிட இப்பொழுது என்னைச் சூழ்ந்திருக்கும் நெருப்பு கடுமையாயில்லையாதலால், அதனை யவிக்கவேண்டா மென்று அப்பெண் மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். பின்பு வைத்தியர்களைத் தருவித்து வேண்டிய சிகிச்சை செய்ய முயன்றும், அவள் ஏற்றுக்கொண்டாளில்லை. ஏன் இம்மாதிரி கடுஞ்சாவை யடையவேண்டுமென்று சுற்றத்தார் கேட்க, அக்கினி தேவனுக்கு உயிரைப் பலிகொடுத்தல் பாவமில்லை யாதலின், இவ்வாறு செய்தேனென அவள் அறிவித்த பின்னர், சிறிது நேரத்திற்கெல்லாம் எவ்வித உபத்திரவமுமின்றித் தூங்குவதுபோல் அப்பெண் சுகமாய் ஆவிதுறந்தாள்.

உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

**1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள**

**சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை**

**462, தங்கசாலை வீதி, சென்னை**

சம்புடம் I] **1914ஹு ஜூலைமீ** [சஞ்சிகை 10

## ஒளிவளர் விளக்கு

1914ஹு ஜூன்மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களின் எண்ணிக்கை 508.

*
* *

நமது சபையின் மேம்பாட்டைக் கருதியுள்ளவர்களாகிய பல கனவான்களுடைய கருத்துக்கிணங்க, இந்தியா கவர்ன்மெண்டின் 1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி நமது சபை ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இனி, இது முன்னினு மதிக ஆதரவுஞ் செல்வாக்கும் பெற்றோங்குதல் நிச்சயமே யாம்.

*
* *

சென்னை 'ஆகாண' பந்துக்கட்டு எஜமானர் ஸ்ரீ மாங்காளி - சியாளப்ப ஆச்சாரியா ரவர்களுடைய அபிமானத்தினாலும், ஷை பந்துக்கட்டாருடைய பெருந்தன்மையினாலும், இப்போது ஷை பந்துஜனங்களுடைய வீடுகளில் நடக்குஞ் சுப சுப காரியங்களில் நமது சபைக்கென்று ஒரு பல தானங் கொடுக்கப்பட்டு வருகிறதென்பதை மகிழ்ச்சியுட னறிவிக்கின்றோம். இம்மாதிரியே மற்று பந்துக்கட்டார்களும் அனுக்கிரகிக்க வேண்டுகிறோம். வெளியூர்களிலிருக்கும் நமது சபை மெம்பர்களும் மற்றவர்களும் இவ்விதப் பலதானம் அங்கங்கிருந்து நமது சபைக்குக் கிடைக்குமாறு உதவிபுரிவார்களாக.

*
* *

பழநித்தலத்து மாஜி முனிஸிபல்கௌன்ஸிலராகிய பண்டித ஸ்ரீ மௌனகுரு-ருத்திர மூர்த்தி ஆச்சாரியாரவர்களாலும் மற்றவர்களாலும் நமது சபையின் புத்தகாலயத்திற் களிக்கப்பட்ட புத்தகங்களின்விவரம் வேறிடத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை ஹைகோர்ட் அபலேட் ஸைட் மானேஜரும், நமது சபையின் நிர்வாகக்கமிட்டி மெம்பர்களி லொருவருமாகிய ஸ்ரீ செஞ்சி-ஆண்டி சுந்தர ஆச்சாரியார், பி. ஏ. பி. எல் அவர்கள் "முத்துவீரியம்" முதலாகச் சில கிரந்தங்களை யளித்தார்கள். இவர்களுக்கு சபையார் மிகவும் வந்தனமுடையவர்களா யிருக்கிறார்கள். கிரந்ததானஞ் செய்வதாக வாக்களித்திருக்கும் மற்ற புண்ணியபுருஷர்களும் சீக்கிரமே தங்கள் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

*
* *

ஆந்திர கீர்வாண பாஷா வல்லவரும், உபந்நியாச வன்மையுடையவரும், குலப்பற்று மிக வாய்ந்தவருமாகிய பெத்தாலூர் ஸ்ரீ சுப்பாச்சா

ரியாரவர்களை நமது பத்திரிகையின் ஏஜண்டாக நியமித்து வெளியூர்களுக் கனுப்பியிருக்கிறோம். நமதுபத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச்சேர்க்கும் உரிமை இவருக்குக் கொடுக்கப்பட் டிருக்கிறது. சுஜாதிக் கனவான்கள் இவரை யாதரித்து தங்களாலியன்ற சகாயம் புரிவார்களென்று வேண்டுகிறோம். ஆச்சாரிப்பட்ட முதலாகக் குலசம்பந்தமா யேற்பட்டுள்ள பல விஷயங்களைப்பற்றிய விபரங்களை நம்மவர்கள் இவரிடமிருந்து கேட்டறியலாம். எவ்வூராராயினும் இவரைத்தம்மூர்க் கனுப்பக் கேட்டுக்கொள்ளும் பக்ஷத்தில் அங் கனுப்பத் தடையிராது. வேண்டுவோர் எழுதிக் கேட்பார்களாக.

*
* *

பெஜவாடா வாசியாகிய ஸ்ரீ வெங்கடராம ஆச்சாரியாரவர்கள் சென்றமாதத்தில் நமது சபைக்கு விஜயஞ்செய்தபோது, ஆச்சாரிப்பட்ட சம்பந்தமாய்ச் சபையார் செய்துவரும் பிரயத்தினங்களை யறிந்து சந்தோஷித்து, இம்முயற்சியில் நேரிடுஞ் செலவுகளுக் குதவும்பொருட்டாக ஓர் நிதி ஏற்படுத்தவேண்டுமென்றும், அப்படி ஏற்பாடு செய்வதானால் தாம் அதற்குப் பத்து ரூபா அளிப்பதாகவுந் தெரிவித்தனர். அவர் கருத்துப்படி செய்தல் நன்மைபயக்கு மென்றே தோன்றுகிறது. பல கிராமவாசிகள் இன்னமும் ஆச்சாரி ஆஸாரி பேதமறியாதவர்களாகவும், ஆச்சாரிப் பட்டத்திற்கு நேர்ந்திருக்கும் ஆபத்தை யறியாதவர்களாகவு மிருக்கின்றார்களன்றோ? அவர்களுக்கெல்லாம் வேண்டியபோதனை செய்து தக்க நடவடிக்கைகள் நடத்துவதற்கு எவரேனுஞ் சுற்றுப்பிரயாணஞ் செய்யவேண்டும்; உபந்நியாசங்கள் புரியவேண்டும்; இவ்விஷயத்தை விளக்கிப் புத்தகங்களெழுதிப் பிரசுரிக்கவேண்டும். இவற்றிற்கெல்லாம் பொருள் அவஸ்யமே!

*
* *

ஆனந்தவருஷம் நமக்கு ஆனந்தமே தருவதாயிருக்கிறது. பல வருஷங்களாக நம்முள் பி. ஏக்கள் புதிதாய் வெளிவராதிருந்தபோதிலும், இவ்வருஷத்தில் இருவர் அப்பரீக்ஷையில் தேறினார்களென்றறிய நம்மவர்கள் ஆனந்தமுறுவார்களென்பதிற் சந்தேகமேது? இவ்விருவர்களிலொருவர் சென்னையில் போஸ்டல் அக்கவுண்ட்ஸ் ஆபீஸில் உத்தியோகமாயிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணசாமி பத்தர் அவர்கள்; மற்றவர் காகிநாடாவில் கலெக்டராபீசில் உத்தியோகமாயிருக்கும் ஸ்ரீ. பொல்லோஜீ-வீரபத்திர ஆச்சாரியாரவர்கள். இவர்களிருவரும் நமது குலஸ்திதியை மேம்படுத்தி விளங்குவார்களென்று நம்புகிறோம். பிரதி வருஷமும் சிற்சிலரேனும் பி. ஏ. பி. எல்., பி. ஸி. இ, எம். பி. ஸி. யம், முதலிய பெரும் பரீக்ஷைகளிற் றேற உதவும் பொருட்டே "விஸ்வகர்மச் சிறுவர் வித்யாநிதி" யென்பது நமது சபையாரால் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. ஆதலால், நம்முள் உயர்தரக் கல்விப்பட்டம் பெற்றோரதிகமில்லாக்குறை சீக்கிரந் தீருமென்றெண்ணுகிறோம்.

*
* *

சுஜாதி சம்பந்தமான பல விஷயங்கள் நமது பத்திரிகையின் கண்ணே ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன வென்பதை நமது வாசகர்கள் நன்கறிந்திருக்கிறார்கள். அவற்றுள் ஒவ்வொன்றைப்பற்றியும் குலப்பிரமுகர்களுடைய அபிப்பிராயங்கள் வெளிவருதல் அத்தியாவஸ்யமாயிருக்கிறது. அப்போதுதான் தாங்கள் கொள்ளவேண்டியதிது வென்றுந் தள்ளவேண்டியதிது வென்றும் குலஜனங்கள் நிச்சயித் தொழுகுவதற்குச் சாதனமுண்டாகும். அதுவேயல்லவா பத்திரிகையாற் பெறப்படும் பயன்? ஆதலால், நமது பத்திரிகையில் வெளிவரும் முக்கிய வியாசங்களிற் காணப்படுங் கருத்துகளைப்பற்றிய தம்மபிப்பிராயத்தை யெழுதியனுப்பும்படி பல கனவான்களுக்கு தனித்தனி கடிதமெழுதிக் கேட்டிருக்கிறோம். கிடைக்கும் அபிப்பிராயங்கள் முறையே பிரசுரிக்கப்படும். வேதாத்தியயன பாடசாலைகளைப் பற்றி ஏற்கனவே சிலரெழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய கடிதங்கள் மறுமுறை வெளிவரும்.



*
* *

பிரதிபலன் நோக்காமல், தமிழ் நாட்டுப் பல வூரார்க்குக் குலாபிமான மூட்டி, நமதுசபையின் மேம்பாட்டிற்கும், "விஸ்வகர்மன்" பத்திரிகையினபிவிருத்திக்குஞ் சாதகமாயிருக்குமாறுழைத்த ஸ்ரீசோமங்கலம்-கந்தசாமி ஆச்சாரியாரவர்களுக்கும், அரக்கோணம் ஸ்ரீ தி. குருசாமி ஆச்சாரியாரவர்களுக்கும் வந்தனோபசார மளிப்பதற்காக, இம்மாதம் 12உ ஞாயிற்றுக் கிழமையன்று ஒரு பெருங்கூட்டஞ் சேர்க்கப்பட்டது. முதலாவது, உற்சாகமூட்டுஞ் சங்கீதக் கச்சேரியொன்று நடைபெற்றது; ஸ்ரீ மதுராந்தகம் - ஆறுமுகாச்சாரியாரவர்களும், ஸ்ரீ பரங்கிமலை - சிவராம ஆச்சாரியா ரவர்களும் முறையே பிடில் வாத்தியத்தினாலும் பாடல்களினாலும் ஜனங்களைக் குதூகலிக்கச் செய்தனர். பிறகு, முற்கூறிய குலமணிக ளிருவருக்கும் வந்தனோபசார வார்த்தைகள் சொல்லப்பட்டு பூமாலைகள் சூட்டப்பட்டன. அப்பால், அவர்கள் தங்கள் யாத்திராவிசேஷங்களை விவரித்து தங்களுக் குதவிசெய்தவர்களை வாயார வாழ்த்தினார்கள். அப்புறம், ஸ்ரீ செருகூர்-கிருஷ்ணமாச்சாரியாரவர்களால் பக்தி மகத்துவத்தைப் பற்றியதோர் மகோபந்நியாசஞ் செய்யப்பட்டது. கடைசியாய், ஜாலவினோதச் செயல்களில் வல்லவராகிய ப்ரொபஸர் ஸ்ரீ K. அங்கப்ப ஆச்சாரியாரவர்கள் பல விசித்திர வேலைகளைக் காட்டி ஜனங்கள் பிரமிக்கச் செய்தனர். பிரசாத வினியோகத்துடன் சபை கலைந்தது.

*
* *

குலாபிமானப் பெருங்கொண்டலும் தர்மவாரிதியுமாகிய நமது சபைத்தலைவர் ஸ்ரீ சோமங்கலம்-கந்தசாமி ஆச்சாரியா ரவர்கள் சபைக்கு நன்கொடையாக ரூபா நூறு கையொப்பஞ் செய்திருக்கிறார்கள். இவருடைய உதாரத்துவம் மிகவுங் கொண்டாடற்பாலதென்பதை யாரே மறுப்பர்! சென்னை அபிஷியல் அஸைனி மானேஜரென்னும் பெரும் பதவியை வகித்து நமது குலத்திற்குத் திலகமாய் விளங்கு மிவரே, சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வர தேவஸ்தான தரும பரிபாலனசபைத் தலைவருமாவர். அத்தேவஸ்தானத்திற்கு இவர் நூற்றைம்பது ரூபா விலையுள்ள இரும்புப்பெட்டி யொன்று நூதனமாய் வாங்கிக் கொடுக்க ஏற்பாடுசெய்திருக்கின்றனர். சென்னையில் விஸ்வகர்மமட மென்றொரு பெருங்கட்டடங் கட்டமுயன்று சுமார் ஆயிரம் ரூபாய் வரையிலுஞ் சேகரித்திருக்கும் ஸ்ரீ கணிதால-லோகநாத ஆச்சாரியாருடைய நிதிக்குரூபா நூறு கையொப்பஞ்செய்திருக்கின்றனர். இவரே, சமீபத்தில் திருச்சிராப்பள்ளி சென்றிருந்தபோது, நமது இந்திய வைஸிராய்ப் பிரபு அவர்களுடைய ஜனனநாட் கொண்டாட்டத்தன்று, அங்கு விஸ்வப்பிரம்ஹ மகாஜன ஸென்ட்ரல் சபையாரவர்களால் நடத்தப்பட்டுவரும் பாடசாலைச் சிறுவர்களுக்குச் சிற்றுண்டி யளிப்பதற்காக ரூபா பதினைந்தும், அப் பாடசாலையி னபிவிருத்திக்காக ரூபா இருபத்தைந்துங் கொடுத்தனர். இவரே சென்ற 1912 வருஷத்தில் தனுகு என்னுமிடத்தில் கூடிய கிருஷ்ணா குண்டூர் மண்டல விஸ்வப் பிராம்மண மகாஜன கான்பிரன்சுக்குச் சென்றிருந்தபோது ரூபா 25 கையொப்பஞ் செய்தனர். இங்ஙனமிவர் நாளுஞ் செய்துவருங் குலதர்மங்கள் பலவாம்! இவ்விதக் கொடைவள்ளலாகிய குலாபிமானக் குணக்குன்றை நமது சபைத்தலைவராகப் பெற்ற நம் பாக்கியவசத்தை யென்னென் றேத்துவோம்!

*
* *

# சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபை

## தந்தி

To HIS EXCELLENCY LORD HARDINGE, *Simla*, 20-6-14.

Madras Visvakarma Kulodharana Sabha respectfully offers hearty congratulations to His Excellency Lord Hardinge on his fifty-eigth birthday and sincerely prays that His Excellency may be blessed with a happy long life. The Visvakarma Artisan Community of South India rely on His Lordship's catholic liberality to safe-guard their interests and to help towards their betterment.

மாக்ஷிமை பொருந்திய லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் சமுகத்திற்கு, ஸிம்லா, 20-6-14.

கனம் ஹார்டிஞ்ச் பிரபு அவர்களுடைய ஐம்பத்தெட்டாவது ஜனன நாளன்று, சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார் மரியாதையுடன் தமது மனப்பூர்வமான வாழ்த்துகள் கூறி, பிரபு அவர்கள் மகிழ்ச்சிகரமான தீர்க்காயுள் பெற்று விளங்கக் கடவுள் ஆசீர்வதிப்பாராகவென்று உள்ளபடியே பிரார்த்திக்கின்றார்கள். தென்னிந்தியாவிலுள்ள விஸ்வகர்ம தொழிற் கூட்டத்தார், தங்கள் நன்மைகளை பிரபு அவர்கள் காப்பாற்றுவாரென்றும், தங்கள் முன்னேற்றத்திற்குச் சகாயஞ் செய்வரென்றும் நம்பி யிருக்கிறார்கள்.

## பதில் கடிதம்

VICEREGAL LODGE, *Simla, 30th June* 1914.

Dear Sir,

I am directed by His Excellency the Viceroy to convey to the members of the Visvakarma Kulodharana Sabha his best thanks for their kind congratulations and good wishes.

Yours Faithfully,
(Sd) H. A. F. METCALFE,
*Asst. Private Secretary to the Viceroy*

The President
VISVAKARMA KULODHARANA SABHA, *Madras*

வைஸிராய் கிருகம், ஸிம்ஸா, 30-6-14

அன்புள்ள ஐயா,

விஸ்வகர்ம குலோத்தாரண சபை மெம்பர்களுடைய அன்பான வாழ்த்துகளுக்காகவும் நல்விருப்பங்களுக்காகவும் அவர்களுக்கு கனம் வைசிராயவர்கள் தமது தம் வந்தனங்களைத் தெரிவிக்குமாறு என்னை ஏவியிருக்கிறார்கள்.

உங்களுண்மையுள்ள
(கையொப்பம்) H. A. F. மெட்காப்,
வைஸிராயின் அஸிஸ்டண்ட் ப்ரைவேட் செக்ரிடரி.

விஸ்வகர்ம குலோத்தாரண சபை பிரஸிடெண்ட் அவர்களுக்கு, சென்னை.



16962

# சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபை

## தந்தி

To HIS EXCELLENCY THE VICEROY, *Simla*, 22-6-14

The Visvakarma Kulodharana Sabah, Madras, begs respectfully to tender its sincere congratulations to His Imperial Majesty on his forty-ninth birthday and prays Heaven to bless His Majesty and His Royal Consort with happy long life and prosperous reign.

மாக்ஷிமைதங்கிய வைஸிராய் அவர்கள் சமுகத்திற்கு, ஸிம்லா, 22-6-14

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார், மாக்ஷிமை மிகுந்த மன்னர் கோமானவர்களுடைய நாற்பத்தொன்பதாவது ஜனனநாளன்று, தங்கள் அன்பார்ந்த வாழ்த்துகள் மரியாதையுடன் கூறி, அரசர்பெருமானும் அரசர்பெருமாட்டியும் நீடூழி காலம் சந்தோஷமாய் வாழ்ந்து செழிப்போடு ராஜ்யபரிபாலனஞ் செய்யுமாறு இவர்களைக் கடவுள் ஆசீர்வதிக்கும் படிப் பிரார்த்திக்கிறார்கள்.

## பதில் கடிதம்

VICEREGAL LODGE, *Simla 27th June* 1914

Sir,

I am directed to thank you for your telegram of the 22nd inst. conveying congratulations on the occasion of His Majesty the King Emperor's Birthday.

Your Faithfully,
(Sd. H. A. F. METCALFE,
*Asst. Private Secretary to the Viceroy*

The President,
VISVAKARMA KULODHARANA SABHA, 462, *Mint Street, Madras.*

வைஸிராய் கிருகம், ஸிம்ஸா, 27-6-14

ஐயா,

மாக்ஷிமை மிகுந்த அரச-சக்ரவர்த்தியவர்களுடைய ஜனனத்திருநாளன்று வாழ்த்துகூறியனுப்பிய உமது 22வ தந்திக்காக உமக்கு வந்தனமளிக்க நான் ஏவப்பட்டிருக்கிறேன்.

உங்களுண்மையுள்ள
(கையொப்பம்) H. A. F. மெட்காப்,
வைஸிராயின் அஸிஸ்டண்ட் ப்ரைவேட் செக்ரிடரி.

விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் பிரஸிடெண்ட் அவர்களுக்கு,
462, தங்கசாலை வீதி, சென்னை.

## சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபை

### தந்தி

To HIS EXCELLENCY LORD HARDINGE, *Simla*, 16-7-14

Madras Visvakarma Kulodharana Sabha respectfully offers sincere condolence on the irreparable loss sustained in the demise of Lady Hardinge and prays Almighty to give strength to your Lordship to bear the bereavement.

மாக்ஷிமை தங்கிய லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் சமுகத்திற்கு, ஸிம்லா, 16-7-14

லேடி ஹார்டிஞ்ச் மரணத்தால் நேரிட்ட ஈடுபடுத்தொணாத நஷ்டத்திற்காக, சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார் தங்கள் மனப்பூர்வமான அநுதாபத்தை மரியாதையுடன் வெளியிட்டு, பிரபு அவர்கள் இந்நீக்கத்தைச் சகித்திருக்க இறைவர் பலம் அருளும்படி பிரார்த்திக்கிறார்கள்.

### பதில் தந்தி

President, Visvakarma Kulotharana Sabha, 462, Mint Street, Madras. 20-7-14.

His Excellency is most grateful for your kind message of sympathy. P. S. V.

விஸ்வகர்ம குலோத்தாரண சபைப் பிரஸிடென்ட் அவர்களுக்கு, 462, தங்கசாலைவீதி, சென்னை 20-7-14.

உங்களுடைய அன்பார்ந்த அநுதாபச் செய்திக்காக ஹிஸ் எக்ஸலன்ஸி மிகுந்த நன்றியுள்ளவரா யிருக்கின்றனர்.

பி. எஸ். வி. (ப்ரைவேட் செக்ரிடரி, வைஸிராய்.)



## ஐக்கிய நாணயம்.

**கோவாபரேடிவ் க்ரிடிட் ஸோஸைடீஸ் என்னும் ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரிஜிஸ்டிராராகிய திவான்பகதூர் L. D. சுவாமிகண்ணுபிள்ளை யவர்கள் M. A., B. L., L. L. B. பின் வருமாறு எழுதுகிறார் :—**

இந்திய விவசாயிகள் அநேக விதமான கஷ்டங்களை அனுபவித்து வருவதற்கு அவர்கள் பழைய வழக்கங்களைக் கையாடி வருவதே ஒரு காரணம். ஆனால் உலகத்தில் மற்ற விடங்களில் கொஞ்சகாலமாய் சாகுபடியில் அநேக அபிவிருத்திகள் செய்யப்பட்டு கையாடப்பட்டு வருகின்றன. இந்தியாவின் பழைய வழக்கங்களின் குறைவுகளைப் போக்கி சாகுபடியில் அபிவிருத்திகளைச் செய்யும் பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டார் விவசாய இலாகாவை ஏற்படுத்தி யிருக்கிறார்கள் ; குறைந்த வட்டிக்கு வேண்டிய முதல் பணத்தைச் கிடைக்கச் செய்வது இந்தியா விவசாயிகளுக்கு கவர்ன்மெண்டார் செய்திருக்கும் மற்றொரு உதவி. சாகுபடிக்கும் மற்றச் செலவுகளுக்கும் விவசாயிகளுக்குப் பணம் தேவை. இதற்காக அவர்கள் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. இது விஷயத்தில் அவர்களுக்கு உதவி செய்வது ஐக்கிய சங்கங்களின் நோக்கம். ஐக்கிய சங்கங்களின் நன்மைகள் அனேகருக்குத் தெரியும். தெரியாதவர்களும் அநேகர் உண்டு. 1913-ம் வருஷம்ஜூன் மாசம் 30 தேதியில் இந்தராஜதானியிலுள்ள கிராமங்களில் 64,037 மெம்பர்கள் அடங்கிய 1,006 கிராம சங்கங்கள் இருந்தன. இவைகளில் தமிழ் ஜில்லாக்களில் 46,030 மெம்பர்களடங்கிய 696 சங்கங்களும், தெலுங்கு ஜில்லாக்களில் 16,003 மெம்பர்களடங்கிய 276 சங்கங்களும் இருந்தன. 9 சங்கங்களில் 647 மலையாள தேசவாசிகளும், 27 சங்கங்களில் 1,357 கன்னட தேசவாசிகளும் ஐக்கிய சங்கங்களின் பயனை அடைந்தவர்கள். இந்த ராஜதானியில் ஆங்கிலேயர்களின் ஆளுகைக்கு உட்பட்ட கிராமங்களின் ஜனத்தொகை 41,405,404. இவர்களில் 20,382,955 ஆண்கள். இந்தத் தொகையில் 64,037 ஜனங்கள் மாத்திரம் ஐக்கிய சங்கங்களில் மெம்பராயிருப்பதால் ஐக்கியத்தின் நன்மைகளை பெரும்பான்மையான கிராமவாசிகள் அனுபவிக்கிறதில்லை என்று நன்றாய் விளங்குகிறது.

2. ஐக்கிய சங்கங்களில் மெம்பரா யிராத ஆயிரக் கணக்கானவர்கள் மிதமிஞ்சின வட்டிக்குக் கடன்வாங்குகிறார்கள். அப்படி வாங்கும் கடன்மேல் அதிக வட்டி கொடுக்கவேண்டிய காரணங்கள் மூன்று.—

i. கிராமங்களில் பணம் கொடுக்கும் முதலாளிகள் குறைவு. ஆகையால்தான் வட்டியின் விகிதம் அதிகப்படுகிறது.

ii தக்க ஈடில்லாமல் கடன் கொடுப்பதாலும், நாணயமில்லாத கடன்காரர்களால் கடன் கொடுப்பவனுக்கு ஏற்படும் நஷ்டங்களை நாணயமுள்ள கடன்காரர் கொடுக்கும் வட்டியைக் கொண்டு ஈடு செய்யவேண்டி யிருப்பதாலும் தான் கொடுக்கும் கடனுக்கு முதலாளி அதிக வட்டி கேட்கிறான்.

iii. பூமியின் மேல் கடன் கொடுப்பது நல்ல ஈடேயானாலும் அப்படிக் கொடுக்கப்பட்ட கடன்கள் எல்லாம் அதிக நாள் கழித்தே வசூலாகுமானதாலும், கோர்ட்டில் செய்யும் தாவா முதலானவைகளுக்கு அதிகச் செலவு செல்லுகிறதாலும், கொடுக்கும் கடனுக்கு அதிக வட்டி கேட்கப்படுகிறது. கிராமங்களில் வேண்டிய தொகை இருந்து மேற்கூறியபடி பணம் சந்தேகமில்லாமலும், கோர்ட்டு முதலிய விடங்களுக்குப் போகாமலும் வசூலாகக் கூடுமென்ற நிச்சயம் இருந்து கடன் கொடுப்பவர்களும் கடன் வாங்குகிறவர்களும் ஒருவருக்கொருவர் மோச நினைவு இல்லாமல் நடந்து கொள்ளும்படி ஏற்பட்டால் தற்காலம் கடன் வாங்கும் சமுசாரிகள் அதிக வட்டி கொடுக்கக் காரணமிராது.

3. கூடுமானவரையில் மேற்கூறிய அன்னியோன்னியங்களும் கிரமமான நடவடிக்கைகளும் இருக்கும்படிக்கு ஐக்கிய சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நிச்சயமாய் ஈடில்லாதவைகளில் கைமுதலைப் போட்டுத் தேம்புவதற்குப் பதிலாக அவசியமாய் அபிவிருத்தியாகவேண்டிய விவசாய விஷயங்களுக்கு வேண்டிய முதலை ஐக்கிய சங்கம் சேர்க்கிறது. கைமீதியாயிருக்கும் பணங்களைப் பலரிடத்திலிருந்தும் ஒருமித்து சேர்த்து ஏழைக்குடியானவர்களுக்குத் தேவையான பண உதவியை ஐக்கிய சங்கம் கொடுக்கிறது. கடன் கொடுப்பவர்களுக்கும் கடன் வாங்குகிறவர்களுக்கும் நியாய வட்டியும் ஐக்கிய சங்கத்தால் ஏற்படுகிறது.

4. ஒரு கிராமத்தில் அநேகர் தாங்கள் கடன் கொடுக்கவும் கடன் வாங்கவும் ஒரு ஐக்கிய சங்கத்தில்

சேருகிறார்கள். தனியே எடுத்துக்கொள்ளும் பிரயாசையினால் எவ்விதத்திலும் அடையக்கூடாத அனுகூலங்களை எல்லோரும் ஒன்று சேருவதனால் அடைகிறார்கள். தவிரவும், ஒரு ஐக்கிய சங்கத்தில் விசேஷ சொத்தில்லாத ஏழைக் குடியானவனும் மற்றவர்களைப் போல் அனுகூலமடைகிறான். ஒருவன் யோக்கியனாயும் சம்பாதிக்கச் சக்தியுள்ளவனாயு மிருந்தால், அவன் ஏழையாயிருந்தாலும் அவனுக்கு ஈடுவைக்கச் சொத்திருப்பதுபோல பாவிக்கப்படும். அதாவது அவனை ஒரு நாணயஸ்தனாகக் கொள்ளப்படும். ஒரு கிராமத்தில் பிறரிடம் பொய் பேசாமல் யோக்கியமாய் இருப்பவர்கள் அனேகர் உண்டு. இதுதான் நாணயத்துக்குக் காரணம். இதுவே ஐக்கிய நாணயத்துக்கு முக்கிய காரணம்.

ஒவ்வொருவருடைய நன்மைக்காக எல்லோரும் தங்களுடைய எல்லா சொத்தையுமே யல்லாமல் தங்களுடைய வல்லமைகளையும் ஒன்று சேர்க்க ஒப்புக்கொள்ளுவதுதான் ஐக்கியமென்பது. இப்படி ஒன்று சேர்ந்த ஒரு கூட்டத்தார் கடன் வேண்டுமென்றால் கடன் கொடுப்பவனுக்கு வாங்கும் கடனை இவர்கள் எல்லோரும் சேர்ந்தால் வாபசுசெய்வார்கள் என்பதில் முழு நம்பிக்கையல்லவா? அப்படி யிருக்கும் நம்பிக்கையினால் நாணயமுள்ளவர்கள் ஒன்றுசேர்ந்த ஒரு சங்கத்துக்கு குறைந்த வட்டிக்குக் கடன் கிடைக்கிறது. இப்படி அனேகம் சங்கங்கள் ஏற்பட்டால் அனேக விடங்களிலிருக்கும் சாவுகாரர்கள் இச்சங்கங்களுக்குக் கடன் கொடுக்க அதிக சீக்கிரம் தலைப்படுகிறார்கள். அப்பொழுது தேவையான பணம் வெளி வருகிறது. சென்னை ராஜதானியில் ஒவ்வொரு கிராமத்திலும் இம்மாதிரிச் சங்கம் ஒன்று இருக்கலாம். அப்படி ஏற்பட்டால் கிராம வாசிகளுக்கு அச்சங்கத்தால் அதிக நன்மையுண்டாகும். (தொடரும்).

---

ஆவாரை யாரே யழிப்பர் அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பர்—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்—நல்வழி

## இந்துமஹா சத்தியவேத விருத்தாந்தம்

(8-வது சஞ்சிகை 54-வது பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ மௌனகுரு-ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், பழநி.

இப்பரதகண்டத்தில், இந்துவென்று சொல்லப்பட்ட பிராம்ஹ, க்ஷத்ரிய, வைசிய, சூத்ர, வியவஹாரிக, கோரக்ஷக, கும்பகார, பாஞ்சாயன, தந்துவாய, திலகாதக, வஸ்திரச்சேதக, ரஜக, க்ஷௌரக, பரிசேதன, சர்மகர்ம, லுப்தகர்ம, சாண்டாள, மாதங்காதி அஷ்டாதச வர்ணத்தவர்களெல்லோரும், வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளவேண்டியவர்களா யிருக்கிறார்கள். இதற்குக்காரணம் புருடனொருவன் மேல் நிலையை யடைவதற்கு வேண்டிய விஷயங்கள் அதனிட மிருப்பதோடு அதன்சம்பந்தமான எத்தகைய வுயர்ந்த யுக்திகள் எவர்சொன்னபோதிலும், அவையாவும் பொதிந்துகிடப்பதோடு, அதனிடம் இல்லாதனவாயும் நூதனமாயுமுள்ள, ஒரு வைதிகமான விஷயம் அல்லது யுக்தி, அல்லது அநுபவம், இதுகாறும் எவரும் புறம்பேகண்டதாக எம்மேலோருஞ் சொல்லக் கண்டிலம். கேட்டிலம் அவையினிமேலும் வெளி வருமென்று பேசுதல்முடியாது. இவ்வேதம் நான்காகப் பகுக்கப்பட்டுள்ளது. இந்நான்கு பாகங்களின் திரண்டகருத்தை, நான்கு வாக்கியங்களில் அமைத்து அவ்வேதங்களே கோஷிக்கின்றனவென்று வேதத்தின் பிரிவுகளும் அவைகள் தம் உள்வடிவாகக் கூறப்பட்டுள்ள தாத்பரியமும் பின்வருமாறு "மஹாவாக்கியத்திற் சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி,

சுருதி

அநந்தவேதயோர்மத்யே பஞ்சவேதஸுநாமயோ:
அஹம்யாஸ்சைவவேதஞ்ச த்ரையீ ரத்நத்ரிவேதயோ:॥

[இதின் கருத்து] வேதங்களனந்தமென்றும், அதில் ஐந்துவேதங்கள் நாயத்தோடு கூடினதென்றும், அந்த ஐந்திலொருவேதம், பெயர்மாத்திரமுள்ளதாய் நடப்பில் வரவில்லையென்றும் ஒருவேதம் அறியப்படாததாயிருக்கிறதென்றும், மற்ற மூன்றுவேதங்கள், சாகை, சூத்திரங்களோடு மூன்று ரத்னங்கள்போல உலகத்திற் பரிஷ்காரமாய்ப் பிரகாசிக்கப்பட் டிருக்கிறதென்றும் "விஶ்வகர்ம" சாகாசூத்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறபடி ஐந்தாவது வேதமான "பிரணவ" வேதத்துக்கும் அவ்வாக்கியங்களிருப்பதாகத் தொகுத்துச் சொல்லப்படவில்லை.



மஹாவாக்கியத்தில் வேதப்பகுதிகளில் (1) இருக்வேதம்=பிரஞ்ஞானம் பிரம்ஹம் என்றும் (2) யஜுர் வேதம் = அகம் பிரம்ஹாஸ்மி யென்றும், (3) சாம வேதம் = தத்துவமஸி யென்றும் (4) அதர்வண வேதம் = அயம் ஆத்மா பிரம்ஹம் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட வேதங்களோடு கூடிக்கொண்டிருப்பதும், வேதாந்த சாராம்ஸமாய் எல்லாத் தத்துவங்களையும் போதிக்கக்கூடியதும், மறை பொருளான உபநிஷதங்களேயாம்.

அந்த உபநிஷதங்களாவன

(1) ஈஶாவாஸ்யோபநிஷத், (2) கேநோபநிஷத், (3) கடோபநிஷத், (4) அதர்வஶிரோபநிஷத், (5) முண்டகோபநிஷத் (6) மாண்டூக்யோபநிஷத் (7) தைத்ரீயோபநிஷத் (8) ஐதரேயோபநிஷத் (9) சாந்தோக்யோபநிஷத் (10) பிரம்ஹதாரண்யகோபநிஷத் (11) பிரம்ஹோபநிஷத் (12) கைவல்யோபநிஷத் (13) ஜாபோலோபநிஷத் (14) சேதாஶ்வசோபநிஷத் (15) ஹம்ஸோபநிஷத் (16) ஆருணிகோபநிஷத் (17) கர்போபநிஷத் (18) நாராயணோபநிஷத் (19) பரமஹம்ஸோபநிஷத் (20) அமிர்தபிந்தோபநிஷத் (21) அமிர்தநாதோபநிஷத் (22) அதர்வசிரோபநிஷத் (23) அதர்வசிகோபநிஷத் (24) மைத்ராயண்யுபநிஷத் (25) கௌஷீதகிப்ராம்ஹணோபநிஷத் (26) பிருஹஜ்ஜாலோபநிஷத் (27) ந்ருஹஸிம்ஹதாபிந்யுபநிஷத் (28) காலாக்நிருத்ரோபநிஷத் (29) மைத்ரேயோபநிஷத் (30) ஸுபாலோபநிஷத் (31) க்ஷுரிகோபநிஷத் (32) மந்த்ரிகோபநிஷத் (33) ஸர்வஸாரோபநிஷத் (34) நிராலம்போபநிஷத் (35) ஸுகரகஸ்யோபநிஷத் (36) வஜ்ரஸூச்யுபநிஷத் (37) தேஜோபிந்தூபநிஷத் (38) நாதபிந்தூபநிஷத் (39) த்யாநபிந்தூபநிஷத் (40) பிரம்ஹவித்யோபநிஷத் (41) யோகதத்வோபநிஷத் (42) ஆத்மபோதோபநிஷத் (43) நாரதபரிவ்ராஜகோபநிஷத் (44) த்ரிசிகிபிராம்ஹணோபநிஷத் (45) ஸீதோபநிஷத் (46) யோகசூடாமண்யுபநிஷத் (47) நிர்வாணோபநிஷத் (48) மண்டலப்ராம்ஹணோபநிஷத் (49) தக்ஷிணாமூர்த்யுபநிஷத் (50) சரபோபநிஷத் (51) ஸ்கந்தோபநிஷத் (52) த்ரிபாத்விபூதி மஹாநாராயணோபநிஷத் (53) அத்வயதாரகோபநிஷத் (54) ராமரகஸ்யோபநிஷத் (55) ராமதாபநீயோபநிஷத் (56) வாஸுதேவோபநிஷத் (57) முத்கலோபநிஷத் (58) சாண்டில்யோபநிஷத் (59) பைங்கலோபநிஷத் (60) பிக்ஷுகோபநிஷத் (61) மஹோபநிஷத் (62) ஸாரீரகோபநிஷத் (63) யோகசிகோபநிஷத் (64) துரியாதீதாவதூதோபநிஷத் (65) ஸந்யாஸோபநிஷத் (66) பரமஹம்ஸபரிவ்ராஜகோபநிஷத் (67) அக்ஷமாலிகோபநிஷத் (68) அவ்யக்தோபநிஷத் (69) ஏகாக்ஷரோபநிஷத் (70) அந்நபூர்ணோபநிஷத் (71) சூர்யோபநிஷத் (72) அக்ஷ்யுபநிஷத் (73) அத்யாத்யோபநிஷத் (74) குண்டிகோபநிஷத் (75) ஸாவித்ர்யுபநிஷத் (76) ஆத்மோபநிஷத் (77) பாசுபதப்ராம்ஹோபநிஷத் (78) பரப்ராம்ஹோபநிஷத் (79) அவதூதோபநிஷத் (80) த்ரிபுரதாபிந்யுபநிஷத் (81) தேவ்யுபநிஷத் (82) த்ரிபுரோபநிஷத் (83) கரோபநிஷத் (84) பாவநோபநிஷத் (85) ருத்ரஹ்ருதயோபநிஷத் (86) யோககுண்டல்யுபநிஷத் (87) பஸ்மஜாலோபநிஷத் (88) ருத்ராக்ஷஜாபோலோபநிஷத் (89) கணபத்யுபநிஷத் (90) தர்ஸநோபநிஷத் (91) தாரஸாரோபநிஷத் (92) மஹாவாக்யோபநிஷத் (93) பஞ்சப்ராம்ஹோபநிஷத் (94) பிராணாக்நிஹோத்ரோபநிஷத் (95) கோபாலதபநோபநிஷத் (96) க்ருஷ்ணோபநிஷத் (97) யாக்ஞவல்க்யோபநிஷத் (98) வராஹோபநிஷத் (99) சாட்யாயநீயோபநிஷத் (100) ஹயக்ரீவோபநிஷத் (101) தத்தாத்ரேயோபநிஷத் (102) காருடோபநிஷத் (103) கலிஸம்தரணோபநிஷத் (104) ஜாபல்யுபநிஷத் (105) ஸௌபாக்யலக்ஷ்ம்யுபநிஷத் (106) ஸரஸ்வதீரஹஸ்யோபநிஷத் (107) பஹ்வ்ருசோபநிஷத் (108) முக்திகோபநிஷத், என்பவைகள்.

1.—"கடோபநிஷத்தில்" ஆறு வல்லிகளும், 119 வாக்கியங்களும்,

2.—"பிரஶ்நோபநிஷத்தில்" ஆறு பிரஶ்நங்களும், 67 வாக்கியங்களும்,

3.—"முண்டகோபநிஷத்தில்" மூன்று கண்டங்களும், 6 கண்டங்களும், 64 வாக்கியங்களும்,

4.—"மாண்டூக்யோபநிஷத்தில்" நான்கு பிரகரணங்களும், 227 வாக்கியங்களும்,

5.—"தைத்ரீயோபநிஷத்தில்" சிக்ஷாவல்லி, ஆனந்தவல்லி, பிருகுவல்லி, என்கின்ற மூன்று அத்தியாயங்களும், 31 அநுவாகங்களும்,

6.—"ஐதரேயோபநிஷத்தில்" மூன்று கண்டங்களும், 14 வாக்கியங்களும், ஏக, த்வீதிய, த்ரீதீய, அத்தியாயமென்கிற ஐதரேயத்வீதீய, ஆரண்யக, சதுர்த்த, பஞ்சம, அத்தியாயங்களும்,

7.—"சாந்தோக்யவுபநிஷத்தில்" எட்டுப் பிரபாடங்களும், 150 கண்டங்களும், 638 வாக்கியங்களும்,

8—"பிரம்ஹ தாரண்யோபநிஷத்தில்" இரண்டு முதல் எட்டு அத்தியாயங்களும், 47 பிராம்மணங்களும், 440 வாக்கியங்களும்,

9—"நரஸிம்ஹதாபிந் யுபநிஷத்தில்" நரசிம்ம தாபின்யோத்தரதாபி யுபநிஷத் என்ற இரண்டு பகுதியும், அதில் முதலாவது கண்டத்தில், பிரத உபநிஷத், மஹா உபநிஷத் என்று இரண்டு உபநிஷதங்களும், 5 கண்டங்களும், ஷை உத்த ரதாபி உபநிஷத்தில் ஒன்பது கண்டங்களும்,

10—"நாரத பரிவ்ராஜகோப நிஷத்தில்" ஒன்பது உபதேசங்களும்,

11—"மண்டல ப்ராம்ஹணோப நிஷத்தில்" ஐந்து மண்டலங்களும், 17 வாக்கியங்களும்,

12—"மஹா நாராயணோப நிஷத்தில்" பூர்வகாண்டம், உத்திரகாண்டம் என்ற இரண்டு பாகமும், எட்டு அத்தியாயங்களும் அடங்கியிருக்கின்றன.

இப்படிப்பட்ட உபநிஷதங்களிற் சிலவற்றை ஏற்கனவே ஆன்றோர்களால் தமிழ்ச் செய்புட்களாகவும் செய்யப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட உபநிஷதங்களில் வஜ்ர ஸூச்யுப நிஷத்துக்கு, தமிழ் மொழியெயர்ப்பு ஏற்கனவே. சமஸ்கிருத பண்டிதர்களாற் செப்யப்பட்டிக்கின்றது. மண்டல ப்ராம்ஹணோப நிஷத் (1) திரிபுரரேஸ்வரோபநிஷத் (2) அமிர்த பிந்தூபநிஷத் (3) ருத்ரஹிதோபநிஷத் (4) அன்னபூர்ணோபநிஷத் (5) இவ்வைந்து உபநிஷதங்களும் திருவல்லிக்கேணி பிரம்ஹ ஸ்ரீ M. K. நாராயணசாமி ஐயர் B-A. B-L, அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, சென்னை லோகோபகாரியின் வாயிலாகப் பிரசுரஞ் செய்விக்கப்பட்டு மிருக்கின்றன. (தொடரும்)

---

பொறுமையுட னறிவுடையா ரிருந்தவிடம்
விளக்கேற்றிப் புகுதல்வேண்டும்
கெறுவமுட னகந்தையுள்ளா ரிறுமாந்து
நடந்துதலை கீழாவீழ்வர்
வறுமையினு மறுமையினுங் காணலாந்
தண்டலையார் வாழுநாட்டில்
நிறைகுடமோ தளும்பாது குறைகுடமோ
கூத்தாடி நிற்பதாமே.

—**தண்டலையார் சதகம்.**

## நம் தேசத்துப் பூர்வீக தந்தத் தொழில்.

இந்தியா தேசமானது கைத்தொழில்களில் புராதனத்தில் பேர்பெற்று செழித்து வந்தது. ஆனல் இப்பொழுதோ மேல்நாட்டுப் போட்டியினலும், வியாபாரத்தினலும் வேலை செய்யும் கைத்தொழிலாளிகள் பூர்வத்தில் மானியங்கள் விடப்பட்டு ஆதரிக்கப்பட்டு வந்ததுபோல், இப்போது ஆதரிக்கப்படாததினலும் தொழில்கள் நசித்துப்போய் அவைகள் இருந்த இடமே தெரியவில்லை. பூர்வத்தில் தந்தத் தொழிலானது பிரபலமா யிருந்ததாக இராமாயணத்தி லிருந்தும் காளிதாஸரால் இயற்றப்பட்ட ரகு வம்சத்திலிருந்தும் பிரத்தியட்சமாகத் தெரிகிறதுமன்றி, மகம்மதிய இராஜாங்கத்தில் ஆதரிப்போரில்லாமல் நசித்திருந்ததாகவும் . ற்படுகிறது. பிற்பாடு சில காலத்துக்கு முந்தி இந்தத் தொழில் வங்காள மாகாணத்தைச் சேர்ந்த மூர்ஷிடாபாத், ரங்பூர் முதலிய ஜில்லாக்களில் பிரபலமா யிருந்ததாகவும் தெரிகிறது. இது சம்பந்தமாய் ஒரு கதை சொல்லப்படுகிறது.

அது என்னவென்றல், மூர்ஷிடாபாத்திலிருந்த நவாபானவர் தனக்குக் காது குறும்பை யெடுக்க ஒரு காது குத்தி வேணுமென்றுசொன்னதாகவும், அதற்கு ஒரு ஈர்க்குக்குச்சி கொடு பட்டதாகவும் அதை நவாப் எறிந்துவிட்டு தந்தத்தினல் வேணுமென்று தெரிவித்ததன்மேல் அந்தவூரில் இந்த வேலை செய்பவ ரில்லாததனல் டெல்லியிலிருந்து ஒரு மகமதியன் கொண்டுவரப்பட்டு ஒரு தந்தக் காதுகுத்தி செய்து கொடுத்ததாகவும் தெரிகிறது. அந்த மூர்ஷிடாபாத்தில் மாசித்திர வேலைகள் செய்யும் தச்சர்க ளிருந்ததாக்வும் அவர்களில் துல்ஸி என்ற ஒருவர் இந்த வேலையைக் காதுகுத்தி செய்தவரிடத்திலிருந்து தெரிந்துகொண்டு பிறகு அந்த வேலைகளில் அதிக தேர்ச்சி யடைந்து வெகு சன்மானங்கள் பெற்றதாகவும் தெரிகிறது. இந்தத் துல்ஸி என்பவரால் தந்தத்தினல் அம்பாரியுடன் கூடிய யானையும், துர்கா தேவதை முதலிய தேவதைகளும் ; பொம்மைகளும் வேட்டைக்காட்சி பொம்மையும், வண்டிகள், ஒட்டகங்கள், மாடுகள், போடோ சட்டங்கள், கூடைகள், சீப்புகள் இவ்விதமான அனேக வேலைகள் செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. இவருடைய வேலைத் திறமையைக்கண்டு எங்கும் அவரை போகவிடாமல் அவருக்குக் காவலாளிகள் ஏற்படுத்திவிட்டார்.



ஆனல் இந்த துல்ஸி, க்ஷேத்திர யாத்திரையில் மெத்தவும் ஆசையுள்ளவ ரானதால் நவாபின் ஆக்ஞைக்கு உட்படாமல் ஒருநாள் பாஹீரதி நதியில் ஸ்நானம் செய்துகொண்டிருக்கையில் அக்கரைக்கு நீந்திப்போய் தப்பி ராஜ்மேகாலுக்குப் போய்விட்டதாகத் தெரிகிறது. அங்குமாத்திரல் ஒருகுதிரை செய்து அதன் கிரயம் 5-ரூபாயைக் கொண்டு ஓடிப்போய், சில சாமான்கள் செய்து விற்பனையான பணத்தைக் கொண்டு காசிக்கு ஓடிப்போய்விட்டார். அங்கிருந்து பிருந்தாவனத்துக்கு யாத்திரை போய்விட்டார். அங்கு ஒரு தச்சனிடம் தனக்கு வேண்டிய ஆயுதங்களைச் செய்துகொண்டு சில சித்திரவேலைகளைச் செய்து விற்று அங்கிருந்து ஜெயிப்பூர் மகாராஜாவின் குலதெய்வமாகிய| ராதா கோவிந்த கோவிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்தார். இந்தத் துல்ஸியானவர் ஜெயிப்பூர் மகாராஜாவுக்குத் தன்னுடைய வேலைத் திறமையைக் காண்பிக்கும்படியான சில அற்புத வேலைகள் செய்து சில வெகுமானம் பெற்றது மன்றி இராஜா உத்தரவின் மேல் ஒரு ஆண் வெள்ளாட்டுக்கடா செய்து கொடுத்ததில் இராஜா ஆச்சரியமடைந்த தன் தேகத்தில் போட்டிருந்த ஆபரணங்கள் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டதும் தவிர, ரூபாய் 2000-மும் ரொக்கமாகக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

இவர் 17 வருஷகாலம் யாத்திரைகள் செய்துவிட்டுத் தன் சொந்த ஊராகிய மூர்ஷிடாபாத்துக்குத் திரும்பிவந்தாராம். அப்போது அந்த நவாப், துல்ஸி யாத்திரைகாலத்தில் இறந்துபோன தன் தகப்பனரைப் போல் ஒரு விக்கிரகம் செய்யச்சொல்ல, அதனுடைய வேலைத்திறமையும், தன் தகப்பனர் உயிருடனிருப்பது போலவே அணு அம்சம்கூடத் தவருமல் ஒத்திருந்ததையும் கண்டு அதிக ஆனந்தமடைந்து, அவருக்கு ஊரிலில்லாதிருந்த 17 வருஷத்து சம்பளத்தைக் கொடுக்கச் சொன்னதும் தவிர, மூர்ஷிடாபாத்துக்குச் சமீபத்தில் அவருடைய சொந்தக் கிராமத்தில் ஒரு பெரிய வீடும் கட்டிக்கொடுத்ததாகவும் தெரிகிறது. இந்த வேலையில் தேர்ந்தவர்கள் இவருக்குப் பிற்காலத்தில் 30, 40 குடும்பங்க ளிருந்ததாகவும் இப்போது ஒருவர்கூட இல்லாமல் அங்கங்கே சிதறிப்போய்விட்டதாகவும் தெரிகிறது.

இப்போது தந்த வேலைகள் நிரம்ப சொற்பமாய்த்தான் சிற் சில இடங்களில் செய்யப்படுவதாய் ஏற்படுகிறது. இப்பேர்க்கொத்த சிறப்புற்ற நேர்த்தியான கைத்தொழில்கள் க்ஷீணித்து மறைந்துபோவதற்குக் காரணம் தக்க கனவான்களும் ஜமீதார்களைப்போலொத்தவர்களும் இராஜாங்கத்தார்களும் தொழிலாளிகளை ஆதரிக்காமலிருப்பதும், அவர்களை உற்சாகப்படுத்தாமலிருப்பதுமே முக்கிய காரணங்களாகும். நம் தேசத்து மன்னர்களும் செல்வவான்களும் மற்றவர்களும் நம் தேசத்தில் செய்யப்படும் சிறந்த தொழில் சாமான்களை வாங்காமல் அன்னிய தேசவஸ்துக்களை வாங்கினல் தொழிலாளிகள் பிழைத்து முன்னுக்கு வருவதெப்படி? கவர்ன்மெண்டார் தற்காலம் தொழில் அபிவிருத்திச் சாலைகள் ஏற்படுத்தி, அதன் சம்பந்தமான கல்விகள் கற்றுக்கொடுத்தால் மட்டும் போதுமா? அங்கிருந்து பயின்று வரும் சிறுவர்களுக்குத் தகுந்த தொழில்களைக் கொடுத்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வரும் பொருப்பை ஏற்றுக்கொண்டாலல்லவோ கைத்தொழில்கள் விருத்தியடையும்!

**சுதேசமித்திரன்**

---

## ஜாதீய சம்வாதம்

**ஜோஸ்யர் ஸ்ரீ A. முத்து ஆச்சாரியார், நாகர்கோவில்**

நமது ஜாதியார்கள் தொழிலையே பிரதானமாக பூர்வகால முதலாக கைக்கொண்டு வழங்கிவருகிருர்கள். இக்காலத்தில் இவர்கள் செய்கைகளையும் நாணயக்கேடுகளையும் பார்த்தும் இவர்களில் கல்விமான்களும் உத்தியோகஸ்தர்களும் அதிகமில்லாமைபற்றியும் இவர்களைப் பலஜாதிகளும் உத்தியோகஸ்தர்களும் தூஷிக்கவும் ஒரு காரணமாகின்றது. இதற்கு உதாரணமாக 1914ஞு பிப்ரவரிமீ 18உ திருநெல்வேலிஜில்லா கொக்குரக்குளம் முனிஸிப் கோர்ட்டில் நடந்த ஓர் விஷயம் எழுதப்படுகிறது.

திருநெல்வேலிஜில்லா வீரராகவபுரத்தில் விசுவகர்மரி லொருவர் விவாகமாகாமலிருந்தார். அவர் தன் பேருக்கு ஓர் சொத்தின்பேரில் ஒத்தியாயும் அடயானமாயும் இருந்த பாத்தியதையை ரூபா 150 கொடுத்து

நம்மவரிடம் மேடோவர் வாங்கியிருந்தார். பிற்பாடு அவர் சன்னியாசம்பூண்டு தேசாந்தரம் போயினர். இன்ன இடத்தில் இருக்கிருரென்று தெரியவராது. ஷை சொத்தைப் பொருத்த மேடோவரானது காலாவதி அதிக்கிரமிக்கிறதைப்பார்த்த ஷையாரின் தாயாரான வள் மகன் சன்னியாசியாய்ப் போய்விட்டா னென்றும் அவனுடைய வாரீசு தானுனதினுல் தனக்கு அந்த மேடோவர் தொகை கிடைக்கவேண்டுமென்றும், சொத்துடையவர் ஒத்திக்காரர் அடமானமுடையவர் இவர்களைப் பிரதிவாதிகளாகச்சேர்த்து பிராது கொடுத்தாள். இதற்கு ஒத்திக்காரரும் அடமானமுடையவரும் தொகைகொடுக்கவேண்டுவது வாஸ்தவம்தான்; அதைச் சொத்தின்பேரில் வசூலிக்கவேண்டுமென்றும் சொத்துடையவர் ஒத்திக்காரரிடம் தகைகொடுத்து மீண்டு விட்டதென்றும், அல்லாமலும் மகனுடைய சொத்துக்கு தாயார் வாரீசு ஆகமாட்டாளென்றும் உத்தரம் கொடுத்தார்கள்.

இவைகளைக் கோர்ட்டாரான முனிஸிப் ஐயங்கார் அவர்கள் பார்த்து ஸன்னியாசமானது பிராமணர்களாலுல் மாத்திரம் ஷையாரின்சொத்து வார்சுக்குகிடைக்குமென்றும் சூத்திரர்கள் பரதேசியாய்ப் போய்விட்டால் அவர்களின் சொத்து சவர்ன்மெண்டாரை யடையுமென்றும் இந்தப்படியே லாவிருக்கிறதென்றும் அதிலும் கம்மாளர்கள் சூத்திரருக்கும் கீழான சங்கரஜாதியில் சேர்ந்தவர்களென்றும் இந்த வியாஜ்ய தகையானது சவர்ன்மெண்டாரை யடையவேண்டிய திருப்பதால் தாம் ஜாதியைப்பற்றி பார்க்கவேண்டிய தவசியமாயிருக்கிறதென்றும் சொன்ஞர்கள். இதைக்கேட்ட வீரராகவ புரத்தார் ஜாதிநியாயங்களைக் கோர்ட்டாருக்கு எடுத்துக் காட்ட வேண்டி யிருக்கிறதினுல் தாகுவேண்டும் பிரமாணங்கள் வேண்டுமென்று திருநெல்வேலி மஹாஜனங்களிடத்திலும் பிரம்மஸ்ரீ. தி. நெ. முத்துசுவாமி உபாத்தியாய ரவர்களிடத்திலும் தெரிவித்தார்கள். அந்த சமயம் எனது சகோதரன் திருநெல்வேலிக்குப் போயிருந்தமையால் ஷை உபாத்தியாயர் என் தம்பியிடம் தெரிவித்து அன்று வாய்தா வானதால் சுருதிஸ்மிருதி சிற்ப புராண வசனங்களைச் சுருக்கமாக எழுதிக் கொடுத்து இதை ஆஜர்படுத்துங்களென்று சொல்லி யனுப்பிவிட்டு தான் வந்த ஜோலியையும் சிரமத்தையும் பார்க்காமல் குலாபிமானத்திற்காக வேண்டி என் தம்பியும் உபாத்தியாயரவர்களும் கோர்ட்டுக்குப் போஞர்கள். மாலை மணி 4-க்கு இக்கேசு எடுக்கப்பட்டு வாதியாகிற தாயாரையும் இரண்டு சாக்ஷிகளையும் விசாரித்து, கம்மாளர்கள் இடங்கையைச் சேர்ந்த தாழ்ந்த சாதிகளென்றும், அநேக சிலா சாஸனங்களில் தாழ்ந்த வகுப்பாருடன் இவர்களைச் சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும், அநேகம் துரைமார்கள் எழுதிய சரித்திர புஸ்தகங்களில் கம்மாளர்களைச் சூத்திரஜாதியில் சேர்த்து எழுதியிருக்கிருர்களென்றும், முனிசீப் அய்யங்கார் அவர்கள் வக்கீல்மாரிடம் சொன்ஞர். இவைகளைக்கேட்ட நம்மவர்கள் மனம் பொருது நம் ஜாதி விஷயத்தைக் கொஞ்சமாவது இச்சமயம் முனிசீப் அவர்களிடம் சொல்ல வேண்டுவதவசியமென்று என் தம்பியை அபேக்ஷித்தார்கள். என் தம்பியும் அதற்கு உடன்பட்டு பாரிலேறிச் சத்தியம் சொல்லி வாக்கு மூலம் கொடுத்த விபரமாவது:—(இதில் சொல்லப்படும் கேழ்வி உத்தரங்கள் ரிகார்டுப் படுத்தாமலே அதாவது எழுதாமலே கேட்டாரால் கோர்ட்கப்பட்டிருக்கிறது.)

**கேழ்வி.**—நீங்கள் என்ன ஜாதி?

**உத்தரம்.**—நாங்கள் விசுவகர்ம ஜாதி.

**கேழ்வி.**—விஸ்வகர்மாவென்ருல் யார்?

**உத்தரம்.**—சுருதி புராண இதிகாச சிற்பங்களில் விசுவகர்மா வென்றும் துவஷ்டாவென்றும் சில்பியென்றும் தக்ஷாவென்றும் சிருஷ்டிகர்த்தா வென்றும் சொல்லப்படுகிற விசுவகர்மப் பிரஜாபதியேயாம்.

**கேழ்வி.** சுருதி முதலானதுகளில் சொல்லப்படுகிற விசுவகர்மாவின் சந்ததிகள் நீங்கள்தா னென்பதற்கு என்ன பிரமாண மிருக்கிறது?

**உத்தரம்.** சிற்பம் விசுவகர்மியம்.

மநுர்மயச்சதுவஷ்டுச்சசில்பிவிஸ்வக்ஞஏவச
பஞ்சைதேதேவருஷயோவிசுவகர்மமுகோத்பவா||ஃ||

விசுவகர்மாவினிட மிருந்து மநுமயன் துவஷ்டா சில்பி விசுவக்ஞ னென்ற பஞ்சரிஷிக ளுண்டாஞர்கள். இந்தரிஷிகளின் சந்ததிகளாகவே நாங்களிருக்கிருேம், மேலும் சிற்பங்களில் ஆலயம், கோபுரம், பிம்பம், ரதம், கிருகம், பட்டணம் முதலிய நிர்மாணங்கள் விசுவகர்மா செய்யவேண்டுமென்றும் துவட்டா, ஸ்தபதி, ஸ்தாபகன் தக்ஷா சிற்பி மயன் மநு முதலியவர்கள் செய்ய வேண்டு மென்றும் கூறப்பட்டிருக்கிறது.

சப்தகல்பத்துருமம் முதலான நிகண்டுகளில் கம்மாளர்களின் பெயராக விசுவகர்மா, துவஷ்டா, சில்பி, ஸ்தபதி, வர்த்தகீ, மநு, மயன், தக்ஷா வென்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிரவும், பூலோகத்திலுள்ள ஜனங்கள் விசுவகர்மரென்று எங்கள் ஜாதியாரையே சொல்வார்களல்லாமல் வேறுஜாதிகளைச் சொல்லமாட்டார்கள். மேலும் எங்களுக்கு விசுவகர்மா வென்ற பெயரானது பீஜவிருக்ஷ சம்பந்தம்போல மூலபுருஷன் விசுவகர்ம பிரஜாபதியினிட மிருந்து கிடைத்ததேயாம்.

**கேழ்வி.**—உம்முடைய கோத்திர மென்ன?

**உத்தரம்.**—சுபர்ணஸரிஷி கோத்திரம்.

**கேழ்வி.**—விசுவகர்ம வம்சம் பூலோகத்தி லில்லையென் றல்லவா சொல்லுகிருர்கள்! பூலோகத்தில் விசுவகர்ம வம்சம் உண்டென்பதற்குப் பிரமாண மிருக்கிறதா?

**உத்தரம்.**—வியாச மஹரிஷியினுல் சொல்லப்பட்டிருக்கிற ஸ்காந்த புராணம் காசிகண்டம் 86-வது அத்தியாயத்தில் விசுவகர்ம வம்சம் பூலோகத்தி லிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**கேழ்வி.**—ஷை காசிகண்டத்தில் பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திர னென்னும் நான்கு வர்ணங்களில் உங்கள் ஜாதியை எந்தவர்ணத்தில் சேர்த்துச் சொல்லப்பட் டிருக்கிறது?

**உத்தரம்.**—விஸ்வகர்மா பவத்பூர்வம் பிரமணஸ்த்வபாரதஹ! துவஷ்டருப்ராஜாபதே புத்ரோநிபுணஸ்ஸர்வ
கர்மஸுகிருதோபநயநஸ்ஸொதபாலயே ருருகுலேவஸந்
சகார குருசுஸ்ருஷாம் பிக்ஷான்னம் கிருதபோஜநம்||
கச்சமே த்ரஸ்ஸஹாயஸ்யதீக்ஷணூ தூர்பலஸ்யவை—.

பூர்வம் பூலோகத்தில் பிரம்மாவுக்கு சமானரான துவஷ்டா வென்பவரிருந்தார். இவர் புத்திரர் சகல தொழில்களிலும் நிபுணரான விசுவகர்மா வென்றெருவரிருந்தார். இவர் எட்டாவது வயசில் உபநயனம் செய்து பின்னர் குருகுலவாசமும் பிக்ஷான்னமும் குருசிஸ்ருஷையும்செய்து வேதாத்தியயனம் பண்ணி சகல வித்யைகளும் கற்று குருமுதல்ானவர்களின் சம்பாவனைகளாக கிருகம் பாதுகை ரவிக்கை முதலானது செய்து கொடுத்தாரென்றும், இவர் ஆங்கீரசரிஷி கோத்திரத்தவரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதனுலிவர்கள் உபநயனம் பிக்ஷான்னம் குருகுலவாசம் வேதாத்தியயன முதலியவைகள் செய்திருக்கிறதினுல் தேவர்களல்லவென்றும் பூலோகவாசியான மனுஷியர்களில் விசுவகர்மாவென்றும் நிச்சயமாய்ச் சொல்லப்படுகிறது. தவிரவும் விசுவகர்மர் ஆங்கீரச ரிஷியின் வம்சத்தவரா யிருக்கிறதினுல பிராமணவர்க்கத்தவரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது என்று சுலோகங்களைச்சொன்னவுடன், முனிசீப அய்யங்காரவர்கள் சாஸ்திர விற்பன்னராயிருக்கிறதினுல் ஷை சுலோகார்த்தம் தனக்குத் தெரிந்திருந்தும், இதில் துவஷ்டாவைப்பற்றிச் சொல்லியிருக்கிறதே தவிர உங்கள் வம்சம் பிராம்மண தர்ம முடையவரென்று சொல்லப்பட்டிருக்குமானுல் ஸுருதிகளில் கர்மப்பிரஷ்டரென்று சொல்லுவானேன் என்பதாகக் கேழ்விகேட்டார்.

**உத்தரம்**-எங்கள் ஜாதிக்கு ரதகாரரென்று ஓர்பெயர் வந்திருக்கிறது. அதாவது, பரமேசுவரருக்கு திரிபுர தகனசமயத்தில் பூமியை ரதமாக இவர்கள் செய்துகொடுத்ததினுல் ரதகாரரென்று சொல்லப்பட்டிருக்கிறது.

**ஸ்காந்த நாகரகண்டம்**

தாருகார ஸ்வர்ணகார சிலாகாரஸ்ததைவச
அயஸ்காரோ லோஹகாராஃ பஞ்சைதேரதகாரகாஃ||
விஸ்வகர்ம சுதாஹ்யேதொதகாரஸ்துூ பஞ்சசஃ

மரம் பொன் கல் இரும்பு செம்பு முதலியவைகளால் பிரவிர்த்தி செய்கிற ஐந்துபேர்களையும் விசுவகர்ம நித்திரர்களென்றும் ரதகாரர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்பிரகாரம் சுருதி ஸ்மிருதிகளிலும் சிற்பபுராணதிகளிலும் ரதகாரவிஷயம் சொல்லியிருப்பதைத் தெரிந்திருந்தும் இடைக்காலத்தில் ஸ்மிருதிகளில் ரதகாரரின் உற்பத்தியை வேறுவிதமாகச் சொல்லி யெழுதியிருக்கிருர்கள். அதிலும் ரதகாரர்கள் உபநயனம் வேதாத்தியயனம் யாகம் சிற்பசாஸ்திரப் பிரவர்த்தக முதலிய கர்மங்களுக் கதிகாரிகளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (தொடரும்)

---

அந்தணரை நல்லவரைப் பரமசிவ
னடியவரை யகந்தையாலோர்
நிந்தனைசொன் ஞலுமென்ன வைதாலு
மென்னவதி னிஷேதமுண்டோ
சுநதரர்க்குத் தூதுசென்ற தண்டலைநீ
ணெறியாரே துலங்கும் பூர்ண
சந்திரனைப் பார்த்துநின்று நாய்குரைத்த
போதிலென்ன தாழ்ச்சிதானே

**—தண்டலையார் சதகம்**

## ஈயம்

ஈயம் மெதுவும் நீல நரை நிறமுமுள்ள உலோகம். இதன் ஆகரிகள் அதிகமானவைகள். ஈயம் இயற்கையில் சுத்தமான நிலையிற் காணப்படுவது அரிது. ஈயசலவீரமாகிய கலீனம் (Galenum) என்ற கல்லிலிருந்து வியாபாரத்தில் காணும் ஈயத்தின் மிகுதியான பங்கு எடுக்கப்படும். இது மிகுரியென்ற அமெரிக்கா தேசப்பகுதியில் விசேஷம். இதைத் தூளாக்கி மடக்கு உலையிலிட்டு மட்டாகச் சூடேற்றி ஈயம் எடுப்பார்கள். கலீனத்தில் வெள்ளி சிலவேளை இலாபமாய் எடுக்கத்தக்க அதிக அளவாயுஞ் சேர்ந்திருக்கும். 250 கலீனத்தில் ஒருபங்கு வெள்ளி சேர்ந்திருப்பது அதிகம். 100ல் ஒருபங்குமாத்திரம் சேர்ந்தாலும் இலாபமாய் எடுக்கலாம். ஈயம் பலமற்றது ஆயினும், ஒருமட்டாய்த் தகடாக அடிக்கவும் கம்பியாக நீட்டவுங் கூடியது 620-ம் பாகை சூட்டிற்கு உருகும். ஆறும்போது சுருங்குவதால் வார்ப்பு வேலைகளுக்கு நல்லது. சிவந்த சூட்டிலும் அதிகமானால் சொற்பமாய் ஆவியாய்ப் பறக்கும். ஈயத்துண்டின் வெட்டுவாய் மிகவும் மினுக்கும். என்றாலும், சுறுக்கில் கறையாகும். இப்படிப் பிடிக்குங் கறை ஈயம் இன்னும் பழுதாகாதபடி ஆடைபோல் காக்கும். சற்றும் ஈரமில்லாமல் பரமாணுவிலும் சுத்த தண்ணீர் நிறைத்து அடைத்த பாத்திரத்திலும் வெட்டுவாய் எக்காலமும் மங்காது. ஆயினும் காற்றும் சுத்த ஜலமும் ஒருமிக்கப்படும்போது ஈயம் கெதிப்பாயும் அதிகமாயுங் கறையாகும். கரையக்கூடிய ஈய உப்புகள் நஞ்சு. ஈயம் தேகத்தில் வரவரக்கூடி மறைவாயிருந்து சில வருஷமானபின் வலி சோர்வு முதலிய வியாதிகளை யுண்டாக்கும். ஈயத்தொட்டி குழல்களிருக்குந் தண்ணீரை அநேகர் குடித்து வருகிறார்களாதலால், ஈயம் தண்ணீரிற் சேர்ந்து உண்டாக்குந் தீங்கையாராய்ந்து அதை நீக்கும் வழியைக் கண்டுபிடிப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது. தண்ணீரின் வகைக்குத் தக்கதாய் ஈயத்தினால் அதிலுண்டாகும் பழுது வித்தியாசப்படும். ஆகையால், தண்ணீர்த் தொட்டி குழாய்கள் செய்வதற்கு ஈயத்திலும் கல், மரம், தகரம், இரும்பு நயந்தவையென்று விஞ்ஞான சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். உருக்கிய ஈயத்தில் காற்று வீசவிட்டு ஈயபுரவச்சிரத்தைக் குழுசாய்ச் செய்வார் இதுகள். மஞ்சள் நிறமானதோர் பொடி. ஒரு சிறு துண்டு ஈயத்தைக் கரியில் வைத்து உலை குழாயின் வெளிச்சுவாலையில் பிடிக்க இது விளங்கும். அது உருகி ஈயமும் ஈயவச்சிரமுஞ் சேர்ந்து முதல் நரைநிறமாகும். பிறகு, இன்னுஞ் சூடேற்ற ஈயபுரவச்சிரமுண்டாகி, அதின் நரை நிறமற்று நல்ல மஞ்சள் நிறமாகும். இவ்வச்சிரம் அநேக பொருள்களுக்கு மிகவும் நாட்டமுள்ளதாகும். இது, கண்ணாடி செய்யவும், பீங்கானுக்குப் பூச்சிடவும் அதிக உபயோகப்படும். இதைலின் (Linum on Linseed) எண்ணெயிற் கலந்து கொதிப்பித்து மினுக்க வெண்ணெயாகிய வார்ணிஷ் (Varnish) செய்வார்கள். ஈயபுரவச்சிரம் உருகும் சூட்டிலுங் குறைந்த சூடேற்றி அதை நெடுநேரம் காற்றுப்படவைத்தால் ஈயச்சிவப்பு (Red Lead) என்ற தூள் உண்டாகும். இது புரவச்சிரமும் பிரவச்சிரமுஞ் சேர்ந்த கலவை. இது நேர்த்தியான சிகப்பு நிறமுடையதாய்க் கண்ணாடி செய்வதிலும் மைப்பூச்சிலும் இயாக்கிரி மெழுகு கடுதாசிக்கு நிறங்கொடுப்பதிலும் அதிகமாய்ச் செலவழியும். ஈயகாபன்சு (Carbonate of Lead) இயல்பிலுள்ளதானாலும் மைப்பூச்சுக்காக மெத்த ஏராளமாய்ச் செய்யப்படும். இது மெதுவானதும் பாரமுடையதும் தண்ணீரிற் கரைவதுமாகிய வெள்ளைப்பொடி. நீதுரிக்கமிலமாவது அசதிக்கமிலமாவது கலந்த தண்ணீரில் தாராளமாய்க்கரையும். இதைலீன் (Linum on Linseed) வெண்ணெயோடு சேர்த்தரைத்து ஈயவெள்ளை (White Lead) என்னும் பெயருடைய மைப்பசைசெய்யப்படும். நஞ்சாகவுண்ட ஈயத்துக்கு மக்னீஷிஸல்வஸாகிய பேதியுப்பு நல்ல மாற்று. குடலில் அது இதனோடு சேர்ந்து கரையாத ஈயஸல்பஸாகும். நெடுங்காலமட்டும் படிப்படியாய்ச் சேர்ந்துகூடும். ஈயநஞ்சுக்கு இது உதவாது. ஈயத்திற் செய்யப்படும் உலோகக் கலப்புகள் அநேகம் இரவையாகிய துப்பாக்கிச் சன்னம் வேண்டியவைரமாகவும், சிறு சிறு உண்டையாய் லேசில் பிரியவும் அதின் ஈயத்தில் பாஷாணத்தை அற்பமாய்ச் சேர்ப்பார்கள். அச்சுலோகம் (Type Metal) ஈயம் மூன்று பங்கும் அந்திமனிஒருபங்குஞ் சேர்ந்த கலவை. இது லேசில் உருகி ஆறும்போது விரியுமாதலால், அச்சின் வடிவம் திட்டமாய்க் கொடுக்கும்.

---



## சமயாலோசனை

**கணியம்பாடி ஸ்ரீ அந்தியபக - லிங்காச்சாரியார்,**

இத்தேசத்தில் பிராம்மணர்கள் தாம் வசிக்கும் இடத்துக்கேற்றபடி திராவிடர், ஆந்திரர், கர்நாடகர், முதலிய பாஷை சம்பந்தமானபேர் வகித்திருந்தாலும் மீண்டும் தங்கள் சமயசம்பந்தமான சைவர் வைணவர், ஸ்மார்த்தர், மாத்துவர், என்னும் பெயர்களை முக்கியமாய்க் கொண்டிருக்கிறார்கள். மேலும் தங்கள் குலாசாரத்துக் குரிய யாவத்து காரியங்களுக்குப் பாஷை சம்பந்தத்தை நீக்கி சமயசம்பந்தத்தையே பொருத்திக் கொள்ளுகிறார்கள். இவர்களில் சைவர்கள் நீலகண்ட சிவாசாரியார் வகுத்த விதிகளையும், வைணவர் ராமானுஜாசாரியார் வகுத்த விதிகளையும், ஸ்மார்த்தர் சங்கராசாரியர் வகுத்த விதிகளையும், மத்துவர் மாதவாசாரியார் வகுத்த விதிகளையும் கொண்டு நடக்கிறார்கள். நம்மவர்கள் எதைக்கொண்டு நடக்கிறது? நம்மில் சிலர் சங்கராசாரியர் வகுத்த ஆசாரத்தையும், பலர் சைவர்களில் பிரிந்தவசவாசாரியார் வகுத்த ஆசாரத்தையும் கொண்டு நடக்கிறார்கள். என்றால் சுயாதீன முடையவர்களல்ல. நம்மவர்கள் விஶ்வகர்ம சமயத்தாரென்றால்தான் சுயாதீன முடையவர்களாவார்கள். இவ்விதமாய் பிரத்தியாருடைய சமயாசாரத்தைக் கொண்ட நம்மவர்கள் சுயாதீன உரிமைப் பாட்டைப்பற்றிய சமயம் நேர்ந்தபோது மாத்திரம் அதைவிட்டு நம் பழய விஶ்வகர்ம சமயாசாரத்துக் குரிய விதிகளை யெடுத்துக்காட்டி அந்நியர்கைக்கு தப்புவார்கள். அவ்விதிகள் விஶ்வகர்மாகமம், விஶ்வகர்ம புராணம், மூலஸ்தம்பம் என்பவற்றிலுள்ளவை. அவை இத்தேச முழுதும் நம்முன் இப்போதும் வழங்கிவருவதால் அவற்றை இப்போது தள்ளிப்போட்டு அந்நியர் கைக்குள் அடங்கிப்போவது சரியா? அல்லது அந்நியர்கைக்குத்தப்பி நம் பழய சுயாதீனத்தை நிலைநாட்டுவது சரியா? புதிதாய் யாதொன்றையும் செய்யவேண்டியதில்லை. பழமைக்கு யாதொரு விரோதமுமில்லை. அந்நியர்க்கடங்காத சுயாதீனம் நமக்குண்டென்று ஸ்ரீமான் மார்க்கசகாய ஆசாரியார் எடுத்து விளக்கியிருக்கிறார். அவரடைந்த தீர்ப்பினால் நம்மவர்கள் தமக்கு பிராம்மணீகம் உண்டென்று கண்டார்களேயொழிய அது எத்தன்மையான பிராம்மணீகம் என்று நன்காராய்ந் தறிந்தாரல்லர். அது இப்படிப்பட்டதென்று ஆராய்ந்தறிந்தொழுகுவது நமது கடமை யல்லவா. இத்தன்மையான சமயாசார சீர்திருத்தத்தைவிட்டு குலாசாரத்தில் தலையிடுவது அசாத்தியமான காரியமாகும். மறைந்துகிடக்கும் சமயத்தை வெளிப்படுத்தி அதை நம்மவர்களை அனுசரிக்கச்செய்தால் மற்றவர்கள் நம்ஜோலிக்கு வரமாட்டார்கள். துரைத்தனத்தாரும் நமக்குத் துணைநிற்பார்கள் அதைவிட்டு ஜாதியில் தலையிட்டுக்கொண்டால் நாம் நம் மாற்றாருக்கடங்கியேதீரவேண்டும். பலநாள் முயன்றறியப்படுவது மிதுவேயாகும். நெடுங்காலம் ஜாதியிலுழைத்து பயன்காணுதொழிவதினும், சமயத்திலுழைத்து சடுதியிற் பயனடைந் தானந்திப்பது நலமாய்த்தோற்றுவதால் இதை இப்பத்திரிகை வாயிலாய் வெளியிடலானேன். நண்பர்களாராய்மின் நன்கு விளங்கும். இதில் தொழில் சம்பந்தம் சிறிதும் இல்லை. நவீன நாகரீகத்துக் கேற்றவாறு தொழிலை விருத்திசெய்வதில் யாதொரு தடையுமில்லை. இதற்கு சமயவிசாரணைச் சபைகள் இன்றியமையாதவை. அவை (1) கண்காணிக்கும் சபை ஒன்று. (2) சென்ட்ரல் சபை ஜில்லாவுக்கொன்று. (3) ஊர்ச்சபை பிரதி குலதேவதை கோயில் இலாகாவுக் கொன்றிருத்தல்வேண்டும்.

---

**மாண்டவன் மீண்டு வந்தான்.**—பர்மா இராஜ்யத்திலுள்ள மாண்டலே நகரில் விருஜலால் என்பவன் சில தினங்களுக்குமுன் பேதியினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கையில், ஒருநாள் அவன் பேச்சு மூச்சு இல்லாதிருந்ததைக்கண்ட சுற்றத்தார் இறந்துபோனானென்று கருதி அவனைத் தூக்கிப்போய் அங்குள்ள ஒரு நதிக்கரையினருகே மணற்பாங்கான இடத்தில் புதைத்து வந்துவிட்டார்கள். பின்பு, அவன் இறந்ததற்கு வேண்டிய சடங்குகளை யெல்லாம் நிறைவேற்றி பதின் மூன்றாவது நாள் நடத்தவேண்டிய கிரியைகளை நடத்தி, பிராமணர்களுக்கு அன்னமிட்டுக்கொண்டிருக்கும் பொழுது, யாவரும் கண்டதிசயிக்கும்படி, அந்த விருஜலால் என்பவன் தன் வீடு வந்து சேர்ந்தான். சுற்றத்தார் அவனை மணலில் புதைத்து விட்டுத் திரும்பிய சிறிது நேரத்திற்கெல்லாம், தனக்குப் பிரக்ஞை வந்ததாகவும் உடனே வெகு சிரமப்பட்டு அக்குழியினின்று வெளிப்பட்டு, அருகேயிருந்த கிராமத்திற்குச்சென்று, உடம்பு அனுகூலமாகும் வரையில் 10, 12 நாள்காறும் அங்கு இருந்துவந்ததாகவும், பின்பு, தன் வீடுநோக்கித் திரும்பியதாகவும், அந்த விருஜலால் சொல்கிறானென்று, அங்கு பிரசுரமாகும், **பெயிசா அக்பர்** என்ற பத்திரிகை எழுதியிருக்கிறது.

## இந்திய வானசாஸ்திரம்

பூர்வகாலம்முதல் இந்துதேசம் வானசாஸ்திரத்தில் போபோனது. மொகலாயர் டெல்லியில் ஆண்டகாலத்தில் சாஸ்திர நிபுணரான ராஜா ஜெயசிங்கு என்ற யுத்தவீரனால் டெல்லி, ஜெய்பூர், உஜ்ஜினி, மத்ரா, ஸ்ரீகாசி என்ற ஐந்து ஸ்தலங்களில் கணித சாஸ்திரோக்தமாய் பிரம்மாண்டமான ஜோதிட உப்பரிகைகள் (Observatories) வெகு ஒழுங்காயும் பார்க்கிறவர்கள் அதிசயிக்கும்படியாயும் அப்போதிருந்த சாஸ்திர நிபுணர்களும், தற்காலத்திய மேனாட்டுக் கீழ்நாட்டு சாஸ்திர வல்லோரும், ஆச்சரியப்படும்படியாயும் கட்டப்பட்டன. மேற்கு வட்டம் பூர்வீக நாகரிகச் சின்னச் சோதனை இலாகாதார் அனுப்பிய ரிப்போர்ட்டில், மேற் கண்ட ஐந்து ஜோதிட உப்பரிகைகளில் யாதானுமொன்றைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமென்று குறிக்கப்பட்டிருந்தது. 1904-ம் வருஷத்தில், இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் வான சாஸ்திர நிபுணர்கள், பம்பாயில் வந்து கூடி ஒரு கான்பரென்ஸ் நடத்தினார்கள். அதில் செய்யப்பட்ட பல தீர்மானங்களில் ஒன்று என்னவெனில், இந்தியாவில் ஒரு மத்தியஸ்தானத்தில் சரியான முஸ்தீப்புடன் கூடிய ஜோதிட உப்பரிகையொன்று ஸ்தாபிக்க வேண்டுமென்பதேயாம். அக்கான்பரன்ஸால், ஹிந்து பஞ்சாங்க கணிதத் திருத்தச் சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டது. உஜ்ஜினிப்பட்டணம் இந்தியாவின் மத்தியஸ்தானமானதாலும் அது பூர்வகாலத்தில் வானசாஸ்திர வல்லோர்களின் வாசஸ்தானமாக இருந்ததினாலும், அங்கே ஏற்கெனவே கட்டப்பட்ட ஜோதிட உப்பரிகை இன்னும் இருக்கிறதினாலும் அதுதான் தகுந்த இடமென்று தீர்மானித்து அதைத் தெரிந்தெடுத்தார்கள். அதில் இருந்து வரும் ஜோதிட உப்பரிகையை நவீன சாஸ்திர ஆராய்ச்சிக்குப் பொருந்தும்படியாகச் செய்து கொள்ளலாம். ஜெய்சிங்கால் கட்டப்பட்ட ஜோதிட உப்பரிகையைத் தங்கள்வசம் ஒப்புவித்து விடும்படியாய் ஹிந்து பஞ்சாங்க கணித திருத்தச் சங்கத்தார் கேட்டிருக்கிறார்கள். அவைகளை மறுபடியும் பிரித்துக் கட்ட வேண்டும். அப்படிச் செய்யும்பொழுது அந்த யந்திரங்களின் முற்காலத்து நிலைமைமாறிப்போகாமலிருக்கும்படியாய்க் கவனித்து வரவேண்டும் என்று பயோனியர் பத்திரிகை கூறுகிறது.

## ஆச்சாரி - ஆஸாரி

### ஒரு தப்பபிப்பிராயம்

ஆச்சாரி யென்னும் நமது சிறந்த பட்டமானது நெடுங்காலமாக நம்மிடத்திருந்து நழுவிக்கொண்டு வந்தது. பலவருஷங்களுக்கு முன்னிருந்து பிறஜாதியாரிற் சிலர் நம்மை ஆஸாரிகளென்று சொல்லிவரலாயினர். இதற்கு ஒத்திருக்கும்படி இங்கிலீஷில் (Asari) ஆஸாரியென்று எழுதிவரலாயினர். நம்மவர்களுக்கோ தமிழுந்தெரியாது. இங்கிலீஷைப்பற்றி சொல்லவேண்டியதேயில்லை. கல்வியறிவில்லாததினால் தமது பட்டத்தின் உச்சரிப்பிலுண்டாய்வரும்மாறுதல் இவர்கள் கண்டுகொள்ள இயலாதேபோயிற்று. ஆதலால், பிறர் தமது பட்டத்தைச் சரியாக உச்சரிக்காமலும் எழுதாமலும் வருவதைக் கண்டிப்பதற்கில்லாதுபோயிற்று. இதுமட்டோ? அவர்களைக் கண்டிக்காமல் விட்ட குறையோடு நம்மவர்களே அவ்வித உச்சரிப்பும் எழுத்துங்கைக்கொள்ளத் தலைப்பட்டனர். இவ்வளவும் எதனால் நேரிட்டது? அறியாமையினால் நேரிட்டது. இவ்வறியாமைக்குக் காரணம் கல்வியில்லாத குறைவு. ஆதலால், பூர்வீகமாகிய ஆச்சாரிப்பட்டம் நழுவுவதையும் நவீனமாகியதோர் இழிவுப்பட்டம் நம்மீது சுமத்தப்படுவதையும் நம்மவர்கள் காணாது காலங்கழித்துவந்தார்கள். இதைக் காட்டுவாரில்லாதிருந்தபோது நமது சபைப்பிரசுரங்கள் வெளிவந்தன. அவற்றில் வெளியான வியாசங்களால் உண்மைவிளக்கப்பட்டது.நம்மவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன.பிறகு "விஸ்வகர்மன்" பத்திரிகை யாரம்பிக்கப்பட்டு இரண்டாவது சஞ்சிகை முதல் ஒரு சஞ்சிகைதவறாமல் இவ்விஷய சம்பந்தமான நுட்பங்களெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல்விளங்கக்காட்டப்பட்டுவருகின்றன. உண்மை யிங்ஙனமிருக்க, ஒன்றுமறியாத உன்மத்தர்கள் சிலர், ஆஸாரிப்பட்டத்தை நாமே யுண்டாக்கிக்கொண்டோமென்று மயங்கிக் குளறுகிறார்கள். இவர்களுடைய மதியை யென்னென்றுரைக்கலாம்! இவ்விகாரம் பல வருஷங்களாய் மெள்ள மெள்ளப் பரவிவந்ததைத் தமிழ்நாடு முழுவது மறிந்திருந்ததே யாயினும், நம்மவர் காணாதே யிருந்தனர். இப்படிக் கண்மூடியே கிடந்தால் அவ்விகாரம் நாளுக்கு நாள் பலமடையுமே யல்லாமல் பலங் குறையுமோ? நாம் அதை அசட்டை செய்திருப்போமாயின், நஷ்ட மடைகிறவர்கள் நாமேயல்லவா? இப்படிச் சும்மா விருந்திருந்து தானே பல சுதந்திரங்களை யிழந்து தவிக்கிறோம்? அவற்றைப்போல் ஆச்சாரிப் பட்டத்தையுங் கைவிடச் சித்தமானாலன்றி, இவ்விஷயமாய் நம்மவர்கள் கண்மூடியிருக்க விடலாகாது. பூனையானது தன்னிரண்டு கண்களையும் மூடிக்கொண்டு பூலோக முழுவதும் இருள் படிந்து விட்டதாக எண்ணிக் கொள்வதுபோல், சிலர் தாம் ஏதேனுமொருவிஷயத்தைக் கவனிக்காதிருந்தால் அதை உலக முழுவதுமே கவனிக்காதிருக்கிறதென்று மனப்பால் குடிப்பதுண்டு. இது மிகவும் ஆபத்தை யுண்டாக்கும் அசட்டையாகும். ஒருவன் நமது வீட்டைக் கொள்ளையடித்து நமது சொத்துக்களைப் பிடுங்கி விட்டு வேறு உபயோகமற்ற வஸ்துக்களை அங்கு நுழைப்பானானால், நாம் அஃதறிந்து அவனோடு வாதாடி நமது சொத்தைத் திரும்பப்பெறுவதை விட்டு அவன் அபகரிப்பதைக் கவனியாமலும் வேறு வஸ்துக்களை நுழைப்பதைத் தடுக்காமலு மிருக்கவேண்டுமென்று அறிவாளிகள் கூறுவார்களா? கூறவேமாட்டார்கள். நமது சொத்தை மீட்பதற்குத் தான் தூண்டுவார்கள். அதுபோல், ஆச்சாரிப் பட்டங் கொள்ளைபோகிறபோது, அதை யறியாது உறங்கிக்கிடக்கும் விஸ்வகர்ம குல ஜனங்களைத் தட்டியெழுப்பி, அதைமீட்கத்தூண்டும் நமது சபையாரின் முயற்சி மிகவும் குலோபகாரமானதென்பதை விவேகியெவனும் மறுக்கமாட்டானென்பதுசித்தாந்தம். இன்னும், பலவிடங்களிலிருப்போர் இவ்வாபத்தைப் பற்றி யறியாமலே அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கிறார்கள். அவர்கள் தமதுபட்டத்திற்கு நேர்ந்துள்ள ஆபத்தை அறிந்து தக்கவாறு நடந்துகொள்ளச் செய்யவேண்டுமானால், அவர்களுக்கெல்லாம் நமது விஸ்வகர்மன் பத்திரிகை எட்டும்படிச் செய்யவேண்டும். இதை நன்கு கவனித்து இப்பத்திரிகா வாசகர்கள் வெளியூர்களிலுள்ள தங்கள் பந்துக்கள் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையைப் பெற்று வாசிக்கச் செய்வது தமது முக்கிய கடனாய்க் கொள்ளவேண்டுகிறேன்.

ஆரணி - கதிர்வேலாச்சாரி.

### பிழைதிருத்தம்

75-வது பக்கம் 27-வது வரியில் "யறியாது" என்பதை "யறியார்போலும்!" என்று திருத்திக்கொள்க.





## குடந்தையில் கான்பரன்ஸ்

### 1. சம்பந்திபோஜன சந்தேகநிவர்த்தி

சென்றமாதச் சஞ்சிகையில் 'சமபந்தி போஜன சந்தேகன்' என்ற தலைப்பிட்டெழுதிய நிருபருடைய சந்தேகத்தை|எனக்குத் தெரிந்தமட்டில் நிவர்த்தி செய்யப் பிரயத்தினப்படுவேன். கான்பரன்ஸோ பொதுக்கூட்டமோ குலத்தாருக்கென்று நடத்தும்போது,அதில் எல்லா திறத்தினரும் வந்திருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. அப்போது நல்ல பரம்பரையாரென்றும் மற்றப்படி யென்றும் பிரித்துப் பேசவும் நடத்தவும் முடியாது. அப்படிப் பிரிவினை ஏற்படுத்தினால் கலகமுண்டாகி மனஸ்தாபமேற்படும். ஆதலால், அவ்விதமாகச் சபையிற் செய்யவேகூடாது. எல்லோரும் ஒன்றாயிருந்து சமபந்திபோஜனஞ் செய்வதில் பிசகொன்றுங் காணோம். பந்திபோஜனத்தில் என்னகுறை ஏற்படப்போகிறது? அன்ன சத்திரங்களிலும், காபிஹோட்டல்களிலும் வேறு ஜாதியார்களோடு நம்மவர்கள் பேதமில்லாமல் உட்கார்ந்து சாப்பிடவில்லையா? ஊர்ப்பிரயாணஞ் செய்யும்போது, சகல ஜாதியார்களும் பார்க்கும்படி சமைத்துப் பகிரங்கமாய்ச் சாப்பிடுவதில்லையா? மற்ற ஜாதியார்கள் பார்க்க ஒப்பியிருக்கும்போது,சொந்த ஜாதியார் பார்க்கும்படி ஒரு பந்தியாய் உட்கார்ந்து சாப்பிடுவதில் என்ன தாழ்வோ? விவேகிகளாயிருக்கிறவர்கள் இப்போது பலஜாதிச் சமபந்தி போஜனங்களை நடத்திவருவதை நம்மவர்கள் அறியாரோ? துலுக்கர்கள், கிருஸ்தவர், பார்ப்பார், முதலிமார், வன்னியர், கிராமணிகள், செட்டிகள் முதலாகப் பலஜாதி மதஸ்தர்களும் பலதடவைகளில் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிட்டதாகக் கேள்விப்படுகின்றோமே! ஒரே ஜாதியார் சமபந்திபோஜனஞ் செய்யப் பின்வாங்கலாமோ? சமையற்காரர் பரிமாறுவோர் இவர்கள் சதாசார பாராளாய்ச் சத்சம்பிரதாயிகளா யிருக்கவேண்டியது அவஸ்யம். சமபந்திபோஜனத்திற் கேற்பாடுசெய்கிறவர்கள் மேற்கூறிய லக்ஷணங்களுடையவர்களைச் சமையலுக்கும் பரிமாறுவதற்கும் அமைக்கவேண்டும்.அவர்கள் ஸ்திரீகளாலாமல் புருஷாளா யிருத்தல் நன்று. இந்த ஏற்பாடு செய்தால் நம்மவரில் எத்தகையரேயாயினும் சமபந்திபோஜனஞ் செய்யத் தடையிராது, இருக்கவுங் கூடாது.

நாகூர். பக்கிரிசாமி பத்தர்.

## 2. சாலிவாடி புராதீனம் தர்மபதி

சென்றமாதப் பத்திரிகையில் "குலப்பிரகாசம்" என்ற தலைப்பின் கீழ் சாலிவாடி புராதீனம் தர்மபதியவர்கள் எழுதிய விஷயம் இன்னதுதான் என்று நன்கு புலப்படாவிட்டாலும், கான்பரன்ஸ் நடத்துவது அவருக்கு அங்கீகாரமில்லையென்பதுமட்டும் விளங்குகின்றது. இவருக்கு உள்ள ஆக்ஷேபமாவது கான்பரன்ஸில் செலவிட நேரிடும் பொருளை வித்தியாபிவிருத்தி சம்பந்தமான காரியங்களில் செலவிட்டால் பிரயோசனம் அதிகமுண்டாகுமென்பதேயாகும். இது நல்லகருத்தேயானாலும், கான்பரன்ஸில் செலவிடும் பொருள் விருதாவாய்ப் போகிறதென்று சொல்லவே கூடாது. கான்பரன்ஸ் செலவு விருதாவானால், பல மதஸ்தர்களும், பல ஜாதியார்களும், பலதேசஸ்தர்களும் கான்பரன்ஸ்களில் பொருள் செலவிடமாட்டார்கள். செலவிட்டு வருபவர்கள் கண்மூடிகளென்றாவது, மூடர்களென்றாவது, சொல்லக்கூடுமோ? கூடாது. பல ஜாதிமத தேசப்பிரமுகர்களாயுள்ள வித்தியா நிதிகளெல்லாம் ஜில்லாக் கான்பரன்ஸ்களும், மாகாணக் கான்பரன்ஸ்களும், காங்கிரஸ் மகாசபையும் நடத்திவரக்காண்கின்றோமல்லவா? இவைமட்டேயோ! ஆசாரதிருத்தக் கான்பரன்ஸென்ன, சைவசித்தாந்த கான்பரன்ஸென்ன, சாதுமகாசங்கங்களென்ன, மதுபான விலக்குக் கான்பரன்ஸென்ன, இன்னுமித்தகைய கான்பரன்ஸ்களெத்தனையோ வருஷந்தோறும் நடைபெற்று வருகின்றன. இவற்றில் லக்ஷக்கணக்கான பொருள் செலவாகிறது. அவ்வளவும் விருதாவாகவாபோகிறது? இல்லையில்லை. பலன் விளைவிக்கின்றதென்றே சொல்ல வேண்டும். அப்பலன் சிறிதாயிருக்கலாம். அதிகமாயிருக்கலாம்; சமீபத்திற் கைகூடலாம் தூரத்திற் கைகூடலாம்; கண்ணுக்குப் புலப்படலாம் புலப்படாதிருக்கலாம். அன்றி, பலனேயில்லையென்று சொல்லக்கூடாது. பலனில்லையாயின், ஆயிரக்கணக்கான விவேகிகள் இவற்றிலீடுபட்டுழைக்க மாட்டார்கள்.

மற்று, "சங்கெள சக்திகலௌயுகே" யென்ற வாக்கியத்தை தர்மபதியவர்கள் நிதானித்துப்பார்க்க விரும்புகிறேன். இக்கலியுகத்தில் ஜனவலிமை கூட்டத்தினாலேயே யடையப்படுகின்றது. இது சுருதி, யுக்தி, அநுபவம் என்னும் மூன்று விதங்களாலுந் துணியப்பட்ட உண்மையாகும். தனித்திருப்போன்வாக்கு செல்லாது, அவன்மார்க்கத்தைப் பிறர்பற்றுவது கஷ்டம். ஆனால், ஒரு கூட்டத்தார் ஒரு காரியஞ்செய்யப் புகுவாராயின் அது ஜனங்கீகாரமாகிப் பின்பற்றப்படும். இது நாம்நாள்தோறும் கண்டுவருகிற காக்ஷி. நமது ஜாதி, மதம், தேசங்களுக்கு மாத்திர மேற்பட்ட உண்மையல்ல. சர்வஜாதிமத தேசங்களுக்கும் பொதுவாகிய தோர் உத்தம நிர்ணயம். மத உண்மைகளை நிலைநாட்டும் பொருட்டாக ஒவ்வொரு மத வாதிகளும் தங்கள் கூட்டத்தாரையெல்லாம் ஒன்றுசேர்த்துக் கான்பரன்ஸ் நடத்தி தங்கள் மதக்கோட்பாடுகளைப் பரவச்செய்து வருகின்றனர். தேசக்கான்பரன்ஸ்காரர்களாகிய மாகாணசபை, காங்கிரஸ்சபை யாதியவற்றின் அதிகாரிகள் இராஜாங்க நடவடிக்கைகள் சம்பந்தமான தங்கள் கருத்துகளை ஜனங்களுக்கும் அரசாங்கத்தாருக்கும் வெளியாக்கி வருகின்றனர். ஜாதிக் கான்பரன்ஸ்காரர் தங்கள் குறைகளை அந்த ஜாதிப் பிரஜைகளுக்கெடுத்து விளக்கி அவர்கள் சீர்திருந்தச்செய்தும், அரசாங்கத்தாருக்குச் செய்யவேண்டிய முறைப்பாடுகள் ஏதேனுமிருக்குமாயின் அவற்றைச் செய்துகொண்டும் வருகின்றனர். இங்ஙனம், பல ஜாதியார்க்கும் இப்போது கான்பரன்ஸ் ஏற்பாடு நமது தென்னாட்டிலும் உண்டாயிருக்கிறது. ஜாதிச் சீர்திருத்தத்திற்கும் மேம்பாட்டிற்கும் தக்கதானதென்று பல ஜாதியாரால் கண்டு தீர்மானிக்கப்பட்டு அநுஷ்டானத்திற்குப் பலவருஷங்களாக வந்திருக்கும் இம்மார்க்கத்தை நாம் நிராக்ஷேபமாய்க்கைப்பற்றுவதே விவேகமாகும். உலகத்தாருண்டென்பதில் லென்பானவையத்து அலகையாவைக்கப்படும். இம்மார்க்கத்தைக்கைப்பற்றிப் பலஜாதியார் விருத்தியடைந்திருக்கிறார்களென்பது நிதரிசனமாயிருக்கிறது. அப்படியிருக்க, நமக்குக் கான்பரன்ஸ் வேண்டுமோ வேண்டாமாவென்ற ஆராய்ச்சியில் தலையிடுவது, நமக்குக் கல்வி வேண்டுமோ வேண்டாமாவென்று விசாரணை செய்வது போலிருக்கிறதே யொழிய வேறில்லை. நமக்குக் கல்வி வேண்டுமோ வேண்டாமாவென்ற விசாரணையிலிருப்போரைக்கண்டால் நமது தர்மபதியவர்கள் வியப்படைவாரென்பதில் சந்தேகமில்லை. அப்படியே, நமக்குக் கான்பரன்ஸ் வேண்டுமோ வேண்டாமாவென்ற இவர் விசாரம் எனக்கு வியப்பை யுண்டாக்குகிறது. குடந்தையில் கான்பரன்ஸ் என்னுந் தலைப்பின்கீழ் நமது பத்திரிகையில் இதுவரையிலும் வெளியாயுள்ள வியாசங்



களையும் கடிதங்களையும் நன்கு வாசித்திருப்பரேல் இவருக்கு இவ்வித அபிப்பிராயம் ஏற்பட்டிராதென்று நினைக்கிறேன். ஆங்கில, திராவிட, கீர்வாணக் கல்வி வல்லவரும், காலதேச வர்த்தமானப் போக்கை நன்கறிந்தவருமாகிய யாழ்ப்பாணத்து லாயர் ஸ்ரீ ந. சிவக்கொழுந்தாச்சாரியசுவாமிகளெழுதியுள்ள வியாசத்தை வாசிப்போரெவருக்குத்தான் கான்பரன்ஸ் அவஸ்யம் புலப்படாதிருக்கும்?

கான்பரன்ஸ் செலவுப்பணம் வித்தியாபிவிருத்திக்கு உபயோகிக்கப்படுதல் சிலாக்கியமென்று தர்மபதியவர்கள் கூறுகிறார்கள். நன்று, வித்தியாபிவிருத்திக்கென்று பெரும்பொருள் சேகரித்தல் இப்போது சாத்தியமாயிருக்கிறதா? வித்தியாபிவிருத்தியின் அவஸ்யத்தைப்பற்றி நம்மவர்களெல்லோரும் நன்கறிந்திருக்கிறார்களா? அறிந்திருக்கிறார்களென்றால், அவர் தம் மக்களை அஞ்ஞானத்தி லழுத்தியிருக்கமாட்டார்களே! ஆதலினால், வித்தியாபிவிருத்தியின் அவஸ்யம் இவர்களுக்கு இன்னுந் தெரியவில்லை யென்பதேற்படுகிறது. இவ்வளவேன்? குலப்பிரமுகர்களெனக் கோஷித்து வருவோர்களிற் சிலரே, அந்தரங்கமாகவும் பகிரங்கமாகவும் வித்தியாபிவிருத்தி செய்வது அனாவசியமென்று பலருக்கும் போதித்துவருகிறார்கள். கல்வியறிவில்லாத இவர்கள் அங்ஙனஞ் செய்துவருதல் ஆச்சரியமல்ல. வாலறுந்தநரி மற்ற நரிகளையும் வாலறுத்துக்கொள்ளச் செய்த கதை நமது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதுபோல், கல்வியறிவில்லாத பேதையர் தமது ஜாதிப்பிள்ளைகளுக்குக் கல்வி அனாவசியமென்று சொல்வது இயல்பேயாயிருக்கிறது. இதை நமது தர்மபதியவர்கள் அறியார்போலும்! இந்த ஸ்திதியில் வித்தியாபி விருத்திக்கென்று பணந்தண்டினால் யார் கொடுப்பார்கள்? ஒருவருங் கொடார். அவர்கள் கொடுக்கச் செய்யவேண்டுமானால், முதலில் வித்தியாபிவிருத்தியின் அவஸ்யத்தை யெடுத்து அவர்களுக்குப் போதிக்க வேண்டும். ஒருவர் போதித்தால் போதாது, பலர் போதிக்கவேண்டும். ஒரூராருக்கு போதித்தாற் போதாது, பல ஊராருக்கும் போதிக்கவேண்டும். இஃதெங்ஙனஞ் சாத்தியமாகும்? கான்பரன்ஸிலேதான் சாத்தியமாகும். கான்பரன்ஸிலன்றிச் சாத்தியமாகாத காரியமிஃதொன்றேயோ? இன்னுமெத்தனையோ இருக்கின்றன. அவையும் வித்தியாபிவிருத்தியே போன்று அவஸ்யமும் அவஸரமுமானவை.

ஜாதிச்சீர்திருத்த சம்பந்தமான தீர்மானங்கள் பல செய்யப்படவேண்டியனவா யிருக்கின்றன. கான்பரன்ஸ் கூடிப் பல ஜனங்களால் தீர்மானிக்கப்பட்டாலன்றி, அவ்விஷயங்களில் குலஜனங்கள் நாட்டம்பதிப்பதும் நடவடிக்கை கொள்வதுங் கஷ்டம். தனித்திருந்து ஒருவரோ ஒன்பதின்மரோ எத்தனையாண்டுகள் பிரசங்கித்தாலும் எழுதினாலும் அவை அத்துணை யுரம்பெறமாட்டா. அன்றியும், ஜாதியார்க்குத் தெரிவிக்க வேண்டியனவே யல்லாமல், அரசாங்கத்தார்க்கும் மற்றக் கூட்டத்தார்க்குந் தெரிவிக்க வேண்டியனவாய்ப் பலவிஷயங்க ளிருக்கின்றன. அவை கூட்டங்கூடிக் கோஷஞ்செய்தாலன்றி அன்னோருடைய கவனம் பெறமாட்டா. நமது ஜாதியாருடைய முறையீடிதுவென்று நாமொன்று சொல்லவேண்டுமானால், நமது ஜாதியாரெல்லோருங் கூட்டமாயிருந்து சொன்னால் மட்டுமே அது ஜாதிப் பொதுமுறைப் பாடென்று கொள்ளப்படும். அப்போது அதற்கு ஓர் மதிப்புண்டாதல் நிச்சயம்.

எனவே, அரசாங்கத்தாராதிய பிறகூட்டத்தாருடைய மதிப்பை யடையவும், சுஜாதி ஜனங்களுடைய கவனத்தை யுறவும், இவர்களால் ஜாதிக்கெய்தவேண்டியனவாகிய பல நன்மைகளையுஞ் சிறப்புகளையும் எய்துவிக்கவும், நாம் கான்பரன்ஸ் நடத்த வேண்டியது அத்தியாவஸ்யமா யிருக்கிற தென்பது பெறப்பட்டது. இத்தனை வருஷங்களாகக் கான்பரன்ஸ் விஷயத்தில் நமது ஜாதியாருடைய கவனஞ் செல்லாதது நமது துரதிர்ஷ்டமே யெனவேண்டும். இரண்டு வருஷங்களுக்கு முன்னமேயே, கோயமுத்தூர் ஸ்ரீ C. R. சுப்பராய ஆச்சாரியா ரவர்கள் நாம் கான்பரன்ஸ்கள் நடத்தவேண்டிய அவஸ்யத்தை நன்கு விளக்கிக் காட்டினார். இப்போது, கும்பகோணம் ஸ்ரீ ரா. சதாசிவ உபாத்தியாயர் குடந்தையில் கான்பரன்ஸ் நடத்துவிக்கும்படி பலரைத் தூண்டினார். இதைப்பற்றிப் பல விவேகிகள் நல்லபிப்பிராயந் தந்து வருகின்றனர். ஆதலால், நம்மவர்களெல்லோரும் கான்பரன்ஸ் நடைபெறுமாறுதவி யுழைப்பார்களாக. நமது தர்மபதி யவர்கள் கான்பரன்ஸின் அவஸ்யத்தை இனியேனுங் கண்டு தெளிந்து தமது சிஷ்ய ஜனங்களை யூக்கி இதிலுய்ப்பாராக. கான்பரன்ஸ் சீக்கிரமே நடைபெறும்படி கருணாகரக் கடவுள் கைதருவாராக.

**கர்மசுதன்.**

## நமது வாசகர்கள்

(கடிதக்காரர் தங்கள் அபிப்பிராயங்களுக்குத் தாமே ஜவாப்தாரிகளாவர்)

### சகோத்ர விவாகம்

ஒரே கோத்திரத்தி லுற்பவித்த பிள்ளையும் பெண்ணும் ஒருவரையொருவர் விவாகஞ்செய்துகொள்வது தகாதென்றே கொள்ளவேண்டியதாயிருக்கிறது. நமக்குள் பிரபலமாய் வழங்கப்பட்டுவருவன ஐந்துகோத்திரங்கள். அவையாவன—சாநக, சநாதன, அபுவனஸ, பிரத்நஸ, சுபர்நஸ. இவ்வைந்து கோத்திரங்களை நம்மவர்கள் சொல்லக்கேட்கின்றோமல்லாமல், இவற்றின் உட்பிரிவுகளாகச் சொல்லப்படும் 125 கோத்திரங்களி லெவற்றையும் வழக்கமாய்ச் சொல்லக் கேட்பதில்லை. இப்படியிருக்க, பம்பாய் மாகாணத்திலும், ஆந்திரநாடு முதலிய இடங்களிலும் நம்மவர்களில் விஸ்வக்ஞர் தனித்தொரு கூட்டமாயிருந்து தமக்குள்ளேயே சம்பந்தஞ் செய்துகொள்வதாகத் தெரிகிறது. மற்ற வகுப்பார்களும் இங்ஙனஞ் செய்கின்றார்களாம். இது சரியா? தென்னாட்டிலுள்ள விஸ்வகர்மவம்ஸத்தார்களில் இவ்வித விவாகங்கள் நடைபெறுகின்றனவா? இவ்விதம் விவாகஞ்செய்து வைப்பவர்கள் இருதிறத்தாருக்கும் மேற்படி ஐந்திலொன்றே பொதுவான கோத்திரமாயிருந்தாலும் உட்பிரிவுக்கோத்திரங்கள் வேறுபட்டிருக்கின்றனவென்றும், ஆதலினால் தாங்கள்செய்யும் விவாகங்களிற் பிசகில்லையென்றுஞ் சமாதானங்கூறி வருகிறார்கள். இந்த சமாதானம் அங்கீகரிக்கப்படக் கூடியதா? இக்கேள்விகளுக்குத் தக்க பதில்களைப் பண்டிதசிரேஷ்டர்கள் தந்தருளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோ. முனிசாமிபத்தர்.

### பொடிக்கூட்டுப்போன் நகைகள்

நமது ஜாதியாரைப்பற்றியும், நமதுஜாதியார் செய்து வருந் தொழில்களைப்பற்றியும், மற்ற ஜாதியார்களும் மற்ற பத்திரிகைகள் முதலானவைகளும் என்ன சொல்லுகின்றன வென்பதை நாம் ஜாக்கிரதையாய்க் கவனித்து வரவேண்டியது அவஸ்யமாயிருக்கிறது. இது வரையிலும் அப்படிச் செய்வதற்கு சௌகரியமில்லாமலிருந்தது. இப்போது நமக்கென்று தனியாய் ஒருபத்திரிகை நடத்தப்பட்டுவருவதால், அதன்மூலமாய் மேற்படி விஷயத்தைப் பிரஸ்தாபஞ் செய்யலாம். பிறர்சொற்கள் நம்மவர்களுக்குத் தெரிவதில்லை. ஆதலால், அவர்கள் குற்றங்காணும் விதங்களை நாம் கண்டு திருத்திக்கொள்வதற்குச் சமயம் வாய்ப்பதில்லை. இது நமது குலத்திற்கே பெருநஷ்டம். ஆகையால், என் கண்களிற் பட்டதொன்றை இங்கு விஸ்தரிக்கத் துணிந்தனன். சுதேசமித்திரன் பத்திரிகை பல ஜாதியாராலும் வாசிக்கப்படுகிறதல்லவா? அதில் "நமது பெண்களும் அவர்கள் ஆபரணங்களும்" என்ற மகுடமிட்டு, 29. 5. 14ல் ஒருவர் ஒரு கடித மெழுதியிருக்கிறார். அதில் பொடிக்கூட்டு நகைகளைப்பற்றிப் பிரஸ்தாபஞ்செய்து மேற்படி நிருபர் பின்வருமாறெழுதுகிறார்—"அதிக பொடிக்கூட்டு நகைகளும் சேதமாகக்கூடிய நகைகளையும் செய்யக்கூடாது. தட்டான் மார்களை வீட்டில்வைத்து தக்க காவலில் நகைகளைச்செய்து முடிக்கவேண்டும். அநேக சமயங்களில் தட்டான் மார்கள் செம்பு வெள்ளி முதலிய கம்பிகளைத் தங்க நகைகளில் வைத்து காரியத்தை முடித்துவிடுகிறார்கள். அந்த நகைகளை அழிக்கும்போதுதான் தட்டான்மார் திருட்டு வெளிப்படுகின்றது." இந்த வாக்கியங்கள் நமது ஜாதியாருடைய கவனத்திற்கு வரவேண்டியவையானபடியால் இங்கு பெயர்த்தெழுதலாயிற்று. சுதேச மித்திரன் பத்திரிகையில் பல ஜாதியார்கள் படிப்பார்களாயினும், நம்மவர்களுடைய பார்வையில் அது படுவதில்லையாதலாலும், எல்லோரும் இதைப் படிக்கும்போது தட்டாரத்தொழிலைச் செய்துவரும் நம்மவர்கள் பார்க்கவேண்டியது முக்கியமாதலினாலும், அவர்கள் பார்க்கும்படியாக இப்பத்திரிகையி லெழுதினேன். இவ்வாக்கியங்களைப்பற்றி நான் தெரிவிக்கவேண்டியது ஒன்றுமில்லை. அவரவர்களே படித்துப்பார்த்து யோசித்துக்கொள்ளட்டும். குல அபிமானம் கொஞ்சம் எனக்கிருப்பதினால், மேற்படி வாக்கியங்களை வாசித்தபோது எனக் குண்டான ஒருவித சஞ்சலத்தை ஆற்றிக்கொள்ளும்பொருட்டு இதை யெழுதும் கஷ்டமெடுக்கலானேன். இதை இங்கு வெளியிட்டதினால் நமது குலத்தார்க்குக் கொஞ்சமேனும் நன்மையுண்டாகுமென்பது என் நம்பிக்கை. வேண்டியவர்கள் நேரே சுதேச மித்திரன் பத்திரிகையைப் பார்த்துக்கொள்ளட்டும்.

சென்னிமலை-காத்தமுத்து ஆசாரி.



### சபைப்போக்கிஷம்

சபையின் முதல் ரிபோர்ட் பெற்று வாசித்தவர்களெல்லாம் மிகுந்த சந்தோஷமடைந்திருப்பார்களென்பதிற் சந்தேகமில்லை. நமது ஜாதிக்கென்று ஒரு சபை ஏற்பட்டு இவ்வளவு விமரிசையாக நடைபெறுவதைக் காண எந்தக் குலாபிமானிக்குத் தான் சந்தோஷ முண்டாகாது? சபையின் இயக்கங்கள் மிகச் சிலாக்கியமானவையா யிருக்கின்றன. சபையை விருத்திசெய்யும் விஷயத்தில் குலஜனங்க ளெல்லோருக்கும் சிரத்தையிருக்கவேண்டியது முக்கியம். அப்போதுதான் சபையாருடைய உத்தேசங்கள் சீக்கிரத்தில் கைகூடும். இவ்வளவு உபகாரமுள்ள சபை யொன்று சென்னையில் சுமார் நான்கு வருஷங்களாக நடைபெற்று வந்தும் இதைப்பற்றி எத்தனையோ தாலுக்கா வாசிகள் இன்னும் அறியாதிருக்கின்றனர். இந்தக் குறையை அங்கங்குள்ள குலாபிமானிகள் தான் நீக்கவேண்டும். ஒவ்வொருவரும் வெளியூர்களிலுள்ள தமது பந்துமித்திரர்களுக்கு சபையைப் பற்றியும் விஸ்வகர்மன் பத்திரிகையைப் பற்றியும் தெரிவிக்கவேண்டுமென்னும் அக்கறை கொள்வார்களானால் விரைவிலேயே தென்னாடு முழுவதும் சமாசாரம் பரவிவிடும். இதைக் குலாபிமானிகள் அவஸ்யம் செய்வது அவரவர்கள் கடனா யிருக்கிறதென்பதை எடுத்துக் காட்டவேண்டியதில்லை. இனி சபைப் பொக்கிஷத்தை நிரப்புவதிலும் குலத்தினர் கவனஞ் செலுத்தவேண்டும். இப்போது கையிருப்பிலுள்ள தொகை மிகக் கொஞ்சமா யிருக்கிறது. அதில் வெளியிலிருந்து வரவேண்டிய பணம் பெரும் பாகமாயிருக்கிறது. மாகாண முழுவதிற்கும் ஏற்பட்ட சபைக்கு ஆயிரக் கணக்காய் வருஷந்தோறும் வரவு கிடைக்கவேண்டாமா? அதே விதமாய்க் கையிருப்புமிருக்கவேண்டுமே! இல்லாவிட்டால், சபைக் காரியங்கள் எப்படி நடைபெறும்? நடை பெறாவிட்டால் குலம் சீக்கிரத்தில் சீர்திருந்தாதல்லவா? ஆகையினால், விஸ்வப்பிராம்மணர்கள் ஒவ்வொருவரும் சபையின் அபிவிருத்தியில் கவனம்வைத்து புதுமெம்பர்களையும், பத்திரிகைச் சந்தாதாரர்களையும் தினந் தினந் தேடிச்சேர்த்து சபைப் பொக்கிஷத்தைப் பெருக்குவதில் கண்ணோக்க முடையரா யுழைப்பார்களாக. இது வன்றி தீபாவளித்தண்டல் இவ்வருஷத்தில் ஊர்தவறாமல் நடைபெறுமாறும் செய்வார்களாக. அப்படித்தண்டல்செய்தால், குறைந்தபக்ஷம் இரண்டாயிர ரூபாய் சேருமே! அதை வித்தியாபிவிருத்தியிற் செலுத்தினால் பணமில்லாது தவிக்கும் எத்தனையோ சிறுவர்கள் சகாயம்பெற்று வாசித்துப் பாஸ்செய்து பெரிய உத்தியோகங்களில் அமர்ந்து குலபூஷணமாய் விளங்கி நமது ஜாதியை மற்றவர் மதிப்பில் உயர்த்துவார்களன்றோ? இதுவல்லவா நாம் கவனிக்க வேண்டியவிஷயம்? இதற்கல்லவா சகாயஞ்செய்யவேண்டும்? இன்னுமா அசட்டையாயிருக்கவேண்டும்? இப்போதே கங்கணங் கட்டிக்கொண் டுழைப்போமாக! சீக்கிரம் பணஞ்சேர்த்து, பலனளிக்கும் விதங்களில் உபயோகித்து, சீர்பெறுவோமாக!! விஸ்வப்பிரமன் இதற்கு அநுகூலஞ் செய்து நம்மை ஈடேற்றுவாராக!!! சுபம், சுபம், சுபம்.

மாகறல்-தண்டாயுதபாணி உபாத்தியாயர்.

## விவசாய விளக்கம்

### சர்க்காரார் சகாயங்கள்

கால்நடைத் தீவனப் பயிராகவாவது, பசுந்தாள் எருவுக்காக உழுவதற்காகவாவது, அவரி, பச்சைப்பயறு, கடம்பு முதலிய பயிர்களை நன்செய் நிலங்களில் சாகுபடி செய்வதினால் உண்டாகும் நன்மைகள் அனேகமென்று இந்தப் பஞ்சாங்கத்தில் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும், இப்படிப்பட்ட மாசூல்களை சாகுபடி செய்கிற பழக்கத்தை விர்த்தி செய்வதற்காக சர்க்காரில் செய்திருக்கிற சகாயங்கள் இன்னதென்று அனேக விவசாயிகள் அறியாதிருக்கிறார்கள். காய்பிடித்து முற்றுவதற்குமுன், உழப்படுவதற்காகவாவது, அறுத்து மாட்டுத் தீவனமாய்ப் போடுவதற்காகவாவது, அல்லது அறுக்காமலே நிலத்திலேயே மாடுகளை ஓட்டி மேய்ப்பதற்காகவாவது மாத்திரம்வேண்டி ஒருபோக நன்செய் நிலங்களில் நெல் சாகுபடிக்குமுன், மேற்சொன்ன பயிர்களை சாகுபடிசெய்தால், அப்பயிர்களுக்கு யாதொரு விதமான தீர்வையும் கொடுபடவேண்டியதில்லை யென்று உத்திரவாயிருக்கிறது.

ஜூன் ஜூலை மாதங்களில் ஆறுகளில் தண்ணீர் வந்து, ஆகஸ்டு, ஸெப்டம்பர் மாதம் வரையில் சம்பா நெல்லை நடாத தஞ்சாவூர் போன்ற ஜில்லாக்களிலிருக்கிற விவசாயிகள், தற்காலத்தைவிட அதிகமாய், மேற்கண்ட சகாயத்தைக் கொண்டு லாபமடைய வேண்டும். ஒன்றரை அல்லது இரண்டுமாசங்களில் நன்றாய் வளர்ந்திருக்கும்படியான சடம்பு பயிரை உண்டாக்கலாம். இதற்கு உழவுச் செலவும், விதை வாங்குகிற செலவும் தவிர வேறு செலவில்லை. கும்பகோணம் (தாலூகா) விவசாய சங்கத்தார், தங்கள் சங்கத்தைச்சேர்ந்த பண்ணை நிலத்தில் சடம்புப் பயிரை மேற் சொன்னபடி

விதைத்து, நெல் நடுவதற்குமுன், எருவாக உழுது விட்டிருக்கிறார்கள். சர்க்காரார் முன் சொல்லிய சர்க்கார் உத்திரவைவிட அதிகமாக ஒரு போக நிலத்தில், நெல்லறுத்தபின் பசுந்தாள் எரு, கால்நடைத் தீவனப் பயிர் இவ்விரண்டு பிரயோஜனங்களை உத்தேசித்து, விவசாயிகள் அவுரி முதலிய பயிர்களை சாகுபடி செய்தால் அவைகளுக்குத் தண்ணீர்த் தீர்வை ஏற்படாதென்று உத்திரவு செய்திருக்கிறார்கள். நெல்லறுப்பதற்கு சுமார் பத்து நாட்களுக்கு முன்னமே நெற்பயிரிலேயே சடம்புப் பயிரை விதைத்து, மின்னறுக்கிற வழக்கம் ஏற்பட்ட கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களிலுள்ள விவசாயிகள் பிற்சொன்ன சர்க்கார் உத்திரவில் கண்ட சகாயத்தைத் தெரிந்து, தாராளமாய் அவ்வழக்கத்தைக் கையாடி லாபமடைகிறார்கள். பூத்ததும் சடம்புபயிரை அறுத்து காயப்போட்டு மாட்டுத் தீனியாக உபயோகிக்கிறார்கள் களையெடுத்தல் முதலியன வேண்டியதில்லை யாகையால், விதை வாங்குகிற செலவு தவிர அவர்களுக்கு வேறுசெலவு இல்லை. சத்துள்ள தீவனப்பயிரும் போதுமான அளவு கிடைக்கிறது. நிலத்தில் நின்றுபோன சடம்புக் கட்டையும் வேர்களும் பின் நடும் நெல்லுக்கு எருவாகவும் உபயோகப்படுகிறது. (ஆகையால் சடம்புபோடக்கூடாத விடங்களில்) ஒரு போக நிலங்களில் நெல்லறுத்ததும் அவுரி கொளுஞ்சி விதைத்தால், அவைகள் தகுந்த பயிர்கள் தான். தண்ணீர் கட்டாமல், வெயில் காலத்திலும் வளரும்; பின் நடும் நெல்லுக்கும் எருவாகும்; மாடுகள் (கசப்பினால் தொடாதாகையால்) வேலிபோட்டுக் காக்க வேண்டியதில்லை. திருச்சினாப்பள்ளியிலுள்ள தென் இலாகா விவசாய டிப்டி டைரக்டருக்கு விவசாயிகளில் தேவையுள்ளவர்கள் எழுதிக்கேட்டால், அவர் நிலங்களுக்குத் தகுந்த பயிர்களின்னதென்ற விவகாரங்களை எழுதுவார். முன்னதாகவே எழுதினால், கொள்முதலுக்கே விதையும் கிடைக்கும்படி செய்வார்கள்.

நன்செய் நிலங்களில் மாடுகளை மேய்ப்பதற்காக ஏதாவதுபுல் சாகுபடி செய்து அதற்கு தண்ணீர் கட்டினால், தண்ணீர் தீர்வையில்லையென்று உத்திரவாய் இருக்கிறது. நெல்லறுத்தபின் அந்தத் தாளை எருவாக உபயோகப்படும்படி மடுத்து உழுகிறதற்காக தண்ணீர் வைத்தால் தீர்வையில்லை யென்று 1908-ம் வருஷம் ஜனவரி மாதம் 16-ந்தேதிபிறந்த ரெவினியூ 124-ம் நம்பர் உத்திரவு சொல்லுகிறது. சாகுபடி செய்த பயிர்களுக்கு தேவையான தண்ணீர்போக மீந்த தண்ணீர், களர் நிலங்களைத் திருத்தும்பொருட்டு, உப்புகள் கரைத்து கழிந்து போவதற்காக இரண்டு வருஷத்துக்கு தீர்வையில்லாமலே கட்டிக்கொள்ளலாமென்றும், இரண்டாவது போகம் செய்யாததினால் (களர்) உப்புப்பூத்துப் போகக்கூடிய ஒரு போக நன்செய் நிலங்களில், உப்பை நீக்கி விருத்தியடையும்படி, இருபோக சாகுபடியாகிற பட்சத்தில், பாகுல் செய்யாமல் தண்ணீர் மாத்திரம் கட்டிக்கொண்டால் அதற்கு தண்ணீர்த் தீர்வை இல்லையென்றும் சொல்லுகிறது—**விவசாய பஞ்சாங்கம்.**

## ஆரோக்ய போதம்

ஈக்களைப்பற்றி ஒன்பது நியமங்கள் அமெரிகா தேசத்து இராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்த நியமங்களை அத்தேசத்து இராஜாங்கத்தார் வெகு சிரத்தையாகக் கவனிக்கின்றார்கள்:—

1. பிணியாளியினிடம் ஈக்களை வரவிடக்கூடாது. 2. ரோகியிருக்கும் அறையில் ஈ பிரவேசித்தால் அதை உடனே பிடித்துக் கொன்று விடவும்; இதை எளிதில் பிடிப்பதற்காக ஒருவித பிசின் தடவிய காகிதம் விற்கப் படுகிறது. 3. அழுகிப்போன பதார்த்தங்களை வீட்டிலாவது வீட்டிற்கு அருகிலாவது சேர்த்துவைக்கக் கூடாது; அசுத்தமென்று ஸந்தேஹிக்கக் கூடிய விடத்தில் சுண்ணும்பு நீறையாவது கிரொவிஞயிலையாவது தெளிக்கவேண்டும். இதனால் ஸூக்ஷ்மக் கிருமிகள் அழிந்துவிடும். 4. உணவுப் பொருட்களின் மீது ஈக்கள் உட்காராதபடி அவற்றை மூடிவைக்கவேண்டும். போஜனம் செய்து முடிந்தவுடனே எச்சிலிலையும் உண்ணும் கலங்களையும் மூடிவிடவேண்டும்; அல்லது வெளிப்படுத்தி சுத்தம் செய்யவேண்டும். 5. உபயோகமில்லாத பதார்த்தங்களை அப்போதைக்கப்போது எரித்து விடவேண்டும்; அல்லது பள்ளந்தோண்டி பூமிக்கடியில் போட்டுப் புதைத்துவிட வேண்டும். 6. பசுக்களின் சாணத்தை அப்போதைக்கப்போது பள்ளத்திற் கொட்டி மண்ணால் மூடிவிடவேண்டும்; அல்லது பள்ளத்தைப் பலகைகளால் மூடிவிடலாம்; அல்லது கிரோவிஞயிலை சாணத்தின்மேல் ஊற்றிச் சுத்தம் செய்யலாம். 7. கடைகளில் விற்கப்படும் உணவுப் பொருட்களை மூடி வைக்கவேண்டும்; அல்லது கண்ணாடி பீரோக்களில் வைத்திருக்கலாம். 8. ஈக்கள் காணப்படவில்லை யென்றாலும் அவற்றைப் போஷிப்பதற்கான நுண்ணுயிர்கள் சில சிறிய அழுக்கடைந்த வஸ்துக்களின் மேல் பரவியிருக்கலாம். அவை பெட்டியின் அடியிலோ பெட்டியின் உட்புறத்து ஓரங்களிலோ இருக்கக்கூடும். கதவைத் திறக்கும்போது திடீரென்று நமக்கும் தெரியாமல் ஈயானது உள்ளே புகுந்துவிடும். ஆகவே ஆஹார வஸ்துக்களடங்கிய பெட்டியைத் திறக்கும்போதும், மூடும்போதும் உள்ளே ஈ பிரவேசிக்காமலிருக்குமாறு வெகு ஜாக்கிரதையுடன் கவனிக்கவேண்டும். 9. அழுக்கில்லாத விடங்களில் ஈ இராதென்று நிச்சயமாய் நம்பலாம்.

**வைத்திய கலாநிதி.**



## வியவகாரப் போக்கு

### விக்கிரகமா-கல்லா ?

திருக்கழுக்குன்றம் கோயிலிலிருந்த திருமலைச்சொக்கம்மாள் என்ற ஒரு கருங்கல் விக்கிரகத்தை நாலுபேர்கள் எடுத்தெறிந்து அதைப் பரிசுத்தக் குறைவாகச் செய்துவிட்டதாக அவர்களுக்கு செங்கல்பட்டு ஜாயிண்டு மாஜிஸ்டிரேட் தலைக்கு மூன்றுமாதம் கடுங்காவல் சிட்சை விதித்தார். அவர்கள் பொருட்டு வக்கீல்மிஸ்டர் R. சடகோபாச்சாரியார் ஆஜராகிஹைகோர்டில்அப்பீல் மனுக்கொடுத்து—கோவில் பூஜை செய்கிறவர் அந்த விக்கிரகத்தை, சமீபத்தில் கோவிலில் கொண்டுவைத்தார். அதற்கு சம்ப்ரோட்சணை நடக்கவில்லை. ஆகையினால் அது வெறுங்கல்லே யாகும். ஆதலால் அதைத்தூக்கி எறிந்து விட்டது குற்றமாகாது. என்று வாதித்தார். எதிரிகள் செய்தகாரியம்குற்றமே என்று ஜஸ்டிஸ் எய்லிங் சொன்னார். சம்ப்ரோட்சணைச் சடங்கு நடக்காவிட்டாலும் பூஜைக்காரர் சில தினங்களாக அந்தவிக்கிரகத்தைப் பூஜைசெய்து கொண்டிருந்திருக்கிறார்கள். அதற்கு நிவேதனங்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. கோவிலில் விக்ரகத்தைக் கொண்டு வைத்த அன்றே அதை எடுத்தெறிந்திருந்தால் அது வேறு காரியமாகும் என்று ஜட்ஜ் அபிப்பிராயப்பட்டு அப்பீல் மனுவை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளிவிட்டார். (திருமலைச் சொக்கம்மாள்—சந்ததியுண்டாகாமலிருந்த ஒரு தம்பதிகள், ஒரு பெண் குழந்தை யேனும் கடவுளருளால் பிறக்குமானால், அக்குழந்தையைக் கோவிலுக்குச் சமர்ப்பித்து விடுகிறதாக திருக்கழுக்குன்ற வேதகிரீசரை வேண்டிக்கொண்டார்கள். அப்படியே ஒரு பெண் குழந்தை பிறந்தது. சில வருஷங்களாகியும் தங்கள் பிரதிக்ஞைப்படி அவர்கள் நடத்தவில்லை. ஒருசமயம் குழந்தையுடன் திருக்கழுக்குன்றம் சென்று கிரிப் பிரதட்சணம் செய்துகொண்டு வருகையில், மலையின் வடபக்கம் சென்றதும் குழந்தை திடீரென்று மறைந்து விட்டது. பெற்றோர்கள் தேடிப் பார்க்கையில் குழந்தையைப் போன்ற சிலாரூபம் ஒன்று அங்கு நின்றுகொண்டிருந்தது. அந்தச்சிலை நிற்கு மிடத்தில் "திருமலைச் சொக்கம்மா" என்று கூப்பிட்டால், ஓ, வென்று எதிரொலி கேட்பதை, சொக்கம்மாள் பதில் சொல்வதாக இன்றும் ஜனங்கள் நினைக்கிறார்கள்.)

## விசேஷவர்த்தமானம்

**தீண்டிவனத்தில் லக்ஷதீபம்.**—திந்திரிபுரி யென்னும் திண்டிவனத்தின் கணுள்ள ஸ்ரீ காமாக்ஷி யம்மனுக்கு இம்மாதம் 26உ ஞாயிற்றுக்கிழமையன்று காலையில் அபிஷேக ஆராதனையும், இரவில் லக்ஷதீபதரிசனமும், நிறைமணிசேவையும், ரிஷபவாகன சேவையும் வெகு விமரிசையாய் நடைபெற்றதாகக் கேள்வியுற்று சந்தோஷிக்கிறோம். ஸ்ரீ மாணிக்காச்சாரியார் ஸ்ரீ முனுசாமி ஆச்சாரியார் வகையராக்கள் இதில் மிகுந்த சிரத்தை யெடுத்துழைத்துப் புகழ்பெற்றதாகத் தெரிகிறது. நமது சபையினின்றுஞ் சிலர் அங்கு சென்றிருந்தார்கள். மதுரகவி ஸ்ரீ பு. நடராஜ ஆச்சாரியாரவர்களால் ஓர் உபந்நியாசமும், ப்ரொபஸர் ஸ்ரீ K. அங்கப்ப ஆச்சாரியாரவர்களால் ஜால வேடிக்கைகளுஞ் செய்யப்பட்டன.

*
* *

**விதவா விவாஹம்.**—நிஜாம் ராஜ்யத்தின் தலைநகராகிய ஹைதராபாத்திலுள்ள ரிவினியூ டைரெக்டர் ஜெனரல் ஆபீஸில் மிஸ்டர் தாடிபள்ளி கேசவராவ் என்பவர் பிரதம குமாஸ்தாவாக வேலைபார்த்து வருகிறார். அவர் ஸ்மார்த்த நியோகி தெலுங்கப் பிராமணர். ஸ்ரீமதி சீதாராமம்மா என்ற 16 வயதுள்ள விதவைக்கும் அவருக்கும் போனவாரம் வெள்ளிக்கிழமையன்று ஹைதராபாத்தில் வெகு விமரிசையாய் விவாஹம் நடந்தேறியது. சுமார் 60 ஹிந்து கனவான்களும் ஸ்திரீகளும் விவாஹத்திற்கு வந்திருந்தார்கள். ஆரிய ஸமாஜத்தின் மெம்பரான மிஸ்டர் பாஜி கிருஷ்ணராவ் B. A., B. L., புரோகிதரா யிருந்து மணவினையை நிறைவேற்றி வைத்தார். மேலும், மிஸ்டர் G. A. சந்தவர்க்கர் என்ற பிரமுகரும் உடனிருந்து விவாஹ காரியங்களை நடத்தினாரென்று தெரிய வருகிறது.

* *

**ஹௌராவில் பாஞ்சால பெண் பாடசாலை**—இந்தியாவிலுள்ள பெண் பள்ளிக்கூடங்களில் பொதுப் படிப்பு சொல்லி வைக்கப்படுவதோடு, பூப்போடவும், துணிகள் தைக்கவும், சித்திரமெழுதவும் சொல்லி வைக்கப்படுகிறது. கல்கட்டாவைச் சேர்ந்த ஹௌராவிலுள்ள பாஞ்சாலா (Panchala) பெண் பள்ளிக்கூடத்தில் சமையல் வேலையும், பாத்திரங்கள் தேய்க்கும் வேலையும், நூல் நூற்கும் வேலையும், குழந்தை

களைப் போஷிக்கும் வேலையும், நெல்லுக் குத்தும் வேலையும், வரட்டித் தட்டும் வேலையும் கற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றதாம். அந்தப் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பெண்மணிகளுக்குக் குடும்ப வேலைகள் எல்லாவற்றையுஞ் சொல்லிவைப்பதே அதன் நோக்கமாகும்.

*
* *

**மயிலை வெங்கடாமண வைத்திய பாடசாலை.**—காலஞ்சென்ற ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி அய்யரகளால் சென்னை மயிலாப்பூரில் ஸ்தாபிக்கட்ட டை பாடசாலையில் ஆயுர்வேத சாஸ்திரங் கற்றுக்கொள்ளச் சேர விரும்பும் மாணவர்கள் இங்கிலீஷ் மெட்ரிகுலேஷன் வகுப்பு வரையிலும் சமஸ்கிருதத்தில் நாடகங்கள் வரையிலும் படித்திருக்கவேண்டுமென்னும் நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. இம்மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் விடுதிகள் இலவசமா யமைக்கப்பட் டிருப்பதோடு மாதவாரி ரூபா 10 உபகாரச் சம்பளங் கொடுக்கப்படுகிறது. இவர்கள் டை பாடசாலையில் மூன்று வருஷங்கள் வாசிக்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள். அதற்கப்புறம் இங்கிலீஷ் வைத்திய முறைகளை இராயபுரம் மெடிகல் ஸ்கூலில் படிக்க விரும்புவோர்க்கு மாதவாரி ரூபா 15 கொடுக்கப்படுகிறது. உபகாரச் சம்பளத்தினால் மாணவர்களுக்கு இப்பாடசாலையின்மீது பிரியமேற்படுதலும், கல்வி நிபந்தனைகளால் தக்கவர்மட்டுமே சேருதலுமாகிய விசேஷங்கள் பொருந்தியிருப்பதினால், இப்பாடசாலை நன்குபயன்படுவதிற் சந்தேகமில்லை. நவீனபோதனைகளுக்கென் றேற்படுத்தப்படும் பாடசாலைகளில் உபகாரச் சம்பளங்கொடுக்கப்படா விட்டால் மாணவர் கிடைப்பது கஷ்டம் அதனால் அப் பாடசாலைகள் பயன் படுவதுமில்லை. சென்னையில் மெடிகல் காலேஜ் முதன்முதல் ஸ்தாபிக்கப் பட்டபோது பெருந்தொகைகள் மாணவர்களுக்கு கொடுக்கப் பட்டனவாம்.

*
* *

**கூலியும் லாபமும்.**—மிஸ்டர் ஹென்ரி போர்டு என்பவர் அமெரிக்காவிலுள்ள ஒரு கோடீசுவரர். அவரிடத்து நாள்தோறும் இருபதினாயிரம் பேர் கூலி வேலை செய்கிறார்கள். அவர் அவர்களுள் ஒவ்வொருவருக்கும் தினந்தோறும் குறைந்தது 15 ரூபாய்ச் சம்பளம் கிடைக்கும்படி செய்துவிட்டார். தமக்குவரும் லாபத்தில் சமபாகத்தை அக்கூலிக்காரர்க்குக் கொடுக்கிறாராம். அவர்—நம்மிடம் வேலை செய்யும் ஒவ்வொருவரும் நம்முடைய கூட்டாளிகள். நமக்கு லாபம் கிடைக்கும்படி செய்பவர்கள் அவர்கள்தாம். நம்மிடம் வேலை செய்வோரைக் கூட்டாளிகளாகப் பாவித்து நடந்துவந்தால் நமக்கு ஏராளமான லாபம் கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. நாம் கூலிகளை இவ்விதம் நடத்தாவிட்டால் அவர்கள் எப்பொழுது எப்பொழுது என்று எதிர்பார்த்திருப்பார்களே யன்றி வேலையில் அக்கரை யெடுத்துக்கொள்ளமாட்டார்கள். நாம் கூலியைக் குறைத்தால் அவர்கள் வேலையைக் குறைத்துவிடுவார்கள். வியாபாரத்திற்கு மூலதனம் போட்டவர்களைவிட வேலைக்காரர்கள் அதிக சிரத்தையெடுத்து உழைப்பதால் நமக்கு ஏராளமான லாபம் கிடைக்கிறது. ஆதலால் இலாபத்தில் பெரும்பாகத்தைக் கூலிகளுக்குக்கொடுப்பதுதான் நியாயம்—என்று சொல்லுகிறாராம். இவ்வித பெருநோக்கம் காண்பதரிது.

*
* *

**பிராமணரும் சைன்யமும்.**—பஞ்சாப் மாகாணத்திலுள்ள ராவல்பிண்டி ஜீலம் இவைகளில் வசிக்கும் பிராமணர் சிலர், முக்கிய சேனாதிபதியாகிய ஸர் பீச்சம் டப்பை (Duff)க்கண்டு, பிராமண வகுப்பினரை சைனியத்தில் சேவகர்களாய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, சமயம் நேரிடும்போது யோசிப்பதாக முக்கிய சேனாதிபதி பதில் சொன்னார். வடக்கேயுள்ள இந்துஸ்தான் பிராமணர்கள் பலர் போர்ச்சேவகர்களாக ஏற்கனவே சைனியத்தில் அமர்ந்திருக்கிறார்கள். தென்னிந்தியாவைப்போல் வட இந்தியாவில் பிராமணர்களுக்கு செல்வாக்கு அதிகமில்லை. இவர்கள் வட இந்தியாவில் போர்ச் சேவகர்களாயும் வீட்டு சமயல்காரர்களாயும் வேறு ஈனத்தொழில் செய்கிறவர்களாயும் இருக்கிறார்கள். மகம்மதியரின் ஆளுகையினாலும் செல்வாக்கினாலும் ஹிந்துக்கள் பழைய ஆசாரங்களை விட்டு ஹிந்துக்க ளென்கிற ஜாதித் தனிமையை மட்டும் ஆதரிப்பவர்களா யிருப்பதால் புரோகிதம் செய்யும் பிராம்மணர்களுக்கும், சாஸ்திரங்கள் படித்த பிராமணர்களும் செல்வாக்குக்குறைந்து போயிற்று. அதனால்தான் தெற்கேயுள்ள மடாதிபதிகள் சிலர் தென்னிந்தியாதான் ஆசாரபூமி யென்றும், வட இந்தியா மிலேச்சபூமி யென்றும் சொல்வது வழக்கமா யிருக்கிறார்கள். ஆனால் இந்த வரையறையை வடக்கேயுள்ள ஹிந்துக்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

சு. மி.

உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

**1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள**

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

**462**, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் I] **1914ஹு** ஆகஸ்டுமீ [சஞ்சிகை **11**

## ஒளிவளர் விளக்கு

1914ஹு ஜூலைமாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களுடைய எண்ணிக்கை 757.

*
* *

தூத்துக்குடி-எட்டியாபுர வாசியாகிய இஞ்சினீர் ஸ்ரீ T. S. கதிரேஸன் ஆச்சாரியா ரவர்கள், நாளது 1914ஹு டிஸம்பர் மாதத்தில் சென்னையில் நடைபெறும் இந்தியப் பொருட் காக்ஷியில் வைக்கப்படுதற்காக தாம் ஒரு சாமான் செய்தனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார். தொழில் விற்பன்னர்களாயுள்ள மற்றவர்களும் இவ்விதஞ் செய்ய வேண்டுகிறோம்.

*
* *

இஞ்சினீரிங் கண்ட்ராக்டரும், நமது சபையின் நிர்வாகக் கமிட்டியார்களி லொருவரும், சபாமண்டபத்திற்காகப் பலசாமான்க ளுதவியிருப்பவருமாகிய ஸ்ரீ T. பாகூஷாச்சாரியா ரவர்கள் தமக்கியற்கையான தாராளகுணத்துடன் சமீபத்தில் இரண்டு சாய்பெஞ்சுகள் அளித்தமைக்காகச் சபையார் இவர்பால் மிகவும் நன்றியுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

* *

கும்பகோணம் கருணைக்கொல்லைத் தெருவிலிருக்கும் விஸ்வகர்ம குலாபிமானசபைக்காரியதரிசியாராகிய ஸ்ரீ தே. மா. சொக்கலிங்க பத்தரவர்கள் "குடந்தையில் கான்பரன்ஸ்" என்னும் விஷயமாய்ப் பின்வருமா றெழுதி யிருக்கின்றனர்.—"இவ்விடத்தில் சிற்சிலருக்குஊக்கமுண்டாய் நடத்தியே தீரவேணுமென்ற அவாகொண்டிருக்கிறார்கள்***இந்த வருஷம் எவ்விதமாவது நடத்தவேண்டிய முயற்சி செய்து பார்க்கிறோம். சர்வேஸ்வரன்நமது காரியத்தைப் பூர்த்தி செய்துவைக்கவேணுமாய்ப் பிரார்த்திக்க வேண்டியது".—ஆதலால், குடந்தையில் கான்பரன்ஸ் நாளது டிஸம்பர் மாதத்திலாவது நடைபெறலாம். தஞ்சைஜில்லா வாசிகளாயுள்ள மற்ற நகரத்தார்களும் இதிற் சற்று ஊக்கங்காட்டினால், காரியம் சுலபமாய் நிறைவேறுதல் நிச்சயமேயாம்.

# Visvabrahma Mahajana Central Sabha, Trichinopoly

விஸ்வப்பிரம்ம மகாஜன செண்ட்ரல் சபை, திருச்சிராப்பள்ளி

*To The Private Secretary to His Excellency the Viceroy and Governor General of India, Simla,* 15-7-14.

Visvabrahma Mahajana Central Sabha, Trichinopoly, share with the whole of India, in deep distress, the universal sorrow caused by the sad and calamitous news of the sudden death of Her Excellency Lady Hardinge of many noble qualities, and beg most respectfully to offer their genuine sympathy, and heart-felt condolence to His Excellency the Viceroy during the hour of his sad bereavement and pray Almighty will give him strength, and courage to bear this irreparable loss.

கனமிகுந்த இந்திய வைஸிராய் கவர்னர் ஜெனரல் அவர்களுடைய
பிரைவேட் செகிரிடரி அவர்களுக்கு, ஸிம்லா, 15-7-14

திருச்சிராப்பள்ளி விஸ்வப்பிரம்ம மகாஜன செண்ட்ரல் சபையார், பல நற்குணங்கள் வாய்ந்திருந்த கனம் லேடி ஹார்டிஞ்சின் எதிர் பாராத மரண துக்க சம்பவ சமாசாரமறிந்து, துயரசாகரத்தாழ்ந்து இந்தியா முழுவது மேற்பட்டுள்ள சர்வவியாபக சஞ்சலத்துட்பட்டு, கனம் வைஸிராயவர்களுக்கு நேர்ந்த விசனகரமான இழப்புச்சமயத்தில் தங்களுடைய உண்மையான பரிதாபத்தையும் மனப்பூர்வமான அனுதாபத்தையும் மிகவணக்கமாய் அளித்து, ஈடுபடுத்தொணாத இந்நஷ்டத்தைச் சகிக்க அவருக்கு பலமும் திடமு மருளிச்செய்யும்படிக் கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள்.



## சென்னையில் தொழிற்படிப்புக் காண்பரென்ஸ்

தொழிற்படிப்பு அபிவிருத்தியில் அக்கரைகொண்ட கனவான்களில் 40 பெயர்கள் தொழிற்படிப்பு டைரெக்டரின் ஆபீசில் சிலதினங்களுக்குமுன் காண்பரென்ஸ் கூடினார்கள். அவர்களில் 25 பெயர்கள் தனி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளாய் வந்திருந்தவர்கள். தொழிற்படிப்பு சம்பந்தமான பல பிரஸ்னைகள் வாதஞ்செய்யப்பட்டு அடியிற்கண்ட தீர்மானங்கள் கொள்ளப்பட்டன.

1. தொழிற் படிப்பில் அக்கரைகொண்டவர்களும் அதன் அபிவிருத்தியில் கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைக்கப் பிரியமுள்ளவர்களுமான பலரை வரவழைத்து இந்தக் காண்பரென்ஸை நடத்திய தொழிற்படிப்பு டைரெக்டருக்கு வந்தனத்தைச் செலுத்தவேண்டும்.

2. தொழிற்படிப்பைக் கற்பிக்கும் ஒவ்வொரு ஸ்தாபனமும், ஒரு பிரதிநிதியை நியமிக்கவேண்டும். அவர்கள் எல்லோரும் சேர்ந்து தொழிற்படிப்பை விருத்திசெய்ய ஒரு சபையாக வேண்டும். ஒரு சப் கமிட்டியும் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

3. போர்மென் வேலைக்கும், ஜர்ணிமென் வேலைக்கும் படிக்கப் பிரியமுள்ளவர்களுக்குத் தகுந்தபடி பாடபுஸ்தகங்களை ஏற்படுத்தி அவர்களை அதில் பயின்றுவரும்படிச் செய்யவேண்டும்.

4. தொழிற் படிப்பு ஸ்கூல்களுக்கு உபாத்திமார்களைத் தயார் செய்து அனுப்புவதற்காக ஸென்ட்ரல் தொழிற்படிப்பு போதனுமுறை ஸ்கூல் ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமென்று தொழில் டைரெக்டரைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

5. வாரம் ஒன்றுக்கு 6-மணிநேரம் கைப்பயிற்சியில் செலவழிக்கப் படுவதை ஸ்கூல் நடத்தும் காலமாகப் பாவித்து அதற்குக் கிராண்டுப் பணம் உதவிவா வேண்டு மென்று வித்யா இலாகா டைரெக்டரை தொழிற்படிப்புடைரெக்டர் கேட்டுக்கொள்ளவேண்டும்.

6. இதுவரையிலும் நடத்தப்பட்டுவந்த கவர்ன்மெண்டு தொழிற்படிப்புப் பரீட்சைகள் அதிருப்திகரமானவை; அவ்வித பரீட்சைகளை ரத்துசெய்துவிட்டு, புதிய முறையைத் தயார்செய்து அதன்படி பரீட்சை நடத்தப்படவேண்டுமென்று தொழிற்படிப்பு டைரெக்டர் மூலமாய்க் கேட்டுக்கொள்ளவேண்டும்.

7. கணக்குத் தயார்செய்யும் முறை தொழிற்படிப்பு வகுப்புகளில் கற்பிக்கப்படவேண்டும்.

8. தொழிற்படிப்பு வகுப்புமானேஜர்கள், இந்தவிதமான கணக்குப் புத்தகங்களை வைத்துப் பாடம்சொல்லி வைக்க வேண்டுமென்று, தொழிற்படிப்பு டைரெக்டர் கேட்டுக்கொள்ளப்படவேண்டும்.

## ஐக்கிய நாணயம்

(10-வது சஞ்சிகை 104-வது பக்கத் தொடர்ச்சி).

கோவபாரேடிவ் க்ரீடிட் ஸோஸைடீஸ் என்னும் ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரிஜிஸ்டிராராகிய திவான்பகதூர் L. D. சுவாமிகண்ணுபிள்ளை யவர்கள் M. A., B. L., L. L. B. பின் வருமாறு எழுதுகிறர் :—

9. அப்படி ஐக்கிய சங்கங்களை எப்படி கூட்டி வேலை நடத்துவது என்றல் ஒரு கிராமத்தில் ஒருவருக்கொருவர் நம்பிக்கை ஏற்பட்ட சில நல்லவர்களும் யோக்கியர்களும் சேர்ந்து ஐக்கிய சங்கத்தின் பயன்களை அடைய ஒப்புக்கொண்டு ஐக்கிய சங்கங்களின் அதிபதியாகிய ரிஜிஸ்திரார் அவர்களுக்கு ஒரு மனு செய்துகொண்டால் ரிஜிஸ்திரார் அவர்கள் மனுபாரங்களை அனுப்புவார். விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட விவரங்களும் அனுப்பவேண்டும்:—

1. சங்கத்தில் சேர விரும்பும் மெம்பர்களின் பெயர்கள்.

2. ஒவ்வொரு மெம்பருக்குள்ள பூஸ்திதியின் விஸ்தீரணம், ஜங்கமசொத்தின் மதிப்பு.

3. ஒவ்வொரு மெம்பரின் சராசரி வருஷவருமானம்.

4. ஒவ்வொரு விண்ணப்பதாரின் தற்கால கடன் தொகை.

5. பழைய கடன்களைத் தீர்க்கவும் தற்கால செலவுக்குமாக ஒவ்வொருவருக்கும் வேண்டிய கடன் தொகை.

இவ்விவரங்களுடன் ரிஜிஸ்திரார் அவர்களிடம் விண்ணப்பம் சேர்ந்த உடனே சங்கத்தின் நடவடிக்கைகள் ஒழுங்காக நடப்பதற்கு விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு வேண்டிய சட்டங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய உதவிகளை செய்யும்பொருட்டு, ரிஜிஸ்திரார் அவர்கள் ஐக்கிய சங்கங்களின் இன்ஸ்பெக்டர் ஒருவரையாவது, ஒரு ஹானரரி ஆர்கனைஸரை (Honorary Organiser) ஆவது அனுப்புகிறர். சங்கத்தின் சட்டங்கள் சரியென்றும் சங்கத்தின் மெம்பர்கள் சங்கத்தை சரிவா நடத்துவாரென்றும் ரிஜிஸ்திரார் அவர்களுக்கு திருப்தியானல் ஐக்கிய விஷயத்தைப் பற்றிய சட்டங்களடங்கிய 1912-ம் வருஷத்திய 2-வது ஆக்டின்படி ஐக்கிய சங்கங்களில் ஒன்றாக இந்த சங்கத்தை ரிஜிஸ்தர் செய்கிறர்.

(6) அப்படி ஏற்படுத்தப்பட்ட ஓர் சங்கத்தின் சட்டதிட்டங்கள் ஓர் கிராமத்தில் மாத்திரமே செல்லத் தக்கது. அதாவது ஒரு கிராமத்திலுள்ளவர்கள் மாத்திரம் அந்த சங்கத்தில் சேரலாம். ஏனெனில், ஒவ்வொருவரும் இதர மெம்பர்களுடைய நாணயத்தையும் ஸ்திதியையும் அறியக்கூடும். புத்தி மாறுட்டமில்லாத 18-வயதிற்கு மேற்பட்ட ஒரு கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் அந்த சங்கத்தில் மெம்பராகலாம். ஆனல் சங்கத்தார் ஒவ்வொருவரையும் மெம்பராக சேர்க்க வேண்டிய நிபந்தனையில்லை. நல்ல நடத்தையில்லாதவனை அச் சங்கத்தில் மெம்பராகச் சேர்க்காமல் தள்ளிவிட வேண்டியது. எல்லா மெம்பர்களுடைய பொது பொருப்பின் பேரிலும் தனித்தனிப் பொருப்பின் பேரிலும் சங்கத்திற்கு வேண்டிய முதலைக் கடன் வாங்குவது சங்கத்தின் நோக்கம். ஆகையால், அப்படிச் சேரும் ஒவ்வொரு மெம்பரும் அந்த சங்கத்தின் எல்லா கடன்களுக்கும் பாத்தியப்படுகிறார்.

சங்கத்தால் வாங்கப்பட்ட தொகையை கடன் வேணுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளும் மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. இந்த வேலை மெம்பர்கள் எல்லோரும் இருந்து செய்யக்கூடியதல்ல. ஆகையால் சங்கத்தின் காரியங்களை நடத்துவதற்காக மெம்பர்கள் எல்லோரும் தங்களுக்குள் சிலரை, சாதாரணமாய் 5 பேர்களைப் பொறுக்கியெடுத்து இந்த பஞ்சாயத்தார் வசம் சங்கத்தின் அதாவது கிராம நிதியின் விசாரணையை ஒப்புவித்து விடுகிறார்கள்.

மெம்பர்களாகிய பொதுக்கூட்டத்தாரின் உத்தரவின் பேரில்தான் இந்த சங்கத்தின் காரியங்கள் எல்லாம் நடத்தப்படும். பஞ்சாயத்தார் பொதுக் கூட்டத்தாரின் தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள். ஆனல் பஞ்சாயத்தார் செய்யும் வேலைக்குப் பிரதி பலன் ஒன்றும் இல்லை. சங்கத்திலிருந்து மெம்பர்கள் வாங்கும் கடன்களை சொல்பம் சொல்பமாய் வாப்சுசெய்யலாம். சில சமயங்களில் வாங்கிய கடனை ஒவ்வொரு ரூபாய் வீதம் வாப்சு செய்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு மெம்பரும் வாங்கக்கூடும் கடன் தொகை இவ்வளவென்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

பூஸ்திதியை விருத்திசெய்வதற்காகவோ, கால் நடைகள் வாங்கவோ, சாகுபடி செலவின் நிமித்தமாகவோ, மெம்பர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தின் கல்யாண விஷயமாகவோ, இவ்விதமான அவசியமாயும் அல்லது பிறகு பலனைத்தரக் கூடியதுமான விஷயங்களுக்கு மட்டுமே கடன்கொடுக்கப்படுகிறது.

வாங்கியகடனை ஒரு மெம்பர் துர்விநியோகப் படுத்தினல் அவன் அக்கடனை உடனே வாப்சு செய்ய வேண்டியது. வாங்கிய கடனை கொஞ்சம் கொஞ்சமாய் வாப்சு செய்தபோதிலும் ஒவ்வொரு வருஷமும் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்துவிடவேண்டும். சங்கத்தின் மெம்பர்கள் எல்லோரும் அதினிடத்தில் எப்பொழுதும் விசுவாசமுடையவர்களாகவும் அதினுடைய நன்மையைக் கருதுபவர்களாகவும் இருக்கவேண்டும். சங்கத்தைக் கோர்ட்டிற்கு இழுக்கும் மெம்பரையும், வேறு விஷயங்களால் நல்நடத்தையில்லாத மெம்பரையும் சங்கத்தைவிட்டு நீக்கப்படும்.

7. ஐக்கிய சங்கத்தால் உண்டாகும் நன்மைகளை கூறுமிடத்து சங்கத்தில் சேர்ந்த ஓர் கிராமத்தின் மெம்பர்கள் தங்கள் தங்கள் நடவடிக்கையில் ஒவ்வொருவரிடத்திலும் நம்பிக்கையுடனும் நாணயமாயும் இருக்கத் தெரிந்துகொள்ளுகிறார்கள்.

தங்கள் கடன்களை சீக்கிரமாக அடைத்துவிட ஏற்பாடாகிறது. இவ்விஷயங்களில் தங்களை ஆளவும் தெரிந்துகொள்ளுகிறார்கள். இவைகளே யல்லாமல் ஒரு கிராமத்தில் உற்பத்தியாகும் மகசூலை ஒன்று சேர்க்கவும், தக்க விலை வருஷகாலத்தில் ஒருமித்து விற்கவும், சாமான்கள் விலை சரசமாயிருக்கும் காலத்தில் ஒருமித்து வாங்கவும், மற்றும் மேம்பாடான ஐக்கிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும்காரணமாயிருக்கிறது. ஆகையால் விவசாயிகளுக்குத் தங்கள் தற்கால நிலைமை விருத்தியடையவும் அதினல் உண்டாகும் சுகபோக பாக்கியங்களை அடையவும் ஐக்கிய நாணயம் காரணமாயிருக்கிறதென்று தெரியவருகிறது.

---

கைத்திலர் நல்லராங்கைத் துண்டாக்காவாரின்
வைத்தாரினல்லர் வறியவர்—பைத்தெழுந்து
வைதாரினல்லர் பொறுப்பவர் செய்தாரின்
நல்லர் சிதையாதவர்.

எல்லாவிடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளரவிடல்தீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பின்குலந்தீது
கொள்கை யழிந்தக்கடை—நான்மணி.



## ஆங்கிலக் கல்வியின் அவசியம்

### 1. ஸ்ரீ த. ப. வே. ஆச்சாரியார், திருச்சி

நாம் நமது மக்கட்கு தேடக்கூடிய கல்வி
ஜீவனத்திற்கும் கௌரவத்திற்கும் தக்கதாயிருக்க
வேண்டும். இதற்கு தற்கால இராஜபாஷையாகிய
ஆங்கிலபாஷையைத்தவிர வேறெதுவுமில்லை. இக்
காலத்தில் இதர வம்சத்தினர்கள் விருத்தியடைந்தி
ருப்பது எதனல் என்றாராய்வோமானல் ஆங்கிலம் கற்
றதால்தான் என்று தெரியவருகிறது. இப்பாஷை
ஜனித்து சுமார் 2000 வருஷங்களாகின்றன. இது
மற்ற பாஷைகளைக்காட்டிலும் அதிக காலம் நீடித்தி
ருக்கிறதாக தெரியவருகிறது. மேலும் நாளுக்குநாள்
விருத்தியடைந்துவருகிறது. தமிழ், தெலுங்கு, மலை
யாளம் முதலிய திராவிடபாஷைபோலும், இன்னும்
பல ஐரோப்பியபாஷை போலுமல்ல. ஏனெனில்
அவைகள் எல்லாம் ஏதோ சிற்சில நாட்டில் சிலர்க
ளால் மட்டும் வழங்கப்பட்டுவருகின்றன. ஆனல் இவ்
வாங்கிலபாஷையானது உலகத்தில் எல்லாப்பாகங்களி
லும் சகல ஜாதியார்களாலும், சகல மதஸ்தர்களாலும்
பேசப்பட்டுவருகிறது. அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்
திரேலியா முதலிய கண்டங்களிலும் சிறிய தீவுகளி
லும் இதுதான் விசேஷமாய் வழங்கிவருகிறது
லோகத்திலுள்ள ஜனங்கள் எல்லோருக்குமே இது
தான் பொதுப்பாஷையாயிருக்கிறது. மிலேச்சர்கள்,
காப்பிரிகள் என்று சொல்லப்பட்ட தாழ்ந்த ஜாதியா
ரும்கூட இப்பாஷையைக் கற்று நன்னிலைமைக்கு
வந்துவிட்டனர். இன்னும் இராஜ்ய விவகாரங்கள்,
கைத்தொழில், வியாபாரம் இவைகளெல்லாம் இப்பா
ஷையில்தான் நடந்தேறிவருகின்றன. இதுமாத்திர
மன்று! நமது தெய்வீகமான புராணம், இதிகாசம்,
வேதம் உபநிஷத்துக்கள் முதலிய அதி இரகசிய கிரந்
தங்களெல்லாம் இப்பாஷையில் மொழிபெயர்க்கப்
பட்டு வெளியாக்கப்பட்டிருக்கின்றன. அதிரகசிய
ங்களெல்லாம் வெளியாக்கி எளிதில் யாவரும் அறி
யும்படிச்செய்ததும் இப்பாஷையே. லோகமுழுதும்
பரிசுத்தமாக்குவதற்கும் ஞானத்தை எல்லோரும்
அடைந்து உத்தமகதியை யடைவதற்கு முதற்கார
ணமா யிருப்பதுவும் இதுவே. கேவலம் தாழ்ந்தவ
ரென்றும் இழிகுலத்தோரென்றும் யாரைச்சொல்லுகி
றார்களோ அவர்களும் இப்பாஷையைப் படித்துதான்
உன்னத நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில், உயர்குலத்தோரென்று கொண்டாடப்பட்டவர்களும் சேவகர்களாகவும், ஊழியக்காரர்களாகவும் இருப்பது நீங்கள் அறியாததேனே? இதரவம்சத்திலுள்ள பெண்பாலர்களுங்கூட இப்பாஷையில் மிக்க தேர்ச்சியடைந்து குலத்திற்குக் கீர்த்தியுண்டாக்கி இருக்கின்றனர். நம்மவர்கள்மாத்திரம் இதுவிஷயத்தில் கண்திறந்து பாராததேனே? அல்லாமலும் நம்மவர்களில் ஏதோ சிலர் ஆங்கிலம்படிக்கத் தலையெடுத்தாலும் அவர்களையும் பலவாறாக நிந்திப்பது நம்மவர் அனேகரின் துர்ப்பழக்கமாயிருக்கிறது. இஃதென்ன அறிவீனம்! இதைக்காட்டிலும் அநாகரீகம் நம்மவருக்கு என்னவேண்டும்! ஆகையால் குலசிகாமணிகளே! நீங்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பாடசாலைக்கு அனுப்புங்கள். ஆங்கிலம் கற்கும் நம்மாணுக்கர்களுக்கு உங்களாலான பொருளுதவி புரியுங்கள். உயர்தரக்கல்வியில் ஊக்கம்காட்டுமவர்களுக்கு ஒத்தாசை செய்யுங்கள். வாய்ப்பேச்சிலிருக்கும் குலாபிமானமெல்லாம் இவ்விஷயத்தில் மிக்க சிரத்தையோடு நடத்திக்காட்டுங்கள்.

### 2. ஸ்ரீ T. தங்கவேல் ஆச்சாரியார், திருநெல்வேலி

வானவில்லைமானும் தோள்வளையங்களும், சந்திரன் போல் விளங்கும் முத்துமாலைகளும், பனிநீரின் நாணமும் கலவைப்பூச்சும் முடியிலணியும் மலர்களும் இவ்வாழிசூழ் உலகின்கண் மானிட வுருக்கொண்டோவ்வொருவர்கட்கும் அழகுசெய்வனவாகா. இலக்கணமுதலிய நூல்களால் தூயதாகவும் தன் வயத்ததாகவுஞ் செய்யப்பட்ட நற்கல்வி ஒன்றே பேரழகு செய்வதாம்.

"கற்றோர்க்குக்கல்விநலனே கலனல்லான்
மற்றோரணிகலன் வேண்டாவாம்"

முழுமணிப்பூணுக்கு பூண் வேண்டுமோ? பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்ப்பாருண்டோ? யாரே அழகுக்கு அழகு செய்வார்! பொன்னையும் மணியையும் பூணும் மன்னவர், அவற்றை அணியாத மன்னிய புலமையோரை மானுவரோ? பொன்னணியும் பிறவுறுப்பு கண்மணியை நிகர்க்குமோ? ஆரகேயூராதியணிகள் சின்னளிருந்து பின்னல் அழிவுறும். வித்தியாபூஷணமே எந்நாளும் நிலைபெறும். புருடனுக்கு வேத முதலிய வித்தையே அழகிய ரூபமாம். அதுவே உல

கினை இன்புறுத்துவது. கல்வியே பலவகை இன்பங்களையும் அவற்றிற்குரிய சாதனங்களையும் அழியாப் புகழையும் அளிப்பது. கல்வியே வேந்த ரவைக்கண் வீறடைவது கல்வியே. அன்னைபோல் இரக்ஷிக்கும், தந்தைபோற் சிக்ஷிக்கும், நன்மனைவிபோல் இன்பஞ்செய்யும், மைந்தன்போற் பணிசெய்யும், மற்றும் கற்பகத்தருபோல் எதனைத்தான் பயவாது!

"ஒருமைக்கட்டான் கற்றகல்வியொருவற்
கெழுமையுமேமாப்புடைத்து."

எனப்பட்டது அதன் சிறப்பு நோக்கியேயாம். இத்திறத்த பெருஞ்சிறப்புவாய்ந்த கல்வியை தமக்கு நிலைத்த பொருளாக அடையவேண்டி லோகத்தில் சகல ஜாதியும் கல்வியை அபிவிர்த்தி செய்கின்றனர். எக்கல்வியை அபிவிர்த்தி செய்கின்றனர்? ஆங்கிலக் கல்வியை! நம்மில் ஆங்கிலம் படித்து இராஜாங்கத்தில் உத்தியோகம் புரிபவர் கருகபிலைப் பூவைப்போல் ஓரிருவர் ஒவ்வோரிடங்களிலுளர். மற்றெல்லா ஜாதிகளிலும் அநேகர் இருக்கின்றனர். அவர்கள் காலதேசவர்த்தமானப்போக்கை நன்குணர்ந்து இந்த மாட்சிமைதங்கிய துரைத்தனத்தில் எவ்விதமாய் நடந்தால் மேலான நிலைமையை யடையலாமெனத் தெரிந்து அந்தந்தஜாதியர் அவர்களுக்கு வேண்டிய வித்தியாநிதிகளை எற்படுத்திவருகிறார்கள். கான்பரன்ஸ் முதலானவை கூட்டுவித்து அதனாலாகிய நன்மை முதலானவைகளை ஜனங்கள் நன்குணர்ந்து அவ்வழியே நடக்க முயலுகின்றனர். அவ்விதமே அரசாங்கத்தில் உத்தியோக நிலைமையை அடைகிறார்கள். நமது குலத்திலோ ஆங்கிலம் படித்தவர்கள் அதிகமில்லை. ஆகையால் தான் நமது ஜாதி மேலான நிலைமையில் வருவதற்கியலாதிருக்கின்றது. ஆங்கிலக்கல்வி யின்றி நாம் எவ்விதப் பிரயத்தனங்கள் செய்தாலும் அவை ஒருக்காலும் பயனடையா. ஆங்கிலம் கற்றிருந்தால்தான் உத்தியோகத்தி லமர்வார்கள்; அன்னவர்கள் நமது ஜாதி ஈடேற்றத்திற்குரித்தான காரியாதிகளைச் செய்வர். அன்னவரின் உத்தியோக பதவியே நம்மை அன்னவர் கருத்திற் கிணங்கும்படி செய்யும்.

கொல்லத்திற்கு அருகிலுள்ள நமது மாபினர் ஆசாரமாயிருக்கும்படி அநேகபோதனைகள் செய்யப்பட்டும் அவை பயன்படாதுபோயினதாயும், பிறகு அவ்வூரில் நமது வம்ஸத்தினர் அரசாங்கத்தில் மேலான பதவிவாய்ந்தவர், ஒருவர் மாற்றப்பட்டதாயும், அன்னவர் அவ்வழி ஜனங்களைத்திருத்தி ஆசாரமாயிருக்கும்படி செய்ததில் அவ்வூரார் தற்போது நடையுடை பாஷை முதலியவற்றில் எல்லாரும் ஒரேவிதமாய்க் (Uniform) காணப்படுவதாயும் ஆங்கிலம்படிக்க அவாக்கொண்டுள்ளதாயும் கேள்விப்பட்டு சந்தோஷமுற்றேன். அவர்களை அவ்வழியிலாக்கியது அன்னவரின் உத்தியோக பதவியே!

விஸ்வபிராமணப்பட்டம் நிலைபெற்றதும், ஆச்சாரி விஷயமாய் எற்பட்டுள்ள குறைகள் தெரியவந்ததும், நம்மில் ஆங்கிலம் கற்றவர்களாலேயே! தொழிலின் வாசனை சிறிதுமறியாத ஜாதியர் ஆங்கிலம் கற்று B A. பரிட்சையில் தேரி B. C. E. பாஸ்செய்து (Engineer) இஞ்சினியர்களாய் ரூ. 300 ரூ 1000 சம்பளங்களில் இந்த ராஜாங்கத்தில் உத்தியோகம் புரிவதை நாம் காணவில்லையா. அவர்கள் அவ்வளவு உன்னத பதவியை அடையும்போது இயற்கையிலேயே தொழிலின் நுட்பமுணர்ந்த நாம் B. A. B. C. E. பரிட்சைகளில் தேரி இஞ்சினியர்களாய் வந்தால் எவ்வளவு சிலாக்கியமுண்டாகும்? இதை முன்னிட்டு பண்டித சிரேஷ்டர் ஸ்ரீ ஜோசியர் முத்துஆச்சாரியார் அவர்களால் எழுதலான "சபையாரின் பாரம்" என்ற வியாஸத்தின் கருத்திற்கிணங்க நமது சபையின் முதல் ரிபோர்ட்டில் 6-வது பாரம் (10-வது வகுப்பில்) வாசிக்கும் இருவர்க்கு சபையின் பொக்கிஷத்திலிருந்து ரூ. 20ம், சபையின் மெம்பர்களால் ரூ. 40ம் சகாயஞ் செய்யப்பட்டதாய்த் தெரிகிறது. இதற்காக நாம் சபையார்களுக்கு வந்தனஞ்செய்யக் கடமைப்பட்டுள்ளோம். இதுதான் குலோத்தாரண மென்பது. இதனாலேயே நமது சபையின் நன்னோக்கங்கள் நன்குவிளங்குகின்றன.

---

பாண்டி மன்னனிடம் பரிசும் உணவுப்பொருள்களும் பெற்று இரட்டைப் புலவர்கள் திரும்பி வருங்கால், மலவிசர்க்கஞ் செய்ய நேரிட, அப்பொருள்களை யெல்லாம் ஒரு மூட்டையாகக்கட்டி பிள்ளையார் கோவிலொன்றில் வைத்துச் சென்று திரும்பிவந்து பார்க்க மூட்டை யவிழ்ந்திருக்க,

ஒருவர்—

தம்பியோ பெண்டிருடி தாயாருடன் பிறந்த
வம்பனோ செய் திருடுமாயன்—என்று கூறினர்.

உடனே மற்றவர்—

நம்பியவிம்
மூத்தவனோ நம்பான் முடிச் சவிழ்ப்பானென் செயலாங்
கோத்திரத்துக் குள்ள குணம்—என்றனர்.



## ஜாதீய சம்வாதம்

(10-வது சஞ்சிகை 109-வது பக்கத் தொடர்ச்சி).

**ஜோஸியர் ஸ்ரீ A. முத்து ஆச்சாரியார், நாகர்கோவில்**

**கேள்வி.**—எந்த ஸ்மிருதியில் கர்மத்தைச் சிரேஷ்டமாகச் சொல்கிறது?

**உத்தரம்.**—யாக்ஞ வல்க்கிய ஸ்மிருதி மிதாக்ஷர வியாக்யானம் சங்க:

ரதகாரஸ்தஸ்யேஜ் யாதானோப நயநஸம்ஸ்காரச் சக்கிரியா, ஆலயப்பிரதிஷ்டாரத ஸூத்ரவாஸ்து வித்யா அத்யயன விருத்திதாசேதி.

என்று ரதகாரர்ளுக்கு யாகம் ஆதானம் உபநயனம் முதலிய சம்ஸ்காரங்களும் பிம்ப நிர்மாணம் பிம்பப் பிரதிஷ்டை ரதம் உண்டாக்குகிறது சிற்ப சாஸ்திர படனம் வேதாத்தியயன முதலான விருத்திகளும் சொல்லப்பட்டிருக்கிறது.

**கேள்வி.**—இந்த வசனம் அச்சுப் புஸ்தகத்திலிருக்கிறதா?

**உத்தரம்.**—இருக்கிறது. இந்த ஸ்மிருதி லாவானதினால் இந்தக் கோர்ட்டிலுமிருக்கலாமே! பார்த்தால் தெரியும்.

உடனே இந்த புஸ்தகமிருக்கிறதாவென்று குமஸ்தாவிடம் கேட்டார்.

இங்கே யில்லை. செஷன்ஸ் கோர்ட்டிலிருக்கலாமென்று சொன்னார்கள்.

**கேள்வி.**—இதைப்போல் வேறு கிரந்தங்களில் ரதகாரரைப்பற்றிச் சொல்லியிருக்கிறதா?

**உத்தரம்.**—இந்த ரதகாரர்கள் ஆங்கிரச ரிஷி கோத்திரத் தவர்களென்றும் மனுவின் பௌத்திரர்களென்றும் ரிபுக்களென்றும் தொழில் திறமையுள்ளவர்களென்றும் இவர்கள் விசுவகர்மரென்றும் சுருதிகளில் சொல்லப்பட்டும் சாயனாச்சாரியர் மாக்ஸ் முல்லர் முதலான பண்டிதர்கள் செய்த ருக்வேத யஜுர் வேத பாஷ்யங்களில் கூறப்பட்டுமிருக்கிறது.

மேலும் ரதகாரர்ளுக்கு உபநயனம் செய்யவேண்டிய காலமும் யாகம் செய்யவேண்டிய காலமும் யாக ஆரம்ப மந்திரமும் சொல்லப்பட்டு மிருக்கிறது. அதாவது,

வர்ஷாஸு ரதகாரம்என்றும்
வர்ஷாஸு ரதகாரோக்னி நாததீத என்றும்
பிருக்ஷணார்ந்த்வா தேவாநாம்
விருதப்தே விருதே நாததாமீதிரதகாரஸ்ய

என்றும் பாரத்வாச சூத்திரம் யஜுசிரௌதம் ஆதானபன்னம் யஜுசாகா பிரதமாஷ்டக முதலியவைகளில் சொல்லப்பட்டுமிருக்கிறது. மேலும் இரண்ணியகேசி முதலான அநேக கிருஹ்ய சூத்திரங்களிலும் மீமாம்ச கிரந்தத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தப்பிரகாரம் சுருதிமீமாம்ச இதிஹாஸ புராண முதலியவைகளில் ரதகாரர்கள் பிரம்மகர்மங்களுடையவர்களென்றும் ஆங்கிரசகோத்திரத்தவ ரென்றும் கூறியிருக்கும்போது, சில ஸ்மிருதிகளில் உற்பத்தியைக் குறைவாயும் கர்மத்தைச் சிரேஷ்டமாகவும் சொன்னதின் காரணம் நான் சொல்லித் தெரியவேண்டியதில்லையே! மேலும், சுருதிக்கும் ஸ்மிருதிக்கும் பரஸ்பர வித்யாச மிருக்கிறதினால் இதிலெது பிரதான மென்று பார்க்கவேண்டியதா யிருக்கிறது. வசனம் மநு—

சுருதிஸ்மிருதி விரோதேது சுருதிரேவ பலீ பவி

என்று இதில் சுருதிவசனந்தான் பிரதான மென்று சொல்லப்படுகின்றது. முன் சொன்ன பிரமாணங்களினால் எங்கள் ஜாதி ஆங்கிரிசரிஷி சம்மந்தமான பிராமணர்களேயாம் என்றும் சொல்ல, இந்தப்பிரகாரம் வசனங்கள் புஸ்தகங்களிலிருந்தால் நீங்கள் வேதாகமாதிகார முடையவர்களென்பதைச் சம்மதிக்கலாமென்றும் சொன்னார்கள். பிற்பாடு வாதி பிரதிவாதிகளின் வக்கீல்மாரிடம் "நாம் இப்போது இவர்கள் சொன்ன வசனப் பிரமாணங்களை எழுதவேண்டுமானால் அதிலுள்ள வித்யாசங்களைக் கண்டிருந்து இவர்களிடம் கிருசி பண்ணத்தெரியுமா வென்று கோர்ட்டார் கேட்டார்கள். அதற்கவர்கள் சுருதிஸ்மிருதி முதலான சாஸ்திரப்பிரகாரமாயும் ஜாதி நியாயமாயும் கேழ்க வேண்டியதா யிருக்கிறதினால் அது எங்களுக்குத் தெரியாதென்று சொன்னார்கள்.

ஒரு நாள் கழித்து வாய்தாபோட்டு வாய்தா காலத்தில் சுருதி ஸ்மிருதி இதிஹாசம் தெரிந்த ஓர் சாஸ்திரியாரைநீங்கள் கூட்டிக்கொண்டு வரவேண்டுமென்று வக்கீலிடம் சொல்லி, தம்பியிடம் நீங்கள் இப்போதுசொன்னவசனங்களுக்கெல்லாம் அச்சுப்புஸ்தகமா யிருந்தால் கொண்டுவரவேண்டு மென்று முன்சீப் அவர்கள்

சொல்லியனுப்பி விட்டார்கள். பிற்பாடு அவ்விடம் வந்திருந்த நம் ஜனங்களும் என் தம்பியுமாக ஆலோசித்து கக்ஷிக ளிருவரும் நம் ஜாதிகளாக விருக்கிறதினால் ஒருவிதம் பேசி முடிவு செய்வோ மென்பதாகத் தீர்மானித்து, மறுநாள் தம்பியும் வாத்யார் முதலியவர்களும் மேலப்பாளையம் போய் அவிடம் ஜனங்களும் கூடி இருகக்ஷிகளிடமும் வெகு பிரயாசத்தின்பேரில் ஒருவிதம் பேசி முடித்து ராஜிநாமா கொடுக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டுவந்தார்கள். மறுநாள் அந்தப்படியே ராஜி கொடுக்கப்பட்டது.

இந்த சமயம் நம்மவர்களி லொருவராவது இக்கோர்ட்டில் வக்கீல்களாக இருந்திருப்பார்களானால் ஷை முனிசீப் அவர்கள் நம் ஜாதியைப் பப்ளிக் கோர்ட்டில் வைத்து துவேஷமாகப் பலவிதம் சொல்லவும் அதைக்கேட்டுக்கொண்டிருக்கவும் இடம் வருமா?

## நமது முக்கிய கடமை

ஆனாலிதன் மூலமாயாவது மேல் நாம் செய்யவேண்டிய முக்கிய கடமையொன்றிருக்கிறது என்பதைத் தெரிவிக்கவேண்டியதற்காகவே திருநெல்வேலி கோர்ட்டு விஷயத்தை இங்கு எழுதப்பட்டது.

அதாவது, நம் குழந்தைகள் ராஜபாஷையாகிற இங்கிலீஷ் பாஷை கற்கும்படியாகவும் பரீக்ஷைகள் கொடுத்து முன்னேற்றத்திற்கு வந்து சகலமான டிபார்ட்டுமெண்டுகளில் வரும்படியாகவும் செய்யவேண்டுவதே நம்மவர்கள் பேரிலுள்ள முக்கிய பாரமாம்.

இப்போது ஆங்காங்கு ஏற்பட்டுக்கொண்டுவரும் சபைகளில் சம்ஸ்கிருதம், வேதாத்தியயன முதலியவைகள் சொல்லிவைப்பதோடுகூட அதிலிருந்தும் புத்திமானாயுள்ள குழந்தைகளைத் தெரிந்தெடுத்து இங்கிலீஷ் படிக்கவும் பரிக்ஷைகளில் தேறும்படியாகவும் செய்துவைப்பது உத்தமோத்தமமான காரியம்.

இந்தப்பிரகாரம் சில தாழ்ந்தஜாதிகளும் ராஜபாஷையைக் கற்பித்துக்கொடுக்கும்படியாக பண்டுகள் சேர்த்துப் படிப்பித்து இக்காலத்தில் அவர்களில் அநேகர் உத்தியோகங்களில் அமர்ந்திருக்கின்றனர். அதனால் அச்சாதியார்கள் மேன்மையடைந்தும் வருகிறார்கள். மேலும் சமஸ்த ஜாதிகளும் தங்களுக்குரிமையான தொழில்களைவிட்டு இங்கிலீஷ் படிப்பினால் உன்னத பதவி யடைந்திருப்பதை நாம் பார்த்திருக்கின்றோமல்லவா?

ஆனதினால், நம் ஜாதியார் மேன்மையும் புகழுமடையவேண்டுமானால் நம் தொழிலைப் பிரதானமென் றெண்ணாமல் இவ்விஷயத்தில் அதிசீக்கிரமாக நம் மஹாஜனங்களும் சபையார்களும் ஆலோசித்து இங்கிலீஷ் கல்வி விஷயத்தில் ஊக்கம் காட்டுவார்களென எதிர்பார்க்கின்றேன்.

# இந்து மஹாசத்தியவேத விருத்தாந்தம்

(10 வது சஞ்சிகை 104-வது பக்கத் தொடர்ச்சி).

ஸ்ரீ V. மௌனகுரு-ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், பழநி.

## வேதபாதங்கள்

(சரியை-கிரியை-யோகம்-ஞானம்-என நான்கு விதப்படும்)

1-வது குருபத்தியிற் றொண்டுபூண் டிருப்பதும், வேதம் வாசித்தலும், புலத்திற் படுத்தலும், புத்தியஸ்தான விரதமும், உத்தமர் நேசமும், தேவாலய தரிசன பணிவிடைகளும், சத்தியவாக்கும் பெற்றிருப்பவன். விஸ்வேஸ்வரபகவான் உலகத்தில் வாழ்கின்ற "சாலோகபதவி" யுடைய புத்ய பிரம்மசாரியாகிய "சரியை"க் குடையவனாயிருக்கிறான்.

2-வது தருமமாகத்தேடியபொருளை, பிரம்மசாரி முதலிய பதின்மருக்கும் பகிர்ந்துகொடுத்து, தேவாலய பணிவிடை, திருவிழாச்செய்து, வேதவிதி வழுவாது, விரதநோன்பியற்றி, அசத்தியம் மாற்றி, ஆசாரியரை வாழ்த்தி, சொற்றவிராதவருடன் கூடி வாழ்கிறவன் விஸ்வேஸ்வரபகவான் அருகில் வாழ்கின்ற "சாமீப பதவி" யுடைய, இல்லற தர்மஸ்தனாகிய கிரியைக் குடையவனாயிருக்கிறான்.

3-வது கற்புடைய மனைவியுடனாவது தனித்தாவது ஐம்புலனை அவாவில் உழலவொட்டாமல் தன்வசத்தனாக்கி இயம, புயம, ஆதன, பிராணாயாம, பிரத்தியாகார, தாரண, தியான, சமாதி, அஷ்டாங்க யோகாப்யாச தவம் புரியப்பட்டவன். விஸ்வேஸ்வரபகவானைப் போல், ரூபித்திருக்கிற "சாரூபபதவி" யுடைய, வர்னப் பிரசித்தனாகிய "யோகத்" திக்குடையவனாயிருக்கிறான்.

"இயமம்" என்பது பத்து வகைப்படும். அவையாவன (1) அஹிம்ஸை (2) சத்தியம் (3) அஸ்தேயம் (4) பிரமசரியம் (5) தயை (6) ஆர்ஜவம் (7) க்ஷமை (8) திரிதி (9) மிதாஹாரம் (10) சவுசம் என்பனவாம்.

1-வது "அஹிம்ஸை என்பது [யோகார்த்தம்] திரிகரணத்தாலும், அன்னியபிராணிகளுக்குத் துக்கத்தை செய்யா திருத்தல்; [ஞானார்த்தம்] ஆத்துமா அறுக்கப்படாதது, தகிக்கப்படாதது. நனைக்கப்படாதது, உலர்த்தப்படாதது என அறிதல்.



2-வது "சத்தியம்" என்பது. [யோகார்த்தம்] எதார்த்தக் கேள்வியினாலும், பிரத்தியக்ஷப் பார்வையினாலும், அறிந்ததைச் சொல்லுதல்; [ஞானார்த்தம்]எவற்றையும் சத்தியப்பிரம்ம மயமாய்ப்பார்த்தல்.

3-வது "அஸ்தேயம்" என்பது [யோகார்த்தம்] பிறர்பொருளைக் கிரஹிக்க வேண்டுமென்று மனத்தாலும் நினையா திருத்தல்; [ஞானார்த்தம்] ஆத்துமாவை ஆத்துமாவாக உச்சரியா திருத்தல்.

4-வது "பிரமசரியம்" என்பது [யோகார்த்தம்] இருதுகாலமன்றி மற்றைய காலத்தில், சுப ஸ்திரீயையும் விரும்பாதிருத்தல்; [ஞானார்த்தம்] மனதினாலே தன்னையும், பிரம சொரூபமாகத் தானே யெண்ணிக் கொள்ளுதல்.

5-வது "தயை" என்பது தன்னைப்போல யாவரும் மோக்ஷமடைய மனதிற்கொள்ளுதல். இதற்கு யோகார்த்தம் ஞானார்த்தம் வெளியாகவில்லை.

6-வது "ஆர்ஜவம்" என்பது பெண்டிர் முதற் சத்துருவரையிலும் சமமாயிருத்தல். இதற்கும் யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

7-வது "க்ஷமை" என்பது சத்துருக்கள் தங்கள் தங்கள் திரிகரணங்களாலும் செய்யாநின்ற துக்கங்களை மனதிற் றரியாமலும் கலங்காமலுமிருத்தல். இதற்கும் யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

8-வது "திரிதி" என்பது [யோகார்த்தம்] வேதவிசாரணையினால், சமுசாரத்திலிருந்து விடுபடுதலே சுகமன்றி, வேறில்லையென் றறிதல் [ஞானார்த்தம்] நான் பிரமமேயன்றி, தேகமல்லவென்று நிச்சயித்தறிதல்.

9-வது "மிதாஹாரம்" என்பது அதிகமுங் கொஞ்சமுமில்லாமற் சமமாகப் புசித்தல். இதற்கும் யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

10-வது "சவுசம்" என்பது [யோகார்த்தம்] காயத்தைமண்ணினாலும் ஜலத்தினாலுங் கழுவுதல்; [ஞானார்த்தம்] சொரூபத்தை மனனஞ்செய்தல்.

"நியமம்" என்பது பத்துவகைப்படும். அவையாவன (1) தபசு (2) சந்தோஷம் (3) ஆஸ்திக்யம் (4) தானம் (5) ஈஸ்வரபூசை (6) சித்தாந்த சிரவணம் (7) லஜ்ஜை (8) மதி (9) ஜெபம் (10) விரதம் என்பனவாம்.



1-வது "தபசு" என்பது [யோகார்த்தம்] உபாசனத்தினால் தேகத்தை சுஷ்கப்பண்ணுதல் [ஞானார்த்தம்] ஆத்தும விசாரம் பண்ணுதல்.

2-வது "சந்தோஷம்" என்பது [யோகார்த்தம்] அல்ப சிரமையினாலாவது பர விச்சையினாலாவது கிடைக்கின்ற புசிப்பினிடத்திலே வேறுமென்று திருப்தியடைதல்; [ஞானார்த்தம்] இகத்திலும், பரத்திலும் அடையாநின்ற போகங்களில் உபேக்ஷபண்ணி ஆத்துமாவினிடத்திலே பிரீதிவைத்திருத்தல்.

3-வது "ஆஸ்திக்யம்" என்பது சுருதி ஸ்மிருதி வாக்கியார்த்தத்தில் விசுவாசம் வைத்தல். இதற்கும், யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

4-வது "தானம்" என்பது நீதியினின்று சம்பாதிக்குந் தனது பொருளை பிரம்மநிஷ்டைகளுக்கும், காமிகளுக்குங் கொடுத்தல். இதற்கும், யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

5-வது "ஈஸ்வரபூசை" என்பது திரிமூர்த்திகளையும், வர்ணத்திரயத்தாரும், தங்கள் சத்திக்குத்தக்கதாகப் பூசித்தல். இதற்கும், யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

6-வது "சித்தாந்த சிரவணம்" என்பது வேதசித்தாந்தத்தைக் குருமுகத்திலே நிச்சயித்தல். இதற்கும் யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

7-வது "லஜ்ஜை" என்பது லௌகீகத்திலேனும், வைதீகத்திலேனும் பொல்லாங்கான காரியத்தில் வெட்கமடைதல். இதற்கும் யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

8-வது "மதி" என்பது வேதத்திற் சொல்லிய புண்ணியங்களை விசுவாசித்தல், வேதசாஸ்திரங்களின் அர்த்தம் விசாரித்தல். இதற்கும் யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

9-வது "ஜெபம்" என்பது வேதஞ்சொன்னபடி மந்திரங்களை உருவேற்றுதல். இதைப் பசுபதவிரதமென்றும், சிரோவிரதமென்றும், அத்தியாசிரிய விரதமென்றுஞ் சொல்லுவார்கள். இதற்கும் யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

10-வது "விரதம்" என்பது அன்னியரை யடித்தல், அன்யருடைய ஸ்திரீயைப்பிடித்தல், அன்னியருடைய

பொருளை பலவந்தமா யெடுத்தலாகிய இம்மூன்றையுஞ் செய்யாதிருத்தல், பொய் கடோரவார்த்தை, கோள் முதலிய சொல்லாதிருத்தல், மனசு அரிஷ்டவர்க்கத்தை விட்டிருத்தல், விபூதிஉத்தூளிதம் பண்ணல். இதற்கும், யோகார்த்தம் ஞானார்த்தமில்லை.

"ஆதனம்" என்பது ஒன்பது வகைப்படும் அவை யாவன (1) ஸ்வஸ்திகம் (2) கோமுகம் (3) பதுமம் (4) வீரம் (5) கேசரி (6) பத்திரம் (7) முத்தம் (8) மயூரம் (9) சுகம் என்பனவாம்.

1-வது "ஸ்வஸ்திகம்" என்பது துடைக்கும் முழங்காற்குமிடையே, இரண்டு உள்ளங்காலையுஞ் செலுத்தி இறுமாந்திருத்தல்.

2-வது "கோமுகம்" என்பது ஜகனபக்கத்திலே இரு காற்பாட்டையும் மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலைக் கைப்பிடித்திருத்தல்,

3-வது "பதுமம்" என்பது இருதுடையிலும், இரண்டுள்ளங்காலையும், மாறித்தோன்றவைத்தல்.

4-வது "வீரம்" என்பது வலத்துடையில் இடக்காற்பாட்டைச் சேர்த்து இறுமாப்புற்றிருத்தல்.

5-வது "கேசரி" என்பது. பீஜத்தின் கீழ்ஜ்ஜீவினியிடத்துப் பாட்டைவைத்து இடமுழங்கையை முழங்காலில் வைத்து அங்குலியை விரித்து நாசியைப்பார்த்திருத்தல்.

6-வது "பத்திரம்" என்பது பீஜத்தின் கீழ்ஜ்ஜீவினியிடத்து இருகாற் பாட்டையும் வைத்து அவ்விரு பதத்தையும் இருகையா லிறுகப்பிடித்து அசையாதிருத்தல்.

---

நிலத்தியல்பா னீர்திரிந்தற் றாகுமாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

தீயவைசெய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று.

பயனில்சொல் பாராட்டுவானை மகனெனல்
மக்கட்ப தடியெனல்.

ஆற்றுவாராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை —குறள்.

## கம்பர் கண்ட சுத்தி

காயிரம்பேடு-ஸ்ரீ திருவேங்கட ஆச்சாரியார்.

பொன்னிவள நாட்டில் செங்கோல் வழுவாது குலோத்துங்க மன்னன் அரசுபுரிந்து வருங்கால், கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார் அநேகம் கண்ட சுத்திகளைச் சொல்லக்கேட்டு மகிழ்ந்து 'புலவர் பெருமானே! தாங்கள் அநேக அற்புதங்களை நேரில்கண்ட மாதிரியாய்க் கூறுகின்றீர்களே! நான் இவ்வற்றைய தினம் திரைமறைவில் செய்யும்படியான சங்கதியைத் தாங்கள் உடனே செய்யுள் மூலமாகக் கூறியருளவேண்டும் எனக்' கம்பர் அதற்கிசைந்து அம்மாதிரியே செய்யும்படிசொல்ல, அரசன் அரியாசனத்தின்முன் திரையிடச்செய்து, ஸ்ரீராமரைப் போன்ற வடிவங்கொண்டு வில்லும் அம்பும் எடுத்து வீரமண்டியிட்டுக்கொண்டு, 'நான் என்னவிதமாய் இருக்கிறேன், கூறுங்கள்' என்று கேட்க, அப்பொழுது கவிஞர் சிரோன்மணியாகிய கம்பர்—

வாலியுங்கடல்களேழும்மரங்களும்அரக்கியார்கள்
தாலியும்பொடியதாகச்சரந்தொட்டராமன்போல

என்று கூறவும், உடனே அரசன் அதை எறிந்துவிட்டு அவ்வுருவை மாற்றிக்கொண்டு கண்ணபிரானைப்போல் தலையிற் கொண்டைகட்டி, அதன்மேல் மயிற்பீலிநாட்டி யொரு பழங்கம்பளத்தைப் போர்த்துக்கொண்டு நின்று, 'தாங்கள் சொன்னீர்களே அந்தவிதமாகவா இருக்கின்றேன்?' என்று கேட்க, 'அல்ல அல்ல இப்பொழுது கொண்டிருக்கும் கோலம் என்னவென்றால்

பீலியுங்குடையுந்தாங்கிபீற்றகம்பளமும்சாற்றிக்
காலியின்பின்புசென்றகோலமென்கண்கொள்ளாதே?

என்று கூறினார். அரசன் 'அதேமாதிரியாகத்தான் இருக்கின்றேன் பாருங்கள்' என்று திரையை யகற்றிச் சபையிலுள்ள எல்லோருங்கண்டு களிக்கும்படி தான் கொண்ட இரண்டு உருவங்களையும் காட்டிக், கவிஞர் பெருமானைத் தழுவிக் கனகாபிஷேகம் செய்து அநேக விருதுகளைக் கொடுத்துச் சிறப்பித்தனராம்.

இப்படியிருக்கும் நாளில் ஓர்நாள் அரசன் தனிமையாக நகர்சோதனை செய்து வருங்காலத்தில், அக்கிராஹார வீதியில் ஓரந்தணன் தான் காசியாத்திரை போய்வரவேண்டு மென்றும், போய்வருமளவும் வியாகூலங் கொள்ளாமல் இருக்கவேண்டு மென்றும் தன் மனைவியிடம் சொல்ல, அம்மாது 'நான் சிறு பெண்ணானதால் தனியா யிருக்கலாமா? எனக்குத் துணைவேண்டுமே' என்று கூறினாள். அதற்கு அந்தணன் நகைத்து 'பெண்ணே! உனக்கேன் இந்த அஞ்ஞானம்? நம்முடைய அரசன் மலைபோல் இருக்கின்றான். அவன் துணையைவிட வேறு துணையும் வேண்டுமா? அவனது ஆஞ்ஞாசக்கரம் எக்கொடியபாதகரேனும் தம்மனத்தால் தீங்கிழைத்தாலும் சேதித்து விடும் அஞ்சவேண்டியதில்லை. சுகமன்றோ? நீ யொன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை. சுகமாயிரு. நான்போய் விரைவில் வந்துவிடுவேன்' என்று கூறி மறுநாள் யாத்திரை போய்விட்டான். அவ்விராத்திரி அரசன் ஓர் தலையாரி வேடந்தாங்கிப் பெண்ணினிடத்திற்கு வந்து "அம்மா! கூலியாள் தங்களுக்குத் தேவையுண்டா? வென்று கேட்க, அம்மாது 'என் நாயகன் காசியாத்திரை போயிருப்பதால் அவர் வருமளவும் என்வாசலில் காத்திருந்தால் உனக்குக்கூலி தருகிறேன்' என்று அவள் சொன்னாள். 'நல்லது, காத்துக்கொண்டிருக்கிறேன். தற்காலமெதாவது கூலி கைமீது கொடுக்கவேண்டு'மென்று ராஜன்கேட்டான். 'என்னிடத்தில் யாதொன்றுமில்லை; ஒரு பழங்கிண்ணியும் திருமங்கிலியமும் தான் இருக்கின்றன' வென்று அவள் கூற, 'அவைகளையேனுங் கொடு' வென்று வாங்கிக்கொண்டு அவள்வீட்டுத் தெருத்திண்ணையிற் படுத்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்கும் நாளில் ஓர்நாள் இவ்வந்தணன்மனைவிமீது நெடுநாளாக நோக்கங்கொண்ட ஓர் அந்தணவாலிபன் அவளை எப்படியாவது பயப்படச் செய்து தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளக் கருதி தன்கையில் ஓர் கத்தியெடுத்துக்கொண்டு அவள்வீட்டிற்கு வந்தான். அச்சமயம் வெளியில் ஆள் படுத்திருக்கிறதைக் கண்டு 'யாரடா இங்கே படுத்திருக்கிறவன்? எழுந்து அப்பாலே போடா' வென்ன, அதற்கு அரசன் இவன் கொண்டுவந்த குறிப்பையறிந்து பேசாதிருந்தான். கத்தியால் புரட்டிப்புரட்டிக் குத்தி பயப்படுத்தி 'ஓடிப்போய்விடு, வெட்டிவிடுவேன்' என்று கூற, அரசன் இவன் அந்தணனையால் இவனை ஒரு குற்றத்திற்காக வெட்டக்கூடாதென்றும் தொண்ணூறுகுற்றம் பொறுக்கவேண்டுமென்று மெண்ணித் தொண்ணூற்றொரு தழும்புகளை வாங்கிக்கொண்டு பிற்பாடு ஒரே வெட்டாய் வெட்டித் தலையைச் சிதறச்செய்தான். இந்த சவிஸ்தாரத்தை மறுநாள் காலையில் அரசன் சமஸ்தானத்திற்கு வந்தவுடன் அரசன் கூறுமுன்னமே கம்பர் கீழ்க்குறித்த பாவினால் வெளிப்படுத்தினராம்.

ஆலிக்குமாமதன்ஐங்கணைபாயவனல்மிகுந்து [கும்
பாலிக்கும்போதவன் என்செய்குவான் பழந்தாலத்துக்
தாலிக்குமேனியிற் றொண்ணூற்றொரு தழும்புபடக்
கூலிக்குவெட்டும்பிரானேயுறந்தைக்குலோத்துங்கனே.

அரசன் மிகமகிழ்ந்து பலவர் சிகாமணியைக் கொண்டாடினார்.



## நம் உயிர்வாழ்க்கையின் 14-தப்பிதங்கள்

கீழ்க்கண்ட பதினான்கு குற்றங்களையும் நீக்கி ஒருவன் உயிர்வாழ முயலுதலே உத்தமமாம் என்று லண்டன் நகரத்தைச் சேர்ந்த ஜட்ஸ் ரென்டில் என்பவர் கூறுகிறதாக ஸ்ரீ சந்தோஷநாதம் பிள்ளை யென்பவர் 'லோகோபகாரி'ப் பத்திரிகைக் கெழுதுகிறார்:—

1. நாம் எது சரி எது தப்பு என்று எண்ணுகிறோமோ அதனை மேலானதாக வெண்ணி நிலைநாட்ட முயலுவதும், மற்றெல்லோரும் அதனைப் பின்பற்றவேண்டுமென்று எதிர் பார்ப்பதுமாம்.

2. பிறருடைய சுகதுக்க அநுபவங்களை நம்முடைய சுகதுக்க அளவைக்கொண்டு அளக்க முயலுதல்.

3 இவ்வுலகத்தில் எல்லோரும் ஒரே விதமான அபிப்பிராய முள்ளவர்களா யிருக்க வேண்டு மென்று எதிர்பார்த்தல்.

4. வாலிபப் பருவத்தில் வயோதிகப் பருவத்துக்குரிய அநுபவத்தையும் தேர்ந்த அறிவையும் தீர்மானமான புத்தியையும் எதிர் பார்த்தல்.

5. பலவகையாய குணமுடையவரை ஒரேவிதமாய் குணமுடையவராகத் திருப்ப முயலுதல்.

6. அப்பிரதானமான அற்ப காரியங்களில் ஒத்துப் போகாமை; அவற்றைப் பிரதான மாகக் கொண்டு வழக்கிடுதல்.

7. நாம் செய்யும் எவ்வொரு தொழிலும் பூரணமாகச் சரியா யிருக்கவேண்டுமென்று எதிர் பார்த்தல்.

8. எதனைச் சரிப்படுத்த முடியாது மிஞ்சிப்போய் விட்டதோ அதற்காக நம்மையும் உபத்திரவப்படுத்திக் கொண்டு பிறரையும் உபத்திரவப் படுத்தல்.

9. எங்கெங்கே துக்கநிவிர்த்திக் கிடமுண்டோ அங்கங்கே நம்மால் கூடுமான விடத்தில் துக்க நிவிர்த்தி செய்யாதிருத்தல்.

10. அந்நியருடைய குறைகளை ஒரு பொருட்டா யெண்ணுதும் அவர்களிடத்தும் அநுதாபம் பாராட்டாது மிருத்தல்.

11. நம்மாற் செய்ய முடியாத தொன்றை எவராலுமே செய்ய முடியாதென் றெண்ணுதல்.

12. காலதேச வர்த்தமானக் கட்டுக்குள் ளடங்கிய நம்மனது எதனை யுணருகிறதோ அதனை மாத்திரமே நம்புதல்.

13. தற்கால உயிர்வாழ்க்கையைப் பிரதானமாகக் கொண்டு இஃது எப்போதும் இப்படியே நீடித்திருக்குமென் றெண்ணி, மற்ற ஆத்மலாப விஷயங்களைக் கவனியாதிருத்தல்.

14. வெளியிற் காணப்படுங் குணங்களால் ஜனங்களை மதித்து உட்குணங்களைக் கவனியா திருத்தல்.

## வேதாத்தியயன பாடசாலைகள்

நமது குலமக்கட்கு ஆங்கிலக்கல்வி போதிப்பதா அல்லது வைதிகக்கல்வி போதிப்பதா என்றதோர் பெரிய சந்தேகம் நம்மவரில் பெரும்பான்மையோருக் குண்டாயிருக்கிறது. இச்சந்தேகம் அவரவர் மனதில் மட்டும் தங்காமல் கொந்தளிப்புண்டாகி கக்ஷிகளும் பலவிடங்களில் தோன்றியிருக்கின்றன. சென்ற இரண்டுமாதமாக இதைப்பற்றி ஓர் வியாசம் எழுதவேண்டுமென எண்ணியிருந்தேன். ஆனால் எனக்குண்டான பலகுடும்பகாரியங்களால் ஒன்றுமே எழுதமுடியாமற் போயிற்று. ஆனால் சென்ற 9-வது சஞ்சிகை 75-வது பக்கத்தில் ‘வைதிகக்கல்வி’ என்ற மகுடமிட்ட வியாசத்தை நான்பார்க்க மிகவும் சந்தோஷிக்கலானேன். அதில் விளக்கிக்காட்டிய யாவும் அனுபவத்திற்கு ஒத்திருக்கின்றன. வேதாத்யயனம் முதலிய வைதிகக்கல்வி கற்கவேண்டு மென்பதின் கருத்து நம்மவர்கட்குள் அனேகர் அறியவில்லைபோலும். நமது மாணாக்கர் சமஸ்கிருதம் வாசித்து அதிலுள்ள வியாகர்ணம், தர்க்கம் முதலிய சாஸ்திர ஆராய்ச்சிசெய்து ஒவ்வொருவரும் பிரசங்கிகளாகி அதின் துவாராவாக ஜீவனம்செய்யப்போகிறார்களா? அல்லது இதிகாச புராணங்கள் முதலிய கிரந்தங்களைப் புதிதாய் வெளியிட்டு அதின் மூலமாய்ச் சம்பாதிக்கப்போகிறார்களா? அல்லது மஹாமஹோபாத்தியாயர் பட்டம்பெற்று குலத்திற்குக் கீர்த்தி விளைவிக்கப்போகிறார்களா? அப்படியேயானாலும் ஒருவர் இருவர்தான் ஆகக்கூடும். இதற்காக எல்லா மாணாக்கர்களும் ஆரம்பமுதல் இதையே கற்கவேண்டுமென்பது என்ன அவசியம்? மதவிஷயமாகவே பாடுபடுகின்ற கிறிஸ்துமதப் பாதிரிகள், பௌத்த சந்நியாசிகள் இவர்களெல்லாம் குழந்தைமுதல் மதவிஷயமாகவே படித்தவர்களா? வேதாத்யயனமே தொழிலாகச்செய்கின்ற ஆருஷேயர்களுக்கு வைதீககாரியங்களில் வாங்கும் தக்ஷிணையைத்தவிர வேறு ஜீவனம் ஏது? வேதாத்யயனம் செய்தால்மட்டுந்தானா நல்லகுணம் சம்பாதிக்கலாம்? அப்படியாவது சாஸ்திரிகளிடத்தில் பொய், பொறாமை, கோபம் நீங்கிற்றா? சில மந்திரங்களைப் பொருள் தெரியாமல் உரைப்பதால் என்ன பயனை அடைய முடியும்? இதற்காக வேதாத்யயனம் செய்வதில் காலங்கழிப்பானேன். ஆருஷேயர் பிராமணக்குழந்தைகள் ஐந்துவயதுமுதல் ஆங்கிலம் கற்றும் சந்தியாவந்தனாதி கிரியைகளையும் அவர்கள் கற்றுக்கொள்ளவில்லையா?

வைதீகத்தன்மையில் நமது ஜாதியர் சிறப்படைய வேண்டுமெனக்கருதி வேதாத்தியயன பாடசாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளால் குலத்திற்கு யாதொரு நன்மையு முண்டாகமாட்டாது. இதன் உண்மை குலாவேசங் கொண்டுள்ளவர்களுக்கு முதலில் புலப்படாது போயினும் நாளடைவில் புலப்படுதல் நிச்சயம்; இந்த பாடசாலையில் பயில்பவர்களால் பௌரோகிதக்குறைவு ஒருக்காலும் நீங்காது; பயிலும் சிறுவர்களும் பயனடையமாட்டார்கள். பாடசாலைகளும் பயன் பெறமாட்டா. ஏனென்றால்,

I. சென்னை ஸ்ரீ காமாட்சி அம்மன் தேவாலயத்தில் வேதாத்தியயன பாடசாலைச் சிறுவர்கள் வேதபாராயணஞ் சொல்வதை அர்ச்சகர் தடுத்ததாயும், தீக்ஷிதர் சிறுவர்களை நீக்கித் தான்மாத்திரம் அத்தியயனஞ் சொன்னதாயும் தெரிந்துள்ளோம். பாடசாலை ஏற்பட்டு 4 வருஷமாயும் இவ்விதம் நிகழ்ந்ததென்றால் அதில் பயலும் சிறுவர்கள் பள்ளிக்கூடத்தினின்று நீங்கக் கேட்கவேண்டுமோ? குல ஜனதாவும் குறைவுபடும். அவ்வாறே அவர்கள் வேதாத்தியயனஞ்செய்யக் கற்றுக்கொண்டால் அக்ஷரசுத்தத்தோடும் சப்தக்குறைவின்றியும் ஸ்வரஹீனமின்றியும் சொல்லமுடியுமா? நம்மினத்தவர்கள் கூறும் சுலோகத்திற்கும் மற்றவர்கள் கூறும் சுலோகத்திற்கும் மேற்குறித்த வித்தியாசங்கள் காணக் கிடக்கின்றன.

அதில் பயிலும் சிறுவர்கள் 10, 12 வயதுடையவர்களேயாவர். அவர்கள் தூரதேசங்களிலிருந்து தமது தாய் தந்தையர்களைப் பிரிந்துவருவதற் கியலாது பொருளுள்ளவர்கள் தங்கள் தங்கள் ஊர்களிலேயே சந்தியாவந்தனமந்திர முதலானவைகளைக் கற்பிக்கக்கூடிய உபாத்தியாயர்களைத் தேடிக்கொள்ளுவார்கள். ஏழைகளாயுள்ளவர்கள் எங்ஙனம் தம் மக்களை அனுப்புவதற்கிசைவர்? இதனால் பிறதேச குலஜனதாவு குறைவுபடும். தீபாவளித்தண்டல் காலத்தில், ‘சென்னையிலுள்ள சபைக்கு இங்கென்ன பணம் தண்டுதல்’ என்று கூறிக் கொடாதுநின்றவர்கள் எங்ஙனம் பாடசாலைக்கு உதவிபுரிவர்? சென்னைச் சபையாரோ தமது தண்டல் வசூலை எல்லா ஊரார்களுக்கும் உபயோகமாகும்படி கல்வியபிவிருத்தி யாதியாய காரியங்களில் விநியோகிக்



கிறார்கள். எவ்வூராராயினும், தம் மக்களுடைய கல்விக்குச் சகாயம் வேண்டுமானால் சென்னைச் சபையாரிடமிருந்து பெறலாம். இதற்குச்சாக்ஷி, திருச்சிப் பிள்ளைக்கும் வெங்கடகிரிப்பிள்ளைக்கும் இவர்கள் உதவிசெய்திருப்பதேயாகும். இப்படிப் பலபேர்க் குபயோகமாகும் நிதிக்கு உதவப் பின்வாங்குவோரா ஓரிடத்து வேதாத்தியயன பாடசாலைக்கு உதவுவர்?

2. ஷை பாடசாலைகளில் கற்றுக்கொள்ளப்படுவன சந்தியாவந்தனாதிக் கிரியைகளேயன்றி வேறன்று. இப்பழக்கங்களெல்லாம் வைதிகத்தன்மைபொருந்திய குடும்பங்களினால் ஏற்படுவன. அக்குடும்பத்தினரோடு சேர்ந்து நாம் இப்பழக்கங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்ற உண்மையான எண்ணம் ஒவ்வொருவர் மனதி லுதித்து, அவ்வித பழக்கங்களை அனுஷ்டித்துவரவேண்டும். இவ்வழிகளைத் தவிர்த்து பாடசாலை ஏற்படுத்திக் கற்பித்தால் என்ன பயன் ஏற்படும்? சந்தியாவந்தனம் கற்றுக்கொள்ளுவதற்கு ஓர் பள்ளிக்கூடமும் வேண்டுமாவென்று பலர்பரிகசிக்கிறார்கள். இப்பழக்கங்களெல்லாம் உபநயனகாலத்திலிருந்தே நன்கு படிந்துவிடவேண்டும். மற்றும் வேண்டுவனவெல்லாம் குடும்பத்திலேயே கற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

3. திருநெல்வேலியில் ஒரு கூடத்தில் சிலர் பாளையங்கோட்டையில் ஓர் உபாத்தியாயனை ஏற்படுத்தி 20-சிறுவர்களும் வீரராகவபுரத்தில் 7-8 பெயர்களும் திராவிடகிரந்தம் படித்துவந்தனர். இது 2-3 வருடங்தான் நீடித்திருந்தது. தற்போது அப்பாடசாலை காணவில்லை. அப்பாடசாலை மாலை 6 மணிமுதல் இரவு 8 அல்லது 9 மணிவரை திறந்துவைக்கப்படவேண்டியதாயிருந்தது. உபாத்தியாயருக்கும் அப்போதுதான் வருவதற் கியலும். குலச்சிறுவர்களில் சிலர் $6\frac{1}{2}$ மணிக்கும் சிலர் $7\frac{1}{4}$ க்கும் வேறு சிலர் 8 க்கும் இவ்வாறாக மணி 9 அடிக்கும்வரை ஒவ்வொருவராய் வந்துகொண்டிருப்பர். அதனால் உபாத்தியாயருக்கு ஓர்வித அதிருப்தி ஏற்படுகிறது. சிறுவர்களைச் சரியானநேரத்தில் வரும்படி கண்டிக்கப்புகின் அவர்கள் தங்கள் எஜமானர்கள் வேலையினின்று விடுவதற்கு இவ்வளவு நேரமாய் விட்டதாய்க் கூறுவார்கள். இவ்விதம் ஏற்படுவதால் பள்ளிக்கூடங்கள் நிலைபெறவில்லை. திரிகால சந்தியா வந்தனங்களைக் கற்றுணர்ந்த சிறுவர்களுக்கும் தமிழில் 4 வரி நன்றாய் எழுதவும் துரிதமாய் வாசிக்கவும் முடிவதில்லை வைதிக விருத்தியிலேயே செல்லுவதற்கு நம் தொழில் சிறிதும் இடந்தராது. ஆகையினால், வேதாத்யயன பாடசாலையின் அபலம் ஒவ்வொருவர்க்கும் சீக்கிரம் வெளிச்சமாய் அவர்கள் கைகழுவ விட்டுவிடார்கள் என்பது நன்கு விளங்கவில்லையா?

II நமது சபையின்கண் B A. முதலிய பரிட்சைகளில் தேறினவர்கள் அங்கத்தினர்களாயிருப்பதால், பலபேர்களுடைய பொருளைக்கொண்டு ஓர் ஊரிலுள்ள சிலருக்காக ஓர் மூலையில் இவ்விதமான பாடசாலைகளை ஏற்படுத்துவது அனவசியமென்று கருதி, எல்லாவிடங்களிலுமுள்ள நமது குலத்தினர் யாவர்கட்கும் பயன்படக்கூடிய ஓர் “பௌரோகித ஸமஸ்கிருத கலாசாலையை” ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள். அவர்கள் கருத்து சிலாகிக்கத்தக்கதேயன்றோ?

ஏன் சமஸ்கிருத பௌரோகித கலாசாலையா யிருக்கவேண்டுமெனின்.—

1. சுஜாதி சம்பந்தமாய் வேதசாஸ்திர புராணேதிகாசங்கள் சமஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டுள்ளன. அவைகள் இன்னின்னவற்றில் இந்த அதிகாரத்தில் இந்த சுலோகத்தில் இந்த வரியில் இன்னது சொல்லப்பட்டிருக்கின்றது என்பது ஐயந்திரிபற எடுத்துக்காட்டக்கூடியவர்கள் இப்போது துல்லபமாயிருக்கிறார்கள். சொந்த நிலைமை இந்தவிதமிருக்கிறதென்று, குலத்தலைவர்கள் நாங்களென்று கோஷஞ்செய்பவர்களே யறியமாட்டார்கள். அறிந்திருக்குஞ் சில விவேகிகள் நமது மேன்மையைப்பற்றிய ஆதாரவாக்கியங்களை அப்படியே பூர்வ கிரந்தத்திலிருந்து பெயர்த்தெழுதவேண்டுமெனக் கருதுகிறது நற்கருத்துதான். இப்போது இந்த பிரயத்தனஞ் செய்யாதுவிடின் நூலாதாரவிஷயங்கள் குறைவுபடும். இதைப்பயிற்சி செய்வோர் சுஜாதியில் காண்பதரிது; விஜாதியர்களால் ஷை நூல்களை அச்சிட எண்ணுவதற் கிடமில்லை. ஆகையால் நம்மவர்களை இக்காரியத்தில் நுழைக்கவேண்டும். அதற்காக ஷை பாடசாலை ஒன்று ஏற்படுத்தவேண்டும். இப்பாடசாலையினால், சகலாகமபண்டிதர்கள் முதலானவர்கள் ஏற்படவேண்டும்! சாமான்யகல்வியில் திருப்தியடையலாகாது. இதற்காக புத்திநுட்பமான சிறுவர்களைத் தெரிந்தெடுப்பதில் சர்வ ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அவ்விதம் சேகரித்த சிறுவர்களை இரண்டு

பாகமாய்ப் பிரிக்கவேண்டும். (a) பௌரோகித வகுப்பார் (b) ஆகமபண்டிதவகுப்பார். அந்த வகுப்புகளும் வெவ்வேறாக இருக்கவேண்டும். சிறிதுகாலம் படித்துவிட்டு, எங்கள் தாய் தந்தையைத் தேடுதென்று அவர்கள் பள்ளிக்கூடத்தினின்று நீங்கி சுத்தியலை எடுக்கவொட்டாமலும்; என் பிள்ளையைத் தேடுது என்று பெற்றோர்வந்து அழைத்தேகாமலும்; அந்தந்த வகுப்பினர் அதனாலாகிய ஜீவனத்தைக்கொள்ளவேண்டி, பெற்றோர், சிறுவர் இவ்விருவர்களிடத்திலும் (Registered Agreement) அக்ரிமெண்டு எழுதி ரிஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டும். அதன்பிறகுதான் பள்ளிக்கூடத்தில் சேர்க்கவேண்டும். மற்றவர்கட்கு இடந்தரக்கூடாது.

4. ஆனால், இந்த பௌரோகித வகுப்பிற்சேர்ந்து வாசித்தவர்கள் சாதாரணமாய் இப்போது புண்யாஹவசனஞ்செய்யும் புரோகிதர்களைப் போலிராது, சமஸ்கிருத வித்தையை நன்குணர்ந்து தாங்கள் செய்யும் ஒவ்வொரு கிரியைக்கும், கூறும் மந்திரத்திற்கும் அர்த்தம் சொல்லக்கூடியவர்களாய் இருத்தல் வேண்டும். இவர்களுக்கு கட்டாயம் ஜோசியம் தெரிந்திருக்கவேண்டும். அப்போது தான் சுபாசுபகாரியங்களுக்கு நாட்கள் அமைக்கவும், மற்று ஜாதகார்த்தமாய்ப் பார்க்கவேண்டியவைகளைப் பார்ப்பதற்கும் இலேசாயிருக்கும். ஆசாரமுதலியவற்றிலும் தேர்ந்தவர்களாயிருந்து நற்குணநற்செய்கையுடையவர்களாயிருத்தல்வேண்டும்.

5. பண்டித வகுப்பினர்க்கு வேதபாஷ்யம், மீமாம்ஸம், தர்ம சாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம் இவைகள் கற்றுக்கொடுக்கப்படவேண்டும். முக்கியமாய் ஆங்கில பாஷை, ஆங்கில முறைப்படி கிரந்தங்களைச் சர்ச்சை செய்தல், வியாகரணம், நியாயம், தர்க்கம் முதலியன கற்பிக்கப்படவேண்டும். இப்பாடசாலையைத் தற்கால இங்கிலீஷ் காலேஜுகள் நடைபெறுவதுபோல் நமது சபையார் ஆங்கிலங்கற்றுள்ளவர்களாதலால் நடத்துவார்கள் என்பது நிச்சயம்.

6. பௌரோகிதர்களாய் ஏற்படுகிறவர்கட்கு நல்ல ஜீவனமும் பெருமையும் ஏற்படுவது நிச்சயம். நமக்குள்ள பௌரோகிதக்குறைவு நீங்கும். எல்லாம் யோக்கியதையின்மேல் வரவேண்டும். பண்டிதர்களாய் வருபவர்கள் பலகாரியங்களுக் குதவுவார்கள். விஸ்வகர்ம சேவாசங்க முதலானதிற்கு அங்கத்தினர்களாய் ஏற்படலாம். சுஜாதிதர்மங்களை அங்கங்கு போதித்து சீர்திருத்தலாம். அப்போது நமது ஜாதிக்குறைகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். இவர்கள் மற்றவர்களால்பூஜிசமடையக்கூடியயோக்கியதையைப் பொருந்தியிருப்பார்கள். அநேக விடங்களில் பிரசங்கிப்பார்கள். குலப்பூர்வ கிரந்த சாஸ்திரங்கள், பலநீதி நூல்கள், நவநவமாய் வெளிவர ஏதுவாகும். இவ்விதம் நிகழ்ந்தால், பிறவிக்குருடனுக்கு இருவிழிகளும் தெரியப்பெற்றால் எவ்விதமாய் ஆனந்த முறுவனோ அதைவிடப் பதின்மடங்கு அதிகமாய் ஆனந்தமுறலாம் எல்லாம் சிரத்தையில் வரவேண்டும். அவரவர்கள் அங்கங்கு ஒவ்வொரு பாடசாலையை விளையாட்டுபோல் ஏற்படுத்துவதால் ஜாதிக்குறை நீங்காது. பௌரோகித வகுப்பாரும், பண்டித வகுப்பாரும் தாய் தந்தையர்களை விட்டு குருகுலவாசஞ் செய்தாலன்றி அன்னவர்கட்கு வைதிக ஒழுக்கம் நன்றாய்ப்படியாது. அது படியப்பெற்றவர்கள் தான் சரியான பௌரோகிதர்களும் பண்டிதர்களுமாய்க் குலத்தைச் சீர்திருத்த முயலுவார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஒளியாநின்றது.

ஆகையால், இதைவாசிக்கும் சகோதரர்களே! வீட்டு வாடகை, உபாத்தியாயர் சம்பளம், சிறுவர்களின் ஆடை போஜனம் முதலானவைகளுக்கு மாதம் 1-க்கு 10 பிள்ளைகளுக்கு குறைந்தது ரூபாய் நூறாகும். இதற்காக ஒவ்வொரு ஜில்லாக்காரரும் **சமஸ்கிருதகலாசாலை உண்டி** ஒன்றை ஏற்படுத்தி சுபாசுபகாரியங்களில் சட்டணம் வாங்கிச் சேர்த்தனுப்பவது நலம். அங்கங்கு சபைகள் கூட்டி அவற்றினின்று இதற்குப் பணமுதவிசெய்யலாம். ஜில்லா ஒன்றில் ரூபா 10 வசூலானால்போதும். தற்காலத்தில், சென்னைச் சபையைப் போன்றவை 5-6-உள. அவை இப்பாடசாலைக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 5-க்கு மேல் அவாள் இஷ்டம்போல் உதவிபுரிவதுநலம். முதலில்தான் கஷ்டம். நாம் நடத்தும்விதத்தில் கவர்ண்மெண்ட் ஆதரவுக்குட் படுத்தும் ஸ்திதியில் வந்துவிடும். இவ்வளவும் நம்மால் செய்து முடிக்கக்கூடிய வழிகளே. கட்டுப்பாடாக நடத்தினால் காலதாமதமின்றி நிலை நாட்டலாம். இவை ஒவ்வொருவர் மனதிலும் பதியவேண்டும். சந்ததியின்றி சஞ்சலப்பட்டு நிற்கும் சம்பத்காரருடைய செல்வம் சாஸ்வதமாய்ப் பெயர் நாட்டியிருக்க விரும்புவோரை இதற்குச் செலவிடும்படி செய்யவேண்டும். இஃதின்றி குலம் விர்த்தியாக வேண்டுமெனச் சபதமொழி கூறுவதில் பயனில்லை. அதை விர்த்திக்கக்கூடிய மேற்காட்டிய விஷயங்கள் பூர்த்தியாகும் வழியில் மனப்பூரணமாய் உழைக்கவேண்டியதும், சபையார் கொண்டுள்ள கருத்தை நிறைவேற்றுவதும் மெம்பர்களுடையவும் சந்தாதார்களுடையவும் கடமை என்பதைக் கூறும்.

உத்தமர்க்கு ஊழியன்,

**தன்னூர், T. தங்கவேல்,**

திருநெல்வேலி லாபம்.



## ஜப்பான் விசேஷம்

ஜப்பான் யோகஹாமாவிலிருந்து 28-5-14உயில் K. S. ராமசந்திர என்பவரெழுதியனுப்பிய கீழ்க்கண்ட கடிதம் சுதேசமித்திரன் பத்திரிகையில் வெளியாயிருக்கிறது.

ஒஸாகாவிலுள்ள கைத் தொழிற் சாலைகள் உலகத்தில் மிக்கபெயர் போனவை யென்று எனக்குத் தெரிந்திருந்த போதிலும், அங்கே இரவும் பகலும் ஓயாமல் வேலை செய்வதோடு வெகு நேர்த்தியான பட்டு முதலியவைகள் நெய்வதைக் கண்டபொழுது எனக்குண்டான ஆச்சரியத்திற்கும் சந்தோஷத்திற்கு மளவில்லை. நெருப்புப் பெட்டி மெழுகுவத்தி முதல் மோடார் வண்டி நீராவிக் கப்பல் வரையில் யாவும் ஜப்பான் தேசத்திலேயே செய்யப்படுகின்றன இங்கிலாந்து அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்சு முதலிய தேசத்து ஜனங்களைவிட ஜப்பான் தேசத்தார் மிக்க ஊக்கமாய் வேலை செய்வதைப்பார்க்க எந்த இந்தியன் தான் சந்தோஷப்படமாட்டான்? நிற்க, டோக்யோ கண்காக்ஷிச் சபையில் வைத்திருக்கப்பட்ட மிக்க வேலைப்பாடுள்ள சாமான்களைப்பார்க்கப் பதினாயிரம் கண்கள்வேண்டும். கண்காக்ஷிச் சபைமுழுவதும் பார்க்கவேண்டுமானால் குறைந்தது 12-நாட்கள் செல்லும். இவைகளையெல்லாம் உற்றுப் பார்க்கும்பொழுது இந்தியர்களுக்குள்ள சோம்பேறித்தனமும், கைத்தொழில்களை விருத்தி செய்யாததும் நன்றாய் விளங்கும். ஜாதிக் கட்டுப்பாடு, பால்ய விவாகம், ஒற்றுமை யில்லாமை, பொறாமை முதலியவைகளைவிட்டு, பலதேசங்களுக்குப்போய் கைத்தொழில் முதலியவைகளைக் கற்றுக்கொள்ள இந்திய வாலிபர்கள் முன்னுக்கு வாராத வரையில் இந்தியாவில் வறுமை ஏற்படக் கேட்பானேன்.?

டோக்யோ கைத்தொழிற் பாடசாலைகளில் படிப்பதற்கு காஸ்மீரத்திலிருந்து ஒருவரும், பஞ்சாப்பிலிருந்து இருவரும், வங்காள தேசத்திலிருந்து மூன்று பேரும், தென்னிந்தியாவிலிருந்து ஒருவரும், கொளும்பு விருந்து நான்கு வாலிபர்களும் ஆகப் பதினொன்று வாலிபர்களேவந்து இப்பொழுது கைத்தொழில் கற்றுக்கொள்ளுகிறார்கள். நிற்க, ஒரு இந்திய வாலிபனாவது கப்பலோட்டும் வேலை (Marine Engineering) கற்றுக்கொள்ள முன் வராதது மிக்க விசனிக்கத்தக்கதே. கப்பலோட்டும் வேலையைக் கற்றுக்கொண்டு அதில் தேர்ச்சியடைவதனால் இந்தியாவுக்கு எவ்வளவு நன்மை ஏற்படுமென்பதை கொஞ்சம் புத்தியுள்ள இந்தியனுக்கும் நான் சொல்லாமலே விளங்கும். கப்பலோட்டும் மாரைன் இஞ்ஜினீரிங் படிப்பை மற்ற படிப்புகளைப்போல் மூன்று வருடங்கள்தான் படிக்கவேண்டும். பரீக்ஷையில் தேர்ந்தவுடன் ஜப்பான் கப்பலில் வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்கள். நிற்க, மற்றப்படிப்புகளைப்போலவே மூன்று வருடத்தில் இதைப் படித்துத் தேர்ச்சியடைந்தபோதிலும் கப்பல் (தலைமை) மாலுமி (Captain) யாக வருவதற்குப் பல வருடங்கள், அதாவது குறைந்தது 15 வருடங்கள் செல்லுமாதலால், இப்பொழுதாவது நம் இந்திய வாலிபர்களில் சிலர் இந்த விஷயத்தில் முயற்சி எடுத்துக்கொள்வார்களானால் பலவருடங்களுக்குப் பிறகாவது இந்தியாவுக்கு நன்மை யுண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை. வியாபாரக் கப்பல் கம்பெனிகள் இந்தியாவில் உண்டாகும்போது, காப்டன் பதவியை வகிக்க அவர்கள் லாயக்குள்ளவர்களா யிருப்பார்கள். தவிர நேர்த்தியான பட்டு நெய்யவும், அதைப் பலவிதசாயத்தில் தோய்க்கவும், இன்னும் கண்ணாடி, காகிதம் முதலியவைகள் செய்யவும் கற்றுக்கொள்ள, பல இந்திய வாலிபர்கள் முன்னுக்கு வரவேண்டியது கடமையாகும். டோக்யோவில் ஒரு மனிதனுக்கு வீட்டு வாடகை, சாப்பாட்டுச் செலவு முதலிய எல்லாவற்றிற்கும் ஒருமாதத்திற்கு முப்பது ரூபாய் போதும். பள்ளிக்கூடத்துச் சம்பளம் ஒரு வருடத்திற்கு ரூபாய் 87—8—0. இன்னும் மற்ற விஷயங்கள் ஏதேனும் தெரிய வேண்டுமானால் டோக்யோ மாரைன் இஞ்சினீரிங் காலேஜ் ப்ரின்ஸிபாலுக்காவது, அல்லது அடியிற்கண்ட என்மேல் விலாசத்திற்காவது கடிதம் எழுதித் தெரிந்து கொள்ளலாம்."

இவருடைய தற்கால மேல்விலாசம்

K. S ராமச்சந்திர, 262A Swiss Buildings, on (Bluff) San Francisco., U. S. A. என்பதாம்.

---

பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா
திழிந்தவை காமுறூ மீப்போல்—இழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினார்க் கென்னுருந் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச் சொற்றேர்வு. —நாலடி.

## "இலட்சுமய்யகாரு"

கவர்னர் கௌன்ஸில் முதல்மெம்பராயிருந்த ஆனரபில் ஸர் ஜான் அட்கின்ஸனுடைய பட்லர் "சவுத் இந்திய அப்ஸர்வர்" என்னும் இங்கிலிஷ் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தின் சில முக்கியபாகங்கள் கீழே மொழி பெயர்த்தெழுதப்பட்டிருக்கின்றன:—

"நான் ஒரு சாதாரண நாட்டுப் பறையன். இப்போது நான் ஆனரபில் ஸர் ஜான் அட்கின்ஸனின் பட்லராயிருக்கிறேன். 25 வருஷங்களுக்கு முன் காட்டு மிருகம்போல் முட்டாளாய் இருந்தேன். படிப்பும் புத்தியும் எனக்கு அப்போது கிடையாது. ஸர்ஜான் அட்கின்ஸன் வீட்டு லஸ்கராக 1892-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ந் தேதி 6 ரூபா வேலையில் அமர்ந்தேன். லேடி அட்கின்ஸன் எனக்குப் படிப்பும் வேலையும் கற்றுக்கொடுத்தார். காலக்கிரமத்தில் என் சம்பளத்தை உயர்த்திக் கடைசியாய் 25 ரூபா சம்பளத்தில் தங்களுக்கு பட்லராக ஏற்படுத்தினார்கள். நான் என் கிராமத்தை விட்டபோதே என் கீழ்ச்சாதியும் போய் விட்டது. என் ஊரில் என்பேர் லச்சிகாடு. ஆங்கிலேயரிடம் வேலைக்கு அமர்ந்த பின் இலட்சுமய்யா என்ற பெயருடையவன் ஆனேன். இப்போது எனக்கு ஆந்திர பத்திரிகை வருகிறது அது எனக்கு இலட்சுமய்யகாரு என்னும் மேல்விலாசத்துடன் வருகிறது. 1913ஆ ஜனவரிமீ 9உ ஸர் ஜான் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் மெம்பர்களுக்கு ஒரு விருந்து செய்தார். அப்போது ஆனரபில் மிஸ்டர் கோகலேயை "நீர் பறையன் செய்த சாப்பாட்டைச் சாப்பிடுவீரா, அல்லது பிராமணனே சமையல் செய்யவேண்டுமோ?" என்று எழுதிக் கேட்டார். அதற்கு அவர் "நான் காய்கறி மாத்திரம் தின்பவன் யாரானாலும் சுத்தமாய்க் காய்கறி சமைத்துப்போட்டால் சாப்பிடுவேன்" என்று பதில் எழுதினார். அனேக சுதேசப் பிரபுக்கள் ஐரோப்பியரைக் காணவருவார்கள். அப்போது அவர்கள் சாதி பேதத்தைக் கவனிப்பதில்லை. நான் அவர்கள் வீட்டுக்குப் போனால் வீதிவாசப்படி யண்டேயும் வரவொட்டார்கள். இப்போது இப்படிப்பட்ட சாதிபேதம் முக்கால் வரையில் குறைந்துவிட்டது. மிகுந்ததும் நாளடைவில் போய்விடும்".

## பழமொழி விளக்கம்

**தன்வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.**

1. மண்ணுலகிற் பிறர்குடியை வஞ்சனையிற்
கெடுப்பதற்கு மனதினாலே
உன்னிடினு முரைத்திடினு மவன்றானே
கெடுவனென்ப துண்மையன்றோ
தென்னவன்சோழன்பணியுந் தண்டலைநீ
ணெறியாரே தெரிந்துசெய்யுந்
தன்வினைதன்னைச்சுடவோட்டப்பம்வீட்
டைச்சுடவுந் தான்கண்டோமே.

**உயரவுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.**

2. பார்க்குளறி விருந்தாலும் படித்தாலுங்
கேட்டாலும் பணிந்துவேத
மார்க்கமுட னடந்தாலுஞ் சிறியவர்க்குப்
பெரியவர்த மகிமையுண்டோ
ஆர்க்குமருங் கதியுதவுந் தண்டலையா
ரேசொன்னே னாகாயத்தில்
ஊர்க்குருவி தானுயரப் பறந்தாலும்
பருந்தாகா துண்மைதானே.

**ஈனர் முன்னுக் கொன்றுயிருந்து பின்னுக்கொன்றாய் நடப்பர்.**

3. சொன்னத்தைச் சொல்லுமிளங்கிள்ளையென்பார்
தண்டலையார் தொண்டுபேணி
இன்னத்துக் கின்னதெனும் பகுத்தறிவொன்
றில்லாத ஈனரெல்லாந்
தன்னெஞ்சத் தக்கவுடன் காணுமுன்
முறைபேசிச் சாடைபேசி
முன்னுக் கொன்றாயிருந்து பின்னுக்கொன்
றாய்நடந்து மொழிவர்தாமே.

**கோடாலிக்காம்பே குலத்துக்குக்கேடு.**

4. கோடாமற் பெரியவர்பா னடப்பதன்றிக்
குற்றமுடன் குறைசெய்தோர்கள்
ஆடாகிக் கிடந்தவிடத் ததன்மயிருங்
கிடவாம லழிந்துபோவார்
வீடாநற் கதியுதவுந் தண்டலையா
ரேசொன்னேன் மெய்யோ பொய்யோ
கோடாலிக்காம்பே தன் குலத்தினுக்குக்
கேடான கொள்கைதானே.

**பசுவைக்கொன்று செருப்பைத் தானங் கொடுத்தல்.**

5. விசையமிகுந் தண்டலையார் வளநாட்டில்
ஒருத்தர்சொல்லை மெய்யாவெண்ணி
வசைபெருக அநியாயஞ்செய்துபிறர்
பொருளையெல்லாம் வலியவாங்கித்
திசைபெருகுங்கீர்த்தியென்றுந் தன்மமென்றுந்
தானமென்றுஞ் செய்வதெல்லாம்
பசுவினையேவதைசெய்து செருப்பினைத்தா
னங்கொடுக்கும் பண்புதானே.

—தண்டலையார்சதகம்.



## பௌருஷேயகுல திலகர்கள்

### ஸ்ரீமான் மார்க்கசகாய ஆச்சாரியார்

**ஸ்ரீ அந்தியாபக-லிங்காச்சாரியார், கணியம்பாடி**

கரிகாற்சோழனால் தன் புத்திரரில் ஆதொண்டனுக்குக் கொடுக்கப்பட்ட இத்தொண்டமண்டலத்தில் வடதேசத்தி லிருந்து பல உத்தமஜாதிக்குடிகள் கொண்டுவந்து குடியேற்றப்பட்டனர். பஞ்சாளத்தாரென்னும் விஸ்வப் பிராம்மணர்களு' அவ்வுத்தமஜாதியார்களில் ஒருவகையாராவார். அவர்கள் முதலில் இத்தொண்டைநாட்டில் பரவிக் காலக்கிரமத்தில் சிறுக பிறநாடுகளிலும் போய்க் குடியேறினார்கள். அவர்கள் அவ்வந் நாட்டு அரசர்களால் தந்நாட்டிலுள்ள தேவாலயங்களில் சிற்பாசாரிகளாக அமர்த்திக்கொள்ளப்பட்டவர்கள். இவர்களிற் பெரும்பாலார் இத்தொண்டமண்டலத்தின் மேற்கிராச்சியமாகிய படைவீட் டிராச்சியத்தில் நிலைத்து, அவ்விராச்சியத்தை யாண்டிருந்த சம்புகுலத்தரசர்களால் ஆதரிக்கப்பட்டார்கள். அவர்களில் ஸ்ரீ ஜகனாதாசாரிய உடையார் இவ்விராச்சியத்திலுள்ள விஸ்வப்பிரம்ம சமயத்தாருக்கெல்லாம் குருவாயிருந்து சமயவிசாரணை நடத்திவந்தார். அக்காலத்தில் சைவ வைணவ சமயங்களைப்போல் விஸ்வப்பிரம்ம சமயமும் அரசன் முதல் பலஜாதியாராலும் தழுவி நடத்தப்பட்டது. தொண்டமண்டலம் சோழர்களால் ஜெயித்துக் கொள்ளப்பட்டதன்மேல் சைவ வைணவ சமயங்கள் பெருகிவர விஸ்வப்பிரம்ம சமயம் அருகிவிட்டது. படைவீட்டில் ஸ்ரீ ஜகனாதாசாரிய உடையாரின் வமிசத்தார் பரம்பரையாய் விஸ்வப்பிரம்ம சமயத்தாருக்கு குருவாயிருந்து சமயாசாரவிசாரணை நடத்திவந்தார்கள். சம்புகுலத்தரசர்கள் படைவீட்டைவிட்டு காஞ்சிபுரம் போய்ச் சேர்ந்தபிறகு சிலகாலத்தில் அரசிழந்துவிடவே படைவீடு பலவேறு சிற்றரசர்களால் கைப்பற்றி யாளப்பட்டு கடைசியில் வேலூருக்கடங்கிவிட்டது. அதிலிருந்த ஷை குருவின் வமிசத்தாரும் அதைவிட்டு பல குடும்பங்களாகப்பிரிந்து பல வேறிடங்களுக்குப்போய் தீக்ஷாதிகாரிகளாய் விட்டார்கள். அவர்களில் ஒரு குடும்பத்தார் வேலூரிலும், ஒரு குடும்பத்தார் ஆரணியிலும், ஒருகுடும்பத்தார் புதுக்கோட்டையிலும் நிலைத்தார்கள். புதுக்கோட்டையிலிருந்த குடும்பத்தில் அருகிவிட்ட விஸ்வப்பிரம்ம சமயம் மீண்டும் தலையெடுத்து பெருகுதற்குக் காரணமாய் ஸ்ரீமான் மார்க்கசகாய ஆச்சாரியார் தோன்றினார். வேலூரிலும் ஆரணியிலும் இருந்த குடும்பங்களும் ஒன்றன்பின்னொன்றாய்ச் சந்ததியில்லாமல் நின்று விட்டன.

ஸ்ரீமான் மார்க்கசகாய ஆசாரியார் பிறந்தகாலம், இத்தேசத்தை கர்நாடக நவாப்புகள் அரசாண்டகால இறுதியாகும். அதாவது ஏறக்குறைய இன்றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னாகலாம். இவர்பிறந்து சிறு பிராயத்திலேயே தன் தந்தையாரிடம் வடமொழி தென்மொழி முதலிய பாஷைகளில் நன்கு பயின்று யுக்தவயதில் உபநயனம் செய்யப்பெற்று, பல ஆண்டுகளாக வேதாகம சாஸ்திரபுராண இதிகாசங்களில் பயின்று எல்லாவித்தையிலும் வல்லுநராய்த் தக்க வயதில் கிருகஸ்தாச்சிரமத்துக்குரிய மணம்புரிந்து தீக்ஷாதிகாரம்பெற்று இந்நாட்டின் பலபாகங்களில் சஞ்சரித்து சமயாசாரக் கிரியைகளைப் போதித்துவந்தார். இவர் காலத்தில் இந்நாட்டின் பற்பல பாகங்களிலும் வலங்கை இடங்கை கட்சி பேதத்தால் அடிக்கடி சண்டைகள் நடந்தன. அப்படிப்பட்டகாலத்தில் இத்தேசத்திலுள்ள விஸ்வப்பிரம்ம சமயத்தாரெல்லாம் சமயப்பற்று மிகுதியும் உடையவர்களாயிருந்தபோதிலும் இப்போதுள்ளபடி ஒரே வகுப்புக்குள் பல சில்லரைக்கட்சிகள் அப்போதில்லாமையாலும் அவரது மனோதிடத்தாலும் செல்வாக்காலும் அவர் போதித்துவந்த உபதேசங்களையும் ஆசாரக்கிரமங்களையும் விஸ்வப்பிரம்ம சமயத்தாரெல்லாம் ஒருமனதாய் விசுவாசித்து நடக்கலானார்கள். சிவாசாரத்தை யனுசரித்து சிவதீக்ஷாதிகாரிகளிடம் இலிங்கதாரணம் செய்துக்கொண்டவர்கள் நீங்க, மற்றெல்லாரும் வைதிகாசாரத்தை யனுஷ்டிக்கவேண்டுமென்று போதித்துவந்தார். இவர் வைதிகாசார குடும்பத்தைச்சேர்ந்தவரும் வைதிகாசார தீக்ஷாதிகாரியுமானதால் தம் மதாபிவிருத்திக்காக இவ்விதம் போதித்து வந்தார். திராவிட தீக்ஷாதிகாரிகளில் இவர் வைதிகாசாரமுடையவர். இவர் பிரதேசங்களில் சஞ்சாரம் செய்யும்போதெல்லாம் குடும்பத்தோடு செல்வதுமல்லாமல், நாலைந்து மாணாக்கர்களும் இரண்டொரு சேவகர்களும் இவருடன் வருவதுண்டு. இவர் தங்கிய விடுதிகளில் சதா வேதபாராயணமும் சாஸ்திரவிசாரணையும் நடந்துக்கொண்டே இருக்கும். (தொடரும்)

## ஆச்சாரி - ஆஸாரி

ஆச்சாரிப்பட்டத்திரிபு சம்பந்தமாக கனம் சென்னைக் கவர்னரவர்கள் திருச்சமுகத்திற்கு அனுப்பப்பட்ட தந்திகள் :—

### 7. Visvabrahmins of Koyampalli, Karur.

Visvabrahmins of Koyampalli Karur in meeting assembled respectfully request reconsideration of Order of Government 659 Public 26 May 1913 changing their caste title Achari in use by them from time immemorial into Asari, a meaningless and incorrect term. They fear that Government's action taken without consultation of their community will result in interference of their long-standing sacred social religious heritage and in lowering them in public estimation. They pray earnestly for the speedy rectification of the slur cast on their community and the recognition of their legitimate title Achari.

### 7. கரூர் கோயம்பள்ளி விஸ்வப்பிராம்மணர்

கரூர் கோயம்பள்ளி விஸ்வப்பிராம்மணர் சபைகூடி, அனாதிகாலமாய்த் தாங்கள் வழங்கிவந்த ஆச்சாரியென்னும் ஜாதிப்பட்டத்தை அர்த்தமற்ற பிழைபாடுடைய ஆஸாரியென்று மாற்றிய 1913-வது௵ மேமீ 26௳ 659-வது பப்ளிக் நெம்பர்கொண்ட கவர்ன்மெண்ட் ஆர்டரைப் புனராலோசனைக்குக் கொண்டுவரவேண்டுமென்று வணக்கமாய் வேண்டிக்கொள்ளுகிறார்கள். தங்கள் சமூகத்தாருடைய ஆலோசனையில்லாமலே கவர்ன்மெண்டார் மேற்கொண்ட இந்நடக்கையானது, தாங்கள் நெடுங்காலமாய்க் கொண்டிருந்த வைதிக லௌகிக மதபாத்தியதையைக் கெடுப்பதாகவும், பொதுஜனமதிப்பில் தங்களைக் குறைப்பதாகவும் இவர்கள் அஞ்சுகிறார்கள். தங்கள் சமூகத்தின்மீது வீழ்த்தப்பட்ட பழியைச் சீக்கிரமே ரத்துசெய்து, தங்களுக்கு உரிமையான தாகிய ஆச்சாரிப்பட்டத்தை அங்கீகரிக்கும்படி மிகவும் வேண்டுகிறார்கள்.

## நமது வாசகர்கள்

(கடிதக்காரர் தங்கள் அபிப்பிராயங்களுக்குத் தாமே ஜவாப்தாரிகளாவர்)

### 1. திருவாரூர் திருவள்ளுவர் மடாலயம் சாதுமகா சங்கம்

6-5-14௳ யில் திருவாரூர் தெற்கு ரத வீதியின்கண் ஔவையார், திருமூலநாயனார், திருவள்ளுவ நாயனார் இவர்களின் திருவுருப்படங்களைப் பிரதிஷ்டை செய்து அவர்களின் திவ்ய திருநாமங்களைச் சிந்தைசெய்து பஜனை செய்துவருவதின் பொருட்டு சாது மஹா சங்கம் என ஓர் சபையும் திருவள்ளுவர் மடாலயம் என ஓர் மடாலயமும் ஸ்தாபிதம் செய்யப்பெற்றன. அதில் திருவள்ளுவர் வாசகபுத்தகசாலை என ஒரு லைப்ரேரி ஒன்றும் ஸ்தாபிக்கப்பெறும்.

அறஞ்செய விரும்பு என்பதை அனுதினமும் நினைந்து தத்தமக்கியன்றவாறு பொருளுதவி புரிந்தாதரித்து அடியார்களின் சத்கைங்கர்ய வருடோற்சவ மகா குருபூஜையை ஆண்டுகள் தோறும் நடத்தி அருட்பெருங்கடலாகிய அண்ணலின் அருளினைப்பெற்று வாழ்ந்து வருவீர்களென்று பன்முறையும் பிரார்த்திக்கின்றனன்.

சங்கத்தின் நோக்கமாவது :— அடியார்களுக்குத் குருபூஜாகாலத்தில் அமுதருத்தி வைத்தலும், கோடைகாலத்தில் தண்ணீர்ப்பந்தல் வைத்து தாகசாந்தி செய்வித்தலும் பொதுஜனானுகூல நீதிபோத உபந்நியாஸம் புரிதலும், அவ்வப்போது சன்மார்க்க நீதிபோதமடங்கிய துண்டுப் பத்திரிகைகள் வெளியிடுதலுமாம்.

இப்பெரும் புண்ணியத்திற்குப் பொருளுதவிசெய்ய விரும்பும் நமது விஸ்வகுல சிரேஷ்ட கனவான்கள் தபால்மூலமாய் அனுப்பி ஷை புண்ணிய பலனை அடைவீர்களெனக் கோருகிறேன்.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி ஜோதிஷர்
ஆரியன் சோதிடசாலைத் தலைவர், திருவாரூர்.

### 2. தூத்துக்குடியார்க்கோரு வேண்டுகோள்

1. திருமந்திர நகரமென்னும் தூத்துக்குடியில் நமது விஸ்வகர்ம குலாபிமானிகள் அனேகரிருக்கின்றார்கள். அவர்களிருந்தும் இதுகாலபரியந்தம் நம்குல விஷயமாக ஏதேனும் பேசுவதற்காவது நம் சுய அபிமானத்



தைக்குறித்து ஒரு காரியத்தை நிலைநிறுத்தவாவது இடமில்லாமலும், சில சமயங்களில் ஏதேனும் ஓர் வழக்கு அல்லது ஜாதிவிதிப்படி ஓர்கூட்டம் சேர்க்க வேண்டுமானாலும், இடமில்லாமல் வீட்டுத்திண்ணைதோறும் வீதிகளிலும் முட்கார்ந்து பேசத்துணிகிறார்கள். நம்மவர்கள் மனதில் இதின்தாழ்வு கிஞ்சிற்றேனும் தோன்றவில்லை. மற்ற ஜாதிக்காரர்கள் எவ்வகையிலும் கொஞ்சமாவது மனதின்கண் கவலைவைத்து தக்க முயற்சிசெய்கிறார்கள். அதை நம்மவர்கள் பார்த்துமிருக்கிறார்கள். திருமந்திர நகரத்திலிருக்கிற நம் குலாபிமானிகள் இவ்வகையில் பராமுகமாயிருப்பது என்னகாரணமோ தெரியவில்லை !

2. நம்மவர்கள் ஏறக்குறைய 700 தலைகட்டுக்கு மேலிருக்கின்றனர். இவர்களில் செல்வச் சிறப்புற்றோங்கிய கனவான்களும் தனவான்களும் அரைப்பங்கு இருக்கிறார்கள். அதிலும் ஆபீஸ் உத்தியோகத்தில் பெரும்புகழடைந்த கனவான்களும் அனேகரிருக்கிறார்கள். இவர்கள் வாரம் ஒருமுறை நம் குலாபிமான விஷயத்தைப்பற்றி எடுத்துப்பேசக்கூடாதா? சிறுவர்களைச் சீர்திருத்தவேண்டிய முயற்சி செய்யக்கூடாதா? சபை ஒன்று ஏற்படுத்தி அதில் பலவித சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்துவந்தால் நம்மவர்களுக்கு எவ்வளவு நன்மையைக்கொடுக்கும் ! அத்துடன், சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையாரால் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகையை வாசித்தால் நம்மவர்கள் என்ன ஆனந்தம்கொள்வார்கள் !

3. நம்மவர்கள் திருவுளம்பற்றி ஆச்சாரி என்ற பட்டஆபத்தைப்பற்றி இனியாவது நினைத்துப்பார்த்து நடக்கவேண்டுகிறேன். நம்மவர்களுடைய நிலைமையைப் பற்றி எத்தனையோ குறைகள் சொல்லலாம். அவற்றையேபாராட்டிக் காலம்கழிப்பது சிலாக்கியமாகாதென்பது திண்ணம். எந்த ஜனசமூகத்திலும் குறைகளிருக்கின்றன. ஆகிலும் ஒவ்வொரு ஜாதியாரும் மதத்தினரும் தேசத்தினரும் சேர்ந்து கான்பரன்ஸ் கூடவில்லையா? அப்பேர்ப்பட்ட கான்பரன்ஸ்களை நம்மவர்கள் போய்ப் பார்க்கவில்லையா? மற்றவர்கள் எவ்வித கஷ்டப்பட்டு கான்பரன்ஸ் நடத்தவேணுமென்று அவரவர்கள் எடுத்தகாரியம் முற்றுப்பெற ஆவல்கொள்கிறார்கள். நாம் போய்ப்பார்த்து நாமும் அவ்விதம் நடக்கவேணுமென்று சொல்லுவதே தவிர இதுவரையும் அவ்விதக் கான்பரன்ஸ் கூடவாவது நடத்த முயலவாவது செய்தாரில்லை. அவ்வித முயற்சி எடுத்தால் நம்மவர்கள் எவ்வகையிலும் தாழ்ந்துவிடமாட்டார்கள். மற்றவர்களைப்பார்க்கிலும் ஒருபங்கு ஜாஸ்தியாகவே நடத்துவார்கள். இவர்கள் ஓர்வகையில் புத்தியை நிலைநாட்டிக் கான்பரன்ஸ் நடத்தவேணுமென்று நிச்சயப்படுத்துங் காலத்தில் ஆகாதகாரியம் ஒன்றுமேயில்லை. நம்மவர்களைக்கெடுப்பது அசட்டை.

4. நம் குலாபிமானிகள் சென்னை, திருச்சி, ஈரோடு, கோயமுத்தூர், சித்தூர், தஞ்சை, குடந்தை முதலான இடங்களில் குலசம்பந்தமாய்ப் பல காரியங்கள் நடத்திவருவதுபோல்,நம் திருமந்திர குலாபிமானிகள் இனியாவது நடக்க முழுமுதற்கடவுளாகிய எம்பிரான் நம் குலாபிமானிகள் திருவுள்ளம்புகுந்து ஈடேறச்செய்யப் பிரார்த்திக்கவேண்டும்.

தூ. சு. கதிரேசன் ஆச்சாரி.

### 3. விஸ்வகர்மச் சிறுவர் வித்யாநிதி.

இந்நிதியை ஸ்தாபித்த சென்னைச் சபையார்க்கு நமது ஜாதியாரெல்லோரும் மிகவும் நன்றிபாராட்டவேண்டியவர்களா யிருக்கிறோம். இங்கிலீஷ் படித்துத்தான் நமது குலத்தார் மேன்மையடைய வேண்டும் அதின் செலவோ மிகவு மதிகமாயிருக்கிறது. படிக்கக்கூடிய பிள்ளைகளோ ஏழைக்குடும்பங்களில் தான் காணப்படுகிறார்கள். அவர்கள் சொந்த வருவாயைக் கொண்டு வாசித்து முன்னேறுவது கூடாமையாயிருக்கிறது. இவ்வேழைப் புத்திசாலிப்பிள்ளைகளைக் கைத்தொழில்களிலேயே நுழைத்து, அவர்களுடைய புத்தி தீக்ஷண்யம் மங்கிமறைய விட்டுவிடலாமா? தகுந்த சகாயம் காலமறிந்து கொடுக்கப்பட்டிருந்தால், நமது குலப்பிள்ளைகளிலெத்தனையோ பேர்கள் பி. ஏ. பி. எல். படித்து வக்கீல்களாகவும், பி. ஸி. இ. படித்து இஞ்சினீர்களாகவும், எம். பி. ஸி. யம். படித்து டாக்டர்களாகவும் இன்னும் மற்ற உத்தியோகஸ்தர்களாகவும் பதவி பெற்று குலத்தின் பெருமையை எவ்வளவோ அதிகப்படுத்தியிருப்பார்கள். இனிமேலாவது, அவ்விதப் பிரகாசத்தைநமதுகுலம் அடையச்செய்யவேண்டாமா?நம்மிலுங் கேவலஸ்திதியிலிருக்குஞ் சாதியார் தமது ஜாதிப் பிள்ளைகளுடைய வித்தியாபிவிருத்திக்கு உதவி செய்யவில்லையா? அந்த ஜாதிகளெல்லாம் கல்விவந்தர்களோடு கௌரவமாய் வாழவில்லையா? நாம்மட்டும் என் இன்னு

மின்னும் பழங்கதைகளைப் பேசிப்பேசிப் பாழிலேயே கிடக்கவேண்டும்? ஆதலால், ஷை நிதிக்கு ஒவ்வொருவரும் கூடுமானவரையிலுஞ் சகாயஞ்செய்து, அதற்குப் பெரும்பொருள் திரட்டிக்கொடுத்து, அது பலருக்கும் உதவக்கூடிய நிலைமைக்குக் கொண்டுவரக் கடவோமாக.

கூவம்-சாமியாச்சாரி.

## 4. சிற்ப கலாசாலை

இவ்விஷயமாக, சென்ற 5, 6-வது சஞ்சிகைகளிலெழுதப்பட்டவற்றை நமது நண்பர்கள் வாசித்திருக்க வேண்டும். என்றாலும், அதைப்பற்றிய யோசனைகள் சொல்வதற்கு மற்றெவரும் இதுவரையிலும் முன்வாராதது மிகவும் விசனிக்கத்தக்கதே! நமது குல ஈடேற்றத்திற்காகச் செய்யப்படவேண்டிய காரியங்கள் அநேகமிருக்கின்றன. அவற்றைப்பற்றி நமது 'விஸ்வகர்மன்' பத்திரிகை ஒவ்வொன்றாய் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறது. வாசிக்கும் நண்பர்கள் தாம் தாம் எந்தெந்த காரியங்களில் துணை செய்யலாமோ அந்தந்த காரியங்களைத் தாம் எடுத்துக்கொண்டு, அவற்றைத்தொடர்ந்து எழுதவேண்டியவற்றை யெழுதி, செய்யவேண்டிய பிரயத்தினங்களைச் சுட்டிக்காட்டித் தாங்கள் முன்னின்று நடத்தவேண்டும். அப்படிச்செய்யும் பக்ஷத்தில், ஒவ்வொரு காரியத்திற்கும் அதிகாரிகளாய்ச் சிற்சிலர் ஏற்படுவார்கள். அந்த காரியம் அவர்களுடைய கவனத்தின் கீழ் நடைபெறும். இங்ஙனம் பலகாரியங்களில் பலர் கவனம் வைத்துழைத்தால், சீக்கிரத்தில் பல காரியங்களும் முற்றுப்பெறும். இதுவே குலோத்தாரணஞ் செய்வதற்கு தக்க சாதனமாகும். அப்படியின்றி, பத்திரிகையில் வாசிக்கும் விஷயங்களை அவ்வளவிலேயே விட்டுவிட்டால், குலநிலைமை எப்படி மேம்படும்? சிற்ப கலாசாலை யென்னும் விஷயம் சிற்பத்தொழிற்காரரைச் சேர்ந்ததாகும். ஆதலால், சிற்ப கலாசாலையைப்பற்றிச் சிற்பிகளுடைய அபிப்பிராயங்கள் வேண்டும். அக்கலாசாலையை எங்கு ஏற்படுத்தலாம், எப்படி ஏற்படுத்தலாம், எவ்வளவு செலவு பிடிக்கும், உபாத்தியாயர்களா யிருக்கத் தக்கவர்கள் யாவர், மாணவர்களாய்ச் சேர்க்கப்படத்தக்கவர் யாவர், இவர்களிடம் சம்பளம் வாங்குவதா இல்லையா, செலவுப் பணத்திற்கு வருவாயேது, இதைப் பரிபாலிக்கத்தக்கவர் யாவர், ஒரு பாடசாலை போதுமா அநேகமிருக்க வேண்டுமா—என்பது போன்ற விபரங்களை ஆராய்ந்து அறிந்தோர் எழுதுவார்களென்று ஆவலோடு நோக்கி யிருக்கின்றேன்.

கா. ஸ்ரீநிவாசபத்தர்.

## 5. சபைகளின் முக்கிய லக்ஷணங்கள்.

சபை, சங்கம், சமாஜம் என்னும் பதங்களெல்லாம் கூட்டத்தையே குறிப்பிடுகின்றன. ஆதலால், சபையென்றும் சங்கமென்றும் சமாஜமென்றுஞ் சொல்லப்படுமிடங்களில் கூட்டம் அதாவது கூடுதல், சந்திப்பு, இருக்கவேண்டும். அப்போதுதான் சபை சங்கம் சமாஜம் என்பது போன்ற பெயர்கள் பொருந்தும். இவ்விதச் சந்திப்பில்லாத சபைகள் வாசாமாத்திரத்தில் சபைகளாயிருக்குமே யொழிய வாஸ்தவத்திலிருக்கமாட்டா. எனவே, வாஸ்தவமாக சபைகளை நடத்த உத்தேசிப்பவர்களெல்லாம் சந்திப்புக்குச் சௌகரியங்கள் தேடி யமைக்கவேண்டும். எந்தெந்த ஏற்பாடுகளிருந்தால் சபையைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி சந்திக்கக் கூடுமென்பதை அதிகாரிகள் நன்றாக ஆலோசித்து, அந்த ஏற்பாடுகளைச் செய்து அமைப்பார்களானால்தான் சபையார் ஒருவரை யொருவர் சந்திக்க நேரிடும். அப்படி நேரிட்டாலொழிய சபையானது பலருடைய அபிமானத்திற்கும் ஆதாவுக்கும் உரியதாகி மேன்மேலும் விருத்தியடையமாட்டாது. இவ்வித சந்திப்பில் நித்தியசந்திப்பு விசேஷமானது. இதற்காக, முக்கியமாய் ரீடிங்ரூம் என்னும் வாசகசாலைவேண்டும். அதை யுத்தேசித்தே நமது சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார் ரீடிங்ரூம் என்றும் லைப்ரெரியென்னும் வாசகசாலையென்றும் நமது சபாமண்டபத்தில் ஸ்தாபித்திருப்பதாகத் தெரிகிறது. இதனாலேதான் தினமும் பலர் ஒருவரை யொருவர் சந்திக்க வாய்க்கிறது. மாதமொன்றுக்கு 500 முதல் 600 க்கு அதிகமான பேர்கள் சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்வதாக பத்திரிகையாலறிகிறோம். இதனால் சராசரியில் தினமொன்றுக்கு சுமார் 17 பேர்களுக்குக் குறையாமல் ஒன்றுசேருவதாகத் தெரிகிறது. இவ்வளவுபேர் தினமுஞ் சந்திப்பது வீண்போகுமா? சபையின் அபிவிருத்திக்கு பெருஞ் சாதகமாயிருக்குமென்பதில் தடையில்லை. ஆனபடியால், சபைகளுக்கு இன்றியமையாததாகிய இந்த லக்ஷணத்தைப் பெறும்படியாக, நமது ஜாதிச்சபைகளாக ஆங்காங்கேற்பட்டிருப்பவைகளின் அதிகாரிகளெல்லாம் கைகூட்டிவைப்பார்களாக. இதற்குக் கட்டாயம் வேண்டியது பொதுஸ்தானம். சபையெனப்படுவது தானேற்பட்ட ஊரிலுள்ளாரும் மற்றவர்களும் விரும்பக்கூடிய தக்க இடத்திலிருக்கவேண்டும். பொதுக்காரியங்களுக்காக ஏற்படுவதாகையால், சபையெனப்படுவது குடித்தனஞ் செய்யும் வீடுகளிலும், முட்டுமுடுக்குகளிலு மிருக்கலாகாது. இந்த நியமங்களை யநுசரித்து நடக்குஞ் சபைகள் கட்டாயமாக விருத்தியடையும்.

மதுராந்தகம்-கோவிந்தாச்சாரி.

## 6. நமது சபைத் தலைவரின் பழனி வரவேற்பு

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் தலைவராகிய பிரம்ஹஸ்ரீ S. கந்தஸ்வாமி ஆச்சாரியார் அவர்கள் தம்பதி சமேதராயும் இஷ்டமித்திர பந்துக்களுடனும் இராமேஸ்வர முதலிய ஸ்தலயாத்திரை செய்துகொண்டு பழனிக்கு வந்தவுடன் பிரம்ஹஸ்ரீ V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார் முதலானைய விஸ்வப்ராம்ஹண குலாபிமானிகளெல்லோரும் அன்னவரின் வரவேற்று வந்தனோபசாரமளித்ததுடன் தகுதியானவிடுதியும் அமைத்துக் கொடுக்கலானார்கள். அப்பால் நமது சபைத்தலைவருடன் V. மௌனகுருருத்திரமூர்த்தி ஆச்சாரியாரும் அதிமுயற்சி யெடுத்துக்கொண்டு "விஸ்வகர்மன்" என்னும் இப்பத்திரிகைக்கு அநேகரை சந்தாதாராகவும் சபைக்குச் சிலரை அங்கத்தினர்களாகவும் ஏற்படுத்தலானார்கள்.

பின்னர் ஸ்ரீ பழனியாண்டவர் சந்நிதானத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் சோடசாபிஷேகமுஞ் செய்வித்து சபையினுடையவும் 'விஸ்வகர்ம'னுடையவும் சபைத்தலைவருடையவும் சபையின் அங்கத்தினருடையவும் அபிவிர்த்தியானது மென்மேலும் பெருகவுண்டாக வேணுமென்கின்ற சங்கல்ப பூர்வகமாக பகவானுக்கு அர்ச்சனை ஆராதனை முதலிய நடப்பித்து, தேவஸ்தான ஆடம்பரங்களுடன் நமது சபைத்தலைவருக்கு அலங்காரபரிபட்டமுங் கட்டும்படி செய்து ஆனந்தங்கொண்டாடி வருகையில், இடும்பன் கோயில் ஆச்சாரியஸ்வாமிகளால் நமது சபையின் "ரீடிங்ரூ"முக்காக மனமுவந்து கொடுத்தருளிய "சுப்ரம்ஹண்யர் ஞானம் 200" என்னும் ஞானசாஸ்திரம் நமது சபைத்தலைவரால் வந்தனோபசாரத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டது.



ஆயக்குடிஜமீன் கணக்கன்பட்டி கிராமம் பெரிய குடித்தனம் ம-ா-ா-ஸ்ரீ பூ. ப. செல்லக்குமாரு கவண்டர் நமது சபைத்தலைவரை சந்தித்துப்பேசி தன்னூரிலும் பக்கத்து கிராமங்களிலும் உள்ள விஸ்வப்பிராம்மண ஜனங்களில் அநேகரை நமது விஸ்வகர்மனுக்குச் சந்தாதாராகச் சேர்த்துக்கொடுப்பதாகவும் விஸ்வகர்மனுக்கு வியாசதான மளித்துவருவதாகவும் வாக்களித்திருக்கின்றனர். இவ்விதம் விஸ்வப்ராம்ஹண ஜாதியார்கள்பேரில் எப்போதும் அபிமானமுடைய கனவான்கள் பலரும் முன்வந்து உதவிபுரிவார்களாகில் இவ்விஸ்வகர்ம னென்னும் புண்ணிய புருஷன் ஜெகதல மெண்டிசையும் நீடூழிகாலம் வரை நிலைநின்று தன்னுடைய போதனா ஸக்தியினால் விஸ்வப்ராமண ஜாதியார்களெல்லோரையும் முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவானென்பதற்குச் சந்தேகமேயில்லை.

அப்பால் பிரம்ஹஸ்ரீ V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார் (1) ஷையார் சகோதரர் பிரம்ஹஸ்ரீ V. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியார் (2) பேர்களும் நமது சபையின் ரீடிங்ரூமின் அபிவிர்த்திக்காக மனஸ்பூர்வமாக அடியிற்கண்ட புஸ்தகங்களை நமது சபைத்தலைவரிடம் இனாமாக அளித்தார்கள்.

விஸ்வப்ராம்ஹண மஹாஜனங்களெல்லோரையும் முன்னுக்குக் கொண்டுவரும்பொருட்டு சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் அக்கிராசனாதிபதியும் சன்மார்க்ககுணசீலரும் குலாபிமான விஷயத்தில் மிகுந்த ஊக்கமெடுத்துக்கொண்டு உற்சாகத்துடன் வேண்டிய வேலைகளைச் செய்யக்கூடியவருமான பிரம்ஹஸ்ரீ S. கந்தசாமி ஆச்சாரியார் அவர்களுக்கு தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மென்மேலும் வளர்ந்தோங்கிக் கொண்டிருக்கும்படி விஸ்வேஸ்வர பகவான் திருவருள்புரிவாராக. சுபம்.

### புத்தகங்களாவன

(1) தமிழ்-மானஸமர்மசாஸ்திரம்.
(2) கிரந்தம்-தைத்திரீயஎஜுர்வேதஆரண்யகாடகம்.
(3) கிரந்தம்-மஹந்யாசம்.
(4) இங்கிலீஷ்-இந்தியாயுத்த சரித்திரம்.
(5) தமிழ்-பாலக்கிரகதோஷ நிவர்த்தி.
(6) ஷை ஸ்ரீ கமலமூர்த்தி மௌனகுரு ஸ்வாமிகள் திருநாம சூத்திரம்.
(7) ஷை சுவாமிகள் சிவஸக்திபூஜை (36) தமிழ் வாக்கியலக்ஷணம்.

ஒட்டிவாக்கம்-ஆ. கிருஷ்ணசாமி ஆச்சாரியார்.

பழனிஸ்தலம்.

## அதிமதுரம்

### 1. ஓர் உவிலின் விசித்ர ஷரா

கொச்சி சமஸ்தானத்தில் திவான் பேஷ்காராயிருந்து பென்ஷன் பெற்று, இப்பொழுது திரிசிரபுரத்தில் வசித்துவரும் மிஷ்டர் A. சங்கரய்யாவி னுடைய சகோதராகிய மிஸ்டர் A. ராமச்சந்திர ஐயர் காலமாவதற்கு முன்பு எழுதிவைத்த உவிலில்(will) ஓர் அபூர்வமான ஷரத்து காணப்படுகிறதாம். அதாவது-"சுயேச்சையைப் பெரிதும் பாராட்டும் பிராமணர்களின் விஷயமாய், சவுண்டி, ஒத்தன், கொத்தன், காவேரி ஸ்நாநம், தசதானம் முதலியவைகளுக்காக ஒரு தம்பிடிகூடச் செலவழிக்கக் கூடாதென்று என்னுடைய வார்சுகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலே கண்ட சவுண்டி, ஒத்தன் முதலிய கர்மாக்கள் சம்பந்தமாய் செலவுசெய்யப்படும் பணத்தினால் எவ்வளவும் பயனில்லையென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். தங்களுடைய சுய நலத்தின் பொருட்டு பிராமணர்கள், இறந்துபோனவர்களின் சந்ததியாரிடமிருந்து பணத்தை உறிஞ்சிவிடுவதற்காக அவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்களேயொழியவேறில்லை. இட்டாருக்கு இட்டபலன் சித்திக்குமென்னும் முதுமொழி உண்மையே! ஒருவன் இறந்துபோனபிறகு அவனுக்காக மற்றொருவன் செய்யும் கிரியைகளால் இறந்துபோனவனுக்கு நற்கதி கிடைக்குமென்று நான் நம்பவேயில்லை. நம்முடைய முன்னோர்களைக் கௌரவப்படுத்த வேண்டுமென்பதையும் அவர்களை மறந்துவிடக் கூடாதென்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். இறந்துபோனவனைக் குறித்து வருஷத்தில் ஒருநாள் கொண்டாடி அவனுடைய கண்ணியத்திற்குக் குறைவில்லாமல் அவனுடைய சந்ததியாரும் பந்து மித்திரர்களும் நன்னடக்கையுடன் நடந்து கொள்வது போதும். ஒருபிறவியில் செய்த கர்மாக்களுக்கு ஏற்றபடி அடுத்த பிறவி சித்திக்கும். ஆதலின் ஒருவன் சந்தோஷத்துடன் சுகித்திருப்பதற்குக் காரணம் அவனுடைய செய்கைகளே யாகும்."

### 2. சாகங்களுக்கு நோயுண்டா ?

காகங்கள் அருணை வேஷாணி என்ற தம்பதிகளின் மரபிற் பிறந்தவைகள். அத்தம்பதிகளுக்குச் சம்பாதி யென்றும், ஜடாயு வென்றும் இரண்டு பறவைகள் பிறந்தன. அவைகளில் ஜடாயு என்னும் பறவை அயோத்தி மன்னனுடைய மனைவியாரான சீதையை லங்கேசனான ராவணன் அபகரித்துக்கொண்டு போனபொழுது அந்த அம்மாளை விடுவிப்பதற்காக, ராவணனுடன் சண்டை போட்டு உயிர் துறந்து விட்டது. சம்பாதியின் மரபிற் பிறந்தவைகள் கழுகுகள். ஜடாயுவின் மரபிற் பிறந்தவைகள் காகங்கள். ஒரு காலத்தில் மருதன் என்ற மகாராஜா தான் செய்து முடிக்க வேண்டியிருந்த ஒரு யாகத்திற்கு தேவர்களை வரவழைத்திருந்தார். ராவணனும் வரவழைக்கப்பட்டிருந்தான். இலங்கேசனைக்கண்டு அங்கு வந்திருந்த தேவர்கள் பயந்து, பல பட்சிகளின் ரூபங்களை யெடுத்துக்கொண்டு அந்த யாகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் யமன் காகரூபத்தை யெடுத்திருந்தார். ராவணன் புறப்பட்டுப்போன பிறகு காகரூபமெடுத்திருந்த யமன் தன் நிஜரூபத்துடன் நின்று காகங்களைப்பார்த்து ஓ காகங்களே! இன்றுமுதல் உங்களுக்கு வியாதி வராமலிருக்கும்படியாய் நான் அனுக்கிரகஞ் செய்கிறேன். மனிதர்களால் நீங்கள் கொல்லப்பட்டாலொழிய உங்களுக்கு மரணபயம் இராது என்று அனுக்கிரகஞ் செய்தார். அதனால் தான் காகங்கள் யாதொரு வியாதியினாலும் பீடிக்கப்படாமல், மற்றப் பறவைகளைவிட சௌக்கியமாய் வாழ்ந்து வருகின்றனவாம்.

### 3. சோம்பலுக்குச் சிகிச்சை.

பாரிஸ் நகரிலிருக்கும் பிரபல டாக்டரான மிஸ்டர் மார்செல் நேடியர் (Marcel Natier) என்றவர் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

"பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலும் சில மாணவர்கள் படிப்பில் அக்கரை யில்லாது சோம்பலுடன் சும்மா உட்கார்ந்திருக்கப் பிரியப்படுகிறார்கள். உபாத்தியாயர் ஒரு பையனை மிகவும் சோம்பேறி யென்று அனுபவத்தில் நிச்சயித்து விடுவாரேயானால், உடனே திறமையுள்ள வைத்தியரைக்கொண்டு அப்பையன் உடம்பை நன்றாய்ப் பரீட்சை செய்யச் சொல்லவேண்டும். அவ்வாறான பையன்களை டாக்டர்கள் பரிட்சித்துப் பார்ப்பார்களாயின், பையனுடைய மந்தத்திற்குக் காரணம் அவன் உடலின் கூறுபாட்டை என்பது தெளிவாகும். தாராளமாய்ச் சுவாசிக்க முடியாததாலும், சரிவர உடலில் இரத்த ஓட்டமில்லாததாலும், மூளையில் சில கோளாறுகள் உண்டாகி, அதனால் ஒருவித மயக்கமுண்டாவதாலும், சில பையன்கள் சோம்பேறிகளாய் விடுகிறார்கள். 9 வயதாகியும் ஓரெழுத்துகூட அறியாதிருந்த சில பையன்களைப் பரீட்சித்துப் பார்த்ததில், மேலேகண்ட கோளாறுகள் அவர்கள் உடலிற் காணப்பட்டன. ஆகையால், சோம்பேறிப் பையன்களைப் பிரம்பு கொண்டடித்து மந்தத்தனத்தைப் போக்க முயலாமல், சரியான வைத்திய சிகிச்சை செய்வதே நலம்."



## விசேஷ வர்த்தமானம்

**ஈ முட்டையிடுதல்.**—கோடைக்காலத்தில் ஈ நான்கு முறை முட்டையிடுமென்றும், ஒவ்வொரு முறையும் 80 முட்டைக்குக்குறையாதிடுமென்றுஞ் சொல்லப்படுகிறது.

* *

**நான்குகண் குழந்தை.**—சில தினங்களுக்குமுன் பாலக்காட்டை யடுத்த காயல்மன்னம் என்னுமூரில் ஒரு ஸ்திரீக்கு நான்கு கண்ணுள்ள ஒரு குழந்தை பிறந்ததாம்.

*
* *

**உப்புக் குன்று.**—சாண்டோமிங்கோ என்னு மிடத்தில் ஒரு பெரிய பளிங்கு உப்புமலை யிருக்கிறது. அதன் நீளம் நான்கு மைல். அதில் ஒன்பதுகோடி டன் உப்பு நிறைந்திருக்கிற தென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

*
* *

**சுருட்டுப்பிடிக்கக்கூடாது.**—ஸ்கூல் கட்டடங்களிலும் விளையாடு மிடங்களிலும் பிள்ளைகள் சுருட்டு முதலியவைகளைப் பிடிக்கக் கூடாதென்று கண்டிப்பாய் உத்தரவு செய்யும்படியாய், வித்யா டைரக்டரை கவர்ன்மெண்டார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்

*
* *

**மூட்டுப்பூச்சிக்கு மருந்து.**—மூட்டுப்பூச்சிகள் பதுங்கியிருக்கு மிடங்களிலெல்லாம் தேங்காயெண்ணெயை ஒரு சிறு துரும்பால் எடுத்து விட்டால் அவை விரைவில் அழிந்துபோமென்று ஒரு டாக்டர் கூறுகிறார்.

*
* *

**தோலுரிக்கும் மனிதன்.**—ஐரோப்பா தேசத்தில் 60-வயதுடைய ஒருவர் வருஷந்தோறும் கோடைகாலத்தில் தோலுரிக்கப்படுகிறாராம். தோலுரிக்குமுன் அவர் பலவீனராய்க் காணப்படுகிறாரென்றும், தோலுரிக்கப்பட்டபின் 16 வயது வாலிபன்போலத்தோன்றுகின்றாரென்றுஞ் சொல்லப்படுகிறது.

*
* *

**தலைகீழான மூளை.**—இங்கிலாந்துதேசத்தில் வசிக்கும் ஒரு பையனது மூளை தலைகீழாக விருக்கின்றதாம். அவன் எதனையும் தலைகீழாக விருப்பதாகப் பார்க்கிறானம்; நாம் இடப் புறத்திலிருந்து எழுதுவதுபோலெழுதாது வலப்புறத்திலிருந்து எழுதுவதோடு எழுதுவதை யெல்லாம் தலைகீழாகவே யெழுதுகிறானும்.

*
* *

**பால் ஸ்நானம்.**—அமெரிக்காவிலுள்ள பல ஸ்திரீகள் ஸ்நானத்திற்குப் பாலை உபயோகித்துவருகிறார்கள். நியூயார்க் என்ற நகரில் பால் ஸ்நான கட்டங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. பால் ஸ்நானம் செய்தல் அழகை அதிகரிக்கச் செய்கிறதென்று அவர்களுக்குள் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

**மனிதருக் கிரையாகும் மிருகங்கள்.**—பம்பாய், கல்கத்தா, சென்னை முதலிய மூன்று பட்டணங்களிலும் மாமிசத்திற்காக 1912 ம் வருஷத்தில் கொல்லப்பட்ட மிருகங்களின் விவரம்:—

| | |
|---|---|
| ஆடுகள் | 12,15,438 |
| மாடுகள் | 1,21,872 |
| கன்றுகள் | 11,024 |
| பன்றிகள் | 2,860 |

*
* *

**நாய்முகக் குழந்தை.**—சில தினங்களுக்கு முன் பிச்சு டெல்லி யென்னு மூரில் ஓர் ஐரோப்பிய ஸ்திரீ நாய் முகத்தோடு கூடிய ஒரு குழந்தையைப்பெற்றாள். அப்படிப் பெற்றதற்குக் காரணம் அவள் கர்ப்பமாயிருந்தபொழுது ஒரு நாய்க்குட்டியைப் பிரியமாக வளர்த்து அதை விட்டு எப்பொழுதும் பிரியமாவிருந்ததேயாம்.

*
* *

**ருதுவானபின் விவாகம்.**— ஆசாரச்சீர்திருத்த விஷயமாய்ப் பத்திரிகைகளுக் கெழுதி வரும் குவிகா என்னும் பெயர் கொண்டுள்ள ஒருவர், ருதுவானபின் பெண்களை விவாகஞ் செய்வதுபற்றி அபிப்பிராயங் கூறுமாறு சிலரைக் கேட்டிருந்தனர். 91 பேர் ருதுவானபின் பெண்களுக்கு விவாகஞ் செய்யலாமென்றும், 11 பேர் அவ்வாறு செய்வது கூடாதென்றும் தெரிவித்தனர்.

*
* *

**ராக்ஷஸக் குழந்தையோ ?**— அமெரிக்காவிலுள்ள கானடா தேசத்தில் ஒரு குழந்தை பிறந்து 26 மாதமாகிறது. இதற்குள் அதன் கனம் 127 ராத்தல்களும், மார்பகலம் 40 அங்குலங்களும் இருக்கின்றன. சாதாரண மனிதர்களே 120 ராத்தல் நிறைக்குமே விருப்பதில்லை. 2 வயதிலேயே 127 ராத்தல் கனமிருக்கும் இஃதென்ன ராக்ஷஸக் குழந்தையோ !

*
* *

**அமெரிக்காவில் வைதிக தர்மம்.**—இந்துதேச சிகாமணிகளான காலஞ்சென்ற ஸ்வாமி விவேகாநந்தராலும், ராமதீர்த்தராலும், நம் பிராசீன வைதிக தர்மங்களில் சில பாகம், வெகு தூரத்திலிருக்கும் அமெரிக்கா தேசத்தாருக்கு அப்போதப்போது உபதேசிக்கப்பட்டு வந்தது. என்றாலும், பாதாளலோகவாசிகளாகிய அமெரிக்கருக்கு ஆர்ய தர்மங்களில் இன்னும் பல பாகங்கள் உபதேசிக்காமல் விடப்பட்டிருக்கின்றன. அக்காரியத்தை நிறைவேற்றுவதற்காக ஸ்ரீ காசி ஆர்ய ஸமாஜின் பிரெஸிடெண்டான டாக்டர் கேசவ தேவசாஸ்திரி என்ற இந்தியர் யுனைடெட் ஸ்டேட்ஸுக்குப் போய் 23 வருஷகாலம் தாமதித்து வருவதாக உத்தேசித் திருக்கிறார்.

*
* *

**நாய்க்கடி வைத்யசாலைக்குச் செல்லும் ஏழைகள்.**—வெறிகொண்ட நாய்களால் கடிக்கப்பட்ட ஏழை ஜனங்கள் குன்னூரிலுள்ள நாய்க்கடி வைத்யசாலையில் வைத்யம் செய்துகொள்ளப் போகவேண்டுமானால்,

அவர்கள் தாம் வசிக்கும் இலாகாத் தாசில்தார்களிடமிருந்து ஸர்டிபிகேட் பெறவேண்டுமென்னும் ஏற்பாடு இதுவரையிலுமிருந்தது. தாசில்தார்களின் ஸர்ட்டிபிகேட் விரைவிற் கிடையாமையால் நாய் கடித்த 15-20 தினங்களுக்குப் பின்னரே அவர்கள் அங்குபோய்ச் சேரும்படி நேரிடுகிறதினால் நாயால் கடிக்கப்பட்டவர்கள் டிஸ்பென்ஸரி, ஆஸ்பத்ரிகள் இவற்றிலிருக்கும் சப் அஸிஸ்டண்டு ஸர்ஜன்களிடமிருந்தே சர்டிபிகேட் பெற்றுச்செல்லலாமென்று கவர்ன்மெண்டார் இப்போது உத்தரவு செய்திருக்கிறார்கள்.

*
* *

**தாடிக்கார ஸ்திரீ:**—பிரஞ்சுதேசத்தில் பாரிஸ் நகரில் 62 வயதுள்ள ஒரு ஸ்திரீயிருக்கிறாள். அவளுடைய முகமும்கைகளும் புருஷர்களுடைய முகத்தையும் கைகளையும்போ லிருக்கின்றன. அவளுக்கு 40 வயதாகையில் அபூர்வமான ஒரு வியாதி அவளுக்குண்டாகி அதுமுதல் அவளுடைய தேகமுழுமையும் மாறிப்போய் விட்டதாம். நன்றாய்க்கொழுத்த ஒரு ஆண்பிள்ளைக்கு புஜங்களின் சதை எப்படி இருக்குமோ அதேமாதிரி அவளுடைய புஜங்களின் தசையும் ஆகிவிட்டதாம். அவளுடைய மார்பு விரிந்து அகலமாய் விட்டதாம். எல்லாவற்றையும் விட அதிசய மென்னவென்றால், வழுக்குத்தலை யுண்டாய்விட்டது; அதற்கு ஈடாகக் கன்னங் கரேலென்று தாடிமுளைத்து இடுப்புவரையில் வளர்ந்து விட்டது.

*
* *

**பூர்வீக இந்து ரண வைத்தியம்.**—கல்கட்டாவில் வசிக்கும் டாக்டர் சி. என். முகோபாத்தியாயர் ஹிந்துக்களின் பூர்வீக ரண வைத்தியத்தைப்பற்றி 2 வால்யூம் அடங்கின ஒரு புஸ்தகம் எழுத, அந்தப் புஸ்தகத்தை கல்கட்டா யூனிவர்ஸிடியார் பிரசுரம் செய்திருக்கிறார்கள். அவயவங்களை இழந்த மனிதருக்கு அவைகளைப்போலச் செய்த செயற்கைஅவயவங்களை அமைத்ததாக ரிக்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. யுத்தகளங்களில் காயம்பட்டவர்களுக்கு அந்தக் காயத்தைக் குணப்படுத்த இரணவைத்தியர்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. பௌத்தமதம் ஸ்தாபிக்கப்பட்டுப் பிரபலமான காலம்வரையில் இந்த வித்தையை இந்துக்கள் அனுஷ்டித்து வந்தார்களென்றும், அந்த மதத்தை ஸ்தாபித்து நடத்தினவர்கள் பிணத்தை அறுத்து வைத்தியம் கற்றுக்கொள்ளுவதை வெறுத்தபடியால், அந்த வித்தையின் அனுஷ்டானம் நின்றுபோய்விட்டதென்றும் இந்த நூலாசிரியர் சொல்லுகின்றார். மேலும், மகம்மதியர் ராஜாங்கம் நடத்தின காலத்தில், இந்துக்களின் சாஸ்திரங்களையும் கலைகளையும் மதிக்காமல் அசட்டைசெய்துவந்ததாலும் ரண வைத்தியம் இந்தியாவில் நின்றுபோய்விட்டதென்று சொல்லப்படுகிறது.

*
* *

**திருச்சினப்பள்ளி விஸ்வ ப்ரஹ்ம மஹாஜன ஸேன்ட்ரல் ஸபை.**—ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் ஜனனநாள் ஜூன்மீ 22உ யன்று ஸ்ரீ காமாக்ஷியம்மன் தேவஸ்தானத்தில் மேற்படி சபையாரால் அதிக விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. காலை 9-மணி முதல் ஸ்ரீ அம்பாளுக்கு அபிஷேகம் செய்வித்து, ஜார்ஜ மன்னரின்பேரால் சகஸ்ரநாம அர்ச்சனை ஆராதனை செய்விக்கப்பட்டு, மேற்படி சபையார்களும் சபை தர்ம வித்தியாசாலை ஆசிரியர், மாணாக்கர், மற்றுமுள்ளவர்களும் அரசரின் ஆயுள்பெருகி நீடூழிகாலம் அரசுசெலுத்தி அன்புடன் வாழ்கவென அம்பாளைத் துதித்தனர். $10\frac{1}{2}$ மணிக்குமேல் மேற்படி தேவஸ்தானத்தில் வித்தியாசாலைச் சிறுவர்களுக்கும், மற்றுள்ள குழந்தைகளுக்கும் சுமார் 500-க்கு மேற்பட்டவர்களுக்குச் சிற்றுண்டி தின்பண்டம் முதலியவை உபகரித்து, யாவரும் மன்னரின் படத்தை அலங்கரித்து பாண்டுவாத்திய முழங்கப் பட்டணப்பிரவேசம் செய்தனர். 5 மணிக்குமேல் மேற்படி தேவஸ்தானத்தில் சபை மீட்டிங் நடந்தது. அச்சமயம், சபையின் பிரதம காரியதரிசி மிஸ்டர் T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியார் கல்வியைப்பற்றியும் குலாசார மேன்மையைப்பற்றியும் உபந்நியசித்தனர். நமது சபையின் பிரசிடெண்ட் ஸ்ரீ S. கந்தசாமி ஆச்சாரியார் 18-6-14-ல் நடந்தேறிய மீட்டிங்கில் வித்தியாசாலைச் சிறுவர்களுக்காகச் சிற்றுண்டிச் செலவுக்கு ரூபா 15 நன்கொடையாகக் கொடுத்ததுடன், வித்தியாசாலை விர்த்தியாகும்பொருட்டு ரூபா 25 நன்கொடையாக அனுப்புவதாய் ஷை மீட்டிங்கில் வாக்களித்தனர். பிறகு ஸபையின் ஜாயிண்ட் காரியதரிசி மிஸ்டர் K. பழனிவேலு ஆச்சாரியார் நமது சிறுவர்களுக்கு சுய பாஷையை அப்பியாசிப்பதுடன் அரசாங்க பாஷையையும் அப்பியாசித்து வருவோமானால் அநேக சுகங்கள் உண்டாகுமென்று உபந்நியசித்தனர். சக்கிரவர்த்தியார் மேம்பாட்டைப்பற்றி சபையின் ஜாயிண்டு காரியதரிசி மிஸ்டர் K. வைத்தியலிங்க பத்தர் உபந்நியசித்தபின் கரகோஷத்துடன் சபை பூர்த்தியாயிற்றென்று தெரிகிறது.

*
* *

**ஐரோப்பாவில் யுத்தம்.**—ஐரோப்பா படமொன்று இம்முறை பதிப்பித்திருக்கிறோம். ஐரோப்பிய தேசங்களின் ஸ்தானங்கள் அதில் நன்கு விளங்கும். ஆஸ்டிரியாவுக்கும் செர்வியாவுக்கும் நேர்ந்த விரோதங் காரணமாக சண்டையாரம்பமாயிற்று. ருஷ்யா செர்வியாவுடன் கலக்க, ஜெர்மனி ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்தது. ஜெர்மானியரால் தமக்கு யாதொரு ஆபத்தும் நேராதிருக்கும்படி பிரஞ்சுக்காரர் சைனியத்தைத் தயார்ப்படுத்தினர். பிரிட்டிஷ்காரருடைய சமாதானத்தை ஜெர்மனி ஏற்றுக்கொள்ளவில்லை; ருஷியா, பிரான்ஸ் இவற்றின் மீது படையெடுத்தது. ருஷியா, பிரான்ஸ், இங்கிலாந்து முக்கூட்டு உடன்படிக்கையின்படி ஒன்றாய்ச் சேர்ந்து ஜெர்மனியோடு போர்செய்கின்றன. முடிவில் ஜெர்மனி நஷ்டமடைந்து தோல்வியுறுதல் நிச்சயம். இந்தியக் குடிகளுக்கு யாதொரு அபாயமுங்கிடையாது. விலைவாசிகள் ஏறவொட்டாமல் தடுப்பதற்கு கவர்ன்மெண்டார் முயன்று வருகின்றனர்.

16 [illegible] 1914
MA[illegible]S.

உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் I] 1914ஞூ செப்டம்பர்மீ [சஞ்சிகை 12

## ஒளிவளர் விளக்கு

1914ஞூ ஆகஸ்ட்மாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களுடைய மொத்த எண்ணிக்கை 564.

*
* *

சென்ற வருஷத்தில் நடைபெற்றதுபோல் இவ்வருஷமும் நமது சபாமண்டபத்தில் நவராத்திரி பூஜையும் சங்கீதக் கச்சேரிகள் முதலியவும் வெகு சிறப்பாய் நடைபெறும். குலஜனங்கள் நவராத்ரிகளும் விஜயஞ்செய்யக் கோருகிறோம்.

*
* *

ஏரக்குடியிலும், திருச்செங்கோட்டிலுமுள்ள விஸ்வகர்ம வம்சத்தினர் சபைகூடி "ஆஸாரி"ப் பட்டக் குறையை நிவர்த்தி செய்யும்படி, கனம் சென்னைக் கவர்னரவர்களுக்குத் தந்தி மூலமாய் முறையிட்டிருக்கிறார்கள். நமது ஜாதிப்பட்டப் பாதுகாப்புவிஷயத்தில் ஈரோடு ஸ்ரீ E.S. அர்த்தநாரி ஆச்சாரியாரவர்களும் சிரத்தை பூண்டிருப்பதறிந்து சந்தோஷிக்கிறோம்.

*
* *

மதுரைநகரத்து விஸ்வப்பிராம்மண மேட்டுத் தெருவாசியும், ஸ்ரீ A. நாராயண ஆச்சாரியாரவர்கள் புத்திரரும், குலாபிமான மிக்கவருமாகிய ஸ்ரீ A. N. இராமசாமி ஆச்சாரியாரவர்கள், நமது சபையின் புத்தகாலயத்திற்கு அன்போடளித்தருளிய தெலுங்கு விஷ்ணுபுராணம் வந்தனத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டது. இது, 1886-வது வருஷத்தில் சென்னையி லச்சான சுத்தப்பிரதியாகும்.

*
* *

குடந்தையில் கான்பரன்ஸ் கூட்டும் விஷயமாய்த், தம்மாற் கூடிய வரையில் குடந்தை நகர்ப் பிரமுகர்களிடம் முயற்சிசெய்வதாக, திருப்போரூர் ஆரியன் ஜோதிடசாலைத் தலைவர் ஸ்ரீ V. வைத்தியநாத ஸ்வாமி ஸ்தபதி ஜோதிஷரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இம்முயற்சியிலீடுபடுகிறவர்கள் எவரே யாயினும் நமது குலத்திற்குப் பெருநன்மை செய்பவராவார்களாதலால், ஜோதிஷரவர்களுடைய குலாபிமானம் சிலாகிக்கத்தக்கதாயிருக்கிறது. தாம் தஞ்சை ஜில்லா வாசியா யிருப்பதினால், அந்த ஜில்லாவிலொரு ஜாதீய கான்பரன்ஸ் நடத்துவிப்பது தமது கடமையெனக் கொண்ட இவரது பொறுப்புணர்ச்சி மிக்க திருப்தியைத்தருகின்றது. இதே

போல், தஞ்சை ஜில்லாவாசிகளாயுள்ள மற்ற பிரமுகர்களும் சீக்கிரமே முன்வந்துழைப்பார்களென் றெதிர் பார்க்கிறோம்.

*
* *

சென்னையம்பதியில் ஒரு விஸ்வகர்ம மடங் கட்டவேண்டிய அவஸ்யத்தையும், அதினுபயோகங்களையும் விளக்கி "சென்னைவாசி" யென்பாரொருவ ரெழுதிய வியாசம் இம்முறை பிரசுரிக்கப்பட் டிருக்கிறது. இவர் குறிக்கொண்ட முடிவு வெகு கம்பீரமானதே யானாலும், நம்மேழ்மை ஸ்திதிக்கு அது தற்போது அதிகப்படியென்றும் குலஜனங்கள் பொதுப்பட இப்போது முயற்சிக்கத் தக்கதன்றென்றும் அஞ்சுகிறோம். ஆனால், ஷை வியாசத்திலெழுதப்பட்ட தத்தனையும் இப்போதே நிகழவேண்டுமென்று அவர் வற்புறுத்துகின்றாரில்லை. விஸ்வகர்ம மடமென்பதொன்றிற் கங்கமானவை யிவையெனக் குறிப்பிட்டுக் காட்டி, மடஸ்தாபனப் பிரயத்தின முடையவர்களுடைய கவனத்தை அவற்றிற் கீர்த்திருக்கின்றனர். ஸ்ரீ கணிதால-லோகநாத ஆச்சாரியாரவர்களும், அவ்வழிப் பட்டவர்களும் ஷை வியாசத்தைக் கவனமாய் வாசித்தல் நன்றேயாகும்.

*
* *

"வைதிகக் கல்வி" யென்னும் மகுடத்துடன் சென்ற 9-வது சஞ்சிகையில் வெளியான வியாசத்திற் காணப்படும் அபிப்பிராயங்களைத் தழுவிப் பலர் நமக்கெழுதியிருக்கிறார்கள். வியாசரூபமானவையெல்லாம், கிடைக்குமிடத்திற்கேற்ப, பின்வருஞ் சஞ்சிகைகளில் வெளியாகும். ஷை வியாசத்தைப்பற்றிய தங்கருத்துகளை யறிவிக்கும்படி குலப்பிரமுகர்கள் பலர்க்குங் கடிதமெழுதிக்கேட்டிருக்கிறோம். ஷை வியாசக்கருத்திற்கு மாறுபாடான அபிப்பிராயங்களுக்கு இடங்கிடைக்குமோ கிடைக்காதோ என்றசந்தேகம் எவருக்குமிருக்கவேண்டியதில்லை. அவையே முதலிடம் பெறும். ஆனால், வியாசக்காரர் கூடியவரையிலுஞ் சுருக்கமா யெழுத வேண்டுகிறோம். ஷை விஷயம் நன்றாய் ஆராய்ச்சிசெய்யப்பட வேண்டுமென்பதேயொழிய, சபையார் மற்றொருகருத்துங்கொண்டிலரென்பதும், அதுபற்றியே பகிரங்கமாய்ப் பல ரபிப்பிராயங்களும் வேண்டப்படுகின்றனவென்பதும் நண்பர்கள் நன்கு குறித்துக்கொள்வார்களாக.

*
* *

சமஸ்கிருதக் கல்வியில் நம்மவர்களுடைய கவனத்தைச் செலுத்தி, அதில் இவர்கள் தேர்ச்சிபெறச் செய்யவேண்டுமென்னுங் கருத்துடையவர்களாய் நமது சபையாரிருக்கிறார்களென்பது பலருமறிந்த உண்மையேயாகும். இக்கருத்துபற்றி, சமஸ்கிருத வித்தியார்த்திகளுக்கு ஸ்காலர்ஷிப் என்னும் உபகாரச்சம்பளங் கொடுப்பதற்குச் சபையார் சித்தமாயிருக்கின்றரென்பதை நமது குலஜனங்களெல்லாம் நன்கறிய விரும்புகிறோம். சமஸ்கிருத பாண்டித்திய மடைவதில் நம்மவர்களுக்கு வேண்டிய சகாயம் சபையாராற் செய்யப்படும். ஆங்காங்கேற்பட்டிருக்குஞ் சமஸ்கிருதக் கலாசாலைகளிலோ அன்றிப் பண்டித சிரேஷ்டர்களை யடுத்தோ வேதசாஸ்திர புராணேதிகாச தர்க்க மீமாம்சாதிகளைக் கற்றுக்கொள்ள விரும்புவோர், உடனே சபையார்க்கெழுதித் தமக்கு அவஸ்யமானசகாயம் பெற்றுக்கொள்வார்களாக.

*
* *

நான்காவது முறையாக, இவ்வருஷம் தீபாவளித் தண்டல் வழக்கப்படி நடைபெற வேண்டியதாயிருக்கிறதென்பதை நமது நண்பர்களுக்கு ஞாபகமூட்ட விழைகின்றோம். பிரதி வருஷமும் இத்தண்டலுக்கு ஆங்காங்கிருந்து உதவிபுரிந்தவர்களுக்கெல்லாம், சபையார் தமது அத்தியந்த வந்தனங்களை யளித்து, அவர்கள் இவ்வருஷமும் தீபாவளித் தண்டலுக்கு முன்னிற்பதுடன், தமது நண்பர்களையும் பந்துக்களையும் அவ்வாறே செய்யத் தூண்டி, பெரும்பொருள் சேகரித்துத்தருமாறு வேண்டுகின்றனர். மூன்று வருஷங்களாக இந்தத் தண்டல் நடைபெற்றும், கிடைத்த பொருள் மிகச் சிறிதேயாயிருக்கின்றபடியால், யாதொரு காரியத்திற்கும் போதாதென்பதுபற்றி, பாங்கியிற் கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. குல நன்மையை மேம்படுத்துங் கருத்துடன் மேற்கொள்ளப்பட்டதாகிய இவ்வருஷவாரித் தண்டலில் நம்மவர்கள் சற்றே அபிமானங் காட்டுவார்களானால், ஒரு வருஷத்திலேயே பத்தாயிரரூபாயானாலுஞ் சேர்த்துவிடலாமன்றோ? அங்ஙனஞ் சேர்த்து, நமது குலச்சிறுவர்களுடைய வித்தியாபிவிருத்திக்கென்றும், தொழிற்பெருக்கத்திற்கென்றும், இவைபோன்ற மற்ற உபயோககரமான காரியங்களுக்கென்றும் விநியோகித்தால் வெகு சீக்கிரத்திலேயே நாம் மேன்மையடைவோமென்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, இவ்வருஷத் தண்டலுக்குப் பலருந் துணைசெய்யக்கோருகிறோம். இது குலோபகாரப் பெருஞ்செயலென்பது முக்கியமாய்க் கவனித்தற்பாற்று. கேட்பவர்களுக்கும், கொடுப்பவர்களுக்கும் புண்ணியமுங் கீர்த்தியுமுண்டு பண்ணத்தக்கது. பல துளி பெருவெள்ளமாவதுபோல், சிறு சிறு தொகையாய்க் கொடுக்கப்பட்டுப் பெருநிதியாய்ச் சேர்க்கப்பட வேண்டியதாகுமிது. ஆதலால், தங்கள் வம்ஸம் ஈடேறவேண்டுமென்னும் நோக்கத்தை உள்ளபடியே கொண்டிருக்கும் உத்தமர்களெல்லாம் இதற்குழைப்பார்களாக!

---

**தினசரிப் பத்திரிகைகள்.**—உலகத்தில் பிரசுரமாகும் தினசரிப் பத்திரிகைகளின் தொகை 5000 முதல் 6000 வரையிலும் எட்டியிருக்கின்றது. ஜெர்மனியில் வெளியாவன 900 தினசரிப்பத்திரிகைகள். கிரேட் பிரிட்டனில் 250. பாரிஸில் 150.



## சென்னையில் விஸ்வகர்ம மடம்

சென்னைவாசியொருவர் பின்வருமாறெழுதுகிறார்:—

விஸ்வகர்ம மடமொன்று சென்னையிற் கட்டப்படுவதற்கு ஒரு நிதி சேகரிக்கப்படுவதாக, நமது பத்திரிகையின் 7-வது சஞ்சிகையினாலறிந்து சந்தோஷித்தேன். ஆயினும், அதற்கப்புறம் இதைப்பற்றிய பிரஸ்தாபமொன்றுங் காணாது கவலைப்படலானேன். எக்காரியத்தைச்செய்யப் பிரயத்தினப்பட்ட போதிலும், அதற்கு முதல்வர்களாக முன்னிற்பவர்களில் ஓரிருவராகிலும் அதேகாரியமாய்க் கங்கணங்கட்டிக்கொண்டு, அது முடிவுறுமட்டும் உழைத்தாலல்லாமல் அக்காரியம் சீக்கிரம் சித்தியாகாது. அதில் ஏற்பட்ட உற்சாகமுங் குறைந்து குன்றிப்போதல் நிச்சயம். ஆதலால், ஸ்ரீகணிதால-லோகநாதஆச்சாரியார் இதைக்கவனித்து நடக்கப் பிரார்த்திக்கின்றேன். மற்று,

விஸ்வகர்ம மடமொன்று சென்னையில் ஸ்தாபிக்கப்படுமானால் அதனால் தென்னாட்டு விஸ்வப் பிராம்மணர்களுக்கெல்லாம் பெரு நன்மை யுண்டாகு மென்பதை ஒவ்வொருவரும் நன்றாய் மனதிற் கொள்ளவேண்டும். அப்போது பல ஜில்லா வாசிகளுக்குள்ளும் ஒற்றுமை ஏற்படும். பலஜில்லா வாசிகளாயுள்ள நம்மவர்களில் வியாபார நிமித்தமாகவும் ஊரைப்பார்ப்பதற்காகவும் தினமும் சென்னைக்குப் பலநூறுபேர்கள் வந்து கொண்டேயிருக்கிறார்கள். இவர்களில், பந்துக்களுடையவர்கள் அவர்கள் வீடுகளில் தங்குகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மிகச்சிலரேயா யிருக்கவேண்டும். சிநேகிதர்களை யுடையவர்கள் அவர்கள் வீடுகளில் தங்குகிறார்கள். இவர்கள் தொகையுங் கொஞ்சமென்றே சொல்லவேண்டும். பலர் சத்திரங்களில் தங்கிப்போகின்றார்கள். இவர்களெல்லாரைப்பார்க்கிலும், இடமில்லாமைக்காக பயந்து எங்குபோ யிறங்குவதென்று ஏக்கப்பட்டுக் கொண்டு, சென்னையைப் பார்க்க வேண்டு மென்னும் அவா அதிகமிருந்தும் அதையடக்கிப் பிடித்துக்கொண்டு இருந்த விடத்திலேயே காலங்கழித்து விடுபவர்களுடைய தொகையே மிகப்பெரிதாயிருக்கிறது.

சென்னையிலொரு விஸ்வகர்மமடம் ஏற்பட்டால் மேற்சொன்னவர்க ளெல்லோருடைய குறையுந்தீரும். சென்னைக்கு வருபவர்களிற் பெரும் பாலார்கள் அங்கு வந்து தங்குவார்கள். ஒரூராருக்கும் மற்ற ஊராருக்கும்

பரிச்சயமுண்டாகும் ; ஒருவருடைய அபிமானம் மற்ற
வர்க்குப்படியும்; பரஸ்பர அன்னியோந்யமுண்டாகும்;
ஆந்திர நாட்டாரும் திராவிடநாட்டாரும் ஒன்ருய்க்
கலப்பார்கள்; ஒருவருடைய வித்தையை மற்றவர்க
ளும், மற்றவர்களுடைய கைத்தொழில்களை இவர்க
ளுங் கவனித்துக் கற்றுக்கொள்வார்கள். இன்னு
மெத்தனையோ அநுகூலங்கள் சென்னை விஸ்வகர்ம
மடத்திஞலுண்டாகு மென்பதில் சந்தேகமில்லை. உள்
ளூராருக்கும் பலவூர்வாசிகளுடைய சிநேக மேற்படும்.
அப்போது, சென்னை வாசிகள் வெளியூர்களுக்குச்
சென்று அங்கங்கு தங்குவதற்கு வேண்டிய சௌகரி
யங்களும் பொருந்தும்.

ஆதலால், சென்னையில் ஒரு விஸ்வகர்ம மடம்
ஸ்தாபிப்பதில் வெளியூர்வாசிகளும் சென்னை வாசிகளு
மாகிய இருதிறத்தாரும் அக்கரை காட்டவேண்டிய
வர்களா யிருக்கிருர்கள். எனவே, இதைக் கட்டுவதற்
காகுஞ் செலவை நமது இராஜதானியிலுள்ள 24 ஜில்
லாக்காரரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பம்பாய்,
வங்காளம் முதலிய மற்ற மாகாணங்களிலுங்கூட இதற்
காகப் பணந்தண்டலாம். ஏனென்ருல், அந்த மாகா
ணங்களிலிருந்து நம்மவர்கள் வந்தாலும், இந்த மடத்
தில் தங்கிப் போவதற்கு இடங்கொடுப்போ மல்லவா?
இப்படித் தண்டுவதற்கு நல்ல கமிட்டி யொன்றிருக்க
வேண்டும். அவர்கள் கையெழுத்துப்பட்ட விளம்பரங்
களைத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மகாராஷ்டிரம்,
இங்கிலீஷ் முதலிய பாஷைகளி லச்சிட்டு ஒவ்வோ
ரூரார்க்கும் அனுப்பவேண்டும். தென்னிந்தியாவைச்
சிற்சில பிரிவினைகளாகப் பகுத்துக்கொண்டு, ஒவ்வொ
ரு பாகத்திலும் சுற்றுப்பிரயாணஞ்செய்து பணந் தண்
டுவதற்கு அதிகாரிகளை நியமிக்கவேண்டும். ஒவ்வொரு
ஜில்லாவிலும் இதற்கு முதல்வராக ஒவ்வொருவரை
ஏற்படுத்திஞலும் நன்றே. பணங்கொடுக்கிறவர்களுக்
கெல்லாம் ரசீது தரவேண்டும். இதற்காக, எங்கும்
ஒரே விதமான அச்சுப்பாரங்க ளிருக்கவேண்டும். இன்
னின்ஞர்தான் இதற்காக வசூல் செய்யலாமென் றேற்
படுத்தி அவரவர்களுக்கு முத்திரை யிட்ட அதிகாரச்
சீட்டு கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால், மோசத்திற்
கிடமுண்டாகும். தனவந்தர்களாகவும், கௌரவமுள்ள
வர்களாகவு மிருப்பவர்கள் இந்நிதியின் கமிட்டியிற்
சேர்ந்திருக்கவேண்டும். அப்போதுதான் ஜனங்களுக்கு
நம்பிக்கை யுண்டாகும். அதுவன்றி, வசூலாகும் பணம்
ஒருவரிடத்தேனும் வைக்கப்படலாகாது; பொதுவாக
இருவர் அல்லது மூவர் பெயரால், அல்லது ஷை கமிட்
டியார் பெயரால், ஒரு பாங்கியிற் கட்டப்பட வேண்டும்.
மாத மொருமுறை, வசூலான தொகை விபரங்களை
நமது விஸ்வகர்மன் பத்திரிகை மூலமாகத் தவருமல்
வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வித ஏற்பாடுகளோடு நடத்தும் பக்ஷத்தில் விஸ்
வகர்மமட ஸ்தாபன நிதிக்கு வெகு சீக்கிரத்தில் பெரும்
பொருள் குவிந்துவிடும். தென்னுப்பிரிக்கா இந்தியர்
கஷ்ட நிவர்த்தி நிதி, சுதேசமித்திரன் ஹிந்து முதலிய
பத்திரிகைகளாற் சேர்க்கப்படவில்லையா? இந்து யூனி
வர்ஸிடிக்கென்றும், மகம்மதிய யூனிவர்ஸிடிக் கென்
றும் நிதிகள் சேர்க்கப் பட்டதில் அநேக லக்ஷம் ரூபாய்
கள் விரைந்தோடி வந்தனவென்று நாம் பத்திரிகைக
ளில் படிக்கவில்லையா? அப்படி யிருக்க, நமக்கொரு
பொது ஸ்தானத்தைச் சென்னையில் ஸ்தாபிப்பதற்கு
வேண்டிய பணம் ஏன் கிடைக்காது? தக்கபடி முயற்சி
செய்து, ஜனங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரயாய்
நடந்தால், கட்டாயம் பெருநிதிசேரும். எவ்வளவு பொ
ருள் தேவையிருக்கு மென்பதைப் பற்றித்தான் திட்ட
மாய்ச் சொல்லக்கூடவில்லை. ஸ்ரீகணிதால-லோகநாத
ஆச்சாரியாரவர்கள், பத்தாயிரரூபா சேகரித்தாற்போது
மென்று நினைப்பதாகத் தோன்றுகிறது. அதுபோதுமா
வென்பதில் எனக்குச் சந்தேகமே யிருந்து வருகிறது.
அதுநிற்க,

நமக்கு இவ்விதக் கட்டடம் எந்தெந்த காரியங்களுக்
குப் பயன்பட வேண்டுமென்பதைமட்டும் சற்றுவிஸ்
தரிப்பேன். அதன்மேல், எவ்வளவு விஸ்தீரணமுடைய
பூமி தேவையிருக்குமென்பதையும், கட்டடம் எவ்வ
ளவு பெரிதாயிருக்கவேண்டு மென்பதையும் ஸ்ரீகணி
கால-லோகநாத ஆச்சாரியார் முதலியவர்களே யோசித்
துக்கொள்ளட்டும். நான் கூறுவதெல்லாமும் முதலி
லேயே அமைக்கப்பட வேண்டுமென்று கட்டாயப்
படுத்தமாட்டேன். ஆனல், ஆரம்பத்திலேயே நாம்
பின்னல் வேண்டியவற்றை யெல்லாம் தீர்க்கமாய்
நினைத்துப் பார்த்துக்கொண்டால், அதற்கேற்றபடி
இப்போது முதல் உழைத்துவரவும், சௌகரியங்கள்
தேடிக்கொள்ளவும் ஹேதுவுண்டாகும். அப்போதைக்
கப்போது நினைத்துநினைத்து, செய்ததைத் திருத்துவ



தென்ருலும் மாற்றுவதென்ருலும், விருதாவாய்க் கஷ்
டமும் நஷ்டமும் நேரிடும். அவ்விதங் கஷ்ட நஷ்டங்
கள் நேரிடாதபடி தடுத்துக் காத்துக்கொள்வதே விவே
கிகளுடைய லக்ஷணமாதலால், இவ்வளவுஞ் சொல்ல
வேண்டியதாயிற்று.

முதலாவது, இவ் விஸ்வகர்ம மடம் விடுதியாகக்
கொள்ளப்படும். பல குடும்பங்கள் தங்குவதற்கு இதில்
தனித்தனி அறைகளிருக்கவேண்டும். தங்குவோர்க்
குக் குறைந்தபக்ஷம் ஒரு வாரமாவது இடங்கொடுக்க
வேண்டும். 24 ஜில்லாக்களி லிருந்து தினமும் எத்
தனைபேர் வரக்கூடும்? சௌகரியமான இடமிருக்கிற
தாகத் தெரிந்தால் நூற்றுக்கணக்காய் வருவார்களென்
பதில் தடையில்லை. முதலில், அவ்வளவதிகமாய் வரா
விட்டாலும், சராசரியில் ஜில்லாவுக்கொருவர் வருவ
தாகக் கொள்வோம் ; இல்லையென்று, இரண்டு ஜில்
லாக்களுக்கொருவனாக் கணக்கிட்டாலும், 12 குடும்
பத்தார் தினமும் வருவார்களெனக் கொள்வோம்.
இவர்களுக்கு, ஒரு வாரத்திற் கில்லாமல், மூன்று நாட்
க ளிடங்கொடுப்பதாஞலும், (12 × 3 = 36) முப்பத்
தாறு அறைகள் ஏககாலத்தில் விடுதிகளாய்க் கொடுக்
கப்படவேண்டும். தினமும் 12 பேர் வருவதாகவும்,
அவர்களுக்கு மூன்றுநாள் இடங் கொடுப்பதாகவும்
வைத்துக்கொண்டால் இத்தனை யறைகள் வேண்டும்.
அன்றி, அதிகமாகக் கொண்டால் அதிகம் வேண்டும் ;
குறைவாகக்கொண்டால் குறைந்த அறைகள் போதும்.
இரண்டாவது, சாப்பாட்டுவசதி செய்யப்பட வேண்
டும். சமைத்துக்கொள்பவர்களுக்கு சமையலிடமும்,
மற்றவர்களுக்கு போஜனமுந் தரவேண்டும். இதற்கு,
சமையற்சாலைகளுஞ் சமையற்காரரும் வேண்டும்.
வேளையொன்றுக்குக் கட்டண மிவ்வளவென்று விதித்
தால், வருகிறவர்கள் கொடுத்துச் சாப்பிட்டுப்போவார்
கள். அப்போது, பார்ப்பாருடைய சோற்றைப் பலர்
எதிர்பார்க்குங்கஷ்டம் நிவிர்த்தியாகும். தற்காலத்தில்,
தென்ஞட்டார் 'கிளப்' களில் சாப்பிடப் பின்வாங்குவ
தில்லை. ஆதலால், அவர்கள் எங்கேயாயினுஞ் சாப்பிட்டு
விடுகின்றனர். வடநாட்டாராகிய ஆந்திரர்களோ,
பார்ப்பாரிடம் போஜனஞ் செய்வதில்லையென்னுங்
கொள்கையோ டிருக்கிறபடியால், அவர்களுக்காகக்
கட்டாயமாக சமையற்கார னிருக்கவேண்டும். முன்னே,
சென்னையிலிருந்த "பிரம்மய்யாவின் அன்னசத்திரம்"
இப்போது எடுபட்டுப் போனதாகத் தெரிகிறது.

மூன்ருவது, விஸ்வகர்ம மடத்தில் சுபாசுப காரியங்
களை உள்ளூரார் நடத்திக் கொள்ளச் சௌகரியமாயிருக்
கும். இந்தக் காரியங்களுக்காக, பார்ப்பார் கோமுட்டி
கள் முதலிய வேறு ஜாதியார்களுக்கு பொதுஸ்தானங்
களேற்பட்டிருக்கின்றன. அவ்விதமாக, நமது ஜாதி
யார்க்கும் ஒன்றிருக்கவேண்டியது அவஸ்யமே.

நான்காவது, நமது சென்னை விஸ்வகர்ம குலோத்
தாரண சபைக்கு அதுவே மண்டபமாகலாம். வேறிடங்
களுக்கு இவர்கள் கொடுக்கும் வாடகையைப் பெற்றுக்
கொண்டு, இச்சபையார்க்கு விஸ்வகர்மமடத்தில் இடங்
கொடுத்து அங்கு அமரச்செய்தால் கௌரவமாயிருக்
கும். சபையின் விருத்தாந்தம் பலவூராருக்கும் பகிரங்க
மாய்த் தெரிவதற்கு இதுநல்ல உபாயமாகும். சென்
னைக்கு வருவோரெல்லாம் நேரே சபையின் ஏற்பாடு
களை யறிந்து, அதின் கொள்கைகளைத் தாங்கள் கைப்
பற்றி, தங்களூர்களில் பரப்புவதற்கு இது பெருஞ்
சாதனமாகும். இந்த சாதனத்திஞல், குலச்சீர்திருத்தம்
சீக்கிரங் கைகூடும்.

ஐந்தாவது, சென்னையில் வாசிக்கும் ஆங்கில வித்தி
யார்த்திகளுக்கு இதுவே ஹாஸ்டல்(Hostel)என்னும்
வித்தியா போஜன விடுதி ஸ்தானமாகும். இவ்விதம்
நமது பிள்ளைகளுக் கென்று ஒரு ஹாஸ்டல் இப்போது
மிகவும் அவஸ்யமா யிருக்கிறது. ஓரிருவர் வெளியூர்
களிலிருந்து வந்து சென்னையில் வாசித்துக் கொண்டி
ருக்கின்றனர். இவர்களுக்குத் தங்குமிடம் சரியாய்க்
கிடைக்காமல் தவிக்கிருர்கள். சென்னையில் வாடகை
கொடுத்திருப்பது அசாத்தியமா யிருக்கிறது. ஆகையால்
பார்ப்பார், கோமுட்டிகள், வேளாளர், வன்னியர் முத
லிய மற்ற ஜாதிப் பிள்ளைகளுக் கென்று தனித்தனி
ஹாஸ்டல்கள் சென்னையில் ஏற்பட்டிருப்பது போல்,
நாமும் தனியாக ஹாஸ்டலொன்று ஸ்தாபிக்குமட்டும்
அதற்காக விஸ்வகர்ம மடத்திலேயே சௌகரியஞ்
செய்யலாம்.

ஆருவது, இம் மடத்திலேயே ஓர் சிறு சமஸ்கிருத
கலாசாலை ஏற்படுத்தலாம். அதை யொட்டியும்,
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையை யொட்
டியும், பல சமஸ்கிருத, திராவிட, ஆங்கில ஏட்டுப் பிர
திகளையும் அச்சுப் புத்தகங்களையுஞ் சேகரித்து ஓர் பெ
ரும் புத்தகாலயத்தை நிலை நிறுத்தலாம்.

ஏழாவது, சகலாகம பண்டிதரும், சர்வ சாஸ்திரப

பிரவீணரும், சாது மகாசித்தருமா யிருக்கக் கூடியவரொருவரை இதற்கு மடாதிபதியாக்கி, அவரால் நம்மவர்கள் தர்மோபதேசமும் ஞானோபதேசமும் பெற்று கிருதார்த்தராகச் செய்யலாம்.

எட்டாவது, வாரந்தோறுமோ அன்றி அடிக்கடியோ சத்காலக்ஷேபங்களை நடத்துவதற்கும் இம்மடம் இடங்கொடுக்கும்.

ஒன்பதாவது, கான்பரன்ஸ்கள் முதலிய பெருங்கூட்டங்கள் சேர்ப்பதற்கும், அதற்கு விஜயஞ்செய்வோர்க்குப் போஜனநிவசதிகளமைப்பதற்கும் நல்ல இடமாகும்.

பத்தாவது, இதை விஸ்வகர்மாலய மாக்கலாம். நாம் விஸ்வகர்ம சந்ததியார்களா யிருந்தும், விஸ்வகர்மப் பரமேஸ்வரருக்கு ஓராலயங்கட்டிப் பூசைசெய்யாதது மிகப் பெரியகுறையாகும். அப்படி யொன்று கட்டிப் பூசைசெய்தால்தான் நமது நிலைமை சீர்ப்படுமென்றும், நமக் கேற்பட்ட சாபங்கள் தொலையுமென்றுந் தோன்றுகிறது. அதனால் நமக்கொருவித ஜாதிப்பற்று விசேஷமாய்ச் சித்தித்தலுமாகும். இன்னும் அநேக பலன்கள் கைகூடும். ஆதலால் சென்னை விஸ்வகர்ம மடத்தில் ஓர் விஸ்வகர்மாலயம் கட்டாயம் அமைக்க வேண்டும்.

பதினொன்றாவது, அங்கு லைப்ரெரியும் ரீடிங்ரூமும் சபையும் அமைவதால், தற்கால நாகரிக முறைகளுக்கு ஒத்திருக்குமாறு, டெனிஸ் கோர்ட் (Tennis Court) பாட்மின்டன் கோர்ட் (Badminton Court), பில்லியர்ட் டேபிள்ஸ் (Billiard Tables) இவற்றையும் அமைக்கலாம். இவற்றிற் பிரியமுள்ளவர்கள் வந்து சேருவார்கள்: மற்ற ஜாதியாருடைய பார்வையில் மதிப்பதிக முண்டாகும். நம்மவர்களுடைய கர்நாடக பழக்கங்கள் சற்று விலகி, மற்றவர் கொண்டாடும் பழக்கங்கள் சிலபடியும். இவை எல்லோருக்கும் நிர்ப்பந்தமானவை யாகமாட்டா. இவற்றிற்காக வேறு கட்டணங்கள் வாங்கலாமாகையால் வருமானமும் உண்டாகும்.

இப்படிப் பலகாரியங்களுக் குபயோகமாகும்படி சென்னை விஸ்வகர்ம மடத்தை நிலை நிறுத்தவேண்டும். இவற்றிற்கெல்லாம் இடந்தரும்படியான பாகத்தில் இதைக் கட்டவேண்டும். இடத்து சௌகரியத்தை முதலிலேயே அமைத்துக்கொள்ள வேண்டும். அதைப் பற்றிப் பின்னால் கவலைப்படும்படி வைத்துக்கொள்ளக் கூடாது. கட்டடங்களை மட்டும், பணங் கிடைப்பது போல், சிறுகச்சிறுகக் கட்டிக்கொள்ளலாம். குடியிருக்குமிடங்களுக் கிடையில் ஸ்தலங் கிடைப்பது கூடாமை ; அஃதுசிதமானது மல்ல. விஸ்தீரணமான இடங்களை நம்மவர்கள் தேடுவார்களாக. எத்தனை வகராக்களிருந்தாலும் அத்தனையும் நன்றே. கட்டடத்திற்குப் பிளான்களை நல்ல சிற்பாசாரியர்களிடமிருந்தும் தக்க இஞ்சினீயர்களிடமிருந்தும் பெறவேண்டும். மடமானது சிற்பசாஸ்திரோக்தமாய், காக்ஷிமாத்திரத்திலேயே சிற்பகலா நிலயமெனப் புலப்படுமாறு நிர்மிக்கப்படவேண்டும். குலாபிமானிகளும் மற்றவர்களும் இவ்விஷயத்தைப்பற்றித் தங்கள் அபிப்பிராயங்களை இப்பத்திரிகை மூலமாய்த் தெரிவிக்க விரும்புகிறேன். நிலவிஸ்தீரணம் எவ்வளவிருக்க வேண்டுமென்பதைப் பற்றியும், கட்டடம் எத்தனை யறைகளுடன் எவ்விதமாய் நிர்மிக்கப்படலா மென்பதைப்பற்றியும், இதற்கு எவ்வளவு பொருள் தேவையாயிருக்கு மென்பதைப் பற்றியும், அப்பொருளைச் சேகரஞ்செய்யு முபாயங்களின்னவை யென்பதைப்பற்றியும், யார்யாருடைய சகாயம் இதற்கு இன்றியமையாதென்பதைப்பற்றியும், இன்னோரன்னவாய் சென்னையில் விஸ்வகர்ம மடாலயமொன்றைக் கட்டுவதற் கநுசாரணையான விவரங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் தீர்க்கமாய் ஆலோசித்துப் புத்திமான்க ளெழுதவேண்டியது மிகவும் அவஸ்யமாயிருக்கிறது.

ஆயிரம்,ஐயாயிரமாகத் தரக்கூடியவர்களும் சென்னையிலும் மற்ற இடங்களிலு மிருப்பதாகத் தெரிகிறது. இவர்களிற் சிலருடைய பெயர்கள் நமது பத்திரிகையிலேயே வெளியா யிருக்கின்றன. அவரவர்களுடைய பெயர் விளங்கும்படி, மடத்தின் ஒவ்வொரு பாகத்திற்கு அவரவர்களுடைய பெயர்களை யிடலாம். அப்படியே சிலா சாஸனங்களுஞ் செய்துவைக்கலாம். இவ்விதஞ் செய்தாலல்லாமல், பெருந்தொகைகளைக் கொடுப்பதற்குச் சிலர் முன்வரமாட்டார்கள் ; சிறுதொகைகளைக் கொடுத்தவர்களுடன் நாமுமொன்றாகத்தானே சேர்த்தெண்ணப்படுவோமென்று பின்வாங்குவார்கள். ஆதலால், ஏதோ ஒருதொகைக்கு அதிகங் கொடுக்கிறவர்களைப்பற்றி சிலாசாஸனஞ் செய்யப்படுமென்னும் ஏற்பாடும் இருக்கவேண்டும். அப்போது, தர்மசிந்தனையுள்ளவர்களும், சந்ததியற்றவர்களும், கோவில்களுக்கெழுதிவைக்க விரும்புவோரும், மற்ற தனகனவான்களும் பெருந்தொகைகளைக் கொடுக்கப் பின்னிடமாட்டார்கள். சென்னை வாசிகளாயுள்ளவர்கள் தக்க இடத்தை ஆராய்ந்து பார்த்து அறிவிப்பார்களாக. இடம் ரயில் ஸ்டேஷன்களுக் கருகிலிருத்தல் நன்று. கோரிய இடத்தைப் பெறுவதில் அரசாங்கத்தாருடைய சகாயமும் தேடலாம்.



## குருகுல பாடசாலை

பஞ்சாப் தேசத்தில் வேத மார்க்கத்தையே அனுச
ரித்து ஆசார சீர் திருத்தங்களைச் செய்து வருகிற
ஆர்ய சமாஜம் என்னும் மதம் ஒன்று இப்போது
சுமார் 30-வருஷங்களாய் நடை பெற்று வருகிறது.
இது சுவாமி தயாநந்தரால் ஸ்தாபிக்கப் பட்டது. இவர்
கத்யவார் நாட்டு குஜராத்திப் பிராமணர் ; நெறி தவ
றாத ஸந்யாசி. எல்லாவித அறிவு விவேகங்களுக்கும்
வேதங்களே மூலமாகையால், அவ்வேதங்களைப் படித்து
அவைகூறும் மார்க்கங்களையே அவலம்பித்துவரவேண்டு
மென்பது அவர் போதனை. அவர் 1883-ம் வருஷம்
காலமானர். இச்சமாஜத்தாரால் தயாநந்தரின் மதபோத
னைப்படி, வேதபாடம் வைதீக கர்மானுஷ்டானம் சம்ஸ்
கிருதக் கல்வியபிவிருத்தி முதலியவற்றிற்கென்றே கங்
கைக்கரையில் இமயமலைக் கருகில் ரிஷிகள் வாசஞ்செய்
யும் புண்ணிய ஸ்தலமாகிய ஹரித்துவாரத்தில் 20 வரு
ஷங்களுக்கு முன் குருகுலம் என்னும் பாடசாலை ஏற்
படுத்தப்பட்டது. இங்கு உபாத்தியாயர்கள் ஜீவனோபா
யத்துக்குமட்டும் போதுமான சம்பளம்பெற்று சந்யாசி
கள்போல் வறுமை யெனும் தர்மத்தை அவலம்பித்து
உழைத்து வருகிறார்கள். இப்பாடசாலையில் பிள்ளை
கள் 7 வயதில் சேர்க்கப்பட்டு 25 வயதுவரையில் படி
த்து வருவார்கள். படிப்புக்கும் சாப்பாட்டுக்கும் ஒன்
றும் கொடுக்கவேண்டியதில்லை. மேற்சொல்லிய கால
மெல்லாம் இரவும் பகலும் உபாத்தியாயர்களின் மேற்
பார்வையில் இருக்கவேண்டுமே தவிர தங்கள் வீட்டுக்
குப் போகக்கூடாது ; பெண்கள் எவரையும் பார்க்கக்
கூடாது. முதல் 7 வருஷங்கள் சமஸ்கிருத படிப்பு,
வேதம் ஓதல், வைதீக கர்மாசார ஒழுக்கம், திடமான
தேகப் பயிற்சி இவைகளே கவனிக்கப்படும். 14-வயது
முதல் பாஷாஞான போதனை, மேல்நாட்டு சாஸ்திர
போதனை, சாஸ்திர ஆராய்ச்சி சாலைகளில் கைப்பழக்
கம் இவைகளே முக்கியமாய்ச் சுய பாஷையில் கற்றுக்
கொடுக்கப்படுகின்றன. இப்படி 25 வயதான பிறகு
மாணக்கர்கள் தங்களுக்குத் தகுந்த வழியில் வேலை
செய்ய வெளிவருவார்கள். இதன் பிறகுதான் அவர்
கள் விவாகம்செய்து கொள்ளலாம். இவ்விஷயத்தில்
தயாநந்தர் வெகு கவனம் செலுத்திவந்தார். எல்லாவற்
றிலும் வெகு குறிப்பிடத்தக்கது சாதிபேதமின்மையாம்.
அப்பாடசாலையில் தற்காலம் படிக்கும் 300 பிள்ளைக
ளில் பிராமணன் முதல் தெருவிளக்கும் பறையன்
வரையிலுண்டாம். எல்லாம் பூர்த்தியாய் வித்தியாச
மின்றி சகோதர பாவமாய் நடந்து வருகிறார்கள்.

## இந்துமஹா சத்தியவேத விருத்தாந்தம்

(11-வது சஞ்சிகை 128-வது பக்கத்தொடர்ச்சி)

ஸ்ரீ V. மௌனகுரு-ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், பழநி

8-வது "மயூரம்" என்பது, முழங்கை யிரண்டும் உந்திப்புறத்தி லழுந்தப் புவியிற் கையூன்றிக், கால்நீட்டித் தலை நிமிர்ந்திருத்தல்.

9-வது "சுகம்" என்பது, சுகமுந்திடமு மெவ்வாறிருக்கின் எய்துமோ அவ்வாறிருத்தல். இவையன்றி, இரு குதிக்காலும் ஜீவனிடத்துப்பொருந்த இருபுற வடியின்மீதிலும், இரண்டங்கையுஞ்சேர்த்து, மார்பு நெறித்துத் தலைநிமிர்ந் திருத்தலாகிய குக்குடாசன முதலிய ஆசனங்களுஞ் சிலவுள.

"பிராணயாமம்" என்பது இருவகைப்படும். அவையாவன. (1) சகர்ப்பம் (2) சுகர்ப்பம், என்பனவாம்.

1-வது "சகர்ப்பம்"| என்பது தியானத்துடன் மூச்சைப் பிடிப்பது.

2-வது "சுகர்ப்பம்" என்பது தியானமின்றி மூச்சைப்பிடிப்பது. இந்த இரண்டுவகையும், இரேசக பூரக கும்பகமாம். இன்னும் பலவிதமாயுமிருக்கும்.

"பிரத்தியாகாரம்" என்பது—[யோகார்த்தம்] மனத்தை யிந்திரிய விஷயங்களிற் செல்லவொட்டாமல், லக்ஷயத்தில் நிறுத்தல் [ஞானார்த்தம்] ஸர்வம் பிரம்மமயமாய்ப் பார்ப்பதெனல். பிரம்மநிஷ்டைகள் சொல்லுதல் வேதத்திற் சொல்லிய நித்திய நைமித்திய காமியங்களைப் பிரம்மாராதனமென்று செய்யுதல். தேகத்தை நானென்று நினைத்திருத்தல்.

"தாரணை" என்பது—[யோகார்த்தம்] தேகாகாசத்தை வெளியாகாசமாகவும், தேகவாயுவை வெளிவாயுவாகவும், தேகத்தீயை வெளித்தீயாகவும், தேகநீரை வெளிநீராகவும், தேகமண்ணை வெளிமண்ணாகவும் நினைத்திருத்தலும். பாதமுதல் முழங்கால்வரையில் "பிருதுவிபாகம்" பிரமனாகவும், முழங்கால்முதல் தொப்புள் வரையில் "ஜலபாகம்" விஷ்ணுவாகவும், நாபிமுதல் மார்புவரையில் "அக்கினிபாகம்" உருத்திரனாகவும், மார்புமுதற் புருவம்வரையில் "வாயுபாகம்" மஹேஸ்வரனாகவும், புருவமுதற் சிரசுவரையில் "ஆகாசபாகம்" சதாசிவமாகவும் நினைத்திருத்தலும், மனதிற்குச் சந்திரன், காதிற்குத் திக்கு, தோளுக்கு விஷ்ணு,

வாக்குக்கு அக்நி, குதத்திற்கு மிருத்யுவு, உபஸ்தத்திற்குப் பிரஜாபதி, தொக்குக்கு வாயு, கண்ணுக்குச் சூரியன், நாவுக்கு வருணன், மூக்குக்குப் பூமிதேவி, புருஷனுக்கு அந்தரியாமி அதிஷ்டான தேவதையென்று புந்தியிற் றரித்தலுமாம். [ஞானார்த்தம்] தேகாதிபதிப் பிரபஞ்சமாகிய பஞ்சபூதங்களை மஹாபூதங்களிலொடுக்கி மஹாபூதங்களை மாயையிலொடுக்கி, மாயையை ஆத்மசொரூபத்திலொடுக்கி, தான் சின்மாத்திரனென்று மனதிற் றரிப்பதுவும், நான் தேகாதிகளுமன்று, அதற்குரித்தாகிய மாயையுமன்று, நான் சின்மாத்திரனென்று ஒடுங்கிநிற்பதும் பரமதாரணையாம்.

“தியானம்” என்பது—[யோகார்த்தம்] மனதை மூர்த்தி வடிவமாக்கி, மற்றொன்றிலும் பொருந்தாமற் செலுத்துதல். [ஞானார்த்தம்] தேகாதீதமாயும், திருக்குருபமாயும் இருக்கின்ற சின்மாத்திரத்தை, நானென்று தியானிப்பது பரமதியானமாம். இப்படித்தியானிக்கிறவனை சாக்ஷாத் பரமசிவனென்னப்படும்.

“சமாதி” என்பது—[யோகார்த்தம்] சிவனுக்கும் பரனுக்கும் ஐக்கிய பேதக்கியானம் பிறப்பதேயாம். [ஞானார்த்தம்] நான் சாக்ஷாத் சிவரூபனாகையாலே, நான் தேகாதிகளல்லன். நான் பரமசிவனென்ற புத்தியும், பிரமாண்ட பிண்டாண்டங்களை ஸ்தூலபஞ்ச பூதங்களிலொடுக்கி, அந்தப் பூதங்களை அபஞ்சீகிருத பூதங்களிலொடுக்கி, அவித்தாகிய தன்மாத்திரைகளை மாயையிலொடுக்கி, அம்மாயையைப் பிரத்தியேகாத்துமாவிலொடுக்கி அவ்வாத்துமாவாகிய நானே பிரமம், நான் சமுசாரியல்லன், என்னைவிட வேறேயில்லை யென்று அறிவதும், பிரணவசொரூபமான விஸ்வேஸ்வர பகவானை மூன்றுவர்ணங்களாகப் பாவித்து, அம்மூன்று வர்ணங்களையும், இருக்கு, தைத்திரீய சாமரூபங்களாகப்பாவித்து, அம்மூன்று வர்ணங்களையும், பிரம்மா, விஷ்ணு உருத்திரனாகப்பாவித்து, அந்த வர்ணத்தினுடைய நாதத்தை காரண விஸ்வேஸ்வர பகவானாகப் பாவித்து, அம்மூன்று வர்ணங்களையும், ஆஹவனீயம், காருகபத்தியம், தக்ஷணாக்கினியம் என்ற மூன்று அக்கினியாகவும், பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் என்ற மூன்று லோகமாகவும், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற மூன்று அவஸ்தையாகவும், சுவர்க்க, மத்திய, பாதலம் என்ற மூன்று ஸ்தானங்களாகவும் பாவித்தலாம்.

(தொடரும்).

## கம்பர் பிறப்பு.

“சத்தியவசனன்” எழுதியது.

கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் என்பாரின், கர்ணபரம்பரையாக எனக்கு வந்த, சரித்திரத்தை ஈங்கு விளக்கப்புகுந்தேன்.

விக்ரமாதித்திய மகாராஜாவின் விசாலித்த இராச்சியம் உயரிய நிலைமையைநீத்து தாழ்ந்த நிலைமையை அடைதற்கேதுவாக நேர்ந்த கலாபனையில், அத்தேசத்திலிருந்த குடிகள் உயிர்தப்பிப் பிழைக்கத் தேசந்தேசமாய் ஓடிச்சென்றார்கள். அப்பொழுது அவ்விராச்சியத்தில் ஓர் பகுதியாகிய, தற்காலத்தில் கர்நூல் எனப் பெயரிய மாகாணத்தில், கம்பம் என்கிற ஊரிலிருந்து ஓர் இராஜவம்சத்து மெல்லியல் கர்ப்பிணியாய்த் தென்தேசத்தை நோக்கிச் சென்றனள். காடுகளையும் மலைகளையும் கடக்க நேர்ந்ததால் கஷ்டமதிகமடைந்து கடைசியாக நகரங்களுக்குள் சிறந்த காஞ்சீபுரத்தைச்சார்ந்த மாவண்டூர் என்கிற ஓர் சிற்றூரை அவள் அடைந்தான். அவ்வூரில் அக்காலத்தில் மனுவம்சத்தில் சகல சாஸ்திர பண்டிதராய் ஓர் குருஸ்வாமிகள் வதிந்திருந்தனர். அவருடைய பாண்டித்யம் காஸ்மீரதேச முதல் கன்னியா குமரிவரையில் பிரசித்தமா யிருந்தது. அவர் ஆசார வியவகாரங்களில் மேம்பட்டவர். பிரதிதினமும் உஷக்காலத்தில் ஸ்நானம் செய்து சந்தியாவந்தன ஜபதபங்கள் முடித்து தேவயக்ஞம் பிரமயக்ஞம் பிதுர்யக்ஞம் வைஸ்வதேவம் முதலிய ஹோமாதி கிருத்தியங்களைச் சாஸ்திரோக்தமாய் ருத்திரநமகசமக பாராயணங்களோடு வழுவின்றி நடத்தி லோகசம்ரக்ஷணார்த்தத்திற்குரிய அயத்தொழிலைச் செய்தற்கு ஹோமம் வளர்த்து அக்னிதேவதையை ஆராதித்து தனது உலையில் பஞ்சகிருத்திய தீவளர்த்து ஆன்மகோடிகள் உய்தற் கேதுவாகிய அயத்தொழிலை நடத்திவந்தனர். ஒழிவுள்ள காலங்களில் வால்மீக, வசிஷ்ட, போதாயன இராமாயணங்களை, நவரசங்களும் தோன்றப் பிரசங்கம் செய்து வந்தனர்.

அவர் மேற்சொல்லிய கர்ப்பிணியைக் கண்ணுற்றதும் அன்புமயமாகி தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்று உண்டி முதலிய வற்றால் உபசரித்து தன் பெண்மகளைப்போல் அன்புபாராட்டி யின்புற்றிருந்தனர். நாளடைவில் அக்கர்ப்பிணியும் அவரைத் தன்



தந்தைபோல் பாவித்து, தன்னால் செயத்தக்க சரீரப் பிரயாசையால் அவருக்கு உபசாரம் செய்துவந்தனள். அப்படி நிகழும் காலத்தில் அவ்வரசகுலக் கொடியானவள் ஓர் ஆண்மகனைக் கருவுயிர்த்தனள். குழந்தையும் தாயும் தெய்வகடாக்ஷத்தால் சரீர சௌக்கியமுடையவர்களாய்ச் சிலகாலம் கழித்தனர். அவ்வூரார் குழந்தையைக் “கம்பன்” “கம்பன்” என்று அழைப்பதற்கு ஆரம்பித்தனர். கம்பம் என்கிற ஊரிலிருந்து வந்தமாதுசிரோமணியின் உதரத்தில் உற்பவித்ததனால் கம்பன் கம்பன் என்று அழைத்தார் போலும். அஃதின்றேல், அம் மனுஸ்வாமிகள் கம்பன் என்னும் செல்வப் பெயரால் அழைக்கப்பட்டிருந்தனராம்; அக்காரணமாய் அவர் வீட்டுக்குழந்தையைக் கம்பன் கம்பன் என்றழைத்தனர் போலும். நம் மனுஸ்வாமிகளுக்கு கம்பன் என்னும் செல்வப்பெயர் எங்ஙனம் வந்ததோவெனின், இவருடைய வம்சத்தார் கச்சியில் திருவேகம்ப முடைய ஏகாம்பரநாதர் திருவடிகளில் ஆறுவன்பினை யுடையராதலால் அச் சந்ததியிற்றோன்றிய இவரை “திருவேகம்பம்” “திருவேகம்பம்” என அழைத்தார்கள். அவசரவிளிக்கூற்றில் திருவே என்பதை நீத்து கம்பம் கம்பம் எனச்சுருங்க வைத்தனர்போலும், கம்பம் என்பது கம்பன் என வந்தது என்னையோவெனின் சமம் என்பது சமன் என்றாவதுபோல் மகர னகரப் போலியை எய்தியது என்க. அஃதன்றி னகரவொற்று ஆண்பாலைக்குறிக்கும் பெயர் விகுதி யெனினும் ஒக்கும். இவ்விதப் பொருத்தமான உண்மைவிளக்க வாசகத்திற்கும் கம்பங்கொல்லையைக் காத்ததனால் கம்பன் என்று அழைக்கப்பட்டார் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை உலகினர் அறிந்து உண்மை கடைபிடிப்பாராக.

கம்பன் என்னும் பெயரை வகித்ததினால் கம்பர் சைவசமயத்தினரே யாவர். சக்ரவர்த்தி திருமகனார் சரித்திரத்தைச் செய்த காரணத்தால் வைணவர்கள் கவிச்சக்ரவர்த்தியார்க்குக் கம்பநாட்டாழ்வார் என்று திருநாமம் சூட்டினாரேனும், அஃது கம்பனென்ற சைவநாமத்திற்கு முரணாக நிற்றலை அறிவுடையோர் அறிவர். விநோதரசமஞ்சரியில், கம்பராமாயணத்தை ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றியபோது, வைணவப்பிராமணர்கள் மாவண்டூர் சாஸ்திரியாராகிய



மனுஸ்வாமிகளின் கையொப்பமின்றி அங்கீகரிக்க மாட்டோமென, அவ்விதமே கம்பர் அம்மனுஸ்வாமிகளது கையொப்பத்தைக்கொணர்ந்தனர் என்று மாத்திரம் விவரித்திருக்கிறது. அதினாலேயே கம்பருக்கும் மாவண்டூர் சாஸ்திரியாருக்கும் சம்பந்தம் உண்டென்பது அங்கைமேவு கனிபோல் விளங்கும். குழந்தைப் பருவத்தில் அவரது ஆதரவில் இருந்ததற்குப் பிரதி உபகாரமாக, “கர்னமகாராஜா தன் சுவல்ப ஜீவகாலத்திற்கூட பகற்காலத்திற்றான் கொடைபுரிந்தான், காவேரியானது ஆறுமாதந்தான் ஆன்மகோடிகளுக்கு ஜலம் கொடுக்கிறது. மற்ற ஆறுமாதம் வற்றியிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் குழந்தைப்பருவத்தில் தங்கள் பசியின் கோரத்தைப்பார்த்து முலையூட்டி வளர்ப்பது அவரவர்கள் தாய்மார் என்றாலும் அத்தாய்மாரும் குழந்தைப்பருவம் நீங்கின் முலைப்பால் அருத்துவிக்கிறார்களில்லை. சாஸ்திரங்களுக்கு நிதியாயிருக்கின்ற மாவண்டூர்க் கம்பன் எனும் மனுஸ்வாமிகள் என்றாலோ, உலகத்தோற்றமுதல் ஆன்மகோடிகளெல்லாம் உலையையும் அயத்தொழில் செய்யும் கூடத்தையும் நோக்க அம்மனுஸ்வாமிகள் பரம்பரையார் கார்முனை கதிர்முனை எழுத்தாணிமுனை ஈட்டிமுனை என்னும் பிரம க்ஷத்திரிய வைஸ்ய சூத்ரஜாதியர்களுக்கு வேண்டிய உபகரணங்களைச் சிருஷ்டித்துத்தர உலகம் நிலைபெற்று இருக்கிறது என்று பொருள்படுமாறு,

“கன்னன் பகலறிதி காவேரி பாதிநாள்
அன்னை முலைகொடுப்ப தக்காலம்—இன்னம்
கலையேந்து மாவண்டூர்க் கம்பனெனுங் கொல்லன்
உலையேந்தி நின்றதிவ் வுலகு”.

எனக் கம்பர் தமது நன்றியறிதலை விளக்கியிருக்கின்றனர்.

---

**குண்டோதரக் குழந்தை.**—மலையாளத்தில் ஒரு ஸ்திரீ அதிசயமான ஒரு குழந்தையைப் பெற்றாள். அதற்குப் பிறக்கும்பொழுதே வாய்முழுதும் பற்களிருந்தனவாம். அது நான்கு வயதானவுடன் அதன் முகம் 30 வயது சென்ற வாலிபர்கள் முகம்போலக் காணப்பட்டதாம். அதற்குப் பசியுண்டாகும்பொழுது பக்கத்திலுள்ளவர்களைப் பார்த்துச் சீறுகிறதாம். அது ஆகாரமும் அபரிமிதமாய் உட்கொள்கிறதாம்.

## வேதாத்தியயன பாடசாலைகள்

ஸ்ரீ தி. குருசாமி ஆச்சாரியார், அரக்கோணம்.

1. இப்பெயர்கொண்டு இரண்டோரிடத்தில் தற்காலம் நடத்தப்பட்டுவரும் பாடசாலைகள் எவ்வளவுதூரம் குலோத்தாரணத்திற்குச் சாதகமாயிருக்கின்றன வென்னும் விஷயத்தை ஆராய்ச்சி செய்யும்படி சபையார் தூண்டியிருப்பது வெகு நல்ல காரியமே யாகும். "வைதிகக் கல்வி"யென்னும் வியாசத்தில் வெளியிடப்பட்டிருக்குங் கருத்துகளைப்பற்றி குலச் சிரேஷ்டர்களுடைய அபிப்பிராயங்களைச் சபையார் கார்டு மூலமாய்க் கேட்டிருப்பதினால், அவரவர்கள் தம்மபிப்பிராயத்தை வெளியிடுதல் அவஸ்யமா யிருக்கிறது. வைதிகக்கல்வி நமக்கு அத்தியாவஸ்யமா யிருக்கிறதென்பதை டை வியாசத்தின் 5-வது பாராவில் சபையார் வற்புறுத்தி யிருப்பதுகண்டு சந்தோஷிக்கிறேன்.

2. ஆசாரச் சீர்திருத்தத்திற்காக வேதாத்தியயன பாடசாலைகள் வேண்டுமென்பது பிசகு. நல்லொழுக்கமும் நற்குணங்களும் பிறவியிற்சித்தித்து சகவாசத்தால் வளர்ந்து கல்வி கேள்விகளால் முதிர்ச்சிபெறும். நமது சிறுவர்க்கு இவை படியவேண்டுமானால், அவர்கள் பிறந்த குடும்பங்களைச் சீர்திருத்தவேண்டும். இதனாலும், பத்திரிகைகள் பிரசங்கங்கள் முதலியவற்றாலும் ஆசாரசீர்திருத்த முண்டாகவேண்டுமேயல்லாமல்நமது வேதாத்தியயன பாடசாலைகளாலாகாது. ஆசாரத்திற் சிறந்தவர்களாய்க் காணப்படுஞ் சைவவேளாளர்கள் வேதாத்தியயன பாடசாலைகளால்தானோ சிறப்படைந்தனர்? நல்லொழுக்கமுடையவர்களாயுள்ள பல ஜாதி ஸ்திரீ புருஷர்கள் எந்த வேதாத்தியயன பாடசாலையிற் படித்தார்கள்?

3. வேதாத்தியயன பாடசாலைகளை ஊரூராய் நியமிக்கவேண்டுமென்றும், ஓரூரிலேயே பல பேட்டைகளில் நியமிக்கவேண்டுமென்றுஞ் சொல்லப்படுவதினால், இப்பாடசாலைகள் சமீபத்திலிருப்பவர்களுக்கு மட்டுமே உபயோகமாகுமென்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்தக் கணக்கின்பிரகாரம், சென்னையென்னும் ஒரு பட்டணத்திற்கே குறைந்தபக்ஷம் 15 வேதாத்தியயன பாடசாலைகள் வேண்டும். தென்னாட்டுப் பல பட்டணங்களுக்கும் கிராமங்களுக்குமாக மொத்தத்தில் 500 பாடசாலைகளாவது தேவையாகலாம். ஒவ்வொன்றின் மாதவாரி செலவுரூபா 10 என்று வைத்தாலும் மொத்தத்தில் மாதமாதம் 5000 ரூபாய் வேதாத்தியயன பாடசாலைச் செலவுக்கு வேண்டும். இவ்வளவுபணம் எங்கிருந்து கிடைக்கப்போகிறது? கிடைக்காவிட்டால், எல்லாருக்கும் வேதாத்தியயன பாடசாலைகளினாற் சித்திக்கலாமென்று எண்ணப்பட்டிருக்கும் நன்மைகள் சித்திக்காமற் போய்விடுமல்லவா?

4. அவலை நினைத்துக்கொண்டு உரலை யிடிப்பவர்களைப்போல, வேதாத்தியயன பாடசாலைக்காரர் நமது குலத்திற்கு ஏதோ நன்மை செய்யவேண்டுமென்ற எண்ணங்கொண்டு, இவற்றை முதலில் ஸ்தாபித்து விட்டார்கள். இவர்களுடைய நல்லெண்ணம் மெச்சத்தகுந்ததே! நமக்கு ஏற்படும் விசாரமெல்லாம், இந்தப் பாடசாலைகளால் எவ்வளவு பிரயோசன முண்டாகிறது என்பதே யொழிய வேறுகிடையாது. அதை யெடுத்துக்காட்ட பாடசாலை ஸ்தாபகர்களாலும் அபிமானிகளாலுமே ஆகவில்லை யென்றால், இந்த பரிதாபத்தை என்னென்று சொல்லலாம்! வேதாத்தியயன பாடசாலைகள் நமது நன்மைகளுக்காகவே தோன்றியவை என்கிறார்கள். அந்த நன்மைகள் எவை? ஒரு பாடசாலைக்கெல்லாம் ஒருவன் "நாலுஞ் சுபாசுப சடங்குகள் நடத்துவேன்" என்று அரைகுறையாய்ச் செய்து விட்டானானால், அதனால் ஜாதிக்கே சிலாக்யமேற்பட்டு விடுமோ? பாடசாலையின்மீது செலவாகும் பொருளுக்கெல்லாம் பிரயோசனம் இவ்வளவேதானா? பத்தூர்களுக்கும் ஒரு பௌரோகிதன் கிடைக்காமல் திண்டாடுவோருடைய குறை இப்பாடசாலைகளால் தீர்ந்ததா, அன்றி இனியேனுந் தீரப்போகிறதா? அன்றி இப்பாடசாலைகளால் ஒரு சாஸ்திரபண்டிதனாவது உற்பத்தி செய்யப் பட்டானா? செய்யப்படக் கூடுமென்ற நம்பிக்கையாவதுண்டா! ஒன்றுமே காணோம். செலவான பொருளோ அதிகமென்றே சொல்லப் படுகிறது என்ன பிரயோசனம்?

5. நமது வம்ஸத்தார்களில் பலபேர் சந்தியாவந்தனஞ் செய்யவுந் தெரியாம லிருக்கிறார்களானால், அவர்களுக்கு வைதிகப் பழக்க முண்டு பண்ணும் வழி வேதாத்தியயன பாடசாலை ஸ்தாபகமல்ல. ஒவ்வொரு குடும்பத்தாரும் தமது ஆண்பிள்ளைகளுக்கு யுக்தகாலத்தில் உபநயனஞ் செய்யும்படி நிர்ப்பந்தஞ் செய்யவேண்



டும். இது நேர்வழி. பெரியவர்கள் நித்யகர்மாநுஷ்டானங்களைத் தவறாமல் செய்து வரும் வீடுகளிலேதான், சிறுவர்களுஞ் செய்துவரப் பார்க்கிறோம். ஆதலால், பந்துக்கட்டு ஏற்பாட்டில் இதற்கான பிரயத்னஞ்செய்ய வேண்டும். அது நடப்பது கஷ்டமென்றால்,வேதாத்தியயன பாடசாலைகள் மூலமாய்த் திருத்துதல் அதிலுங் கஷ்டம், பொருளுக்கும் நஷ்டம்.

6. நாட்டுக் கோட்டைச் செட்டிகள் ஆருஷேயருக்காக ஸ்தாபித்திருக்கும் பாடசாலைகளுக்கும் நமது வேதாத்தியயன பாடசாலைகளுக்கும், கஜத்திற்கும் அஜத்திற்கு முள்ள வித்தியாசத்தைக் காணலாம். அவை நாள் முழுவதும் நடைபெற்றிருப்பவை, இவை காலை மாலைகளில் மாத்திரமே நடப்பவை. அங்கு படிப்போர் வைதிக விருத்திக்கென்றே முத்திரை போடப்பட்டவர்கள், இங்குபடிப்போர் லௌகிக விருத்திற்கென்றே முத்திரை போடப்பட்டவர்கள். அந்தமாணுக்கர்கள் வைதிககுடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இம்மாணுக்கர்கள் என்னமோ அறியேன். அவர்கள் கல்விகற்று பாஷாஞானமடைந்தவர்கள், இவர்கள் நிரக்ஷரகுக்ஷிகளாகவோ அப்போதுதான் படிக்கத் தொடங்குகிறவர்களாகவோ இருக்கிறார்கள். அவர்கள் வைதிக விருத்திக்கேற்ற வயசுடையவர்களா யிருக்கிறார்கள், இவர்கள் கோலி விளையாடுஞ் சிறுகுழந்தைகள். அவர்களுடைய நடவடிக்கைகள் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் உபாத்தியாயர்களுடைய கவனத்திலிருக்கின்றன, இவர்கள் வீட்டுக்குவந்தால் குடும்பப் பழக்கமும் வேலைக்குப்போனால் பட்டரைப்பழக்கமுங் கொண்டு வாழ்பவர்கள். இன்னும் எண்ணிறந்த வித்தியாசங்களிருக்கின்றன.

7. அவ்வித நாட்டுக்கோட்டைச்செட்டிப் பாடசாலைகளில் வாசிக்கிறவர்கள் யார்? ஊரிலிருக்கும் பார்ப்பாரெல்லாருமா படிக்கிறார்கள்? இல்லை யில்லை. வைதிக ஜீவனஞ்செய்ய விருப்பமுடையவர்கள் மாத்திரம் படிக்கிறார்கள். மற்றவர்கள் எங்கே படிக்கிறார்கள் தெரியுமா? ப்ரஸிடென்ஸிகாலேஜ், கிரிஸ்டியன்காலேஜ் முதலான இங்கிலீஷ் பாடசாலைகளிற் படிக்கிறார்கள். வைதிகப்பாடசாலையிற் படிப்போர் ஆயிரத்தில் ஒருவரானால், மற்ற தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேர்களும் லௌகிக பாடசாலைகளிற் படிக்கிறார்கள். பார்ப்பாரே இப்படி நடக்கும்போது, நமது ஜாதிக்குமட்டும் தெருவுக்கொரு வேதாத்தியயன பாடசாலை யேதுக்கு? ஐயோ, இது வீணான வேலை. நமது வம்ஸப் புரோகிதக்குறைவை நிறைவாக்கிவிட்டாற் போதாதா? அதற்காகவா ஐந்நூறு பாடசாலைகள் வே வேண்டும்? ஒன்றேபோதுமே! அவ்விதப் பாடசாலையொன்றுக்கு இந்த 500 பாடசாலைகளும் ஈடுசொல்லுமா? ஒன்பது லக்ஷம் நக்ஷத்திரங்களானாலும் ஒரு சந்திரனுக்கொப்பாகாதே!

8. ஆதலால், குலாபிமானிகளே! வேதாத்தியயன பாடசாலை யென்னும் பெயர்கேட்டு மலைத்துவிடாதீர்கள்! அதன் உபயோகத்தையும், நமது ஜாதி நிலைமையையும், ஊரார் நெறிகளையும் ஆராய்ந்து நடவுங்கள். மற்ற ஜாதியார்களிலும் நம்மவர்கள் சிறப்பு குன்றி யிருக்கிறார்களென்னும் உணர்ச்சியினால்தானே இப்போது நமக்குள் உற்சாக முண்டாயிருக்கிறது? இந்தக் குறைவு எவ்வகைகளி லுண்டாயிருக்கிறது? அந்தஸ்திலும், மரியாதையிலும், ஒழுக்கத்திலும், கல்வியிலும், செல்வத்திலும் இவைபோன்றவைகளிலு முண்டாயிருக்கிறது. இந்தக் குறைகளை நீக்கத்தானே நாம் பிரயாசைப்படவேண்டும்? சரி, கல்வியுண்டானால், அந்தஸ்து மரியாதை ஒழுக்கம் செல்வம் எல்லாமு முண்டாகும். எந்தக்கல்வி? இங்கிலீஷ் கல்வியே! ஆதலினாலேதான், எல்லா ஜாதியார்களும் இங்கிலீஷ்படித்து, பாஸ்செய்து, உயர்ந்த உத்தியோகங்களிலமர்ந்து, அதிக சம்பளம்வாங்கி, மற்றவர்களால்மரியாதை செய்யப்படும் அந்தஸ்தை யடைகிறார்கள். கவர்னர் கௌன்ஸில் மெம்பராகலாமா, ஹைகோர்ட் ஜட்ஜாகலாமாவென்று மற்ற ஜாதியார்கள் போட்டிபோட்டுப் பந்தயமோடும்போது, நாம் "இங்கிலீஷ்படிப்பேதுக்கு, வேதாத்தியயன பாடசாலைச் சப்தத்தில்பிரமித்து நின்றுகொண்டிருந்தாலே ஆகாயத்தை யெட்டும் அந்தஸ்து பெறலாம்" என்று கனாக்கண்டு கொண்டு காலங்கழித்தல் பரிகாசமொன்றுக்கே இடந்தரும். கும்பிகூழுக்கழும்போது, கொண்டைக் கொருபணங் குறுவேர் வேண்டுமோ? கொடுத்தவன் கணக்கையெழுதிவைக்கத் தெரியாத குலத்தார்க்கு, வேதாத்தியயன மில்லாமற் கெட்டுப்போனதென்னமோ தெரியவில்லையே! ஊருக்கெல்லாம் ஒருவழியானால் நமக்கு வேறுவழியா? குலச்சகோதரர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் யுக்தா யுக்தங்களைக் கவனித்து நடந்துகொள்ளுங்கள்; பிடிவாதங்கொள்ளவேண்டாம்; பின்னுக்குச் செல்லவேண்டாம், முன்னுக்கு வாருங்கள். நமது சபையார் நமக்குத் தக்க புத்திமதிகளைச் சொல்லி நடத்திவருகிறார்களென்று நம்பி அவர்களைப் பின்பற்றி வாழுங்கள்.

## புலாலுண்ணல் புண்ணியர்க்கழகல்ல

கொல்லாவிரதம் குவலயமெல்லா மோங்கச் செய்வதில் நம்மவர்கள் பிரவர்த்திக்க அவர்களுக்குத் துணையாயிருக்குமாறு கீழ்க்கண்ட வியாசத்தை "Self Culture" என்னும் பத்திரிகையிலிருந்து பெயர்த்துப் பிரசுரிக்கலானேம்:—

"கொல்லாவிரதமொன்றகொண்டவரேநல்லோர்மற்
றல்லாதார்யாரோவறியேன்பராபரமே"

புலாலுண்ணலாவது உயிர் நீங்கிய மாமிசத்தை உண்ணுதலாம். மாமிசம் கொலையினலகப்படுதலால் அதனை உண்ணுதல் கொலைபாவத்தின் காரியமாகும். மாமிசத்தை ஒருமுறை உண்டவன் கொலைவாயிலாகப் பின்னும் அதனை விரும்புதலால், மாமிசம் உண்ணுதல் கொலைப்பாவம் விருத்தியாதற்குக் காரணமுமாகும். ஆகவே, மாமிசம் உண்ணுதல் கொலைப்பாவமொன்றேடமையாது, அதன் விருத்திக்கும் காரணமாகிப் பகுத்தறிவுடைய மனிதப்பிறப்பினர்க்கு இன்றியமையாது வேண்டப்படும் "அருளுடைமை', என்னும் குணம் உண்டாகாமற் செய்து விடுகிறது.

சிலர் "நாங்கள் மாமிசத்தைப் புசித்தோமாயினும் உயிர்களிடத்து அருளுடையோம்" என்று புகல்கின்றனர்கள். அருளுடைமையாவது தனக்கு உண்டாகும் இன்பதுன்பங்களைப் பொருட்படுத்தாமல், பிறவுயிர்களுக்கு உண்டாகும் நன்மையையே நாடுதலாகும். அவ்விதம் அவர்கள் பிறஜீவர்களுடைய நன்மையைக் கருதுவது உண்மையாயின், அவர்கள் அன்றே பிறவுயிர்களைக் கொல்லுவதாற் கிடைக்கப்படும் மாமிசத்தை உண்ணுதலையும் விலக்கியிருப்பார்கள். ஆகவே, மாமிச உணவை விலக்காமல் "நாங்கள் அருளுடையோம்" என்று சொல்லுவது நாடகமாத்திரமேயாவதன்றி உண்மையன்றென்பது தெள்ளிதிற் றுணியப்படும். இது பற்றியே திருவள்ளுவநாயனர் தாமியற்றிய பொதுமறையின்கண் "அருளுடைமை"க்குப் பின் "புலால் மறுத்தல்" என்னும் அதிகாரத்தை வைத்துக் காட்டியும், "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூ னுண்பான், எங்ஙனம் ஆளும் அருள்" எனவிளக்கியும் கூறினர்.

பஞ்சமாபாதகங்களாகிய கொலை, களவு, கள், காமம், பொய் என்பனவற்றுள் மிக்ககொடியபாவம் கொலைப் பாவமே யாகும். உலகத்தில் புலாலை உண்பவர்கள் இல்லையானல், புலாலை விற்றற்பொருட்டுக் கொலை செய்பவர்களுமில்லை. "தினற் பொருட்டா கொல்லாதுலகெனின்—யாரும், விலைப்பொருட்டா லூன்றருவாரில்" என்பது தேவர் திருமறை. ஆகவே, பஞ்சமாபாதகங்களுள் தலைமையாகிய கொலைப் பாவத்திற்கு புலாலுண்ணல் காரணமாக இருக்குமாயின் அஃது எவ்வளவு பெருங் கொடும்பாவமாகும்!

"உயர்ந்த ஜாதியாரென்று சொல்லப்படும் நாம் நம்மினும் தாழ்ந்த ஜாதியாரென்று சொல்லப்படுவர்களிடத்தே ஜலபானம் பண்ணினும், நாமும் தாழ்ந்த ஜாதியாரென்று சொல்லப்படுபவர்களோடு உடன் சேர்ந்தவராக மதிக்கப்படுவோம்" என்று அஞ்சி நடக்கின்றவர்கள் பன்றி, கோழி முதலியவற்றைப் புசிக்கின்றார்களே! அவர்கள் தம்மை யாரென்று மதிக்கின்றார்களோ? அயல் வீட்டிலே பிணங்கிடந்தால் போஜனம் செய்வதற்கு மனம் பொருந்தாதவர்கள், மிருகம் பக்ஷி முதலியவற்றின் பிணத்தைக் கலத்திலே படைத்துக்கொண்டு புசிக்கின்றார்களே! உண்ணும் அன்னம், தண்ணீர், ஊறுகாய் முதலியவைகளிலே மயிர், எறும்பு, புழு முதலியவைகளைக் கண்டால் மிக அருவருத்து உண்ட சோற்றையும் கக்கும் மனிதர்கள், மற்றை மாமிசங்களைப் புசிக்கின்றார்களே! அந்தோ! அந்தோ!! இஃதென்ன பேதமை!!! மனிதர்களுடைய பிணங்களை அடக்கஞ் செய்வதற்குப் பூமியில் சுடுகாடுகள் அமைந்தவாறுபோல மிருகம், பக்ஷி, மச்சம் முதலியவற்றின் பிணங்களை அடக்கஞ்செய்தற்கு ஜீவ தயையில்லாத மனிதர்களுடைய வயிறுகளே அமைந்துகிடக்கின்றன.

சிலர் 'மாமிசம் உண்ணுது விடுவோமாயின் எங்கள் உடம்பு மெலிகின்ற' தெனக்கூறுகின்றார்கள். நெடுங்காலமாகப் புலாலுண்டு வந்த மேல்நாட்டார்கள், புலாலுண்ணுதல் பல நோய்கள் உண்டாவதற்குக் காரணமெனக் கண்டு தற்காலம் காய், கனி, கிழங்கு முதலியவற்றையே உபயோகிக்கின்றார்கள். அங்ஙனம் உபயோகித்து வந்தமையால் அரோக திடகாத்திரமும் நீடிய ஆயுளும் பெற்றதாக அவர்களே கூறுகின்றார்கள். ஆதலால், புலாலைக் கைவிடுவதால் உடல் மெலிகின்றதென்பது சிறிதும் பொருந்தாவுரையாம்.

சிலர் இப்பொழுது காணப்படும் வேதத்திற் குறிக்கப்பட்ட யாகத்தில் கொன்ற மிருகத்தின் மாமிசத்தை



உண்ணுதல் புண்ணியமென்பர். நமது தமிழ் வேதத்தில் "அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்ற னுயிர்செகுத் துண்ணுமை நன்று" என்றருளிச் செய்யப்பட்டிருத்தலால், அவ்யாகம் சிறப்பில்லாமை தெரியலாகும். யாகத்தைச் செய்தவர்கள் இந்திர உலகிற்சென்று இன்புற்று, அது கவிழ்ந்த அளவில் தாம் செய்த கொலையின் பயனுக மலைப்பாம்பாகப் பூமியில் விழுகின்றார்களென்று நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும் நூல்கள், கொலை செய்தவரும், புலாலை விற்றவரும், புலாலை விலைக்கு வாங்கினவரும், புலாலைப் புசித்தவரும், புசிப்பித்தவருமாகிய எல்லாரும் பாவிகளே எனவும் முறையிடுகின்றன. ஆதலால் புலாலையுண்டு பாவிகளாய் நாகத்திலே நெடுங்காலம் துன்பம் அனுபவித்தல் நன்றே; புலாலை யுண்ணுமல் தங்கள் உடம்பை வாட்டியேனும் நித்தியமாகிய முத்தியின்பத்தைப் பெற்று வாழுதல் நன்றே, என்பதனை நன்கு அறிதல் வேண்டும்.

இதனுல் புலாலுண்ணல் யாருக்கும் எவ்வகையானும் தக்கதன்றென்பதும், புண்ணியர்களாகிய மக்கட்பிறப்பினர்க்கு அதனை நீக்குதலே அழகென்பதும் பெறப்பட்டன.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிரும் தொழும்".

மூ. பொன்னம்பலம். தூத்துக்குடி.

---

சிலமாதங்களுக்குமுன் ஒரு ஸ்டீமரிலொரு வேடிக்கை நடந்தது. அது செல்லும்போது கடல் கொஞ்சங் கொந்தளிப்பாயிருந்தது. ஓர் யௌவனஸ்திரீ நல்ல உடையணிந்து கொண்டு ஒழுங்காயிருந்தவள் திடீரென்று கடல் நோய் கொண்டவள்போல் இருமிக் குமுறிக்கூச்சலிட்டுப் பதைபதைத்துப் பரிதவித்தனள். இவளைக் கண்டோரெல்லாம் பரிதாபமுறலாயினர். உடனே ஸ்டீமர் முழுவதும் இதே பேச்சாயிற்று. மற்றொரு மூலையிலிருந்த புருஷனொருவன் இதைக்கேட்டதும், தான் மருந்தளிப்பதாக ஓடிவந்து தன்பையை யவிழ்த்து ஒரு மருந்துப்பில்லை கொடுத்தான். அதை அவள் சாப்பிட முணுமுணுத்துப் பலர் தொந்திரவின்மேல் வேண்டா வெறுப்பாய் உட்கொண்டாளாயினும், ஐந்து நிமிஷத்திற்குள் சிரித்தமுகத்துடன், ஷை மருந்தை மிகவுஞ் சிலாகித்துப் பேசினள். கப்பலிலிருந்தோரெல்லாம் ஆச்சரியமடைந்து அந்தமருந்தை ஆளுக்குக் கொஞ்சமாக விலைகொடுத்து வாங்கிக் கொண்டார்கள். அவனுக்கு சுமார் 10 பவுன் சேர்ந்தது. ஸ்டீமர் விட்டிறங்கியபோது ஷை ஸ்திரீ புருஷர்கள் கைகோர்த்துச் செல்ல எல்லோரும் இது வியாபார வித்தையெனக் கண்டுகொண்டனர்.

## குடந்தையில் கான்பரன்ஸும், ஸ்ரீசாலிவாடி புராதீனந் தருமபதியவர்களும் *

யாழ்ப்பாணம் பிறக்தர்
ந. சிவக்கொழுந்து ஆச்சாரியார்

விஸ்வப்பிரம்ம வமிசத்தார்செய்த தவப்பேருக விளங்கும்விஸ்வகர்மன் 9ம் சஞ்சிகை ஜூன் மாசத்தது 85ம் பக்கத்தில் குடந்தையில் கான்பரன்ஸ் குலப்பிரகாசம் என்ற தவிமகுடம்பூண்ட வியாசமொன்று ஸ்ரீசாலிவாடி புராதீனந் தருமபதியவர்களதாக வெளிவந்திருப்பதைக் கண்ணுற்றுப் பின்வருபவற்றைக் கூறவேண்டிய ஆவசியம் நேரிட்டது.

ஷை தருமபதியவர்களை அடியேன் அதிகமாயறிந்திலேன். திருநெல்வேலிப் பரசமயகோளரிநாத சுவாமிகள் மடம் ஒன்று நங்குலத்தார்க்குக் குரு ஸ்தானமாயிருக்கிறது என்று மாத்திரம் அறிவேன். ஷை தர்மபதி அம்மடத்தவரோ வேறொருவரோ அறியேன். ஷை தருமபதிகள் நமது குலப்பத்திரிகைகளுக்கு சில காலமாய் வியாசமெழுதுவதும் அறிவேன். அவர்கள் இதுவரையில் லௌகீக விஷயமாய் ஒன்றும் வரைந்தது அடியேன் கவனத்துக்கு வரவில்லை. மேலும் அவர்களுடைய குணதிசயங்களை யாரிடமுமறிய இத்தேசத்தில் சௌகரியப்படவில்லை. ஷை வியாசத்தில் அவர்கள் முற்பகுதியில் மேற்குலம் கீழ்க்குலம் என்றும் இருகுலமுமே சர்வசமயத்தாருக்கும் சம்மதியான தென்பதும் அவற்றை விரித்து விளக்கி யிருப்பதும் தற்கால ஐரோப்பிய நாகரீக ஒழுங்கின்படியும் ஏற்றுக்கொள்ளத்தக்கதா யிருக்கிறது. இதனுல் தருமபதியவர்கள் தற்கால நாகரீக வித்யாவிலும் குறைந்தவர்களாகத் தோற்றவில்லை. **செயற்கை யறிந்தக்கடையும் உலகத்தியற்கையறிந்து செயல்** என்று நாயனர் சொல்லிய வாக்குக் கிலக்கான குணத்தையுடையவரா யிருப்பதைக் கண்டு பேரானந்தப்படுகிறேன்.

உன்னத நிலையிலுள்ள பெரியோர்மாட்டுச் சிறுகுற்றமேனும் நிகழுமாயின் சந்திரன்மேற் களங்கம்போன்று யாவருக்குந் தெரிந்துவிடுகிறதுமல்லாமல் துன்பத்தையுங் கொடுக்கின்றதன்றே?

---

* இவ்வியாசம், "சாலிவாடி புராதீனம் தர்மபதி" என்னும் வியாசங்கொண்ட 10-வது சஞ்சிகை வெளிப்படுமுன் எமக்குக்கிடைத்தது. ப. ர.

குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து—

என்றபடி அவர்கள் கான்பரன்ஸ் விஷயமாய்க் கூறிய தைக் கவனித்து ஆராய்ச்சிசெய்யவேண்டி வந்தது.

அவர்கள் கூறுவது—

“பொருள்பலம் கல்விபலம் இல்லாது நம் வம்சத்
“தார் பிரபல சமுதாயத்தார்களில், உத்தாரணமாய் நிற்
“பதற்கு எவ்வளவு தூரமிருப்பதென்பதைக் கவனிப்
“பீர்களாக. வாதபித்தாதி தாதுக்களின் நிலையறியக்
“கூடாமல் சிகிச்சை செய்யப்புகுந்த பண்டிதரால்
“சுகானுபவம் அடைவிக்கலாகுமோ? அதுபோல் குடந்
“தைநகர்க் கான்பரன்ஸ் முதலானவைகளில் பொருள்
“விரயஞ்செய்து அல்பகாலம் வெறுங்கிளர்ச்சியைப்
“பெற்றிருப்பதைப் பார்க்கிலும் அவைகளில் விரய
“மாகக்கூடிய ஓராயிரத்துக் குறையாத பொருள்களைப்
“பண்டாக நிலைநிறுத்தி பாடசாலை முதலான மூல
“காரியங்களைச் செய்வதால் பயன்பெறு மென்பதில்
“சந்தேகமுண்டோ என்பதைக் கவனிப்பீர்களாக”
என்பதே.

அவர்கள் விஸ்வகர்ம குலத்தாருக்குப் பொருள்பலம் கல்விபலம் இல்லையென்று சித்தாந்தப் படுத்துகின்றார். எவ்வளவு பொருள் ஒரு குலத்தாருக்கு உண்டானால் அக்குலத்துக்குப் பொருள்பலம் உண்டெனலாம் என்பதைத் தருமபதியவர்கள் கூறமுடியுமோ? ஒரு துறவிக்கு (அதாவது வெளித்துறவி யானாலுஞ்சரி உள்ளத்துறவி யானாலுஞ்சரி) மாதம் பத்து ரூபாய் போதிய பொருளாகும்; ஒரு டம்பாசாரிக்கு மாதம் 1000 ரூபாய் போதிய பொருளாயிராது. சிறுகப்புசிக்கும் அங்கத்தவர்களையுள்ள ஒரு குடும்பத்துக்குப் போதியபொருள் கழிபேருண் வழக்கத்திலுண்ணுங் குடும்பத்துக்குப் போதியதாயிராது. சரீராரோக்கிய முடையவருக்குப் போதியபொருள், நெடுநோயாளிக்குப் போதியதாயிராது. ஆகையால் தனித்தனியே ஒவ்வொருவருக்கு அல்லது ஒவ்வொரு குடும்பத்துக்கு இவ்வளவுபொருள் உண்டானால், அவ்வவருக்கு பொருள்பலம் உண்டாம் என்று சித்தாந்தப்படுத்தல் இயலாதாகலின் ஒவ்வொரு குலத்துக்குப் பொருட்பலம் கூறுவது சகசமன்று என்பது துணியலாமன்றோ?

நங்குலத்தார்க்குக் கல்விப் பலம் இல்லை யென்பது வெளிப்பார்வைக்கு அப்படியே யென ஒருதலை துணிய வேண்டிக் கிடப்பினும் அதுவும் ஆட்சேப மின்றிப் போய்க் கழியாது. ஏனெனில், நமது குலத்திலுள்ள நல்ல நூதனவேலைக்காரர், B. A. (பீ. ஏ.)பாஸ்பண்ணினவர்களுடைய அறிவத்தனை யுடையவர்களா யிருக்கின்றார்களென்பது சில ஐரோப்பிய இந்திய நிபுணருடைய அபிப்பிராயமா யிருக்கிறது என்பதைத் தருமபதி யவர்க ளறியார் போலும். நாமும் அனுபவத்தில் காணுகிறவரையில், அல்ஜிப்ரு ஜீயாமெற்றியு என்று சொல்லத் தெரியா திருப்பினும், X = வீடுகளின் தொகை என்று கணக்குப் பார்க்கத் தெரியாவிடினும், கணக்குகள் கூட்டிக் கழித்து மிகச் சீக்கிரஞ் சொல்லிப் போடுகின்றார்கள். தர்க்க சாஸ்திர பரிபாஷைகளைக் கண்டு கேட்டிராவிடினும் வழுவின்றி நியாயம் பேசுகின்றார்கள்.

இவ்வகையான நூதன வேலைகள் செய்யாத வேறு தொழிலாளிகள், உதாரணமாக வேளாளர் முதலியோரினும் இவர்களுக்கு கல்விபலம் அதிக முண்டு என்னலாம். தூற்றுக்கு விகிதமாய்ப் பார்த்தால் கான்பரன்ஸ் முதலிய சபைகள் கூடுகிற மற்றுஞ் சாதியாரிலிருந்து நங்குலத்தினர் கல்வி பலம் குறைந்தவர் என்று சொல்ல இடமிராது.

ஆங்கிலக் கல்வி கற்கப் புகுந்த நம் குலத்தவர்கள் கல்வியில் மற்றக் குலத்தினர்க்குக் குறைவானவர்களா யிருப்பதில்லை. அதிகமாய்க் கூடினவர்களா யிருப்பார்கள். இதனாலும் நம்மவர் கல்விபலம் இல்லாதார் எனல் தகாது. இனி தருமபதி யவர்கள் கூறியதற்கு நியாயம் இதுவாயிருக்கலாம். வேதாகமங்களிலும் புராண இதிகாசங்களிலும் விஸ்வகர்மா புலவன் என்றும் கலைவல்லோன் என்றும் அறிஞன் என்றும் மாணாக்கர் உள்ளவன் என்றும் “கற்றோர் புகழ் விச்சுவகன்ம னெனு நாமம் உற்றோன்” என்றும் ஜகத்குரு என்றும் கூறியிருக்க இவன் அந்நிலைக்குத் தகுந்த அளவு கல்வியில்லாதிருப்பது குறையெனலாம். எப்.ஏ, பீ.ஏ. கிளாசுக்கு உபாத்தியாயரா யிருக்கத்தக்கவர் புகழ் கெட்டு வகுப்பிற்கும் தொந்தர வுண்டாகிறது. அரிச்சுவடி வகுப்புக்கு உபாத்தியாயரா யிருப்பவருக்குப் புகழில்லை புகழின்மையு மில்லை. அவர் கல்வித்திறம் கேள்விக்கிடம் ஆகவில்லை. எப். ஏ. வகுப்பைக் கற்பிக்குந் திறமுண்டயரா யிருப்பினும் மற்றவர்க்கு மிக ஈனம் உண்டாதற் கிடம் வருகிறது. ஆகையால் அம்மற்றவர் பீ, ஏ. வகுப்பைக் கற்பிக்கும் ஆற்றல் உண்டாகும் வண்ணம் முயன்று மேலான கல்விகளைக்கற்க வேண்டும். அதுபோல கல்வியே யுரிமையாயுடைய ஜகத்குருவுக்கு கல்வியானது மற்றவர்களுக்கில்லாவிடினும் அவசியம் வேண்டியது. மேலே 2-வதாகக் காட்டிய நாயனார் வாக்கு இதற்கும் அமையும். அவ்வாறு நோக்குங்கால் நம்மவர்க்குக் கல்விப்பலம் குறைவென்று சொல்லினும் கான்பரன்ஸ் கூடக் கூடாத அவ்வளவு குறைவென்று சொல்ல முடியாது.

இனி இவ்விரண்டு பலமும் தர்மபதி அவர்கள் கூறியபடி நங்குலத்தவர்களுக்கு உண்மையாக இல்லையென்று சர்வ விஸ்வகர்ம குலத்தினரும் ஒத்துக்கொள்ளுகிறார்களோ என்பதை அறியவேண்டும். அப்படிச் சகலரும் ஒத்துக்கொள்ளுகிறார்களெனில் நங்குலத்தார் நெடுங்காலமாய் இப்பெருங்குறையை நிவிர்த்திசெய்ய இயலாதுகிடந்தழுந்தி வந்திருக்கிறார்கள். ஆகையால் இதற்குப் பரிகரிப்பு காரணமாக ஒரு பெருங்கிளர்ச்சி ஆவசியகமாகத் தோற்றுகின்றது. கான்பரன்ஸ் கிளர்ச்சிபோலொன்று வேண்டுமென்பது சித்தாந்தமாகிறது. அற்றன்று நங்குலத்தோர் அவ்வாறபிப்பிராயங் கொண்டிருக்கவில்லை, பொருள்பலம் கல்விபலம் உடையோர்தான் என்ற அபிப்பிராயம் குலத்தினர் யாவருக்கு முண்டெனில், தர்மபதியவர்கள் கூறியதிலிருந்தே அருத்தாபத்தியால் கான்பரன்ஸ்கூடவே கூடலாமெனப் பெறப்படுகின்றது. இதனால் தர்மபதியவர்கள் ஒரு டிலெம்மாவின் கொம்பருள் அல்லது சங்கா சங்கேதத்துட் சிக்குண்டவாறு காணலாம்.

கான்பரன்ஸ் காரணமாய் உழைக்கும் நண்பர்காள்! அதுவிஷயத்தில் அரைமனயாயும் அனுகூலமாமோ என்னுஞ் சந்தேகமுடையராயு மிருக்கும் குலாபிமானிகாள்!

முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
யின்மை புகுத்திவிடும்
அருமையுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சிதரும்
கருமஞ்செய வொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடையதில்—என்னும் நாயனார்

வாக்குகளைக் கவனித்து கான்பரன்ஸ் கூட முயற்சி செய்மின்! அநுகூலம் உண்டாகுமென்பதே யாவருடைய நம்பிக்கையும். அதுவும் ஒருமுறை இருமுறை தோல்வியானாலுங் காரியமில்லை.

பூர்வீக ஆங்கில ராஜனாகிய புரூஸ் என்பவன் ஒகைதியாகி கரந்து சென்று ஓர் மலைக்குகைக்குள் இருந்தனன். இதற்குமுன் பலதரமும் இவன் சைனியங்களைச் சேர்த்துச் சென்று தனது இராச்சியத்தைக் கைப்பற்ற முயன்றும் அத்தனை முறையுந் தோல்வியையே அடைந்து அடைந்து ஒளித்து ஓடினன். அக்குகைக்குட் செல்லும்பொழுது இனி முயலவேண்டியதில்லை யென நேர்ந்து கொண்டு அங்கிருக்குஞ் சமையத்தில், ஒரு சிலந்தியானது அக்குகையின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் நூலுடன் பாய்ந்தது. அது எட்டாது தவறி விழுந்துவிட்டது. பின்னும் முயன்றது. மேலுந் தவறி வீழ்ந்தது. இவ்வாறு பலகாலும் முயன்று முயன்று தவறிக் கடைசியில் கற்பாறையைக்கிட்டி ஸ்திரமாய்ப்பிடித்துக்கொண்டது அது தொடக்கமாய் தனது வலையை மிக விரைவில் இயற்றி முடித்துப் போந்ததைக் கண்ணுற்றுக் கொண்டிருந்த அரசன், இச்சிலந்தியின் முன்மாதிரியைக் கைக்கொண்டு யான் எனது இராச்சியத்தைப் பெறுவதற்கு இன்னும் முயலுவேன் என்று எண்ணினன். அவனது பகைவர் அவ்வழியே சென்று குகைக்குள் ளிருப்பானோ வென்று நோக்குங்கால், சிலந்திப்பூச்சிவலையைக் கண்டு இதற்குள் புகுந்தனனன்று, புகுந்தனனேல் ஈண்டு இவ்வலை இந்நிலையி லிராது பின்னப்பட்டுப்போமன்றோ என்று எண்ணி உட்புகுந்தாலும் பரிசோதிக்காமலும் அரசனைக் கைதி யாக்காமலும் சென்றனர். பின் அவ்வரசர் மறுபடியுஞ் சைனியங்களைச் சேர்த்து யுத்தஞ் செய்து பகைவரைவென்று தன்னிராச்சியத்தைப் பெற்றனன்—என்ற புரூசும் சிலந்தியும் என்ற பாரம்பரைக் கதை ஆங்கிலதேசத்தில் வழங்குகின்றது.

இங்கிலாந்து, ஜப்பான் முதலிய தேசங்களில் பார்லிமெந்து கூடுவதற்குச் செலவு எவ்வளவு அதிகமாகப் பிடிக்கிறது. அச் செலவை மூலகாரியங்களுக்கு உபயோகிக்க அவ்வாங்கிலேயருக்குப் போதிய புத்தியின்றோ? இந்தியாவில் காங்கிரெஸ் மகாசபை கூடாமல் அதனால் வருஞ்செலவை மூலகாரியங்களுக்கு விடக் காங்கிரஸ் அதிகாரிகளுக்குத் தெரியாதோ? செங்குந்

தர் கான்பரன்ஸ் நடக்கிறதாமே. அச் செகுந்தர் நம் குலத்தினரிலும் பொருள்பலம் கல்விபலத்தினுல் மேம்பட்டவரோ? வேளாளர் கான்பரஸ் நடக்கவில்லையோ. ஆந்திர விஸ்வப்பிராமண கான்பரஸ் கூட்டினோர் அது கூடாமல் மூலகாரியங்களுங்குவிட அறிவில்லாதவரோ? மகத்துவ ராச்சியங்களுக்குள் ஒன்றாய் எண்ணப்படாத ஜப்பான் இராச்சியம் 30 வருஷத்தில் அவற்றுளொன்றாய் எண்ணப்படவில்லையோ? இவையெல்லாம் அநுகூலமடைந்தது ஒற்றுமையுடன் கூடிய முயற்சியினுலன்றோ? இவைநிற்க முற்காலத்தும் தற்காலத்தும் விளங்கிய ஆன்றோர் இவ்விஷயத்துக்குப் பொருத்தமாக யாது கூறினரென வாராய்வாம்.

"குலங்கள் என்செய்வ குற்றந்தான் என்செய்வ
துலங்கி நீ நின்று சோர்ந்திடல் நெஞ்சமே"

என்று ஸ்ரீமத் திருநாவுக்கரசு நாயனுரும்,

"நீவிர் பலமில்லாதீர் என்று இஞ்சித்து மெண்ணுதீர்
நும்மனவலிமையால் மலையும் பொடியாகப் பண்ணுதும்
என்றெண்ணப் பயிலுமின்"

என்று ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமிகளும்,

தற்கால இந்தியரும் மற்றையோரும் பொதுநன்மை மந்திரமாயும் மலையிலக்கு வாக்காயு முபயோகிக்கும்படி ஸ்ரீ கடோபநிஷத்திலிருந்து ஷை சுவாமிகள் தெரிந்தெடுத்துக்காட்டிய

உத்திஷ்டத ஜாக்ரத பிராப்ய வாரந்நிபோததஃ
எழுமின்! துயிலெழுமின்! எண்ணிய வெண்ணியாங்
கெய்துமுன் ஓயேன்மின்!

எறைஸ் எவேக்! ஸ்டாப் நாற் ரில் தி கோல் இஸ்றீச்ட் என்பதும்

செயற்கரிய செய்வர் பெரியவர்

என்பதும் ஆகிய இன்னோரன்ன வாக்குகளெல்லாம் தர்மபதி யவர்கள் கூறியதுடன் முரணுவதை நோக்குங்கள்.

இத்தேசத்தில் நமதுகுல ஆரியனுகவும் உண்மையான ஜகத்குருவாகவும் ஒளிருகின்றவர்களும், சர்வஜாதி சமய சம்மதமாய் மகாத்துமாவெனக் கைக்கொள்ளப்பட்டவர்களும், தேவார திருவாசகம் ஓதுவதிலும் சத்பிரசங்கஞ் செய்வதிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்களும், புறச்சமயக் கோட்டைகளுக்குத் தருக்க முற்படப் பிரசங்கக் குண்டுமாரி பொழிவதால் நிலைகுலையப் பண்ணுபவர்களும், அடியேனது ஞானுசாரியருமாகிய ஸ்ரீமத்சங்கர—நாகலிங்கசுவாமியவர்களுடன் இவ்விஷயமாய் ஒரு நிமிஷநேரம்வரையிற் பேசிய போது, தர்மபதியவர்கள் சாத்துவிககுணத்தில் நின்று வியாசமெழுதும்படி கூறினர் என்பதையும் அவர்கள் உத்தாவுப்படியே யெழுதலாயினேன். இதிற் குற்றங் குறைகளிருந்தாலும் குலநன்மையையே இலக்காக வைத்து எழுதியதால் ஷை தர்மபதியவர்களும் மற்றும்

## ஐரோப்பா கண்டத்து வல்லரசுகள்

### கிரேட் பிரட்டனும் அயர்லாந்தும்

தலைநகர்—லண்டன்.
விஸ்தீரணம்—1,21,027 சதுரமைல்
ஜனத்தொகை—42,372,556.

### பிரான்ஸ்

க்ரேட் ப்ரிட்டனுக்கு நேர் தெற்கிலுள்ள தேசம் ப்ரான்ஸ்.
தலைநகர்—பாரிஸ்,
விஸ்தீரணம்—2,07,146 சதுரமைல்.
ஜனத்தொகை—38,500,000.

### இடாலி

பிரான்ஸின் தெற்கிலுள்ளது இடாலிதேசம்.
தலைநகர்—ரோம்.
விஸ்தீரணம்—1,14,410 சதுரமைல்.
ஜனத்தொகை—32,500,500.

### ஆஸ்ட்ரியா

இடாலிக்குக் கிழக்கிலுள்ளது.
தலைநகர்—புடாபெஸ்தும், வியன்னுவும்.
ஜனத்தொகை—45,242,889.

### ஜேர்மனி

ஆஸ்ட்ரியாவுக்கு வடக்கிலுள்ளது.
தலைநகர்—பெர்லின்.
விஸ்தீரணம்—2,11,168 சதுரமைல்.
ஜனத்தொகை—58,000,000.

### ருஷ்யா

ஐரோப்பா கண்டத்தின் கீழ்ப்பாதி. இந்த ராஜ்யத்
தைச்சேர்ந்த ஆசியா கண்டத்து ருஷ்யாவும் மிகப்பெ
ரிது. ஆனல் அதன் வடபாகம் மிகக் குளிராயும் தென்
பாகம் புல்லடர்ந்த பூமியாகவு மிருக்கிறது.
தலைநகர்—பீடர்ஸ்பர்க்.
விஸ்தீரணம்—2,000,000 சதுரமைல்.
ஜனத்தொகை—108,000,000.

---

ஹாலந்தும் பெல்ஜியமும்.—பிரான்ஸ் ஜர்மனி இவைகளுக்கு இடையில் பெல்ஜியமும் பெல்ஜியத்துக்கு வடகிழக்கில் ஹாலந்தும் இருக்கின்றன. சென்றமாதச் சஞ்சிகையோடனுப்பிய படத்திற் பார்க்கவும்.

---

குலப் பிரமுகர்களும் பொறுத்தருள்கவெனப் பிரார்த்திக்கின்றனன்.

குடந்தையி லவையினைக் கூட்டுமென்பர்காள்
மடந்தரு பதியினன் மயக்குறுதநும்
இடந்தனி முயற்சியை யிடைவிடேன்மலை
மடந்தையோர் பாகனல் வருவசித்தியே

சுபமஸ்து



## நமது நாட்டாண்மைக்காரர்கள்.

ஸ்ரீ T. தங்கவேலு ஆச்சாரியார்,
திருநெல்வேலி பாலம்.

(Election) எலக்ஷன் மூலியமாய் நாட்டாண்மைக்காரர், காரியஸ்தர் முதலிய குல அதிகாரிகளைத் தெரிந்தெடுத்தல் மிகவும் பொருத்தமானதுதான். அவ்விதம் நடைபெற்றால் நமது மரபிற்கு அதிமேன்மையும் கீர்த்தியும் உண்டாகுமென்பதிலையமில்லை. ஆனல், அவ்விதம் எலக்ஷன் நடத்துவதில் நண்பர்கள் கீழ்க்குறித்தவற்றை ஆலோசிப்பார்களாக.

1. நாட்டாண்மைக்காரர்களும் காரியஸ்தர்களும், கூடியவரையில் கல்விகற்றவர்களாகவும் ஆராய்ச்சி அனுபவமுதலியவற்றுள் தேர்ந்தவர்களாகவும், பொறுமை, அடக்கம், கோபமின்மை, பிழைபொறுத்தல், பெருந்தன்மையாதிய நற்குணங்கள் பொருந்தினவர்களாகவுமிருக்க வேண்டும். அப்போதுதான் குலம் ஈடேறும்; அல்லது, சீர்குலைந்து, கலகலத்து கஷ்டநஷ்டங்களடைந்து ப்ரஷ்டமாதல் நிச்சயம்.

2. மேற்குறித்த இருதிறத்தவர்களன்றி நாம் ஒரு காரியத்தைக் கட்டுப்பாடுடன் முடிப்பதற்கியலாது. ஆகையால், அவ்விருதிறத்தவர்கள் ஒவ்வொருவூரிலுமிருக்கவேண்டியது அவசியம். அவ்விதம் தெரிந்தெடுக்கப்பெற்றவர்கள் மேற்கூறிய லக்ஷணங்கள் இல்லாதவர்களாயின் ஜாதி எங்ஙனம் நேர்படும்? ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பிண்டமென்றாலும் நல்வாயனே சிறந்தவனுதலால், அவனே கொள்ளப்படவேண்டும்.

3. ஒவ்வொரு சிறுவட்டகைகளுள்பட பெரிய பட்டணங்களிலும் 2-3 கட்சிகள் இல்லையென்று சொல்வதற்கு இடமிருக்கின்றதா? இவ்விதமாவதற்குக் காரணம் என்னவென்பதை அவ்வவ்வூரார்களே நன்கறிந்திருப்பீர்கள். இம்மட்டோடிராமல், நம்மில் சிலர் நமது சிறுவர்கள் ஆங்கிலம் கற்கலாகாதென்றும், கற்பதினுல் அவர்கள் கல்லாரை எதிர்த்து வாதாடுகிறார்கள் என்றும் கூறுவது சகஜமாயிருக்கின்றது. இது, தனது மடமையினுல் வாலை இழந்தநரி, எல்லா நரிகளையும் வாலை இழக்கும்படிக் கேட்டுக்கொண்டதற்கு ஒப்பாயிருக்கின்றது.



4 எஜமானஸ்தானம் பெறக்கூடியவர்களை (Election எலக்ஷன் மூலியமாய்த் தெரிந்தெடுத்தல் சாமான்ய காரியமன்று. தற்காலத்தில் ஷை பதவி வகித்திருப்பவர்களும் அவர்கள் சந்ததியார்களும், இப்போது அனுஷ்டானத்திலிருக்கும் பரம்பரை முறையை நீக்கி, எலக்ஷன் முறைக்கு இணங்குவது மகாகஷ்டம். என்றாலும், அறிவாளிகள் முயற்சிசெய்து அங்கங்கு எலக்ஷன் முறையை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டும். இப்போதுங் கூட ஒரு நாட்டாண்மைக்காரரோ காரியஸ்தரோ தப்பி நடந்தால், பந்து ஜனங்கள் சிற்சில இடங்களில் அப்படிப்பட்டவரைத் தள்ளி வைக்கவில்லையா? அப்படித் தள்ளிவைக்கும்போதே, புதிதாய் அந்த ஸ்தானத்திற்கு ஓர் உத்தியோகஸ்தரை எலக்ஷன் முறையில் நியமித்துவிட்டால் இந்தப் பழக்கம் அமுலுக்கு வந்துவிடும்.

5. எலக்ஷன் முறையில் இவர்களை நியமிப்பதென்று ஏற்படுவோமானல், அசத்துக்கள் தள்ளுண்டுபோம்; சத்துக்கள் முன்னுக்கு வரும். அவர்களிடத்தில் நமது வம்சத்தார் மரியாதை வைத்து நடப்பார்கள். அண்டையயலிருக்கும் மற்ற ஜாதியார்களுடைய மரியாதையுங் கிடைக்கும். அப்படிப்பட்ட நாட்டாண்மைக்காரர்களுங் காரியஸ்தர்களும், தற்கால நாகரீகக் கொள்கைகளுக்கு ஏற்ற பிரகாரம், நமது ஜாதியாரைச் சீர்திருத்தி அவர்களைத் தக்கவழியிற்செலுத்தி, அவர்கள் நாளுக்குநாள் கல்விகேள்விகளிலும், கைத்தொழிலிலும், ஒழுக்கத்திலும் விசேஷமடையும்படி நடத்துவார்கள். இப்போது ஏற்பட்டிருக்கும் அதிகாரிகள் இவ்வளவு செய்வார்களென்று எண்ணுவதற்கிடமில்லை. செய்வார்களேயானல், இவர்களே எலக்ஷன் முறையில் நாட்டாண்மைக்காரர்களாகவும் காரியஸ்தர்களாகவும் தெரிந்தெடுக்கப்படுவார்களென்பது நிச்சயம். இந்தஸ்தானங்களுக்கு உரிமை, அவரவர்களுடைய கல்வி, கௌரவம், குலாபிமானம், சீர்திருத்த நோக்கமுதலியவற்றால் நிர்ணயிக்கப்படவேண்டும்.

---

**லண்டன் விளக்கு வெளிச்சம்.**—லண்டன் நகரத்தினுடைய விளக்கு வெளிச்சம் ஆகாயத்தில் பிரதிபிம்பித்து, மப்பு மந்தாரமில்லாமல் சரியாயிருந்தபோது, 50 மைல் தூரத்தில் தெரிந்ததாம்.

## ஜோஸ்யம் பொய்யாகாது.

சுமார் 80-வருஷங்களுக்குமுன் இந்தியாவின் மேற்கிலுள்ளதோர் சுதேச ராஜ்யத்தின் மைனர் ராஜா காலத்தில், கர்னல் டெயிலர் என்னும் ஆங்கில உத்யோகஸ்தர் ரெஸிடெண்டாக விருந்தார். ஷை ஸமஸ்தானத்து ஜோஸ்யர் அந்த மைனர் ராஜாவுக்கு21வயதுக்குமேல் ஆயுசில்லை என்று சொன்னார். இந்த சங்கதி கர்னல் டெயிலருக்குத் தெரிந்தபோது, அவர் ஷை சங்கதியை ரகஸ்யமாக வைத்திருக்கவேண்டுமென்று சமஸ்தானத்து ஜோஸ்யருக்கு உத்தரவிட்டார். ஷை மைனர் ராஜாவுக்கு 21-வது வயது நெருங்கியபொழுது, 1857-ம் வருஷத்தில் இந்தியாவெங்கும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு விரோதமாகக் கிளம்பிய ஸிப்பாய்க் கலகம் உண்டாயிற்று. இந்த மைனர் ராஜாவும் அந்தக் கலகத்தில் சேர்ந்திருந்தாரென்று குற்றஞ் சாற்றப்பட்டுப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் மரணதண்டனை விதிக்கப்பட்டார். தமது ஜோஸ்யம் மெய்யாய் விட்டதென்று ஸமஸ்தானத்து ஜோஸ்யர் வருந்தினர். கர்னல் டெயிலர் ஷை மரணதண்டனையை மாற்றி அந்த-ராஜாவைச் சென்னையிலுள்ள ஒரு கோட்டையில் கைதியாக வைத்திருக்க கவர்ன்மெண்டாரிடமிருந்து உத்திரவுபெற்று, இந்த உத்தரவை ஷை ஜோஸ்யரிடம் காட்டினார். 'மரணம் நிச்சயம்' என்று ஜோஸ்யர் கூறினார். பின் ஷை ராஜா போலீஸ்பந்தோபஸ்துடன் ஓர் இங்கிலீஷ் உத்யோகஸ்தரின் தலைமையின் கீழ் சென்னைக்கு அனுப்பப்பட்டார். சென்னைக்கு வரும் வழியில் அவர்கள் ஒருநாள் ஓரிடத்தில் தங்குமாறு நேர்ந்தது. அன்று மாலை அந்த ராஜாவுடன் வந்த ஆங்கில உத்யோகஸ்தர் அவரைத் தனியாகக் கூடாரத்தில் விட்டுவிட்டு வெளியே சென்றார். ஆனால் தமது பெட்டியிலிருந்து ஒரு துப்பாக்கியை வெளியே யெடுத்து ஒரு நாற்காலியின்மீது வைத்திருந்தவர், வெளியே போகும்பொழுது அதனை யெடுத்து உள்ளேவைக்க மறந்துவிட்டார். அவர் வெளியே சென்ற சில நிமிஷத்தில் கூடாரத்துக்குள் டபீ ரென்று ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அந்த உத்தியோகஸ்தர் ஓடிவந்து பார்த்தபொழுது அந்த வாலிபராஜா தம்மைத் துப்பாக்கியாற் சுட்டுக்கொண்டிறந்து கிடந்தார்! அன்றுதான் அவ்வரசர்க்கு ஷை ஜோஸ்யர் குறிப்பிட்ட 21-வது வயது ஆரம்பமாயிருந்ததாம்!

## ஆச்சாரி - ஆஸாரி.

ஏறக்குறைய ஒருவாரத்திற்குமுன் ஒருநாள் நான் சென்னை அபிஷியல் அஸைனி ஆபீசு மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ சோமங்கலம் கந்தசாமி ஆச்சாரியாரவர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, என்னுடன் பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருந்த ஒரு பிராம்மணர் அங்கு வந்தார். அவர் என்னிடத்தில் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தார். அப்புறம் அவர் நமது சபைத் தலைவர் ம-ா-ா-ஸ்ரீ சோமங்கலம் கந்தசாமி ஆச்சாரியாரைநோக்கி ஆங்கில பாஷையில் "அய்யா, இந்த கன்னியப்ப ஆஸாரியாரும், நானும் ஒரே பள்ளிக்கூடத்தில் ஒரே வகுப்பில் வாசித்த சிநேகிதர்கள்" என்று சொன்னார். இதைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த நமது குலாபிமானச் செல்வராகிய ஷை ஆச்சாரியார் அவர்கள் அந்த பிராம்மணரை நோக்கி "அய்யா, ஆஸாரி, ஆஸாரி என்று சொல்லுகிறீர்களே! அந்தப் பதத்திற்கு அர்த்தம் கிடையாதென்று உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் நீங்கள் வேண்டுமென்றுதானே அந்தப் பதத்தை உச்சரிக்கிறீர்கள். அது மிகவும் தப்பபிப்பிராயம். நம்முடைய தமிழ்ப் பாஷையில் 'ஸ' (Sa) என்கிற எழுத்து கிடையாது! 'ச' (cha) தான் இருக்கிறது. நீங்கள் 'ஆஸாரி' என்று உச்சரிப்பது புதிதாய் உண்டானதே யல்லாமல் பழையபடி நம் தமிழ்ப் பாஷையிலிருந்து வந்ததல்ல. ஆகையால், இனி அந்த 'ஆஸாரி' 'ஆஸாரி' என்ற பொருளில்லாப் பதத்தை உச்சரிக்காமல்,சரியாகியதும், எங்களுக்குப் பரம்பரையானதுமான ஆச்சாரிஎன்றபதத்தைச்சொல்வீர்களாக"என்றுசொன்னார். ஆகையால், நம்முடைய குலாபிமானிகளுக்கெல்லாம் ஓர் விண்ணப்பம் யாதெனில்: ஆஸாரி, ஆஸாரி என்று தப்பாய் எழுதுகிற உச்சரிக்கிற நம் ஜாதியாரையும், அன்னிய ஜாதியாரையும், ஆங்காங்கு அப்போதைக்கப்போது திருத்தி ஆச்சாரி என்ற பதம் தான் சரியான பதம் என்று அவர்களுக்கு விளக்கமாய்க் காட்டி, 'ஆஸாரி' என்று பிசகாய் அபிப்பிராயம் கொண்டவர்கள் நம்பரைக் குறைத்து, 'ஆஸாரி' என்ற பொருளில்லாப் பதம் மறைந்து போகும்படிச் செய்வீர்களாக.

சைதாப்பேட்டை,
12-8-1914. } K. C. கன்னியப்ப ஆச்சாரி.



## பாகசாஸ்திரம்.

ரஸப்பொடி.—மிளகாய் 10 பலம்; கொத்துமல்லி விரை 6 பலம்; மிளகு 2 பலம்; சீரகம் ½ பலம்; வெந்தயம் ¼ பலம்; கடுகு ¼ பலம்; இந்த சாமான்களில், மிளகாயின் காம்பை யெடுத்து விட்டு அரைப்பலம் நல்லெண்ணெயை விட்டு கருஞ்சிவப்பு நிறந்தோன்றும்படி பக்குவமாக வறுத்து வைத்துக் கொள்ளவேண்டும். மற்ற சாமான்களில் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எண்ணெய் விடாமல் வறுத்து தனித்தனியாகப்பொடி செய்து பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்பால், வறுத்து வைத்திருக்கும் மிளகாயை நன்றாய்ப் பொடிசெய்து, மற்ற பொடியோடு சேர்த்து கலந்து கொடுத்து, வாசனைபோகாதபடி ஒரு பாத்திரத்தி விட்டு நன்றாய் மூடி வைத்துக்கொள்ளவேண்டும். மேற் சொன்ன சாமான்களின் பொடியை ஒன்றாய்க் கலக்காமல் தனித்தனியாக வைத்துக் கொண்டு வெவ்வேறாக ரஸத்திலே போடுகிறது முண்டு. இந்த ரஸப்பொடி எட்டு நாள் வரையிலும் அதிக வாசனையாகவும் ருசியாயு மிருந்து, அதற்கப்பால் நாளுக்குநாள் வாசனையிலும் ருசியிலுங் குறைந்து கொண்டே வரும். ஆனபடியால், இந்தப் பொடியை எட்டு நாட்களுக் கொருதரம் செய்து வைத்துக்கொள்ளுவதே நன்று. இப்படிப் பொடிசெய்து உபயோகிக்காமல் அன்றன்றைக்கு சம்பாரத்தை அரைத்துப் போடுவாரு முளர்.

பருப்புரஸம்.—துவரம்பருப்பு கால்படி; நெய் அல்லது எண்ணெய் கால்பலம்; மஞ்சள்பொடி வீசம்பலம்; ஒரு பாத்திரத்தில் திட்டமாய்த் தண்ணீர் விட்டு, அது கொதிக்கும்போது இவற்றை ஒன்றின்பின் ஒன்றாய்ப் போட்டு, மூடிவைத்து, பருப்பு நன்றாய் வெந்தபிறபாடு அடுப்பை விட்டிறக்கி விடவேண்டும். மிளகாய் கால் பலம், தனியா அரைக்கால்பலம், மிளகு அரைக்கால்பலம், வெந்தயம் வீசம்பலம், சீரகம் வீசம் பலம், இவற்றைத் தனித்தனியாக கொஞ்சம் நெய் அல்லது நல்லெண்ணெயை விட்டு வறுத்து, கொஞ்சம் தண்ணீரைத் தெளித்து வெண்ணெய்போலரைத்து வைத்துக் கொள்ள வேண்டும். கால்படி தண்ணீரில் ஒன்றரைப் பலம் புளியைக் கரைத்து, ஒன்றரைப்படி ஜலங் கொள்ளக் கூடியதோர் ஈயம்பூசின பாத்திரத்தில் விட்டுக் காய்ச்சவேண்டும். பிறகு, அறைத்துவைத்துள்ளகாரத்தை ஒரு பாத்திரத்திலிட்டு கொஞ்சந்தண்ணீர் விட்டுக் கரைத்து கொதிக்கிற புளியில் கொட்டி, ஒரு பலம் உப்பைப்போட்டு, அரைபலம் கருவேப்பிலையைக் கொத்துடன் தணலில் சற்றுவாட்டிப்போட்டு, வீசம் பலம் பச்சைக்கொத்துமல்லியைக் கழுவி வேரைக்கிள்ளியெடுத்துப் போட்டு, ஷை புளிஜலம் கொஞ்சஞ்சுண்டியபின் அதில் பருப்புக் கட்டையிறுத்துக் கொட்ட வேண்டும். அப்பால், கால்பலம் நெய்யையும் வீசம் பலம் கடுகையுங் கொண்டு ஓர் இரும்புக் கரண்டியில் தாளிதம் தயார்செய்து ரஸத்தில்கொட்டி அதை அடுப்பைவிட்டிறக்கி, உடனே ஒரு குண்டுமணியெடைப்பெருங்காயத்தைக் கொஞ்சம் ஜலத்தில் ஊறவைத்திருந்து கரைத்து அந்தஜலத்தை ரஸத்தில்விட்டு மூடிவைக்க வேண்டும்.

தாளிதமுறை.—நெய் அல்லது நல்லெண்ணெயை வாணலியிலோ இரும்புக்கரண்டியிலோ விட்டுக் காய்ச்சி, சொரசொரவென்னுஞ் சத்தம் நின்றவுடன், மிளகாயின் காம்பைப்போக்கி சிறுதுண்டுகளாகச் செய்துபோட்டு, உளுத்தம்பருப்பையும் கடுகையும் பாதிவெந்த மிளகாயுடன் போட்டுக்கிளறி, சடபட வென்கிற சத்தம் நிற்குமட்டும் அடுப்பில்வைத்திருந்து, அப்பால் எந்த பதார்த்தத்திற்குப் போடவேண்டுமோ அதில் போட்டு நன்றாய்க்கலந்து கொடுக்கவேண்டும். அந்தத் தாளிதத்திலேயே வேறுபதார்த்தங்களைச் சேர்க்கவேண்டுமானாலுஞ் செய்யலாம். பெருங்காயம் கருவேப்பிலை முதலியவற்றைத் தாளிதத்திலேயே போடுவாருமுண்டு. ஆனால், கடுகுவெடித்த சப்தம் நின்ற பிறகுதான் தாளிதம் பக்குவப்படுமாதலினால் அப்புறமே அவைகளைப் போடவேண்டும். எண்ணெய் அல்லது நெய் நன்றாய்க் காய்வதற்குமுன், கடுகு உளுத்தம்பருப்பு மிளகாய் முதலியவற்றைப் போடுதலும், இவை சரியாய் வேகுமுன் தாளித்துக் கொட்டுதலும் பிசகு. அப்படிச் செய்வதினால் பதார்த்தங்களின் ருசி கெட்டுப்போவதுடன், கடுகு பருப்பு மிளகாய் முதலானவையின் வேக்காட்டுக் குறைவால் புசிப்போருக்கு வாதபித்த சிலேஷ்ம தோஷங்களு முண்டாகின்றன. ஆகையால், தாளித விஷயத்தில் பெண்கள் கவனமாய் நடக்கவேண்டும்.

## தொழிற்றுறைகள்

### பௌண்டன் பேனா

பௌண்டன் பேனா (Fountain Pen) என்பது இப்போது சர்வ சாதாரணமா யிருக்கிறது. இதையுடையவர்கள் தனியாக இங்கிபுட்டியும் பேனாவும் வைத்திருக்க வேண்டியதில்லை. ஆகலால், ஒருவர் தம்மிடத்தில் சதாகாலம் வைத்துக்கொண்டு தாம் செல்லுமிடங்களுக்கெல்லாம் அடக்கமாய் ஜேபியிலிட்டுப் போகக்கூடியதாயிருக்கிறது. இந்தப்பேனா மேல்நாடுகளில் செய்யப்பட்டு ஏராளமாய் இங்கு இறக்குமதி யாகின்றது. இதின் விலை அணா 6 முதல் ரூபா 40, 50 வரையிலுமிருக்கிறது இது மரத்தினாலும்,மரமும் ரப்பரும் கலந்த ஒருவிதவஸ்துவினாலும் செய்யப்பட்டு, உலோகத்தினாலாய பேனா சொருகப்பட்டிருக்கிறது. இதைச் செய்யுங் கம்பெனியார்கள் பெரு வியாபாரிகளாய் லக்ஷக்கணக்காகப் பொருள் சம்பாதித்து வருகிறார்கள். தொழில்களுக்கெல்லாம் அதிகாரிகள் நாங்களேயென்று பேசும் விஸ்வகர்ம வம்ஸத்தினர், ஏன் பௌண்டன்பேனா செய்யுந் தொழிலிற் பிரவேசிக்கக்கூடாது? மரமும் உலோகமும் கலந்திருப்பதினால், இது தாருகாருடையவும் தாம்பிரகாருடையவுந் தொழிலென்று சொல்லவேண்டும்? அந்தத் தொழிற்காரர்களில் "பௌண்டன் பேனா" என்ற சப்தத்தையுங் கேளாதவர்களாகவும், அப்படிக் கேட்டும் அதைக் கண்ணாரப் பாராதவராகவும் எத்தனையோபேர்களிருப்பார்களென்பதிற் சந்தேகமில்லை. பார்த்திருக்கக் கூடியவர்களிலும், எத்தனைபேர் 'நாமேன் இதைச் செய்யக்கூடாது' என்று யோசித்திருப்பார்களென்று சொல்லமுடியாது. இப்படிப் புதுவஸ்துக்களைக் காணுந்தோறும் தொழிற்காரர்களாகிய நம்மவர்கள், அந்தந்த வஸ்துவின் நுட்பத்தைப் பகுத்தறிந்து தாம் அவற்றைச் செய்யவேண்டுமென்னும் ஆசையும் வைராக்கியமுங் கொண்டு, அங்ஙனஞ் செய்வதற்கான பிரயத்தினஞ் செய்யவேண்டாமா? ஐந்நூறு வருஷங்களுக்குமுன் நமது பத்தாம் பாட்டன் செய்த தலை சொம்புகளையுங் கதவு வாசற்கால்களையுமே செய்துகொண்டிருந்தால், நாம் தொழிற்காரர்களாய்க் கௌரவம் பெற்றிருக்க முடியுமா? நன்றாய் யோசியுங்கள்.

புதுவை-சிவலிங்கபத்தர்.

## ஆரோக்ய போதம்

### பல்வலிக்குப் பரிகாரம்

எருக்கின்பாலைப் பஞ்சிற்றுவட்டிப் பற்களின்மேல் வைத்தால் பல்வலிபோம். கடுக்கஷாயத்தைத் தேன் கூட்டிக் கொப்பளித்தால் பல்நோய் தீரும். சீமைத்துத்தியின் சமூலத்தைக் கஷாயமிறக்கிக் காடி சேர்த்துக்கொப்பளித்தால் பற்களின் வலிமாறும். சீனக்காரம் என்னும் படிகாரத்தைக் கொட்டைப்பாக்கோடு பொடிசெய்து பற்களில் தேய்த்தால் பல்நோய் நீங்கும். தக்காளி, மணத்தக்காளி என்பவற்றைக் கஷாயமிட்டுக் கொப்பளித்தால் பல்நோய் தீரும். தாளிச்சபத்திரியைப் பொடிசெய்து பற்களிற் றேய்த்தால் பற்களின் வலிபோம். துளசியிலையை மெல்லுவதினால் பற்களின் வலிநீங்கும். நன்னாரிவேர் கஷாயத்தைக் காடிசேர்த்துக் கொப்பளித்தால் பல்வலிபோம். நாயுருவிக் கஷாயத்தைக் கொப்பளித்தால் பற்களின் நோய் தீரும். மாசிக்காயைக் கஷாயமிட்டுக் கொப்பளித்தால் பல்நோய் நீங்கும். ஜாவுஷீர் பல்நோயை நீக்கும். ஹரிஜ்மக்கியின் வேரை அக்கிராகாரத்தோடு சேர்த்தரைத்துப் பூசப் பல்வலிமாறும். வெள்ளைக் குங்கிலியத்தைப் பொடிசெய்து பல்லிலே தேய்த்தால் பல் நோய்தீரும்.

ஈறு கரைதலையும், உதிர மோடலையும், நீக்க:— மஞ்சள், கடுக்காய் இவைகளைப் பொடிசெய்து பற்களில் தேய்த்தால் ஈறு கரைந்து போகுதல் நீங்கும். பற்களில் உதிர மோடுதல் நீங்கும். உப்பைக் கொப்பளித்தால் ஈறு இறுகும்: உதிரமோடுதல் நீங்கும்; பற்களின் வலியும் போம். சீனக்காரத்தை ஜலத்திற் கரைத்து வாய் கொப்பளித்தால் ஈறு பலக்கும்; பல் விறுகும். தாளிச்சபத்திரியைப் பொடிசெய்து பல்லுக்குத் தேய்க்க ஈறு பலக்கும். மாசிக்காயைக் கஷாயமிட்டுக் கொப்பளித்தால் ஈறு பலக்கும். பிஞ்சு கடுக்காயைப் பொடிசெய்து பற்களிலே தேய்த்துவர ஈறு பலக்கும். காப்பூலிக் கடுக்காயின் சாம்பலைப் பொடிசெய்து பற்களிற் றேய்த்தால் பல்வலிபோம்; ஈறு கரையாது. பொடுதலை என்னும் மூலிகையின் சமூலத்தைப் பசுமையாக வாயிலிட்டுமென்று பற்களிற் றேய்க்க ஈறு பலக்கும்; பல்லாடுதல் நிற்கும்; பல் நோய் நீங்கும்; பல்லில் உதிரமோடுதல் நிற்கும்; பித்த சாந்தியுமாகும்.

பிரம்பை. பெ. முத்துஸாமி உபாத்தியாயர், (லோகோபகாரி)



## விவசாய விளக்கம்

### நாகப்பூர் ஆரெஞ்சிபழம்

மரங்களின் வேர்களைச் சுற்றியுள்ள மண்ணை எடுத்துவிட்டு, ஒருமாத காலம் வரையில் வேர்களின்மேல் வெயில் உறைக்கும்படி செய்கிறார்கள். அப்பொழுது மரங்களுக்கு நீர் பாய்ச்சுகிறதில்லை. அதன்பிறகு வேர்களை மண்ணினால் மூடி அதிகமாக ஜலம் பாய்ச்சுகிறார்கள். சிலதினங்களுக்குள் மரங்கள் புஷ்பித்து விடுகின்றன. ஏப்ரல்மாதத்தில் காய்கள் முதிர்ந்து விடுகின்றன.

இந்த ஏப்ரல் மாதத்துப்பழம் மிகவும் கொண்டாடப்படுகிறது. ஆனால் வருஷா வருஷம் இப்படி நிர்ப்பந்தப்படுத்துவதை மரங்கள் தாங்கமுடியாதென்பது நிச்சயம் வரவர மரங்கள் கெட்டுப்போகவேண்டியது தான். சென்ற 20 வருஷங்களுக்குமுன் நாகப்பூர் ஆரெஞ்சுக்கிருந்த குணம் இப்பொழுது இல்லை என்று சொல்லப்படுகிறதற்கு இதுதான் காரணம்.

### கரும்புக்கு எரு

வட இந்தியாவில் ஐக்கிய மாகாணங்களிலுள்ள ப்ரதாபகார் என்ற இடத்திலுள்ள விவசாயப் பண்ணையில் கரும்புக்கு உயர்ந்த எரு எதுவென்பதைப்பற்றி சென்ற வருஷத்தில் பரிட்சை செய்யப்பட்டது. அம்மோனியம் ஸல்பேட், வேப்பம்புண்ணாக்கு, சாணி ஆகியமூன்று எருக்களும் தனித்தனியாகப்போடப்பட்டது. அந்தந்த எருவிட்டுப் பயிரிடப்பட்ட ஸ்தலத்தின் விஸ்தீர்ணம் ஒரு ஏக்கரில் பத்தில் ஒருபங்கு. ஏக்கர் ஒன்றுக்கு 12000 கணுக்கள் வீதம் விதை சாத்தப்பட்டன. பயிரிடப்பட்ட கரும்புதினுசு காசிக் கரும்பென்ற வகை. அம்மோனியம் ஸல்பேட் இடப்பட்ட ஸ்தலத்தில் 3210 ராத்தல் எடையுள்ள கருப்பங்கழி மகசூல் செய்யப்பட்டு அதிலிருந்து 321 ராத்தல் வெல்லம் கிடைத்தது. $47\frac{1}{2}$ ராத்தல் எடை எருப் போடப்பட்டது. வேப்பம் புண்ணாக்கு உபயோகிக்கப்பட்ட ஸ்தலத்திலிருந்து 2000 ராத்தல் எடையுள்ள கருப்பங்கழி மகசூல் செய்யப்பட்டு 200 ராத்தல் வெல்லம் கிடைத்தது. 2 மணங்கு புண்ணாக்கு எரு விடப்பட்டது. சாணி எருவிடப்பட்ட ஸ்தலத்திலிருந்து 3515 ராத்தல் எடையுள்ள கருப்பங்கழி மகசூல் செய்யப்பட்டு, $351\frac{1}{2}$ ராத்தல் எடையுள்ள வெல்லம் கிடைத்தது. 35 மணங்கு சாணி எரு விடப்பட்டது.

## விவகாரப்போக்கு.

### தகப்பன் கடனுக்கு

### புத்திரன் பாத்தியப்பட்டவனா?

ஒரு தகப்பன் பட்ட கடனுக்கு குமாரன் பாத்தியப்பட்டவனா என்கிற அம்சம் திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலிருந்துவந்த ஒரு அப்பீலில் விவாதத்துக்கு வந்தது. தகப்பனார் ஒரு தர்ம ஸ்தாபனத்துக்குத் தர்மகர்த்தாவாயிருந்து அந்த தர்ம சொத்தைச் சேர்ந்த பணத்தை அபகரித்து விட்டார். அந்தப் பணத்தை அவருடைய பிள்ளையிடமிருந்து வசூல்செய்யத் தாவாகொண்டு வரப்பட்டதில், கீழ் இரண்டு கோர்ட்டுகளும் பிள்ளை பணத்தைக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானம் செய்து விட்டார்கள். இரண்டாவது அப்பீலில், தகப்பன் அபகரித்தது கிரிமினல் குற்றமாகுமென்றும் அதற்குப் பிள்ளை ஜவாப்தாரியல்ல வென்றும் வாதிக்கப்பட்டது. மெட்ராஸ் லாஜர்னல் (19) 759-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிற தீர்ப்பை ஜட்ஜ்கள் அனுசரித்து, சட்ட விரோதமாக தகப்பன் தர்ம சொத்துக்களை அபகரித்திருந்தாலும், அதை ஒரு தஸ்தாவேஜி மூலமாயாவது அல்லது வேறு விதமாகவாவது ஒப்புக்கொள்ள பாத்தியப்பட்டவனென்றும், கடனை பிள்ளை கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறானென்றும் சொல்லி ஹைகோர்ட்டார் அப்பீலைச் செலவுடன் தள்ளிவிட்டார்கள்.

---

மேட்டுக்கே விதைத்தவிரை வீணருக்கே
செய்தநன்றி மேயும்பட்டி
மாட்டுக்கே கொடுத்தவிலை பாத்தையர்க்கே
தேடியிட்ட வண்மையெல்லாம்
பாட்டுக்கே யருள்புரியுந் தண்டலையார்
வீதிதொறும் பரப்பிடாமல்
காட்டுக்கே யெறித்தநிலாக் கானலுக்கே
பெய்தமழை கடுக்குந்தானே.

—தண்டலையார் சதகம்.

## யுத்தமும் விலைவாசிகளும்

தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் மிஸ்டர் R. B. உட் அந்த ஜில்லா பத்திராதிபர்களுக்கெல்லாம் பின்வருமாறு எழுதுகிறார்:—

வியாபாரிகள் இப்பொழுது சரியான காரணமில்லாமல் விலைகளை உயர்த்துவதற்கு முயற்சி செய்கிறதாகத் தெரிகிறது. ஆனால் இந்த உயர்ந்த விலைகள் நீடித்திரா; தேவையான சாமான்கள் எவ்வளவு அகப்படக்கூடுமோ, எத்தனைபேர் அந்த சாமான்களைத் தேடி வாங்குவார்களோ, இந்த இரண்டு விஷயங்களைப் பொறுத்துத்தான் விலைகள் கடைசியாக ஏற்படும்.

2. ஜெர்மனி தேசத்துவியாபாரம் நின்று போகும். ஆஸ்டிரியாவின் வியாபாரமும் அநேகமாக நின்றுவிடும். இந்த இரண்டு தேசங்களிலிருந்து இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கிற சாமான்கள் இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா, ஜப்பான் முதலான தேசங்களிலிருந்துவரும். இங்கிலீஷ் கப்பல்களும், பிராஞ்சு கப்பல்களும் யுத்தத்திற்குக் கொஞ்சம் தேவையா யிருக்கும். ஆனால் இந்த தேசங்களில் ஏராளமான கப்பல்கள் இருப்பதால் சாமான்கள் வந்து சேருவதற்குத் தடையில்லாத ஏற்பாடுகள் சீக்கிரம் ஏற்பட்டு விலைகள் காயமாக உயர முடியாது.

3 இதுமாத்திர மல்ல. யுத்தம் நடந்து கொண்டிருக்கும் காலத்தில் ஐரோப்பிய தேசத்தார்கள் சாதாரணமாக வாங்குவதைப் பார்க்கிலும் சாமான்களைக் குறைத்தே வாங்குவார்கள். இப்படி மிஞ்சும் சாமான்களையும் சரக்குகள் செய்பவர்கள் விற்பனைக்கு இந்தியாவுக்கு அனுப்புவார்கள். ஆகையால் நமக்கு அதிக சாமான்கள் வருமே யொழிய குறையாது; விலைகளும் குறையும்.

4. இதுவும் தவிர யுத்தங்களில் ஏற்படும் ஏராளமான வீண் செலவினால் நாணயங்கள் குறைவுபடும், அதனால் மற்ற தேசத்து நாணயங்களுக்கு கிராக்கி ஏற்படும் ஆகவே சாமான்களின் விலை குறையும். எப்படியென்றால் இரண்டு ரூபாய்க்கு நமக்கு முன்னால் விற்றுக் கொண்டிருந்த சாமான்களை ஒன்றரை ரூபாய்க்காவது கொடுத்து ரூபாயைப்பெற்றுக் கொள்ளலாமென்று யோசிப்பார்களாகையால் இந்தக் காரணத்தினாலும் குறைவுபடும்.

5. இந்த தேசத்திற்கு வேண்டியதற்கு அநேகமாக கேவ தானியம் நமதுதேசத்தில் விளைந்துவருகிறது. ஐரோப்பா தேசத்தாருக்கு அரிசி ஆகாரத்திற்கு அவசியமாக வேண்டிய வஸ்து அல்ல. கோதுமையே அவர்களுக்கு வேண்டியது. அரிசி நமது தேசத்தில் அகப்படும். இவ்விதமாக தானியங்களின் விலையுங் குறையவேண்டும். குறையுமென்றே எதிர் பார்க்கிறேன்.

6. இந்தஜில்லாவில் நிலக்கடலையை முக்கியமாய்ச் சாகுபடி செய்கிறார்கள். யுத்தம் நீடித்து நடந்தால் அதின் விலை நிச்சயமாகக் குறையும். இந்த வருஷம் நிலக்கடலையை விட்டு வேறு புன்செய் தானியங்கள் போடுவது சிலாக்கியமாக இருக்கலாம். ஆனால் நிலக்கடலையின் விலை இன்னவாகுமென்று சொல்வது கஷ்டம்.

7. பருத்தியும் துணிகளுங்கூட விலை குறைய வேண்டும்.

8. ஒரு சாமான் மாத்திரம் விலை குறையாதோவென்று நினைக்கலாம். ஐரோப்பாவிலிருந்து பீட்கிழங்கு சர்க்கரை வருவது நின்றுவிடும். அமெரிக்கா, வெஸ்ட் இண்டீஸ் தேசங்களிலிருந்து இப்பொழுது ஐரோப்பாவுக்குப் போகும் சர்க்கரை இந்தியாவுக்கு வரலாம். ஆனால் சர்க்கரையின் விலை குறைவது எதிர்பார்க்கக்கூடாத சமாச்சாரம். இந்த வருஷம் இந்த தேசத்தில் கரும்பு பயிர்செய்வது ரொம்பவும் சிலாக்கியமாயிருக்கும்.

9. மேற்சொன்ன சமாசாரங்களைக் கவனித்துப் பார்த்தால் விலையை உயர்த்துவதற்கு காரணம் யாதொன்றுமில்லையென்பதை தெளிவாய்த் தெரிவிக்க நான் விரும்புகிறேன். தினந்தோறும் தேவையாயிருக்கும் சாமான்களுக்கு அதிக விலை கொடுப்பது முட்டாள்தனமாகும். அதிகவிலை கேட்டால கொடுக்க மாட்டோமென்று சொல்லிக் காத்திருந்தால் கடைக்காரர்கள் புத்திதெளிந்து சரியானவிலைக்கு விற்பார்கள். இந்த விஷயத்தில் ஒவ்வொரிடத்திலும் இருக்கும் தனவான்கள் தங்களுடைய செல்வாக்கினால் விலையை [illegible] வொட்டாமல் நிறுத்திக்கொள்ளவேண்டியது. [illegible] வியாபாரிகளுக்கு இதனால் எச்சரிக்கிறதென்னவென்றால் அவர்கள் அக்கிரமமாக விலையை உயர்த்தினால் சர்க்காரில் அதுவிஷயமாய் நிபந்தனைகளுடன் கூடின சட்டதிட்டங்கள் ஏற்படுத்தும்படி நேரிடும்.

கிராம முனிசிப்புகள் மேற்கண்ட விபரத்தை கிராமத்தார்களுக்கு பகிரங்கமாக வாசித்துக் காண்பிக்க வேண்டியது.



## சண்டையைப் பற்றி ஜோஸ்யம்

இப்பொழுது நடைபெறும் சண்டையைப் பற்றிக் கல்கத்தாவிலுள்ள ப்ரொபஸர் ஸெனோபின் என்னும் ஒரு ஜோஸ்யர் பின்வருமாறு கூறுகின்றார்:—

ஆகஸ்டு. 29. 30. ஒரு பெருஞ் சண்டை.

செப்டம்பர். 2. பிரிட்டிஷ் சேனைக்குப் பெரியவெற்றி.

ஷை 7. ஒரு பெருஞ் சண்டை

ஷை 14. ஜெர்மன் இளவரசர்களுள் ஒருவருக்குப் பெரிய ஆபத்து நேரும்.

ஷை 15. இத்தலி இங்கிலாந்துடன் சேரும்.

ஷை 19. முதல் 23 வரை ஒரு பெரிய சண்டை விசாலமான பரப்பில் உக்ரமாக நடக்கும்.

அக்டோபர் 9. சமாதானப் பேச்சு.

ஷை 16. மேற்கண்ட சண்டைகளின் தோல்விச் சமாச்சாரம் வெளியாகும்.

ஷை 30 31. கடற்படையில் இங்கிலாந்திற்குப் பெரிய வெற்றி.

நவம்பர். 2. மற்றொரு முக்கியமான சண்டை.

ஷை 16. 17. இங்கிலாந்திற்குப் பெரிய வெற்றி

1915-ஜனவரி 2. சமாதானப் பேச்சு.

ஷை 19. சமாதானக் கான்பெரென்ஸ்.

ஷை 26. விரோதங்கள் நீங்கும்.

மார்ச்சு. சமாதானம்.

---

## ஐரோப்பாவிலுள்ள ஆகாயக் கப்பல்கள்.

| | |
|---|---|
| பிரான்சு | 750 |
| ஜெர்மனி | 480 |
| ருஷியா | 400 |
| இங்கிலாந்து | 260 |
| இத்தாலி | 220 |
| ஆஸ்டிரியா | 120 |
| செர்வியா | 20 |

இக்கப்பல்களில் முதல் நம்பர் கப்பல். மணியொன்றிற்கு 40-மயில் தூரம் செல்லுமாம். இது 2000 அடி யுயரத்திற்குமேல் செல்லக்கூடியதாம். உயர்ந்த துப்பாக்கியால் சுடும் குண்டு 2400 அடி செல்லுமாதலால், எந்த ஆகாயக்கப்பலும் துப்பாக்கியில் சுட்டுக் கீழே வீழ்த்தக்கூடியதாம்.

## அதிமதுரம்

ரெவினியூபோர்ட் ஆபீஸ் கிளார்க் ஸ்ரீ கா. கந்தசாமி ஆச்சாரியாரவர்களால், 'வைதிகக்கல்வி' யென்னும் மகுடத்துடனெழுதப்பட்டு "விஸ்வகர்ம குலோபகாரி" என்னும் பத்திரிகையில் வெளியாயுள்ளதோர் வியாசத்தில் கீழ்க்குறித்த வாக்கியங்கள் காணப்படுகின்றன:—

"கர்ப்பப் பிராம்மணராகிய நமக்கு அது (வைதிகக் "கல்வி) அவசியமில்லையென்று சொல்வதற்கு நம்மிடத் "தில் ஆசாரம், வியவகாரம், நல்லொழுக்கம், இவைக "ளின் விருத்தியும் மனோபாவமும் மிகக் குறைவாயிருக் "கின்றதே. இவைகளேன் உடன் பிறந்திருக்கலாகா "தோ? * நம் மரபினர் குடும்பத்தில் உள்ள பெரியோர் "கள் சிறியோர்களை யோர்கூட்டத்தில் வரவழைத்து "அவர்களை சந்தியாவந்தன மந்திரங்களை நம் செவிக்குப் "புலப்படும்படிச் சொல்லச் சொன்னால் அவர்களில் எத் "தனைபேர் ஒழுங்குடன் அம்மந்திரங்களைப் பிழையறச் "சொல்லுவார்கள்?** ஆருஷேய பிராம்மணன் வைதிகக் "கல்வியிலும், வைதிகப்பழக்கத்திலும் நெடுநாளாய்த் "தோய்ந்தவர்கள். அவர்களுடன் நம்மை ஒத்திட்டுப் "பார்ப்பதுமௌடீகம்.** நாம் எவ்வளவுதான் பிரம்மகுல "மென்று பெருமைபாராட்டி, புஜம் தட்டியபோதிலும் "நம்மிடத்தில் பிராம்மண ஒழுக்கங்களும், சாஸ்திரபழக் "கங்களும் எத்துணை இருக்கிறதென்று பார்த்தால் நம் "மனதிற்கேனும் உண்மை விளங்குமல்லவா; குருட்டுக் "கண்ணனை செந்தாமரைக் கண்ணனென்று சொன் "னால் உண்மைக்கு விரோதமல்லவா?"

---

நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலுங்
குலமுழுது நன்மையுண்டாம்
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
நூறுபெற்று மாவதுண்டோ
மன்றினடம் புரிவாரே தண்டலையா
ரேசொன்னேன் வருடந்தோறும்
பன்றிபல வீன்றுமென்ன குஞ்சரமொன்
றீன்றதனாற் பலனுண்டாமே.

—தண்டலையார் சதகம்.

## விசேஷ வர்த்தமானம்

**பறவைகளின் வேகம்.**—மணியொன்றுக்கு இரா ஜாளி 100 மைல் வீதமும், காக்கை 25 மைல் வீதமும், புரு 60 மைல் வீதமும் பறக்குமாம்.

**இந்தியாவிலுள்ள பால்ய விதவைகள்.**—கல்கத்தாவில் ஏற்பட்டுள்ள பால்ய விவாக விலக்கி சங்கத்தாரால் எடுக்கப்பட்டிருக்கும் கணக்கின்படி, இந்தியாவிலுள்ள பால்ய விதவைகளின் தொகை விபரம் அடியிற் குறிப்பிடப்படுகின்றது:—

| | |
|---|---|
| 1 வயதுக் குழந்தைகள் | 859 |
| 2 வயது முதல் 3 வயது வரை | 1,886 |
| 3 வயது முதல் 4 வயது வரை | 3,732 |
| 4 வயது முதல் 15 வயது வரை | 8,180 |
| 5 வயது முதல் 10 வயது வரை | 78,407 |

*
* *

**மைசூரில் விதவைகளின் ஸ்கூல்.**—மைசூர் ஸமஸ்தானத்தில் இந்து விதவைகளுக்காக ஒரு ஸ்கூல் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. அங்குப் படிக்கும் சாமர்த்தியமுள்ள பெண்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்காகத் தேவராஜ பகதூர் என்பவர் ஒரு நிதியை யேற்படுத்தியிருக்கிறார். அந்த ஸ்கூலில் 50 பெண்கள் ஸ்காலர்ஷிப்புகளைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஸ்காலர்ஷிப்புகளின் தொகை 2725 ரூபாய். அங்குள்ள கைம்பெண்களுள் 16 வயதுக்குக் கீழ்ப்பட்டவள் ஒருத்தியே. மாணவிகளில் பெரும்பான்மையோர் 20 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

*
* *

**நெய்யுண்டுபண்ணும் புதியமுறை.**—மைசூர்ச் சமஸ்தானத்திலுள்ள தரிக்கெரீக் காடுகளில் மறுவினை என்னும் ஒருவகைச் செடியிருக்கிறது. அதன் பழங்களை நசுக்கினால் தயிரைப்போன்ற ஒருவகையான வஸ்து வடிகிறது. அதனைச் சிறிது ஜலத்தைச் சேர்த்து வைத்திருந்தால், அதன் மீது காய்ச்சின பாலின் மீது மிதக்கும் பாலாடைபோன்ற ஒருவகையான வெண்ணெய் மிதக்கிறது. அதனைக் காய்ச்சினால் ஒருவகையான நெய்யுண்டாகிறதாம். அவ்வகையான நெய் மைசூர்ப் பிராந்தியங்களில் ஏராளமாகச் செய்யப்பட்டு விற்பனையாகி வருகின்றதாம். அந்த நெய் எவ்விதத்திலும் சாதாரண நெய்யை ஒத்திருக்கின்றதென்று தெரிகின்றது.

*
* *

**மிருகபலி கொடுக்கக்கூடாது.**—ஐக்கிய மகாணத்திலுள்ள ஜோஹிகாலன் என்னும் இடத்திலுள்ள ஜனங்கள் அங்கிருக்கும் ஸ்ரீ பகவதியம்மனுக்கு வருஷந்தோறும் மிருக பலி கொடுப்பது வழக்கம். அங்குள்ளஜமீன்தார்கள் தக்க பண்டிதர்களைக் கேட்டறிந்து, இனி மிருகபலி கொடுக்கக் கூடாதெனப் பின் கண்ட உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். "ஸ்ரீ பகவதி தேவிக்கு மிருகபலி கொடுக்க வேண்டியது அவசிய மில்லை யென்று பண்டிதர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகேளைப் பலி கொடுத்து வணங்குவது குரூரமானது; ஆதலின் அத்தேவியின் பக்தர்கள் அனைவரும் பால், பழம், தேங்காம் முதலியனகொண்டு வணங்கவேண்டுமே யொழிய மிருகபலி கொடுக்கக் கூடாது."

*
* *

**மைசூர் தஸரா பொருட்காட்சி.**—மைசூர் தஸரா, தொழில், விவசாயப் பொருட்காட்சி இந்த வருஷம் செப்டெம்பர் மாதம் 21உ முதல் அக்டோபர் மாதம் 5உ வரை திறந்து வைக்கப்படும். கால்நடைகள் கோழிகள் இவைகளின் காட்சியும், போட்டி போட்டு நெசவுத்தறி நெய்யும் காட்சியும். அக்டோபர் மாதம் முதல் தேதி முதல் 3உ வரையிலும் திறந்து வைக்கப்படும். மரச்சித்திரத் தொழில் உலோக வேலை ஆகிய இவ்வேலைகளில் வேலைக்காரர்கள் போட்டிபோட்டுக் கொண்டு வேலை நடத்துவார்கள். அது செப்டெம்பர் மாதம் 21உ முதல் அக்டோபர் மாதம் முதல் தேதிவரையிலும் நடக்கும். குலால் தொழிலிலும் உழவுத்தொழிலிலும் போட்டி வேலைகள் அக்டோபர் மாதம் 2, 3 இவ்விரண்டு தேதிகளிலும் நடக்கும்.